**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அதுவும் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து:** அரசாங்கத்திலே ஓய்வு பெறுகிறவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கிற ஒரு சட்டம் இருக்கின்றபோது அதே போன்று, தனியார் ஆலைகள், தொழிற்சாலைகள் மற்றும் பெருமளவில் நடைபெறுகின்ற தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரிகிறவர்கள் ஓய்வு பெறுகிறபோது ஓய்வூதியம் பெறுகின்ற அளவுக்கு இந்த அரசு சட்டம் கொண்டு வருமா ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனைகள் பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. சுந்தரராஜ்:** தற்போது அரசுப் பணியில் இருப்பவர்கள் இறந்துவிட்டால் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படுவதைப் போல் ஓய்வு பெற்றவர்களிடமிருந்தும் மாதம் ஒரு ரூபாய் பிடித்துக் கொண்டு அவர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

---

* 207ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1977 டிசம்பர் 28

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அப்படிப்பட்ட சந்தேகம்
இப்போது இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் சரண்டர்டு
ஸ்கூல் டீச்சர்ஸ் என்று ஒரு காட்டகிரி ஆப் டீச்சர்ஸ்
இருக்கிறார்கள். தனியார் பள்ளிகள் அனைத்தும் அரசாங்கத்திற்கு
சரண்டர் செய்யப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் அரசாங்க
சர்வீசில் பணியாற்றி அதற்குப் பின்பு டீ-நேஷனலைசேஷன் ஆப்
ஸ்டேட்ஸ் ஏற்பட்டபோது தமிழ்நாடு அரசின் கீழ் பணியாற்றி,
இப்போது அவர்கள் ரிடையர் ஆகியிருக்கிறார்கள். அந்த
ஆசிரியர்களுக்கு இதுவரை ஓய்வூதியம் அளிக்கப்படவில்லை.
அவர்கள் அதற்கான மனுக்களை அரசாங்கத்திற்குக்
கொடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து
அந்த காட்டகிரி ஆசிரியர்களும் ஓய்வூதியம் பெற வழிவகை
செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** கனம் உறுப்பினர் அவர்கள்
ஒரு புதிய பிரச்சினையை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.
அதற்குத் தனிக் கேள்வி போடக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோ. இளங்கோவன் :** அரசு ஊழியர்களுக்கு பஞ்சப்
படியை உயர்த்துகின்ற நேரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கும்
50 விழுக்காடு பஞ்சப்படி உயர்வு தருகிற வழக்கம் இருந்தது.
அண்மையில் அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப்படியை உயர்த்திய
போது ஓய்வு பெற்றவர்களுக்கும் 50 விழுக்காடு பஞ்சப்படி உயர்வு
தர அரசு முன்வந்ததா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ஏற்கனவே ஓய்வு
பெற்றவர்களுக்கு 1—4—72-ல் 5 ரூபாய்; 1—4—73-ல் 5 ரூபாய்;
1—10—73-ல் 5 ரூபாய்; 1—4—74-ல் 5 ரூபாய் ஆக 20 ரூபாய்
உயர்த்தப்பட்டிருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, அண்மையில்
தமிழக அரசு ஊழியர்களுக்கு பஞ்சப்படி 10 ரூபாய் உயர்த்தியது.
அதைப்போன்று ஓய்வு பெற்றவர்களுக்கும் 5 ரூபாய் உயர்த்த
முன்வந்ததா? உயர்த்தவில்லையென்றால் அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அதைப்பற்றி அரசு
ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 டிசம்பர் 28]

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்
களுக்கு, அவர்கள் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது
என்ற ஒரு புரவிஷன் இருக்கிறது. ஆனால் நீண்ட நெடுநாட்களாக
அவர்களுடைய கோரிக்கை, அவர்கள் உயிரோடு இருக்கிறபோதே
அந்தத் தொகையைக் கொடுத்தால் அது அவர்களுக்கும்
அவர்களுடைய ஃபேமிலிகளுக்கும் பயன் உள்ளதாக இருக்கும்
என்பதுதான். ஆகவே, அதை அரசாங்கம் பரிசீலனை
செய்ததா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு திரு. உமாநாத்
அவர்கள் மனிதாபிமானத்தோடு கேட்ட அந்தக் கேள்வி அரசின்
பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு :** பாயின்ட் ஆப்
ஆர்டர் சார், நான் போன செஷனிலேயே 7, 8 கேள்விகள் எழுதிக்
கொடுத்தேன், அவை இன்னும் எடுக்கப்படவில்லை. இப்படியே
போனால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை இப்போது கேட்கக்
கூடாது.

**திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு :** எப்போது
கேட்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என் அறையில் வந்து
கேளுங்கள். கேள்வி நேரத்தில் அதைப் பற்றியெல்லாம் இங்கே
எழுப்பக் கூடாது.

**வரி விலக்களிக்கப்பட்ட தமிழ் திரைப்படங்கள்.**

*** 2 வினா—திரு. என். கிட்டப்பா :**
**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு நிதி அமைச்சர்
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) 1976-77-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தமிழ் திரைப்
படங்கள் எவற்றிற்கேனும் கேளிக்கை வரியிலிருந்து
விலக்களிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த திரைப்படங்களுக்கு எந்தெந்த
காரணத்தினால் விலக்களிக்கப்பட்டன?

[1977 டிசம்பர் 28

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, 1976-77 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தமிழ் திரைப்படங்கள் எவற்றிற்கேனும் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதா என்ற கேள்விக்குப் பதில் 'கப்பலோட்டிய தமிழன்', 'அவன் ஒரு சரித்திரம்', 'நத்தையில் முத்து' ஆகிய திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா :** 1976-77 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை சினிமாப் படங்களுக்கு இவ்வாறு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டது? அந்தப் படங்கள் எவை எவை என்பதை அறிய இயலுமா? கோரிக்கை விடப்பட்ட படங்களுக்குச் சலுகை அளிக்கப்படாமல் இருந்தால் அதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** எற்கனவே நான் குறிப்பிட்டதைப் போல் 3 படங்களுக்கு, 'கப்பலோட்டிய தமிழன்', 'அவன் ஒரு சரித்திரம்', 'நத்தையில் முத்து' என்ற படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் கப்பலோட்டிய தமிழன் படத்திற்கு அளிக்கப்பட்ட வரி விலக்கிற்கு டைம் லிமிட் இல்லை. வரி விலக்கு தொடர்ந்து இருக்கிறது. 'அவன் ஒரு சரித்திரம்', 'நத்தையில் முத்து' ஆகிய படங்களுக்கு வரி விலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் (அ) மற்றும் (ஆ) என்ற இரண்டு கேள்விகள் இருக்கின்றன. அதிலே (அ) என்ற கேள்விக்கு மாத்திரம்தான் நிதியமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். அவர் பதிலளிக்காத (ஆ) என்ற கேள்வியில் 'ஆம் எனில்', எந்த எந்த திரைப்படங்களுக்கு எந்த எந்த காரணத்தினால் விலக்களிக்கப்பட்டன?' என்று கேட்கப் பட்டிருக்கிறது. எந்த எந்தக் காரணத்தினால் வரி விலக்கு அளிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, வரி விலக்கு ரத்து செய்யப்பட்டதாகச் சொன்னார்கள், எந்தக் காரணத்தால் ரத்து செய்யப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, 'கப்பலோட்டிய தமிழன்' படத்திற்கு ஏன் வரி விலக்கு அளிக்கப் பட்டது என்பதை நான் விளக்க வேண்டியதில்லை, மாண்புமிகு



1977 டிசம்பர் 28]

எதிர்க் கட்சித் தலைவருக்கே தெரியும். இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தமிழகத்தின் தள நாயகன் படம் அது, ஆகவே வரி விலக்கு அளிக்கப்பட்டது. 'அவன் ஒரு சரித்திரம்', 20 அம்சத் திட்டம் முதலியவற்றைச் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டுகிறது என்ற காரணத்தால் வரி விலக்கு அளிக்கப்பட்டது. 'நத்தையில் முத்து', தீண்டாமை என்ற கொடுமையிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றுவது என்ற அந்தப் பின்னணியை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட படம் என்பதால் வரி விலக்கு அளிக்கப்பட்டது. பொதுவாக இம்மாதிரி வரி விலக்குப் பிரச்னை வரும்போது ஒவ்வொருவரும் வரி விலக்கு அளிக்க வேண்டும், அளிக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் படங்களில் 'தீம்' இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு வருவது வழக்கமாகிப்போய்விட்ட காரணத்தினால் அதைப் பற்றி ஒரு விளக்கமான பார்முலாவை உருவாக்குவது பற்றி இந்த சர்க்கார் ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது. இப்படியே தொடர்ந்து போனால் ஒவ்வொரு படத்திற்கும் விலக்கு அளிக்க வேண்டு மென்ற அவசியம் ஏற்படும் என்று கருதி நாம் அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9.20.)

அது மட்டுமல்லாமல், மத்திய சர்க்காரிலிருந்து எப்படிப்பட்ட படங்களுக்கெல்லாம் வரிவிலக்கு அளிக்கலாம் என்று அவர்கள் கருத்து தெரிவித்திருந்தார்கள். அவர்கள் நான்கு அடிப்படையில் இந்த கருத்தைத் தெரிவித்திருந்தார்கள். அதாவது :—

1. Best National feature film.
2. Second best National feature film.
3. Best feature film on National Integration.
4. Best feature film in the regional laugnage.

இதைக்கூட நாம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. இது குறித்து ஆராய்ந்து எப்படிப்பட்ட படங்களுக்கெல்லாம் வரிவிலக்கு அளிக் கலாம் என்பதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து ஒரு முடிவு எடுக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** நான் அறிந்து கொள்ள விரும்புவது, ஏற்கனவே வரிவிலக்கு அறிவிக்கப்பட்ட 'அவன் ஒரு சரித்திரம்', 'நத்தையில் முத்து' என்ற படங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த

வரிவிலக்கு ரத்து செய்யப்பட்டதற்கு என்ன காரணம்? இந்தப் படத்தின் உரிமையாளர்களுக்கு எந்தக் காரணங்களை அரசு தெரிவித்தது?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** வரிவிலக்கு அளிக்கப்பட்டதில் சில படங்களுக்கு டைம் லிமிட் கொடுக்கப்பட்டிருந்தது, அந்த டைம் லிமிட் ஆனதும் வரிவிலக்கு ரத்து செய்யப்பட்டது, அவ்வளவுதான்.

**திரு. எஸ். கணேசன்:** தலைவர் அவர்களே, சாகாத சரித்திரம் படைத்திட்ட 'வீரபாண்டிய கட்டபொம்மன்' போன்ற படங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படவில்லை. 'அவன் ஒரு சரித்திரம்' படம் டாக்குமெண்டரி படம் போல் இருக்கிறது என்று ஒரு பிரபல வார இதழ்கூட எழுதியிருந்தது — இந்தப் படத்தில் அப்படி இருந்த ஆழமான கருத்து என்ன? மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் படத்தைப் பார்த்து இருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நண்பர் கணேசன் பார்த்து சுவைத்ததைப்போல் நானும் பார்த்திருக்கிறேன், என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் படங்களுக்கெல்லாம் விலக்கு அளித்ததெல்லாம் அட்வைசர் ரீஜிம்-ல். நமது சர்க்காரில் நடந்ததல்ல, என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வீரபாண்டிய கட்டபொம்மன் படத்திற்கு வரிவிலக்கு அளிக்கவேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களேயானால் அது பற்றி யோசிக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சுங்கச் சாவடிகள்

*3 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வணிகவரித் துறையின் கீழ் உள்ள சுங்கச் சாவடிகளை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, வணிக வரித் துறையைச் சார்ந்த சுங்கச் சாவடிகள் குறிப்பாக நமது மாநிலத்தில், தமிழக—கேரள மாநில எல்லைப் பகுதியிலும், அதைப்போல தமிழக-ஆந்திர மாநில எல்லைப் பகுதியிலும், பாண்டிச்சேரி-தமிழக எல்லைப் பகுதியிலும் இருக்கின்ற சுங்கச் சாவடிகளை எல்லாம் தீவிரமாகப் பரிசீலித்து கண்காணிப்பதற்கு பறக்கும்படை போன்ற அமைப்பு நிறுவப்பட்டிருக்கின்றதா. இந்தச் சுங்கச் சாவடிகள் மூலமாக அரசுக்கு வருவாய் கிடைக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில், சுங்க சாவடிகள் விஷயமாக அரசு தீவிரமாகப் பரிசீலித்து விரைவில் முடிவு எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சுங்கச் சாவடிகளில் பணியாற்றுகின்றவர்கள் அங்கே உட்கார்ந்து இருந்து பணியாற்றுவதற்குரிய போதுமான கட்டடங்கள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே சுங்கச் சாவடிகள் இயங்குகின்ற இடங்களில் வசதியான கட்டடங்கள் கட்டுவதற்கு என்று ஒரு சிறப்பான திட்டத்தை ஏற்படுத்தி கட்டடங்களைக் கட்டிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

## தர்மபுரி மாவட்டப் பெயர் மாற்றம்.

*4. வினா—**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தை தகடூர் மாவட்டம் என்று பெயர் மாற்ற கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) ஆம்.

(ஆ) 'தர்மபுரி' என்ற பெயரை 'தகடூர்' என்று மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

**திரு. என். இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் மூலமாகத் தீர்மானம் அனுப்பி, தற்பொழுது அது கைவிடப்பட்டதா? அல்லது எந்தக் காரணத்தினால் அவ்வாறு கைவிடப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1977 டிசம்பர் 28

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவரவர்களே, இது பற்றிக் கொஞ்சம் விளக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். சங்ககாலத்தில் அதியமான் நெடுமாறன் அஞ்சியின் ஆட்சியின் பொழுது தகடூர் தலைநகரமாக இருந்தது. ஜெகதேவராயர் ஆட்சிக்காலத்தில் தகடூர் என்பது தருமபுரி என்று மாற்றப் பட்டது. பிறகு திரும்பவும் தகடூர் என்று வைக்க வேண்டு மென்ற கோரிக்கை எழுந்தபொழுது அதற்கு மாநில அரசு பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைப்பற்றிச் சிந்தித்தது. இந்தப் பெயரை மாற்ற வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி முடிவெடுக்கும் வாய்ப்பை வருவாய்த்துறை வாரியம், சென்னை, இதைப் பற்றிச் சிந்தித்து எழுத வேண்டுமென்றும், அவ்வாறு வருவாய்த்துறை மட்டுமல்லாமல், மாவட்ட வளர்ச்சி மன்றம் இதற்கென்று ஒரு தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானம் நிறை வேற்றப்படுகின்ற நிலை இருக்கிறதா இல்லையா என்று ஆராய்ந்த பொழுது, தகடூர் என்று மாற்றும் தீர்மானத்திற்கு எதிராக ஏழு வாக்குகளும், ஆதரவாக ஆறு வாக்குகளும் கிடைத்தன. அதற்குப்பிறகு நமது இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முதல் வராக இருந்தபொழுது இதுபற்றி மாவட்ட வளர்ச்சி மன்றம் திரும்பவும் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அப்படிக் கேட்டுக்கொண்டதற்குப் பிறகும் அதே நிலைமை நீடித்துவிட்ட காரணத்தாலே இதைப் பற்றி மீண்டும் ஆராய்ந்து பார்த்து அதற்குப்பிறகு முடிவு செய்யலாம் என்று நமது அன்றைய முதல்வர் தீர்ப்பு அளித் தார்கள். அது அப்படியே இருக்கிறது. ஆகையால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, ஒரு ஊரின் பெயரை மாற்ற மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை, மத்திய அரசிடமிருந்து அதிகாரம் பெற்றுத்தான் மாற்ற வேண்டும் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** கல்லக்குடி என்று பெயரை மாற்றுவதற்கு எப்படிப்பட்ட சிரமங்கள் இருந்தன என்பதைப் பெருமதிப்பிற்குரிய உறுப்பினரவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அதிலேயே விடை இருக்கிறது.



977 டிசம்பர் 28]

**குருவிகுளம் கிராமத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்டோர்.**

*5. வினா—**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு நிதி மைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை ளிப்பாரா—

(அ) 30—7—1977 அன்று நெல்லை மாவட்டம், சங்கரன் கோவில் தாலுகா குருவிகுளம் கிராமத்தில் தீ விபத்தால் 100- கும் அதிகமான மாட்டுத் தீவனப்படப்புகள் அழிந்துவிட்டதால், பல ஏழை விவசாயிகள் தங்கள் மாடுகளுக்குத் தீவனம் வாங்க முடியாமல் கஷ்டத்திற்குள்ளாகியிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்காவிக் கடன் கொடுத்து உதவ உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) 30—7—1977 அன்று இரவு 2 மணிக்கு சுமார் 72 வைக்கோல் மற்றும் சோளப் படப்பு கள் தீக்கிரையாயின. ஆயினும் குருவிகுளம் கிராமத்திலோ, அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலோ மாட்டுத் தீவனப் பற்றாக் குறை எதுவும் இல்லை. தேவையான அளவு கிடைக்கின்றது.

(ஆ) தீ விபத்திற்குள்ளான விவசாயிகள் போதிய வசதி படைத்தவர்கள் என்பதால் அவர்களுக்குத் தக்காவிக் கடன் எதும் வழங்கப்படவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்தத் தீ விபத் திலே பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பகுதியினர் விவசாயிகள். அவர்கள் திரும்பவும் தீவனம் வாங்க முடியாமல் தங்கள் கால் நடைகளை விற்று விட்டார்கள். வீடுகளுக்குத் தீ விபத்து என்றால் அதற்காக ஒரு தொகையை குடிசை போட்டுக்கொள்ளக் கொடுக் கிறோம். அதுபோல இப்படிப்பட்ட விவசாயிகளுக்குத் தீ விபத் தினால் கால்நடைகளுக்கும், தீவனங்களுக்கும் சேதம் ஏற் பட்டால், இனாமாகக் கூட அல்ல, கடனைக் கொடுத்து திரும்பவும் அந்தத் தீவனத்தைப் பெற்றுக்கொள்ளவும், கால்நடைகள் வாங்கவும் புதிதாக உத்தரவு பிறப்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவரவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் பொதுப்பிரச்னையாக இதைச் சொல் கிறார்கள். ஆனால், குறிப்பிட்ட இந்தக் கேள்விக்கு நான் தருகின்ற பதில், தீ விபத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள்

போதிய வசதி படைத்தவர்கள். வசதியில்லாதவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்ற பொதுப் பிரச்சினையில், இன்னின்ன செய்யலாம் என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. கிருஷ்ணன். சங்கரன்கோவில் தீ விபத்து சம்பந்தப்பட்ட கேள்வியை மட்டும் எழுப்புங்கள்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர்களே, சங்கரன்கோயில், சிவகிரி போன்ற பகுதிகளிலிருந்து அதிக அளவில் வைக்கோல் கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இப்படிக் கொண்டு போவதால் அந்தப் பகுதியில் அதிகமான. . .

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீ விபத்து சம்பந்தப்பட்ட துணைக் கேள்வியைக் கேளுங்கள் என்று சொன்னேன். கடத்தப் பட்டதுபற்றி கேட்டால், அது விஷயமே வேறே ஆயிற்றே. கேரளாவுக்குக் கடத்திக்கொண்டு போகின்ற பிரச்னையைப் பற்றிய கேள்வியை இதிலே கேட்டால் எப்படி ?

**திரு. ரா. கிருஷ்ணன் :** வைக்கோல் சம்பந்தமாக இருப் பதால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வர்களை அனுதாபத்தோடு கவனிப்பதுபற்றிய கேள்வி இது.

**புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவர்களே, தீ விபத்தால் பாதிக்கப்படுகின்ற . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** எழுப்பப்பட்டிருக்கிற மூலக் கேள்வி தீ விபத்து, தீனம் பற்றியதே தவிர, கடத்தல் பற்றி இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** எரிந்து போனது வைக்கோல். வைக்கோல் கட்டெல்லாம் எரிந்து போய்விட்டது, மிச்சம் இருக் கிற வைக்கோலும் எங்கோ போகிறது ; ஆகவே, விலை ஏறுகிறது என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பினார். ஆகவே, முடிந்தால் பதில் சொல்லலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய கருத்து, மீதி இருக்கிற வைக்கோல் கேரளாவுக்குப் போகிறது என்று சொன்னால், அவர்களைப்பற்றி எப்படி அனுதாபம் வரும்? அனுதாபமான பிரச்னை என்றால், தீ விபத்தால் கஷ்டப்படு கிறார்கள் என்று கேட்டால் சரி. அடுத்து, வினா எண் 6 . . . . புலவர் கேள்வி.

**புலவர் கா. கோவிந்தன் :** தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள், புயலால் பாதிக்கப்பட்ட வீடுகள் ஆகியவற்றிற்கு இது வரையிலும் ரூ. 80 கொடுத்து வந்தோம். இப்பொழுது புயலால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூ. 200 கொடுப்பதாக அரசு அறிவித்து, கொடுத்து வருகிறது.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மன்னிக்க வேண்டும். வெள்ள அறிக்கை இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. நீங்கள் பற்றி விவாதிக்கும்போது இவை பற்றியெல்லாம் பேசலாம்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** அடுத்த கேள்விஎண்ணை அறிவித்தபிறகு, ஏற்கனவே உள்ள கேள்விக்கு துணைக் கேள்வி அனுமதிக்கக்கூடாது. அந்த மரபைத் தயவுசெய்து பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்களுக்கு அனுமதிக்காமல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினரை நான் அனு மதிக்கும்போது, உங்கள் நினைவு எனக்கு வந்தது. உங்களுக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பது அல்ல. இனிமேல், அப்படி இல்லாமல் பார்த்துக்கொள்கிறேன். ஏற்கனவே, கேள்வி எழுப்பி, பாதியில் இடைமறித்ததால், அனுமதி அளிக்கப் பட்டது.

### ஆத்தூர் சப்-மாஜிஸ்டிரேட் நீதி மன்றம்.

*6. வினா—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம், ஆத்தூர் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு நீண்டகாலமாக நீதிபதி நியமனம் செய்யப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் :** (அ) ஆத்தூர் இரண்டாம் நிலை நீதிமன்றத்திற்கு 13—5—1977 முதல் 11—9—1977 வரை நீதிபதி நியமனம் செய்யப்படாமல் இருந்தது.

(ஆ) 12—9—1977 முதல் அந்நீதிமன்றத்துக்கு நீதிபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. சி. பழனிமுத்து :** இதுபோன்ற காலதாமதம் இனி யாவது இல்லாமல் இருக்குமா என்று கேட்கவிரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Every step will be taken by the Government to avoid such eventualities.

### சிறைக் கைதிகளை பார்வையிட குழு.

*7. விஞ—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து பின்வரும் விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைக் கைதிகளைப் பார்வையிட அரசு குழு ஏதேனும் நியமித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் :** (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, சென்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில், முதலமைச்சரிடத்திலே ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. இஸ்மாயில் கமிஷன் சென்னை சிறைச் சாலைக்குச் சென்றபொழுது, அங்குள்ள கைதிகள் சில உண்மைகளைச் சொன்னார்கள் என்ற காரணத்திற்காக, அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். அதுபற்றி நம்முடைய சட்ட அமைச்சர் அங்கே சென்று பார்த்து, உண்மைகளை அறிந்து அறிவிப்பாரா என்ற கேள்வி கேட்டபொழுது, 'அமைச்சர் செல்வது முறையல்ல, அதற்கொரு நீதிபதி நியமிக்கப்படுவார்' என்று முதலமைச்சர் இங்கே பதிலளித்தார். அந்த உறுதி மொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. சில மாதங்களா கியும் யாரும் சிறைச்சாலைக்குச் சென்று விசாரித்ததாகத் தெரிய வில்லை. இனிமேலாவது அப்படி ஒரு நீதிபதி அனுப்பப் படுவாரா ?



THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: With great respect to the Leader of the Opposition, I would say that this question does not arise out of the main question, namely : 'சிறைக் கைதிகளைப் பார்வையிட அரசு குழு ஏதேனும் நியமித் துள்ளதா ?' That is, official visitors, non-official visitors and State Jail Visitors are the persons who can go and inspect these jails. Therefore, I would say with great respect to him, that this question does not arise out of the main question and the Government need notice.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் கேட்பது அப்படி ஒரு நீதிபதி அனுப்பப்பட்டாரா ? ஏன் என்றால் இவரே அமைச்சராக சிறைச்சாலைக்கும் சட்டத்துறைக்கும் இருக்கிற காரணத்தால் தெரிந்திருக்கும். அப்படித் தெரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மூலக்கேள்வியோடு இது இணைந்து வராத காரணத்தால், சட்ட அமைச்சர் இது குறித்து தனிக்கேள்வி போடச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, சிறைச்சாலை களிலே கைதிகளைப் பார்வையிட பொதுவாக மத்திய சிறைச் சாலையிலே குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்தக் குழுக் களிலே உள்ளவர்கள் மட்டும் இல்லாது சட்டமன்ற பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அனைவரும் அந்தக் கைதி களைச் சென்று பார்த்து அவர்களுடைய குறைகளை அறிவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This suggestion will be seriously and earnestly considered by the Government with great respect.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சட்டமன்ற, பேரவை, மேலவை உறுப்பினர்கள் சில நோங்களில் சிறைச்சாலைகளுக்குச் சென்று கைதிகளைப் பார்ப் பதற்கு உரிமை இருந்தது. இன்றைக்கு அது ரத்து செய்யப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு மாகாணத் தில் உள்ள சப் ஜெயில்கள் சிறைச்சாலை அதிகாரிகள் பொறுப்

பிலே வைக்கப்படாமல், தாசில்தார் பொறுப்பிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிறைகளிலே குறைந்தபட்ச சுகாதார வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா. அவற்றை நிவர்த்தி செய்வதற்கும் அந்தக் கைதிகளை சென்று அதிகாரப் பற்றற்றவர்கள் சென்று பார்ப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The hon. Member is requested to put a separate question on this matter.

**திரு. ரா. மார்க்கபந்து :** தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்குத் தண்டனைக் காலத்தைக் குறைப்பதற்கு ஒரு போர்டு வைத்திருக்கிறார்கள். அதிலே, மாவட்ட கலெக்டர், எஸ்.பி., டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் ஆகியவர்கள் அந்தக் குழுவில் இருந்து பரிசீலனை செய்கிறார்கள். அந்தக் குழுவிலே அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற பார்வையாளர்கள் இடம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This question does not arise from the main question.

**திரு. ஆர். உமாநாத் :** தலைவர் அவர்களே, ஒரு மத்திய சிறைக்கு நான் சமீபத்தில் சென்றபோது, எம்.எல்.ஏக்கள் விசிட் பண்ணும் ரூல்ஸ் சம்பந்தமாக கேட்டபோது, சூப்பிரெண்ட் அவர்கள் மரியாதையாக சொன்னார். ஏற்கனவே உள்ள விதிகளின்படி எம்.எல்.ஏக்கள் விசிட் பண்ணலாம் என்று சொன்னார். கைதிகளைச் சென்று இன்ஸ்பெக்ட் பண்ணலாம் என்றும் அதற்கு ஆட்சேபனை இல்லை என்றும் சொன்னார். ஆனால் வேலை நிறுத்தத்திலும், ஜனநாயக உரிமைகள் போராட்டங்கள்—இப்படிப்பட்ட போராட்டங்கள் நடக்கிறபோது அந்தக் கைதிகளை—அப்படி யாராவது சிறையில் இருந்தால்—அவர்களைப் பார்க்க உள்ளே யாரும் அனுமதிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மை என்னவென்றால், அப்போதுதான் வேணும்—'லிங்க் பிட்வீன் ப்ரிசனர்ஸ் அண்ட் அட்மினிஸ்ட்ரேஷன்' வேணும். அந்த ப்ரொவிஷனை ரத்து செய்துவிட்டு, எல்லாவிதமான நேரத்திலும் போவதற்கு அந்த உரிமைகளை 'ரெஸ்டோர்' பண்ணி, விதிவிலக்கு இல்லாமல் தெளிவாக உத்தரவு அனுப்புவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.



THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The suggestion will be examined very seriously.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, சமீபத்தில் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் மத்திய சிறைச்சாலையைச் சென்று பார்ப்பார்கள். அதேபோல மற்ற சிறைச்சாலைகளுக்கும் சென்று பார்ப்பார்களா ? சில மாதங்களுக்கு முன்பு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் சென்னை, கோவை சிறைச்சாலைகளுக்குச் சென்று கைதிகளைப் பார்த்தார்கள். அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் நிவர்த்திக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறது. அந்தப் புகார்கள் இல்லாமல், குறைகளை நிவர்த்தி செய்ய முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I may tell the hon. Member that there had been so many of my friends in the Central Jail and therefore I had the pleasure of visiting them and I do not think I have so many friends elsewhere. If the needs of the State require my visit, certainly as the Minister-in-charge of Jails, there will be a visit by me to the concerned jails.

(முற்பகல் 9.40.)

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** சிறைகள் சம்பந்தமாக ஏற்கனவே அதுபற்றி ஆராய்ந்து ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு குழு போடுவதாக அறிவித்திருந்தார்கள். அது இது வரைக்கும் அறிவித்தபடிதான் இருக்கிறதே தவிர செயல்படுத்தப்படவில்லை. இப்படி கன்ஸிடரேஷனில் காலத்தைக் கடத்தாமல் உடனடியாக அந்தக் குழுவை அமைத்து கொள்கையைச் செயல்படுத்துவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The composition of the Committee is under serious contemplation. Actually I may assure the hon. Members of this House that every effort has been made by me to have all proper, competent, erudite people who are experts in this branch of reformation of jail administration. We have been contemplating. We have though of a few names. We are still thinking of one or more names. When that is completed, the necessary composition of the Committee will be announced. We are only searching for proper personnel. The suggestion made by the hon. Member Thiru Sadiq Pasha about

one who has got experience of jail reform and other names which have been represented to me by a number of members, they will all be examined, even if they are not appointed as members of the Committee.

**திறந்தவெளிச் சிறைச்சாலைகள்.**

* 8 வினா—திரு. பண்ணை கே. சேதுராம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டங்கள்தோறும் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்:** இல்லை.

**சிறைச்சாலைகளில் திரைப்படங்கள்**

* 9. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய சிறைச்சாலைகளில் கைதிகளுக்கென திரைப் படங்கள் காட்டப்படுகின்றனவா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Yes.

Films having educative and moral value and News reels are screened in the prisons for the benefit of prisoners at least once in a month.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மத்திய சிறைச் சாலையில் காட்டப்படுகிற திரைப்படங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன? இந்தந்த திரைப்படங்கள்தான் காட்டலாம், காட்ட வேண்டும் என்று சொல்லக் கூடிய பொறுப்பு யாரிடத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது? சிறை அதிகாரிகளிடத்திலா? அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் அந்த அதிகாரம் இருக்கிறதா? குறிப்பாக, திருச்சி மத்திய சிறைச்சாலையில் நாங்கள் இருந்தபோது, பூம்புகார் படத்திற்கு விநியோக உரிமை பெற்றிருந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு. கணேசன் அப் படத்தை சிறைக்கைதிகளுக்கு இலவசமாக போட்டுக்காட்ட முன்வந்தபோது, சிறை அதிகாரிகள் அதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டார்கள். அதை அரசு அறியுமா?



THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR. The suggestion of the hon. Member Thiru Kittappa will be seriously considered by Government. There cannot be any inherent objection to screening such films. The hon. Member is requested to put a separate question.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நாங்கள் பதவிக்கு வருவதற்கு முன்னால் இருந்த அரசு செய்ததற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது.

**திரு. என். கிட்டப்பா:** நெருக்கடி நிலைமை அமலில் இருந்த போது அவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டது. இனியாகிலும் இதுபோன்ற ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான பூம்புகார் படத்தை மத்திய சிறைச்சாலையில் திரையிட்டுக்காட்டுவதற்கு அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** பூம்புகார் படம் மட்டுமல்ல. ஏற்கனவே நண்பர் குறிப்பிட்டதைப்போல கட்ட பொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற படங்களையும் திரையிடுவதற்கு அரசு ஆலோசனை செய்யும்.

**திரு. துரை முருகன்:** சிறையில் இருப்பதே கொடுமை; அதிலும் திரைப்படம் பார்ப்பது கொடுமை. 16 எம். எம். படம் தான் போடுவார்கள். அதுவும் 20 தரம் அறுந்துவிடும், ப்ரொஜெக்டர் கிடைப்பதே மிகவும் கஷ்டம். அரசாங்கமே தியேட்டர் கட்டி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுபவப்பட்ட உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. துரை முருகன்:** தலைவர் அவர்கள் சிறைச்சாலை அனுபவத்தைச் சொல்கிறீர்களா அல்லது சட்ட மன்ற அனுபவத்தைச் சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் உண்டு.

**திரு. துரை முருகன்:** ஒவ்வொரு ஜெயிலிலும் அரசாங்கம் ஒரு 35 எம்.எம். ப்ரொஜக்டர் வாங்கிக் கொடுப்பதற்கு உத்தேசமுண்டா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This will be examined by Government.

[1977 டிசம்பர் 28

**திரு. வி. கே கோதண்டராமன் :** இந்த சிறைச்சாலை கைதிகளுக்குக் காட்டப்படக்கூடிய திரைப்படங்கள் கைதிகளைப் பார்க்க வரக்கூடியவர்களிடத்திலிருந்து போர்ஸ் செய்து பணம் வசூல் செய்துதான் அவை காட்டப்படுகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? சர்க்கார் ஏதாவது பணம் ஒதுக்குகிறார்களா ? அல்லது கைதிகளைப் பார்க்க வரக்கூடியவர்களிடமிருந்து பணம் வசூல் செய்துதான் காட்டவேண்டும் என்று ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா ? நண்பர் துரை முருகன் அவர்கள் சொன்னார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு கேள்வியையே இப்படி அடுக்கிக்கொண்டு போனால் அமைச்சர் அவர்கள் எப்படி கவனத்தில் வைத்து பதில் சொல்லமுடியும் ? எனக்கு தெரிந்தே மூன்று கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். அமைச்சர் அவர்கள் நினைவு படுத்தி பதில் சொல்லவேண்டுமல்லவா ? தயவு செய்து ஒரு கேள்வியோடு நிறுத்துங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆகவே நல்ல படங்களைக் காட்ட உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The question has already been answered in my main answer itself.

### மனநோய் கைதிகளுக்குத் தனி சிறைச்சாலைகள்

*10. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தண்டனைக் கைதிகளில் மனநோய் உள்ளவர்களுக்கு தமிழ் நாட்டில் தனியே சிறைச்சாலை ஏதும் உள்ளதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: There is no separate prison for convicted criminal lunatics at present. If on admission, a convict is found to be a lunatic, he will be confined in a separate cell and will be given treatment by the Medical Officer or the Psychiatrist/Psychologist of the prisons. If any special treatment is considered necessary for any criminal lunatic, he will be transferred to the Government Mental Hospital, Madras based on the advice of the Medical Officer of the Prison. There is a separate annexe for criminal lunatics in the Government Mental Hospital, Madras



1977 டிசம்பர் 28]

**திரு. என். கிட்டப்பா :** சில மத்திய சிறைச்சாலைகளில் மன நோய் உள்ள கைதிகளையும் சேர்த்து பொதுவாக உள்ள கைதிகளோடு இணைத்து விட்டுவிடுகிறார்கள். பூட்டுவது என்னவோ மாலை நேரத்தில் பூட்டிவிடலாம். ஆனால் பகல்நேரத்தில் திறந்துவிட்டு விடுகிறார்கள். இந்நிலையை மாற்ற அரசு ஆலோசிக்குமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This suggestion is a healthy suggestion and it will be examined by Government.

### நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசி

*11 **வினா—திரு. ஏ. சுவாமிதாஸ் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகள் மூலம் விற்கப்படும் அரிசியின் தரம் மிகக் குறைந்ததாக உள்ளது என்று புகார் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

(ஆ) நியாய விலைக்கடைகளில் வேறுபட்ட fine variety என்றும் மட்டரகம் என்றும் medium variety என்றும் ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு விதமாக அரிசி விற்கப்படுவதை மாற்றி இடத்திற்கு ஏற்றவாறு அரிசி விற்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** (அ) நியாய விலைக் கடைகள் மூலம் விற்கப்படும் அரிசியின் தரம் திருப்திகரமாக இருப்பதை உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிட்டங்கிகளிலும், கடைகளிலும் அடிக்கடி தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. இப்பிரச்னையில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வரும்.

(ஆ) பொது விநியோகத்தின் கீழ் பொது மக்கள் பெரிதும் விரும்புவது நடுத்தர ரக அரிசியே. ஆனால் நம்முடைய கொள்முதலின் பெரும் பகுதி சன்ன ரக அரிசியாகத்தான் கிடைக்கிறது. நம்முடைய கையிருப்பைப் பொறுத்து, கூடியவரை நடுத்தர ரக அரிசியையும், அது கிடைக்காத நேரத்தில் சன்ன ரக அரிசியையும் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**திரு. மு. அரங்கநாதன் :** கூட்டுறவுக் கடைகளிலும் மற்றும் அரசினுடைய நுகர்பொருள் கடைகளிலும் ரூ. 1.60 என்று விற்றிருந்த அரிசி நியாயவிலைக் கடைகளில் இன்று ரூ. 2-க்கு விற்கப்படுகிறது. அதைக் குறைக்க வகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** ரூ. 1.60-க்கு விற்கப்பட்ட அரிசி ரூ. 2-க்கு விற்கப்படவில்லை. ரூ. 1.60-க்கு விற்கப்படவேண்டிய அரிசி ரூ. 1.60-க்குத்தான் விற்கப்படுகிறது. ரூ. 2-க்கு விற்கப்படவேண்டிய அரிசிதான் இப்போது ரூ. 2-க்கு விற்கப்பட்டுவருகிறது.

**திரு. கு. ரமணி :** நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி விநியோகம் செய்யப்பட ஆரம்பித்தாலே புளியங்கொட்டை மாதிரி இருக்கிற அரிசிதான் விநியோகிக்கப்படுகிறது என்ற பரவலான குற்றச்சாட்டு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து அது கணக்கில் எடுக்கப்பட்டுள்ளதா ? ஏன் அப்படி வரவேண்டும் ? சர்வசாதாரணமாக இன்று நல்ல அரிசி கிடைக்கும்போது நியாய விலைக் கடைகளில் ஏன் இப்படிப்பட்ட புளியங்கொட்டை மாதிரியான அரிசி விநியோகிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை விநியோகக் கடைகள் மூலமாகவும், நுகர் வாணிப கழகத்தின் மூலமாகவும் கொடுக்கப்படுகின்ற அரிசி பொது விநியோகத்திலிருந்து கொடுக்கப்படுகின்றது. மேலும் இந்த அரிசியை ஏழை எளிய மக்கள் குடும்பக் கார்டு உள்ளவர்கள், பெரும்பாலும் மோட்டா ரக, நடுத்தர ரக அரிசியைத்தான் விரும்பிக் கேட்கிறார்கள். இங்கு கூட 1 ரூபாய் 70 காசுக்கு விற்கப்படும் அரிசியைத்தான் மக்கள் பெரும்பாலும் வாங்க விரும்புகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. விநியோகிக்கப்படுகின்ற அரிசி புளியங்கொட்டை மாதிரியான அரிசி அல்ல மோட்டா ரக தரம். நடுத்தர ரக தரம்.

**திரு. கு. ரமணி :** நான் கேட்ட கேள்விக்கு பதில் இதுவல்ல.

**திரு. எ. ஆர். மாரிமுத்து :** அரசாங்கத்தால் சப்ளை செய்யப்படும் அரிசி தரக்குறைவாக இருக்கிறது என்பது உண்மை. தரக் குறைவான அரிசி இருப்பதற்குக் காரணம், நீண்ட காலம் ஸ்டாக் வைத்திருக்கும்போது போதிய பாதுகாப்பில் கவனம் செலுத்தாமல் இருப்பது தான் என்று தெரிகிறது. ஆகவே ஸ்டாக் இருக்கும்போது என்ன பாதுகாப்பு முறை கையாளப்படுகிறது ?





தரக்குறைவான அரிசி இருந்தால் அதை ரத்து செய்து விட்டு தரமான அரிசியை விநியோகம் செய்யும்படி அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், நீண்டகாலமாக அரிசி சேமித்து வைக்கப்படும் நேரத்தில் சில நேரங்களில் அரிசியின் தரம் கெட்டுவிடுகிறது என்று சொல்வதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை. எங்கெல்லாம் அரிசியின் தரம் குறைவாக இருக்கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும்போது, அதைத் திரும்பப் பெற்று தரமுள்ள நல்ல அரிசி கொடுப்பதற்கு அரசு பல ஏற்பாடுகளை செய்து வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பொது விநியோகத்தின் மூலமாகவும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் அரிசி சப்ளை செய்யும்போது, ஏதாவது தரக் குறைவான அரிசி இருக்குமானால், பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வந்தால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்க அம்பலம் :** அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும் அரிசியில் ஜாஸ்தியான கெட்ட வாடை இருக்கிறது. இதற்குக் காரணம், ரைஸ்மில்காரர்கள் அதிகமான அளவில் ஊறல் வைத்து விநியோகிப்பதன் காரணமாக இப்படிப்பட்ட மோசமான வாடை வருகின்றது. ஆகவே, இதை நிவர்த்தி செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** சிற்சில நேரங்களில் பொதுவிநியோகத்தில் தரப்படுகின்ற அரிசியில் இப்படிப்பட்ட வாடை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இந்த அரிசி எல்லாம் ஆந்திர மாநிலத்திலிருந்து வருவிக்கப்பட்ட அரிசி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு ஆந்திராவில் ஊறல் வைக்கும்போது கையாளப்படுகின்ற முறைகளினால் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன, இங்கு சேமித்து வைப்பதில் இப்படிப்பட்ட தவறு ஏற்படுவதில்லை. அரிசிக்கு பதிலாக நெல்லாகக் கொண்டுவருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் கேட்டு இருக்கிறோம். நெல்லாக

[1977 டிசம்பர் 28

கொண்டு வருவதிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. என்றாலும் இதைப்பற்றி அரசு தீவிரமாக பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்வி—12—

(திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும், திரு. ஆர். உமாநாத் அவர்களும் எழுந்து நின்றனர்)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரு முக்கியமான கேள்வியை கேட்க விரும்புகிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

MR. SPEAKER: No. No point of order during question hour.

**திரு. ஆர். உமாநாத்:** இது முக்கியமான கேள்வி, சப்ளிமெண்டரி கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணி நேரத்திற்குள் கேள்வி நேரத்தை முடிக்கவேண்டும். அதற்குள் இருக்கின்ற கேள்விகளையும் முடிக்கவேண்டும். துணைக் கேள்விகளுக்கு நேரம் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்றால் கேட்காமல் விட்ட கேள்விகளுக்கான பதில்களை எல்லாம் அச்சடித்து சேர்த்து விடலாம். இருக்கின்ற நேரத்தில் எல்லா உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும்.

**திரு. ஆர். உமாநாத்:** நான் முன்பே எழுந்திருந்தேன், நீங்கள் உட்காருங்கள் என்று சொன்னதும் இருந்துவிட்டேன். இப்போது முக்கியமான கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் எழுந்திருக்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நான் பாயின்ட் ஆப் ஆர்டரில் எழுந்து நிற்கிறேன் என்னைப் பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கின்ற நேரத்தைப் பார்த்து அதற்குத் தகுந்தாற் போல் கேள்விகளை கேட்கவேண்டும். எல்லா உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். மேலும் கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது. அது தான் நடைமுறை . . .

**திரு. ஆர். உமாநாத்:** என்ன தான் முறையாக இருந்தாலும், முக்கியமான கேள்வியாக இருந்தால், அதில் கொஞ்சம் அதிகமான கேள்விகளை கேட்க அனுமதித்தால் எந்தத் தவறும் இல்லை . . .



1977 டிசம்பர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இதைச் சொல்வதற்கு எனக்கு அனுமதி இல்லை என்றால், உமாநாத் அவர்களுக்கு மட்டும் எவ்வளவோ பேச அனுமதித்து இருக்கிறீர்களே, அதைப்போல் எனக்கும் அனுமதி அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உமாநாத் அவர்களுக்கு அதிக நேரம் கொடுத்ததாக அவர்கள் சொல்கிறார்கள் பாருங்கள்.

**திரு. ஆர். உமாநாத்:** உமாநாத் அவர்கள் கண்ணுக்குத் தெரிகிறார். மற்றவர்கள் பேசுவது அவர்களுக்குத் தெரியவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் தயவு செய்து பாயின்ட் ஆப் ஆர்டர் நான் அனுமதிக்கப்போவது இல்லை. நீங்கள் என்னோடு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

In the question hour I am not going to allow any point of order.

THIRU J. JAMES: Ever so many Members had raised points of order during the question hour.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டும். நான் அவர்களைக் கூட அனுமதிக்கவில்லை. தயவுசெய்து உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். உமாநாத்:** நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்கக்கூடாது என்று ரூல்ஸ் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரூல்ஸ் இல்லை என்றாலும், நாம் அனுமதிப்பது இல்லை.

**திரு. ஆர். உமாநாத்:** அனுமதித்தது உண்டு. நானே கேட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உமாநாத் அவர்களை நான் தயவுசெய்து கேட்டுக்கொள்வது, என்னோடு நேரத்திற்கு ஒத்துழைக்க உறுப்பினர்கள் தயாரா?

[1977 டிசம்பர் 28

**திரு. ஆர். உமாநாத் :** கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்ற ரூலிங்கை தயவுசெய்து கொடுக்காதீர்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** என்னுடைய நண்பர் உமாநாத் அவர்கள் பாராளுமன்றத்தில் என்னோடு பணியாற்றியவர். கேள்வி நேரத்தில் எப்போதாவது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு அனுமதி பெற்று இருக்கிறார்களா, சபாநாயகர் அதற்கு ஒப்புக்கொண்டு இருக்கிறார்களா என்பதைத் தயவுசெய்து மனதில் எண்ணிப்பார்த்துப் பேசுவது நல்லது என்று கருதுகிறேன். ஆகவே, கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பும் முயற்சியில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை முன் காலத்தில் நடந்து இருந்தால் அந்தத் தவறை மீண்டும், மீண்டும் திருப்பித் திருப்பி நடத்த நீங்கள் உதவியாக இருக்கவேண்டாம் என்று உங்களை நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** அவை முன்னவர் அவர்கள் பாராளுமன்ற மரபைப் பற்றிச் சொன்னார்கள். பாராளுமன்ற ரூல்ஸ் புக்கிலேயே கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்கக்கூடாது என்று ஸ்பெசிபிக்காகச் சொல்லி இருக்கிறார்கள். இருந்தும், பாராளுமன்றத்தில் நானே பாயின்ட் ஆப் ஆர்டர் கேள்வி நேரத்தில் எழுப்பி, அது அனுமதிக்கப்பட்டும் இருக்கிறது. ஆனால், இங்கே இருக்கும் ரூல்ஸ் புத்தகத்தில் எப்போது அனுமதிக்கலாம், எப்போது அனுமதிக்கக்கூடாது என்று இல்லை 'அட்னி டைம் பாயின்ட் ஆப் ஆர்டர் கேன் பி ரெய்ஸ்ட்' என்று இருக்கிறது. So at any time point of order must be allowed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என் அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். குறிப்பிட்ட கேள்வி சம்பந்தப்பட்ட விவகாரம் குறித்து பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். ஆனால் நான் ஒரு கேள்வியை முடித்து விட்டு மற்றொரு கேள்விக்குச் செல்கிறபோது பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் எப்படி அனுமதிப்பது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்த்து அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** என்னுடைய கட்சி நண்பர் சுவாமிதாஸ் தான் அந்த மெயின் கேள்வியைப் போட்டு இருக்கிறார். அவர் இல்லாத காரணத்தால் நான் அதற்கு துணைக்கேள்வி போட வேண்டும் என்று கையை உயர்த்தினேன். அவர் எனது கட்சிக்காரர் என்று இருந்தபோதிலும் எனக்கு அனுமதி அளிக்கப்



1977 டிசம்பர் 28]

படவில்லை. நான் கையை உயர்த்தியபிறகு காங்கிரஸ் கட்சியின் நண்பர்கள் எல்லாம், மற்றவர்கள் எல்லாம் கேள்வி கேட்டார்கள். எனக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படவில்லை. ஒருவேளை என்னுடைய கை உயர்ந்தது மாண்புமிகு பேரவைத் தலைவர் கண்ணில் தென்படவில்லையோ என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனிமேல் என்னுடைய பார்வை மிகத் தெளிவாக ஜேம்ஸ் அவர்களைப் பொறுத்தவரையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சுவாமிதாஸ் அவர்களுக்கு பதிலாக நான் கேட்கிறேன் என்று முன்கூட்டியே என் அறையில் வந்து சொல்லியிருந்தால் பரவாயில்லை. நீங்கள் மற்றவர்களுக்குத் தந்து இருக்கிறீர்களே, எனக்குத் தரவில்லையே என்று கேட்கிறீர்கள். நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள் கிறேன். எனக்குக் கொஞ்சம் தயவுசெய்து விளக்கம் தாருங்கள். கேள்வி நேரம் முடிந்த பின்னர், பதில் அளிக்கப்படவேண்டிய கேள்விகள் இருந்தால் அந்தக் கேள்விகளுக்கான பதிலை அச்சடித்து சபை முன் மறுநாள் வைத்து விடலாமா? என்ன பதில் சொல்கிறீர்கள். நீங்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டால் என்ன செய்வது? என்னைப் பொறுத்தவரையில், எனக்கு கரியமாணிக்கம் அம்பலமா, உமாநாத்தா, ஜேம்ஸா என்பது அல்ல பிரச்னை. உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தந்தாகிவிட்டது, ஆகவே தான் இரண்டாவது சந்தர்ப்பம் அளிக்கவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த கேள்வியைப் பொறுத்தவரையில் எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொரு உறுப்பினரும் எல்லா கேள்விகளுக்கும் துணைக் கேள்விகள் கேட்டால் எப்படி?

THE HON. THIRU G. R. EDMUND : Rule 38 of the Assembly Rules says :

" *Rule* 38(1) (*b*) : " The Speaker may disallow any supplementary question—

(*a*) . . . . . . .

(*b*) if a sufficient or reasonable number of supplementary questions have already been put in respect of the same question. "

[1977 டிசம்பர் 28

(முற்பகல் 10-00)

சபாநாயகர் அவர்களே, போதுமான துணைக் கேள்விகள், சப்ளிமெண்டரி குவஸ்டியன்ஸ் போடப்பட்டிருக்கிறது. மேலும் துணைக் கேள்விகள் போடப்பட்டால், அத் துணைக் கேள்வியினை மறுப்பதற்கு சபாநாயகர் அவர்களுக்கு முழு அதிகாரம் இருக்கிறது.

THIRU J. JAMES: The rule says "The Speaker may . . . ." and not 'shall' Discretion is given to the Hon. Speaker . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து, நீண்ட காலம் அனுபவம் உள்ள அங்கத்தினர் இவ்வாறு பேசுவதற்காக வருந்துகிறேன்.

**திரு. மு. அரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்வி கேட்கிறபோது, அமைச்சர் அவர்கள் அளிக்கின்ற பதில் திருப்தியாக இல்லாவிட்டால் துணைக் கேள்வி போடாவிட்டால் அமைச்சர் அவர்கள் அளித்த பதில் சரி என்று ஒத்துக் கொள்ளப் பட்டதாக பொருள்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரச்னையை உறுப்பினர் அவர்கள் ஆராயத் தேவை இல்லை. 'சப்ளிமெண்டரியை அனுமதிப்பதா, கூடாதா என்பது என்னுடைய உரிமை. வேண்டாம் என்று சொல்லி அடுத்த கேள்விக்குப் போக எனக்கு உரிமை உண்டு. பதில் திருப்தியா இல்லையா என்று ஆராய்ந்து பார்த்து கேள்வி நேரத்தை ஒரு மணி நேரம் தள்ளிப் போட்டு காலம் தாழ்த்துவது தவறு. தயவுசெய்து எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் மற்றவர்களும் கேள்வி நேரத்தை இத்துடன் நிறுத்திக் கொண்டு மற்ற வினாக்களுக்கான விடைகளை அச்சடித்து மேஜையில் வைக்கட்டுமா அல்லது அடுத்த அலுவல்களை ஒத்திப் போட்டுக் கேள்விகளைத் தொடர்ந்து நடத்தட்டுமா, எப்படிச் செய்யலாம் என்று தயவுசெய்து சொல்லுங்கள்.

**திரு. மு. கருணாநிதி:** சபாநாயகர் அவர்களே. உறுப்பினர்கள் நிறைய கேள்விகளுக்குப் பதிலை எதிர்பார்க்கிறார்கள். எனவே, பத்து கேள்விகள் என்று அதை நிறுத்துவது என்பது பொருத்தம் உடையதாக இருக்காது. அதே நேரத்தில் 30 கேள்விகள் போட்டு வேகமாகத் துணைக் கேள்விகளைக் கேட்பதற்கு வாய்ப்புகளை அளித்தால் அது உறுப்பினர்களுக்கு ஆறுதல் வழங்கும் ஒன்றாக இருக்க முடியாது. எனவே, 10 கேள்விகள் என்று இராமல் அதே



1977 டிசம்பர் 28]

நேரத்தில் 30 கேள்விகள் என்று அதிகப்படியான கேள்விகளைப் போடாமல் 20 கேள்விகள் என்ற அளவுக்கு ஒவ்வொரு நாளும் நிறுத்திக் கொண்டு போதுமான துணைக் கேள்விகள் போடுவதற்கு உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குவது சிறப்புடையதாக இருக்குமென்று கருதுகிறேன்.

ஒன்றை வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் திரு. ஆர். உமாநாத், திரு. ஜேம்ஸ் ஆகியோர் எழுப்பிய பிரச்னைகளுக்கு இரண்டு கேள்விகளுக்கு அனுமதி வழங்கியிருந்தால் அது இரண்டு நிமிடத்தில் நடைபெற்று முடிந்திருக்கும். இப்போது அதன் மீது 10 நிமிடங்கள் விவாதம் நடைபெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம்மாதிரி பிரச்னைக்கு இப்போதிருந்தாவது முற்றுப்புள்ளி வைத்தால் நல்லது. அடுத்த கேள்விக்கு போன பிறகு முந்திய கேள்வி சம்பந்தமாக துணைக் கேள்வி அனுமதிப்பது என்பது முறையாகாது. ஒவ்வொரு கேள்வியிலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் இரண்டு கேள்விகளை அனுமதித்திருந்தால் கேள்வி நேரம் வீணாகியிருக்காது என்று சொல்வது பொருத்தமாகாது. இப்பொழுது சொல்லுங்கள். கேள்விகள் 10, 20 என்று வைக்கிறோம். பல உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கான கேள்விகளைக் கொடுத்து, நாற்பது நாட்களாக நிறைய பதில்கள் வந்திருக்கின்றன. அவைகளை எல்லாம் முடிக்க வேண்டும். எவ்வளவு கேள்விகளை வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி முடிவு எடுக்கவேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்கள் கூறிய ஒரு கருத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். அடுத்த கேள்வி என்று சொன்ன பிறகு மறுபடியும் 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' என்று பிரச்னையை எழுப்புவது முறையல்ல என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஒரு விளக்கம் தயவுசெய்து தரவேண்டும். அங்கத்தினர்கள் இந்த முறைப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தாங்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் ஒரு 'டைரக்ஷன்' கொடுத்தால், அதைத் தாங்களும் மீறக் கூடாது. தாங்களும் மீறாமல் காத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்குமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நானோ யாராவது, நிதானமாகச் சிந்தித்து அங்கத்தினர்களுக்கு 'டைரக்ஷன்' தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தை முடித்துக் கொள்ளலாமா? தொடர்ந்து நடத்தலாமா?

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இன்னும் அரை மணிநேரம் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. துரை முருகன்:** மீதிக் கேள்விகள் நாளைக்கு வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வராது. பதில் அச்சடித்து வரும். நான் விதிகளைத்தான் சொல்லுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நான் சட்டமன்ற நடைமுறைகள், அனுபவத்தின் அடிப்படையில் தான் சொல்லுகிறேன். ஒரு அரை மணி நேரம் நீடிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களாக ஒரு முடிவுக்கு வாருங்கள்.

**திரு. மு. கருணாநிதி:** சட்டமன்ற மரபுகளை கடைப்பிடிக்க வேண்டும். இதற்கு முன்பு கேள்வி நேரம் முடிவுற்றாலும் அவையின் அனுமதி பெற்று சபாநாயகர் கேள்வி நேரத்தை நீடிப்பது வழக்கம். அதைப் போலவே தற்போது நீடித்துக் கொள்வது தான் நல்லது.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** ஆரம்பத்தில் இரங்கல் தீர்மானங்கள் இரண்டு கொண்டு வந்தோம். அதில் கொஞ்ச நேரம் போயிற்று. ஆகவே, இப்போது முழுமையாக ஒரு மணிநேரம் கேள்விகளுக்குக் கிடைக்காத காரணத்தால் கொஞ்சம் கேள்வி நேரத்தை நீடிப்பது சரியாக இருக்குமென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவரும் மற்றவர்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இன்னும் 15 நிமிடங்களுக்கு கேள்வி நேரத்தை நீடிக்கிறேன்.

### *Land Development Bank at Andipatti.*

*12 Q.—THIRU K. KANDASAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal to start a Land Development Bank at Andipatti?



THE HON. THIRU G. R. EDMUND: There is no such proposal with Government.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகாவிலே இந்த நிலவள அடமான பாங்கு என்பது திறக்கப்படவில்லை. ஒவ்வொரு வட்டாரத்திலும் இந்த பாங்கு திறக்கப்படுகின்றபோது, இந்த திருவாடானையில் மட்டும் ஏன் திறக்கப்படவில்லை. இனிமேலாவது அங்கு தொடங்கப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, மேலே உள்ள கேள்வி ஆண்டிப்பட்டியைப் பொறுத்ததாகும்.

### தென்னாற்காடு மாவட்டத்தில் மீனவர் குடியிருப்பு.

*13 வினா.—**திரு. எம். சுப்பிரமணியன்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் 1975-76-ல் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) இதுவரை எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டு, எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன?

(இ) 1976-77-ல் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 1975-76-ல் 155 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 6,25,500 ஒதுக்கப்பட்டது.

(ஆ) இத்தொகை ரூ. 6,25,500 செலவழிக்கப்பட்டு 155 வீடுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

(இ) 1976-77-ல் 265 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 12,38,700 ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. மா. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ நண்பர்களுக்கு இவ்வாறு செலவழித்துக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகள், இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்படுகின்றனவா அல்லது ஒரு பகுதி கடன், ஒரு பகுதி மானியமாகக் கொடுக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** அவ்வாறு கட்டிக் கொடுக்கப்படும் வீடுகள் முழுக்க முழுக்க இலவசமாகக் கட்டித் தரப்படுகின்றன.

## கௌகாத்தியில் செய்யப்பட்ட விளம்பரச் செலவு.

*14 வினா.—திரு. துரை முருகன் : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976-ம் ஆண்டு கௌகாத்தியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுப் பொருட்காட்சியில் தமிழ்நாடு செய்தி விளம்பரத் துறை செய்த விளம்பரச் செலவுகள் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தமிழ்நாடு செய்தி விளம்பரத் துறை செய்த விளம்பரச் செலவுகள் ரூ. 1,73,615-59 ஆகும்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, கௌஹாத்தியில் சமீபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்காக இந்த அரசாங்க செய்தி, விளம்பரத் துறை இலாகா பணம் செலவழித்திருக்கிறது. தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இப்படி எல்லா அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாட்டிற்கும் தமிழ்நாடு செய்தி, விளம்பரத் துறை இலாகா இப்படி செலவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இந்தச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னொரு பதிலையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டிலே கௌஹாத்தியிலே நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் கண்காட்சிக்கு செய்தி, விளம்பரத் துறை செலவு செய்திருக்கிறது. 1975 ஆம் ஆண்டிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே பஞ்சாப் மாநிலத்திலே சண்டிகரிலே நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டில் கண்காட்சிக்கு இரண்டு லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கர்நாடக மாநிலத்திலே காங்கிரஸ் கட்சி மாநாட்டிலும் கண்காட்சிக்கு 77,000 ரூபாய் செலவு செய்யப்



பட்டிருக்கிறது. ஆகவே, இவைகள் இந்த ஆட்சிக் காலத்திலே நடைபெறவில்லை. இப்படி அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாட்டில் கண்காட்சிகளுக்காகச் செலவழிப்பதா என்பதுபற்றி இந்த ஆட்சி தீவிரமாகப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, சமீப காலத்திலே வெளி வந்துள்ள ஆதாரங்களிலிருந்து, காங்கிரஸ் கட்சிக்கு நிதி திரட்டுவதற்காக இப்படிப்பட்ட விளம்பரங்கள் என்ற போர்வையிலே ஏராளமான நிதி திரட்டி இருப்பதாக பத்திரிகைகளிலும், பல்வேறு கமிஷன்களில் தஸ்தாவேஜுகளிலிருந்தும் ஆதாரங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, பொருட்காட்சியாக இருந்தாலும், சுவனிர்கள் போடுவதாக இருந்தாலும், இப்படி விளம்பரங்கள் என்ற போர்வையிலே by fraudulent methods-லே பணம் வசூல் செய்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இப்படி பொருட்காட்சிகள் என்று சொல்லி, விளம்பரங்கள் வாங்கி கடைசியில் காங்கிரஸ் கட்சிக்கு அந்தப் பணம் போய்ச் சேருகிறது. எனவே, அந்தப் பணத்தை—சுமார் ஒரு லட்சம் என்று நினைக்கிறேன்—இந்த அரசாங்கம் திரும்ப வசூல் செய்யத் தயாராக இருக்கிறதா ? அப்படி இல்லாவிட்டால், அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொன்ன பொருளைப் புரிந்துகொள்ளவில்லை. அந்தப் பணம் பொருட்காட்சிக்காக செலவு செய்யப்பட்டதே தவிர, விளம்பரங்களுக்காகப் பணம் கொடுக்கப்படவில்லை. பல துறைகளைப் பற்றிய செய்திகளை, விளம்பரப்படுத்துவதற்காக அரசாங்கம் அங்கு அரங்குகள் அமைப்பதற்காக அந்தப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. எனவே, பணம் காங்கிரஸ் கட்சிக்குத் தரப்படவில்லை. விளம்பரங்கள் மூலமும் அந்தக் கட்சிக்குப் பணம் தரப்படவில்லை. இதையும் இந்த அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்து, அப்படி செலவழிக்கப்படலாமா, கூடாதா என்பதைப்பற்றி முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. ஆர். உமாநாத் :** உதாரணமாகச் சொல்லுகிறேன். அட்வர்டைஸ்மென்ட், சாவனிர் என்று சொல்லி ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு செலவழிக்கப்பட்டிருக்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவு செய்து உறுப்பினர் அவர்கள் விவாதத்திற்குள் நுழைய வேண்டாம். 'விளம்பரத் தொகையாக அல்ல, பொருட்காட்சி வைக்கச் செலவு' என்று அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மீண்டும், மீண்டும் விளம்பரத் தொகையாகக் கொடுக்கப்பட்டது என்று வாதம் செய்வது சரியல்ல.

**திரு. ஆர். உமாநாத் :** நான் விவாதம் செய்வதற்காகச் சொல்லவில்லை. மத்தியில் ஆளும் காங்கிரசும் இங்கே கவர்னர் ஆட்சியும் இருந்தபோது செய்யப்பட்டச் செலவாகும் இது. எக்ஸிபிஷன் மூலமாகப் பணம் கொடுத்திருப்பது முறைதானா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மன்னிக்கவேண்டும். மத்தியிலே ஆளும் காங்கிரஸ்—இங்கே கவர்னர் ஆட்சி இருந்தபோது மாத்திரம் நடைபெற்ற காரியம் அல்ல இது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தபோதே இது நடைபெற்றிருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

**திரு. ஆர். உமாநாத் :** இதையொட்டி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன். முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறதா என்பதல்ல கேள்வி. ஆகவே, நான் ஒரு உப கேள்வி கேட்கிறேன். அந்தப் பணத்தைத் திரும்பப் பெறத் தயாரா ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபிறகு உறுப்பினர் அவர்களுக்குச் சந்தர்ப்பம் தருகிறேன். தயவு செய்து மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் உட்கார வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்—இது முறையாகச் செலவு செய்யப்பட்ட தொகை. இதற்கு கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டிருக்கின்றன. இதைப் போய் யாரிடத்திலும் வசூல் செய்ய முடியாது. இங்கிருந்துபோன ரயில் செலவு, ஆசாரிகள் வைத்த செலவு; பெயின்ட் அடித்த செலவு என்ற வகையில்தான்





செலவாகியிருக்கிறது. இதைத் திருப்பி வாங்க வேண்டுமென்றால் தொழிலாளர்களிடத்திலே இருந்துதான் இதை எல்லாம் திரும்ப வாங்க வேண்டும்.

**திரு. ஆ. நடராசன் :.** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியின் சார்பில் அவுஞ்சியில் நடைபெற்ற மாநாட்டில் அரசுத் தரப்பில் கண்காட்சி நடத்தப்பட்டதா ? விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அரசுத் தரப்பில் எந்த விவசாயப் பிரிவைச் சேர்ந்த விதமான கண்காட்சியும் இல்லை. வைத்தவர்கள் செலவு இல்லாமல் அவர்களுடைய விளம்பரத்தை வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண் 15. . .

**திரு. துரை முத்துசாமி :** நான் கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 230 பேருக்கும் நான் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றால் நேரம் போதாது. எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுக்க முடியாது. கேள்வி எண் 15. .

## கிராம வளர்ச்சித் திட்டம்.

* 15 வினா—**திரு. துரை முருகன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1976ல் துவக்கம் முதல், தஞ்சை மாவட்டம் கபிஸ்தலத்தில் கிராம வளர்ச்சி திட்டம் ஒன்று முதலிடம் தரப்பட்டு செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக ஒதுக்கப்பட்ட செலவுத் தொகை எவ்வளவு ? அதில் இதுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இத்திட்டம் இருபது அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக செயல் படுத்தப்பட்டதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[1977 டிசம்பர் 28

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :**

(அ) உறுப்பினர் எந்த திட்டம் என்று குறிப்பிடவில்லை. 1976ம் ஆண்டில் கபிஸ்தலத்தில் புதியதாக திட்டம் எதுவும் முதலிடம் தரப்பட்டு செயல்படுத்தப்படவில்லை.

(ஆ)

(இ) கேள்விகளுக்கு இடமில்லை.

(ஈ)

**திரு. துரை முருகன் :** என் கேள்வியில் 1976ல் [illegible] முதல் தஞ்சை மாவட்டம் கபிஸ்தலத்தில் கிராம வளர்ச்சித் திட்டம் ஒன்று முதலிடம் தரப்பட்டு செயல்படுத்தப்படுகிறதா என்பது. அந்தக் கிராம வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதைத்தான் 'இல்லை' என்று சொன்னேன்.

### காவிரியின் குறுக்கே பாலம்.

* 16 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் ஒன்றியம் மன்னம்பந்தல் பஞ்சாயத்தினையும் மணக்குடி பஞ்சாயத்தினையும் இணைக்க காவிரியின் குறுக்கே பாலம் அமைத்திடும் [illegible] ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** மன்னம்பந்தல் பஞ்சாயத்தினையும் மணக்குடி பஞ்சாயத்தினையும் இணைக்கும் வகையில் காவிரியின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களால் நீண்ட நாட்களாக கூறப்பட்டு வருகிறது. இனியேனும் அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நிதிநிலை, பாலத்தின் இன்றியமையாமை இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

**திரு. ஆர். மார்க்கபந்து :** [illegible] குறுக்கே ஒரு பாலம் கட்டுவதை [illegible] பற்றி கேள்வி கேட்டிருந்தேன்.



1977 டிசம்பர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவு செய்து வழக்கறிஞர் அவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். மூலக் கேள்வியோடு சம்பந்தப்பட்ட கேள்வி கேட்க வேண்டும். நேரத்தை வீணாக் காதீர்கள்.

### நீர்க்குழாய்களை புதுப்பித்தல்.

* 17 வினா—**திரு. க. அரங்கசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து குடிநீர் தேக்கங்களில் உள்ள பழைய குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் போட்டுத்தரும் திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** திட்டம் எதும் இல்லை.

### கோவை மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்களில் குடிநீர் பற்றாக் குறை.

* 18 வினா—**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குனியமுத்தூர் நகரப் பஞ்சாயத்து, தெலுங்குபாளையம் நகரப் பஞ்சாயத்து, குமாரபாளையம் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் நிலவி வரும் கடும் குடி நீர்ப் பற்றாக் குறையைப் போக்கிட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இந்த வினாவில் குறிப்பிட்டுள்ள பஞ்சாயத்துகளில் நடப்பு ஆண்டில் குனியமுத்தூர் பேரூராட்சியில் 5 கிணறுகளிலும் ,குமாரபாளையம் பேரூராட்சியில் 15 கிணறுகளிலும், தெலுங்குபாளையம் பேரூராட்சியில் 10 கிணறுகளிலும், அடிவெட்டி முடிக்கப்பட்டு, சமீபத்தில் பெய்த மழையினால் நல்ல தண்ணீர் ஊற்றும் வந்துள்ளது.

**திரு. ஆ. நடராசன் :** தலைவர் அவர்களே, இன்னும் சில இடங்களிலே குடிதண்ணீர்ப் பற்றாக் குறை இருக்கிற காரணத்தினால் அந்தப் பகுதியில் ஆண்டு முழுவதும் இப்படிப்பட்ட தொல்லைகள் இருக்கிற காரணத்தால் புதிதாக அரசு அவசரத் திட்டங்கள் ஏதாவது போடுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

* 19 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குறிச்சி நகரப் பஞ்சாயத்து பகுதியில் நிலவிவரும் கடுமையான குடிநீர் பற்றாக்குறையைப் போக்கிட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** குறிச்சி பேரூராட்சியி லுள்ள 28 சாதாரண கிணறுகளில் 8 கிணறுகளில் மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மற்ற 20 கிணறுகளில் தண்ணீர் இல்லை. கிணறுகளை மராமத்து நிவாரணத் திட்டத்திலும் பேரூராட்சி மன்ற நிதியிலும் ஆழ வெட்டு செய்தும் தட்டுப்பாடு நீங்கவில்லை. எனவே பேரூராட்சிக்கு சொந்த மானதும் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமானதுமான ஆழ் குழாய் கிணறுகளிலிருந்தும் தோட்டக் கிணறுகளிலிருந்தும் தண்ணீர் பெற்று விநியோகம் செய்யப்படுகிறது.

**பேருந்து விபத்துக்களில் பாதிக்கப்படுவோர்க்கு இழப்பீட்டுத் தொகை.**

* 20 வினா—திரு. கா. சுப்பிரவேலு: மாண்புமிகு போக்கு வரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுகளுக்கு விடையளிப்பாரா—

(அ) விமானம், ரயில் பயணம் செய்யும்போது விபத்தில் உயிர் நீத்தால் இழப்பு ஈட்டுத் தொகை வழங்குவது போல பேருந்திலும் வழங்க அரசிடம் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. சுப்பிரவேலு:** தலைவர் அவர்களே, இப்போது பஸ் விபத்திலே உயிர் நீத்தவர்களுடைய உயிர் மட்டும் பிரிவது இல்லை, அந்தக் குடும்பமே வாழ்க்கைப் பிரச்னைக்கு ஆளாகிறது. ஆனால் இந்தியப் பேரரசால் ரயிலிலே பயணம் செய்தவர்கள் உயிரிழந்து விட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்



படுகிறது. அதைப்போன்று பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு தரப்படுவது முக்கியம் என்பதை அரசு உணருகிறதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ரயில் விபத்துக்களில் உயிர் இழந்தவர்கள், படுகாயம் உற்றவர்களுக்கு உயிர் நீத்தவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு இந்திய ரயில்வே தொடர்புடைய சட்டவிதிகளின்படி கொடுக்கப்படுகிறது. அரசுப் பேருந்துகளில் பயணம் செய்கிறவர்கள் உயிர் இழந்தால் நஷ்ட ஈடு கொடுப்பதுபற்றிய பரிசீலனை எதுவும் அரசிடம் இல்லை. ஆனால், மோட்டார் வாகனச் சட்டப் பிரிவுகளைத் திருத்தி அரசுப் பேருந்துகளில் செல்கிறபோது உயிர் இழந்துவிடுகிற பயணிகளின் குடும்பங்களுக்கு ஓட்டுநர் கவனக்குறைவை எடுத்துக்கொள்ளாத முறையில் நஷ்ட ஈடு கொடுப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** இவ்வாறு ரயில், விமானம் இவைகளில் பயணம் செய்கிறவர்கள் உயிரிழந்துவிட்டால் நஷ்ட ஈடு கொடுப்பதுபோல் அரசாங்கப் பேருந்துகளில் ஏற்படுகின்ற விபத்துகளில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடு கேட்கும்போது அவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று வாங்குவதற்கு 4, 5 ஆண்டுக் காலமாகிறது. ரயில், விமானங்களில் பயணம் செய்கிறவர்கள் உயிரிழந்துவிட்டால் நஷ்ட ஈடு உடனடியாகக் கொடுப்பதைப் போன்று பேருந்துகளில் விபத்து ஏற்படும்போது உயிர் இழந்த குடும்பங்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படிப் பரிசீலனை எதுவும் இப்போது இல்லை. ஆனால், மோட்டார் வாகனங்களில் விபத்தின்போது உயிர் இழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு மோட்டார் வாகனச் சட்டப் பிரிவுகளைத் திருத்தி, ஓட்டுநர் கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டிருந்தால்தான் நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்ற நிலைமை இருக்கிறது, அதை மாற்றி ஓட்டுநர் கவனக் குறைவை எடுத்துக்கொள்ளாமல் விபத்து ஏற்பட்டு அதிலே உயிரிழந்துவிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

[1977 டிசம்பர் 28

**திரு. ஜே. ஜேம்ஸ் :** விமானங்களிலே பயணம் செய்யும்போது இன்ஷுரன்ஸ் செய்து கொள்வதற்கு திட்டம் இருப்பதை போன்று பேருந்துகளில் பயணம் செய்கிறவர்களும் இன்ஷுரன்ஸ் செய்து கொள்ளவேண்டுமென்ற திட்டம் கொண்டுவர அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அப்படி ஒன்றும் இல்லை.

## அமிர்த்தி ஆற்றின் குறுக்கே பாலம்

* 21 **வினா—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அராம்பட்டு கிராமத்திற்கு அருகில் அமிர்த்தி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் ஒன்று கட்டும் பணி பாதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணியினைப் பூர்த்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) & (ஆ) ஆம். 1974-75-ல் ஒப்பந்தக்காரரால் துவக்கப்பட்ட இந்த பாலம் கட்டும் பணி, ஆற்றின் இருமருங்கிலும் தடுப்புச் சுவர்கள் அமைக்கும் பணி முடிவடைந்த பின்னர், மேற்கொண்டு தொடரப்படவில்லை. எனவே, அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. புதிய ஒப்பந்தங்கள் ஏற்கும் கோரிக்கைக்கு மறுமொழி இல்லை. எனவே, நெடுஞ்சாலைத்துறையே சிறு ஒப்பந்தக்காரர்கள் மூலமாக மீதமுள்ள பணியை செய்துமுடிக்க ஆணை செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. ஜே. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அது எப்போது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அந்தப் பணிகள் ஆகஸ்டு 1977 இல் துவக்கப்பட்டுள்ளன. ஜூன் 78 இல் அந்தப் பணிகள் முடியும் என்று நம்பப்படுகிறது.



1977 டிசம்பர் 28]

## மாயூரம் காந்தி சாலையை அகலப்படுத்தல்.

* 22 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சிப் பகுதியிலுள்ள அரசினர் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த காந்தி சாலையை (நெ. 2 ரோடு) அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**திரு. சி. பொன்னையன் :** இல்லை.

(முற்பகல் 10.20)

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, மாயூரத்தில் அப்படியொரு நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் முன்பே இருந்ததாக அறிவிக்கப்பட்டது, அந்தத் திட்டம் இனிமேலாவது மேற்கொள்ளப்படுமா? ஏனென்றால் அங்கு போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அந்த நெருக்கடியைக் குறைப்பதற்காக நெடுஞ்சாலைப் பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவரவர்களே, இச்சாலை 18 அடி அகலம் கொண்டது. தற்பொழுது போக்குவரத்துக்கு அது போதும் என்ற செயற்குறிப்பு வந்துள்ளது. 22 அடியாக அகலப்படுத்த வேண்டுமென்றால் 65,000 ரூபாய் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. அரசுச் சாலைகள் திட்டத்தில் இந்தச் சாலையை அகலப்படுத்த பரிசீலித்து வருகிறோம்.

## * இரயில்வே மேம்பாலங்கள்

* 23 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எந்தெந்த இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் கட்டிடும் செயற்குறிப்புகள் உள்ளன?

(ஆ) அவைகளின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

---

*பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க பேரவை விதி 35 (4) இன் கீழ் உடுக் குறியிட்ட 23-ம் வினாக்களுக்கான விடைகள் அச்சிடப்பெற்றுள்ளன.

விடை—

[1977 டிசம்பர் 28

(அ) தமிழ் நாட்டில் இரயில்வே மேம்பாலங்கள் கட்டிடும் செயற் குறிப்புகள் எவையும் தற்பொழுது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 24 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்—சீர்காழி நெடுஞ்சாலையில் சீர்காழி புகைவண்டி நிலையத்திற்கு வடக்கேயுள்ள லெவல் கிராசிங் அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை.—இல்லை.

வடாற்காடு மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

* 25 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் தலைவர் விவசாய உறுப்பினர்களாக (கோரிப்ப) இருத்தல் வேண்டும் என்ற விதி இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு விதிமுறைகளுக்குப் புறம்பாக வடாற்காடு மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்டதற்கான காரணங்கள் யாவை?

விடை.—(அ) ஆம்.

(இ) திரு. ஆர். தர்மலிங்கம் அவர்களை வட ஆற்காடு விற்பனைக் குழுவின் தலைவராக அரசு நியமிக்கவில்லை. 18—12—1967 அன்று அவர் விற்பனைக் குழு உறுப்பினராக அரசால் நியமிக்கப்பட்டார். 3—2—1968-ந் தேதியன்று



1977 டிசம்பர் 28]

விற்பனைக் குழுவின் தலைவராக குழுவில் பெரும்பான்மையான உறுப்பினர்களால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில், ஒரு வேளாண்மைப் பொருள் உற்பத்தியாளரல்லர். 1969 முதல் வேளாண்மைப் பொருள் விளைவிக்கின்றார்.

காவிரி கழிமுகப் பகுதிகளில் சேமிப்பு வசதி.

*26. வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவிரி கழிமுகப் பகுதிகளில் குறுவை சாகுபடி செய்பவர்கள் நெல்லை உலர்த்தவும் பாதுகாக்கவும் போதிய இடங்கள் இல்லாத குறையைப் போக்க, அரசே பொறுப்பேற்று பெரிய சிமெண்ட் களங்களும், சேமிப்பு இடங்களும் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—செயற்குறிப்பு ஏதும் இல்லை.

தென்னை ஆராய்ச்சிப் பண்ணைகள்.

* 27. வினா—திரு. ஆர். ஆதிசுவாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தென்னை ஆராய்ச்சிப் பண்ணை எங்கேனும் உள்ளதா?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தென்னை ஆராய்ச்சிப் பண்ணை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் தென்னை ஆராய்ச்சிப் பண்ணைகள் உள்ளன:

1. வேப்பங்குளம், தஞ்சை மாவட்டம்.
2. கோயம்புத்தூர்.

மேலும் இராமநாதபுரத்தில் உச்சிப்புளி என்னுமிடத்தில் 12.43 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை ஆராய்ச்சி செயல் விளக்கப் பண்ணை ஒன்று இயங்கிவருகிறது.

(ஆ) இல்லை.

பருத்தி விதைப் பண்ணை.

*28. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி விதை உற்பத்திக்காக நமது மாநிலத்தில் "பருத்தி விதைப் பண்ணை" ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ & ஆ) பருத்தி விதைப் பண்ணை ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் தனியாக ஏதுமில்லை. என்றாலும், பருத்தி உயர் ரக விதைகளை வழங்குவதற்காக விவசாயத் துறையினர் முற்போக்கு விவசாயிகளுக்கு கரு வித்துக்களை வழங்கிப் பயிரிடச் செய்கிறார்கள்.

தர்மபுரி மாவட்டத்தில் பருத்தி அறவை ஆலை.

*29. வினா—டாக்டர் கோ. சமரசம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் மாவட்ட மையப் பகுதியான போச்சம்பள்ளி அல்லது காவேரிப்பட்டணம் பகுதியில் பருத்தி அறவை ஆலை (ஜின்னிங் பாக்டரி) ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



தர்மபுரி மாவட்டத்தில் பஞ்சாலை.

*30. வினா—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் ஊத்தங்கரை வட்ட பருத்தி உற்பத்தி பரவலாகவும் தரமானதாகவும் உள்ளதால் இப்பகுதியில் கூட்டுறவுத் துறையில் பஞ்சாலை கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

நந்தனார் குடியிருப்பில் கட்டப்பட்ட வீடுகள்.

1. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் மேலாநல்லூர் பஞ்சாயத்து பகுதியில் 'நந்தனார் காலனி' என்னும் பெயரால் அரசு எத்தனை தாழ்த்தப்பட்ட குடும்பத்தினருக்கு வீடுகள் கட்டித் தந்துள்ளது?

விடை—

இருபத்தேழு குடும்பத்தினர்க்கு வீடுகள் கட்ட 1972-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கடுங்காவல் சிறைத் தண்டனைக் கைதிகளுக்கு ஊதியம்.

2. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்ட அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடுங்காவல் தண்டனைக் கைதிகளுக்கு ஊதியம் ஏதேனும் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

விடை—

(அ) ஆம். மத்திய சிறை, சேலத்தில் மட்டும்.

(ஆ) ஊதியம் ஈட்டுத் திட்டம் தற்போது சேலம் மத்திய சிறையில் மட்டும் சோதனைத் திட்டமாக 1—8—1973 முதல் அமுலில் உள்ளது. கடுங்காவல் சிறைத் தண்டனை கைதிகள் இத்திட்டத்தில் சேர்த்து கொள்வதற்கு முன் மூன்று மாத பயிற்சி பெற வேண்டும். இம்மூன்று மாதம் பயிற்சி பெற்ற பின்தான் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி திட்டத்தின்படி சிறைவாசிகள் கீழ்க்கண்ட மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகைக்கும், அளவு வேலைக்கு எதிரே குறிப்பிட்டபடி ஊதியம் வழங்கப்படுகின்றனர் :—

| | |
|---|---|
| தேர்ச்சி பெற்றவர் | 0 40 பைசா |
| ஓரளவு தேர்ச்சி பெற்றவர் | 0 20 பைசா |
| தேர்ச்சி பெறாதவர் | 0 10 பைசா |

ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட வேலையை முழுத் திறமையுடன் செய்து முடித்தால் அவருக்கு அவ்வேலைக்கு உரிய கூலி கொடுக்கப்படுகிறது. அதற்கு அதிகமாக செய்தால் அதற்கேற்றாற்போன்று அதிக கூலி கொடுக்கப்படும். ஆனால் அவர் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை முழுத்திறமையுடன் செய்யாதிருந்தால் அவருக்கு கூலி வழங்கப்படுவதில்லை. அப்படி அவர் ஈட்டிய பணத்திலிருந்து அவருடைய சொந்த செலவு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அப் பணத்தில் புகை, சவுக்காரம், எண்ணெய், இனிப்புகள் முதலியன வாங்கிக்கொள்ளலாம். முன்னதாகவே சிறைத் தண்டனையனுபவித்து விடுதலையாகி மீண்டும் சிறைப்படும் சிறைவாசிகளுக்கு அவர்கள் சிறையில் அனுமதிக்கப்பட்டவுடனே அந்த வேலையை முன்பே அவர் செய்திருந்தால் உடனே அவருக்கு ஆரம்பத்திலிருந்து ஊதியம் அளிக்கலாம். ஆனால், பயிற்சி காலத்தில் இவர்களுக்கு எவ்வித கூலியும் வழங்கப்படுவதில்லை.





### நல்லத்துக்குடி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குடியிருப்புகளுக்கு நீர்வழங்கல்.

3. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், நல்லத்துக்குடி பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர் வாழும் பகுதிகளுக்கு குடி நீர் வழங்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

விடை—(1) ரூ. 4,000 மதிப்பீட்டில் ஒரு குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

(2) மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஒன்று ரூ. 20,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. மின்சார தொடர்பு வந்ததும் குடிநீர் வசதி கிடைக்கும். ரூ. 10,000 மதிப்பீட்டில் மேல்நிலை தேக்கத் தொட்டியிலிருந்து அரிசனக்குடியிருப்புக்கு குழாய் போடும் வேலை நடக்கிறது.

### தஞ்சை மாவட்டத்திலுள்ள மடங்கள், ஆதீனங்களுக்குச் சொந்தமான நிலங்கள்.

4. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் தருமபுரம் மடத்திற்குச் சொந்தமான நஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்? புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

விடை—

தஞ்சை மாவட்டம் தருமபுரம் மடத்திற்குச் சொந்தமான நிலங்கள்—

| | |
|---|---|
| நஞ்சை | 3,197.22 ஏக்கர் |
| புஞ்சை | 1,523.10 ஏக்கர் |

5. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான நஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்? புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

[1977 டிசம்பர் 28

விடை—

தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தப் பெயரில் அவருக்குச் சொந்தமான நஞ்சை நிலங்கள், புஞ்சை நிலங்கள் எதுமில்லை.

6. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான நஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்? புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்?

விடை—

தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான நிலங்கள்—

| | |
|---|---|
| நஞ்சை | 8,777.48 ஏக்கர் |
| புஞ்சை | 11,485.15 ஏக்கர் |

7. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஆதீனம் மற்றும் மடத்திற்குச் சொந்தமான நஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்? புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்?

விடை—

தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் மடத்திற்குச் சொந்தமான நிலங்கள்—

| | |
|---|---|
| நஞ்சை | 1,003.89 ஏக்கர் |
| புஞ்சை | 55.00 ஏக்கர் |

**தொழுநோய் பிச்சைக்காரர் இல்லங்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள்.**

8. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1975—76 ஆம் ஆண்டில் தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் எத்தனை பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள்?



1977 டிசம்பர் 28]

விடை—

1975-76 ஆம் ஆண்டில் அதாவது ஏப்ரல் 1975 முதல் மார்ச் 1976 வரை 10 தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களிலும் மொத்தம் 2,548 பேர் புதிதாக சேர்க்கப்பட்டார்கள்.

**பழங்குடி மக்களுக்கு கடன் வசதிகள்.**

9. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1975-76 ஆம் ஆண்டில் உழவு மாடுகள் வாங்கவும், கிணறுகள் தோண்டவும் பழங்குடி மக்களுக்கு அரசு கடனாக வழங்கிய தொகை எவ்வளவு?

விடை—

1975-76 ஆம் ஆண்டு கடனுதவித் திட்டம் நடைமுறையில் இல்லை. ஆயினும் மான்யம் வழங்கும் திட்டத்தின் கீழ், உழவு மாடுகள், விதைகள், உழவு கருவிகள் முதலியன வழங்குவதற்கு ரூ. 55,200-ம், விவசாயக் கிணறுகள் தோண்டுவதற்கு ரூ. 86,500-ம் செலவிடப்பட்டுள்ளது.

**தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திருமண மண்டபங்கள்.**

10. வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திருமண மண்டபம் எத்தனை அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பெற்றது?

விடை—

(அ) இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 62 திருமண மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 65 மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(ஆ) 1961-62 ஆம் ஆண்டு (மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்) இத்திட்டம் தொடங்கப்பட்டது.

[1977 டிசம்பர் 28

### நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள்.

11. வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் எத்தனை அரசு மருத்துவ மனைகள் உள்ளன?

(ஆ) அவைகளில் கிராமப் பகுதிகளில் உள்ளவை எத்தனை?

(இ) அவைகளிலுள்ள படுக்கை வசதிகள் எத்தனை?

(ஈ) அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய மருத்துவ மனைகள் எத்தனை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

| | |
|---|---|
| (அ) மாவட்டத் தலைமை மருத்துவ மனை | 1 |
| தாலுக்கா மருத்துவ மனைகள் | 2 |
| தாலுக்கா அல்லாத மருத்துவ மனைகள் | 3 |
| அரசாங்க மருந்தகங்கள் (Dispensaries) | |
| (ஆ) தாலுக்கா அல்லாத மருத்துவ மனைகள் | 2 |
| அரசாங்க மருந்தகங்கள் | 7 |

(இ) நகரப்பகுதியில்—557 படுக்கைகள்.
கிராமப் பகுதியில்—16 படுக்கைகள்.

(ஈ) இரண்டு (நகரப் பகுதி).

(உ) கீழ்க்காணும் பணிகளுக்கான அமைப்புப் படமும், மதிப்பீடும் பொதுப் பணித்துறையிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன:—

உதகையிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனை:

(1) நவீன சமையல் பகுதி அமைத்தல்.

(2) இதய சிகிச்சைப் பிரிவு அமைத்தல்.

(3) எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு அமைத்தல்.

(4) சிறு குழந்தைகளுக்கான இதய சிகிச்சைப் பிரிவு அமைத்தல்.



1977 டிசம்பர் 28]

கூனூர் அரசாங்க மருத்துவமனை:

(1) நவீன சமையலறைப் பகுதி அமைத்தல்.

(2) இதய சிகிச்சைப் பிரிவுப் பகுதி அமைத்தல்.

### நீலகிரி மாவட்டத்தில் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கல்.

12. வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் இன்னும் குடிநீர் வசதி இல்லாத குக்கிராமங்கள், அரிசன காலனிகள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவை எவை?

(இ) அந்த கிராமங்களுக்கு உடனடியாக குடிநீர் வசதி செய்து கொடுக்க எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பட்டியல் * இணைக்கப்பட்டிருக்கிறது.

(இ) இந்த 26 கிராமங்களில், 22 கிராமங்களை உடனடியாக குடிநீர் வசதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் (1977-78) தெரிந்தெடுத்திருக்கிறது.

### நீலகிரி மாவட்டத்தில் மின்வசதி.

13. வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் குக்கிராமங்களிலும் அரிசன காலனிகளிலும் மின்சார தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளனவா?

---

* 208-209-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1977 டிசம்பர் 28

(ஆ) மின் இணைப்பு இல்லாத குக்கிராமங்கள் எத்தனை? அவை எவை?

(இ) அக்கிராமங்களுக்கும் தெரு விளக்குகள் போட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

(ஈ) மின்சார விளக்குகள் போடப்பட்டும் எரியாத விளக்குகள் உள்ளதா?

(உ) ஆமெனில், அது குறித்து எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

பேரவை முன் ஒரு விவர *அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### அயல் நாடுகளுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி.

14. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வாழைப்பழங்களின் மதிப்பு என்ன?

விடை—

குவைத், பகரின், துபாய் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு, வாழை மற்றும் பழவளர்ச்சிக் கழகம் மூலமாக ரூ. 11.19 இலட்சம் மதிப்புள்ள 453 டன் அளவு வாழைப் பழங்கள் 1975-76-ம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

### பாலிதின் பைகளில் பால் விற்பனை.

15 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலிதின் பைகள் மூலமாக பால் விற்பனை செய்யும் திட்டம் நமது மாநிலத்தில் எந்தெந்த நகரங்களில் அமுலில் உள்ளது?

*209-210 பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது



1977 டிசம்பர் 28]

விடை—

பாலிதின் பைகள் மூலமாக பால் விற்பனை செய்யும் திட்டம் சென்னை நகரில் மட்டும் அமுலில் உள்ளது.

### காவல் நிலையங்களுக்கு வாகனங்கள்.

16. வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எத்தனை காவல் நிலையங்களுக்கு தனி ஜீப் கார் உள்ளது?

(ஆ) எத்தனை நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள் உள்ளது?

விடை—

(அ) காவல் குழுவின் பரிந்துரைப்படி காவல் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் மட்டுமே வழங்கவேண்டுமென்பதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளபடியால் எந்த ஒரு காவல் நிலையத்திற்கும் ஜீப் கார் வழங்கப்படவில்லை.

(ஆ) மாநிலத்தில் 494 காவல் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

### உள்ளார் அணைக்கட்டு.

17. வினா—திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவ நல்லூரை அடுத்த உள்ளார் அணைக்கட்டு கட்டுவதற்காக அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) இப்போது அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் முன்னோடி ஆய்வு நிலையில் உள்ளது.

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

18. வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில், அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் எத்தனை; எங்கெங்கு செயல்பட்டு வருகின்றன?

**விடை—**

சட்டப்பேரவை முன் ஒரு விவர * அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.

## சிறைச் சாலைகள் சீர்திருத்தம்.

19. வினு—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளைச் சீர்திருத்தம் செய்யும் உத்தேசம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளை சீர்திருத்தம் செய்யும்பொருட்டு மாநில அளவிலான சிறை சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கும் குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(*a*) yes.

(*b*) A proposal for constituting a State Level Committee on Jail Reforms is under the Consideration of the Government.

* 210-211-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



## பெண் கிராம அதிகாரிகள்

20 வினு—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை பெண்கள் கிராம முன்சீப், கிராம கர்ணங்களாக இருக்கிறார்கள் மாவட்டவாரியாக?

**விடை—**

தமிழ்நாட்டில் கிராம முன்சீப்களாக 21 பெண்களும், கிராம கர்ணமாக 41 பெண்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட வாரியாக விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாவட்டங்களின் பெயர். (1) | | கிராம முன்சீப்பாக நியமிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை. (2) | கிராம கர்ணமாக நியமிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை. (3) | முக்கூட்டு பணியாளராக (Triune Officer) நியமிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|---|
| 1 செங்கல்பட்டு | .. | 1 | 1 | .. |
| 2 வட ஆற்காடு | .. | 4 | 1 | .. |
| 3 தென் ஆற்காடு | .. | 1 | .. | .. |
| 4 தஞ்சாவூர் | .. | 1 | 14 | 1 |
| 5 திருச்சிராப்பள்ளி | .. | 2 | .. | .. |
| 6 மதுரை | .. | 2 | 3 | .. |
| 7 திருநெல்வேலி | .. | 4 | 7 | .. |
| 8 சேலம் | .. | 1 | 1 | 1 |
| 9 தர்மபுரி | .. | 2 | 1 | .. |
| 10 கோயம்புத்தூர் | .. | 3 | 2 | .. |
| 11 கன்னியாகுமரி | .. | .. | 11 | .. |
| மொத்தம் | .. | 21 | 41 | 2 |

புதுக்கோட்டை, இராமநாதபுரம், நீலகிரி மற்றும் சென்னை ஆகிய நான்கு மாவட்டங்களில் பெண்கள் கிராம அதிகாரிகளாக நியமிக்கப்படவில்லை.

[1977 டிசம்பர் 28

### அரசாங்க மாளிகைத் தோட்டத்தில் காய்கறி பயிரிடல்.

21 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணா சாலையிலுள்ள அரசாங்க மாளிகை தோட்டத்தில் காய்கறி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் எத்தனை ஏக்கர் பயன்படுத்தப்பட்டது?

(ஆ) எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, எந்த ஆண்டில் நிறுத்தப்பட்டது?

(இ) அதனால் ஏற்பட்ட நட்டம் என்ன?

விடை—

(அ) 15.41 ஏக்கர் ஒதுக்கப்பட்டதில் 3 ஏக்கர் பயிரிடப் பட்டது.

(ஆ) 1—8—1968-ல் ஆரம்பிக்கப்பட்டு 20—6—1970-ல் நிறுத்தப் பட்டது.

(இ) மொத்த நஷ்டம் ரூ. 52,080.

### முருகமங்கலம் தொடக்கப்பள்ளிக்கு மானியம்.

22 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், முருகமங்கலம் பஞ்சாயத்தில் தனியார் தொடக்கப்பள்ளி ஏதேனும் நடந்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அரசு 1975-76-ம் ஆண்டில் வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1975 ஆம் ஆண்டிற்கு ரூ. 18,470-40-ம்; 1976 ஆம் ஆண்டிற்கு ரூ. 20,566.00-ம் மானியத் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.



1977 டிசம்பர் 28]

### சித்தர்காடு-கோவாங்குடி சாலை.

23 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் சித்தர்காட்டிலிருந்து மறையூர் கோவாங்குடி வரையுள்ள சாலையினை சீர் செய்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை.—ஆம்.

### பதநீர் இறக்க அனுமதி.

24 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னை, பனை மரங்களிலிருந்து பதநீர் இறக்க அனுமதி வழங்கப்பட்டு வருகின்றதா?

விடை.—தென்னை, பனை மரங்களிலிருந்து பதநீர் இறக்கும் அனுமதி வருடா வருடம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது இவ்வனுமதி 31—3—1978 வரை வழங்கப்பட்டுள்ளது.

### மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள்.

25 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

1977-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி அருகே மாதகடப்பா, நெல்லிமலை ஆகிய பகுதி களில் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

விடை.—17 பேர்கள்.

[1977 டிசம்பர் 28

## மலேரியா ஒழிப்புத் திட்டம்.

26 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக 1975-76 ஆம் ஆண்டில் மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கிய தொகை என்ன ?

விடை.—மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக 1975-76 ஆம் ஆண்டில் மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கிய தொகை ரூ. 36.17 இலட்சம்.

## சென்னை மாநகரில் தனியார் லாரிகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்.

27 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1976-77-ம் ஆண்டில் சென்னை மாநகரில் தனியார்களுக்குச் சொந்தமான எத்தனை லாரிகளுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன ?

விடை.—1976-77-ம் ஆண்டில் சென்னை மாநகரில் தனியார்களுக்குச் சொந்தமான லாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் (பர்மிட்டுகள்) விவரம் வருமாறு :—

| சரக்குப் பேருந்து வகை (1) | மூன்று சக்கர சரக்குப் பேருந்துகள். (2) | நான்கு சக்கர சரக்குப் பேருந்துகள். (3) | டிராக்டர் டிரெய்லர் மற்றவை. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| வாடகை வண்டிகள் | 529 | 2,922 | 310 | 3,761 |
| தனியார் வண்டிகள் | .. | 809 | 126 | 935 |



1977 டிசம்பர் 28]

## தமிழ்நாட்டில் முந்திரி அபிவிருத்தித் திட்டம்.

28 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முந்திரி உற்பத்தியைப் பெருக்க அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் யாவை ?

விடை—

விவர அறிக்கை * அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

## சென்னை மாநகரில் பெண் காவல் பணியாளர்.

29 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் பெண் போலீஸ் படையில் எத்தனை பேர் பணியாற்றி வருகின்றனர் ?

விடை—

| | பெண் உதவி ஆய்வாளர். | பெண் தலைமைக் காவலர். | பெண் காவலர்கள். |
|---|---|---|---|
| ஒப்புதல் அளிக்கப்பட்ட பெண் காவல் பணியாளர் எண்ணிக்கை. | 1 | 1 | 20 |
| தற்போது பணிபுரியும் பெண் காவல் பணியாளர் எண்ணிக்கை. | 1 பயிற்சியில் உள்ளார், | 1 | 18 பயிற்சியில் உள்ள 8 பெண் காவலர்கள் உள்பட. |

* 211–215ம் பக்கங்களில் இணைப்பு V அச்சிடப் பெற்றுள்ளது.

[1977 டிசம்பர் 28

## செஞ்சி வட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

30 வினா—திரு. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த இரண்டு ஆண்டுகளில் (1975-76 அண்டு 1976-77) செஞ்சி வட்டத்தில் எத்தனை வீடுகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கட்டித் தரப்பட்டன?

விடை.—கடந்த இரண்டு ஆண்டுகளில் (1975-76 அண்டு 1976-77) செஞ்சி வட்டத்தில் கீழ்க்கண்ட ஊர்களில் அரிசனங்களுக்காக 210 வீடுகள் கட்டப்பட்டன.

| | வீடுகள். |
|---|---|
| 1. வல்லம் | 60 |
| 2. தென்புதுப்பேட்டை | 46 |
| 3. கப்லம்பாடி | 64 |
| 4. அப்பம்பட்டு | 40 |
| மொத்தம் | 210 |

## கரும்பு உற்பத்தி நிதியிலிருந்து போடப்பட்ட சாலைகள்.

31 வினா—திரு. துரைமுத்துசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உள்ள கரும்பு உற்பத்தி நிதியிலிருந்து ( Sugarcane cess ) 1975-76 வரை எத்தனை சாலைகள் போடப்பட்டன?

(ஆ) 1975-76, 1976-77 ஆண்டுகளில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மூலம் போடப்பட்ட சாலைகள் எத்தனை?

விடை—

(அ) 83 சாலைகள் போடப்பட்டுள்ளன.

(ஆ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மூலம் எந்த சாலையும் போடப்படவில்லை. ஆனால் 1976-77 ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சி பரப்பில் இரண்டு சாலைப்பணிகள் தனிப்பட்ட ஒப்பந்தக்காரரால் போடப்பட்டுள்ளன.



1977 டிசம்பர் 28]

32 வினா—திரு. துரைமுத்துசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு உற்பத்தி நிதியிலிருந்து தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைப் பகுதிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எந்தெந்த சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன?

(இ) அவை பற்றிய விபரம் என்ன?

விடை.—அவையின் முன் அறிக்கை * ஒன்று வைக்கப் பெற்றுள்ளது.

## புதிய காவல் நிலையங்கள்.

33 வினா—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மல்லவாடி கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—(அ) இப்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

விடை.—இல்லை.

34 Q.—THIRU N. RAMACHANDRA REDDY: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is a proposal to open a new police station at Anchetty (forest area) in Denkanikotttai taluk, Dharmapuri district?

## தானிய சேமிப்புக் கிடங்குகள்.

35 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தமிழகத்தில் எத்தனை தானிய சேமிப்பு கிடங்குகள் கட்ட உத்தேசித்துள்ளது மாவட்ட வாரியாக?

2-216 * 15-ம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

(ஆ) தனியார் எத்தனை பேர்களுக்கு கிடங்குகள் கட்ட கடனாக தொகை வழங்கப்பட்டது? எவ்வளவு தொகை? மாவட்ட வாரியாக?

(இ) இந்தக் கடன்கள் எத்தனை ஆண்டுகளில் என்ன வகையில் திருப்பி வசூலிக்கப்படும்?

**விடை.**—(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1977-78, 1978-79 ஆம் ஆண்டுகளில் கட்ட உத்தேசித்துள்ள தானிய சேமிப்புக் கிடங்குகளின் விவரம் பின்வருமாறு:—

| மாவட்டம். (1) | கிடங்குகளின் கொள்ளளவு. (மெட்ரிக் டன்னில்.) (2) |
|---|---|
| 1. சென்னை | 3,000 |
| 2. வட ஆற்காடு | 1,900 |
| 3. தென் ஆற்காடு | 4,950 |
| 4. செங்கல்பட்டு | 3,000 |
| 5. சேலம் | 11,400 |
| 6. தர்மபுரி | 1,800 |
| 7. கோவை | 18,200 |
| 8. நீலகிரி | 7,050 |
| 9. தஞ்சாவூர் | 11,300 |
| 10. திருச்சி | 8,100 |
| 11. புதுக்கோட்டை | 1,000 |
| 12. மதுரை | 22,100 |
| 13. இராமநாதபுரம் | 12,600 |
| 14. திருநெல்வேலி | 27,400 |
| 15. கன்னியாகுமரி | 14,600 |
| மொத்தம் | 1,48,400 |



(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கிடங்குகள் கட்ட தனியார் யாருக்கும் கடன் வழங்குவதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## வேளாண்மைப் பொறியியல் பணிமையங்கள்.

36. **வினா**—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் செயல்பட்டு வரும் Agro Engineering Centres எத்தனை?

**விடை.**—தமிழ் நாட்டில் வட்டார அளவில் 220 வேளாண்மைப் பொறியியல் மற்றும் கூட்டுறவுப் பணி மையங்களும், மாவட்ட அளவில் 12 மாவட்ட வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு சங்கங்களும், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல், மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

## முசரவாக்கத்திலுள்ள விதைப் பண்ணை.

37. **வினா**—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் காஞ்சீபுரம் அருகே முசரவாக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய விதைப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 1976 பிப்ரவரி வரையில் விதைகள் மற்ற இனங்கள் விற்று வந்த தொகை எவ்வளவு?

(ஆ) அங்கு கிணறுகள், துளை கிணறுகள், கட்டிடம், மெஷினரி, பம்ப்செட், டிராக்டர்கள் முதலிய இனங்களின்கீழ் ஆன செலவுகள் எவ்வளவு?

(இ) தற்போது சாகுபடிக்கு அப்பண்ணையின்கீழ் உள்ள மொத்த விஸ்தீரணம் எவ்வளவு?

**விடை.**—செங்கை மாவட்டம் காஞ்சீபுரம் அருகே முசரவாக்கத்தில் தமிழ்நாடு அரசு பண்ணை கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட விவசாய விதைப்பண்ணை மே மாதம் 1975-ம் ஆண்டிலிருந்து

[1977 டிசம்பர் 28

நடைபெற்று வருகிறது. 1976 பிப்ரவரி முடிய வருமானம், சில இனங்கள் மற்றும் விஸ்தீரணம் பற்றிய தகவல்கள் கீழே இணைக்கப்பட்டுள்ளன :—

(அ)

| | தானியத்தின் பெயர். (1) | சாகுபடி செய்த விஸ்தீரணம் (ஏக்கர்) (2) | மகசூல். (கிலோ) (3) | விற்பனைத் தொகை (ரூபாய்) (4) |
|---|---|---|---|---|
| 1. | கண்ணகி நெல் | 0·45 | 1,056 | 1,939·50 |
| 2. | ஐ. ஆர். 20 நெல் | 13·40 | 15,784 | 15,486·70 |
| 3. | பவானி நெல் | 0·50 | 631 | 600·00 |
| 4. | ஐ. ஆர். 20 நெல் | 12·00 | 250 | 245·00 |
| 5. | பச்சைக் பயிறு | 6·00 | 104 | 260·00 |
| | மொத்தம் | 32·35 | 17,825 | 18,531·20 |

(ஆ)

| | | (ரூபாய்) |
|---|---|---|
| 1. | குழாய் கிணறுகள் (7) போட்டதற்கான செலவு. | 2,06,345 00 |
| 2. | டர்பைன் பம்பு மற்றும் பி3 இன்ஜின் | 46,492 00 |
| 3. | ஜெனரேட்டர் செட் | 69,035 60 |

மற்ற இனங்களின்கீழ் செலவு இல்லை.

இ—145.94 ஏக்கர்.

துப்பறியும் நாய்ப் படைப் பிரிவு.

38. வினா—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது தமிழகக் காவல்துறையில் உள்ள துப்பறியும் நாய்ப்படைப் பிரிவில் எத்தனை நாய்கள் உள்ளன ?

(ஆ) அவைகளுக்கென நாள்தோறும் செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் உள்ள துப்பறியும் நாய்ப்படைப் பிரிவில் தற்போது 15 துப்பறியும் நாய்கள் உள்ளன.

(ஆ) நாய் ஒன்றுக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 9 விதம் செலவிடப்படுகிறது.



1977 டிசம்பர் 28]

பெரியகுளம் நகரில் சிறப்பங்காடி.

39. வினா—திரு. பண்ணை கே. சேதுராம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் நகரத்தில் சிறப்பு அங்காடி துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பெரியகுளம் நகரில் ஒரு சிறிய சிறப்பங்காடி துவக்குவதற்காக பெரியக்குளம் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு ரூ. 60,000 (ரூ. 40,000 பங்கு மூலதனமாகவும், ரூ. 20,000 கடனாகவும்) உதவித் தொகை கொடுக்க 1977 அக்டோபர் மாதம் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அரசாங்க விதைப் பண்ணைகள்.

40. வினா—திரு. கரு. ராம கரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசாங்க விதைப் பண்ணைகள் உள்ளனவா ?

(ஆ) ஆம், எனில், எத்தனை ?

(இ) எந்தெந்த இடங்களில் உள்ளன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 49.

(இ) வட ஆற்காடு மாவட்டம் :

1. நவ்லாக்.
2. ஆதியாண்டல்.
3. வாழவச்சனூர்.

செங்கல்பட்டு மாவட்டம் :

4. காஞ்சிபுரம்.
5. கொளத்தூர்.
6. புட்லூர்.

தென் ஆற்காடு மாவட்டம் :

7. காக்குப்பம்.
8. இருவேல்பேட்டை.
9. வானூர்.
10. வாண்டராயன்பேட்டை.
11. மிரானூர்.
12. வெல்லபாக்கம்.
13. வடக்கநந்தல்.

திருச்சி மாவட்டம் :

14. இனுங்கூர்.
15. நெய்குப்பைப்புதூர்.
16. புதூர் பாளையம்.

தஞ்சாவூர் மாவட்டம் :

17. நாகமங்கலம்.
18. திருக்கடையூர்.
19. சாக்கோட்டை.
20. ஓரத்தூர்.
21. காஞ்சிக்குடிக்காடு.
22. நெடும்பாலம்.
23. கிராந்தி.
24. தேவாம்பாள்பட்டினம்.
25. சிக்கில்.
26. மூங்கில்குடி.

மதுரை மாவட்டம் :

27. விநயகபுரம்.
28. வைகை அணை 1.
29. வைகை அணை 2.
30. கீழ்க்கூடலூர்.
31. வில்லுபட்டி.
32. ஹைபில்ரேஞ்சு.



இராமநாதபுரம் மாவட்டம் :

33. பரமக்குடி.
34. தேவதானம்.

திருநெல்வேலி மாவட்டம் :

35. சாரையிருப்பு.
36. இள்ளிகுளம்.
37. மேலகரம்.

கோயம்புத்தூர் மாவட்டம் :

38. கண்ணம்பாளையம்.
39. பொங்கலூர்.
40. பாப்பான்குளம்.
41. பவானிசாகர்.
42. பவானி.
43. சத்தியமங்கலம்.

சேலம் மாவட்டம் :

44 மூள்ளுவாடி.
45. மேட்டூர் அணை.
46. டானிஷ்பேட்டை.

தர்மபுரி மாவட்டம் :

47. பாப்பாரப்பட்டி.

புதுக்கோட்டை மாவட்டம் :

48. அண்ணுபண்ணை.

கன்னியாகுமரி மாவட்டம் :

49. திருப்பதிசாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1977 டிசம்பர் 28

## 4. தகவல் கோரல்.

### விவசாயப் பேரணியில் கலந்து கொள்ள வந்தவர்கள் தடுக்கப் பெற்றிருப்பது குறித்து.

* **திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, சட்டப்பேரவை 242-வது விதியின் கீழ் ஒரு பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். இன்றைய தினம் விவசாயிகள் சில கோரிக்கைகளை வைத்து முதலமைச்சரிடம் விண்ணப்பம் கொடுக்க ஊர்வலமாக வந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஊர்வலத்திற்கு அரசாங்கமே அனுமதி அளித்திருக்கிறது. அப்படி அனுமதி பெற்றவர்கள் இந்த ஊர்வலத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். விவசாயக் கமிட்டி என்று இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கமே கமிட்டி ஒன்றையும் அறிவித்திருக்கிறார்கள். இப்படி ஒருபுறம் அறிவித்து விட்டு, ஊர்வலத்திற்கும் அனுமதி அளித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் எங்களுக்கு வந்திருக்கக் கூடிய செய்தி வருத்தத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆயிரக்கணக்கான பேர் கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையங்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னையிலேயும் சுமார் 300 பேர்கள் அவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களையெல்லாம்கூட நான் படிக்க முடியும். அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. பஸ்களிலே வருகின்றபொழுது பர்மிட் பறிமுதல் செய்யப்படும் அல்லது காலி செய்யப்படும் என்று பயமுறுத்தப்பட்டிருக்கிறது. பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் மற்ற வாகனங்களைத் தேடிப்பிடித்து வருவதற்குச் சிக்கலாக இருக்கிறது. அனுமதிக்கப்பட்ட ஊர்வலத்திற்கு வருகின்றவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது சரியா என்று கேட்க விரும்புகிறேன். கைது செய்யப்பட்டிருப்பது முறையா ?

சென்னை தேனாம்பேட்டை காவல் நிலையத்தைச் சேர்ந்த நாராயணன் நாயர் என்ற இன்ஸ்பெக்டர் தி.மு.க. ஆதரவாளர்களை மிகவும் தரக் குறைவாகப் பேசியிருக்கிறார், திராவிட முன்னேற்றக் கழகத்தினரிடம் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறார். இது எந்தக் கொள்கை என்று எனக்குப் புரியவில்லை. அரசாங்கத்தின் கொள்கை இரண்டு விதமாக இருக்கிறது. இவ்வாறு அவர்கள் நடத்துவது அரசாங்கம் அறிவித்து நடத்துகிறார்களா ? அல்லது அதிகாரிகளே அவ்வாறு நடத்துகிறார்களா ?



1977 டிசம்பர் 28]

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** சபாநாயகரவர்களே. . .

**திரு. க. சுப்பு :** நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** நீங்கள் இவ்வளவு பேசிய பிறகு என்னைக் கொஞ்சம் பேச அனுமதியுங்கள்.

**திரு. என். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. என். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுப்புவை உட்கார வைத்து விட்டு செஞ்சி இராமச்சந்திரன் அவர்களே பேசட்டும். செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் பொறுப்பை மீறிவிட்டார்கள். நீங்கள் என்னை உட்கார் என்று சொன்னீர்களே, அந்தத் தகுதியை நான் பாராட்டுகிறேன். இப்படியே பேரவைத் தலைவரைப்பற்றிப் பேசுவது நல்லதுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பேசியதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்பதற்கு அதிக நேரம் ஆகாது. மிகவும் வேகமாகப் பேசும்பொழுது வார்த்தைகளை நிறுத்திப் பேச வேண்டும். என்னை உட்கார் என்று சொல்லி விட்டு அவையை எப்படி நடத்தப் போகின்றீர்கள் ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவரவர்களே, விவசாயிகள் விவசாயப் பேரணி என்ற ஒன்று இன்றைக்கு அதன் சார்பாகப் பேரணியை நடத்தி நமது முதலமைச்சரவர்களைச் சந்தித்து மனு கொடுக்க வந்திருப்பதாக நான் செய்தி கேள்விப் பட்டேன். முதலமைச்சரவர்கள் அந்த மனுவைப் பெற்றுக்கொண்டதற்குப் பிறகு, அந்த மனுவில் என்ன என்ன தெரிவித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் முதலமைச்சர் அவர்கள் தேவைப்பட்டால் இந்தச் சபைக்குத் தெரிவிக்கவும், அதன் அடிப்படையில் தேவைப்பட்டால் கேள்விகளை எழுப்பவும் அல்லது விவாதங்கள் வைத்துக் கொள்வதற்கும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் தயவுசெய்து இப்பொழுது அதை எழுப்ப வேண்டாமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** அந்தப் பிரச்னைக்குள் நான் போகவில்லை.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே . . . .

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

I submit that point of order will have more precedence than any other statement on the floor of the House.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரைக் கேட்டுவிட்டுப் பேசினால் நலமாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு நீண்ட பிரசங்கத்தை எழுப்பினார்கள். அவர்கள் அதை எந்த விதியின்கீழ் எழுப்பினார்கள் என்று அறிய விரும்புகிறேன். அப்படி எழுப்புவது என்றால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அந்த உரிமையைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு உறுப்பினரும் எதையாவது பேச ஆரம்பித்தால் அவையின் அலுவல்கள் பாதிக்கப்படும். எனவே, அவர்கள் எந்த விதியின் கீழ் தன்னுடைய அறிக்கையை அல்லது பேச்சை அவர்கள் எழுப்பினார்கள் என்று விளக்கமாகச் சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவரவர்களே, . . .

THE HON. THIRU G. R. EDMUND : I want the hon. Member to quote the relevant rule and not make any statement.

THIRU K. SUPPU : I am going to quote the rule.

நான் ஏற்கனவே, இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். ஆனால், சபாநாயகர் அவர்கள் அதை ஒத்துக்கொள்ள இயலாத நிலை இருப்பதால், கடைசியிலே 242-வது விதியின்கீழ் . . .

THE HON. THIRU G. R. EDMUND : That gives power to the Hon. Speaker and not to the hon. Member.

**திரு. க. சுப்பு :** நான் பேச ஆரம்பிக்கும்பொழுதே சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசும்பொழுதே சொன்னேன், சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று.

**திரு. க. சுப்பு :** 242-வது விதியின்கீழ், தங்களது அனுமதியின் பேரில் இந்தப் பிரச்னையை எழுப்புகிறேன் என்று ஆரம்பித்தேன்.





நான் பேசியதைத் தாங்கள் தடுக்கவில்லையென்றால், தாங்கள் அனுமதி கொடுத்தீர்கள் என்று அர்த்தம். அதோடு நீங்கள் அனுமதி கொடுப்பது பற்றிய பிரச்னை க்ளோஸ்ட். அதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சுருக்கமாக விதிகளின்படி நடப்பீர்கள் என்று நம்பித்தான் அனுமதி கொடுத்தேன்.

**திரு. க. சுப்பு :** அப்படித்தான் நடக்கிறேன். விதிகளின்படி நடக்கவில்லையென்றால், சொல்லுங்கள். ஊர்வலம் நடத்த அனுமதி வழங்கப்பட்ட பிறகு, கைது செய்யப்படுவதும், தடுத்து நிறுத்தப்படுவதும் சரியா? ஆளுங்கட்சிப் பத்திரிகையிலே ஊர்வலம் ரத்து என்று போடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பிரச்னையைத் திசை திருப்பிக் கொண்டு போவதாக நான் கருதுகிறேன்.

**திரு. க. சுப்பு :** அண்ணா பத்திரிகையிலே இருப்பதைக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னவர் பதில் சொல்லி விட்டார். அந்த அறிக்கை வரட்டும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தயவுசெய்து சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இது முற்றிலும் தேவையற்ற . . .

**திரு. க. சுப்பு :** அதைத்தான் நான் சொல்கிறேன், தேவையில்லாமல் போடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதையெல்லாம் என்னிடம் காண்பித்துச் சொல்லலாம். ஆனால், தேவையில்லை உங்களுக்கு . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தயவுசெய்து நான் சொல்கிறேன், இந்தப் பிரச்னைக்கு நான் பதில் சொல்லிவிட்டேன், பிரச்னைக்குப் பரிகாரம் தேவை என்று . . . (திரு. க. சுப்பு குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டீர்கள். மாண்புமிகு அமைச்சருக்குப் பதில் சொல்ல சந்தர்ப்பம் கொடுங்கள்.

[1977 டிசம்பர் 28

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** நான் சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dont bring in most irrelevant matters on the floor of the House. ஏற்கனவே தெரிவித்துவிட்டேன். முதலமைச்சர் மனுவை வாங்கி இருக்கிறார். நாளைக்கு இந்தச் சபையில் அதுபற்றிய பிரச்னை வரும். அதுவரை காத்திருங்கள். இப்பொழுது இதையெல்லாம் கிளப்பாதீர்கள்.

*** திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, விவசாயிகள் பேரணி நடத்தி, கோரிக்கை மனு தருகின்ற அந்த நிகழ்ச்சியில் மனுவை முதலமைச்சர் பெற்றுக் கொண்டு, அதுபற்றி விளக்கம் அளிப்பார் என்று அவை முன்னவர் கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், எழுப்பப்பட்ட பிரச்னை அதுவல்ல. பேரணி நடத்துவதோ, அல்லது மனுவைக் கொடுப்பதோ பிரச்னை அல்ல. பேரணி நடத்த வருகிற விவசாயிகள், அல்லது கழக நண்பர்கள், ஆங்காங்கு, பேருந்துகளில்—லாரிகளில் வரக் கூடாது என்று தடை இருக்கிற காரணத்தால் பேருந்துகளில்—வரும் போது, அனுமதிக்கப்பட்ட பேருந்துகளையெல்லாம் கடைசி நேரத்தில், ஆங்காங்கு அதிகாரிகள் தடுத்து, பர்மிட்டுகளை ரத்து செய்தும், செல்லக்கூடாது என்று பயமுறுத்தியும் சிக்கலை உருவாக்கியிருக்கிறார்கள்.

சென்னையிலே சில தோழர்கள் திடீரென்று கைது செய்யப் பட்டார்கள். கேட்டால், சமூக விரோதிகள் என்று சொல்வார்கள். கைது செய்யப்பட்டவர்களில், வட்டச் செயலாளர்கள் பலர் இருக்கிறார்கள். குறிப்பாக, தாயமணி என்கிற 16-வது வட்டச் செயலாளர் ஒருவர். ஆகவே, பேரணி, வெற்றிகரமாக நடைபெறக் கூடாது என்று அரசாங்கம் முன்கூட்டியே இப்படி பஸ்களை—ஏற்கனவே, ஏற்பாடு செய்யப்பட்ட பஸ்களை—தடை செய்திருப்பதும் இங்குள்ள தோழர்களைக் கைது செய்திருப்பதும் முன்னேற்பாடாக, திட்டமிட்டு, பேரணியைக் குலைப்பதற்கு என்று செய்யப்பட்டது. மனுவை முதலமைச்சர் பெற்றுக் கொள்கிறார், விளக்கம் அளிக்கிறார் என்பதற்காகப் பாராட்டு கிறேன், அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இடையிலே இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கலாமா என்றுதான் சுப்பு [illegible]



1977 டிசம்பர் 28]

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** முன்னேற்பாடாக இப்படி நடக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. பல இடங்களில் பேருந்துகள் தடுத்து நிறுத்தப்பட்டன என்றும், லைசன்ஸ்கள்—பர்மிட்டுகள்—கான்சல் செய்யப்பட்டன என்றும் அவர் தெரிவிக்கிறார். இந்தத் தகவல் நமக்கு இல்லை.

அது மட்டுமல்லாமல், இந்தப் பேரணியைத் தோல்வி பெறச் செய்வதற்காக, இப்படிப்பட்ட காரியங்களில் இந்த அரசு ஈடுபடுகிறது என்று குறிப்பிடுவது தேவையற்ற முறையில் உள்நோக்கம் கற்பிப்பதாக நான் கருதுகிறேன். ஜனநாயக அமைப்பில் பேரணி நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்ட நேரத்தில், தாராளமாக நடத்துங்கள் என்று அரசு அனுமதித் திருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே, தயவுசெய்து, விஷயங்களைச் சரியாக புரிந்துகொள்ளாமல், தெரிந்துகொள்ளாமல், நாம் ஒரு போக்காக கருத்துக்களை இந்தச் சபையில் வைப்பது, அவை மரபுக்கு ஏற்றதல்ல என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

*** திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் பேசும்போது, ‘உள்நோக்கம் கற்பிக்கிறேன்’ என்று குறிப்பிட்டார். இது அவையிலே பயன்படுத்தக்கூடாத ஒரு சொல். இப்படிப்பட்ட சொற்களை குறிப்பாக அவைத்தலைவர் அவையிலே அனுமதிப்பது கிடையாது. நான் நிச்சயமாகச் சொல்கிறேன், ஆங்காங்கு இருக்கிற ஆர்.டி.ஓ.-க்கள் பர்மிட்டுக்களை கேன்சல் செய்து பஸ்கள் வராமல் தடை செய்திருக்கிறார்கள். அது இங்கிருந்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட உத்தரவு என்றுதான் நாங்கள் கருதவேண்டும். எனவே, எங்களுடைய அடையாள பூர்வமான கண்டனத்தைக் காட்டுவதற்காக இந்த அவையிலிருந்து சில நிமிட நேரம், வெளி நடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

[1977 டிசம்பர் 28

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்டத் தலைவர் என். வெங்கடாசலம் கடந்த 21—9—1977 அன்று கொலை செய்யப்பட்டு இது வரையிலும் ஒன்றும் நடவடிக்கை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களே இப்படி சொன்னால் எப்படி ? இன்றைக்குத்தான் எனக்குத் தகவல் வந்தது. அதை முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறேன். அதை பிறகு எடுத்துக்கொள்ளலாம். அதைப்பற்றி என் அறையிலே வந்து அதைப்பற்றிக் கேளுங்கள்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஒரு விவரம் தேவை. தாயமணி போன்ற விவசாயிகள் எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, தாயமணி போன்று எத்தனை விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்கிறார் . . .

## (5) அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை 6 (1) ஆவது விதியின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (பானல் ஆப் சேர்மன்) நான் நியமிக்கிறேன்.

1. திரு. பண்ணை கே. சேதுராம்.
2. திரு. ஆர். முத்தையா.
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. கே. கே. முத்தையா.





## (6) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை குறித்தும் 1976-77 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை குறித்தும் விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு மின்சார
வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடும்,
1976-77 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை மதிப்பீடும். மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்சார
வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடும்,
மற்றும் 1976-77 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை மதிப்பீடு
ஆகியவற்றின் மீது விவாதத்தைத் துவக்கி வைப்பார்.

**திரு. மு. அம்பிகாபதி :** பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத்
தலைவர் அவர்களே, கடந்த 12—11—1977 அன்று கடுமையான
புயல் வீசி பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நிலைமையில், புயல்
சம்பந்தமான பிரச்னைகளைப் பற்றி விவாதிப்பதை விட்டு, மற்றப்
பிரச்னைகளைப்பற்றி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர்
இல்லை. நான் முதலிலேயே சொன்னேன். அரசு தரப்பிலே இருந்து
ஒரு வெள்ளை அறிக்கை தருவதாகத் தகவல் வந்து—அந்த
அறிக்கையும் அவையில் வைத்தாகிவிட்டது. அதுபற்றி பிசினஸ்
அட்வைசரிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும். அதைவிட்டு இங்கே
நேரத்தை வீணாக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத்
தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1977-78-ம்
ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையினையும், 1976-77-ம்
ஆண்டுக்கான துணை நிதிநிலை மதிப்பீட்டு அறிக்கையினையும்
இங்கே வைத்துள்ளேன். அது குறித்து என்னுடைய உரையும்*
அச்சிட்டு அவைக்கு தரப்பட்டு இருக்கிறது. அந்த உரையினை
நான் படித்ததாக அவைக்குறிப்பில் ஏற்றுக்கொள்ளவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சமயத்தில் இரண்டு
கருத்துக்களை மட்டும் பேரவை உறுப்பினர்களின் கவனத்திற்குக்
கொண்டுவருவது எனது கடமையாகக் கருதுகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்
" The Electricity Board is one of the best assets of the Government of Madras. "

*217—247 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

மின்சார வாரியம் தமிழக அரசின் மிகச் சிறந்த சொத்துக்களில் ஒன்று என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1977-78-ம் ஆண்டு நிதி அறிக்கையைப் பரிசீலிக்கின்ற நேரத்தில் அது உண்மையிலேயே அவ்வளவு மிகச் சிறந்த சொத்தாக இருக்கின்றதா, அப்படி சொத்தாக இல்லை என்றால் அதற்கு என்னென்ன காரணங்கள், அது மீண்டும் மக்களுக்கு நல்ல பலனைத் தருகின்ற சொத்தாக ஆக்குவதற்கு என்னென்ன காரியங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது ஆலோசனையாக வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது இதே போன்ற ஒரு கூட்டத் தொடரில் 1969-ம் ஆண்டில் இதே சட்ட மன்றத்தில் நடந்த விவாதத்தில், உறுப்பினராக இருந்தபோது, அன்றையதினத்திலே மின்சார வாரியத்தின் நிதிநிலை பற்றி பேசுகிறபோது நான் ஒரு கருத்தைக் குறிப்பிட்டேன். எல்லா கிராமங்களுக்கும் 71-ம் ஆண்டுக்குள் மின்சாரத்தைக் தந்துவிடப் போகிறோம் என்று திட்டம் அறிவிக்கப்பட்டது. நான் ஆளும் கட்சியைத் தான் அப்போதும் சார்ந்தவனாக இருந்தேன். அந்த நேரத்தில் பேசுகிறபோது சொன்னேன், மின் உற்பத்தியில் கவனம் செலுத்தாமல், மின்சாரத்தைக் கொண்டு செல்வதில் கவனம் செலுத்தாமல், எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் தரப் போகிறோம், அதுவும் இரண்டு ஆண்டுகளில் தரப்போகிறோம் என்று நாம் திட்டம் தீட்டி செயலாற்றத் தொடங்கினால், அது மின்சார வாரியத்தை வெகுவாக பாதிக்கும் என்று எடுத்துக் காட்டினேன். நான் அதை அன்றைக்கு எப்படி எடுத்துக் காட்டினேனோ அது இன்றைக்கு நிரூபணமாகிவிட்டதோ என்று நான் கருதுகின்ற அளவுக்கு நிலைமைகள் இருந்து இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், இரு கருத்துக்கள் சொல்வது உண்டு. ஒரு கருத்து, இந்த வாரியம் சேவை நிறுவனமாக இருக்க வேண்டும். இன்னொரு கருத்து, அது வணிக நிறுவனமாக இருக்க வேண்டும். சேவை நிறுவனமாக இருக்கவேண்டுமா, வணிக நிறுவனமாக இருக்க வேண்டுமா என்பதைப் பார்க்கிறபோது, இந்த அரசைப் பொறுத்த வரையில் அது இரண்டுமாக இருக்கவேண்டும் என்ற கருத்தைக்



கொண்டுள்ளது. சேவை நிறுவனமாக இருந்து விட்டு, நஷ்டத்தில் இயங்குமானால் பிரயோசனம் இல்லை. வணிக நிறுவனமாக இருந்து லாபத்தை ஈட்டி விட்டு, மக்களுக்கு திருப்தியாக சேவை செய்ய வில்லை என்ற நிலைமை இருக்குமானால், அதனால் பலன் இல்லை. ஆகவே, சேவை இருக்கவேண்டும், சேமிப்பும் இருக்கவேண்டும். இரண்டும் இரு கண்களாக இருந்து, ஒரே நோக்கத்துடன் செயலாற்ற வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாகும்.

ஆகவே, அந்த வகையில் இந்த மின்சார வாரியத்தை மீண்டும் திருத்தி அமைத்து அது நல்ல முறையில் மக்களுக்கு சேவை செய்யவும், அதே நேரத்தில் அதிலே பணியாற்றுகிறவர்களுக்கு ஒரு மனநிறைவு ஏற்படும் வகையில் செயலாற்றவும், அதே நேரத்தில் லாபம் எடுக்கக்கூடியதாகவும் இருந்து, அது உண்மையிலேயே தமிழக அரசின், தமிழக மக்களின் சிறந்த சொத்தாக இருக்க வேண்டும் என்று மீண்டும் நிரூபித்துக்காட்டுகின்ற வகையில் உங்களுடைய மேலான ஆலோசனையை வழங்கிட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

*** திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்:** மாண்புமிகு சட்டப்பேரவை தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

முதலில், ஒவ்வொரு பஞ்சாயத்தையும் எடுத்துக்கொண்டால், இப்போது இருக்கும் சட்டத்தின்படி அங்கே இருக்கும் மின்சார சப்ளைகளை பஞ்சாயத்து கவனிக்கவேண்டும் என்று இருக்கிறது. இன்றைக்கு பஞ்சாயத்து வருமானங்களைப் பார்க்கிறபோது மிகக் குறைவாக இருக்கிறது. மற்ற அபிவிருத்தி வேலைகளை கவனிக்கவே போதாத நிலையில் உள்ளது. இந்த நிலையிலே பஞ்சாயத்துக்கு அந்தப் பொறுப்பை விட்டால் நிச்சயமாக அதை எடுத்து செல்வனே செய்ய முடியாது என்று நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மறுபடியும் எலக்டிரிசிட்டி போர்டுக்கே இந்த பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

அடுத்து, இந்த 'கிரவுண்டு வாட்டர் லெவல்' பற்றி எல்லோரும் இந்த நேரத்தில் 'ஆங்ஷியஸ்ஸாக' இருக்கிறார்கள். கோயம்புத்தூர் மற்றும் ஒரு சில மாவட்டங்களில் இந்த கிரவுண்டு வாட்டர் கீழே போய்விட்டது, அதனால் மற்ற இடங்களுக்கும் எலக்டிரிசிட்டி கனெக்ஷன் கொடுப்பதில் சில தடங்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் கிரவுண்டு வாட்டர் லெவலைப் பார்த்தால் 10 அடியில் தண்ணீர் கிடைக்கிறது. பின்தங்கிய மாவட்டங்களுக்கு கோயம்புத்தூரில் இருக்கக் கூடிய சட்டத்தை இங்கே கொண்டு வந்தால் அது நிச்சயமாக அந்த பின்தங்கிய மாவட்டங்கள் அபிவிருத்தி அடைவதற்கு ஏதுவாக இருக்காது என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது மழையின் காரணமாக கோயம்புத்தூர், மதுரை, இன்னும் மற்ற மாவட்டங்களில் கிரவுண்டு வாட்டர் மேலே வந்திருக்கிறது. ஆகவே, அந்த ரூலை ரிலாக்ஸ் பண்ண வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் 5 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று எலக்டிரிசிட்டி போர்டுக்கு மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஒரு பம்பு செட்டுக்குக் கூட மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. இந்த சட்டதிட்டத்திற்காக அவர்கள் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு எங்கள் மாவட்டம் மழையை எதிர்பார்த்திருக்கக்கூடிய மாவட்டம். மழை பெய்தால் தான் வாழ்வு. இதுமாதிரி இருக்கக்கூடிய இடங்களில் இந்த ரூல்ஸை ரிலாக்ஸ் பண்ணி 5 ஆயிரம் பம்பு செட்டுகள் என்று இல்லாவிட்டாலும் குறைந்தது 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுவும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பின்தங்கிய சில இடங்களில் அதாவது கந்தர்வகோட்டை, திருவரங்குளம் போன்ற ஏரியாக்களில் பலர் பம்பு செட்டுகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். குழாய் போட்டு வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் எலக்டிரிசிட்டி கொடுக்கப்படவில்லை. என்ஜினியரைக் கேட்டால் மேலே இருந்து உத்தரவு வந்தால்தான் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட



சூழ்நிலை இருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளவேண்டும். பின்தங்கிய இடத்திற்கெல்லாம் இரண்டு ஏக்கருக்கு ஒரு கிணறு இருந்தால் தான் விவசாயம் பண்ண முடியும். அந்த நிலையில் இருக்கக்கூடிய இடங்களுக்கு பம்புசெட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு சட்டம் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அதாவது, கிட்டத்தட்ட 850, 900 அடிக்குள் ஒரு கிணறு இருந்தால் எலக்டிரிசிட்டி போர் வெல் போட முடியாது என்று. அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது சில இடங்களில் பெரிய விவசாயிகளுக்கு அதாவது 100 அல்லது 200 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு சரி. ஆனால் சிறிய விவசாயிகள் அதாவது 5 முதல் 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு பம்பு செட்டு இல்லையென்றால் முடியாது. ஒரு பெரிய விவசாயி பக்கத்தில் 500 அடிக்கு அப்பால் பம்பு செட்டு போட்டிருந்தால் சிறிய விவசாயிக்கு பம்புசெட்டுக்கு இணைப்பு கொடுப்பதில்லை. ஆகவே, இந்த டிஸ்டன்சை குறைத்து சிறிய விவசாயிகளுக்கு உதவக்கூடிய நிலையில் இந்த 800 அடி என்ற தூரத்தை 400 அடியாகக் குறைத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவிரி ஆறு போன்ற ஆறுகள் இருக்கிற இடங்களைப் பற்றிக் கவலை இல்லை. பின்தங்கிய பிரதேசங்களில் குளத்தையும் கிணறுகளையும் நம்பியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ரூல்சை ரிலாக்ஸ் செய்து பின்தங்கிய இடங்களுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையையும், 1976-77-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை மதிப்பீட்டையும் இந்த மன்றத்தின் முன் வைத்து நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்ததை நான் உளமாரப் பாராட்டுகிறேன். அத்திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு நல்ல காரியங்களைச் செய்வதற்காக அரசு எந்தளவிற்கு ஆர்வம் காட்டியிருக்கிறது என்பது இந்த அறிக்கையில் பல்வேறு இடங்களில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. பொதுவாக எந்த அரசாங்க

[திரு. எஸ். ஆர். இராதா] [1977 டிசம்பர் 28

மாக இருந்தாலும் மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு கவனம் செலுத்தவேண்டும் என்பதை கடந்த கால ஆட்சியிலிருந்து நாம் மிக நன்றாக தெரிந்து வைத்திருக்கிறோம். மின்சாரத்தை அதிகமான அளவிற்கு உற்பத்தி செய்வதற்கான வழிவகை இல்லாமல் மின்சார இணைப்புகள் தருவது, மின்சாரத்தை பயன்படுத்தவேண்டும் என்று பல்வேறு இடங்களில் அறிவிப்பது என்ற இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்த நேரங்களில் நமக்கு நல்ல அனுபவம் இருக்கிறது.

பல்வேறு நேரங்களில் மின்வெட்டு வந்திருக்கிறது. கடந்த கால அரசு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் கவனம் செலுத்தாமல் ஆனால் மின்சாரத்தை நாங்கள் எல்லாக் கிராமங்களுக்கும் தரப்போகிறோம், எல்லா ஊர்களுக்கும் அளிக்கப் போகிறோம் என்றெல்லாம் கூறி, அப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்தப்போகிறோம் என்று சொல்லி அது நிறைவேற்றப் படாத நிலைமை இருந்ததை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்.

அதே நேரத்தில், மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் கவனம் செலுத்தவேண்டிய அரசு மின்சார உற்பத்தி செய்து கொண்டிருந்த சமயநல்லூர் நிலையத்தை ஏலத்தில் விட்டது நமக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அந்த சமயநல்லூர் நிலையத்தை ஏலத்தில் விடுகிற நேரத்தில் கூட அது எந்த அளவில் நடைபெற்றது என்பதும் அது இன்று எந்த இடத்தில் நிற்கிறது என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் புதிதாக ஏறத்தாழ 700 லட்சத்திற்கு மேலாக மின்சார உற்பத்திக்காக தனிச் செலவு செய்ய வேண்டும் என்று இன்றைக்கு ஏற்பாடுகள் செய்து அதற்கான அறிவிப்புகளை இந்த அரசு செய்திருப்பதை நாம் உள்ளபடியே பாராட்டியாக வேண்டும். நெய்வேலியில் இரண்டாவது மின்திட்டம், தூத்துக்குடியில் மூன்றாவது திட்டம் இவற்றிற்கு இந்த அரசு முயற்சி செய்து அதிகமான அளவிற்கு மின் உற்பத்தி செய்வதற்காக ஏற்பாடு செய்திருப்பதை நாம் உள்ளபடியே பாராட்டியாக வேண்டும்.



1977 டிசம்பர் 28] [திரு. எஸ். ஆர். இராதா]

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இன்று தொழிற்சாலை
களுக்கு அதிகமான அளவு மின்சாரம் இல்லை. அதேபோல்
விவசாயத்திற்கு தேவையான மின்சாரமும் தரப்படவில்லை.
இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற இந்த நேரத்தில் புரட்சித்
தலைவர் அவர்களுடைய இந்த அரசு மின்சாரப் பற்றாக்குறை
என்ற நிலை இல்லாமல் முழுமை பெறவேண்டும் என்பதற்காக முழு
முயற்சி செய்து அதற்கான காரியங்களுக்கு இன்று திட்டமிட்டு
அக்காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

நான் அந்தத் திட்டங்களைப் பாராட்டுகிற அதே நேரத்தில்
இந்த அரசுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். மின்சார
வாரியம் இன்றைக்கு எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை
இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதிலிருந்து மிக
கவனமாக, உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறது. நான்
அரசுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். மின்சார வாரியம்
எந்தளவிற்கு நடைபெற்றிருக்கிறது, அதிலே என்னென்ன
தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் நிச்சயமாக
கண்காணித்தாக வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்வேன். கடந்த காலத்தில்
மின்சாரத்தை கொள்முதல் செய்கிறோம் என்ற பெயரால்
எந்தளவிற்கு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம்
மறந்துவிடுவதற்கில்லை. கொள்முதல் என்ற பெயரால் அந்த
வாரியத்தின் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மோசடிகள்
செய்யப்பட்டிருப்பதும், பல லட்சக்கணக்கான ரூபாய்கள்
அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தப்பட்டிருப்பதும் நமக்கு நன்கு
தெரியும். அதையெல்லாம் இந்த அரசு கவனித்து அவற்றைக்
கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை
எடுப்பதற்கு நிச்சயமாக முன்வரவேண்டுமென்று அரசை
கேட்டுக்கொள்வேன்.

(முற்பகல் 10-50)

அதே நேரத்தில், இந்த அரசு கவனம் செலுத்துகிற நேரத்தில்,
தமிழ்நாட்டில் இருக்கின்ற மின்சாரத்தை மற்றவர்களுக்கு
கொடுத்துவிட்டார்கள் என்ற பெயர் இருந்தாலும் மின்சாரத்தை
கொடுத்து நாம் தண்ணீர் பெற்றிருக்கிறோம் என்று நாம் தெரிவித்
திருக்கிறோம். இதன் காரணமாக தஞ்சை மாவட்டத்திற்கு

தண்ணீர் வந்தது என்கின்ற பெருமையும், அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்து மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள மக்கள் அரசை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள். இந்த அரசு கவனம் செலுத்தி, கவனம் செலுத்தி மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு ஆர்வம் காட்டியதை மக்கள் மிகவும் வரவேற்றிருக்கிறார்கள். அதே நேரத்தில் எதிர்காலத்தில் தமிழ்நாட்டுக்கு மின்சாரப் பற்றாக்குறை இல்லாமலும், தொழிற்சாலைகளுக்கு போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு வேண்டிய வழிமுறைகளை கையாள்வதற்கு இந்த அரசு துணையாக இருக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், விவசாயத்துறையைப் பொறுத்த அளவில், பல இடங்களில் பம்புசெட்டுகள் அமைக்கப்பட்ட பின்பும் மின் இணைப்பு கிடைப்பதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. இந்த நிலைமைகளை மாற்றி காலதாமதமின்றி மின் இணைப்பு கிடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், பல்வேறு இடங்களில் மின்சாரம் வழங்குவதற்காக எல்லா இடங்களிலும் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று பழைய அரசு அறிவித்திருந்தது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமை என்னவென்றால் பல்வேறு கிராமங்களிலும் நடப்பட்ட கம்பங்கள்தான் இருக்கிறதே தவிர மின்சாரம் வரவில்லை. பழைய அரசு அவசர அவசரமாக கிராமங்களில் எல்லாம் கம்பங்களை நட்டார்கள். மின்சாரம் இல்லாமல் வெறும் கம்பங்கள் மட்டும் அப்படியே நிற்கின்றன. தேர்தல் நேரத்தில் இப்படிப்பட்ட கிராமங்களுக்கு நாங்கள் செல்லும்போது அங்கேயுள்ளவர்கள் வயிற்றெரிச்சலோடு சொன்னார்கள், நீங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்தக் கம்பங்களை எல்லாம் எடுத்துத் தொலையுங்கள், அதைப் பார்க்கும்போது எங்களுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது என்று கம்பங்களை மட்டும் நட்டுவைத்துவிட்டு விளக்கு எரியாமல் இருக்கின்ற நிலைமையைப் பார்த்து கிராமத்து மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உடனடியாக இந்த நிலைமை



அங்கெல்லாம் மின் இணைப்பு தருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் மின்சார வாரியம் எந்த அளவுக்குச் செயல்பட்டு வருகிறது என்று பார்த்தால் போதிய அளவுக்கு கவனம் செலுத்தவில்லை என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. இன்றைக்கு எந்த அளவுக்கு மின்சாரத்தை பயன்படுத்த விரும்புகிறார்கள் என்பதை நாம் கவனித்தாக வேண்டும். சில இடங்களில் விளக்குகள் எரிவதே இல்லை. ஊராட்சி மன்றத்தைக் கேட்டால் மின்சார இலாகாவைச் சொல்கிறார்கள், மின்சார இலாகாவைக் கேட்டால் ஊராட்சி மன்றத்தைச் சொல்கிறார்கள். இப்படி இரண்டுக்கும் உறவு இல்லாத நிலைமையில் பல இடங்களில் விளக்குகள் எரியாமல் இருக்கின்ற நிலைமையை நம்மால் பார்க்க முடிகிறது. இந்தக் குறை எல்லா இடங்களிலும் இருக்கிறது. நகராட்சியிலும் பல இடங்களிலும் விளக்குகள் எரிவதில்லை என்ற குறை இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு மின்சார இலாகா, ஊராட்சி மன்றங்களோடும், நகராட்சிகளோடும் நல்ல உறவை ஏற்படுத்தி, தொடர்ந்து மின்சார வாரியம் நல்லதொரு பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய குடந்தை தொகுதியில் பல்வேறு கிராமங்களில் மின்சாரம் இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. பல்வேறு கிராமங்களில் மின் கம்பங்கள் இருக்கின்றன, ஆனால் இணைப்பு தரப்படவில்லை. அப்படிப்பட்ட கிராமங்களுக்கு எல்லாம் மின் இணைப்பு கொடுத்து, கிராம மக்களுக்கு எல்லாம் மின்சாரத்தை பெற்றுத்தர வேண்டும் என்று இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய குடந்தை பகுதியில் முன்னால் பழைய எலக்ட்ரிசிட்டி கார்ப்பரேஷன் இருந்தது. இதை இப்போது அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரசு ஏற்றுக்கொண்ட பின்னால் அரசு செய்து கொண்டிருப்பதைப் போல் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று சில சாதாரண கோரிக்கைகளை இந்த கார்ப்பரேஷனிடத்தில் கொடுத்தேன். மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு கடைசி நாள் 7-ம் தேதி

என்று இருப்பதை, சென்னையில் இருப்பதைப்போல், மற்ற இடங்களில் இருப்பதைப்போல் கடைசி நாள் 21-ம் தேதி என்ற முறையை ஏற்படுத்தி அதற்குத் தகுந்தவாறு அனுமதிக்கவேண்டும் என்று கோரிக்கையைக் கொடுத்தேன். பல்வேறு நேரங்களிலும் இந்த கோரிக்கையைப்பற்றி சொல்லி வந்திருக்கிறேன். இருந்தும், இந்தக் கார்ப்பரேஷனில் இருக்கின்ற அரசு அதிகாரிகள் பழைய காலத்தில் இருந்த நிலைமையிலேயே, அதே பாணியில் நடந்து கொண்டிருக்கிறார்கள். நாம் இப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எல்லாவற்றையும் நல்லமுறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் அதிகாரிகள் மனோபாவம் இன்னும் மாறியதாகத் தெரியவில்லை. இந்த அரசு அங்குள்ள கார்ப்பரேஷனை ஏற்றுக் கொண்டிருந்தாலும், அந்த கார்ப்பரேஷனிலே பணியாற்றும் அதிகாரிகள் மின் கட்டணத்தை வசூலிக்கின்ற முறையை மாற்றியமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு இந்த கார்ப்பரேஷனைப்போல், இன்னும் 2, 3 கார்ப்பரேஷன்களை எடுத்திருக்கிறார்கள். அந்தக் கார்ப்பரேஷன்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டுள்ள நஷ்ட ஈட்டிற்கான பணங்கள் எந்த அளவிற்கு நல்லமுறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த அரசு கண்காணித்து, ஏதேனும் தவறுகள் நடந்திருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடித்து, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இந்த கார்ப்பரேஷன்களை அரசு இலாகாவாக மாற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை மதிப்பீட்டு அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையிலே



ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட இரண்டு திட்டங்கள்தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. (1) தூத்துக்குடி திட்டம், (2) காடம்பாறை திட்டம். இந்தத் திட்டங்கள் ஏற்கனவே இருந்த அரசின் பரிசீலனையில் இருந்தது. அந்தத் திட்டங்களை இந்த அரசு சேர்த்துக் கொண்டிருப்பதற்காக நான் இந்த நேரத்திலே அவர்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற எவ்வாறு திறமையாகச் செயல்பட வேண்டுமென்பதற்கான ஆலோசனைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஒவ்வொரு முறையும் இங்கே விவாதம் நடைபெறுகின்றபோது பல ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அவைகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. பேசின் பிரிட்ஜ் நிலையத்திலே இன்ஸ்டால்ட் கபாசிடிக்கும், ஆக்சுவலாக உற்பத்தி ஆவதற்கும் இடையே இடைவெளி (கேப்) இருக்கிறது. இதை எடுத்துச் சொன்னால், 'பெல்' நிறுவனத்தோடு கலந்துகொண்டு ஏற்பாடு செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் வேலை நடைபெறுவதில்லை.

இதேபோல்தான் மற்றப் பிரச்னைகளும். எமர்ஜன்சி காலத்திலே அட்வைசர் காலத்தில் சில ஆலோசனைகள் சொல்லப் பட்டன. அதைப்பற்றி கேட்டால், அந்த ஆலோசனைகள் பரிசீலனை செய்யப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. இப்படி ஆலோசனைக்கு ஒரு ஆலோசனை, பரிசீலனை என்று இருக்கிறதே தவிர, செயல்முறையில் ஒன்றும் காணோம். இது எங்கே கொண்டு போய் விடும் என்று தெரியவில்லை. எப்போது பரிசீலனை முடியும் என்றும் தெரியவில்லை.

அதேபோல், அக்ரிகல்சுரல் டாரிபைப் பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் ஒரு யூனிட்டுக்கு 12 பைசா என்றிருந்தது. ஒரு பைசா உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னபோது, அதற்காக நடந்த பெரிய கிளர்ச்சியை நாம் அறிவோம். கிளர்ச்சி ஏன் நடை பெறுகிறது? விவசாயிகளால் கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றபோது கிளர்ச்சி ஏற்படுகிறது. கடைசியில், அரசாங்கமே அந்தக் கிளர்ச்சியின் உண்மைநிலையை உணர்ந்து, அவர்களது நியாயமான கோரிக்கையை ஏற்றது. இப்படி கிளர்ச்சி யெல்லாம் நடந்திருக்கிறபோது, குறைந்தபட்சம் இதை

[திரு. க. சுப்பு] [1977 டிசம்பர் 2௮

11 பைசாவாக இவர்கள் குறைத்திருக்கவேண்டும். ஆனால்,
அப்படிக் குறைக்கவில்லை. இப்போதிருக்கின்ற நிலை என்ன?
அட்வைசர் காலத்திலே 16 பைசா என்றிருந்ததை, நாங்கள்
14 பைசாவாகக் குறைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள்
இந்த 14 பைசா என்பது, எமர்ஜன்சி காலத்திலே ஏற்பட்ட
தவறுகளை இந்த அரசாங்கமும் ஒப்புக்கொள்வதாக ஆகிறது.
எமர்ஜன்சி காலத்திலே ஏற்பட்ட பல தவறுகளைத் திருத்தி
அமைப்பதுதான் நம்முடைய நோக்கம். நம்முடைய நோக்கம்
என்று நான் சொல்கிறேன் என்றால், அதிலே உங்களையும் சேர்த்துத்
தான் சொல்கிறேன். எங்களைச் சேர்க்க வேண்டாமென்று நீங்கள்
சொன்னால், அந்த அடிப்படையிலே பேசுவதை நான் விட்டுவிடத்
தயாராக இருக்கிறேன்.

எமர்ஜன்சி காலத்திலே, அட்வைசர் ஆட்சியிலே இந்த
4 பைசா உயர்த்தப்பட்டது. நாம் ஆட்சிக்கு வந்தபின் அதை
ரத்து செய்வதுதான் ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட
சர்க்காரின் ஆரம்ப வேலையாக இருக்க வேண்டும். ஆரம்பத்
திலேயே தகராறு. அவர்கள் உயர்த்தியுள்ள 4 பைசாவை, நாங்கள்
2 பைசா குறைக்கிறோம் என்று சொன்னால், எங்களுக்கும்
எமர்ஜன்சியில் பாதி பங்கு உண்டு என்று சொல்ல வேண்டி
யிருக்கும். இதற்கு நிர்வாகச் செலவு அதிகம் ஆகிறது என்று
சொல்லலாம். ஆனால், விவசாயிகள் விஷயத்திலே இப்படிப் போட்டு
அதைச் சரிக்கட்டக் கூடாது. எனவே, 12 பைசா என்பதை
புதிதாக ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் 11 பைசா என்று
அறிவித்தால் தான் நியாயம். இப்படி நாங்கள் 14 பைசாவாகக்
குறைத்திருக்கிறோம் என்று சொல்வது, முற்போக்குக் கொள்கை
யாகாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் காட்டிலும்
அதிக நன்மைகள் செய்வோம் என்று சொல்லி ஆட்சிக்கு
வந்தீர்கள். ஆனால், அப்படியில்லை. அப்படியிருந்தால் நாங்களே கூட
வந்திருக்கலாம். இன்னும் மோசமான ஆட்சிகூட வந்திருக்கலாம்.
ஆனால் நீங்களோ முற்போக்கு என்று சொல்லி வந்திருக்கிறீர்கள்.
ஆனால், இந்த விஷயத்திலே முற்போக்கு ஒன்றையுமே காணோம்.
இப்போது 14 பைசா என்று வைத்துக்கொண்டு, நீங்கள்
ரொம்பவும் முற்போக்கு என்று மக்களிடத்திலே சொல்ல
முடியாது. இதையும் குறைக்கவேண்டும்.

அதேபோல், மீட்டர் ரென்ட் என்பதையும் அபாலிஷ் செய்ய
வேண்டுமென்று சொல்கிறேன்.



1977 டிசம்பர் 28] [திரு. க. சுப்பு]

(முற்பகல் 11-00)

'இட் இஸ் நாட் ஃபீசிபிள்' என்று சொல்லுகிறார்கள். மீட்டரே
வாங்கிக் கொடுப்பதில்லை. விவசாயி பணம் போட்டு மீட்டரை
ரெடியாக வாங்கி வைத்திருக்கிறான். அதற்கு மீட்டர் ரென்டா?
விவசாயிகள் லோன் வாங்கி இரண்டு மூன்று வருஷ காலமாக
கனெக்ஷனுக்காகக் காத்திருக்கிறார்கள். மேலூரில் அது ரொம்ப
அதிகம். பொதுவாக இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகம்.
சர்க்கார் போர்டு சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளக்
கூடாது. போர்டு ஆலோசனை சொல்லுவதற்குத்தான். மந்திரியை
எதற்காக வைத்திருக்கிறோம்? மீட்டர் ரென்ட் கட்டாயமாக
வசூலிக்கப்படும் என்று சொல்லுவதற்கு மந்திரி அவசியமில்லை.
The Government have no right. The Board has no right.

இண்டஸ்ட்ரிசுக்குக்
குறைவான கட்டணத்தில் கொடுக்கிறோம் என்று சொல்லு
கிறார்கள். விவசாயிகளுக்கு மின் கட்டணத்தைக் குறைத்து
பெரிய இண்ட்ஸ்ட்ரிசுகளுக்குக் கூட்டலாம். சிறு இண்டஸ்ரிஸ்
களுக்குச் சலுகை கொடுத்துத்தான் ஆக வேண்டும். 'மால்கோ'
பற்றி அரசாங்கத் தரப்பில் என்ன சொல்லப்பட்டது? 'மால்
கோ'-வுக்கு சலுகை விலையில் மின்சாரம் கொடுத்ததால் நஷ்டம்
ஏற்பட்டு விட்டது' என்று சர்க்கார் தரப்பில் பொறுப்பான
அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் இப்போது
என்ன சொல்லியிருக்கிறார்கள்?

"For energy intensive industries like MALCO and some chemical plants, concessional tariff has been fixed, taking into account economics of manufacture, rates in other States etc."

கன்செஷனை கன்டின்யூ பண்ணப் போகிறோம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். அப்படியானால் குற்றம் சுமத்துவது அவர்கள்
செய்யப் போவதை நியாயப்படுத்திக் கொள்வதற்காகவா?

எண்ணூரில் டி.சி.எல். ஒர்க்கர்ஸ் இருக்கிறார்கள். அவர்களை
பர்மனன்ட் ஆக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. படிப்படி
யாகச் செய்வோம் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய
ஆயுசே 5 வருஷந்தான். ஐந்து வருஷத்திற்குள் முடிப்பதற்

காவது ஒரு புரோகிராம் போட வேண்டாமா? 'பீயிங் டன் கிராஜுவலி' என்று 'எவேசிவ் லாங்வேஜ்'-ல் பதில் சொல்லப் பட்டிருக்கிறது.

ஸ்டாஃப் குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்க வேண்டும். கேட்டால் பணம் கிடையாது என்று சொல்லுகிறார்கள். எதற்கும் பணம் கிடையாது என்று சொல்லுகிறார்கள். 'ஹௌ டு ரெய்ஸ் பண்ட்ஸ்' என்று பார்க்கவேண்டும். எம்ப்ளாயிசுக்குக் கடன் கொடுக்கிறோம், வாங்கிக் கட்டிக் கொள்ளட்டும் என்று சொல்லு கிறார்கள். அது பெரிய இண்டஸ்ட்ரி; 91,000 பேர் பொதுத் துறை யில் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வீடுகளைப் படிப்படியாகக் கட்டிக் கொடுத்து தங்கள் திறமையைக் காட்ட வேண்டும். இதையெல்லாம் செய்வதுதான் திறமை. எப்படிச் செய்யாமல் தட்டிக் கழிப்பது என்பதற்கு அதிகாரிகள் நல்ல டிரெயினிங் திறமை பெற்றிருக்கிறார்கள். அதற்கு சேர்மன், எலக்ட்ரிசிடி போர்டு போதும். அவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்பது போன்ற காரியங்களைச் செய்வதற் காகத்தான் உங்களை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள்.

எலக்ட்ரிசிடி போர்டில் இருப்பவர்கள் தி.மு.கவினர். தி.மு.க. ஆட்சி காலத்தில் வேலைக்கு வந்தவர்கள் என்று கூறுகிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் வந்தார்கள், உங்கள் காலத்திலும் வரட்டும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இவ்வளவு பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம் என்று பெருமைப்பட வேண்டும். போலீஸ் இலாகாவில் பத்தாயிரம் பேரைச் சேர்க்கப் போகிறோம் என்றீர்கள். அப்படிச் சேர்த்தால் பரவாயில்லை. இப்படி கட்சிக் கண்ணோட்டத்தோடு மின்சார போர்டைப் பார்ப்பது சரியல்ல. அவர்களை 'நெக் அவுட்' பண்ணுவது என்ற நிலைக்கு நீங்கள் போனால் அந்த கதிக்கு நீங்களும் ஆளாவீர்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எக்விப்மென்ட்ஸ், கிளவுஸ், கட்டிங் பிளேயர் கேட்டால் தேவைக்கேற்ப தரப்படும் என்று சொல்லுகிறார்கள். அதிகாரி நினைப்பதுதான் தேவையா? மந்திரி நினைக்க வேண்டுமென்றால் பணம் இருந்தால் நினைப்பார். இல்லாவிட்டால் நினைக்க மாட்டார்; விட்டு விடுவார். இதெல்லாம் 'மஸ்ட்'. இதெல்லாம் ஏதோ சாதாரண தனிப்பட்ட முதலாளி பேசுவது மாதிரி இருக் கிறதே தவிர, பொறுப்புள்ள அரசுத் தரப்பில் கூறுகின்ற முறை யாக இல்லை.



இன்டிஸ்க்ரிமினேட் டிரான்ஸ்பர் செய்கிறார்கள். மூன்று வருஷத்திற்கு ஒரே இடத்தில் வைத்திருக்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தாலொழிய உயர் மட்ட அதிகாரிகளை மூன்று வருஷத்திற்குள்ளாக மாற்றக்கூடாது. எந்தச் சர்க்காராக இருந்தாலும் அப்படி மாற்றுவது ஒரு நோயாக இருக்கிறது. அதைச் செய்யக்கூடாது. எடுத்தவுடனே டிரான்ஸ்பர். இப்படி அவர்கள் நிரந்தரமாக இருக்க விடுவது கிடையாது. இப்படிப் பட்ட நிலைமையைத் தவிர்க்க வேண்டும். கணவன் மனைவியைப் பொறுத்தவரையில்

'Transfers when so effected within a period of three years are due to unavoidable administrative reason' It should be avoided. என்று ஏற்கனவே அரசாங்க உத்திரவு இருக்கிறது. கணவனும் மனைவியும் கூடுமான வரையில் ஒரே இடத்தில் இருக்கவேண்டு மென்றால் என்ன அர்த்தம்? அவர்களை மாற்றக்கூடாது என்று தான். ஆனால், so far as என்று வார்த்தைகளை அதிலே போட்டியிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு அதிகாரிகள் administrative reasons என்று காரணம் காட்டி மாற்றுகிறார்கள் What are the administrative reasons. So far as என்று தானே போட்டிருக்கிறது, எங்களால் முடியாது இப்போது என்று சொல்லிவிடுகிறார்கள். இப்படி உத்திரவு அரசாங்கம் போட்டால், கூடாது; அதை இம்ப்ளிமெண்ட் செய்ய முடியாது என்று அதிகாரிகள் சொல்லி விடுகிறார்கள். Administrative reasons என்று சொன்னால் அவை எவை? What are the unavoidable administrative reasons என்று யார்ட் ஸ்டிக் ஏதாவது இருக் கிறதா? அதுவும் கிடையாது. ஆகவே It is not to be disclosed to you 'So far as' என்று சொல்வதை வைத்துக் கொண்டு அந்த உத்திரவை அமல்படுத்தாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. தொழிலாளர்கள் போராட்டங்களை நடத் தினால்—அது வேறு இருக்கிறது, போராட்டங்களைப்பற்றி பிறகு சொல்கிறேன்—அதிலே சம்பந்தப்பட்ட தொழிலாளர்களையெல்லாம் டிரான்ஸ்பர் செய்து விடுகிறார்கள். இதிலே நம்ம மந்திரி

ரொம்ப திறமையைப் பயன்படுத்தி இருக்கிறார். அதை நான் வரவேற்க முடியாமல் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

' Payment of advance increment is denied to the staff of Accounts Wing in E.B. who pass Accounts Test and Book keeping Higher Grade. ' for which they have stated ' The matter is pending in the High Court. '

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எல்லாம் ரொம்ப நாட்களாக பெண்டிங் ஆக இருக்கிறது. கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் " The matter is pending in the Court " என்று சொல்கிறார்கள். நீங்கள் அப்ஜக்ட் பண்ணினால் பெண்டிங் ஆகத்தான் இருக்கும். சர்க்காருக்கு வேண்டிய சில பொம்மை சங்கங்களை விட்டு கேஸ் போடச் சொல்வது, கேஸ் போட்டால் அவ்வளவு தான் The matter is pending in the Court. Who is responsible for this ? இதற்கு யார் பொறுப்பு என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு மேட்டரை தீர்க்காமல் பெண்டிங் ஆக வைக்க வேண்டுமென்று சொன்னால் என்ன செய்வது கோர்ட்டிற்கு அதை அனுப்பி விடவேண்டும் அது தான் வேலையாக இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் விட்டு விட்டு இது ரொம்ப நாட்களாக இருக்கிற கோரிக்கை, அதை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும்.

அடுத்து, ஷிப்ட் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அதை வழங்கவேண்டும். நீலகிரியிலே இருக்கிறவர்களுக்கு விண்டர் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். தொழிலாளர்கள் குளிரிலே போய் வேலைசெய்ய வேண்டும், குளிரிலே போனால்தான் தெரியும் அதிலே இருக்கிற கஷ்டம், தமிழ்நாடு ஹைஸ்ளிலே ஹீட்டரைப் போட்டுக்கொண்டு உட்காருபவர்களுக்கு அது தெரியாது. அவர்களுக்கு விண்டர் அலவன்ஸ் கொடுத்தால் தான் அவர்கள் வேலைசெய்யமுடியும். இது தள்ளிப் போட முடியாத விஷயம். இதை மந்திரி போர்டுக்குச் சொன்னால் தான் போர்டு உத்திரவு போட முடியும் . . .

**திரு. எஸ். ஆர். இராதா :** ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார். . .





**திரு. க. சுப்பு:** உங்கள் முன்னால் தான் மந்திரி உட்கார்ந்து இருக்கிறாரே அவரிடம் கேளுங்கள், அவர் கொடுப்பார், என்னிடம் இன்பர்மேஷன் கேட்டால் நான் என்ன இன்பர்மேஷனைக் கொடுக்கப்போகிறேன்.

Am I in a position to supply information to you? The Government is having ample information. I doubt very much whether I will be able to supply such information.

**திரு. எஸ். ஆர். இராதா :** நண்பர் சுப்பு அவர்கள் நீண்ட நாட்களாக, நீண்ட நாட்களாக என்று சொல்லிக்கொண்டிருப்பது—நீண்ட நாள் என்றால் மாதக் கணக்கா, வருஷக் கணக்கா—அந்தக் காலத்திலேயிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறாரா ?

**திரு. க. சுப்பு :** தி.மு.க. ஆட்சி செய்த காலத்தையும் தான் சொல்கிறேன். நாங்கள் சரியாகச் செய்யவில்லை என்று தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள், இல்லாவிட்டால் நாங்களே அங்கே உட்கார்ந்திருப்போம். எங்களைவிட அதிகமாகச் செய்வீர்கள் என்று தான் உங்களை அங்கே உட்கார வைத்திருக்கிறோம். . .

**திரு. வே. பாலகுருவ ரெட்டியார் :** நாங்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்திருக்கிறோம்.

**திரு. க. சுப்பு :** ரொம்ப சந்தோஷம். நீங்கள் ஓட்டுப்போட்டு வந்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள், நான் ஒத்துக் கொள்கிறேன். நீங்கள் எங்களைவிட அதிகமாகச் செய்வீர்கள் என்று சொல்லித்தான் வந்திருக்கிறீர்கள். நான் ஆளைவிட்டால் இங்கு ஏழைகள் வேதனைப்பட மாட்டார் என்று சொல்லி வந்தீர்கள், ஆனால் வந்தவுடன் ஆணையிடமாட்டேன் என்று சொல்கிறீர்கள், பின் எதற்காக வந்தீர்கள் என்று பொதுமக்கள் கேட்கமாட்டார்களா ? எங்களைக் காட்டிலும் முற்போக்காகச் செய்யவேண்டுமென்று அக்கறையோடு வந்திருக்கிறீர்கள். ஆனால் அந்த அக்கறையோடு நீங்கள் செயல்படவேண்டும். அப்படியில்லாமல் இருந்தால் அதைச் சுட்டிக்காட்டுவது எங்களுடைய கடமை. இதிலே மட்டும் தி.மு.க. செய்ததைப் போல் செய்வோம் என்றால், இதிலே மாத்திரம் எங்கள் வழியில் வருகிறீர்களா ? மற்றவைகளில் எல்லாம் அப்படியில்லையா ? நல்ல முறையிலே நீங்கள் நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்வது எங்கள் கடமை.

[திரு. க. சுப்பு] [1977 டிசம்பர் 28

அடுத்து, Percentage of Harijan employees may be intimated என்பதிலே எங்களுடைய ஆட்சி இருந்தபோது 8.6 என்பதிலே எங்களுடைய ஆட்சி இருந்தபோது 8.6, அது போதாது It should be raised to a minimum of 20 percent

(முற்பகல் 11-10.)

அதை இன்னும் அதிகமாக்கி, குறைந்தபட்சம் 20 சதவிகிதமாக வாவது உடனடியாக உயர்த்த வேண்டும். 20 சதவிகிதமாவது அரிசன எம்ப்ளாயீஸ் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் உடலால் கஷ்டப்படத் தயாராக இருக்கிறார்கள். பலருக்கு வேலை கிடைப்பதே சிரமமாக இருக்கிறது. மேலும் இதில் கமிட்மென்ட் அதிகம் கிடையாது. அதற்காக இருக்கின்றவர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டாம். இருக்கின்றவர்களையும் வைத்துக்கொண்டு, மறுபடியும் சேர்க்கின்றபொழுது அரிசன எம்ப்ளாயீஸை அதிகமாக எம்ப்ளாய் செய்ய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி மெட்டீரியல்ஸ் ப்ரோப் கமிட்டி, Probe by a Committee is very necessary. Therefore Probe Committee என்று ஒரு கமிட்டி போட வேண்டும். (மணி யடிக்கப்பட்டது)

ஏற்கனவே நான் சபாநாயகரிடம் நேரம் கேட்டு வாங்கியிருக்கிறேன். 25 நிமிடங்கள் பேச வேண்டும். நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் முடித்துக்கொள்கிறேன். இங்கே பேசுவதற்கும் வேறு ஆளே கிடையாது. பிசினஸ் அட்வைசரி கமிட்டிக்குப் போயிருக்கிறார்கள். நான் விரைவில் முடித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அந்த மாதிரி கமிட்டி ஒன்றைப்போட்டு, எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது, எவ்வளவு போயிற்று, வேறு விதமாக டிஸ்போஸ் ஆகியிருக்கிறதா என்றெல்லாம் பார்க்க வேண்டும். வேறு விதமாக எப்படி டிஸ்போஸ் ஆகியிருக்கும் என்பது அமைச்சருக்குத் தெரியும். அதிலே எப்படிப்பட்ட ஆட்கள், அதிலே தொடர்பு உடையவர்கள் எப்படி வெளியே கடத்துகிறார்கள் என்பது தெரிந்திருக்கும். அதை இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1977 டிசம்பர் 28] [திரு. க. சுப்பு]

அடுத்தபடியாக, வரவேற்கத் தக்க அறிவிப்பு ஒன்றைச் செய் திருக்கிறார்கள். அதாவது, 50,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை மின் இணைப்பில் உங்கள் சாதனை என்று சொல்லிக்கொள்ளலாம். நான்கூட இதைச் சாதனை என்றுதான் நினைத்தேன். ஆனால் இது 1975-76-ஆம் ஆண்டிலேயே கமிட் ஆகியிருக்கிறது. அதிலேயே 60,000 பம்பு செட்டுகளுக்குப் போட வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. அவ்வாறு 1975-76 ஆம் ஆண்டில் போட வேண்டிய 60,000 பம்பு செட்டுகளையாவது போட்டுத் தாருங்கள், வேறு சாதனைகூட செய்ய வேண்டாம். கொடுத்திருக்கின்ற அந்த வாக்குறுதியை நிறைவேற்றினாலே, அதையாவது செய்தாலே போதும்.

அடுத்து, லைன் லாஸைக் குறைக்க வேண்டும் என்ற விஷயத்தில் எந்த அளவிற்குக் குறைக்க முடியும் என்று அதிகாரிகள் ஒரு கால்குலேஷன் போட்டுத் தருவார்கள். கூடுவதற்கு என்றால் அதற்கு ஒரு கால்குலேஷன் போட்டுக் கொடுப்பார்கள். இப்படிக் கால்குலேஷன் போடுவதிலே அவர்கள் எக்ஸ்பர்ட்ஸ். They are experts in calculations. We are experts in receiving all calculations without any discussion எனவே, அதைப்பற்றிக் கொஞ்சம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்குள் நான் அதிகம் போக விரும்பவில்லை.

கடைசியாகக் கூறிக்கொள்ள விரும்புவது, போர்டு மக்களுக்கு மேலும் அதிகமாகப் பயனுள்ள காரியங்களைச் செய்தாக வேண்டும். மேலும் அரசாங்கம் ஊழியர்களைப்பற்றிக் கவனம் செலுத்தவேண்டும். ஊழியர்களிடம் ஓரளவுக்கு நியாயமாக நடக்க போர்டு வழி காட்ட வேண்டும். ஒரு வருந்தத் தக்க செய்தி என்னவென்றால், இந்தச் சர்க்கார் பொறுப்பை ஏற்றவுடன் இங்கு கூட டெக்னிகல் மேன் போடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிக்கூட டெக்னிகல் மேனை சேர்மனாகப் போட வேண்டாம், ஐ.ஏ.எஸ். அதிகாரியையே போட வேண்டு மென்றெல்லாம் பல பிரச்னைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையை டெக்னிக்கலாகப் பார்க்காமல் குறையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

[திரு. க. சுப்பு] [1977 டிசம்பர் 28

மின்சார வாரியத்தைச் சேர்ந்த 3,600 பேர் சிறையிலே அடைக்
கப்பட்டார்கள். 1957-ஆம் ஆண்டிலேயிருந்து, போர்டு ஆரம்பித்
ததிலேயிருந்து இத்தகைய துரதிருஷ்டவசமான நிலைமை ஏற்பட
வில்லை. நம்முடைய மந்திரி காலத்தில் தான் இப்படிப்பட்ட ஒரு
நிலைமை ஏற்பட்டு விட்டது. 3,600 பேர் ஜெயிலில் மட்டும்
இன்னும் அடி வாங்கிய தொழிலாளிகள், தாக்குதலுக்கு ஆளா
னவர்கள், வழக்குக்கு உள்ளானவர்கள். டிரான்ஸ்பர் ஆனவர்கள்,
சஸ்பெண்ட் ஆனவர்கள் ஆகியவர்களின் கணக்கைச் சேர்த்தால்
இன்னும் அதிகமாக இருக்கும். அவர்கள் என்ன கோரிக்கையை
வைத்தார்கள்? சந்திக்க முடியாத கோரிக்கையை வைத்தார்
ஒத்துக்கொள்ளலாம். பண்டிகைக்கு அட்வான்ஸ் கொடுக்க
வேண்டும் என்று விதியிருக்கிறது. அதை அவர்கள் அனுபவிக்க
வேண்டுமென்று கேட்கக் கூடாதா? அந்தச் சலுகை இல்லை என்று
சொன்னால், 'ஸ்டேட்சுடரி நெசசிட்டி' பிரகாரம் பார்த்தால்
'இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட்' 9(ஏ)-யின் படி நோட்டீஸ்
கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இந்தச் சலுகையை
நிறுத்தப் போகிறோம் என்று சொல்லவில்லை. அவ்வாறு சொல்லக்
கூடாது என்று இருந்துவிட்டார்களா? அல்லது அவ்வாறு
சொல்ல வேண்டுமென்று தெரியாது என்று சொல்கிறார்களா
சொல்லக்கூடாது என்று இருந்து விட்டோம் என்றால் அ
குற்றம். தெரியாது என்று சொன்னால் இலாயக்கு இல்லை என்
அர்த்தம். இந்த இரண்டில் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்
கிறேன்.

9(ஏ) படி நோட்டிஸ் கொடுத்து, தொழிலாளர்களோடு பேச்சு
வார்த்தை நடத்தியிருக்க வேண்டும். போர்டு கூட ரெடியாக
இருந்தது, சேர்மன்கூட ரெடியாக இருந்தார். ஆனால் அமைச்
சருடைய தப்பு என்ன என்றால் நான் சொல்ல ரொம்பவும்
வருத்தப்படுகிறேன். இதுசம்பந்தமாகப் பேச முதலமைச்சரை
கண்டுபிடிக்க முடியவில்லை, பலமுறை முயன்றும் கிடைக்கவில்லை.
எலக்ட்ரிசிட்டி மினிஸ்டரும் கிடைக்கவில்லை. கேட்கும்பொழு
தெல்லாம் இல்லை இல்லை என்று சொன்னார்கள். கடைசியிலே
அவர்கள் இருக்கிறார்கள் என்று அறிந்து உள்ளே நுழைந்தேன்.
நல்லவேளையாக இவர்கள், அடிக்க வந்தார் என்று என்னைச்
சொல்லவில்லை. அவரிடம் விவரத்தைச் சொன்னோம். வேறொன்
றும் கேட்கவில்லை. அவர்களுக்கு அட்வான்ஸ் கொடுக்க



1977 டிசம்பர் 28] [திரு. க. சுப்பு]

வேண்டும், அதை ஏன் மறுக்க வேண்டும் என்று கேட்டோம்.
அதற்கு அவர்கள், எங்களிடம் பணம் இல்லை என்று சொன்
னார்கள். அவ்வாறு பணம் இல்லையென்றால் தொழிலாளர்களின்
பிரதிநிதிகளையாவது அழைத்துச் சொல்லியிருக்க வேண்டும். அவ்
வாறு ஏன் சொல்லக்கூடாது? பிரச்னை அதிலேதான் வந்தது.

தொழிலாளர் பிரதிநிதிகளோடு பேசமாட்டோம் என்று சொல்
கிறார்கள். யாரைப் பிரதிநிதி என்று சொல்கிறார்கள் என்றால்,
இரண்டு பேரைச் சொல்கிறார்கள். அவர்களை 1960-65-லே
அங்கீகரித்து வைத்திருக்கிறோம். இவ்வளவு வருஷங்கள் கழித்து
அவர்களை எவ்வளவு பேர் அங்கீகரிக்கிறார்கள் என்று பார்க்க
வேண்டாமா? இப்பொழுது தொழிலாளர்கள் அவர்களை ஏற்றுக்
கொள்கிறார்களா இல்லையா என்பது வேறு. நேற்று ஒரு சர்க்கார்
இருந்தது, அங்கீகரிக்கிறார்கள். இன்றைக்கு வேறு ஒரு சர்க்
கார் வருகிறார்கள். அப்படி இருக்கும்போது, நாளுக்கு நாள்
வித்தியாசம் வரும் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள
வேண்டும்.

அங்கே, தி.மு.க. யூனியன் இருக்கிறது, சிஐடியூ இருக்கிறது,
ஜனதா யூனியன் இருக்கிறது, ஐ.என்.டி.யூ.சி அமைப்பு
இருக்கிறது. இப்படி பல இருக்கும்போது, அவர்களுடைய
ஸ்ட்ரெங்த்தைப் பார்க்காமல், ஏற்கனவே அங்கீகாரம் பெற்றவர்
களோடுதான் பேசுவோம் என்று சொன்னார்கள், அதையும் ஒத்துக்
கொள்கிறேன். ஆனால், பதிவு செய்யப்பட்ட யூனியன்களுடனும்
பேசவேண்டுமென்று சொன்னோம். பதிவு செய்யப்பட்ட யூனியன்
களுடன் வேலைப் பளு, ஸ்கேல்ஸ் ஆப் பே பற்றியெல்லாம் கூடப்
பேசியிருக்கிறார்கள், அவர்களோடு பேச ஒரு செட்டில்மென்ட்
போட்டிருக்கிறார்கள், அக்ரிமென்ட் இருக்கிறது. அந்த நடை
முறையை மாற்றி, திடீரென்று, பதிவு செய்யப்பட்ட சங்கங்
களுடன் பேச மாட்டோம் என்று சர்க்கார் முடிவு எடுக்கவேண்டிய
நிலை என் வந்தது? ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்
டுள்ள அந்தச் சங்கங்களுக்கு அங்கீகாரம் இல்லை. அப்படி
அங்கீகாரமற்ற சில அமைப்புகளை வைத்துக்கொண்டு ஏதாவது
பேச்சுவார்த்தை நடத்துகிற நீங்கள் ஏன் பதிவு செய்யப்பட்ட
சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது? மந்திரிகளைக்
கேட்டால் கவுரவப் பிரச்சனை என்கிறார்கள். இதிலே கவுரவம்
என்ன? நம்முடைய தொழிலாளர்கள்; நம்முடைய அரசுக்குக்

கொடுக்க காசு இல்லை, பிறகு கவுரவம் ஏன்? இதிலெல்லாம் கவுரவம் பார்க்கக்கூடாது. எதிலே இருக்கவேண்டுமோ அதிலே இருக்க வேண்டும். இது வரட்டு கவுரவம், கூடாது. வரட்டுத் தனமான கவுரவம் வைத்து, மறுப்பது சரியல்ல.

அதைவிடக் கொடுமை கே. டி. கே. தங்கமணியும் மற்றவர்களும் சர்க்காரை அணுகி, செட்டில்மெண்ட் போட்டு வழக்குகளை வாபஸ் வாங்குங்கள். பேசுங்கள் என்று சொன்னார்கள். எண்ணூர் தொழிலாளர்கள் மேல் போடப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப் படவில்லை. மின்சாரத் துறை அமைச்சர் வாக்குறுதி கொடுக்கிறார். அது தேர்தல் வாக்குறுதியாக இருக்கிறதே தவிர, மந்திரியாக வந்த பிறகு கொடுத்த வாக்குறுதிகூட நிறைவேற்றப்படவில்லை. தொழிலாளர்கள் மேல் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குவோம், டிரான்ஸ்பர், சஸ்பென்ஷன் ஆகியவற்றை ரெவோக் பண்ணுவோம் என்று சொன்னார்கள். ஆனால், இங்கே எண்ணூரிலே இருப்பவரை ஊட்டிக்கு டிரான்ஸ்பர் செய்கிறார்கள், பேசின் பிரிட்ஜிலே இருப்பவர்களை தூத்துக்குடிக்கு மாற்றுகிறார்கள். நீங்கள் சொல்லலாம், டிரான்ஸ்பர் பனிஷ்மெண்ட் இல்லையென்று. ஆனால், நீங்கள் டிரான்ஸ்பரை பனிஷ்மெண்டாகத்தான் கருதி, மாற்றுகிறீர்கள். அப்படிப்பட்ட போக்கு கண்டிக்கத்தக்கது.

தொழிலாளர்களுடைய பிரச்சினையை அணுகுவதிலே, போலீசை விட்டு அடிப்பதும், சிறையிலே அல்லது வேறு சமூக விரோதிகளை மக்கள் என்ற போர்வையிலே வைத்து அடிப்பதும் ஐ.எல்.ஓ. கன்வென்ஷனுக்கு விரோதமானது. எந்தத் தொழிலாளர் பிரச்சினையிலும், டிரான்ஸ்போர்ட் பிரச்சினை, மாணவர்-ஆசிரியர் பிரச்சினை என்று எல்லா பிரச்சினைகளிலும் கன்வென்ஷனை மீறினார்கள். அதே மாதிரி, எலெக்டிரிசிட்டி போர்ட் பிரச்சினையிலே மீறி இருக்கிறார்கள் அமைச்சரவர்கள் நிதானத்தோடு, நான் முன்னால் அந்த யூனியனில் இருந்தோம், இந்த யூனியனில் இருந்தோம் என்றில்லாமல் மந்திரியாக வந்த பிறகு, எல்லோருக்கும் பொதுவானவர் என்று நினைக்கத்தக்க வகையில், நடந்து கொண்டிருந்தால், பலருக்கு ஏராளமான நஷ்டத்தை இந்தச் சர்க்கார் தடுத்திருக்கமுடியும். இப்படி சர்க்கார் வேண்டுமென்றே நஷ்டத்தை வரவழைத்து, விவசாயிகளுடைய தலையிலே பாரத்தை



ஏற்றி வைப்பது கண்டிக்கத்தக்கது. அந்தப் போக்கை மாற்றி, அவர்களுக்குச் சாதகமாக நடக்கக்கூடிய உறுதிமொழிகளை இந்த நேரத்திலே அமைச்சர் தருவார் என்று எதிர்பார்த்து அமர்கிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. ர. ஜெபமணி: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தைப் பற்றி, ஆளும் கட்சியினரும், அதற்கு முன்னாலே ஆண்டு கொண்டிருந்தவர்களும் தங்களுக்குள் எதைச் செய்தோம், எதைச் செய்யவில்லை என்று பேசிக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, வருங் காலத்தில் தமிழ்நாட்டுக்கு என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தால் நன்மையாக இருக்கும். மனதிலே காழ்ப்புணர்ச்சியை வைத்துக் கொண்டு இருப்பது நாட்டுக்கு நல்லதல்ல. யாரையாவது குறை கூறிக்கொண்டு போவதிலே பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. நாங்கள் வந்தால் அதைச்செய்வோம், இதைச் செய்வோம் என்று ஓட்டு கேட்டு ஆட்சிக்கு வந்திருக்கிறோம். பிறகு நாட்டிலே நடப்பதைப் பற்றி ஆழமாக சிந்தித்துப் பார்க்கத் தவறிவிடுகிறோம், என்பது என்னுடைய கருத்து.

கிராமங்களிலாவது இருக்கட்டும், நகரங்களிலாவது இருக்கட்டும் எங்காவது லைட் எரிகிறதா? நன்றாகப் பாருங்கள். ஏன் எரியவில்லை? சர்க்கார் திட்டங்களில் ஏதாவது கோளாறு அல்லது அதிகாரிகளின் அலட்சியப் போக்கா என்பதை அறிய விரும்புகிறேன்.

திருட்டுக்கள் அதிகம் நடப்பதற்கு என்ன காரணம்? கிராமங்களில் லைட் இல்லை. இதுபற்றி யாருக்கும் சிந்தனையில்லை. யாராவது கிராமங்களில் ஆகட்டும் நகரங்களில் ஆகட்டும் எப்படியாவது போகட்டும். நமக்கு அரசாங்கம் 5 வருடம் ஓடிக்கொண்டிருந்தால் போதும் என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது. கிராமங்களிலுள்ள, பஞ்சாயத்துக்களிலும், யூனியன்களிலும், பல்புகள் எங்கே வாங்கவேண்டும் என்று தெரியவில்லை. கலெக்டரிடம் கேட்டால் எனக்கென்ன தெரியும், போர்டிடம் போய் மோதுங்கள் என்று சொல்கிறார். மோதுவதற்கா வந்திருக்கிறோம்? கிராமங்களில் விளக்கு எரியவேண்டும். எரிகிற விளக்கை அணைப்பதற்கு அரசாங்கம் தேவையில்லை. நாங்கள்

அதைச் செய்துவிட்டோம், இதைச் செய்துவிட்டோம் என்று சொல்கிறீர்கள். மேஜர் பஞ்சாயத்துக்களில் விளக்கில்லை, முனிசிபாலிடியில் விளக்கில்லை. எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் தெருக்களில் தைரியமாக நடக்கிறார்கள், எல்லா விளக்குகளும் எரிகின்றன, திருட்டுக்கள் குறைந்திருக்கின்றன என்று யாரும் சொல்லவில்லை. மின்சார வாரியம் தங்களுடைய பொறுப்பிலே இருந்து நழுவிக்கொண்டிருக்கிறது. எப்படியாவது தப்பித்துக் கொள்ளவேண்டுமென்று தந்திரங்களைக் கையாளுகிறார்கள். ராஜ நீதி இல்லை. அரசியல் தந்திரங்கள் விளையாடுகின்றன. மக்கள் ரொம்ப சாதாரணமாக ஏமாற்றப்படுகிறார்கள்.

குறிப்பாக ஒன்றை எடுத்துக்கொள்வோம். கிணறு வெட்ட அரசாங்கம் பணம் கொடுக்கிறது. பம்ப் செட்டுகள் வாங்கவும் அரசாங்கம் பணம் கொடுக்கிறது. ஆனால் மின் இணைப்புக் கொடுப்பதில் காலதாமதம் செய்கிறார்கள். வேண்டுமென்று கிணற்றை வெட்டி, மின் இணைப்பை வாங்கி மண்ணையா எடுப்பான். தண்ணீரைத்தான் இறைப்பான். அப்படியானால் முதலில் கடன் கொடுத்திருக்கக் கூடாது. பார்ப்செட்டுக்குக் கடன் கொடுத்திருக்கக் கூடாது. அப்படிக் கொடுத்துவிட்டு மின் இணைப்பைக் கொடுக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? கடனைத் திருப்பி வாங்கக் கூடாது. நிறுத்தி வைக்க வேண்டும். வட்டி வாங்கக் கூடாது. கிராமத்திலே உள்ள விவசாயிகள் மின் இணைப்பிற்காக அதிகாரிகள் காலடிகளில் கர்ணம் போட்டு, சாத்துக்குடி போன்றவைகளை காலின் முன்வைத்து இணைப்புக் கொடுங்கள் என்று மன்றாட வேண்டியிருக்கிறது. கிணறு வெட்டிவிட்டால் தண்ணீர் இல்லை, ஆதலால் இணைப்புக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். தண்ணீர் இருக்கிறது. வந்து பாருங்கள் என்று சொன்னால் அதிகாரிகள் கோபம் அடைகிறார்கள். கிணற்றடி வாரியம் தண்ணீர் இல்லை என்று சொல்லுகிறார்கள். கடன் தந்திருக்கிறார்கள் கொடுங்கள் என்று கேட்டால் அதிகாரிகள் தட்டிக் கழிக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் மின் இணைப்புக் கொடுக்கலாம். ஆனால் மின்சாரம் வேண்டுமே என்று சொல்கிறார்கள். இந்த அதிகாரிகள் ஒரே வார்த்தையில் சொல்லி முடித்திருக்கலாம். மின்சார உற்பத்தி கம்மியாக இருக்கிறது. ஆகவே, புதிய இணைப்புகள் தர முடியாது. மின்சார உற்பத்தி அதிகரிக்கும்போ...



கிராமத்திலே இருப்பவர்களை யாரும் மதிப்பது இல்லை. கிராம மக்கள் அவ்வாறு தாழ்ந்து விட்டார்கள். ஆனால் அவன்தானே உற்பத்தி செய்கிறான், நல்ல அரிசி, கெட்ட அரிசி என்று பேசுகிறோம்.

என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் மின் இணைப்பு கிடைத்திருக்கிறது. இல்லை. பக்கத்து யூனியனில் மின் இணைப்பு இருக்கிறது. அங்கேயும் தண்ணீர் இருக்கிறது. இங்கேயும் தண்ணீர் இருக்கிறது. எங்களுக்கு இல்லை. எப்படியோ அவர்களுக்கு உண்டு. நம்மைப் போன்றவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அதிகாரிகளைப் பார்த்தால் சேர்மனைப் பாருங்கள் என்று சொல்கிறார்கள். சேர்மனைப் பார்த்தால் நான் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள். ஒருவருக்காவது பொறுப்பு இருக்கிறதா? என்றால், யாருக்கும் இல்லை. அந்தப் பொறுப்பு யாரிடத்தில் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள நம்மால் முடியவில்லை. இந்தச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்.

கிராமத்தில் உள்ளவர்களுடைய வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும். நான் என்னுடைய கிராமத்தில் குடியேறினேன். என்னுடைய பழைய காலத்து சிறிய வீட்டில் குடியேறினேன். மின் இணைப்புக் கேட்டேன். 4 மாதங்கள் ஆகின்றன. பணமும் கட்டிவிட்டேன். அதற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் இல்லை, மீட்டர் இல்லை, நீங்களே வாங்கித் தாருங்கள் என்று என்னையே கேட்கிறார்கள். தொகுதியிலே தெரிந்தோ, தெரியாமலோ என்னைத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். எனக்கே இந்தக் கதி என்றால், பாவம் ஒன்றுமறியாத அப்பாவி கிராம மக்கள் கதி என்ன? ஒரு பாட்டம் அழ வேண்டியிருக்கிறது. எனக்கு மட்டும் நன்றாக அழுது விட்டு வரவேண்டியிருக்கிறது. அல்ல.

நான்கு ஆண்டுகளாக 3 ஆண்டுகளாக எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அப்பாவிகள். யாரிடத்திலும் சொல்லமுடியவில்லை. நமக்கு வருகிற மனுக்களை அமைச்சருக்கு அனுப்புகிறோம் அல்லது தலைவருக்கு அனுப்புகிறோம். பெற்றுக் கொண்டதற்கு பதிலே இல்லை. ஏனெனில் அது ஒரு அலட்சியப் போக்கு. யாரோ ஒருவர் எழுதுகிறார், 5 ஆண்டுகளுக்கு நாம்

தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து விட்டோம், நம்மைத் தட்டிக்கேட்க யாரால் முடியும் என்கிற எண்ணம். அந்த எண்ணம் வரக் கூடாது.

அப்படியே மின் இணைப்பு கொடுத்து இருக்கிறார்களே, அங்கே பல்பு எரிகிறதா, ஃபான் ஓடுகிறதா, ட்யூப் லைட் எரிகிறதா என்றால், கிராமத்திலே போய் பார்த்தால் மின்மினிப் பூச்சி பறப்பதுபோல் எரிகிறது. டிரான்ஸ்பார்மர் மாற்றவேண்டும் என்று சொன்னால் அரசாங்கத்திடம் பணம் இல்லை என்று கையை விரிக்கிறார்கள். டிரான்ஸ்பார்மர் மாற்ற முடியவில்லை. ஏன், இதையெல்லாம் முதலிலேயே சிந்திக்கவேண்டாமா? அதைப்பற்றி மக்களிடம் சொல்லவேண்டியது தானே, எங்களிடத்தில் மின்சாரம் பற்றாக் குறை, நாங்கள் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். அதற்கு பெரிய வரிகளை விதிக்கப்போகிறோம், மத்திய அரசாங்கத்தை நாங்கள் கேட்டு இருக்கிறோம், மத்திய அரசாங்கம் எங்களுக்கு அதைச் செய்யும், இதைச் செய்யும், என்றாவது சொல்லவேண்டும். அதைச் சொல்லாமல், எப்படியாவது தப்பித்தால் போதும் என்று, ஒரு நிலைமை மின்சாரத்திற்கு வரக்கூடாது. மின் இணைப்பு என்பது நாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது. மின்சாரக் கம்பி நாட்டின் நரம்புகள். ரயில் தண்டவாளங்கள் நாட்டினுடைய எலும்புகள். இந்த எலும்பும், நரம்பும் நன்றாக இருந்தால் தான் நாட்டில் வளர்ச்சி நன்றாக இருக்கும்.

மின்சார வாரியத்தில் இருக்கும் ஊழியர்களால் கோரிக்கை எழுப்பப்பட்டது. நாங்கள் கோரிக்கை எழுப்பிக் கேட்டால் எங்களை ஜெயிலில் பிடித்துப் போட்டு விடுகிறார்கள். நாங்கள் அரசியல் வாதிகள். ஜெயில் என்ற உடன் சந்தோஷமாகப் போய் விடுவோம். மின்சார வாரியத்தில் இருக்கும் ஊழியர்கள் கோரிக்கை எழுப்பினால் உடனே கைது செய்து உள்ளே போட்டு விட்டார்கள் பாவம். அவர்கள் என்ன அரசியல்வாதியா? அவர்களை நானும், நண்பர் வின்சென்ட்டும் சிறைச்சாலையில் போய் பார்த்தோம். அவர்கள் கண்ணீர் வடித்துச் சொன்னார்கள், நாங்கள் என்ன கேட்டோம், எங்களைப் பிடித்து சிறையில் போட்டு விட்டார்களே என்று சொன்னார்கள். நான் சிறைக்கு சென்ற போது என்னோடு சிறைக்கு வந்தவர் இந்த நாஞ்சில் வின்சென்ட் இல்லை, வேறு வின்சென்ட். நாஞ்சில் வின்சென்ட் கட்சியினர்தான்



சிறையில் போடு என்று உத்தரவு போட்டு விட்டார்களே, அவர் ஏன் வந்து பார்க்கப்போகிறார். நாங்கள் எல்லாம் போய் பார்த்தோம். எதற்கெடுத்தாலும் ஜெயிலில் பிடித்துப் போட்டால் பிரச்னை தீராது. அவர்களை ஏன் சிறையில் பிடித்துப் போட வேண்டும்? அவர்கள் அந்த நிலைக்கு வரக்காரணம் என்ன? அதைச் சிந்திக்கவேண்டும்.

மேலும், அரசாங்கம் மின்சார உற்பத்தியைப் பற்றி நன்றாக யோசிக்கவேண்டும். மின்சார உற்பத்திக்கு எங்கே தடங்கல் இருக்கிறது? இயந்திரங்கள் நன்றாக இருக்கின்றனவா என்றால் கெட்டுக்கிடக்கிறது. நமது குடும்பத்தில் சிறு பொருள் கெட்டு விட்டால் கூட அதை உடனடியாக மாற்றிவிடும் நிலை அல்லது அதைப் பழுது பார்க்கும் நிலை வந்து விடுகிறது. ஆனால் அரசாங்க இயந்திரங்கள் கெட்டு விட்டன என்றால், அதை மாற்ற இரண்டு ஆண்டுகள் ஆகும். நாங்கள் இவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப் போகிறோம் என்று கணக்குக் கொடுக்கிறார்களே தவிர அதைச் செயலாற்றினார்களா என்றால் இல்லை. மின்சார உற்பத்தி அதிகரித்தால் யாருக்கு அது கிடைக்கவேண்டும்? கிராமங்களுக்குக் கிடைக்கவேண்டும்.

இன்றைக்கு 50,000 பம்ப் செட் கொடுக்கப்போகிறார்கள். யார் யாருக்கு கொடுக்கப்போகிறார்கள், எந்தெந்த வட்டத்திற்குக் கொடுக்கப்போகிறார்கள், எந்தெந்த மாவட்டங்களில் கொடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் கட்சிக்காரர்கள் வந்து கேட்டால் கொடுத்து விடுவார்கள். நாங்கள் மாற்றுக் கட்சி, எதிர்க்கட்சி. 10 பேர் இருக்கிறோம் ஜனதா கட்சியில். இது ஒரு கட்சியாக எங்களுக்குத் தெரியவில்லை. தெரிய வேண்டிய நேரம் வரும்போது தெரியும். யாரையும் அலட்சியப்படுத்தக் கூடாது. எல்லோருக்கும் மின் இணைப்பு கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த பம்ப் செட்டுகளைப் பொறுத்தவரையில் ஒரு விளக்கத்தைத் தந்து விட்டால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனெனில் சட்டமன்ற உறுப்பினர் பலரும் அதைக் குறிப்பிட்டார்கள். மின்சார வாரியத்தில் ஏற்கனவே இருக்கின்ற பம்ப்செட்டுகளின்

[திரு. ப. இராமச்சந்திரன்] [1977 டிசம்பர் 28

எண்ணிக்கை சுமார் 8 லட்சம். கடந்த 7-8 ஆண்டுகளாக மின்சார வாரியத்திலே அளிக்கப்பட்டிருக்கின்ற பம்ப்செட்டுகளுக்கான மனுக்கள் 2 லட்சம். இந்த 2 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு நிலத்தடி நீர் இல்லை என்கிற காரணத்தாலே இதுவரையில் மின்வசதி வழங்கப்படவில்லை. இப்போது நாம் செய்து இருக்கிற முடிவு நிலத்தடி நீர் இருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம், ஒரு 50,000 பம்ப்செட்டுகளுக்கு அந்த 2 லட்சம் பம்ப்செட்டுகளில் தரவேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். இந்த 50 ஆயிரம் பம்ப் செட்டுகள் கட்சிக்காரர்கள் என்ற காரணத்திற்காக அல்லது நண்பர்கள் என்ற காரணத்தாலே வேண்டியவர்கள் என்ற காரணத்தினாலே தரப்படுவதற்கு அல்ல. இன்னும் சொல்லப்போனால் இந்த 50,000 பம்ப்செட்டுகள் இந்த ஆட்சி வருவதற்கு முன்பாகவே மின்சார வாரியத்தாலே சாங்ஷன் செய்யப்பட்டு இருக்கிறது, அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, ஏற்கனவே அனுமதி கிடைக்கப்பெற்று இருக்கிற 50,000 பம்ப்செட்டுகளுக்கு இதுவரையில் மின்சார வசதி இல்லாத காரணத்தாலே அவர்களுக்கு வழங்கப்படுகிறது. நிலத்தடி நீர் இல்லாமல் கொடுக்கக் கூடாது என்ற விதியை தளர்த்தியது தான் இப்போது நாம் செய்து இருப்பது.

**திரு. ர. ஜெயமணி:** மிக்க மகிழ்ச்சி. அப்படி நீங்கள் 50 ஆயிரம் பம்புசெட்டுகள் கொடுக்கப் போகும்பொழுது கூட, 2, 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஏழைகள் கிணறுகள் வைத்திருக்கிறார்கள், அவர்களுக்கு கொடுக்காமல் போகக்கூடாது. வசதி படைத்தவர்கள் ஆயில் என்ஜின் வைத்துக் கொள்ளலாம். வசதியில்லாதவர்கள் மோட்டார் பம்ப் செட்டை வாங்கி வைத்து விட்டார்கள் என்ற நிலையில் அவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கவேண்டும். இதில் ஏழை விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு இரண்டாவதாக கொடுக்கப்பட வேண்டும். இங்கே நான் சிபாரிசு வந்துவிடுமோ என்று நான் பயப்படுகிறேன். காரணம் நான் கலெக்டர் ஆபீசுக்கு சில சிபாரிசுகளுக்கு போகும்பொழுது நாங்கள் சொல்லி ஒரு மாதம் கழித்து அந்தக் காரியங்கள் ஆளும் கட்சியினரால் செய்யப்பட்டதாகத்தான் வருகிறது. அப்படி வரும்போது தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இப்பேர்ப்பட்ட



1977 டிசம்பர் 28] [திரு. ர. ஜெயமணி]

நிலையில் யார் செய்தாலும் ஆளும் கட்சியினரே செய்ததாக முத்திரை போடப்பட்டாலும் ஜனங்களுக்கு கிடைக்கவேண்டும். அதற்குத் தான் உங்களுடைய முடிவு நல்ல முடிவாக இருக்க வேண்டுமென்றும் அதை நிறைவேற்றும்பொழுது மிக ஜாக்கிரதையாக நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ஏழை விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்று கருதப்படுவதாக இருந்தால் அவர்களுக்கு எந்த எந்த முறையில் கொடுக்கப்படவேண்டுமோ அதைக் கவனித்து கொடுக்க நீங்கள் உத்தரவு இடவேண்டும். எங்களுக்கு இனிப்பான செய்தியைச் சொன்னீர்கள். அது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இன்னொன்றை குறிப்பிட விரும்புகிறேன். மின்சார உற்பத்தி பண்ணவேண்டுமென்று மத்திய சர்க்கார் கேட்டிருக்கிறார்கள். எந்த எந்த இடத்திலிருந்து உற்பத்தி செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அவர்களைப் பார்த்து நீங்கள் செய்யும்பொழுது கட்டுப்படி ஆகுமா ஆகாதா என்று தெரிந்து கொண்டு அதை அதிகப்படுத்த எவ்வளவு வாய்ப்பு இருக்கிறதோ அதைச் செய்ய வேண்டும். இப்போது மணிமுத்தாறு, பாபநாசம் போன்ற இடங்களில் நிறைய உற்பத்தி செய்ய முடியும் என்றால் அதைத் தாராளமாகச் செய்ய முன்வரவேண்டும். பணம் இல்லையென்று சொல்வது மக்களின் வாழ்க்கையில் உயிர் இல்லாமல் போகும். பணம் அரசாங்கத்திற்கு ஒரு பிரச்னையாக இருக்கக்கூடாது. இப்போது புயல் அடித்தது. பணம் இல்லையென்று இருந்து விட்டால் எல்லோரும் பாழாகியிருப்பார்கள். யுத்த காலத்தைப் போல் நடவடிக்கை எடுத்து மின் இணைப்பு பின் தங்கிவிடாது பார்த்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு வேகமாக மின்சக்தியை உற்பத்திபண்ணுகிறீர்களோ அது நாட்டின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும். பணம் இல்லை என்ற காரணத்திற்காக தடைப்பட்டால் நாட்டின் வளர்ச்சி தடைப்பட்டுவிடும்.

ஸ்டுடியோக்களுக்கு எவ்வளவு மின் இணைப்பு கேட்டாலும் கிடைக்கிறது. ஆனால் கிராமத்தில் உள்ளவர்களுக்கு கிடைக்கவில்லையென்றால் இவர்கள் சினிமா படம் பார்க்கிறார்கள், அது மின்சாரத்தின்மூலம் தானே எடுக்கிறார்கள், அவர்களுக்கு மட்டும் மின்சாரம் எப்படி கிடைக்கிறது நமக்கு ஏன் கிடைக்கவில்லை

[திரு. ச. ஜெயபாணி] [1977 டிசம்பர் 28

என்று நினைக்கிற அளவுக்கு இந்தப் பாகுபாடு வைக்கக்கூடாது. கிராம மக்களுக்கு முதலாவதாகக் கொடுக்க வேண்டும். சினிமா படம் எடுப்பது, எடுக்காமல் இருப்பது பிரச்னை அல்ல. படம் எடுப்பதால் சாப்பாடு கிடைப்பதில்லை. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கினால் தான் மக்களுக்கு உணவு வழங்க முடியும். மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள பம்புசெட்டுகளுக்கு இரவில் தான் அனுமதி தருகிறார்கள். வெளிச்சம் இல்லாத நேரத்தில் சென்று பாம்பு கடித்து இறந்து விடுகிற நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே, விவசாயிகளுக்கு மறுக்கக் கூடாது. ஏழைகளின் வீடுகளுக்கு மின் இணைப்பு உடனடியாகக் கொடுக்க வேண்டும். அதற்கு என்ன செலவானாலும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாங்கள் உங்களை நம்புகிறோம். நீங்கள் எப்படியும் பண்ணுவீர்கள் என்று. உங்கள் தலைவர் நினைத்ததை முடிப்பவர் என்று தெரியும். ஆனால் அவர் என்ன நினைத்திருக்கிறார் என்று தான் தெரியாது. அதில் ஒன்று தான் கோளாறு. வெளிப்படையாக அவர் சொல்லியிருந்தால் பரவாயில்லை. அவர் நினைத்தது அவர் உள்ளத்திற்குத் தான் தெரியும், ஆண்டவனுக்குத் தான் தெரியும். கிராம மக்கள், விவசாயிகள் நல்வாழ்வு பெற எல்லோருக்கும் வேண்டியது மின்சாரம். அதில் மத்திய சர்க்காரும் உங்களுக்கு எவ்வளவோ உதவுவதற்கு முன்வருகிறது. அதைத் தாராளமாக ஏற்று, கிராமங்கள் ஒளிமயமாக இருக்க, அவர்கள் வாழ்வு ஒளி பெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

**திரு. துரை முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பை நல்கியதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் நிலத்தடி நீர்த் தடையை அரசாங்கம் எடுத்து விட்டு, இரண்டு லட்சம் மனுக்களில் ஐம்பதாயிரம் மனுக்களுக்கு மின் இணைப்பு கொடுக்க இப்போது உத்தரவிட்டிருப்பதாகவும், அவைகள் நீண்ட நெடுநாளைய மனுக்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் அலுவலகத்தில் கேட்டால் அவர்கள் சொல்வது இப்போது நாங்கள் பழைய மனுக்களைக்



1977 டிசம்பர் 28] [திரு. துரை முத்துசாமி]

கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. புதிதாக வந்தால், அதாவது சென்ற ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டாக இருந்தால் அதற்கு இல்லை என்று சொல்லுகிறார்கள்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். இப்போது நல்ல மழை பெய்து கிணறுகள் எல்லாம் நிரம்பி வழிந்துகொண்டிருக்கின்றன. இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குத் தண்ணீர் பஞ்சம் இருக்காது என்ற நிலைமை இருக்கிற காரணத்தாலே, பவர் கட் இல்லாமல் இருக்கிற காரணத்தாலே, இந்த நிலத்தடி நீர்த் தடையை நிரந்தரமாக எடுத்திருக்கிறார்களா அல்லது மூன்று ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் என்று ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறதா என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். அதிகாரிகள் சொல்வதைப் பத்திரிகைகளில் பார்த்து தெரிந்து கொள்கிறோம். எனவே மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் இந்த நிலத்தடி நீர்த் தடை ஐந்தாண்டுகளுக்கு அல்லது நிரந்தரமாகவே இல்லை என்ற ஒரு முடிவினை பொது மக்களுக்கு அறிவித்தால் நலமாகயிருக்கும்.

இப்போது நாட்டிலிருக்கிற நிலைமையில் விவசாயிகளை எடுத்துக் கொண்டால் அவர்களுடைய நிலைமை வேதனைக்குரியதாக இருக்கிறது. கிராமங்களுக்கு நாங்கள் செல்கிறபோது கிராம மக்கள் சொல்கிற வார்த்தைகளைக் கேட்கிறபோது கண்ணீர் விடுகிற நிலைதான் இருக்கிறது. காரணம், மின்சார இணைப்பு இல்லாமல் ஒரு விவசாயி ஆயில் இன்ஜினைப் போட்டு ஒரு ஏக்கர் கரும்பு பயிரிடுகிறார் என்றால் ஆயில் இன்ஜினுக்கு ஒரு ஏக்கருக்கு மாதமொன்றுக்கு ரூ. 300 செலவாகிறது. ஆனால் அதேநேரத்தில் மின் இணைப்பு கிடைத்தால் மின் கட்டணம் செலுத்தவேண்டும் என்ற நிலை இருந்தால் மாதம் ரூ. 30 தான் ஆகும். ஆக, பத்து மடங்கு அதிகப்படியாக அவர்கள் செலவிடவேண்டிய நிலைமை, நிர்ப்பந்தம் இருக்கிறது.

அதேபோல் ஒரு ஏக்கர் கரும்பு பயிரிட தண்ணீருக்காகச் செலவிடுவது, உரம் மற்றும் பயிர் செலவுகளுக்காக ரூ. 3,000 ஆகிறது. ஆனால் அதிலிருந்து வருகிற வருமானம் என்னவென்றால் ரூ. 2,800 தான் வருகிறது. ரூ. 200 கை விட்டுப்போகிறது. ஆக

[திரு. துரை முத்துசாமி] [1977 டிசம்பர் 28

விவசாயி நஷ்டத்தில் பயிரிடக்கூடிய ஒரு சூழ்நிலைதான்
இருக்கிறது. சிறிய விவசாயிகளாக இருந்தாலும் சரி அல்லது
பெரிய விவசாயிகளாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்டதொரு
நிலைமை இருக்கும் காரணத்தால் அவர்கள் கிராமங்களைவிட்டு
வேறு இடங்களுக்கு, வேறு மாநிலங்களுக்குச் சென்று பிழைக்க
வேண்டிய ஒரு அவல நிலை சமீப காலத்தில், வறட்சி இருந்த
காலத்தில் ஏற்பட்டது. மின் இணைப்பு கிடைப்பதில்லை, பயிர்
செய்தால் நஷ்டத்தில் செய்ய வேண்டியிருக்கிறது, கடன் வாங்கி
பயிர் செய்து வீடு, வாசல், நிலங்களை எல்லாம் விற்று கடன்காரர்
களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற காரணத்தால்
எவ்வளவோ பேர்கள், சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள்
வெளி மாநிலங்களுக்குப் பிழைக்கச் சென்றிருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பொது
நிறுவனங்கள் குழு சார்பாக நாங்கள் எல்லாம் சென்ற மாதம்
வடநாடு சென்றிருந்தோம். சண்டிகாரில் என் பகுதியைச்
சார்ந்தவர்கள், குறிப்பாக கள்ளக்குறிச்சி தாலுகாவைச் சேர்ந்த
கொங்கராய பாளையத்தைச் சேர்ந்த விவசாயிகள் அறுபது பேர்கள்
அங்கு சென்றிருக்கிறார்கள். சிறிய விவசாயிகளும், பெரிய
விவசாயிகளும் இருக்கிறார்கள். ஏன் இங்கு வந்தீர்கள்?
எப்போது வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்? என்று கேட்டேன்.
நம் பகுதியில் வறட்சி ஏற்பட்ட காரணத்தால் ஏதாவது தொழில்
செய்து பிழைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இங்கே
வந்திருக்கிறோம் என்றார்கள். இங்கே ரூபாய் 6, ரூபாய் 10
தினக்கூலி கிடைக்கிறது, நம் பகுதியில் மழை பெய்யும்போது வர
இருக்கிறோம், அங்கு நிலம் பயிரிட முடியவில்லை, தொழில் செய்ய
முடியவில்லை, ஆகவேதான் தினக்கூலிகளாக வயிற்றுப்
பிழைப்பிற்காக வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்.
அப்படிப்பட்ட நிலைமை வறட்சிக் காலத்தில் கிராமங்களில்
ஏற்பட்டது.

ஆனால், இப்போது நல்ல மழை பெய்திருப்பதால், கிணறுகள்,
குளங்கள் நிரம்பி வழிந்துகொண்டிருப்பதால் இந்த நிலத்தடி நீர்த்
தடையை நிரந்தரமாக எடுத்துவிட வேண்டும். இது சம்பந்தமாக
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சென்ற வாரத்திற்கு முன்பு



1977 டிசம்பர் 28] [திரு. துரை முத்துசாமி]

எங்கள் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களோடு சேர்ந்து
8—12—1977-ல் சந்தித்து இந்த நிலத்தடி நீர்த் தடையை நீக்க
வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். தற்போது மின்சார இணைப்பு
கொடுப்பதில் எந்தத் தடையும் இல்லை. காரணம், பவர் கட் இல்லை.
போதுமான அளவு கிணறுகளில் தண்ணீர் இருக்கிறது. கிணறு
வெட்ட நிலவள வங்கி கடன் கொடுக்கிறார்கள். ஆனால் மின்
இணைப்பு கொடுப்பதில் நன்செய்யாக இருந்தால் 450 அடி,
புன்செய்யாக இருந்தால் 650 அடி இவ்வளவு இடைவெளி இருக்க
வேண்டும் என்று கூறி மின் இணைப்பு கொடுப்பதில்
காலதாமதமாகிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவெனில், நிலத்தடி நீர்த்
தடை நிரந்தரமாக அல்லது மூன்று அல்லது ஐந்தாண்டுகளுக்கு
எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்க வேண்டும். யார், யார்
மின் இணைப்பு வேண்டுமென்று மனு போட்டிருக்கிறார்களோ, யார்
யார் அதற்குத் தயாராக இருக்கிறார்களோ, அந்த விவசாயிகள்
அனைவரும் தண்ணீர் பெற—தமிழகத்தில் இருப்பவர்களுக்கு
வரப்பிரசாதமாக நல்ல மழை பெய்திருக்கிறது—தடையின்றி மின்
இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச்
சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

அதைப்போலவே பல இடங்களிலும் தெருவிளக்குகள்
எரிவதில்லை. தெருவிளக்குகளைப் பொறுத்தவரை இப்போது
அவை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.
ஒன்றிரண்டு இடங்களைத் தவிர, எல்லா பஞ்சாயத்துக்களிலுள்ள
தெருவிளக்குகளும் எரியாமல் எல்லா இடங்களும் எல்லா இரவு
களிலும் அமாவாசை இருட்டைப்போல்தான் காட்சி
அளிக்கின்றன. இதைப்பற்றிக் கேட்டால் எங்கள் பஞ்சாயத்தில்
நிதிநிலை சரியில்லை. பல்பு வாங்கிப் போட முடியவில்லை. மின்சாரக்
கட்டணத்தைக் கட்டுவதற்கே எங்கள் நிதிநிலை சரியில்லை என்று
சொல்லுகிறார்கள். இந்த நிலைமை இருக்கின்றது.

இதை மாற்றி அமைக்கின்ற வகையில், இந்த அரசு
மக்களிடமிருந்து சர்சார்ஜ் என்று ஒன்றரை ரூபாய் முதல்
இரண்டரை ரூபாய் வரை வசூலிக்கின்றார்கள். அந்தப் பணத்தில்

[திரு. துரை முத்துசாமி] [1977 டிசம்பர் 28

அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கு 25 சதமான தொகையை ஒதுக்க வேண்டும், அல்லது பல்பு முதலியவைகளை அரசாங்கமே வாங்கி கொடுக்க வேண்டும், மின்சாரக் கட்டணத்தையும் அரசாங்கமே கட்ட வேண்டும். இந்த நிலைமை வந்தால் ஒழிய எல்லாக் கிராமங்களிலும் தெருவிளக்குகள் எரியாது, ஒரு சில கிராமங்களைத் தவிர. இது என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளிலும் இப்படியேதான்—தமிழகம் முழுவதும்—இருந்து கொண்டிருக்கின்றது. எனவே வசூலிக்கின்ற சர்சார்ஜ் தொகையில் 25 சதவீதம் தொகையை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். அல்லது அரசாங்கமே மின்கட்டணத்தைக் கட்ட வேண்டும். அப்படியில்லாமல் எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அவர்களே மின்சார விளக்குகளை பார்த்துக்கொள்ளும்படியாக அதிகாரத்தைக் கொடுத்துவிட்டோம், அவர்களே பல்புகளை வாங்கிக்கொள்ளலாம் என்று உத்தரவு போட்டுவிட்டோம் என்று சொல்லிக்கொண்டு இருந்தால் மட்டும் போதாது. இந்த நிலைமை மாறவில்லையென்றால், போகப்போக யார் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலும் சரி அவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் கெட்ட பெயர்தான் வரும். எனவே, சர்சார்ஜ் வசூலிப்பதில் 25 சதவிகிதம் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், நண்பர் ஜெயமணி அவர்கள் சொன்னதுபோல், வீடுகளுக்கு சர்வீஸ் கொடுப்பதற்குக்கூட காலதாமதம் ஏற்படுகிறது, கனெக்ஷன் கிடைக்கவேண்டுமென்றால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரையாவது கூட்டிக்கொண்டு போய்ச் சொன்னால்தான் கிடைக்கிறது என்று சொன்னார்கள், இன்னொன்றையும் செய்தாலும்கூட சீக்கிரமாக சர்வீஸ் கிடைக்கும் என்பதை அவர்கள் சொல்ல மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். கனெக்ஷன் கொடுப்பது என்பது எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. ஸீனியாரிட்டி முறையில் கொடுக்கப்படுகிறதா அல்லது சிபாரிசு அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா என்பது தெரியவில்லை.



1977 டிசம்பர் 28] [திரு. துரை முத்துசாமி]

இப்படிப்பட்ட அவல நிலை போக வேண்டும். ஒன்று சீனியாரிட்டி முறையில் கொடுக்க வேண்டும், அல்லது வேறு ஏதாவது ஒரு அடிப்படையில் கொடுப்பது என்றிருக்க வேண்டும்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் பம்பு செட்டுகளை எல்லாம் போட்டு வைத்துவிட்டு, மின் இணைப்பு வேண்டும் என்று மனு போடுகிறேன். இப்படி மனு போடுகிறவர்களில் சிறு விவசாயிகளும் இருக்கிறார்கள். பெரிய விவசாயிகளும் இருக்கிறார்கள். சிறு விவசாயிகள் என்றால், அது தானாகவே அலுவலகத்திலிருந்து எப்போது வருகிறதோ அப்போதுதான் இணைப்பு வரும். அதே நேரத்தில் பெரிய விவசாயிகளாக இருந்தால் அவர்கள் யாரையாவது அழைத்துச் சென்று அதிகாரிகளைப் போய் பார்த்தால் அவர்களுக்குச் சீக்கிரமாக இணைப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிற காரணத்தினால் இதைத் தவிர்க்க, சீனியாரிட்டி முறையில் மின் இணைப்பு கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அதற்கடுத்தாற்போல், கல்ராயன் மலைப்பகுதியில் இருந்த கொத்தடிமைகள் எல்லாம் விடுவிக்கப்பட்டு, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே அந்தப் பகுதிக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருந்தும், இதுவரை மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. நமது மாண்புமிகு ஜெயமணி அவர்கள் சொன்னதுபோல், பல பல காரியங்களுக்கு மின்சாரத் துறையில் செலவு செய்து கொண்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில் மலைவாழ் மக்களுக்கு வெளி உலகமே தெரியாத இந்த மக்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து செய்து விரைவில் மின் இணைப்பு கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் வீட்டு சர்வீஸ் கொடுப்பதில், இன்ஸிடென்டல் சார்ஜ் என்று போடுகிறார்கள். புதிய மீட்டராக இருந்தாலும் சரி, பழைய மீட்டராக இருந்தாலும் சரி, மீட்டர் ரென்ட் சார்ஜ் என்று போடுகிறார்கள். இப்படி பல விதத்தில் கட்டணங்களை வசூலிக்கிறார்கள். அதே நேரத்தில் தொழிற்சாலைகளுக்குக் குறைந்த

[திரு. துரை முத்துசாமி] [1977 டிசம்பர் 28

தவிர, பஞ்சாயத்துக்கள் 4,000, 5,000 ரூபாய் டிபாசிட் தொகையாகக் கட்ட வேண்டுமென்றால், அப்படிக் கட்டினால்தான் கம்பங்களைக் கொண்டுவர முடியும். டிரான்ஸ்பாரமர்களை வரவழைக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அப்படி பணம் கட்டக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஊராட்சி மன்றங்களுக்கு இல்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியமோ அல்லது அரசாங்கமோ அப்படிக் கட்டவேண்டிய தொகையைக் கட்டவேண்டுமே தவிர, பஞ்சாயத்துக்கள்தான் கட்டவேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்குமானால், இன்னும் ஓராண்டு அல்ல, பத்து ஆண்டுகள் ஆனாலும் அவர்களால் பணம் கட்டமுடியாது. அப்போது அங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலைதான் ஏற்படும். ஆகவே, உடனடி நிவாரணமாக அரசாங்கமே இதற்கு முன்வந்து பஞ்சாயத்துக்கள் சார்பில் அதற்கான செலவுத் தொகையைக் கட்டுவதற்கு முன்வர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

இப்போது பம்பு செட்டுக்கு மின் இணைப்பு தரும்போது 75 ரூபாய்க்குமேல் செலவு செய்யக்கூடாது என்று உத்தரவு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதனால் மின் இணைப்புக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதிகச் செலவு 100 ரூபாய், 125 ரூபாய் வரை ஆகிறது.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பஞ்சாயத்து மூலம் கட்டி முடிக்கப்பட்டு மின் இணைப்புக் கிடைக்காததன் காரணமாக திறக்கப்படாமல் இருக்கிறது. இந்த நிலையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிலத்தடி நீர்த்தடையை எடுத்து மனுச்செய்திருக்கும் அத்தனை விவசாயிகளுக்கும்—சிறு விவசாயிகள், நடுத்தர, பெரு விவசாயிகள் என்ற வகையில் காலதாமதமின்றி மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். இதிலே பாரபட்சம் காட்டாமல் மின் இணைப்புக் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.



1977 டிசம்பர் 28] [திரு. துரை முத்துசாமி]

புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டு தெரு விளக்குகள் எரியாமல் அநேக பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. கம்பங்கள் இருந்தாலும் பல்புகள் வாங்கக் கொடுக்க முடியாமல் அநேக பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் பல்புகள் வாங்கிப்போட்டு அவற்றை எரிய விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு நல்கியமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. நாச்சிமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டு மின்வாரிய நிதிநிலை அறிக்கையை நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த அரசுகள் இந்த மின்சார வாரியத்திலே அதிகமான கவனம் செலுத்தவில்லை. அதனால் மின்சாரத்தின் நிலை பின்தங்கி இருக்கிறபடியால் இந்த அரசு அதிகக் கவனம் செலுத்தி மின்சார வாரியத்திற்கு அதிகமான நிதியை ஒதுக்கி இருப்பதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கடந்த நவம்பர் திங்களில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக மின்சார வாரியத்திற்கு நான்கு கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அப்படிப் பாதிக்கப்பட்ட நேரத்தில், மின்சார வாரியமானது மின்வாரிய ஊழியர்களையும், உபகரணங் களையும் வெள்ளப் பகுதிகளுக்கு உடனடியாக அனுப்பி வெள்ளப் பகுதியில் ஏற்பட்ட மின் சேதாரங்களை நல்லமுறையில் பழுது பார்த்தார்கள். அப்படி இந்த அரசு மின்சார வாரியத்தின் மூலமாக உடனுக்குடன் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டு கிறேன்; மின்வாரிய ஊழியர்களையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டாண்டு காலமாக விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்காமல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் குறைந்திருந்ததன் காரணமாக அவ்வாறு நிறுத்தி வைத்திருந்தார்கள் என்று சொல்லப்பட்டது. இப்போது இந்த அரசு அப்படி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் 50,000 பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு

[திரு. க. நாச்சிமுத்து] [1977 டிசம்பர் 28

கொடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதைப் பெரிதும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு இப்போது நல்ல முறையில் மழை பெய்து கீழே போய்க் கொண்டிருந்த நிலத்தடி நீர் இப்போது மேல்நோக்கி வந்து கொண்டிருக்கிறது. எங்குப் பார்த்தாலும், குறிப்பாக, கோவை மாவட்டத்தில் எங்குப் பார்த்தாலும் நீர் பெருக்கத்தின் காரணமாக தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமான அளவுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. விவசாயிகள் மகிழ்ச்சி பெறும் அளவுக்கு மழை பெய்திருக்கிறது. கடந்த இரண்டாண்டு காலமாக சிறு விவசாயிகள் மின் இணைப்புக் கிடைக்காமல் அதிகமான கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அந்தச் சிறு விவசாயிகள் அனைவருக்கும் மின் இணைப்புக் கொடுக்கும் வகையில் முதலிடம் தரப்பட வேண்டும். "சீனியாரிடி" என்று சொல்லாமல் சிறு விவசாயிகளுக்கு முதலிடம் கொடுத்து பிறகு பெரிய விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். ஏன் என்று சொன்னால் இரண்டு வருட காலமாக மிகவும் கஷ்டத்திற்கு உள்ளானவர்கள் சிறு விவசாயிகள்தான். பெரு விவசாயிகள் அப்படிக் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கமாட்டார்கள். பெரு விவசாயிகள் 2, 3, 4 பம்பு செட்டுகள் வைத்திருக்கிறார்கள். ஆனால், பம்புசெட் இல்லாதவர்களும் ஒரே ஒரு பம்புசெட்டு மட்டும் வைத்துக்கொண்டு இருக்கும் சிறு விவசாயிகளும் இருக்கிறார்கள், அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலே முதலிடம் கொடுக்க வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களிலே கடன்கள் வாங்கி கிணறுகள் வெட்டியவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அக்கடன்களை அவர்கள் திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் மின் இணைப்புக் கொடுப்பதில் முதலிடம் கொடுக்கவேண்டும்.



1977 டிசம்பர் 28] [திரு. க. நாச்சிமுத்து]

கோவை மாவட்டத்தில் பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து மின் விளக்குகளுக்கு அதிகமான பல்புகளை வாங்கிக் கொடுத்தாலும்கூட மின்சார வாரிய ஊழியர்கள் ஆங்காங்கே சரியானபடி குறித்த நேரத்தில் அவைகளைப் போடுவதில்லை. மின்சாரத்தின் பொறுப்பு பஞ்சாயத்துக்களிடம் இருக்கிறது, பஞ்சாயத்துத் தலைவர்கள் பல்புகளை வாங்கிக் கொடுத்தாலும்கூட உடனுக்குடன் அவர்கள் போடுவதில்லை, எனவே, இந்த மின்சாரப் பொறுப்பை பஞ்சாயத்துத் தலைவர்களிடம் இருப்பதைவிட மின்சார இலாகாவிடம் இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் கேட்டால், அவர்கள் நாங்கள் பல்புகள் வாங்கிக் கொடுக்கிறோம், மின்சார வாரிய ஊழியர்கள் போடுவதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, தெரு விளக்குகளுக்கு மின்சாரம் கொடுக்கும் பணிகளை எல்லாம் பஞ்சாயத்துக்களிடமிருந்து எடுத்து மின்சார இலாகாவிடம் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் இப்போது 6 மணி நேரம் மின்சார சப்ளை கொடுக்கப்படுகிறது. இரவு காலத்தில்தான் வழங்கப்படுகிறது. காலையிலே 6 மணிக்கு மின் சப்ளை கொடுத்து பகல் 12 மணிக்கே சப்ளையை நிறுத்தி விடுகிறார்கள். பகல் நேரத்திலே மின்சார சப்ளை இல்லாத காரணத்தால் இரவு நேரங்களிலே தோட்டங்களுக்குச் சென்று தண்ணீர் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இரவு நேரங்களிலே கஷ்டமான நிலைமை இருப்பதால் இரவு நேரங்களிலே சப்ளை கொடுப்பதை நிறுத்தி பகல் நேரங்களில் முழு மின் சப்ளை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், எங்களுடைய கோவை மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் கிட்டத்தட்ட பல நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு இருக்கின்றன. பஞ்சாயத்துக்களில் மின் இணைப்புக் கட்டணமும் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் அதிகமான இடங்களில் மின் இணைப்புகள் கொடுக்கப்படவில்லை. ஆகவே அரசு கவனம் செலுத்தி உடனே

[திரு. க. நாச்சிமுத்து] [1977 டிசம்பர் 28

கிராமப் பகுதிகளில் உள்ள குடிநீர் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி வணக்கம்.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின்மீது [illegible] திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக [illegible] கருத்துக்களை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மின்சார வாரியம் 1947 ஆம் ஆண்டு மின்சார சப்ளை ஆக்டின் கீழ் தனி நிறுவனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்

(நண்பகல் 12-00)

பட்டிருப்பதன் நோக்கம் ஒரு தனித்தன்மையோடு [illegible] நேர்மையான கடமைகளை நிறைவேற்ற [illegible] நான் நல்லெண்ணத்தோடு அந்த [illegible] என்ற இன்றைக்கு மின்சார வாரியம் தனி [illegible] செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் அவர் [illegible] திராவிட முன்னேற்றக் கழக [illegible] ஆட்சிப்பொறுப்பில் இருந்தபொழுது [illegible] திராவிட முன்னேற்றக் கழகம் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது [illegible] உள்ள குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் [illegible]. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபொழுது தமிழ்நாட்டிலுள்ள மொத்த கிராமங்கள் 62,187 கிராமங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பிலிருந்தபொழுது எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்தபொழுது மின்இணைப்பு வழங்கப்பட்ட [illegible] கிராமங்கள் 61,138 கிராமங்கள் ஆகும். அதுமட்டுமல்ல, 24,799-இல் திராவிட முன்னேற்றக் கழகம் [illegible] அரிசன காலனிகள் இருந்தபொழுது மின்சார [illegible] ஆட்சிப்பொறுப்பில் 23,800 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் [illegible] ஆட்சிப்பொறுப்பில் [illegible] 21 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. [illegible]



1977 டிசம்பர் 28] [திரு. ஏ. ரகுமான்கான்]

பல்வேறு மாநிலங்களில். ஆனால் குறிப்பாக எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்தபொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இங்கே இருந்தபொழுது ஏறக்குறைய 7 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு தரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இவைகளையெல்லாம் நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், ஆளுங்கட்சியின் சார்பாக நண்பர் திரு. இராதா அவர்கள் பேசியபொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பிலேயிருந்தபொழுது அது இந்த மின்சார இலாக்காவைப் பயன்படுத்தி ஊழல்கள்தான் புரிந்ததே தவிர மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை என்ற குற்றச் சாட்டை எழுப்பினார்கள். நான் ஆதாரங்களை அவையில் வைத்து இருக்கிறேன். இவைகளெல்லாம் நல்ல காரியங்கள் இல்லையா? சாதனைகள் இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள், 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்னார்கள். ஆனால் அண்ணா வழி நடப்பவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் இந்த நல்ல சாதனைகளை ஏன் மூடி மறைக்க வேண்டும்? ஆகையால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பிலேயிருந்தபொழுது இந்த மின்சார வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி நல்ல பல திட்டங்களை நிறைவேற்றியிருக் கிறது.

ஆகவே, ஆளும் தரப்பிலே இருப்பவர்கள் திரும்பத் திரும்ப அந்தக் குற்றச்சாட்டுகளையே சொல்லிக்கொண்டு ஆட்சியை நடத்திவிடாமல், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு இந்தத் துறையை எந்த விதத்தில் பயன்படுத்த எந்தத் திட்டங்களை வைத்திருக்கிறீர்கள், என்னென்ன நன்மைகளைச் செய்யப் போகிறீர்கள், தொழிலாளர்கள் பிரச்னைகளைத் தீர்க்க வழி என்ன, விவசாயிகள் பலன் பெற்றிருக்கிறார்களா, லாப நஷ்டம் என்ன என்ற கணக்கையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இந்தச் சபையின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாகத் தமிழகத்தின் முதல்வரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்கு பிறகு, அவருடைய கட்சி

[திரு. எ. ரகுமான்கான்] [1977 டிசம்பர் 28

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, அவருடைய கட்சி, ஆளுங்கட்சியானதற்குப் பிறகு இலஞ்ச இலாவண்யமே நடைபெறக் கிடையாது, கட்சி சார்பாக வேறுபல் ஏதுவும் கிடையாது, கட்சிக்காரர்கள் யாரும் தலையிடக் கிடையாது, நாங்கள் முழுக்க முழுக்க காந்திய வழியில், அண்ணா வழியில், ஏசுநாதர் வழியில் புத்தர் வழியில் ஒரு புனித இராஜ்யத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நான் இங்கே பகிரங்கமாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். ஆதாரங்களோடு சொல்ல விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களுக்கு முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன், ஆதாரம் உண்டா என்று நீங்கள் நினைக்க வேண்டாம். ஆதாரத்தோடு இருக்கிறேன், ஆதாரம் தயாராக இருக்கிறது. சொல்கிறேன்.

பேசின் பிரிட்ஜிலிருந்து ஒரு தொழிலாளி, டிரான்ஸ்போர்ட் அண்ட் ஸ்டோர்ஸ் டிவிஷனிலிருந்த தொழிலாளி. வேறொரு டிவிஷனுக்கு மாற்றப்பட்டார். அப்படி அவர் மாற்றப்பட்ட பிறகு ஏறத்தாழ 15 நாட்களுக்குள்ளாக, மீண்டும் அதே போஸ்டில் அவர் ரீபோஸ்டிங் செய்யப்பட்டிருக்கிறார். நான் கேட்பதெல்லாம் இந்தக் குறுகிய காலத்தில் ஏற்கனவே இந்த நபர் போர்மேன் டிரான்ஸ்போர்ட் அண்ட் ஸ்டோர்ஸ் டிவிஷனிலிருந்து வேறு டிவிஷனுக்கு மாற்றப்பட்ட தேதி 7-11-1977. அன்றைய தினம் அவரை டிரான்ஸ்பர் செய்தார்கள். அவரும் டியூட்டியை ஏற்றுக்கொண்டார். ஆனால் மீண்டும் பழைய இடத்திற்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு மாற்றப்பட்ட உத்தரவின் தேதி 24-11-1977. நான் கேட்பதெல்லாம் இந்தக் குறுகிய காலத்தில் இந்த மாற்றத்தை ஏற்படுத்திய நபர் யார்? இதற்கு என்ன அவசியம்? இருட்டறையில் நடந்த சம்பவம் என்ன? என்று என்னைப் போன்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. நான் பகிரங்கமாகவே சொல்கிறேன், ஆதாரத்தோடு சொல்லத் தயாராக இருக்கிறேன். இங்கே அமைச்சரும் இருக்கிறார்கள். இந்த மாற்றம் ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது? இதற்கு என்ன அவசியம்? காரணம் சொல்லப்பட்டிருக்கிறதா? நான் இங்கே அந்த உத்தரவுகளின் காப்பியை வைத்திருக்கிறேன். நான் அவற்றை சபாநாயகரின் அனுமதியோடு தரத் தயாராக இருக்கிறேன்.



1977 டிசம்பர் 28] [திரு. எ. ரகுமான்கான்]

ஆகவே, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இலஞ்ச இலாவண்யம் அற்ற ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்பவர்கள், காந்திய வழியில் நடப்பதாகச் சொல்பவர்கள், அண்ணா வழியில் நடப்ப தாகச் சொல்பவர்கள், மக்களுக்குக் கொடுத்த நம்பிக்கைக்குத் துரோகமாக இன்றைக்குக் கறைபடிந்த கரங்களாக, இலஞ்ச இலாவண்யத்தின் பிரதிநிதிகளாக ஆட்சி நடத்திக் கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட டிரான்ஸ்பர் ஏன் ஏற்பட்டது?

விளக்கம் என்ன? பின்னணி என்ன? இருட்டறை சம்பவம் என்ன? அமைச்சர் பதில் சொல்வார் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

அடுத்த பிரச்னையை, உங்கள் மூலமாக, இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். கம்ப்யூட்டர் சிஸ்டம் ஒன்றை இன்ட்ரடியூஸ் பண்ணுவதற்காக, ஏறத்தாழ, ரூ. 2½ இலட்சத்தை ஒதுக்கி, ஏ. வி தாமஸ் அன்ட் கம்பெனிக்கு ரூ. 2 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சப்சிக்குவன்டாக, அதற்குப பிறகும் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்பது, இந்த கம்ப்யூட்டர் சிஸ்டத்தை எப்பொழுது இன்ட்ரடியூஸ் பண்ணப் போகிறீர்கள்? இந்தச் சர்க்காருடைய கொள்கை—பாலிசி கம்ப்யூட்டர் சிஸ்டம் தானா? அப்படியானால் இந்த கம்ப்யூட்டர் சிஸ்டத்தினால், ஆள்குறைப்பும் ப்ரமோஷன் பாதிப்பும் எதிர்கால வேலை வாய்ப்பு பாதிப்பும் இருக்கிறதே. அப்படி இருக்கும்போது இது தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கை என்று இந்தச் சர்க்கார் கருதவில்லையா? நம்முடைய முதலமைச்சர் தொழிலாளி என்ற சினிமாவிலே, மாஜி நடிகராக நடித்தவர், தொழிலாளர் களுக்குப் பாடுபடுகிறவர் என்று சொல்கிறவர். அப்படியென்றால், அவருடைய சர்க்கார் கம்ப்யூட்டர் சிஸ்டத்தை ஒத்துக்கொள் கிறதா? அப்படி ஒத்துக்கொள்கிறது என்று சொன்னால் இது வரைக்கும் ஏன் கம்ப்யூட்டர் சிஸ்டம் அமுல்படுத்தப்படவில்லை.

ஏ. வி. தாமஸ் கம்பெனிக்கு கொடுத்த ரூ. 2½ இலட்சம் முதல் அட்வான்ஸ், சப்சிக்குவன்ட் அட்வான்ஸ் எந்த நிலையில் இருக் கிறது? அதுவும் நமக்கு இருட்டாக இருக்கிறது, வெளிச்சம் தேவை. மின்சார இலாகாவைப் பற்றி பேசிக்கொண்டிருக் கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சர் வெளிச்சம் தருவார் என்று நான் நம்புகிறேன்.

எலெக்டிரிசிட்டி பில்களைத் தயாரிக்கும் வேலையை மெஷின்கள் மூலமாகச் செய்யவேண்டுமென்று ஏறத்தாழ நூறு மெஷின்கள் ரூ. 15 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு அவை உபயோகிக்கப் படாமல் ஐடிலாக இருக்கின்றன. அவைகள் ஏன் தேங்கிக் கொண்டு இருக்கவேண்டும்? மெஷின்களுக்கு இவ்வளவு இன்வெஸ்ட் பண்ணியிருக்கிறோம். அந்தக் காப்பிட்டல் ஏன் ஐடில் ஆக இருக்க வேண்டும்? அந்த மெஷின்கள் இயங்காமலிருக்க என்ன காரணம்? ஆகவே, இன்றைக்குப் புரட்சித் தலைவர் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்பவர்கள் இதுபோன்ற நிர்வாகத் தவறான காரணங்களுக்கு என்ன காரணம் என்பதை விளக்கவேண்டும். அதையும் அமைச்சரவர்கள் விளக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதே போல், அடுத்த பிரச்னை, இங்கே எங்களுடைய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். மின்சார வாரியத் தொழிலாளர்களுடைய போராட்டத்தைப் பற்றி அவர்கள் இங்கே சொன்னார்கள். நான் தலைவரவர்கள் மூலமாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை.)

மின்சார வாரியத் தொழிலாளர்கள் தீபாவளி அட்வான்ஸ் வேண்டுமென்று போராடினார்கள். அப்படிப் போராடும்போது, அந்தத் தீபாவளி அட்வான்ஸ் தர அரசுத் கஜானாவில் பணம் இல்லை. நிதிநிலை வசதியில்லை என்று காரணம் கூறப்பட்டது. ஆனால், ரம்சான் பண்டிகைக்கு, முஸ்லிம் சகோதரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

* * * * *

எங்களுடைய காலத்திலும், திராவிட முன்னேற்றக் கழக காலத்திலும் போனஸ் கொடுக்கப்பட்டது, சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது. மன்னிக்க வேண்டும். எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நாம் போனஸ் கொடுத்தோம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (பிற்பகல் 12-12) அகற்றப்பெற்றது.



சம்பளத்தை உயர்வாகக் கொடுத்தோம். இருந்தும் கூட, தீபாவளி அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது.

* * * * * *

ஆனால், அகில இந்திய அண்ணா தி.மு.க. தொழிலாளர்களுக்காகவே பிறப்பெடுத்த ஒரு இயக்கம் என்று சொல்லப்படுகிறது. தீபாவளி பண்டிகையின்போது, தொழிலாளியினுடைய மனைவி, புடவை வேண்டுமென்று கேட்கிறார். குழந்தை சட்டை வேண்டுமென்று கேட்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்:

* * * * * * * * * * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): உறுப்பினரவர்கள் இதில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை. சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது குறுக்கிடக்கூடாது என்றுதான் இருந்தேன். இருந்தாலும் சில தவறான தகவல்கள் அவைக்குக் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். ரம்சான் முஸ்லிம்களுக்காகவும் ஓணம் பண்டிகை மலையாள—கேரள சகோதரர்களுக்காகவும்— இந்த விழாக்களுக்குத் 

* * *

தரலாம், அதே நேரத்தில் தீபாவளிக்கு தரக்கூடாது என்று சொல்லலாமா என்று கேட்டார்கள். நிலைமை என்னவென்றால், எந்தப் பண்டிகைக்கும் முன்பணம் வாங்கிக் கொள்ளலாம். இதிலே வேடிக்கை என்னவென்றால், தீபாவளிக்கு முன்பணம் வேண்டுமென்று சொன்னவர்களில் பெரும்பாலானவர்கள் ஓணம் பண்டிகைக்கு முன்பணத்தைப் பெற்றுவிட்டார்கள். வாரியத்தினுடைய உத்திரவுப்படி யார் வேண்டுமானாலும்,

* * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (பிற்பகல் 12-07) அகற்றப்பெற்றது.

**திரு. ஏ. ரகுமான்கான் :** * *
ஆகையினால்தான் சில இடமாற்றங்கள் நடந்திருக்கின்றன என்பது உலகறிந்த விஷயம். என்னைப் பொறுத்தவரையில், குறிப்பாக, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது ஏற்கனவே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தீபாவளிக்காக . . .

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, *

* * *

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** * * * உறுப்பினர் சீக்கிரம் முடித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* * * * *

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையில்லாமல் இந்திரா காந்தியின் பெயரை இந்த விவாதத்தில் இழுத்திருக்கிறார். இந்தச் சபையில் பேசியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போது எலெக்டிரிசிடி பட்ஜெட் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. எலெக்டிரிசிடி போர்டு நம்முடைய மாநில அரசினுடைய அதிகாரத்தின் வரம்பிற்குட்பட்டது. இதற்கு முன்னாலே நடந்தது பிரிடேன்ட் ரூல். ஆகவே ஸ்டேட் கவர்ன்மென்டு சப்ஜெக்ட். வேண்டுமென்றே இந்திரா காந்தியை அவமானப்படுத்துவதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி பேசுவதை ஆட்சேபிக்கிறேன். தலைவர் அவர்கள் இதனைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது * * *

* * * * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (பிற்பகல் 12-12) அகற்றப்பெற்றது.



* * *

**திரு. மு. அரங்கநாதன் :** * * * * *

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடியப்போகிறது. சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. சி. ஆறுமுகம் :** * * யார் என்பதை நாடு பார்த்துக் கொண்டு இருக்கிறது.

(கூச்சல், குழப்பம்.)

* *

**திரு. சி. ஆறுமுகம் :**

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Thiru A. Rahmankhan : I am entitled to give personal explanation on the comments made by me. I am responsible for the words used by me. I may request the Chair to permit me to explain the statement which I made on the floor of the House.

**திரு. ஆர். உமாநாத் :** பாயின்ட் ஆப் ஆர்டர். நண்பர் எஸ். ஆர். இராதா ஒன்றைக் குறிப்பிட்டார். அது சீரியஸான விஷயம்தான். அதாவது அந்தப் பண்டிகை முன்பணத்தைப் பற்றிக் கேட்கிறபோது ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார். அந்த * * இங்கே அப்படி அனுமதிக்கப்பட்டால், அதைப்போல் கேரளாவில் * * இருக்கும் சபையிலும் அதனுடைய ரியாக்ஷன் இருக்கும். அந்த வார்த்தையை மட்டும் குறிப்பில் இருந்து எடுத்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

(திரு. ப. உ. சண்முகம் எழுந்தார்.)

* *

**திரு. மு. அரங்கநாதன் :**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தலைவர் எழுந்து நிற்கிறபோது நீங்கள் பேசுவது முறையா? உட்காருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (பிற்பகல் 12-16) அகற்றப்பெற்றது.

திரு. மு. அரங்கநாதன் : *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரங்கநாதன், நீங்கள் இப்படி நடந்து கொண்டால் நான் விதிகளைப் பயன்படுத்த வேண்டி இருக்கும். உங்கள் கட்டுப்பாட்டைக் காட்டுங்கள். தலைவர் எழுந்தால் உட்காருங்கள்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர்களின் உணர்ச்சியை நான் மதிக்கிறேன் * *

நான் கேட்கவிரும்புகின்ற ஒரு சின்ன சந்தேகம். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, என்னவோ பண்டிகைக்கு பணம் வாங்கினார்களாம், தீபாவளிப் பண்டிகைக்கு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னார்களாம் என்று பொருள்பட சொன்னார்களா? ஓணம் பண்டிகைக்கு பணம் வாங்கியவர்கள் தீபாவளிக்கு வேண்டும் என்று போராட்டம் நடத்தி உள்ளே போனார்கள் என்று சொன்னார்களா? அப்படி சொல்லவில்லையென்றால், நான் என்னைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, பண்டிகை முன்பணம் வேண்டும் என்று கேட்டதற்கு கொடுக்கப் பட்டதா, கொடுப்பதற்கு தயாராக இருந்ததா, கொடுத்தார்களா என்பதுதான் பிரச்னை. இதில் ஓணம் பண்டிகையைப் பற்றியோ, தீபாவளிப் பண்டிகைக்கு பணம் கேட்டதைப் பற்றியோ அல்ல, பண்டிகை முன்பணம் கேட்டார்களே, கொடுத்தார்களா இல்லையா என்பது தெரியவேண்டும். எதைப்பற்றி போராட்டம் நடத்தினார்கள், அதைப்பற்றி அமைச்சர் விளக்கம் தரவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் சொன்னது வேறு. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது ஒவ்வொரு பண்டிகையாகக் குறிப்பிட்டு, அந்தப் பண்டிகைக்கு உரியவர்களுக்கு எல்லாம் முன்பணம் கிடைத்தது, ஆனால் தீபாவளிக்குக் கிடைக்கவில்லை என்று குறிப் பிட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் ஒருவர் ஒரு பண்டிகைக்கு



(பிற்பகல் 12-20)

என்று பணம் வாங்கலாம். ஆகவே, ரம்ஜானுக்குக் கூட இந்துக்கள் வாங்குவதற்கு இப்போது வழியிருக்கிறது. ஆகவே, இந்தப் பண்டிகை முன்பணம் இன்னார்தான் வாங்க வேண்டுமென்ற வரைமுறை இல்லை. ஆகையால், அதைக் குறிப்பிட்டுவிட்டு ஓணம் பண்டிகைக்கு ஒரு சாராருக்கு முன்பணம் கிடைத்தது எங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற உள்நோக்கத்தோடு வருகிறபோது, தீபாவளி முன்பணத்திற்குக் கோரிக்கை எழுப்பி அதற்காகப் போராட்டம் நடத்தியவர்களில் கூட ஏற்கனவே ஓணம் பண்டிகை முன்பணத்தை பெற்று விட்டார்கள் என்பதைத் தான் குறிப்பிட்டேன். ஆகவே, மின் வாரியத்தில் இருக்கிற விதிகளைப் பற்றி எடுத்துச் சொன்னேன். அங்கத்தினர் வேறு ஒரு நோக்கத்தைக் கற்பித்து அதை எடுத்துச் சொன்னார். அந்த நோக்கம் சரியல்ல என்பதுதான் சட்டமன்றத்தின் முன்புள்ள பிரச்னை.

திரு. ப. உ. சண்முகம் : நான் மீண்டும் குறிக்கிடுவதற்கு மன்னிக்கவும். நண்பர் ரகுமான்கான் ஓணம் பண்டிகைக்கு பணம் கொடுத்தார்கள், முஸ்லிம் பண்டிகைக்கு பணம் கொடுத் தார்கள், தீபாவளிப் பண்டிகையின்பொழுது பணம் கேட்கிறவர்கள் வாங்காதவர்கள்தான் கேட்க முடியும் என்பது சட்டம். அப்படிக் கேட்டவர்களுக்கு ஏன் முன்பணம் கொடுக்கப்படவில்லை என்பது தான் கேள்வி. ஓணம் பண்டிகைக்குக் கொடுக்கப்பட்டது, ரம்ஜான் பண்டிகைக்குக் கொடுக்கப்பட்டது, தீபாவளிப் பண்டிகைக்கு ஏன் கொடுக்கவில்லை, அதற்கு என்ன காரணம், அதற்காகப் போராட்டம் வந்து அதில் யார் கலந்து கொண்டார்கள் என்பதெல்லாம் வேறு பிரச்னை. தீபாவளிப் பண்டிகைக்கு முன் பணம் கொடுக்கவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு. அதைத்தான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் சொன்னதுபோல் சொல்லியிருந்தால் பரவாயில்லை. ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. ஒரு சிலருக்கே வேண்டுமென்று பண்டிகை முன்பணம் கொடுத்து விட்டு அதுவும் யார் என்று அவர்களைப் பார்க்கிறபொழுது ஒரு வர்க்கத்திற்கு என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இன்னொரு

[திரு. ச. இராமச்சந்திரன்] [1977 டிசம்பர் 28

பண்டிகைக்கு வேண்டுமென்றே கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள் என்பதுதான் ஒரு பெயருடன் இன்னொரு பெயரை ஒப்புநோக்கி அவர் சொன்ன குற்றச்சாட்டு.

* **திரு. க. அன்பழகன் :** அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் ஒரு பண்டிகையை இன்னொரு பண்டிகையோடு ஒப்பு நோக்குகிறார்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். ஒப்பு நோக்கியது பண்டிகைகளை அல்ல; பண்டிகைக் காலத்தைத் தான். தீபாவளிப் பண்டிகை காலத்தில் தர மறுத்தார்கள். வேறு பண்டிகை வருகிறபொழுது கொடுத்தார்கள் என்று சொல்லி, தீபாவளிக்கு முன்பணம் மறுக்கப்பட்டு போராட்டம் ஏற்பட்ட தற்கு விளக்கம் சொன்னார்கள். ஒரு பண்டிகையின்போது ஒரு காலக் கட்டத்தில் யாருக்கு வேண்டுமானாலும் முன்பணம் கொடுக்கலாம் என்று சட்டம் இருந்தால் அந்தச் சட்டம் தவறு. யாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறை இருக்க வேண்டும். யார் அந்த விழாவினைக் கொண்டாடுவதற்கு உரியவர்களோ, அவர்கள் தான் அதைக் கேட்கவேண்டுமென்ற முறை இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் தீபாவளி வருகிறபொழுது, ஏராளமானவர்கள் முன்பணம் கேட்கிறபொழுது மறுக்கப்பட்டது. இந்த வாரியத்தின் தவறான முறை காரணமாக போராட்டம் தோற்று விக்கப்பட்டதை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்ளவேண்டும். * என்ற வார்த்தையைச் சொல்லிவிட்டு தவறான அர்த்தம் வந்து விட்டது, அதனால் தவறான குறிக்கோளுக்குக் கொண்டு போகும் என்று சொன்னார். சொல்லைப் பொறுத்தவரையில் * என்பதற்கு இழிவான பொருள் கிடையாது. * என்ற சமஸ்கிருதச் சொல்லின் வழியில்தான் * என்ற சொல் வந்திருக்கிறது. நான் சமஸ்கிருதம் படிக்காவிட்டாலும் * சொல்லளவில் எந்தவிதமான தவறும் இல்லை. அதை மறுக்க என்று இன்னொரு தொடர்போடு ஆளும் கட்சி உறுப்பினர் கூறியது பதிவாகியிருக்கிறது. அவைத் தலைவர் அவர்கள் கருத்து விளக்கம் கொடுக்காவிட்டாலும், கருத்துக்குச் சம்பந்தம் இல்லாத சில தவறான வார்த்தைகளை நீக்கலாம். * * என்ற வார்த்தையைச் சேர்ப்பது அவையின் தரத்திற்கு ஏற்றதல்ல என்று கருதுவதால் அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும்பொழுது * * * அதேபோல் * என்ற வார்த்தையையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறிப்புகளைக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். அவைகளைப் பார்த்துவிட்டு பிறகு தீர்ப்பு கொடுக்கிறேன். உறுப்பினர் மேலும் பேசுவதற்கு அனுமதிக்க மாட்டேன், 25 நிமிடம் பேசியிருக்கிறார். மூன்று மூலைகளிலிருந்து வருகிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பற்றிப் பேசியது, முன்னாள் முதல் அமைச்சர் அவர்களைப் பற்றிப் பேசியது, * என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியது— இவைகளைப் பற்றி, நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்தச் சொற்களை மட்டும் எடுப்பதா, அவற்றை மட்டும் எடுத்தால் எப்படிக் கோர்வை வரும் என்பதை நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துத்தானே சொல்ல முடியும். அந்த வார்த்தைகளை மட்டும் எடுப்பதா, அல்லது ஆரம்பித்ததிலிருந்து மொத்தமும் எடுக்க வேண்டுமா, எதை எதை எடுக்கவேண்டும் என்று குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். அதுவரையில் தயவுசெய்து இது பற்றி பத்திரிகைகளில் வெளியிடாமல் இருக்க வேண்டும். இன்னும் ஐந்து நிமிடங்களில் குறிப்புகளை வரவழைத்து, பார்த்து, சொல்ல இருக்கிறேன். திரு. ரகுமான்கான் இத்துடன் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. இதே மின்சார நிதிநிலை அறிக்கை மீது பேசுகிறபோது பேசிய குறிப்புகளைக் கொண்டு வந்திருக்கிறேன். இது முக்கியமான பிரச்னை. ஆகவே நேரத்தைக் குறிப்பிட்டு பேசாதீர்கள் என்று சொல்வது நல்ல மரபாகாது என்று சொல்லியிருக்கிறீர்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1977 டிசம்பர் 28] [திரு. க. அன்பழகன்]

[1977 டிசம்பர் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பதினைந்து நிமிடங்கள் என்பது இருபது நிமிடங்கள் அல்லது இருப்பத்தைந்து நிமிடங்கள் என்றால் சரி. ஆனால் அதற்காக ஒரு மணி நேரம் கொடுப்பது என்பது மரபு அல்ல.

**திரு. ஏ. ரகுமான்கான் :** குறுக்கீடுகள் வந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்கள் பேச்சில் குறுக்கீடுகள் வருவது என் குற்றம் அல்ல. நான் பதினைந்து நிமிடங்கள் அதிமாகவே தந்திருக்கிறேன். கேட்பவர்களுக்குக் கூடுதல் ஐந்து நிமிடங்கள் சேர்த்தே கொடுக்கிறேன். நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். மற்றவர்கள் உரிமை பாதிக்கப்படக் கூடாது. தயவு செய்து முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** தங்களுக்கு எதிர்ப்பு சொல்வதாகக் கருதக்கூடாது. தங்கள் கட்டளைக்கு அடிபணிகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்னை. குறுக்கீடுகள் பல நடைபெற்றுவிட்ட காரணத்தால் அருள்கூர்ந்து எனக்கு ஒரு ஐந்து நிமிடங்கள் அதிகம் கொடுக்கவேண்டும். சொல்லவேண்டிய பல காரியங்களைச் சொல்லவில்லை. குறுக்கீடு நேரத்தையும் சேர்த்து கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுக்கீடு நேரத்தையும் உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தோடுதான் சேர்த்துக்கொள்ள வேண்டும். திரு. வி. கே. கோதண்டராமன்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** குறுக்கீடுகள் பற்றி ஒரு ரூலிங் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நேரத்தோடு குறுக்கீடுகளுக்காகும் நேரமும் சேரும். குறுக்கீடுகளுக்கான நேரம் அதோடு சேர்க்கப்பட்டது தான்.

**திரு. ஏ. ரகுமான் கான் :** அப்போது யார் வேண்டுமானாலும் குறுக்கிடலாம்.



1977 டிசம்பர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுக்கீடுகள் என்றால் சொன்னார்கள். உங்கள் தலைவர்கள் கூட குறுக்கிட்டு விளக்கம் யாரையும் பிரித்துச் சொல்ல நான் தயாராயில்லை.

**திரு. ஏ. ரகுமான்கான் :** நான் ஒரு ரூலிங் கேட்கிறேன். ஒரு உறுப்பினர் பேசுகிறபோது குறுக்கிடுகிற நேரத்தையும் கழித்துக் கொள்வீர்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சேர்த்துக் கொள்ள ஒரு உறுப்பினருக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கியிருந் வேண்டும். ஒரு உறுப்பினருக்கு குறுக்கீடுகள் வந்தாலும் அது என் தால் அதில் எவ்வளவு குறுக்கீடுகள் வந்தாலும் அது என் பொறுப்பு அல்ல. அடுத்த உறுப்பினருடைய உரிமை பறிக்கப் படுகிறது.

**திரு. ஏ. ரகுமான்கான் :** குறுக்கிடலாம், அனுமதிக்கிறீர்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின்மீது பேசக்கூடிய இந்த நேரத்தில் நாம் மிகப் பெரிய அளவில் இதில் கவனம் செலுத்தக்கூடிய நிலைமையில் இருக்கிறோம் என்பதைப் பற்றி ஒரு சில விஷயங்களை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் போதுமான அளவிற்கு மின்சாரம் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம், சர்க்காருக்கும் தெரிந்த விஷயம். இருந்தபோதிலும் இன்றைக்கு, இருக்கக் கூடிய சூழ்நிலையில் எந்த அளவிற்கு அதிகப்படியாக மின்சாரம் உற்பத்தி செய்யமுடியுமோ அந்த அளவிற்கு உற்பத்தி செய்ய அரசாங்கம் தீவிரமாக முயற்சி எடுக்க வேண்டும். அது அனல் மின்சாரமாக இருந்தாலும் சரி அல்லது நீர் மின்சாரமாக இருந் தாலும் சரி அல்லது நவீன முறையில் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டு அது ஆரம்பிக்கப்படப் போவதாக சொல்லப்படுகிறது, அதுவாக இருந்தாலும் சரி, எந்த முறையாக இருந்தாலும் சரி இன்று நமக்கு அதிகப்படியான மின்சாரம் தேவை. இவ் விஷயத்தில் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். பக்கத்து மாநிலங்களிலிருந்து வாங்கி விடுகிறோம், நமக்குத் தேவையானது கிடைத்து விடுகிறது என்று கவனக்குறைவாக

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1977 டிசம்பர் 28

இருந்துவிடக் கூடாது. காரணம், 1974-ம் ஆண்டு வரை காவிரி நீரை நம்பியிருந்தோம் அந்த ஒப்பந்தப்படி. தண்ணீர் பிரச்னை யாக இருந்தாலும் சரி அல்லது மின்சாரப் பிரச்னையாக இருந் தாலும் சரி நம் காலில் நிற்கக்கூடிய அளவிற்கு, நம்மை நாமே நம்பி நிற்கக்கூடிய விதத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் கவனம் செலுத்தியாகவேண்டும்.

(பிற்பகல் 12-30)

கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்றைக்கு மின்சார இணைப்பு கொடுப்பதில் விவசாயிகளில் 50 ஆயிரம் பேர்களுக்கு கொடுக்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றி, ரொம்ப சந்தோஷம். நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவதெல்லாம் தஞ்சை மாவட்டத்திற்கு சரி சமமாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். இந்த மாவட்டத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடவில்லை. டாம் ஒன்று இருக்கிறது இதிலிருந்து 10 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் பாயக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்திற்கு சரி சமமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இந்த மாவட்டம் முன் நிற்கிறது என்றால் அதற்கு காரணம், தமிழ் நாட்டில் எட்டு லட்சம் பம்புசெட்டுகளுக்கு சர்வீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதில் 20 சதவிகிதம் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் இருக்கிறது. அதிலும் 20 முதல் 25 சத விகிதம் பம்புசெட்டுகள் குடியாத்தம் தாலுகாவில் இருக்கிறது. மூன்றரை லட்சம் கிணறுகள் இருக்கின்றன என்றால் இந்த மாவட்டத்தில் ஒன்றரை லட்சம் கிணறுகளுக்கு மட்டும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற கிணறுகள் எல்லாம் மாட்டை வைத்து இறைத்து தண்ணீர் எடுக்கக்கூடிய சூழ்நிலை தான் இருக்கின்றன.

சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளப்பெருக்கு காரணமாக எவ்வளவோ ஆடு, மாடுகள் எல்லாம் இறந்து போனது பற்றி நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாடுகளின் விலை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு மோட்டார் வாங்குவதாக இருந்தாலும் சரி, மாடுகள் வாங்கு



[1977 டிசம்பர் 28 [திரு. வி. கே. கோதண்டராமன்]

வதாக இருந்தாலும் சரி, ஏராளமான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. நான் சொல்லாமலேயே அமைச்சர் அவர் களுக்கு இது நன்றாகத் தெரியும்.

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் ஆற்றுத் தண்ணீர் பாய்ச்சி உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிக்கும், இப்படி இறவைப் பாசனத்தின் மூலம் விவசாயம் செய்யக்கூடிய விவசாயிக்கும் ஒரே மாதிரியாகத்தான் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். 10, 12 என்று இருந்ததை இப்போது இரண்டு ரூபாய் குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். கோயம்புத்தூர், வட ஆற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் 10 ஆயிரம் செலவு செய்து கிணறுகள் வெட்டி, பம்பு செட் அமைத்து, அதுவும் கிணறு வெட்டும்போது, பாறைகள் இருந்தால் வெடி மருந்து வாங்கி—அதுவும் கள்ள மார்க்கெட்டில் வெடி மருந்து அதிக விலை கொடுத்து வாங்கி— வெடி வைத்து தோண்டி எடுத்து, கிணறுகளை வெட்டி, அதற்கு மிகவும் கஷ்டப்பட்டு மின்சார இணைப்பு வாங்கி, இதன் மூலம் விவசாயம் செய்து உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு என்ன விலையோ அதே விலை தான், ஆற்றுத் தண்ணீர் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கும் ஒரே விலை என்றிருப்பது, சரிதானா, நியாயம் தானா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாய அமைச்சர் அவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும், மின்சார இலாகா அமைச்சர் அவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு, 500, 1,000 என்று செலவு செய்துவிட்டு, அதில் கிடைக்கின்ற நெல்லுக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறது? இதைப் பார்த்தால் எந்த விவசாயி தான் போராடாமல் இருக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, விவசாயிகளுடைய இப்படிப்பட்ட பிரச்னைகளை பரிசீலனை செய்து பார்ப்பதற்கு ஏதாவது கமிட்டி போடவேண்டும் என்றால், அப்படி போடப்படுகின்ற கமிட்டி யிலும் பெரிய மிராசுதார்களைப் போடுகிறீர்கள், அல்லது மிராசு தார்களுக்கு ஆதரவாக இருக்கின்றவர்களை போடுவீர்கள். மார்க்சிஸ்ட் விவசாய சங்கத் தலைவர் என்று யாராவது இருந்தால் அவரைப் போடுவதற்கு மனது வராது. தி.மு.க. சர்க்காரில்

என்ன செய்து கொண்டிருந்தார்களோ அதையே தான் நீங்களும் செய்கிறீர்கள். ஆகவே இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நல்ல முறையில் விவசாயிகளிடையே எந்த விதமான குழப்பமும் இல்லாமல் இருக்க வேண்டுமென்றால், கிளர்ச்சி வராமல் இருக்க வேண்டுமென்றால், தி.மு.க. வோடு சேர்ந்து கொண்டார்களே என்று சொன்னால் மட்டும் போதாது, விவசாயிகளைப் பொறுத்தவரையில், தி.மு.க. மனசு உள்ளவர்களும் இருப்பார்கள், இந்திரா காங்கிரஸ் மனசு உள்ளவர்களும் இருப்பார்கள், ஜனதா மனசு உள்ளவர்களும் இருப்பார்கள், அதே போன்று அ.தி.மு.க. மனசு உள்ளவர்களும் இருப்பார்கள், அதிலுள்ளவர்கள் கண்டிக்காமல் இருப்பார்களா? அவர்களுடைய கோரிக்கை என்று வரும்போது, ஒன்று சேர்ந்து போராடத்தான் செய்வார்கள் என்ற அடிப்படையில் இந்த நிலைமைகளை கண்டிப்பாக சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அலுமினியம், கெமிக்கல்ஸ், சிமின்ட் போன்ற தொழிற்சாலைகளுக்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு பைசா, இரண்டு பைசா என்று போடுகிறார்கள். அவர்கள் ஏராளமான மின்சாரத்தை பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அலுமினியத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், ஏராளமாக கோடிக்கணக்கில் ரூபாய் இலவசமாகக் கொடுப்பதாக சொல்லப்படுகிறது. இவர்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய் வசூல் செய்யாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது. விவசாயியிடம் பாக்கி வந்து விட்டால் உடனேயே மின் இணைப்பை கழற்றிவிடக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. இது சரியான முறைதானா என்பதை சற்று யோசிக்கவேண்டும். அவர்களால் நடத்த முடியவில்லை என்று சொன்னால், அதைச் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும். அப்படியில்லாமல், அவர்கள் நிறைய மின்சாரம் பயன்படுத்துகிறார்கள், ஏற்கனவே அக்ரிமெண்ட் செய்யப்பட்டிருக்கிறது, அந்த ஒப்பந்தத்தை மீற முடியாது என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? அவர்களுக்கு யூனிட்டுக்கு 1 பைசா, 2 பைசா என்று கொடுத்தும், அதை அவர்கள் கட்டவில்லை என்று சொன்னால், அதிலும் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பணத்தை வசூல் செய்யாமல் வைத்து விட்டு, கடைசியில் அது பாப்பர் ஆகிவிட்டது; அவர் செத்துப் போய்விட்டார்; ஓடிப் போய்விட்டார்; அதனாலே தள்ளுபடி



செய்யப்பட்டது என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டாம். அது தொடர்ந்து 30 வருஷங்களாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது, ஆகவேதான் இப்படியெல்லாம் செய்யப்படுகின்றது என்று அதற்கு இடம் கொடுக்காமல், திட்டவட்டமாக நல்ல முறையிலே இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, இந்த விவசாயிகளுக்கு மின்சார கட்டணத்தை யாருக்கு குறைக்கவேண்டும், யாருக்கு குறைக்கக் கூடாது என்பதிலே தெளிவாக சிந்திக்க வேண்டும். ஏற்கனவே ஒரு கேள்வி போடப்பட்டு, சாதாரண கீழ்த் தட்டிலே உள்ள ஏழை விவசாயிகளுக்கு 2 பைசா குறைக்கிறோம் என்று சொன்னார்கள். அது பாராட்ட வேண்டிய விஷயம்தான். ஆனால், விவசாயப் பொருட்களின் விலையோ ஏறிக்கொண்டே போகிறது. விவசாயிக்கு என்னென்ன அத்தியாவசியப் பொருள்களோ, அவைகளின் விலைவாசி தவிர்க்கமுடியாத அளவுக்கு ஏறிக் கொண்டு போகக்கூடிய நிலையிருக்கிறது. இந்த விலையில் பொருட்களை வாங்கி, அவர்கள் உற்பத்தி செய்து, அப்படி உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால், அந்த விவசாயி சீராகக்கூடிய ஒரு நிலைமையை நம்மால் ஏற்படுத்த முடியுமா என்பதைத்தான் நான் இந்த அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இதை நன்கு சிந்திக்க வேண்டும். ஏற்கனவே இருந்த அரசு, இதற்கு பதில் சொல்ல முடியவில்லை. இந்த அரசும் பதில் சொல்ல முடியாது. என்ன பதில் சொல்ல முடியும்? ஏதாவது பதில் சொல்லலாம். ஆனால், அது பொறுப்பான பதிலாக இருக்கவேண்டும். அந்த விவசாயி ஏற்றுக்கொள்ளக் கூடிய, இந்த அவையிலே உள்ள அங்கத்தினர்கள் ஏற்கக்கூடிய தன்மையுள்ள பதிலாக இருக்க வேண்டும்.

சும்மா தண்ணீர் பாய்ச்சி உற்பத்தி செய்யக்கூடிய பயிருக்கு என்ன விலை இருக்கிறதோ, அதே விலை ஆயிரக்கணக்காக, லட்சக் கணக்காக முதல்போட்டு கிணற்றைவெட்டி, மின்சார கட்டணம் கட்டி, அதன்மூலம் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பொருளுக்கும் அதே விலை என்று சொன்னால் எப்படிப்

பொருந்தும்? அதற்கும் ஒரே விலை, இதற்கும் ஒரே விலை என்று சொன்னால் முறையா? சாதாரணமாக குருடனுக்குகூட இது தெரியும், அவனால் புரிந்துகொள்ள முடியும். எனவே, இது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தது, இந்த முனிசிபல் ஏரியாக்களிலே உள்ள பல முனிசிபாலிடிகளுக்கு இன்றைக்குப் பண வசதியில்லை, பஞ்சாயத்துக்களும் அப்படியிருக்கலாம். அந்த மாதிரி இடங்களில் லைட்டிற்கான பணத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் எப்படி முடியும்?, சமீபத்தில் புதிதாக ஒரு உத்தரவு போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த உத்தரவு என்னவென்றால், இனிமேல் லைட்டுகள், பல்புகள், டியூப் லைட்டுகள் பியூஸ் ஆனால், அந்தந்த முனிசிபாலிடிகளோ, அல்லது அந்தந்தப் பஞ்சாயத்துக்களோ புதிதாக தாங்களே போட்டுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அங்கே பணம் இருந்தால் தானே, புதிதாக வாங்கிப் போடமுடியும். எனவே, இருட்டு அதிகரித்து, திருட்டுத்தனம் ஜாஸ்தியாகி, இந்த சர்க்காரில் கொலை, கொள்ளை போன்றவைகள் அதிகரித்து, சர்க்காருக்கு கெட்ட பெயரை உண்டாக்கக்கூடிய நிலைமைக்கு கொண்டு போய் விடும். எனவே, அங்குள்ள லைட்டுகளை சர்க்காரே தொடர்ந்து போடவேண்டும் என்கின்ற அடிப்படையிலே ஒரு உத்தரவைப் போடவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, சமீபத்திலே மின்சாரத் தொழிலாளர்கள், தங்கள் நியாயமான உரிமைக்காக போராட்டம் நடத்தினார்கள். நான் அந்தப் பிரச்னைப் பற்றி பேசவில்லை. அதைப் பற்றிப் பேசுவதானால், மணிக்கணக்கில் ஆகும். அவர்களில் பல பேர்கள் அரஸ்ட் செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டார்கள். பின்னால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதேபோல் பலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அதிலே பல பேர்களின் சஸ்பென்ஷன் உத்தரவு கான்சல் செய்யப்பட்டது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால், ஒரு சிலர், ஒரு சில தொழிலாளர்கள், ஊழியர்கள் இன்னும் சஸ்பென்ஷனிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்



பார்க்கும்போது, அவர்களை பழிவாங்கக்கூடிய நிலையிலே அந்த மாதிரி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

நான் சொல்வதெல்லாம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவனா அல்லது தி. மு. க. வைச் சேர்ந்தவனா அல்லது வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற அளவுக்குப் பாகுபாடான கண்ணோட்டத்தை விட்டு விட்டு எல்லோர் பேரிலும் இப்போது போடப்பட்டிருக்கும் சஸ்பென்ஷனை கான்சல் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். ஆயிரக் கணக்கான பேர் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு, ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அது சரியல்ல. அவரவர்கள் எந்தெந்த இடத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்களோ அந்தந்த இடத்திற்கே மீண்டும் அவர்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

50,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் தெரிந்த வரையில் இன்னொன்றும் சொல்லப்படுகிறது. யார் எல்லாம் லோன் வாங்கியிருக்கிறார்களோ அப்படி லோன் வாங்கியவர் களுக்கு மட்டுந்தான் இணைப்புக் கொடுக்கப்படும் என்ற அளவிற்கு சொல்லப்படுகிறது. அந்த மாதிரி லோன் வாங்கியவர்களுக்கு மட்டுந்தான் மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்பதை விட்டு விட்டு கீழ்த்தட்டில் இருக்கும், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே, மனுக் கொடுத்திருக் கிறார்கள். பரிசீலனை செய்யப்படும் என்று இருக்கிறது. பரிசீலனை செய்யப்படாமல் கைவிடப்பட்டதும் இருக்கிறது. யாரெல்லாம் மனுக் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1977 டிசம்பர் 28

கெல்லாம் மின் இணைப்புக் கொடுப்பதற்கான உத்தரவைப்
பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
மின்சார ஊழியர்கள் மீது போடப்பட்டிருக்கும் வழக்குகளை
வாபஸ் பெற வேண்டும். மாற்றங்கள் செய்திருப்பதை மாற்றி
ஏற்கனவே அவர்கள் இருந்த இடத்தில் போட வேண்டுமென்று
தாழ்மையோடு கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை
முடித்துக்கொள்கிறேன்.

*திரு. செ. வீ. சவுந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1977—78 ஆம் ஆண்டுக்கான மின்சார
வாரியத்தின் மீதான நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்
களைக் கூற விரும்புகிறேன். பல பேர்கள் கருத்துக்களைக்
கூறினார்கள். இந்தக் கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து அரசுத்
தரப்பில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஏனென்றால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பல கருத்
துக்கள் கூறப்பட்டும் தீர்மானமாக அனுப்பியும் எந்தவிதமான
நடவடிக்கையும் இல்லாமல் இருக்கிறது. ஆகவேதான் இங்கு பேசப்
படும் கருத்துக்கள் மீது அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கை
எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நகரங்களாக இருந்தாலும் சரி, பேரூராட்சிகளாக இருந்
தாலும் சரி அல்லது கிராமங்களாக இருந்தாலும் சரி, இவை
களில் வாழும் மக்களுக்கு தற்காலத்தில் மின்சாரம் மிகவும்
இன்றியமையாதது. நகரங்கள், பேரூராட்சிகள் தேவலாம்
என்ற நிலை இந்தக் காலத்தில்; ஆனால் கிராமங்களில் அப்படி
இல்லை.

திரு. ஏ. செல்லப்பன்: பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த ஆண்டு
டயரியில் 'அ. செல்லப்பா, அ. இ. தி. மு. க.' வலங்கிமான்" என்று
போடப்பட்டிருக்கிறது. நான் தி. மு. க. உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர்
அல்ல.

திரு. துரைமுருகன்: உறுப்பினர் சார்ந்த கட்சியே மாற்றப்
பட்டிருக்கிறது. இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையா?



1977 டிசம்பர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பிரிண்டிங் எரர்.
ஆங்கிலத்தில் சரியாக இருக்கிறது. இப்படியெல்லாம் கேள்வி
கேட்டு நேரத்தை வேண்டுமானால் வீணாக்கலாம்.

திரு. செ. வீ. சவுந்திரராஜன்: கிராமங்களிலுள்ள மின்விளக்
குகளைப் பார்த்தால்—கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம்
பண்ணியும் பிரம்மச்சாரி என்ற நிலையில்தான் இருக்கிறது. மின்
கம்பங்கள் இருக்கின்றன; மின்சார இணைப்புகள் இருக்கின்றன;
லைட்கள் எரிவதில்லை. அதனால் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள்
படுப்பாடு, அவர்கள் வாங்கும் பாட்டு கொஞ்ச நஞ்சமல்ல. அதற்
குக் காரணம் இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். பல்புகள்
வாங்குவதற்குப் பணம் இல்லை, பல்புகளைப் போடுவதற்கு
ஆட்களும் இல்லை, கிராமங்களிலே தனியாக லைன்மேன் என்று
ஒரு ஆள் வைத்துக்கொள்ளக்கூடிய பண வசதியில் பஞ்சாயத்
துக்கள் இல்லை. மின்சார வாரிய ஊழியர்கள்தான் பல்பு
மாட்டியாக வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்கள் அவர்களைப்
போய்க் கூப்பிட்டால் அவர்கள் வரமாட்டேன் என்கிறார்கள்.
அவர்கள் கையிலிருந்து கொஞ்சம் பணம் கொடுத்தால்கூட வர
மாட்டேன் என்கிறார்கள். பல தடவைகள் பல்புகள் போட
வேண்டும் என்று கேட்டுக்கொண்டும்கூட அவர்கள் போடுவது
இல்லை. ஊராட்சி ஒன்றியமோ அல்லது சர்க்காரோ கிராமங்
களிலே தனியாக இதற்காக ஒரு லைன்மேனைப் போட்டுவிட்டால்
அவ்வப்போது அவர்கள் வந்து இந்த வேலைகளைச் செய்து கொள்
வார்கள், கவனித்துக்கொள்வார்கள்.

மின்சாரக் கட்டணம் ஒன்றியத்திலிருந்து கட்டிவிடுகிறார்கள்,
கட்டிவிட்டு அந்த அந்தப் பஞ்சாயத்துக்களின் கணக்குகளிலே
அட்ஜஸ்ட் செய்து விடுகிறார்கள். இதனால் பஞ்சாயத்துக்கள்
ஒன்றியத்திடம் வேறு எதற்காவது பணம் வேண்டுமென்று
கேட்டால் அப்போது உங்கள் கணக்கில் பணம் இல்லை, எல்லாம்
அட்ஜஸ்ட் ஆகிவிட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். கிராமங்
களிலே பல இடங்களிலே ஏற்கனவே பல கம்பங்கள் நடப்பட்டி
ருந்தும் இன்னும் பல்புகள் போடப்படவில்லை. சில இடங்களிலே
மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. கிராமப் பஞ்சாயத்து
என்றால், அதிலே 4, 5 ஹேம்லட்ஸ் இருக்கும். அதிலே 2 ஹேம்
லட்களில் லைட் எரியவில்லை என்றால் பஞ்சாயத்துத் தலைவர்

அந்தப் பக்கம் போகிறபோது பொதுமக்கள் அவரைப் பேசுகிற பேச்சு அவர்களுக்குத்தான் தெரியும். எங்கள் பகுதியிலே உள்ள கிராமங்களிலே அரிசனங்கள் வாழும் பகுதிகள் எல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஜாதி இந்துக்கள் வாழும் பகுதிகளில் லைட் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அதே கிராமத்திலே அரிசனங்கள் வாழும் இடங்களில் லைட் வசதி செய்து தரப்படவில்லை. இப்படிப்பட்ட குறைபாட்டை நான் பல இடங்களிலே சுட்டிக்காட்டி இருக்கிறேன். இங்கேயும் இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். கிராமங்களிலே அரிசனங்கள் வாழும் பகுதிகளிலே சர்க்காரே அந்தச் செலவுகளை ஏற்றுக் கொண்டு மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் காலத்திலே லைட் போட்டிருக்கிறவர்கள் எல்லாம் பணக்காரர்கள் என்று சொல்லிவிட முடியாது. லைட் போட்டிருப்பவர்களில் பணக்காரர்களும் இருக்கிறார்கள், ஏழைகளும் இருக்கிறார்கள். எனவே லைட் போட்டிருக்கிறவர்கள் எல்லாம் பணக்காரர்கள் அல்ல, என்று கருதி இந்த மின் கட்டணத்தை குறைத்தாக வேண்டும். மின்சாரம் துண்டிக்கப்பட்டு பிறகு **Fuse** போடுவதற்கு முதல் வாரத்திற்கு 6 ரூபாய் என்றும் இரண்டாவது வாரத்திற்கு 12 ரூபாய் என்றும் இப்போது வாங்குகிறார்கள். அதைக் குறைக்க வேண்டும்.

மீட்டர் வாடகை 5, 6 வருடங்களுக்கு முன்பு மாதத்திற்கு 50 நயா பைசாவாக இருந்தது. இப்போது எங்கள் பகுதியிலே பார்த்தால் மாத வாடகை 2 ரூபாய் வாங்கப்படுகிறது. சில இடங்களில் 5 ரூபாய் வாங்குவதாகச் சொல்கிறார்கள். மொத்தத்தில் கணக்கு பார்த்தால் மீட்டர் கிரயத்தை விட அதிகமாகி விடும். அதைவிட, முன்பெல்லாம் டெபாசிட் என்றால் ஒரு மாத டெபாசிட்தான் இருந்தது. இப்போது 4 மாத டெபாசிட் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். 4 மாத டெபாசிட் கட்டியும் இருக்கிறார்கள். அப்படி டெபாசிட் தொகை இருக்கும் போதுகூட ஒரு மாதக் கட்டணம் செலுத்தவில்லை என்றால் ஏன் பியூஸை எடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதிகப் படியாக கட்டியுள்ள 3 மாத டெபாசிட் பணத்தைத் திருப்பித்தர ஆவன செய்யவேண்டும். மோட்டார் பம்ப் செட்டு பற்றி





இங்கே எல்லோரும் பேசினார்கள். எங்கள் பகுதி காவிரி டெல்டா பகுதி. அங்கே ஒரு நாள் தண்ணீர் பாய்ச்சினால் மறு நாள் தண்ணீர் இருக்காது. டிரை ஏரியாவிலே இருப்பது மாதிரி

(பிற்பகல் 12-50)

எங்கள் ஏரியாவில் இருக்காது. எங்கள் பகுதியிலே அடுத்த நாளே தண்ணீர் இருக்காது. கீழேபாறை ஒன்றுமில்லை. எவ்வளவு தூரம் தோண்டினாலும் மண், ஆஸ் சாயில்தான் இருக்கும். தண்ணீர் பாய்ச்சினால் உடனே உறிஞ்சிவிடும். எனவே, அங்கே மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். சாதாரண இடங்களிலே வசூலிக்கப்படுகின்ற அதே அளவிற்குக் காவேரி டெல்டாப் பகுதியிலேயும் மின்சாரக் கட்டணத்தை வசூலித்தால் அங்கேயுள்ள விவசாயிகளுக்குக் கண்டிப்பாக நஷ்டம்தான் ஏற்படும். எனவே, எங்கள் பகுதியில் மோட்டார் பம்ப் செட்டு களுக்கு மேலும் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டு மென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவரவர்களே, மின்துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பி னர்கள் பலரும் கூறியதைப்போல, பட்ஜெட் கூட்டத்திற்குப் பிறகு நம்முடைய மின்துறை அமைச்சரவர்கள் சிறிய விவசாயிகள் என்று சொல்லி 16 பைசாவிலிருந்து 14 பைசாவாகக் குறைத்ததாக அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே நன்றி தெரிவித்தாலும், நடுத்தர விவசாயக் குடும்பத்திற்கும் மின்சாரக் கட்டணத்தைக் கட்டாயம் குறைத்தாக வேண்டுமென்பதை நான் மெத்தப் பணி வன்புடன் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ நடுத்தர விவசாயிகள் எல்லாம் இரண்டு மூன்று பம்பு செட்டு களையோ அல்லது ஒன்றிரண்டு பம்பு செட்டுகளையோ வைத்திருப்ப வர்களெல்லாம், கிராமங்களிலே ஏதோ வசதியோடு வாழ்கிறார்கள் என்ற எண்ணம் நம்முடைய அரசுக்கு இருக்கக் கூடாது என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்றையதினம் விவசாயிகள் மெத்த கஷ்டப்பட்டுக் கொண்டி ருக்கிறார்கள். நம்முடைய அமைச்சரவர்கள்கூட, அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே மின்சாரத்துறை ஒரு யூனிட்டை இந்த அளவிற்குக் குறைந்த கட்டணத்தில்

கொடுப்பதில் கட்டுப்படியாகவில்லை, இருந்தாலும் நாங்கள் விவசாயிகளுக்காகக் குறைந்தக் கட்டணத்தில் தருகிறோம், அதனுடைய நிர்வாகச் செலவு அதிகம் ஆகிறது என்ற கணக்கைக் கொடுக்கிறார்கள். ஆனால் விவசாயி பயிரிடுகின்ற பொழுது அவன் மின்சாரத்தின் மூலம் இறைத்தாலும் ஆயில் இன்ஜின் மூலம் இறைத்தாலும் உரங்கள் வாங்கிப்போட்டு விவசாயம் செய்தாலும் ஒரு விவசாயிக்கு ஒரு மூட்டைக்கு என்ன விலை கட்டுப்படியாகும் என்பதை அரசாங்கம் யோசிக்காமல் விலையை நிர்ணயிக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமீப காலத்திலே பெய்த மழையின் காரணமாக விவசாயிகளுடைய மகசூல் பாதிக்கப்பட்டிருந்தாலும், அறுவடையாகும் நேரத்தில் நெல் விலையெல்லாம் குறைந்து விற்கும் நிலைமை இருந்து வருகிறது. அந்த வகையிலே விவசாயியின் உற்பத்தி என்பது கட்டுப்படியாகாமல் இருப்பதால் மின்சாரத் துறையின் நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் நம்முடைய அரசு மின் கட்டணத்தை நடுத்தர விவசாயிகளுக்கும் அல்லது மற்ற விவசாயிகளுக்கும் குறைத்துக் கொடுக்கின்ற திட்டங்களைச் செயற்படுத்த வேண்டுமென்று விவசாயிகளின் சார்பில் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று எல்லா உறுப்பினர்களும் கூறியதைப்போல மீட்டர் வாடகை என்ற பெயரால் அதிகமான கட்டணத்தை இன்றையதினம் மின்சாரத் துறையினர் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் அறவே ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் விவசாயிகளுக்கு எல்லாக் காலங்களிலும், எல்லா நேரங்களிலும் மின்சாரம் தருவது இல்லை. ஷிப்ட் முறையிலேதான் தருகிறார்கள். ஒருசில கிராமங்களில் மாறி மாறி வந்தாலும் இரவு நேரங்களில் மின்சாரம் கொடுக்கும் நிலைமை இன்று இருந்து வருகிறது. ஆனால் விவசாயிகள் சில நேரங்களில், வறட்சியான கிணற்றிலே தண்ணீர் குறைந்துவிடும் நேரத்தில் மின்சார



மோட்டாரைக் கீழே இறக்கி வைத்து இறைக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஆரம்ப காலங்களிலே, வெளியிலே ஒரு டாப் லைட் இருந்தது, அதை வைத்து அதை மின்சார கனெக்ஷனிலே போட்டு விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வசதியாக இருந்தது, அல்லது கீழே உள்ள மோட்டார் ஒயர் போன்ற சாதனங்கள் நெல் மணிகள் திருட்டு போகாமல் இருக்கவும் சில நேரங்களில் அந்த விளக்கைப் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் அதனால் மின்சாரத் துறைக்கு ஏதோ ஏராளமான நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது என்று கருதுகிற மின்சாரத் துறை அதிகாரிகள் இப்பொழுது அப்படிப் பட்ட லைட்டுகள் எல்லாம் போட அனுமதிப்பது இல்லை. ஆனால், உண்மையான நிலைமை என்னவென்றால், கிராமங்களிலே ஒயர் திருட்டுப் போய், அல்லது வெளியிலேயிருக்கிற பைப்புகள் எல்லாம் திருட்டுப் போய், அவர்கள் மெத்த சிரமப்படுகிற நிலைமைதான் இருந்து வருகிறது. அவைகளையெல்லாம் போக்குகிற வகையிலே வெளியிலே டாப் லைட் வைக்கவும் மின்சாரத் துறை அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சரவர்கள் ஏற்கனவே, இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் இன்றையதினம் அரசாங்கத்தின் கையிலே கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால், 50,000 பம்ப் செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்புத் தருகிறோம் என்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். இரண்டு லட்சம் என்று சொல்லி, ஏற்கனவே நில நீர் சான்றிதழ் பெறவேண்டுமென்று சொல்லி, காலதாமதமாகிறது. இந்த நிலையில், 50,000 பேர்களுக்குத்தான் இணைப்பு தருவோம் என்று சொன்னால், கஷ்டப்படக்கூடிய நிலைதானிருக்கும்.

ஏற்கனவே வசதி வாய்ப்பு இருக்கின்றவர்கள் முதலிலே மின் இணைப்பைப் பெற்றுவிட்டார்கள். ஆனால், இன்றையதினம் மின் இணைப்பைக் கேட்கிற விவசாயிகள், வசதிக் குறைவான, ஏழை விவசாயிகள்தான். அவர்களெல்லாம், அதிகாரிகளின் அலுவலக வாயிற்படியிலே காத்துக்கொண்டிருக்கிற அவல நிலையைப் போக்கிட, நம்முடைய அரசு ஏராளமான விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கிற பணியைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1977 டிசம்பர் 28

நம்முடைய விவசாயிகள் ஒரு விண்ணப்பத்தைக் கொடுப்பார் களானால், இன்றையதினம் ஒரு நகரத்திற்குச் செல்கிறபொழுது, அந்த மின்சாரத் துறை அலுவலகம் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு ஏராளமான பொறியாளர்களைத் தனித்தனியாகப் பிரித்து, அலுவலகங்களையெல்லாம் பிரித்து வைத் துள்ளார்கள். அப்படியில்லாமல், கூடுமானவரையிலே பகுதி களைக் குறைத்து, அதிகாரிகளை ஒருங்கிணைத்து, பிணைப்புகளை ஏற் படுத்தி, விவசாயிகளுடைய அல்லலைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மின்னிணைப்பு கோருகிற விவசாயிகள், அதிகாரி களைச் சந்திக்கிற நேரத்தில், அதற்கு வேண்டிய கம்பமானாலும் சரி, மற்றைய சாதனங்களானாலும் சரி, எல்லாம் விவசாயிகளே தர வேண்டுமென்று, எடுத்துவர வேண்டுமென்று கேட்கிறார்கள். எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். கம்பத்தை நீங்களே ஏற்றித் தரவேண்டும், அல்லது, உபகரணங்களை நீங்களே விலைக்கு வாங்கித் தரவேண்டுமென்ற நிலை இன்றைய தினம் பரவலாக இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு அமைச் சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதைப் போக்கவும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தெரு விளக்குகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். நாங்கள்கூட, தமிழ்நாடு பஞ்சாயத்துக்களுடைய சங்கத்தின் சார்பிலே, இன்றையதினம் மின்சாரத் துறை அமைச்சராகவுள்ளவர், அன்றையதினம் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த நேரத்தில், அவை எப்படி இருக்கவேண்டுமென்று எடுத்துச் சொன் னோம். பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்றைய தினம் ஊராட்சி மன்றங்கள், தங்கள் ஆளுகையிலுள்ள பல கிராமங் களுக்கான பல்புகளைப் போட வேண்டுமென்ற உத்தரவைக் கொடுத் திருக்கிறார்கள். ஆனால், ஊராட்சி மன்றங்களிலே நிதியில்லை. நிதி யில்லாத காரணத்தால், பல்ப் போட இயலாது பல கிராமங்களிலே, விளக்குகளே எரியாத சூழ்நிலை இருக்கிறது. இன்னும் சில கிராமங்களிலே ஊராட்சி மன்றத் தலைவர்களின் பே ஆர்டரை ரத்து செய்து விடுகிறார்கள், தொடர்புடைய அதிகாரிகள். அதனால் பல்ப் வாங்க முடியவில்லை. இம்மாதிரி காரணங்களினால், பணம் இருந்தாலும் பல்ப் வாங்கிப் போட இயலாத நிலையிருக்கிறது. ஆகவே, நான் கூறுவது, ஆரம்பத்திலேயே, இந்த பல்ப் வாங்கி வைக்கிற பொறுப்பை, ஊராட்சி மன்றத் தலைவரிடத்திலே



1977 டிசம்பர் 28] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

ஒப்படைக்காமல், ஆணையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த ஆணையாளர்கள், தங்கள் கீழ் உள்ள கிராமங் களுக்கு 6 மாத காலத்திற்கு, 3 மாத காலத்திற்கு எவ்வளவு பல்புகள் தேவைப்படும் என்பதைக் கணக்கெடுத்து, கம்பெனிகளிலே வாங்கி, ஒன்றிய அலுவலகத்திலே வைத்து, ஊராட்சிமன்றத் தலைவர் பல்ப் கேட்பாரானால், அப்பொழுது, தேவையான பல்புகளை அவரிடத்திலே கொடுத்து, அதற்கான ரசீது களைப் பெற்றுக்கொள்ளலாம். அப்படி பல்புகளைப் பெற்றுக் கொண்டு, பின்னால் வருவாய் வரும்போது பணம் கொடுக்கலாம் என்ற நிலைமை இருக்குமானால், பணம் இல்லாத பஞ்சாயத்திலும், பணம் இருக்கிற பஞ்சாயத்திலும் பல்புகள் தொடர்ந்து எரிய வாய்ப்பு இருக்கிறது. அந்த பல்புகளுக்கான பணத்தை வருவாய் வரும்போது அம்மன்றத்திடமிருந்து பிடித்துக்கொள்ளலாம்.

(பிற்பகல் 1.00)

இப்போது கூட மின் பில் கட்டுகின்ற நேரத்திலே ஊராட்சி மன்றத்தினுடைய கட்டணத்தை ஆணையாளர் அவர்களே கட்டி விடுகிறார்கள். பிறகு பணம் வருகின்றபோது, ஊராட்சி நிதியிலிருந்து பிடித்துக் கொள்கிறார்கள். அந்தப் பழக்கம் இன்றையதினமும் ஒன்றியங்களில் இருக்கிறது.

(திரு. பண்ணை கே. சேதுராம் தலைமை)

அதேபோன்று பல்பு வாங்கப்படுகின்ற முறையிலேயும் பயன் படுத்தினால் நிச்சயமாக அப்படிப்பட்ட விளக்குகள் எரிவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதேபோன்று இன்றையதினம் பல்புகளை மட்டும் நாம் வாங்கிப் போட்டுக் கொள்ளலாம் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் மின் விளக்கைப் போடு கின்ற நேரத்திலே, அதற்குத் தேவையான ஒயர்கள், மற்ற உப காரணங்கள் பழமையடைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட சாமான்களை யார் வாங்கிப் போடுவது? பொறியாளர் இடத்தில் சென்று கேட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும், அப்படிப் பட்ட சாமான்களை ஊராட்சி ஒன்றியங்கள்தான் வாங்கிப் போட்டுக் கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார். ஆணை யாளரைக் கேட்டால், அல்லது கோட்ட வளர்ச்சி அதிகாரியைச்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1977 டிசம்பர் 28

சந்தித்துக் கேட்டால் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வாங்கிப் போட வேண்டுமென்று உத்தரவு எங்கே இருக்கிறது? ஆகவே அனுமதிக்க முடியாது என்று சொல்லுகிறார். ஆகவே யார் வாங்கிப் போடுவது? ஆணையாளர் அவர்களும் ஊராட்சி மன்றத் தலைவரும் சேர்ந்து ஒரு விதியை வகுத்து இதற்குப் பரிகாரம் தேடினால்தான், இந்த விளக்குகள் எல்லாம் எரிய ஏதுவாக இருக்கும்.

அதேபோன்று நிலவளவங்கிகளில் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கிணறு வெட்ட, பம்ப் செட்டு வாங்க, மின் இணைப்பு மோட்டார் வாங்க என்று கடன் மனு போடுகிறார்கள். அதிகாரிகள் சாங்ஷன் செய்கிறார்கள். சாங்ஷன் செய்து கிணறு வெட்டுவதற்குண்டான பணம் தருகிறார்கள். கிணற்றை வெட்டி விடுகிறார்கள். பிறகு பம்ப் செட்டுக்குக் கடன் தருகிறார்கள். பம்ப் செட்டும் வாங்கிவிடுகிறார்கள். அதற்குப் பிறகு அதிகாரிகளிடம் சென்று மின் இணைப்பைக் கேட்டால் அதிகாரிகள் மின் இணைப்புக் கிடைக்காது என்று சொல்லுகிறார்கள். ஆயில் இன்ஜின் வாங்கிக் கொள்ளுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் சிறு விவசாயிகள் அதிகமாகச் செலவாகும் என்று கருதி ஆயில் இன்ஜினை வாங்க மறுக்கிறார்கள். கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அந்தக் கடனையும்—10,000, 20,000 கடன் வாங்கும் விவசாயிகள் மொத்தமாக கடனை செலுத்த வேண்டுமென்று இன்றையதினம் விவசாயிகளின் வாழ்க்கையை கடன் பாக்கிதாரர்களாக கருதி அவர்களுடைய கடனை வசூல் பண்ண முயற்சி செய்கிறார்கள். ஜப்தி, நோட்டீஸ் இப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட விவசாயிகளுடைய கிணறுகளை எடுத்து நிச்சயமாக அவைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக அந்தப் பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால், நிச்சயமாக விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையிலே ஓராண்டுக் காலத்திற்கு முன்னாலே மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் ஒன்றைத் திறந்தார்கள். பல அலுவலகங்கள் திருவண்ணாமலையில் இருக்கின்றன. திருவண்ணாமலை ஒரு பெரிய நகரம். பல இடங்களில் இந்த



1977 டிசம்பர் 28] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

மூலைக்கு ஒன்று, அந்த மூலைக்கு ஒன்று என்றிருக்கிறது. அதற்காக ஒரு பெரிய கட்டிடம் கட்டி அவைகளை ஒரே இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான கலசப்பாக்கம் தொகுதியில் நாயுடு மங்கலம் கிராமத்தில் துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற் கான நடவடிக்கை, மின்சாரத் துறையில் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அந்தத் துணை மின் நிலையத்தை உடனடியாக அமைக்க உத்திரவு இடும்படி கேட்டுக்கொள்கிறேன். கலச பாக்கம் ஒரு சிறு கிராமம். ஏற்கனவே அங்கு ஒரு பொறி யாளர் அலுவலகம், கீழ்மட்ட சிப்பந்திகள் அலுவலகம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தத் துறையிலே ஒரு உரிய அலுவலகம் இல்லாமல் அதிகாரிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அங்கு ஒரு அலுவலகம் கட்டித்தர கோருகிறேன்.

விவசாயிகளுக்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் விவசாயி களின் சார்பில் மீண்டும் கேட்டு கொண்டு, எனக்கு சந்தர்ப்பம் அளித்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை மீது சுருக்கமாக ஓரிரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

பொதுவாக, இந்த மின்கட்டணத்தைப் பொறுத்தவரையில் பெரிய தொழில்களுக்கு மிகச் சலுகைகள் அளித்து இருப்ப தாக பலபேர் சொல்லியிருக்கிறார்கள். அது மிகப் பெரிய முதலாளிக்கு அவர்களுடைய தொழிலில் லாபம் தரக்கூடிய தொழிலுக்கு தருகிறார்கள். அது அளிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அந்தச் சலுகைகளைக் குறைக்கலாம் என்றும், அந்தச் சலுகைகள் இல்லாமல் கட்டணத்தை உயர்த்தலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயத் தொழில்களைப் பொறுத்த வரையில் திரு. கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகள் பம்ப் செட் மூலம் நெல்லை சாகுபடி செய்வதற்கு குறைந்தது 250-300 ரூபாய்க்கு மேல் செலவு ஆகிறது. ஒரு

[திரு. சோ. அழகர்சாமி] [1977 டிசம்பர் 28

ஏக்கரில் நெல் சாகுபடி செய்யவேண்டும் என்றால் அந்த
அளவிற்கு மின்சார செலவு செய்தால் தான் முடியும். சில
இடங்களில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி அங்கு பம்ப்செட்
மூலமாக விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். அவர்களுக்கு அந்த
நேரத்தில் செலவு அதிகமாகிறது.

ஆகவே, இந்த விவசாயிகளைப் பொறுத்தவரையில், நாட்டின்
உணவு உற்பத்திக்கு உறுதுணையாக அவர்கள் இருப்பதால், இந்த
விவசாய பம்ப் செட்டுகளுக்கு சலுகைகளை அளிக்கவேண்டும்.
விவசாயத்திற்காக மின்சாரக் கட்டணத்தை 10 பைசாவாகக்
குறைக்கவேண்டும். நஷ்டம் என்று கணக்குச் சொன்னால் நான்
அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை உணவு
உற்பத்திச் செலவோடு சேர்த்து கணக்குப் பார்க்கவேண்டும்.
விவசாயிகளுக்கு சலுகை அளிக்காவிட்டால் நாட்டில் மற்ற
பொருள்களின் விலைவாசிகள் ஏறிவிடும், உணவு உற்பத்தியும்
குன்றிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் உணவு
உற்பத்தியும் பாதிக்கப்பட்டு விடும் என்றும் தெரிவித்துக் கொள்
கிறேன். விலைவாசி உயரும், வேறு பல பொருள்களின் உற்பத்தி
குறைவதற்கும் ஏதுவாகும். ஆகவே, விவசாயிகளுக்கான மின்
கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,
கட்டாயம் குறைக்கவேண்டும்.

தற்போது மீட்டர் சார்ஜ் ரூ. 5 என்று வசூலிக்கிறார்கள்.
புதிய மீட்டர் வாங்குவது என்றால் ரூ. 50 ஆகும். அதற்குப்
போய் மாதாமாதம் ரூ. 5 வாடகை என்று வசூலித்தால் அது
சரியல்ல. அந்த மீட்டர் சார்ஜ் மாதத்திற்கு ஒரு ரூபாய் என்று
குறைக்க வேண்டும். நிச்சயமாக ரூ. 5 என்று இருக்கக் கூடாது.
ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 2.50 சார்ஜ் என்று கவர்னர் ஆட்சி
காலநிலை வரி விகிதங்கள் வசூலிக்கிறார்கள். அது 1¼ ரூபாய்
என்று குறைக்கப்பட்டுள்ளது. 1 ஹார்ஸ் பவருக்கு ரூபாய்
¼ என்றால் 3 ஹார்ஸ் பவர் என்று இருந்தால் ரூ. 3¾ என்றும்
இதிலேயே பெரிய முதலாளிக்குத்தான் சலுகை. இந்தக்
கட்டணம் ரூ. 5-க்கு மேல் இல்லை. 7 ஹார்ஸ் பவர் இருந்தாலும்
ரூ. 5 தான். ஆகவே, இந்த வரியை அறவே நீக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 டிசம்பர் 28] [திரு. சோ. அழகர்சாமி]

இருக்கிறார்கள்.
தற்போது புதிதாக ஒரு விதியைப்போட்டு
சில இடங்களில் கோவில்பட்டி தாலுக்காவில் பல பேர்
கட்டணத்தைச் செலுத்த முடியாமல் இருந்ததால் மின்
இணைப்பு துண்டிக்கப்படுகிறது. மீண்டும் இணைப்பு கேட்டுப்
போகிற நேரத்தில் கபாசிடர் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று
சொல்கிறார்கள். அவர்கள் மின் கட்டணம் ரூ. 30 கூட கட்ட
முடியவில்லை என்று இருக்கிற நேரத்தில், மீண்டும் இணைப்புக்
கொடுக்க கபாசிடர் வாங்கித் தரவேண்டும் என்றால் அது மிகவும்
கஷ்டத்தை உண்டாக்குகிறது. நான் கூட போய் எஸ்.இ. அவர்
களைப் பார்த்து கேட்டேன். அவர்கள் அரசாங்கத்தில் இருந்து,
மின்வாரியத்தில் இருந்து அப்படி உத்தரவு வந்து இருக்கிறது
என்று சொல்கிறார்கள். ஆகவே, மீண்டும் டிஸ்கனெக்ஷன்
செய்யப்பட்டவர்களுக்கு மின் இணைப்பு தருவதற்கு இந்தக்
கன்டிஷன் இல்லாமலேயே மின் இணைப்பு செய்து தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவதானம் என்ற பகுதியில்
12 கிணறுகளுக்கு மின் இணைப்பு கேட்டு இருக்கிறார்கள். அதில்
3 கிணறுகளுக்கு உங்கள் கிணறு 300 அடி தூரத்தில் இருக்கிறது;
500 அடி தூரத்தில் இருக்கிறது என்று சொல்லி அளிக்க
முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். மீதி 9 கிணறுகளுக்கு
மின் இணைப்புக் கொடுத்தால் மொத்தத்தில் வருமானம் போதாது,
ஆகவே, 9 பேருக்கும் கிடையாது என்று சொல்கிறார்கள். 3
பேருக்கு பக்கத்து பக்கத்தில் இருக்கிறது ஆகவே முடியாது மற்ற
9 பேருக்கு வருமானம் போதாது ஆகவே, கிடையாது என்று
சொல்கிறார்கள். அந்தப் பிராந்தியம் மிகவும் பின்தங்கிய
பிராந்தியம். ஆகவே, அவர்கள் எல்லோருக்கும் மின் இணைப்புக்
கொடுக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
எல்லிசேரி என்ற கிராமத்தில் பல இடங்களில், மின் இணைப்புக்
கட்டிடத்திற்கு லைட் போட்டு இருந்தார்கள், 60 வாட்ஸ் போட்டு
இருந்தார்கள் என்று சொல்லி, அதற்கெல்லாம் சேர்த்து ரூ. 200
கட்டு, ரூ. 300 கட்டு என்று 4 வருஷத்திற்குச் சேர்த்து கேட்டிருக்
கிறார்கள்.

[திரு. சோ. அழகர்சாமி] [1977 டிசம்பர் 28

(பிற்பகல் 1-10)

இன்று அந்த பம்புசெட்டோடு சேர்ந்து ஒன்றிரண்டு லைட்டு கள் பக்கத்தில் இருக்கின்றன. குடிசையிலோ அல்லது தோட்ட வீட்டிலோ இருக்கும் லைட்டுகள் பம்புசெட்டோடு கணக்கிட வேண்டும். அதற்கு தனியாகக் கணக்கிடக்கூடாது. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடம் பேசப்பட்டபோது அதை ஒத்துக் கொண்டதாகக் கேள்விப் பட்டேன். இருந்தாலும் கூட, இப்போது அதற்கு தனியாக தோட்ட வீட்டில் லைட்டு போட்டால் அடிஷனல் சார்ஜ் போட்டு ரூ. 1,000, 1,500, என்று நோட்டீஸ் அனுப்புவதை நிறுத்தவேண்டும்.

இப்போது மழை அதிகம் பெய்து, மின்சக்தி அதிகம் இருந் தாலும் கூட, அதை உபயோகிப்பதில் காலையில் 6 மணி நேரம் மாலையில் 6 மணி நேரம் என்று இருக்கிறது. சில நேரங்களில் காலை முதல் மாலை வரை கொடுக்கப்படுகிறது. காலையில் ஆறு மணி நேரம் எப்போது, மாலையில் ஆறு மணி நேரம் எப்போது என்று கணக்குத் தெரியாமல் ஆட்களைக் கூட்டிக் கொண்டு போய் வேலை பார்க்க முடியவில்லை. நடவு நட முடிய வில்லை. ஒரு நாள் முழுவதும் சப்ளை கொடுத்துவிட்டு மறு நாள் முழுவதும் கொடுக்காமல் இருந்தால் அது நலமாக இருக்கும். காலையில் வந்த ஆட்களை ½ நாளில் போகச் சொன்னால் அவர்களுக்கு முழு கூலி கிடைப்பதில்லை. கூலி யாட்கள் அரை நாள் சம்பளம் வாங்கி அரை நாள் பட்டினி இருக்க வேண்டும். ஒரு நாள் முழுக்க கரண்ட் ஒரு பகுதிக்கு கொடுத்துவிட்டு, மறு நாள் இன்னொரு பகுதிக்கு கொடுக்கலாம். அப்போது தான் வேலை ஒழுங்காக நடக்கும்.

அடுத்து, இன்றைக்கு 100 யூனிட்டுக்கு ஒரு ரேட், அதற்கு மேல் 100 யூனிட்டுக்கு குறைந்த ரேட், அதற்கு மேல் 100 யூனிட்டுக்கு இன்னும் குறைந்த ரேட், அதாவது உபயோகம் அதிகரிக்க, அதிகரிக்க மின்சார ரேட்டு குறைகிற நிலை இருக் கிறது. அது கூடாது. அதிகமாக உபயோகிப்பவர்களிடம் அதிகமான சார்ஜ் வசூலிக்க வேண்டும். வீடுகளில் மின் சாரத்தை உபயோகிப்பவர்களுக்கு உள்ளதைப் போல் இல்லாமல் அதிகமாக உபயோகிப்பவர்களிடமிருந்து அதிகமாக வசூலிக்க வேண்டும்.



1977 டிசம்பர் 28] [திரு. சோ. அழகர்சாமி]

அதேபோல் பஞ்சாயத்து, முனிசிபாலிடிகளில் லைட் போடுவது நம் இலாகா. அதற்கு வேண்டிய பல்புகளை வாங்கி வைப்பது பஞ்சாயத்தும் முனிசிபாலிட்டியும். அவைகள் பல்பு களை வாங்கி வைத்து விட்டு மின்வாரியத்திற்கு ரிப்போர்ட்டு பண்ணினால் இவர்கள் போய் போடுவதில்லை. ஆகவே, 100 லைட்டுகளில் 50 எரிவதில்லை. கேட்டால் நாங்கள் பல்புகளை வாங்கி வைத்திருக்கிறோம், மின்சார இலாகா போடவில்லை என்கிறார்கள். எங்கு பார்த்தாலும் இருட்டாக இருக்கிறது.

லைட்டைப் பொறுத்தவரையில் மின்சார இலாகாவே எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற யோசனையைச் சொல்லுகிறேன். பல்பை யார் வாங்கிப் போடுவது என்று பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் தகராறு வருகிறது. பணப் பிரச்னை இருக்கிறது. மின்சார இலாகா பல்பு இல்லை, அதனால் லைட் போடவில்லை என்று சொல்லி இருட்டில் தடுமாறிப் போகவேண்டியிருக்கிறது. பல்பு போடுவது மின்சார இலாகா கையில் இருக்க வேண்டும். முனிசிபாலிட்டிக்கோ பஞ்சாயத்துக்கோ மாற்றுவது சரியில்லை. இராமநாதபுரம் ஜில்லா, பரமக்குடி ஏரியாவில் அந்தக் காலத்தில் மழை இல்லை. அவர்கள் பம்புசெட்டுகளை உபயோகிக்க முடிய வில்லை. இருந்தாலும் மினிமம் சார்ஜ் அவர்கள் கட்டவில்லை என்ற காரணத்திற்காக இன்றைக்கு அவர்கள் நிலங்கள் மற்ற சொத்துக்களை ஜப்தி நடவடிக்கைக்கு ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்துள்ளது. அதை நிறுத்தி அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கிகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக யூனிட்டுக்கு 14 பைசாவாக குறைக்கப் பட்டி ருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதனால் ரூ. 7½ கோடி நஷ்டம் என்று சொல்லப்படுகிறது. இது 5 ஏக்கர் நிலங்களுக்கு கீழ் உள்ள விவசாயிகளுக்குத்தான் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பண்ணை கே. சேதுராம்)** பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்.

***திரு. சோ. அழகர்சாமி:** மொத்தம் 5 ஏக்கர் என்றால், ஒரு பக்கத்தில் இரண்டு ஏக்கர் இருக்கும், இன்னொரு இடத்தில் மானாவாரியாக இரண்டு அல்லது மூன்று ஏக்கர் இருக்கும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1977 டிசம்பர் 2

அப்படிப்பட்டவர்கள் கிணறுகள் வெட்டுவது மிகவும் குறை
அதற்கு ரூ. 7¼ கோடி செலவாகாது. ஐந்து ஏக்கருக்கு
நிலமுள்ளவர்கள் கிணறு வெட்டியிருந்தால் அது மி
குறைவாகத்தான் இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விவசாயிகளுக்கு யூனிட்டுக்குப் பத்து காசுக்கு மேல் போகா
பம்ப்செட் மூலம் தண்ணீர் எடுக்க வழிவகை செய்யவேண்டு
அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். நேரடியாகவு
சொல்லியிருக்கிறோம். எதிர்கட்சித் தலைவர்கள் எல்லோரு
சேர்ந்து முதல் அமைச்சர் அவர்களிடம் மகஜர் கூட கொடு
திருக்கிறோம்.

கோவில்பட்டி, சங்கரன்கோவில் தாலுகாக்களில் கிணறு
இருக்கின்றன. இப்போது அங்கு பம்ப் செட்ஸ் இல்லாமலே
தண்ணீர் வெளியே போய்க்கொண்டிருக்கிறது. இப்போ
தண்ணீர் நிறைய இருக்கிறது. முன்பும் இருந்தது. பம்
செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டால் 500 அடிக்கு
பக்கத்தில் கிணறு இருக்கிறது என்றெல்லாம் சொல்லி கண்டிஷ
போடுகிறார்கள். கிரவுண்ட் வாட்டர் செல் டைரக்டர் அவர்க
இப்போது பூமிக்குக் கீழே தண்ணீர் இருந்தாலும் புது கிண
களுக்கு மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என்
டைரக்டர் கூறியிருப்பதாகக் கூறி இப்போது பம்ப் செட்களுக்
மின் இணைப்பு கொடுக்கப்படுவதில்லை. கிணறுகளில் தண்ணீ
இருக்கிறது. கிணறு வெட்ட கடன் வாங்கியிருக்கிறார்கள்
கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்கு மின் இணைப்
கிடைக்காததினால் அதற்குத் தடை ஏற்படுகிறது. ஒரு புதி
கிணறுக்குக் கூட இணைப்பு கொடுக்கக்கூடாது என்று சொல்
றார்களாம். அந்தத் தடையை நீக்கவேண்டும். தண்ணீ
இருக்கிற கிணறுகளுக்குப் பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு
கொடுக்க வேண்டும். இப்போது தண்ணீர் இருக்கிறது. கவலை
ஓட்டி இறைக்கிறான், ஆயில் இன்ஜின் வைத்து இறைக்கிறான்.
ஆகவே, இந்தத் தடையை தயவுசெய்து நீக்கவேண்டும்.

தமிழ் நாட்டில் 12 லட்சம் கிணறுகள் உள்ளன. அவை
களுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும். இரண்டு லட்சம்
மனுக்கள் பெண்டிங்காக இருக்கின்றன. எட்டு லட்சம் பம்ப்



1977 டிசம்பர் 28] [திரு. சோ. அழகர்சாமி]

செட்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். இரண்டு லட்சம் பம்ப் செட்களுக்கு பென்டிங்கில் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மின் இணைப்பு கொடுக்கவேண்டும். தூத்துக்குடி, நெய்வேலி அனல் மின் திட்டங்களை சீக்கிரம் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். விவசாயத்திற்கு மின்சாரம் மிக, மிகத் தேவை. மின்சார இணைப்பு கிடைக்காததன் காரணமாக விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடன்களை கட்ட முடியவில்லை. மின்சாரத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்தாலே கடனைத் திருப்பிச் செலுத்தமுடியவில்லை; கவலை வைத்துச் செய்கிறவர்கள் ஒரே ஆண்டில் க்ளோஸ். பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டும். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். மீட்டர் வாடகை ரூ. 5 என்பதை ரூ. 1 ஆகக் குறைக்கவேண்டும். ஹார்ஸ் பவருக்கு ஒன்றே கால் ரூபாய் என்பதை அறவே நீக்கவேண்டும். இந்தக் காரியங்களை எல்லாம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசியதிலிருந்து நான் படிக்கிற அத்தனையையும் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

* * * * *

என்பதையும்

* * * * *

என்பதையும்

* * * * *

என்பதையும்

* * * * *

நீக்கவேண்டும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் பேசும்போது

என்று குறிப்பிட்டதையும், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (மாற்றுத் தலைவர்) என்று குறிப்பிட்டதையும் நீக்கவேண்டும்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றுள்ளது.

[1977 டிசம்பர் 28

**திரு. நா. சுந்தரராஜ்:** * * * என்று குறிப்பிட்டதையும் நீக்கவேண்டும்.

"**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையில்லாமல் இந்திரா காந்தியை இந்த விவாதத்தில் இழுத்திருக்கிறார்" என்று தெரிவித்தார். அதை நீக்கவேண்டியதில்லை.

நம்முடைய மாநில அரசினுடைய அதிகாரத்தின் வரம்பிற்குட்பட்டது. இதற்கு முன்னாலே நடந்தது பிரசிடெண்ட் ரூல். ஆகவே ஸ்டேட் கவர்ன்மெண்ட் சப்ஜெக்ட்.

இது இருக்கலாம்.

(பிற்பகல் 1-20)

அடுத்து, திரு. எஸ். ஆர். இராதா, பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது * * * என்று பேசிய பகுதி அந்தனையும் மொத்தமாக நீக்கவேண்டும்.

அடுத்து, திரு. மு. அரங்கநாதன் அவர்கள் பேசும்போது * * * என்ற பகுதியும் நீக்கவேண்டும்.

அடுத்து, திரு. சி. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது * என்பதையும் நீக்க வேண்டும்.

அடுத்து, திரு. உமாநாத் அவர்கள் பேசும்போது அந்த * * என்ற இந்த வரிகளை மட்டும் நீக்கவேண்டும். மேலும் அவர் பேசும்போது குறிப்பிட்ட * என்கிற வரியையும் நீக்கவேண்டும்.

அடுத்து, திரு. மு. அரங்கநாதன் அவர்கள் பேசும்போது * என்ற வரிகளையும் நீக்க வேண்டும்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றுள்ளது.



1977 டிசம்பர் 28] [பேரவைத் தலைவர்]

அடுத்து திரு. ப. உ. ச பேச்சில் * என்கிற வரிகளையும் நீக்கவேண்டும்.

நான் இதுவரை கூறியவற்றினோடு, இவை சம்பந்தமாக பின்னர் குறிப்பிடப் பெற்ற சொற்களையும் நீக்கிவிட வேண்டும் என்று உத்திரவிடுகிறேன். நான் இப்போது சொன்னதையும், சேர்த்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று உத்திரவிடுகின்றேன்.

அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு

**திரு. கூத்தக்குடி ச. சண்முகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர், இப்படி சபையில் வாடா, போடா என்றெல்லாம் சொல்வதைப் பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். முதலாவது சொல்லிவிட்டு, பின்னால் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது என்பது மட்டும் நல்லது அல்ல, சபையில் இப்படி ஒரு மரபை மீறி பேசிக்கொண்டிருந்தால் என்ன வேண்டுமென்றாலும் பேசிக்கொண்டிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் உறுப்பினர் அவர்களோடு நான் இந்த விஷயத்தில் ஒத்த கருத்துடையவன்தான். உறுப்பினர்கள் தாங்களாகவே தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து மரபுகளை கடைப்பிடிக்கவேண்டும். என்னையே பார்த்து 'நீ உட்காரய்யா' என்று சொல்லக்கூடிய அளவுக்கு மரபு இருந்து வருகிறது. மரபு எந்த அளவுக்குப் போயிருக்கிறது என்பதை வெளியிலுள்ளவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்று இதை அப்படியே வைத்திருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்துதான் விடவேண்டியிருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து பின்னால் மரியாதைக் குறைவாக பேசக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இதற்கு என்ன முடிவு செய்வது. நீங்கள் எல்லோரும் சேர்ந்து தான் முடிவு சொல்ல வேண்டும்.

**திரு. கூத்தக்குடி ச. சண்முகம்:** என்னுடைய அபிப்ராயம், இப்போது நீக்கப்பட்டவைகள் எல்லாம் அப்படியே இருக்க வேண்டும் என்பது தான் அப்படியே இருந்தால்தான், இங்கு எப்படியெல்லாம் பேசப்படுகிறது என்பதைப்பற்றி நாங்கள் வெளியில் சொல்ல முடியும்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றுள்ளது.

## தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை குறித்தும் 1976 – 77 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை குறித்தும் விவாதம்

[1977 டிசம்பர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி பி.எ.ஸி. மீட்டிங்-கில் பேசி முடிவு எடுத்துச்சொன்னால் அதை முறையாக கடைபிடிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இல்லையென்றால் என்னால் முடிந்த வரை சபையின் மாபுகளை காப்பாற்றுவதற்கு இருக்கின்ற விதிமுறைகளை கடைபிடிப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 5. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (ஆ) பேரவை அலுவல் குறித்து.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் பேரவையின் இக் கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரல் கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

28—12—1977 (புதன்) — தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1977—78-ம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடும், 1976—77-ம் ஆண்டிற்கான துணை நிதிநிலை மதிப்பீடு ஆகியவற்றின் மீது விவாதம்.

29—12—1977 (வியாழன்)

30—12—1977 (வெள்ளி)

31—12—1977 (சனி) — 1977 ஆம் ஆண்டு புயல், வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதம்.

1—1—1978 (ஞாயிறு) — விடுமுறை

2—1—1978 (திங்கள்) —
1. 1977—78 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல்.
2. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977—78-ம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடும், 1976-77ஆம் ஆண்டிற்கான துணை நிதி மதிப்பீடு ஆகியவற்றின் மீது விவாதம்.



1977 டிசம்பர் 28] [பேரவைத் தலைவர்]

3—1—1978 (செவ்வாய்) — தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977—78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடும், 1976—77ஆம் ஆண்டிற்கான துணைநிதிநிலை மதிப்பீடு ஆகியவற்றின் மீது விவாதம்.

4—1—1978 (புதன்)

5—1—1978 (வியாழன்) — அரசினர் சட்டமுன்வடிவுகளும் அரசினர் தீர்மானமும்.

6—1—1978 (வெள்ளி) — தனியார் அலுவல்கள்.

7—1—1978 (சனி) —
1. 1977—78ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும், மான்யக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.
2. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தல்.
3. அன்றாட உபயோகப் பொருள்களின் விலைகள் ஏற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப்போக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பேரவையின் 57-வது விதியின்கீழ் விவாதம்.

(தேவையானால் பேரவை மாலையிலும் கூடும்)

8—1—1978 (ஞாயிறு) — விடுமுறை

9—1—1978 (திங்கள்)

10—1—1978 (செவ்வாய்) — நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு மற்றும் அரசினர் சட்ட முன்வடிவுகள்.

பேரவை 10—1—1978 தேதியன்று ஒத்திவைக்கப்படும்.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977—78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறித்தும் 1976—77 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை குறித்து விவாதம்—தொடர்ச்சி.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறும் மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமார் 50,000 கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க இருப்பதாக ஒரு இனிப்பான செய்தியைக் கூறினார்கள். அதை மகிழ்ச்சியோடு வரவேற்பதோடு அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஏற்கனவே, நெருக்கடி நிலைமை அமுலில் இருந்தகாலத்தில் லட்சக்கணக்கான விண்ணப்பங்கள் மின்சார வாரியத்திற்கு போடப்பட்டிருக்கின்றன. அம்மாதிரி போடப்பட்ட மனுக்கள் சில பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், சில பரிசீலனையே செய்யப்படாமலும் இருக்கின்றன. அப்படிப்பட்ட விண்ணப் பங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு, உடனடியாக சிறு, சிறு விவசாயிகளுக்கு, அதாவது குறைந்தபட்சம் 1 அல்லது 1½ ஏக்கரா நிலம் வைத்திருக்கக்கூடியவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்: ஏனென்று சொன்னால், மின்சார வாரியம் ஏற்கனவே 5 அல்லது 10 கிணறுகளுக்கு மின் இணைப்பு பெற்றுள்ள பெருநிலக்கிழார்களுக்குத்தான் தொடர்ந்து மின்சார இணைப்பு வழங்கக்கூடிய நிலையில் இருந்துவருகிறது. ஆனால், புதிதாக மின் இணைப்பு கேட்கக்கூடிய சிறு விவசாயிகள் புறக் கணிக்கப்படுவதைத்தான் காண்கிறோம். உதாரணமாக, 1973 ஆம் ஆண்டு என்னுடைய சொந்த கிணற்றுக்கு மின் இணைப்பு கேட்டு நான் ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். 1973-லே கொடுக்கப்பட்ட அந்த விண்ணப்பத்திற்கு, இதுவரை எந்தவிதமான பதிலும் மின்சார வாரியத்தின் மூலம் முறையாக கொடுக்கப்படவில்லை. 1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலைமை நேரத்தில், நிலத்தடி நீர் சம்பந்தமான சான்றிதழ் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதன் காரணமாக பொதுவாக இதற்குப் பதில் கொடுக்காமல் போயிருக்கக் கூடும் என்று சொல்லலாம். ஆனால், அந்தக் காரணமும் எனக்குப் பொருந்தாது. நான் அதற்கும் முன்பாகவே



விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். இப்படிப் பல சம்பவங்கள் மின்சார வாரியத்தால் நடைபெறாமல் தடைப்பட்டு வந்திருக் கின்றன.

குறிப்பாக, இன்றைய தினம் வாரியத்தின் தலைவராக உள்ளவர் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்திருக்கிறார். அப்போது சேலம் மாவட்டத்தில் சேலம்—ஈரோடு மின் விநியோக கம்பெனி என்ற ஒரு தனியார் ஸ்தாபனம் இருந்தது. அந்தக் கம்பெனி இருந்த காலத்தில், சேலத்தைப் பொறுத்த வரையில் மின்சார விநியோகம் செம்மையாக நடைபெற்றுக் கொண்டு வந்தது. ஆனால் நம்முடைய அரசு பொது உடைமை ஆக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே, அந்தக் கம்பெனி நாட்டுடமை யாக்கப்பட்ட நேரத்திலே இருந்து, மின்சார வாரியத்தால் சீராக மின்சார விநியோகம் கொடுக்கப்படாமல், தடைப்பட்டுக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக, சேலம் ஒரு பெரு நகரம். அங்கே 3,000 தெரு விளக்குகள் எரியாமல் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை தான் 3, 4 மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்திலேகூட குறிப்பிட்டிருக்கிறேன். இந்த தெரு விளக்குப் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தெளிவாக கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே, மின்சார வாரியத்தால் போடப் பட்டு, தெரு விளக்குகள் பழுதடைந்து விட்டால், அதற்கான உதிரி சாமான்களை மின்சார வாரியமே வாங்கிப் போட்டு வந்தது.

ஆனால், இப்போது அப்படி அந்த பல்புகளை மின்சார வாரியம் மீண்டும் வாங்கிப் போடாது என்றும், சம்பந்தப்பட்ட நகராட்சியோ அல்லது பஞ்சாயத்தோ, அதற்கான பல்புகளையும் மற்ற உதிரி சாமான்களையும் வாங்கிக் கொடுத்தால், மின்சார வாரியம் அந்த பல்புகளை, உதரிச் சாமான்களை உரிய இடத்தில் பொருத்தி, மராமத்து செய்து வந்தது. ஆனால், இப்போது அப்படி பல்புகளோ, அல்லது உதிரி சாமான்களோ வாங்கப்பட்டு, மின்சார வாரியத்திற்கு அறிவித்தால், அவர்கள் உரிய காலத் திற்கு வருவது கிடையாது; காலதாமதம் செய்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி எரியக்கூடிய மின்சாரத்திற்கு கணக்கிட்டு மின்சாரக் கட்டணம் வசூலிக்கிறார் களோ, அப்படி இந்த மாதிரியான பல்புகள், உதிரிச் சாமான்கள்

[திரு. எம். ஆறுமுகம்] [1977 டிசம்பர் 28

ஆகியவற்றை மாற்றுவதற்கும் ஒரு ஏற்பாடு செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து மீண்டும் மின்சார வாரிய நிதிநிலை மதிப்பீடு விவாதம் தொடரும்போது பேசலாம். பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. பேரவை இப்போது ஒத்தி வைக்கப் படுகிறது. பேரவை மீண்டும் 29—12—1977, வியாழக்கிழமை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணி அளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

* 1. Notification issued in Memorandum No. 35433/VIII-2/76-3, Commercial Taxes and Religious Endowments, dated 7th December 1976, in regard to cancellation of the Revenue Department Notification II-1 No. 5514 of 1970, dated the 2nd November 1970, published at page 1706 of Part II—Section 1 of the Tamil *Nadu Government Gazette*, dated the 11th November 1970. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 2. Notification issued in Memorandum No. 6772/VIII-2/76-2, Commercial Taxes and Religious Endowments, dated 7th April 1976, in regard to an amendment to Revenue Department Notification No. II-1 No. 1061 of 1965, dated 12th March 1965, published at pages 1–6 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated 15th March 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 3. Notification issued in G.O. Ms. No. 2427, Rural Development and Local Administration, dated 10th December 1976, in regard to division of wards in Madurantakam Municipality and reservation of three seats for the members of the Scheduled Castes and one seat for woman in the Madurantakam Municipal Council. [Laid on he Table of the House under section 304 (d) of the Tamil **Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]**



1977 டிசம்பர் 28]

* 4. Notfication issued in G.O. Ms. No. 699, Rural Development and Local Administration, dated 23rd April 1977, in regard to certain amendments to the rules prohibiting or regulating the grant of licences and permissions by Panchayats published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A 123 (*a*) of 1962, dated 1st February 1962, at pages 37 to 39 and 18 to 20 of Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 14th February 1962, respectively. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 5. Notification issued in G.O. Ms. No. 1646, Commercial Taxes and Religious Endowments, dated 22nd November 1976, in regard to certain amendments to the Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1974. [Laid on the Table of the House under section 60 (5) of the Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1969 (Tamil Nadu Act 4 of 1969).]

* 6. Notification issued in G.O. P. No. 750, Commercial Taxes and Religious Endowments, dated 18th June 1975, in regard to certain amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 7. Notification issued in G.O. Ms. No. 1204, Commercial Taxes and Religious Endowments, dated 30th August 1976, in regard to certain amendments to Rule 49 of the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 8. Notification issued in G.O. R. No. 803, Home (Transport-I), dated 2nd March 1977, in regard to exemption from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act XIII of 1974) in respect of the vehicle TMX 5135 belonging to Trade Representation of U.S.S.R. at Madras. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act XIII of 1974).]

* 9. Notification issued in G.O. Ms. No. 795, Home (Transport-I), dated 17th March 1977, in regard to exemption from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act XIII of 1974) in respect of the vehicle bearing Registration No. TMW 991 belonging to the Trade Representation of the Czechoslovak Socialist Republic at Madras. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act XIII of 1974).]

* 10. Notification issued in G.O. Ms. No. 890, Home (Transport-I), dated 28th March 1977, in regard to assessment of tax in respect of certain vehicles of Oil and Natural Gas Commission, Madras at the rates specified under clause 7 of the Schedule to the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 11. Notification issued in G.O. Ms. No. 1119, Home (Transport-I), dated the 18th April 1977, in regard to payment of proportionate tax in respect of motor vehicles kept or used in the State of Tamil Nadu only during the first month of a quarter. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 12. Notification issued in G.O. Ms. No. 960, Home (Transport-I), dated 31st March 1977, in regard to reduction of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974) in respect of Mobile Animal Clinic Van MSM 4369 belonging to the Animal Welfare Board, Madras. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 13. Notification issued in G.O. Ms. No. 935, Home (Transport-I), dated 30th March 1977, in regard to extension of time for payment of tax in respect of stage carriages, kept or used in the State of Tamil Nadu for the quarter ending 30th June 1977. [Laid on the Table of the Home under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 14. Notification issued in G.O. Ms. No. 1611, Home (Transport-I), dated 27th May 1977, in regard to concessional rate of tax payable in respect of mini-stage carriages to be operated by



Messrs. Cheran Transport Corporation, Coimbatore in the Nilgiris district. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 15. Notification issued in G.O. Ms. No. 1491, Home, dated 19th May 1977, in regard to concessional rate of tax payable in respect of the motor vehicle TNF 7140 belonging to L.M. Hospital, Vadathorasalur, South Arcot district. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 16. Notification issued in G.O. Ms. No. 1269, Rural Development and Local Administration, dated 26th July 1977, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification No. II 293 of 1961, dated 12th January 1961, published at pages 62–63 of Part II of Section 2 of the *Fort St. George Gazette*, dated the 8th February 1961. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 17. Notification issued in G.O. Ms. No. 2137, Home (Transport-I), dated 30th July 1977, in regard to further extension of time for payment of tax in respect of stage carriages operated by Thiruvalargal Pallavan Transport Corporation (Metropolis) for the quarter ending 30th September 1977. [Laid on the Table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 18. Notification issued in G.O. Ms. No. 1780, Home, dated 20th June 1977, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

* 19. Notification issued in G.O. P. No. 838, Commercial Taxes and Religious Endowments, dated 29th April 1977, in regard to an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1)/CTRE/171/76, dated the 10th March 1976, published at page 39 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 7th April 1976. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 20. Notification issued in G.O. Ms. No. 395, Rural Development and Local Administration, dated 5th March 1977, in regard to certain amendments to the rules relating to the Receipts and Expenditure of the Municipal Councils published with the late Local-Self Government Notification No. 618, dated the 1st May 1933, at pages 215 to 218 of Part I-A of the *Fort St. George Gazette*, dated 13th June 1933. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 21. Notification issued in G.O. Ms. No. 536, Rural Development and Local Administration, dated 26th March 1977, in regard to variation to the Mylapore Southern Section Area Town-Planning Scheme of Madras city sanctioned in the late Education and Public Health Department Notification No. 333, dated the 26th June 1944, published at pages 205–206 of Part I-A of *Fort St. George Gazette*, dated the 15th August 1944 as subsequently amended. [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

* 22. Notification issued in Memo. No. 51965/AMI/77-3, Agriculture, dated 7th July 1977, in regard to an amendment to the Agriculture Department Notification II-I No. 634 of 1970, dated the 4th December 1959, published at pages 186, 188 of Part II—Section I of the *Fort St. George Gazette*, dated the 11th February 1970. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 23. Notification issued in G.O. Ms. No. 569, Agriculture, dated 22nd March 1977, in regard to an amendment to rule 284-A of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agriculture Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 24. Notification issued in G.O. Ms. No. 2366, Agriculture, dated 18th December 1976, in regard to an amendment to rule 198 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



* 25. Notification issued in G.O. Ms. No. 206, Prohibition and Excise, dated 15th July 1977, in regart to an amendment to rule 9 of the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 26. Notification issued in G.O. Ms. No. 1439, Commercial Taxes and Religious Endowments, dated 13th October 1976, containing the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1976 and the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1976 framed under the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) and under section 48 (5) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963).]

* 27. Notification issued in G.O. Ms. No. 1928, Commercial Taxes and Religious Endowments, dated 31st December 1976, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1431 of 1965, dated the 30th March 1965, published at pages 588–593 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 31st March 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 28. Notification issued in Memo. No. 1727/VIII-2/77-2, Commercial Taxes and Religious Endowments, dated 5th February 1977, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 412 of 1967, dated the 12th December 1966, published at pages 205–214 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 8th February 1967 as subsequently amended. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 29. Notfication issued in G.O. Ms. No. 610, Rural Development and Local Administration, dated 6th April 1977, in regard to certain variations to the Egmore Harrington Road Town Planning Scheme, sanctioned in the Rural Development and Local Adminis-

tration Department Notification No. II-2/70, dated the 15th December 1969, published at pages 17–38 of Supplement to Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 18th February 1970 as subsequently amended. [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

2. தமிழ்நாடு மின் வாரியம் தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன் இந்த நிதி நிலை அறிக்கைகளை 1948ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் 61ஆவது பிரிவின்படி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின் வாரியத்தின் செயல்முறை பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், வாரியமும் கவனத்தில் வைத்துக்கொள்ளும். மின் வாரியத்தின் 1975–76ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை பற்றிய விவாதத்தின் போது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மதிப்பிற் குரிய உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின்கீழ், 17 புனல் மின் உற்பத்தி நிலையங்கள் மொத்தம் 1,224 மெகாவாட்டும், நெய்வேலி அனல் மின் நிலையம் உள்பட மூன்று அனல் மின் நிலையங்கள் மொத்தம் 1,140 மெகாவாட்டும் மின் உற்பத்தி செய்கின்றன. இவற்றின் மொத்த நிறுவத்திறன் 2,364 மெகாவாட் ஆகும். நிறுவத் திறனில் நாட்டி லேயே மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை அடுத்து தமிழ்நாடு மூன்றும் இடத்தை வகிக்கிறது. நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங் களின் மொத்த நிறுவத்திறனில் இது 10·88 சத வீதமாகும். 1976-77ஆம் ஆண்டில், தமிழ் நாடு மின் வாரியத்தின் பொறுப்பிலுள்ள மின் உற்பத்தி

நிலையங்களில் 4,929 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்
பத்தி செய்யப்பட்டது. நெய்வேலியிலிருந்தும் கேரள
மாநிலத்திடமிருந்தும் 3,212 மில்லியன் யூனிட்டுகள்
வாங்கப்பட்டன. அந்த ஆண்டில் மின்சாரத் தேவை
1,313 மெகாவாட் ஆக உச்ச அளவை எட்டியது.
1977ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் அன்றுள்ள
படி 32·23 லட்சம் பேர் மின்சாரத்தைப் பயன்படுத்தி
னர். இவர்களில் 17·38 லட்சம் பேர் வீட்டுக் காரியங்
களுக்காகவும், 7·85 லட்சம் பேர் வேளாண்மைப் பணி
களுக்காகவும், 1·24 லட்சம் பேர் தொழிற்சாலைகளுக்
காகவும் மின்சாரத்தைப் பயன்படுத்தினர். எஞ்சியவர்கள்
பல்வகைக் காரியங்களுக்கு மின்சாரத்தை பயன்
படுத்தியவராவர். மின்சாரம் பயன்படுத்துபவர்களின்
எண்ணிக்கையை பார்க்கும்பொழுது, மகாராஷ்டிர
மாநிலத்தை அடுத்து தமிழ்நாடு இரண்டாவது இடத்தை
பெறுகிறது. நாட்டில் மின்சாரம் பயன்படுத்துபவர்
களின் மொத்த எண்ணிக்கையில் இது 13·5 சத வீதம்
ஆகும். இங்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசை
ஏற்றங்களின் எண்ணிக்கை 7·97 லட்சம். நாட்டில்
வேறெந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு விசையேற்றங்
களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. நாடு
முழுவதிலும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசை
ஏற்றங்களின் எண்ணிக்கையில் இது 26 சத வீதமாகும்.
இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில்
மின் தொடர்புகள் உள்ளன. 2,85,508 கிலோ மீட்டர்
நீளத்திற்கு மின்சாரம் அனுப்பும் கம்பித் தொடர்
களும், 304 கூடுதல் உயர் அழுத்த துணை மின் நிலையங்
களும், 42,499 பங்கீட்டு மின் மாற்றுப் பொறிகளும்
(Transformers) இங்கு உள்ளன. இம் மாநிலத்தில்
64,198 நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் உள்ளன.
இவற்றில் 98·6 சத வீதம் மின் வசதி பெற்றுள்ளன.
மொத்த மின் உற்பத்தியில் 26 சத வீதத்தை வேளாண்
மைத் துறையினரும், 46 சத வீதத்தை தொழில் துறை
யினரும், 8 சத வீதத்தை வீடுகளில் உள்ளவர்களும்,
எஞ்சியதைப் பிற வகையினரும் பயன் படுத்தி
வருகின்றனர். மின்சார வாரியத்தில் 93,974 பேர்
பணியாற்றுகின்றனர்.



மின் பெருக்கத் திட்டம்
4. நம் திட்டங்களில் மின் துறையிலும் அனல்
முக்கியப் பகுதியாகும். நீர் மின் துறையிலும் அனல்
மின் துறையிலும் பலவிதமான நடைமுறை தடங்கல்கள்
ஏற்பட்ட போதிலும், தமிழ்நாடு மின் உற்பத்தியில்
தலை சிறந்து விளங்கியது. மின் உற்பத்தித் திட்டங்களை
முன்னறிவோடு திட்டமிட்டு, திறமையோடு அது செயல்
படுத்தியது. அநேகமாக நீர்வள வாயில்கள் அனைத்தை
யும் நாம் பயன்படுத்தி விட்டோம். எனவே அனல் மின்
திட்டத்திற்கு நம் கவனம் தீவிரமாகத் திரும்பியது.
தமிழ்நாடு மின் வாரியத்தின் இச்சீர்மிகு சாதனை அண்
மையில் ஓரளவிற்குச் சரிந்துவிட்டது. மின் உற்பத்தித்
திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை போதுமானதாக
இல்லை. அதனால் மின் உற்பத்தி குறைந்தது. உற்
பத்தியைக் காட்டிலும் தேவை மிகுந்து விட்டது. மின்
சாரம் அனுப்புதல், மின்சாரம் வழங்குதல் ஆகியவற்றில்
போதிய நாட்டம் செலுத்தப்படவில்லை. மின் உற்பத்தி
யில் தன்னிறைவு பெற்று திகழ்ந்த நிலைமை நீங்கி, நிலை
யாகவே பற்றுக்குறை நிலை ஏற்பட்டதால் வளர்ச்சியைக்
குன்றச் செய்யும் மின் வெட்டுக்களைச் செயற்படுத்த
வேண்டி வந்தது. வாரியத்தின் நிதி நிலை சீர்கெட்டது.
தொழில் வளர்ச்சி குன்றியது.

5. இந்த நிலையை மாற்ற 1976ஆம் ஆண்டிலிருந்து
அரசு விடாமுயற்சியுடன் வாரியத்தை அதன் முன்னுள்
நிலைக்குக் கொண்டுவந்து, புத்துணர்வு பெற்றுச் செய
லாற்றத் தன்னால் இயன்றவற்றையெல்லாம் செய்து
வருகிறது. 1974–75ஆம் ஆண்டில் மின் உற்பத்திக்கு
36·10 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டது. அதுவே
1975–76-ல் 52·73 கோடி ரூபாயாக இருந்தது.
1976-77-ல் அது 77·92 கோடி ரூபாயாக உயர்த்தப்
பட்டது. நடப்பு ஆண்டில் மின் உற்பத்தி திட்டத்திற்கு
94·91 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நடந்தேறி
வரும் மின் திட்டங்களை, குறிப்பாக தூத்துக்குடி அனல்
மின் திட்டத்தை, விரைந்து நிறைவேற்றி மின் உற்பத்தி
யைப் பெருக்க விரைவில் நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்பட்டு வருகின்றன. நிலையான மின் உற்பத்திக்
குரிய நீண்ட காலத் திட்டங்கள் உருவாகத் தொடங்கி
யுள்ளன. நெய்வேலியில் இரண்டாவது அனல் மின்
நிலையத்திற்கு மத்திய மின்சார அதிகார மன்றம் அண்மை

யில் இசைவு அளித்திருப்பதானது இதற்கு இயைவாக உள்ளது. நெய்வேலியில் தோண்டப்படவிருக்கும் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து கிடைக்கக் கூடிய நிலக்கரியைக்கொண்டு தொடக்கத்தில் மூன்று அனல் மின் நிலையங்கள் உருவாக்கப்படும். இம் மின் நிலையங்கள் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் வாய்ந்தவையாயிருக்கும். இரண்டாவது அனல் திட்டத்திற்குச் சுமார் 215 கோடி ரூபாயும், இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு 145 கோடி ரூபாயும் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்புகளுக்கு பொது முதலீட்டுக் குழு, திட்ட ஆணைக்குழு ஆகியவற்றின் இசைவு அளிக்கப்பட்டு விட்டன. தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசு ஆர்வத்தோடும், அக்கறையோடும் விரைந்து அளித்த உதவிக்கு தமிழ்நாடு அரசு தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று 1960ஆம் ஆண்டிலிருந்தே, நாம் கேட்டு வந்திருக்கிறோம். இரண்டாவது சுரங்கம் வெட்டும் செயற் குறிப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது, நமது மாநிலத்திற்கு மிக முக்கியத்துவ மானது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள மூன்றாவது பிரிவை நிறுவ மத்திய அரசு அனுமதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

6. எண்ணூர் அனல் மின் நிலையம் 1970ஆம் ஆண்டில் தொடங்கிவைக்கப்பட்டது. இதன் மின் உற்பத்தித் திறன் 450 மெகாவாட். இது தொடங்கி வைக்கப்பட்ட காலத்திலிருந்தே தொழில் நுட்பக் கோளாறுகளும் செயல்முறையில் தடைகளும் உருவாகி அதன் விளைவாக அதன் திறனை நாம் முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இந் நிலையத்தின் செயல்திறன் மிக அவல நிலையிலிருந்தது. ஆயினும் இந் நிலையத்தில் இத்தகைய நிலை உருவாகியதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை களையத்தக்கதோர் வழிகாண 1976ஆம் ஆண்டிலிருந்து முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பாரத கனரக மின் கருவிகள்



தயாரிப்பு நிறுவனத்துடன் கலந்தாலோசித்து இந் நிலையத்திலுள்ள முதல் நான்கு பிரிவுகளின் கொதிகலங்களில் படிப்படியாக மாற்றங்கள் செய்யத் திட்டமிடப் பட்டது. ஆனால் 1976-77-ல் மின் சக்தி பற்றாக்குறை நிலவியதாலும், இந்த நிலையைப் போக்க அனல் மின் உற்பத்தியைப் பெரிதும் நம்பியிருக்கவேண்டி வந்ததாலும், இந்த மாற்றங்களை விட்டுவிட்டுச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந் நிலையத்தில் மூன்றாவது பிரிவு நீங்கலாக ஏனைய பிரிவுகளில் மாறுதல்கள் செய்யப் பட்டுவிட்டன. இம்முயற்சிகளின் பயனாக, 1973-74-ல் 27·2 சத வீதத்திற்கு மின் உற்பத்தி செய்து வந்த இந் நிலையம் 1976-77-ல் 45·69 சத வீதம் வரை மின் உற்பத்தி செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளது. 1975-76-ல் 953 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்திசெய்யப் பட்டது. ஆனால் 1976-77-ல் மின் உற்பத்தி 1,802 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். ஆயினும், 1977 ஜனவரி திங்களில் இந் நிலையத்திலுள்ள இரண்டாவது நான்காவது பிரிவுகளில் இருக்கும் சுழல் இயந்திரங்களில் (Turbines) பெரும் கோளாறு ஏற்பட்டு அடிக்கடி செயல் படாமல் போயிற்று. 1975 டிசம்பரில் தொடங்கி வைக்கப்பட்ட ஐந்தாவது பிரிவிலும் இயந்திரக் கோளாறுகள் தோன்றியுள்ளன. இவற்றால் சென்ற ஆண்டு கோடை காலத்தில் போதுமான அளவு மின் உற்பத்தி செய்து வழங்க இயலவில்லை. மேலும் இந் நிலையத்தில் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டு, தகுந்த மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் இந் நிலையத்தின் செயலாற்றும் திறன் மேம்பாடு அடைந்து வருகிறது. எண்ணூர் அனல் மின் நிலையம் இத் தொல்லைகளிலிருந்து விடுபட்டு நமக்கு நம்பகமாக எப்போதும் மின்சாரம் வழங்கும் ஒரு நிலைக்கு விரைவில் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் முன்பு 55 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த நிலையத்தில் மேம்பாடுகள் செய்யப்பட்டதின் விளைவாக உற்பத்தித் திறன் 70 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.

7. மின் உற்பத்தியைப் பெருக்கவும் போதிய அளவு மின்சாரம் வழங்கவும் 1976ஆம் ஆண்டிலிருந்து இடைவிடாது முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும்,

புனல் மின் உற்பத்திக்காக உள்ள நீர்த் தேக்கங்களுக்கு இயல்பான அளவிற்கும் குறைவாக நீர் வந்ததால், தொடக்கத்தில் சுமார் 25 சதவீதம் மின் வெட்டு விதித்து பின்னர் அதனை படிப்படியாக 50 சதவீதம் வரை உயர்த்த வேண்டிய அவசியம் நேரிட்டது. புனல் மின் உற்பத்தி 1975-76ஆம் ஆண்டைக் காட்டிலும் 2,600 மில்லியன் யூனிட்டுகள் குறைவு; அதாவது சராசரி அளவைக் காட்டிலும் 1,049 மில்லியன் யூனிட்டுகள் குறைவாகும். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கோளாறுகள் ஏற்பட்டதால், மின்சக்தி உற்பத்தி நிலைமை 1977ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து சரியத் தொடங்கியது. இருந்தாலும், வேளாண்மைப் பணிகளுக்காக மின் சாரத்தைப் பயன்படுத்துபவர்களுக்கும் குறைவழுத்த மின் சக்தியை 250 யூனிட்டுகளுக்குக் குறைவாகப் பயன் படுத்துபவர்களுக்கும் இந்த மின் வெட்டிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டது. தென் மேற்குப் பருவமழை பெய்யத் தொடங்கியவுடன், 1977 ஜூலை 1ஆம் நாளன்று இந்த மின்வெட்டு நீக்கப்பட்டது. இந்த ஆண்டு புனல் மின் நீர்த் தேக்கங்களுக்குப் பெருமளவிற்கு நீர் வந்துள்ளது. இதனால் இப்பருவத்தின் தொடக்கத்தில் மின் வெட்டு விதிக்கப்படுமோ என்ற அச்சம் நீங்கியது. 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாளில் 851 மில்லியன் யூனிட் அளவிற்கு நீர் இருந்தது. ஆனால் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாளில் 1,610 மில்லியன் யூனிட் அளவிற்கு நீர் உள்ளது. மின் சக்தி கையிருப்பும் உற்பத்தியும் பற்றி தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 1977-78ஆம் ஆண்டு கோடை காலத்தில் நமது மின் உற்பத்தி நிலையும் மின் வழங்கல் நிலையும் நீர்த் தேக்கங்களுக்கு மேலும் நீர் வரும் அளவினையும், கேரள மாநிலத்திலிருந்து நாம் பெறுகின்ற உதவியின் அளவினையும் பொறுத்திருக்கும்.

8. 1972-73ஆம் ஆண்டிலிருந்தே பெரும்பாலும் ஆண்டு தோறும் மின்வெட்டு கொண்டுவர வேண்டிய நிலை உருவாகிவிட்டது. இதனால் தொழில் வளர்ச்சி குன்றியது. 1961 முதல் 1971 வரை 10 ஆண்டுக் காலத்தில் மின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 10·7 சத வீதம் அதிகரித்தது. ஆனால் உச்சத்தேவை 12·2 சத வீதம் வளர்ந்தது. ஆனால் நான்காம் திட்டக் காலத்தில் மின்



உற்பத்தி 6·2 சத வீதமாகவும், உச்சத் தேவை 5·6 சத வீதமாகவும் தான் உயர்ந்தன. ஆனால் நடப்புத் திட்டக் காலத்தில் முதல் மூன்றாண்டுகளில் மின் உற்பத்தி வளர்ச்சி மேலும் சரிந்து 5·6 சத வீதத்திற்கு குறைந்தது. மின் சக்தியின் உச்ச நிலைத் தேவை 1971-72ஆம் ஆண்டில் இருந்த தேவையைக் காட்டிலும் மேலும் குறைந்து விட்டது. இந் நிலைமையினால் புதிய தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதிகமாக மின் சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு பெரும்பாலும் தடையே விதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. மொத்தம் 633 மெகாவாட் நிறுவு நிலை உற்பத்தித் திறனைக் கொண்ட பல நீர் மின் உற்பத்தி நிலையங்கள் பாசன ஆயக்கட்டுகளுக்கும் நீர் வழங்க வேண்டியவையாக உள்ளன. எனவே, கோடை மாதங்களில் அங்கு கிடைக்கும் மின் உற்பத்தித் திறனளவு மிகக் குறைவாகவும் தேவைக்குப் போதாமலும் உள்ளது. இதன் விளைவாக கிராமப்புறங்களில் வேளாண்மைக்காக வழங்கப்படுகின்ற மின்சாரத்தின் மீதும் சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிய கட்டாயத்திற்கு வாரியம் உள்ளாகியது. கிராமப் பகுதிகளில் இவ்வாறு வேளாண்மைக்காக வழங்கப்படுகின்ற மின் சக்தி, இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருநாளில் பகல் நேரத்தில் காலையிலோ அன்றி மாலையிலோ சுழல் முறையில் 8 மணி நேரம் மின் சக்தி வழங்கப்படுகிறது இரவில் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்படுகிறது. காலையிலும் மாலையிலும் மின் சக்தி பயன்படுத்தப்படும் அளவு உச்ச அளவினை எட்டாமல் அவற்றை வரையறைப் படுத்தும் பொருட்டு, ஒரு முறைப்பணி கொண்ட இரு முறைப் பணிகள் கொண்ட தொழில்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. மின் இணைப்பு ஏற்பாட்டில் கிடைக்கின்ற மின் உற்பத்தி அளவு கூடுதலாகின்றவரையில் இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த இயலாது.

9. இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் மின் உற்பத்தித் திட்டங்கள், மின் உற்பத்தியைத் தொடங்கியதும் மின் சக்தி நிலைமை சீராகும். நமது மின் உற்பத்தித் திறனில் 935 மெகாவாட் கூடுதலாகச் சேர்ப்பதற்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. மேற்சொன்ன கூடுதல் உற்பத்தி அள

வில் 110 மெகாவாட் உற்பத்தி ஏற்கனவே எண்ணூரில் தொடங்கப் பெற்ற ஐந்தாவது உற்பத்திப் பிரிவின் மூலம் கிடைக்கப்பெற்று விட்டது. ஐந்தாவது ஐந் தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக தூத்துக்குடி அனல் மின் திட்டம், குந்தா நான்காம் நிலைத் திட்டம், சுருளி யாறு நீர் மின் திட்டம் ஆகியவை கூடுதலாக 355 மெகாவாட் மின் உற்பத்தியை அளிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தூத்துக்குடி அனல் மின் திட்டம் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் உற்பத்தியை வழங்கு கின்ற இரண்டு உற்பத்திப் பிரிவுகளைக் கொண்டதாகும். இத்திட்டத்திற்கு 141 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது உற்பத்திப் பிரிவு 1978 டிசம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது உற் பத்திப் பிரிவு 1979 ஜூலைத் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும். குந்தா நான்காம் நிலை திட்டத்தில் உள்ள 60 மெகாவாட் உற்பத்திப் பிரிவு 1978ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது. அதனுள் அடங்குகின்ற 50 மெகாவாட் உற்பத்திப் பிரிவு 1978 ஜூலைத் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும். 35 மெகாவாட் திறன் கொண்ட சுருளியாறு நீர் மின் திட்டம் 1978 ஆகஸ்டு திங்களில் உற்பத்திக்குத் தயா ராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பைகாரா மோயாறு மின் உற்பத்தி நிலையங்களில் இப்போது கிடைத்து வரும் மின் உற்பத்தி அளவினைப் பெருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள மேல்கோடுமந்து, லோன்வேலி ஆகிய சிற்றாறுகளின் நீர்ப் பெருக்கைத் திசை திருப்புகின்ற பணி நடைபெற்று வருகிறது. இப் பணியின் முதல் கட்டத்தில் லோன்வேலியிலிருந்து கிளன் மோர்கன் நீர்த்தேக்கத்திற்கு நீரைத் திருப்பிக் கொண்டு செல்கின்ற சுரங்கப்பாதை அமைக்கும் பணி முடிவுற்றுள் ளது. இச்சுரங்கப்பாதை 1977 நவம்பர் திங்களில் செயல்படத் தொடங்கியுள்ளது.

10. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் சுரங்கப் பணிகளில் ஏற்பட்டுள்ள தடைகளின் காரணமாக முன்னர் அங்கு கிடைக்கும் என மதிப்பிடப்பட்டிருந்த பழுப்பு நிலக்கரி உற்பத்தியளவில், 55 சதவீத அளவு



மட்டுமே வெட்டியெடுக்க முடிந்தது. இந்த நிலக் கரிச் சுரங்கத்தின் தற்போதைய உற்பத்தி அளவான 3·5 மில்லியன் டன் அளவைப் படிப்படியாக 1980–81-வது ஆண்டுக்குள் 6·5 மில்லியன் டன் அளவாக உயர்த்தும் பொருட்டு தற்போதுள்ள சுரங்கங்களை விரிவு படுத்துவதையொட்டி, நமக்கு இதன் மூலம் கிடைக் கின்ற மின் உற்பத்தி அளவு குறிப்பிடத்தக்க அளவில் கூடுதலாகும். கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் 470 மெகாவாட் அணு மின் விசை உற்பத்தி குறித்த பணி நடைபெற்று வருகிறது. இங்கு முதலாவது மின் விசை உற்பத்திப் பிரிவு 1979–80-ல் உற்பத்தியைத் தொடங்கலாம்; இரண்டாவது உற்பத்திப் பிரிவு 1981–82-ல் உற்பத்தியைத் தொடங்கலாம்.

11. தமிழ்நாட்டில் தற்போது நீர் மின்விசை உற்பத்திக்குரிய நீர்வாயில்கள் அனைத்தும் ஏறத்தாழ முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருப்பதால், புதிய நீர் மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்கு வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவே. மத்திய அரசு, ஏற்கெனவே சேர்வலாறு, நெல்லித்துறை, பாண்டியாறு புன்னம்புழா ஆகிய நீர்மின் விசை உற்பத்தி நிலையங்களுக்கும், காடம்பாறை விசையேற்று நீர்த்தேக்க நிலையத்திற்கும் அனுமதி வழங்கியுள்ளது. சேர்வலாறு நீர்மின் உற்பத்தி திட்டப்பணி நிதி பற்றாக்குறை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இந்நிலைமை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலங்களுக்கிடையேயுள்ள தகராறுகள் காரணமாக, பாண்டியாறு புன்னம்புழா, நெல்லித்துறை ஆகிய நீர் மின் உற்பத்தி நிலையத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. பொருளாதார வகையில் தனித்தியங்கக் கூடியதா என்பது குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் வரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காடம்பாறை விசையேற்ற நீர்த்தேக்கத் திட்டப்பணியை தற்போது தொடங்கக் கருதப்பட்டுள்ளது. கீழ்க் காணும் நீர்மின் திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகள் இந்திய அரசின் மத்திய மின்சார அதிகார மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன :

(i) சோழத்திப்புழா (60 மெகாவாட்)
(ii) மேல்தாமிரபரணி (165 மெகாவாட்)
(iii) கீழ்மேட்டூர் (120 மெகாவாட்)

(iv) மணிமுத்தாறு (65 மெகாவாட்)
(v) சண்முகாநதி (30 மெகாவாட்)
(vi) மேல்அமராவதி (20 மெகாவாட்)
(vii) பரலையாறு (35 மெகாவாட்)
(viii) அக்கமலை (25 மெகாவாட்)

இத்திட்டங்கள் அனைத்திற்கும் அதிகச் செலவு ஆகும் என்பதுடன், இவை ஓராண்டில் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே பயன்தரும் திட்டங்களாகும். ஆனால் இவற்றின் மூலம் 520 மெகாவாட் நிறுவு திறனையும் 2,097 மில்லியன் யூனிட் மின்சக்தியையும் கூடுதலாகப் பெறலாம். மேட்டூரில் 330 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் நிலையத்திற்கான திட்ட அறிக்கையும் மத்திய மின்சார அதிகார மன்றத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சிங்கரேணியிலிருந்து நிலக்கரி வழங்குவதற்கும் அனுப்புவதற்குமான சாத்தியக்கூறுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் மூன்ருவது பிரிவுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதால், மேட்டூர் அனல்மின் நிலையத் திட்டம் உடனடியாகத் தேவையற்றதென்று மத்திய மின்சார அதிகாரமன்றம் கருதுவதாகத் தோன்றுகிறது. எனினும், நமது வருங்காலத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேட்டூர் அனல் மின் நிலையத்திட்டம் இன்றியமையாததாக இருப்பதால் அதன் கருத்துக்களை மீண்டும் ஆய்வு செய்யுமாறு மத்திய மின்சார அதிகார மன்றத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

12. ஆருவது திட்ட இறுதியில் தமிழ்நாட்டிற்கு 2,880 மெகாவாட், 15,662 மில்லியன் யூனிட் மின் சக்தி தேவைப்படும் என்று இந்திய அரசின் பத்தாவது ஆண்டு மின்சக்தி ஆய்வுக் குழு மதிப்பிட்டுள்ளது. இது, ஆண்டு உச்சத் தேவை 8·1 சதவீதமாகவும், ஆண்டு மின்சக்தி உற்பத்தி 8·4 சதவீதமாகவும் உயருவதற்கு இணையாகும். ஆனால் தென் மண்டலத்தில் மின் உச்சத் தேவை 9·7 சதவீதமாகவும் மின் உற்பத்தி 10 சதவீதமாகவும் உயரக்கூடும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. நாடு முழுவதற்கும் இதற்கு நிகரான புள்ளி விவரங்கள் முறையே தேவை பெருக்கம் 11·3 சதவீதம்



உற்பத்தி வளர்ச்சி 11·2 சத வீதமும் ஆகும். 'பத்தா
வது ஆண்டு மின் சக்தி ஆய்வுக்குழு' இம் மாநிலத்தின்
தேவையைக் குறைத்து மதிப்பிட்டுள்ளது மட்டுமின்றி
இம் மாநிலத்தின் நலனுக்குப் பாதகமாகவும் உள்ளது.
இந்த மதிப்பீடுகள் 1973–74–ல் 9½ மாதங்களுக்கு
மேலாக 15 சத வீதம் முதல் 75 சத வீதம் வரையிலான
மின் வெட்டு செயலில் இருந்தபோது பயன்படுத்தப்பட்ட
மின்சக்தியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன
என்று தோன்றுகின்றது. இக்குழு, சேலம் உருக்
காலைக்குத் தேவைப்படும் மின் சக்தியின் அளவைக்
குறைத்து மதிப்பிட்டுள்ளதுமன்றி, தொழில்நுட்ப
வளர்ச்சித் துறையின் தலைமை இயக்குநரின் ஒப்புதலை
எதிர்நோக்கியுள்ள சில தொழில்களின் மின் சக்தித்
தேவையையும் கருத்தில் கொள்ளவில்லை. இந்த மதிப்
பீடுகளின் அடிப்படையில் மின் சக்தி உற்பத்தி நிலையைப்
பற்றி திட்டங்கள் வகுத்தால், அது பற்றுக்குறையை
நீடிக்கவே செய்யும். மேலும், தொழில் தேக்கம்,
பொருளாதார மந்தநிலை ஆகியவற்றினின்று விழித்தெழு
வதற்கு மாநிலம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இது
தடையாக அமையும். எனவே, தமிழ்நாடு மின் வாரிய
மும், தென் மண்டல மின் வாரியமும் இது குறித்துத்
தங்களது கருத்து வேறுபாட்டினைத் தெரிவித்துள்ளன.

13. நான்கு தென் மாநிலங்களும் ஒன்றுடன் ஒன்று
பிணைக்கப்பட்டுள்ளன. இதனால், அந்த மாநிலங்களின்
மின் ஏற்பாட்டு முறை ஒருங்கிணைந்து செயல்படவும்
உரிய அளவிற்கு மின் உற்பத்தி செய்யவும், உபரி மின்
சக்தியைப் பிற மாநிலங்களுக்கு மாற்றவும், மின் சக்தி
கிடைக்கும் நிலையை உறுதி செய்யவும், மின் ஏற்பாடு
செவ்வியமுறையில் செயல்பட உறுதி செய்யவும் வழி
ஏற்படுகிறது. தமிழ்நாடு அண்டை மாநில மின் இணைப்பு
ஏற்பாட்டு முறைகளுடன் செவ்வனே இணைக்கப்
பட்டுள்ளது. 230 kv. கூடுதல் இணைப்பின் மூலம்
கேரளா, ஆந்திர மாநிலங்களுடன் அண்மையில் மின்
இணைப்புத் தொடர்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

14. நடப்பாண்டில் வருவாய் வரவு ரூ. 179·80
கோடி என்றும் செலவு ரூ. 209·21 கோடி என்றும்
பற்றுக்குறை ரூ. 29·41 கோடி என்றும் கணக்கிடப்பட்

டுள்ளது. செலவில் பெரும்பகுதி மின் சக்தி வாங்குவதற்கும் எரிபொருள் வாங்குவதற்கும் ஆன செலவாகும். நெய்வேலியிலிருந்து பெறப்படும் மின் சக்திக்கான தொகை ரூ. 52·60 கோடியாகும். கேரளாவிலிருந்து ரூ. 9·63 கோடிக்கு மின் சக்தி வாங்கப்படுகிறது. ரூ. 27·60 கோடிக்கு எரி பொருள் வாங்கப்படுகிறது. திட்டத்தைச் செயல்படுத்தவும் பராமரிப்பதற்கும் பணியாளரமைப்புக்கும் மொத்தம் ரூ. 62·12 கோடியாகும். தேய்மான சேமநிதிக்காகச் செலுத்த வேண்டிய ரூ. 19·75 கோடியில், அந் நிதிக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூ 12·83 கோடியாக வரையறுக்கப்படுகிறது. அரசுக்குச் செலுத்த வேண்டிய ரூ 19·60 கோடி வட்டித் தொகையும் பொதுச் சேம நிதிக்குச் செலுத்த வேண்டிய தொகையான ரூ 2·89 கோடியையும் சரிக்கட்ட இயலாது, புதிய முக்கிய திட்டங்களுக்கான தொகைக்கு வகை செய்ய தேய்மான சேம நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் நடைமுறை இருந்து வருகிறது. இதனுல், பழைய கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளை மாற்றியமைப்பதற்கு வகை செய்யப்படவில்லை. இதற்கான செலவு மேம்பாட்டுப் பணிகளின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இது மூலதனத்திற்குச் சாட்டப்பட்டுள்ளது. இதன் பின்னர், தனிப்பட்ட, அதிக உதவித்தொகையைத் தேய்மான சேம நிதிக்கு வழங்க வகை செய்வது அவசியமாகும்.

15. 1977–78-ல் திட்டச் செலவு ரூ 94·91 கோடியாக இருக்கும். ஆனுல், 1976–77-ல் திட்டச் செலவு ரூ. 77·92 கோடியாக இருந்தது. நிதி ஒதுக்கீடுகள் வருமாறு :

(ரூபாய் கோடியில்.)

| | | |
|---|---|---|
| உற்பத்தி | ... ... ... | 53·25 |
| அனுப்புதல்-பங்கிடுதல் | ... | 28·5 |
| கிராம மின் வழங்கு திட்டம் | ... | 11·2 |
| கையகப்படுத்தல் முதலியவை | ... | 1·95 |

உற்பத்தித் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பெரும் பகுதி நிதி ஒதுக்கம் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்குச் செய்யப்பட்டதாகும். அது ரூ. 43 கோடி



யாகும். நடப்பாண்டு மாநிலத் திட்டச் செலவில் 36·5 சத வீதமாகிய ரூ. 94·91 கோடி மூலதனச் செலவு, வாரியத்தின் நிதிவாயில் உட்பட, அரசிடமிருந்து பெறும் கடன் தொகையான ரூ. 43·54 கோடி பொதுமக்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் பெறும்கடன் ரூ. 15·97 கோடி, கிராமப்புற மின் வழங்கல் கழகம், வணிக வங்கிகள் போன்ற ஏனைய வாயில்களிலிருந்து பெறும் கடன் ஆகியவற்றிலிருந்து ஈடு செய்யப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. மூலதனத் தேவையில் பற்றுக்குறை ரூ 13·90 கோடி ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

16. கிராமங்களுக்கு மின் வசதியளிக்கும் திட்டத்தில் தற்போது நாம் வியக்கத்தக்க சாதனை எய்தியுள்ளோம். ஆயினும், நமது கொள்கையை நாம் மறு ஆய்வு செய்ய வேண்டும். இம் மாநிலத்தில் 12 இலட்சம் கிணறுகளில் 7·97 இலட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2·2 இலட்சம் விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமல் உள்ளன. 1977–78ஆம் ஆண்டுக்கான இலக்கு 30,000 விசையேற்றங்களாகும். மின் இணைப்பு கொடுக்கப்பட்டது குறித்த புள்ளி விவரங்கள் அதிகரிக்க வேண்டுமென்பதற்காக மின் இணைப்பு கொடுப்பதில் பயனில்லை. அதற்கேற்ப மின் அனுப்பும் முறையில் மேம்பாடுகள் காணப்பட வேண்டும். மின் சக்தி உற்பத்தி பெருக வேண்டும். எனவே, மின் இணைப்பு கொடுத்துவிட்டு அதற்கு நிகராக முந்திய ஆண்டுகள் போலவே மின் அனுப்பு ஏற்பாட்டு முறையை மேம்படுத்தாமலும் மின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தாமலும் இருந்து விட்டால் மின் அமைப்பு முறையில் சீர் கேடுகள் ஏற்பட ஏதுவாகும். மேலும், இது மின் சக்தியைப் பயன்படுத்துவோருக்கு அதிருப்தியை ஏற்படுத்தும். இக்குறைபாடுகளை நீக்குவதற்குத் தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின் அனுப்புதல், பங்கீட்டுக்கான செலவு முந்திய ஆண்டுகளான 1976–77 திருத்த மதிப்பீட்டில் ரூ. 14·00 கோடியாகவும், 1975–76-ல் 11 கோடியாகவும் இருந்திருக்க, 1977–78-ல் ரூ, 28·50 கோடியாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் பத்து துணை

நிலையங்களும் 430 கி. மீட்டர் நீளமுள்ள கூடுதல் உயரழுத்த, உயரழுத்த மின் கம்பிகளையும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குகையில் கூட்டுறவு நிறுவனங்கள், கிராம மின் வசதிக் கழகம் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை நிதியுதவி செய்யும் திட்டங்களுக்கும், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அதுவரை புதிய விண்ணப்பங்கள் காத்திருக்கவே வேண்டும்.

17. அண்மை ஆண்டுகளில் செலவினங்கள் பெருமளவில் பெருகியுள்ளபடியால், வாரியத்தின் நிதி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மின் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நிலக்கரியின் விலை 1972—73-ல் டன் ஒன்றுக்கு ரூ. 79-லிருந்து தற்போது டன் ஒன்றுக்கு ரூ. 136 ஆக உயர்ந்துள்ளது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சக்தியின் விலை, 1972—73-ல் யூனிட் ஒன்றுக்கு 8·1 காசாக இருந்தது, தற்போது சுமார் 16 காசாக அதிகரித்துள்ளது. நெய்வேலியிலிருந்து எண்ணெய் மூலம் எரியூட்டப்பட்டு உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் விலை யூனிட் ஒன்றுக்கு 42 காசாகும். கேரள அரசு 1972—73ஆம் ஆண்டில் யூனிட் ஒன்றுக்கு 6·25 காசு என்ற வீதத்தில் மின்சக்தி வழங்கியது. தற்போது இந்த வீதம் யூனிட் ஒன்றுக்கு 12·5 காசாக உயர்ந்துள்ளது. குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடிய புனல் மின்சக்திக்குப் பதிலாக அனல் மின்சக்தியினையே வாரியம் நம்பவேண்டிய நிலை உருவாகியுள்ளது. 1972—73ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1976—77ஆம் ஆண்டில் அனல் மின் நிலையங்களிலிருந்து வாரியத்தால் கூடுதலாக 1,250 மில்லியன் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. 1976—77-ல் தென் மேற்குப் பருவ மழை பொய்த்து நீர்த்தேக்கங்களில், குறைந்த அளவே நீர் வளம் இருந்ததால் நெய்வேலியிலிருந்து அதிகவிலை கொடுத்து கூடுதல் மின்சாரம் பெறவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. அதுமட்டுமின்றி எண்ணெய் மூலம் எரியூட்டப்பட்ட மின் சக்தியையும் அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. 1972—73-ல் யூனிட் ஒன்றுக்கு



மின்சக்தியின் தொகுப்பு விலை
6·2 காசாக இருந்த மின்சக்தியின் தொகுப்பு விலை
6·2 காசாக இருந்தது. குறைவழுத்த
1976—77-ல் 16·3 காசாக உயர்ந்துள்ளது. குறைவழுத்த
மின்சக்தியின் செலவு யூனிட் ஒன்றுக்கு 26 காசிலிருந்து
43 காசாக உயர்ந்துள்ளது. உயரழுத்த மின்
சக்திக்கான செலவு யூனிட் ஒன்றுக்கு 9·19 காசாக
இருந்ததிலிருந்து 21 காசாக அதிகரித்துள்ளது. இவ்
வாறு மின் உற்பத்திச் செலவு பெருமளவில் உயர்ந்
திருப்பினும், மாநில அரசு பின்பற்றும் கொள்கையின்
காரணமாக விவசாயிகள், மின்சக்தியை அதிக அளவில்
பயன்படுத்தும் தொழிற்சாலைகள், மின்சக்தியை வீட்டுக்
காரியத்திற்காகப் பயன்படுத்துவோர் ஆகியோருக்கு
குறைந்த கட்டணத்தில் மின்வசதி அளிக்குமாறு வாரியம்
கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வேளாண்மைக்காக
குறைந்த கட்டணத்தில் மின் வசதி அளிப்பதால் ரூ. 40
கோடியும், தொழிற்சாலைகளுக்குச் சிறப்புக் கட்டண
வீதங்கள் காரணமாக ரூ. 8 கோடியும், மின்சாரத்தை
வீட்டுக் காரியத்திற்கு பயன்படுத்துவோர் வகையில்,
ஆண்டு ஒன்றுக்கு, ரூ. 4·50 கோடியும் மின்வாரியத்திற்கு
இழப்பு ஏற்படுகிறது.

18. 1972—73 லிருந்து 1976—77 வரையிலான இடைப்
பட்ட ஆண்டுகளில் எரிபொருள்களுக்கான செலவு 90
சத வீதமும், வாங்கப்படும் மின் சக்திச் செலவு127 சத
வீதமும், நிர்வாகச் செலவு 82 சத வீதமும் உயர்ந்த
போதிலும், மின் கட்டணம் குறைவழுத்தத் தொழிற்
சாலைகளைப் பொறுத்தவரையில் 50 சதவீதமும், வேளாண்
மைக்கு 57 சத வீதமும், வணிகக் காரியங்களுக்கு 32
சத வீதமும்தான் உயர்த்தப்பட்டுள்ளது. திங்கள்
ஒன்றுக்கு 50 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தைப்
பயன்படுத்துவோருக்கான படிமுறை திட்டத்தை நீக்கப்
பட்டது தவிர, வீட்டுக் காரியங்களுக்காக மின்சாரத்தை
பயன்படுத்துவோருக்கு மின் கட்டணம் எதுவும் உயர்த்தப்
படவில்லை. வீட்டுக் காரியங்கள், வேளாண்மை, தெரு
விளக்குகள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் மின்
சாரம் நீங்கலாக ஏனைய காரியங்களுக்குப் பயன்படுத்தப்
படும் மின்சக்தி மீது யூனிட் ஒன்றுக்கு ஒரு காசு சிறப்பு
மேல்வரி விதிக்கப்பட்டது. இது 1976ஆம் ஆண்டு
ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4.09 கோடி கூடுதல் வருமானம் பெறப்பட்டது. உரத் தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணமும் உயர்த்தப்பட்டது. இவ்வாறு கட்டணங்களை உயர்த்தியபோதும் செலவுத் தொகையினை விட வருவாய் குறைவாக உள்ளது. மின்வாரியம் தனது நிர்வாகத்திலும், நடைமுறையிலும், பெரும் அளவு சிக்கனத்தைக் கையாளும். இருந்த போதிலும் நமது மின்விசை உற்பத்தியில் அனல் மின்சக்தியின் பயன் படிப்படியாக உயர்ந்து வருவதையொட்டி, பெருகிவரும் செலவுகளும் தவிர்க்க முடியாததவையாகும். எனவே, அவற்றுக்கு நிகரான அளவில் மின் கட்டணங்களும் திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது. என்றாலும், மின்சாரத்தைப் பயன் கொள்கின்ற பல்வேறு தரப்பட்டவர்களிடமிருந்து அவரவர் பொருளாதார நிலைக்கு ஏற்ற வகையில் மின் கட்டண வீதங்கள் உரிய வீதத்தில் அமைந்திருக்கும் வகையில் கட்டண வீதங்களை மாற்றியமைப்பது, அரசின் கொள்கையாக இருக்கும்.

19. வேளாண்மைக் காரியங்களுக்காக மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு 1975-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் தேதி முதல் மின்சக்திக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தப்பட்டது; திங்களொன்றுக்கு விசையேற்றம் ஒன்றுக்கு ரூ. 10 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, மாதம் ஒன்றுக்கு ஒரு பரித்திறனுக்கு ரூ. 2·50 என்ற வரையறுக்கப்பட்ட கட்டணம் 1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதி அன்று விதிக்கப்பட்டது. ஆனால் விவசாயிகளிடமிருந்து முறையீடுகள் வந்ததன்பேரில், வரையறுக்கப்பட்ட கட்டணமும், உச்சவரம்பும் பாதியாகக் குறைக்கப்பட்டன. சிறு விவசாயிகளின் இடர்ப்பாடுகளையும், மாநில அரசின் பொருளாதாரத்திற்கு அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாயுள்ளனர் என்பதையும் கருத்தில் கொண்டு, யூனிட் ஒன்றுக்கு 16 காசாக இருந்த மின்சக்திக் கட்டணத்தை 1977-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் தேதி முதல் இந்த அரசு 14 காசாகக் குறைத்துள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 7·50 கோடி இழப்பு ஏற்படும். தொடர்ச்சியான மூன்று மாதங்களில் பயன்படுத்தப்பட்ட உயர்ந்த அளவு மின்சக்தியின்



அடிப்படையில் கணக்கிடப்பட்ட பிணைய வைப்புத் தொகை, தொடர்ச்சியான மூன்று மாதங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் சராசரி அளவையொட்டிக் கணக்கிடப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. ஆண்டு குறைந்தளவு கட்டணங்கள் மொத்தமாக நீக்கப்பட்டுள்ளன.

20. விவசாயிகளின், குறிப்பாகச் சிறு விவசாயிகளின், நியாயமான இன்னல்களை இந்த அரசு அறிந்துள்ளது. விவசாயிகளின் பிரச்சினைகளை ஆழ்ந்து பரிசீலித்துத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள பரிவுரை செய்வதற்காக வேளாண்மைப் பொருளாதார வல்லுநர்கள், அதிகாரிகள், விவசாயிகளின் பிரதிநிதிகள் ஆகியோரடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

21. மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களின் மனநிறைவே வாரியத்தின் திறமைக்குச் சான்றாகும். மின்சக்தியை அனுப்புதல், பங்கீடு செய்தல் முறைகளைப் பேணி மேம்பாடு செய்வதற்குப் போதிய அளவில் இது வரை நாட்டம் செலுத்தப்படவில்லை. நிதி வசதி இல்லாமையால் சென்னை மின்சக்தி ஏற்பாட்டினை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. மின்சக்தி வழங்கலின் தரத்தையும், அது உறுதியாகக் கிடைப்பதையும் மேம்படுத்த வாரியம் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மின் பங்கீட்டுப் பிரிவில், மின்சுமை அதிகமுள்ள டிரான்ஸ்பார்மர்களுக்கு பதிலாக, உயர் அழுத்த டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டு வருகின்றன; அல்லது அங்கு கூடுதலாக டிரான்ஸ்பார்மர்கள் வைக்கப்பட்டு வருகின்றன. கூடுதல் மின்கம்பித் தொடர்கள் அமைக்கப்படுகின்றன. சென்னை மின்சார ஏற்பாட்டில், மின்சக்தி ஓட்டத் தடையை தவிர்க்க கூடுதல் மின்கம்பிச் சுருள்களும் மின்சாரக் கம்பிப் பெட்டிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. பழையனவாகிவிட்ட மின் இணைப்புகளுக்குப் பதிலாகப் புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மேம்பாட்டுப் பணிகளுக்கென்றே ரூ. 6·60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சக்தி குறைவாக உள்ள

பகுதிகளைக் கண்டறிவதற்காக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுகள் நல்லமுறையில் நிறைவேற மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. அனுமதி வழங்கப் பட்ட மின்சுமையுடன், அனுமதியின்றி மின்சக்தியை பலர் சேர்த்துக்கொண்டுள்ளார்கள் என்று அறியப் படுகிறது. (அனுமதியற்ற மின்சுமை உட்பட) மொத்த மின் இணைப்புக்களை அறிந்தாலொழிய மற்றப்படி முறை யான அடிப்படையில் மேம்பாடுகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுவது கடினமே.

22. மின்கம்பித் தொடரில் ஏற்படும் மின்சக்தி இழப்புக்களை மிக உன்னிப்பாகக் கவனித்து குறைக்கப் படுகின்றன. மின்சக்தியை அனுப்புதல், பங்கீடு செய் தல் முறையில் மேம்பாடுகள் செய்வதன் மூலம், தொழில் நுட்பவகையில் ஏற்படும் இழப்புகள் சரி செய்யப்படு கின்றன. மின்சக்தி திருடுவதையும் மின் கட்டண மோசடியையும் கண்டுபிடித்துத் தடுக்க மின் இணைப்பு களைக் குறித்து முறையான திடீர் சோதனைகள் நடத்துவது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 1974-75-ல் 96,000 மின் இணைப்புகள் பார்வையிடப்பட்டிருக்க, 1975-76-ல் 3,90,000 மின் இணைப்புகளும், 1976-77-ல் 17,31,000 மின் இணைப்புகளும் பார்வையிடப்பட்டன. குறைவழுத்த மின்சக்தியைப் பயன்படுத்துபவர்கள் குறிப்பிட்ட திறன் கொண்ட குறைவழுத்த மின்சக்தி சேமிக்கும் கருவிகளை (Capacitors) அமைக்குமாறு கேட்டுக்கொண்டு, மின்சக்தி வழங்குவதற்கான நிபந் தனைகளும், வரையறைகளும் திருத்தியமைக்கப்பட் டுள்ளன. மின்சக்தி திருட்டுப்போதல், மின் கட்டண மோசடி, அனுமதியின்றி மின் சுமைகளை நீட்டித்தல் முதலியவற்றிற்குக் கடுமையான தண்டனை அளிக்கப் பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளால், 1973-74-ல் 21·4 சதவீதமாக இருந்த மின் கம்பித் தொடர் இழப்பு கள் 1976-77-ல் 18·34 சத வீதமாகக் குறைந்தன ; 1971-72-ல் இருந்த இழப்புகளின் சத வீதத்தைக் காட்டி லும் இது குறைவாகும். நமது நாட்டிலேயே தமிழ் நாடு மின்வாரியம் அதிகமான குறைவழுத்த மின்சக்தி ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது ; இதேமாதிரியான





பங்கீட்டு முறையைக் கொண்ட ராஜஸ்தான், ஹரி யாணு, ஆந்திரப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் போன்ற பிற மாநிலங்களில் உள்ள நிலையை ஒப்பிடுகையில் தற் போதுள்ள அளவு நியாயமானதே.

23. இந்த வாரியத்தில் சுமார் 94,000 ஊழியர்கள் உள்ளனர். இவர்களில் 3,973 பேர் I, II ஆம் வகுப்புப் பணியாளர்களாவர் ; 42,903 பேர் III ஆவது வகுப்பையும், 44,477 பேர் IV ஆவது வகுப்பையும், 2,621 பேர் பிற வகைகளையும் சேர்ந்த பணியாளர் களாவர். ஊழியர்களின் குறைகளைக் கவனிக்க தேவை யான நிர்வாக ஏற்பாடுகள் செயலில் உள்ளன. பணி யாளரமைப்பு, தொழிலாளர் நலன் பிரச்சினைகளில் கால தாமதம் ஏற்படுவதை நீக்க நடைமுறைகளும் வழிமுறை களும் மாற்றியமைக்கப்படும். பணித் தேவைகள் தொடர்பான ஆட்படை ஊற்றத் திட்டங்களைத் தயா ரிக்கவும், அதற்கேற்ப ஆட்படை ஊற்றத்தைப் பயன் படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

24. வாரியம் தனது நடவடிக்கைகளைச் சீரமைக்க வும் திறமையை மேம்படுத்தவும், அறிவியல், நிர் வாகத் தொழில்நுட்ப உத்திகளையும் நிர்வாக மாற்றல் களையும் கொண்டு வந்துள்ளது. வாரியத்தின் போக்கு வரத்துப் பிரிவு குறித்து விரிவான ஆய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது. அதனை உரியவாறும் சிக்கன மாகவும் பயன்படுத்த அந்தப் பிரிவு தனி அதிகாரி ஒருவரின் நிர்வாகத்தின் கீழ் விரைவில் செயல்படவிருக் கிறது. பொருள்களை வாங்குவது 1976-77-ல் சுமார் 4·44 கோடி ரூபாய் அளவிற்குக் குறைக்கப்பட்டது. பொருள்கள் பட்டியலிலிருந்து பொருள்கள் வாங்குவது தொடர்பாகச் சிக்கன நடைமுறையை மேம்படுத்து வதற்காக ஆலோசனையாளர்கள் அளித்த அறிக்கை பரிசீலனையில் உள்ளது. இதன் மீது விரைவில் நட வடிக்கை எடுக்கப்படும்.

25. அரசு கணக்கிடும் முறையை வாரியம் பின் பற்றுகிறது ; வணிக நிறுவனம் ஒன்றிற்கு இது ஏற்ற தல்ல. பொருத்தமான கணக்கிடும் முறையை உரு வாக்குவதற்காக ஆலோசனையாளர்கள் நியமிக்கப்

பட்டனர். அவர்கள் அளித்த பரிவுரைகள் பரிசீலிக்கப் பட்டுள்ளன ; அடுத்த நிதியாண்டிலிருந்து புதிய முறை யைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

26. வாரியத்தில் உள் தணிக்கைப் பிரிவு அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று முறையில் கட்டுப்பாடு செலுத்தவும், முடிவு செவ்விய உதவவும், நிர்வாகத்திற்கு இயலும் வகையில் எடுப்பதில் தகவல் முறையின் ஒரு பகுதியாக நிர்வாக நிர்வாகத் வைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்பார் பிரச்சினைகள் குறித்து வாரியத்திற்கு ஆலோசனை சட்டப் தனிப்பட்ட சட்டப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள் கூற ளது. நடைமுறைகளையும் வழிமுறைகளையும் காலத் திற்கேற்ப மாற்றியமைக்க நிர்வாக-நடைமுறைப் பிரிவு ஒன்றும், தொழிற்சாலைப் பொறியியல் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

27. செம்மையான நிர்வாகத்திற்கு பயிற்சி ஒரு முக்கியத் தூண்டுகோலாகும். மின்வாரியம் போன்ற பெரிய நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் தங்களின் பணி களைச் செம்மையாகவும் ஆர்வத்துடனும் செய்வதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். பணி யில் காட்டும் தனித் திறமை சூழ்நிலைக்கேற்ப போதிய அளவிற்கு நவீனமானதாகவும் உரியவாறும் இருத்தல் வேண்டும். புதிய தொழில்நுட்ப மேம்பாடுகள் உரிய வகையில் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். மத்திய மின்சக்தி அதிகார மன்றத்தின் ஒத்துழைப்புடன் இந்த வாரியம் தனது பணியாளர்களைச் சிறப்புத் தொழில் நுட்பப் பயிற்சிக்காக ஐக்கிய சோவியத் சோசலிசக் குடியரசு, ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு மற்றும் பிற நாடுகளுக் கும் அனுப்பியுள்ளது. நிர்வாகம்-தொழில் பொறியியலில் பணியிடைப் பயிற்சிக்காக உள்நாட்டிலேயே பயிற்சி நிறு வனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி இயக்குநர் ஒருவரின் (இவர் இப்பணியைக் கவனிப்பதற்கென்றே தனியாக நியமிக்கப்பட்டுள்ளார்). கட்டுப்பாட்டின் கீழ் இந்த வாரியத்தில் மூன்று பயிற்சி நிலையங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஆராய்ச்சியும் வளர்ச்சி யும் இதையொத்த முக்கியத்துவம் வாய்ந்தவைக



ளாகும். இதற்கு வாரியத்தில் தனிப்பட்ட அமைப் பொன்று உள்ளது. "ரிலே சோதனை சாதனம்" (Relay Testing Kit) ஒன்றைக் குறைந்த செலவில் இத்துறை உருவாக்கியதற்காக மத்திய பாசன மின்சக்தி வாரியத்திடமிருந்து பரிசு ஒன்றை இத்துறை பெற்றது பாராட்டத்தக்க சாதனையாகும்.

28. கடந்த நவம்பர் திங்களில் தமிழ் நாட்டின் கரையைக் கடந்த புயலானது தஞ்சை, திருச்சி, மதுரை மாவட்டங்களிலுள்ள மின் வழங்கு நிலையங்களுக்கும் மின் கம்பித் தொடர்களுக்கும் பெருத்த சேதம் விளைவித்தது. நாகப்பட்டினத்திலுள்ள துணைமின் நிலையமும், திருவாரூர் நாகப்பட்டினத்திற்கு இடையேயுள்ள மூன்று உயர் மின் னழுத்த கோபுரக்கம்பித் தொடர்களும் (66 கி. வோ.) மிக அதிக அளவில் சேதமடைந்தன. இதனால் மின் வாரியத்திற்கு ஏற்பட்ட சேதம் ரூபாய் நான்கு கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங் களுக்கு மின்வாரியம் உடனடியாக ஊழியர்களையும், மின் சாதனங்களையும் அனுப்பி சகஜ நிலையை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. மின்வாரிய ஊழியர்களால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புயல் கரையைக் கடப்பதற்கு சற்று முன்பாகவே மின் விசையை நிறுத்தினமையால் விபத்துக்கள் நிகழாமல் தவிர்க்கப்பட்டது.

29. ஒரு பொதுச் சேவையில் ஈடுபடும் நிறுவனம் புகார்களை உரியவாறு கவனிப்பதன் மூலமும், குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதன் மூலமும் பயன்கொள் வோரின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. சென்னை மாநகரில் இப்பணிகளை கவனிக்கத் தலைமை யிடத்தில் புகார் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. பொது மக்களிடமிருந்து வரும் புகார்களைக் கவனிப் பதற்காக அதிகாரிகள் தங்கள் அலுவலகங்களில் திங்கட் கிழமை தோறும் இருக்க வேண்டுமென அவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மின்சக்தி வழங்கும் அலுவலகங்களில் உள்ள பிரிவு அதிகாரிகள் அந்த நிலை யங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அவரவரது அலுவலகங்களில் உள்ளனர்.

பிழைச் செயல்கள், தாமதம் ஆகியவற்றை அறவே ஒழிப் பதற்கான, முறையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

30. மின் வாரியம் செயல்படுவது குறித்தும் வருங் காலத்தில் அது மேற்கொள்ளவிருக்கும் பணிகள் குறித் தும், மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த இவ்வுரையின் வாயிலாக நான் ஓரளவுக்கு முயன்றுள் ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்ற அளவு மின் வாரியம் செயல்பட, வாரியமும் இவ்வரசும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள் ளும் என நான் உறுதியளிக்கிறேன். இம் முயற்சியில் உதவும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக் களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

## இணைப்பு

அ.

### தமிழ்நாட்டில் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | திட்ட காலங்களில் முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி) | முதலாவது திட்டம், 1951–56. | இரண்டாவது திட்டம், 1956–61. | மூன்றாவது திட்டம், 1961–66. | வருடாந்திர திட்டம் (1966–69) 3 ஆண்டுகள். | நான்காவது திட்டம், 1969–74. | 1977 மார்ச் திங்கள் 31-ல் உள்ளபடி. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| **மின் உற்பத்தி.** | | | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகா வாட்டுகளில்). | 156 | 256 | 571 | 1,070 +300* | 1,070 +400* | 1,654 +600* | 1,764 +600* |
| 2. மின்சக்தி உச்சத் தேவை (மெகா வாட்டுகளில்). | 110 | 172 | 381 | 717 | 997 | 1,287** | 1,313 |
| 3. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 5,260 | 6,948 | 8,350 |
| **மின் அனுப்புதலும் வினியோகித்தலும்.** | | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 48,336 | 68,737 | 71,569 |
| 2. குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 104,977 | 197,017 | 213,939 |
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 165 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள் | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 139 |
| 5. மின் பங்கீட்டு நிலையங்கள் .. .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 22,842 | 37,453 | 42,499 |
| 6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.5 | 4.3 | 7·7 | 13·6 | 18·22 | 27·07 | 32·23 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 92 | 116 | 127 | 146 |

தமிழ்நாட்டில் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | திட்ட காலங்களில் முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி) | முதலாவது திட்டம், 1951–56. | இரண்டாவது திட்டம், 1956–61. | மூன்றுவது திட்டம், 1961–66. | வருடாந்திர திட்டம் (1966–69) 3 ஆண்டுகள். | நான்காவது திட்டம், 1969–74 | 1977 மார்ச் திங்கள் 31-ல் உள்ளபடி. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| **கிராம மின் வசதி.** | | | | | | | |
| 1. மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 31,727 | 61,072 | 63,274 |
| 2. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 117,695 | 256,594 | 410,119 | 681,205 | 784,643 |
| **செலவும் வருவாயும்.** | | | | | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்). | 23·82 | **5·401 | 133·21 | 253·28 | 356·07 | 552·20 | 726·32 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்). | 3·18 | 5·94 | 15·82 | 34·67 | 50·22 | 114·28 | 218·42 |

**தீவிர மின்வெட்டின் விளைவாக குறைக்கப்பட்ட அளவு :

1,326 மெகாவாட்டு, 1,528 மெகாவாட்டு முறையே பதிவு பெற்றது 1971–72 மற்றும் 1975–76.

* நெய்வேலி. † அரசு உதவித் தொகை சேர்த்து

## இணைப்பு

### தமிழ்நாடு ஆ. மின் வாரியம்.

1974–75 முதல் 1976–77 முடிய 5-வது திட்டக் காலத்தில் மின பட்ட திட்டங்களின் பேரிலான செலவும், 1977–78 ஆம் ஆண்டுக்கான திருத்தப் மதிப்பீடும்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| வரிசை எண், மின் திட்டத்தின் பெயர். | ஐந்தாவது திட்டக் கால ஒதுக்கீடு. | ஏற்பட்ட செலவு. 1974–75. | 1975–76. | 1976–77. (தோராயமாக) | 1977–78 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. அ. தொடர்ந்து வரும் திட்டங்கள். | | | | | |
| 1 குந்தா நீர்மின் திட்டம் 3-ம் நிலை .. .. .. | 429 | (—) 36·25 | 3·20 | (—) 4·02 | 4·19 |
| 2. பரம்பிக்குளம்-ஆளியாறு மின் திட்டம் .. .. | 9 | 12·10 | 1·39 | (—) 8·76 | 10·86 |
| 3. கோதையாறு நீர்மின் திட்டம் .. .. .. | 84 | 74·86 | 84·63 | 143·67 | 9·49 |
| 4. சென்னை மின் திட்டம் விரிவாக்கம் 4-ம் நிலை .. | .. | 6·77 | 1·96 | 11·59 | 1·80 |
| 5. எண்ணூர் அனல் மின் திட்டம் .. .. .. | 235 | 57·09 | 25·16 | (—) 47·14 | (—) 34·77 |
| 6. எண்ணூர் விரிவாக்கம் .. .. .. .. | 507 | 508·33 | 218·22 | 152·83 | 91·52 |
| 7. பாண்டியாறு புன்னம்புழா மின் திட்டம் .. .. | 1,451 | (—) 0·09 | 0·24 | 128·44 | 3·36 |
| 8. குந்தா நீர்மின் திட்டம் 4-ம் நிலை .. .. .. | 626 | 148·29 | 428·02 | 125·79 | 82·30 |
| 9. பேஸின்பிரிட்ஜ் மின் நிலையம் மேம்பாட்டுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | 5·00 |
| ஆ. புதிய திட்டங்கள். | | | | | |
| 10. நடுவட்டம் நீர்திருப்பு திட்டம் .. .. .. | 53 | 82·85 | 57·02 | (—) 8·39 | 39·54 |
| 11. எண்ணூர் மேம்பாடு திட்டம் .. .. .. | .. | .. | 160·76 | .. | 35·00 |
| 12. காடம்பாறை நீர்மின் திட்டம் .. .. .. | 2,200 | 148·46 | 60·20 | (—) 88·18 | 50·00 |
| 13. சேர்வலார் நீர்மின் திட்டம் .. .. .. | 521 | 81·84 | 34·26 | 13·19 | 75·00 |
| 14. நெல்லித்துறை நீர்மின் திட்டம் .. .. .. | 666 | 1·68 | (—) 4·74 | 0·31 | (—) 3·30 |
| 15. சுருளியாறு நீர்மின் திட்டம் .. .. .. | 371 | 147·06 | 242·90 | 563·77 | 650·51 |

1977 டிசம்பர் 28]

இணைப்பு

தமிழ்நாடு

1974-75 முதல் 1976-77 முடிய 5-வது திட்டக் காலத்தில் மின் பட்ட

இணைப்பு

தமிழ்நாடு

1974-75 முதல் 1976-77 முடிய 5 வது திட்டக் காலத்தில் மின் பட்ட

| வரிசை எண், மின் திட்டத்தின் பெயர். | ஐந்தாவது திட்டக் கால ஒதுக்கீடு. | தோராயமாக ஏற்பட்ட செலவு. 1974–75. | 1975–76. | 1976–77. | 1977–78 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் | இலட்சத்தில்.) | | | |
| 16. தூத்துக்குடி அனல் மின் திட்டம் .. .. .. | 8,200 | 100·37 | 1,173·37 | 3,428·27 | 3,937·00* |
| 17. தூத்துக்குடி 2-ம் நிலை .. .. .. .. | .. | .. | .. | .. | 513·00 |
| 18. மேல்கொடுமந்து லோன் பள்ளத்தாக்கு 1-ம் நிலை. | † | 0·28 | 5·58 | 32·28 | 33·18 |
| 19. மேல்கொடுமந்து லோன் பள்ளத்தாக்கு 2-ம் நிலை. | † | .. | .. | .. | 10·00 |
| 20. மேற்கு மலை தொடர்ச்சி மேம்பாடு திட்டம் (இடுக்கி 2-ம் நிலை). | 1,600 | .. | .. | .. | .. |
| 21. புதிய திட்டங்கள் பேரில் முன்னோடி நடவடிக்கைகள். | 1,048 | .. | .. | .. | .. |
| துணை கூடுதல் (மின் உற்பத்தி) .. .. .. | 18,000 | 1,360·64 | 2,492·17 | 4,443·65 | 5,513·68 |
| II மின் அனுப்புதல், பங்கீடு செய்தல் .. .. .. | 9,000 | 1,314·44 | 1,393·43 | 1,653·09 | 2,250·00 |
| III கிராம மின் வசதி .. .. .. .. .. | 5,000 | 918·50 | 1,367·76 | 1,674·12 | 1,552·00 |
| IV மின் நிறுவனங்களை கையகப்படுத்துதல் .. .. | 550 | 0·03 | .. | .. | 150·00 |
| V புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு .. .. .. | 40 | 14·18 | 16·55 | 18·61 | 19·70 |
| VI மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் .. .. .. | 10 | 1·86 | 2·67 | 2·59 | 5·25 |
| மொத்தக் கூடுதல் .. | 32,600 | 3,609·65 | 5,272·58 | 7,792·06 | 9,490·63 |

† 21-வது இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

*முதலில் ஒதுக்கீடு ரூ. 4,300 இலட்சங்கள்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

## வியாழக்கிழமை, 1977, டிசம்பர் 29.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 28—12—1977 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் மலபார் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியிலும், கோழிக்கோடு கிறித்துவக் கல்லூரியிலும், சென்னை லயோலாக் கல்லூரியிலும் கல்வி பயின்றார்; 1929-30 ஆம் ஆண்டில் மாணவர் காங்கிரசில் மாணவர் தலைவராகவும், துணைச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்; 17 ஆண்டுகள் சென்னை மாநகராட்சி உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்; சாரதா கல்வி டிரஸ்டின் தர்மகர்த்தாவாகப் பணியாற்றியுள்ளார்; "போல் ஸ்டார்" வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர்.

1971-ல் இருந்து 1976 ஆம் ஆண்டுவரை சென்னை தியாகராய நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

அன்னாரின் மறைவுகுறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. வி. அருணாசலத்தேவர் அவர்கள் 29—10—1977 ஆம் தேதி யன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. அருணாசலத் தேவர் அவர்கள் இலங்கையிலும், புதுக் கோட்டையிலும் கல்வி பயின்றார். 1933 ஆம் ஆண்டிலிருந்து புதுக்கோட்டை கவுன்சில் உறுப்பினராக 15 ஆண்டுகள் பணிபுரிந் தார்; புதுக்கோட்டை மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பணியாற்றியுள்ளார்; புதுக்கோட்டையைச் சேர்ந்த கொளத்தூர் தாலுகாவில் இருந்த பாரத் சேவக் சமாஜத்தின் அமைப்பாள ராகத் திகழ்ந்தவர். புதுக்கோட்டையில் கூட்டுறவு இயக்கத்தில் பங்கேற்றவர்.

1957-லிருந்து 1962 ஆம் ஆண்டுவரை திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ஆலங்குடி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. வி. அருணாசலத் தேவர் நல்ல முறையில் பணி யாற்றினார்கள்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள் கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவர் அவர்களே, திரு. என். பி. இராமையா அவர்கள் 21—12—1977 ஆம் தேதி அன்று மறைந் தார்கள். அதற்கான தீர்மானம் இன்னமும் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிய குறிப்பு நேற்றே அவையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ்நாடு மாநிலத் தொலைநோக்குத் திட்டம்.

* 31 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நமது மாநிலத் திட்டக் குழு 10 ஆண்டு தொலை நோக்குத் திட்டம் ஒன்றினைத் தயாரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) ஆம்.

(ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் தொடங்கும் 10 ஆண்டுக்கால அளவுக்குத் (1974-84) தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங் களாவன:—

(1) 1984 ஆம் ஆண்டு அளவில் இம் மாநிலத்தின் தபர்வாரி உண்மை வருமானத்தை இரட்டிப்பாக்குதல்; (2) முழு அளவில் வேலைவாய்ப்பு அளித்தல்; (3) குறைந்த அளவு தேவைகள் குறித்த தேசியத் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம், மிகக் கொடிய வறுமை நிலைகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல்; (4) சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்; (5) சமூக அமைப்பையும் சமூக நிலைமைகளையும் மாற்றுவதன் மூலம் சமுதாய மாற்றங்களை விரைவுபடுத்தல்; (6) கலாச்சார நிகழ்ச்சி களுக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும், சமுதாயத்தினர் பங்கு கொள்ளச் செய்வதன் மூலமும், பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை மக்கள் திட்டமாக்குதல்; (7) திட்டமிடுதல், வளர்ச்சிப் பணி, நிதிவளம் திரட்டுதல் ஆகியவற்றைப் பரவலாக்குதல்.

இந்த நோக்கங்களை எய்த, மொத்தம் 9,760 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு இத்திட்டம் வகை செய்கிறது. தனியார் துறை முதலீடும் மத்திய அரசு முதலீடும் இதில் அடங்கும். பொருளா தாரத்தின் பல்வேறு துறைகளில் சமநிலைத் திட்டத்தை மேற் கொள்வதன் மூலம் இந்த நோக்கங்களை எய்த இயலும்.

[1977 டிசம்பர் 29

**திரு. என். இட்டப்பா:** தலைவர் அவர்களே, இதற்காக நிதி ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறதா? இல்லையென்றால் எப்போது இந்தத் திட்டம் துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இந்தத் தொலை நோக்குத் திட்டம்—'பர்ஸ்பெக்டிவ் பிளான்' பத்து வருடத்திற்கு என்று தயாரிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு நம்முடைய மாநிலத்திற்கு என்று ஸ்டேட் பிளானிங் கமிஷன் உருவாக்கப்பட்டு அப்போது முதலமைச்சராக இருந்தவர் தலைவராகவும், அதற்குப் பிறகு டெபுடி சேர்மன், மேற்கொண்டு மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டு, இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. திட்டம் தயாரிக்கப்பட்ட நிலையில் அப்படியே இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தப்படாத நிலையில் அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்த 'பர்ஸ்பெக்டிவ் பிளான்' எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை என்று குறிப்பிடப்பட்டது? இப்போது நடைமுறைத் திட்டத்தில் எது எது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இந்தத் திட்டம் பத்தாண்டுகளுக்கு 1974-ல் இருந்து 1984 வரை. இதற்கிடையில்—உங்களுக்குத் தெரியும்—புதிய அரசு பொறுப்பேற்று ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பற்றிய விரிவான பரிசீலனை சர்க்காரின் கவனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பண்ணை கே. சேதுராம்:** இந்தப் பத்தாண்டு தொலை நோக்குத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி உண்டா? எவ்வளவு சதவிகிதம் உதவி செய்கிறது? மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கிராமந்தோறும் சிறு தொழில்களை



1977 டிசம்பர் 29]

நிறுவ மத்திய அரசு உதவியோடு காந்தி கண்ட இராம ராஜ்யத்தை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இந்தத் திட்டத்திற்கு, நான் ஆரம்பத்திலேயே தெரிவித்தது போல், 9,760 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதிலே மாநிலத்தின் மூலம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 1,365 கோடி ரூபாயும், மத்திய சர்க்காரின் மூலம் 780 கோடி ரூபாயும் தனியார் துறை மூலம் 1,105 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 3,250 கோடி ரூபாய் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாநில அரசின் மூலம் 2,734 கோடி ரூபாயும், மத்திய அரசு 1,562 கோடி ரூபாயும், தனியார் துறை மூலம் 2,214 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 6,510 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பர்ஸ்பெக்டிவ் பிளான் மொத்தமாகக் கணக்கெடுத்துப் பார்த்தால் 9,760 கோடி ரூபாய்.

**திரு. என். வரதராஜன்:** நம்முடைய நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் கொள்கையளவில் தோல்வியடைந்திருக்கிறது என்ற உணர்வு இருக்கிறது. இந்தத் தமிழகத்தின் தொலை நோக்குத் திட்டத்தில் அடிப்படையான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் திட்டமும், சாதாரண மனிதனுடைய வருவாயை இரட்டிப்பாக்கும் இந்த அற்புதமான திட்டத்தை எந்தக் கொள்கை வழியில் நின்று அமல் நடத்த வேண்டுமென்று இப்போது அரசாட்சியில் இருக்கும் அரசு முடிவு செய்து வைத்திருக்கிறது? அதை அரசு சபை முன் வைக்குமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** பர்ஸ்பெக்டிவ் பிளான்—பத்தாண்டுத் திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டது. திட்டத்தின் நோக்கங்கள் பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேன். உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதிலே தேவையான அம்சங்களை நிறைவேற்றுவதில் இந்தச் சர்க்கார் தயக்கம் காட்டாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ந. பழனிவேல்:** ஐந்தாண்டுத் திட்டம் இப்போது நடைமுறையில் இருக்கிறதா? அல்லது கைவிடப்பட்டு விட்டதா? ஐந்தாண்டுத் திட்டம் கைவிடப்பட்டிருக்குமானால் பத்தாண்டுத்

திட்டத்தை நிறைவேற்ற நிதிநிலை மாநில அரசுக்கு உண்டா? அல்லது முழுக்க முழுக்க மத்திய அரசை நம்பித்தான் இந்தத் திட்டம் தயாரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.10)

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் ஏற்கனவே, மாநில அரசு, மத்திய அரசு, தனியார் துறை இவைகள் எவ்வளவு எவ்வளவு முதலீடு செய்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் தரப்பட்டு இருக்கிற புள்ளி விபரங்களைச் சபைக்குத் தெரிவித்து விட்டேன். இதை எப்படி அமல்படுத்துவது என்பது பற்றியும், இதை எந்த எந்த முறையில் அமல்படுத்துவது என்பதுபற்றியும், எந்த அளவிற்கு இதை விரைவில் அமல் நடத்த வேண்டும் என்பது பற்றியும், இந்த பர்ஸ்பெக்டிவ் பிளானில் திருத்தங்கள் தேவையா என்பதைப்பற்றியும் இந்த அரசு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** இந்தத் திட்டம் செயல்முறைக்கு ஏற்றதாக இருக்கிறதா? அல்லது வேறு திட்டம் ஏதாவது கொண்டுவர அரசு யோசிக்கிறதா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் திருப்பியும் சொல்கிறேன். இந்தத் திட்டத்தை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் தேவையான அளவிற்கு அமையுமானால் முந்தைய சர்க்கார் இந்தத் திட்டத்தைத் தயாரித்து இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் இந்தத் திட்டத்தை சர்க்கார் கைவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** முந்தைய ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு ஏற்று இருக்கிற அந்த அடிப்படையில் அந்த பேக்ரவுண்டில் இந்த டென் இயர்ஸ் பிளான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஐந்தாண்டுத் திட்டம் இப்போது கைவிடப்பட்டு விட்டது என்றும், அதற்குப் பதிலாக ரோலிங் பிளான் என்பதைக் கொண்டுவர வேண்டுமென்றும் மத்திய சர்க்கார் இப்போது சொல்லி வருகிறது. அதைப்பற்றி மத்திய அரசாங்கம் இந்த



அரசாங்கத்திற்குத் தகவல் அனுப்பியிருக்கிறதா? அப்படித் தகவல் அனுப்பியிருந்தால் அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடம் இந்த அரசு ஏதாவது சொல்லியிருக்கிறதா? அப்படியென்றால் அதற்குத் தகுந்தபடி இந்தத் திட்டத்தில் என்ன என்ன மாடிபிகேஷன்களைச் செய்யப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ரோலிங் உண்டா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நீங்கள் ரோல் ஆகாமல் இருந்தால் சரி.

**திரு. ரா. உமாநாத்:** நாங்கள் எப்போதும் ரோல் ஆக மாட்டோம்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** ரோலிங் பிளான் என்பதற்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல பெயரை வைக்கலாம். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அதற்கு சுழல் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இது அன்யுவல் பிளான், இதைப்பற்றிய விரிவான கைட் லைன்ஸ் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் அதைப்பற்றி டாக்டர் ராஜ்கிருஷ்ணா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு அந்த சுழல் திட்டத்தைப் பற்றி நம்முடைய பிரதம அமைச்சர் அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு பிளானிங் கமிஷன் டெபுடி சேர்மன் லக்டாவாலா அவர்களோடு பேசுகின்ற வாய்ப்பை நான் பெற்றபோது இது குறித்து விபரங்கள் உள்ளடக்கிய தகவல்களை உங்களுக்கு அனுப்புவோம், உங்கள் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள முயல்வோம் என்று தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு பிரதம அமைச்சர் அவர்கள் நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் வைத்து இந்தச் சுழல் திட்டத்தை விவாதிக்கலாம் என்று சொல்லி தகவல் வந்து இருக்கிறது. ஆகவே சுழல் திட்டம் பற்றிய விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதைப்பற்றித் தெளிவாகத் தகவல்கள் வருமுன் மாநில அரசு தனது கருத்தைத் தெரிவிக்க இயலாத நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவர் அவர்களே, திட்டம் என்பது நம்முடைய இந்திய நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்து, நம் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்து அமைய வேண்டும். திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இதற்கு சுழல் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய முடியுமா? இந்தத் திட்டத்தை தேசிய வளர்ச்சி மன்றத்திலே வைத்து விவாதித்த பிறகு அதைப்பற்றி இந்த மன்றத்திலேயும் விவாதித்து அதிலே தேவையானால் திருத்தங்கள் செய்ய நம்முடைய மன்றம் ஆலோசிக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** பாலத்தை நெருங்கும் போது அதைக் கடக்க முயற்சிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சௌந்திரராசன்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசால் தயாரிக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் 1974 ஆம் ஆண்டு ஆரம்பித்து 1984 ஆம் ஆண்டு நிறைவேற்றி முடிய வேண்டிய திட்டம். 1976 ஆம் ஆண்டு வரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தது. அந்த ஆட்சி ஏன் இதை எடுத்துக் கொள்ளவில்லை என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவரவர்களே, அதைப் பற்றி அப்பொழுது முதலமைச்சராக இருந்தவர்கள் இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர்கள் விளக்கம் தரக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, 'பர்ஸ்பெக்டிவ் பிளான்' அதாவது தொலைநோக்குத் திட்டம் என்ற அடிப்படையில் பத்தாண்டுகளில் பிரிவுகள் பார்த்தோம். எதுவாக இருந்தாலும் நாட்டுக்கு நலம் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டதே தவிர அது நடைமுறைப் படுத்தப்படுகின்றபொழுது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக எந்த வகையில் சேர்த்துக்கொள்ளப்பட முடியுமோ அந்த வகையிலும், அல்லது ஆண்டுதோறும் நடைபெறும் திட்டம்



எப்படி நடைபெறுகிறதோ அதிலே எப்படி இணைத்துக்கொள்ள முடியுமோ அந்த வகையிலும், அதிலே அந்தந்த அளவிற்கு இணைத்துக்கொள்ளத் தக்க வகையிலே அந்தத் திட்டத்தைப் பயன்படுத்துகின்ற நோக்கந்தான் இந்தத் திட்டக் குழுவிற்கு இருந்தது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படித் தெரியுமானால் அதைப்பற்றி விளக்கிச் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவரவர்களே. கேட்கப் பட்ட கேள்வி 1974-இல் உருவாக்கப்பட்ட பர்ஸ்பெக்டிவ் பிளான் பத்தாண்டுத் திட்டம் 1974-க்குப் பிறகு ஏன் தொடர்ந்து நடத்தப்படவில்லை என்பதுதான்; அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் முன்னாள் முதலமைச்சரவர்கள். ஏனென்றால் ஸ்டேட் பிளானிங் கமிஷனின் தலைவராக இருந்தவர், ஆகையால் அவர் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றபொழுது (குறுக்கீடு) கேள்வி 1974-இல் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு 1974-லிருந்து 1984 வரையில் உருவாக்கப் பட்ட திட்டம் என்று சொல்லி, 1974-க்குப் பிறகு 1975 ஆம் ஆண்டும் அந்தத் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் தொடர்ந்து ஆட்சியிலே இருந்ததற்குப் பிறகு ஏன் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்பது கேள்வி. அந்தக் கேள்விக்கு அருமையாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர் பழைய முதலமைச்சர் அவர்கள். அவர்கள் பதில் சொல்லக் கூடிய திறமையுள்ளவர்கள். ஆகவே, அந்தத் திறமையைப் பயன்படுத்த வேண்டுமென்று இந்தச் சபையில் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் குறுக்கிட்டு நமது எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கெடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் அவையிலே எடுத்துக்கொள்ளப் பட்ட கேள்விகளுக்குக் கருத்து விளக்கம் சொல்கின்ற முறையிலே சம உரிமை உண்டு. அந்த உரிமை எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு இல்லாமற்போய்விடும் என்று ஆளுங்கட்சியினுடைய முன்னவராக இருக்கின்ற திரு. மனோகரன் அவர்கள் எப்படிக் கருதுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

[1977 டிசம்பர் 29

மற்றொன்று, பர்ஸ்பெக்டிவ் பிளானைப்பற்றி ஒரு கருத்து விளக்கம். வேறு எந்தவிதமான திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தாலும் அது பர்ஸ்பெக்டிவ் உடையதாக இருப்பதற்கு, மற்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் துணை புரியத்தான் பத்தாண்டுத் திட்டம் என்று கருதப்பட்டது. திட்டத்தைச் செயல்படுத்தும்போது அது ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு, ஐந்து ஆண்டு என்று திட்டம் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறதோ அதற்கு உட்பட்டதுதான் தொலைநோக்குத்திட்டம் என்பதை அவை முன்னவரவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்கள் என்று தெரிவித்தேனே தவிர, எதிர்க்கட்சித் தலைவருடைய உரிமையை எடுத்துக்கொள்வதற்காக அல்ல, அதைக் கெடுக்கவும் அல்ல அல்லது முன்னவரவர்களைக் கெடுக்கக்கூட அந்தக் கருத்தை நான் தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஒழுங்குப் பிரச்னை.

### துணை வினாவிற்கு அமைச்சர் விடையளிக்காமல் மற்ற உறுப்பினர்களை விடையளிக்குமாறு கேட்டுக்கொண்டது குறித்து.

**திரு. க. சுப்பு :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கேள்வி நேரத்தில் அங்கத்தினர்கள் கேள்வி கேட்பது, அதற்கு அமைச்சர்கள் பதில் சொல்வது என்றுதான் விதிமுறை இருக்கிறது. ஆனால் அமைச்சர்கள் பதில் சொல்லும்பொழுது மற்ற அங்கத்தினர்களை விட்டுப் பதில் சொல்லச் சொல்வதற்கு இடம் இருக்கிறதா? அது ஒழுங்குமுறைக்கு உட்பட்டதுதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவரவர்களே, கேள்வி கேட்கும்பொழுது மற்ற அங்கத்தினர்கள் பதில் சொல்வது என்று மரபு இந்த அவையிலே இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். துணைத் தலைவரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள் . . .

**திரு. க. சுப்பு :** நான் கேட்டதற்கு ரூலிங் கொடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு பழைய முதலமைச்சரவர்கள், இன்றைய எதிர்க்கட்சித் தலைவரவர்களும், எதிர்க் கட்சித்



1977 டிசம்பர் 29] [பேரவைத்தலைவர்]

துணைத் தலைவரவர்களும் இருக்கும் பொழுது அதிலே இவர் பேசியது சரியா, அமைச்சர் பேசியது சரியா என்பதற்கு இடமில்லை.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, . . .

**திரு. என். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நான் கேட்பது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் நிற்கும்பொழுது நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? நீங்கள் விதிமுறைகளை முதலில் படியுங்கள். விதிமுறைகளைப் படிக்காமல் வந்து உட்காராதீர்கள். விதிகளைப் படித்துவிட்டு ஒத்துழையுங்கள். அவர் பேசும்பொழுது நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவரவர்களே, நான் கேட்பது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுப்பு, நீங்கள் உட்காருங்கள். இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. சுப்பு :** என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டருக்கு ரூலிங் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ரூலிங் கொடுத்து விட்டேன். இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. சுப்பு:** கம்ப்ளீட்டாகப் பேசிவிட்டுத்தான் உட்காருவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பேச்சு அல்ல, கேள்வி நேரம்.

**திரு. க. சுப்பு :** ரூலிங்கைக் கொடுக்காமல் இருந்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். நான் ரூலிங் கொடுத்துவிட்டேன். இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. இருவர் பேசியதும் சரி.

(முற்பகல் 9-20)

திரு. க. சுப்பு: நான், இருவர் பேசியது சரியா இல்லையா என்று கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து ஒத்துழையுங்கள்.

திரு. க. சுப்பு: நான் இருவர் பேசியது சரிதானு என்று கேட்கவில்லை. I have to complete my speech. I am on a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தீர்ப்பு இதுதான். விட்டுவிடுங்கள்.

THIRU K. SUPPU: Again, I am on a point of order.

THE HON. THIRU K. MANOHARAN: I am not yielding.

MR. SPEAKER: I am not allowing. No point of order. Please sit down. நீங்கள் சொல்லிக்கொண்டே இருக்கலாம். இதோடு விட்டுவிடுங்கள்.

திரு. க. சுப்பு: ரூலிங் வரும்வரை கேட்டுக் கொண்டே இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்னுடைய தீர்ப்பைக் கொடுத்துவிட்ட பிறகு, நீங்கள் எப்படி எழுப்பலாம்?

திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் சுப்பு, அங்கத்தினர் கேட்கிற கேள்விக்கு அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும், சில நேரங்களில், அமைச்சருக்குப் பதில் சொல்ல இயலாவிட்டால், அங்கத்தினர்களும் பதில் சொல்லலாம் என்று அமைச்சர்கள் அங்கத்தினர்களுக்கு அந்த உரிமைகளை அளிக்கின்ற வகையிலேதான் அவையின் முன்னவர் அப்படிக் கூறி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்த வகையிலேதான் இதைச் சொல்லி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தப் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க இதற்கு முன்னால் முதல்வராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர்தான் பதில் சொல்ல



வேண்டுமென்று அவையின் முன்னவர் குறிப்பிட்டார். அது தேவையில்லை. (மாண்புமிகு திரு. கி. மனோகரன் எழுந்திருந்தார்).

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து பேசக் கூடாது, உட்காருங்கள்; தயவு செய்து உட்காருங்கள்.

திரு. பண்ணை கே. சேதுராம்: * *

(கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து பண்ணை சேதுராம் என் அனுமதி இல்லாமல் எழுந்திருக்கக் கூடாது. எழுந்திருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். தயவு செய்து அமருங்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்திரராஜன் அவர்கள் கேட்ட கேள்விக்கு அவை முன்னவர் அளித்த பதிலில் முன்னாள் முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று

குறிப்பிட்டார்கள். நான் அளிக்க வேண்டிய பதிலை, அவை முன்னவர் அவர்கள், இந்தக் கேள்விக்குப் பதில் கூறியபொழுது, தொடக்கத்திலேயே கூறிவிட்டார். ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்தாத நேரத்தில், இந்த 10 ஆண்டுத் தொலைநோக்குத் திட்ட அம்சங்களை அதில் இணைத்து அமுல்படுத்தவில்லை, முடியவில்லையென்று அவர் தொடக்கத்திலேயே பதில் அளித்து விட்டார். நான் கூற வேண்டிய அந்தப் பதிலை அவர் அளித்து விட்டார். ஆகவே, அவை முன்னவர், ஏற்கனவே நான் அறிவித்திருக்கிறேன் என்று சொல்லியிருந்தால் விஷயம் அதோடு முடிந்திருக்கும். தேவையில்லாமல், முன்பிருந்த அரசு இந்தத் திட்டங்களை நிறைவேற்றத் தயங்கிவிட்டது என்று

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9.22-ல் சில சொற்கள் அகற்றப் பெற்றுள்ளன.

[திரு. மு. கருணாநிதி] [1977 டிசம்பர் 29

கருத்துப்படுகின்ற அளவுக்கு அவை முன்னவர் அவர்கள் இதை எடுத்துச் சொன்ன காரணத்தால்தான் இந்த அளவிற்கு நிலைமை வளர்ந்தது.

இந்தச் சுழல் திட்டத்திற்கு நல்ல தமிழ்ப் பதம் வேண்டு மென்று கேட்டார்கள். இதைச் சாதாரணமாக மொழிபெயர்த்து, 'ரோலிங் கப்' 'என்றால் சுழல் கோப்பை என்பதுபோல், 'ரோலிங் பிளான்' என்பதையும் சுழல் திட்டம் என்றே மொழி பெயர்த்து விடுவார்கள். அது நல்லதல்ல. திட்டத் திலே சுழலைச் சேர்ப்பது சரியல்ல. ஆகவே, தொடர் திட்டம் என்று இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருது கிறேன்: அவை முன்னவர் கேட்ட காரணத்தால், அதைச் சொல்கிறேன்.

இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்வார் என்று கூறிய திலிருந்து ஏற்கனவே இருந்த அரசு திட்டத்தை நிறைவேற்ற வில்லை, நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது, அல்லது திட்டத்தை வேண்டுமென்றே நிறைவேற்ற வில்லை என்கிற பொருள்படுகிறது. ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறாத காரணத்தாலே, இதிலே உள்ள அம்சங்களை, அதிலே இணைக்க முடியவில்லை. எனவே, அந்தப் பதில் அதில் அடங்கியிருக் கிறது. எனவே, கழக நண்பர்களை, உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவோடு, இந்தப் பிரச்னைகளை முடித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுங்கள்.

(திரு. கூத்தகுடி ச. சண்முகம் எழுந்தார்)

திரு. சண்முகம் உட்காருங்கள். இதோடு இந்தப் பிரச்சினையை நிறுத்தி விட்டால் நல்லது.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர். பொது வாக இந்தச் சபைக்கு ஒரே ஒரு சபாநாயகர் இருப்பது வழக்கம். அதுதான் மாபு. ஆனால் இப்போது அந்தந்தக் கட்சியின் சார்பில் ஒரு சபாநாயகர் எழுந்து சொன்னால்தான் சபை அடங்கும் என்று சொன்னால், நியாயம் இல்லை. எனக்கு விளக்கம் தேவை.



1977 டிசம்பர் 29]

**திரு. க. சுப்பு:** கேள்வி நேரத்தில் இஷ்டப்படி எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியாது. அந்தக் கேள்வியை ஒட்டித்தான் கேட்க வேண்டும். இந்த ஒழுங்குப் பிரச்சினை முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் தயவு செய்து இப்படி ஒரு இடைஞ்சல் எனக்குத் தராமல் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து நேரத்தை வீணாக்காமல் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நடவடிக்கைகள் விதி முறை களுக்கு உட்பட்டு நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அல்லது 'கன்வன்ஷன்' அல்லது 'ப்ரீசீடன்ட்ஸ்' முந்தைய நடவடிக்கைகளை வைத்துதான். கேள்வி நேரத்திலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது கூடாது என்பது விதிமுறைகளிலே தெளிவாக இல்லா விட்டாலும், கன்வென்ஷன் அல்லது ப்ரீசீடன்ட்ஸ் மூலமாக கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த விதிமுறைகளை பேரவைத் தலைவர் அவர்கள் கண்டிப்பாக கடைபிடிப்பார்களானால், குறிப் பிட்ட நேரத்தில் வினாக்களை முடிக்க ஏதுவாக இருக்கும்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** திரு. சுப்பு அவர்களே, அதை ஒத்துக்கொண்டு விட்டார். அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** திரு. கிட்டப்பா அவர் களால் கேட்கப்பட்ட அருமையான, தேவையான கேள்விக்கு, முறையான ஒழுங்கான பதில் சொல்லப்பட்டு வந்தது. ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, இதற்கு முன்னாள் முதல்வர் பதில் சொன்னால் நன்றாக இருக்கும் என்று குறிப்பிட்டேன். அதற்குக் காரணம், அவர்தான் பதில் சொல்லவேண்டும் என்ற கட்டாயத்திற்காக அல்ல. பிளானிங் கமிஷன் சேர்மனாக அவர் இருந்தார் என்ற காரணத்திற்காக மற்றவர்களைவிட ஒரு நல்ல விளக்கமான, தெளிவான பதில் கிடைக்கும் என்ற காரணத்திற் காக நான் அதைச் சொன்னேன். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, * * *

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9.27–9.30-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

**திரு. மு. கருணாநிதி :** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் (கூச்சல் குழப்பம்).

**திரு. மு. கருணாநிதி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

(மாண்புமிகு அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் நின்று கொண்டே இருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து இருவரும் உட்கார்ந்தால் நலம். இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விட்டால் நலம். இது முடிந்து விட்ட பிரச்னை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து இருவரும் அமருங்கள்.

**திரு. மு. கருணாநிதி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுகிறார். என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். (கூச்சல் குழப்பம்). திரு. இளங்கோவன் தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். உங்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். தயவு செய்து அமருங்கள். அவரவர்களுடைய கடமையை ஆற்றுங்கள் எதிர்க்கட்சித் தலைவர் இத்தோடு விட்டுவிட்டால் நல்லது.

(முற்பகல் 9.30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இளங்கோவன், தயவு செய்து உட்காருங்கள். நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். வார்த்தைகளை அடக்கிப் பேசுங்கள். (திரு. கூத்தக்குடி சண்முகம், திரு. சிவசாமி ஆகியோர் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தனர்). சண்முகம், தயவு செய்து உட்காருங்கள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9.27-9.30-ல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.



எதிர்க்கட்சித் தலைவர் இதோடு விட்டு விட்டால் நல்லது. எதுவாக இருந்தாலும் தயவுசெய்து இதோடு விட்டு விட்டு உட்காருங்கள். * * * என்றுதான் அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். அது ஒன்றும் குற்றம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் அது தெரியும். * * என்று அவர் சொல்வது ஒன்றும் குற்றமான சொல்லாகத் தெரியவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** நான் விளக்கி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது நீங்கள் விளக்கம் கொடுத்தால் பிறகு அவரும் விளக்கம் கொடுக்க வேண்டும் என்று சொல்வார்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் சொன்னது, எதிர்க்கட்சித் தலைவர் * * * என்பதுதான். வார்த்தைகளில் விளையாட எங்களுக்கும் தெரியும். * * * என்று அவர் சொன்ன வார்த்தைகளைத் திரும்பப் பெறவேண்டும். இல்லையென்றால் அதனை அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** * * *

(கைதட்டல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதற்காகக் கைதட்ட வேண்டும்?

**திரு. துரைமுருகன் :** இப்படி கைதட்டலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான்தான் சொல்லிவிட்டேன். நீங்கள் என் எழுந்திருக்கவேண்டும் (கைதட்டல்) தட்டுங்கள், நன்றாகத் தட்டுங்கள்.

**திரு. துரைமுருகன் :** * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * * நான் சில வார்த்தைகளை நீக்க வேண்டியிருக்கிறது. அவைக் குறிப்பைப் பார்த்து, அதற்குப் பின்னர் உத்தரவிடுகிறேன். இப்போது கேள்வி எண் : 32.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9.32-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

(சில உறுப்பினர்கள் எழுந்து பேசிக்கொண்டிருந்தனர்)

உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி கேள்வி நேரத்தை வீணாக்கிவிட்டால், கடைசியில் பல கேள்விகளுக்கு இங்கே பதில் அளிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். இந்த நிலைமை நீடிக்குமானால் நான் 10 மணியானவுடன் கேள்வி நேரம் முடிந்தது என்று சொல்லிவிட்டு மற்ற நிகழ்ச்சிகளுக்குப் போய் விடுவேன். மிகுதி இருக்கும் கேள்விகளுக்கான பதிலை அச்சிட்டுத் தரவேண்டியிருக்கும். அந்த நிர்ப்பந்தத்திற்கு என்னை ஆளாக்காமல், அமைதியான முறையில் கேள்வி நேரத்தை நடத்த விடுங்கள். மிகுதி கேள்விகளுக்கான பதில் மறுநாள் வராது, டிபேட்டில் தான் வரும்.

THE HON. G. R EDMUND: Hearafter you should make a convention that no point of order should be raised during Question Hour.

நேற்றே சொன்னேன். கேள்வி சம்பந்தப்பட்ட ஒழுங்குப் பிரச்னை அனுமதிக்கப்படும். மற்ற ஒழுங்குப் பிரச்னைகள் கேள்வி நேரத்தில் அனுமதிக்கப்படமாட்டாது.

ஒரு கேள்விக்குச் சம்பந்தப்பட்டவர்கள் அதற்குத் துணைக் கேள்விகள் போடலாம். பொதுப்படையான, பொதுநோக்கான கேள்விகளாக இருந்தால் மற்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளலாம். சந்தர்ப்பம் இருந்தால் நேரத்தை அனுசரித்து மற்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப் படும்.

## (2) வினாக்கள்—விடைகள் (தொடர்ச்சி)

### ஸ்ரீரங்கத்தின் பெயர் மாற்றம்.

*32 வினா—திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

ஸ்ரீரங்கம் என்ற ஊரின் பெயரை "திருவரங்கம்" என்று மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?





மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஆம்.

(திரு. க. சுப்பு எழுந்து நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முருகேசன் அவர்களைத் தான் நான் அழைத்தேன்.

திரு. க. சுப்பு: முருகேசன் தம் இடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முருகேசன் இருக்கிறார். பிறகு வேண்டுமானால் நீங்கள் துணைக் கேள்வி போடலாம்.

திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு தலைவரவர்களே,

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: நீங்கள் என்னை உட்காரச் சொல்லாமல், வேறு அங்கத்தினர் உட்காரச் சொல்வது முறையா? எதிர்க்கட்சித் தலைவரை நான் உட்காரச் சொல்லவில்லை. வேறு ஒரு அங்கத்தினர் என்னை உட்காரச் சொல்ல உரிமை உண்டு என்றால், எனக்கு அந்த உரிமை இல்லையா என்று தான் கேட்கிறேன். வேறு ஒரு உறுப்பினர் என்னை உட்கார் என்று சொன்னதற்கு நடவடிக்கை இல்லை என்றால் . . . .

(திரு. சுப்பு எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பொதுநோக்கோடு சொல்கிறார். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: என்னை உட்காரச் சொன்னவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்.

திரு. சி. ஆறுமுகம்: இங்கே கூத்தக்குடி சண்முகம் தலைவரா, நீங்கள் தலைவரா?

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் நல்ல யோசனை சொன்னார். அவை விதிகள் மீறப்படும்போது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறார். என்ன நடவடிக்கை என்பதற்கு அவரே ஒரு தீர்மானம் கொண்டு வந்து, அவருக்குள்ள மெஜாரிட்டியை வைத்து நிறைவேற்றிக்கொள்ளலாம்.

[1977 டிசம்பர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் பிரச்னைக்கு நான் பதில் சொல்கிறேன். கனம் சுப்பு அவர்களே நீங்கள் துணைக் கேள்வி தான் போடவேண்டும். அவருக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நான் பதில் சொல்லிக் கொள்கிறேன்.

(திரு. கூத்தக்குடி சண்முகம், திரு. சிவசாமி, திரு. சுப்பு ஆகியோர் நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கூத்தக்குடி சண்முகம் சொன்னதோடு நின்றால் நன்றாக இருக்கும். சிவசாமி, நீங்கள் இப்படி எழுந்து பேசக் கூடாது.

**திரு. கூத்தக்குடி ச. சண்முகம் :** நான் பேசும்போது என்னை உட்கார் என்று சொன்னவர் மீது நடவடிக்கை எடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கூத்தக்குடி ச. சண்முகம், நீங்கள் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். என்னுடைய செவிக்கு அந்த வார்த்தை வந்து இருந்தால் நடவடிக்கை எடுக்கிறேன். வரவில்லை என்றால், வரக்கூடிய நிலை வருகிறபோது, அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுகிறேன் என்று சொல்லிவிடுகிறேன்.

**திரு. க. சுப்பு :** அவன் என்னை உட்காரச் சொன்னான் என்ற வார்த்தை உங்கள் காதில் விழுந்ததா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் சொல்லும்போதே உட்கார், உட்கார் என்று சொன்னதே காதில் விழவில்லை என்று சொன்னேன். அவன் என்ற வார்த்தை என் காதில் விழவில்லை. (திரு. க. சுப்பு பேசிக்கொண்டு இருந்தார்) சுப்பு, நீங்கள் பேசுகிற மாதிரி எல்லா உறுப்பினர்களும் பேச ஆரம்பித்தால் என்ன செய்வது ? தயவு செய்து நீங்கள் என்னோடு ஒத்துழைப்புத் தாருங்கள்.

**திரு. கோ. இளங்கோவன் :** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.



1977 டிசம்பர் 29]

**திரு. கூ. ச. முருகேசன் :** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஸ்ரீரங்கம் என்பதை திருவரங்கம் என்று மாற்றுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த மாற்றம் எப்போது நடைபெறும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** இது குறித்து கொஞ்சம் விளக்கமான பதிலைத் தரலாம் என்று கருதுகிறேன். 3—7—1970 அன்று தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஒரு வேண்டுகோளை அப்போதிருந்த சர்க்காருக்கு அவர்கள் அனுப்பினார்கள். அந்த வேண்டுகோள், தமிழ்ப் பெயர் வருவாய்த் துறை கிராமங்களுக்கு வைக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற இரண்டு கிராமங்களுக்கும் திருவரங்கம், திருவில்லிபுத்தூர் என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விட்டார்கள். அந்தக் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து, அப்போதிருந்த திராவிட முன்னேற்ற கழக அரசு, உள்துறை அமைச்சகத்துக்குக் கடிதம் எழுதிற்று. அவர்கள் அதை மறுத்து, வேண்டியதில்லை என்று கூறினார்கள். கூறியதற்கு அவர்கள் தெரிவித்த காரணங்கள் இரண்டு.

(முற்பகல் 9-40)

ஒன்று, 'லோக்கல் பேட்ரியாட்டிஸம்' அதில் வந்து விடக் கூடாது. இரண்டு, மொழி வெறியின் அடிப்படையில் இப்படிப் பட்ட கோரிக்கைகள் அமைந்து விடக்கூடாது என்பதாகும். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றெடுத்தவுடன் மீண்டும் இந்தக் கோரிக்கை வந்தது. அந்தக் கோரிக்கை வந்தவுடன் மத்திய அரசு தெரிவித்த கருத்துக்கும் இந்தக் கோரிக்கைக்கும் எந்த அளவிற்கும் தொடர்பு இல்லை என்றும் இது மொழி வெறியைக் கிளப்புகிற ஒன்று அல்ல என்றும், லோக்கல் பேட்ரி யாட்டிஸம் என்று கருதவேண்டிய அவசியமில்லை என்றும், ஆக குறிப்பிட்ட விதி இதைப் பொறுத்தவரையில் சரியாக வரவில்லை என்று எழுதியதோடு மட்டுமல்லாமல் ஸ்ரீரங்கத்தை மட்டுமல்லாமல், ஸ்ரீரங்கத்தை திருவரங்கம் என்றும், ஸ்ரீவைகுண்டத்தை திருவைகுண்டம் என்றும் ஸ்ரீபெரும்புதூரை திருபெரும்புதூர் என்றும் ஸ்ரீவில்லிப்புத்தூரை திருவில்லிப்புத்தூர் என்றும் ஆக்க

வேண்டும் என்று சென்ற மாதம் இந்த அரசின் சார்பாக மத்திய அரசின் உள்துறை அமைச்சரகத்திற்குக் கடிதம் எழுதப்பட்டிருக் கிறது. பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த 'லோக்கல் பேட்ரியாட்டிஸம்' என்ற வார்த்தையை முன்பிருந்த அரசு அடிக்கடி பயன்படுத் வந்தது. அதை அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 'ஸ்ரீ' என்பதை 'திரு' என்று மாற்றுவது லோக்கல் பேட்ரியாட்டிஸம் என்று முன்பிருந்த மத்திய அரசினர் குறிப்பிட்டார்கள். இன்னும் குறிப்பாக ஒன்றைச் சொல்லப் போனால்,—லோக்கல் பேட்ரியாட்டிஸம் என்ற வார்த்தைக்குத் தொடர்புடையது—இந்தக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லாவிட்டாலும்—வாஞ்சிநாதனுடைய நினைவாக மணியாச்சி ஜங்ஷனை 'வீரவாஞ்சி ஜங்ஷன்' என்று பெயர் மாற்ற வேண்டு மென்று கழக அரசு பழைய நேரத்தில் எழுதியபோதுகூட அப் போதும் இதைத்தான் குறிப்பிட்டார்கள். வாஞ்சிநாதன் பெயரால் மணியாச்சி ரெயில்வே ஜங்ஷனை வீரவாஞ்சி ஸ்டேஷன் என்று அமைப்பது லோக்கல் பேட்ரியாட்டிஸம் என்று குறிப்பிட்டார்கள். இப்போது இந்த அரசு இந்த லோக்கல் பேட்ரியாட்டிஸம் என்ற வார்த்தையை மத்திய அரசு அடிக்கடி பயன்படுத்துவதைக் கைவிட்டு இதுபோன்று தமிழ் உணர்ச்சி உள்ள வார்த்தைகளைப் பயன்படுத்தும்போதும், தமிழ்நாட்டில் இந்திய நாட்டின் விடுதலைக் காக, விடுதலைப் போராட்டத்தில் போராடிய வீரர்களுக்காக, அப்படிப் போராடியவர்களுக்கு நினைவாலயங்கள் அல்லது நினைவுச் சின்னங்கள் எழுப்புகிறபோதும் லோக்கல் பேட்ரியாட்டிஸம் என்ற வார்த்தயைப் பயன்படுத்தக் கூடாது என்பதை இப்போதுள்ள அரசுக்கு—இப்போதுள்ள அரசு சொன்னால் கேட்கும் என்ற கருதுகிறேன்—அவர்களுக்குத் தெளிவுபடுத்தி அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ஏற்கனவே நான் கூறிய பதிலில் இந்த அரசு மத்திய அரசுக்கு அவர்கள் குறிப்பிட்ட இரண்டு காரணங்களும் ஒத்துவராது என்று எழுதியிருக்கிறது என்பதை நான் தெளிவாகவே குறிப்பிட்டேன். அதை மீண்டும் நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல. 'ஸ்ரீமதி' 'ஸ்ரீமான்' என்றிருந்ததை 'திரு' 'திருமதி' என்று ஏற்றுக்கொண்டு கடிதப் போக்குவரத்து நடத்துகிறபோது



திரு. மு. கருணாநிதி என்றும் திரு. கி. மனோகரன் என்றும், திருமதி மற்றவர்கள் என்றும் எழுதுவதற்குத் தன்னை தயார்படுத்திக்கொண் டிருக்கிற மத்திய அரசு இதை அந்த அடிப்படையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கருத்தை அரசின் சார்பாகத் தெரிவித் திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ர. ஜெபமணி :** மூவேந்தர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். அவர்கள் ஆண்ட காலத்தில் இப்படிப்பட்ட பெயர் மாற்றங்களை வைக்கவில்லை. அவர்களுக்குத் தமிழின்மேல் பக்தி இருக்கவில்லையா? இப்போதும் அவர்கள் பெயர்களை எல்லாம் வைத்திருக்கிறோம். அவர்கள் இப்படிப் பெயர்களை மாற்ற மாற்றாமல் இருந்தபோது நாம் ஏன் இப்படிப் பெயர்களை மாற்ற வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை .இந்தப் பெயர்கள் அகில இந்தியாவிலிருந்து வரக்கூடிய யாத்திரீகர்களுக்கு ஏற்பட்ட நகரங்களின் பெயர்களே தவிர தமிழ் நாட்டுக்கு மட்டும் சொந்த மானவை அல்ல. இப்படிப் பெயர்களை மாற்றினால் ஒவ்வொருவரும் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்கள் அவர்களது பெயரை ராமச்சந்திரன் என்றிருப்பதை மாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும்.

**திரு. ர. ஜெபமணி :** இப்படிப் பெயர்களை மாற்றுவதை நான் எதிர்க்கிறேன். இந்தக் காரியத்தை நான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** கனம் சபாநாயகர் அவர் களே, . . . .

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய பெயர் அவர்களுடைய பெற்றோர் கொடுத்த பெயர் ஜெபமணி என்பதுதான். ஆனால் அவர் நெல்லை ஜெபமணி என்று ஏன் வைத்துக் கொண்டார், அதுபோல்தான் இந்த மாற்றமும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** இன்னும் ஒருபடி அதிக மாகச் சொல்லப் போனால் இது பெயர் மாற்றம்கூட அல்ல. டால்மியாபுரம் என்பதை கல்லக்குடி என்று பெயர் மாற்று வதைப் போல் அல்ல. ஸ்ரீ என்பதற்குப் பதிலாக திரு. என்று

வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்வது பெயர் மாற்றம் என்று எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று பெரியவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. ஜெபமணி எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுத்த பின்னால்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். இப்போது கேளுங்கள்.

**திரு. ர. ஜெபமணி:** ஸ்ரீ என்பதை திரு. என்று மாற்ற வேண்டும் என்று சொல்வதைப்பற்றி நான் எந்த ஆட்சேபனையும் சொல்லவில்லை. ஆனால் முன் காலத்தில் திருநெல்வேலி என்று இருந்தபோதுதான் ஸ்ரீவைகுண்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள், இதையும் நாம் கவனிக்க வேண்டும். மேலும், என் பெயர் ஜெபமணி என்பதுதான், நெல்லை ஜெபமணி என்று யாரோ சொல்கிறார்கள். என் பெயர் ஜெபமணிதான். . . . . (சிரிப்பு).

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் ஸ்ரீ என்பதற்குப் பதிலாக திரு. என்று மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் இயங்குகின்ற வானொலியில்கூட இன்னும் திரு. மனோகரன் என்று சொல்வதற்குப் பதிலாக ஸ்ரீ மனோகரன் என்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். இதை மாற்றி திரு என்ற சொல்லை உபயோகிக்க வேண்டும் என்று வானொலி நிலையத்தைக் கேட்டுக்கொள்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் அடிக்கடி வானொலியைக் கேட்பது இல்லை. ஸ்ரீ மனோகரன் என்று சொல்லியிருப்பார்களேயானால், இனிமேல் திரு. மனோகரன் என்று அழையுங்கள். திரு. சாதிக் பாட்சா என்று அழையுங்கள் என்று வானொலியைக் கேட்டுக்கொள்வதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. துரை முத்துசாமி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். நேரமில்லை. அடுத்த கேள்வி—33.





**திரு. துரை முத்துசாமி:** நான் அப்பொழுதிருந்தே நேரம் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்கள் கொடுக்கவில்லை. இப்போது நீங்கள் நேரம் கொடுத்துத்தான் தீர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. உறுப்பினர் அவர்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள் . . . .

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் உறுப்பினர் அவர்களை உட்காரும்படி கேட்டுக்கொண்டிருந்தார் . . .)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். உங்கள் கட்சித் தலைவர் சொல்வதையாவது கேளுங்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒரு வேண்டுகோள். காங்கிரஸ் கட்சித் தரப்பிலிருந்து ஒருவர் மட்டும்தான் கேள்வி கேட்டார். ஆகவே இப்போது இல்லாவிட்டாலும் அடுத்த கேள்வியிலாவது உறுப்பினர் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சந்தர்ப்பம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. ஆனால் உறுப்பினர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து கொள்ளவேண்டும். நீங்கள் நேரம் தந்துதான் தீர வேண்டும் என்று என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் சபை நடவடிக்கை என்ன ஆவது?

**திரு. துரை முத்துசாமி:** கலாட்டா பண்ணினால்தான் நேரம் கிடைக்கும் போலிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கலாட்டா பண்ணினால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படி வந்தால் விதிகள் சும்மா தூங்காது. அடுத்த கேள்வி—33.

* 33 வினா **திரு. ஏ. சுவாமிதாஸ்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுக்காவில் மாம்பழத்துறை எனும் இடத்தில் நீர்ப்பாசன வசதிக்காக அணை கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து விட்டதா? அதற்கு எவ்வளவு செலவாகும்?

[1977 டிசம்பர் 29

### மாம்பழத்துறையில் அணைக்கட்டு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே. மாம்பழத்துறைத் திட்டமானது அந்தப் பகுதியில் நீர்ப்பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பத்மனுபபுரம் நகராட்சி, குளச்சல் பேரூராட்சி இந்தப் பகுதிகளில் தேவைப்படும் குடிதண்ணீருக்கும் பயன்படுகின்ற திட்டமாகும். ஆகவே இதை அரசு மறுபரிசீலனை செய்து ஆவன செய்ய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாம்பழத்துறைத் திட்டம் பத்மனுபபுரம், குளச்சல் நகரப் பகுதிகளுக்குக் குடி தண்ணீர்த் தேவைக்கும் நீர்ப்பாசனத் தேவைக்கும் சேர்ந்து தயாரிக்கப் பட்ட ஒரு திட்டமாகும். முக்கியமாக நீர்ப்பாசனத் தேவைக்கு இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்றும், குடி தண்ணீர் தேவையைப் பொறுத்தவரை வேறு திட்டங்களை சிக்கனமாக உருவாக்கிக்கொள்ளலாம் என்றும் குடிநீர் வாரியம் கருதுகிறது. பாசன வசதிக்கு இந்தத் திட்டத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைப்பற்றி அரசு ஆராயும்.

### கோதையாறு திட்டக் கால்வாய்கள்.

***34 வினு—திரு. ஏ. சுவாமிதாஸ்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோதையாறு நீர்ப்பாசனத்திற்குட்பட்ட கால்வாய்கள் தூர்ந்து போய் அடிக்கடி கரைகளில் கசிவு ஏற்பட்டு உடைப்பு ஏற்படும் அபாய நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கோதையாறு கால்வாய்கள் திருப்திகரமான நிலையில் உள்ளன. கால்வாயின் ரோடு கரைப் பகுதிகளில் விவசாயிகளினுல் கரைகளில் ஏற்படுத்தப்படும் சேதங்களினுல் நீரொழுக்குகள் ஏற்படக்கூடும். அவை உடனே சரி செய்யப்படுகின்றன.

(முற்பகல் 9-50)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் எனக்கு வியப்பை அளிக்கிறது. நான் நேர்டியாகப் போய்ப் பார்த்ததற்கும், அமைச்சர் அவர்கள்



1977 டிசம்பர் 29]

சொல்வதற்கும் நேர்மாருக இருக்கின்றது. அண்மையில் ஏற்பட்ட மழை காரணமாகக்கூட அங்கு தூர் வாரப்படவில்லை. அதற்கு முன்பும் அங்கு சில்ட் எடுக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் சில்ட் நிறைந்திருக்கிறது. அதற்கான பணமும் இதுவரை ஒதுக்கப்படவில்லை. அண்மையில் ஏற்பட்ட மழையின் காரணமாக மேலும் சில்ட் நிறைந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் கொடுத்துள்ள தகவல்களை கோப்பிலிருந்து எடுத்துச் சொல்வதாக இருந்தாலும்கூட, அந்தப் பகுதியிலிருந்து வருகின்ற அங்கத்தினர் என்கின்ற முறையில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து சுருக்கமாகச் கேள்வி கேளுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** உடனடியாக வறட்சி அல்லது புயல் நிவாரணப் பணி நிதியிலிருந்து ஒரு பகுதியை இதற்கு ஒதுக்கி, அந்தப் பகுதியில் அதாவது கோதையாறு பட்டணங்கால் கால்வாய்களில் சில்ட் எடுப்பதற்கு முயற்சி எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் உண்மையாக இருக்குமானுல், அதற்கான நடவடிக்கை எடுக்க இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனுல், இதற்குப் புயல், வெள்ள நிவாரண நிதியிலிருந்து பணம் ஒதுக்க முடியாது. கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல், வெள்ளம் எதுவும் ஏற்படவில்லை.

### ஐவநல்லூர் பகுதியில் வடிகால் வசதி

***35 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம் ஐவநல்லூர் பகுதிக்கு வடிகால் வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்பட இருக்கின்றது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1977 டிசம்பர் 29

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மாயூரம் ஒன்றியத்தில் ஐவநல்லூர் பகுதியில் இந்த வடிகால் திட்டம் அமைக்கப்படாமையால், பல நூறு ஏக்கர் நிலம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இனிமேலாவது அந்தப் பகுதியில் வடிகால் திட்டம் அமைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மேற்பார்வை பொறியாளர் ஒரு முன்னேடி அறிக்கை தயார் செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## குண்டாறு அணைத் திட்டம்.

*36. **வினு—திரு. எம். எம். ஏ. ரசாக்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

செங்கோட்டை வட்டத்தில் உள்ள குண்டாறு அணைக்கட்டு திட்டம் எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** செங்கோட்டை வட்டத்தில் உள்ள குண்டாறு அணைக்கட்டுத் திட்டத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. அணைக்குத் தேவையான நிலங்கள் எடுக்கப்பட்டவுடன் வேலை துவங்கும்.

**திரு. மு. மு. அ. ரசாக்:** இதுவரைக்கும் எத்தனை ஏக்கர் நிலங்கள் அக்விசிஷன் செய்யப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. பெரும்பாலான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்ற தகவல் இருக்கிறது.

**திரு. துரை முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதியிலுள்ள முசுகுந்தா நதியின் குறுக்கே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். இந்தக் கேள்வி செங்கோட்டை வட்டத்தைப் பற்றியது. தயவு செய்து கேள்வியை ஒட்டி உபகேள்விகள் கேளுங்கள்.



1977 டிசம்பர் 29]

**திரு. சு. முத்துசாமி கரையாளர்:** தலைவர் அவர்களே இந்தக் குண்டாறு அணைக்கட்டுத் திட்டம் எத்தனை வருஷங்களாக இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது? எப்போது பவுன்டேஷன் போடப்பட்டது? அப்படிப் போடப்பட்டு எத்தனை வருஷங்கள் ஆயிற்று? எவ்வளவு நிலத்தை இதுவரை ஆர்ஜிதம் செய்திருக்கிறீர்கள்? இன்னும் எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படாமல் இருக்கிறது? இதெல்லாம் எப்போது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதை அமைச்சர் அவர்கள் மனதில் ஞாபகம் வைத்துக் கொள்ளவே முடியாதுபோல் இருக்கிறது. ஒவ்வொன்றாகக் கேள்விகளைக் கேளுங்கள். பதில் சொல்வதற்கும் வசதியாக இருக்கும்.

**திரு. சு. முத்துசாமி கரையாளர்:** கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இது இன்வெஸ்டிகேஷனில் உள்ளது. எனவே, எப்போது இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்தத் திட்டத்திற்கு 1974 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் பொருளாதார ரீதியில் சாத்தியமில்லை என்று துறையினரால் அறிவிக்கப்பட்டது. பிறகு இதை மேற்கொள்ளக் கூடாது என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருந்தது. ஆனாலும், பின்னர் பொருளாதார ரீதியாக இது சாத்தியமில்லை என்றாலும்கூட, பொது நன்மையைக் கருதி இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று அண்மையில் நடந்த அமைச்சர் அவைக் கூட்டத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் முடிவெடுத்துள்ளார்கள்.

## கொள்ளிடம் ஊற்று நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

* 37. **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஊற்று நீரை பாசனத்திற்கு சொந்த செலவில் எடுத்துக் கொள்ள சிதம்பரம் தாலுகா ம. அரசூர் கிராம விவசாயிகள் அரசுக்கு 11—10—76, 12—1—77 மற்றும் 2—6—77 ஆம் தேதிகளில் மனு கொடுத்துள்ளார்களா?

[1977 டிசம்பர் 29

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** கொள்ளிடம் நீரூற்றிலிருந்து சொந்தச் செலவில் பாசனத்திற்கு தண்ணீர் எடுத்துக்கொள்கின்ற அடிப்படையில் சிதம்பரம் தாலூகா ம. அரசூர் கிராம விவசாயிகள் பன்னெடுங்காலமாகக் கேட்டு வருவதால் அதுபற்றி அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஏற்கனவே பதிலில் தெரிவித்தது போல் எத்தகைய மனுவும் ஒட்டுமொத்தமாக வரவில்லை. இருப்பினும் கொள்ளிடம் ஊற்று நீரை இறைத்துக் கொள்வதற்காக ம. அரசூர் கிராமத்தைச் சேர்ந்த அ. சிவதர்மன் என்பவரிடமிருந்து மனு பரிசீலிக்கப்பட்டு அக்கோரிக்கை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று 21—11—77-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபற்றிய தகவல்களை அனுப்புவார்களானால் பரிசீலிக்கப்படும்.

## வடகரை கீழ்பிடாகையில் அணை

* 38 வினா—திரு. எம். எம். ஏ. ரசாக் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்காசித் தாலூகாவில் உள்ள வடகரை கீழ்பிடாகையில் அணைக்கட்டு கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தென்காசித் தாலூகாவில் உள்ள வடகரை கீழ்பிடாகையில் அணைக்கட்டு கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. ஆனால், இக்கிராமத்திற்கு அருகாமையில் உள்ள மேக்கரை கிராமத்தில் அடவிநயினார் கோயில் நீர்ப்பாசனத் திட்டம் விரிவான ஆய்வில் உள்ளது.



1977 டிசம்பர் 29]

**திரு. எம். எம். ஏ. ரசாக் :** அந்தத் திட்டத்தை அரசு எப்போது மேற்கொண்டு நடத்தும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்தத் திட்டத்திற்கு ஆகுமென்று எதிர்பார்க்கக்கூடிய செலவு 251 லட்சம். அதுபற்றிய விரிவான மதிப்பீடு வந்த பிறகுதான் அரசு முடிவு செய்யும்.

## நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரி சுரங்கம் வெட்டுதல்

* 39. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தினை தோண்டும் பணி தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(ஆ) அரசு அதுபற்றி மேற்கொண்டுவரும் நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவது சம்பந்தமாக, அதன் புவியமைப்பு, நீர்-புவியமைப்பு ( Hydro-Geology ) ஆகியவை பற்றி விரிவான ஆய்வுகள் நடத்த, மத்திய ஆய்வுக் குழு ஒத்துக் கொண்டுள்ளதாக, மத்திய அரசு தனது 17—2—77 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது.

(ஆ) இரண்டாவது சுரங்கம் தோண்டுவதற்கான அனுமதியை விரைந்து வழங்குமாறு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. என். கிட்டப்பா :** நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தோண்டுவதற்கான செலவின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ? அதனை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கோரியிருப்பதாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் ? எவ்வளவு விரைவில் அது துவங்கப்படும் ?

[1977 டிசம்பர் 29

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தமிழகத்தினுடைய மின் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்றால் நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணி உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இப்போது எடுத்துக்கொண்டாலே அந்தத் திட்டம் நிறைவேற 8 முதல் 10 ஆண்டு காலம் ஆகும் என்று தெரிவிக்கிறார்கள். இரண்டாவது சுரங்கம் வெட்ட ஆகும் செலவு 145 கோடி ரூபாய். மூன்று 210 மெகா வாட் மின் சக்தி அமைப்புகளை உருவாக்க 215 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது சுரங்கம் வெட்டும் செயற்குறிப்புக்கு மத்திய அமைச்சகத்தில் சில முக்கியமான இன்வெஸ்ட்மென்ட்ஸ் கிளியரன்ஸ் ஆகிவிட்டது. தற்போது அது திட்டக் குழுவில் இருக்கிறது. மத்திய சர்க்கார் அமைச்சரவையின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அண்மையில் மத்திய மின்சார அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரன் அவர்கள் வந்தபோது அவரைச் சந்தித்து இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களும் இதனை விரைவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். மத்திய அரசு இதனைச் சீக்கிரம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. மு. செல்வராஜ் :** அமைச்சர் அவர்கள் இதுபற்றி மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். சமீபத்தில் வந்த பத்திரிகைச் செய்தியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் வேலை நெய்வேலியில் சாங்ஷன் ஆகியிருப்பதாகவும், துரிதமான நடவடிக்கை நடைபெறப் போவதாகவும் வந்திருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை நம்முடைய தமிழகத்திலுள்ள மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்திக்க உடனடியாக சிறப்பு கவனம் செலுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தியாவைப் பொறுத்த வரையில் நான்கு இடங்களில் இத்தகைய மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க வேண்டுமென்று மத்திய மின்சாரத் துறை பரிசீலித்து வருகிறது. அதுபற்றிய முடிவை சீக்கிரத்தில் எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கு வேண்டிய முன் ஏற்பாடுகள் எல்லாம் முடிந்துவிட்டன. ஆகவே, சீக்கிரம் அவை நடைபெற சாத்தியக் கூறுகள் உண்டு.



1977 டிசம்பர் 29]

**திரு. சி. கோவிந்தராஜன் :** நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பத்துப் பதினைந்து ஆண்டுக் காலமாக தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு பல்வேறு அரசியல் கட்சிகளும் தீர்மானங்கள் நிறைவேற்றி வந்திருக்கின்றன. அந்தத் திட்டத்தை இப்போது நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதிலே துரிதமான நடவடிக்கை எடுக்க, காலதாமதத்தை தவிர்க்க இந்த அரசு தீர்மான ரூபமாக மத்திய அரசுக்கு அனுப்பி துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துமா ?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் இன்னும் 15 நிமிடங்கள் வினாக்களுக்காக நீட்டித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்ச்சியை நான் போற்றுகிறேன். இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று 1960 ஆம் ஆண்டிலிருந்தே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அப்போதே அதைத் துவங்கியிருந்தால் செலவும் குறைந்திருக்கும், மின்சாரமும் நமக்குக் கிடைத்திருக்கும். இருப்பினும் நாம் ஒரு தீர்மானம் போட்டு அனுப்ப வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். 1973 ஆம் ஆண்டிலே சட்டப் பேரவையிலே நாம் ஒரு தீர்மானம் போட்டு நெய்வேலியில் இரண்டாவது சுரங்க வேலை துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். தமிழ்நாட்டில் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அநேகமாக எல்லாம் முடிந்துவிட்டன. நெய் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் பாக்கி இருக்கின்றன. நல்ல வேலியில் அந்த வகையில் மின் உற்பத்தி செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது, கிட்டத்தட்ட ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறு உண்டு. கடந்த சில ஆண்டு களாக மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களிலே செய்கிற சென்ட்ரல் செக்டார் இன்வெஸ்ட்மெண்ட் குறைந்து வருகிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு மத்திய சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என்று நாம் எல்லாம் நம்புவோமாக.

[1977 டிசம்பர் 29

குளிர்ப்பிரதேசத்தில் பணியாற்றும் மின்துறை ஊழியர்கள்.

* 40 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளிர்ப் பிரதேசத்தில் பணியாற்றும் எல்லா மின் தொழிலாளர்களுக்கும் கம்பளித்துணி அளிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மலைப்பகுதிகளில் பணிபுரிகின்ற மின்சார வாரியத்தைச் சேர்ந்த வார்டன்கள், கவனிப்பாளர்கள், மேட்டி இணைக் காவலர்கள், ஹெல்ப்பர்ஸ் முதலிய கீழ்மட்ட வகுப்புகளுக்கு மட்டும் இலவசமாக கம்பளி ஆடைகள் வழங்கப்படுகிறது. மற்ற ஊழியர்களுக்கு குறிப்பிட்ட விகிதத்தில் குளிர்கால படி வழங்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், ஒவ்வொரு ஆண்டும் கம்பளி ஆடைகள் கொடுக்கப்படுகிறதா அல்லது எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை கொடுக்கப்படுகிறது ? அதற்காக ஒரு விசேஷ அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது அல்லவா ? அதுவும் கொடுக்கப்படுகிறதா இல்லையா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : ஒரு குறிப்பிட்ட வகைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது; மற்றவர்களுக்கு பணமாக வழங்கப்படுகிறது. இந்தக் குளிர் கால உடைகள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

**திரு. பண்ணை கே. சேதுராம்** : இந்த கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களில் பணியாற்றுகின்ற போலிஸார்களுக்கு மாநில அரசு கம்பளி ஆடைகள் வழங்கியுள்ளது. ஆனால் மற்ற வன இலாகா போன்ற இலாகாக்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு கம்பளி ஆடைகளைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அதோடு மத்திய அரசு இலாகாவாகிய தபால் தந்தி இலாகாவிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் கம்பளி ஆடைகளை மத்திய அரசு வழங்கவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள மாநில அரசாங்கம் வலியுறுத்துமா ?



1977 டிசம்பர் 29]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : அநேகமாக அரசுத் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் அந்த இடங்களில் உள்ளவர்களுக்கு இப்படி கம்பளி ஆடைகள் வழங்கப்படுகின்றன. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் அவர்கள் வழங்க வேண்டுமென்று நாம் கேட்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. ரா. மார்க்கபந்து** : தலைவர் அவர்களே, குளிர்ப் பிரதேசங்கள் என்பவை வட ஆற்காடு மாவட்டத்திலே ஏலகிரி, ஜவ்வாது மலை ஆகியவைகளும் உண்டு, அந்தப் பிரதேசங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்படுமா ? அந்த இரண்டு பிரதேசங்களும் குளிர்ப் பிரதேசங்கள் என்று அறிவிக்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மலைப் பகுதியிலே ஆயிரம் மீட்டர்களுக்கும் அதற்கு மேலும் இருக்குமானால் குளிர் கால பகுதி என்று அறிவிக்கலாம் என்று விதி இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கிற அந்த மலைப் பிரதேசங்களும் அந்த அளவிற்கு உயரமாக இருக்குமானால் அதுவும் அதிலே அடங்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : கோதையாறு பகுதியிலே பணியாற்றுகின்ற மின்சாரதுறை தொழிலாளர்களுக்கும் இதுபோன்று இலவச கம்பளி ஆடைகள் கொடுக்கப்படவில்லை அல்லது படி கொடுக்கப்படவில்லை. அந்தத் தொழிலாளர்களுக்கும் இந்தச் சலுகைகளையெல்லாம் வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவரவர்களே, கோதையாற்றிலே நான் பணிபுரிந்து இருக்கிறேன். ஆயிரம் மீட்டருக்கு மேல் என்ற கணக்கில் அது வராது, 1,000 அடி தான் இருக்கும்.

**திரு. கு. ரமணி** : தலைவரவர்களே, நீலகிரி மலையில் பெரிய மின் திட்டத்தில் ஏராளமான தொழிலாளர்கள் மின்சார வாரியத்தின்கீழ் பணியாற்றுகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் கம்பளி உடையை அரசு விநியோகித்து வருகிறதா ? அல்லது படியாவது கொடுக்கப்படுகிறதா ? காரணம், அங்கே குளிர்

[திரு. கு. ரமணி] [1977 டிசம்பர் 29

கடுமையாக இருக்கிறது. அது அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் உயரத்திற்கு மேல் உயரத்தில் இருக்கிறது. எனவே, அங்கு இதுவரையில் கொடுக்கப்படாமல் இருந்தால் அனைத்து ஊழியர்களுக்கும் அந்த உடையை அல்லது அந்த உடைக்கான அலவன்சை அந்த மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, முதல் நிலை, இரண்டாம் நிலை அதிகாரிகளாக உள்ளவர்களுக்கு இலவசமாக இந்தக் கம்பளி உடையை வழங்குவதற்குப் பதிலாக அவர்களுக்கு ஒரு அட்வான்ஸ் கொடுக்கிறார்கள். மூன்றாம் நிலை ஊழியர்களுக்கு—சில பேரைத் தவிர—அவர்களுக்கு 200 ரூபாய் அட்வான்ஸ் தரப்படுகிறது. மற்ற ஊழியர்கள் அனைவருக்கும் இலவசமாகக் கம்பளி உடை வழங்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இருபது ஆண்டுகளுக்கு முன்னால் தீர்ப்பளிக்கப்பட்ட அடிப்படையிலே 12½ ரூபாய் என்று விசேஷ அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அன்றைக்குக் கம்பளியின் விலை எந்த அளவிற்கு விற்றுக் கொண்டிருந்ததோ அதைவிட ஒன்றுக்கு நான்கு மடங்கு என்ற அளவில் இன்றைக்கு விற்கிறது. ஆகவே, விசேஷ அலவன்சை அதிகப்படுத்தும் அளவிற்கு சர்க்கார் முன் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சம்பளம் ரூபாய் 750-க்கு மேற்படாமல் இருந்தால் 12½ ரூபாய் தரப்படுகிறது. அந்த 12½ ரூபாயை அதிகப்படுத்தும் குறிப்பு ஒன்றும் இப்பொழுது இல்லை.

### ஊற்றுநீர் பரிசோதனைத் திட்டம்.

*41. **வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூமிக்கடியில் உள்ள ஊற்றுநீர் பரிசோதனை திட்டத்தின் கீழ் மாநிலம் பூராவும் பரிசோதனைகள் நடத்தப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த மாவட்டத்தில்?



1977 டிசம்பர் 29]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன என்றுதான் அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். அப்படிப் பரிசோதனையை முடிப்பதற்கு முன்னால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒலிபெருக்கியில் பேசுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நிலத்தடி நீர் இல்லை என்ற காரணத்தால் வடார்க்காடு மாவட்டத்தில் பலயிடங்களில் மின் இணைப்புக் கொடுக்காமல் தடுக்கப்பட்டதே, அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இன்னும் சில மாவட்டங்களிலேதான் பாக்கியிருக்கிறது. வடார்க்காடு மாவட்டத்திலே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய மாவட்டத்தை, முக்கியத்துவம் கருதியோ என்னவோ ஏற்கனவே அந்த வேலையை முடித்திருக்கிறார்கள். புதுக்கோட்டை போன்ற சில மாவட்டங்களிலேதான் வேலை மீதி இருக்கிறது. இருப்பினும் தோராயமாக எந்த அளவிற்கு நிலத்தடி நீர் இருக்கிறது என்று ஓரளவுக்கு முடிவு செய்யப்பட்டு விட்டது.

**திரு. துரை முருகன்:** தலைவரவர்களே, பரிசோதனை நடந்து கொண்டிருக்கிறது, நீலகிரி மாவட்டம் நீங்கலாக என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பரிசோதனையிலே கண்டுபிடிக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் என்ன? எதன் அடிப்படையில் அந்த ஆய்வு நடத்தப்பட்டது? அந்த ஆய்வுக் குழுவின் முடிவை எந்த அடிப்படையிலே அரசு செயல்படுத்த இருக்கிறது என்று சற்று விவரமாகத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்த நிலத்தடி நீரை ஆய்வு செய்வதற்கு அந்தப் பகுதியில் 50 ஆண்டுகளாக எவ்வளவு மழை பெய்கிறது என்ற கணக்கை

எடுக்கிறார்கள். அங்கு சராசரி மழை பெய்ததை வைத்துக் கொண்டு அந்த நிலப்பகுதியிலே எத்தகைய மண் வளம் அமைந்திருக்கிறது என்று கருவிகளின் மூலம் கண்டுபிடிக்கிறார்கள். அந்தப் பல்வேறு வகையான மண் வகைகளில் எந்த அளவிற்குத் தண்ணீர் தேங்க முடியும் என்பதை அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளின் நீர் மட்டத்தைக் கொண்டு கண்டு பிடிக்கிறார்கள். எவ்வளவு நீர் பயன்படுத்தப்படுகிறது என்று மாதம் தோறும் கிணறுகளின் நீர் மட்டத்தைக் கணக்கெடுப்பதின் மூலம் உறுதி செய்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு நிலத்தடி நீர் இருக்கிறது என்பதையும், ஆண்டுக்காண்டு மழையின் மூலம் அல்லது ஏரிகளின் மூலம் அல்லது கால்வாயின் மூலம் அல்லது மற்றவைகளின் மூலம் எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதையும், எவ்வளவு தண்ணீர் கிணறுகளின் மூலம் வெளியேற்றப்படுகிறது என்பதும் அறியப்படுகிறது. அந்த வகையில் ஒவ்வொரு மாவட்டமாகப் பார்த்து அதற்கான வரைப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. பண்ணை கே. சேதுராம்:** விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற மோட்டார் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்றால் தற்சமயம் ஊற்று நீர் பரிசோதனை இலாக்காவிலிருந்து சர்ட்டிபிகேட் பெற்று வந்தால்தான் மின்னிணைப்புக் கொடுக்கப்படும் என்ற உத்தரவு நடைமுறையில் இருக்கிறது. சமீபத்தில் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக நிலத்தடி நீர் மிகவும் அதிகமாகியிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு வற்றாது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகவே, விவசாயிகளின் நன்மையைக் கருதி அதுபோன்ற உத்தரவு தேவையில்லை, சர்ட்டிபிகேட் வாங்கிவரத் தேவையில்லை என்று முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அதைப்பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது பெய்திருக்கிற மழையின் மூலம் நிலத்தடி நீர் அதிக அளவு கிடைத்திருக்கிறது. மீண்டும், மீண்டும் இதே அளவு மழை பெய்து கொண்டிருந்தால், நாம் தொடர்ந்து தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், சராசரியாகத்தான் மழை பெய்து கொண்டிருக்கிறது. சில ஆண்டுகளிலே மழை பெய்கிறது, சில



ஆண்டுகளிலே மழை வளம் இல்லாமல் போய்விடுகிறது. ஏற்கனவே இருக்கிற தண்ணீரைத்தான் நீரூற்றுகளின்மூலம் வெளியேற்றுகிறார்கள். அதன் விளைவாக, கிணற்றிலேயிருக்கிற தண்ணீர் வளம் குறைந்து கொண்டே போகிறது. அப்படிக் குறைந்து கொண்டே போகுமானால், நிலத்தடி நீர் மேன்மேலும் வற்றிக்கொண்டே போகும். அதனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு, 20 ஆண்டுகளுக்குப் பிறகோ, 25 ஆண்டுகளுக்குப் பிறகோ நிலத்தடி நீர் இல்லாமல் போய்விடும். அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றுதான் நிலத்தடி நீர் துறையினர் வற்புறுத்தி வருகிறார்கள். இருப்பினும் அவற்றைப் பற்றியெல்லாம் பரிசீலித்து, மழை பெய்ததைக் கணக்கில் கொண்டு, தற்காலிகமாக 50,000 பம்ப் செட்களை நாம் கனெக்ட் பண்ணலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

**திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நிலத்தடி நீர் சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கம் சாட்டலைட் விட்டு, இந்தியா முழுவதும் படம் எடுத்தார்கள். அதில் தமிழ் நாட்டிலிருந்து எடுத்த, மைக்ரோபிலிம்மை, அமெரிக்க பல்கலைக்கழகத்திடமிருந்து வாங்கி, அதை நம்முடைய அரசாங்கத்தில் வைத்து ஆராய்ச்சி செய்தார்கள். அந்த ஆராய்ச்சியின் பலனாக நிலத்தடி நீர் எவ்வளவு என்று கணக்கெடுத்தார்களே, அதுபற்றி இவ்வரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த சாட்டலைட் பிலிம்மை, அரசு பயன்படுத்துகிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிற தகவலை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் நிலத்தடி நீர் 500 யூனிட் இருக்கிறது. அதில் 426 யூனிட் இப்பொழுது பயன்படுத்தப்படுகிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, குறிப்பாக, செங்கல்பட்டு மாவட்டத்தில், கடலோரப் பகுதியிலே மின்னிணைப்புக் கொடுப்பதை நிறுத்தி இருக்கிறார்கள். காரணம், நில நீர் இல்லையென்று சொல்கிறார்கள். இப்பொழுது, பெய்திருக்கின்ற மழை 10 ஆண்டுக் காலம் தாங்கும் என்று நினைக்கிறேன். அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு. மின்னிணைப்பு வழங்க அரசு உத்தரவு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இப்பொழுது பெய்திருக்கிற மழை அதிகமாக இருக்கலாம். ஆனால், நிலத்தடி நீரைக் கணக்கிடும்போது சராசரி மழையைக் கணக்கெடுக்கிறார்கள். ஒருமுறை மழை பெய்யாமலும் இருக்கலாம். அதற்காகத் தான் 50 ஆண்டுகளைக் கணக்கெடுக்கிறார்கள். சில ஆண்டுகளிலே மழை இருக்கும், சில ஆண்டுகளிலே மழை இருக்காது. ஆகவே, சராசரியாக 50 ஆண்டுகளுக்கு எவ்வளவு மழை என்று கணக்கெடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது பெய்த மழை 10 ஆண்டுகளுக்குத் தாங்கும் என்று சொல்கிறார்கள். ஆனால், விஞ்ஞானம் வேறுவிதமாகச் சொல்கிறது.

**திரு. துரை முருகன் :** தலைவரவர்களே, நிலத்தடி நீரை எடுக்க, பம்ப் செட்டுக்கு கனெக்‌ஷன் கொடுத்தால், தண்ணீர் வடிந்து விடும் என்று ஆராய்ந்து, ஆய்ந்து தொடர்புடைய அதிகாரிகள் சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். ஆனால், ஆயில் இன்ஜின் போடும் போது, கிரவுன்ட் வாட்டர் வராதா? கரன்ட்டிலே இன்ஜின் ஓட்டி, தண்ணீர் எடுத்தால்தான் தண்ணீர் வருமா? ஆயில் இன்ஜின் போட்டாலும் தண்ணீர் வரத்தானே செய்யும், நிலத்தடி நீர் வற்றாதா? அதற்கு அரசாங்கம் என்ன பதில் சொல்கிறது? அதே போல், ஒரு பக்கம் கிணறு வெட்ட லோன் கொடுக்கிறது அரசாங்கம், பம்ப் செட் வாங்க லோன் கொடுக்கிறது அரசாங்கம்.

அதோடு, எங்கள் மாவட்டத்தில் இன்னும் இரண்டு பிரச்னை. ஒன்று பாலாறு விதி. அதற்கும் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும். அல்லது, கிரவுன்ட் வாட்டர் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்று சொல்வார்கள். ஆகவே, அதற்கு விளக்கமாகப் பதில் சொல்லவேண்டும். நாங்கள் அங்கு போனால், ஏன், எம்.எல்.ஏ. சார், கரன்ட் வைத்தால்தான் தண்ணீர் இழுக்குமா? ஆயில் இன்ஜின் வைத்தால் தண்ணீர் இழுக்காதா, என்று கேட்கிறார்கள். ஆகவே, அதற்கு விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து சரிதான். இப்போது அரசாங்கம் மின்சாரத்தைத் தருவதனால் கட்டுப்படுத்த முடிகிறது. ஒருவேளை அரசாங்கம் டீசல் என்ஜின்களையும் தடுக்க வேண்டி வந்தாலும் வரலாம்.



**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஐயா, வடார்க்காடு மாவட்டத்தில் அவ்வளவு இடங்களும் முழுக்க முழுக்க மலைப் பிரதேசம். அந்தக் காரணத்தாலே அங்கே 'செக்' டாம்ஸ் கட்ட வேண்டும். அங்கே மோர்தனா, புல்லாறு ஆகிய டாம்ஸ்கள் வெள்ளைக்காரன் காலத்திலேயே கட்டுவதற்குத் திட்டம் இருந்தது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள். விளக்கத்திலேயே முக்கால் மணி நேரம் போகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மற்றவர்கள் 5 நிமிட நேரம்கூட சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து, மன்னிக்க வேண்டும். கேள்வியாகத்தான் நான் போடுகிறேன். அந்த மலையடிவாரங்களில் செக்டாம்ஸ் கட்டவும் மோர்தனா, புல்லாறு டாம்களை கட்டுவதன்மூலம்தான் நிலத்தடி நீர் எப்போதும் வற்றாமல் இருக்க முடியும் என்கிற அடிப்படையில் கனம் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அந்த விவசாயிகளைக் கொலை செய்யக்கூடிய, விவசாயிகளுக்கு விரோதமாக இருக்கக்கூடிய பாலார்பேசின் ரூல்சை ரத்து செய்து இந்த டாம்களை, செக் டாம்களை கட்ட முடிவு செய்ய முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதுபோன்ற கேள்விகளைக் கேட்கத்தான் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் கோதண்டராமனுக்கு நான் சொல்லத் தேவையில்லை. கேள்வி நேரத்தில் 5 நிமிடம் 10 நிமிடம் எடுத்துக் கொள்வதற்காக மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பவில்லை. சுருக்கமாகக் கேட்டு விளக்கமான பதிலைப் பெறலாம் என்றுதான் அனுப்பியிருக்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வடார்க்காடு மாவட்டத்திற்காக அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருப்பதாக அவர் சொன்னார். அமைச்சர் அதைக் கவனிக்காத காரணத்தால்தான் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அதைக் கவனிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

[1977 டிசம்பர் 29

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நிலத்தடி நீரை அதிகப்படுத்துகின்ற முயற்சியில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திட்டங்கள் நிச்சயமாகப் பயன் தரும். செக் டாம்கள் போன்றவைகளை அமைப்பதும், இருக்கின்ற குளங்களை சீர்படுத்துவதும் ஏரிகளை நல்லமுறையில் செப்பனிட்டு அமைப்பதும், பெய்கின்ற மழை நீரை தேக்கியும், நிலத்தடி நீரை அதிகப்படுத்த அரசு பயன்படுத்தும். அந்த வகையிலே முடிந்த அளவுக்குத் தண்ணீரைத் தேக்கி வைத்து பயன்படுத்த, பரிசீலனை செய்யும். இதற்கும் மாண்புமிகு உறுப்பினருடைய தேர்தலுக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. சி. ஆறுமுகம்:** கடலோரப் பகுதிகளில் பல ஒன்றியங்களில் மின் இணைப்பு இல்லை என்று அரசு சொல்லியிருந்த போதிலும், சித்தாமூர், அச்சரபாக்கம் போன்ற இடங்களில் இரண்டு மின் இணைப்புக் கொடுத்து இருக்கிறார்கள். ஏழைகளுக்கு இல்லாமல் வசதி படைத்தவர்களுக்கு இரண்டு சர்வீஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது எந்த வகையில் நியாயம் என்று அரசைக் கேட்க விரும்புகிறேன். தேவையானால் தகவல் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தகவலைத் தருவார்களானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா. சுந்தரராஜ்:** புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது மழை அதிகமாகப் பெய்திருக்கிறது. அங்கே மின் இணைப்புக் கொடுக்க மின்சார இலாகா அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள். கிரவுண்ட் வாட்டர் சர்ட்டிபிகேட் தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள்கூட அங்கே சொல்லியிருக்கிறார்கள். எனவே, கிரவுண்ட் வாட்டர் சர்ட்டிபிகேட் அங்கே தேவையில்லை என்று சொல்லி, உடனடியாக நடவடிக்கை எடுத்து மின் சப்ளை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே 50 ஆயிரம் பம்ப் செட்டுகள் ஏற்கனவே ஆங்காங்கே அனுமதித்து மின் இணைப்பு வழங்கப்பட இருக்கிறது. ஏற்கனவே சாங்ஷன் ஆன மின் இணைப்புகள் கொடுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் அப்படிப்பட்ட சாங்ஷன் இருந்தால் இணைப்புக் கொடுக்கப்படும்.



(முற்பகல் 10-20)

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** சார், ஒரு சில ஜில்லாக்களிலே கிரௌண்ட் வாட்டர் மிகவும் கீழே போய் விட்டது என்று அரசாங்கம் கணக்கு எடுத்து இருப்பதாகச் சொல்கிறார்கள். எங்கள் இராமனாதபுரம் ஜில்லாவைப் போன்ற பகுதிகளில் ஏராளமான ஏரிகளும், ஊரணிகளும் இருக்கின்றன. அதன் பயனாக அடிமட்டத்தில் நீர் குறையாமல் இருக்கிறது. இப்போது ஏராளமாக ஆர்ட்டிசன் குழாய்க் கிணறுகள் அங்கே இருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளில் அடிமட்டத்தில் தண்ணீர் இருப்பதாக கணக்கு எடுக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 67 டி.எம்.சி. இருக்கிறது. இதுவரையில் எடுக்கப்பட்டு இருப்பது 37 டி.எம்.சி. இராமனாதபுரத்தைப் பொறுத்தவரையில் 45 டி.எம்.சி. எடுக்கப்பட்டு இருப்பது 17 டி.எம்.சி., நிலத்தடி நீர் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. செ. சதாசிவம்:** தலைவரவர்களே, இந்த நிலத்தடி நீர் அதிகமாக ஆழம் சென்று கொண்டு இருப்பதன் காரணமாக இந்தப் பரிசீலனை நடந்து கொண்டு இருக்கிறது என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்த நிலத்தடி நீரை அதிகமாக ஆக்குவதற்கு உள்ள திட்டங்கள் உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் கூறியது போல் அதிகமாக மழை காலத்தில் வரும் தண்ணீரைத் தேக்கினால் அந்தப் பகுதிக்கு அதிகமாக நிலத்தடி நீர் கிடைக்கும் என்பதை மனதில் வைத்து வறட்சியான பகுதியில் இவற்றைக் கொடுக்கக்கூடிய வகையில் ஆங்காங்கே அணைகள் கட்டுவதற்கு செக்டாம் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, ஏற்கனவே தெரிவித்ததுபோல் அரசு அவற்றைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு விரைவாக நடைபெறும் என்று நாம் நம்புவதற்கு இல்லை.

**திரு. ப. குருசாமி:** தலைவரவர்களே, புதிதாக 50,000 பம்ப்செட் அளிக்கப் போவதாக அரசு அறிவித்து இருக்கிறது. அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பகுதியான

[1977 டிசம்பர் 29

வேடசந்தூர் 10 ஆண்டுக்காலமாக வறட்சியல் பாதிக்கப்பட்டு இருந்தது. இப்போது புயல் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அந்த 50,000 பம்ப்செட்டுகளுக்கு ஏற்கனவே அனுமதி தரப்பட்டு விட்டது. அப்படி ஏற்கனவே அனுமதி கிடைக்காது இருக்குமானால் அவர்களுக்கு நிச்சயமாக முன்னுரிமை கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 35 (4)-ன்கீழ், எஞ்சியுள்ள 42 முதல் 60 வரையிலான வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பட்டு சேர்க்கப்படும்.

*** பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரை செய்துள்ள சம்பள விகிதங்கள்.**

*** 42 வினா.—திரு. கோ. இளங்கோவன்:**
**திரு. மா. மணிமாறன்:**
**திரு. கே. உச்சி:**
**திரு. சோ. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு U.G.C. பரிந்துரை செய்துள்ள ஊதியத்தை வழங்க அரசு உத்தேசித்துள்ளதா?

**விடை:** கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைபடி ஊதிய உயர்வுகள் வழங்கி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

*** 43 வினா.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்கலைக்கழக மானியங்கள் குழு பரிந்துரை செய்துள்ள சம்பள விகிதங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கென மாநில அரசால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை அரசுக்கு வந்துள்ளதா?



1977 டிசம்பர் 29]

(ஆ) இந்தச் சம்பள விகிதங்கள் பல்கலைக்கழகத் துறைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளிலும் அமுல்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எந்தத் தேதி முதல் அமுல்படுத்தப்படும்?

**விடை:** (அ) & (ஆ) ஆம்.

(இ) 1—4—1976 முதல் இம்மாநிலத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**புதிய கலைக் கல்லூரிகள்.**

*** 44 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மணல்மேட்டில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை:** இல்லை.

*** 45 வினா.—திரு. ஏ. சுவாமிதாஸ்:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு அரசாங்கக் கலைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**விடை:** இல்லை.

*** 46 வினா.—திரு. கே. உச்சி:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியிலும், கூடலூரிலும் முறையே ஒவ்வொரு கலைக் கல்லூரிகளை அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை:** இல்லை.

[1977 டிசம்பர் 29

## அரசு மேற்கொண்ட நகராட்சிப் பள்ளிகளின் பணியாளர்கள்

* 47 வினா.—திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-ம் வருடத்திலேயே அரசு எடுத்த நகராட்சி உயர் நிலைப்பள்ளிகளில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள் ஆசிரியர் அல்லாத பிற ஊழியர்கள் பணி நிரந்தரப்படுத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) இல்லையெனில், அதற்கான காரணம் என்ன ?

விடை: (அ) மற்றும் (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## ஆசிரியர் பணிக் குழு

* 48 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் பணிக் குழு அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை: (அ) மற்றும் (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## தரங்கம்பாடி கோட்டை

* 49 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், தரங்கம்பாடி கோட்டையினைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை: தஞ்சை மாவட்டத்தில் தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ்பர்க் கோட்டையை பழுது பார்த்து பலப்படுத்தவும், பாதுகாக்கவும் உரிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.



1977 டிசம்பர் 29]

## சென்னை மாநகர மேம்பாட்டுத் திட்டம்

* 50 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை: (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை. எனினும், சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான பெருந்திட்டத்திற்கு இந்திய அரசின் ஏற்பளிப்புத் தேவையில்லை எனக் குறிப்பிடப்படலாம். தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (திருத்தப்பட்டுள்ளவாறு) 28-வது பிரிவின்கீழ் தமிழ்நாடு அரசு, 1976 ஆம் ஆண்டு டிசம்பரில் இப்பெருந் திட்டத்திற்கு ஏற்பளித்தது. எனினும், இந்த வரைவுப் பெருந்திட்டத்தின் நகல்கள், புதுடில்லி, பணிகள்-வீட்டு வசதி அமைச்சகத்திற்குத் தகவலுக்காக அனுப்பப் பட்டன.

* 51 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்புற அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 1976-77-ம் ஆண்டிற்கு சென்னை நகர அபிவிருத்திக்காக மத்திய அரசிடம் இருந்து மாநில அரசு எவ்வளவு தொகை பெற்றுள்ளது ?

(ஆ) அவற்றில் முறையே கடன், மான்யத் தொகைகள் எவ்வளவு ?

விடை: (அ) நகர்புற அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 1976-77 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசிடமிருந்து சென்னை மாநகர அபிவிருத்திக்காகப் பெற்ற மொத்த உதவித் தொகை ரூ. 242 இலட்சம். அவை முறையே, குடிநீர் மற்றும் வடிகால் திட்டத்திற்காக ரூ. 142 இலட்சமும், சாலைகள் அபிவிருத்திக்காக ரூ. 40 இலட்சமும், புறநகர் அபிவிருத்திக்காக ரூ. 60 இலட்சமும் ஆகும்.

[1977 டிசம்பர் 29

(ஆ) முழு உதவித் தொகையும் 5½ சதவிகித வட்டியுள்ள கடன். இத் தொகையை திருப்பிச் செலுத்தும் காலக்கெடு 25 ஆண்டுகள் ஆகும். கடன் பெற்ற ஐந்து ஆண்டுகளுக்குப் பின் திருப்பிச் செலுத்துவது ஆரம்பமாகும்.

## குடிநீர்த் திட்டங்கள்

* 52 விடை—திரு. யா. சை. மு. யூசப் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மான்ய அடிப்படையில் நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு திட்டத்தினை பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

விடை : இல்லை.

* 53 வினா—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலோரப் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை தந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை : ஆம்.

## விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள்

* 54 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயக் கூலிகளுக்கு குறைந்த விலையில் தவணை முறையில் வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை : இல்லை.



1977 டிசம்பர் 29]

## பெரம்பூர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள்.

* 55. வினா—திரு. சு. பாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976-77 ஆம் ஆண்டில் பெரம்பூர் தொகுதியில் அரிசனங்களுக்காக குடிசை மாற்று வாரியம் மூலமாக எவ்வளவு வீடுகள் கட்ட அரசு முடிவெடுக்கப்பட்டது ?

விடை : 1976-77-ம் ஆண்டில், அரசு முடிவு ஏதும் எடுக்கவில்லை.

## விதை நெல் வழங்க மானியம்.

* 56. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விதை நெல் கிடைத்திட அரசு மான்யத் தொகை ஏதேனும் வழங்கி வருகின்றதா ?

விடை : நிரந்தரமான முறையில் விதைகள் மான்ய விலையில் வழங்கப்படவில்லை. ஆனால் சமீபத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் தாளடி பயிர் செய்வதற்காக விதைகளை இலவசமாக அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள்.

* 57 வினா—திரு. செஞ்சி என். இராமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள் எத்தனை இருக்கின்றன ?

(ஆ) அதில் எந்த எந்த வகுப்பில் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் ?

விடை : (அ) ஒன்று.

(ஆ) காருப்பம் என்ற ஊரிலுள்ள அப்பள்ளியில் ஒரு வகுப்பு மட்டும் உள்ளது. அதில் 30 மாணவர்கள் படிக்கிறார்கள்.

**சாத்தனூர் அணைப்பகுதியில் உள்ள வடிகால்கள்.**

*58. **வினா—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணை நீர்ப்பாசனப் பகுதியில் உள்ள சதுப்பு நிலங்களில் வெட்டப்பட்டுள்ள வடிகால்கள் பராமரிக்கப் படாமல் தூர்ந்து போய் உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவைகளைச் செப்பனிட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**விடை:** (அ) & (ஆ) மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வெட்டப்பட்டுள்ள வடிகால்களை வேளாண்மைத் துறையினர் முதல் இரண்டு ஆண்டுகள் இலவசமாக பராமரிக்கின்றனர். இரண்டு ஆண்டுக்கு மேற்பட்ட வடிகால்களை விவசாயிகள் தங்கள் சொந்தப் பொறுப்பில் பராமரிக்க வேண்டும். 1969-75 ஆண்டுகளில் கட்டப்பட்ட சில வடிகால்கள் சில பகுதிகளில் தூர்ந்துபோய் விட்டன. அவற்றை விவசாயிகள் தங்கள் சொந்த செலவில்தான் பராமரிக்க வேண்டும்.

**கொடைக்கானலில் பாலாடைக்கட்டி தயாரித்தல்**

*59 **வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலில் பாலாடைக்கட்டி தயார் செய்யும் தொழிற்சாலை அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை:** கொடைக்கானலில் பாலாடை வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ரூ. 11.90 இலட்சம் செலவில் கொடைக்கானல் கூட்டுறவு பால் விற்பனை சங்கத்தின் மேற்பார்வையில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



**வேளாண்மைத் துறையால் போடப்பட்ட குழாய்க்கிணறுகள்**

*60. **வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1972 முதல் இன்றுவரை விவசாய இலாக்காவில் உள்ள பொறியியல் துறையால் பல்வேறு மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள் விவசாயிகளுக்கு என்ன சார்ஜில் எத்தனை குழாய்கள் அமைக்கப்பட்டன?

(ஆ) இதில் சர்க்காருடைய மானியங்கள் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) முதல் (இ) வரை: விவர அறிக்கை * அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

**(4) அரசினர் தீர்மானங்கள்.**

**(அ) விதி 23-ஐ தளர்த்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 23-ஐ தளர்த்தி, இப்பேரவை இன்று அரசு அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். தஞ்சை மாவட்டத்தில் கடுமையான சேதம் ஏற்பட்டு இருப்பதை. . .

---

*141-ம் பக்கத்தில் இணைப்பு

[1977 டிசம்பர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அம்பிகாபதி, நீங்கள் விவரம் தெரிந்தவர். அதை என் அறையில் வந்து கேட்டு இருக்க வேண்டும். இங்கே வந்து கேட்பது முறையல்ல. இப்படி நீங்களே நடந்து கொண்டால் நான் என்ன செய்வது?

**திரு. து. புருஷோத்தமன் :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். அண்ணா சாலையில் உள்ள. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'இன்பர்மேஷன்' என்பது ஒரு உறுப்பினர் பேசுவதிலே புரியாமல் இருப்பதை புரிந்து கொள்ளச் செய்ய சொல்வதும், அல்லது சொல்வது தவருக இருந்தால் அதைத் திருத்திக் கொள்ளச் சொல்வதுதான், இன்பர்மேஷன். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் இந்த நேரத்தில் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அனுமதி மறுக் கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 23-ஐ தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, தீர்மானம் என்று வந்து இருப்பதால், நான் பேச விரும்புகிறேன். பொதுவாக, நான் அஃபிசியல் டே தனி நபர் தீர்மானம் கொண்டுவரு வதற்கான நாள், ஒவ்வொரு வாரமும், வியாழக்கிழமை என்று விதி இருக்கிறது. அந்த நேரத்தில் தான் ஆளும் கட்சித் தரப்பில், எதிர்க்கட்சித் தரப்பில் இருக்கும் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தீர்மானங்களைக் கொண்டு வந்து இங்கே விவாதிக்க இயலும். இப்படி அவை முன்னவர் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்த வியாழக்கிழமைக்குப் பதிலாக இன்னொரு நாள் ஒதுக்கிக் கொடுத்தால் நல்லது. அப்படிப்பட்ட முறையில் நாள் ஒதுக்கிக் கொடுத்து, தனியார் அலுவல்கள் நடைபெருமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 டிசம்பர் 29]

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவரவர் களே, திரு. சுப்பு, அவர்களின் கருத்தை நான் ஏற்றுக்கொள் கிறேன். இந்த முடிவு, பிசினஸ் அட்வைசரி கமிட்டி நேற்று கூடி, அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவு என்பதை முதலில் சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது முதல் விளக்கம்.

இரண்டாவது, அவர்கள் கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஆக, இனி ஒரு தேதியை நீங்கள் குறிப்பிட்டாக வேண்டும் என்று கேட்டிருக்கிருர்கள். அதையும், பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூடி, 6—1—1978-ஐ அதற்கென்று ஒதுக்குவது என்று தீர்மானித்திருக்கிறது என்ற செய்தியையும் அவருக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இன்னொரு தேதியும் குறிப்பிட வேண்டும் என்பதுதான் அவருடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** திரு. சாதிக்குக்குத் தெரியும். எதைச் செய்ய வேண்டுமென்றாலும் இந்தச் சபைக்கு உரிமை இருக்கிறது. நேரத்தை ஒட்டி, நிலைமையை ஒட்டி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் விதியே இருக்கிறது.

'Provided, however, that where a Thursday has been so taken over for the transaction of Government business under the above proviso, the Speaker may allot in lieu thereof any other day for the Private Member's business.'

பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு எடுத்ததை நடைமுறைக்குக் கொண்டுவரலாம். அல்லது வியாழக்கிழமை இல்லை என்றால், ஸ்பீக்கரே இன்னொரு நாளை குறிப்பிட்டுக் கொண்டுவரலாம். பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இந்த வெள்ளை அறிக்கை மீது இரண்டு நாள் விவாதம் என்ற பிரச்னையை எடுத்துக் கொண்ட போது, இல்லை, இல்லை மூன்று நாள் விவாதம் வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் வற்புறுத்தினார்கள். ஆகவேதான் 'நான் அபிஷியல் டே'-ஐத் தவிர்க்க வேண்டி வந்தது. 'நான் அபிஷியல் டே'-ஐத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக

[பேரவைத் தலைவர்] [1977 டிசம்பர் 29

பிசினஸ் அட்வைசரி கமிட்டி அப்படி முடிவு செய்யவில்லை. நேரம் இருக்குமேயானால், அவையின் முன்னவர் சொன்னது போல இதை எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இந்தத் தொடரை 10 ஆம் தேதிக்குள் முடித்து விடவேண்டும் என்ற நிலையில் பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு செய்தது. ஆகவே இதை பெரிய பிரச்னையாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** வேறு ஒரு தேதியை நீங்களே நிர்ணயித்துச் செய்யலாம். ஆனால் லீடர் ஆப் தி ஹவுஸ் ஒத்துக்கொண்டால் தான் முடியும் என்று விதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 23-ஐ தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

## (5) அறிவிப்புகள்.

### (அ) அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பேரவையில் (செனெட்) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. வீ. சுப்பிரமணியன், (2) திரு. தே. கேசவலு, (3) திரு. ஜி. ஆர். எட்மண்ட் ஆகியோரின் பதவிக் காலம் 1976 பிப்ரவரி மாதம் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் விளைவாக முடிவடைந்து விட்டதால், அப்பேரவைக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலை பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக்கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.



1977 டிசம்பர் 29] [பேரவைத் தலைவர்]

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 2—1—1978 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 3—1—1978 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 4—1—1978 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற்படுமாயின் 5—1—1978 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## (6) அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10.30)

## (4). அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) வேளாண்மை பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு**: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவின் (2)-உட்பிரிவில் "வகை II-பிற உறுப்பினர்கள்" என்ற தலைப்பின்கீழ் (h) பகுதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக வாரியத்தின் உறுப்பினராய் இருந்த திரு. டி. ஓ. பெரியசாமி அவர்களின் பதவிக்காலம் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் விளைவாக முடிவடைந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்"
என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) வேளாண்மை பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் **உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மை பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 3—1—1978 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 4—1—1978 புதன்கிழமை





பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 5—1—1978 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 6—1—1978 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## (7) புயல், வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கை மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1977 ஆம் ஆண்டு புயல், வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளையறிக்கையினை* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இந்த வெள்ளை அறிக்கை மீது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏதாவது பேச விரும்பினால் பேசலாம்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நவம்பர் மாதம் 12-ம் தேதி தமிழகத்தைத் தாக்கிய புயல் காரணமாக எந்தளவிற்கு தமிழகம் முழுமையும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி கனம் உறுப்பினர்கள் மிகத் தெளிவாக அறிவர்.

நவம்பர் 9-ம் தேதி மாலை வங்கக் கடலில் ஒரு காற்றழுத்த மண்டலம் உருவாகி அது 10-ம் தேதி காலை புயல் காற்றாக தீவிரமடைந்து நவம்பர் 11-ம் தேதி இந்தப் புயல் சென்னை நகரத்திலுள்ள புயல் எச்சரிக்கை ராடர் செயல்திறன் எல்லைக்குள் வந்தது. அதற்குப் பிறகு 12-ம் தேதி புயல் வீசத் தொடங்கிற்று. புயல் வீசத் தொடங்கியது மட்டுமல்ல, பேய் மழையும் பெய்தது.

*394-423 ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. கி. மனோகரன்] [1977 டிசம்பர் 29

அதன் விளைவாக தமிழகத்தில் குறிப்பிட்ட மாவட்டங்கள், குறிப்பாக தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், திருச்சி மாவட்டம், மதுரை மாவட்டம், ஓரளவு இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பகுதிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டு அதன் விளைவாகப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் சேதத்தைப் பெற்று தமிழகம் இன்று திக்கற்ற நிலையில் இருப்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஏற்பட்டுவிட்ட சேதங்கள்—சேதம் எவ்வளவு என்பதைப் பற்றிய விளக்கக் குறிப்பு இந்த வெள்ளை அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது மட்டுமல்ல. உயிர் சேதம் எவ்வளவு ஏற்பட்டது என்பதையும், தனியார் சொத்து சேதம் எவ்வளவு ஏற்பட்டது என்பதையும், அரசாங்கத்திற்குரிய கட்டடங்கள் போன்றவைகள் எந்தளவிற்கு சேதமடைந்திருக்கின்றன என்பதைப்பற்றிய விளக்கங்களும், பாசனம் எந்தளவிற்குப் பாதிக்கப்பட்டது என்பதைப்பற்றிய விளக்கங்களும், குறிப்பாக தென்னைமரங்களும் அதேபோல் கொடிக்கால்களும், பயிர்களும் எந்தளவிற்குச் சேதமாகப்பட்டன என்பதைப் பற்றிய விளக்கங்களும், எத்தனை பேர்கள் இதில் செத்தார்கள், அதன்மூலம் எத்தனை குடும்பங்கள் இன்றைக்குத் தேம்பி அழுது கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றிய விளக்கங்களும், எத்தனை கால் நடைகள் வெள்ளத்தால் அடித்து மடிந்தன என்பதைப்பற்றிய விரிவான விளக்கங்களும் இதிலே தரப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, எந்த அளவுக்குச் சாலைகள் பழுதடைந்து இருக்கின்றன என்பதைப் பற்றிய விளக்கங்களும், குடகனாறு அணை உடைந்ததின் காரணமாக ஏற்பட்ட பயங்கர விளைவுகளைப் பற்றியும் பல்வேறு பாலங்கள் உடைக்கப்பட்டு இருப்பதையும், பல கல்வெட்டுகள் தகர்க்கப்பட்டுள்ளது என்பதும் அதன் மூலம் ஏற்பட்ட சேதத்தின் விளக்கங்கள் எல்லாம் இந்த அறிக்கையில் இருக்கின்றன.

புயல் ஆரம்பம் நவம்பர் 12-ம் தேதி. மெத்த மகிழ்ச்சியோடு இந்த மன்றத்திற்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். புயல் அடித்த இரண்டு நாட்களுக்குள்ளாக இந்த அரசு போர்க் கால



1977 டிசம்பர் 29] [திரு. கி. மனோகரன்]

நடவடிக்கையைப் போல நிவாரண வேலைகளில் ஈடுபட்டது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். புயல் நிவாரண பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள், எந்த அளவுக்கு சுறுசுறுப்பாகப் பணி புரிந்தார்கள், எந்த அளவுக்கு மக்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்பதெல்லாம் நாட்டுக்குத் தெரிந்த ஒன்று என்று நம்புகிறேன்.

நாம் எடுத்துக்கொண்ட நிவாரணப் பணி எவ்வளவு துரிதமாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிவாரணப் பணி என்பதைப் பற்றி குடியரசுத் தலைவர் பெருமதிப்பிற்குரிய சஞ்சீவ ரெட்டி அவர்களும், பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களும், பெட்ரோலியம் அமைச்சர் திரு. பகுகுணா அவர்களும் மிகவும் பாராட்டியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் வடபுலத்திலிருந்து வருகின்ற பத்திரிகைகளும், நிவாரணப் பணிகளில் இந்த அரசு காட்டிய தீவிரத்தையும் இந்த அரசு காட்டிய அக்கறையையும் போற்றிப் பாராட்டியிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்தமாக நாம் கணக்கு போட்டவரையில் சேதத் தொகை 154.72 கோடி என்பதை இந்த வெள்ளை அறிக்கையிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ள முடியும்.

திருச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் செல்லுகின்ற வாய்ப்பை நமது முதல்வர் அவர்கள் பெற்றதைப் போல் நானும் பெற்றேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேடசெந்தூர் என்ற பகுதிக்குச் சென்றபோது வேடசெந்தூர் என்ற ஊரே இல்லை என்று சொல்லத் தக்க அளவுக்கு ஊரே வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது.

குடகனாறு பகுதியில் அணைக்கட்டுப் பகுதிக்கும் சென்றிருந்தேன். குடகனாறு அணை உடைந்திருக்கிற காட்சியையும் பார்த்தேன். ஒரே பத்து பேர்களை வைத்துக் கொண்டு நான் போய்ப் பார்க்கவில்லை. 8,000 அடி நீளமான—ஒன்றரை மைல்

நீளமுள்ள அந்த அணைக்கட்டுப் பகுதியில் கடைசிவரை சென்று வந்ததோடு மட்டுமல்லாமல், மூன்று மைல் நடந்து சென்று அந்த அணைக்கட்டு பகுதியைப் பார்த்தேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று திருச்சி பகுதிக்கு வந்தபோது, கரூர் பகுதி எந்த அளவுக்குத் தாக்கப்பட்டது என்பதையும் அதே நேரத்தில் திருச்சியிலுள்ள கல்லூரிகள் எந்த அளவுக்கு, லட்சக்கணக்கான ரூபாய் அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அப்போது தெரிந்து கொண்டேன்.

பொதுவாக, நிவாரண வேலைகள் எல்லாம் ஒழுங்காக நடை பெறுகின்றனவா என்று கண்டறிவதற்காக பல இடங்களுக்கும் நான் சென்றபோது நான் அரசு அறிவித்தபடி 100 ரூபாய் தரப்பட்டிருக்கிறதா என்று கேட்ட முதல்கேள்விக்குத் தரப்பட்டது என்றார்கள். அரிசி தரப்பட்டதா என்று கேட்ட போது, ஒவ்வொருவருக்கும் ஐந்து கிலோ அரிசி வீதம் வழங்கப் பட்டது என்றும், கோதுமை வழங்கப்பட்டது என்றும் சொன்னார்கள். அது மட்டுமல்ல, ஒவ்வொரு நபருக்கும் வேஷ்டி ஒன்றும், தாய்மார்களுக்கு சேலை ஒன்றும் முதல் தவணையாக வழங்கப்பட்டன என்றும் நான் கேட்ட கேள்விக்கு மெத்த மகிழ்ச்சியோடு ஆமாம் என்றார்கள்.

அதற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்திற்குப் போனேன். மன்னார்குடி பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதை பார்த்தேன். அங்கே ஒரு பள்ளிக்கூடம், அப்படியே சாய்ந் திருக்கிறது, அன்றைக்குப் பள்ளிக்கூடம் வேலை செய்யும் நாள், நல்ல வேளையாக அன்றையதினம் காலை 7 மணிக்கே இது நடந்து விட்டதால், அங்குள்ள பிள்ளைகள் இந்த விபத்திலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். மன்னார்குடியிலிருந்து தொடர்ந்து





(முற்பகல் 10-40)

நாகப்பட்டினத்திற்குச் சென்றபோது, நாகப்பட்டினத்திலே ஒரு துறை முகம் இருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும், ஆனால் அன்றைக்கு அங்கு அந்தத் துறைமுகம் இல்லை என்ற அளவுக்கு இயற்கையின் கொடுமை, சீற்றம் ஆகியவற்றுக்கு அது ஆளாக்கப் பட்டிருந்தது.

அப்பேர்ப்பட்ட சூழ்நிலையைப் பார்த்துவிட்டு, வேளாங்கண்ணி பகுதிக்குப் போனோம். மாதா கோயிலையும் இந்த இயற்கையின் சீற்றம் விடவில்லை. நல்லவேளை, டைடல் வேவ் அந்தப் பகுதியில் ஏற்படாத காரணத்தினால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தப்பித்துக் கொண்டார்கள்.

இதற்கான நிவாரணப் பணியில் யார் யார், அன்றைக்கு ஈடு பட்டார்கள் என்பதைப் பார்த்தால், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அத்தனை பேரும் மிகவும் அக்கறையோடு இப் பணியிலே ஈடுபட்டார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகம் ஒன்றாக எழுந்து நின்று இயற்கையின் சவாலைச் சமாளிக்க முடியும் என்ற அளவுக்கு தன்னை நிலைநாட்டிக் காட்டக்கூடிய ஒரு ஆண்டாக, நாம் இந்த ஆண்டை எடுத்துக் கொள்ளலாம். இயற்கைக்கும், ஆண்டவனுக்கும் நடந்த போராட்டத்தில் ஆண்டவன் தோற்று விட்டான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இயற்கை வெற்றிக் கொடியை நாட்டி விட்டது. பல இடங்களிலே மாதாகோயிலை அடித்துச் சென்று விட்டது. கோயில்கள் அடித்துச் செல்லப் பட்டன; விக்கிரகங்கள் அடித்துச் செல்லப்பட்டன; மசூதிகள் அடித்துச் செல்லப்பட்டன. அப்படிப்பட்ட இயற்கையின் சீற்றத்தை எதிர்த்து, துணிந்து போராடி வெற்றிக் கொடியை நாட்டிய தமிழகத்தின் பெருமைக்கு இதைவிட ஒரு சான்று இருக்க முடியும் என்று நான் நம்பவில்லை.

அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல், ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் இந்த நிவாரணப் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, இயற்கையின் கொடுமையை எதிர்த்துப் போராடுவதில் ஈடுபட்டார்கள். நான்

[திரு. கி. மனோகரன்] [1977 டிசம்பர் 29

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், விமானப் படையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் தமிழக அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் காவல் துறையைச் சேர்ந்தவர்களும் கடுமையாக உழைத்தார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, சில நிறுவனங்கள் அதாவது ரோட்டரி கிளப் போன்றவைகள், லயன்ஸ் கிளப் போன்றவைகள், ஜேசிஸ் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், ராஜஸ்தான் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போன்றோர் எந்த அளவுக்கு உழைத்தார்கள் என்பதை நான் எண்ணிப் பார்த்து, அவர்களுக்கெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, யாரிடமும் கேட்காமல் ஒரு ரிலீப் கேம்பை ஏற்படுத்தியுள்ளதை நான் அறவக்குறிச்சிக்குச் சென்றிருந்த போது யார் செய்கிறார்கள் என்று பார்த்தபோது, 60 மாணவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் என்னைப் பார்த்து, நாங்கள் கோயம்புத்தூரிலிருந்து வந்திருக்கிறோம். அங்குள்ள நாங்கள் அறவக்குறிச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேள்விப்பட்டு, இங்கே இந்த ரிலீப் கேம்ப் அமைத்திருக்கிறோம் என்றார்கள். எதனையும் எதிர்பாராமல் இந்தப் பணியில் ஈடுபட்ட அத்தனை மாணவ மணிகளுக்கும் தமிழக அரசின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாவட்டங்களிலே உள்ள ஆட்சித் தலைவர்களும், வருவாய்த் துறையைச் சேர்ந்த அத்தனை பேர்களும் இதற்காக எப்படி எப்படியெல்லாம் உழைத்தார்கள் என்பதை நான் எண்ணிப்பார்த்து, அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைவிட ஒரு முக்கியமான அம்சம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அருள்கூர்ந்து பணம் தந்து உதவுங்கள் என்று கேட்டபோது, முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். அப்படிப் பணம்



1977 டிசம்பர் 29] [திரு. கி. மனோகரன்]

கொடுப்பவர்கள் அவர்களாக இரக்கப்பட்டு, உணர்ச்சி பூர்வமாக பணம் தரவேண்டுமே தவிர, வேறெந்த முறைகளைக் கொண்டோ, பலாத்காரமாகவோ, ஆட்சியைப் பயன்படுத்தியோ அல்லது நிர்வாகத்தைப் பயன்படுத்தியோ, நமக்கிருக்கின்ற சக்தியைப் பயன்படுத்தியோ மக்களை பிழியக் கூடாது, கசக்கக் கூடாது என்று கடுமையான ஒரு உத்தரவு போடப்பட்டது. இத்தனை உத்தரவு போடப்பட்டதற்கும் பிறகு 3 கோடி ரூபாய் இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்களது நிவாரண நிதிக்குச் சேர்ந்திருக்கிறது என்றால், அந்த அளவுக்கு தமிழக மக்கள் தாராள மனப்பான்மையோடு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

அதோடு, உடனடியாக நான் தருகிறேன் என்று பிரதம அமைச்சர் அவர்கள் சொன்னது இங்கே நினைவுகூறத்தக்கது. அவர்களுக்கு நமது இதயங் கனிந்த நன்றியைத் தனியாக இந்தத் தமிழக அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவர் இங்கே வந்ததற்குப் பிறகு "அங்கே சென்று நான் ஒரு டீமை அனுப்புகிறேன்; சென்ட்ரல் டீமை அனுப்புகிறேன்; அந்த டீம் சுற்றிப் பார்த்துவிட்டு அவர்கள் தருகின்ற கணக்கின் அடிப்படையில் எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அந்த உதவியைச் செய்ய முடியும்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள். சென்ட்ரல் டீம் வந்தது. வந்த அந்த டீம் பாதிக்கப்பட்ட பகுதிகள் முழுமையும் சுற்றிப் பார்த்துவிட்டு அவர்கள் அளித்த கணக்கு உங்களுக்குத் தெரியும். அதன் மூலம் நமக்கு மத்திய சர்க்கார் அளித்த தொகை 33.91 கோடி ரூபாய் என்பதை நீங்கள் மறக்கமாட்டீர்கள். இதற்கிடையில் ஆரம்பத் தேவையாக மத்திய சர்க்கார் ஐந்து கோடி ரூபாய் வழங்கிற்று. அதற்குப் பிறகு மத்திய சர்க்கார்—நமது பிரதம அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை அனுப்பப்பட்ட தொகை ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் என்று நான் நம்புகிறேன்.

அந்த அளவுககு மத்திய சர்க்கார் நம்மோடு கரம் கொடுத்து உழைத்தது. என்றாலும், ஏற்பட்ட சேதத்தின் கடுமையைப் பற்றி விளக்கி இந்த அரசின் சார்பில் "இந்தத் தொகை

போதாது; இன்னும் கொஞ்சம் அதிகமாக வாரி வழங்குங்கள்" என்று கேட்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரை மொரார்ஜியை—நம்முடைய பிரதமரைப் புரிந்தவன் என்ற முறையில், நான் மனதார நம்புகிறேன்—இன்னும் அதிக அளவு நிதி நமது அரசுக்குக் கிடைக்கும் என்று நாம் நம்பலாம். அப்பேர்ப்பட்ட அளவுக்கு அவர்கள் எல்லாம் நமக்கு உற்சாகத்தோடும், அக்கறையோடும் உறுதுணை புரிந்தார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில இடங்களில் அந்த நேரத்திற்கு உதவி சென்று சேரவில்லை என்ற குற்றச்சாட்டைச் சில பேர்கள் வைத்தார்கள். வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும்போது நீங்கள் அந்த வெள்ளத்திலே குதித்து மற்றவர்களைக் காப்பாற்றக் கூடாதா என்று கேட்கிற அளவுக்கு சில பேர்கள் கேட்டார்கள். வெள்ளச் சேதத்தினாலே எத்தனை உயிர்ப்பலிகள் ஏற்பட்டன என்பதற்கு இங்கே தரப்பட்டிருக்கும் கணக்கு 590. இந்தக் கணக்கு நியாயமான கணக்குதானா என்று கேட்டவர்களும் இருந்தார்கள். இந்தக் கணக்குகள் எண்ணப்படுகின்ற பிணங்களையொட்டித் தரப்பட முடியுமே தவிர, சிலபேருடைய ஆசைகளையொட்டி அதிகரிக்க முடியாது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நமக்குக் கிடைத்திருக்கின்ற எண்ணிக்கை 590. இதற்குப் பிறகு வெள்ளம் வடிந்தாயிற்று. வடிந்த பகுதிகளுக்கு நாமெல்லாம் சென்று பார்த்தாயிற்று. பிணங்கள் சிக்கவில்லை; ஆக இவ்வளவுதான்.

இதற்கு என்ன காரணம் என்று நீங்கள் கேட்கக்கூடும். இதற்கான காரணத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சில நண்பர்கள் எதிர்பார்க்கிறபடி இந்தப் பிணங்களின் எண்ணிக்கை பத்தாயிரமாகக்கூட வந்திருக்கக்கூடும். ஆனால் நம்முடைய அதிகாரிகள் மிக முன்ஜாக்கிரதையோடு நாகப்பட்டினம் பகுதியில் புயல் அடிக்கிறது, வெள்ளம் பெருகுகிறது என்று தெரிந்தவுடன், கம்பங்கள் சாய்க்கப்படுகின்றன என்று தெரிந்தவுடன், டிரான்ஸ்பார்மர்கள் கீழே விழுகின்றன என்று தெரிந்தவுடன் எலக்ட்ரிசிடியை அவர்கள் 'ஆஃப்' செய்ததன் விளைவாக





மின்சாரத்தால் பாதிக்கப்படாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் காப்பாற்றப்பட்டார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இப்படி மாவட்ட கலெக்டர்கள், வருவாய்த்துறை அதிகாரிகள், மாணவர் பட்டாளங்கள், காவல் துறையைச் சார்ந்தவர்கள், இராணுவம், பொதுநிறுவனங்கள், தன்னலமற்றவர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு இந்தக் காரியத்தில் ஈடுபட்டார்கள்.

இந்த நேரத்திலே மருத்துவத் துறையைச் சேர்ந்த மாணவ நண்பர்களுக்கும் டாக்டர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்களாகவே வேலை எடுத்துக் கொண்டு, பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று காலரா தடுப்பு ஊசியைப் போட்டுக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்தேன். நீங்கள் யாரால் அனுப்பப்பட்டீர்கள் என்று கேட்டபோது 'நாங்களாகவே முன்வந்து இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம்' என்று பெருமையோடு சொன்னார்கள். அந்த மாணவர்களுக்கு, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், டாக்டர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியை அரசு சார்பாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இப்போது சர்க்கார் செலவழிப்பதற்காக ஒதுக்கியிருக்கும் பணத்தின் கணக்குகள், எந்த அளவுக்கு நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்பதற்கான கணக்குகள் வெள்ளையறிக்கையில் விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்து இந்த மாமன்றத்தில் இருக்கும் கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் தங்களது கருத்துக்களை விரிவாக எடுத்து வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அழிந்துபோன தென்னை மரங்கள் செத்தது செத்ததுதான். தென்னை மரத்தின் உச்சியைப் பார்க்கும்போது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். வெள்ளம் வருகிறது என்று வைத்துக்

(முற்பகல் 10-50)

கொள்வோம். பெருமழை பொழிகிறது என்றே வைத்துக் கொள்வோம். வெள்ளம் 12 அடி, 20 அடி உயரத்திற்குப் போகிறது என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் தென்னை

[திரு. கி. மனோகரன்] [1977 டிசம்பர் 29

மரத்தின் உச்சி நெருப்பிலே மாட்டிக்கொண்டதைப் போன்று தென்னை மரங்கள் காட்சியளித்ததை நீங்கள் பார்த்திருக்கக் கூடும். மரத்தின் உச்சி இடி விழுந்து தாக்கியதால் அழிந்து போய் இருக்கலாம். ஆனால் மின்சாரம் தாக்காமல் நெருப்புத் தாக்காமல் அவைகள் பட்டுப் போய் இருக்கின்றன. எவ்வளவு மரங்கள் பட்டுப் போயிருக்கின்றனவோ அவைகள் எல்லாம் செத்த மரங்கள் என்று தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாமல் வாழைத் தோட்டங்கள் அங்கங்கே சாய்ந்து கிடப்பதைப் பார்த்தோம். போனவைகள் போனவை கள்தான். வெற்றிலைக் கொடிகள் எந்த அளவிற்குப் பாதிக்கப் பட்டன என்பதைத் தொட்டியத்திலும், முசிறியிலும் நாங்கள் பார்த்தோம். அவை போனவை, போனவைதான். தப்பும் பிழைத்தவை கொஞ்சம் இருக்கின்றன, அவையும் பிழைத்துக் கொள்ளுமா என்பது இன்னும் 6 மாதம் பொறுத்துப் பார்த்துத்தான் சொல்லமுடியும் என்று அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் சொன்னார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடு வதற்கு பிரதம அமைச்சரோடு முதல்வர் அவர்களும் சென்றார் கள். நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களோடு முதல்வர் அவர்களும் நானும் சென்றோம். அதற்குப் பின்னால் அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் சென்றார்கள். அதற்குப் பிறகு திரு. நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் இருந்து பொன்னையன் அவர்கள் போனார்கள், நாங்கள் மேலே பார்த்தீர்கள். பார்த்தோம். நீங்கள் மேலே போய்த்தானே கேட்கக் கீழே போய்ப் பார்க்கவில்லையே என்று சில பேர்கள் சிலர் கூடும். நீந்தத் தெரிந்த பெரிய நீச்சல் வித்தகர்களாக இருக்கக்கூடும்.

ஆனால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வெள்ளம் வடிந்தவுடன், விரைந்து சென்று நாங்கள் எல்லாம் அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டோம். தயவு செய்து இதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கக் கூடாது என்று சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டு எல்லா அரசியல் கட்சிகளும் இதிலே



1977 டிசம்பர் 29] [திரு. கி. மனோகரன்]

ஒத்துழைத்தமைக்காக அரசின் சார்பிலேயும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பிலேயும் நான் அவர்களுக்கு எல்லாம் மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்த்துக்களை வழங்கிக் கொள்கிறேன்.

சென்னையில் ஏற்பட்ட சேதம் பெருமளவிற்கு இருக்கிறது என்றாலும், 1976 ஆம் ஆண்டின் வெள்ளச் சேதத்தைப் போல் இல்லையென்றாலும் தொடர்ந்து மழை தூறிக் கொண்டிருந்த காரணத்தினாலே சென்னை நகரத்திலே உள்ள ரோடுகள் எல்லாம் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நீங்களே பார்த்து இருப்பீர்கள். பல்லாங்குழி விளையாடுவதைப் போன்று பாதைகள் இருக்கின்றன. அந்தப் பாதைகளைச் செப்பனிட எவ்வளவு செலவு ஆகும் என்று ஸ்பெஷல் ஆபீஸரைக் கேட்டால் அவர் 7 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்கிற அளவிற்கு ஏற்பட் டிருக்கிற சேதம்—எனக்கு 48 வயதாகிறது. நான் இதுவரையில் என் வாழ்நாளில் இதுபோன்று சேதத்தைப் பார்த்ததில்லை— 56, 58 வயதாகும் நம்முடைய பேராசிரியர் அவர்கள் இது போன்று பார்த்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை. . .

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேராசிரியருக்கு 56 வயது தான் ஆகிறது. 2 வயது கூட்டிச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் பேராசிரியருக்கு 2 வயதை கூட்டிச் சொல்லியதாக பேராசிரியர் கோபிப்பதற்கு பதில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கோபித்துக் கொள் கிறார்கள். அந்த இரண்டு வயது அவரது அறிவு முதிர்ச்சியையும் பக்குவத்தையும் காட்டுவதற்குத் தான் சொன்னேனே தவிர மற்றது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு துறையிலேயும் ஏற்பட்டுள்ள நஷ்டத்தைப் போக்கு வதற்கு அரசு தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இங்கே வைக்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கையைப் படித்துப் பார்த்து நீங்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள், எங்காவது தவறு நடந்திருக்கு மானால் சுட்டிக்காட்டுங்கள், அரசு நடவடிக்கை எடுக்கும். சில இடங்களில் தவறு நடந்ததாக சிலர் சொல்கிறார்கள், தவறு

[திரு. கி. மனோகரன்] [1977 டிசம்பர் 29

நடந்ததா என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால் தவறு நடக்கவில்லை என்று சொல்கிறார். தவறே நடக்காது என்று நான் சாதிக்கவில்லை, ஆனால் தவறு நடக்காமலே தவறு நடந்தது என்று சொல்வது நியாயம் ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மன்ற உறுப்பினர்கள் இந்த நேரத்திலே கட்சி மாறுபாடுகள் இல்லாமல் பணியாற்றி மக்களைக் காப்பாற்றுகிற காரியத்திலே தங்களை இதயப் பூர்வமாக ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உங்களுடைய கருத்துக்களை நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 17 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 145 நிமிடங்கள் இருக்கின்றன. ஆளுங் கட்சியிலிருந்து 4 பேரும், திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து 3 பேரும், காங்கிரஸ் கட்சியிலிருந்து 4 பேரும், ஜனதா கட்சியிலிருந்து 2 பேரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து ஒருவரும், சி.பி.ஐ.-யிலிருந்து ஒருவரும் என்று இப்படி இருக்கிறார்கள். அதற்கேற்ப நேரத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்றால் 8 நிமிடங்களுக்கு மேல் ஒதுக்க முடியவில்லை. ஆகவே, நீங்கள் அனைவரும் 8 நிமிடங்களுக்குள் முடித்துக்கொண்டு அனைவரும் பேசுகின்ற நல்ல வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் முதலிலே பேசும் புலவர் கோவிந்தன் அவர்கள் 15 நிமிடங்கள் பேசுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, எங்கள் கட்சியிலிருந்து ஒருவர்தான் பேசுகிறார். அதற்குத் தகுந்தாற்போல் நேரத்தை ஒதுக்கித் தர வேண்டும். எட்டு நிமிடங்களுக்குள் பேசுவது என்பது சாத்தியமில்லை. அதிகம் பேர் பெயர்கள் கொடுத்திருந்தால் பல விஷயங்களைப் பலரும் பேச முடியும். ஆனால் ஒருவர்தான் எங்கள் கட்சியில் பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உமாநாத் அவர்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கியிருக்கிறேன், அவர்கள் 25 நிமிடங்கள் கேட்டார்கள். அவர்களுக்கு 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். அதைப்போல கூத்தக்குடி சண்முகம் ஒருவர்தான் பேசுகிறார், அவருக்கு 15 நிமிடங்கள், புலவருக்கு 15 நிமிடங்கள், மற்றவர்களுக்கு எட்டு எட்டு நிமிடங்கள்.



1977 டிசம்பர் 29]

* **புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவரவர்களே, சென்ற மாதம் 12 ஆம் தேதி அடித்த புயலின் கொடுமை, அந்தக் கொடுமையைத் தணிக்க அரசும் மற்றவர்களும் எடுத்த பணிகள் ஆகியவை பற்றி ஒன்றரை மாதம் கழித்தாவது விவாதிப்பதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் இதைப் பற்றி விரிவாகப் பேசுவதற்குச் சட்டப் பேரவையைக் கூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். சட்டப் பேரவையைக் கூட்டுகின்ற காரணத்தாலே அதிகாரிகள் துயர் துடைப்புப் பணிகளிலே தங்கள் கவனத்தைச் செலுத்த முடியாமல் போய் விடும் என்ற காரணத்தைக் காட்டி அதைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தாலும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, அவர்களது கருத்துக்களை ஏற்று இந்தப் பணிகளைச் செய்ய அரசு முன்வந்திருக்க வேண்டும்.

ஆனால் அனைத்துக் கட்சிகளையும் கூட்ட வேண்டுமென்று சொல்கின்ற நேரத்தில், காவிரி நீர்ப் பிரச்னை போன்ற பிரச்னைகளிலேகூட அவர்களைக் கூட்ட வேண்டுமா என்று ஆளுங் கட்சியிலே இருப்பவர்கள் கேட்கின்ற நிலைமைகள் தமிழகத்திலே ஏற்பட்டு விட்டது வருந்தத் தக்க ஒரு நிலையாகும்.

(திரு. பண்ணை கே. சேதுராம் தலைமை)

ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தாலும் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் நகரப் பெருமக்கள் கூட்டம் என்ற ஒரு கூட்டத்தைக் கூட்டி, அதில் நகரத்திலே இருக்கின்ற பெரியவர்களோடு மட்டும் அல்லாமல் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் அழைத்து அவர்களது கருத்துக்களைக் கேட்டார்கள். அந்தக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கலந்து கொண்டு எங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர், அந்தக் கூட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு விட்டுப் பிறகு தங்கள் கருத்திலே என்ன நேர்ந்ததோ தெரியவில்லை, அவர்கள் முதல்வர் இருக்கும்பொழுது ஆளுநர்

கூட்டுவதா, அதைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதா என்று கேட்க, நம் முதல்வரவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பெரிய கேடு தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் தமிழகத்தின் முதல்வரவர்கள் புயல் அடித்த உடனேயே அந்தப் பகுதிக்குச் சென்றிருக்க வேண்டும். நம்முடைய அவை முன்னவரவர்கள் முதல்வர் மூன்று முறை விமானத்திலே சென்று பார்த்தார்கள் என்று சொன்னார்கள். அதற்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் 15 ஆம் தேதியன்றே நாகப்பட்டிணத்தோடு தொடர்பு கொள்ளக் கூட நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆனால் முதல்வர் அவர்கள் செல்லவில்லை.

1961 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு மதுரையிலே நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்பொழுது தஞ்சாவூர் மாவட்டத்திலே காவேரி பெருக்கெடுத்து, தஞ்சை மாவட்டமும், திருச்சி மாவட்டமும் வெள்ளத்தால் சூழ்ந்து விட்ட நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டினுடைய முக்கியத்துவத்தைக்கூட விட்டு விட்டு தஞ்சைக்கு விரைந்து அங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து ஆறுதல் கூறி பெரிய நிதியையும் அளித்து வந்தார்கள். அப்படிப்பட்ட பரம்பரையிலே வந்த காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள் இப்படிப்பட்ட ஒரு கொடுமை ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில், அப்பணியில் தங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

நம்முடைய முன்னவரவர்கள், அனைத்துக் கட்சிக்காரர்களும் இதிலே ஒருமுகமாக நின்று, ஒன்றாக நின்று பணிபுரிந்ததற்காகப் பாராட்டைத் தெரிவிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் எல்லோரும் ஒன்றுபட்டுப் பணிபுரிய வேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால் அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவரை விடுதலை செய்திருக்க வேண்டும். அதை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் 14 ஆம் தேதி நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து வைத்து, மீண்டும் சிறைக்கு அனுப்பும் நேரத்தில், காவல்துறையின் வாகனத்திலே ஏறுவதற்கு முன்னால் அங்கே கூடியிருந்த கழகத் தோழர்களை கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அழைத்து,





உடனடியாக கட்சியிலிருந்து 25,000 ரூபாயை நிதியாக இன்றைக்கே அளித்து விடுங்கள் என்றும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய ஒரு மாத ஊதியத்தை அளித்து விடுங்கள் என்றும், புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்கள் உடனடியாகக் கழகப் பணிகளை மறந்துவிட்டு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தார்கள்.

(முற்பகல் 11-00)

அந்த ரூ. 25,000-ஐ எடுத்துக் கொண்டு தலைமைச் செயலாளரிடம் கொடுக்க, தலைமைச் செயலகத்திற்கு வந்தோம். எப்படிப்பட்ட பெரிய கூட்டத்திலே இருந்தாலும் கூட, ஒரு நிமிடம் வெளியே வந்து, நாங்கள் கொடுப்பதை, வலது கையால் கூட வாங்கத் தேவையில்லை, இடது கையால் வாங்கிக் கொண்டு, நன்றி சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால், அவர்கள் வாங்க முன் வரவில்லை. நிதித் துறை துணைச் செயலாளரிடம் கொடுங்கள் என்று சொன்னார்கள். அந்தத் துணைச் செயலாளர் அன்றையதினம் அலுவலகத்திற்கு வரவில்லை, விடுமுறையிலே இருந்தார். வேறு ஒரு அலுவலரிடம் கொடுங்கள் என்று சொன்னார்கள். இப்படி கொடுக்கின்ற பணத்தை, வாங்காததற்குக் காரணம் என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை. வருகின்ற ரூ. 25,000 முதலிலே வருகிறது, ஆகவே, வாங்க அவர் மறுத்திருப்பார் என்று அங்கத்தினர்கள் நினைப்பார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதைக் கேள்வியுற்றவுடன், முதலிலே, ரூ. 25,000 எடுத்துக் கொண்டு வந்தோம், ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் முதலிலே கொடுத்ததாக இருக்கலாமா என்ற எண்ணம் காரணமாக அது மறுக்கப்பட்டிருக்கக் கூடும். தலைமைச் செயலகத்திலே அந்நிலை ஏற்பட்டு விடவே நாங்கள் ஆளுநரிடத்திலே அந்தத் தொகையைக் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு தமிழக எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் துயர் துடைப்புப் பணியிலே தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டதை நாடு மறக்காது.

அதுபோல்தான், தான் சிறையிலே இருந்தாலும்—தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்று சொல்வார்கள். அதுபோல்,—புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களது துயரைப் போக்க நிவாரண நிதியைச் சிறைக்கு அனுப்புங்கள் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார். சிறை விதிகளெல்லாம் மீறக்கூடியதுதான் என்ற கருத்தை முதல்வர் அவர்கள் கொண்டிருந்தார்கள். என்றாலும், இன்று இந்த ரூ. 5, ரூ. 10 நிதியைச் சிறைக்குள்ளே வசூலிப்பதற்குத் தடை விதிக்கக் கூடிய நடவடிக்கையை எடுத்தார்கள். என்றாலும், மாலை கிட்டத்தட்ட ரூ. 4 இலட்சத்தை ஆளுநரிடம் நிதியாக அளிக்கக் கூடிய அளவு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டது. இப்பொழுது முன்னவர் அவர்கள் அதற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையிலும் அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முதல்வர் அவர்கள், டெல்லிக்குப் போய், திராவிட முன்னேற்றக் கழகம் தவிர, மற்ற கட்சிகள் எல்லாம் ஒத்துழைக்கின்றது என்ற கருத்தைக் கூறியிருந்தாலும், அடுத்தமுறை தாம் கூட்டிய அனைத்து கட்சிகள் கூட்டத்தில் எங்களுக்கு நன்றி கூறியதோடு இல்லாமல், எங்களுடைய கருத்துக்களையும் கேட்டு, அதன்படி நடவடிக்கை எடுக்க முன் வந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது, அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைப் பற்றி இந்த வெள்ளை அறிக்கை எடுத்துக் கூறியிருக்கிறது. அடிப்படையிலேயே அரசு தவறு செய்திருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். புயல் வருகின்ற நிலையை, வானொலி மூலமாக அறிவித்திருக்கிறது. அதிலேயே தவறு நடந்திருக்கிறது. 12-ம் தேதி அடித்த புயல் நாகையைத் தாக்கியிருக்கிறது. ஆனால், அதற்கு இரண்டு நாளைக்கு முன், வானொலி அது சென்னைக்கும் கடலூருக்கும் இடையிலே கடலைக் கடக்கும் என்று சொல்லியிருக்கிறது. அடுத்து, ஆந்திராவைத் தாக்கிய புயல், 16-ந் தேதி இரவு நாகையைத் தாக்கும் என்று தமிழகத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. 16-ந் தேதி அன்று நாங்கள் நாகையிலே இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் ஒரு பக்கம் சென்று கொண்டிருக்கிறார்கள், நாங்களும் அங்கு இருக்கிறோம். அப்போது அங்கே 150 கிலோ மீட்டர் வேகத்தில் புயல் நாகையைத் தாக்கும், ஆகவே, நீங்கள்





நாகையை விட்டுப் போய் விடுங்கள் என்று அறிவிப்பு அளிக்கப்படுகிறது. ஆகவே, புயல் அறிவிப்பில் தவறு நடந்திருக்கிறது. நாகைக்குச் செல்வதற்கு முன், 15-ந் தேதி சென்னையில் நண்பர்களிடம் அந்தப் புயல் நாகையைத் தாக்காது, சென்னைக்கும் வடக்கே தான் அந்தப் புயல் கடக்கும் என்று நான் கூறியிருக்கிறேன். ஆகவே, புயல் வருவதை அறிவிக்கின்ற முதல் கட்டத்திலேயே அரசு தவறி இருக்கிறது என்ற கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே சேதங்களைக் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, மூத்த உறுப்பினருடைய பேச்சிலே குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். நம்முடைய அரசு சார்பிலே கூறிய செய்திகள் தவறு; கடலூருக்கும் சென்னைக்கும் இடையிலேதான் தாக்கும் நாகையைத் தாக்காது என்று தாம் கருத்து தெரிவித்திருந்ததாக கூறினார்கள். அதை எந்த அடிப்படையிலே கூறினார்கள். அரசு தரப்பிலே தெரிவித்த கருத்து எந்த அடிப்படையிலே மாறியது. இவர் விஞ்ஞான அடிப்படையிலே கூறினாரா அல்லது எந்த அடிப்படையிலே கூறினார் என்று அறிய விரும்புகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்டதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் நீண்ட நாட்களாக விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவன். இந்தப் புயல் வருகிற நேரத்தில் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் 'லோ பிரஷர் மார்க்' ஏரியா என்று போடுவார்கள், அது எங்கே உருவாகிறது, எப்படியெல்லாம் போகிறது என்று யோசித்து பார்ப்பது வழக்கம். அதைப்போலத்தான் சென்ற ஆண்டும் புயல் தமிழ்நாட்டைத் தாக்கும் என்று சொன்னார்கள். ஆனால் அது தமிழ்நாட்டைத் தாக்காமல், ஆந்திராவையும் தாக்காமல், வங்காள தேசத்தைத் தாக்கியதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அனுபவத்தின் வாயிலாக நான் கூறியிருக்கிறேன். விஞ்ஞான ரீதியாகக் கூறிய கருத்து தவறாக இருக்கிறது.

சேதத்தைக் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள். பிணத்தை அதிகப்படுத்திக் காட்டினால் யாருக்கும் நன்மையில்லை. குறைத்துக் கூறுவதிலே தவறு இருக்கிறது. மாண்புமிகு முன்னவர்

[புலவர் கா. கோவிந்தன்] [1977 டிசம்பர் 29

அவர்கள் எடுத்த பிணங்களின் கணக்கைத்தான் நாங்கள் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். உண்மைதான். அதை யாரும் மறுக்கவில்லை. அவர்கள் செல்வதற்கு முன்னேயே நூற்றுக்கணக்கான பிணங்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு யார் மீதும் குற்றம் சொல்ல முடியாது.

நல்லமனார்கோட்டை, திருக்கண் ஆகிய கிராமங்கள் அடியோடு அடித்துப் போயிருக்கிறது. நல்லமனார் கோட்டையில் 4 பேர்களைக் காணவில்லை. திருக்கண் கிராமத்தில் 36 பேர்களைக் காணவில்லை. அடியோடு போயிருக்கிறது. அடுத்த காலனியில் 32 பேர் காணப்படவில்லை. 36, 4, 32 ஆக மொத்தம் 72 பேர்கள் இந்த இடத்தில் காணவில்லை. ஆனால் அரசாங்கம் 18-ந்தேதி வரையிலும் இந்த இடத்தில் 18 சடலங்களைத் தான் காட்டியிருக்கிறார்கள். ஆகவே 590 பேர்கள் இறந்தார்கள் என்ற கணக்கு உண்மை என்று ஏற்றுக் கொள்வதற்கில்லை.

நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் கூறினார்கள். இந்த அறிக்கையும் கூறுகிறது, கொடைக்கானல் பகுதியிலேயும், மற்ற பகுதிகளிலும் பெய்த பெருமழைதான் காரணம் என்று அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் முன்னெச்சரிக்கையாக குடகனாறு அணை திறந்து விடப்பட்டிருக்குமானால், நீர்த் தேக்கம் ஏற்பட்டிருக்காது. கரூர்—திண்டுக்கல் ரோடுகளிலே 4 அடி 5 அடி ஆழத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. அதைத் திறந்து விடாத காரணத்தால் தண்ணீர் தேங்கி இப்படிப்பட்ட பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. மழைமட்டும் காரணம் அல்ல. மழையோடு அதிகாரிகள் செய்யத் தவறியதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**அமைச்சர்கள் எல்லாம் சென்றார்கள் என்று சொன்னார்கள்.**

அடுத்து, நிவாரணப் பணி வேலைகள் காலதாமதமாக நடைபெறுகின்றன. போதிய விரைவோடு செய்யப்படவில்லை. முதலமைச்சர் அவர்கள், அதிகாரிகள் எல்லாம் சென்றார்கள்.



1977 டிசம்பர் 29] [புலவர் கா. கோவிந்தன்]

16-ந் தேதி அன்று நாங்கள் நாகையிலே இருந்தோம். (மணி அடிக்கப்பட்டது) வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் நடராசன் அவர்கள் காரைக்காலுக்குச் சென்று விட்டார்கள் என்ற காரணத்தினால், கலெக்டரின் நேர்முக உதவியாளரைச் சந்தித்தோம். அங்கே இருந்து மக்களுக்குச் சோறு அளிக்கின்ற நிலைமைத் தற்போது கைவிட்டு விட்டு அரிசி அளிக்கின்ற நிலை ஏற்பட்டது.

கடலோரப் பகுதியின் இழப்புபற்றி அவரைக் கேட்டதற்கு எங்களுடைய பணி உயிரோடு இருப்பவர்களுக்கு உதவுவது தான், இழப்பைப் பற்றி நாங்கள் இன்னும் கணக்கு எடுக்கவில்லை என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11-10)

12-ம் தேதி புயல் அடித்தது. 17-ம் தேதி திருச்சியில் இருக்கிறோம். அங்கே வாத்துக்காரர் தெரு என்று ஒன்று இருக்கிறது. அந்த இடத்தில் 17-ம் தேதி வரையில் இறந்து கிடந்த மாடுகள், கால்நடைகள் கூட அகற்றப்படவில்லை. அங்கே கால் வைக்க முடியாத அளவிற்குத் துர்நாற்றம் அடித்தது. அந்த நிலையைத் தடுத்து இருக்க வேண்டும். அங்கே பெரிய தவறு செய்து இருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து வேடசந்தூர் தொகுதிக்குச் சென்றோம். அங்கே அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இருந்தார். மாவட்ட நல அதிகாரி அந்தப் பகுதிக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு இருந்தார்கள். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அங்கு இருந்தாலும், அந்தப் பகுதியில் அவர் வசிக்காத காரணத்தால், அவருக்குப் பெரிய அளவில் விவரங்கள் தெரியவில்லை. அதிகாரிகளுக்கு முன்னிலையில் உட்கார்ந்து கொண்டு இருந்தார். நான் அவரிடம் நீங்கள் இப்படி இங்கே உட்கார்ந்து கொண்டு இருக்கக் கூடாது, சென்னைக்குச் சென்று முதலமைச்சரைப் பார்த்து, எங்கள் பகுதியில் மிகப்பெரிய வெள்ளம் வந்திருக்கிறது, நீங்கள் வந்து பார்த்து வேண்டியவற்றைச் செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் என்றும் சொன்னேன்.

[1977 டிசம்பர் 29

**திரு. சீ. மு. வாசன் :** நான் அந்தத் தொகுதியில் பிறந்தவன். எனக்கு அந்தத் தொகுதியில் எல்லாப் பகுதிகளும் தெரியும். நான் வெளியே வசித்து வந்தாலும் செய்யவேண்டிய காரியத்தைச் செய்து இருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும், அமைச்சர்களும், நாங்கள் கேட்டுக்கொள்வதற்கு முன்பாகவே வந்து சிறப்பான சேவை செய்தார்கள். ராணுவம் வரவில்லையே தவிர ராணுவம் அங்கே வந்து இருந்தால் எப்படி வேலைகள் நடைபெறுமோ அந்த வகையில் வேலை செய்தார்கள் என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** மாண்புமிகு உறுப்பினர் அங்கே இருந்தார் என்று சொன்னேன். கடமையாற்றவில்லை என்று சொல்லவில்லை. அந்தத் தொகுதியில் அவர் இல்லை. வேறு தொகுதியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்று தான் சொன்னேன். அங்கே அதிகாரிகள் முன்னால் உட்கார்ந்து கொண்டு இருந்தார். இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்களே, சென்னைக்கு சென்று முதலமைச்சரைப் பார்த்து வேண்டியவற்றை செய்யுங்கள் என்று அவருக்கு ஊக்கம் தருகிற வகையில் தான் சொன்னேன் என்று தான் குறிப்பிட்டேன். குறையாகச் சொல்லவில்லை.

நான் சென்ற போது அதிகாரிகள் சொன்னார்கள், 18-ம் தேதி வரையில் சில இடங்களுக்கு நாங்கள் செல்ல முடியவில்லை என்றார்கள். 19-ம் தேதி அறந்தாங்கிப் பகுதிக்குச் சென்றோம். 19-ம் தேதி வரையில் அறந்தாங்கிக்கும், ஆவுடையார்கோவிலுக்கும் இடையே செல்லும் பாதை அடைக்கப்படவில்லை.

**திரு. சீ. மு. வாசன் :** 16-ம் தேதியே அதிகாரிகள் அந்த வழியை சீர்செய்து விட்டார்கள். தவறான தகவலை அவைக்குத் தருகிறார்.

**புலவர் கா. கோவிந்தன் :** மாண்புமிகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துசாமி இருந்தார்கள். மாவட்ட நல அதிகாரி அவர்கள் எங்களால் சில இடங்களுக்குச் செல்ல முடியவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அதிகாரிகள் சொல்லிய அந்தக் கருத்தைத்தான் நான் இங்கே சொல்கிறேன். பிறகு 19-ம் தேதி அறந்தாங்கிக்குச் செல்கிறோம். 19-ம் தேதியிலும் அறந்தாங்கிக்கும் ஆவுடையார் கோவிலுக்கும் இடையே உள்ள சாலை உடைக்கப்பட்டு இருக்கிறது. அடைக்கப்படவில்லை.



1977 டிசம்பர் 29] [புலவர் கா. கோவிந்தன்]

எங்கள் வடாற்காடு மாவட்டத்தில் பெரிய பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. அதைப் போலத்தான் அறந்தாங்கிப் பகுதியிலும் இருக்கின்றன. அறந்தாங்கிப் பகுதியைப் பொறுத்தவரையில் அந்தக் கண்மாய்களில் ஏற்படும் உடைப்புகளைத் தடுக்க எந்தவிதமான தடுப்புநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அங்கேயிருந்த கோட்டாட்சித் தலைவர், நிர்வாகப் பொறியாளர், ஆகியோர் அந்தப் பகுதி அடைக்கப்பட வில்லை என்று சொன்ன நேரத்தில், நிர்வாகப் பொறியாளர், போதிய கோணிப்பைகளைத் தருமாறு ஆர்.டி.ஓ. விடம் பேசுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே, 19-ம் தேதிவரையில் அந்தப் பகுதிக்குப் போதுமான நிவாரணப் பணிகளைச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சேதம் இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். முதலில் 200 கோடி என்று சொன்னார்கள். பிறகு 154 கோடி என்று சொல்கிறார்கள். இதிலே அரசுக்கு இழப்பு 128 கோடி என்று சொல்கிறார்கள். இதிலே கடன் உதவி, மற்ற நிர்வாக செலவுகள் நீங்க அரசுக்கு நிரந்தரமான செலவு ரூ. 100 கோடி என்று சொல்கிறார்கள்.

இரண்டாவது நிவாரணப் பணி. நிவாரணப் பணிகள் என்று சொல்கின்ற நேரத்தில், ஆளுநர் அவர்கள் இப்படிப்பட்ட நேரங்களில் மக்கள் குடிபுக பெரிய பெரிய மாளிகைகள் கட்டப்பட வேண்டும் என்றார்கள். அது ஏற்றுக்கொள்ளக் கூடியது தான். ஆனால் புயல் அடிக்கடி தமிழ்நாட்டைத் தாக்குகின்ற நிலையிருப்பதால், அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ளுங்கள் என்று 200 ரூபாய், 300 ரூபாய் கொடுப்பதைக் காட்டிலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது தீயால் பாதிக்கப்படாத, புயலால் பாதிக்கப்படாத வீடுகளை மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டது போல், புயலால் பாதிக்கப்படாத அளவுக்கு 5 லட்சம் வீடுகளை குறிப்பிட காலத்திற்குள் கட்டிக் கொடுக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

இந்த வெள்ளை அறிக்கையில் 10-ஆம் பக்கத்தில் கருணை மானியமாக வழங்கப்பட்டது 6.66 கோடி ரூபாய் என்றிருக்கிறது. ஆனால் 23-ம் பக்கத்தில் கருணை உதவி 4.98 கோடி ரூபாய் என்றிருக்கிறது. என் இந்த மாறுபாடு என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஒரு குடும்பத்தில் வயதான தாய், தந்தை உயிரோடு இருக்கிறார்கள். இளஞ்சிறுவர்கள் 7, 8 வயது உள்ளவர்கள் இறந்துவிட்டார்கள். அந்தப் பிள்ளைகள் வளர்ந்து அப்பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை. ஆகவே பொருளீட்டுவோர் இறந்தால்தான் நிதி உதவி அளிக்கப்படும் எனக் கூறாமல் அப்படிப்பட்ட குடும்பத்திற்கும் நிவாரணம் அளிக்க வேண்டும்.

அடுத்து, தென்னங்கன்று தரப்படுகிறது என்கிறார்கள். ஒரு கன்று 2½ ரூபாய். ஆனால் அது வளர்ந்து பயனளிக்க 5 ஆண்டுகள் ஆகும். ஒரு மரம் 75 ரூபாய் அல்லது 50 ரூபாய் பயன் அளிக்கும் என்று வைத்துக் கொண்டால் கூட, 250 ரூபாய் இழப்பு. பிறகு தான் தென்னங்கன்று பயனளிக்கும். ஆகவே தென்னங்கன்று மட்டும் இலவசமாகக் கொடுக்கின்ற நிலையை விட்டுவிடாமல், மேலும் உதவித் தொகை கொடுக்க வேண்டும். வசதியானவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா என்று சொன்னார்கள். ஆலமரத்தடியில் இருப்பவர்களை அரண்மனை வாசிகளாக ஆக்க வேண்டியதுதான். ஆனால் அரண்மனைவாசிகளை ஆலமரத் தடி வாசிகளாக ஆக்காமல் இருக்க வேண்டும்.

பெரிய பெரிய வாழைத் தோட்டத்தை வைத்திருந்தவர்கள் தோட்டம் எல்லாம் நாசமாகியிருக்கிறது. அவர்களுக்கு நிவாரணம் இல்லை. ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 1,000 வாழைக் கன்று நடலாம். ஒரு கட்டை விலை 50 காசு. ஒரு வாழைக் கட்டைக்கு 4, 5 செலவாகும். ஆக ஏக்கருக்கு ரூபாய் 4,000 அல்லது 5,000 செலவாகலாம். அப்படிப்பட்ட விவசாயிக்கு 100 ரூபாய் தருவது என்பது எந்த வகையில் பொருந்தும்?

அதே போன்று கரும்புத் தோட்டங்கள் அடியோடு சாய்திருக்கின்றன. ஏக்கருக்கு 100 ரூபாய் உதவி என்றால், எப்படி பயிரட முடியும்? ஏக்கருக்கு 2,000 அல்லது 3,000 ரூபாய் செலவாகும் கரும்பு பயிரிடுவதற்கு. ஆகவே, ஏக்கருக்கு 100 ரூபாய் உதவி என்று சொல்வது பொருந்தாது. வாழைக்கட்டை, கரும்பு இவைகளுக்கு உள்ள கிரயத்தையாவது கொடுக்க வேண்டும்.





அடுத்து, நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் காவேரி ஆற்றில் உடைப்பு எடுத்திருக்கிற பகுதியை அடைத்து விட்டு, காவேரி நீர் வர வழி செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தோம். காவேரி அந்த இடத்தில் உடைப்பு எடுக்காமல் இருந்திருந்தால், திருச்சி இன்னும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கும். பெரிய அளவில் உடைப்பு எடுத்து காவேரி ஆறு கொள்ளிடத்தில் விழுந்ததால்தான் திருச்சி காப்பாற்றப்பட்டிருக்கிறது. இப்போது அடைத்திருக்கிற அடைப்பு நிரந்தரமாக இருக்காமல், எமர்ஜென்சி நிலையில் 'வென்ட்' வைத்து, வெள்ளம் வரும்போது கொள்ளிடத்தில் விடவேண்டும்.

அடுத்தபடியாக, நிதி ஒதுக்கீட்டின்போது என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். நிதி நிலை அறிக்கையில் இப்படிப் புயல் வருகிற போது தீ விபத்து ஏற்படுகின்றபோது, பணத்தை ஒதுக்குகிறோம். அப்படி இல்லாமல் 5 ஆண்டுக்கு ஒரு முறை இப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் என்று வைத்து, ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கி, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது, அந்தத் தொகையை உபயோகித்துக் கொள்ள முடியுமா என்பதை அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து, இப்போது மத்திய அரசு கிட்டத்தட்ட முப்பது கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த முப்பது கோடி ரூபாய் மானியம் அல்ல. அது நம்முடைய திட்டத்திற்கான முன்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி திட்டத்திற்கு முன்பணமாகக் கொடுக்கிற முறையை மாற்றிவிட்டு இதை மத்திய அரசு மானியமாகக் கொடுக்க வேண்டும் என்ற அளவிற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும். அதற்கு இந்த மாமன்றத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒரு முகமாக நின்று துணை செய்வார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று சொல்லும் போது, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களைப்பற்றிதான் சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு, செங்கற்

[புலவர் கா. கோவிந்தன்] [1977 டிசம்பர் 29

பட்டு மாவட்டங்களில் புயல் இல்லை என்று சொன்னாலும் பெரு மழை பெய்திருக்கிறது. அந்த மாவட்டங்களில் பெரு வெள்ளத் தால் பலயிடங்கள் பாழாகி இருக்கின்றன.

குறிப்பாக, உதாரணத்திற்காகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், வட ஆற்காட்டில் செய்யாறு பகுதியில் வயலாற்றூர் செய்யாற்றங்கரையில் இருக்கிறது. அது பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே வெள்ளம் ஊரில் பாதியை அரித்து விட்டது. அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான் வந்தபிறகு அந்த ஆற்றுக்கு கரை கட்டி "கிராயினஸ்" போட்டு காப்பாற்றும் சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் அந்தப் பகுதி மட்டும் காப்பாற்றப்பட்டு மறுபகுதிக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, வட ஆற்காடு, செங்கற்பட்டு, ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டிருக்குமானால் தஞ்சை, திருச்சி, மதுரை போன்ற மாவட்டங்களுக்குச் செய்யக்கூடிய நிலவாரண வேலைகள், நிவாரணத் திட்டத்தை இவ்விடங்களுக்கு விஸ்தரித்துக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்க கூடிய அப்பகுதி மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-20)

* **டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977-ம் ஆண்டு புயல், வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித் தமைக்கு முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். பொவாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழக அரசு ஏற்பட்டவுடன் அதனுடைய நிர்வாகம் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் இப்போது ஏற் பட்டுள்ள புயல், வெள்ளம் தமிழகத்தில் ஏற்பட்ட போராட்டங்கள் அத்தனையையும் சந்தித்த விதங்கள் உண்மையிலேயே ஒரு நல்ல அரசு நிர்வாகத்திற்கு அடையாளமாக விளங்குகிறது எனத் தமிழ் நாட்டு மக்கள் அனைவரும், நல்லவர்களும், நடுநிலையாளர்களும் சொல்லக்கூடிய அளவிற்கு இந்த ஆட்சி அமைந்திருப்பது கண்டு முதன் முதலாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையில் பெய்த மழை, 24 மணி



1977 டிசம்பர் 29] [டாக்டர் கே. சமரசம்]

நேரத்தில் 45.2 செ.மீ. அளவிற்குப் பெய்து சரித்திரம் காணாத
ஒரு நிகழ்ச்சியைத் தோற்றுவித்திருக்கிறது. தமிழகமே இது
வரை காணாத அளவிற்குப் புயலாலும் பெருமழையாலும் ஏற்பட்ட
சேதாரங்கள் சொல்ல முடியாது. இத்தகைய கொடுமையான நிலை
யில் நமது தமிழக அரசு மிகவும் சிறப்பாக போர்க்கால நட
வடிக்கைகளை மேற்கொண்டு நல்ல முறையில் புயல், வெள்ள
நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு நல்ல பெயர் எடுத்திருப்
பதற்காக எனது நன்றியையும் மகிழ்ச்சியையும் அகில இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள்
சார்பாகவும், தோழமை கருத்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள்
சார்பாகவும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சில நண்பர்கள் பேசுகிறபோது கற்பனைகளையும்
கனவுகளையும் சொன்னார்கள். அவை பற்றி சட்டமன்ற
பேரவையில் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லையெனக்
கருதுகிறேன். அருமைப் பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்கள்
இங்கே சொல்லுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழக
முதல்வர் அவர்கள் நினைத்ததை முடிப்பவன் என்பதை நான்
ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார். அதற்கு நன்றி.
பொதுவாக எதிர் கருத்து கொண்ட நெல்லை ஜெபமணி அவர்கள்
தோழமை கருத்தினைக் கொண்டு நினைத்ததை முடிப்பவர் முதல்வர்
அவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். அதே நேரத்தில்
தமிழக முதல்வர் என்ன நினைக்கிறார் எனத் தெரியவில்லை
என்ன நினைக்கிறார் எனத் தெரியவில்லை என்றார்.

புரட்சித் தலைவர் என்ன நினைக்கிறார் என்பதனை அவர்களின்
தொண்டர்களால்தான் உணர முடியும். அவர் தொண்டரானால்
தலைவர் என்பதையும் ஏற்றுக் கொள்வார். இயற்கையாகவே
தமிழக முதல்வர் எதிரிகளுக்கு மர்மயோகி, தோழர்களுக்கு
நினைத்ததை முடிப்பவன், தொண்டர்களுக்குத் தலைவன்.
தோழர்களுக்கு நினைத்ததை முடிப்பவராகவும், தொண்டர்
களுக்குத் தலைவராகவும் திகழும் புரட்சித் தலைவர் அவர்களின்
தொண்டனை அவர்கள் மாறுவதற்கு நான் மாற்றுக் கருத்து
சொல்லவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படு
கிறேன்.

அடுத்து நிர்வாகம் எப்படி இருக்கவேண்டும், ஆட்சி எப்படி
நடக்கவேண்டும் என்பதற்கு மிக நல்லமுறையில் இந்திய
துணைக்கண்டத்தில் தமிழ்நாடு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

என்பதற்கு ஜனாதிபதி அவர்களும், பிரதமர் அவர்களும், பல மாநில முதல்வர்களும் நாட்டு மக்கள் எல்லோரும் நமக்கு நற்சான்று கொடுத்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற எல்லா நிகழ்ச்சிகளையும் நல்ல முறையில் சரிக்கட்டி நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல பெயரை நம் அரசு பெற்று இருப்பதற்கு என் நன்றியைத் தெரிவித்து கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். புயல், வெள்ளம் காரணமாக தமிழ் நாட்டில் ஏற்பட்டு இருக்கிற சேதங்களை துடைப்பதற்காக, இப்படிப்பட்ட தீய செயல்களை, பிளவுகளை முறியடிப்பதற்காக, இந்தப் பிரச்சனையை தேசிய நீரோட்டங்களை அகில இந்திய, உலக மேம்பாடு திட்டமாக மாற்றும் வகையில் இந்த வெள்ள நிவாரணம் எப்படி அமைய வேண்டும் என்பதைப் பற்றிய நல்லதொரு கருத்தை புரட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்து இருக்கிறார்கள். உண்மையில் புயல் வெள்ள நிவாரண வேலைகளில் அவசர கால நடவடிக்கை போன்று நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். "பார்வதியின் அழுக்கே பிள்ளையாரான" புராணத்தைப் போல—குற்றங்களின் மொத்தமே ஓர் ஆட்சியாக இருந்த முறைகளை மாற்றி அப்பழுக்கற்ற முறையில் பணிகள் நடந்திருப்பது மிகவும் பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். அதே நேரத்தில் தினசரி 4 லட்சம் மக்களுக்கு உணவு வழங்கியதோடு மட்டுமல்லாமல் பலருக்கும், குடிசை சேதமுற்றவர்களுக்கு எல்லாம் 200 ரூ. வீதம் கொடுத்ததும், மான்யமாக 1,000 ரூ. கொடுத்ததும், மனிதாபிமான உதவி என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புயலின் மொத்த சாவு 560 ஆகவும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 196 என்றும், இதில் இறந்து போனவர்களின் குடும்பங்களின் பொருள் ஈட்டுபவர்கள் 160 பேர் என்றும், மொத்தம் பாதிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பு 41.81 கோடி ரூபாய் எனவும், மண்மேடிட்ட வயல்கள் 28 ஆயிரம் ஏக்கர் என்றும் இந்த அரசு சரியான புள்ளி விவரங்களைத் தந்து இருப்பதைப் பார்த்து இந்த அரசை நான் மிகவும் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் 83.37 கோடி ரூபாய் என்றும், மொத்த சேதம் 154.72 கோடி என்றும் அரசு கணக்கைக் தந்து இருக்கிறது. இந்த இழப்பை தமிழகத்தில் உள்ள இரக்க குணம் படைத்தவர்





களிடமிருந்தும், இந்திய அரசாங்கத்திடமிருந்து உதவி பெற்றும், உலகத்தில் உள்ள பொது மன்றங்களிலிருந்து கிடைக்கின்ற உதவியைப் பெற்றும், பணிகளை மேற்கொள்ள விரும்பியது மிகவும் பாராட்டக்கூடிய நிகழ்ச்சி, என்பதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு சப்ஸிடி என்ற வகையிலும் சில வரிகளைத் தள்ளுபடி செய்யக் கூடிய வகையிலும் பல வகையான உதவிகளை செய்து வருவதும் மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

உழவர்களுக்கு உரங்களுக்காக 25 சதவீத உதவித் தொகையும் கொடுக்கவிருப்பது மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். நெசவாளர்களுக்கும் தனியார் துறையில் இருப்பவர்களுக்கும் இதே போன்று பல உதவிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் கரும்பு, வாழை போன்ற பயிர்கள் சேதம் அடைந்தவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதமும் வழங்குவது என்று தீர்மானித்திருப்பதும் வரவேற்கக்கூடியதாகும். திட்ட உதவி முன் பணமாக 29.31 கோடி ரூபாய் தருவதற்கு மத்திய அரசு அனுமதித்துள்ளது. இப்படிப்பட்ட கோரிக்கைகளை எல்லாம் பார்க்கும்போது இந்த அரசு மனசாட்சி உள்ள ஒரு மக்கள் அரசு என்பதற்கு இது ஒரு முத்திரையாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே மொத்தமாக, மக்களாட்சித் தத்துவமாக, இப்படிப்பட்ட சங்கடமான நேரங்களில் கூட, நல்ல சிறந்த பணிகளை நிறைவேற்றுகின்ற, நிறைவேற்றிய விவரங்களை எல்லாம் இந்த அறிக்கையில் சொல்லியிருப்பது பாராட்டுதற்குரியது. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான புரட்சித் தலைவரும் அவரோடு சேர்ந்திருக்கிற அமைச்சர் பெரு மக்களும் இந்த வகையில் நல்ல பெயரும் புகழும் அடைந்திருக்கிறார்கள். அதை யொட்டி இந்தச் சட்டசபையும், புகழடைந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, வெற்றிலைத் தோட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. புயல் வெள்ளச் சேதம் அவ்வளவாக இல்லையென்றாலும் அங்கு பெய்த பெரு மழை காரணமாக, வெற்றிலை தோட்டங்கள் எல்லாம் பாழடைந்து விட்டன. அவற்றையெல்லாம் சீர்படுத்துவதற்காக இந்த விவசாயிகளுக்கு கணிசமான தொகை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஒரு சங்கடமான நிலையிலும் மக்களுடைய

கஷ்டங்களை தீர்ப்பதற்காக தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எல்லாம் பாராட்டுக்குரியவை என்று தெரிவித்துக்கொள்வதோடு, அவற்றைப் பாராட்டி வரவேற்று பேச வாய்ப்பளித்ததற்கு என் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, அண்மையில் ஏற்பட்டிருக்கக்கூடிய புயல், வெள்ளம் சம்பந்தமான வெள்ளை அறிக்கையை சபை முன், சபை முன்னவர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். சேதத்தின் விவரங்கள், நடந்த சம்பவங்கள், ஆளுநர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் செய்த வேலைகள், அதற்கான பாராட்டுதல்கள், அதிகாரிகள் சம்பந்தமான பாராட்டுதல்கள் இவையெல்லாம் இருக்கின்றன. பொதுவாக, இந்த அறிக்கையில் இருக்கின்ற பல்வேறு அம்சங்களை வரவேற்றாலும் கூட, இனிமேல் என்ன செய்யவேண்டும், என்ன செய்யப் போகிறார்கள் என்பது இந்த அறிக்கையில் வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவது எங்கள் கட்சியின் கடமை என்று கருதுகிறோம். ஏனென்றால், நடைபெற்ற வேலைகளில் சில குறைகள் இருந்தாலும், பொதுவாக அரசு கவனம் செலுத்தியது என்பது எங்கள் கருத்து.

(முற்பகல் 11-30)

ஆகவே, பொதுவாக கவனம் செலுத்தி செய்யக்கூடிய காரியங்களில் அப்படி கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காகவும், அதற்கான கருத்துக்களை, முக்கியமான சில ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்பதற்காகவும் தான் சட்டப் பேரவையின் கூட்டத்தை முதலிலேயே கூட்ட வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் ஒரு அறிக்கை விட்டோம். ஆனால் அப்படி காலாகாலத்தில் அந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை என்பதும், அதற்கான காரணங்கள் என்னவாக இருந்தாலும்கூட, இதிலே இவ்வளவு தூரம் இந்த அரசு தயக்கம் காட்டினார்கள் என்பது எங்கள் கருத்து. நாங்கள் இப்படி சொல்லிய பிறகும், இப்போது இந்த சட்டப் பேரவை கூட்டிய பிறகும், இந்தக் கூட்டத்திலும் இது முதலில் எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக, முதலிலே மின் சார வாரிய நிதி நிலை அறிக்கையைப் பற்றி விவாதித்த பிறகு, இதை எடுத்துக் கொண்டதிலிருந்து இப்போதும் இதற்கு முதலிடம் கொடுப்பதிலே கொஞ்சம் தயக்கம் இருக்கிறது என்பது தான் எங்கள் கருத்து. ஆகவே, அதுசம்பந்தமாக நாங்கள்





எடுத்துக் காட்டியதற்கு மதிப்பளித்து, இந்தச் சபையைக் கூட்டக் கூடிய ஒரு மனோபக்குவம் உங்களுக்கு இருப்பதை நான் பாராட்டுகிறேன். அந்தத் துறையைப் பற்றி இப்போது எடுத்துக்கொண்டு, இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விவாதத்திற்கு நான் வருகிறபோது, வெள்ளச் சேதங்களைப்பற்றியோ, அதன் விவரங்களைப் பற்றியோ அதிகம் பேச விரும்பவில்லை. இருந்தாலும்கூட, ஒரு அமைப்பின்கீழ் அவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவைகளுக்கு உடனடியாக நிவாரணம், சீரமைப்புத் திட்டம் போன்றவைகள் செய்வதோடு, எதிர்காலத்திலே ஏற்படக்கூடிய புயலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பை ஏற்படுத்துவதும், அதற்கான பல அம்சங்களைப் பார்த்து, அதற்கான ஆலோசனைகள் செய்வதும் நமது கடமையாகும்.

நூறு ஆண்டுகள் காலத்திலே 400 புயல்கள் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியானால். ஆண்டிற்கு சராசரி நான்கு புயல்கள் வந்திருக்கின்றன. அதுவும் எங்கே வந்திருக்கின்றது என்று பார்த்தால், தமிழ்நாடு, கேரளம், வங்காளம், ஒரிசா போன்ற பகுதிகளில் தான் இந்த 400 புயல்களும் வந்திருக்கின்றன. அப்படியானால், அதுசம்பந்தமாக நாம் ஒரு நீண்டகால பார்வையோடு இந்தப் புயல் சம்பந்தமான தடுப்பு வேலைகளுக்கு ஒரு ஏற்பாட்டை நடைமுறைக்கு கொண்டு வருவது நமது கடமை அல்லவா? அது தமிழக அரசுக்கு மட்டும் அல்லாமல், அந்தப் பொறுப்பு மத்திய அரசுக்கும் இருக்கலாம். எப்படியிருந்தாலும், இதற்கு ஒரு நடவடிக்கை நிரந்தரமாக எடுக்க வேண்டுமென்பது நமது கடமை என்றே நான் கருதுகிறேன்.

ஏனென்றால், உங்களுக்குத் தெரியும் 1970 ஆம் ஆண்டிலும் சரி, 1972 ஆம் ஆண்டிலும் சரி, ஆந்திரா, ஒரிசா போன்ற மாநிலங்களிலே புயல் வீசியபோது, ஒரு உயர் மட்டக் குழுவை அரசாங்கம் அமைத்து, அவர்கள் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கை இப்போது மத்திய அரசிலே தூசி படிந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை அமுல்படுத்துவதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

அதோடு மாத்திரமல்ல. 1973 ஆம் ஆண்டிலே சோவியத்தும், இந்தியாவும் சேர்ந்து ஒரு ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு ஆராய்ச்சி நடக்க இருக்கிறது. இதற்கிடையே, சோவியத் சார்பிலே 42 பேர்களும், இந்தியா சார்பிலே 42 பேர்களும் கலந்துகொண்டு ஒரு கருத்தரங்கு நடத்தி, அவர்களது கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தமாதிரியான கருத்துக்களையெல்லாம் பரிசீலனை செய்வது, எதிர்காலத்திலே நம்முடைய தமிழக அரசுக்கு மட்டுமல்ல; அரபிக் கடலிலே புயல் ஏற்பட்டாலும், வங்கக் கடலிலே புயல் ஏற்பட்டாலும் அவற்றுக்கும் உதவியாக இருக்கலாம்.

இது தவிர, புயல் வந்தால், புயலை எவ்வாறு மழையாக மாற்று வது, கடற்கரை ஓரப் பகுதிகளை எப்படிப் பாதுகாப்பது என்பதற் கான ஆலோசனைகளும் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஆந்திரா, ஒரிசா சம்பந்தமாகக் கொடுத்துள்ள அறிக் கையை பரிசீலனை செய்து, அதுசம்பந்தமாக கடற்கரை ஓரப் பகுதிகளில் ஆழமாக வேர் விடக்கூடிய மரங்களை நடலாமா, புயலை மழையாக மாற்றலாமா, அது முடியுமா என்பவை போன்ற ஒரு நீண்டகால ஏற்பாட்டைச் செய்து நாம் காரியம் ஆற்ற வேண்டும். இதற்கு மத்திய அரசு பொருத்தமாகவும், துரிதமாகவும் செயல்பட, மாநில அரசு அவர்களை வற்புறுத்துவது கடமை என்று கருது கிறேன். ஏனென்றால் புயல் என்பது இயற்கையின் சீற்றம்தான்.

இந்தப் புயலை சிலபேர் ஆண்டவன் மக்களுக்கு அளிக்கும் சோதனை என்று சொல்கிறார்கள். ஆண்டவன் இந்தக் கடற்கரை ஓரத்திலே உள்ள மக்களை மட்டும்தானா சோதிப்பான். அவர்களை மட்டும்தானா. குறிப்பாக தெற்குக் கடற்கரை ஓரத்திலே உள்ள மக்களுக்கு மட்டும்தானா இந்த 400 புயல்களும் வரும். ஆனால், ஆண்டவன் இன்னும் சில பேர்களைக்கூடச் சோதனை செய்கிறான் என்பது தெளிவாகிறது. எந்த ஆட்சிக் காலத்திலே, அணைகள் கட்டுவதிலே சிமெண்ட் உபயோகித்தார்கள், அல்லது சிமெண்டிற்குப் பதில் களிமண்ணை உபயோகப்படுத்தினார்களா சிமெண்டிற்குப் பதில் களிமண்ணை உபயோகப்படுத்தினார்களா [illegible]டந்திருக்கிறது.





இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த மாதிரி நிகழ்ச்சிகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்போது, புயல், வெள்ளம் ஏற்படுகிறபோது அது நாட்டுக்கு ஏற்படுகிற சேதமாகக் கருதி மத்திய அரசு அதிலே கவனம் செலுத்த வேண்டும். இப்படிச் சொல்லும்போது தமிழ்நாட்டு நிதிநிலை இதற்கு இடம் கொடுக்குமா என்றால் கொடுக்காது. புது வரிகள் போட முடியுமா என்றால் போட முடியாது. ஏற்கனவே வரி எல்லாம் போட் டாயிற்று. மத்திய அரசிலிருந்து 34 கோடி ரூபாய் பணம் கொடுத்திருக்கிறார்கள், போதுமா என்றால் போதாது. தமிழக அரசு மேலும் மத்திய அரசு கொடுக்க முன்வருவார்கள் என்று சொல்லுகிறது. நல்ல நம்பிக்கையாக அது இருக்கட்டும். ஆனால் நாம் கேட்பதைக் கேட்டாக வேண்டும்; உரிமையோடு கேட்டாக வேண்டும். கட்சிப் பிரச்சினை என்று கருதாமல் கேட்க வேண்டும்.

இந்த நிவாரணத்திற்கு 200 கோடி ரூபாய் தேவை. இப்போது தரப்பட்டிருக்கும் 34 கோடி ரூபாயும் அடுத்த ஆண்டுத் திட்டத் தில் வரவு வைத்துக் கொள்ளும் நிலைமைதான் இருக்கிறது. அந்த நிலை இல்லாமல் 100 கோடி ரூபாய் இனமாகவும், 100 கோடி ரூபாய் கடனாகவும் மத்திய அரசு தந்தால்தான் தமிழ கத்தைச் சீரமைக்க முடியும். இல்லாவிட்டால் சாத்தியம் இல்லை என்று கட்சி வித்தியாசம் இல்லாமல் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இரண்டு பிரதான அம்சங்களைச் சொல்லுவது எனது கடமை என்று நான் கருதுகிறேன். சேதாரங்களைப் பற்றிய விவரங்களை சொல்லும்போது வேண்டிய அம்சங்களை எடுத்துக் காட்டவில்லை, இந்த அரசு என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். சேதாரங்கள் அதிகமாக இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல விரும்பு கிறேன். இராமநாதபுரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லு கிறபோது திருப்பத்தூருக்கு குடகனாறு தண்ணீரும் சேர்ந்து வந்தது; அதிகமான சேதம் ஏற்பட்டுவிட்டது என்று முதல்வர் அவர்களிடத்திலும், டிரான்ஸ்போர்ட் அமைச்சரிடத்திலும் சொன்னபோது அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதைச் சேர்த்து அறிக்கை வந்திருக்கிறது என்று ஒத்துக் கொண்டார்கள். முறையாகத் தெரிவித்தால் ஏற்றுக் கொள்வார்கள் என்ற

நம்பிக்கையில் இந்த விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. சேதாரங்களைக் குறைத்துக் காட்டுவதன் மூலம் அதிகமான நிதியைப் பெற முடியாது; குறைத்துக் காட்ட வேண்டிய அவசியமும் இல்லை. இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட சேதத்தைச் சொல்லக் கூச்சப்பட வேண்டிய அவசியமில்லை; அதனைக் குறையாகப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

போன புயலில் பாதிக்கப்பட்ட தனுஷ்கோடியே இன்னும் சீரமைக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். தனுஷ்கோடி மூழ்கியது மூழ்கியதுதான். நம்முடைய நாட்டிலிருக்கும் ஆஸ்திகர்களின் புனிதஸ்தலம் இன்னும் சீரமைக்கப்படவில்லை. சீரமைப்பு வேலையை எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும். அந்தத் துறையில் இதற்கு என்ன திட்டங்கள் என்று பரிசீலிக்க வேண்டும்.

அந்த வகையிலே அரசாங்கத்தாலே பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. திரும்ப அவற்றை நாங்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லி நாங்களும் சொல்லிவிட்டோம் என்ற பெருமைக்குத் தயாராக இல்லை. ஏற்கனவே எங்கள் கட்சியின் சார்பாக 20 ஆலோசனைகளைக் கொடுத்தோம். அவை பத்திரிகையில் வந்திருக்கின்றன. அவற்றில் பெருவாரியானவற்றை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை ஏன் கூறுகிறேன் என்றால் வேறு விதமான சில குறைகளைச் சொல்லும் போது தயவு செய்து தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். பழைய பா ஒன்று—

"இனியவர், என்சொலினும் இன்சொல்லே—
இன்னர்

கனியும் மொழியும் கடுவே

வெங்கார வெய்தெனினும்

நோய்தீர்க்கும்—

மெய்யுரைய

சிங்கி குளிர்ந்தும் கொலும்"

சிங்கி கட்டாயம் கொல்லும். சிங்கி என்றால் விஷம். வெங்காரம் அதை முறிப்பது. அந்த வகையில் சில விவரங்களைக் கூறலாம் என்று கருதுகிறேன்.





பொதுவாக அதிகாரிகள் இந்த நிவாரணப் பணிகளை அமல் நடத்துவதைப் பாராட்டினாலும் சில இடங்களில் கீழே இருப்பவர்களுக்கு இந்தப் பணம் சரியாகக் கிடைக்கவில்லை, சரியான விநியோக முறை இல்லை; கொடுக்கிற பணத்தில் ஒரு பகுதியை அவர்கள் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்களா என்று பார்த்தால் அதிகாரிகள் அவர்களுடைய மனப்போக்குக்குத் தகுந்தபடி நடவடிக்கை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எமனேஸ்வரத்தில் ஒரு ஆர்.ஐ. லஞ்சம் வாங்கினார் என்பதற்காக மாவட்ட கலெக்டர் அவரை சஸ்பெண்ட் செய்தார். செகரடேரியட்டில்—மந்திரிகள் பொறுப்பு என்று கூறவில்லை—இருந்தும் அவரை சஸ்பெண்ட் செய்ய வேண்டாம், டிரான்ஸ்பர் செய்யுங்கள் என்று உத்தரவு வந்தது. கலெக்டர் அவர்களே அதனை ஒத்துக் கொண்டார்கள். புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கின்ற பணத்தை வசூலித்தவரை சஸ்பெண்ட் செய்ய வேண்டாம், டிரான்ஸ்பர் செய்யுங்கள் என்று செகரடேரியட்டில் உள்ள அதிகாரி உத்தரவு போடுவாரானால் அந்த ஆர்.ஐ.க்குப் பதிலாக இந்த அதிகாரி தண்டிக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 11.40)

இந்த மாதிரி சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன இன்றைக்கு . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்த அதிகாரி எங்கே பணியாற்றினார்? அவர் பெயர் என்ன? அதுபற்றிய விவரங்கள் மாண்புமிகு உறுப்பினரிடத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கூத்தக்குடி ச. சண்முகம் :** நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். யார் இங்கே இருந்து அப்படிச் செய்தார்கள் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டாலே சொல்லுவார். தெரிந்து கொள்ளலாம், நானும் கொடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஊழல்கள் நடப்பதைத் தடுப்பதற்கு—அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன்—மக்களுக்கு ஒதுக்கப்படுகிற பணம் முழுதும் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை; துளியாக அது

மாறிவிடுகிறது என்று சொன்னார்கள். மக்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் அவர்களுக்குச் சரியாகப் போய்ச் சேரவேண்டுமென்பதை முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே சொன்னார்கள்.

பண விநியோகத்தைக் கண்காணிக்கின்ற முறையில் ஜனதா கட்சி, தி.மு.க. உள்பட அனைத்துக் கட்சிக்காரர்களையும் கொண்ட குழு அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படும் என்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கமிட்டி அமைப்பதே ஹெட்மேன்கள், கர்ணங்கள், அதிகாரிகள் ஊழல் செய்வதைத் தடுப்பதற்காகத்தான் என்று சொன்னார்கள், ஆனால் நடைமுறையிலே பார்த்தால் இன்னும் கமிட்டி அமைக்கப்படவில்லை. அந்தக் கமிட்டிகளை சீக்கிரம் அமைக்காமல் இருந்தால் அதற்குள் நாம் பணம் பெறலாம் என்ற நோக்கத்தோடு அதிகாரிகள் செயல்படுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

குமுதம் பத்திரிகைகூட ஒரு தலையங்கம் எழுதியது. முதலமைச்சர் அவர்கள் ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்று. இந்த வேலைகளை காண்ட்ராக்டர்களிடம் விடாமல் மக்கள் கமிட்டிகளிடம் விடுவோம் என்று சொன்னார்கள். தமிழ் நாட்டு மக்கள் புதிய மாறுதல் புரட்சிகரமான மாறுதல் இது என்று நினைத்தார்கள். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் என்ன நடக்கிறது? ஆங்காங்கே காண்ட்ராக்ட் விடுவதற்குத்தான் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலேயும் இரண்டு பக்கம் இருக்கிறது, இந்தப் பக்கம் 100 பேர்கள், அந்தப் பக்கம் 100 பேர்கள் இருவரும் கேட்கிறார்கள், யாருக்குக் கொடுப்பது என்று தெரியவில்லை என்று சொல்லி இவர்களே சிலரைத் தூண்டிவிட்டு மறுபடியும் காண்ட்ராக்ட் முறையைக் கொண்டுவருவதற்கு, மக்கள் கமிட்டி செய்கிற முறையை சீர் குலைப்பதற்கு முயற்சி நடக்கிறது. அதைக் கண்காணித்து, ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி காண்ட்ராக்ட் முறை ஒழிக்கப்படும் என்ற நிலைமையை அமல்படுத்துவதற்கு அரசாங்க இயந்திரம் முடுக்கிவிடப் படவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்வதால்தான் மக்களுக்குப் பணம் சரியாகப் போய்ச் சேரும்.





அடுத்து குடகனாறு. குடகனாறு மட்டுமல்ல, வைகையைப் பற்றியும் கூட நான் சொல்ல விரும்புகிறேன். எவ்வளவு சேதம் என்ற விவரங்கள் எல்லாம் பி.டபிள்யூ.டி. மினிஸ்டர் இருக்கிறார், அவருக்குத் தெரியும், நான் விவரமாகச் சொல்ல வேண்டியதில்லை. நான் டிரான்ஸ்போர்ட் மினிஸ்டரிடம் கூடக் காட்டினேன், ஒரு கல் அங்கிருந்து கொண்டு வந்திருக்கிறேன், அதிலே சிமிண்டே இல்லை, சிமிண்டே இல்லாமல் . . . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றிய விவரங்களை என்னிடத்தில் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கூத்தக்குடி ச. சண்முகம்:** போட்டோ கூட எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கல் சிமிண்டே இல்லாமல் இருக்கிறது. நல்லவேளை இப்போது இடிந்தது, கார் போகும் போது இடிந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஆகவே குடகனாறு மட்டுமல்ல, வைகையை அப்படிக் கட்டுவதற்கு யார் காரணம் என்பதைப் பற்றியும், பொதுவாக இவைகளை எல்லாம் ஆராய வேண்டும்.

அடுத்து கடன் பிரச்னை. அடிக்கடி கடன்களை ஒத்திவைத்துக் கொண்டே போகிறோம். நிரந்தரமான ஒரு மசோதாவைக் கொண்டுவந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் தராமல் இப்படிச் செய்துகொண்டிருப்பதில் பயன் இல்லை. அரசாங்கக் கடன் உள்பட எவ்வளவு கடன்களை உள்ளபடியே ரத்து செய்ய முடியும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். எத்தனை தவணைகளில் வசூலிக்க முடியும் என்பதையும் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். அப்படியில்லாமல் ஏதோ ஒத்தி வைத்துக் கொண்டே போனால் சரியாக இருக்காது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலே அப்படிப்பட்ட ஒரு நினைப்பு இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மற்ற விவரங்களையெல்லாம் நான் தனியாகச் சொல்கிறேன். தலையீடுகள் இல்லாத முறையிலே காரியங்கள் நடக்க வேண்டுமென்பதிலே அரசாங்கத்தோடு ஒத்துழைக்கத் தயார்; ஆனால் அதே நேரத்திலே அரசாங்கத் தரப்பிலே இருக்கக்கூடிய நபர்களிட

மிருந்து தலையீடு வந்தால் அரசாங்கம் கவனத்திலே கொண்டு, இது பற்றி ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆளும் அமைப்பிலே உள்ளவர்களும் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் இருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் தனியாகக் கொண்டு வருகிறேன், அவையிலே சொல்ல வேண்டியதிருந்தாலும் சொல்ல வேண்டியிருக்கும். (மணி யடிக்கப்பட்டது).

நான் ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சேதத்தை மதிப்பிடுகின்றபொழுது நான் மற்ற இடங்களிலே உள்ள சேதத்தைக் குறைத்துச் சொல்லவில்லை. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்திலே, அங்கே உயிர்ச் சேதந்தான் சேதம் என்று கணக்கிட வேண்டாம், உயிர்ச் சேதம் இல்லாவிட்டால் சேதம் இல்லை என்று கணக்கிட வேண்டாம். இதில் அரசாங்கம் கவனமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதை நான் சொல்ல வேண்டிய அவசியம் என்னவென்றால், திருப்பத்தூர் தாலுக்காவிலே கோரப்பூர் என்ற கிராமத்தில் இரவு 12½ மணிக்குத் தண்ணீர் வருகிறது. இருந்தாலும் 7 மணிக்கே பாலாற்றுக் கரையிலே இருப்பவர்கள் ஏற்கனவே புயல் வரும் என்று எச்சரிக்கை வந்ததால் அங்கேயிருந்து வெளியேறிவிட்டார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் 4 000 பேர்கள் இறந்திருப்பார்கள். அங்கே 4,000 பேர்கள் இறந்திருந்தால்தான் சேதம் என்று பார்க்காமல் இப்படிப்பட்ட இடங்களையும் மாடலாகக் கொண்டு கவனம் செலுத்த வேண்டும். 22 கிராமங்கள் வைகையாற்றுக் கரையில் இராமநாதபுரம் தாலுக்காவிலும், பரமக்குடி தாலுக்காவிலும் இருக்கின்றன. அவைகளுக்கு முதலிடம் கொடுத்து அந்தக் கிராம மக்களைப் பாதுகாக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

அடுத்து, அரசாங்க சிப்பந்திகளின் கோரிக்கை வந்திருக்கிறது. அதாவது அட்வான்ஸ் கோரிக்கை. இந்த இடம், அந்த இடம் என்று யோசிக்காமல் கொடுக்க வேண்டும். இனமாகக் கொடுக்க வேண்டும் என்றால் நிதிநிலையையெல்லாம் பார்க்க வேண்டி யிருக்கும். எங்கள் ஜில்லாவிலே 3 தாலுக்காக்களைப் பொறுத்த வரையிலும் இருக்கிறது. தமிழக அரசு இராமநாதபுரம் ஜில்லா விற்கு அது இல்லை என்று போட்டிருக்கிறது. இப்படியெல்லாம் இல்லாமல் இருக்க வேண்டும், பாதிக்கப்பட்ட சிப்பந்திகளிடத்தில்



பாரபட்சம் காட்டக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, மணிய டித்து விட்டதால், இதுவரை பேச வாய்ப்புத் தந்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* **திரு. சீ. மு. வாசன் :** பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரணம், வெள்ளையறிக்கையின் மீது விவாதக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி உரையைத் துவக்குகிறேன்.

நவம்பர் மாதம் 12 ஆம் தேதி ஏற்பட்ட இடர்ப்பாட்டின் காரண மாக எனது தொகுதியாகிய வேடசந்தூர் தமிழகத்திலேயே பெரு மளவிற்குப் பாதிக்கப்பட்ட தொகுதியாகும். கடந்த பத்தாண்டுக் காலமாக வறட்சியாலும், சமீபத்திலே ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்காலும் பாதிக்கப்பட்ட என் தொகுதி மக்கள் மிகவும் இன்ன லுக்கு உள்ளானார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கையை இழக்காது இருக்க இந்த அரசு எடுத்த சீரிய முயற்சிகளை எண்ணற்ற முறையில் பாராட்டினாலும் தகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 13 ஆம் தேதி அந்த மக்கள் சோகத்தால் வருந்தி, நாமும் ஆற்றோடு சென்றிருக்கக் கூடாதா, உடைமைகளையெல்லாம் இழந்து நாம் மட்டும் மிஞ்சியிருக்கிறோமே என்று எண்ணிக் கொண்டிருந்த நிலைமை இருந்தது. ஆனால் பத்து தினங்களிலே எத்தனை இன்னல்கள் வந்தாலும் புரட்சித் தலைவரின் அரசு நம்மைக் காப்பாற்றும், நம்மைச் சீர்தூக்கி விடும் என்று மக்கள் நினைக்கும் அளவிற்கு நமது அரசு திறமையாகச் செயல்பட்டதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கட்டக் கூடாத அணையைக் கட்டி அந்த அணையினால் எனது தொகுதி மட்டுமல்லாமல் கரூர் தாலுக்காவையும், திருச்சி தாலுக்காவையும் பெருமளவிற்குப் பாதித்தது குடகனாறு அணை. அப்பொழுதே அங்கு கட்டுவதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தும், அதையும் மீறி கட்டி, இப்பொழுது கற்பனையில் உதித்த அந்த அணை உடையும் அளவிற்கு ஆகிவிட்டது என்பதை வருத்தத்தோடு இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். நண்பர் அவர்கள் பேசும்பொழுது கட்டக் கூடாத அணையைக் கட்டினார்கள் என்று சொன்னார்கள். அப்படியென்றால் மீண்டும் அந்த

[திரு. என். பழனிவேல்] [1977 டிசம்பர் 29

அணையைப் புதுப்பிக்க வேண்டாமென்று நண்பர் அவர்கள் குறிப்பிடுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. சீ. மு. வாசன் : நான் கூறுவதெல்லாம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட வேடசந்தூர் தாலுக்காவில் கட்டியுள்ள அணை அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்தராமல் குளித்தலை தாலுக்காவிற்குப் பயனுடையதாக ஆகிவிட்டது என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்தச் சர்க்காரின் தீவிர முயற்சியால் 10,000 ஆடுகளும் . . . .

(முற்பகல் 11.50)

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, அணை உடைந்ததா, அல்லது அணைக்குப் பக்கத்திலேயுள்ள கரை உடைந்ததா என்பதற்கு விளக்கம் விரும்புகிறேன்.

திரு. சீ. மு. வாசன் : அணை உடைந்ததா அல்லது கரை உடைந்ததா என்று மாண்புமிகு உறுப்பினர் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். அணைக்குப் பக்கத்தில் 800 அடி தூரத்தில், சிமெண்ட்டினால் கட்டப்பட்ட ஷட்டர் பகுதிதான் இருக்கிறதே தவிர, மற்ற அனைத்தும் உடைந்துவிட்டன என்று உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அணை உடைந்ததா, கரை உடைந்ததா என்றார்கள். அணை என்றால் என்ன, கரை என்றால் என்ன?

* திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, அணை என்பது அந்தப் பகுதி வாழ் மக்கள் தேவையை அரசு கவனத்திற்கு தெரிவித்தபின் அரசு பொறியாளர்களைக் கொண்டு அதனை பரிசீலித்து திட்டமிட்டபின் பொறியாளருடைய ஒப்புதலுக்கு பின் திட்டம் அனுமதிக்கப்பட்டு சிமெண்ட்களையும் கற்களையும் கொண்டு கட்டப்படுகிறது. அணையை ஒட்டி இருபுறங்களிலும் உள்ள மண்மேடு கரை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் கரை என்பது, ஏற்கனவே, மண் கரைகள் இருப்பது. வெள்ளம் அளவுக்கு மீறி பாய்கிற நோத்தில் கரை உடைந்திருக்கிறது.



1977 டிசம்பர் 29] [திரு. மு. அரங்கநாதன்]

அணை உடைந்ததற்கும் கரை உடைந்ததற்கும் வித்தியாசம் தெரியாமல் ஏதோ உள்நோக்கம் வைத்துப் பேசியதால்தான் இதை நான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நேரமிருந்தால், மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களைக் கேட்டால் விவரம் சொல்வார்கள். இது ஏரியைப் போல் அல்ல. அணை என்றால், ஓடுகின்ற ஆற்றில் கரையைக் கட்டி, தண்ணீரைத் தேக்குவது. அதில், செங்கல் வைத்துக் கட்டப்படுகின்ற பகுதியும் உண்டு, மண் வைத்துக் கட்டப்படுகின்ற பகுதியும் உண்டு. ஆக, அங்கே கரை இல்லை, அணை உண்டு.

* திரு. சீ. மு. வாசன்: சுமார் 10,000 இறந்த ஆடுகளும், மாடுகளும், 130 இறந்த மனித சடலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சுமார் 130 பேர்கள் காணாமல் போய்விட்டனர். இந்நிலையில், காலரா பரவி விடுமோ என்று பயந்த அந்த மக்களுக்கு, இனாக்குலேஷன் செய்து, அவர்களுக்கு மற்றொரு அபாயம் ஏற்படாமல் தடுத்த புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இது மற்ற மாநிலத்தவர்களும் வெள்ளக் காலத்தில் எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு முன் மாதிரியாக இருக்கின்ற காரணத்தால், அதற்காகவும் இந்த அரசுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில், குடிசை இழந்தவர்களுக்கும், மண் குடிசை ஓட்டு வில்லைகள் போட்ட வீட்டை இழந்தவர்களுக்கும் ரூ. 200 அளிக்க அரசு முன்வந்துள்ளது. அதே சமயத்தில், மச்சுக் கட்டிடம் உள்ளவர்களுக்கும், சிமெண்ட் கட்டிடம் உள்ளவர்களுக்கும், அவர்கள் நஷ்டம் அடைந்திருந்தால், அதற்கும் உதவிகள் அளிக்க இந்த அரசு இன்னும் பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறு விவசாயிகளது நிலம் மண் மேடிட்டிருந்தால், அதனை இலவசமாகச் சீர் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. மற்றவர்களுக்கு 50 சதவீதம் கடனாகவும், 50 சதவீதம் மானியமாகவும் உதவி செய்து, மணலை எடுத்துத் தருவதாக அறிவித்து உள்ளதை வரவேற்கிறேன். அதே நேரத்தில், ஒரு சிலருக்கு 5 ஏக்கர் இருக்கலாம். அவர்களது நிலம் முழுவதும் மூடிவிட்டால், அவர்களுக்கு இந்த உதவித்

[திரு. கெ. மு. வாசகன்] [1977 டிசம்பர்

தொகை கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அதனைக் கருத்தில் கொண்டு அனைவருக்கும் உதவி அளிக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு குடும்பத்தில், 'பிரட் வின்னர்', வருமானம் ஈட்டுபவர் இறந்தால்தான் பணம் தரப்படும் என்று அரசு விதி இருக்கிறது. அதை மாற்றி, குடும்பத்தில் யார் இறந்தாலும் அந்தக் குடும்பத்திற்கு ரூ. 1000 தர அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே உடைந்த ரோடுகளையும் மற்றவற்றையும் செப்பனிட, கான்ட்ராக்ட் மூலமாக, அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்பகுதி மக்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்க இதனால் ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மதுரை மாவட்ட வேலை வாய்ப்பு நிறுவனங்களில், இப்பகுதி மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி என்றும். 10 ஆண்டுக்காலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்பதாலும், அப்பகுதியில் உள்ளவர்களுக்கும், பொதுவாக, அம்மாவட்டத்திலுள்ளவர்களுக்கும் முன்னுரிமை தந்து வேலை வாய்ப்புத் தர இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில், நமது புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே வந்திருந்தபோது, என்னுடன் ஒத்துழைக்க 7, 8 சட்டமன்ற உறுப்பினர்களைப் பணித்ததையும், அவர்கள் உறுதுணை புரிந்தமைக்கும், அதற்கு வழி வகுத்தமைக்காகவும் நன்றி கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன், நன்றி.

*திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய தமிழகத்திலே நடந்த ஒரு பெரும் கொடுமைக்குப் பிறகு இந்த மாமன்றத்திலே அதைப்பற்றி விவாதிக்க ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு மிக்க நன்றி.

முதலிலே நான் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இந்த நிவாரண வேலையில் செய்திருக்கக் கூடிய காரியங்கள் மிகவும் போற்றத்தக்கவை. யாராவது உயிர்



1977 டிசம்பர் 29]

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

இழந்தவர்களுக்கோ அல்லது புயலிலே கஷ்டம் அடைந்தவர்களுக்கோ அந்தக் காலத்திலே 80 ரூபாய் கொடுத்து வந்தார்கள். இன்று அதை 200 ரூபாயாக இந்த அரசு ஆக்கியிருக்கிறது. நான் அவர்களுடைய பெருந்தன்மைக்கும், இந்த நல்ல சீரிய பணிக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்திலே எங்களுடைய மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அவரைச் சார்ந்த இன்னும் இருக்கக்கூடிய அதிகாரிகளும் மிகவும் தீவிரமாக, நல்ல முறையிலே, ஆங்கிலத்தில் சொல்வார்கள் 'டெடிகேடட் சர்வீஸ்' என்று, அந்த மாதிரி இந்த வெள்ள நிவாரண வேலையில் ஈடுபட்டு உதவியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பெருமையோடு சொல்லிக் கொண்டு அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களை நான் கூறிக்கொள்கிறேன்.

இப்போது மத்திய அரசாங்கத்தில் இருந்து நமக்கு 33 கோடி ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய சேதத்தை பார்க்கும்போது இந்த 33 கோடி எந்தவிதத்திலேயும் நமக்குக் கட்டாது. பார்க்கப் போனால் ஒரு ஜில்லாவுக்கு அல்லது 2 ஜில்லாவுக்குத்தான் அது வரும். நமக்குக் குறைந்தது 150 கோடி ரூபாய் அதற்குத் தேவை. நாங்களும் நேற்று சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, மத்திய அரசாங்கம் 150 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று 'ரெசலூஷன்' பாஸ் பண்ணி இருக்கிறோம். மானியமாகத் தரவேண்டுமென்று. நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, மத்திய அரசாங்கம் முக்கால் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், கால் பங்கு பொறுப்புதான் நம்முடைய தமிழ்நாடு அரசுக்கு விடவேண்டும். அப்படி இருந்தால்தான் இந்தக் காரியங்களை நல்ல முறையில் செய்ய முடியும். இவ்வளவு குறைவான ஒரு நிதியை வைத்துக்கொண்டு எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. ஏனென்றால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல யாரையும் வற்புறுத்தி வாங்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் யாரையும் எந்தக் காலத்திலேயும் வற்புறுத்திக் கேட்கவில்லை. அவர்களாகவே கொடுத்ததுதான். இரண்டு லட்சம் ரூபாய்கள் கொடுத்திருக்கிறோம். இன்னும்

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்] [1977 டிசம்பர் 29

கொடுத்திருப்போம். அதற்குள் இங்கே கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று கொடுத்துவிட்டோம். எங்கே அனுப்பினாலும் கவலை இல்லை. காரியம் நடக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். தண்ணீரே பார்க்காத மாவட்டம். 150 ஆண்டுகளுக்கு முன்பு கூட இவ்வளவு தண்ணீர் பார்த்தது இல்லை என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாவட்டம். அந்த மக்களுக்கு டாக்ஸ் ரிலீப் கொடுக்க வேண்டும். இன்று பார்த்தால் கோவாப ரேடிவ் லோனை கலெக்ட் பண்ணுவதிலே அதிகாரிகள் கெடுபிடி செய்கிறார்கள். அரசாங்கம் கோவாபரேடிவ் லோனை வசூல் செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போதுள்ள நிலையில் அந்தப் பகுதி மக்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எந்தவிதமான வருமானமும் இல்லாத நேரமாக அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு நிலைமை இருப்பதால், அரசாங்கத்திற்கு நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். இம்மீடியட்டாக, அதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

வெள்ளச் சேதம் பற்றிச் சொன்னார்கள். வெள்ளச் சேதம் என்றால் நம்முடைய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொன்னதைப் போல் இறந்ததை மட்டும் நாம் பார்க்கக் கூடாது.

இன்றைக்கு எத்தனையோ நிலங்கள் மண் மேடிட்டு போய்க் கிடக்கின்றன. அதையெல்லாம் சீர் செய்யவேண்டுமென்றால், அரசாங்கம் தான் சீர் செய்யவேண்டும். விவசாயிகள் சீர் செய்ய முடியாது. அரசாங்கம் ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு புல்டோசர் கொடுத்து இனமாக அதைச் சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் கையில் பணம் இல்லை.

ரோடுகள் வசதி சரியில்லை. ரோடுகள் அதிகம் போடவேண்டும். அதற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூ. 1,20,000 ஒதுக்கி யிருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இது போதாது. ரோடுகள் வசதி சீர் செய்யப்படவில்லை என்றால், நிவாரண வேலைகள் சரியாக நடைபெற முடியாது. ஒரு மூலையில்



1977 டிசம்பர் 29] [திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

இருந்து மற்றொரு மூலைக்குச் செல்லவேண்டும் என்றால் ரோடு வசதி இல்லை. ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் செல்ல மண்ரோடு போடுவதற்குக்கூட முடியாத நிலை இருக்கிறது. இவற்றை ஒன்றாகச் சேர்க்க வேண்டும் என்றால் அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்தால்தான் முடியும். ஆகவே, துரித நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வில்லேஜ் ஆபீசர்களைப் பற்றி ஒன்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன், மணியக்காரர், கணக்குப்பிள்ளை இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையைக் கொடுத்து இருக்கிறார்கள். எந்தெந்த வீடுகள் அழிந்து இருக்கின்றன, எந்த எந்தச் சாலைகள் அழிந்து இருக்கின்றன என்று கணக்கு எடுக்கச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே சில தவறுகள் நடக்குமானால்—நடந்து இருக்கின்றன—யாராவது ஒருவர் அந்த மணியக்காரர் பேரில் புகார் கொடுத்தால், உடனே அவரைச் சஸ்பெண்டு செய்து விடுகிறார்கள். அப்படிச் செய்யக் கூடாது. எங்காவது தவறு நடந்து இருக்கிறது என்று புகார் வருமானால், அதனைப் பரிபூர்ணமாக விசாரித்து நடவடிக்கை எடுத்து, உண்மையிலேயே தவறு நடந்து இருந்தால், அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் குறுக்கே நிற்கத் தயாராக இல்லை. யாருக்காகவும் இங்கே சிபார்சு செய்யவும் வரவில்லை. ஏனெனில் கிராமத்தில் பல தொந்தரவுகள் இருக்கின்றன அவர்கள் ஒரு வீட்டில் கணக்கு எடுத்து விட்டு அடுத்து வீட்டை விட்டு விட்டால் உடனே அவரை அடிக்கப் போய்விடுகிறார்கள். எங்கள் ஜில்லாவில் 49 பேரை இதுவரையில் சஸ்பெண்டு செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுத்து, அவர்கள் உண்மையிலேயே தவறு செய்து இருந்தால், தகுந்த விசாரணை நடத்தி, அதற்குப் பிறகு அவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் சொல்ல விரும்புவது. இந்த டாம்கள் கட்டி கொஞ்சநாள் ஆவதற்குள்ளேயே இடிந்து போய் இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. இனிமேல் அந்த நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போதுள்ள பொதுப்பணித் துறை

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

அமைச்சர் அவர்கள் இன்ஜினியராக இருப்பதால் அவருக்கு அதைப் பற்றியெல்லாம் மிகவும் தெரியும். பாலத்திற்குப் பக்கத்தில் பண்ட் கட்டுகிறார்கள். அந்த பண்டையும் சேர்த்து வெள்ளம் அடித்துக்கொண்டு போய் இருக்கிறது. ஒரு இடத்தில் பாலம் நன்றாக இருக்கிறது. பண்டு போய்விட்டது. லூஸ் சாயலில் அந்தப் பாலம் கட்டியதால் அந்த நிலைமை ஏற்பட்டு இருக்கக்கூடும்.

விடூர், வேடசந்தூர் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட உடைப்பைப் பற்றி விசாரிக்க, ஒரு எக்ஸ்பிரியன்ஸ்ட் ரிடையர்ட் இன்ஜினீயர் ஒருவரைப் போட்டு, ஒரு விசாரணைக்கமிஷன் அமைத்து, அதற்கு பொறியாளர் யார், கான்டிராக்டர் யார் என்பதைப் பார்த்து, இனியொரு முறை அப்படி நடக்காமல் இருப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புத் தந்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ரா. உமாநாத்:** தலைவரவர்களே, உங்களிடம் ஒரு வேண்டுகோளோடு ஆரம்பிக்கிறேன். தமிழகத்தில் வந்த புயல், வெள்ளம், அதனுடைய பெரும் பளுவைச் சுமந்திருக்கக்கூடிய, நாகைப்பட்டினம் பகுதி மக்களின் சார்பில் பேசுவதால், சில பிரத்யேக பிரச்னைகள் இருப்பதால் எனக்கு நேரத்தை சற்று அதிகமாக, தகுந்தாற்போல அட்ஜஸ்டு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் 12-20-க்கு முடித்துவிட வேண்டும். மற்ற உறுப்பினர்களும் அதே வேண்டுகோளோடு என்னிடம் வந்திருக்கிறார்கள். அவ்வளவு பெரும் பாதிக்கப்பட்ட அந்த மாவட்டத்திலிருந்து வந்தவர்கள். ஆகவே 15 நிமிடம் தரப்பட்டிருக்கிறது. 12-20-க்கு தாங்களே முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ரா. உமாநாத்:** 15 நிமிடம் கொடுக்கப்பட்டும் கூட எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் 25 நிமிடம் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து இதையெல்லாம் தெரிவித்துக் கொண்டிருக்காதீர்கள். 15 நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.





**திரு. ரா. உமாநாத்:** தலைவரவர்களே, இந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் பிரமாதமானவை உண்மையாகவே இருக்கின்றன என்று மார்க்சிஸ்டு கட்சியின் சார்பாக நான் சொல்ல விரும்புகிறேன். நிகழ்ச்சிப் போக்குகள் சரியாகவே இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க முதலமைச்சர் தலைமையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை மார்க்சிஸ்டு கட்சியின் சார்பாக மனமாரப் பாராட்டுகிறேன். சில போதாமைகள் உண்டு. சில குறைகளும் இருக்கின்றன. அரசாங்க இயந்திரத்தின் அமைப்பு, ஸ்டேட் மெஷினரி, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து வந்து இருக்கக்கூடிய அமைப்புக் காரணமாக நிவாரணப் பணிகளை அமுல்படுத்துகிறபோது சில கோளாறுகள் உண்டு. அவைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்று நம்புகிறேன். அதற்காக, இந்த அரசின் துணிச்சலான சாதனைகளை, அந்தக் குறைகளால் மறைக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வேண்டுகோளை இந்த நேரத்தில் விடுக்க விரும்புகிறேன். அவர் ரிலீசாகி வெளியே வந்து, புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தபின் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்தேன். ஒன்றும் சரியாகச் செய்யப்படவில்லை என்ற கருத்துடன் அந்த அறிக்கை இருந்தது. அதைப் பார்த்தவுடன் நான் உண்மையிலேயே வருத்தப்பட்டேன். அரசியல் குரோதம் காரணமாக நம் பார்வை உண்மை நிலையை மறைக்கக் கூடாது என்பதுதான் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள்.

அந்தக் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்கள் கேட்க வேண்டும். அந்தக் கட்சியின் நாகப்பட்டினம் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. திரு. ராசமாணிக்கம் அவர்களே, அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் முன்னால் கூடியிருந்த கூட்டத்தில் நிவாரண நடவடிக்கைகள்பற்றிப் பாராட்டி பேசியுள்ளார். வெங்கிடங்கால் சந்தானம் என்பவர் அந்த யூனியனின் முன்னாள் சேர்மனாக இருந்தவர், அவர் அந்தக் கூட்டத்தில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்.

சபையில் இருக்கக்கூடிய கனம் நண்பர் தாழை கருணாநிதி அவர்களை, திருவாரூரில் கனம் அமைச்சர் முன்னால் நடைபெற்ற கூட்டத்தில், கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பாக இரண்டு கேள்விகளைக் கேட்டார். எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் திருப்தியாக இருக்கின்றனவா என்று கேட்டார் அமைச்சர். திருப்தி என்று சொன்னார் கனம் உறுப்பினர். அதிகாரிகள் ஒத்துழைக்கிறார்களா என்று கேட்டார். ஒத்துழைக்கிறார்கள் என்று சொன்னார்.

ஆகவே, அந்த முறையில் உங்கள் சார்பாக இருக்கக்கூடிய உங்களுடைய முக்கியமான பிரமுகர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறபோது, இந்த மாதிரி 'நாஷனல் கலாமிடி' என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினையில் அரசியல் குரோதத்தைப் பாராட்டக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில் அவசர நிலை விஷயத்தில் எங்களுக்கும் ஆளுங்கட்சிக்கும் அபிப்பிராய வித்தியாசம் உண்டு. திருமதி இந்திரா காந்தியைக் கைது செய்தபோது, மறுநாள் நடந்த போலீஸ் கெடுபிடி, அன்றைக்கு அனுமதிக்கப்பட்ட வன்முறைகள், இவைகள் பற்றி எங்களுக்கும், ஆளுங்கட்சிக்கும் அபிப்பிராய வித்தியாசம் உண்டு. கறுப்புக்கொடி விஷயத்தில் அரசாங்கம் நடந்து கொண்ட முறை பற்றி எங்களுக்கு அபிப்பிராய பேதம் உண்டு. சமீப காலத்தில் பல்வேறு அமைப்புகளில் நடந்த போராட்டங்கள் சம்பந்தமாக செய்யப்பட்ட கைதுகள், மற்ற நடவடிக்கைகள் பற்றி எங்களுக்கும் ஆளுங் கட்சிக்கும் அபிப்பிராய வித்தியாசம் உண்டு. இருந்தாலும், அப்படிப்பட்ட கடுமையான ஆட்சேபனை இருந்தாலும், புயல், வெள்ள நிவாரணப் பணியில் இந்த ஆட்சி மெச்சத் தகுந்த நடவடிக்கைகளைச் செய்திருப்பதை தயக்கமின்றி நான் பாராட்டுகிறேன் என்று முதலில் சொல்ல விரும்புகிறேன். ஆகவே அதையும், இதையும் 'மிக்ஸ்' செய்யக் கூடாது.

நாகப்பட்டினம் தாலுக்காவில் நடந்திருக்கக்கூடிய பணிகளே அதற்குச் சான்றாகும். அமைச்சர் திரு. ராகவானந்தம், ரிலீப் கமிஷனர் திரு. நடராசன் அவர்கள், கலெக்டர் திரு. சுப்பிரமணியம், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் நான் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையா, டி.ஐ.ஜி.





திரு. வைகுந்த் எல்லோரும் ஒரு டீமாக இரவு பகலாக ஒரு குழுவாகப் பணியாற்றியுள்ளதை மறைக்க முடியாது. அடிக்கடி சாவகட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு, கன்சல்ட் செய்து, மறுநாள் நடவடிக்கை எடுக்கப்பட்டன. என்.ஜி.ஓ.க்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தஞ்சை மருத்துவக் கல்லூரி டாக்டர்கள், தஞ்சை மருத்துவக் கல்லூரி இன்டர்னீஸ், உள்ளூர் மருத்துவ மனை அதிகாரிகள் இரவு பகலாக, இரண்டாவது புயல வரும் ஆபத்திருக்கிறது என்று அறிவிக்கப்பட்ட பிறகும், அங்கே முகாம் போட்டு வாழ்ந்தால் அந்த மக்களோடு வாழ்வோம் இல்லாவிட்டால் அவர்களோடு அழிவோம் என்று டீமாக ஆற்றிய பணிகளை எல்லாம் குறை சொல்லக் கூடாது. அடுத்தபடியாக. . .

(பிற்பகல் 12-10)

**திரு. தாழை மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் கருத்தை தவறாக இங்கே அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கருத்தைச் சொல்கிற போது, சிலயிடங்களில் குறைபாடுகள் இருக்கின்றன, சில யிடங்களில் மக்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்றுதான் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ரா. உமாநாத் :** ஒரு விஷயத்தை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. எங்களுக்கும் அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்களுக்கும் தொழில் தகராறுகளில் கருத்துவேறுபாடுகள் பல உண்டு. அதை இல்லை என்று அவர்களும் மறுக்கமாட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் நாகைக்கு அனுப்ப அவர்களைத் தேர்ந்தெடுத்தது ஒரு சிறந்த முடிவு என்றுதான் நான் கருதுகிறேன். துணிச்சலோடு, ஸ்பாட் முடிவுகள் எடுத்து அவற்றை அமல் நடத்துவதில், விரட்டி, விரட்டி அமல் நடத்துவதில் அவர்களுடைய திறமையைப் பொறுத்தளவில்—அவர்களை நான் புகழவில்லை—பாராட்ட வேண்டும்.

Give the devil its due என்று சொல்வார்கள். I do not think Thiru Raghavanandam is a devil. I say only to those who consider him a devil.

19-ம் தேதி 11 மணி அளவில் ஆண்களும் பெண்களும் ஒரு நாள் பூராவும் அரிசி கிடைக்காமல் . . .

[1977 டிசம்பர் 29

**திரு. ஏ. ரகுமான்கான் :** பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் இந்த வெள்ளச் சேதம் பற்றி கொடுத்த அறிக்கைபற்றி ஒரு கருத்துந் தெரிவித்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வாய்ப்பு வரும்போது அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** நான் சொல்வது என்னவென்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லியிருப்பதை நான் புரிந்துகொண்டு விட்டேன். உட்காருங்கள்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** நான் சொல்லுவது என்னவென்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து உட்காருங்கள்.

(திரு. துரைமுருகனும், திரு. ஏ. ரகுமான்கானும் எழுந்திருந்தார்கள்). (கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வாய்ப்பு வரும்போது அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். ஏற்கனவே ஒரு உறுப்பினர் குறிப்பிட்டுவிட்டார்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** அவர்கள் கருத்தை பின்னர் மாற்றிச் சொல்ல வேண்டும் அல்லாவா?

**திரு. துரை முருகன் :** ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ க்ளாரிபிகேஷன். உட்காருங்கள்.

(கூச்சல், குழப்பம்)

**திரு. ரா. உமாநாத் :** 19-ம் தேதி அன்று 11 மணி அளவில் அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னபோது அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு 11 மணிக்கு ஸ்டாபை அனுப்பி 2 மணி வரை இருந்து பொதுமக்களுக்கு அரிசி விநியோகிக்கப்பட்டது. (ஆரவாரம்)



1977 டிசம்பர் 29] [திரு. ரா. உமாநாத்]

மன்னை, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை போன்றவிடங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு அப்போதைக்கப்போது செய்ய வேண்டிய அளவு முடிந்த காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

புயல் நெருங்கியபோது நாங்கள் மக்கள் மத்தியில் இருந்தது உண்மையிலேயே அந்த மக்களுக்கு ஒரு தைரியத்தைக் கொடுத்தது. எல்லோரும் நம் மத்தியில் இருக்கிறார்கள். புயல் வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் அவர்களுக்கு ஏற்பட்டது.

சில குறைகள் இருக்கின்றன என்று சொன்னேன். அதாவது இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில்—தமிழ் அறிக்கையில் 4-ம் பக்கத்தில்..... "நவம்பர் 11-ம் தேதி 19-30 மணியளவில் இப்புயல் சென்னை நகரிலுள்ள புயல் எச்சரிக்கை ரேடாரின் செயற் திறனெல்லைக்குள் வந்தது. அது முதல் புயலின் இயக்கம் மணிக்கு மணி கண்காணிக்கப்பட்டு, முறையாக புயல் எச்சரிக்கைகளும் வெளியிடப்பட்டன. இதனால் கடற்கரையோரமுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் தக்க தருணத்தில் முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கவும் நிர்வாக இயந்திரம் முடுக்கி விடப்பட்டு ஆயத்த நிலையில் இருக்கவும் முடிந்தது....." என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் புயல் எச்சரிக்கை செய்யப்படவில்லை. விளவங்கோடு பகுதியில் இந்த எச்சரிக்கை செய்யப்படவில்லை என்று எங்களுக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது.

அடுத்து, நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்பட்டது என்று சொல்லியிருப்பது அவ்வளவு முழுமையாக உண்மை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்பட்டிருந்தது என்று சொல்வது சரியாக இல்லை. புயல் பாதிக்கப்பட்ட இரு நாட்களிலும் அரிசியும் கிடைக்கவில்லை, மண்ணெண்ணெயும் கிடைக்கவில்லை. நாகையில் முதல் இரண்டு நாட்கள் அட்மினிஸ்ட்ரேஷனே பிரேக் டவுன் ஆகியிருந்த நிலைதான் இருந்தது. அரிசி இருந்தும் கொடுக்கப்படவில்லை. ஆர்.டி.ஓ. அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. He dare not takeup the responsib'lity. கிட்டத்தட்ட ஒரு கலகமே வந்தது. ஜனங்கள் கோதுமை மூட்டை இருக்கின்ற இடத்திற்குள்

[திரு. ரா. உமாநாத்] [1977 டிசம்பர் 29

நெருக்கியடித்துக் கொண்டு சென்ற போது, மூட்டை விழுந்து எட்டு பத்து பேர்கள் செத்து இருப்பார்கள். அதாவது அரிசி இருந்தும், அதிகாரிகள் எங்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் வரவில்லை என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள், அதே போல் தான் மண்ணெண்ணெய் இருந்தும் இன்ஸ்ட்ரக்ஷன் வரவில்லை என்று கொடுக்கவில்லை. பின்னால் 14-ம் தேதி நானும் கலெக்டரும் ஆர்.டி.ஓ.வும் நண்பர் திரு. முருகானந்தமும் போய் சொன்ன பின்னால்தான் கொடுக்க முடிந்தது. அதன்பின்னால் 15-ம் தேதி அமைச்சர் அவர்கள் வந்தார்கள்.

அதேபோன்றுதான் திண்டுக்கல்லில், லக்கம்பட்டி என்ற இடமே வாஷ் அவுட்டாகியிருந்தது. அந்த அளவுக்கு அங்கிருந்த குளம், வாய்க்கால் சேதமடைந்தது. பின்னால் அங்குள்ள மக்களே சென்று ஆர்.டி.ஓ.-விடம் சொல்லுகிறபோதுதான் ஆர்.டி.ஓ.வுக்கு விஷயம் தெரியும் . . .

That means the R.D.O. had not been moving out.

அதாவது அந்த ஊர் மக்களே 10 மைல் நடந்து சென்று ஆர்.டி.ஓ.-வுக்கு சொன்ன பின்னால் தான் ஆர்.டி.ஓ.-வுக்கே விவரம் தெரிய முடிந்தது. பின்னால் 13-ம் தேதி அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் வந்த பின்னால் வேலைகள் சீராக நடந்தது. ஆகவே, நிர்வாகம் எல்லாம் முன்னாலேயே சரியாக இருந்தது என்று சொல்லியிருப்பது சரியல்ல. மேலும், ஆங்கிலத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்ற புத்தகத்தில் 17-வது பக்கத்தில் சொல்லப் பட்டிருப்பது . . .

' All the families affected by the cyclone for whom cash grant for reconstruction of their houses is sanctioned have been ordered to be supplied 5 kgs. of rice free of cost, independent of whatever rice has already been distributed free of cost out of Government stocks or donations from philanthropists.

அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. நாகை தாலுகாவில் 200 ரூபாய் வீதம் வழங்கப்பட்டது, ஐந்து கிலோ அரிசியும் வழங்கப்பட்டது, இன்னும் ஃப்ரஷ் க்ளேம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் இன்னும் பல இடங்களில் கொடுக்கப்படவில்லை. கீவளூர், தலைஞாயிறு, மன்னார்குடியில் நான்கைந்து பஞ்சாயத்துகள், இன்னும் இது போன்ற பல ரெவன்யூ கிராமங்களிலும் ஐந்து கிலோ அரிசி கொடுக்கப்படவில்லை. சில இடங்களில் குறைவாகத்தான் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 200 ரூபாய்



1977 டிசம்பர் 29] [திரு. ரா. உமாநாத்]

கொடுக்கவேண்டிய விஷயத்தில், கோவை மாவட்டத்தில் 80 ரூபாய் தான் கொடுக்கப்பட்டது என்றும், இதனால் அதிகமான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் ரிப்போர்ட் வந்திருக்கிறது.

I am speaking subject to correction.

பவானி போன்ற இடங்களில் 25 சதவீதம் தான் கொடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆயிரம் பேர்களுக்கு மேல் இன்னும் க்ளெய்ம் இருப்பதாகத் தெரிகிறது. தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் சுத்தமாக இன்னும் எதுவும் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. இப்போது கூட ஒரு தந்தி வந்திருக்கிறது. "From Kappalamangalam: 'Cyclone relief not properly paid"; என்று தந்தி வந்திருக்கிறது.

திருச்சி மாநகரத்தில் பொதுப்பணித் துறையைச் சார்ந்தவர்கள் சுறுசுறுப்பாக பணியாற்றவில்லை. இதன் காரணமாக ஆரம்பத்தில் கொஞ்சம் தயக்கம் ஏற்பட்டது. அங்கு ஒரு பெரிய 'ரூமரே" ஏற்பட்டது. பவானிசாகர் உடைந்துவிட்டது என்று வதந்தி பரவி மக்கள் எல்லோரும் மலைக்கோட்டையில் ஏறி இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

The whole social life broke down. The Government machinery broke down. பின்னால் நிலைமை தெளிவாக்கப்பட்டது. 20, 25 தேதிகளில் எப்படி இந்தச் செய்தி வந்தது என்பதைப் பற்றி தயவு செய்து அரசாங்கம் விசாரிக்க வேண்டும் இதற்கு ஒரு என்கொயரி வைக்கவேண்டும்.

வேலைகள் மேற்கொள்ளுகின்ற விஷயத்தில் காண்டிராக்ட் கொடுப்பதில்லை, அரசாங்கமே மராமத்து வேலைகளைச் செய்யும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகச் செய்தி பத்திரிகையில் வந்தது. ஆனால், முதல் அமைச்சர் அவர்களும், அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களும் தென் ஆற்காடு மாவட்டத்தில், சிதம்பரத்தில் பேசிய மறுநாளே, ராஜன் வாய்க்காலும், கான்சாகிப் வாய்க்காலும் காண்டிராக்ட்க்கு விடப்பட்டிருக்கிறது. வேண்டுமானால், 2, 3 நாட்கள் கழித்து விடப்பட்டிருக்கலாம்.

(பிற்பகல் 12-20)

[திரு. ரா. உமாநாத்] [1977 டிசம்பர் 29

ஆனால், எப்படியோ கான்ட்ராக்டுக்கு விடப்பட்டுள்ளது. இந்த மராமத்துத் துறையிலுள்ள சிவில் என்சினியர்களுக்கும், கண்டிராக்டர்களுக்கும் பல வருஷங்களாக 'கொலாபரேஷன்', 'கொல்லுஷன்' இருந்து வருகிறது. அதை 'பிரேக் அப்' செய்தால் தான், நீங்கள் இதை நடைமுறையில் அமுல்படுத்த முடியும்.

சர்வ கட்சி கமிட்டியை ஆரம்பத்தில் அமைப்பதற்கு இந்த அரசாங்கத்தில் தயக்கம் இருந்தது. பிறகு அமைக்கலாம் என்று வருகிறபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒதுக்கிவிட்டு அமைக்கலாம் என்று பேசப்பட்டது. பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சேர்த்துக் கொண்டு இந்தக் கமிட்டியை அமைக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், அது இன்னும் கீழே போகவில்லை. குழுவும் அமைக்கப் படவில்லை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், அப்படி முதலில் காட்டிய தயக்கத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தை முதலில் ஒத்துழைக்காது என்று சொன்னதும் சரியல்ல என்பதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து.

அவர்கள் அப்படி ஒத்துழைக்காமல் இருந்ததற்கான காரணங்கள் கூறலாம். ஆனால், சில இடங்களில் ஒத்துழைத்திருக்கிறார்கள். அது எங்களுக்குத் தெரியும். அதற்கான ஆதாரங்கள் எங்களிடத்திலே இருக்கின்றது. அந்த விவரத்திற்குப் போக நான் விரும்பவில்லை. ஆனால், அதேபோல் சில இடங்களில் ஒத்துழைக்காமலும் இருந்திருக்கிறார்கள். அதற்கான விவரங்களும் என்னிடத்தில் இருக்கிறது.

(உறுப்பினர்கள் திரு. தாழை மு. கருணாநிதி, திரு. என். கிட்டப்பா ஆகிய உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்திருந்தனர்.)

அந்த விவரங்களை நான் நிச்சயமாக உங்களிடத்திலே சொல்கிறேன். உங்கள் காம்ரேடுகள் திருத்திக் கொள்வதற்கும் வசதியாக இருக்கும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்கொடை ரூ. 25 ஆயிரம் கொடுக்க முன்வந்தபோது, தலைமைச் செயலாளர் அதை 'ரிஜக்ட்' செய்தது சரியில்லை. The Chief Secretary had no business to reject that amount because it is an amount of the public.

(சபையில் ஒரே ஆரவாரம், கூச்சல்)



1977 டிசம்பர் 29]

**திரு. துரை முருகன் :** * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து முதலில் உட்காருங்கள். ஒரு உறுப்பினர் என்ற முறையில் நடந்து கொள்ளுங்கள். இப்படிப் பேசுவது உங்களுக்கே இழுக்கு. இப்படி * * என்று சொல்லக் கூடாது.

**திரு. துரை முருகன் :** * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் ஒரு உறுப்பினர் தானா என்று நான் கேட்க விரும்புகிறேன். தயவுசெய்து உட்காருங்கள். தாங்கள் ஒரு உறுப்பினர் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள். எனவே தயவுசெய்து உட்காருங்கள். இந்தச் சபையின் மரபைக் காப்பாற்றுங்கள். இப்படி மீண்டும் * என்று சொல்லக் கூடாது.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** இந்த அவை சில விதிமுறைகளுக்கு உட்பட்டும், சபாநாயகரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டும் நடக்கவில்லையானால், சபையையே நடத்த முடியாது. பேரவைத் தலைவர் * என்ற வார்த்தையை உபயோகப் படுத்தக் கூடாது என்று சொல்லிய பிறகும், அப்படித் தான் சொல்வேன் என்பது எந்தவகையில் நியாயம். திறமையும், அனுபவமும் மிக்க ஒரு உறுப்பினர் சபைத் தலைவரின் உத்தரவை மீறுவது என்பது இந்தச் சபைக்கே அவமானம் என்று நான் கருதுகிறேன்.

(மீண்டும் திரு. துரை முருகன் பேச எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து அமருங்கள். மீண்டும் பேசுவதற்கு அனுமதிக்க நான் தயாராக இல்லை. மீறினால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். இதிலே இந்தச் சபையின் விதிமுறைகளை நான் நிச்சயம் பயன் படுத்துவேன். வேண்டுமென்றே சிக்கலை உண்டாக்குகிறீர்கள். மரபைக் காப்பாற்ற, எதிர்க் கட்சித் தலைவர் ஏதாவது கூற வேண்டும். அவர்கள் கட்சிக்கு கட்டுப்பாடு உண்டா என்பது வேறு

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1977 டிசம்பர் 29

கேள்வி. தலைவர்களாக உள்ளவர்கள் அடக்க வேண்டும். மரபைக் காப்பாற்றியாக வேண்டும். இல்லாவிட்டால் விதிகளைப் பயன் படுத்தி, வெளியேற்ற வேண்டி வரும்.

**திரு. துரை முருகன் :** * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் இப்படிப் பேசுவீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். இந்த இடத்திற்கு மதிப்பு தருவது, அனுபவமுள்ள உறுப்பினர்களுடைய பண்பாகும். அதை விட்டு விட்டு, எதை எதையோ நினைத்துக் கொண்டு, எதையோ இடித்துக் கொள்வதில் பயனில்லை. உறுப்பினர் மரபைக் கடைப்பிடிக்காமல், இப்படிப் பேசுவதிலே நியாயமில்லை. எனவே, அவர்கள் பேசிய அத்தனையையும் சபைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி ஆணை யிடுகிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** ஆகவே, அந்த மாதிரி மறுப்பது சரியல்ல. அவர்களைக் கமிட்டியில் சேர்க்காமல் இருப்பது சரியல்ல. ஜனங்கள் அதைக் காழ்ப்புணர்ச்சி என்று நினைப்பார்கள்—இப்போது அரசாங்கம் முன்வந்து அந்த மாதிரி நிலைமை இல்லாமல் அவர்களைக் கமிட்டியில் எல்லா மட்டங்களிலும் சேர்த்துக் கொள்வது என்று முன்வந்ததைக் காண சந்தோஷப்படுகிறேன்.

இந்த ஒயிட் பேப்பரில் ஒரு முக்கியமான விஷயத்தை விட்டு விட்டார்கள். தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர்கள் தங்களுடைய விவசாயச் சகோதரர்களுக்காக ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்து ஒரு கணிசமான தொகையைக் கொடுத்திருக்கிறார்கள். அதை இதோடு இணைத்திருக்க வேண்டும்.

கோவை தொழிலாளர்கள்—எல்லாச் சங்கங்களும் சேர்ந்து வசூல் செய்து ஒரு லட்சம் ரூபாய் ஆந்திர புயல் நிவாரண நிதிக்காகக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அதையும் சேர்த்திருக்க வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-25 இல் சில **சொற்கள்** அகற்றப் பெற்றன.



1977 டிசம்பர் 29] [திரு. ரா. உமாநாத்]

எலக்ட்ரிசிடி டிப்பார்ட்மெண்ட் ஊழியர்களை உண்மையிலேயே பாராட்ட வேண்டும். எல்லா போஸ்ட்டுகளும் விழுந்து விட்டன. மாஸ்லிவ் ஆக அவர்களே லேபரர்களைக் கொண்டு வந்து, போஸ்டுகளைக் கொண்டு வந்து எலக்ட்ரிசிடியை ரெஸ்டோர் செய்தார்கள்.

ஏற்கனவே குத்தகை பாக்கி 1978 ஜனவரி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்படி குத்தகை பாக்கிக்காக ரெவின்யூ கோர்ட்டில் டிகிரி வாங்கியிருக்கிறார்கள். 1384, 1385, 1386, 1387 ஆகிய பசலிகளைப் பொறுத்தவரை ரெவின்யூ கோர்ட் ப்ரொசீடிங்கை நிறுத்தி வைக்க வேண்டும்.

200, 300 ரூபாய், 5 கிலோ அரிசி கொடுக்கப்படாத இடங் களுக்கு உடனே கொடுக்க வேண்டும்.

இறந்தவர்களைப் பொறுத்தவரை மிஸ்ஸிங் என்ற கணக்கை வைத்திருக்க வேண்டாம். டெட் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இறந்தவர்கள் ஏர்னிங் மெம்பரா என்று தயவு செய்து பார்க்க வேண்டாம். ஏழை மக்கள் ஏர்ன் பண்ணித்தான் வாழ வேண்டும். இறந்தவர்கள் அவ்வளவு பேர் குடும்பத்திற்கும் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்.

தற்போது 128 கோடி ரூபாய் செலவு செய்து நிவாரணப் பணிகளை மேற்கொள்வதை நிச்சயமாக ஆதரிக்கிறோம்.

மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகையை பிளானிங்குக்கு வெளியே கொடுக்க வேண்டும். பிளானிங்கில் அட்ஜஸ்ட் செய்தால் பின்னாலே பிளானிங் டெவலப்மென்ட் இல்லாமல் போய்விடும், வளர்ச்சித் திட்டங்கள் கைவிடப்படும் நிலை ஏற்படும்.

வார் ரிஸ்க் இன்ஷூரன்ஸ் என்று மத்திய சர்க்காரிடம் 4,000 கோடி ரூபாய் வசூல் செய்து வைத்திருக்கிறார்கள். அது கணக்கில் வரவில்லை. நம்முடைய சர்க்கார் அந்த 4,000 கோடி யிலிருந்து எத்தனை கோடி வேண்டுமென்றாலும் கேட்கலாம், அதிலிருந்து கொடுக்க முடியும் இதற்காக ஒரு புதிய

[திரு. ரா. உமாநாத்] [1977 டிசம்பர் 29

இன்ஷுரன்ஸ் ஸ்கீமைக் கொண்டு வர வேண்டும். இந்தக் கோரிக்கைகளை மத்திய அரசாங்கத்திடம் தெரிவிக்கவேண்டும். அந்த வகையில் இந்தச் சபையில் தீர்மானம் வந்தால் ஆதரிக்கிறோம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கோ. ரகோத்துமன்: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வெள்ள நிவாரண அறிக்கையைப் பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்காக மாமன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழக அரசானது பல வகையிலும் நிவாரணம் அளிக்கும் வகையில் அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள் அனைவரும் இரவு பகல் உறங்காமல், உண்ணுமல் அந்த மக்களுக்காகப் பல மாவட்டங்களுக்கும் சென்று நிவாரணம் அளிக்கும் வகையில் பணியாற்றியமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட என் தொகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தாசில்தார், ஆர்.டி.ஓ., உள்ளாட்சித் துறை ஆணையர் போன்றவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபாய், அரிசி போன்றவற்றை வழங்கியமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 ரூபாய் நோட்டாகவும் அவர்களுக்குத் துணிகள், அரிசி போன்ற பொருட்களை வழங்கி அவற்றில் ஊழல்கள் நடைபெறுத வண்ணம் கொடுத்திருப்பதை உள்ளபடியே நான் பாராட்டுகிறேன். அங்கங்கே உள்ள மக்களும் ஊழல்கள் நடைபெறுவதற்கு வழியில்லை என்ற திருப்தியுடன் இருக்கிறுர்கள்.

வெள்ளப் பகுதியிலே உள்ள வேலைகளைப் பார்ப்பதற்கு நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர், ஆகியவர்களைப் போட்டு ஒரு தனிக் கோட்டமாக அமைத்து செம்மையாக நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருகிற தமிழக அரசுக்கு என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 டிசம்பர் 29] [திரு. கோ. ரகோத்துமன்]

வெள்ளப் பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாக இரண்டு நாட்களில் நிவாரண வேலைகளைச் செய்து முடித்தார்கள். எங்கள் பகுதியில் தென் பெண்ணைக் கரையோரமாக 20 கிராமங்கள் உள்ளன, அந்தக் கிராமங்கள் எல்லாம், பெண்ணையாறு கரைபுரண்டு ஓடிய காரணத்தால், பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், பெண்ணையாறு நீர்ப்பாசனத்தில் அமைந்துள்ள பல கால்வாய்களில் உடைப்பெடுத்து பழுது அடைந்த நிலையில் உள்ளன, அந்தக் கால்வாய்களுக்கு எல்லாம் மண்ணுல் வரப்புகள் கட்டாமல் கல்லால் அணைகளைக் கட்டிக் கொடுத்தால் தான் நிரந்தரமான பாதுகாப்பாக இருக்கும், மீண்டும் வெள்ளம் ஏற்படும் காலங்களில் பாதிக்கப்படாமல் இருக்கும் என்ற கருத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

என் பகுதியிலே மேலந்தல், மணலூர்பேட்டை ஆகிய ஊர்களுக்கு இடையே உள்ள சோனை நதியில் உடைபட்டுள்ள பாலத்தை கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் மணலூர்பேட்டை, மூங்கில்துறைபட்டு ஆகிய இரண்டு ஊர் மக்களும் துண்டிக்கப்பட்டுள்ளனர். மாடங்கியூர், பையூர், கொங்காரயனூர் ஆகிய ஊர்கள் பெண்ணுற்றுலும், கோரையாற்றுலும் சூழப்பட்டு தீவு போன்று அமைந்துள்ளன. இதன் காரணமாக வெள்ள காலத்திலே மக்கள் ஊர்களிலிருந்து வெளியேற முடியாமல் அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. மாரங்கியூர், கல்பட்டு ஆகிய ஊர்களுக்கு இடையே ஒரு நடைபாதை மேம்பாலம் அமைத்துத் தந்தால் அங்கே உள்ள மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே காரணை, புறவடை, சித்தேரிபட்டு என்ற கிராமங்கள் பம்பையாற்றினுல் குறுக்கிடப்பட்டு பாதிக்கப்படக் கூடிய நிலைமையில் உள்ளன. அவைகளைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ள நிவாரண வேலைகளுக்காக 100 கோடி ரூபாய் மானியமாகவும் 100 கோடி ரூபாய் கடனுகவும் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அதே போன்று மத்திய அரசுக்கு மாநில அரசு

தீர்மானமாக இயற்றி இவற்றை வலியுறுத்தினால்தான் அந்த வெள்ளப் பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்ய முடியும்.

என் பகுதியில் உள்ள பல ஏரிகள் உடையும் நிலையில் உள்ளதால் அவைகளைச் செப்பனிட்டுத் தரும்படி கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. தாழை மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் வெள்ளை அறிக்கை என்று இங்கே சமர்ப்பித்துள்ள இந்த அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்த வெள்ளை அறிக்கை என்ற இந்த அறிக்கையில் உண்மைக்கு மாறான செய்தி அதிக அளவில் இருக்கின்ற காரணத்தால் இது கறுப்பு அறிக்கை என்றுதான் நான் உண்மையிலேயே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்த அறிக்கையில் வெள்ளம் ஏற்பட்ட உடனேயே அரசாங்கம் தலையிட்டுப் பல காரியங்களைச் செய்திருக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக நாகைப் பகுதியில் வெள்ளமும், புயலும் ஏற்பட்டதற்குப் பிறகு, 11-ஆம் தேதி இரவு புயல் அடித்தது. ஆனால் 14 ஆம் தேதிதான் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றும் போர்டு மெம்பரும் நம்முடைய அமைச்சரவர்களும் அங்கே வருகை தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, இங்கே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் சில பகுதிகளிலே ஒத்துழைப்புத் தரவில்லை என்று சொன்னார்கள். உண்மை அவருக்குத் தெரிய நியாயமில்லை. ஏனென்றால், 11 ஆம் தேதி புயல் அடித்த பிறகு, அவர் அந்தத் தொகுதிக்கு வந்ததே 14 ஆம் தேதிதான். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அருமை நண்பர்கள் உடனடியாக அந்தக் கோட்டாட்சித்





தலைவரை அணுகி பசியாலும், பட்டினியாலும் வாடிக்கிடந்த மக்களுக்கு அரிசியை வாங்கி விநியோகித்த தன்மை அவருக்குத் தெரிவதற்கு நியாயமில்லை.

அதோடு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் தஞ்சை மாவட்டத்திலே பாதிக்கப்பட்ட பகுதிகளான நாகை, திருவாரூர் பகுதி, மன்னார்குடி பகுதி, மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திற்கும் சென்று பொதுமக்களையெல்லாம் சந்தித்தார்கள். அப்படிச் சந்தித்தபொழுது, உண்மையிலேயே பாதிக்கப்பட்ட மக்கள் பெருவாரியாக, தங்களுக்கு உதவித் தொகை கிடைக்கவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மீனவ மக்களும், அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்களும், குடிசைகளிலே வாழும் மக்களும் தங்களுக்கு நிவாரணத் தொகை கிடைக்கவில்லை, அதிலே தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகுதான் எதிர்க்கட்சித் தலைவரவர்கள், தன்னுடைய அறிக்கையில் நிவாரணப் பணி தாமதமாக நடைபெறுகிறது, அது துரிதமாக நடைபெற வேண்டுமென்று தனக்கே உரித்தான அந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் மீதுள்ள பற்றின் காரணமாகத் தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

குறிப்பாக, உயிர்ப் பலியானவர்கள் 560 பேர் என்று இந்த அறிக்கை கூறுகிறது. ஆனால் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்த மாண்புமிகு அவை முன்னவரவர்கள் பேசுகின்றபொழுது 590 பேர் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் எது உண்மையானது என்பதைத் தயவு செய்து இந்த அவைக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, காணாமற்போனவர்கள் 196 பேர் என்று சொல்கிறார்கள். அந்த 196 பேர்கள் நாகையைவிட்டுக் காணாமற்போயிருக்கிறார்களா? அல்லது தஞ்சையைவிட்டுக் காணாமற்போயிருக்கிறார்களா? அல்லது தமிழ்நாட்டைவிட்டுக் காணாமற் போயிருக்கிறார்களா என்பதை ஒன்றரை மாத கால

[திரு. தாழை மு. கருணாநிதி] [1977 டிசம்பர் 29

மாகியும் கூட இந்த அரசாங்கம் எடுத்துச் சொல்ல வக்கில்லை, வகையில்லை. குறிப்பாக, போலீசை வைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம், சி.ஐ.டி.க்களை யெல்லாம் வைத்துக் கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கம் அந்த 196 பேர்களும் எங்கே சென்றிருக்கிறார்கள் என்பதை ஏன் தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் நிச்சயமாக இந்த நாட்டிலே இல்லை, அவர்கள் வேறு எங்கோ சென்று விட்டார்கள், அங்கே சென்று பார்ப்பதற்கு யாரும் இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, புயல் நிவாரணப் பணியில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தது. ஆனால் ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் நிவாரணப் பணியிலே சேர்க்கக் கூடாது என்ற திட்டத்தை அவர்கள் பல இடங்களிலே அரசாங்க அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ் நாட்டு மக்கள் மிகத் தெளிவாக உணர்ந்து பார்க்கிறார்கள். 42 இலட்சம் வாக்குகளைப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, இந்த நாட்டினுடைய பிரதான எதிர்க் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் நிவாரணப் பணியில் அங்கம் வகிக்க இடம் கொடுக்கவில்லை என்றால் இது எப்படிப்பட்ட * * நிலைமையாக இருக்கிறது, அரசாங்கமாக இருக்கிறது என்பதை மக்கள் எள்ளி நகையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

குறிப்பாக, நான் இதைச் சொல்வதற்குக் காரணம், நம்முடைய நன்னிலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள், 1 இலட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாக இருக்கிறார். அவரது தொகுதியான நன்னிலத்திலே, தாலுகா அலுவலகத்திலே கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக்

[*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.39-ல் ஒரு சொற்றொடர் அகற்றப்பெற்றது.]



1977 டிசம்பர் 29] [திரு. தாழை மு. கருணாநிதி]

கூட்டத்திற்குச் சென்ற அவர் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார். ஆனால், அகில இந்திய—அகில உலக—எம்.ஜி.ஆர். ரசிக மன்ற உறுப்பினர் ஒருவர், அந்தத் தொகுதியிலே, தாலுகா அலுவலகத்திலே, மக்கள் பிரதிநிதியாக இருந்து பிரச்னைகளை அலசி, ஆராய்ந்து கொண்டிருக்கிறார். ஆனால், ஒரு இலட்சம் வாக்காளப் பெருமக்களுக்குப் பிரதிநிதியாக இருக்கிற திரு. மணி மாறன் அவர்கள் வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு கொடுமையான நிலையில், இப்படிப்பட்ட ஒரு மோசமான அரசாங்கம் உண்மையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்.

அது மட்டுமல்ல, கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் தங்களை சிறைச்சாலையிலே இந்த * அரசாங்கம் அடைத்து வைத்திருந்தாலும் கூட, தங்கள் தமிழ்ச் சமுதாய மக்கள் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், உயிரைப் பலிகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்த வுடன் சிறைச்சாலையிலேயே . . .

**திரு. ஆர். மணிமாறன் :** * * * அரசாங்கம் என்று உறுப்பினர் அவர்கள் ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். அதை வாபஸ் பெறவேண்டுமென்று சொல்கிறேன். அதேபோல், * * * அரசாங்கம் என்ற வேண்டாத வாக்கியத்தை இந்த மன்றத்திலே பிரயோகிப் பதையும் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான், அது பார்லிமெண்டரி வார்த்தையா, அன்பார்லிமெண்டரி வார்த்தையா என்று பார்த்து ரூலிங் தருகிறேன். அதன் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினர் மேலும் பேச்சைத் தொடரலாம்.

[*மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-41-ல் ஒரு சொற்றொடர் அகற்றப் பெற்றது.]

**திரு. தாழை மு. கருணாநிதி:** குறிப்பாக, கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும், மக்கள் மத்தியிலே சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரணப் பணிகளிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே, நிதி வசூல் செய்து, மாண்புமிகு கவர்னர் அவர்களிடத்திலே அந்த நிதியினை அளித்திருக்கிறார்கள். அப்படிச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து மக்களுக்குத் தொண்டு செய்யவில்லையென்று சொல்வது எவ்வளவு மோசமான நிலைமை என்பதைத் தயவுசெய்து யோசித்துப் பார்க்க வேண்டும்.

இங்கே, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் எல்லோருக்கும் உதவித் தொகை கிடைத்துவிடும் என்ற தவறான கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அப்படிக் கொடுக்கவில்லை என்பதற்கு என்னிடம் கூட சான்றிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள், குடிசைப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களானால், நிச்சயமாக அவர்களுக்குப் பல இடங்களிலே உதவித் தொகை கொடுக்கப்படவில்லை.

உதாரணம் சொல்லவேண்டுமென்றால், என்னுடைய தொகுதியில் நான் ஊராட்சிமன்றத் தலைவனாக இருக்கிறேன். நான், அங்கே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, குடிசையிலே வாழ்கிற மக்களுக்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொன்னேன். அடிஷனல் கலெக்டர், கோட்டாட்சித் தலைவர், தாசில்தார், ஆக அத்தனை பேரிடத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப்படியிருந்தும் கூட, திட்டமிட்டே, மாற்றுக் கட்சியினர் என்ற காரணத்தால், தியாகராஜபுரம் ஊராட்சிமன்றத்தைச் சேர்ந்த அப்பகுதி மக்களுக்கு இந்த உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. இது எப்படிப்பட்ட கொடுமையான நிலைமை என்பதைத் தயவுசெய்து நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.



அதே நேரத்தில், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களாக இருப்பார்களானால், மாடி வீட்டுக்காரர்களானாலும், கல் வீட்டுக்காரர்களானாலும், அவர்கள் மாட்டுக் கொட்டகைகளைக் கூடக் கட்டிக்கொள்ள உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால், எங்கெங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அதற்கான ஆதாரங்களைத் தரத் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, வாழைத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள், நெல், கரும்பு வயல்கள், வெற்றிலைக் கொடிகள் எல்லாம் அழிந்துவிட்டன. அவர்களுக்கு நியாயமான வகையிலே உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த அரசாங்கம் அவற்றை எல்லாம் பரிசீலித்து அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கால்நடைகளில்—கோழிகளும், ஆடுகளும்—அதிக அளவில் உயிர்பலி ஏற்பட்டிருக்கிறது. அவைகளுக்கு எல்லாம் ஈடு செய்யும் வகையில் அவைகளை இழந்தோர்களுக்கு நல்ல முறையிலே உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவுக் கடனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் கொடுத்த சலுகை, குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக ஆக்கியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மத்திய காலக் கடன் என்றால் என்ன? ஓராண்டுக் காலத்திலே கட்ட வேண்டிய கடனை 3 அல்லது 5 ஆண்டுகளில் கட்டலாம் என்பதுதான். இதற்கு முன்பே 2 ஆண்டுகாலம் இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடன்களும் தற்போது விவசாயிகள் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. கடன்கள் இப்படி அவர்கள் மேல் சுமத்தப்படுமேயானால், விவசாயிகள் குறிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் நிச்சயமாக அழிந்து போவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). குத்தகை சாகுபடியாளர்கள் தாங்கள் அளக்க வேண்டிய நெல் அதிக அளவில் இருந்தபோதும்,

[திரு. தாழை மு. கருணாநிதி] [1977 டிசம்பர் 29

மதிப்பிற்குரிய முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 1381-ம் பசலியில் குத்தகை நெல்லை கட்டியிருப்பார்களானால் அவர்களுக்கு பாக்கி இருந்த குத்தகை நெல் அனைத்தும் தள்ளிக் கொடுக்கப்பட்டது. அதனை முன் உதாரணமாகக் கொண்டு இந்த அரசாங்கமும் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே * *

use of expression deprecated 1972—Volume 1928—Page 163. என்ற வார்த்தை அன்பார்லிமென்டரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கே பேசிய * * என்பதை நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். நேற்றைக்கு * * இந்திரா காந்தி என்று சொன்னதை நாம் எல்லாம் அதை நீக்கவேண்டுமென்று ஒப்புக் கொண்டிருக்கிறோம். ஆகவே * * என்று சொன்னதையும் நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

**திரு. அ. நடராசன் :** தலைவர் அவர்களே, * * என்ற வார்த்தை அன்பார்லிமென்டரியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றே அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கிறோம்.

**திரு. துரை முருகன்:** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். * * என்ற வார்த்தையும் அன்பார்லிமென்டரியா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொன்னதற்கு ரொம்ப நன்றி.

That expression is unparliamentary என்று Volume V, page 49-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-47-ல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.



1977 டிசம்பர் 29]

**திரு. க. சுப்பிரவேலு :** பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்று * * என்பதை நீக்கிவிட்டதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் * * என்ற வார்த்தையைச் சட்டமன்றத்திலே உபயோகப்படுத்துவது அன்பார்லிமென்டரியா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போதுதானே படித்துக் காட்டினேன்.

**திரு. துரை கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு அண்மையிலே நடைபெற்ற கோர தாண்டவங்களில் தங்களுடைய கவனத்தை எந்த அளவுக்கு மக்களுடைய எண்ணங்கள் ஈடேறத்தக்க அளவுக்கு நடத்தியிருக்கிறது என்பதற்கு, உலகத்திலே இருக்கிற பல்வேறு அரசியல் அமைப்புகளிலே இருந்தவர்களுடைய பாராட்டுக்களைக் குறிப்பாகவும், சிறப்பாகவும் மத்திய அரசில் இருந்து தமிழகம் வந்து சென்ற அத்தனை பேர்களும் தமிழகத்திலே ஆட்சி செய்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, எப்படிப்பட்ட வேலைகளைச் செய்திருக்கிறது என்பதற்காக அவர்களது பாராட்டை வழங்கியதற்குப் பின்னாலே இங்கே பாராட்ட மனம் இல்லாவிட்டாலும், செய்த காரியங்களில் நல்லவைகளை ஏற்றுக் கொண்டு, செய்ய வேண்டிய காரியங்களைச் சுட்டிக் காட்டினால் உள்ளபடியே அதை ஏற்றுக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

(பிற்பகல் 12-50)

இருந்தாலும், பல கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் பெரியவர், முன்னால் சபாநாயகராக இருந்த மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவருடைய கருத்துக்களைக் கோடிட்டுக்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. துரை கோவிந்தராசன்] [1977 டிசம்பர் 29

காட்டிய நேரத்தில் இந்த அரசு ரூ. 200 வீடு இழந்தவர்களுக்கு வழங்கியிருக்கிறது என்றாலும், ரூ. 300 கடனைத் தருவதற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அதைவிட மேலாக முன்னாலே இருந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி பல கட்டிடங்களைக் கட்டியிருக்கிறது, அதைப்போல் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நான் அதைக் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம், முன்னால் இருந்த அரசாங்கத்தால் திட்டம் தீட்டப்பட்டு, அரிசன நலத் துறை மூலமாக அரிசனங்களுக்காகக் கட்டித் தரப்பட்ட பல்வேறு வீடுகள், மன்னார்குடி பகுதியில், அடிமட்டமாக இடிந்து விழுந்து இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு பத்திரிகைகள் புயல் பற்றி தமது கருத்தைத் தெரிவிக்கையில் அங்கேயிருப்பவர்களுக்கு ரூ. 150 கொடுத்தால் போதும் என்கிற நிலைமை இருந்தது. அப்போது ரூ. 150 அல்ல ரூ. 200 என்று சொல்கிற அளவிற்கு அத்தனைபேருக்கும் கொடுக்க இந்த அரசு முன் வந்தது.

அதோடு மட்டுமல்ல, உடுத்துவதற்கு உடையும், சாலை வசதியும், 5 கிலோ அரிசியும் கொடுத்து, ஒட்டுமொத்தமாக ரூ. 7 கோடியே 90 லட்சம் ரூபாய் அளவிற்கு வாரி வழங்கி இருக்கிற இந்த அரசை உள்ளபடியே குறுகிய காலத்தில் இப்படிப்பட்ட நல்லதொரு காரியத்தைச் செய்து முடித்த இந்த அரசைப் பாராட்டவில்லை யென்றாலும், அண்டை மாநிலங்களில் இருந்து வருகின்றவர்கள் பாராட்டுகின்றனர் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் வீடு இழந்தவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாராத மற்றவர்களுக்கு மட்டும் தான் உதவி வழங்கப்பட்டிருக்கிறது என்ற நிலையை மாண்புமிகு உறுப்பினர் தாழை மு. கருணாநிதி அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கும் தொகையின் அளவு ரூ. 4 கோடியே 74 லட்சம் ஆகும். என்றாலும், குறிப்பாக, நாகப்பட்டினம், மன்னார்குடியைப் பொறுத்தவரையில், ரூ. 1 கோடியே 16 லட்சம் ரூபாய் அளவிற்கு வீடு இழந்தவர்களுக்கு



1977 டிசம்பர் 29] [திரு. துரை கோவிந்தராசன்]

உதவிப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 500 ரூபாயில் இருந்து ரூ. 1,000 வரையில் ஏறத்தாழ 1 லட்சத்து 35 ரூபாய் 104 பேருக்கு இந்த அரசு வழங்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன், எங்களுக்கு வருகிற கணக்கு, 9 ஆண்டுக்காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காரணத்தால், அங்கே ஊராட்சி மன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் பல ஊர்களில் என்ற காரணத்தால், அவர்களுக்கு இருக்கிற அனுபவத்தை வைத்து, தங்களுக்கு வேண்டியவர்களை யெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அழைத்துச் சென்று அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து கொடுத்து இருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அவர்கள் சொல்கிற கணக்கைப் பார்த்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி உதவிகளைப் பெற்று இருக்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதிகாரிகளிடத்தில் அந்தப் பணத்தைக் கொடுத்து, வழங்க வேண்டும் என்று சொல்லி அந்தப் பணியைச் செய்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் நாகப்பட்டினத்தில் ஒரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் புயலால் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறபோது, அனைத்துக் கட்சிகளும் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கிற போது, அவற்றைக் கவனிக்காமல், அந்த மக்களைக் காப்பாற்றச் செல்லாமல், 12-ம் தேதி புயல், 13-ம் தேதி நாங்கள் எல்லாம் நிவாரணப்பணியில் இருக்கிறபோது, அவர்கள் அதில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, மறியல் போராட்டம் என்ற பேரில் ஆர்.டி.ஓ. ஆபீஸ் முன்பும், வட்டாட்சியர் அலுவலகம் முன்பும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அதை நிறுத்திவிட்டு நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டு வேலைகள் செய்து இருப்பார்களானால், வேலைகள் தடைபடாமல் இருந்து இருக்கக் கூடும்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1977 டிசம்பர் 29

ஆனால் இன்றைக்கு இந்த அரசு தனியாக. . . . .

**திரு. மா. மணிமாறன் :** தலைவரவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். நாங்கள் சிறைபட்டது உண்மை. ஆனால் 21 ஆம் தேதி சிறையிலிருந்து விடுபட்டு வந்து, மாவட்ட ஆட்சித் தலைவர், வட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களை அணுகி வேலை செய்து கொண்டிருந்தோம். ஆனால் கமிட்டி முறையாகக் கூட்டப்பட வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவர் பேசியதிலிருந்து எடுத்துச் சொல்லி விளக்கம் கொடுக்கலாம். பாயிண்ட் ஆப் எக்ஸ்பிளனேஷன் அல்லது பாயிண்ட் ஆப் ஆர்டர் அவர் பேசியதை ஒட்டிச் சொல்ல வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் நாகப்பட்டினம் உறுப்பினரைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார். நன்னிலம் சட்டமன்ற உறுப்பினர் கவலைப்படத் தேவையில்லை.

**திரு. துரை கோவிந்தராசன் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் சொன்ன சட்டமன்ற உறுப்பினரைத்தான் நான் கோடிட்டுக் காட்டினேன். இன்று மாவட்ட வாரியாக பல குழுக்களை, மாவட்டக் குழு என்றும், பஞ்சாயத்து யூனியன் குழு, ஆர். டி. ஓ. லெவல் குழு என்றும், பஞ்சாயத்துக் குழு என்றும் அமைத்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அவையெல்லாம் எல்லாக் கட்சியினரையும் சேர்த்துதான் அமைந்திருக்கிறார்கள்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அங்கே அரிசியை ஊராட்சி மன்றத் தலைவரிடம் தந்து, மக்களுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்ற வேண்டும் என்று கொடுத்தபோது, மூன்று தினங்களாக அரிசி மூட்டையை அப்படியே வைத்திருந்து, கஞ்சி காய்ச்சி ஊற்றாத நிலைமையைக் கண்டு, பின்னல் தாசில்தார் அவரை அழைத்து அரிசி மூட்டையை எடுத்து வந்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் அவர் மன்னார்குடி தாலுக்காவில் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்று சொல்வதை



1977 டிசம்பர் 29] [திரு. துரை கோவிந்தராசன்]

விட்டு, அவர் ஊராட்சி மன்றத் தலைவர் என்பதைத் தெரிவித்து, இப்படிப்பட்ட நிகழ்ச்சி புயல் நிவாரண காலத்தில் நடைபெற்றிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு நடவடிக்கைகள். . . . .

**திரு. மா. மணிமாறன் :** பேரவைத் தலைவரவர்களே, வட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஊரில் இருக்கின்ற கர்ணம், முன்சீப் ஆகியவர்களிடம் கொடுக்கத்தான் ஆணை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஊராட்சித் தலைவரிடத்தில் ஒப்படைக்க நியாயம் இல்லை. எனவே, இதற்குப் பொறுப்பு முன்சீப், கர்ணம் ஆகியவர்கள்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**திரு. துரை கோவிந்தராசன் :** பேரவைத் தலைவரவர்களே, தங்கள் அனுமதியோடு கூறுகிறேன். இராயபுரம் ஊராட்சித் தலைவர் பிச்சையன் என்பவரிடம், அங்கே நிவாரண வேலைகள் நடைபெறும்போது ஒப்படைக்கப்பட்டது அரிசி மூட்டை. ஒன்றிய ஒவ்வொரு ஊரிலும் குழுக்கள் அமைக்கிறபோது. அலுவலர்கள், ஊராட்சி அலுவலர்கள் நிவாரண வேலைகளைக் கவனிப்பார்கள். அந்த அடிப்படையில் ஊராட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்ட அரிசி மூட்டையை மூன்று தினங்களாக அவர் அப்படியே வைத்துக் கொண்டு கஞ்சி காய்ச்சி ஊற்றவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு விவசாயம் பல்வேறு பகுதிகளில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், எந்தப் பகுதிகளில் விவசாயம் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் விவசாயக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாக மாற்றப் பட்டிருக்கின்றன.

விதைகளைச் சிறு விவசாயிகளுக்குக் கொடுத்து, பூச்சிக் கொல்லி மருந்து கொடுத்து விவசாயிகளின் பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதுவரையில் இல்லாத அளவுக்கு இரண்டு சீஃப் இன்ஜினியர்களை, ஒன்று பொதுப்பணித் துறை மூலமாகவும், மற்றொன்று ஹைவேஸ் துறை மூலமாகவும் போட்டு, நிலத்தடி நீரைப் பாதுகாத்து வைத்துக் கொள்ள, ஏரி குளங்களைப் பாதுகாக்க 3 கோடி ரூபாய், சாலைகளைப் பராமரிக்க 15 கோடி ரூபாய், பொதுப்பணித் துறைப் பணிகளுக்கு ஒதுக்கீடு என்றெல்லாம் செய்யப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெறுகின்றன என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கோடிட்டுக் காட்டியது போல நாகப்பட்டினம் பகுதியில் மட்டும் 24 மணி நேரத்தில் 200 பைப்புகளை அமைத்து, நோய் வராமல் இருக்கும் வகையில் நாகப்பட்டினத்தில் மட்டும் 24 குழாய்களை அமைத்துப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் தரப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் நமது அமைச்சர் அங்கே சென்றபோது, திருக்குவளை கிராமத்தில் குடிதண்ணீர் கிடைக்கவில்லை, 2 குழாய்களை அமைத்து தண்ணீர் தரவேண்டும் என்று கேட்டார்கள். அமைச்சர் தாராளமாக 3 குழாய்களை அமைத்து தண்ணீர் தந்திருக்கிறார்கள். அப்படி விரைவாக நிவாரணப் பணிகளைச் செய்திருக்கின்ற இந்த அமைச்சரவையை வாழ்த்திப் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

*திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கை மீது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நன்றி கூறுகிற நேரத்தில் ராமகிருஷ்ணா மிஷன், அனைத்து கிருஸ்தவ சங்கங்கள், சர்வோதயா, செஞ்சிலுவைச் சங்கம், கேர் ஸ்தாபனம் ஆகியவற்றிற்கு நன்றி சொல்லவில்லை. உண்மையிலேயே திருச்சியிலும் தஞ்சையிலும் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக ஏற்பட்ட விளைவுகளுக்கு அனைத்து அதிகாரிகளும் தங்கள் குடும்பங்களில் நடந்ததைப் போன்று, நல்ல முறையில் பண உதவியும், தங்களால் இயன்ற அளவிற்கு உடல் உதவியும் அளித்துள்ளனர்.



தமிழகத்தில் வேதனை தரத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருந்தாலும், எங்கள் நெல்லை மாவட்டத்தில் அரசாங்க அதிகாரிகளும், அலுவலர்களும், அனைத்துக் கட்சி நண்பர்களும் முழுமூச்சோடு ஒத்துழைத்து எங்கள் மாவட்டத்திற்கு முதன்மை இடத்தைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். மழை காரணமாக தகர்ந்து இடிந்த வீடுகளுக்கு முதலில் உதவி அளித்தார்கள்.

அதற்குப் பிறகு கொடுக்கப்பட வேண்டிய தொகை சரியான முறையில் கொடுக்கப்படவில்லை. சில இடங்களில் குளங்கள் உடைந்து விட்டன. அதற்குக் காரணம் பெருமழைதான் என்று சொல்கிறார்கள். ஆனால் சற்று நாம் சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில் அந்தக் குளங்கள் எல்லாம் கடந்த காலங்களில் சரியானபடி தூர் வாராத காரணத்தினால் மூன்று அடி நான்கு அடி மண் மேடிட்டுக் காட்சியளிக்கின்றன. எனவே, குளங்கள் எல்லாம் மழையால் மட்டும் நிரம்பவில்லை. இருக்கிற குளங்கள், கண்மாய்கள், ஏரிகள் இவற்றையெல்லாம் புல்டோஸர்கள் வைத்து அடித்து கரைகள் உயர்த்தப்படாத காரணத்தினால் சிறிய அளவிற்கு மழை பெய்தாலும்கூட குளங்கள் விரைவில் நிரம்பிவிடுகின்றன. பாலங்களில் உடைப்பு ஏற்படுகிறது. அப்படி ஏற்படுவது வெள்ளப் பெருக்கால் என்று சொல்கிறார்கள். அது வெள்ளப் பெருக்கால் அல்ல. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றில் ஆர். ஆர். ஸ்கீமில் ஹைவேஸில் பாலங்கள் கட்டும்போது கண்மாய்களின் அகலம் குறைவாகி விடுகிறது. எனவே பலயிடங்களில் இப்படிக் கட்டப்பட்டதன் விளைவாகவே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

சமீபத்தில் ஏற்பட்ட புயல், மழை காரணமாகப் பலயிடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எங்கள் நெல்லை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பல ஆண்டுகளாக அணைகள் கட்ட வேண்டும் என்று கேட்டு வந்துள்ளோம். அதிலும் குறிப்பாக கொடுமுடி ஆறு அணை, களக்காடு வட்டாரத்திலுள்ள பச்சையாறு அணை இவற்றைக் கட்டுவதற்காகப் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்தும், அந்தத் திட்டங்கள்

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1977 டிசம்பர் 29

ஆரம்பிக்கப்படாத காரணத்தால் இந்த ஆண்டு பெய்த மழை காரணமாகப் பல குளங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அணைகள் கட்டப்பட்டிருக்குமேயானால் சென்ற காலத்தில் பெய்த மழை காரணமாக வந்த தண்ணீரைத் தேக்கி வைத்து இரண்டு மூன்று போக சாகுபடிக்கு வசதியாக இருந்திருக்கும். கொடுமுடி ஆறு அணையையும், பச்சையாறு அணையையும் கட்டிக் கொடுத்திருந்தால் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும்.

அடுத்தபடியாக, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் வெள்ளத்தாலும், புயலாலும் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் நெல்லை மாவட்டத்திலும் மழை காரணமாகப் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுகுறித்து, சமீபத்தில் விவசாயத்துறை அமைச்சர் அவர்களிடமும், உணவு அமைச்சர் அவர்களிடமும் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

களக்காடு வட்டாரத்தில் காட்டுப் பன்றிகள் கூட்டம் விவசாய விளைபொருள்களை நாசமாக்கியிருக்கிறது. பெருமளவு நாசப்படுத்தியிருக்கிறது. இதை நாங்கள் கூறும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உத்தரவு போட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட வன இலாகா அதிகாரிகளைக் கேட்கிறபோது வன அதிகாரி அவர்கள் சரியான பதில் கூறவில்லை.

மழை காரணமாகப் பல இடங்களில் குளங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது, பாலங்கள் உடைந்துள்ளன. குளங்களில் நீர்ப்பிடிப்பு குறைவாக இருப்பதால்தான் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. மராமத்து என்ற பெயரால் கரையை மட்டும் உயர்த்துகிறார்கள். ஆனால், ஏரிகள், கண்மாய்களை ஆழப்படுத்துவதில்லை. நீர்ப் பிடிப்பு வசதியில்லாத நிலையில்தான் பெருமழை வந்து குளங்களில் உடைப்புகள் ஏற்படுகின்றன. மணிமுத்தாறைச் சேர்ந்த தாம்பிரபரணியாற்றுப் பாசனத்தைச் சேர்ந்த இன்ஜினியர்கள் அலுவலர்கள் மடைகளின் பக்கம் வந்தவுடன் அளவை எடுக்கிறார்கள். அதை எஃப். டி. லெவல் என்று கூறி விடுகிறார்கள். 10 அடி என்று சொல்லுகிறார்களே



1977 டிசம்பர் 29] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

தவிர 6 அடி கூட தண்ணீர் பிடிப்பதில்லை. அணை உடைந்து விடுகிறது என்று சொன்னால் வெள்ளப் பெருக்கினால் உடைவதில்லை. கரையை உள்ளே மண் போட்டுக் கட்டப்படுவதால், அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. ஆகவே இனிமேலாவது வருகின்ற ஆண்டில் 1978-ல் ஆழப்படுத்துவதை இந்த ஏரிகளில் எல்லாம் தூர் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் பகுதியில் பல இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. ஆனால் உதவி கொடுக்கின்ற விஷயத்தில் நான்கு சுவர்களும் விழுந்தால் புயல் நிவாரண பணத்திலிருந்து தருவோம் என்று சொல்லுகிறார்கள். இரண்டு சுவர், மூன்று சுவர் இடிந்து இப்படி வீடுகளை இழந்தவர்கள் இன்றைக்கு எந்தவிதமான உதவியும் கிடைப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, வீடு இடிந்து விட்டது என்று சொன்னால் இரண்டு சுவர் விழுந்தாலும் சரி, மூன்று சுவர் இடிந்து விழுந்தாலும் சரி அவர்களுக்கு நல்ல முறையில் கணிசமான தொகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் 60 ரூபாய்தான் தர முடியும் 100 ரூபாய் கிடையாது என்று சொல்லுகிறார்கள். அதுவும் ஒரே நேரத்தில் இந்த ரூபாயைக் கொடுப்பதில்லை. கொடுக்கின்ற உதவியை ஒரே நேரத்தில் கொடுப்பார்களேயானால் வீட்டை இழந்தவர்கள் நல்ல முறையில் வீட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். இல்லையென்றால் கொஞ்சம் கொஞ்சமாக வாங்குகின்ற தொகை வேறு செலவுகளுக்குப் போய்விடுகிறது.

மேலும் எங்கள் பகுதியில் தேவநல்லூர் என்ற இடத்தில் உதவி நிதி பணத்திலிருந்து கொடுக்கப்பட்ட 200 ரூபாயை கிராம முன்சீப்பும், கிராமக் கர்ணமும் சேர்ந்து கையாடல் செய்துவிட்டார்கள். இதற்காக இவர்களை சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுடைய பணத்தை கையாண்ட இப்படிப்பட்ட அதிகாரிகளை டிஸ்மிஸ் செய்வதற்கு

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1977 டிசம்பர் 29

நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், இந்த நிலை நீண்டுகொண்டு போகுமேயானால், இப்படிப்பட்ட நிலைமை எப்போது முடிவு அடையும் என்று சொல்ல முடியாது.

மேலும் எங்கள் பகுதியில் நல்ல ரோடுகள் இல்லை. லட்சக்கணக்கான ரூபாய் அளவில் எஸ்டிமேட் போடப்படுகிறது. ஆனால் வொர்க் ஆர்டர் கொடுப்பதில்லை. பண வசதி இல்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இதன் காரணமாகப் பல இடங்களில் பஸ்களே போவதில்லை. ரோடுகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை, அதனால்தான் பஸ் போகவில்லை என்று அதிகாரிகளும் சொல்லி விடுகிறார்கள். இதைப்பற்றி அதிகாரிகளிடம் கேட்டால், இது யூனியன் ரோடு, இது ஊராட்சி மன்ற ரோடு, இது ஹைவேஸ் ரோடு என்றும் பல பகுதிகளாகப் பிரித்துச் சொல்கிறார்கள். இப்படிப் பிரித்துப் பார்க்காமல் புயல் நிவாரண நிதியிலிருந்து இந்த ரோடுகளை எல்லாம் சீர்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வெள்ளை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

### 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை நடந்த நிகழ்ச்சிகளில் சில குறிப்புகளை நீக்குவதற்கு, குறிப்புகளைப் பார்த்த பின்னால் உத்தரவிடுகிறேன் என்று சொல்லியிருந்தேன். அதன்படி இப்போது அந்தக் குறிப்பிட்ட பகுதிகளை வாசித்து, அவைகளை அவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்க உத்தரவிடுகின்றேன். அதாவது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது—

* * * *

இதை நீக்க வேண்டும். பின்னால். . . .

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1977 டிசம்பர் 29]

**திரு. பண்ணை கே. சேதுராம்:** * *

இதை நீக்க வேண்டும். பின்னால் அவைமுன்னவர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்ட . . . .

* * * *

இந்த வாக்கியத்தை மட்டும் நீக்கிவிட வேண்டும். பின்னால் அவைமுன்னவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட . . . .

* * *

**மாண்புமிகு திரு. மனோகரன்:** * * *

என்று சொன்ன இதையும் நீக்க வேண்டும். பின்னால் அவை முன்னவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட

* * * *

இதையும் நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகின்றேன். பின்னால் பேரவைத் தலைவர் அவரைப் பற்றிக் குறிப்பிட்ட . . . என்பதையும், நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகின்றேன்.

[பிற்பகல் 1.10]

**திரு. நா. சுந்தரராஜ்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்". பேரவைத் தலைவர் அவர்கள் பேசியதையே நீக்குகிறீர்கள். அதேபோல், அவை முன்னவர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோர் பேசிய பேச்சுக்களும் நீக்கப்படுகிறது. ஆகவே, இந்த அவையிலுள்ள அனைவருக்கும் தனியாக ஒரு பயிற்சி முகாம் நடத்த, ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்வது என்பதற்கு ஒரு பயிற்சி முகாம் நடத்த முன்வருவீர்களா?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1977 டிசம்பர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் முறையாக எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு வந்திருப்பீர்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால், தாங்கள் சொல்வதைப் பார்த்தால், அப்படி ஒரு பயிற்சி முகாம் ஏற்படுத்தலாமா என்பது பற்றி யோசிக்கலாம்.

திரு. க. சுப்பு: பயிற்சி முகாம் நடத்தியே பழக்கப் பட்டவர்கள்.

திரு. செ. சதாசிவம்: இவர்கள் எதிலும் குறை கூறியே பழக்கப்பட்டவர்கள்.

(7) புயல், வெள்ள நிவாரண வெள்ள அறிக்கைமீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கும் புயல் வெள்ள நிவாரண அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

புயல், வெள்ளம் அடித்த நேரத்திலே நமது முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் உடனடியாகச் சில இடங்களுக்கு நேராகச் சென்று சகலவிதமான உதவிகளும் அளித்ததற்காக இந்த அமைச்சர் அவைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இரண்டரை மாத காலம் பெய்த மழையின் காரணமாக எனது பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே, தேவகோட்டை மாநகரத்திலே இரண்டு பெண்கள் இறந்திருக்கிறார்கள். இன்னும் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவித் தொகை கிடைக்காமல் இருக்கின்றன. அதை உடனடியாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, பள்ளமடம், கிம்புளி, மயிலாடு வயல் ஆகிய கிராமங்களிலே வெள்ளம் புகுந்தபோது, அங்குள்ள பொதுமக்களை வத்தை மூலம் வெளியே கொண்டுவந்து அவர்களுக்கு நிவாரணம் அளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் மீண்டும் மழை பெய்கின்றபோது, மேலும் சேதம் ஏற்படக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறது. எனவே, அப்படிப்



1977 டிசம்பர் 29]

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

பட்ட கிராமங்களில் உள்ள மக்களையும் இன்னும் ஒருசில கிராம மக்களையும் அந்த இடங்களிலிருந்து வேறு இடங்களில் குடியமர்த்த வேண்டும். இன்னும் ஒருசில கிராமங்களில் இப்படிப் பட்ட வேலைகளைச் செய்வதற்கு பொதுமக்களோ, அதிகாரிகளோ செல்வதற்குக்கூட ரோடு வசதிகள் இல்லாமல் இருக்கிறது.

குறிப்பாக, மயிலாடு வயல் என்ற கிராமத்திற்குப் போக முடியாத நிலைமை இருக்கிறது. நான் மிகவும் சிரமப்பட்டு அந்தக் கிராமத்திற்குப் போய்ப் பார்த்தேன். அப்படிப்பட்ட கிராமங்களுக்கு ரோடு வசதி இல்லாமல் இருப்பதால், இப்படிப்பட்ட நேரத்திலே மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்படுகிறது. எனவே, அவைகளை முதல் வேலையாக எடுத்துக்கொண்டு, அங்கு ரோடு வசதி அளிக்க வேண்டும். தவிர, அந்தத் தாழ்ந்த பிரதேசங்களிலே இருக்கின்ற மக்களை வேறு இடங்களுக்கு குடியேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்மாய்கள், ரோடுகள், பள்ளிக்கூடங்கள், விவசாய நிலங்கள், வீடுகள் போன்றவைகள் சேதமடைந்திருக்கின்றன. கண்மாய்கள் சேதம் அடைவதற்குப் பெரும்பாலும் காரணம், ஏற்கனவே கலுங்குகள் கட்டியிருப்பது உயர்ந்து, இந்த வெள்ளம் வரக்கூடிய காலங்களில் அதிலே தண்ணீர் புகாத காரணத்தால், பல கண்மாய்களில் உடைப்பு ஏற்படுகிறது. அதன்காரணமாக, அந்தத் தண்ணீர் வேறு வெளியில் பாய்ந்து சென்று, அங்கும் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. முன்பே கட்டியுள்ள கலுங்குகள் உயர்ந்திருக்கின்றன. ராமநாதபுரம் மாவட்டத்திலே ஒருசில கிராமங்களில் கலுங்குகள் பள்ளமாக இருக்கின்ற காரணத்தால் மழை பெய்கின்ற போது தண்ணீர் தேங்கும் நிலைமை ஏற்படுகிறது. இதிலே சட்டச் சிக்கல்கள் ஏதாவது இருந்தாலுங்கூட, இதற்கு என்று ஒரு தனிச் சட்டம் போட்டு, தாழ்ந்த கலுங்குகளை உயர்த்தவும், உயர்ந்துள்ள கலுங்குகளை தாழ்த்தவும் செய்வதற்கு ஒரு சட்டம் செய்தால்கூட நலமாக இருக்கும். அதனால் நல்ல பயன் ஏற்படும் என்பது என் கருத்து. அவ்வளவு பெரிய பாதகம் எங்கள் மாவட்டத்தில் ஏற்பட்டது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[1977 டிசம்பர் 29

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

ரோடுகள் மோசமான நிலையை அடைந்திருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் ரோடுகள், ரூரல் டிப்பார்ட்மெண்டில் போட்ட ரோடுகள் மிகவும் மோசமடைந்திருக்கின்றன. ஏற்கனவே இந்த ரோடுகள் மோசமாக இருந்தன; இப்போது முழுவதுமாக கெட்டுப் போய்விட்டன. இதனால் கிராம மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மற்ற ரோடுகளைப் பொறுத்தவரை அரசாங்கம் பழுது பார்த்து விடும்; கவலைப் படத் தேவையில்லை. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ரோடுகளைக் கேட்பாரற்றுக் கிடக்கும். அவற்றின் நிதிநிலை அந்த ரோடுகளைச் சரியாகச் செப்பனிட முடியாத நிலைமையில் பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. ஆகவே அரசு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், ரூரல் ரோடுகளை எடுத்துக் கொண்டு செப்பனிட்டுத் தருவதில் முதல் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் அறவே மோசமடைந்திருக்கின்றன. ஆகவே, இப்போது பள்ளிகளின் வகுப்புகள் வெளியில் மரத்தடியில் நடக்கின்றன. மழை பெய்தால் பிள்ளைகள் வீட்டுக்குப் போய்விடுகிறார்கள். பஞ்சாயத்து பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து பள்ளிக்கூடங்களைச் செப்பனிட முடியாது. அவர்கள் அரசாங்கத்திடமிருந்து கிராண்டுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிராமப் பள்ளிக்கூடங்கள் குடிசைகளில் இருந்தவை வெள்ளத்தில் விழுந்து விட்டிருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்கள் அத்தனைக்கும் நிரந்தரமான கட்டடங்களை அரசு கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

வீடுகள் சேதமாகியிருக்கின்றன. ஏழைகளின் வீடுகளுக்கு நிரந்தரமான கட்டடங்களாகக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் கடன் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகவும் ஏழைகளாக இருப்பவர்களுக்கு மானியத் தொகை கொடுத்தும் கடன் உதவியும் செய்து வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை காட்டாறுகள் அதிகமாக இருக்கும் காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மணிமுத்தார், பாம்பார், சரகணி ஆறு



1977 டிசம்பர் 29]

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

கோட்டைக்கரையாறு ஆகியவற்றில் வெள்ளம் ஏற்பட்டு கரையோரத்தில் இருக்கும் கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ளவர்களை வேறு இடங்களில் குடியமர்த்த ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளத்தைத் தடுக்க கரையோரங்களில் ரிவெட்மெண்ட் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆறுகளின் நடுவில் வேலிக்கருவை முளைத்து ஆற்றில் தண்ணீர் போகாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆற்றங்கரை ஓரங்களில் வேலிக்கருவை இருக்கலாம், ஆற்றின் நடுவில் இருக்கும் வேலிக்கருவையை புல் டோசர் வைத்து அடித்து வேலிக்கருவை இல்லாமல் செய்ய வேண்டும்.

வீடுகள் சேதமடைந்ததற்கு தற்போது 30 ரூபாய், 60 ரூபாய், 200 ரூபாய் என்று ஒரு திட்டத்தில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சுவர் விழுந்தாலும் 4 சுவர்கள் விழுந்தாலும் வீடுகளை மறுபடியும் கட்டித்தான் ஆக வேண்டும். ஆகவே, எல்லோருக்கும் 200 ரூபாய் உதவித் தொகை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

வேலையின் தரம் இப்போது குறைந்து வருகிறது. 10 வருடங்களுக்கு முன்னால் இருந்த தரம் இப்போது இல்லை. 100க்கு 80 சதவீதம் விரையமாக போய்விடுகிறது. கன்ட்ராக்டர்களும் எஞ்சினியர்களும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் வேலையின் தரம் குறைந்து, சாங்ஷன் செய்யப்படுகிற பணம் பூராவும் மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை, வேலையின் தரம் குறைந்துவிடுகிறது. இந்த நேரத்திலேயும் அவர்கள் நல்ல உஷாராகத்தான் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நல்ல முறையிலே கண்காணித்து நாம் கொடுக்கிற பணம் நல்ல முறையிலே செலவிடப்பட்டு வேலைகள் நடக்கிறதா என்பதைப் பார்க்க

யிலே வேலைகள் நடக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

[1977 டிசம்பர் 29

[திரு. கரு. ராம. காமாட்சிலிங்கம் அம்பலம்]

இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு நேரம் இல்லை. ஆனால் பல பேர்கள் இங்கேயும் அங்கேயும் கயிகளைக் கட்டிக் கொண்டு வீணைகப் பேசி நேரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தலைவராகிய தாங்கள் அப்படிப்பட்ட நேரத்தை வீணாக்க அனுமதிக்காமல் அப்படி வீணாக்குகிறவர்களைப்பற்றி கடுமையான நடவடிக்கை எடுத்து நல்ல விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு வேண்டிய நேரத்தை ஒதுக்கி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. பி. மு. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவம்பர் 12-ஆம் தேதி தொடங்கிய புயலின் கொடுமையும் அக்டோபர் மாதம் தொடங்கிய மழையின் காரணமாகவும் அதைத் தொடர்ந்து ஆறுகளில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து அவை முன்னவர் அவர்கள் வெள்ளை அறிக்கை ஒன்றை இந்த அவையில் வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின்மீது தேசிய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வெள்ளத்தின் காரணமாக அரசு எடுத்த முன்னெச்சரிக்கையான நடவடிக்கைககளை தேசிய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாகப் பாராட்டியும் அதற்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் புயல் வருகிறது என்று எச்சரிக்கை கொடுத்தவுடனே தமிழகத்தின் தலைநகரத்திலே இருந்த அமைச்சர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பி அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்துச் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்தார்கள். அவர்களுடைய கட்டளைப்படி ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று தமிழகத்திலே உள்ள மக்களுடைய துயர் போக்கியதையும் முதல்வர் அவர்கள் கட்டளை பிறப்பித்ததையும் தமிழகத்திலே உள்ள மக்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள் நிச்சயமாகப் பாராட்டுவார்கள். அப்படி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகிற நேரத்திலே சில பணிகளில் குறைகளை குற்றங்களைச்



7 டிசம்பர் 29] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

சொல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன் பேசுகிற காட்சியை ளேயும் பார்த்தோம், வெளியேயும் பார்த்தோம். இப்படிப் சியவர்கள் ஒன்று கண் இருந்தும் குருடர்களாக இருக்க வேண்டும் அல்லது கருத்துக் குருடர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆரவாரம்)

குறிப்பாக, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ட்சித் தலைவரின் கட்டளையை ஏற்று மாண்புமிகு உள்ளாட்சித் றை அமைச்சர் அவர்கள் மதுரை மாநகரத்திலேயே ஒரு வாரம் ங்கியிருந்து அருகிலேயுள்ள வேடசந்தூர் பகுதியிலே வெள்ளத் ால் பாதிக்கப்பட்ட விவசாய மக்களுக்கும் சமுதாயத்தின் அடித்தளத்திலே வாழ்ந்துவரும் மக்களுக்கும் வேண்டிய உதவி களையும் நிவாரணப் பணிகளையும் செய்து கொடுத்ததை மதுரை மாவட்டத்து மக்கள் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த வர்களும் பாராட்டினார்கள். அப்படிப் பாராட்டிய நேரத்திலே இந்தக் கருத்துக் குருடர்கள் மட்டும் வேறு கோணத்தில் அதைப் பார்த்துக் கொண்டிருந்த காட்சியை நாம் பார்த்தோம். யார் எதைச் சொன்னாலும் நாம் செய்யவேண்டியதைச் செய்வோம் என்று முதல்வர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளின் உறுப்பினர்களும் நல்ல முறையிலே நிவாரணப் பணிகளைச் செய்தார்கள். மதுரை மாவட்டத்திற்கு நிவாரணப் பணிகளுக்காக 8 கோடி ரூபாய் தேவை என்று கேட்டிருக்கிறார்கள்.

அந்த 8 கோடி ரூபாயில் மாநில அரசு எந்த அளவிற்கு மதுரை மாவட்டத்திற்குக் கொடுக்கப் போகிறது என்பதைப் பொறுத்து, மதுரை மாவட்டத்தில் இருக்கும் நிவாரணப் பணிகள் நல்ல முறையில் நடக்க மாநில அரசு உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் வேடசந்தூர் பகுதியில் காணாமற்போன வர்கள் என்று பட்டியலில் 139 பேர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மொத்தம் 196 பேர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். அதில் வேடசந்தூர் பகுதியில் மட்டும் காணாமல் போனவர்கள் 139 பேர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 139 பேர்கள்

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1977 டிசம்பர்

காணமல் போய்விட்டார்கள் என்ற கணக்கு வரும்பொழுது எந் குடும்பத்திலேயிருந்து காணமல் போய்விட்டார்கள் என்ற விவ தெரியாமல் போகாது. அந்த 139 பேர்களின் குடும்பங்களுக் நாம் அளிக்கும் ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் போ சேர வேண்டிய நிலையை அரசு உடனடியாகச் செய்து தரவேண் மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களு நிவாரணம் செய்யும் அதேநோக்கிலே, அந்தப் புய வெள்ளமும் வருவதற்கு முன்பு அக்டோபர் மாதத்தில் துவங் பெருமழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நஞ் புஞ்சைப் பயிர்கள் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகின்றவர்களு அந்த நிவாரணத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து மழை பெய்தத புஞ்சைப் பயிர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்ப மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலும், இராமநாதபு மாவட்டத்திலும் புஞ்சைப்பயிர் மிகவும் பாதிக்கப்பட்டு எ விதமான வருமானமும் இல்லாமல் இழப்புக்கு உள்ளாகிய கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குச் சொல்லக் கட பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் மூலமாக ஏற்கனவே அறிவிக்க பட்டிருக்கின்ற குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கட களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அறிவிக்கப் பட்டிருக்கின்ற அந்த நன்மை பாதிக்கப்பட்ட வேடசந்தூர் போன்ற பகுதிகளுக்குத்தான் என்று தெரிகிறது. அவ்வாறில்லாமல் பெருமழையின் காரணமாக புஞ்சைப் பயிர்களும், நஞ்சைப் பயிர்களும் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கும் அந்த நிவாரணம் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

குறிப்பாக, 590 பேர் இறந்துவிட்டார்கள் என்று கணக்கிட்டுச் சொல்கிறார்கள். அந்த 590 பேர்களுக்கு மேல் நாம் வேறு யாரையாவது காட்ட வேண்டுமென்றால், இதற்கு முன்றால் எப்படி இறந்தவர்களை இருக்கிறார்கள் என்றும்,



1977 டிசம்பர் 29] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

இருக்கின்றவர்களை இறந்தார்கள் என்றும் பட்டியல் காட்டப் பட்டதோ அதைப்போல காட்டக் கூடாது என்பதால் புரட்சித் தலைவரவர்களின் கீழ் அமைந்திருக்கும் இந்த அமைச்சரவை உண்மையான தகவலை, 590 பேர்கள் இறந்துவிட்டார்கள் என்றும், 196 பேர்கள் காணமல் போயிருக்கிறார்கள் என்றும் அறிவித் திருக்கிறது. அந்த 196 பேர்களை வேண்டுமானால் வேறு யாராவது எங்கேயாவது ஒளித்து வைத்துக் கொண்டு, அவர்களுக்காக நிவாரண நிதியைத் தேடிக் கொண்டிருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, இதுபோன்ற நிவாரணப் பணிகளை தமிழக அரசு நல்லமுறையில் செய்து கொடுத்தமைக்காக தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. பேரவை இப்போது ஒத்திவைக்கப் படுகிறது. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணி அளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

237. Notification issued in G.O. Ms. No. 2638, Home, dated 1st October 1977, in regard to an amendment to rule 155-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under Section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

238. Notification issued in G.O. Ms. No. 565, Labour and Employment, dated 4th August 1977, in regard to an amendment to the Tamil Nadu Catering Establishments Rules, 1959. [Laid on the Table of the House under Section 29 (4) of the Tamil Nadu Catering Establishments Act, 1958 (Tamil Nadu Act XIII of 1958)].

239. The Fourth Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited for the year 1975-76. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

*240. The 18th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1974-75 (English and Tamil). [Laid on the Table of the House under Section 75 (1) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 50 of 1948)].

*241. The 19th Annual Administration Report on the Tamil Nadu Electricity Board for the year 1975-76 (English and Tamil). [Laid on the Table of the House under Section 75 (1) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948)].

*242. Schedules to Annual Financial Statement for 1977-78 and Supplementary Financial Statement for 1976-77 of the Tamil Nadu Electricity Board. [Laid on the Table of the House under Section 61(3) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948)].

*B. Reports, Notifications and other papers.*

†9. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussion on the Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1975-76 (English and Tamil).

*10. Speech of Hon. Thiru S. Ramachandran, Minister for Works, initiating the discussion on the Annual Financial Statement for 1977-78 and the Supplementary Financial Statement for 1976-77 of the Tamil Nadu Electricity Board in the Tamil Nadu Legislative Assembly (English and Tamil).

*11. White Paper on Cyclone Flood Relief, 1977. (English and Tamil).

†12. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance 6 of 1977).

†13. The Coimbatore Muncipal Council (Appointment of Special Officer) Second Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance 7 of 1977).

* Laid on the Table of the House on 28th December 1977.
† Despatched to Members on 27th December 1977.



## இணைப்பு—I

[299-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 60-க்கான விடையைக் காண்க].

விடை.—

(அ) தமிழ்நாட்டில் 1972 முதல் 1977 (ஆகஸ்டு) வரை பல்வேறு மாவட்டங்களில் விவசாயப் பொறியியல் துறையால் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 38,786.

1972-ஆம் ஆண்டிலிருந்து, இன்றுவரை குழாய்க் கிணறுகள் அமைக்க வாடகைக்கு விடப்படும் கருவிகளுக்கு விவசாயிகளிடமிருந்து பெறப்படும் வாடகைத்

தொகையின் விவரங்கள் கருவி வாரியாகக் கீழே தரப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும், கருவியின் பெயரும். | துளையிடும் ஆழம். | தரம்: முதல் வகுப்புக்கு வாடகை ஒரு நாளுக்கு விவசாயப் பணிகளுக்கு மட்டும். | தரம்: இரண்டாம் வகுப்புக்கு வாடகை ஒரு நாளுக்கு விவசாயமில்லாத வேறு பணிகளுக்கு மட்டும். | விதிக்கப்பட்ட வாடகைக் கட்டணம் அமுலில் இருந்த காலம். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | ரூ. | | |
| 1. பெர்கூசன் விசைத் துளைக்கருவி (Percussion Drills). | 107 மீட்டர் வரை. | 13·00 | 65-00 நடுத்தர துளைக் கருவி. | 18-2-71 முதல் 1-3-75 வரை. | |
| | 107 மீட்டர் முதல் 152 மீட்டர் வரை. | 15-00 | 75-00 பெரிய துளைக் கருவி. | 18-2-71 முதல் 1-3-75 வரை. | |
| | 152 மீட்டருக்கு மேல். | 20·0 | | 18-2-71 முதல் 1-3-75 வரை. | |
| | 107 மீட்டர் வரை. | திருத்திய கட்டணம் 18-00 | 70-00 நடுத்தரத் துளைக் கருவி. | 1-3-75 முதல் | |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | |
| | 107 மீட்டர் முதல் 152 மீட்டர் வரை. | 20·00 | 80·00 பெரிய துளைக் கருவி. | | |
| | 152 மீட்டருக்கு மேல். | 25·00 | | | |
| 2. சுழல் விசைத் துளைக் கருவி (Rotary Drills). | 107 மீட்டர் வரை. | 22·00 | 232·00 ஆழத்தைக் கணக்கிடாமல். | 8-2-71 முதல் 1-3-75 வரை. | |
| | 107 மீட்டர் முதல் 152 மீட்டர் வரை. | 37·00 | | | |
| | 152 மீட்டருக்கு மேல் | 52·00 | | | |
| | 107 மீட்டர் வரை. | திருத்திய கட்டணம் 33·00 | 243·00 ஆழம் கணக்கிடாமல். | 1-3-75 முதல். | |
| | 107 மீட்டர் முதல் 152 மீட்டர் வரை. | 48·00 | | | |
| | 152 மீட்டருக்கு மேல். | 63·00 | | | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | |
| 3. காலிக்ஸ் விசைத் துளைக் கருவி (Calyx Drill). | 107 மீட்டர் வரை. | 13·00 | 35·00 ஆழத்தைக் கணக்கிடாமல். | 18-2-71 முதல் 1-3-75 வரை. | |
| | 107 மீட்டர் முதல் 152 மீட்டர் வரை. | 15·00 | | | |
| | 152 மீட்டருக்கு மேல் | 20·00 | | | |
| | | திருத்திய கட்டணம் | | | |
| | 107 மீட்டர் வரை. | 15·00 | 37·00 ஆழம் கணக்கிடாமல். | 1-3-75 முதல். | |
| | 107 மீட்டர் முதல் 152 மீட்டர் வரை. | 17·00 | | 1-3-75 முதல். | |
| | 152 மீட்டருக்கு மேல். | 22·00 | | | |
| 4. ஹேம்மர் விசைத் துளைக் கருவி (Hammer Drill). | | 25·00 அடிக்கு. | 30·00 அடிக்கு. | 21-1-70 முதல் 1-3-75 வரை. | |
| | திருத்திய கட்டணம் | | | | |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | |
| 5. வாகன் விசைத் துளைக் கருவி (Wagon Drill) | | 28·00 அடிக்கு | 33·00 அடிக்கு | 1-3-75 முதல் | |
| | | 10·00 அடிக்கு | 15·00 அடிக்கு | 18-6-71 முதல் 1-3-75 வரை | |
| | | திருத்திய கட்டணம் | | | |
| | | 12.00 அடிக்கு | 17·00 அடிக்கு | 1-3-75 முதல் | |
| கைத் துளைக் கருவி Hand-Boring sets) | 46 மீட்டர் வரை | 5·00 ஒரு நாளைக்கு | 20·00 ஒரு நாளைக்கு | 1-3-69 முதல் | |
| | 46 மீட்டர் முதல் 76 மீட்டர் வரை | 7·50 ஒரு நாளைக்கு | | | |
| | 76 மீட்டருக்கு மேல் | 9·00 ஒரு நாளைக்கு | | | |

எரிபொருள் எண்ணெய், மசகு எண்ணெய் ஆகியவைகளின் விலை அதிகரித்ததை ஈடு செய்ய 1975 மார்ச்சு மாதத்திலிருந்து வாடகைத் தொகை கைத்துளைக் கருவி நீங்கலாக திருத்தியமைக்கப்பட்டது.

(ஆ) மான்யம் சம்பந்தமாக.—விவசாயிகளுக்கு எவ்வித மான்யமும் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் விவசாயக் கருவிகள் குறைந்த வாடகைக்கு குழாய்க் கிணறுகள் அமைக்க விடப்படுகின்றது.

(இ) மான்யம் கொடுக்கப்படாததால் இவ்வினா எழாது.

## இணைப்பு II

[305-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### 1977 ஆம் ஆண்டு புயல், வெள்ள நிவாரணம் வெள்ளையறிக்கை.

### முன்னுரை

அக்டோபர் முதல் டிசம்பர் மாதங்களில் ஏற்படும் வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் தமிழ்நாடு அதன் ஆண்டுக் கான மழையில் பெரும் பகுதியைப் பெறுகிறது. செப்டம்பர் மாத முடிவில் வட இந்தியாவிலிருந்து தென் மேற்குப் பருவ மழை முடிவுறுந்தறுவாயில் தமிழ் நாட்டில் வட கிழக்குப் பருவ மழை தொடங்கும் நிலை ஏற்படுகிறது. இவ்வாண்டு ஜுன் முதல் செப்டம்பர் வரை சாதாரணமாகப் பொழிந்த தென் மேற்குப் பருவ மழை ஓய்ந்தவுடனே, வட கிழக்குப் பருவ மழை சற்று முன்னதாகவே, 1977 ஆம் ஆண்டு அக்டோபர் 13-ம் தேதியன்றே தொடங்கி விட்டது. தென் மேற்குப் பருவ மழை இயல்பான அளவிற்கே பெய்ததால் தமிழ் நாட்டின் கிழக்குப் பகுதி மாவட் டங்களான செங்கற்பட்டு, தென்னுற்காடு, தஞ்சாவூர், புதுக் கோட்டை, அதையொட்டிய இராமநாதபுரம் ஆகிய மாவட்டங் களில் வழக்கமான அளவிற்கு அல்லது அதற்குச் சற்று அதிக மான அளவிற்கு மழை இருந்தது.

2. அக்டோபர் முதல் தேதி முதல் வட கிழக்குப் பருவக் காற்று வீச ஆரம்பித்த தேதிக்கு இடைப்பட்ட முதல் வாரத்தில் கூட தமிழ் நாட்டில் ஏற்படவிருந்த பெரு வெள்ளத்திற்கான முன்னறிகுறிகள் எவையுமில்லை. தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் நமது மாநிலத்தின் தென் பகுதிகள் தவிர அதன் பெரும்பான்மை யான ஏனைய பகுதிகளில் வழக்கத்தைவிடக் குறைவாகவே மழை யளவு இருந்தது. ஆனல், அதற்கடுத்த வாரத்திலேயே, மழை பெய்யவில்லை, கொட்டவே ஆரம்பித்தது! தஞ்சாவூர் மாவட் டத்தில் 190 சதவிகிதம், இராமநாதபுரத்தில் 100 சதவிகிதம், செங்கற்பட்டு மாவட்டத்தில் 55 சதவிகிதம், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் 80 முதல் 180 சதவிகிதம், திருநெல் வேலி மாவட்டத்தில் எல்லாவற்றிற்கும் சிகரமாக 7 மடங்கு என்ற அளவில் வழக்கத்திற்கதிகமாக இம்மழை பொழிந்தது.



3. சென்னை நகரத்தில் 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 24 மணி நேரத்தில் 45.2 சென்டி மீட்டர்—அதன் சரித்திரத்தி லேயே அதிக அளவு—மழை பதிவாயிற்று. 1976 நவம்பர் மாதத்தில் மழை திடீரெனப் பெய்து பெருத்த சேதம் விளைத்தது. ஆனல் 1977 அக்டோபர் மாதத்தில் இயற்கையின் சீற்றம் வேறு கோணத்தில் திரும்பியது. வங்காளக் குடாக் கடலில் தொடர்ந்து ஏற்பட்ட காற்றழுத்தங்களின் விளைவாக இம்முறை தொடர் மழையும் பலத்த காற்றும் பதினைந்து நாட்களுக்கும் மேலாகவே விடாமல் ஏற்பட்டதால், 1976-க்குச் சற்றும் குறை வில்லாத அளவு சேதம் விளைந்ததுடன் நகரின் இயல்பான வாழ்க்கையே பெருமளவிற்குச் செயலிழந்தது. நகரின் மழையளவு 17—10—1977 முதல் 26—10—1977 வரையிலான முதற் கால அளவில் 609.7 சென்டிமீட்டர், 11—11—1977 முதல் 19—11—1977 வரையிலான இரண்டாவது கால அளவில் 259.6 சென்டி மீட்டர் என்ற அளவுக்கு, தொடர்ந்து இப் பருவத்திற்குள்ள இயல்பான அளவுக்கு மேலேயே இருந்தது. அதன் விளைவாக நகரின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பகுதி வாழும் 258 குடிசைக் குடியிருப்புப் பகுதிகளிலும் ஏழை எளி யோர் உறையும் 153 பகுதிகளிலும் வாழ்க்கை திடீரென முடங்க நேரிட்டது. சுமார் 10,000 குடிசைகள் அழிந்து போகவோ அல்லது சேதமுறவோ நேரிட்டது. ஒரு லட்சத்திற்கும் மேற் பட்ட மக்களை குடிசைப் பகுதிகளிலிருந்தும் தாழ்வான இடங் களிலிருந்தும் காலி செய்து, 200 பள்ளிக்கூடங்களிலும் 5 பெரிய தங்கல் முகாம்களிலும் தங்க அவர்களுக்கு வசதி செய்துத் தரப் பட்டது. ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு லட்சம் பேர்களுக்கு உணவளிக்கப்பட்டது. ஒவ்வொரு தங்குமிடமும், விளக்கு, பால் வழங்குதல், பாதுகாப்பான குடி தண்ணீர், கழிவிடம் முதலிய வசதிகளுடனும், மருத்துவ அதிகாரி ஒருவரின் கண்காணிப்பில் மருத்துவ வசதி, உடல் நல அதிகாரி ஒருவரின் பொறுப்பில் உடல் நல வசதிகள் ஆகியவற்றுடனும் ஏற்படுத்தப்பட்டன. இவற்று டன், சாலைகளைச் செப்பனிடுதல் அல்லது புதுப்பித்தல் மழை நீர் வடிகால்களைச் சீரமைத்தல், பொது கழிவிடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றைப் புதுப்பித்தல் ஆகியவை தீவிரமாகப் பல இடங்களில் அமைக்க ஆட்பண்ட ஊற்றும், நிர்வாக அமைப்பும் பொருளும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

[1977 டிசம்பர் 2?

13½ இலட்சம் உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன. வியாசர்பாடி, கோட்டூர்புரம், வேளச்சேரி போன்ற இடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. காசிமேட்டில் கடல் அரிப்பு ஏற்பட்டு பல மீனவர் குடியிருப்புகள் பரந்த அளவில் சேதமடைந்தன.

4. தமிழ் நாட்டின் இதர பகுதிகளிலும் இதே நிலைமை நிலவியது. அக்டோபர் முதல் தேதியிலிருந்து நவம்பர் 17 தேதி வரை தமிழ் நாட்டில் மொத்தம் பெய்த மழையின் அளவு 14,824 மில்லி மீட்டர். இது இப்பருவத்தில் இயல்பான மழையளவைவிட 6,219 மில்லி மீட்டர் அல்லது 72 சதவிகிதம் அதிகமாகும். மழை பரவலாகவிருந்ததல்லாமல், எப்பொழுதுமே வறட்சிப் பகுதிகளான இராமநாதபுரம், தருமபுரி போன்ற மாவட்டங்களில் கூட இம்முறை பெருமளவில் மழை பெய்தது. இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகையாற்றில் விரைவில் வெள்ளம் கரைபுரண்டோடுமளவிற்கு மழை பெய்து பரமக்குடி, இராமநாதபுரம் வட்டங்களில் பல கிராமங்கள் நீரில் மூழ்குமளவிற்குப் பருவ மழை தீவிரமாயிருந்தது. அக்டோபர் 28-ம் தேதி இராமநாதபுரம் பெரிய ஏரியில் உடைப்பு ஏற்பட்டு இராமநாதபுரம் நகரத்தின் நிலை மிக அபாய கட்டத்திலிருந்தது. வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, காவல் துறை ஆகியவற்றின் அதிகாரிகளும், விழிப்புடன் பொதுமக்களும் விரைந்து செயற்பட்டு ஏரியின் கரையைத் தக்க முறையில் வெட்டி, ஏரியில் பாயும் வைகை வெள்ளத்தைக் கடலுக்குச் செல்லுமாறு செய்ததன் மூலம் இராமநாதபுரம் நகரத்தை மிக இக்கட்டான அபாய நிலையிலிருந்து காத்தனர். இராஜசிங்கமங்கலம் பெரிய ஏரியிலும் இது போன்ற தற்காப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. வருவாய் வாரிய உறுப்பினரான திரு. ஜி. எம். ஒயிட் உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர் பாதிக்கப்பட்ட இடங்களிலேயே தங்கியிருந்து உடனடி நிவாரணமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

5. அக்டோபர் 1977-ல் ஏற்பட்ட இந்த வெள்ளக் கொடுமையிலிருந்து மாநிலம் விடுபடுமுன்பே, புயலும் அடித்தது. ஏற்கெனவே தமிழ் நாட்டின் தென் பகுதிகள் மழை நீரில் மூழ்கியிருந்ததால் பூமியில் மேற்கொண்டு தண்ணீரை உறிஞ்சிக்



கொள்ளும் நிலை இல்லை. நீர்ப்பாசன ஏரிகள் நிரம்பி, பல நதிகளும் வெள்ளத்திற்காட்பட்ட நிலையில் நவம்பர் 9-ம் தேதி மாலையில் வங்கக் கடலில் ஒரு காற்றழுத்த மண்டலம் உருவாகி அது 10 ஆம் தேதி காலையில் புயல் காற்றாகத் தீவிரமடைந்தது. நவம்பர் 11-ம் தேதி 19-30 மணியளவில் இப்புயல் சென்னை நகரிலுள்ள புயல் எச்சரிக்கை ரேடாரின் செயற்திறனெல்லைக்குள் வந்தது. அது முதல் புயலின் இயக்கம் மணிக்கு மணி கண்காணிக்கப்பட்டு, முறையாக புயல் எச்சரிக்கைகளும் வெளியிடப்பட்டன. இதனால் கடற்கரையோரமுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் தக்க தருணத்தில் முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கவும் நிர்வாக இயந்திரம் முடுக்கி விடப்பட்டு ஆயத்த நிலையில் இருக்கவும் முடிந்தது. இப் புயலால் மாநிலம் முழுவதிலும் உயிரிழந்தோர் எண்ணிக்கை 560 மட்டுமே என்பது இம் முன்னெச்சரிக்கை சிறந்த பலனளித்துள்ளதென்பதற்கும் அதன்படி மாவட்டங்களில் எடுக்கப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகள் திறமையாகவிருந்தன வென்பதற்கும் பொருத்தமான சான்றாகும். தமிழ் நாட்டிற்கு வந்த மத்திய ஆய்வுக் குழுவும் இதைக் குறித்துக்கொண்டது.

6. புயற்காற்று மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினத்தைத் தாக்கியது. அதனால் நாகப்பட்டினம் வட்டம் முழுதும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அடுத்தப்படியாக தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி முழுவதும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இப்புயலின் கொடிய விளைவு மிகப் பரவலாக புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ளது. இப்புயற்காற்றின் விளைவாக மாநில முழுவதும் மிகக் கடும் மழை ஏற்பட்டது. பல நதிகளிலும், கால்வாய்களிலும், காட்டாறுகளிலும், வெள்ளம் கரைபுரண்டு, அருகிலிருந்த இடங்களெல்லாம் வெள்ளக் காடாகின. இலட்சக்கணக்கான நெல் வயல்கள் நீரில் மூழ்கின. பல இடங்களில் தென்னந் தோப்புகள் வேருடன் சாய்ந்தன. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள வாழைத் தோப்புகள் அழிந்தன. பருத்தி, கரும்பு வெற்றிலைக் கொடிக் கால்கள், சிறுதானியப் பயிர்கள், ஆகியவையும் புயலாலும் வெள்ளத்தாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

7. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில், காவிரி, கொள்ளிடம், வெள்ளாறு, குடகனாறு ஆகியவற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பல கிராமங்கள் துண்டிக்கப்பட்டுத் தீவுகளாயின. அங்குள்ள மக்களைப் பாதுகாப்பான மேட்டுப் பகுதி இடங்களுக்கு அகற்ற வேண்டியிருந்தது. காவிரி, அமராவதி நதிகளில் ஏற்பட்ட வெள்ளம் திருச்சிராப்பள்ளி, கரூர் நகரங்களில் புகுந்து ஆபத்து ஏற்படுத்தும் நிலையுண்டாகியது. திருவரங்கம் நகரிலும் வெள்ளம் புகுந்தது. இருப்புப் பாதை சாலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. காவல்துறையின் வானொலிச் செய்தித் தொடர்பும் பழுதுற்றது. மின்வசதி துண்டிக்கப்பட்டு விட்டது. தொலைபேசித் தொடர்பும் தடைப்பட்டது. இலட்சக்கணக்கான மரங்கள் காற்றில் விழுந்தும், நதிகளும் கால்வாய்களும் கரைபுரண்டும், சாலை-இருப்புப் பாதைப் போக்குவரத்தினைத் தடைசெய்தன. நாகப்பட்டினம் துறைமுகம் கடும் சேதமுற்றது. அதன் கப்பல்துறைகள் இடிந்து போயின. கிடங்குகள் நாசமடைந்தன. ஆயிரக்கணக்கான குடிசைகள் மாவட்டத்தின் பல பகுதிகளில் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன. ஓட்டுக் கட்டடங்களும் கான்கிரீட் கட்டடங்களும் கூட ஏதேனும் சேதமடையாமல் போகவில்லை.

8. கொடைக்கானல் மலைகளின் கீழும் வேடசந்தூர், திண்டுக்கல் வட்டங்களில் அவற்றையடுத்த மலைப் பகுதிகளிலும் திடீரென்று பேய் மழை ஏற்பட்டது. வேடசந்தூரில் 12 மணி நேரத்தில் 10 அங்குல மழை பெய்தது. அதில் 45 நிமிட நேரத்திற்குள் 4 அங்குல மழை பொழிந்தது. தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஏற்கெனவே கடும் மழை பொழிந்துள்ள நிலையில், இயல்பாகவே குறைவான மழையுள்ள இவ்வறட்சிப் பகுதிகளில் திடீரென ஏற்பட்ட பேய் மழையால் இப்பகுதிகளிலுள்ள சிற்றாறுகளிலெல்லாம் மிகுந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதனால் காவிரி, கொள்ளிடம் நதிகளில் எல்லாப் பகுதிகளிலும் அதிக அளவில் நீர் வரவு ஏற்பட, பல இடங்களில் கரைகளில் உடைப்பு ஏற்படவும் அருகிலுள்ள இடங்கள் நீரில் மூழ்கவும் நேரிட்டது. கரூர் நகரின் அருகில் அமராவதி நதியின் மீதுள்ள இருப்புப் பாதைப் பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. வேடசந்தூர் அருகில்



குடகனாறு அணை உடைந்து அதன் கீழ்ப்பகுதியிலுள்ள பல கிராமங்களில் வெள்ளம் புகுந்து அவற்றை மூழ்கடித்து விட்டது.

9. இந்நிலையில் புயல் ஏற்பட்ட அன்றே உடனடியாக விமானப் படையுடன் தொடர்பு கொண்டு 13—11—1977 அன்று தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும், மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர்ப் பகுதியிலும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை வானிலிருந்து பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டது. முதலமைச்சர், உணவு அமைச்சர், நிவாரண ஆணையர், தென் மண்டல ரயில்வே பொது மேலாளர், மற்றும் பல மூத்த அதிகாரிகள் பாதிக்கப்பட்ட இடங்களை இவ்வாறு பார்வையிட்டனர். 17, 18—11—1977 தேதிகளில் மத்திய அரசு அமைச்சர்களும் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டனர். 18—11—1977 அன்று அவர்களுடன் மாநில நிதி அமைச்சரும் சென்றார். 25—11—1977 அன்று குடியரசுத் தலைவர் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டார். அவருடன் மாநில முதலமைச்சரும் நிதி அமைச்சரும் சென்றனர். பல இடங்களில் பெருமளவில் பொதுச் சொத்துக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதத்தினைக் கண்டு குடியரசுத் தலைவர் மிகவும் மனங்கலங்கினார். அதே சமயம் மாநில அரசு தக்க நிவாரணப் பணிகளை உரிய காலத்தில் தேவையான அளவுக்கு எடுத்துள்ளதைக் கண்டு தனது மனநிறைவையும் தெரிவித்துள்ளார். 26—11—1977 அன்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டார். 30—11—1977 அன்று நாட்டின் பிரதமரும், முதலமைச்சர், தலைமைச் செயலர், நிவாரண ஆணையர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டார்.

10. புயலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளமும் பல இடங்களைச் சென்றடைய முடியாமல் துண்டித்து விட்டன. இருந்தபோதிலும் மீட்பு வேலையும் நிவாரணப் பணிகளும் உடனடியாகத் தீவிரமாகத் தொடங்கப் பெற்றன. வீழ்ந்த மரங்களை வெட்டி அவரவர் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியதன் மூலம் சாலைகளில் வீழ்ந்த மரங்கள் விரைவில் அகற்றப்பட்டன. விமானப்படை, கப்பற்படை ஆகியவற்றுடன் மாநில அரசு

தொடர்ந்து தொடர்புகொண்டு அவர்களிடமிருந்து ஒரு டகோட்டா விமானம், மூன்று ஆவ்ரோ விமானங்கள், நான்கு ஹெலிகாப்டர்கள் (ஏணை வசதியுடன்) ஆகியவற்றை மீட்பு, நிவாரணம், உணவுப் பொட்டலங்களையும் இதர பொருள்களையும் மக்களுக்கு விமானம் மூலம் விநியோகிப்பது, சென்னையிலிருந்து தேவைப் பொருள்களை விமானம் மூலம் அனுப்புதல் ஆகிய பணிகளுக்கு உதவி பெறப்பட்டன. தரைப் படையினரிடமிருந்து மோட்டார் வண்டிகளும் வானொலிச் செய்திக் கருவிகளும் பெறப்பட்டன. பாதுகாப்புப் படையினரிடம் பெற்ற காற்றடைக்கக் கூடிய ரப்பர் படகுகள், வெள்ளம் நிறைந்த பகுதிகளில் வெற்றிகரமாகப் பயன் படுத்தப்பட்டன. முப்பது பேர் கொள்ளக்கூடிய மோட்டார் வண்டியேற்றப்பட்ட மோட்டார் படகுகளும் தரைப்படையினரிடமிருந்து வரவழைக்கப்பட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மிகச் சிறந்த முறையில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டன.

11. ஆரம்ப முதலே தலைமைச் செயலர், திரு. வி. கார்த்திகேயன் புயல்-வெள்ள நிவாரணப் பணிகளின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளார். வருவாய்த் துறைச் செயலாளர் திரு. இ. சி. பி. பிரபாகர் மாநில அளவில் இப்பணிகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றும் பொறுப்பினையும், நிவாரண ஆணையர் நிர்வாக நிலையில் நிவாரணப் பணிகளைச் செயலாற்றும் முழுப் பொறுப்பினையும் அளிக்கப்பட்டனர். உயர்நிலை மாநில நிர்வாக அதிகாரிகள், பாதுகாப்புப் படை அதிகாரிகள், வானிலைத் துறை அதிகாரிகள் ஆகியோருடன் அவசரக் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட்டன. தலைமைச் செயலகத்தில், நேரடித் தொலைபேசி, வானொலித் தொடர்பு வசதி ஆகியவற்றுடன் கூடிய ஒரு குழு பாதிக்கப்பட்ட இடங்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணப் பணிகளைக் கண்காணிக்கவும் ஏற்படுத்தப்பட்டு, அதில் 24 மணி நேரமும் பணிபுரிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். நிவாரணப் பணிகளைச் செம்மையாக ஒருங்கிணைத்து செயலாற்றவும், உடனடியாகத் தலத்திலேயே தேவையான நிவாரணம் அளிக்கவும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வருவாய் வாரிய உறுப்பினர் மற்றும் நிவாரண ஆணையர் திரு. ஆர். நடராசனும், திருச்சிராப்பள்ளி,



புதுக்கோட்டை மாவட்டங்களில் இப்பணியை நிறைவேற்ற, திருச்சிராப்பள்ளிக்கு வருவாய் வாரிய உறுப்பினர் திரு. ராம் சந்தரும் அனுப்பப்பட்டனர். நீர்ப்பாசனம், சாலை மற்றும் கிராமப் பணிகள், மின்வசதி ஆகிய துறைகளின் தலைமைப் பொறியாளர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று உடனடியாகத் தேவையான மீட்புப் பணிகளை நிறைவேற்ற ஆவன செய்தனர். வருவாய் வாரிய உறுப்பினர் திரு. கா. திரவியம் மதுரை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வேடசந்தூர்ப் பகுதிக்கு அனுப்பப்பட்டார். ஏற்கெனவே, சென்னை நகரில் நிவாரணப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு வகித்துள்ள திரு. கே. ஆர். ஷெனாய், ஆணையர் மற்றும் அரசுச் செயலர், திருச்சிராப்பள்ளியில் தங்கி அங்கு நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டார், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் நாகப்பட்டினத்திற்கு நேரில் சென்று, வருவாய் வாரிய உறுப்பினர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோருடன் தலத்திலேயே நிவாரணம் அளிக்கும் பணியில் ஈடுபட்டார். அரிசன நலத்துறை அமைச்சர் திரு. பெ. சௌந்தர பாண்டியன், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து ஆகியோரும் திருச்சிராப்பள்ளி, வேடசந்தூர், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இவ்வாறு பணியாற்றினர். இதர அமைச்சர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளைக் கண்காணித்து, மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளையும் குறைகளையும் கேட்டறிந்து தேவையான நிவாரணம் அளிக்க ஏற்பாடுகள் செய்தனர்.

12. முதல் அமைச்சர் விமானம் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டபோது, உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவற்றைப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக எடுத்துச் செல்லும் வண்டித் தொடர்களை (Convoy) அமைக்குமாறு தலத்திலேயே உத்தரவிட்டார். அதன் பின்னர், முதல் அமைச்சர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று நிவாரணப் பணிகள் தேவையான வரை, உரிய காலத்தில் முறையாகக் கொடுக்கப்படுவதைக் கவனித்துத் திருப்தி அடைந்தார். திரும்பி வந்த பின்னர் அமைச்சர்களுடனும் உயர் அதிகாரிகளுடனும் கலந்து நிவாரணப் பணிகள் பற்றிய பலவற்றை முடிவு செய்தார். பலதுறைகளில் அளிக்கப்பட வேண்டிய,

கருணை ரொக்க நிவாரணத் தொகைகள், உடைகள் அளித்தல், குடிசைகள் கட்டுதல், தற்காலிகத் தங்குமிடங்கள் அமைத்தல், வேளாண்மைக்கு உரம், விதை போன்றவற்றிற்கான சலுகைகளும் மானியங்களும் அளித்தல், நிலவரியைத் தள்ளிக் கொடுத்தல், கடன் வசூல் ஒத்திவைப்பு, கடன் நிவாரண ஏற்பாடுகளை நீடித்தல் போன்ற சலுகைகள் அளித்தல், குழுக்கள் அமைத்தல், மாவட்ட ஆட்சியருக்கு நிதி நிர்வாக அதிகாரங்கள் அளித்தல், உடைப்புகளை அடைத்தல், மின்வசதியை மீண்டும் ஏற்படுத்தல், தேவையான தனி அலுவலர்களை நியமனம் செய்தல், பல தனியார் தொண்டு நிறுவனங்களின் உதவி பெறுதல் போன்ற பலவற்றைப் பற்றி முடிவுகள் எடுத்தார். வேடசந்தூர் வட்டத்தில் குடகனாறு அணை உடைந்ததை விசாரணை செய்ய தனி நபர் கமிஷன் ஒன்றையும் நியமனம் செய்துள்ளார்.

13. நிலைமையை ஆராயவும் தேவையான உத்தரவுகள் அளிக்கவும் அன்றாட அவசர ஆய்வுக் கூட்டங்கள் சென்னையில் நடத்தப்பட்டன. முதல் அமைச்சரும் இதர அமைச்சர்களும் இயன்றவரை இக்கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர்.

14. இந்தப் புயலைப் பற்றி முன்னெச்சரிக்கைகள் வானிலைத் துறையால் முறையாகக் கொடுக்கப்பட்டு வந்தன. இது சம்பந்தப்பட்ட தல அதிகாரிகள் முன்னெச்சரிக்கைகள் கொடுத்தது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு தக்க காலத்தில் அகற்ற உதவியது. நாகப்பட்டினம் பகுதியில் 11, 12—11—1977 தேதியிலும் மற்றும் 17—11—1977 அன்று இரண்டாம் முறை புயல் அச்சுறுத்திய பொழுதும் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து மின்சாரத் தாக்குதலால் விளையக்கூடிய மரணங்களைத் தவிர்க்க, புயல் தாக்கக்கூடிய நேரத்திற்கு வெகு முன்பாகவே மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டது. இவ்விதப் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக, உயிர்சேதம் கூடியவரை குறைவாகவே யுள்ளது. இல்லாவிடில் இது பன்மடங்கு அதிகமாகவிருந்திருக்கும். புயல், வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து அகற்றப்பட்டவர்கள் இருக்கத் தங்குமிடங்கள் பலவும், கஞ்சித் தொட்டிகளும் ஏற்படுத்தப்பட்டன. "கேர்" நிறுவனம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சமூக நல நிறுவனங்களின் உதவியுடன் இரண்டு புடவைகள் இரண்டு வேட்டிகள் அடங்கிய



உடைகள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அளிக்கப்
பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோதுமைப்பண்டங்கள்,
பிஸ்கோத்துகள், பால்பொடி, போர்வைகள் போன்ற பொருள்
களும் இந்நிறுவனங்களால் கொடையாக அளிக்கப்பட்டு அவை
யும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விமான மூலமோ சாலை
மூலமோ அனுப்பப்பட்டன. சென்னையிலிருந்து தினசரி 40,000
ரொட்டித் துண்டுகள் விமானம் மூலம் திருச்சிராப்பள்ளிக்கு
அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து மற்ற பாதிக்கப்பட்ட இடங்
களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. காலரா தடுப்பு ஊசி மருந்து
களும், அவற்றை மக்களுக்குச் செலுத்தத் தேவையான அதிகப்
படியான அலுவலர்களுடன் விமானம் மூலம் அல்லது சாலை வழி
யாக அனுப்பப்பட்டன. நாகப்பட்டினம் பகுதி புயலால் மிகக்
கடுமையாகத் தாக்கப்பட்டதாலும் அங்குள்ள கடைகளும் இயங்
காததாலும் புயலால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்து
க்கும் 5 கிலோ அரிசியும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் இல
வசமாக வழங்க உத்தரவிடப்பட்டது. பல கஞ்சித் தொட்டிகளும்
திறக்கப்பட்டன. தினசரி 4 இலட்சம் மக்கள் வரை உணவளிக்
கப்பட்டனர். மாவட்ட ஆட்சியர்கள் நெருக்கடிக் காலத்
தில் உடனடிச் செலவுகள் செய்ய அளிக்கப்பட்டுள்ள முன்
பணத் தொகையின் அளவு ரூ. 5 இலட்சத்திற்கு பாதிக்கப்
பட்ட மாவட்டங்களில் உயர்த்தப்பட்டது. இந்தியன் ஆயில்
கார்ப்பரேஷனுடன் தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்ட இடங்
களில் நாள் முழுவதும் மண்ணெண்ணெய், பெட்ரோல் ஆகியவை
கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. செய்தி, போக்குவரத்து
தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தவும், உடைப்புகளை அடைக்கவும்
மின் வசதியை மீண்டும் அளிக்கவும் போர்க்கால முறையில்
துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முழுதுமோ
அல்லது பகுதியாகவோ சேதமுற்ற குடிசைகளைப் புதுப்பிக்க
ஒவ்வொரு குடிசைக்கும் ரூ. 200 மானியத் தொகை வழங்க அனு
மதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடிசைகள் கணக்கெடுப்பு
மிகப் பெரிய அளவில் தொடங்கி, அவ்வப்போது கணக்கெடுப்பு
நடப்பதையொட்டி, தொகை விநியோகிக்கப்பட்டது.
24—12—1977 வரை ரூ. 6.66 கோடி இவ்வாறு கருணை மானி
யத் தொகையாகக் குடிசைப் புனரமைப்பக்கு வழங்கப்பட்
டுள்ளது. இத்தொகை குடிசையில் குடியிருப்போருக்கு அவர்கள்
குடிசையின் சொந்தக்காரராக இருந்தாலும் இல்லாவிட்டாலும்

வழங்கப்படுகிறது. ஒரு குடிசையில் ஒரு குடும்பத்திற்கு அதிக மாகக் குடியிருப்பின், இத்தொகை அக்குடும்பங்கள் அனைத் திற்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். முதலமைச்ச ரின் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்பத்தின் பொருளீட்டு பவரை இழந்த குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 வழங்கவும் இத் தொகை விரைவில் அளிக்கப்பட ஏதுவாக மாவட்ட ஆட்சித் தலைவரே இதை அனுமதித்து வழங்க அதிகாரமளித்தும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### தனியார் சொத்துக்களுக்குச் சேதம்.

15. புயல். வெள்ளம், பெருமழை ஆகியவற்றினால் மனித உயிர்கள், குடிசைகள், வீடுகள், பயிர்கள், கால்நடைகள், பாசன வாயில்கள், சாலைகள், கட்டடங்கள், அமைப்புகள் ஆகியவை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, தென் ஞர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம், செங்கற் பட்டு, திருநெல்வேலி மாவட்டங்களில் பெருமளவிற்குச் சேத முற்றன. மாநிலம் முழுவதிலும் ஏற்பட்ட உயிர்சேதம் 560. காணமற்போனவர்கள் எண்ணிக்கை 196. இறந்தவர்களில் 160 பேர் குடும்பத்தின் பொருளீட்டுபவர்கள். மொத்தம் பாதிக்கப் பட்ட பயிர்களின் மதிப்பு ரூ. 41.81 கோடியென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 28,300 ஏக்கர் வயல்களும், 1,700 கிணறு களும் மண் மேடிடப்பட்டன. 23,000 எண்ணிக்கை கால்நடை களும், ஆடுகளும், 5,000 கோழிகளும் இழப்புக்கு ஆளாயின. பயிர்கள் இழப்பு, வயல்களும் கிணறுகளும் மண்மேடிடப்பட்டது, கால்நடை, ஆடுகள், கோழிகள் ஆகியவை இழப்பு முதலிய வகைகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு சுமார் ரூ. 47.14 கோடியாகும். கட்டுமரங்கள், நாட்டுப் படகுகள், வலைகள், மீன்பிடிக்கும் கருவிகள் ஆகியவற்றின் இழப்பாலும் விசைப்படகு களுக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பாலும் மீனவர்களுக்கு ஏற்பட்ட நட்டம் ரூ. 1.35 கோடியென மதிப்பிடப்பட்டது. குடிசைப்பணிக்கூடங்கள், கைத்தறிகள், இதர நெசவுக் கருவிகள், நூல் மற்றும் கச்சாப் பொருள்கள் ஆகியவை அழிந்த வகையில் நெசவாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 1 கோடி அளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. குடிசைகளும் வீடுகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. 4.4 இலட்சம்



குடிசைகளும் 59,400 வீடுகளும் பாழடைந்ததாக இதுவரை கணக்கிடப்பட்டுள்ளன. புயலும், வெள்ளமும் விளைவித்துள்ள பெருமளவு சேதத்தினால் தலத்தில் பார்வையிட்டுக் கணக்கெடுப்பு முடியும் பொழுது இவ்வெண்ணிக்கை மேலும் உயர இடமுண்டு. ஒரு குடிசைக்கு ரூ. 500, ஒரு வீட்டுக்கு ரூ. 2,000 என்ற மதிப் பீட்டில் குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்ட இழப்பு ரூ. 33.88 கோடி யாகும். தனியார் சொத்துக்களுக்கு இத்தகைய எல்லா வகையிலும் ஏற்பட்டுள்ள இழப்பு கீழ்க்கண்டவாறு மொத்தம் ரூ. 83 கோடியாகும்.

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| | 41.81 |
| பயிர்ச்சேதம் | 3.51 |
| வயல்களும் கிணறுகளும் மண்மேடிடப்பட்டது | 1.82 |
| கால்நடை, ஆடுகள், கோழிகள் | 1.35 |
| மீனவர்கள் | 1.00 |
| நெசவாளர்கள் | 33.88 |
| வீடுகள் | |
| மொத்தம் | 83.37 |

### பாசனத் திட்டங்களுக்குச் சேதம்.

16. நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏற்பட்ட சேதம் ரூ. 18.08 கோடியென மதிப்பிடப்படுகிறது. இதில் ரூ. 14.23 கோடி அரசுப் பாசனவாயில்களுக்கும் ரூ. 3.85 கோடி ஊராட்சி ஒன்றிய பாசன ஏரிகளுக்கும் ஆகும்.

### சாலைகளுக்குச் சேதம்.

17. பலத்த காற்றினால், முக்கியமாக நாகப்பட்டினத்தி லிருந்து புயல் சென்ற பாதையிலுள்ள இடங்களில் பல மரங்கள் வேருடன் சாலைகளின் குறுக்கே வீழ்ந்தமையால், சாலைபோக்கு

வரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. மழை, பாசன ஆதாரங்கள் மற்றும் ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகள் ஆகியவற்றினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும் சாலைகளுக்குப் பரந்த சேதமேற்படுத்தியுள்ளது. குடகனாறு பகுதியில் ஏற்பட்ட வரலாறு காணா வெள்ளம் பல பாலங்களைப் பாழடித்தது. தேசீய நெடுஞ்சாலையில் வேடசந்தூர் அருகேயுள்ள பாலமும், கரூர் அருகேயுள்ள இருப்புப்பாதைப் பாலமும் இவ்வாறு மிகப் பெருமளவில் பாழடைந்து பாதிக்கப்பட்டவையாகும். வெள்ளாற்றில் ஏற்பட்ட அதிக அளவு வெள்ளப் பெருக்கினால் புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலைகள் பெருமளவில் பழுதுற்றன. இது தவிர, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பல சிறு ஏரிகளின் கரைகள் உடைந்தமையால் ஏற்பட்ட வெள்ளமும் சாலைகளைப் பாதித்தன. ஐயாறு, கோரையாறு, ஆரியாறு, குடமுருட்டி போன்ற வடிகால் நீர் நிலைகளும் வெள்ளப் பெருக்கெடுத்துச் சாலை அமைப்பிற்குப் பெருத்த சேதம் விளைவித்தன. அரசு, மற்றும் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி சாலைகளின் சாலையின் மேற்பரப்புக்கு ஏற்பட்ட சேதமே பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தில் பெரும்பகுதியாகும். பெருமளவில் ஏற்பட்ட சாலை உடைப்புகளால் புதுக்கோட்டை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகள் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டன. பலவிடங்களில் சாலைகள் அரிக்கப்பட்டு, உபயோகப்படக்கூடிய சாலைகளின் அகலம் வெகுவாகக் குறைந்து, அவற்றை உபயோகிப்பதும் ஆபத்தானதாகவிருந்தது. சாலையமைப்புகளில் ஏற்பட்ட பரவலான தீவிர சேதங்களின் காரணமாகப் புயலால் பாதிக்கப்பட்ட பல இடங்களுக்கு உடனடியாகப் போய் நிவாரணப் பணிகளில் ஈடுபட இடைஞ்சல் ஏற்பட்டதாயினும், அவற்றைச் சீர்செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பல கால்வாய்களின் கரைகளில் பிளவேற்பட்டதால் கால்வாய்க்கரைச் சாலைகள் உபயோகமற்றுப் போயின. ஆகையால் பிளவுகளைச் செப்பனிடும் வேலையும் கடினமாகியது. சாலை அமைப்புகளை புயல் வெள்ளங்களால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு முன்பிருந்த நிலைக்குக் கொணரும் பணி மிக அதிமுக்கியமான பணியென மாநில அரசு கருதியுள்ளது. இதற்கு அளிக்கப்படும் உதவித்தொகை உடனடிச் சீரமைப்பு வேலைகளுக்கு மட்டுமின்றி சாலைகளைப் புதுப்பிக்கவும், பழுதுற்ற பாலங்களையும் மதகுகளையும் சீர்செய்து புனரமைப்



பதற்கும் அளிக்கப்பட வேண்டும். சாலைகளுக்கு ஏற்பட்ட சேதம் ரூ. 30 கோடியெனக் கீழ்க்கண்ட விவரப்படி மதிப்பிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (அ) தேசீய நெடுஞ்சாலைகள் | 3.50 |
| (இ) மாநில அரசுச் சாலைகள் | 13.31 |
| (உ) ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிச் சாலைகள் | 13.15 |
| மொத்தம் | 29.96 |

### கட்டிடங்களுக்கும் இதர நிலையமைப்புகளுக்கும் சேதம்.

18. பொதுக் கட்டிடங்கள், நாகப்பட்டினம் துறைமுகம், மீன்பிடி படகுகளும் கருவிகளும் பெருமளவு சேதமடைந்துள்ளன. அரசு போக்குவரத்து நிறுவனத்திற்கும் வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்ற இதர பொதுத் துறை நிறுவனங்களுக்கும் சேதமேற்பட்டுள்ளது. மின்வாரியத்தின் அமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதம் கணிசமானது. மின்சாரம் எடுத்துச் செல்லும் கம்பிகள், மின்மாற்றப் பொறிகள் ஆகியவை புயலால் பாதிக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளில் மட்டுமின்றி, வெள்ளப் பாதிப்புக்குட்பட்ட குடகனாறு கரை போன்ற ஆற்றங்கரைப் பகுதிகள், திருச்சிராப்பள்ளி நகரம், நாகப்பட்டினம் நகரம், நாகப்பட்டினம் வட்டம் ஆகியவற்றிலும் மிகப் பெருமளவில் பழுதடைந்தன. போர்க் கால முறையில் வேலை செய்தும், தவிர்க்க முடியாமல் சில நாட்கள் கழித்தே ஓரளவு மின்சார வசதி மீண்டும் ஏற்படுத்த முடிந்தது. கட்டிடங்களுக்கும் நில அமைப்பு

களுக்கும் ஏற்பட்ட சேதம் ரூ. 12.82 கோடியென கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (அ) அரசு கட்டிடங்கள் | 2.09 |
| (இ) ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிக் கட்டிடங்கள் | 1.24 |
| (உ) கடல் அரிப்பு | 1.27 |
| (எ) துறைமுகங்கள் | 0.57 |
| (ஐ) பொதுத் துறை நிறுவனங்கள் | 6.43 |
| (ஒ) கல்வி நிறுவனங்கள் | 1.22 |
| மொத்தம் .. | 12.82 |

பாதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் திருச்சிராப்பள்ளி நகரத்தில் உள்ள சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி (ரூ. 43 இலட்சம்), புனித ஜோசப் கல்லூரி (ரூ. 31 இலட்சம்), ஹோலி கிராஸ் கல்லூரி (ரூ. 24 இலட்சம்), பிஷப்ஹீபர் கல்லூரி (ரூ. 7 இலட்சம்) மற்றும் நேஷனல் கல்லூரி (ரூ. 3 இலட்சம்) ஆகிய கல்லூரிகளாகும். இவற்றில் ஏற்பட்ட சேதம் அக்கல்லூரிகளின் நூல் நிலையங்களுக்கும் ஆய்வுக் கூடங்களுக்கும் ஏற்பட்டது. தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள இதர கல்லூரிகளுக்கு ரூபாய் ஒரு இலட்சம் அளவிலும், உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கு ரூ. 13 இலட்சம் அளவிலும் சேதமேற்பட்டுள்ளது.

### உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்குச் சேதம்.

19. சென்னை மாநகராட்சியிலும் புயல் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள நகராட்சிகளிலும் பெரும்பாலும் சாலைகள், குடிநீர் அமைப்புகள் ஆகியவை பெருமளவில் சேதமுற்றுள்ளன.



நாகப்பட்டினம் நகரத்தில் ஏற்பட்ட சேதம் மிக அதிகமானது. திருச்சிராப்பள்ளி நகரம் வெள்ளத்தில் மூழ்கியதுடன் அதன் குடி தண்ணீர் அமைப்புக் கருவிகள் குடமுருட்டி ஆற்றின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. மழை நீர் வடிகால்கள், ஆங்காங்கு மண் சரிவினாலும், மண், குப்பை ஆகியவைகள் கழிவு நீருடன் அடித்து வரப்பட்டதாலும் பெருமளவு தூர் படிந்து போயின. அக்டோபர் மாத ஆரம்பத்திலிருந்தே சென்னை நகரில் தொடர்ந்து அக்டோபர் மாதத்தில் 25 நாட்களும் நவம்பர் மாதத்தில் 21 ஆம் தேதி வரை 15 நாட்களும் சென்னை மாநகரின் வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத அளவுக்கு மழை பெய்தது. தொடர்ந்து இவ்வளவு அதிக நாட்கள் நகரில் பெய்ததில்லை. அதன் விளைவாகப் பல இடங்களில் தண்ணீர் அதிக அளவில் தேங்கவும், பல இடங்களில் சாலைகளின் மேற்பரப்பு அழிந்து போகவும் நேரிட்டது. பருவ மழைக்கு முன்பிருந்த நிலைக்கு மழை நீர் வடிகால்களையும் சாலைகளையும் சீரமைக்கும் பணிக்கு அரசு அதிமுக்கியத்துவம் அளித்துள்ளது. சென்னைக்கு அருகிலுள்ள சில நகராட்சிகளின் நிலையும் சென்னை நகரைப் போன்றதே. இயல்பான அளவிற்கு இரண்டு மடங்குக்கு மேல் கடற்கரைப் பகுதிகளில் மழை பெய்து பெருமளவு நாசம் விளைவித்துள்ளது. சென்னைக்கும் இதர உள்ளாட்சிகளுக்கும் சாலைகள், மழை நீர் வடிகால்கள், குடிநீர்த் திட்டம், தெரு விளக்குகள், இதர நிலை அமைப்புகள் ஆகியவற்றிற்கான சேதம் ரூ. 10.49 கோடி எனக் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (அ) சென்னை மாநகராட்சி | 8.17 |
| (இ) இதர நகராட்சிகள் | 2.32 |
| மொத்தம் .. | 10.49 |

20. தனியார், மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேத விவரம் மொத்தம் ரூ. 155 கோடி இருக்குமெனக் கீழ்க்கண்டவாறு கணித்துக் கொள்ளலாம் :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (i) தனியார்களுக்கு ஏற்பட்ட சேதம் | 83.37 |
| (ii) நீர்ப் பாசனத் திட்டங்கள் | 18.08 |
| (iii) சாலைகள் | 29.96 |
| (iv) கட்டிடங்களும் அமைப்புகளும் | 12.82 |
| (v) உள்ளாட்சிகள் | 10.49 |
| மொத்தம் . . | 154.72 |

### நிவாரணமும் மறு வாழ்வும்.

21. தண்ணீர் புகுந்த இடங்களிலிருந்தும் பழுதுற்ற வீடுகளிலிருந்தும் மக்களை உடனடியாக நிவாரணப் பணி முகாம்களுக்கு அப்புறப்படுத்துவதன் மூலம் நிவாரண வேலை உடனடியாகத் தொடங்கப்பட்டது. நிவாரணப் பணிகள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போதே இன்னொரு புயல் தமிழ் நாட்டின் கரைக் கருகில் மையம் கொண்டு மெதுவே வடக்கில் நகர்ந்து கொண்டு எக்கணத்திலும் தமிழ் நாட்டில் கரையைக் கடக்கலாமென பாம்பன் முதல் சென்னை வரையில் எல்லோரையும் தவிக்கவிட்டு அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இப்புயல் நிலையின் காரணமாக வேண்டிய முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகள், பாதிக்கப்படக் கூடிய இடங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தல் போன்ற பணிகளை, ஏற்கெனவே புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களிலேயே செய்ய வேண்டியிருந்தது. இவ்விரண்டாவது புயல் பின்பு தமிழ்நாட்டிலிருந்து விலகி, ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தன் கொடுமையை மிக வருந்தத் தக்க அளவுக்குக் காட்டிக் கரை கடந்தது. இப்புயலின் விளைவாகவும் தமிழ் நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் பெருமளவு மழை பெய்தது. முக்கியமாக சென்னை நகரும், செங்கற்பட்டு மாவட்டமும் இதற்கு இலக்காகின.



இந்த இரண்டாவது புயலின் அச்சுறுத்தலால் புயல் நிவாரண வேலைகள் ஓரளவு தடைப் பட்டாலும் நிவாரண மறுவாழ்வுப் பணிகள் வேகமாக முன்னேறின.

22. மத்திய ஆய்வுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புரையில் பாதிக்கப்பட்ட குடிசை ஒவ்வொன்றுக்கும் அவற்றின் புனரமைப்புக்கு ரூ. 300 கடனுதவிக்கு மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. 'கேர்', தமிழ் நாடு நிறுவனம், ஒவ்வொன்றும் ரூ. 500 மதிப்புள்ள 5,000 குடிசைகளை ரூ. 25 இலட்சம் செலவுத் தொகையில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் கட்டப்படுவதற்கு முன்வந்துள்ளது. இக் குடிசைகள் சுமார் 100, இது இயலாத இடங்களில் இதைவிடச் சிறிய அமைப்பில் ஆனால் சுமார் 50 குடிசைகளுக்குக் குறையாத கட்டமைப்பில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடிசைக் கட்டமைப்பிலும் குடி தண்ணீர், தெரு விளக்கு, கழிவிட வசதிகள் போன்ற அடிப்படை அமைப்புகளும் வசதிகளும் அமைக்கப்படுவதுடன் பள்ளிக்கூடம், சமுதாய நல மன்றம் இரண்டிற்கும் பயன்படும் கட்டிடம் ஒன்றும் கட்டப்படும். இவற்றிற்கான நிதியுதவி பொது நல நிறுவனங்களால் கொடையாக உவந்தளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. புயல், வெள்ளப் பகுதிகளில் தற்காலிகமாகப் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்படும் அவசியம் ஏற்படும் பொழுது, அவர்களுடைய குடிசைகள் புனரமைக்கப்படும் வரை தங்கியிருக்க தற்காலிகக் கொட்டகைகள் அமைக்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரிக் கொட்டகைகள் புதுக்கோட்டை மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர்ப் பகுதியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

23. புயல்கள் எப்போதோ ஒரு முறை ஏற்படுகின்றன என்றாலும், கடும் காற்றையும் மழையையும் தாங்கக்கூடிய வலுவுள்ள பெரிய சமுதாயப் பாதுகாப்புக் கூடங்கள் கடற்கரைப் பகுதிகளில் தேவையானவை, இன்றியமையாதவை என்பது இப்புயலின் விளைவுகளிலிருந்து தெரிய வருகிறது. நெருக்கடிக் காலங்களின் பொழுது இவை அகதிகள் தங்குமிடமாகவும் மக்கள் கூடுமிடமாகவும் பயன்படும். ரூபாய் ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் வரை மதிப்புள்ள வலுவான கட்டிடம் ஒவ்வொரு

சமுதாயப் பாதுகாப்புக் கூடத்துக்கும் முதல் கட்டமாகக் கட்டப்படவிருக்கிறது. சாதாரண காலங்களில் கிராம மக்களுக்கு முதியோர் கல்வித் திட்டத்திற்காகவும், சில இடங்களில் மாணவர்களுக்குப் படிக்கவும், சில இடங்களில் கிராம மக்கள் ஒன்று கூடி தங்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசவும் இக்கூடங்கள் பயன்படுத்தப்படும். இப்பாதுகாப்புக் கூடங்கள் கட்ட பொது நலத் தொண்டில் ஆர்வமுள்ள நன்கொடையாளர்களிடமிருந்து தாராளமாக நன்கொடைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

24. வேளாண்மையைப் பொறுத்தவரையில், தொடர்ந்து நீரில் மூழ்கியிருக்கக்கூடிய நிலையிலுள்ள, மிகவும் நீர் தேங்கியுள்ள பகுதிகளில் பயிர்கள் அதிக அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன. 2 இலட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் வீழ்ந்துவிட்டன. வாழைத் தோட்டங்கள் கணிசமான அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அறுவடைக்குத் தயாராயிருந்த குறுவைப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தங்களால் இயன்ற அளவிற்கு இழப்பைத் தவிர்க்கும் பொருட்டு புயல் அடித்து ஓய்ந்த உடனே உழவர்கள் குறுவை அறுவடை செய்தபோதிலும், தவிர்க்க முடியாத அளவிற்கு விளைச்சல் மிகக் குறைவாக இருக்கும். காவிரி-கொள்ளிடம், பாசன முறையின் கீழ்ப் பாசனம் பெறும் இந்த மூன்று மாவட்டங்களில் 7 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு அதிகமாகவும், ஏரிப் பாசன முறையின் கீழ்ப் பாசனம் பெறும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏராளமான பரப்பளவிலும் சம்பாப் பயிர்கள் விளைந்து வந்தன. நெடு நாட்களாகத் தண்ணீர் தேங்கியிருந்ததன் காரணமாக நைட்ரஜன் இரசாயன உரம் போட்ட பிறகுங்கூட பயிர்கள் பாதிக்கப்படும். பயிர்களின் வயதுக்கேற்ப, புன்செய் பயிர்களின் விளைச்சல்கூட பல்வேறு அளவுகளில் பாதிக்கப்படும் நிலையிலுள்ளன. இந்நிலையில் மதிப்பிடுவது கடினமாக இருந்தபோதிலும், விளைச்சல் கணிசமான அளவிற்குக் குறையும் என்பதை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. குறிப்பாக பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பகுதியில் பருத்திப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் தண்ணீர் தேங்கியிருந்தமையால் எல்லாப் பகுதிகளிலும் வேர்க்கடலை மகசூலும் பாதிக்கப்பட்டுள்ளது. பயிர் இழப்பை ஈடு செய்ய முடியாது என்பது உண்மையே. இருந்தாலும், அரசு சேதத்தைக் குறைப்



பதற்கும், பயிர் முழுவதும் சேதமடைந்துள்ள இடங்களில் புதிதாகப் பயிர்களைச் சாகுபடி செய்யவும் உதவியளிக்கும் வகையில் உற்பத்திக்கு ஊக்கமளித்துள்ளது. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாகவோ, நீண்ட காலக் கடன்களாகவோ மாற்றுவதோடு, குறுவைப் பயிருக்கு அடுத்து பயிரிடப்படும் தாளடிப் பயிருக்கான நாற்றுகளைப் பயிரிடவும் முழுவதும் சேதமடைந்துவிட்ட சம்பாப் பயிரைப் பொறுத்தமட்டில் புதிதாகப் பயிரிடவும் சிறு உழவர்களுக்கும் ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கும் இலவசமாக விதைகள் வழங்கப்படும். சிறு உழவர்களுக்கு அந்தப் பயிருக்கான உரங்களுக்கு 25 சதவீத உதவித் தொகையும், பாதிக்கப்பட்ட சம்பாப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 சதவீத உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. பயிர் நோய் அதிக அளவு ஏற்படக்கூடும் என்பதைக் கருதி மாநிலம் முழுவதும் 25 சதவீத உதவித் தொகையுடன் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்படும். மணல் அடித்துப்போன நிலங்கள் மணலடித்துத் தூர்ந்து போன கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணி சிறு உழவர்களுக்கு அரசுச் செலவில் செய்து தரப்படும். ஆனால், பிறருக்கு இது தொடர்பாக 50 சதவீத உதவித் தொகை வழங்கப்படும். சிறு உழவர்களுக்கு தென்னம் பிள்ளைகளை இலவசமாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள அல்லது இழப்பு ஏற்பட்டுள்ள கரும்பு, வாழை பயிரிடப்பட்ட பகுதிகளுக்கு, அவற்றை மீண்டும் பயிரிடுவதற்கு உதவித் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வழங்கப்படும் இவையெல்லாம், பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, தண்ணீர் தீர்வை. உள்ளூர் செஸ், அரசுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் சேரவேண்டிய ஏனைய தொகைகள் ஆகியவை தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி செய்யப்படுவர்களின் விஷயத்தில் நிலுவைத் தொகை வசூலும், தக்காவிக் கடனின் நடப்புத் தவணைத் தொகை வசூலும், அடுத்தாண்டுக்கு ஒத்திப்போடப்படும்.

25. தலைமைப் பொறியாளர் (பாசனம்), தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணிகள்) தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைகள்) ஆகியோருக்கு, 30—6—1978-க்கு முன்னர் உடைப்புக்களை அடைத்தல், சாலைகளைப் பழுது பார்த்தல் போன்ற பணிகள் தொடர்பான செலவைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பாசனத் துறை தொடர்பான பணிகளுக்குத் தனித் தலைமைப்

பொறியாளர் (பாசனம்) ஒருவரையும், நெடுஞ்சாலைகள் கிராமப் பணிகள் துறை தொடர்பான பழுது பார்க்கும் பணிகளுக்குப் பொறுப்பேற்பதற்காக தனித் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) ஒருவரையும் நியமிக்கவும் அரசு அனுமதித்துள்ளது. 30—6—1978-க்குள் பணிகளை முடிப்பதற்கு இயலும் பொருட்டு, கோட்ட உதவிப் பொறியாளர்கள் (நெடுஞ்சாலைகள்), நிர்வாக உதவிப் பொறியாளர் (பாசனம்). உதவி இளநிலைப் பொறியாளர், தொழில் நுட்ப அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் அடங்கிய பணியாளர்களை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டுக்கும் 1978 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்கும் கூடுதலாக சிமிட்டி ஒதுக்குமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டதன்பேரில் 31—12—1977 உடன் முடிவடைந்த காலாண்டுக்குச் சிறப்பு ஒதுக்கீடாக 4.50 இலட்சம் டன் சிமிட்டியை இந்திய அரசு வழங்கியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள மாநில அரசுப் பணியாளர்களுக்கு 250 ரூபாய் என்ற உயரளவிற்கு உட்பட்டு ஒரு மாத அடிப்படைச் சம்பளம் (வட்டியின்றி) முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இது 10 மாதத் தவணைகளில் திருப்பி வசூலிக்கப்படத் தக்கதாகும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் வெள்ளத்தால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் விடுத்த விண்ணப்பம் கொடுப்பதின் பேரில் அவர்களுக்குக் கூடுதல் அகவிலைப் படியை ( ADADA ) முன்னதாகவே திருப்பிக் கொடுக்குமாறும் சென்னை மாநகர், அதன் எல்லையோரப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு 150 ரூபாய் வரையும் கூடுதல் அகவிலைப் படியை முன்னதாகவே திருப்பிக் கொடுக்குமாறும் துறைத் தலைவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சிறு மூங்கில்கள், சவுக்குக் கம்புகள், தென்னங் கயிறு போன்ற குடிசை அமைப்பதற்கான பொருள்கள் "இன்றியமையாத பொருள்கள்" என அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விலைகளை நிர்ணயிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மூங்கில்கள், சவுக்குக் கட்டைகள், காற்றில் விழுந்த யூகலிப்டஸ் மரக்கட்டைகள் ஆகியவற்றை விற்பதற்காக தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, மதுரை,



புதுக்கோட்டை மாவட்டங்களில் வனத் துறை விற்பனை நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் கழகத்தின் மூலமாகவும் நகராட்சி மூலமாகவும் சவுக்குக் கம்புகளும் மூங்கில்களும் விற்பனை செய்யப்படுகின்றன. குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றவும், சாகுபடிக்குப் புதிதாகக் கடன்களை வழங்கவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவு வங்கிகளின் தனி அதிகாரிகளுக்குக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கட்டளை பிறப்பித்துள்ளார். மீனவர்களுக்கு ரூ. 1.33 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் சேதமுற்ற வலைகள், படகுகள் ஆகியவற்றைப் பழுது பார்க்கவும், அவற்றிற்குப் பதிலாக புதிய வலைகள், படகுகள் வாங்கவும், 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உதவி வழங்கப் பட்டுள்ளது :—

பணி நிலையமாகப் பயன்படுத்தப்பட்ட வீடுகள் சேதமடைந்திருந்தால், ஒவ்வொரு வீட்டிற்கும் 200 ரூபாய் உதவித் தொகையும், 300 ரூபாய் கடனும் வழங்கப்படும். சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்படும் 200 ரூபாய் உதவித் தொகையும் இத் தொகையில் அடங்கும். சேதமடைந்த தறிகளுக்கும், துணைப் பாகங்களுக்கும் தறி ஒன்றுக்கு ரூ. 125 உதவித் தொகையாக வழங்கப்படும். புயலால் பாதிக்கப் பட்டோரனைவருக்கும், அவர்கள் வீடிழந்து குடிசையைப் புதுப்பிக்க அரசின் மானியத் தொகை அளிக்கப்பட்டிருந்தால், வேறு வகையில் இனமாக அரசு இருப்பிலிருந்தோ அல்லது கருணையுள்ளம் படைத்தோரிடமிருந்து பெற்ற நன்கொடையிலிருந்தோ அரிசி வழங்கப்பட்டிருந்தாலும் கூட 5 கிலோ அரிசி இனமாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. இது மத்திய அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வழங்கிட விசேடமாக அனுமதித்த 5,000 டன் அரிசியிலிருந்து வழங்கப்படும். இதன் செலவுத் தொகையை மத்திய அரசின் வேளாண்மைத் துறை ஏற்றுக் கொண்டுள்ளது. நிவாரணப் பணிகளை விரைவாக நிறைவேற்ற, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தேவையான அளவுக்குக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்க

விரைந்து அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நிவாரண, புதுவாழ்வு நடவடிக்கைகளுக்காக மாநில அரசு ரூ. 100 கோடி என்ற கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கியுள்ளது.

26. வரலாறு காணாத இந்த இயற்கை சீற்றத்தின் விளைவாக மாநில அரசுக்கு மதிப்பிட்டுச் செலவு நிலையில் ஏற்பட்டுள்ள மொத்தப் பொறுப்பும், மீட்பு, நிவாரணம், குடியமர்த்துதல், புதுவாழ்வு ஆகியவை தொடர்பாக ஏற்பட்டுள்ள இழப்பும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (1) கருணை உதவி | |
| (2) பொது சொத்துக்கள் மீட்பு | 4.98 |
| (3) குடிசைகள், வீடுகள் கட்ட உதவி | 67.85 |
| (4) குடியானவர்களுக்கு உதவி | 25.00 |
| (5) மீனவர்களுக்கு உதவி | 9.88 |
| (6) நெசவாளர்களுக்கு உதவி | 1.35 |
| (7) கூட்டுறவுக் கடனுதவி நிறுவனங்களுக்கு வழிவகை முன்பணம் | 1.00 |
| (8) வருவாய் இழப்பு, நிலுவையாயுள்ள கடன்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு இழப்பீட்டுத் தொகை. | 8.00 |
| | 10.00 |
| மொத்தம் ரூபாய் | 128.06 |

27. நிதிநிலையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு ஒரு பற்றுக்குறை மாநிலமாகும். நடப்பாண்டில் தமிழ்நாட்டின் திட்டத்திலுள்ள பற்றுக்குறைக்கு நிதியுதவி செய்வது குறித்து 27—10—77 அன்று மத்திய நிதி அமைச்சருடன் முதலமைச்சர் விவாதித்தார். நமது திட்டத்தில் ஏற்பட்டுள்ள பற்றுக்குறையைத் தகுந்த மத்திய நிதி உதவியினைப் பெற்று நிறைவு செய்வது குறித்த மத்திய அரசின் முடிவை மாநில அரசு எதிர்நோக்கிக் கொண்டிருக்கையில் அண்மையில் ஏற்பட்ட புயல்,



வெள்ளத்தால் திடீரென மேலும் அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டுள்ளன. இது மாநில அரசின் நிதி நிலைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது.

28. இம் மாநிலத்தில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய ஆய்வுக் குழு ஒன்று 27—11—77-லிருந்து 2—12—1977 வரை சுற்றிப் பார்த்தது; செலவு முழுவதையும் செய்வதற்காக ரூ. 128 கோடி மத்திய உதவியைக் கேட்டு இக் குழுவிடம் வேண்டுகோளொன்று கொடுக்கப்பட்டது. மத்திய அரசு தொடக்கத்தில் திட்ட உதவி முன்பணமாக ரூ. 5 கோடி கொடுத்தது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட ரூ. 5 கோடியையும் சேர்த்து இம் மாநிலத்திற்கு திட்ட உதவி முன் பணமாக ரூ. 29.31 கோடி இப்பொழுது மத்திய அரசு அனுமதித்துள்ளது. இது நமக்குத் தேவைப்படக் கூடிய தொகையில் ¼ பகுதிக்கும் குறைவு.

### தேவையான சாதனம்.

29. வானிலை எச்சரிக்கை அறிவிப்புக் கொடுப்பதற்கான சாதனம் நம்மிடம் நல்ல முறையில் உள்ளது. ஆயினும் இதனை மேலும் நவீன முறையில் திருத்துவது அவசியமாகும். வெள்ள நீரோட்ட அளவுகளும் கவனத்துடன் கண்காணிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மணல் மேடிட்ட நிலங்களில் உள்ள மணலை நீக்கிவிட்டுச் சீரமைப்பதற்குப் பயன்படுத்தப்படுவதற்காக 90-லிருந்து 100 பரித் திறன் கொண்ட உயர்சக்தி புல்டோசர்களைப் பெற்றிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பல்வேறு காரியங்களுக்குத் தேவைப்படக்கூடிய சாதனங்கள் (வெளிநாட்டுச் சாதனங்கள் உட்பட) குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

I ரேடார் ஏற்பாடுகளும் வானிலை முன் அறிவிப்புகளும் சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்காக.

1. ரேட்ஸ் சாதனம் (Rats) — 3 யூனிட்டுகள்.
2. பல்ஸ்டு டாப்ளர் ரேடார் (Pulsed Doppler Radar) — 1 ஏற்பாடு.

3. வானிலை ஆராய்ச்சி தகவல் சேகரிப்பதற்கான தானியங்கி ஏற்பாடு. — 4 யூனிட்டுகள்.

4. ஆட்டோமேட்டிக் பிக்சர் டிரான்ஸ்மிஷன் சாதனம் — 1 யூனிட்.

(Automatic Picture Transmission Equipment.)

## II வெள்ளப் பெருக்கைக் கணக்கிடுதல்.

(மாநில பாசனத்துறைக்கு.)

1. 24 மணி நேரமும் தானாக இயங்கும் மழையளக்கும் கருவி. — 100
2. தண்ணீர் மட்டத்தைத் தானாகப் பதிவு செய்யும் கருவிகள். — 50
3. உயர்திறனுள்ள ஆழ் கிணறு விசைக் குழாய்கள் — 20
4. தொடர்ச்சியான நீர்ப்பெருக்கைத் தானாகவே பதிவு செய்யும் கருவிகள். — 20
5. நீர்ப்பெருக்கைக் கணக்கிடும் தனி கருவிகள். — 50

## III தகவல்கள்.

(மாநிலக் காவல் துறையினருக்கும் பாசனத் துறையினருக்கும்.)

1. 5 ஒலி அலைச் சாதனம் பொருத்தப்பட்ட U.H.F. நிலையான டிரான்ஸ் ரிசீவர்கள். — 40
2. இயங்கும் U.H.F. டிரான்ஸ் ரிசீவர்கள். — 100
3. மான்பேக் U.H.F. டிரான்ஸ் ரிசீவர்கள் — 200



## புல்டோசர்கள்.

(மாநில வேளாண்மைத் துறைக்கு.)

1. தண்ணீர் விசையால் இயங்கும் புல்டோசிங் இணைப்புகள், பிரிக்கும் இணைப்புகள், பெரிய வட்டத்தகடு 'பிளோஸ்' ஆகியவற்றுடன்: குளிர்ந்த தண்ணீர், டீசல் என்ஜின் ஆகியவற்றால் இயக்கும் சக்தி அளிக்கும் 90 முதல் 100 வரை பரித்திறனுள்ள பல்சக்கரவகை புல்டோசர்கள். — 10 யூனிட்டுகள்.

2. எரிபொருள்-விசைக் குழாயின் உதிரிப் பாகங்கள், குழாய் நுனிகள், வடிகட்டும் மூலக்கூறுகள், தண்ணீரால் இயங்கும் பம்புகள், சக்தியை எடுத்துச் செல்லும் பாகங்களில் கட்டுப்படுத்தும் திருப்புவிசை, தனிப் பணியை மேற்கொள்வதற்காக முழுமையான கருவிகளைக் கொண்ட (சாதாரண கருவிகள் அல்ல) என்ஜின் உதிரிபாகங்கள் ஆகியவை உட்பட, மேற்சொன்ன இயந்திரங்களுக்கான துரிதமாகச் செயல்படும் உதிரிப் பாகங்கள். — மேலே குறிப்பிடப்பட்டுள்ள 10 யூனிட்டுகளுக்கு ஐந்து ஆண்டு கால அளவு வரை போதுமானது.

இந்த சாதனங்கள் வழங்கப்படுவதற்காக மத்திய அரசிடமிருந்து உதவி நாடப்பட்டுள்ளது.

## நகரப் பெருமக்கள் குழுக்கள்

30. நிவாரண ஆணையாளர் நாகப்பட்டினத்திற்கு வந்தவுடன் சேதத்தை மதிப்பிட்டு நிவாரண பணிகளைத் தொடங்குவதற்காக அதிகாரிகள், பொது மக்கள், பல்வேறு அரசியல் கட்சிகள், உள்ளாட்சி மன்றங்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் கூட்டத்தை கூட்டினார்.

[1977 டிசம்பர் 29

31. ஆளுநர், 23—11—1977 அன்று நகரப் பெருமக்கள் கூட்டத்தைக் கூட்டினார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதில் பொது மக்களும், கொடையாளிகளும் தீவிரப் பங்கேற்று, பணத்தையும் பொருள்களையும் வாரி வழங்குமாறுக் கேட்டுக் கொண்டார். வெள்ள நிவாரண நிதிக்கு நம் நாட்டிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் மக்கள் நன்கொடைகளை வாரி வழங்கினர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ. 3 கோடிக்கு மேல் சேர்ந்துள்ளது. தலைமை அமைச்சர் நிவாரண நிதியினின்று அளிக்கப்பட்ட 41 லட்சமும் இதில் அடங்கும். மேலும் துணிகள் உணவுப் பண்டங்கள், போர்வைகள் ஆகியவையும் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கேரள மாநிலமும் 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேட்டிகள், புடவைகள் ஆகியவற்றை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மனமுவந்து வழங்கியுள்ளது.

32. முதலமைச்சர் 6—12—1977 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். கூட்டத்தில் அந்தந்த கட்சிகளின் பிரதிநிதிகள், மாநில அரசு உரிய காலத்தில் எடுத்த நிவாரணப் பணிகளை மனமாரப் பாராட்டிப் பேசினர். கீழ்க்காணும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி அதனை முதலமைச்சர் தலைமை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார் :—

“1977 ஆம் ஆண்டு அக்டோபர்—நவம்பர் மாதத்தில் வெள்ளத்தாலும், புயலாலும் ஏற்பட்ட உயிர் சேதத்திற்கும், பொருள் சேதத்திற்கும், மத்திய அரசு கவலை தெரிவித்து தமிழ்நாட்டின்பால் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதற்கு நன்றி தெரிவிப்பதோடு பரிவோடு நிலைமையைப் பரிசீலித்து 1977 நவம்பர் 27 முதல் டிசம்பர் 2 ஆம் நாள் வரை, வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்ட மத்தியக் குழுவிற்கு, மாநில அரசு கொடுத்துள்ள தகவல்களின்படி தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் நிதி உதவி, முழுவதையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் இன்று (6—12—1977) ஏற்பாடு செய்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.”



1977 டிசம்பர் 29]

மத்திய அரசிடம் நாம் கேட்டுள்ள நிதி உதவியை விரைவில் வழங்குமாறு தலைமை அமைச்சரை நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தின்படி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருக்கும் நகரப் பெருமக்கள் குழு மாநில அளவிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாவட்ட அளவிலும், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகள் அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுவதோடு பொது மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மக்களின் குறைகளை நிறைவேற்றப் பாடுபடும்.

33. நகரப் பெருமக்கள் கூட்டத்திலும், அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்ட பயனுறுக் கருத்துக்களை கவனத்தில் கொண்டு நிவாரணப் பணிகளும், மறுவாழ்வுப் பணிகளும் மேலும் சீரமைக்கப்பட்டன.

## முடிவுரை.

34. புயல், வெள்ளம் ஆகியவற்றை எதிர்பார்த்து, உரிய காலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வெள்ளத்திற்குப் பின்னர் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் மாநில அரசு அல்லும் பகலும் அயராது அரும்பணி ஆற்றி வந்ததை, குடியரசுத் தலைவரும், தலைமை அமைச்சரும், மத்திய குழுவினரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். இந்த நெருக்கடியான நேரத்தில் மாநில அரசுக்கு நம்பிக்கையும், புத்துணர்வையும் அளித்து உறுதுணையாக நின்ற மேதகு ஆளுநர். திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்கு, மாநில அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. தமிழ்நாட்டு மக்களும் பிற மாநில மக்களும் இங்கு நிவாரண மீட்புப் பணிகளில் தீவிர, பங்கேற்கத் தூண்டுகோலாக இருந்தார். நகரப் பெருமக்கள் கூட்டத்தை அவர், உடனடியாகக் கூட்டி நிவாரண நிதிக்கு தாராளமாக வாரி வழங்குமாறுக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நிதி குவிந்தது. இவர் தற்பொழுது

மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கும் டில்லிக்கும் சுற்றுப்பயணம் செய்து, தமிழ் நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாராளமாக நன்கொடை அளிக்குமாறு அங்குள்ள மக்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டார். குஜராத் நிவாரணச் சங்கத்தின் நிர்வாக அறங்காவலராக இருக்கும் நம் ஆளுநர் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு கடற்கரை நெடுக பாதுகாப்புக் கூடங்களை அமைத்துக் கொடுக்கும் பணிக்கு முதன்முதலாக நன்கொடை வழங்கினார்.

35. நமது மாநில முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், உரிய தருணத்தில், உடனடியாக நடவடிக்கைகள் எடுத்ததனையும், பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களையும், பிரச்சனைகளையும் தீர்க்க அவர் மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான அணுகுமுறையினையும், அவர் அழைப்பு விடுத்தவுடனேயே வியக்கத்தக்க விரைவும் துணிவும் உறுதியும் பூண்டு செயல்பட்ட நிர்வாகத்திடம் அவர் உருவாக்கிய புது எழுச்சியையும் தமிழக மக்கள் என்றும் நீங்காத நினைவில் கொள்வர்.

36. துயர் துடைப்பு, மறுவாழ்வுப் பணிகள் அரசின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து மிகச் சிறந்த முறையில் ஆற்றிய கூட்டு நடவடிக்கையாகும். அரசு துறைகள் யாவும் மிகச் சிறப்பான முறையில் பணி புரிந்தன. இந்திய அரசின் பாதுகாப்புப் படைகளும், தங்கள் விமானங்கள், சிறு படகுகள், மோட்டார் வண்டிகள், பயிற்சி பெற்ற வல்லுனர்கள் ஆகியோரை அளித்து மிகத் தீவிரமாக உதவி புரிந்தது. இராணுவத்தினர் ஆற்றிய பணி மிக உயர்ந்த அளவில் பாராட்டத்தக்க பணியாகும். அன்றியும், துயருற்ற மக்களுக்குத் துணை புரிய தாங்களே ஆட்களையும் பொருள்களையும் திரட்டிப் பணியாற்ற முன்வந்த தனித் தொண்டு நிறுவனங்கள் ஆற்றிய பங்கும் பெரும் புகழுக்கு உரியதாகும். வரலாறு காணாத அளவில் ஓர் எல்லைக்கும் கட்டுக்கும் உட்படாத வகையில் நிகழ்ந்த இப்பெரும் துயர் நிகழ்ச்சியின்போது கொடுமையை எதிர்த்துப் போரிட்டு வெல்லுவதில் பொது மக்களும் குறிப்பிடத்தக்க வகையில் ஆற்றலும் துணிவும் காட்டிச் செயல்பட்டனர். இவையனைத்தும்



இந்த அசாதாரணமான, மிகக் கடுமையான நிலைமையை சுறுசுறுப்புடனும் ஆக்கப்பூர்வமாகவும் வெற்றிகரமாகவும் சமாளிக்க மாநில அரசுக்கு உதவின.

37. தமிழகத்தைச் சின்னாபின்னப்படுத்திய இந்த இயற்கைச் சோதனைகள் நிறைந்த கொடுமைகளை, இன்னலை வென்றிட இன்றியமையாத ஒரு துணையாக அமைந்தது அனைத்து அரசியல் கட்சிகள் பொது மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பே என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொது மக்களுக்கும் அரசு இதன் மூலம் தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1977 டிசம்பர் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### திரைப்படத் தொழில் குறித்த ஆய்வு.

*61. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரைப்படத் தொழிலை ஆராய்ந்து அறியவும் கேளிக்கை வரியைச் சீராக விதிக்கவும் முந்தைய அரசால் அறிவிக்கப்பட்ட Film Enquiry Committee தனது அறிக்கையை அரசிடம் தந்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. கி மனோகரன் : ஆம்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே; இந்த பிலிம் இண்டஸ்ட்ரி என்க்வயரி கமிட்டியின் சிபாரிசின்படி இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற கம்பௌண்டிங் முறையில் விதிக்கப்பட்டிருக்கிறதா ? அவர்கள் 1973-74 ஆம் ஆண்டின் வருவல் அடிப்படையில் கம்பௌண்டிங் முறை கொண்டு வரப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்களா என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே அரசால் நியமனம் செய்யப் பெற்ற பிலிம் இண்டஸ்ட்ரி என்குவயரி கமிட்டி சில கருத்துக்களை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது. அவைகளைப் பற்றித் தெளிவாக அவர்கள் சில கருத்துக்களை

வைத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களில் சில ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகவும், சில ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவும் இருந்தன. பொதுவாக கம்பௌண்டிங் சிஸ்டம் ஒன்றைக் கொண்டு வருவது என்று இந்த அவையில் நான் அறிவித்தது கனம் உறுப்பினர் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று நம்புகிறேன். அது குறித்து ஒரு மசோதா விரைவில் தாக்கல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன் :** ஏற்கனவே இதுபோன்ற கம்பவுண்டிங் முறையிலே மொத்த வசூலிலே 10 சதவீதம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் கிராமப்புறங்களில் டூரிங் திரை அரங்குகள் பாதிக்கப்பட்டன. இந்தக் கமிட்டி சிபாரிசுக்குப் பிறகு மொத்த வசூலின் அடிப்படையில் 15 சதவீதம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் கிராமப்புறங்களில் உள்ள டூரிங் சினிமாக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பற்றி அரசு மறு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல் விரைவில் ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட இருக்கின்றது. அந்த மசோதாவில் கனம் உறுப்பினர் கேட்கின்ற துணைக் கேள்விகளுக்கு விளக்கம் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பண்ணை கே. சேதுராம் :** வெளி மாநிலங்களில், படம் எடுக்கும்போது மானியம், கடன் போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றது. கர்நாடகத்திலே ஒரு லட்சம் ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது. அது மாதிரி நம்முடைய மாநிலத்திலும் கொடுக்க வேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லையென்றாலும் இது குறித்தும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன் :** இந்தப் படத் தொழில் மேலும் நசித்துவிடாமல் இருக்க, படத் தயாரிப்பாளர்கள், பட உரிமையாளர், விநியோகஸ்தர், திரையரங்கு உரிமையாளர்





ஆகியவர்களைக் கலந்து சில கருத்துக்களை வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அது குறித்தும் பரிசீலிக்கப் படும்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த பிலிம் இண்டஸ்ட்ரி என்குவயரி கமிட்டி, தரமான படங்களைத் தயாரிப்பவர்களுக்கு மானிய உதவி அளிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** என்குவயரி கமிட்டி அப்படி ஒன்றும் தெரிவிக்கவில்லை. தரமான படம் தயாரிப்பவர்களுக்கு அரசு மானியம் வழங்கும் என்று ஏற்கனவே தெரிவித்ததை நினைவூட்டுகிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, பிலிம் இண்டஸ்ட்ரி என்குவயரி கமிட்டி வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கிறது, தியேட்டர்களும் அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு வரி ஏய்ப்புச் செய்கிறார்கள், அரசாங்கமே டிக்கெட் அச்சடித்து விநியோகித்தால் இதைத் தடுக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்களா ? இப்போது போட்டிருக்கிற கம்பவுண்டிங் முறைச் சட்டத்தினால் டூரிங் சினிமா தியேட்டர்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தச் சட்டத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு எனது பதில்: இதுகுறித்து விரிவான மசோதா ஒன்று விரைவில் இந்த அவையில் தாக்கல் செய்யப்பட விருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பொழுது இதுகுறித்து விரிவாக விவாதிக்கலாம்.

**திரு. மு. அரங்கநாதன் :** தலைவரவர்களே, டூரிங் சினிமாக் களுக்கு இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிற லைசென்ஸ் முறையை ஐந்து ஆண்டுகளாக உயர்த்த உத்தேசம் உண்டா ?

இரண்டாவதாக, இப்பொழுது 15 சதவீதமாகவுள்ள வரியை 10 சதவீதமாகக் குறைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல், திருப்பித் திருப்பி அதையே சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். விரைவில் மசோதா தாக்கல் செய்யப்படவிருக்கிறது. அப்பொழுது அதைப் பற்றி விரிவாகப் பேசலாம்.

*** 62. வினு—திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் இந்திய பிலிம் வர்த்தக சபை கேளிக்கை வரி கூடுதல் சர்சார்ஜ் நீக்கவும், மற்றும் திரைப்பட வளர்ச்சிக்கு உதவிகள் செய்யக் கோரியும், அரசுக்கு விண்ணப்பம் 1977 ஜூலை, ஆகஸ்டில் கொடுத்துள்ளதா ?

(ஆ) அதன் பேரில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** (அ) ஆம்.

(ஆ) கேளிக்கை வரிகளைக் குறைக்க கோரி 10—8—77 தேதியிட்ட விண்ணப்பம் ஒன்று மட்டும் தென் இந்திய வர்த்தக சபையிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. 25—7—77 இல் நிதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது நிதி அமைச்சர் அறிவித்தபடி, 19—9—77 முதல் கூடுதல் மேல் வரி குறைப்பு செய்யப் பட்டுள்ளது. மேலும் 2—12—77 இல் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டப் பிரகாரம் கம்பவுண்டிங் முறையும் அமலுக்கு கொண்டு வரப்படுகிறது.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் தலைவரவர்களே, சினிமாத் துறைக்கு வரியைக் குறைத்திருப்பதற்கு மகிழ்ச்சி. அதேபோல், மற்ற மாநிலங்களில், அண்டை மாநிலங்களுக்குச் சென்று படப்பிடிப்புகள் நடத்தாமல், அதே மாநிலங்களில் நடத்துகிறவர்களுக்கு, குறிப்பாக, கர்நாடக அரசு ரூ. 1 இலட்சத்தை, அந்தத் தொழிலை ஊக்குவிக்கக் கொடுப்பதாகக் கூறுகிறார்களே, அதேபோல், நம்முடைய



தமிழகத்திலும் நமது நாட்டிலேயே அப்படிப்பட்ட படப்பிடிப்பு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பார்களானல் அவர்களுக்கு, ஊக்கமாகப் படம் தயாரிக்க, அரசு ரூ. 1 இலட்சம் கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** இந்த யோசனை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**கோவை மாவட்டத்தில் புதிய வருவாய்க் கோட்டம்.**

***163. வினு—திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள பல்லடம், அவினுசி ஆகிய இரு வட்டங்களை இணைத்துத் தனி வருவாய் கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. நடராசன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கோவை வட்டத்தில், கோவை, அவினுசி ஆகிய பகுதிகளும், பொள்ளாச்சி வட்டத்தில் பல்லடம், பொள்ளாச்சி ஆகிய பகுதிகளும் இணைந்திருக்கிற காரணத்தினல் கோவை கோட்டத்தில் இருக்கிற அவினுசியிலும், பொள்ளாச்சி கோட்டத்தில் இருக்கிற பல்லடம் பகுதியிலும் அங்குள்ள மக்கள் கோட்டாட்சி அலுவலர் பணியைப் பெறுவது மிகக் கடினமாக இருக்கிற காரணத்தால், அரசு இனிமேலாவது அது பற்றிப் பரிசீலிக்குமா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஈரோடு நகரத்தில் ஏற்கனவே மாவட்ட அரசு அலுவலகங்கள் நிரம்ப இருப்பதாலும், போக்குவரத்து சாதனங்களுக்கு வசதியாகவும், தண்ணீர் விநியோக வசதி உள்ளதாகவும் இருப்பதாலும், தொழில் வளர்ச்சிக்கான போதுமான

சாத்தியக்கூறுகள் இருப்பதாலும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் கிழக்கு வட்டங்களுக்கு ஈரோடு நகரம் தலைமையிடமாவதற்குத் தகுதியாக உள்ளது என நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

இன்னொரு விளக்கமும் தெரிவிக்க விரும்புகிறேன். 1976 ... மாதம் 7-ம் தேதி, 8-ம் தேதிகளில் புது டில்லியில் நடைபெற்ற தலைமைச் செயலாளர்கள் மாநாட்டிலும் டிசம்பர் 9, 20 தேதிகளில் நடைபெற்ற பணியாளர்--நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்து மாநிலச் செயலாளர்கள் மாநாட்டிலும் பெரிய அளவிலான மாவட்டங்களைச் சிறிதாகவும் நிர்வகிக்கத்தக்க பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும் பரிவுரை செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பரிந்துரைகள் தனியாக ஆய்வு செய்யப்பட உள்ளன.

இந்த மாநிலத்தின் மாவட்டங்கள் சீரமைக்கப்படுவது அவசியமா எனவும் அவசியமெனில் ஏழாவது நிதிநிலைக் குழுவின் பொறுப்பிற்குத் தக்க தருணத்தில் ஒப்படைக்க வேண்டுமெனவும் மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்தும் தனியாக ஆராயப்பட உள்ளது. ஆகவே, பெரிய மாவட்டங்களைப் பிரிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லையென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரை, புது டில்லியில் நடைபெற்ற தலைமைச் செயலாளர்கள் மாநாட்டுப் பரிந்துரை, அனைத்து மாநில பணியாளர்—நிர்வாகச் சீர்திருத்தச் செயலாளர்கள் மாநாட்டுப் பரிந்துரையான நிர்வாக வசதிக்காக பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது குறித்துப் பரிசீலிக்கும் நேரத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பிரிப்பது குறித்தும் பரிசீலிக்கலாம். அதன் தொடர்புடைய மற்றப் பிரச்சினைகளான கோட்டாட்சிப் பகுதியைப் பிரித்தல், துணைத் தாலுக்காக்களைத் தாம் உயர்த்துதல் ஆகியவைகளை அப்பொழுது பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## கிராம உத்தியோகஸ்தர்கள்

*64 வினா—திரு. ஒ. சோ. வேலுசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர அரசு அலுவலர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) பகுதி நேர கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக முழு நேர அரசு அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று நிர்வாக சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்தது. அப்பரிந்துரையை அரசு பரிசீலித்தபின், தற்பொழுது இருந்துவரும் அமைப்பே தொடரலாமென்று தீர்மானித்தது.

(ஆ) கிராம அதிகாரிகளின் மதிப்பூதியம் சம்பந்தப் பட்டவைகளை மூன்றாவது ஊதியக் குழுவின் ஆய்வுக்காகவும், பரிந்துரைக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசு, இதற்கிடையில் ரூ. 5 மதிப்பூதியம் இடைக்கால நிவாரணமாக கிராம அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது.

(முற்பகல் 9.10)

**திரு. ஒ. சோ. வேலுசாமி:** தலைவர் அவர்களே, இந்த நிர்வாக சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின்படி, கிராம கர்ணம், கிராம முன்சீப் ஆகிய இரண்டு பதவிகளையும் இணைத்து ஒரே பதவியாக ஆக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவது பற்றி, கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் ஏதேனும் கருத்து அறிவித்திருக்கிறதா? ஆம் எனில் அதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** சங்கத்தின் சார்பில் பல வேண்டுகோள்கள் விடப்பட்டிருக்கின்றன. அந்த வேண்டுகோள் களில் இதுவும் ஒன்று.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** தலைவர் அவர் களே, கிராம உத்தியோகஸ்தர்களில் சில பேர்கள் இப்போது இருக்கிற சம்பளத்தைத் தவிர வேறு எந்தவிதமான வருமானமும் தொழிலும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** ஏற்கனவே பே கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அங்கே அவர்கள் கோரிக்கைகளை எடுத்து வைப்பார்கள். அதற்குப் பிறகு அதையொட்டி என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ் தர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள்தான் கிங் பின் ஆக இருக்கிறார்கள். என்டையர் ஸ்டேட் ஸ்டாக்சருக்குக் 'கிங் பின்' ஆக இருக்கிறார்கள். எல்லா ரெக்கார்டுகளும் அவர் களிடத்திலே இருந்துதான் ஸ்டார்ட் ஆகிறது. அப்பேர்ப்பட்ட இம்ப்பார்ட்டன்ட் பொசிஷனில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் லஞ்சம் வாங்குவது 'பார்ட் ஆப் தேர் சேலரி'யாக இருக்கிறது. அது ரொம்ப வருஷமாக இருக்கிறது. அது சம்பளமாகவே மாறிப் போய்விட்டது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு பே கமிஷன் ரிப்போர்ட் வருகிற வரையில், அவர்கள் புல் டைம் ஆக பரிந்துரை செய்தாலும், ஒரு இன்டிரிம் ரிலீப் ஆக இந்த சிச்சுவேஷனில் கொடுக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களுடைய பிரச்சினையில் அரசுக்கு அனுதாபம் உண்டு. அவர்கள் கிங் பின்னுகவோ, அல்லது ஸ்பெஷல் பின்னுகவோ இருந்தாலும், அவர்களைப் பற்றி நிச்சய மாக அனுதாபத்தோடு கவனிக்கப்படும். அதே நேரத்தில் கிராம





அதிகாரிகள் பலர் அல்லது சிலர், அல்லது இடைப்பட்டவர்கள் அந்த அளவுக்கு லஞ்ச லாவண்ய ஊழலில் மாட்டியிருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டு, அதையும் கொஞ்சம் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே உள்ள தமிழக அரசு, நிர்வாக அமைப்பு முறைப்படி கிராம அதிகாரிகள்தான் குற்றங்களுக்கு வித்தாக இருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆகவே அவர்களை நீக்கி மாற்று வழிகாண அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தவறுகள் எங்கே நடந் தாலும் சரி அந்தத் தவறுகளைக் கண்டிப்பதில் இந்த அரசு தயக்கம் காட்டாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பண்ணை கே. சேதுராம்:** தலைவரவர்களே, வில்லேஜ் ஆபீசர்ஸ் ஹெரிடிடரி ஆக்ட் படி அந்த கிராம உத்யோகஸ்தர் களுக்கு அந்தப் பதவி நிரந்தரம் செய்யப்பட்டு விட்டது. அதனால் பரம்பரை பாத்தியத்தை கொண்டாடி வருகிறார்கள். தற்போது திறமையானவர்கள், படித்தவர்கள் வேலை இல்லாமல் இருப்ப தால், அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க அரசு அதைப் பரிசீலனை செய்து ஒரு சட்டம் கொண்டு வர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தூய நிர்வாகம் வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிற நமது தமிழக அரசு, நிர்வாகத்தில் அடித்தளத்தில் அத்தனை ரிக்கார்டு களையும் தயாரிக்கும் அந்தக் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு—உமாநாத் கூறியது போல்—ஒரு சாதாரண கிரிமினல் வழக்கு என்றால்கூட அதற்கு அவர்கள்தான் முதலில் அறிக்கை தயாரிக்க வேண்டும்—பொருளாதார நிலையை உயர்த்தினால் தான், நாம் எதிர்பார்க்கும் தூய நிர்வாகத்தை அடையமுடியும்.

ஆகவே, அந்தக் கிராம உத்தியோகஸ்தர்களின் பொருளாதாரம் உயருகிற அளவுக்கு, அதன் மூலம் அங்கே நடைபெறுகிற தவறுகளை—மாண்புமிகு முதலமைச்சர் கூட்டத்தில் கூட கூறப்பட்டது—நீக்கி தூய நிர்வாகத்தை ஏற்படுத்த உறுதுணையாக இருக்கும் வகையில், அவர்களுடைய ஊதியத்தை மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** ஏற்கனவே நான் இதற்குப் பதில் கூறிவிட்டேன் என்று கருதுகிறேன். அதை இந்த அரசு பரிசீலிக்கும்.

**திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராம அதிகாரிகள் ஒரே இடத்தில் இருந்து கொண்டு இருப்பதால், என்ன தவறு செய்தாலும் நமக்கு மாற்றம் கிடையாது என்ற காரணத்தால், அவர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள். ஆகவே, அவர்களையும் அரசு அதிகாரிகளை மாற்றுவது போல் மாற்ற அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கி. மனோகரன்:** இவைகளெல்லாம் பரிசீலனைக்கு உரியவைகள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. துரை கலியமூர்த்தி:** தலைவரவர்களே, தற்போது கிராம உத்தியோகஸ்தர்கள் எல்லாம் அந்த ஊரில் இருக்கும் பெரிய மனிதர்களாக இருப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்றும்போது, அவர்களுக்கு வயது நிர்ணயம் இல்லாமல் செய்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய வயதை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இந்தக் கேள்விக்கும் என்னுடைய பதில் பரிசீலனையில் இருக்கிறது.

### தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு சிறப்பு அங்காடிகள்

* 65 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—





தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் புதிதாகக் கூட்டுறவு சிறப்பு அங்காடிகளை திறந்திடும் செயற்குறிப்பு உள்ளது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** செயற்குறிப்பு எதுவும் இல்லை.

### புதுக்கோட்டை கூட்டுறவு போக்குவரத்து சங்கம்

* 66 **வினா—திரு. நா. சுந்தரராஜ்:** மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை கூட்டுறவு போக்குவரத்து பஸ் (P. C. T.) தொழிலாளர்கள் இச்சங்கத்திற்குக் கட்டியிருந்த செக்யூரிட்டி டிபாசிட் தொகைகளை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை கூட்டுறவு போக்குவரத்து சங்கம் கலைக்கப்பட்டு 21—1—1974-ல் கலைப்பு அலுவலரால் பொறுப்பேற்கப்பட்டது. இச்சங்கத்தின் ஆஸ்திகள் இன்னும் மீட்கப்படவில்லை. ஆஸ்திகள் மீட்கப்பட்ட பின்னரே பொறுப்புகளை திருப்பியளிக்க இயலுமாதலால் பொறுப்புகளை எப்போது திருப்பி அளிக்க இயலும் என்பதை தற்போது நிர்ணயிக்க இயலாமல் உள்ளது.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, அந்தச் சங்கம் ஏன் கலைக்கப்பட்டது? அதில் என்ன ஊழல் நடைபெற்றது என்பது அரசுக்குத் தெரியுமா? தெரிந்து இருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கம், 21—1—1974 அன்று கலைக்கப்பட்டு, கலைப்பு அதிகாரியால் பொறுப்பேற்கப்பட்டது. கலைக்கப்பட்டதற்கான காரணம், அதிலே நடைபெற்ற திருத்தமுடியாத கேடுகள்.

## கல்வராயன் மலையில் கூட்டுறவு வங்கி

*67 வினா—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கல்வராயன் மலையில் கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில்தான் கொத்தடிமைகள் 20 அம்சத் திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டனர். அப்படிப்பட்ட இடத்தில் விசேஷ கவனம் செலுத்தி, மேலும் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவரவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் முட்டம்பட்டி வள்ளிமலை போன்ற இடங்களில் ஏற்கனவே இயங்கிக்கொண்டு வருகின்றன. அந்தப் பகுதியில் இன்னொரு கூட்டுறவு சங்கம் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

## கரூர் வட்டத்தில் தெளிப்பு முறை பாசனத் திட்டம்

*68 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ல் திருச்சி மாவட்டம், கரூர் தாலுகாவில் தெளிப்பு முறை பாசனத் திட்டம் எங்கு எங்கு செயல்முறைப்படுத்தப் பட்டது?

(ஆ) இத்திட்டத்திற்கு இன்றுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளதா?



**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) 1971-ல் திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்காவில் தெளிப்பு முறை பாசனத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டம் 1972-ல் புகளூர் ஆற்று நீரேற்று பாசன கூட்டுறவு சங்க வாயிலாக 7,360 ஏக்கர் நிலங்களில் இரு கட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. முதல் கட்டத்தில் கோவிந்தபாளையம், தலவபாளையம், புஞ்சை புகளூர் பிரிவுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் 30—6—1976 வரை செலவிடப் பட்ட மொத்த தொகை ரூ. 131.85 லட்சமாகும்.

(இ) அரசு அமைத்த உயர்மட்டக்குழு ஒன்று இத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவது பற்றி பரிசீலித்து வருகிறது.

(முற்பகல் 9.20)

**திரு. செ. சதாசிவம்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாகச் செயல்படக் கூடிய விவசாயிகள் ஸ்பிரிங்க்லர் முறையில் செயல்படக் கூடிய சாத்தியக் கூறு இல்லை என்ற எண்ணத்தை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்களா? அதன் மேல் அரசு தக்க முடிவு எடுத்து, அதை நேரிடைப் பாசனமுறைக்குக் கொண்டு வருமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** அந்தத் திட்டம் தங்களுக்குத் தேவையில்லை என்று அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி அரசு இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. முடிவுகள் எடுத்தவுடன் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. கே. வடிவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி உயர்மட்ட கமிட்டி அதனுடைய ரிப் போர்ட்டை அரசுக்குக் கொடுத்துவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1977 டிசம்பர் 30

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** உயர் கமிட்டி இது வரையில் அறிக்கை எதையும் அரசுக்குத் தாக்கல் செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 69, வினா எண் 70 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## வள்ளுவர் கோட்டம்

* 69 வினா—திரு. து. புருஷோத்தமன். திரு. எஸ். கணேசன், திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வள்ளுவர் கோட்டத்தில் நாள் தோறும் வசூலாகும் சராசரி தொகை எவ்வளவு?

(ஆ) நாள் தோறும் வந்து பார்வையிடுகிற பார்வையாளர் களின் சராசரி எண்ணிக்கை என்ன?

(இ) வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை பார்வையாளர் கட்டணம் மூலம் வசூலாகியுள்ள மொத்த தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்:—**

(அ) வள்ளுவர் கோட்டத்தில் நாள்தோறும் வசூலாகும் சராசரி தொகை சுமார் ரூ. 800- ஆகும்.

(ஆ) நாள்தோறும் வந்து பார்வையிடுகிற பார்வையாளர் களின் சராசரி எண்ணிக்கை குழந்தைகள் உட்பட ஆரம்ப மாதத்தில் சுமார் 3,200 ஆகும். சமீப மாதங்களில் 2,000.

(இ) வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்ட நாளிலிருந்து (15—11—76-ல் இருந்து 30—11—77 வரை) பார்வையாளர் கட்டணம் மூலம் வசூலாகியுள்ள மொத்தத் தொகை ரூபாய் 4,09,536.00.



1977 டிசம்பர் 30]

**திரு. என். கிட்டப்பா :**
* 70 வினா **திரு. ஆ. நடராசன்** } மாண்புமிகு செய்தி
**திரு. எஸ். ஜே. இராமசாமி :**
சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் திருவள்ளுவர் கோட்டம் அமைத்திட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு போடப்பட்டது?

(ஆ) இறுதியில் அதற்கான செலவுத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** முதலில் ரூ. 48 லட்சம். மேலும் பின்னர் மதிப்பீடு உயர்ந்து ரூ. 1 கோடி என்று மறு மதிப்பீடு இறுதியாக செய்யப்பட்டிருக்கிறது. அதாவது முதல் மதிப்பீட்டை விட இரு மடங்குக்குச் சற்று அதிகமாக உயர்ந்து உள்ளது.

**திரு. து. புருஷோத்தமன் :** தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டம் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் காலத்திலே உருவாக்கப்பட்டது. துவக்க விழாவின்போது நிறுவப்பட்ட அடிக்கல் தற்போது இல்லை என்று சொல்லப்படுகிறது. அது உண்மையானால் அப்படிப்பட்ட அரசியல் காழ்ப்பு உணர்ச்சி ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது என அறிந்து, இந்த அரசும் அரசியல் காழ்ப்பு உணர்ச்சியை மறந்து, இந்த அரசு அந்த அடிக்கல்லை வைக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மூலக் கேள்விக்கு இது தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. எஸ். கணேசன் :** தலைவர் அவர்களே, இந்த வள்ளுவர் கோட்டத்திற்கு வருகின்ற பார்வையாளர்களுடைய எண்ணிக் கையை அதிகரிப்பதற்கு மேலும் ஏதாவது இந்த கோட்டத்தை விரிவுபடுத்துகிற திட்டம் தற்போதைய அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பார்வையாளர் களுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மேற்கொண்டு விரிவு படுத்துகிற திட்டம் என்பதிலே பல விவகாரங்கள் அடங்கி

யுள்ளன. ஏற்கெனவே 48 லட்சம் ரூபாய் மதிப்பீடு அளிக்கப்
பட்டு இறுதியாக ஒரு கோடி ரூபாய் ஆகியுள்ளது. அதற்கான
கணக்கு வழக்குகள் முறையாகப் பரிசீலிக்கப்படவில்லை என்றும்,
அதற்கு மேலே இன்னும் 11 லட்சம் ரூபாய் பாக்கியிருக்கிறது.
இதற்குமேல் அதை பலனுள்ள முறையில் செய்ய வேண்டு
மானால் இன்னும் பல லட்சம் ரூபாய் செலவாகும். ஏற்கெனவே
அதற்கான விவரங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். அதை
எல்லாம் மொத்தமாகப் பரிசீலித்த பிறகுதான் அதைப் பற்றி
விரிவான விவரத்தைத் தர முடியும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** வள்ளுவர் கோட்டத்தினுடைய
செலவை மட்டும் பொருட்படுத்தாமல் அதைக் கட்டுவதற்கு
முயற்சி எடுத்த முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்
எண்ணம் அதில் பூர்த்தி அடையவில்லை என்று சொல்லப்படு
கிறது. இந்த அரசு அவர்களையும் கலந்து செலவைப் பார்க்காமல்
அது முழுமை பெறுகிற அளவிற்கு அது கட்டி முடிக்கப்படுமா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** அதற்கு முயற்சி
எடுத்த முன்னாள் முதல்வர் அவர்களுடைய கருத்து என்ன
என்பது பற்றி அதற்கான அறிவிப்புகளோ, குறிப்புகளோ, திட்
டங்களோ, வரைபடங்களோ எதுவுமே இல்லை. முறையாக ஒரு
அரசு வேலைகளை மேற்கொள்கிறபோது வரைபடங்கள் அனுமதிக்
கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு முறையாக மாற்றங்கள் செய்யப்
படவேண்டுமானால் மாற்றங்கள் செய்யப்பட்டு அவைகள் எல்லாம்
அரசினுடைய இலாக்காக்களில் அல்லது பதிவேடுகளில் இருந்
திருக்குமானால் அதில் என்ன குறை இருந்திருக்கிறது அல்லது
என்ன குறைபாடு, என்ன முடிவு செய்யப்படாமல் இருக்கிறது
என்பதையெல்லாம் இந்த அரசு தெரிந்து கொள்ள முடியும்.

ஆனால், வள்ளுவர் கோட்டம் ஆரம்பித்த காலத்தில் 48 லட்சம்
ரூபாய்க்கு அறிவிப்பு செய்யப்பட்டு, 1974 ஆம் ஆண்டு நவம்பர்
மாதம் அறிவித்து வேலைகள் துவங்கியிருக்கிறது. 75 ஆம்
ஆண்டிலே வேலைகள் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. 1976 ஆம்
ஆண்டு ஆரம்பத்தில் முடிவு செய்யவேண்டுமென்று வேகப்
படுத்தப்பட்ட காரணத்தால் முன் அனுமதி பெறாமல் அல்லது



திட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்படாமல் அல்லது 48 லட்சம்
ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை அதிகரிக்க வேண்டுமென்ற
வேண்டுகோள் இல்லாமல் அல்லது முன்னால் தயாரிக்கப்பட்ட
வரைபடங்களை மாற்ற வேண்டும் என்ற அறிவிப்பு இல்லாமல்
மேலும் மேலும் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.
அப்படி உயர்ந்து ஒரு கோடி ரூபாயாக ஆகியிருக்கிறது.

ஆகவே, முன்னாள் முதல்வர் அவர்கள் எண்ணங்களை இந்த
அரசு புரிந்து கொள்ள இயலவில்லை. அதற்கான முறைப்படியான
குறிப்புகளோ அல்லது வரைபடங்களோ அரசினிடத்தில் இல்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** எந்த ஒரு கட்டடம் கட்டுவதாக இருந்
தாலும் வரைபடம் இல்லாமல் அந்தக் கட்டடத்தைக் கட்ட
இயலாது. வள்ளுவர் கோட்டத்தை எந்தப் பொறியாளரும்
அவ்வளவு முட்டாள்தனமாக வரைபடம் இல்லாமல் ஒரு
கட்டடத்தைக் கட்டுகிற நிலையில் இருக்கமாட்டார்கள். வரைபடம்
வள்ளுவர் கோட்டத்திற்கு வரையப்பட்டு, பொறியாளர்களின்
மத்தியில் அது விவாதிக்கப்பட்டு பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டு
அந்த அடிப்படையில் வள்ளுவர் கோட்டம் கட்டப்பட்டது.

அதுமாத்திரமல்ல. வள்ளுவர் கோட்டம் கட்டப்பட்ட அந்த
இடம் பெரிய ஏரியாக இருந்து அது தூர்க்கப்பட வேண்டிய
சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டு, அப்படி தூர்க்கப்பட்ட காரணத்தால்
அங்கு பெரிய கட்டடம் கட்டுகிற நேரத்தில் மண் அழுந்தக்
கூடாது என்பதற்காக பெரிய பெரிய இரும்பு கர்டர்கள்
எல்லாம் அதற்காக வாங்கப்பட்டு அவை அங்கு பதிக்கப்பட்டு
கட்டப்பட்ட கட்டடம்; வரைபடம் இல்லாமல் கட்டப்பட்ட
கட்டடம் இல்லை.

ஒருவேளை நிலையென்று ஆட்சி கவிழ்க்கப்பட்டு வள்ளுவர்
கோட்ட விழா நடைபெறுவதற்கு முன்னமேயே ஆட்சி கவிழ்க்கப்
பட்டு பிறகு நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சியில் அந்த
வரைபடங்கள் ஒருவேளை அழிக்கப்பட்டிருக்கலாம் என்று நான்
இப்போது சந்தேகப்படுகிறேன். வரைபடம் இல்லாமல் அந்தக்
கட்டடத்தைக் கட்ட முடியாது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ இரட்டிப்பு செல வாகிவிட்டது என்று சொன்னார்கள். முதலில் போடுகிற எஸ்டி மேட்டுக்கும், முதலில் மதிப்பிடுகிற செலவுக்கும், அதற்குப் பிறகு முடிவுறுகிற செலவிற்கும் வேறுபாடு இருப்பது இயல்பு. பல் வேறு கட்டடங்களில் அந்த வேறுபாடுகள் இருக்கின்றன.

அதிலும் வள்ளுவர் கோட்டத்தைப் பொறுத்தவரையில் அவ்வப்போது நானும் மற்ற அமைச்சர் பெருங்குடி மக்களும் அதிகாரிகளும் கலந்து ஆலோசித்து அங்கு சென்று என்னென்ன செய்யப்பட வேண்டுமென்று ஆலோசித்து அவையெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, அதற்கான செலவுகள் அப்படி உயர்ந்திருக்கக்கூடும் என்ற விவரங்கள் இருந்திருக்கக் கூடும், அதுவும் இப்போது இல்லை என்றால், அதுவும் கவர்னர் ஆட்சிகாலத்தில் அழிக்கப்பட்டு விட்டதா என்ற உண்மையை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** முன்னாள் முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்திற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் பற்றி எடுத்து விளக்கினார்கள். அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது நிதி அமைச்சராகவும் இருந்திருக்கிறார்கள். இரண்டு பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டதோடு மட்டுமின்றி இந்த வள்ளுவர் கோட்டத்தை உருவாக்குவதற்கான முழு முயற்சி களையும் அவர்கள் எடுத்துக்கொண்டதையும் நாம் அறிவோம். அவர்கள் தெரிவித்த சில விவரங்களிலிருந்து எப்படி அந்த இடம் சீர்படுத்தப்பட்டது, வரைபடங்கள் போடப்பட்டன என்ற விவரங்களையெல்லாம் சொன்னார்கள். எங்களிடம் இப்போது ஆரம்ப வரைபடம் இல்லை. ஆரம்ப வரைபடம் இருக்கிறதா என்று இனிமேல் ஆராய்வோம். ஆனால், 1974 நவம்பர் மாதம் ஒரு அரசாணைமீது 48 லட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டிருக் கிறது. அதில் 1974-75-ல் 20 லட்சம் ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது. 1975-76-ல் 28 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்

(முற்பகல் 9.30)

பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டன என்கின்ற விவரங்கள் இல்லை. மாற்றப்பட்ட வரைபடங்கள், எடுத்துக்கொள்ள வேண்டிய முன் ஜாக்கிரதை இவை சம்பந்தமான விவரங்கள் இல்லை. ஆனால், இதன் மீது ஏற்பட்ட செலவுகளுக்கு அரசு எந்த அடிப்படையில் ஏற்றுக்



கொண்டது என்பதற்கான விவரங்கள் இல்லை. ஆனால், இதற்கான தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை முன்னாள் முதலமைச்சர் அவர்களே, நிதி அமைச்சர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்ததினால் இந்த பொறுப்புகளை தானே ஏற்றுக் கொண்டு இதற்கான உத்தரவிட்டார்களா என்பதும் தெரியவில்லை. ஆனால், இதற்கான எந்த விவரங்களும் ஆதாரங்களும் இல்லை.

முதலாவது போடுகின்ற மதிப்பீடு அறிவிக்கப்பட்ட பிறகு மறு மதிப்பீடு வரும்போது அரசு அதற்குரிய ஆணையை வழங்கும் என்பது இயற்கைதான். ஆனால், மறு மதிப்பீடு அனுமதிப்பதற்கு முன்னால் அரசின் பரிசீலனையில் அது வந்ததா, அதற்கு அனுமதி வழங்கப்பட்டதா, அதற்கு ஆதாரங்கள் எதுவும் இருக்கின்றதா, அதற்கு நிதி அமைச்சர் அவர்களே அனுமதி அளித்தார்களா, அல்லது முதலமைச்சர் அவர்களே அனுமதி அளித்தார்களா என்கின்ற விவரங்களும் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு மேல் வேலைகள் நடைபெற்றிருக்கின்ற விவரங்களுக்குத்தான் குறிப்புகள் இருக்கின்றன. முதலாவது 48 லட்சம் ரூபாய் என்று திட்டமிடப்பட்டு ஒரு கோடி அளவுக்கு செலவு ஏற்பட்டதற்கான விவரங்களை எல்லாம் இப்போது ஆராயப்பட்டிருக்கின்றன. அதற்கு சில குறிப்புகள் இருக்கின்றன. விவரங்களும் இருக்கின்றன. ஆனால், இதில் மேற்கொள்ளப்பட்ட முறையில் தான், அதாவது எந்த அடிப்படையில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன என்கின்ற சில விவரங்கள் இருக்கின்றன. ஹைவேஸ் டிப்பார்ட் மென்ட்டில் இருந்த ஒரு என்ஜினியரை, அவர் பூம்புகார் டெவலப்மென்ட் ஸ்பெஷல் ஆபீஸராக இருந்தவர். அவரை இந்த வேலைகளுக்காக நியமிக்கப்பட்டு அவரிடம் இந்த வேலைகள் நடை பெறுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இப்படி வேலைகள் ஒப்படைக்கப்பட்டதற்குப் பின்னால் எப்படி வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்கு சில குறிப்புகள் இருக்கின்றன. மூன்று முறைகளில் வேலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஒன்று, நாமினேஷன் முறையில், இரண்டு, டெண்டர் முறையில், மூன்று, என். எம். ஆர். முறையில், அதாவது தினசரி ஆட்களை நியமித்து வேலைகளை மேற்கொள்வது என்பது. இதில் சுமார் 15 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்றும், இவற்றைப் பரிசீலனை செய்த அதிகாரிகள் பல இடங்களில் பல ஐயங்களை கிளப்பி யிருக்கிறார்கள், பல செலவு இனங்கள் பற்றி பின்னால் ஆடிட்டில் பல ஆட்சேபணைகள் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, அரசு முதலில் போட்ட மதிப்பீட்டிலிருந்து இன்னொரு மதிப்பீட்டுக்கு வருவது என்பது கூடாது என்பது அல்ல. அது சாதாரணமாக நடந்து வருகின்ற முறைதான். ஆனால் எந்த நேரத்தில் இப்படிப்பட்ட மறுமதிப்பீடு வருகிறது என்பதை அரசு ஆராய வேண்டும். 1974-ல் 48 லட்சத்தில் போடப்பட்ட மதிப்பீடு, 1976 ஜனவரியில் 77 லட்சமாக உயர்த்தப்பட்டது, பின்னால் 1977 ஜனவரியில், இன்னும் பாக்கித் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது என்றும், இதற்கு 99 லட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு வருகிறது. இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எந்த ஒரு நிதி அமைச்சரும் அரசு கஜானாவிலிருந்து பணத்தை அப்படியே எடுத்து கொடுத்து விட முடியாது என்பது நிதி அமைச்சர் அவர்கள் போன்றவர்களுக்கு நன்கு தெரியும் என்று நம்புகிறேன். பொதுவாக ஒரு பிரசாரம் இப்படி இருந்து வருகிறது. எந்த அரசாக இருந்தாலும் சரி இப்படி ஒரு பிரச்சாரத்தை பயன்படுத்தி விட்டால், பாமர மக்கள் இதை நம்பிக்கொண்டிருப்பார்கள். சாதாரண ஒரு ஊராட்சி மன்றத் தலைவருக்கு கூட செக்கில் கையெழுத்து போட அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரம் கூட நிதி அமைச்சருக்கோ முதலமைச்சருக்கோ கிடையாது என்பதை நாட்டுக்கு அறிவிக்கவேண்டும். முதலமைச்சரோ அல்லது நிதி அமைச்சரோ தாங்களாகவே நினைத்தபோது செக் எழுதி பணத்தை எடுத்து கொடுத்துவிடலாம் என்று யாரும் நினைக்கமாட்டார்கள். யாரும் அப்படி நம்ப மாட்டார்கள். இதற்கென்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னால்தான் பணம் செலவு செய்ய முடியும். ஒரு தடவை அரசு ஒரு ஆணையைப் பிறப்பிக்கும்போது, அதில் 15 லட்சம் என்று குறிப்பிட்டிருந்தால் செலவு செய்யும் போது 20 லட்சமாக அந்த வேலையின் மதிப்பு அதிகமாகக் கூடும். இது என். எம். ஆர். என்ற இனத்தில் வந்திருக்கக்கூடும். இது இயற்கை தான். ஆனால் எதோ வரைபடம் இல்லை. இதற்கான விவரங்கள் இல்லை. எதோ எப்போதுமே ஆளும் கட்சியாரால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஊழல் என்ற வார்த்தையும் இதிலும் சேர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருப்பதாக அறிகிறேன்.



வள்ளுவர் கோட்டம் கட்டுவது என்பதில் மட்டும் அல்ல. முன்னால் எம்.எல்.ஏ.க்களுக்கு என்று புதிதாக ஆஸ்டல் கட்டப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் 40 லட்சத்திற்கு என்று திட்டமிடப்பட்டது. முடியும் போது 80 லட்சம் 90 லட்சம் என்று தாண்டிவிட்டது.

இப்படி பெரிய திட்டங்களை நிறைவேற்றும்போது மதிப்பீடு அதிகமாவது உண்டு, அது முறையும் கூட, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அதிகமான செலவு ஏற்பட்டதை எப்படி சரி செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசிப்பதற்கு முன்னால் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. பின்னால் வந்த கவர்னர் ஆட்சியில் என்ன தில்லு முல்லுகள் எல்லாம் நடைபெற்றன என்பது நாட்டுக்கு நன்கு தெரியும். இவையெல்லாம் இப்போது டெல்லியில் நடைபெறும் விசாரணையிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

ஆகவே வள்ளுவர் கோட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவித தவறும் நடைபெறவில்லை என்பதை அரசு உணருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். இதிலேயும், ஊழல் நடைபெற்றிருக்கின்றது என்ற குற்றச்சாட்டை உருவாக்குவதற்கான முயற்சிகளை அமைச்சர் செய்கின்றார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே எதையும் நான் கூறவில்லை. இந்த நடைமுறைகள், மேற்கொள்ளப்பட்ட பணிகள் முறையாக அரசின் விதிகளுக்கு உட்பட்டு நடந்திருக்கிறதா என்பதைப் பற்றித்தான் நான் பதில் அளித்தேன். இதிலே நம்முடைய செலவுகள் எல்லாம், அதற்கான பணிகள் எல்லாம், செம்மையாக, முறையாக நடைபெற்றிருக்கிறதா என்பதைப் பற்றி கணக்கிட்டுத் தெரிவிக்க வேண்டுமென்கிற பரிசீலனைதான் நடைபெறுகிறது. அதில் குறுக்கிட நான் விரும்பவில்லை.

ஆனால், நிதித் துறையிலே இதைப் பற்றியெல்லாம் கருத்துக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. முறையாக செயல்படவில்லையென்றும், நாளை ஆடிட் செய்யும்போது பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். நான் நம்முடைய முன்னாள் நிதி அமைச்சர் அவர்கள் பாங்கியிலே

இருந்து பணத்தை எடுத்துச் செலவு செய்தார்கள் என்று சொல்கின்ற அளவிற்கு விவரம் அறியாதவன் அல்ல. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இருந்த இயக்கத்திலே 40 ஆண்டுக்காலம் இருந்திருக்கிறேன். அந்த அளவுக்கு அறியாதவனாக இருக்க மாட்டேன் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

நம்முடைய முன்னாள் நிதி அமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் இந்தச் செலவு செய்யப்பட்டிருக்கிறது, மிக வேகமாக, மிகச் சீக்கிரமாக இதை முடித்தாக வேண்டுமென்று ஒரு கட்டத்திலே உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. அதனால் செலவுகள் அதிகமாக ஆகியிருக்கின்றது. அதற்கான, கணக்குப் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது.

இன்னொன்றையும், இப்போது முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விருப்பத்திற்கு ஏற்றபடி அப்போது அரசு சில மாற்றங்கள் செய்ததாகவும் சொன்னார்கள். அந்த மாற்றங்களுக்காக செலவும் அதிகமாகிக் கொண்டு வருகின்ற நடைமுறையைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இன்னொன்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். கவர்னர் அவர்கள் ஆட்சியில் ஊழல்கள் நடந்திருப்பதாகவும், இதையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். ஊழல் எந்த ஆட்சியில் நடைபெற்றாலும், யார் செய்தாலும் அதைக் கண்டு பிடித்து, இந்த நாட்டு மக்களுக்கு தெரிவிப்பதற்காகத் தான் இந்தச் சட்டப் பேரவையே நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல், இந்த வள்ளுவர் கோட்டத்திலே செலவு செய்ததிலே சில தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொல்வதால், நான் ஊழல் நடந்திருக்கின்றது என்று எடுத்துக்காட்ட விருப்பப்பட வில்லை, அந்தக் குறைகளை எடுத்துக்காட்ட, சுட்டிக்காட்டக் கூடாது என்று முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் விரும்பு கின்றார்களா என்பதை இந்தச் சட்டப் பேரவைதான் முடிவு செய்ய வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தவறுகள் நடந்திருந் தால் அவைகளைச் சுட்டிக்காட்டக் கூடாது என்று நான் சொல்ல வில்லை. நாங்களும் விரைவில் தவறுகளைச் சுட்டிக்காட்டத்தான் போகிறோம். அது வேறு விஷயம். வள்ளுவர் கோட்டம் ஒரு



புனிதமான காரியத்திற்காக, வள்ளுவரைச் சிறப்பு செய்வதற்காக தமிழ் உணர்ச்சியின்பால் செய்யப்பட்ட காரியம். இதற்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையில், பிரச்சாரம் செய்கின்ற முறையில் நமது அமைச்சர் அவர்களுடைய பதில் மிக விரிவாகவும் விளக்க மாகவும் எடுத்துச் சொல்லப்பட்டது. 48 லட்சம் ரூபாய் என்று மதிப்பீடு போட்டு பின்னர் அது ஒரு கோடியாகி விட்டது என்று சொல்லிய காரணத்தினால்தான் இந்தக் கேள்வி எழுந்தது.

இதிலே அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்றால், அது எந்த அதிகாரியாக இருந்தாலும் அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுத்தால், அதற்கு எதிர்க் கட்சி தயக்கம் காட்டாது, மறுப்பு தெரிவிக்காது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறன்.

(பல உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் எழுந்திருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரையும் அமரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** ரூல்சிலே இருப்பதையேதான் நான் சொல்கிறேன். ஒரு கேள்வியின்மீது போதிய அளவுக்கு விவாதம் நடந்து விட்டால், சபாநாயகர் அடுத்தக் கேள்விக்குப் போய் விடலாம்.

Sufficient discussion has already taken place on this matter.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகு மேலும் விவாதிக்கத் தேவையில்லை.

(மீண்டும் பல உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் எழுந்து நின்றனர். கூத்தகுடி திரு. ச. சண்முகம் அவர்களும் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (கூத்தகுடி திரு. ச. சண்முகம் அவர்களையும், பிறரையும் பார்த்து) உட்காருங்கள், உட்காருங்கள்.

(திரு. கூத்தகுடி ச. சண்முகம் பேசுவதற்கு எழுந்தார்.)

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற போதிலிருந்து தாங்கள் நின்று கொண்டிருந்தீர்கள். ஏன் நின்று கொண்டிருக் கிறீர்கள் என்பதற்காகத்தான் தங்களைப் பார்த்து உட்காருங்கள் என்று சொன்னேன்.

[1977 டிசம்பர் 30

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு முன்பே என் பெயரைக் கூப்பிட்டீர்கள். அதனால்தான் நான் எழுந்து நின்றேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது, அதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. இப்போது கேள்விக்கு வருகிறேன். அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்தும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கத்திலிருந்தும் இதிலே எங்களுக்கு ஊழல் இருக்குமென அதிகமான சந்தேகம் ஏற்படு கிறது.

(முற்பகல் 9-40)

48 லட்சத்திற்குத் திட்டமிட்டது ஒரு கோடி ரூபாய் ஆகியிருக் கிறது. கவர்னர் ஆட்சியில் ரெக்கார்டுகள் போய்விட்டதாகச் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது இதிலே ஏதோ ஊழல்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. இதற்கெல்லாம் யார் காரணம் என்பதைப் பற்றி விசாரிக்க இந்த அரசாங்கம் ஒரு குழு போடுமா?

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆப் ஆர்டர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சில ஐயங்களை எழுப்பி இதற்கு ஒரு விசாரணை நடத்தப் படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நான் இந்தப் பேரவைக்கு அமைச்சரவையின் சார்பில் அறிவிக்க விரும்புகிறேன். இதைப் பற்றிய பரிசீலனையிலிருந்து ஒரு கோடி ரூபாய் செலவுத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று ஆணை கேட்டு அதற்கு மேல் இந்த வள்ளுவர் கோட்டத்தில் சில லட்சங்களைச் செலவு செய்து இன்னும் பலனுள்ள நினைவாலயமாக மாற்ற வேண்டு மென்று ஆணை கேட்டு வந்ததன் பேரில் இதைப் பற்றிய எல்லா விவரங்களையும் பரிசீலித்து பிறகுதான் இதன்மீது ஆணை பிறப்பிக்கப்படும் என்றும், அதைப் பற்றி விரிவாகப் பரிசீலனை செய்ய குழு ஒன்று அமைத்து பரிசீலிக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் அனுமதியோடு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1977 டிசம்பர் 30]

**திரு. க. சுப்பு:** இந்தக் கேள்வியைப் பொறுத்தவரை பல்வேறு விவாதங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. விதி 40-ன் கீழ் ஒரு கேள்வியைப் பற்றி மேலும் விவரங்கள் தெரியவேண்டுமென்றால் அதற்கு அரை மணி நேரம் ஒதுக்கி விவாதிக்கலாம். இதைப் பற்றி அமைச்சர் அவர்கள்கூட பரிசீலனை பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதைப் பற்றி விளக்கம் பெறும் வகையில் இதைப் பற்றிய அரை மணி நேர விவாதத்திற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி:** முட்டாள்தனமான என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார்கள். அது சரியா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** சபைத் தலைவர் அவர்களே, "முட்டாள்தனமாக செய்கிற அளவுக்கு நான் இல்லை" என்று எதிர்க்கட்சித் தலைவர் தன்னைப் பற்றிப் பேசிக்கொண்டாரே தவிர வேறு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். ஏற்கனவே அந்தப் பிரச்சினை பற்றிப் பரிசீலிக்க ஒரு குழுவை நியமிக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்ன நிலையில் இதைப் பற்றி விவாதிக்க அரை மணி நேரம் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே விளக்கம் சொல்லும்போது கவர்னர் ஆட்சியில் அந்த வரைபடங்கள் கிழிக்கப்பட்டிருக்கலாம் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். இந்த அவையில் இல்லாத ஒருவரைப்பற்றி அவருடைய ஆட்சியில் கிழிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகிற மாதிரி சொன்னால் அது சரியான முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது கவர்னரைக் குறிக்க வில்லை. கவர்னர் ஆட்சியைக் குறித்ததே தவிர, தனிப்பட்டவரைக் குறித்தது அல்ல. கவர்னரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

## இருபது அம்சத் திட்ட விளம்பரம்.

*** 71. வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்ட பிறகு 1977 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் நாள் முடிய இருபது அம்சத் திட்ட பிரச்சாரத்திற்காக அரசு செலவழித்த மொத்த தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :**

ரூ. 15,23,351.88.

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அந்தத் தொகையில் மத்திய அரசு ஏதேனும் மானியமாக மாநில அரசுக்கு அளித்ததா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாநில அரசு ஆண்டு தோறும் வழக்கமாகச் செலவழித்து வருகிற தொகையிலே இருந்துதான் இந்தத் தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மத்திய அரசு மானியம் தருகிறது என்ற பிரச்சினை இதிலே எழவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** இருபது அம்சத் திட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் செலவு செய்யப்பட்டது போல் அதற்கு முன்னால் இருந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது ? அந்தத் தொகையும் இதுவும் ஏறத்தாழ அதிகமா அல்லது ஒன்று ? எட்டாண்டுச் சாதனை என்ற பெயரில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியை ஒட்டிய துணை கேள்வி கேளுங்கள். இருபது அம்சத் திட்டத்தைப்பற்றிக் கேளுங்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா :** எட்டாண்டுச் சாதனை என்று விளம்பரம் பெரிதாகச் செய்யப்பட்டது. அதற்கு எவ்வளவு செலவாயிற்று ?



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல் ஆண்டுதோறும் மாநில அரசு செலவு செய்கிற தொகையிலிருந்து செலவு செய்யப்பட்டது என்று சொன்னேன். அதையொட்டி உறுப்பினர் இராதா அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாநில அரசு செலவு செய்த தொகை 1974-75 ஆம் ஆண்டில் 32.76 இலட்சம் ரூபாயும், 1975-76 ஆம் ஆண்டில் 30.27 இலட்சம் ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் 32.20 இலட்சம் ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னொன்றைக் கேட்டார்கள். எட்டாண்டுச் சாதனைபற்றி 1975 ஆம் ஆண்டிலே விளம்பரத்திற்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்று கேட்டார்கள். 2,03,312 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஒரு தீர்க்கமான தீர்ப்பைத் தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இருபது அம்சத் திட்டத்தைப் பற்றித்தான் கேள்வி, அதைப்பற்றித்தான் கேட்கவேண்டுமென்று தாங்கள் திரு. இராதாவிடம் சொன்னீர்கள், அவர்களும் அதோடு நிறுத்திவிட்டார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் எட்டாண்டுச் சாதனை பற்றி தகவலைத் தந்திருக்கிறார்கள். **எட்டாண்டுச் சாதனை பற்றிய தகவலை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள், தாங்கள் அதை அனுமதித்தால் எட்டாண்டுச் சாதனை பற்றிப் பதில் சொல்ல நாங்களும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர் இராதா அவர்கள் கேட்ட கேள்வியைச் சரிவரக் கவனிக்கவில்லை. அவர்கள் இருபது அம்சத் திட்டத்தைப்பற்றிக் கேட்டுவிட்டு அதோடு கூட அதற்குப்பிறகு எட்டாண்டுச் சாதனைப் பற்றி விளம்பரத்திற்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்றும் கேட்டார்கள். அதை எதிர்க்கட்சித் தலைவர் கவனிக்கவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1977 டிசம்பர் 30

**திரு. எஸ். ஆர். இராதா :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது * * நான் கேட்டதற்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.

**திரு. க. அன்பழகன் :** * * திரு. இராதா அவர்கள் கேட்ட கேள்வி இந்தக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத பிரச்சினை. அதற்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பதில் சொல்லியதில் ஒரு உள்நோக்கம் வெளிப்பட்டது. அந்த நோக்கத்தைப் பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா ? தலைவருடைய தீர்ப்பை மீறி அவர்கள் பதிலை அளித்திருக்கிறார்கள், அதைப் பற்றி தங்களுடைய தீர்ப்பு என்ன ?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :** முதல் கேள்வி அவர்கள் கேட்டது, இருபது அம்சத் திட்டத்தைப் பற்றியது. அதைப் பற்றிப் பேரவைக்குத் தகவல் அறிவிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கு இருக்கிறது. அந்தக் கேள்வி கேட்டதற்குப் பிறகு அவர்கள் கேட்ட கேள்வியின் தொடர்பாக உள்ள—இருபது அம்சத் திட்டத்தை அறிவித்ததற்குப் பிறகு—அன்றைக்குச் செய்து வந்த பிரச்சாரங்களைப் பற்றிய விவரங்களையும் நாங்கள் தயாரித்து வைத்து இருந்தோம். இருபது அம்சத் திட்ட விளம்பரத்திற்குச் செலவு தனியாகச் செய்யப்பட்டதா ? அல்லது மாநிலத்தின் பொது நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டதா என்று கேள்வி கேட்டார்கள். அதோடு எட்டாண்டுச் சாதனை பற்றியும் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கு ஆன செலவு என்ன என்பதையும் அவர்கள் கேட்டார்கள். இருபது அம்சத் திட்டத்தின் விளம்பரத்திற்கு மத்திய அரசு செலவழிப்பதிற்குப் பதில் அன்றைக்கு இருந்த மாநில அரசே செலவு செய்திருக்கிறது. அதனையொட்டி விளம்பரத்திற்காகச் செய்யப்பட்ட செலவு எவ்வளவு என்பது அந்த விளம்பரத்தை ஒட்டிய கேள்வி என்ற காரணத்தினாலே அதற்கும் சேர்த்து நான் பதில் சொன்னேன் . . . .

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1977 டிசம்பர் 30]

**திரு. துரை முருகன் :** திரும்பவும் பதில் எங்கேயோ போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும், அதற்குள் நீங்கள் பேசக்கூடாது.

நான் சொன்னது, திரு. எஸ். ஆர். இராதா அவர்களை மூலக்கேள்வி பற்றி மட்டும் துணைக் கேள்வி கேளுங்கள், மேற்கொண்டு கேட்க வேண்டாம் என்றுதான். அவர்களும் கேட்டார்கள். அமைச்சர் அவர்கள், அந்த உறுப்பினருடைய கேள்விக்குப் பதில் வைத்திருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடாது என்று சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை. கூடுதலான பதில்களை அமைச்சர்கள் சொல்வதற்கு அவர்களிடம் தகவல் இருந்தால் கொடுக்கிறார்கள். அவர்களை நிறுத்துவதற்கு என்னிடம் அதிகாரம் இல்லை.

**திரு. மு. அரங்கநாதன் :** புருஷோத்தமன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள்.

**திரு. மு. அரங்கநாதன் :** இது மட்டும் சரியா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒன்று உங்கள் தலைவருக்குக் கட்டுப்படுங்கள் அல்லது பேரவைத் தலைவருக்காவது கட்டுப்படுங்கள்.

[முற்பகல் 9-50]

**திரு. மு. கருணாநிதி :** தலைவர்களே, அமைச்சரவர்கள் அந்தப் பதிலைச் சொல்லியிருக்கிறார் என்று சொன்னீர்கள். அப்படி உரிமையை அளித்துவிட்ட பிறகு, அந்த அமைச்சர் அளித்த பதிலின்மீது அந்தக் கேள்விக்கான துணைக் கேள்விகளை எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் கேட்பதற்கும் அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்களும் அதையொட்டித்தான் கடுமையான முறையில் பேசவோர்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்கிறேன். அதைச் சொல்வதற்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் நல்லது அவர் சொல்லும் கருத்தை

ஒட்டியிருக்கிறது என்று கருதி சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை விட்டுவிட்டு வேறு பொருளுக்குப் போக வேண்டுமென்றால் சரியல்ல, அமைச்சரவர்களும் அவ்வாறு போக மாட்டார்கள். அவருக்கும் அது தெரியும். தாங்களும் அதை எதிர்பார்க்க மாட்டீர்கள். பதில் தயாராக இருந்ததால் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறொன்றும் இல்லை.

**திரு. ரா. உமாநாத்:** தாங்கள் முதலில் ரூலிங் கொடுத்தீர்கள். அருமை நண்பர் இராதா அவர்கள் சொல்லும்பொழுது எட்டாண்டுத் திட்டத்தைப் பற்றிக் கேட்கக் கூடாது என்று சொன்னீர்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது தங்கள் ரூலிங்படி பதில் கொடுக்காமல்தான் இருக்க வேண்டும். On merits I am proceeding. ஆனால், அவர் கொடுத்து விட்டார். அவ்வாறு கொடுத்தபிறகு, It becomes the property of the House அவர் அந்தப் பதிலைக் கொடுத்தபிறகு தங்கள் ரூலிங் எதுவாக இருந்தாலும், பதில் கொடுத்துவிட்டபிறகு அந்தப் பதில் இந்த ஹவுசின் ப்ராப்பர்டியாக மாறும்பொழுது அதில் துணைக் கேள்விகளைக் கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையொட்டிய கேள்வியாக இருக்கலாம், அவர் சொன்ன பதிலையொட்டியதாகத் துணைக்கேள்வி இருக்கலாம்.

**திரு. சி. ஆறுமுகம்:** புருஷோத்தமன் அதைத்தானே கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புருஷோத்தமனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது.

**திரு. சி. ஆறுமுகம்:** புருஷோத்தமன் அதையொட்டித்தான் கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆறுமுகம் அவர்கள் விதிகளைப் படித்துவிட்டுப் பேசுங்கள். என்னைப் பேசுவதற்கு அனுமதியுங்கள்.



**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். புருஷோத்தமனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தாகிவிட்டது. மற்றொரு சந்தர்ப்பம் கொடுப்பது என்னுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அவ்வாறு கொடுப்பதோ மறுப்பதோ என்னுடைய விருப்பம்.

**திரு. சி. ஆறுமுகம்:** நான் சொல்லுவது . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். எழுந்திருக்காதீர்கள்.

**திரு. சி. ஆறுமுகம்:** எஸ் சார். நான் உட்கார்ந்திருப்பது நீங்கள் இருந்த சீட்தான்.

**திரு. கூத்தக்குடி ச. சண்முகம்:** தலைவரவர்களே, தாங்கள் சொல்லும்பொழுது, "நான் சொல்லும்பொழுது உட்காரா விட்டாலும், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லும்பொழுதாவது உட்கார வேண்டும்" என்று சொன்னதைச் சபைக்குறிப்பிலே யிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சபைத் தலைவருக்குக் கட்டுப்படவில்லை என்று ஆகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படிச் சொல்கிறார்கள், எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று குறிப்பிலே இருக்க வேண்டும். என்னுடைய விருப்பம் அது இருந்தாக வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சிறு விளக்கம். அதைத் தாங்கள் அனுமதிக்க வேண்டும். அருமை உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சட்டப்பேரவைத் தலைவருடைய உத்தரவைமீறி நான் தெரிவித்தேன் என்று சொன்னார்கள். அதற்கு நான் ஒரு விளக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கேள்வி இருபது அம்சத் திட்டத்தையொட்டியது. இருபது அம்சத் திட்டம் வந்த பிறகு

வந்த விளம்பரத்தைப்பற்றி பதில் அளித்திருக்கிறேன். அதற்கு முன் இருந்த ஏழெட்டு ஆண்டுக்கால விளம்பரத்தைப்பற்றித் தெரிவிக்கவில்லை. பிரதமரின் இருபது அம்சத் திட்டம் விளம்பரத்தைப் பற்றிய பதில் என்பதால் சொன்னேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இருபது அம்சத் திட்டம் வெளியிடப்பட்டது 1975 ஆம் ஆண்டு. இதில் எப்படி எட்டாண்டுக் காலத்திலே நடந்தது வரும்? என்று அமைச்சர் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** 1975 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இது வெளியிடப்பட்டது. ஜூன் மாதம் இருபது அம்சத் திட்டம் வெளியிடப்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் திட்டவட்டமாகக் கேட்கிறேன். 1975 ஆம் ஆண்டு அவசரக் காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, இருபது அம்சத் திட்டம் வெளியிடப்பட்டது. அப்படியானால், கழக அரசின் எட்டாண்டுக் காலத் திட்டம் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்களே, அதிலே எப்படி எட்டாண்டுக் காலம் இருபது அம்சம் திட்டத்திலே இடம் பெற முடியும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் அனுமதியோடு இந்த விளம்பரத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

"ஏற்றமிகு எட்டாண்டுகள் :

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசின் பொருளாதார முற்போக்குத் திட்டங்கள்"

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண எண்ணற்ற திட்டங்கள்!"

"பிரதமரின் பொருளாதாரத் திட்டத்தைப் பின்பற்றி..."

இது வெளியிடப்பட்ட தேதி 7—8—1975, வியாழக்கிழமை. அவசரகால நிலை அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால்.



**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, திரும்பவும் நான் கேட்கிறேன். அமைச்சரவர்கள் வேறு திசைக்குப் போகிறார்கள். நான் கேட்க விரும்புவது, எட்டாண்டுக் காலச் சாதனை பற்றிய செலவு என்ன என்பது இராதா அவர்களின் கேள்வி, ஆனால் 1975 ஆம் ஆண்டிலேதான் இருபது அம்சத் திட்டமே பிறப்பிக்கப் பட்டது. ஆகவே, இருபது அம்சத் திட்டத்தின்கீழ் எட்டாண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிபற்றி எப்படிச் செலவழிக்கப்பட்டிருக்க முடியும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முன்னாலே அவர்கள் தவறியதைப் போலவே இப்பொழுதும் அவரது கேள்வியைக் கவனிக்கத் தவறி யிருக்கிறார்கள். அவர் எட்டாண்டுச் சாதனையைப்பற்றி கேட்கவில்லை. எட்டாண்டுச் சாதனை என்ற பெயரிலே அன்றைக் கிருந்த அரசு அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டதற்குப் பின்னாலே ஒரு விளம்பரம் வெளியிட்டது. அதற்கு எவ்வளவு செலவு என்றுதான் கேட்டார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** துணைக் கேள்வி அனுமதிப்பதாக நண்பர் உமாநாத் பிரச்சினைக்கு நீங்கள் பதில் அளித்திருக் கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதி அளிக்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** சரி, அந்த விளம்பரத்திற்கு எவ்வளவு செலவு ஆயிற்று?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அதைத்தான் முன்னாலேயே சொன்னேன். அவசரத்திலே, கேட்டுக் கொள்ளாமலேயே மீண்டும் கேட்கிறார்கள். அதற்குச் செலவு ரூ. 2,03,312 ஒரு நாள் விளம்பரத்திற்கு.

**திரு. எஸ். ஆர். இராதா :** கேள்வி நேரத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் *** எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும் அது தெரியும். என்னைப்பற்றி அந்தக் குறிப்பு இருப்பதால், அந்தக் குறிப்பை நீக்க வேண்டுமென்று நான் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1977 டிசம்பர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் குறிப்பேட்டிலே அவைகளைப் பார்த்து, உண்மையிலே அப்படி இருக்குமானால், அதை நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. க. சுப்பு:** இருபது அம்சத் திட்டம் ஒரு பொருளாதாரத் திட்டம். அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுவதுபற்றி நான் அதிகமாகப் பேசவில்லை. அந்த இருபது அம்சத் திட்டத்தை ஆதரித்து, நம்முடைய முதலமைச்சர் கூடப் புரட்சிப் பயணமே செய்திருக்கிறார். அது ஒரு பொருளாதாரத் திட்டம் என்பதால், அதனை நீங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்வது உங்களுடைய கடமை. அந்தக் கடமையை ஆற்ற, நீங்கள் ஆண்டுதோறும் எவ்வளவு செலவு செய்யப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக மகிழ்ச்சிகரமான ஒரு செய்தியை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். இருபது ஆண்டு சாதனைகள் அது, இருபது ஆண்டு அம்சத் திட்டம் அது, இருபது அம்சத் திட்டம் அது, இருபது அம்சக் கொள்கை அது; ஆக, எதுவாக இருந்தாலும், நாட்டு மக்களுக்குத் தேவையானது, எது என்று கருதுகிறோமோ, அதைப்பற்றி நாங்கள் மக்கள் மத்தியிலே என்ன சொன்னோமோ, அவைகளை நிச்சயமாக நிறைவேற்றுவதற்கு, மீண்டும் பிரச்சாரம் செய்வதற்கு நாங்கள் தயார். ஆனால், தேவையில்லாமல், எப்படியோ நாங்கள், மக்கள் மத்தியிலே எங்களை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, அல்லது அரசுப் பணத்தைச் செலவு செய்து மக்கள் மத்தியிலே புகழ் பெற வேண்டுமென்கிற நோக்கத்தோடு இந்த அரசு தமிழக மக்களுடைய ஒரு பைசாவைக்கூட, வீணாக விரயமாக்காது என்பதை நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன், இருபது அம்சத் திட்டம் வெளியிடப்பட்டபொழுது, இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற அன்றைய முதலமைச்சரவர்களே, இதே திட்டத்தைப், பல வழிகளில் நிறைவேற்றிவிட்டோம் என்று கூறியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.



[1977 டிசம்பர் 30

ஏற்றுக்கொண்டார் என்று சொன்னார்கள். அப்பொழுது நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அடிக்கடி அதற்கான மறுப்பை நாங்கள் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசு அதை மறுத்துவிட்டபிறகு, நிச்சயமாக அது மதுரையில் அமையாது என்பதைத் தெரிந்துகொண்ட பிறகுதான் சரி, மதுரையில் இல்லாவிட்டால், மாமல்லபுரத்திலாவது அதைச் செய்வீர்களா என்று நாங்கள் கேட்டோம். வைதீக இந்துக்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இப்பொழுதிருக்கிற அரசு கைவிடவில்லையென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பத்திரிகையிலே அப்படி வராது. பத்திரிகையிலே அந்த அரசும் ஏற்றுக்கொண்டதாகத் தான் வரும்.

[முற்பகல் 10-00]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது. அந்த மாற்றத்தை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே பதில் அளித்துவிட்டார்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இது வைதீக திட்டமா அல்லது வைதீகர்களின் திட்டமா என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் மேலும் பதினைந்து நிமிடம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. துரை முருகன்:** தலைவர் அவர்களே, எதற்காக மத்திய அரசு வைக்கக்கூடாது என்று சொல்லுகிறது, அதற்கு என்ன என்ன காரணங்களைச் சொல்லுகிறது? வெளிச்சம் போடக்கூடாது என்று சொல்கிறதா, அப்படியானால் கோவிலிலே விளக்குகள் எரிகின்றனவே, ஒலி இருக்கக்கூடாது என்று சொல்கிறதா, அப்படியானால் காலையிலே சுப்ரபாதம் பாடப்படுகிறதே. இன்னும் சொல்லப்போனால் சில கோவில்களிலே குளிர்சாதன வசதி (ஏர் கண்டிஷன்) இருக்கிறதே. எனவே, என்ன காரணங்களை அதிகாரிகள் சொல்கிறார்கள். எப்படி இந்த அரசு மறுத்திருக்கிறது? அதனால் என்னென்ன பிரச்னை எழுந்தது என்ற விவரங்களை எல்லாம், அருள் கூர்ந்து, விளக்கமாக தெளிவாக விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1977 டிசம்பர் 30]

### மதுரையில் ஒலி, ஒளிக்காட்சி.

*72. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுரை மாநகரில் ஒலி, ஒளிக் காட்சிக் கூடத்தினை அமைத்திட மத்திய அரசினை தமிழக அரசு கோரியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஒலி, ஒளிக் காட்சியினை நிறுவுவதற்கு இந்திய அரசு ஆரம்பத்தில் அனுமதி வழங்கியது. ஆனால், பின்னர் வைதீக இந்துக்களின் கோரிக்கைக்கிணங்க அது கைவிடப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, வைதீக இந்துக்களின் கோரிக்கையின் அடிப்படையில் அது கைவிடப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். பகுத்தறிவு மக்களுடைய அடிப்படையில், அந்த ஒலி, ஒளி கண்காட்சியை, நமது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மதுரையில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை, மத்திய அரசிடம் வலியுறுத்தி, அதைச் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** வைதீக இந்துக்களுடைய கோரிக்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு கைவிடவில்லை. அதை மத்திய சர்க்காருடைய சுற்றுலாத்துறை ஏற்றுக்கொண்டு, கைவிட்டிருக்கிறது. இன்றைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், முதல்வராக இருந்தபொழுது ஏற்றுக்கொண்டு, சரி, அப்படி அங்கே இல்லையானால், மாமல்லபுரத்தில் வையுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதை அப்பொழுதிருந்த அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி:** ஏதோ, வைதீக இந்துக்கள் கோரிக்கையை, அன்றைய அரசு ஏற்றுக்கொண்டது, நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, மத்திய அரசு ஏற்றுக்கொண்டது, அல்லது எதிர்க்கட்சித் தலைவர் அப்பொழுது முதல்வராக இருந்தபோது



1977 டிசம்பர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே கேட்ட இரண்டு கேள்விகள் பொருத்தமாக இருந்தன. அதைத் தொடர்ந்து இத்தனை கேள்விகளுக்கும் அமைச்சர் பதில் சொல்வாரா என்று உறுப்பினருக்குப் புரிய வேண்டாமா ?

(திரு. கே. கந்தசாமி எழுந்தார்)

### சென்னையில் சுற்றுலாப் பொருட்காட்சி.

*73. வினா—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை நகரில் 1977 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சியின் மூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** ரூபாய் 16,81,871.

**திரு. து. புருஷோத்தமன்:** தலைவர் அவர்களே . . .

**திரு. கே. கந்தசாமி:** எனக்குக் கொஞ்சம் சான்ஸ் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்துக் கேள்விக்குப் பதில் சொல்லியாகிவிட்டது.

**திரு. து. புருஷோத்தமன்:** தலைவர் அவர்களே, துணைக் கேள்விகள் போடலாமா ? தற்போது நடைபெற்று வருகின்ற அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சிக்கு நம்முடைய அரசின் பல்வேறு இலாக்காக்கள் சார்பில் அரங்குகளுக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** கேள்வி சென்ற ஆண்டு நடைபெற்ற சுற்றுலாவைப் பற்றித்தான். என்றாலும் இதற்கும் பதில் சொல்ல விரும்புகிறேன். வழக்கம்போல் இந்த ஆண்டும் அரசின் சார்பாக 6 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[1977 டிசம்பர் 30

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து உறுப்பினர் 73-வது கேள்விக்குத் துணைக் கேள்வி கேளுங்கள்.

**திரு. கே. கந்தசாமி:** சபாநாயகர் அவர்களே, கொஞ்சம் அமைதியோடு இருக்கிற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* * * * *

என் போன்றவர்களுக்கு வாய்ப்பளிக்காமல் இருப்பதும் முறை தானா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து உறுப்பினர் தங்களைப் பற்றிப் பேசுங்கள். அதிலே ஆட்சேபனை இல்லை. ஆனால் மற்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறை கூறி பேசக் கூடாது. ஆகவே அப்படிப்பட்ட குறிப்புகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இப்போது கேள்வி 73-க்கு வந்தாகிவிட்டது. தயவு செய்து அமருங்கள்.

**திரு. கே. கந்தசாமி :** இதைக் கோரிக்கையாகச் சொல்கிறேன். விசேஷ அனுமதியாவது கொடுங்கள். குறிப்பில் இருந்து வேண்டுமானால் எடுத்துக்கொள்ளுங்கள். நண்பர் துரைமுருகன் போன்றவர்கள் சமய இந்துக்களைப் பழிப்பதுபோல் இங்கே கேள்வி கேட்டு இருக்கிறார்கள். அதை நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள். வேண்டுமென்றே இந்துக்களை அவமதிக்க வேண்டும் என்று திட்டமிட்டு இப்படிச் செய்கிறார்கள் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் உறுப்பினர் கந்தசாமி அவர்கள் நேரடியாக அமைச்சர் அவர்களிடம் பதில் பெறுவதற்கான முறையில் கேள்வி கேட்கவேண்டும். நீங்கள் கேட்க விரும்புகிற கேள்வியை அமைச்சரிடம் கேளுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1977 டிசம்பர் 30]

**திரு. கே. கந்தசாமி:** சார் பாயின்ட் ஆப் ஆர்டர், பல லட்சம் இந்துக்கள் நிறைந்த நாடு நம் நாடு. அவர்களுடைய மனது புண்படும் அளவிற்கு கேள்வி கேட்கிறார்கள். சமய சார்பற்ற நாடு நம் நாடு என்று சொல்கிறோம். அப்படியிருக்கிற நிலையில் சமய இந்துக்களை அவர்கள் அவமதித்திடும் வகையில் கேள்வி கேட்பது முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தயவு செய்து தெரிவித்துக் கொள்கிறேன், ஒரு உறுப்பினர் ஒரு கேள்வி மேல் எதைக் கேட்க வேண்டுமோ அதைக் கேட்டு, அதற்கு பதில் பெறுங்கள், உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லுங்கள். மற்றவர்கள் சொன்னதை நீங்கள் குட்டிக்காட்டி கேட்கவேண்டியது இல்லை. நீங்கள் கேட்கவிரும்பினால், சமய இந்துக்களை இந்த அரசு பாதுகாக்குமா என்று ஏதாவது ஒரு முறையில் கேள்வி கேளுங்கள். மற்றவர்களைக் குறிப்பிட்டு நீங்கள் கேட்கக் கூடாது.

**திரு. க. அன்பழகன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

(திரு. கே. கந்தசாமி நின்றுகொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நின்று கொண்டே இருக்கிறீர்களே,

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்று முடிந்த கேள்வியில் எழுப்பப்பட்ட வார்த்தைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசிய குறிப்புகள், சரியாகவோ, தவறாகவோ கேள்வி கேட்டவருடைய நோக்கத்தை நாட்டு மக்களுக்கு வேறு விதமாக விளக்குவதற்கு அடிப்படையாக ஆகி இருக்கிறது. அப்படி வேறுவிதமான ஒரு கருத்தை கேள்வி கேட்ட உறுப்பினர் மீது தோற்றுவிக்கும்படியான கேள்வியோ, வாசகமோ அவைக்குறிப்பில் இருப்பதை தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அவைத் தலைவர் அவர்களே, மாற்ற முடியாத சில இயல்புகளைப் படைத்த உறுப்பினர்களின் அந்த இயல்புகளை மாற்ற வேண்டுமென்று கந்தசாமி அவர்கள் கேட்பதற்கு உரிமை இருக்கிறதா என்பதற்கு நீங்கள் பதில் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1977 டிசம்பர் 30

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் முன்னவர் ஒரு நியாயமான கருத்தைச் சொல்வதற்கு பதிலாக ஒரு மறைமுகமாக தாக்கும் கருத்தை சொன்னது அவை முன்னவராக இருக்கும் அந்தத் தகுதிக்கு ஏற்றது அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * *

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

(கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியேறுகிற உறுப்பினர்கள் சத்தம்போடாமல் அமைதியாக வெளியேறுங்கள். வெளியேறுகிறவர்கள், அவையில் உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதற்குப் பலியாகிவிடக்கூடாது. உறுப்பினர் முசிறிப்புத்தன், மேலும் நிலைமைகளை மோசமாக்கிவிடக்கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். மரபைக் காத்திடும் வகையில் அமைதியாக இருங்கள். மரபைக் காத்திடும் வகையில் வெளியேறுகிறவர்கள் அமைதியாகச் செல்லுங்கள். நாங்கள் உங்களைக் கேட்டுக் கொள்வேன், நாம் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும், நம் மரபைக் காப்பதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும்.

(முற்பகல் 10-10)

ஒன்று சொல்கிறேன். இதை யார் விரும்பினாலும், அவர்கள் விரும்புகிறபடி அவையில் உள்ளவர்கள் நடந்துக் கொள்ளக் கூடாது. எது ஏற்பட வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்களோ அந்த அவர்களுடைய எண்ணத்தை பூர்த்தி செய்யக் கூடாது. தயவுசெய்து சபையின் மதிப்பை காப்பாற்றுவார்களாக, அதில் அக்கறை உள்ளவர்களாக அமைதியாக செயல்படும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மூற்பகல் 10-7 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.



1977 டிசம்பர் 30]

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சபையிலே இம்மாதிரி கூச்சல் போடுவது மிகுந்த சகஜமாக போய்விட்டது. இப்படி போய்க் கொண்டே இருக்குமானால் அவையில் எங்களைப் போன்ற அமைதியாக இருக்கிற உறுப்பினர்கள் எப்படி பங்கு எடுத்துக் கொள்வது என்று எங்களுக்கே புரியவில்லை, வெளியிலே பத்திரிகையில் இம்மாதிரியான செய்திகள் வருகிறபோது இந்த அவையைப் பற்றி என்ன கருதுவார்கள் என்பதை தயவு செய்து அவைத் தலைவர் அவர்கள் கருத்திலே கொள்ளவேண்டும். இம்மாதிரியான சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு ஏதாவது சரியான முடிவை அவைத் தலைவர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று எல்லா உறுப்பினர்கள் சார்பிலும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி மிகவும் கண்டிக்கத்தக்கது. சட்ட மன்றத்தில் தினமும் இது போன்று நிகழ்ச்சிகள் நடைபெறுவது இந்த மன்றத்தைப் பற்றியும், மற்ற உறுப்பினர்களைப் பற்றியும் மக்கள் மனதிலே ஒரு அருவருப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய பிரச்னைகளைப் பிரதிபலிக்கும் விவகாரங்கள் சட்டமன்றத்தில் விவாதிக்கப்படுவது இல்லை. தினமும் இதுபோன்ற விரும்பத் தகாத சம்பவங்கள் தான் நடைபெறுகின்றன என்ற எண்ணம் மக்கள் மனதில் ஏற்பட்டு நம்முடைய பணிகள் எல்லாம் பயனில்லாமல் போய்விடும் என்பது மட்டுமல்ல, இந்த விரும்பத்தகாத சம்பவங்களுக்கு தொடர்பில்லாத மற்ற கட்சிகள் இந்த மன்றத்திலே இருப்பது பயனில்லாமல் போய்விடும். இந்த நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க சபாநாயாகர் உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, மன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மிகவும் வேதனைத் தரக் கூடிய அளவில் சட்டமன்றத்தில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த சில நாட்களாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மேலும் நடைபெற்றுக் கொண்டிருந்தால் நிச்சயமாக எங்கள் கட்சி தொடர்ந்து

இந்த சபையில் இருக்க இயலாது என்பதை இப்பொழுது தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். திரு. சங்கரய்யா அவர்கள் கூறியது போல் உடனடியாக நீங்கள் பிசினஸ் அட்வைசரி கமிட்டியைக் கூட்ட வேண்டும். மற்ற கட்சிகளும் இதற்கு ஒத்துழைத்தால் ஒழிய இந்த சபையை தொடர்ந்து நடத்த தேவையில்லை என்று கருதுகிறேன். ஏனென்று சொன்னால் மக்கள் பிரச்னை இங்கே விவாதிக்கப்படவில்லை. கட்சிப் பிரச்னை தான் விவாதிக்கப் படுகிறது. ஆளும் கட்சியும், பிரதான எதிர்க் கட்சியும் காழ்ப்பு உணர்ச்சியை இங்கே பிரதிபலிக்கிறார்களே தவிர மக்கள் பிரச்னைகள் இங்கே விவாதிக்கப்படவில்லை. இதற்கு ஒரு பரிகாரத்தை நீங்கள் காணவேண்டும் என்று சொன்னால் உடனடியாக பிசினஸ் அட்வைசரி கமிட்டியை கூட்ட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்களில் ஒருவரான ஜனதா பார்ட்டியைச் சேர்ந்த தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதை ஒரு வகையில் நான் வரவேற்கிறேன். ஆனால் இன்னொரு வகையில் நான் மறுத்து சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சிக்கும், ஆட்சிக் கட்சிக்கும் இடையே உள்ள காழ்ப்பு உணர்ச்சியை காட்டிக் கொள்வதற்காக இந்த அவையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்கிற நோக்கத்தில் அவர்களுடைய பேச்சு வெளி வந்திருக்கிறது. அதை எந்த எண்ணத்திலே சொன்னார்கள் என்பதாக இருந்தாலும் அவர்கள் வெளியிட்ட, அவர்களால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் உள்ளத்திலே பதிந்த அந்தக் கருத்தினுடைய விளைவுகள் ஏதோ மக்களுடைய வரிப்பணத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாத எங்களுடைய அவர்களுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு நாங்கள் விரும்புகிறோம் என்ற வகையில் அவர்கள் பேசியதை உண்மையிலேயே வருத்தத்தோடு நான் எதிர்த்துப் பேசவேண்டியவனாக இருக்கிறேன்.

இதே கருத்தினைத்தான் நான் இங்கே முன்பு விவாதத்தோடு குறிப்பிட்டேன். ஒரு மணி நேரத்திற்கு எத்தனை ஆயிரம் ரூபாய்கள் இங்கே செலவழிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே சொன்னேன் என்பதை நான் அவர்களுக்கு நினைவூட்ட



விரும்புகிறேன். ஏனெனில் அமைதியாக முதல் தொடக்கக் கூட்டங்கள் நடந்தன என்பதும், அந்தத் தொடர் கூட்டங்கள் எப்படி மக்களால் போற்றப்படுகிற அளவிற்கு நடைபெற்றன என்பதும், நாடறிந்த உண்மை. இங்கே இருக்கின்ற அவருக்கும் அது நன்கு தெரியும்.

வெளி நடப்பு செய்கிறோம் என்று சொல்லி தலைவர்கள் வெளியேறுகிற நேரத்தில், அவர்களை அழைத்து என் வருத்தத்தைச் சொல்லி, அமர வைத்து, தொடர்ந்து கூட்டத்தொடரை நடத்திய முறையை அவர்கள் மறந்து இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

அதேபோல் அடுத்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கை உள்ள எதிர்க்கட்சித் தலைவரான திரு. மாரிமுத்து அவர்கள் வருத்தப் பட்டார்கள். அந்த வேதனை எங்களுக்கு இல்லாமல் இல்லை. ஆனால் கடைசியில் நேர்ந்த இந்தப் போராட்டம், வேதனை தரக் கூடிய அளவிற்கு என்று நாங்கள் கருதுகிற இங்கு நடந்த நிகழ்ச்சி, முன்னவர் அவர்கள் அவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பு என்ன என்று கேட்ட ஒரே வார்த்தைக்குத் தான் இவ்வளவு ஒரு பெரிய போராட்டம், கிளர்ச்சி நடந்தது என்பதை மாண்புமிகு ஜனதா கட்சியின் பிரதிநிதிகளாக இங்கு வந்திருப்பவர்களின் தலைவர் அவர்கள் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவைத் தலைவரைப் பார்த்து முன்னவர் அவர்கள் இதற்கு என்ன தீர்ப்பு வழங்குகிறீர்கள் என்று கேட்டதற்குத்தான் இந்தக் குழப்பம் இங்கே ஏற்பட்டது. அவைத் தலைவரைப் பார்த்து—தவறோ சரியோ, சட்டத்திற்கு உட்பட்டதோ' இல்லையோ என்று வாதத்திற்காக ஏற்றுக்கொள்வோம், விவாதத்திற்கு வைத்துக்கொள்வோம்—முன்னவர் உங்களுடைய தீர்ப்பு என்ன என்று கேட்பதற்கு முயன்றால் மற்றவர்கள் எழுந்து நின்று கூச்சல் போட்டு குழப்பம் விளைவித்து, கேவலமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.

உணர்ச்சி மிக்கவர்கள் எந்தக் கட்சியிலும் இருக்கிறார்கள். எல்லோரும் மகாத்மா காந்தியாகவோ அல்லது புத்தராகவோ இந்த நாட்டில் பிறந்துவிடவில்லை என்பதை தயவு செய்து யாரும் மறந்து விடக்கூடாது. ஆனால் அதே நேரத்தில் எந்த அளவிற்குக்

கட்டுப்படுத்திக் கொள்ளமுடியுமோ அந்தளவிற்கு கட்டுப்படுத்திக் கொள்கிற அளவிற்கு ஆட்சிக் கட்சியில் இருக்கிற நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே நேரில் பார்க்கிறீர்கள்.

ஆகவே அவைத் தலைவர் அவர்கள் மூலமாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவைத் தலைவரைப் பார்த்து உங்கள் முடிவு என்ன என்று கேட்கப்பட்டபோது அதற்கு இவ்வளவு குழப்பத்தையும் விளைவித்து, முன்னவரை அவமானப் படுத்தி, குறிப்பேட்டில் குறிப்பிடப்பட முடியாத வார்த்தைகள்— நாம் நல்லவர்கள். நாகரீகமானவர்கள், நேர்மையானவர்கள், உயர்ந்த நிலையில் மக்கள் பிரதிநிதிகளாக வந்திருப்பவர்கள், உச்சரிக்கக் கூடாத வார்த்தைகள் இந்த அவையில் பயன்படுத்தப் பட்டன என்பதை எண்ணி வெட்கப்பட வேண்டிய நிலையில் நாம் இருந்தாலும் ஒன்றை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். வேண்டுமென்றே அவர்களுக்கிற கோபத்திலோ அல்லது இங்கு எடுத்து வைத்திருக்கிற பிரச்னைமீது எடுத்து வைக்கப்பட்ட, விளக்கப்பட்ட பதில்கள் மக்கள் மத்தியில் போய் எந்த நிலைக்கு அவர்களை உள்ளாக்கிவிடுமோ என்ற அச்சத்தால் இந்தப் பிரச்னையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை இங்கே நான் தெளிவாக இங்குள்ள என் மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். கருத்துக்கள்பற்றி பேசி, மோதி, அதனாலோ அல்லது ஒரு வார்த்தை தவறாகப் பேசப் பட்டு, விளக்கப்பட்டு, அதனால் ஏற்பட்ட குழப்பம் அல்லது போராட்டம் அல்ல இது. தலைவர் அவர்களின் தீர்ப்பு என்ன என்று முன்னவர் அவர்கள் கேட்டார்கள். அதனால் ஏற்பட்டது தான் இந்த நிலைமை என்பதை தயவு செய்து இங்கேயிருக்கிற ஜனதா கட்சித்தலைவர் அவர்களும், மற்ற நண்பர்களும் புரிந்து கொண்டு இதுபற்றிப் பேசித் தீர்ப்பதற்கு எந்தக் குழுவில் நீங்கள் பேசித் தீர்க்கவேண்டும் என்று விரும்பினாலும் அமையுங்கள், ஆட்சிக் கட்சியில் இருக்கிற நாங்கள், பொறுப்பில் இருக்கிற நாங்கள் அதற்கு பின்வாங்கவில்லை, ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்



கிறோம். ஆனால் உள்ளத்தால் நீங்கள் எல்லாம் என்ன நினைக்கிறீர்களோ அது அவர்களுக்கும், அந்த நண்பர்களுக்கும் வரவேண்டும் என்று நாம் எல்லோரும் அவர்களை விரும்பி கேட்டுக் கொள்வோம்.

அவர்கள் கருத்துக்களைச் சொல்லட்டும். கருத்துப் போராட்டம் நடந்ததா? சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முன்னாள் முதல்வர், இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் இடையே விவாதம் நடந்து விளக்கங்கள் தரப்பட்டன என்பதைப் பார்த்தோம். இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசும்போது நான் இருபது அம்சத் திட்டத்தைப் பற்றிப் பேசியதைக் குறிப்பிட்டு நான் பதில் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு என்னை ஆளாக்கிவிட்டார் என்பதையும் நீங்கள் கவனித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் உட்கார்ந்து பேசி இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்ற நிலையை நீங்கள் உருவாக்குவீர்கள் என்று நான் நம்புவது போல் அவர்களும் நம்புகிறார்கள். அதுபற்றி பேசி முடிவு செய்யுங்கள். நாங்கள் ஒத்துழைப்போம் என்று சொல்லி, பிரச்னையை எடுத்துக் கொள்கிறவர்கள் யாராக இருந்தாலும்சரி காழ்ப்புணர்ச்சி வந்து ஒரு பிரச்னைமீது முடிவு கட்டுவது என்பது எந்த நல்ல அமைப்பாக இருந்தாலும் கூட அது உதவாது, அது ஒத்தாசை செய்யாது என்பதை இங்கே எடுத்துச் சொல்லி ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட சில காழ்ப் புணர்ச்சி பற்றிய கருத்துக்கள் குறிப்பேட்டில் இருக்கவேண்டு மென்றால் என் பதிலையும் அப்படியே வைத்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி பேசி முடிவு எடுக்க அவைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களானால் நாங்கள் ஒத்துழைப்போம் என்று எங்கள் கட்சி சார்பாகவும், அமைச்சரவை சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை ஒலிபெருக்கியின் மூலமாக கேட்டேன். முற்பகுதி முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்போது அதில் அவர் எடுத்துக் கூறிய விளக்கங்கள் ஏதோ நாங்கள் பதில் சொல்வதற்கு அஞ்சித்தான்

வெளியேறி விடுகிறோம் என்ற கருத்தை தெரிவித்தார்கள். எந்தவிதமான அச்சத்தாலும் நாங்கள் வெளியேறவில்லை. அச்சப்படுகின்ற பரம்பரை அல்ல . . .
(திரு. சோ. பாலகிருஷ்ணன் எழுந்திருந்தார் :—பாயின்ட் ஆப் ஆர்டர் . . ) (எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் சில உறுப்பினர்கள் எழுந்திருந்தனர் . . ) (கூச்சல்—குழப்பம்) தலைவர் அவர்களே, மற்ற கட்சிக்காரர்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை இப்போதே நீங்கள் பார்த்து தெரிந்து கொள்ளலாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள் . . .

**திரு. சு. நல்லதம்பி :** தலைவர் அவர்கள் சொல்வது எங்களுக்கு மட்டும் தானா? அவர்களிடமும் சொல்லுவது தானே . . . நாங்கள் பயப்படவில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொல்லிவிட்டார்கள் . . . இதில் யாரும் யாருக்கும் பயப்படவில்லை . . பாரம்பரியம் உள்ள கட்சி என்று அவர்களே இப்போதுதான் சொன்னார்கள். எல்லோரும் தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் இதை விட்டுவிடுங்கள் . . . .

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். முதலமைச்சர் கூறிய சில விளக்கங்களுக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன். உட்காருங்கள். நான் இதுபற்றி விளக்கமாக பேசுவதற்கு பிஸினஸ் அட்வைசரி கமிட்டியை கூட்டுவதாக சொல்லியிருக்கிறேன். தயவுசெய்து இதற்குமேல் இதன்மீது யாரும் பேசக்கூடாது. நான் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை. இப்போது வெளிநடப்பு ஏற்பட்ட நேரத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளைப் பார்த்து எந்த எந்தப்



பகுதிகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துவிட்டு உத்தரவிடுகிறேன். அதுவரை தவறாக உபயோகப்படுத்தப்பட்ட எந்த வார்த்தைகளையும் பத்திரிகைகள் எதுவும் செய்தியை அனுப்பக்கூடாது என்றும் உத்தரவிடுகிறேன். . .

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் இந்த விஷயத்தில் என்னோடு ஒத்துழைப்புத் தர வேண்டும். தாங்கள் முதலமைச்சர் அவர்களுடைய முழுப் பேச்சையும் கேட்கவில்லை. முற்பகுதியைத்தான் கேட்டீர்கள் என்று தாங்களே சொன்னீர்கள். ஆகவேதான் இதைப்பற்றி எல்லாம் பேசி முடிவு எடுப்பதற்கு பி.எ.ஸி. யை கூட்டவிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் இந்த விஷயத்தை இப்போது இத்துடன் விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**சீரணி.**

*74. **வினா—திரு என். கிட்டப்பா**
**திரு. பெ. சு. திருவேங்கடம்**
**திரு. ஆ. நடராசன்**
**திரு. து. புருஷோத்தமன்**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா, அவர்களால் உருவாக்கப்பட்ட '**சீரணி**' தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றதா ?

**விடை—இல்லை.**

---

* உடுக்குறியிட்ட 74-90 வினாக்களுக்கான **விடைகள்** பேரவை விதி 35 (4)-ன் கீழ் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பட்டுள்ளன.

[1977 டிசம்பர் 30

**ஊராட்சிப் பகுதிகளில் பொது மின்விளக்குகளுக்கான கட்டணம்.**

*75. வினு—திரு. என். கிட்டப்பா

திரு. பெ. சு. திருவேங்கடம்
திரு. என். இராமச்சந்திரன்
திரு. கு. அ. செங்கோட்டையன்
திரு. மு. அம்பிகாபதி
திரு. எஸ். கணேசன்

உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா : மாண்புமிகு

ஊராட்சிப் பகுதிகளில் எரியும் பொது மின் விளக்குகளுக்கான கட்டணத்தை மதிப்பிட மீட்டர் பொருத்தும் முறையை அமுலுக்குக் கொண்டுவர அரசு ஆலோசித்துள்ளதா?

விடை—ஆம். ஆணை 706, பொதுப் பணித்துறை. நாள் 4—5—1977-ல் ஊராட்சிப் பகுதிகளில் எரியும் பொது மின் விளக்குகளுக்கான கட்டணத்தை மதிப்பிட மீட்டர் பொருத்த ஆணை வழங்கியுள்ளது.

**பஞ்சாயத்துக்களைப் பிரித்தமைத்தல்**

*76. விஞு—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, கீரபாளையம் ஒன்றியம், பூந்தோட்டம் பஞ்சாயத்தை வாகூர், பூந்தோட்டம் என்று இரண்டாகப் பிரிக்கக் கேட்டு மனு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?



1977 டிசம்பர் 30]

விடை: (அ) ஆம்.

(ஆ) பூந்தோட்டம் ஊராட்சியை பூந்தோட்டம், வாகூர் என இரு ஊராட்சிகளாக பிரிவினை செய்து 25—10—1977-ல் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.

*77. விஞு—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிதம்பரம் வட்டம், கீரபாளையம் ஒன்றியம், கலியமலை ஊராட்சியை கலியமலை, கந்தகுமாரன் என இரண்டாகப் பிரிக்க 17-9-1973-ல் கீரபாளையம் ஒன்றியத்தில் தீர்மானம் இயற்றி அரசுக்கு அனுப்பப்பட்டதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

விடை: (அ) சிதம்பரம் வட்டம், கீரபாளையம் ஒன்றியம், கலியமலை ஊராட்சியின் 17-9-1973 தேதிய தீர்மானத்தின்படி கலியமலை ஊராட்சியை கலியமலை, கந்தகுமாரன் என இரண்டு ஊராட்சிகளாக பிரித்து ஊரக வளர்ச்சி இயக்குநர் 25—10—1977-ல் ஆணை பிறப்பித்திருக்கிறுர்.

(ஆ) பிரிவினை செய்யப்பட்ட இரு ஊராட்சிகளும் நடைபெறவிருக்கும் ஊராட்சிகளின் சாதாரண தேர்தல் நாள் முதல் செயல்படத்துவங்கும்.

**திருமணிமுத்தா நதியின் குறுக்கே பாலம்**

*78 விஞ—திரு. எம். சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா:

சின்ன சேலம்—கூகையூர் சாலையில் திருமணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு சருக்கல் பாலம் (Causewa ) கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை : இதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

## தஞ்சை—சிதம்பரம் சாலை

*79 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில், தஞ்சையிலிருந்து குடந்தை, மாயூரம் வழியாக சிதம்பரம் செல்லும் அரசினர் நெடுஞ்சாலையினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை: இல்லை.

## நீலகிரி மாவட்டத்தில் புதிய சாலைகள்

*80 வினா திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எத்தனை கிலோ மீட்டர் புதிய பாதைகள் போடப்பட்டுள்ளன?

(ஆ) எந்தெந்த பாதைகள் போடும் வேலைகள் முடிக்கப்படவில்லை?

(இ) அந்த பாதைகளை முடிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை: (அ) முதல் (இ) வரை, ஒரு விவர அறிக்கை* சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## ஒப்பந்த ஊர்திகளுக்கு உரிமம்

*81 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

---

*574ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



சென்னை மாநகரில் எத்தனை தனியார் நடத்தும் ஒப்பந்த ஊர்திகளுக்கு 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன ?

விடை : 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் சென்னை மாநகரில் யார் நடத்தும் ஒப்பந்த ஊர்திகளுக்கு கீழ்க்கண்ட லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| டாக்சி (சாதாரணம்) | 42 |
| சுற்றுலா டாக்சி | 12 |
| ஆட்டோ ரிக்ஷா | 1 |
| சொகுசுப் பேருந்து<br>அனைத்திந்திய சுற்றுலா | 2 |

## தூத்துக்குடி துறைமுகம்

*82 வினா—திரு. என். கிட்டப்பா, திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி பழைய துறைமுகம், புதிய துறைமுகம் இரண்டையும் இணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர மத்திய அரசுக்கு மாநில அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

விடை: மாநில அரசும், மைய அரசும், தற்போது தூத்துக்குடியிலுள்ள பழைய துறைமுகமும், புதிய துறைமுகமும், ஒருங்கிணைந்து, ஒரு தனிப்பட்ட பெரிய துறைமுகமாவதை, கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளன. இந்த ஒருங்கிணைப்பிற்காக அமைக்கப்பட்ட, நடைமுறைச் செயற்குழுவும் (Working Group) அலுவலர் இணைப்புக்குழுவும் Staff Merger Committee) தத்தம் அறிக்கைகளை சமர்ப்பித்துவிட்டன. நடைமுறை செயற்குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளை ஒப்புக்கொள்ள, மாநில அரசு தீர்மானித்து, மைய அரசு கப்பல் போக்குவரத்து இலாக்

காலை மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்பரிந்துரைகள் தற்சமயம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன.

## நாகப்பட்டினம் துறைமுகத்தில் கொட்டகை வசதி

*83 வினா.—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிறு துறைமுகங்களில் கப்பலில் ஏற்றுமதி செய்வதற்கு முன்பாக வெங்காயத்தை சேமித்து வைக்கவும், ஏற்றுமதியாளர்களுக்கு வாடகைக்கு விடவும் நாகப்பட்டினம் துறைமுகத்தில் கொட்டகை கட்டும் திட்டத்தை தற்சமயம் மத்திய அரசு காய்கறிகளை ஏற்றுமதி செய்யும் விஷயமாய் புதிய கொள்கை அறிவித்திருப்பதை ஒட்டி, நிறுத்திவைக்கப்பட்டு உள்ளதா?

விடை.—இல்லை.

## விதவைத் திருமணங்கள்

*84 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விதவைத் திருமணத்தை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்ன?

விடை: விதவைகள் திருமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக அரசு 18-30 வயதுள்ள விதவைகளுக்கு மறுமணத்தை முன்னிட்டு ரூ. 5,000 அளிக்கிறது. மேற்படி ரூபாய் 7 வருட தேசிய சேமிப்பு பத்திரங்களாக தம்பதிகளின் பேரில் வழங்கப்படுகிறது.

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்

*85 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கை என்ன?

விடை—உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:—

(அ) மூன்று சக்கரவண்டிகள் வழங்குதல்.

(ஆ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல்.

(இ) முட்டுக்காட்டில் இயங்கி வரும் பயிற்சி மற்றும் உற்பத்தி தொழிற் பட்டறை.

(ஈ) 'ஸ்தீரீ சேவா மந்திர்' எனும் நிறுவனத்தில் உடல் ஊனமுற்ற பெண்களுக்கு பயிற்சியளித்தல்.

(உ) உடல் ஊனமுற்றோர்க்கு சிறப்புப்பள்ளிகள் மூலம் கல்வி.

(ஊ) மருத்துவ மனைகளுடன் இணைந்த பள்ளிகள்.

(எ) சிறு கடைகள் தொடங்குவதற்கு உதவி.

(ஏ) முதியோர் ஓய்வு ஊதியம்.

(ஐ) ஊனமுற்றோர்க்கு பணியாற்றும் நிறுவனங்களுக்கு நிதி உதவியளித்தல்.

(ஒ) காது கேளாதோர் மற்றும் மன வளர்ச்சியற்றவர்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிறுவனங்களுக்கு நிதி உதவி.

(ஓ) உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகங்கள்.

## திருச்சி மாவட்டத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்.

*86 வினா.—திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் ஒரு தொழு நோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை: இல்லை.

## புதிய கால்நடைப் பண்ணை

* 87 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை அபிவிருத்திப் பண்ணை ஒன்றினை தஞ்சை மாவட்டத்தில் உருவாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை.—

தஞ்சை மாவட்டத்தில் மற்றுமொரு கால்நடைப் பண்ணையை உருவாக்கும் செயற்குறிப்பு இல்லை. தஞ்சை மாவட்டத்தில், ஈச்சங்கோட்டை என்ற இடத்தில் உயர் இன கால்நடை அபிவிருத்தி பண்ணை ஒன்றினை நிறுவிட 1976 பிப்ரவரியில் மத்திய அரசு ஆதரவுள்ள திட்டத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது.

* 88 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலில் 'கால்நடைப் பண்ணை' ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை.—கொடைக்கானலில் ஒரு கால்நடைப பண்ணை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் தற்பொழுது இல்லை. இந்திய விவசாய ஆராய்ச்சி குழுவினால் நடத்தப்படும் ஆடு மற்றும் கம்பளி மயிர் ஆராய்ச்சி கிளை நிலையம் ஒன்று கொடைக்கானல் குன்றுகளில் மன்னவனூர் என்னுமிடத்தில் இயங்கி வருகின்றது.



## கைத்தறி நூல் விலை

* 89 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நூல் விலையை குறைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

விடை—சென்ற சில மாதங்களாக நூல் விலை உயர்வாக இருந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் பருத்தி விலை ஏற்றமும் பற்றுக் குறையுமே. பருத்தியின் பற்றுக்குறை, விலை உயர்வு முதலியவற்றை தவிர்க்கவும், நூலின் விலையை ஸ்திரப்படுத்தவும் இந்திய அரசு பருத்தியை அதிக அளவில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மற்றும் இந்திய அரசின் மல்டிஃபைபர் கொள்கையும் இதற்கு உதவியாக இருக்கிறது. மேலும் 17—8—1977 அன்று டெல்லியில் வர்த்தக அமைச்சரின் தலைமையில் பருத்தி நூல் விலையை கட்டுப்படுத்த ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இந்திய வர்த்தக மந்திரி தலைமையில் 15 பேர் கொண்ட கண்காணிப்புக்குழு (வாட்ச் டாக் கமிட்டி) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழு நூல் விலைகள் பொருளாதாரத்திற்கு ஏற்றாற்போல் இருக்கும் படியும் திடீரென அதிகப்படியான விலை உயர்வோ, சரிவோ ஏற்படாத வகையிலும் கண்காணித்து வரும் என்றும் மத்திய வர்த்தக மந்திரி அறிவித்துள்ளார். நூல் விலையை ஸ்திரப்படுத்த மேற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி, தமிழக அரசு மத்திய அரசுடன் கலந்து அவ்வப்போது ஆவன செய்யும்.

## விசைத்தறித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்

* 90 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை.—(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் குறிப்பு எதுவும் தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அவையில் நடந்த நிகழ்ச்சியில் எந்தப் பகுதி தாங்கள் பதிவேட்டில் இடம் பெறக் கூடாது, பத்திரிகையில் வரக் கூடாது என்று தாங்கள் சொல்லுகிறீர்கள் என்பதை தயவுசெய்து சற்று விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்பு செய்து போகும்போது சில தவறான வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டன. அந்த வார்த்தைகளை வெளியிடக் கூடாது. பதிவேட்டிலும் இடம் பெறக்கூடாது, அவை எந்தெந்த வார்த்தைகள் என்பதை நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்தபின் சொல்லுகிறேன், அதுவரை இந்த வார்த்தைகளை வெளியிடக் கூடாது என்று நான் உத்தரவிடுகின்றேன். மற்றபடி முதலமைச்சர் அவர்கள் பேசியது எல்லாம் இருக்கலாம். இதைப்பற்றியெல்லாம் கூடவிருக்கிற பி.எ.ஸி.-யில் முடிவு எடுக்கலாம் என்று தீர்ப்பு தந்திருக்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## (2) தகவல் கோரல்.

### (அ) முதலமைச்சர் பொறுப்பேற்றிருக்கும் துறைகள் சம்பந்தப் பட்ட வினாக்களை எடுத்துக் கொள்வது குறித்து.

**திரு. மு. கருணாநிதி:** கேள்வி நேரம் முடிவுற்றதால், கேள்விகளையொட்டிய ஒரு தகவல் கேட்க விரும்புகிறேன். இந்த அரசில் மக்கள் நல்வாழ்வுத்துறை, தொழில் துறை, இந்து அற நிலையத் துறை, பொதுத் துறை போன்ற நான்கைந்து துறைகளை பொறுப்பேற்று வைத்திருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கு எதிர்கட்சி சார்பில் பல கேள்விகள்—மூலக் கேள்விகள் அனுப்பப் பட்டிருக்கின்றன. இப்போது நமது சபை, 28, 29, 30 என்று மூன்று நாட்கள் கேள்விகள் நேரம் நடந்து முடிந்திருக்கிறது. 31-ம் தேதி பட்டியலிலும் வந்துவிட்டது. அதிலும் முதலமைச்சர் அவர்களுக்கான கேள்விகள் இடம் பெறவில்லை. எப்போது இடம் பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆறு மாதங்கள் ஆயிற்று . . . )

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** 2-ம் தேதியிலிருந்து தொடர்ந்து வரும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### காவிரிப் பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர் விடாததால் பயிர்கள் பாதிக்கப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் 42-வது விதியின் கீழ் திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, மு. அம்பிகாபதி, மணிமாறன் ஆகியோர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

"காவிரிப் பாசனப் பகுதிகளில் போதிய தண்ணீர் விடாத காரணத்தால் பெரும்பாலான இடங்களில் நெல் பயிர்கள் பட்டுக் கொண்டிருக்கும் நிலை பற்றி"

விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

(பேரவைத் தலைவர்) [1977 டிசம்பர் 30

இது எப்படி பேரவையின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, காவிரிப் பாசனப் பகுதிகளிலே. ஆரம்பத்திலே போதிய தண்ணீர் இடைக்காத காரணத்தினாலும், விவசாயம் நேரத்தோடு செய்ய முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருந்தது. காலந் தாழ்ந்து சாகுபடி செய்து, குறுவை அறுவடைக்கு வருவதற்குள் பெரும் மழை, புயல் அடித்த காரணத்தினாலும் குறுவை எல்லாம் பயிராகி, சாகுபடி செய்து, அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் மிகவும் தொந்தரவுக்குள்ளாகி வந்தார்கள். இதற்குப் பிறகும், அழிந்த பயிர்களை எப்படியோ சிரமப்பட்டு, ஒருசிலர் நடவு நட்ட இடங்களிலும், போதிய தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் இப்போது பயிர்கள் எல்லாம் காவிரிப் பாசனப் பகுதிகளிலே வாடிக் கொண்டிருக்கின்றன. முதலிலே தண்ணீர் இல்லாமல் சிரமம். பிறகு பெரும் வெள்ளத்தாலே சிரமம். இப்போது தண்ணீர் இருந்தும் தண்ணீர் வராமல் பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்றன. இந்த அவல நிலை எப்படி ஏற்பட்டது? என் என்பது எனக்கு மிகுந்த விசித்திரமாக இருக்கிறது.

புயல்—வெள்ளத்தின் போது காவிரியில் உடைப்பு ஏற்பட்டது. அந்த உடைப்பை சரி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவ்வளவு நாள் ஏன் தாமதம் ஏற்பட்டது? இப்படி வெள்ளங்கள் ஏற்படுகின்ற நேரங்களிலே, வயல்களில் போதிய தண்ணீர் இல்லாமல், வயல்கள் எல்லாம் வறண்டு, வரப்புகள் எல்லாம் உடைந்து போயிருக்கும். அதைச் சரி செய்வதிலே விவசாயிகள் எவ்வளவு அக்கறை காட்டினாலும், திரும்பவும் அங்கே தண்ணீர் விடவேண்டுமென்பது நமக்கு நீண்ட நாட்களாகக் கிடைத்திருக்கின்ற அனுபவம்.

ஆகவே, வெள்ளம் அடித்து, பின்னர் வெள்ளம் வடிந்தவுடன் நிலங்கள் எல்லாம் காயும் என்று நமக்குத் தெரியும். இந்த உடைப்புகளை எல்லாம் நேரத்திலே கட்டப்பட்டு, தண்ணீர் விடாத காரணத்தினால், இன்றைக்குப் பயிர்கள் எல்லாம் வாடி



1977 டிசம்பர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அதை நம்பிக் கொண்டிருக்கின்ற விவசாயிகள் அத்தனைபேரும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த நடைமுறையிலே காவிரிப் பாசனத்தை நம்பியிருக்கும் விவசாயிகள் அத்தனைபேரும் அடுத்த ஆண்டு நாம் எப்படி வாழப் போகிறோம் என்ற சங்கடமான நிலையில் இருக்கிறார்கள். கழிமுகத்திலே உள்ள தாளடிப் பயிர்களும் வாடிப் போகக்கூடிய ஒரு மோசமான நிலைமையில் இருப்பதால், இந்த நிலைமைகளைப் பற்றி விவாதிப்பதற்காக, இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. மு. அம்பிகாபதி:** பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ் நாட்டில் 12—11—1977 அன்று வீசிய புயல், பெருமழையின் காரணமாக கல்லணைக்கு மேலே, கிளிக்கூடு பகுதியிலும், மற்றப் பகுதிகளிலும் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. கடந்த 26—12—1977 வரை தஞ்சை மாவட்டத்திலே, கல்லணைப் பகுதியிலும், மன்னார்குடி வட்டத்திலும், பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய வட்டங்களிலுள்ள பெரும்பகுதி களிலும் உடைப்பு சம்பந்தமான சீரமைப்பு வேலை நடைபெறாமல் அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறது.

புயலால் பாதிக்கப்பட்டு, சம்பாப் பயிர்கள் தண்ணீர் இன்றி சேதமாகியிருக்கிறது. கதிர் விடுகின்ற நேரத்தில், இப்படித் தண்ணீர் இல்லாமையால் எல்லாப் பயிர்களும் சாவியாகக்கூடிய நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது.

எனவே, இந்த நிலைமைகளை எல்லாம் அரசு பரிசீலித்து, அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு அரசுக் கடனுகை இருந் தாலும், அல்லது கூட்டுறவு சங்கக் கடனுகை இருந்தாலும், 1387 ஆம் பசலியில் வசூல் செய்வதை தள்ளுபடி செய்ய வேண்டு மென்றும் உடைப்பு ஏற்பட்ட கால்வாய்களையெல்லாம் சரி செய்வதற்கு தமிழக அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்காமல் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும், அந்தப் பகுதிகளிலே எவ்வளவு தூரம் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்

[திரு. மு. அம்பிகாபதி] [1977 டிசம்பர் 30

பற்றி விளக்கமாக விவாதிப்பதற்காகவும், விவசாயத் தொழிலாளர் வேலையிழப்பு பற்றியும் விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாமன்றத்தின் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாசனத் துறைக்கு இரண்டு எக்சிகியூடிவ் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். இந்த புயல்—வெள்ளம் வருவதற்கு முன்பே, காவிரிப் பாசனப் பகுதியில் பணியாற்றிக் கொண்டு வந்த ஈ. ஈ. லீவில் போய் விட்டார்கள், அப்படி அவர் லீவில் போய்விட்ட பிறகு, கடந்த ஆறு மாத காலமாக அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை போடாததன் காரணமாக, புயல்—வெள்ளம் ஏற்பட்ட பிறகும் கூட அங்குள்ள பாசனப் பகுதிகள், கால்வாய்ப் பகுதிகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன.

அது மட்டுமல்ல. காவிரிப் பாசனப் பகுதி எக்சிக்யூடிவ் என்சினியருக்காக அலாட்மெண்ட் செய்யப்பட்டிருந்த தொகை, வெண்ணார் டிவிஷனுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10.30]

ஆனால் காவிரியைப் பொறுத்தவரை, காவிரிப் பாசனத்தைப் பொறுத்தவரை பொறுப்பான ஈ.ஈ. அவர்கள் ஆறு மாத காலம் விடுப்பில் இருந்த நேரத்தில் இந்த அரசு தகுதியான ஒருவரை அந்த இடத்தில் போட்டு நிரப்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானம் ஏன் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்து சுருக்கமாகக் கூறுங்கள்.

**திரு. மா. மணிமாறன் :** அக்டோபர் மாதம் 24 ஆம் தேதியே முதலமைச்சர் அவர்களுக்கு * தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்ததால் உடைப்பு ஏதேனும் ஏற்படும் என்று அமைச்சர் அவர்களுக்கு *

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1977 டிசம்பர் 30]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** எனக்கு ஒரு சந்தேகம். * என்ற வார்த்தையை பயன்படுத்தலாமா? தயவுசெய்து அவைத் தலைவர் அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆலோசனை என்று சொல்லலாம். கருத்தாகச் சொல்லலாம். * என்ற சொல்லிலே அவர் போதிக்கிறார் என்று அர்த்தமாகிறது. அவர் மாஸ்டராகவும் இவர் ஸ்டூடண்டாகவும் ஆகிறது. அந்த வார்த்தையை அமைச்சரைப் பார்த்துச் சொல்லக்கூடாது. அந்த வார்த்தையை எடுத்துவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** முன்னறிவிப்பு என்று மாற்றிக் கொள்கிறேன். நான் அவ்வளவு சிறந்தவன் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. அக்டோபர் 24 ஆம் தேதி அந்த அறிவிப்பை அனுப்பியிருக்கிறேன். மழை, வெள்ளம் இருந்தும் முன் கூட்டியே முன்னேற்பாடான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், காவிரியில் ஏற்பட்ட உடைப்பை ஒழுங்கான முறையில், உரிய நேரத்தில் அடைக்காத காரணத்தால் இன்றைக்குத் தஞ்சை மாவட்டம் பொட்டல் வெளியாகக் காட்சியளிக்கிறது. தற்போது ஒத்திவைத்திருக்கும் கடன்களைத் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பின்னாலே எந்த வகையில் கட்டுவது என்று தெரியாத அளவுக்கு வாடிக் கொண்டிருக்கிறார்கள். தாளடி பிழைக்குமா பிழைக்காதா என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்பது பற்றிச் சுருக்கமாகப் பேச வேண்டும். எவ்வளவு நேரம் இப்படிப் பேசிக் கொண்டிருப்பது? சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. மா. மணிமாறன் :** இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க இந்த மன்றத்தில் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியாற்றில், அண்மையில் ஏற்பட்ட புயலின் காரணமாகவும் மழையின் காரணமாகவும் எதிர்பாராத அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்தது. 13-ம் தேதி மாலையே

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-30-ல் ஒரு சொல் அகற்றப்பெற்றது.

வெள்ளம் ஏராளமான அளவில் காவிரியாற்றில் வர முற்பட்டது. இதற்கு முன்னால் காவிரியாற்றில் அதிகமான அளவுக்கு வெள்ளம் வந்தது 1961 ஆம் ஆண்டில்தான். 13 ஆம் தேதி மாலை ஆறு மணி அளவுக்கு 1961 ஆம் ஆண்டில் வந்த வெள்ளத்தின் அளவுக்குமேல் ஒரு அடி உயரம் அதிகமாகவே தண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. இரவு 11 மணி அளவில் கல்லணைக்கு மேலே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கிளிக்குடி என்ற ஊருக்கு அருகில் இரண்டு உடைப்புகள் ஏற்பட்டன. ஒரு உடைப்பானது 150 அடி அகலமும், இன்னொரு உடைப்பு 450 அடி அகலமும் ஆகும். 450 அடி அகல உடைப்பு ஏற்பட்ட அந்த இடம் கிட்டத்தட்ட காவிரியே தன் போக்கை மாற்றிக்கொண்டு கொள்ளிடத்தில் சேருகின்ற நிலைமை உருவாயிற்று. அதோடு மட்டுமல்ல; இந்த அளவுக்குப் பெரிய உடைப்பு இதுவரையில் காவிரியாற்றில் ஏற்பட்டது இல்லையென்று காவிரி வரலாறு கூறுகிறது. சுமார் 18 அடி ஆழம், 50,000 கன அடி தண்ணீர் ஒரு வினாடிக்கு வந்து கொண்டிருந்தது. ஒரு வினாடிக்கு 15 அடி வேகத்தில் அந்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று.

இந்த உடைப்பை அடைக்க வேண்டுமென்று பொதுப் பணித் துறையினர் முற்பட்டனர். முதலிலே ஏற்பட்ட சிறு உடைப்பை அடைத்துக் கொண்டுதான் இந்தப் பெரிய உடைப்பை அடைக்க வேண்டி வந்தது. முதலிலே இருக்கும் அந்த உடைப்பை அடைக்கப் போகிற வழியில் ஒரு பெரிய மரமே வேரோடு பிடுங்கி எறியப்பட்டு அது குறுக்கே இருந்தது. அதை வெட்டி நீக்கிவிட்டு அந்த உடைப்பை அடைத்துவிட்டு அதற்குப் பிறகு, இந்தப் பெரிய உடைப்பை அடைக்கும் வேலையில் நிபுணர்களும், அங்கிருக்கும் தொழிலாளர்களும், அதைப் போல் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களும் தீவிரமாகப் பணியாற்ற முற்பட்டார்கள். 13-ம் தேதி இந்த உடைப்பு ஏற்பட்டது. 14, 15 ஆகிய இரண்டு தேதிகளிலும் தண்ணீர் மிகவும் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதிலே இறங்கி எதுவுமே செய்ய முடியவில்லை. அதற்குப் பிறகு சுமார் நாலு லட்சம் அளவுக்கு கோணிப் பைகளில் மணலை நிரப்பி அந்த மூட்டைகளைக் கொண்டும், பல லட்சக்கணக்கான சவுக்கு மரங்களைக் கொண்டும் பல்வேறு பொறியாளர்கள் அந்த வேலையிலே ஈடுபட்டு அந்த உடைப்பை



அடைக்க பொதுப்பணித் துறையினர் முயற்சித்தனர். அதிலே நாம் நியமித்த வெள்ள நிவாரண வேலைகளுக்கு என பணியாற்றக்கூடிய தலைமைப் பொறியாளருடைய தலைமையகத்தை நாம் திருச்சியிலே போட்டதும் ஓரளவிற்கு நல்லதாகத்தான் போனது. அப்படிப் போட்டதால் தலைமைப் பொறியாளரின் நேரடி கவனத்திலேயே அந்த வேலைகள் நடந்தன.

அந்த வேலைகள் நடைபெற்றதற்குப் பிறகு, அந்த வேலைகள் முடியுந்தறுவாயில் இருந்தபோது, போடப்பட்டிருந்த ரிங் பெண்ட்ஸ் உடைப்பெடுத்துக் கொண்டன. அதைச் செப்பனிடுவதற்கு மெத்த சிரமங்கள் ஏற்பட்டன. உங்களுக்குத் தெரியும், இந்தக் காலம் குளிர் காலம், தண்ணீர் மார்பளவிற்கு மேல் போய்க் கொண்டு இருக்கிறது. அங்கே முதலைகள், ' முதலைப்பண்ணை உடைந்து விட்டதால், காவிரியில் கொள்ளிடத்தில் முதலைகள் இருக்கின்றன, அது பற்றிய பயம் வேறு. சுமார் 2,500 பேர்கள் அதிலே ஈடுபட்டு இரவு பகலாகப் பணியாற்றி அந்த உடைப்பை அடைத்திருக்கிறார்கள். இப்போது 21 ஆம் தேதியிலிருந்து படிப்படியாகத் தண்ணீர் விட ஆரம்பித்து கடந்த 2, 3 தினங்களாக 28 ஆம் தேதியிலிருந்து முழு அளவிற்கு 25 ஆயிரம் கன அடி வினாடிக்கு விடப்படுகிறது.

காவிரியில் 6,800 கன அடிகளும், வெண்ணாற்றில் 5,800 கன அடிகளும், கல்லணைக் கால்வாயில் 2,000 கன அடிகளும் வினாடிக்கு இப்போது விடப்படுகிறது. ஏற்பட்டுவிட்ட உடைப்பு எதிர்பாராத அளவிற்கு மிகப் பெரிய உடைப்பு என்ற காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டதே ஒழிய வேறு ஒன்றும் அல்ல. எல்லோரும் மிகச் சிறப்பாக ஈடுபட்டு உடைப்பைச் சரி செய்திருக்கிறார்கள் என்பதை அண்மையிலே வந்த பத்திரிகை செய்தி குறிப்பிட்டு நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்துப் பத்திரிகையிலே 2 தினங்களுக்கு முன்னாலே

'one must see it to believe the arduous and challenging task the Tamil Nadu P. W. D. Engineers have so far successfully completed.

They work with the realisation that the breach should be closed and the Cauvery water made available for irrigation in five weeks.

என்று சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1977 டிசம்பர் 30

1921 ஆம் ஆண்டில் இதேபோன்று ஒரு உடைப்பு ஏற்பட்ட போது அதை அடைக்க 3 மாதம் ஆகியிருக்கிறது. 1961 ஆம் ஆண்டிலே ஏற்பட்டபோது 2 மாதத்தில் அதை முடித்து இருக்கிறார்கள். உடைப்பு பெரியதாக இருந்தாலும் 1 மாதத்திலே முடித்து இருக்கிறார்களே அவர்களை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் பாதிப்புக்கு ஆளாகியிருந்தார்கள் என்றாலும் இப்போது பாதிப்பு ஏற்படாத வகையில் உடைப்புகள் சரிப்படுத்தப்பட்டு அறுவடைக் காலம் வரையில் தண்ணீர் விடுவதற்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளச் சேதம் பற்றி ஏற்கெனவே விவாதம் இங்கே நடைபெறுகிற காரணத்தால் இந்த அவையை ஒத்திவைத்து இதை விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டியது தேவையில்லையென்ற காரணத்தினால், இதற்கு இசைவு தர மறுக்கப்படுகிறது.

**(4) புயல் வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை மீதான விவாதம் (தொடர்ச்சி)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து புயல், வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை மீதான விவாதம், திரு. செ. சதாசிவம்.

***திரு. செ. சதாசிவம்:** தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் புயல், வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரையில் வைக்கப் பட்டிருக்கிற வெள்ளை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்த உங்களுக்கு நான் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நவம்பர் மாதம் 12 ஆம் தேதி ஏற்பட்ட புயலின் காரணமாக பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டு இந்த மாநிலத்தின் ஏழை எளிய மக்கள் துயரத்திலே ஆழ்ந்து இருந்தார்கள்.



1977 டிசம்பர் 30] [திரு. செ. சதாசிவம்]

(முற்பகல் 10-40)

நான் என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். காரணம், தமிழகத்திலேயே அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் என்னுடைய தொகுதியைப்பற்றி இங்கு உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியானது அரவக்குறிச்சி பகுதியைச் சேர்ந்தது. ஆனால், அது பெரியதாக விளம்பரப் படுத்தப்படவில்லை என்ற அச்சம் இருந்தாலும், அரசு அதற்கு ஆவனவற்றைச் செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், குடகனாறு அணை, வேடசந்தூர் பகுதி என்று பெரிய எண்ணத்தைத் தோற்றுவித்த நேரத்திலே, தமிழ்நாட்டிலேயிருந்து பல்வேறு பகுதிகளிலிருந்தும், அந்தப் பகுதிக்கு ஏராளமான உதவிகளைச் செய்ய முன் வந்த நேரத்தில் என்னுடைய குடகனாறு பகுதி அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதி என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆனால், அதே நேரத்திலே, வெள்ளச் சேதத்தின் பாதிப்பை நீக்க பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், அங்கே பணிபுரிகின்ற அடிசனல் கலெக்டர் அவர்களும், மற்றும் அங்கு பணிபுரியக் கூடிய என்னுடைய தாலுக்காவிலே இருக்கின்ற உதவி கலெக்டர் அவர்களும், ரெவின்யு அதிகாரிகளும் மிகவும் அரும்பாடுபட்டு பல்வேறு திட்டங்களைச் செய்வதற்கான உதவிகளைச் செய்ததற்காக முதலிலே என்னுடைய நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், 12 ஆம் தேதி இரவு $12\frac{1}{2}$ மணிக்கு அந்த வெள்ளம் எங்கள் பகுதியைத் தாக்க ஆரம்பித்தது. அதற்குப் பிறகு இரண்டு நாட்களுக்கு அந்தப் பகுதி தீவு போன்று ஏற்பட்டுவிட்ட நிலைமையின் காரணமாக வெளியுலகத்தோடு தொடர்புகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் வெளியிலே செல்ல முடியாத நிலைமை இருந்தது. 14 ஆம் தேதியன்றுதான் அடுத்த பகுதிக்குச்

செல்ல முடிந்தது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் அங்கே மூன்று ஆறுகளால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பெரிதாகப் பேசப்படும் குடகனாறு, மற்றொன்று நங்காஞ்சி ஆறு, இன்னொன்று அமராவதி ஆறு.

(திரு. பண்ணை கே. சேதுராம் தலைமை)

இந்த மூன்று ஆறுகளில் என்னுடைய கிராமத்திற்கு மேல் பகுதியில் நங்காஞ்சி ஆறும், கீழ்ப் பகுதியில் குடகனாறும் அமரா வதி ஆற்றில் கலக்கிறது. இதனால் பல்வேறு சேதங்கள் ஏற்பட் டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடகனாறு என்று பேசப்படும் நேரத்தில் அதற்கு மேல் உள்ள நிலைமையையும் அதற்குக் கீழ் உள்ள நிலைமையையும் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். குடகனாறு அணைக்கு மேலாக லட்சுமணன்பட்டி என்ற இடத்திலும், கீழ்க்கரையிலே வரும் காட்டாறு, ஓடைகளின் மூலமாகவும், அதற்குமேல் 18 குளங்களை உடைத்துத் தண்ணீர் வந்து அந்தப் பகுதியிலே ஏராளமான சேதம் ஏற்பட்டிருக்கிறது. உயிர்ச் சேதம் அதிகம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆற்றில் தண்ணீர் வேடசந்தூருக்கு மேலே குடகனாற்றில் கலக்கிறது. குடகனாற்றுக்கு மேல் கரையிலே உள்ள 5 குளங்களும் உடைப்பெடுத்து அந்த வெள்ளம் குடகனாற்றுக்கு வரும் சமயத்திலே மேல் பகுதியிலே உள்ள வேடசந்தூருக்கும் மேலே உள்ள கரைகளிலே உள்ள ஊர் களையெல்லாம் அடித்து வந்து குடகனாற்றோடு கலக்கிறது.

அதுமட்டுமல்லாமல், வெள்ளை அறிக்கையிலே கூறுவதைப் போல 10 அங்குலமும், அதற்குமேலே முக்கால் மணி நேரத்தில் 4 அங்குலம் என்றும் மழை பெய்து தண்ணீர் அடித்து வந்து, எல்லாத் தண்ணீரும் குடகனாறு அணையைத் தாக்குகிறது. அந்தத் தண்ணீர் குடகனாற்று அணையிலே வந்து சேரும் நேரத் திலே பல்வேறு பிரச்னைகள் எழுகின்றன. அதற்குள்ளே உள்ள பிரச்னைகளிலே நான் செல்ல விரும்பவில்லை. அதற்குக் காரணம். அதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு விசாரணையில் இருக்கிறது.



அங்கே இருக்கின்ற நிலைமைகளைச் சொல்லும் நேரத்தில், ஷட்டர்களை தூக்கியிருந்தால் அணை உடைந்திருக்காது என்று சொல்கிறார்கள். 5 ஷட்டர்களையும் தூக்கியிருந்தால் 45,000 கியூசெக்ஸ் தண்ணீர் ஆற்றிலே அனுமதிக்கப்பட்டிருக்கும். அந்த 45,000 கியூசெக்ஸ் முதலிலே வந்திருந்தால் கீழே உள்ள சேதம் குறைந்திருக்கும் என்ற எண்ணம் சிலருக்கு இருக்கிறது. இதைப் பற்றி ஆராய்ச்சி செய்கின்ற காலத்திலே இதை அறிய வேண்டும்.

ஆனால், சேதம் குறைந்திருக்கமுடியுமா என்ற நிலையை கமிட்டி ஆராய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அங்கு கொள் அளவுக்குமேல் 3 மடங் குக்கும் அதிகமாகத் தண்ணீர் வந்ததன் காரணமாக, அந்த அணை உடைந்து இருக்கும். ஏன் இதைச் சொல்கிறேனென்றால், குடகனாறிலே வருகிற தண்ணீர், வேடசந்தூர் அணை உடைந்ததன் காரணமாக, எங்கள் பகுதியிலே 25 மைலுக்குப் பாய்ந்து பெரிய வெள்ளக்காடாகியது. அது மட்டுமல்ல, அவர்களது உடைமைகளும் பரிபூரணமான நிலையில் பறிபோய்விட்டன. குறிப் பாக, அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரவு 12½ மணிக்குத் தண்ணீர் சுற்றி வந்து அவர்களை மடக்கி விட்டதன் காரணமாக, தங்களிடத்திலே உள்ளவைகளை எல்லாம் விட்டுவிட்டு, தங்களைக் காப்பாற்றிக்கொள்ள தத்தளித்த நிலையில், உடைமைகளைக் காப்பாற்ற முடியாத சூழ்நிலையில் உயிர் காக்கத் தப்பி ஓடினார்கள். அவர்களுடைய கால்நடைச் செல்வங்கள் அழிந்து விட்டன.

அதோடு மட்டுமல்ல, அங்கு விவசாயமே செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாய மக்கள் தாங்கள் பட்ட கஷ்டங்களை, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு வந்தபோது, கண்ணீர் விட்டுச் சொன்னார்கள். நம்மு டைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த மக்களுடைய துயரத் தைத் துடைத்தார்கள் என்பதற்காக மகிழ்கிறேன். நம்முடைய அமைச்சர் மாண்புமிகு செளந்தரபாண்டியன் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு எட்மண்ட்

[திரு. செ. சதாசிவம்] [1977 டிசம்பர் 30

அவர்களும் அந்தப் பகுதிக்கு வந்து, அங்கே உறுதிமொழி கூறியது மகிழ்ச்சி அளிக்கிறது. என்றாலும், முதலமைச்சர் வந்திருந்தால் மிகவும் நலமாக இருந்திருக்கும். ஒரு முறை அவர் அங்கு வந்து பார்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

குடகனாறு பகுதியிலும், நங்கஞ்சி பகுதியிலும் பல இடங்கள் அடித்துச் செல்லப்பட்டன. குடகனாறு பகுதியில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஊர்கள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அங்கே ஊர்களே கிடையாது அளவுக்கு, அழிக்கப்பட்டிருக்கின்றன. மணல் மேடிட்டு, அங்கிருந்த இடமே தெரியாத அளவு ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே மட்டும், கிட்டத்தட்ட 3,000-க்கு மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள். ஆனால், அரசினுடைய நிர்வாக அதிகாரிகளுடைய நல்ல முற்போக்கு திட்டத்தின் காரணமாக, 2,608 வீடுகளுக்கு, தலா ரூ. 200 வீதம் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டசபைக்கு வருகிற வரையிலே நான் வேறெங்கும் போக முடியவில்லை. அங்கிருக்கிற மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற மனப்பான்மையிலே அப்பகுதிகளில் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகாரிகள் செய்துவருகிற நல்ல காரியங்களைப் பார்த்தேன். அவர்களுக்கு ஒரு வீட்டுக்கு ரூ. 200 கொடுத்து விட்டால் போதும் என்று என்னால் சொல்ல முடியவில்லை. ரூ. 200 தாராளமாகக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும், அந்தப் பகுதி நன்கு கவனிக்கப்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அங்கேயிருக்கிற விவசாயிகள் தங்களுடைய பொருள்களை இழந்த நிலையில், தங்களுடைய வாழ்வை எப்படி நடத்துவது என்று ஏங்கிக் கிடக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுடைய விளை நிலங்கள் எல்லாம் பாழாகி விட்டன. 3,000 ஏக்கர் அளவிற்கு மண் மேடிட்டும், மண் அரிப்பு ஏற்பட்டும், அவைகளையெல்லாம் இழந்து விட்டார்கள். அந்த இடங்கள் மீண்டும் விவசாயத்திற்கு இலாயக்கற்ற முறையிலே இருக்கின்றன. அவைகளை விவசாயத்திற்கு இலாயக்கான முறையிலே மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 டிசம்பர் 30] [திரு. செ. சதாசிவம்]

மண் மேடிட்டதற்காக, 5 ஏக்கர் புஞ்சை நிலங்களும், 2½ ஏக்கர் நஞ்சை நிலங்களும் வைத்திருந்தவர்களுக்கு பூரணமாக மானியமாகக் கொடுப்பதற்கும் 5 ஏக்கருக்கு மேலே வைத்திருப்பவர்களுக்குப் பாதித் தொகை மட்டும் மானியம் என்ற அளவிலே கொடுப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. எங்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே, 60 ஏக்கர் வைத்திருப்பதும், காவேரி டெல்டா பகுதியிலே வைத்திருக்கிற 5 ஏக்கர் நஞ்சைக்குச் சமமாக ஆக முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்தப் பகுதியிலே மண் மேடிட்டவற்றைச் சீர் செய்ய ஆகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ள முன் வரவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

அதே நேரத்திலே இங்கே மண் மேட்டை எடுப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நில அடமான வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏராளமான கடன்களைப் பெற்றிருக்கிறோம். கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு அவர்களிடம் நிலம் இல்லை. அதற்கும் நாம் உதவி செய்யவேண்டும். நம்முடைய நிதிநிலைமையைப் பார்க்கும்போது 150 கோடிக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும், 100 கோடி ரூபாய் அளவில் நிவாரண வேலைகள் நடக்கின்றனவென்றும், ஆனால், மத்திய அரசு 30 கோடி ரூபாய்கள்தான் கொடுத்திருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நிவாரணமாக இல்லாத நிலை இருக்கிறது. மத்திய அரசிலிருந்து இன்னும் அதிகமான தொகையை நிவாரணப் பணிக்குத் தர வேண்டுமென்று கோருவதிலே என் கட்சி தயங்காது.

இந்த நேரத்திலே நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்த நில வள வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் கடன் கொடுக்கிற நேரத்திலே அந்த ஆண்டிலே அவர்கள் போட்ட அதாவது அவர்கள் கடைசி இறுதி லாபத்தைப் பிரிக்கிற நேரத்திலே வராத கடன் நிதி என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். மாநில நிலவள வங்கியிலும், மாநில கூட்டுறவு வங்கியிலும் உள்ள

[திரு. செ. சதாசிவம்] [1977 டிசம்பர் 30

அத்தகைய வாரா கடன் நிதியில் இருந்து தொகையை ஒதுக்கி பாழ்பட்டு கிடக்கும் நிலங்களுக்கு அவற்றை நஷ்ட ஈடாகக் கொடுக்க முன்வந்தால் நம்முடைய அரசாங்கத்தின் சுமை நீங்கும்.

இதே போன்று, மின்சார போர்டு அதிகாரிகள் அனைவரும் மிக விரைவிலே அந்த மின்சார வேகத்திலே பல்வேறு நிவாரணப் பணிகளை செய்து முடித்து நிவாரணம் செய்ததை வரவேற்கிறேன்.

ஏராளமான பம்ப் செட்டுகள் தண்ணீரில் மூழ்கிப் போயிருக்கின்றன. கிணறுகள் மண்மூடிப் போய்விட்டன. விவசாயத்திற்கு லாயக்கில்லாமல் இருக்கின்றன. இன்னும் 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு மின்சாரக் கட்டணத்தை வசூலிப்பதில் இருந்து தள்ளிப் போடவேண்டும். வசூலிக்க வேண்டாமென்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 30-ந் தேதிக்குள் கட்டாவிட்டால் ஃப்யூஸ் கட்டையை பிடுங்கிக் கொண்டு போவதாகச் சொல்லுகிறார்கள். அங்கு ஃப்யூசே இல்லை. அவர்களை வற்புறுத்துகிற நிலைமை இருக்கிற காரணத்தால், அந்த மின்சாரக் கட்டணத்தை வசூலிப்பதை தள்ளிப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்திலே இந்தப் பகுதியிலே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய 3,200 பேர்களும் சிறு விவசாயிகள்.

இப்போது 'கேர்' நிறுவனம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர்கள் 100 வீடுகள், 50 வீடுகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் என்னுடைய பகுதி மக்கள் 20, 25, 30 வீடுகள் கொண்ட சிறு, சிறு கிராமங்களாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்கும் கட்டிக் கொடுக்க அனுமதி வழங்க வேண்டும். அந்த 'கேர்' ஸ்தாபனம் மூலமாக கட்டப்படுகின்ற வீடுகளுக்கு வீட்டுமனை நிலங்களையும் வாங்கித் தர அரசு முன் வரவேண்டும்.



1977 டிசம்பர் 30] [திரு. செ. சதாசிவம்]

அமராவதி ஆறு, குடகனாறு, நங்காஞ்சி ஆறு ஆகிய பகுதிகளில் வெள்ளம் வந்த காரணத்தினால் அந்த இடங்களை இனிமேல் வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்த இயலாத சூழ்நிலை அமைந்திருக்கிறது. இவர்களுக்கும் மேடான பகுதிகளில் அரசு நிதியில் இருந்து வீட்டுமனைகள் வாங்கித் தரப்படவேண்டும்.

இந்த குடகனாறைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். அது உடைந்ததைப் பொறுத்த வரையில், அது வேறு விஷயம். அதுபற்றி நீங்களே ஆராய்ந்து சொல்லுங்கள். அது உடைந்தது எப்படி இருக்கிறது என்றால், அதிலுள்ள சட்டர் பகுதி அப்படியே இருக்கிறது. அது மண் அணை இல்லை. அதனுடைய கட்டப்பட்ட ஸ்ட்ரக்சர் அப்படியே இருக்கிறது என்றாலும், அதற்கும் அதன் கீழ்க் கோடியில் வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கும் இடத்திற்கும் இடையில் இருக்கும் நீளம் 900 அடியாகும். இப்பகுதி பூராவும் உடைக்கப்பட்டு அந்த வேகத்தில் சென்ற தண்ணீர் ஆற்றின் இரு கரையிலும் 1 கிலோ மீட்டருக்கு மேல் சேதம் ஏற்படுத்தி இருக்கிறது. அந்த உடைப்பு ஏற்பட்டு இருப்பது எப்படி என்று ஆராய்ச்சி செய்தால் தெரியும். அதை நிபுணர்களைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும்.

அது எப்படியிருந்தபோதிலும், குடகனாறு பகுதியில் மீண்டும் அந்த அணை கட்டப்படும் என்ற எண்ணத்தால் அந்தப் பகுதி மக்களிடத்தில் இன்னும் பீதி இருக்கிறது. அதில் மறுபடியும் இப்படிப்பட்ட உடைப்பு ஏற்பட்டு விடுமோ என்ற நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, அந்த அணையை நல்லமுறையில் சீர் செய்து, இனிமேல் அப்படிப்பட்ட உடைப்பு ஏற்படாதவண்ணம் அந்த அணையை சீர்திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே பல்வேறு ரோடுகளில் உடைப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. அவற்றையும் சீர் செய்ய வேண்டும்.

குடகனாறு பகுதியில் பாலம் உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். குடகனாறு பகுதியில் இருக்கும் பாலம் அந்தப் பகுதியில் இருந்து 25 மைல் தொலைவில் எங்கள் பகுதியில் இருக்கிறது. அந்தப் பாலத்தைப் பார்த்தாலே

[திரு. செ. சதாசிவம்] [1977 டிசம்பர் 30

அங்கு ஏற்பட்டிருக்கிற வெள்ளச் சேதத்தின் கொடுமை நன்கு தெரியும், அது எந்த நிலையில் உடைந்து இருக்கிறது என்று. எங்கள் பகுதியில் புயல் வெள்ளச் சேதம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு என்று தனியாக சிறப்பு நிதி ஒதுக்கி அந்தப் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தித் தர அரசு அதிக உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. மு. அம்பிகாபதி:** பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே உறுப்பினராக இருக்கிற துரைமுருகன் அவர்கள் மயக்கமுற்ற நிலையில் இருக்கிறார். பக்கத்திலே வைத்திய வசதி இல்லை. ஆகவே காலதாமதம் ஆகிறது. ஆகவே, சபை நடக்கிற நேரத்தில் பக்கத்திலே வைத்திய வசதி ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பண்ணை கே. சேதுராம்):** முதலமைச்சர் அவர்களே பக்கத்திலே இருந்து அதற்கான உதவி செய்து இருக்கிறார். கோட்டையில் இருந்து மருத்துவமனை டாக்டர் வந்து பார்த்து சிகிச்சை செய்து இருக்கிறார். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

(முற்பகல் 11-00)

* **திரு. ப. உ. சண்முகம்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே எதிர்பாராதவிதமாக 200 ஆண்டுகளில் அடித்திராத பயங்கரப் புயல் தமிழ்நாட்டை வெகு கொடூரமாகத் தாக்கி, அதன் காரணமாக உயிர்ச் சேதம், பயிர்ச் சேதம் கணக்கில் அடங்க முடியாத அளவிற்கு உயர்ந்து பெருத்த இழப்பை தமிழகத்திற்கு உண்டாக்கியிருக்கிறது.

தமிழ்நாட்டை ஒட்டிய அண்டை மாநிலமான ஆந்திராவில் புயல் வீசி அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்திருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேருக்கும் நாம் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம் என்றாலும் தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்திற்கெல்லாம் பொருள் ஈட்டுபவர்கள் யார் என்று கணக்கு எடுத்து அவர்களுக்கு மட்டும் இழப்புத் தொகையாக அரசு வழங்கியிருக்கிறது.



1977 டிசம்பர் 30] [திரு. ப. உ. சண்முகம்]

இதுபோன்ற இயற்கையின் கோளாறால் ஏற்படுகின்ற பயங்கர விபத்துக்களின் காரணமாக இறந்து விடுகிறவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முழு தொகையைக் கொடுக்க வேண்டும். அவர்கள் பொருள் ஈட்டுகின்றவர்களா அல்லது பொருள் ஈட்டுகின்றவர்களுடைய நிழலில் இருக்கின்றவர்களா என்று பார்க்காமல் அவர்களுக்கும் பணத்தை கொடுக்க வேண்டும் என்று இதன் மூலம் அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

வீசியது கோரப் புயல். அந்தப் புயலுக்கு யாரும் காரணமாக இருக்க முடியாது. நல்லவேளை யார் மீதும் காரணம் கற்பிக்க முடியாமல் போய் விட்டது. காரணம் கற்பிக்க முடியும் என்றால் அதற்குக்கூட நாங்கள்தான் காரணம் என்று கூறு வார்கள். வீசிய புயலுக்கு நான் வருத்தப்படுகிறேன். உயிர் இழந்த குடும்பங்களுக்கெல்லாம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

நேற்றைய தினம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் பேசும்போது புயல் நிவாரண வேலைகளில் இருக்கும் குறைபாடுகளை எடுத்து குறிப்பிட்டார்கள். அவர் அவருக்கே உரிய பாணியில் அந்தக் குறைகளைச் சொன்னார்கள். குறைகளைத்தான் சொன்னார்கள். ஆனால் சொல்லியபோது எதிர்ப்பு எந்தப் பக்கத்திலிருந்தும் கிளம்பவில்லை. அவர் சொல்கிற பாணியோ அல்லது சொல் கிறவர் உமாநாத் என்கிற காரணத்தாலோ அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு வேளை நான் அதை திருப்பிச் சொன்னால் தாங்கமாட்டார்களோ என்னவோ, எனக்கு சந்தேகமாக இருக்கிறது. இருந்தாலும் எல்லாவற்றையும் நான் சொல்லித்தான் தீர வேண்டும்.

மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் பேசும்போது சொன் னார்கள். நாகப்பட்டினத்திலும் மற்ற இடங்களிலும் குறிப்பிட்ட நேரங்களில் உணவு போய் சேரவில்லை என்று கண்டித்தார்கள். தலைமைச் செயலாளர் திராவிட முன்னேற்றக் கழகம் கொடுக்க வந்த பணத்தை வாங்க மறுத்ததையும் கண்டித் தார்கள். நான் அவருடைய பெருந்தன்மைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1977 டிசம்பர் 30

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் எல்லாம் சிறையில் இருந்தபோது புயல் வீசியது என்ற செய்தியைக் கேள்விப்பட்ட உடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 25,000 ரூபாயை முதல் காணிக்கையாகத் தருவோம் என்று முடிவு எடுத்து, சிறை அதிகாரியின் அனுமதியோடு காசோலையில் கையெழுத்திட்டு அனுப்பியபோது, அதைக் கொண்டு போய் தலைமைச் செயலாளர் இடத்தில் கொடுங்கள் என்றுதான் சொல்லி அனுப்பினோம். ஆனால் தலைமைச் செயலாளருக்கு வேறு வேலை இருந்ததாகச் சொன்னார்கள். மெத்த பணிவன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன், கொண்டு வந்து கொடுத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் என்று கூட கருதத் தேவையில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதையாவது எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்த மன்ற உறுப்பினர்கள் ஒரு தலைமைச் செயலாளரைப் போய் காணவேண்டுமென்றால், வேலையாக இருக்கிறேன், போய் மற்றவர்களைப் பார் என்று சொல்வது வேண்டுமானால் அட்வைசர் காலத்திலே அர்த்தமுடையதாக இருந்திருக்கலாம். ஆனால் அத்தகைய காலத்திலே கூட திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது பணத்தை கொடுத்தோம். அதைத் தலைமைச் செயலாளர் வெளியே வந்து வாங்கிக் கொண்டார். அட்வைசர் காலத்திலே வாங்கிய தலைமைச் செயலாளர் இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லை, முன்னாள் அமைச்சராக இருந்தவர்தான் சென்றார், வாங்கிக் கொண்டார். இப்பொழுது சட்டமன்ற உறுப்பினராகவும் முன்னாள் பேரவைத் தலைவராக இருந்தவரும் கூட சென்று இருக்கிறார். போய் நிதி இலாகா டெபுடி செக்ரட்டரி இருப்பார்கள் போய் பார்த்துக் கொடுங்கள் என்று சொல்வது அவருக்கு வேண்டுமானால் அவருக்கு இருக்கக்கூடிய பணியின் காரணமாக நியாயமாகத் தோன்றலாம். ஜனநாயக முறைப்படி நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் போக்கு உகந்ததல்ல, சரியானதல்ல, கண்டிக்கத்தக்கது. மன்றத்தின் உறுப்பினர்கள் இதை கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று இதன் மூலம் நான் கேட்டுக்கொள்கிறேன்.



1977 டிசம்பர் 30] [திரு. ப. உ. சண்முகம்]

இது இன்று எங்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடும். இதே போல் எதிர் காலத்திலே மற்றக் கட்சிக்காரர்களிடம் நடக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம். அப்படி நடக்கிறவர்கள் யாராக இருந்தாலும், எந்த அதிகாரியாக இருந்தாலும் ஒரு சட்டமன்ற உறுப்பினர், மக்களின் நம்பிக் கையைப் பெற்று மன்றத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியுமா, தெரியாதா, எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்றெல்லாம் பார்க்கக் கூடாது. சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னால் அவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்தே தீர வேண்டும்.

வீசிய புயலின் காரணமாக குற்றச்சாட்டுகள் இரு பக்கமும் வீசப்படுகிறது என்று சொன்னாலும் நான் கடந்த மூன்று நாட்களாக இந்த அவையை கூர்ந்து கவனிக்கும்போது நாட்டில் வீசிய புயல் எங்கே இந்த அவைக்குள்ளும் வீசப் போகிறதோ என்று சந்தேகமாக இருந்தது. நாட்டிலே ஓய்ந்துபோன புயலைப் போல் இங்கே ஓய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு தான் நான் என் பேச்சினைத் துவக்குகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சதாசிவம் அவர்கள் கூட குடகனாறைப் பற்றி குறிப்பிட்டார்கள். குடகனாறு அணை உடைபட்டதைப்பற்றி நாங்கள் சிறையில் இருந்தபோது படித்தோம். அணை உடைவதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை என்று விவாதித்துக் கொண்டிருந்தோம். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையில் பேட்டி கொடுத்ததாக நாங்கள் பார்த்தோம். அணைக்கு மூன்று நான்கு பங்கு தண்ணீர் வந்த காரணத்தினால் அணை உடைந்தது என்று செய்தி பத்திரிக்கையிலே படித்தோம். எப்படி அணை உடைந்திருக்கும் என்று முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞரும், அடுத்து பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நண்பர் சாதிக் அவர்களும், அவருக்குப் பிறகு பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நானும் அதைப்பற்றி விரிவாகப் பேசிக்கொண்டிருந்தோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால் உடைந்திருக்கிறது மண் அணை என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் கட்டப்பட்ட மண் அணையில் கட்டப் பட்ட கற்கட்டடம் உடையவில்லை. அப்படியே இருக்கிறது, மண் அணை மட்டும் உடைந்திருக்கிறது. பத்திரிகைகளில் இன்னும் பயங்கரமான செய்திகள் வந்துள்ளன. அடுத்த நாள் தீபாவளி என்ற காரணத்தால் அங்கு இருக்க வேண்டிய பொறியாளர் இல்லை, எக்ஸிகியூட்டிவ் என்ஜினியரும் இல்லை. எக்ஸிகியூட்டிவ் என்ஜினியரும், அஸிஸ்டென்ட் என்ஜினியரும் அதற்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்தது. அவர்கள் இருந்திருந்தால் மதகுகளின் கதவுகளைத் தூக்கியிருக்க முடியும். வெள்ளம் வருவதற்கு சற்று முன்பு மின்சாரத்தைப் பயன்படுத்தி மதகு கதவுகளை எளிதாகத் தூக்கியிருக்க முடியும். அவர்கள் அங்கு இல்லை. மின்சாரம் தவறி விட்டது. தவறிவிட்ட பிறகு மதகுகளை தூக்க முடியவில்லை. ஜெனரேட்டரைப் பயன்படுத்திக் கூட தூக்க முடியவில்லை. கிராமத்தார் லஸ்கர் போன்ற ஊழியர்களை வைத்துக் கொண்டு தங்கள் முழு சக்தியையும் பயன்படுத்தி இழுத்தும் மதகு கதவுகளைத் தூக்க முடியாமல் கடைசியில் விட்டுவிட்டார்கள் என்பது நாங்கள் பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்து தெரிந்து கொண்ட செய்தியாகும்.

அதிகாரிகள் கொடுக்கிற தகவல்கள் அரசுக்குக் கிடைக்கும். அதிகாரிகள் எங்களுக்கு தகவல் கொடுக்க முடியாது. ஆனால் அந்தப் பகுதி மக்கள் கொடுக்கிற தகவல்களை வைத்துதான் பேசவேண்டியிருக்கிறது. ஒரு வேளை நாங்கள் சொல்கிற கருத்துக்களில் தவறு இருக்குமானால், அதற்கான ஆதாரங்களைக் காட்டுவார்களேயானால், நாங்கள் திருத்திக் கொள்ளத் தயங்க மாட்டோம். தகுந்த நேரத்தில் அந்த மதகுக் கதவுகள் திறக்கப் பட்டிருக்குமேயானால் இவ்வளவு பெரிய சேதாரங்கள் ஏற்பட்டி ருக்குமா என்பது சந்தேகமே.

ஏராளமான கிளை ஆறுகள் குடகனாற்றில் வந்து சேருகின்றன. அப்படி சேர்ந்ததற்குப் பிறகு குடகனாறு தண்ணீர் அமராவதியில் வந்து விழுந்து பின்னர் அது காவிரியில் வந்து கலக்கிறது. குடகனாறு அணை உடைவதற்கு முன்பு





ஏராளமான கிராமங்கள் மூழ்கிவிட்டன. உயிர்சேதம் அந்த இடத்தில் ஏற்பட்டது. அந்த அணை உடைந்ததற்குப் பிறகா அல்லது உடைவதற்கு முன்பா என்று கணக்கிட்டுப்பார்த்தால் செத்தவர்களின் எண்ணிக்கை அணை உடைவதற்கு முன்பே அதிகம் பேர்கள் செத்திருக்கிறார்கள். அணை உடைவதற்கு முன்பே கிராமங்கள் அடித்துக்கொண்டு வரும்போது 17 கிராமங் களில் காட்டாறுகள் தாங்களாகவே நுழைந்து குடிசைகளை அழித்து தூங்கிக்கொண்டிருந்தவர்களை பிணமாக ஆக்கி தூக்கிக் கொண்டு குடகனாற்றில் வந்து விழுந்திருக்கிறது. விழுந்த நேரத்தில் அந்த மண் அணை உடைந்திருக்கிறது. மண் அணை உடைந்து விட்டது, இது சந்தேகத்திற்குரியது, எப்படிக் கட்டி னார்கள் என்றெல்லாம் சிலபேர்கள்—அவர்களுக்கு ஐயம் ஏற் பட்டதோ என்னவோ தெரியவில்லை—ஜாடையாகப் பேசு கிறார்கள். பத்திரிகைகளில் கூட அறிக்கைகள் விடுகிறார்கள்.

நான் தெளிவாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு அணை கட்டுவது என்று சொன்னால் அந்த ஆற்றின் குறுக்கே, எந்த ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதாக இருந் தாலும் அந்த ஆற்றின் வெள்ளப்போக்கு எப்படி இருக்கும், கடந்த நாற்பது ஐம்பது ஆண்டுக்கால அந்த ஆற்றுவரலாற்றை எடுத்துவைத்துக் கொண்டு அதிகபட்ச வெள்ளம் எப்போது வந்திருக்கிறது, குறைந்தபட்ச வெள்ளம் எப்போது வந்திருக் கிறது, சாதாரணமாக அந்த ஆற்றில் எவ்வளவு தண்ணீர் போய்க்கொண்டிருக்கும், திடீரென்று வருகிற காட்டாறு வெள்ளம் எவ்வளவு இருக்கும், வேகம் எவ்வளவு இருக்கும் என்று இவற்றையெல்லாம் கணக்கெடுத்து—பொறியியல் கணக்குப்படி சொல்வதென்றால் 'ஹைட்ராலஜி' என்று சொல் வார்கள்,—அந்தக் கணக்குப்பிரகாரம் எவ்வளவு வேகத்தில் தண்ணீர் வந்து இடித்தால் தாங்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்றெல்லாம் கணக்கு எடுத்து—அந்தக் கணக்கை எடுக்க பூண்டியில் பரிசோதனை நிலையம் வைத்திருக் கிறார்கள்—ரிசர்ச் ஸ்டேஷன்—பூண்டியில் உள்ள அந்த ரிசர்ச் ஸ்டேஷனில் நீரின் அளவை, வேகத்தைக் கணக்கெடுத்து, அந்த அளவிற்கு வேகமுள்ள தண்ணீரைவிட்டு அதற்குத் தகுந்தாற் போல் எந்தளவிற்கு அணை கட்டினால் தாங்கும் என்று கணக்கு

பார்த்ததற்குப் பிறகுதான் எந்த ஒரு அணையையும் கட்டுவதற்கு பொறியாளர்கள் சிபார்சு செய்வார்கள், அதற்குப் பிறகுதான் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

அப்படி பூண்டியில் செய்யப்பட்ட பரிசோதனைகளுக்குப் பிறகு ஹைட்ராலஜி கணக்கு பார்த்தபிறகு தலைமைப் பொறியாளரின் சிபார்சின்பேரில் இந்த அணை கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இந்த அணை கட்டப்படவேண்டும் என்று வெள்ளைக்காரன் காலத்திலிருந்து, 1923-ம் ஆண்டிலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஆதாரங்கள் உள்ளன. அப்போது ராமர் கொடகனாறு பாசனச் சங்கம் என்றுவைத்து அப்பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். முதலில் காங்கிரஸ்காலத்தில் அது பற்றி பேசப்பட்டது.

(முற்பகல் 11-10)

ஆனால் இந்தத் திட்டம் போடுகின்ற முதலீட்டுக்கு வருவாய் இல்லாத திட்டம், இது நஷ்டமான திட்டம் என்று கைவிடப்பட்டது. பிறகு இதனுடைய பெனிஃபிட் காஸ்ட் என்று, அதாவது முதலீட்டின் மீது ஆதாயம் என்ன என்பது பற்றி கணக்குப் பார்த்தனர். போடுகின்ற முதலீட்டுக்கு பத்து சதவீதம் வட்டி வரக்கூடிய அளவுக்கு ஆதாயம் வரும் என்று கணக்குப் பார்த்தார்கள். கணக்குப் பார்த்த பிறகு அரசாங்கத்திற்கு பொருளாதார ரீதியில் சரியான திட்டம்தான். லாபகரமான திட்டம் தான் . . .
technically, economically it is feasible, possible and sound. இது ஆதாயம் வரக்கூடிய திட்டம்தான் என்று அரசாங்கத்திற்கு பொறியாளர்கள் எழுதியனுப்பினார்கள். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. வேண்டுமென்றால் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். தலைமைப் பொறியாளர்கள் இதற்கான அறிக்கையை அனுப்பினார்கள். பின்னால் அணை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அணையும் கட்டப்பட்டு முடிக்கப்படுகிறது. இதில் பேஸ்மெண்ட் கட்டிடம், கல் கட்டிடம், இது உடையவே இல்லை.



சில இடங்களில் சிமின்ட் கலவை சரியாக இல்லை என்று இப்போது சொல்லப்படுகிறது. சிமின்ட் கலவையை எந்த அமைச்சர்களும் போய் பார்ப்பதில்லை. மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் பிரிட்ஜ் பகுதியில் கல்லை எடுத்துப் பார்த்தால் சிமின்டேயில்லை என்று சொன்னார்கள். சிமின்ட் கலவை சேர்ப்பது அமைச்சர்கள் அல்ல. அதையெல்லாம் பொறியாளர்கள்தான் செய்கிறார்கள். அவர்கள்தான் மணல் சேர்க்கிறார்கள். அமைச்சர்கள் போய் மணல் சேர்ப்பதில்லை.

ஆனால் எங்களுடைய துர்ப்பாக்கியம் இதைச் செய்த ஒருவர் ஊழல் செய்ததன் விளைவாக சில விளைவுகள் ஏற்பட்டிருக்கலாம். மேற்பார்வையில், வேலைகளில் ஏற்படும் சில தவறுகளுக்காக, ஒரு அரசாங்கத்தையே குற்றஞ்சாட்டுவது எந்தவிதத்திலும் பொருத்தமாகாது. இதில் இருக்கின்ற நியாயத்தையும் பொறுப்பையும் எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும். குடகனாறு அணையில் உடைப்பு ஏற்பட்டது மண் அணைதான். இதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். பாலங்கள் உடைந்திருக்கின்றன. இதற்கெல்லாம் பொறியாளர்களை நான் குற்றஞ்சாட்ட மாட்டேன். இந்தத் துறையின் பொறுப்பு வகித்தவன் என்ற முறையில் பொறியாளர்களை நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை.

அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். அமராவதி ஆற்றிலுள்ள ரயில்வே பாலம் உடைந்து போனது, இதைக்கட்டியவர்கள் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள். இதற்காக யாராவது மத்திய அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டினார்களா என்றால் கிடையாது. ஒரு அணையோ அல்லது பாலமோ இடிந்துவிட்டது என்றால் அதற்கெல்லாம் சர்க்காரே பொறுப்பு என்று சொல்லிவிட முடியாது. அங்கே வருகின்ற தண்ணீர் பெருக்கத்தையும் பொறுத்திருக்கிறது . . . (மணியடிக்கப்பட்டது). விரைவில் முடித்துக்கொள்கிறேன். எனவே, அங்கு ரயில்வே பாலம் அடித்து செல்லப்பட்டது. அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. எனவே, சேதம் ஏற்பட்டது என்றால் எதிர்பாராத விதமாக திடீரென்று மழை பெய்தது. பெரு வெள்ளம் வந்திருக்கிறது.

நிதி அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் குடகனாறு அணை உடைந்ததைப் பற்றி குறிப்பிடுகையில் "12 மணி நேரத்துக்குள் 10 அங்குல மழை பெய்தது" என்று மட்டும் சொல்லிக் கொண்டு நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள். கொள்ளளவை விட ஐந்து மடங்கு வெள்ளம் வந்திருக்கிறது. ஹைட்ராலஜிக்-கை விட அதிகமாக வந்த வெள்ளம் நேராக வந்து மெசனரி டாமைத்தான் மோதும். இந்தத் தண்ணீர் எல்லாம் ஒன்று சேர்ந்து மெசனரி டாமை குத்தி மோதும், ஏற்கனவே உள்ள தண்ணீரோடு மோதும்போது, அங்கே ஒரு சுழல் ஏற்பட்டிருக்க வேண்டும். அந்தச் சுழற்சி இந்த மண் அணையில் மோதியதன் விளைவாக உடைப்பு எடுத்திருக்க வேண்டும். இந்த மண் அணையின் நீளம் என்ன என்று பார்த்தால், இங்கே உள்ள கல்லால் கட்டப்பட்ட அணையின் நீளம் 240 அடி, மண் அணையின் நீளம் 7,956 அடி. இதில் மண் அணையில் உடைப்பு ஏற்பட்டிருக்கின்ற பகுதியின் நீளம் 1,214 அடி.

நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உடைப்பு ஏற்பட்டதற்கு காரணம், திட்டத்தினால் ஏற்பட்ட கோளாறே அல்ல என்பதுதான். இதை விசாரிக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. விசாரிக்க வேண்டியதுதான், இதில் நியாயமான குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டியதுதான். தவறுகள் ஏற்பட்டிருந்தால் தயவு செய்து கண்டுபிடியுங்கள். அதோடு இந்த அணைக்காக போடப்பட்ட திட்டத்தின் கணக்கிடப்பட்ட 'ஹைட்ராலஜிக்' கணக்கும் சரிதானா என்பதையும் தயவுசெய்து விசாரித்து கண்டுபிடியுங்கள்.

அந்த ஹைட்ராலஜி கணக்கைவிட அதிகமான தண்ணீர் வந்தால், அந்தப் பொறியாளர்தான் என்ன செய்வார்? ஷட்டர்களைத் திறக்காமல் இருந்தது, அந்தச் சமயத்திலே அவர் அங்கே இல்லாமல் இருந்தது குற்றம்தான். அதற்கு அவர் மீது நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். அப்படியே அவர் திறந்து விட்டிருந்தாலும், அந்த அணை உடையாமல் இருந்திருக்குமா என்கின்ற உத்திரவாதத்தை என்னால் கொடுக்க முடியாது. அந்த அணையின் கொள்ளளவை விட 5 மடங்குத் தண்ணீர் அந்தச் சமயத்திலே வந்ததாகச் சொல்கிறார்கள். அப்படியிருக்க,





அவர் ஷட்டரைத் திறந்து விட்டிருந்தாலும், ஒருவேளை உடைப்பின் நிலைமை வேண்டுமானால் சற்று குறைவாக இருந்திருக்கும். அதனால்தான் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், இதைப்பற்றி விசாரிப்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. தாராளமாக விசாரிக்கட்டும். ஆனால் அப்படி விசாரிக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே கட்டப்பட்ட அணை உடைந்துவிட்டது என்று குற்றம் சாட்டுவதற்காக விசாரிக்கப்படும் விசாரணையாக இருக்கக் கூடாது. விசாரணை எப்படியிருந்தாலும், அதனுடைய முடிவு என்னவாக இருந்தாலும் சரி, நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அணையின் ஹைட்ராலஜி கணக்கு என்ன, அதற்கு மேல் தண்ணீர் வந்திருந்தால் அதற்கு யார் பொறுப்பு, அதற்கு என்சினியர் பொறுப்பாக இருக்க முடியாது, எதிர் தரப்பிலே உள்ளவர்கள் பொறுப்பாக இருக்க முடியாது என்னும் கருத்தை மட்டும் உணர வேண்டும் என்பதை நான் மிகத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடகனாற்றில் உடைப்பு ஏற்பட்டதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். நேற்றையதினம் எங்கள் கட்சி உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் பேசும்போது. உடைந்தது கரையா அல்லது அணையா என்று கேட்டார்கள். அப்போது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், கரை என்றால் என்ன, அணை என்றால் என்ன என்று விளக்கம் அளித்தார்கள். அவர் அவ்வளவு தூரம் சொல்லியிருக்க வேண்டியதில்லை. கரையைத்தான் அணை என்ற பொருளில் அரங்கநாதன் அவர்கள் சொன்னார்கள். அவரும் ஒரு என்சினியர் அல்ல, நானும் ஒரு என்சினியர் அல்ல. அமைச்சர் அவர்கள் ஒரு என்சினியர், ஆனால் அவரும் மின் துறை என்சினியர்தான். சிவில் என்சினியர் அல்ல. அதுவும் ஒரு துர்ப்பாக்கியமான நிலைதான்.

எனவே, அதிகாரிகள் சொல்வதை வைத்துத்தான் அவரும் சொல்கிறார். நானும், என் அனுபவத்தை வைத்துக்கொண்டு என்னுடைய நிலையை விளக்குகிறேன் என்கின்ற முறையிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 20 பேர்களுக்கு மேல் பேச வேண்டியிருக்கிறது. எனவே, இனிவரும் ஒவ்வொரு அங்கத்தினரும் 5 நிமிடங்களுக்கு மேற்போகாமல் பேசும்படியும், அவ்வாறு ஒத்துழைக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பண்ணை கே. சேதுராம்: தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் வெள்ளை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை மன்றத்திலே எடுத்து வைக்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக உள்ளபடியே நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சமீபத்தில், தமிழகத்திலே ஏற்பட்ட கோர புயல்—வெள்ளம் காரணமாக பல்லாயிரக் கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான பேர்கள் தங்கள் உடமைகளை இழந்தார்கள். இன்னும் பல பேர்கள் இந்தப் புயல்—வெள்ளக் காலத்திலே தங்களுடைய வீடு, வாசல்களை எல்லாம் இழந்தார்கள்; அதேபோல் இன்னும் பலர் தாங்கள் குடியிருந்த குடிசைகளை இழந்தார்கள். இன்னும் பல பகுதிகள் இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன. சாலைகளும், பாலங்களும் உருத்தெரியாமல் சேதமடைந்துள்ளன. அணைக்கட்டுகள்கூட சுக்குநூறாகி விட்டன. இப்படி வரலாறு காணாத இந்தக் கோர விபத்துக்கு தமிழகமும், தமிழக மக்களும் ஆளாகி விட்டனர்.

இந்த நேரத்திலே அமைச்சர்கள் அத்தனை பேரும், சுறுசுறுப்பாக பணியாற்றினர். அதேபோல் அரசு அதிகாரிகளும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், கல்லூரி ஆசிரியர்களும், கல்லூரி மாணவர்களும், தரைப்படை, விமானப் படையைச் சேர்ந்தவர்களும் இன்னும் அத்தனை நாட்டு மக்களும் யுத்த காலத்திலே பணியாற்றுவதுபோல், சேவை புரிந்து இந்த மீட்பு வேலைகளிலும், நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டார்கள்.

மேலும், 'கேர்' நிறுவனமும், செஞ்சிலுவைச் சங்கத்தாரும், லயன்ஸ் கிளப் போன்ற சமூக நிறுவனங்களும் தாங்களாகவே முன்வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்டு மக்களுக்குத் தாங்களாகவே நிவாரணம் கொடுக்க ஆரம்



பித்தார்கள். அதே நேரத்தில், வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் கூட அதாவது ரங்கூன், சிலோன், சிங்கப்பூர் போன்ற இடங்களிலே உள்ள தமிழர்களும், மற்றவர்களும் பொருட்களை வாரிவாரி வழங்கி, இந்த புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக முன்வந்தார்கள்.

(முற்பகல் 11-20)

* * *

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூடப் பேசினார்கள்—இந்த அவை எப்படி அமைதியாக நடைபெற வேண்டுமென்று? ஆளும் கட்சியிலிருந்து இப்படிப்பட்ட குரோதமான விஷயங்கள் பேசப்படுகின்றன என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி தேவையில்லை.

* * *

அந்த அளவுக்கு நிலைமை போயிருக்கும்போது இப்படிப் பேசுவது தவறல்ல. ஆயினும் அவையில் இப்படியெல்லாம் பேசலாமா என்று தாங்கள்தான் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்க வேண்டுமென்பதைப் பற்றிப் பேசவேண்டும். சிறைக்குள்ளே என்ன நடந்தது என்றெல்லாம் பேசுவதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

* *

திரு. பண்ணை கே. சேதுராம்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அவையின் பொன்னான நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபத்தைத் தெரிவியுங்கள். இன்னும் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசுங்கள். இன்னும் ஒரு நிமிடத்திற்குள் தாங்கள் பேசிவிட்டு அமர வேண்டும்.

திரு. பண்ணை கே. சேதுராம்: அது அன்பார்லிமென்டரி வேர்டு அல்ல என்பதற்காகக் குறிப்பிட்டேனே தவிர. . .

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் சொல்ல வேண்டும். நீங்கள் சொல்லக்கூடாது.

**திரு. பண்ணை கே. சேதுராம்:** நேற்று பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களும், இன்றைய தினம் பேசிய மாண்புமிகு அண்ணன் ... அவர்களும் புயல் நிவாரணத் தொகையை அவர்கள் தலைமைச் செயலாளரிடத்தில் கொடுத்தபோது அவர் வாங்கிக்கொள்ள மறுத்தார் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான்கூட அதைப் பற்றி யோசித்து உண்மையிலேயே அதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற காரணத்தால் நேற்றைய தினம் தலைமைச் செயலாளரிடம் நேரிலேயே சென்று கேட்டுத் தெரிந்து கொண்டேன். நவம்பர் மாதம் 10, 11, 12, 13 ஆகிய தேதிகள் தீபாவளிக்காக விடுமுறை. 13 ஆம் தேதி புயல் வீசிற்று. 14 ஆம் தேதி காலையில் தலைமைச் செயலாளர் தரைப்படை, கடற்படை, விமானப்படை அதிகாரிகளோடும், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்களோடும் புயல் நிவாரண வேலையில் எவ்வாறு ஈடுபடுவது என்பது பற்றி ஆலோசனைக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் புலவர் கோவிந்தன் அவர்களும், மற்றவர்களும் தலைமைச் செயலாளரை அணுகவில்லை; தலைமைச் செயலாளருடைய பி.ஏ. விடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். தலைமைச் செயலாளர் புயல் நிவாரணக் கமிட்டிக் கூட்டத்தில் இருக்கிறார் என்றும், நிதித் துறைத் துணைச் செயலாளரிடம் அதைக் கொடுக்க வேண்டுமென்று அவர் கூறியதாகவும் கூறியிருக்கிறார். ஆனால் புலவர் கோவிந்தன் அவர்கள் அந்தச் செக்கை அவரிடம் கொண்டு செல்லவும் இல்லை, நேரில் சென்று சந்தித்துப் பேசவும் இல்லை. உண்மையிலேயே அவர் செக்கைக் கொடுக்க விரும்பியிருந்தால் நிதித் துறைத் துணைச் செயலாளரிடம் கொடுத்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஒதுக்கப் பட்டிருக்கும் தொகையில் எவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பது பற்றிக் கருத்துக்களைக் கூற வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள்



தங்களுக்கு என்னென்ன உதவிகள் கிடைக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான கருத்துக்களை, யோசனைகளைச் சொல்ல வேண்டும். இதற்காக ஒதுக்கப் பட்டிருக்கும் நேரத்தை அந்த வகையில் நல்லபடி பயன்படுத்த வேண்டுமென்று அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து பிரச்சினைக்கு வர வேண்டும். உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் முடிந்துவிட்டது.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைமைச் வளாகம். 14 ஆம் தேதி காலையில் எங்களுடைய கட்சித் தலைவரை நீதிமன்றத்தில் பார்த்த செயலகத்தோடு பிறகு அலுவலகத்திற்கு வந்து தலைமைச் செயலகம் தொடர்பு கொண்டு எங்களுடைய தலைமைச் அவர்கள் கொண்டு '25,000 ரூபாயை புலவர் கோவிந்தன் நானும் மற்றவர்களும் வருகிறார்கள்' என்று அறிவித்தார்கள். பார்த்து இந்த தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளரைப் தெரிவித்தோம். நிதியைக் கொடுக்க வந்திருக்கிறோம் என்று வந்திருப்பவர்கள் அங்கே தலைமைச் செயலாளரைச் சந்திக்க மாண்புமிகு உறுப்பினர் உட்காரும் இடத்தில் அமர்ந்தோம். ஏதோ ஒரு அவர்கள் சொல்லியது போல் தலைமைச் செயலாளர் செக்கை நிதித் துறை கூட்டத்தில் இருப்பதாகவும், அந்தச் கொடுக்கும்படி கூறியதாகவும் துணைச் செயலாளரிடத்தில் கூறினார். பிறகு அந்த நேர்முக உதவியாளர் துறைச் செயலாளர் நாங்கள் போய் அந்த நிதித் ஆனால் அவர் இல்லை, விடுமுறை இருக்கிறாரா என்று பார்த்தோம், அதற்குப் பிறகு சீப் அக்கவுண்ட்ஸ் என்று சொல்லிவிட்டார்கள். தலைமைச் செயலாளர் ஆபீஸரிடம் கொடுக்க வேண்டுமென்று உதவியாளர் வந்து சொல்லியதாக அவருடைய நேர்முக செய்யாமல் தலைமைச் எங்களிடம் சொன்னார். இப்படிச் நிதியா, கொடுங்கள் என்று செயலாளரே புயல் வெள்ள நிவாரண இருக்கலாம். அதைச் வாங்கிக் கொண்டு உள்ளே போய் விடுமுறையில் இருப்பது செய்யவில்லை. துணைச் செயலாளர் இருக்காது. இப்படி தலைமைச் செயலாளருக்கு தெரியாமல் என்று சீப் அக்கவுண்ட்ஸ் ஆபிசரிடம் கொடுக்க வேண்டியதில்லை ராஜ்பவனுக்கு நாங்கள் நினைத்து கவர்னரிடம் கொடுக்க சென்றோம். அங்கே கொடுத்தோம்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். நாங்கள் செக்கை கொடுக்கிறபோது அதைப் படம் எடுப்பதற்காக ஒரு கேமிராமேனையும் நாங்கள் அழைத்துச் சென்றிருந்தோம். அப்போது ஆளுங்கட்சியைச் சேர்ந்த பத்திரிகையைச் சார்ந்த ஒரு நிருபர் அங்கே வந்து கேமிரா மேன் எங்கே வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார், அவர் வந்திருப்பதின் நோக்கத்தை கூறினார். உடனே அவர் கீழே இறங்கிப் போய்விட்டார். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது. இதையும் நான் இந்த நேரத்திலே இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. பண்ணை கே. சேதுராம்:** தலைமைச் செயலாளரிடத்திலே நேரிலே கொண்டுபோய்க் கொடுத்தோம், அவர் மறுத்துவிட்டார் என்று அவர்கள் பேசும்போது சொன்னார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அப்படிச் சொல்லவில்லை என்கிறார். எப்படியோ பணம் வெள்ள நிவாரண நிதிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது.

* **திரு. ஆனூர் ஜகதீசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ள வெள்ளை அறிக்கையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் முதல் தேதி ஆரம்பித்த புயல் வெள்ளம் நவம்பர் மாதம் 17 ஆம் தேதி வரையில் தமிழகத்தையே அலைக்கழித்து விட்டது. 11 ஆம் தேதி இரவு அந்தப் புயல் வேகமாக வீசியது. அதன் காரணமாக ஏராளமான கால்நடைகளும் பயிர்களும், முழுமையாக அழிந்துபோயிற்று. வாழை, தென்னை வேரோடு சாய்ந்து அவைகளினுடைய பலன்களைக் கொடுக்காமலேயே போய் விட்டன. இப்படி தனியார் உடைமைகளுக்கும் வீடுகளுக்கும், அரசாங்கச் சொத்துக்களுக்கும் ஏராளமாகச் சேதம் ஏற்பட்டது. இவ்வளவு சேதம் அடைந்திருந்தாலும், நவம்பர் மாதம் 10, 11 ஆம் தேதிகளில் நமது நாட்டில் இந்த அரசு எடுத்த தற்காப்பு நடவடிக்கைகளின் காரணமாக மக்கள் உயிர்ச் சேதம் மிகவும் குறைக்கப்பட்டது.

அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் உறுதுணையாக இருந்த அரசு அதிகாரிகள், டாக்டர்கள், ஊழியர்கள்,





மாணவர்கள், ஆசிரியர்கள், தனியார் ஸ்தாபனங்கள், இராணுவத்தினர் ஆகிய அனைத்து தரப்பைச் சேர்ந்தவர்களுக்கும் மக்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். புயலாலும், வெள்ளத்தாலும் மதுரை, புதுக்கோட்டை, தஞ்சை, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்கள் நேரடியாகப் பாதிக்கப் பட்டிருந்தாலும் கூட செங்கற்பட்டு மாவட்டம் கடற்கரை மாவட்டமாக அமைந்திருக்கிற காரணத்தினாலே அங்கே பெய்த பெருமழையின் காரணத்தால் கால்நடைகள், வீடுகள், பயிர்கள், கட்டடங்கள் சாலைகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே செங்கற்பட்டு மாவட்டத்தையும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகக் கருதி அங்கே வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே உள்ள நீர்ப்பாசன ஏரிகளையும் கால்வாய்களையும் 3 பகுதிகளாகப் பிரித்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 200 ஏக்கருக்கு மேலே உள்ள பாசன ஏரிகள் பொதுப் பணித் துறையின் வெள்ளக் கோட்டத்தினாலேயும் 100 முதல் 200 ஏக்கர் வரையில் உள்ளவைகளை ரெகுலர் டிபார்ட்மெண்ட்டும் 100-க்கு கீழே உள்ளவை சிறுபாசன ஏரிகளாகவும் பிரிக்கப்பட்டிருக் கின்றன. ஆனால் குறிப்பிட்ட வெள்ளப் பணி கோட்டத்திலேயே சிறு பாசன ஏரிகள் பல தற்போது சேர்த்துக்கொள்ளப்பட் பட்டிருக்கின்றன. இந்த நிவாரண நிதியிலிருந்து பணம் வெள்ளப் பணி கோட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறபோது ரெகுலர் டிபார்ட் மெண்ட்டிலே ஒதுக்கப்பட்ட ஏரிகளுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் ரெகுலர் டிபார்ட்மெண்டின் கீழே வருகிற ஏரிகள் மிக

[முற்பகல் 11.30]

மிகப் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த ரெகுலர் டிபார்ட்மெண்ட் 7,500 ரூபாய்க்கு மேல் இப்பொழுது எஸ்டிமேட் போட முடியாத நிலையில் இருப்பதால் ஒதுக்கும் பணத்தை அந்த டிபார்ட்மெண்டுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, ஊராட்சி சாலைகள். ஒன்றியச் சாலைகள், சிறுபாசன ஏரிகள் ஆகியவற்றைப் பராமரிக்க இயலாத நிலையில் உள்ளாட்சி

திறுவனங்கள் இருப்பதால் அருள்கூர்ந்து கணிசமான நிதி ஒதுக்கி வெள்ள நிவாரணப் பணி சீராக நடைபெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியப் பொறியாளர்களும், ஆணையர்களும், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், வெள்ளம் சம்பந்தப்பட்ட அறிக்கையை அவசரத்தில் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரங்களில் கொடுக்கப்பட்ட வேலைகளுக்கு மட்டும் இப்பொழுது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் நேரில் சென்று இடங்களைப் பார்வையிடாமல் விடப்பட்ட பல வேலைகளுக்கு இந்த நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட வேலைகளைப் பற்றியும் மீண்டும் பரிசீலித்துப் பணம் ஒதுக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு காண்ட்ராக்ட் முறையை ஒழிக்கும் விதத்தில் புதிய நல்ல ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. ஆனால் சில ஊராட்சி ஒன்றியங்களில் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தும் நோக்கத்தில் பழைய காண்ட்ராக்ட் முறையையே மேற்கொண்டு ஒவ்வொரு ஒப்பந்தக்காரருக்கும் 10, 12 வேலைகள் தரப்பட்டுள்ளன[illegible]தைத் தடுத்து நிறுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உடைப்பெடுத்த சில ஏரிகள் உடனடியாகச் செப்பனிடப்பட்டிருக்கின்றன. உடனடி வேலைகள் சிறிதளவே செய்ய இயலும். ஆனால் பெருமளவுக்குப் பணம் தேவையற்ற முறையில் செலவிடப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் வேலை துவங்குவதற்கு முன்பாக இவ்வேலைகள் எந்த அளவுக்குச் செய்யப்பட்டுள்ளன என்று மேல் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு அதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளை நீக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

காற்று மழையால் பெரிய வலைகளையும், படகுகளையும் இழந்து தவிக்கும் மீனவர்களுக்குக் கடன் கொடுத்து உதவி செய்யவும், கால் குழிகளில் மாதக் கணக்காக தண்ணீர் தேங்கிவிட்டதாலும்,



தறிக் கொட்டகைகள், வீடுகள் இடிந்துவிட்டதாலும் தொழில் செய்ய முடியாமல் தவிக்கும் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ளவும், தறிக் கொட்டகை போட்டுக்கொள்ளவும் நீண்ட காலக் கடன் கொடுத்து உதவி செய்யவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசினரால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கும் அரிசன காலனி குடியிருப்பு வீடுகளும், மீனவர் குடியிருப்பு வீடுகளும் மழையால் பெரிதும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. அதை உடனடியாகப் பழுது பார்க்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் உள்ள செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், சதுரங்கப்பட்டணம், மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள காவல் துறையினரின் வீடுகள் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றன. அவைகளை உடனடியாகப் பழுது பார்க்கவும், சேதமுற்றுள்ள பள்ளிக் கட்டிடங்களை விரைவில் பழுது பார்க்கவும் வேண்டுமென்று அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு தொகுதியில் உள்ள பொன்விளைந்த களத்தூர் வெள்ளக் கால்வாய் பல இடங்களில் உடைப்பெடுத்தும், தூர்ந்தும் இருப்பதால் அந்தக் கால்வாயை முழுமையாகத் தூர் எடுத்து கரையைப் பலப்படுத்த வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. வரதராஜன். உங்கள் கட்சியிலிருந்து ஒருவரே பேசுவதற்குப் பெயர் கொடுத்திருப்பதால் 10 நிமிடங்கள் உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

***திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நூற்றாண்டுக் காலத்தில் ஏற்படாத ஒரு பேய் மழையும், பெரு வெள்ளமும் தமிழகத்தைச் சீர்குலைத்து சின்னாபின்னமாக்கியிருக்கிறது. அதன் ஒரு பகுதியாக நாம் இங்கே அந்த நிவாரணத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என் கருத்தைப் பதிவு செய்கின்றேன்.

ஆரம்பத்தில் சிறு தேக்கங்கள் இருந்தது, அமைச்சர்கள் தலையிட்ட பிறகு சுறுசுறுப்பான முறையில் பணிகள் நடைபெற்றன. அவைகளுக்காக எங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் வேலையிலிருந்த சுணக்கத்தையும், இன்றைக்கு நடைபெற வேண்டிய வேலைகளையும் பற்றிய ஆலோசனைகளையும் நாம் அக்கறையோடு கவனிக்க வேண்டியிருக்கிறது. என்னதான் நாம் திரும்பத் திரும்பப் பேசினாலும், ஒரு துருப்பிடித்து விட்ட கீழ்த் தட்டிலே இருக்கும் நிர்வாகத்தை இழுத்துச் செல்வதிலே மிகவும் சிரமம் இருப்பதைக் காண்கிறோம். கிராமக் கர்ணங்கள், கிராம முன்சீப்புகள் ஆகியவர்களை நம்பித்தான் கணக்குகளை எடுக்கிறோம். அதில் பல தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவேதான் சர்வ கட்சி அமைப்புகளை இணைத்துக் கொண்டு இந்தச் செயல்களை முறைப்படுத்தினால் அவைகள் பலன் காணும் என்பதை எங்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. முதலமைச்சருக்கும் தந்திகள் அனுப்பியிருக்கிறோம். இன்றைக்கு அவைகளைப் பரிசீலனை செய்தால் அவைகளில் சில தவறுகள் ஏற்பட்டிருப்பதைக் காண முடியும்.

வீடுகளுக்குப் பணம் கொடுக்கும்பொழுது, 60 ரூபாய், 80 ரூபாய், 100 ரூபாய், 200 ரூபாய் என்று தரம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கொடுபடாத பகுதிகள் பல இருக்கின்றன. பழனி வட்டாரத்திலே கொடுக்கப்படவில்லை. ரூ. 80 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டம் பூராவுக்கும் ரூ. 80 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. திண்டுக்கல், வேடசந்தூர் பகுதியிலே கூட பல இடங்களிலே ரூ. 60, ரூ. 80 தான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவைகளை முறைப்படுத்தி, சரியான கணக்கு எடுத்து முழுப் பணத்தையும் கொடுக்க வேண்டும்.

இன்னும் ஒன்று, புறம்போக்கு இடங்களிலே வீடு கட்டி இருப்பவர்கள், கட்டிடம் கட்டி அதில் இருந்தவர்கள் என்று தரம் பிரித்துப் பார்க்காமல், புயலால், மழையால் வீடு இடிந்ததா, இல்லையா என்பதை மட்டும்தான் பார்க்க வேண்டும். மற்ற தரங்களைப் பார்க்கக் கூடாது. கல் கட்டிடம் உள்ள வீடுகள் சேதப்பட்டிருந்தாலும் பணம் கொடுக்க வேண்டும். அரசு அளிக்க





வேண்டுமென்று நினைத்தாலும், அதிகாரிகள் சரியாக நடந்து கொள்வதில்லை. என்னிடம், அதுபற்றிய கணக்கு இருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில், சிதம்பரம் வட்டத்தில், கிள்ளைக்குப் பக்கத்திலே, இருளர், ஆதிவாசிகள் ஆகியோர் குடி இருக்கிறார்கள். அவர்கள் குடிசைகளை இழந்து, அவதியில் மூழ்கி இருக்கிறார்கள். ஆனால், அங்கு தாசில்தார், அவர்கள் இடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கிறார். அப்படிப்பட்ட வகையில்தான் அதிகாரப் போக்கு இருக்கிறது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு சேதத்தை கணக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேடசந்தூர், திண்டுக்கல் பகுதிகள், புதுக்கோட்டை பகுதிகள், சென்னை மாநகரம், திருச்சி, தஞ்சை மாவட்டம் போன்ற பல்வேறு பகுதிகளிலே பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதேபோல் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் குளங்கள் உடைந்து நாசப்படுத்தியுள்ளது. அந்தச் சேதத்தை எல்லாம் சேர்த்து மதிப்பிட வேண்டும்.

(திரு. பண்ணை கே. சேதுராம்—தலைமை.)

உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்குப் பணம் கொடுப்பதிலே, சரியான முறை கடைப்பிடிக்கப்படவில்லை. அதுபற்றிய விவரம் என் கையிலே இருக்கிறது. மதுரை மாவட்டத்திலே 143 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். 139 பேர் காணவில்லையென்று 22—12—1977 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் கணக்குக் கொடுக்கிறார். ஆக 282 பேர் உயிரிழந்திருக்கக்கூடிய நிலையில், ரூ. 1,000 18 பேர்களுடைய குடும்பங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் தாராளமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசியல் கட்சி மாநாட்டிற்கு லாரியில் வந்து யாராவது இறந்தாலே, தலைக்கு ரூ. 1,000 என்று அளிக்கிறோம். 282 பேர் இறந்த இடத்திலே, 18 பேர்களுடைய குடும்பங்களுக்குத்தான் என்றால், அது தவிர்க்கப்பட வேண்டும். உடனடியாக, யார் இறந்திருந்தாலும், தலைக்கு ரூ. 2,000 கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

[திரு. என். வரதராஜன்] [1977 டிசம்பர் 30

அடுத்து, தஞ்சையிலே ரெவின்யூ கோர்ட்டுகள், முனிசீப் கோர்ட்டுகள் மூலமாக குத்தகைப் பாக்கிக்காக, விவசாயிகளை வெளியேற்றுகின்ற காரியம் நடக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலிருந்து இது பற்றி தந்திகளுக்கு மேல் தந்திகளாக, அரசுக்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் வந்து கொண்டிருக்கின்றன. அதுபற்றி அரசுத் துறையில் இருப்பவர்கள் ஏற்கனவே ஆலோசனை செய்திருக்கிறார்கள். ஆகவே, அதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாதிரி விவசாயிகளை வெளியேற்றுவதால், குத்தகை விவசாயிகள், சாதாரண விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அவர்களது குத்தகைப் பாக்கியைப் பற்றி பின்னாலே பேசிக் கொள்ளலாம். இப்பொழுதுள்ள நிலையில் அவர்கள் குத்தகை கொடுக்க முடியுமா என்பதைப் பார்த்து, ரெவின்யூ கோர்ட்டு, முனிசிப் கோர்ட்டு மூலம் அவர்களை வெளியேற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுபற்றி, அந்த மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலாளர், G வீரையன் அவர்கள், ஏற்கனவே அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். அதுபற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மண் மேடிட்ட நிலங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. 2½ ஏக்கர் நஞ்சையும், 5 ஏக்கர் புஞ்சையும் வைத்திருப்பவர்கள்தான் சிறிய விவசாயிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவை புயல், வெள்ள நிவாரண வேலையில் மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேடசந்தூரிலே, பாடியூர் என்ற கிராமத்திலேயுள்ள ஊராட்சி மன்றத் தலைவருக்கு ரூ. 40,000-க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் புயலும் வெள்ளமும் அவரை ஒரு வர்க்கத்திலிருந்து, இன்னொரு வர்க்கத்திற்கு மாற்றி இருக்கிறது. ஆகவே, யாரெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் உதவி செய்ய வேண்டும். இதைப் பற்றிய விவரங்கள் என் கையில் இருக்கிறது.

வேடசந்தூர், திண்டுக்கல் பகுதிகளில் 20 புல்டோசர்கள்தான் வேலை செய்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவை



1977 டிசம்பர் 30] [திரு. என். வரதராஜன்]

போதாது. நமது மாநிலத்தில், 200-க்கு மேல் புல்டோசர்கள் இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, இந்தப் புயல், வெள்ளத்தால் பெரும் அளவு பாதிக்கப்பட்ட அந்தப் பிரதேசங் களுக்கு அதிக புல்டோசர்களை அனுப்பி, மண் மேடிட்டதை நீக்கப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேடசந்தூர் வட்டத்தில் திருக்கூர்ணம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான தலைவர்கள் அந்தக் கிராமத்தைப் பார்க்காமலிருக்க முடியாது. அங்கு, விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் மண் அரிக்கப்பட்டு பாறைகளாகக் காட்சி அளிக்கின்றன. அவர்களுக்கு என்னதான் நாம் உதவி செய்தாலும், போதுமான நஷ்ட ஈடு கொடுக்க முடியாது. ஆகவே, நிலத்தை ஆர்ஜிதம் செய்வதைப் போல், அவர்களுக்கு நஷ்ட ஈடு அளித்து, மறுவாழ்வு அளித்தால்தான் அவர்கள் வாழ முடியும். 282 பேர் இறந்திருக்கிறார்களே, அதோடு இந்தக் குடும்பங்களும் அழிந்தன என கருத வேண்டும். ஆகவே, அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

[முற்பகல் 11.40]

கால்நடைகளை இழந்து தவிக்கிற நடுத்தர குடும்பங்கள், அவற்றின் சொந்தக்காரர்களுக்கு பல்வேறு உதவிகள் செய்ய வேண்டும். அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும், கடன்கள் வழங்க வேண்டும். நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான ஆடு மாடுகளை இழந்து நடுத்தர மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

வெள்ளப் பகுதிகளில், மலிவு விலையில், அத்தியாவசியமான பொருள்களை வழங்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வெள்ளை அறிக்கையிலே இருக்கிறது. கம்போ, சோளமோ, நிலக்கடலையோ இந்தப் பிரதேசங்களில் விளைவது சந்தேகம்தான். ஆகையினால் மலிவு விலையில் அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ச்சியாக ஒரு 6 மாதத்திற்காவது அவர்களுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இப்பகுதிகளில் கடன் முழுவதையும் ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். இப்போது எனக்கு ஒரு

கடிதம் வந்திருக்கிறது. அய்யனூரில் வெங்கடசாமி நாயுடு
என்பவருக்கு நேற்றையதினம் பாங்கியிலிருந்து நோட்டீஸ்
வந்திருக்கிறது. அவர் நிலம் இழந்து, வீடிழந்து இருக்கிறார்.
அவர் எப்படி கடன் கட்ட முடியும்? ஆகவே, அது பாங்காக
இருந்தாலும் சரி, கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் சரி, அரசுத்
துறையாக இருந்தாலும் சரி, தனியார் கடனாக இருந்தாலும் சரி,
முழுவதும் ரத்து செய்யப்பட வேண்டும். பாங்கு கடனுக்கு
அந்த அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசி அந்தக் கடனை ஒத்தி
வைப்பதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும்.

கை நெசவாளர்களுக்கு உதவி செய்வதைப் பற்றி நாம்
குறிப்பிட்டிருக்கிறோம். இது வரையிலும் போதுமான உதவிகள்
கொடுக்கப்படவில்லை. மிகவும் பின்தங்கிய அந்தக் கை நெசவாளி
களுக்கு உடனடியாக உதவ முயற்சி எடுக்க வேண்டும். புயல்,
வெள்ளம் போன்றவைகளால் சாதாரண மக்கள் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். நம்முடைய சமுதாயத்தில் இன்றையதினம்
பலியாகி இருப்பவர்கள், ஆதித் திராவிட மக்கள், தாழ்த்தப்பட்ட
மக்கள் தான். நம்முடைய சமுதாயத்தின் சண்டாளத்
தனத்திற்கு சமுதாயக் கொடுமைகளுக்கு அவர்கள் பலியாகி
யிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக மேட்டுப் பாங்கான
இடங்களில் குடியமர்த்த வேண்டும்.

மதுரையிலே 8 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு வெள்ளம்
வந்தது. அப்போது வைகைத் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும்
என்று சொன்னார்கள். பிறகு விட்டுவிட்டார்கள். வெள்ளம்
வருகிறபோது நினைக்கிறார்கள். பிறகு விட்டுவிடுகிறார்கள்.
அப்படி இல்லாமல் இந்த அரசு அதனைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை நகரத்திலே பெரும் பகுதியும், திருச்சியும்,
கோவை சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதியிலே பெரும் பகுதியும்,
தஞ்சை மாவட்டத்தில் பெரும் பகுதியும் தண்ணீரில் மூழ்கி
இருந்தன. ஆகவே எதிர்காலத்தில் அதைத் தடுத்து நிறுத்த
ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் தொலைநோக்குத் திட்டம்,
உடனடியாக, புயல் வெள்ளம் ஆகியவற்றால் நாசம் வராமல்
தடை செய்ய, தடுப்புச் சுவர்கள் கட்டி, கரைகளை உயர்த்த
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, இந்த காண்ட்ராக்ட் முறை இருக்கிறதே, நீங்கள் இல்லை என்று சொன்னாலும் (மணி அடிக்கப்பட்டது) கூட தொடர்ச்சியாக இருக்கிறது.

அடுத்து குடகனாறு அணையைப் பற்றிக் கூறி முடித்து விடுகிறேன். மதகுகளைத் திறந்து விடாததால்தான் தகராறு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதுவும் உண்மைதான். ஆனால் மீன்பிடிப்புக்காரர்களுடன் அதிகாரிகள் உறவுகளை வைத்துக் கொண்டிருந்ததன் காரணமாக மதகுகள் திறக்கப்படவில்லை. மின்சாரம் வேறு வேலை செய்யவில்லை. ஜெனரேட்டர் இயந்திரங்கள் வேலை செய்யவில்லை என்ற உண்மையை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். குடகனாறு அணையைக் கட்டியவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அது உண்மையும்கூட. எனவே, அவற்றை விசாரிக்க வேண்டும். அதிகாரத்தில் இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதைவிட கான்ட்ராக்டர்களாக இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை விசாரிக்க வேண்டும்.

மத்திய அரசு பணம் கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. மத்திய சர்க்கார் நிதிக் கொள்கையிலே பெரிய ஓட்டாண்டி யாக தற்போது இருக்கிறது. இந்த நிலையில் எல்லாத் தரப்பில் இருப்பவர்களும் சேர்ந்து தமிழ் நாட்டிற்கு உடனடியாக ரூ. 200 கோடி தேவை என்பதை வற்புத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் பேச்சினை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ரா. மார்க்கபந்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சமீப காலத்தில் இந்திய நாட்டையும், குறிப்பாக, தமிழகத்தையும், ஆந்திர மாநிலத்தையும் குலுக்கிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, இந்த அவையானது அனுதாபத் தீர்மானத்தை முதலிலே நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே பாதிக்கப்பட்ட மக்களுக்காக என்னென்ன நிவாரணங்களை எப்படியெல்லாம் அளிக்கலாம் என்பதைப்பற்றி இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

[திரு. சா. மார்க்கபந்து] [1977 டிசம்பர் 30

இந்திய நாடும், தமிழகமும் கண்டிராத அந்தப் புயல், வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தமிழகத்திலே உயிர் இழந்த மக்களுக்கு, குறிப்பாக நான் சேர்ந்துள்ள உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக கோரிக்கையாக வைக்கிறேன்—எப்படி சரித்திர முக்கியத்துவம் கொண்டவற்றிற்கு நினைவு சின்னங்கள் ஏற்படுத்துகிறோமோ அதைப்போன்று ஒரு நினைவுச் சின்னத்தை தமிழகத்தில் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, அந்த சேதம் பெருவாரியான முறையில் ஏற்பட்ட இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று இந்தத் தமிழக அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், பங்களாதேஷ் யுத்தம் நடைபெற்றபோது, அந்த மக்களுக்கு அவர்களுக்கு உதவி அளிப்பதற்கு, எப்படி மத்திய அரசாங்கம் ரெஃப்யூஜி ஸ்டாம்ப், என்று போட்டு அந்த ஸ்டாம்ப் வருமானம் பூராவையும் அவர்களுடைய உதவிக்காக அளித்ததோ அதைப் போன்று, ஒரு ஸ்டாம்பை இந்திய அரசாங்கம் போட்டு, இந்த புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகிற வகையில் அந்த ஸ்டாம்ப் கலெக்ஷன் பூராவையும் அளிக்க வேண்டும். அதற்கு மத்திய அரசை இந்த மாநில அரசாங்கம் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களை அரசு நிறைவேற்ற ஏராளமான பணம் தேவைப்படுகிறது. இந்த ஸ்டாம்ப் ரெப்யூஜி ஸ்டாம்ப் போன்றது. ஒரு ஆண்டுக் காலத்திற்குப் போட்டு அதன் மூலம் வரும் வருமானத்தை அந்த மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும், அது சரியாக இருக்கும் என்ற யோசனையை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, அந்த மக்களை நினைவுகூறுகின்ற வகையில், குறிப்பாக மத்திய அரசாங்கமானது, ஒரு துறையிலே புகழ் பெற்றவர்களை நினைவு கூறுவதற்காக புதிய ஸ்டாம்புகளை வெளியிடுகிறார்கள். ஆகையினாலே, மத்திய அரசாங்கத்தை அணுகி, இப்படி புயலால் பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூறுகின்ற வகையில் ஒரு போஸ்டல் ஸ்டாம்ப் வெளியிடுவதன் மூலம் அந்த மக்களுக்கு அதிக உதவியை நாம் செய்தவர்களாக ஆவோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரைப் பகுதியில் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நான் சென்று இருந்தேன்.



1977 டிசம்பர் 30] [திரு. சா. மார்க்கபந்து]

நல்லமனூர் கோட்டை, திருக்கண்குடி, லக்கம்பட்டி போன்ற இடங்களுக்குச் சென்றிருந்தேன். பெற்றோரை இழந்த குழந்தைகளைப் பார்த்தேன், கணவனை இழந்த பெண்களைப் பார்த்தேன். வாழவழியில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களைப் பார்த்தேன். இந்த நிலைமைகளையெல்லாம் பார்த்து வந்த நான் கேட்டுக் கொள்வது, அந்தப் பெற்றோர்களை இழந்து அனாதைகளாக இருக்கும் குழந்தைகளை அரசே சமூக நலத்துறை மூலம் எடுத்துக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, வீடு இழந்து, சொத்து இழந்து, கணவனை இழந்து நிற்கும் கைம்பெண்களுக்கு, தலைமகனை இழந்து நிற்கும் பெற்றோர்களுக்கு, அரசு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அவர்களைப் பார்க்கிறபோது பரிதாபமாக இருக்கிறது. நான் ஒருவரைப் பார்த்தேன். அவர் சொன்னார், எங்கள் குடும்பத்தில் 27 பேர் இருந்தார்கள், 2 மகன் வெளியே சென்று இருந்ததால் தப்பிப் பிழைத்தான். ஒருவன் இரவு நேரத்தில் மட்டும் வெளியே படுக்கச் செல்வதால் அவன் பிழைத்தான். மற்றவர்கள் எல்லாம் இரவு வந்த வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டார்கள். நான் மட்டும் அதோ தெரிகிறதே அந்த மரத்தைப் பிடித்துக் கொண்டு தப்பித்தேன். என் குடும்பத்தில் 19 பேர் போய்விட்டார்கள் என்று சொன்னான். அந்த இடத்தில் என் வீடு இருந்தது என்று சொல்கிற அளவிற்கு இப்படி இக்கட்டான நிலையில் உள்ள குடும்பங்களைப் பார்த்தேன். இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு அரசாங்கம் தக்க உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த இடம் வெறும் காலி வெற்றிடமாக இருந்தது.

(முற்பகல் 11-50)

ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கோவாபரேடிவ் சொசைடிகளும், பாங்குகளும் 'க்ராப் லோன்ஸ்' தருகிறார்கள். அந்தக் கடனை அந்தப் பயிர் மகசூல் ஆனவுடன் திருப்பித் தந்தாக வேண்டும். இல்லையென்று சொன்னால் அதனை வசூலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகையால் குறிப்பாக எந்தெந்த நிலங்களுக்கு, எந்தெந்த விவசாயிகளுக்கு

பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராப் லோன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கணவனை இழந்த கைம்பெண்கள் அரசாங்கத்தினுடைய உதவியால் அங்கே கறவை மாடுகளைப் பிடித்து வளர்த்திருந்தார்கள். அவை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அவர்கள் அரசாங்கத்திற்கு எப்படி அந்தக் கடனை திருப்பித் தருவது என்கிற நிலைமை இருக்கிறது. ஆகையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எந்தெந்தக் கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தக் கடன்களை அவர்கள் திருப்பித் தராமலேயே விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், விவசாயிகளுக்குக் கடன் நிவாரணச் சட்டத்தை வைத்திருக்கிறார்கள். அந்தக் கடன் நிவாரணச் சட்டத்திலே சில திருத்தங்கள் வேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். இப்பொழுதும் ஒரு திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். இப்பொழுது இருக்கிற நிலைமையில் எந்தெந்த பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தப் பகுதிகளில் இன்னும் 6 மாத காலத்திற்குக் கடன் வசூலை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற பகுதிகளுக்கும் சலுகை தருகிற வகையில் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கு பேசுகிறபோது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை இங்கே தந்தார்கள். எப்படி என்று சொன்னால் ஓட்டுநருடைய கவனக் குறைவின் காரணமாக 'on account of rash and negligent act' உயிர் இழந்தவர்களுக்கு நஷ்டஈடு தருவதற்கு அரசாங்கத்திலே வாய்ப்பு இருக்கிறது. அவருடைய அஜாக்கிரதையால் உயிர் இழந்தவர்களுக்கு மட்டும் நஷ்டஈடு தராமல், அஜாக்கிரதை இல்லாமலும் விபத்திலே இறந்தவர்களுக்கும் நஷ்டஈடு தர வேண்டுமென்ற முறையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.





அந்த முறையில் இந்த அரசாங்கம் குடும்பம் ஒன்றுக்கு, ஒரு குடும்பத்திலே ஒருவன் இறந்திருந்தால் அந்தக் குடும்பத்தினுடைய புனர்வாழ்வு திட்டத்திற்கு ஒரு குடும்பத்துக்கு 10,000 ரூபாய் நஷ்டஈடு தருகிற வகையில் இந்த அரசாங்கமானது அதைக் கவனத்திலே வைத்துக் கொண்டு செயல்படுமேயானால் அந்த மக்களுக்கு நாம் சிறந்த நிவாரணப் பணியை அளித்தவர்கள் ஆவோம். அந்த மக்களுக்கு நாம் எந்தெந்த உதவிகளைச் செய்தாலும், இழந்த இழப்புக்கு நாம் ஈடு செய்ய முடியாது.

அவர்களுக்கு உதவி செய்வதிலே நமக்குப் பெருமை கட்டாயம் கிடைக்க வேண்டுமென்ற நிலையில் நாம் இருக்கக் கூடாது. ஏசுநாதர் அவர்களுடைய வாக்கியங்களைப் பார்க்கிறபோது, ஒரு கையிலே கொடுப்பது மறு கைக்குத் தெரியக் கூடாது என்ற ஒரு தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார். ஆனால், தமிழகத்திலே இருக்கிறவர்கள் இரண்டு கொள்கை உடையவர்கள் இரண்டு கூடாரங்களாகத் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றனர். நாம் செய்வது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது. ஆனால் அந்த மக்களுக்குக் கிடைத்தாக வேண்டுமென்ற எண்ணத்திலே பணி செய்கின்ற கடமைக் கூட்டமும் இங்கே இருக்கிறது. அதே நேரத்தில் ஏதோ செய்கின்றோம். அது நாட்டு மக்களுக்குத் தெரிந்து ஆக வேண்டுமென்று பறை சாற்றுகின்ற கூடாரம் தமிழகத்திலே இருந்து கொண்டு இருக்கிறது. நாம் செய்கின்ற உதவி நம்முடைய ரத்தத்தின் ரத்தமாக அங்கே செத்துக் கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு கிடைத்தாக வேண்டுமென்ற எண்ணத்தில் பணியாற்றுகின்ற இந்தத் தமிழக அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. சௌந்திரராசன்:** தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே நடந்து முடிந்த புயலைப் பற்றிய கோரத்தைப் பற்றி சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளை அறிக்கையின் மீது பேசிய அருமை நண்பர்கள் அத்தனை பேர்களும்—பல பேர்கள், இதனை மனதாரப் பாராட்டினார்கள், சில பேர்கள் பாராட்டுகிற மனம் வராவிட்டாலும் பாராட்டாமல் இருக்கமுடியாத சூழ்நிலையில் ஏதோ சொல்லி

வேண்டும் என்ற எண்ணத்தில் சொன்னார்கள் என்பதை நான் இங்கு கவனப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் புயலின் சீற்றம் தமிழகத்தைத் தாக்கிய நேரத்தில் தமிழ்நாட்டில் முதலில் மந்த நிலைமை இருந்ததாகவும் பின்னால் அது சரி செய்யப்பட்டு விரைந்து பணியாற்றினார்கள் என்ற உண்மையை மாற்றுக் கட்சியில் இருக்கிறவர்கள் எடுத்துச்சொன்னார்கள். நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவது, திருச்சி, புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நேரத்தில் முதலில் எந்தப் பகுதியில் வெள்ளம் வருகிறது என்று பார்க்கிற சூழ்நிலையும் அதற்குப் பின்னால் அந்த வெள்ளத்தை எந்தவகையில் தடுப்பது அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி உதவுவது என்ற நிலையும் குறித்து அங்குள்ள அதிகாரிகள் முடிவு எடுப்பதற்கு ஒன்றிரண்டு நாட்கள் தயக்கம் ஏற்பட்டது என்ற நிலை இருந்தாலும் 11-ம் தேதி பெருமழை பெய்ததன் விளைவாக அன்றையதினம் மாலையே எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், அங்குள்ள காவல்துறை அதிகாரிகளும், அங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களிடத்தில் சென்று மக்களுக்கு வெள்ளச் சூழ்நிலையை அறிவுறுத்தி, பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து அத்தனை பேர்களும் சிறந்த முறையில் பணியாற்றினார்கள் என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்குச் சிறந்த முறையில் அங்கு பணியாற்றிய அத்தனை பேர்களையும் பொது மக்கள் உளமாறப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். காரணம், அங்கிருக்கிற அதிகாரிகள், அங்கிருக்கிற அரசியல் கட்சிகள், அங்கிருக்கிற பொது நிறுவனங்கள் எல்லோரும் சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

இன்னும் சொல்லப்போனால், திருவெறும்பூரில் உள்ள 'பெல்' நிறுவனம் அவர்களுக்கே உரிய முறையில் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி, இராணுவ வீரர்களைப்போல் அங்குள்ள ஆயிரக்கணக்கான மக்களை, மூழ்க இருந்தவர்களை 'பெல்' நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் காப்பாற்றினார்கள்.

அதுமட்டுமல்ல, அங்குள்ள பல்வேறு நிறுவனங்களும், அரசும், உடனுக்குடன் விரைந்து சென்று பணியாற்றி ஏறக்குறைய ஐம்பதினாயிரம் மக்களுக்கு உணவு அளிக்கிற சூழ்நிலையிலும்,



மாற்று இடங்கள் அமைத்துக் கொடுக்கிற சூழ்நிலையிலும் நல்ல முறையில் பணியாற்றியதை அங்கு சென்று பார்த்தவர்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது. 12-ம் தேதி வெள்ளம் சூழ்ந்ததற்குப் பிறகு 13-ம் தேதி நமது தமிழக முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள், திருச்சிக்கு வந்து அங்கிருந்து தமிழ்நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப்பார்த்து, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் சென்று பார்த்து அங்கிருக்கிற மக்களுக்கு ஆறுதல் கூறி, விரைந்து பணியாற்ற அதிகாரிகளிடம் கூறி நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தமைக்கு நாங்கள் அவர்களை உளமாறப் பாராட்டுகின்றோம்.

இச்சூழ்நிலையில் அரசு தயக்கம் காட்டியது என்று சொன்னால் ஒருவேளை அவர்களுக்கு மனம் இல்லை என்ற காரணத்தினால் அப்படிச் சொன்னார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர, இந்த அரசு சிறிதுகூட தங்குதடையில்லாமல் செயலாற்றியது என்பதை மத்திய அரசிலிருந்து வந்தவர்களும், இன்னும் சொல்லப் போனால் வெளி மாநிலத்தில் இருக்கிற 'டைம்ஸ் ஆப் இந்தியா' கூட கடந்த மாதம் 30-ம் தேதி தன் பத்திரிகையில் ஒரு பக்கம் எழுதியிருக்கிறார்கள்; தெளிவாக எழுதியிருக்கிறார்கள். எங்கேயாவது புயல், வெள்ளம் ஏற்பட்டால் எப்படிப் பணியாற்ற வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக தமிழக அரசு, புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்குகிற அரசு, செயலாற்றியிருக்கிறது. அதை ஒரு முன்மாதிரியாக மற்றவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மற்றவர்களுக்குக் கூறுகிற அளவிற்கு அந்தப் பத்திரிகை தெளிவாக தன் உள்ளத்தைத் திறந்து பாராட்டி எழுதியிருக்கிறது.

அதேபோல் பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஆகட்டும், மற்ற இலாகா அதிகாரிகளாகட்டும், போக்குவரத்துத் துறை அதிகாரிகளாகட்டும் எல்லோரும் நல்லமுறையில் பணியாற்றினார்கள். வெள்ளம் சூழ்ந்தபோது கள்ள வணிகர்களும், இன்னும் சில வியாபாரிகளும் அதிக விலை வைத்து அரிசி, மண்ணெண்ணெய் இவற்றை விற்றபோது நமது உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அங்கிருக்கிற சிவில் சப்ளைஸ் அதிகாரிகளிடம் எவ்வளவு அரிசி வேண்டுமானாலும் எடுத்து விநியோகித்து, விலையேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில் அதிகாரிகள்

இரவோடு இரவாக ஒலிப்பெருக்கி மூலம் மக்களுக்கு அதை எடுத்துக்கூறி விலையேற்றத்தைத் தடுத்தார்கள்.

(நண்பகல் 12-00)

அதைப்போல இங்கு இருக்கிற அமைச்சர்கள் அத்தனை பேரும் ஒருவருக்கொருவர் கலந்து கொண்டு எந்த அளவுக்குப் பணியாற்றினார்கள் என்பதைப் பார்க்கிற பொழுது, உள்ளபடியே இப்படிப்பட்ட சூழ்நிலையில் செயலாற்றுவதற்கு முன்மாதிரியாக விளங்கினார்கள் என்பதை நான் பெருமையாகக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, எல்லாவற்றுக்கும் மேலாக கல்வி நிறுவனங்கள் இடம் அளித்து, இடமிழந்த பொதுமக்களுக்கு தங்குவதற்கு நல்ல வகையில் நிரந்தரமாக தங்குவதற்காக நல்ல வசதிகளையும் செய்தார்கள் என்பதோடு நல்ல முறையில் நிதி உதவியும் அளித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சி நகரத்தைப் பொறுத்தவரையில், உய்யக்கொண்டான் ஆற்றில் தான் முதலாவது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த ஆற்றின் கரையில் முன்பே இரண்டு அடி அல்லது மூன்று அடி கரை உயர்த்தப்பட்டு கட்டியிருந்தால் இந்த வெள்ளப் பெருக்கை ஓரளவு தவிர்த்திருக்கலாம். நான் கேள்விப்பட்டிருக்கிறேன், கரிகாலன் காலத்தில் தான் காவேரிக்கு கரை கட்டப்பட்டதாகச் சொல்வார்கள். அதன் பிறகு பல நேரங்களிலும் சீரமைப்பு வேலைகள் தான் நடைபெற்றிருக்கும். ஆனால் தேவையான அளவுக்கு கரையை இன்னும் உயர்த்தவில்லை. நகர்ப்புறம் வரையில் திருச்சியில் உய்யக்கொண்டான் ஆற்றின் கரைகள் உயர்த்தப்பட வேண்டும். திருச்சி நகரத்தின் மையப் பகுதியில் தான் உய்யக்கொண்டான் ஆறு ஓடுகிறது. வெள்ளப் பெருக்கு வந்தால் உடனடியாக திருச்சி நகருக்குள் தான் பாயும். அந்த முறையில் தான் இப்போதும் திருச்சி நகரம் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆகவே, உய்யக்கொண்டான் ஆற்றின் கரைகள் உயர்த்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், நகரங்கள் விரிவு அடைய விரிவு அடைய, அருகாமையிலுள்ள நிலங்களில் எல்லாம் வீடுகளைக் கட்டுகிறார்கள். தில்லை நகர், ராம் நகர் இந்த இடங்களில் எல்லாம் பெரிய பணக்காரர்கள் தங்கள் வீடுகளை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலங்களையெல்லாம் போதிய அளவுக்கு உயர்த்தாமல் வீடுகளை கட்டிக்கொள்வதால், இப்படிப்பட்ட வெள்ளம் வரும்போது, மிகவும் சேதமாகிற சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட இடங்களில் வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதி கேட்கும்போது, போதிய அளவுக்கு நிலங்களை உயர்த்திய பின்னால்தான் வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருச்சியில் ஒரு புதிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் குடிசைகளை இழந்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு புதிய இடங்களில் விடுகளைக் கட்டிக்கொள்வதற்கு வழியில்லாமல் அல்லலுறுகிறார்கள். இவர்களுக்கு விடுகளைக் கட்டிக்கொள்வதற்கு இடம் அளிப்பதற்கு, சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு இடங்களை பெரும் பணக்காரர்கள் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களிடமிருந்து இந்த நிலத்தை எடுத்து நிலமில்லாத ஏழை மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொள்ள வழங்க வேண்டும் என்றும், அவர்கள் வாழ்வு வளம் பெற இந்த முறையில் செயலாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நேற்றைய தினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் தாழை கருணாநிதி அவர்கள் இந்த வெள்ளை அறிக்கை வெள்ளையாக இல்லை, கறுப்பாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், நான் அவர்களுக்கு சொல்லிக் கொள்வது, காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத்தான் இருக்கும். ஆகவே தான் அவர்களுக்கு வெள்ளை அறிக்கை கறுப்பாக தெரிகிறது. மற்றவர்களுக்கு எல்லாம் இது வெள்ளையறிக்கையாகத்தான் தெரிகிறது என்று கூறி இதில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் இந்த ஆண்டு கடுமையான அளவுக்கு

ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றியும் அதற்கான நிவாரண வேலைகள் பற்றியும் அவைக்கு தந்திருக்கின்ற வெள்ளை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

எல்லாக் கட்சிகளும் இந்த புயல் வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபட்டதைப்போல், எங்களுடைய ஜனதாக் கட்சியும் புயல் வெள்ள நிவாரணப் பணிகளில் முழு ஒத்துழைப்பையும் கொடுத்தது என்பது இந்த நாட்டுக்கு நன்கு தெரியும். எங்களுடைய மாநிலத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. லட்சுமணன் அவர்களும், திரு. ஜா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், துணைத் தலைவர் திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு கலிவரதன், திரு. சங்கரன் போன்றவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களான நானும் திரு. ஜேம்ஸ் அவர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எல்லாம் சென்று, நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடங்களுக்கு எல்லாம் சென்று, எப்படி வேலைகள் நடக்கின்றன என்பதையெல்லாம் பார்த்தோம்.

அப்படி பார்வையிட்ட நேரத்தில் சில குறைபாடுகளையும் தவறுகளையும் நாங்கள் காண முடிந்தது. இந்தத் தவறுகளை இங்கே சுட்டிக்காட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இலவசமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து கிலோ அரிசி கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. ஆனால் நாகைப்பட்டினம் போன்ற இடங்களில் அரிசியும், மண்ணெண்ணெயும் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. ஆனால், சில இடங்களில் இவ்விதம் இலவசமாக கொடுக்கப்பட்ட அரிசி 400 கிராம் முதல் ஒரு கிலோ வரைதான் இருந்தது என்று அங்குள்ள மக்கள் என்னிடம் சொன்னார்கள். அது மட்டுமல்ல, மண்ணெண்ணெய்க்கு 15 முதல் 30 பைசா வரை, 100 முதல் 200 மில்லி லிட்டருக்குப் பணம் வசூல் செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டார்கள். இந்தத் தவறுகள் எல்லாம் தடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதேபோல், அங்கே கொடுக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் கெட்டுப்போய் இருந்தன என்றும் குறிப்பிட்டார்கள். இதுவும் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தான் சென்றபோது பல இடங்களில் வேஷ்டிகள் கொடுக்கப்பட்டதாகவும், சேலைகள் கொடுக்கப்பட்ட



—

தாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால், நாங்கள் சென்றபோது, அப்படிப்பட்ட பகுதிகளிலே உள்ள மக்கள் எங்களிடத்திலே அப்படி வேஷ்டிகள், புடவைகள் நவம்பர் 30 ஆம் தேதிவரை கொடுத்ததாக யாரும் எங்களிடம் சொல்லவில்லை.

அதுமட்டுமல்லாமல், அந்தமாதிரி உதவித் தொகையாக அளிக்கப்பட்ட 100 ரூபாயும் முழுமையாக பல இடங்களில் தங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். குறிப்பாக, திருத்துறைப்பூண்டி வட்டத்தில் தலைஞாயிறுப் பகுதியில் இம்மாதிரியான தவறுகள் நடந்திருக்கின்றன. அப்படி கொடுக்கப்பட்ட உதவிப் பணம், தகுதியுள்ளவர்களுக்கு, உண்மையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் போய்ச் சேராமல் பாதிக்கப்படாத மக்களுக்கும் போய்ச் சேர்ந்திருக்கிறது. எனவே, இம்மாதிரியான தவறுகள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கலாம்.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால், நாங்கள் திருச்சி நகரிலே ஜவஹர் நகர் பகுதிக்குச் சென்றபோது அங்குள்ள மக்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், இந்த உதவிப் பணம், மண்சுவரால் கட்டப்பட்டு ஓடிட்ட சிறிய குடிசைப் பகுதிகள் நிறைந்த இடங்களிலுள்ள கட்டிடங்களுக்கு கொடுக்கப்படவில்லை. இந்தக் குறை நாடு முழுவதும் சொல்லப்படுகிறது.

அது மட்டுமல்ல. எனக்கு முன்னால் பேசிய திருச்சி உறுப்பினர் திரு. சௌந்திரராசன் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியிலே உள்ள வாடகைதாரர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று சொன்னார்கள். உண்மையிலேயே, இந்த வெள்ளை அறிக்கையிலே கூட, 11-வது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

“இத்தொகை குடிசையில் குடியிருப்போருக்கு அவர்கள் குடிசையின் சொந்தக்காரராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் வழங்கப்படுகிறது. ஒரு குடிசையில் ஒரு குடும்பத்திற்கு அதிகமாகக் குடியிருப்பின், இத்தொகை அக்குடும்பங்கள் அனைத்திற்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும்”

[திரு. பொ. விஜயராகவன்] [1977 டிசம்பர் 30

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலே திருச்சி நகரத்தைப் பொறுத்தவரையில், இப்படி குடிசைப் பகுதிகளிலே குடியிருக்கும் வாடகைதாரர்களுக்கு உதவிப் பணம் கொடுக்காமல், இந்தக் குடிசையின் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டு, அந்தச் சொந்தக்காரர்கள் வாடகைதாரர்களை விரட்டக் கூடிய ஒரு நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. கே. சௌந்திரராசன்:** பாயின்ட் ஆப் ஆர்டர், திருச்சியிலே முதலில் குடிசைப் பகுதியிலே வசிக்கக்கூடியவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. இரண்டாவதாக, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் வந்ததற்குப் பிறகு, அப்படிக் குடிசையிலே குடியிருப்பவர்கள் சொந்தக்காரர்க இருந்தாலும், வாடகை தாரராக இருந்தாலும் இருவருக்குமே கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. விஜயராகவன்:** நாங்கள் சென்ற நோக்கில் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டதென்றும், வாடகைதாரர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்கின்ற காரணத்தினால், சொந்தக்காரர்கள் வாடகைக்கு இருப்பவர்களை விரட்டியடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலைதான் இருந்தது என்கின்ற தகவலைத் தான் சொன்னார்கள். இதுமாதிரியான தவறுகள் நடைபெறாமல் தவிர்த்திருக்கலாம்.

தவிர, எங்கள் மாநில தலைவர் அவர்கள் 23-11-1977 அன்றைக்கு பல இடங்களுக்குச் சென்ற பிறகு, மக்கள் கமிட்டி நிறுவப்பட வேண்டும், சர்வ கட்சியினர் அடங்கிய ஒரு கமிட்டி நிறுவப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு, 6-12-1977 அன்று நடைபெற்ற முதல் அமைச்சர் அவர்களால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே இப்படிமாதிரியான ஒரு முடிவு செய்யப்பட்டது. இதைப்பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த மாதம் 15-ஆம் தேதிதான் அரசியல் கட்சித் தலைவர்களைக் கொண்ட மக்கள் குழு கூடும் என்ற நிலைமையை ஒரு குறிப்பு மூலம் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது பல இடங்களில் நிவாரணப் பணிகள்



1977 டிசம்பர் 30] [திரு. பொ. விஜயராகவன்]

நடைபெறத் தொடங்கி, சில இடங்களில் முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. இதைத் தவிர்க்க, இந்த மக்கள் குழு அமைப்பதிலே இன்னும் காலதாமதம் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், பல தவறுகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. எனவே, முன்னரே மக்கள் குழு அமைக்கப்பட்டிருக்குமானால், இந்தத் தவறுகளையெல்லாம் தடுத்திருக்க முடியும்.

(பிற்பகல் 12-10)

இந்த வெள்ளை அறிக்கையில் எல்லாச் சேதங்களையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை கொடிக்கால் வெற்றிலை பயிரிடுவோர் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. 1961-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் சிக்கம்பாறை அணை உடைப்பு ஏற்பட்டபோது அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜ் **அவர்கள்** சேலம் திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களில் கொடிக்கால பயிரிடுகிறவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக மானியம் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் வட்டியில்லாக் கடனும் கொடுத்தார்கள். இன்றைய தினம் தஞ்சையிலே 2,000 எக்கர், திருச்சியில் 1,000 எக்கர், சேலம், தருமபுரியில் 500 எக்கர் கொடிக்கால் வெற்றிலை பயிரிடுபவர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அந்த விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனும், மானியமும் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மின்சார வாரியம் போர்கால நடவடிக்கையாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டாலும் பல இடங்களில் மின்சாரத்தைக் கொடுத்து விளக்குகளை எரிய வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இதிலே அடிப்படைப் பிரச்சினை ஒன்றை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது. தென்னாற்காடு மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் அன்றையதினம் பண்டிகை பணம் கோரி அந்த ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த காரணத்தால் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய வேலை நீக்கத்தை நீக்கி அவர்களையும் இந்த வெள்ள

நிவாரணப் பணிக்குப் பயன்படுத்தியிருந்தால் இந்த நிவாரண வேலைகளை மேலும் எளிதாக முடித்திருக்கலாம்; அரசுக்கும் பல லட்சம் ரூபாய் லாபம் ஏற்பட்டிருக்கும்.

தஞ்சையில் இன்று பல பகுதிகள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில், கடற்கரை ஓரப் பகுதிகளில் மீனவர் குடியிருப்புகளுக்கு மற்ற இடங்களில் மாற்று இடங்கள் கொடுத்து நிரந்தரமான கட்டடங்கள் கட்டித் தருவது போல் நாகை பகுதியிலும் கடற்கரை ஓரங்களில் உள்ள மீனவர்களுக்கு, புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரமான கட்டடங்களை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கூ. ச. முருகேசன்:** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கை பற்றி எனக்கு முன்பு பலர் பேசினார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திருச்சி பகுதியிலும், மற்றப் பகுதிகளிலும் அதிகமான பாதகம் ஏற்பட்டிருந்தாலும் குறிப்பாக தஞ்சை, திருச்சியைப் பொறுத்தவரை மிகவும் அதிகமாக புயல் வெள்ளத்தால் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை இதிலே சரியான முறையிலே ஒத்துழைக்கவில்லை என்று மாற்றுக் கட்சியினர் கூறுவதால் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நாங்கள் எல்லாம் சிறையிலே இருந்தாலும், மத்திய சிறையிலேயும் சரி, திருச்சி சிறையிலேயும் சரி கழக நண்பர்கள் எல்லாம் ஒருநாள் சாப்பிடாமல் இருந்து அந்தத் தொகையை நாங்கள் வெள்ள நிவாரண நிதிக்குத் தரச் சொன்னோம். அதே போல் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறையிலே இருந்தாலும், வெள்ளத்தால் தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று ஒரு அறிக்கையை விட்டார்கள். அதன் மூலம் லட்சக் கணக்காகப் பணம் சேர்க்கப்பட்டு நேற்று ஆளுநர் அவர்களிடம் மூன்றேமுக்கால் லட்சம்



ரூபாய் கொடுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அந்த நேரத்தில் கூட டாக்டர் கலைஞர் அவர்கள் ஆளுநர் அவர்களிடம் 'நீங்கள் மத்திய அரசிடம் சொல்லி இன்னும் மானியம் அதிகமாக கிட்டதட்ட 200 கோடி ரூபாய் வரை கொடுக்கச் சொல்ல வேண்டும்; கொடுக்கப்பட்ட 34 கோடி ரூபாயையும் திட்டத்தில் சேர்க்காமல் மானியமாகக் கொடுக்கச் சொல்லவேண்டும்' என்ற கோரிக்கையை விட்டார்கள்.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இங்கே உள்ள தமிழ்ச் சமுதாயத்தின் மேல் எவ்வளவு பற்றும் பாசமும் உள்ளது என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் சொல்கிறேன். இன்னும் தி.மு.க. வின் சார்பில் எங்கள் தோழர் ஒருவர் திருச்சியிலே 10 பேர்களை வெள்ளத்திலிருந்து காப்பாற்றி இருக்கிறார், அதில் அவர் உயிர் இழக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையில் தி.மு.க. பல நன்மைகளைத் தமிழ்ச் சமுதாயத்திற்காகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சியைப் பொறுத்தவரையில் பல இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. கோதையாறு, குடமுருட்டி, திருச்சியிலே, சிந்தாமணியிலே, ஸ்ரீரங்கத்திற்குப் பக்கத்திலே மாம்பழசாலையிலே உடைப்புகள் ஏற்பட்டு மக்கள் அவதிக்குள்ளானார்கள். எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறையிலிருந்து வெளியே வந்தவுடனேயே ஒரு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கங்கே உள்ள பல குறைகளைக் கேட்டறிந்தார்கள். அப்போது மக்கள் எங்களுடைய பகுதிகளில் வீடுகள் இடிந்துவிட்டன, எங்களுக்குச் சரியான முறையிலே பணம் கொடுக்கவில்லை என்று எல்லாம் குறைகளைச் சொன்னார்கள், அதையெல்லாம் நாங்கள் இங்கே வந்து சொன்னால் சிலருக்குக் கோபம் வருகிறது. மக்கள் எங்களிடம் சொல்கிறார்கள், நாங்கள் இங்கே வந்து சொல்கிறோம். சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் வெள்ள நிவாரணத்திற்காகத் திரட்டினார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கூ. ச. முருகேசன்] [1977 டிசம்பர் 30

எங்கள் பகுதியில் கவத்திரச நல்லூர் என்ற இடத்தில் ஒரு உடைப்பு ஏற்பட்டது. காவிரியிலே தண்ணீர் வரும்பொழுது இந்த உடைப்பு ஏற்பட்டது. வடகரையிலே அநேக கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் தென்கரையில் உடைப்பு ஏற்பட்ட இடத்திலே கிராமங்கள் இல்லை, கிளிகூடு என்ற ஒரு கிராமம் தான் இருக்கிறது. நான் சிறையிலே இருந்து வெளியே வந்தவுடன் அந்தப் பகுதிக்குச் சென்றபோது அங்கே உள்ள மக்கள் எல்லாம் சொன்னார்கள், குடகனாற்று மதகுகளை எப்படி திறக்காமல் இருந்தார்களோ அதைப்போன்று இங்கேயும் திறக்காமல் இருந்தார்கள். அந்தக் கரையிலே ஒரு அடி, ஒன்றரை அடி தண்ணீர் மேலே போனவுடனேயே பக்கத்திலே உள்ள கிராமத்துக்காரர்கள் எல்லாம் தங்களுடைய மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறினார்கள். கொள்ளிடத்தை திறந்துவிட்டார்கள், ஆனால் காவிரி, வெண்ணாறு இவைகளில் மதகுகள் திறக்கப்படவில்லை, அவைகளையெல்லாம் மக்களே திறந்திருக்கிறார்கள். உண்மையிலேயே மக்கள் திறந்திருக்காவிட்டால் கிராமங்கள் இருக்கிற பகுதியிலே வடபகுதியிலே உள்ள கிராமங்கள் தப்பித்து இருக்காது. அங்கேயும் ஒரு வேடசந்தூர் ஏற்பட்டு இருக்கும். இதற்காக ஒரு விசாரணை வைத்தாலும் பொதுமக்கள் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

என் பகுதியில் காவிரிக் கரையிலே சர்க்கார்பாளையம் இருக்கிறது. அங்கே 130 வீடுகள் பாழடைந்துவிட்டன என்று கணக்கு எடுத்துச் சென்றார்கள். ஆனால் 50, 55 பேர்களுக்குத்தான் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குப் பணம் கிடைக்காமல் என்னிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். நான் சென்னைக்கு வருவதற்கு முன்பு 1,000 மனுக்களுக்கு மேல் கொடுத்தார்கள். மக்கள் சொல்வதை நாங்கள் சொல்லவேண்டும். அதற்காக மற்றவர்கள் வருத்தப்படுவதில் அர்த்தம் இல்லை.

டாக்டர் கலைஞர் அவர்கள் எங்கள் பகுதியிலே 120 வீடுகள் நரிக்குறவர்களுக்காகக் கட்டிக் கொடுத்தார்கள், அரிசனங்களுக்காக வெங்கூர் பகுதியிலே 50 வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள், குவளக்குடியிலே வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள். இப்படிக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளிலே, வெள்ளம் ஏற்பட்டபோது பாதிக்கப்பட்ட வீடுகளிலே இருந்தவர்கள் அங்கே போய் தங்கி



1977 டிசம்பர் 30] [திரு. கூ. ச. முருகேசன்]

யிருக்கிறார்கள் என்பதை எங்களிடம் தெரிவித்தார்கள். நாங்கள் டாக்டர் கலைஞர் கட்டிக் கொடுத்த வீடுகளிலே இருக்கிறோம், பக்கத்திலே இருக்கிறவர்கள் வீடுகள் இல்லாமல் வேதனைப் படுகிறார்கள், அவர்களுக்கும் புதிய வீடுகளைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் அரியலூர் பக்கத்திலே திருமானூர்—விளாங்குடி செல்லும் பாலம், கொள்ளிடத்திலே தஞ்சாவூர் குடிநீருக்காகக்

(பிற்பகல் 12-20)

கட்டிடம் கட்டித்தர வேண்டும், அல்லது தற்காலிகமாவது கட்டப்பட்ட பாலம் உடைப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் முன்னால் இருந்த அரசைக் குறை கூற வேண்டுமென்பதற்காக அங்கே அந்த அணை உடைப்பெடுத்தது என்ற காரணத்தை சிலர் கூறுவதால் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசு நல்ல முறையிலே உதவி புரிய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

அதைப்போலவே, எங்கள் பகுதியில் அம்பிகாபுரத்தில் அரசினர் பள்ளி ஒன்று இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே துவக்கப்பட்ட பள்ளி. அந்தப் பள்ளிக் கூடம் இடிந்து தரை மட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியை இந்த அரசு கண் திறந்து, அந்த பள்ளிக்கு அந்த மாணவர்கள் படிப்பதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் பாரத் கனரக மின் தொழிற்சாலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை, திருச்சி பகுதியிலே உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் உழைப்பையும் தந்து அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல ஆறுதலையும், நல்ல உதவி

களையும் செய்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய சார்பிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகையினாலே, இங்கே விவசாயிகளைப்பற்றி இப்பொழுது பேசக்கூடிய நிலைமையிலே, இந்த நேரத்திலே, இரண்டு மூன்று மாதங்களாக அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கேயுள்ள விவசாயிகளுக்குப் பூச்சி மருந்து கிடைக்கவில்லை, சொசைட்டியிலும் கிடைக்கவில்லை, பஞ்சாயத்து யூனியனிலும் கிடைக்கவில்லை. அது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, நவம்பர் 11, 12 தேதிகளில் அடித்த புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் பற்றியும், அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றியும், வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையை இந்தச் சபையில் வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின்மேல் நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். நவம்பர் மாதம் 11, 12 தேதிகளில் தமிழ்நாட்டில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், இன்னும் மற்றப் பகுதிகளிலும் கடுமையான மழையும், புயலும் வீசியது. புயல் வீசியதற்குப் பிறகு உடனடியாக அங்குள்ள அதிகாரிகள் தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில், தமிழக அமைச்சரவையில் உள்ள தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களும், விவசாய அமைச்சரவர்களும் தஞ்சை மாவட்டத்தைச் சுற்றி வரும் நேரத்தில் என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் நான் அவர்களைச் சந்திக்க முடியாத நிலையில் கிராமங்களுக்குச் சென்றுவிட்டேன். அதற்காக அவர்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அடித்த இந்தப் புயலாலும், வெள்ளத்தாலும் தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக, வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல், 100 சதவிகிதம் மழை கொட்டிக்கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், அப்படியென்றால் தஞ்சை மாவட்டம் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அறிக்கையிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

அப்படித் தஞ்சை மாவட்டத்தில் புயல் அடித்ததற்குப்பிறகு அரசாங்கத்திலிருந்து ஒரு அறிவிப்பு வந்தது. முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் வீடுகள் கணக்கெடுக்கப்பட வேண்டும், அந்தக் கணக்கெடுப்பிற்குப்பிறகு 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அறிவித்தார்கள். ஆனால் அடுத்த அறிவிப்பு, 200 ரூபாய், அடுத்த அறிவிப்பு 5 கிலோ அரிசி, தாய்மார்களுக்கு ஒரு சேலை, அந்த வீட்டிலிருக்கும் ஆண்களுக்கு வேஷ்டி என்று அறிவித்தார்கள். இப்படி தொடர்ச்சியாக அறிவிப்புகள் வந்து, அதிகாரிகள் அடுத்து, கணக்கெடுக்கக்கூடிய நேரத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக கணக்கெடுத்தார்கள். அப்படி கணக்கெடுத்து, அதை விநியோகிக்கின்ற நேரத்தில், அதற்கு முன்னால் அந்த அறிவிப்பு வந்து நிவாரணப்பணி நடைபெறுகிற நேரத்தில், 1955 ஆம் ஆண்டு, புயல் அடிக்கக்கூடிய காலத்தில், இவ்வளவு சுறுசுறுப்பாகவோ, வேகமாகவோ, அல்லது இந்த அளவிற்கோ நிவாரணம் அளிக்கப்படவில்லை.

இருந்தாலும், இன்றைய அரசு, சட்டத்திற்கு ஏற்றாற்போல், ஒரு வீட்டிற்கு ரூபாய் 200-ம், 5 கிலோ அரிசியும், வேஷ்டி, புடவையும், மற்றும் கோதுமை, எண்ணெயும் அளித்திருக்கிறது. அதை உண்மையிலே, வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

ஆனால், இன்றைய அரசும், முதலமைச்சரவர்களும் எந்த நல்ல நோக்கத்தோடு ஏழை, எளிய மக்களுக்கு, சாதாரண மக்களுக்கு, உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இந்த உதவிகள் கிடைக்கவேண்டுமென்று அறிவித்தார்களோ, அந்தப் பொருள் அத்தனையும் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்றால். பரிசீலித்தால், நிச்சயமாக, 70 சதவீதத்தினருக்குத்தான்

கிடைத்திருக்கிறது. மீதி 30 சதவிகிதம், தேவையில்லாதவர் களுக்குப், வேண்டாமென்று நினைக்கின்றவர்களுக்கும், 4 வீடுகள் வைத்திருக்கின்றவர்களுக்கும், மில் வைத்திருக்கின்றவர்களுக்கும், இவர்களுக்கு எல்லாம், இந்த நிவாரணம் சென்று கொண்டிருக் கிறது. இதற்குக் காரணம், எல்லா அதிகாரிகளையும் நான் குற்றம் சாட்டவில்லை. ஒரு பகுதி அதிகாரிகள், இருக்கின்ற நன்மை, மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று நல்லெண்ணத் தோடு செய்திருக்கிறார்கள். ஆனால், வேறு சில அதிகாரிகள், வேண்டுமென்றே, மக்களைக் குழப்ப வேண்டுமென்று, முதலமைச் சருக்குத் தந்தி கொடுங்கள், வேண்டுமென்றால், மனு கொடுங்கள் என்று இப்படியெல்லாம் செய்திருக்கிறார்கள்.

உதாரணமாக, என்னுடைய தொகுதியில் 2 கணக்குப் பிள்ளைகள் செய்த தவறை நாங்கள் நிரூபித்தோம். அதன் காரணமாக, அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ரூபாய் 50 கொடுத்துவிட்டு, ரூபாய் 100-க்கு கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் நடந்திருக்கின்றன. இதையெல்லாம் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டு (குறுக்கீடு) பெயர் தேவைப்பட்டால், நிச்சயமாகச் சொல்லியிருக்கிறேன். அங்கிருந்த பெரிய அதிகாரிகளிடத்திலும் எழுதிக்கொடுத்திருக்கிறேன். ஆனால், இதை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் விரும்பினால், பெயரை அறையிலேபோய் சொல்லுங்கள்.

**திரு. பொ. உத்திராபதி :** அப்பொழுது ஏழை, எளிய மக்கள், குறிப்பாக அரிசன மக்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, நிவாரணத்தை மீதி உள்ளவர்களுக்கும் தாராளமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, காலனியில் குடியிருப்பவர்களுக்குத் தாப்பாலில்லை. ஒரு பஞ்சாயத்தில் 100 பேர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், காலனியில் குடியிருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கப் படவில்லை. அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, விவசாயிகள் பிரச்னை. தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகள் முன்னேற வேண்டுமென்றால், பத்து ஆண்டுக்காலம் ஆகும். அங்கு குறுவையெல்லாம் அறுவடை பாதிப்புக்கு ஆளாகிவிட்டது. டிராக்டர் வைத்து அடித்திருப்பதால், குறுவை நடவு பாதித்துவிட்டது. அங்கு தண்ணீர் இல்லாததால் நிலம் பூராவும் பாளம், பாளமாகிவிட்டது. அந்த விவசாயிகள் பிழைக்க வேண்டுமானால், அவர்களுக்கு அளித் துள்ள கடனை பத்து ஆண்டுக்காலத்திற்கு வட்டியில்லாமல் ஒத்தி வைக்க வேண்டும். இந்த ஆண்டும் துரிதமாக லோன் கொடுக்க வேண்டும். குறுவை லோன் என்ற பெயரில் கொடுக்கப்பட்டது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயிகள், சம்பா லோன் போட்டு, குறுவைப் பயிர் செய்வார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, குறுவை, சம்பா என்று பார்க்காமல், சகல விவசாயிகளுக்கும் கடனை ஒத்திவைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1385 பசலி, 1386 பசலியில் வறட்சி என்று அறிவித்திருக் கிறார்கள். ஆனால், 1387 பசலியில் புயல் அடித்திருக்கிறது. ஆகவே, குத்தகை விவசாயிகளுக்கு கோர்ட்டில் இருக்கும் வழக்கை தள்ளுபடி செய்வதுடன் குத்தகைப் பாக்கியையும் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு கிஸ்தியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அவர்களே முறையிட்டிருக்கிறார்கள், சர்க்காரிடம். அவர்கள் கட்ட வேண்டிய பணத்தை ஒத்திவைக்க வேண்டும். புறம்போக்கில் சாகுபடி செய்கிறவர்கள் கட்ட வேண்டிய கடன் தொகையையும், நிலத்துக்கான வரியையும் ஒத்திவைக்க வேண்டும். இறந்தவர் குடும்பத்திற்கு ரூபாய் 1,000 என்று அறிவித்திருக்கிறார்கள். இறந்தவர் என்று சொன்னால், ஒரு குடும்பத்தில், குழந்தை இறந்திருக்கும், தாய்மார்கள் இறந்திருக்கிறார்கள், இன்னும் குடும்பமே இறந்திருக்கும். ஆகவே, யார் இறந்திருந்தாலும், இறந்தவர் குடும்பத்திற்கு ரூபாய் 1,000 வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் பிரச்னை என்றால், எந்த அரசு இருந்தாலும் விவசாயிகளை வரவேற்பார்கள், ஆனால் கட்டிக் கழிக்கிறார்கள். உதாரணமாக, 1969 ஆம் ஆண்டு

விவசாயிகள் பிரச்னை கிளம்பியது. மீண்டும் 1972 ஆம் ஆண்டு விவசாயிகள் பிரச்னை கிளம்பியது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினர் இரும்புக்கரம் காட்டினார்கள். விவசாயிகள் தங்கள் கோரிக்கையை முன் வைத்துப் பொங்கியெழுந்து போராடியபோது, 22 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான காட்சியைப் பார்த்திருக்கிறோம். 28 ஆம் தேதி சென்னையில் நடத்திய பேரணியை வரவேற்கிறேன். ஆனால், இந்த அரசு விவசாயிகளை இந்த நிலைக்கு ஆளாக்காமல், விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையில், எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் குழு அமைத்து, எதிர்காலத்தில் வடி வாய்க்கால், பாசன வாய்க்கால் வெட்டுவதற்கு இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வேலைகளைத் தனியார் கையில் ஒப்படைக்காமல் மக்கள் குழுவிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குச் சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

**திரு. எம். ஆறுமுகம்:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின் மீது எங்களுடைய ஜனதா கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை இங்கே கூறுகிறேன்.

அண்மையிலே வீசிய புயல் கடுமையானதா அல்லது இன்றையதினம் சபையின் ஆரம்பத்தில் வீசிய புயல் கடுமையானதா என்கின்ற அளவுக்கு இன்றையதினம் விவாதம் ஆரம்பமாகியிருக்கிறது. அண்மையில் வீசிய புயலின்போது துர்ப்பாக்கியவசமாக நான் தமிழகத்தில் இல்லாத நிலை ஏற்பட்டது. அரசு பொதுத்துறை குழுவின் சார்பாக வட மாநிலங்களில் பொதுத்துறை குழுவின் நடவடிக்கைகளைப் பார்க்க அனுப்பப்பட்டோம். ஆனால் புயல் வீசியதை மறுநாள் நாங்கள் மேற்கு வங்காளத்தில் கேள்விப்பட்டு உடனடியாக, விரைவாக சென்னைக்குத் திரும்பினோம். அப்படித் திரும்பியும் ஆந்திராவில் புயல் வீசியதால், அம்மாநிலம் புயலால் தாக்கப்பட்டு இருந்ததால், விஜயவாடாவில் மிக வேகமாக புயல் தாக்கியதால் மீண்டும் எங்கள் பயணம் தடைப்பட்டது.



திரும்பிச் செல்ல நேரிட்டது. பிறகு புயலால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். ஏற்கனவே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப்போல் இன்றையதினம் ஏற்பட்டுள்ள சேதங்கள் கணக்கில் அடங்காதவை என்பதை நம்முடைய அரசின் அறிக்கையிலிருந்து தெளிவாக தெரிய வருகிறது.

நாடு சுதந்திரம் அடைந்த பின்பு பல புயல்களைத் தமிழகம் கண்டிருக்கிறது. ஆனால் அண்மையில் வீசிய புயலைப்போல் தமிழகத்தைத் தாக்கிய இந்தப் புயல் மிகக் கடுமையானது என்பதை ஏற்பட்ட சேதாரத்தைக்கொண்டு நான் மதிப்பிடுகிறேன். ஏற்கனவே ஏற்பட்ட புயல்களில் மத்திய அரசு எடுக்காத பல நடவடிக்கைகளை மத்தியிலுள்ள ஜனதா அரசு இப்போது எடுத்திருக்கிறது. இங்கே விமானப்படை, தரைப் படை, கப்பற்படை போன்றவைகள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மத்தியிலுள்ள அரசானது மாநில அரசினுடைய எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்ய இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆகவே, மாநில அரசுகளுக்கு மத்திய அரசாங்கம் புயல் வெள்ள நிவாரணப் பணிகளை கவனிப்பதற்கும், சரியான நேரத்தில் உதவிகளைச் செய்ய முன் வந்ததற்கும், மத்திய அரசாங்கத்திற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டில் ஏராளமாக கால்நடைச் செல்வங்கள் இந்தப் புயலால், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கால்நடைச் செல்வங்களை மீண்டும் கொண்டு வந்து, அந்த விவசாயிகள் மீண்டும் தங்கள் தொழிலை கவனிக்க வசதி செய்யும் வகையில், கடன்உதவி செய்வதோடு அல்லாமல், அவர்கள் பெற்றுள்ள கடனை ரத்து செய்வதோடு மட்டுமல்லாமல், அதனை நீண்டகால கடனாக மாற்றுவதோடு அல்லாமல், மூன்றில் ஒரு பகுதி தொகையை மானியமாக அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விவசாய நிலங்களில் 4—5 அடி மண்மேடு இட்டு இருப்பதால், அரசாங்கத்துறையில் புல்டோசர்களைக்கொண்டு சமப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மீண்டும் அவற்றை விவசாயத்திற்கு லாயக்குள்ள முறையில் மாற்றுவதற்கு ரூபாய் 1,000 என்பதற்குப் பதிலாக ரூபாய் 2,000 நஷ்ட ஈடாக அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியில், இந்தப் புயல்—வெள்ளத்தால் பல கல்லூரிகளில் பெருத்த சேதம் ஏற்பட்டு இருக்கிறது. செயின்ட் ஜோசப் கல்லூரியில் 130 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்த இலக்கியச் செல்வங்கள், அருமையான படைப்புகள் ரூபாய் 30,000-க்கும் மேற்பட்டவை சேதப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கும் 4 கல்லூரிகளுக்கும் ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கி, நஷ்டஈடு என்ற முறையில் தருவதற்கு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் காரணமாக, கரூர் நாமக்கல், மோகனூர் வட்டங்களில், போக்குவரத்து சீர் கெட்டுக் கிடக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு கோடி ரூபாய் அளவிற்குச் சாலை சீர்ப்படுத்துவதற்குத் தேவை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பி யிருக்கிறார்கள். சேலம் நகராட்சிக்கு மட்டும் 15 இலட்சம் ரூபாய் சாலைகள் சீரமைப்புக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, இம்மாதிரி சாலை சீரமைப்புப் பணிகளை செய்வதற்கு நகராட்சியிடத்தில், பஞ்சாயத்துக்களிடத்தில் வேண்டிய நிதி வசதி இல்லை. மாநில அரசு முடிந்தவரையில் அவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். ஏனெனில் மத்திய அரசாங்கத்தில் இருந்து தாராளமாக நிதியைப் பெற்றுவிட்டு, தங்களுடைய ஆளுகைக்குக் கீழ் இருக்கும் நகராட்சி, பஞ்சாயத்துக்களுக்கு அதேமுறையில் சீராக அளிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில், சேர்வராயன் மலைப்பகுதியில், மூக்கனேரி என்று ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதைப் பார்த்தால் கடல் போல் இருக்கும். சக்கரவர்த்தி





ராஜகோபாலாச்சாரியார் இருந்த காலத்தில் ஒருமுறை அதில் உடைப்பு ஏற்பட்டது. 1972 ஆம் ஆண்டில் ஒருமுறை உடைப்பு ஏற்பட்டது. தற்போது ஆயிரக்கணக்கான வீடுகள் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. இப்போது மீண்டும் அந்த ஏரியில் கடந்த மாதம் ஏற்பட்ட பெருமழை காரணமாக தண்ணீர் நிரம்பி வழிகிறது. அதிகாரிகள் எடுத்த முன்னெச்சரிக்கை காரணமாக பல தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட காரணத்தால் உடைப்பு தடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த மூக்கனேரியின் கரையை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதத்தால் இழந்த தென்னை, கால்நடைகளை சொத்துக்களை புதுப்பித்துக்கொள்ளலாம். ஆனால் இழந்த உயிர்களை கொடுக்க முடியாது. சில குடும்பங்களில் தந்தையை இழந்து, தாய்மார்களை இழந்து இருக்கிறார்கள். சில குடும்பங்களில் தலைமகனை இழந்து இருக்கிறார்கள். சில குடும்பங்களில் வருமானத்தைக் கொண்டு வரக்கூடியவர்களை இழந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புக்கு நம்முடைய அரசாங்கம் குடும்பத்திற்கு ரூபாய் 5,000 அளிக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

* **திரு. சி. மாணிக்கம்:** அவைத் தலைவர் அவர்களே, இயற்கை அன்னையின் கோபத்திற்கு இரையான தமிழகப் பகுதிகளில் திருச்சி மாநகரும் அதன் அருகில் உள்ள தஞ்சை, நாகை, வேளாங்கண்ணி மற்றும் வேடசந்தூர் பகுதிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வேளையில் மக்கள் உயிரே தன் உயிர், மக்கள் மன நிறைவே தன் மன அமைதி என்று வாழும் மக்கள் திலகம் தமிழக முதல்வர் அவர்களும், மற்றும் மக்கள் தொண்டிற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அமைச்சர் பெருமக்களும் வாகனங்கள் செல்ல முடியாத பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நடந்தும், மிதி வண்டியிலும் கூடச் சென்று நேரடிப் பார்வை யிட்டு நிலைமையைக் கண்டு துடி-துடித்து, துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, நழுவிய ஆடையை, பிடிக்க விரையும் கரங்களைப் போன்று விரைந்து உதவிய கரங்களான இந்த அரசுக்கு அந்த

மக்களின் சார்பாக நன்றியைக் கூறிக் கொள்ளும் இந்த வேளையில் இனி வரும் காலங்களில் பெரும் நீர் பெருக்கையும் தாங்கும் வகையில் காவிரித் தாயின் கரைகளை பலப்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வேடசந்தூர் பகுதிக்கும் அங்கிருந்து நல்லமண்ணூர் கோட்டைக்கும் செல்லும்போது முதல்வர் அவர்கள் இரண்டு மைல் தூரத்திற்கு நடந்தே வந்தார்கள். குடகனாறு அணையின் உடைப்பே பெரும் சேதத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்த முதல்வர் கண்ணீர் சிந்தினார். அங்கிருந்த மக்களை ஒன்று திரட்டி நேரடியாக அவர்களிடம் பேசி அவர்களுக்கு கிடைக்கவேண்டிய உதவிகளில் ஏதேனும் தவறுகளோ தாமதமோ ஏற்பட்டால் அஞ்சல் மூலமாக தனக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரிவித்தால் உடனடி நிவாரணம் கிடைக்கும் என உறுதி கூறினார்கள். அங்கு ஒரு மூதாட்டியிடம் உங்களுக்கு நிவாரணப் பணிகளெல்லாம் சரியாக நடக்கின்றனவா என்று வினவியபோது அந்த அம்மையார் சாப்பாடும், உடையும் கிடைக்கின்றன: ரூபாய் 80 கொடுத்துள்ளார்கள் என்று கூறியபோது முதல்வர் அவர்கள் இன்னும் ரூ. 120 கொடுக்கச் சொல்கிறேன். அது தவிர இந்த அரசால் உங்களுக்கு என்னென்ன உதவிகளெல்லாம் செய்ய முடியுமோ அவையனைத்தும் செய்கிறேன் என்று உறுதிமொழி கூறி உடனே அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்த போது அத்தனை துன்பத்திலும் வயது முதிர்ந்த பழுத்த இலையான அந்த மூதாட்டியின் வதனம் பசுமை இலையாக பிரகாசிக்க, உங்கள் ஆட்சி நீடூழி வாழ வேண்டும் என்று ஆசி கூறியபோது, எனக்கு புராணத்தில் கடவுள் ஔவைப் பிராட்டியிடம் சுட்ட கனி வேண்டுமா, சுடாத கனி வேண்டுமா? என்று கேட்டபோது ஔவையின் முகமும் இப்படித்தான் மலர்ந்திருக்குமென தோன்றியது.

மேலும் அமைச்சர் பெருமக்கள் இரவு பகலென்று பாராது ஊண் உறக்கமின்றி போர்க்களத்தில் அலையும் தளபதிகள் போல் தொண்டு செய்தார்கள். எனவே ஏழைகளின் நல்வாழ்க்கைக்காக பாடுபடும் இந்த அரசு இத்தனை இடையூறுகளுக்கு இடையிலும் தக்க நிவாரணப் பணி செய்ததோடு, திருச்சி, தஞ்சை பகுதிகளிலும் பள்ளமான இடங்களில் வாழும் அரிஜன மற்றும் ஏழை விவசாயிகளுக்கு மேட்டுப்பாங்கான இடங்களில் வீட்டு மனை





வழங்கி, அதில் வீடு கட்ட உதவ வேண்டும். மேலும் அவர்கள் பழைய நிலைக்கு திரும்ப, அவர்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைய விவசாயத்திற்கும், கால்நடைகள் வாங்கவும் கடன் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், திருச்சியில் கீழச்சிந்தாமணி பகுதியில் காவல் துறையினர் குடியிருப்பு இருக்கிறது. திருச்சி காவல் துறையினர் தங்கள் இல்லமெல்லாம் நீரில் மிதக்கையிலே பொதுத் தொண்டில் அர்ப்பணித்துக் கொண்டு இருந்தார்கள். அத்தகைய வீரர்களின் பாதிக்கப்பட்ட குடியிருப்பு வீடுகளை உடனடியாக பழுது பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காலரா போன்ற தொற்று நோய்த் தடுப்புப் பணிகளும் நடந்து வருகின்றன. புரியாத ஏழை விவசாய மக்களுக்கு தடுப்பு ஊசியின் அவசியத்தை எடுத்துக் கூறி நோய்த்தடுப்பு பணிகளை துரிதப்படுத்தி விரிவு படுத்தவேண்டுமென்றும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியில் நிவாரணப் பணியில் பாய்லர் தொழிற்சாலை பணியாளர்களின் பணி நம்மால் என்றும் மறக்க முடியாது.

இதே போல் காவல் துறையினரும் இரவு பகலாக ஓயாமல் நிவாரணப் பணியில் ஈடுபட்டு வேலை செய்ததற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. துரை கலியமூர்த்தி:** தலைவர் அவர்களே, இங்கே இப்பொழுது வெள்ள நிவாரண அறிக்கையின் மீது பேச வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இன்று தமிழ்நாட்டிலே மிகப் பெரும்பான்மையான இடங்கள் பாதிக்கப்பட்டு, புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர்உயிர் இழந்தவர்கள், மாடு கன்று ஆகியவைகளை இழந்தவர்கள், வீடு வாசல் உடைமைகள் இழந்தவர்கள் எல்லாம் தைரியமாக இருக்கிறார்கள். நல்ல முறையில் உதவி செய்ய வேண்டும். ரோடு வசதிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணியை நல்ல முறையில் செய்ய வேண்டும். நிவாரணப் பணியில் திராவிட முன்னேற்றக் கழகமும், அங்கங்கேயுள்ள நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் மிக அருமையாக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டம் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

சிதம்பரம் தாலுகா வெள்ளத்தில் மிதந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. கொள்ளிடம் உடைப்பின் காரணமாகவும், வெள்ளாற்றில் தண்ணீர் உயர்ந்தது காரணமாகவும், வடவாறில் உடைப்பு ஏற்பட்டதன் காரணமாகவும், பொன்னேரியில் உடைப்பு ஏற்பட்டதன் காரணமாகவும், பாளையங்கோட்டை ஏரியில் உடைப்பு ஏற்பட்டதன் காரணமாகவும், பெலந்துறை வாய்க்கால் உடைப்பு எடுத்ததன் காரணமாகவும் சிதம்பரம் தாலுகா தண்ணீரில் மிதந்தது என்று சொல்லலாம். பிச்சாவரம் பகுதியில் கடல் தண்ணீர் உட்புகுந்தது. ஆக, சிதம்பரம் தாலுகா முழுமையும் பாதிக்கப்பட்டது. எனவே சிதம்பரம் தாலுகாவையும் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளோடு சேர்த்து அங்கும் நிவாரணப் பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு இழந்தவர்களுக்கு உதவி கொடுக்கப்படும் என்று சொல்லி, முதலில் ரூ. 100 என்றும் பிறகு ரூ. 200 என்றும் அதற்குப் பிறகு ரூ. 100 என்று கொடுக்கப்படும் என்று அரசு உத்தரவு போட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனால் அதிகாரிகள் அப்படியும் சொல்லாமல் இப்படியும் சொல்லாமல் பொது மக்களை குழப்பி திண்டாட வைக்கிற நிலையில்தான் அரசாங்க ஆணைகள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். சில இடங்களில் ரூ. 100-க்குப் பிறகு வேறு பணம் எதுவும் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். வீடு ஒரு பகுதி இடிந்துவிழுந்திருந்தாலும் ரூ. 200 கொடுக்கவேண்டும் என்று அறிக்கை பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆனால் அப்படி கொடுக்கப்படவில்லை.

அதன் காரணமாக தொற்றவைக்குடி, புனைகிரி போன்ற இடங்களில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நெசவாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நல்லமுறையில் ஒரு கமிட்டி அமைத்து தீர்த்து வைக்கவேண்டும்.





பயிர்பாதுகாப்பிற்காக உதவித்தொகை கொடுக்கப்படும் என்ற செய்திகள் வந்தன. ஆனால் இதுவரையில் அப்படி எந்த உதவித் தொகையும் கொடுக்கப்படவில்லை. அதனால் ஏழை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிதம்பரம் தாலுக்காவில் பெரும்பாலான நிலங்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கிறது. நெல்லை அறுக்க முடியாத நிலையில் இருந்து இருக்கிறார்கள். முன்பு பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டுவருகிறோம் என்று சொன்னார்கள். இன்று விவசாயிகள் பெரும் அளவில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று விவசாயிகளுக்கு உரம் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அது சரியான முறையில் விநியோகிக்கப்படவில்லை. அறிக்கை கொடுக்காமல் மக்களுக்குத் தெரியாமல் விதைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விதைகள் ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆற்றோரங்களில் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அவை கணக்கில் வரவில்லை. ஆடு, மாடுகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன. அதற்கெல்லாம் உதவித் தொகை அளிக்கப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வெள்ளம் மழை காரணமாக மண் மேடிட்ட நிலங்களை எல்லாம் அரசாங்கச் செலவிலேயே அவற்றையெல்லாம் சீர்செய்துகொடுத்தார்கள். ஆனால் இப்போது மண் மேடிட்ட நிலங்களைச் சீர்செய்ய இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட நல்ல செயல்களை எல்லாம், முன்மாதிரியாக வைத்துக் கொண்டு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரத்திற்கு மத்தியக் குழு வந்திருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசுப் பொறுப்பில் உள்ளவர்கள் புறக்கணித்தார்கள். நல்லமுறையில் அவர்களுடைய பணிகள் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் நல்லமுறையில் ஆங்காங்கு பணி புரிந்தனர். உணவு கொடுக்கும் வகையிலும், மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் வகையிலும் நல்ல பணி புரிந்தனர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். 27—12—1977 அன்று சர்வகட்சிக் குழுவைக் கூட்டினார் தென்னார்காடு மாவட்ட கலக்டர் அவர்கள்.

ஆனால் எங்களை அழைக்கவில்லை. எனவே, அதை எப்படி நடத்தினார்கள் என்று சொல்ல முடியாது. பழைய அரசு கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

வல்லப்படுகை பகுதியில், செயங்கொண்டபட்டினம், பொறம்பட்டு, குண்டலப்பாடி, திட்டு, காட்டுமன்னார்குடி பகுதியில், கண்டமங்கலம், குருங்குடி, நெய்வாசல், வீரணநல்லூர், வீரநந்தபுரம், சிறகிழந்தநல்லூர், திருநாரையூர், புவனகிரியில் எல்லக்குடி, குளக்குடி, மருதூர், கிருஷ்ணாபுரம், மணக்குடி, நக்ரவிந்தல்குடி, பிச்சாவரம், போன்ற இடங்கள் தண்ணீரில் மிதந்தன. இவ்விடங்களிலும் நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, வட்டத்தூர், புடையூர், சோடிதரம், நங்குடி, குமராகுடி ஆகிய இடங்கள் காண்ட்ராக்ட் கொடுக்கும் விஷயத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருக்கு முதல் நாமினேஷன் வொர்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னை பகுதியில் குத்திப்பாளையம் அருகே அணைகட்ட 18,000 ரூபாய் ஒப்பந்தம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ரூ. 3,000 அளவில் தான் 250 சாக்கு, 1,000 மட்டைகள், 255 ஆட்களை வைத்து முனை அடித்து வேலை நடந்திருக்கிறது.

(பிற்பகல் 12-50)

மேலும் தாண்டவராயசோழகன் பேட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர் உடைப்பைக் கட்டிக்கொண்டிருந்தார். ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்திருப்பார். இதற்கிடையில் அ.தி.மு.க. வைச் சேர்ந்த ஒருவருக்கு நாமினேஷன் ஒர்க் கொடுப்பதற்காக இவருக்குக் கொடுத்திருந்த வேலையை நீக்கி விட்டார்கள். இது போன்று காண்டிராக்ட் விஷயத்திலும் ஊழல் நிறைய நடந்து இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் இந்த நிவாரணப் பணிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர், நல்ல பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களை எந்தப் பழிச்சொல்லுக்கும் ஆளாக்காமல், தாங்கள் தங்கள் வேலைகளை நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிவாரண வேலைகள் பற்றிய வெள்ளை அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். நண்பர் ஒருவர் இந்த வெள்ளை அறிக்கையை



கறுப்பு அறிக்கை என்று சொல்லிவிட்டார்கள் என்பதற்காக காமாலைக்கண்ணுக்கு அப்படித்தான் தெரியும் என்று எல்லாம் சொன்னார்கள். இந்த அறிக்கையிலுள்ள குறைகளை எடுத்துக் கூறி, மக்களின் தேவைகளை எடுத்துக் கூறி இதில் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சி. பெ. காத்தமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, 1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி தமிழகத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம் இவைகள் காரணமாக ஏற்பட்ட நிவாரண வேலைகளுக்காக முதன் முதலாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுமார் 10 ஆயிரம் குடிசைகள் வாழ்ந்து கொண்டிருந்த ஏழை எளிய மக்கள் தங்கள் குடிசைகளை இழந்து வாடிக்கொண்டிருந்த நேரத்தில், நமது புரட்சித் தலைவர், நமது புனிதத் தலைவர், நமது உத்தமத் தலைவர் இந்த நாட்டு மக்களுக்கு இரவு பகல் என்று பாராது, இதற்கு முன்னால் எல்லாம் இப்படிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன வழங்கப்பட்டதோ அதை விட ஐந்து மடங்காக உயர்த்தி, உதவிகளை செய்தார்கள். குடிசைகளை இழந்தவர்களுக்கு புதிதாக குடிசைகளை போட்டுக் கொள்வதற்கு முதலாவது 200 ரூபாயும் அதன் பின் கடன் தொகையாக 300 ரூபாயும் கொடுத்தார்கள். இதற்காக அந்தக் குடிசைவாழ் மக்களின் சார்பாக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஏற்பட்ட புயலின் கோரம், எப்படியிருந்தது என்பதை 100 ஆண்டு காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களிடம் விசாரித்தேன். அவர்களையெல்லாம் கேட்ட போது, இந்த மாதிரியாக கொடூரமான அளவில் இதற்கு முன் தன்னுடைய அறிவில் வந்ததே கிடையாது என்று சொன்னார்கள். அப்போர்ப்பட்ட புயலால். . .

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 100 ஆண்டு காலம் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களிடம் விசாரித்தேன் என்று சொன்னார்கள். அப்படி 100 ஆண்டு காலம் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் பட்டியலை தந்தால் நலமாக இருக்கும்.

[1977 டிசம்பர் 30

**திரு. சி. பெ. காத்தமுத்து :** அடுத்தக் கட்டத்தில் வேண்டுமென்றால் தெரிவிக்கக் காத்திருக்கிறேன். இப்போதுப்பட்ட புயலில் 560 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிற மாநிலங்களில் நடந்த சேதத்தைப்பார்க்கும்போது இது குறைந்த அளவுதான் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இந்த அரசு புயல் வருவதற்கு முன்பே, அதாவது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே முன் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டதின் காரணமாக அரசாங்கப் பேருந்துகளை எல்லாம் உபயோகித்து, நாகப்பட்டினத்திலிருந்து ஆயிரம் பஸ்கள் மூலமாக அங்குள்ள மக்களை எல்லாம் திருவையாறு போன்ற இடங்களுக்கும், தஞ்சையில் பல இடங்களுக்கும் முன் ஜாக்கிரதையாக அனுப்பி வைத்ததால் தான் மக்களைக் காப்பாற்ற முடிந்தது. அதற்காக நமது புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அது மட்டுமல்ல, நவம்பர் 12ம் தேதி புயல் சேதம் ஏற்பட்டபின், தஞ்சை, திருச்சி, போன்ற மாவட்டங்களில் எல்லாம் சாலைகள் பழுது அடைந்த இடத்திலும், மரங்கள் விழுந்து கிடந்த இடங்களிலும், மின்சார கம்பங்கள் எல்லாம் விழுந்து கிடந்த இடங்களில் எல்லாம், 24 மணி நேரத்திற்குள்ளாக எல்லாவற்றையும் சரி செய்யவேண்டும் என்று எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டதின் காரணமாக சாலைகள் எல்லாம் சரிசெய்யப்பட்டு, உடைப்பு ஏற்பட்ட இடங்களில் எல்லாம் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சீராக்கப்பட்டது என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இங்கு பலர் சொன்னார்கள், புயல் வந்து நான்கு நாட்களுக்குப் பின்னால்தான் அரசு தாமதமாக நடவடிக்கை எடுத்ததாக. அப்போது நான் எண்ணினேன். ஏன் இப்படி இவர்கள் குறையைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல உதவிகளைச் செய்திருக்கிறார்கள். விவசாயத்திற்குத் தேவையான விதையை இனாமாகக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், பூச்சி மருந்தை 25 சதவிகிதம் மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள்.



1977 டிசம்பர் 30] [திரு. சி. பெ. காத்தமுத்து]

உரம் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரியான பல நல்ல காரியங்களை இந்த அரசு உடனடியாகச் செய்து, ஏழை விவசாய மக்களுக்கு உதவி செய்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியாகிய தொட்டியம் பகுதியில் வாழை, கொடிக்கால் எல்லாம் நிறைய பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றி நான் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களும் அப்படி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக உதவிகள் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகவும் நான் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் கொள்ளிமலைப் பகுதியில் நீர்த்தேக்கம் அமைப்பதற்காக புளியஞ்சோலைப் பகுதியில் முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ அது நிறைவேற்றப்படவில்லை. ஆனால், அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், அந்தப் பகுதியிலே உள்ள மக்களைக் காப்பாற்றி இருக்க முடியும். தவிர, மேலும் பல வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தப் புயல்—வெள்ள அறிக்கையின்மீது பேசவாய்ப்பளித்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. த. புஸ்பராஜு :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே தமிழகத்தில் புயல்—வெள்ளத்தால் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டது. அப்படிப் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் நிவாரண வேலைகளை மிகவும் துரிதமாகவும், உடனடியாகவும் செய்தமைக்காக நான் இந்த அரசுக்கும், புதுக்கோட்டை மாவட்ட அரசுத் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. த. புஸ்பராஜு] [1977 டிசம்பர் 30

அப்படி நடைபெற்ற நிவாரணப் பணிகளில் நானும் ஆரம்பம் முதல் செயல்பட்ட காரணத்தினால், அந்தப் பகுதியிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு செய்த உதவிகளையும், சாலைப் போக்கு வரத்துக்கான ஏற்பாடுகளையும், வீடு இழந்த மக்களுக்கு அளித்த ரூபாய் 200 உதவித் தொகைகளையும் பற்றி அறிவேன்.

இந்த ரூபாய் 200 உதவித் தொகை புயல்—வெள்ளத்தால் 50 ரூபாய்க்குமேல் சேதம் அடைந்த மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. இந்த 50 ரூபாய்க்குக் குறைவாக சேதமடைந்தவர்கள் வீடுகளுக்கு இந்த உதவித் தொகை கொடுக்கப் படவில்லை. உண்மை என்னவென்றால், வாழ்க்கையில் மிகவும் பின்தங்கிய ஏழை எளிய மக்கள் வசிக்கக்கூடிய வீடுகள் 50 ரூபாய்க்கும் குறைவாகத்தான் இருக்கும். எனவே இவர்களுக்கு எவ்விதமான உதவியும் செய்யாதது, மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எந்தவிதமான உதவித் தொகையும் கிடைக்காத இந்த அடிமட்டத்திலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அண்மையிலே ஏற்பட்ட புயல்—வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், அரிசனங்கள், மீனவர்கள், இலங்கையிலே இருந்து தமிழகத்திற்கு வந்து குடியேறிய அகதிகள் ஆகியவர்கள்தான். அவர்களுக்கு ஒரு நிரந்தரமான நிவாரணம் அளிக்க இந்த அரசு அவர்களை ஒரு மேட்டுப் பகுதியான இடத்தில் வீடுகள் கட்டி, குடியமர்த்த வேண்டும். மேலும், அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவும் வசதிகள் செய்ய வேண்டும்.

(திரு. பண்ணை கே. சேதுராம்—தலைமை)

புதுக்கோட்டை தனி மாவட்டமாகி மூன்றாண்டுகள் ஆகியும் எங்கள் மாவட்டத்தில் ஒரே ஒரு தீ அணைப்பு நிலையம்தான் இருக்கிறது. எனவே, இப்படி புயல்—வெள்ளம் ஏற்படுகின்ற காலத்தில் எவ்விதமான நிவாரண வேலைகளையும் உடனடியாகச் செய்ய முடிவதில்லை. அறந்தாங்கி நகராட்சியாகவும், கடற்கரை ஓரப் பகுதியாகவும் இருப்பதால், அங்கே ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1977 டிசம்பர் 30] [திரு. த. புஸ்பராஜு]

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடலை பயிர் மிகவும் ஜீவநாடியான பயிராகும். சமீபத்தில் ஏற்பட்ட புயல்—வெள்ளத்தால் இங்கே பல பகுதிகளில் இந்தப் பயிர் பாதிக்கப் பட்டிருக்கிறது. எனவே, அரசு இந்தக் கடலைப் பயிருக்காக கொடுக்கப்பட்டுள்ள கூட்டுறவுக் கடனை, நீண்டகால கடனாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், எங்கள் மாவட்டத்தில் விவசாயிகளும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிலவரி கட்டுவதற்குக் கஷ்டப்படுவார்கள். அவர்கள் அப்படி நிலவரி கட்ட வேண்டாமென்று ரத்து செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களை விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளும் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அத்தகைய விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளை வைத்துக்கொண்டு, விவசாயம் செய்யக்கூடிய ஏழை விவசாயிகளும் அங்கிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே அதற்கான கூட்டுறவு சங்கங்களிலே கடன் இருந்தாலும், உடனடியாக அவர்களுக்குப் புதிதாக கடன் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

புயல், மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கிணறுகளுக்கு பம்ப் செட்டுகள் வாங்க அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடனுதவி உடனடியாகச் செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் அரசு காலதாமதம் காட்டாமல் உடனடியாகச் செய்ய வேண்டும்.

காரம்பாடி, கீரமங்கலம், அறந்தாங்கி, விராலிமலை, ஏம்பல், கந்தர்வகோட்டை ஆகிய பகுதிகளில் சாலைகள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. மாவட்டத்தின் தலைநகரான புதுக்கோட்டையிலும் சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அரசு உடனடியாக அந்தச் சாலைகளைச் செப்பனிட வழிவகைகள் செய்ய வேண்டும்.

[திரு. த. புஸ்பராஜு] [1977 டிசம்பர் 30

தமிழகத்தில் ஏற்பட்ட புயல்—வெள்ளத்தால் ஆரம்பப் பள்ளிகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. மாணவர்கள் மரத்தடியில் படிக்கின்ற வேதனையான நிலை ஏற்பட்டிருக்கிறது. பல பஞ்சாயத்து யூனியன்களில் நிதி அதிகமாக இல்லாத காரணத்தால் அவற்றைச் செப்பனிட முடியவில்லை. இதை அரசு உணர்ந்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ள நிவாரண முன்பணம் என்.ஜி.ஓ.க்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகிற ஆசிரியர்கள், அலுவலர்களுக்கு வழங்கப்படவில்லை. ஏன் இந்தப் பாகுபாடு? அரசு இதிலே உடனடியாகத் தலையிட்டு அவர்களுக்கும் முன்பணம் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நல்லதொரு வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த இரண்டு மூன்று தலைமுறையினரால் கண்ட, அனுபவத்தைப் பெறாத வகையில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதங்களைக் குறித்து மாண்புமிகு முன்னவர் அவர்களால் அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த வெள்ளை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட பாரதீனமான விளைவுகளை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். இவைகளை நாம் நெளிவு சுளிவு இன்றி, நிதர்சனமான முறையிலே, பாரதீனமான முறையிலேதான் அணுக வேண்டுமே தவிர, இதிலே வேறு சிந்தனைகளுக்கு இடம் கொடுத்து இதிலே அணுகு முறைகளை வைத்துக் கொள்வோமானால் யாருக்காக இந்த விவாதங்களை நடத்துகிறோமோ, யாருக்காக இந்த அவையிலே உறுப்பினர்களாக இருக்கின்ற நாம் இங்கே சேவை செய்வதற்காக வந்திருக்கிறோமோ அதன் கடமைகளில் இருந்து நாம் தவறிவிடுவோமோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது.

எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லுவதும், எல்லாமே நடந்துவிட்டது என்று சொல்வதும் தவறு. நடந்துவிட்டவைகள் நல்லவைகளாக நடந்திருக்கின்றன; அவைகளிலே சில குறைகள்



1977 டிசம்பர் 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

இருக்கலாம், ஒத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லுவதும், ஏதோ நாம் மேற்கொண்டுள்ள நிலைக்கு நியாயம் செய்யக்கூடிய ஒன்றாக இருக்குமே தவிர, அது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய நிலையாக இருக்காது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும்.

மிகப் பயங்கரமான விளைவுகள் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றன. அதேமாதிரி ஆந்திர மாநிலத்திலும் ஏற்பட்டிருக்கின்றன. எங்கெங்கு மக்களுக்கு துயர் ஏற்பட்டிருந்தாலும் அவைகளைப்பற்றி நாம் பெரும் துயர் கொள்ளுகிறோம். அது ஆந்திராவிலே இருந்தாலும் சரி, தமிழ் நாட்டிலே இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் பிரதிநிதிகளாக வந்திருக்கக்கூடிய நாம் எல்லோருடைய துயரிலும் பங்கு கொள்ளுகிறோம், துயர் துடைப்பு வேலைகள் செம்மையாக நடைபெற வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறோம்.

இந்தத் துயர் துடைப்பு வேலைகள் நடந்தபோதும், நிவாரண வேலைகளுக்கு மக்கள் தம்முடைய நிதி உதவிகளைச் செய்து வந்தபோதும் சில நடைமுறைகள், தவிர்க்கப்படக்கூடிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற குற்றச்சாட்டு இந்த அவையிலே சொல்லப்பட்டது. அவைகளைப்பற்றி அரசாங்கம் ஆய்வு செய்து சரியான விளக்கங்களை அவைக்குத்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையினுடைய உறுப்பினர்கள் சிலர், நம்முடைய மாநிலத்தில் தலைமைச் செயலாளர் மேற்கொண்ட நிலையைப்பற்றி ஒரு ஐயப்பாட்டை எழுப்பி இருக்கிறார்கள். ஒரு குற்றச்சாட்டு என்று கூடச் சொல்லுவேன். அந்தக் குற்றச்சாட்டு உண்மைதானா? அவர்கள் சொல்லிய வகையில் நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் நடந்து கொண்டார்களா? தலைமைச் செயலாளர் நடந்து கொண்ட முறை பற்றிக் கற்பிக்கப்பட்டதா? உள்நோக்கமா? எந்த அளவுக்கு இது உண்மை? இவை பற்றியெல்லாம் ஆட்சியிலுள்ளவர்கள் விசாரணை செய்து, ஆய்வு செய்து அந்த ஆய்வின் முடிவை இந்தச் சபைக்கு அறிவிக்கக்கூடிய ஒரு கடமை இருக்கிறது

என்பதைத் தயவுசெய்து அமைச்சரவை உணர்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது எந்த அளவிற்கு உண்மை என்பதை இந்தச் சபை அறிவதோடு இந்தச் சபைக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் யார்மீது குற்றஞ் சாட்டப்பட்டு இருக்கிறதோ அவருக்கும் நியாயம் செய்வதாகும் என்ற நிலைமையிலே அதற்காக ஒரு நியாயமான விசாரணை நடத்தி அந்தப் பெரும் அதிகாரியை முதலமைச்சர் அவர்களே அழைத்துப்பேசி, நடந்தது என்ன என்பதைப்பற்றி ஒரு விளக்கத்தை இந்த அவைக்குத் தருவது மாநிலத்தின் தலைமைக்கும் அந்தப் பெரும் அதிகாரிக்கும் நியாயம் செய்வதாகும் என்பதோடு நாம் இந்த அவையிலே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும் பேச்சுக்களும் எப்படி எல்லாம் அமைய வேண்டும் என்பதற்கு ஒரு வழிவகுக்கும் என்ற காரணத்தாலேயும் இந்தக் கோரிக்கையை நான் வைக்க ஆசைப்படுகிறேன்.

தமிழ் நாட்டிலே நடந்த இந்தப் புயல், வெள்ளச் சேதம் இரண்டு வகையிலே நடந்திருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்பட்ட சேதங்களுக்குக் காரணம் இயற்கையின் சீற்றம், புயலின் வேகம். புயல் வேகத்தால் இயற்கையின் சீற்றத்தால் பெரு நஷ்டம் ஏற்பட்டது, மக்களுக்குப் பெரும் பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே எல்லாம் பயிர் பச்சை இருந்தனவா என்றும் மரங்கள் இருந்தனவா என்றும் நாம் சென்று பார்க்கும்போது ஒரு காலத்தில் இருந்தன என்றும் சொல்லும் அளவிற்கு வெள்ளத்தின் கோரமான பாதகம் நடந்திருக்கிறது. இதற்கு யாரையும் குற்றம் சொல்ல முடியாது. இயற்கையினுடைய சீற்றம். வானிலைபற்றியும் காலநிலைபற்றியும் சரியான அறிவிப்பு முன்னதாகக் கொடுக்கப்படவில்லை என்று வாதத்திற்காகச் சொல்லலாமே தவிர, குறிப்பாக இன்ன நேரத்தில் இன்ன காலத்திற்கு இப்படி நடக்கும் என்று சொல்ல முடியாத, உறுதியாகக் கூற முடியாத நிலைமைதான் இன்னும் உலகத்தில் இருக்கிறது, அப்படி நடந்ததாக வரலாறு கிடையாது.

சென்னையிலே தாக்கிய புயல் எங்கோ எதிர்பாராத விதமாக சென்றுவிட்டது என்றும், 19 ஆம் தேதி சென்னையைத் தாக்கியிருக்க வேண்டிய புயல் சென்னையைத் தாக்காமல் ஆந்திரா





விற்கு வடபுலத்திற்குச் சென்றுவிட்டது என்றும் அவர்களே சொல்வது மனிதனுடைய அறிவு ஓரளவிற்குத்தான் வளர்ந்திருக்கிறது என்ற வாதத்திற்கு வலிவூட்டுவதாக அமைந்துள்ளது. ஆகவே, புயல் ஏற்பட்டு, வெள்ளம் ஏற்பட்டு, அதனால் சேதம் ஏற்பட்டது என்றால் அதற்காக யாரையும் குற்றஞ் சொல்வதற்கு இல்லை, யாரும் தவறு செய்யவில்லை.

ஆனால், புயல் ஏற்பட்டதற்குப் பிறகு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிப் பார்க்கும்போது பெருமகிழ்வோடு சொல்வேன், தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, நான் அண்மையிலே வடபுலத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கங்கே உள்ள மக்கள் கூட, ஆந்திர மாநிலத்திலே கர்நாடக மாநிலத்திலே உள்ள மக்கள் கூட, ஆந்திர மாநிலத்தின் புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட, தமிழ்நாடு அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் முறைகளை, தீவிரமாகச் செய்யப்பட்ட முறைகளை வெகுவாகப் பாராட்டுகிறார்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. (ஆரவாரம்).

இந்த நாட்டினுடைய பிரதமராக இருக்கக்கூடிய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள்—ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது நமக்கு எல்லாம் தெரியும்—அவர்களே இங்கே வந்து, இருக்கிற நிலைமைகளைப் பார்த்துவிட்டு மிக நியாயமான முறையிலே மிக முனைப்பான முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகப் பாராட்டியதையும், மத்திய அரசின் சார்பாக தமிழ்நாட்டிற்கு வருகை தந்த மத்திய அமைச்சர்களும், அமைச்சர்களுக்கு அப்பாற்பட்டு அதிகாரிகள் அளவில் ஆய்வுக் குழு மூலமாக வந்தவர்களும் இங்கே எடுக்கப்பட்டிருக்கிற நிவாரண வேலைகளையும் நடவடிக்கைகளையும், அரசாங்கமும் அரசாங்கத்தின் அங்கங்களும் செயல்பட்ட முறைகளையும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களோடு சேர்ந்து பாராட்டுக்களை நாமும் தெரிவித்துக் கொள்ள தயங்குகிறோம் என்று சொன்னால், அதிகாரிகளிடத்திலே அமைச்சர்களிடத்திலே உற்சாகத்தை ஏற்படுத்த வழி வகுக்காது, அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல முறையிலே

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 டிசம்பர் 30

வேலைகள் நடைபெற்று இருக்கின்றன, என்று தஞ்சையில் நாகப்பட்டினத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது சாதாரண மக்கள் கூட, அவர்களைக் கேட்டபோது, தெளிவாகச் சொன்னார்கள்.

[பிற்பகல் 1-10]

அதுமட்டுமல்ல, வேளாங்கண்ணி கோயிலில் குருவாக இருக்கும் பெருந்தகை அவர்களைச் சந்தித்தேன். அவர்களோடு பேசினேன். அவர்களிடத்தில் நான் கேட்டேன், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றித் திருப்தி இருக்கிறதா என்று கேட்டேன். மிகவும் நல்லமுறையில் மிக அதிகமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள், அதிகமான நிவாரணங்களை அளித்திருக்கிறார்கள் என்பதுதான் எங்கள் அபிப்பிராயம். எங்களைக்கூட அணுகிக் கேட்டார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் எங்களிடத்தில் நேரடியாக வந்து என்ன வகையில் நிவாரணம் தரவேண்டுமென்று கேட்டார்கள், நாங்கள் சொன்னோம், எங்களுக்குத் தேவையில்லை, மக்களுக்கு நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள், அதைப்பற்றி எங்கள் திருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொன்னதாக அந்தக் கோயிலினுடைய குரு அவர்கள் சொன்னார்கள் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது தஞ்சாவூர் பகுதியைப் பொறுத்த நிலைமை. விவாங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை.

அடுத்து, மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம் உள்ளடங்கிய பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள். இதில் மனிதக் குறைபாடுகள் இந்த இடத்தில் இருக்கின்றன என்பதை நாம் மறைத்துவிட முடியாது. அந்தப் பகுதியில் நடந்தது மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்றாலும் அந்தப் பகுதியில் மனிதக் குறைபாடுகள் இருக்கின்றன என்பது நம்முடைய தெளிவான அறிவுக்கு எட்டுகிறது என்பதை நான் மிகப் பணிவோடு மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1977 டிசம்பர் 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

அங்கே ஏற்பட்ட பெருமழை, பல நாட்களாக மழை பெய்து வந்திருக்கிறது. அங்கேயுள்ள நூற்றுக்கணக்கான ஏரிகள், கண்மாய்கள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. அப்படிப் பட்ட நேரத்தில், அக்டோபர் 17 ஆம் தேதி, குடகனாற்றில் ஒரு விரிசல் ஏற்பட்டிருக்கிறது என்ற தகவல் அங்கிருக்கின்ற சூப்பிரண்டெண்டுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கேட்கிறபொழுது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது.

அதுமட்டுமல்லாமல், நவம்பர் மாதத்திலே ஒரு அறிவிப்பு அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்களும், அந்தப் பகுதியில் முக்கியஸ்தவர்களாக இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களும் குடகனாற்றில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது என்ற தகவலைத் தந்தும் முறையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அங்குள்ள மக்கள், பொறுப்பு உள்ளவர்கள் சொல்கிறார்கள். இதை அரசு ஏற்கெனவே விசாரித்திருக்கும் என்று கருதுகிறேன். மேற்கொண்டு விசாரித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், வேடசந்தூர் பகுதியிலே நூற்றுக்கணக்கான கண்மாய்கள் நிரம்பி வழிந்திருக்கு, ஒன்று சில கண்மாய்கள் தாமாக உடைந்திருக்கின்றன, அல்லது மக்களே சில கண்மாய்களை உடைத்து விட்டிருக்கிறார்கள். பல கண்மாய்களை அங்கேயுள்ள மக்கள் உடைத்துவிட்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள கண்மாய்களால் கிராமங்களுக்கு ஆபத்து என்ற நிலையில் தாமாகவே பல கண்மாய்களை அவர்கள் உடைத்திருக்கிறார்கள். இப்படி நூற்றுக்கணக்கான கண்மாய்கள் உடைக்கப்பட்ட பொழுது அதிலிருந்த தண்ணீரெல்லாம் பெருக்கெடுத்து குடகனாற்றுக்கு வந்திருக்கிறது. அதனால் குடகனாற்றில் தண்ணீர் ஏறி, கேச்மெண்ட் ஏரியாவுக்கு அப்பாற்பட்டு, வேடசந்தூர் நகரத்திற்கு தண்ணீர் வந்து பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பது அவர்களுடைய விளக்கம். குடகனாறு

அணை உடைந்த காரணத்தால்தான் வேடசந்தூர் காப்பாற்றப்பட்டிருக்கிறதே தவிர, குடகனாறு அணை உடையாமல் இருந்திருந்தால் அந்த ஊர் அழிந்திருக்கும் என்பதுதான் அவர்களுடைய எண்ணம். செட்டிப்பாளையம், பண்ணைப்பட்டி, அம்மாப்பட்டி போன்ற பல ஊர்கள் இருக்கின்றன. with the greatest possible velocity வேகமாக வந்த அந்த வெள்ளம் யாரும் எதிர்பாராத நேரத்தில் குடகனாற்றுக்கு அப்பாலுள்ள திருச்சி மாவட்டக் கிராமங்களில் புகுந்து மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இலட்சக்கணக்கான ரூபாய்களில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடங்களெல்லாம் இன்றைக்கு இருந்த இடம் தெரியாமல் அழிந்திருக்கின்றன. மக்கள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள், ஒரு கிராமத்தில் மக்கள் அனைவரும் இல்லை என்ற அளவிற்கு நிலைமைகள் உருவாகியிருக்கிறது என்று நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

குடகனாறு அணை எப்படி உடைந்தது என்பதைப்பற்றியெல்லாம் மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டும். அதைப்பற்றி விசாரணை இருப்பதாகவும் அரசின் சார்பில் சொல்லப்படுகிறது. அந்த விசாரணை செய்யும் முடிவை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். இந்த அவையிலே பேசியவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். விசாரிக்க வேண்டுமென்பதை நானும் கோரிக்கையாக வைக்கிறேன். ஆனால் அங்கிருக்கின்ற மக்கள் சொல்வது என்னவென்றால், the dam was constructed without there being any proper basement. பேஸ்மெண்ட் இல்லாமலேயே டேம் கன்ஸ்ட்ரக்ட் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தத் தண்ணீர் தேக்கத்தினுடைய நிமெற்றப் படுகை எப்படியிருக்கிறது என்று சொன்னால் பாறைகள் நிறைந்த படுகைகளாகவும் ஓரிடத்திலே பாறைகள் மேலாகவும், கற்களாகவும், சேறு பள்ளமாகவும் இருக்கிறது. அந்த இடத்தில் சிமெண்ட் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. மண் தேக்கம் ஏற்பட்டிருக்கிற இடங்களிலே, பேஸ்மெண்ட் இல்லாமல், எந்தவிதமான அடித்தளமும் இல்லாமல், மண்ணை அப்படியே வாரிக்கொட்டி, அதைக் தரையாக





எழுப்பியிருப்பதன் காரணமாக, அங்கங்கு உடைப்பு எடுக்க அது ஏதுவாக இருந்திருக்கிறது என்று வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள்.

நான் இன்ஜினியர்களைப் பார்த்துப் பேசினேன். அவர்கள் சொன்னார்கள். இதிலே அரசியல் இல்லை. என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இன்ஜினியர்களைப் பார்த்துப் பேசினேன். பேஸ்மெண்டு இல்லாமல் கட்டியிருக்கிறார்கள். அத்துடன், எந்த இடத்தில் கட்டினால் பாதுகாப்பாக இருக்குமோ, பயன் அளிக்குமோ, அந்த இடத்தில் கட்டாமல், வேறொரு இடத்தில் கட்டி, 40 மைலுக்கு அப்பாலிருக்கிற பகுதிக்கு பயன் அளிக்கும் வகையில் டெட் கெனால் கட்டியிருக்கிறார்கள். குடகனாறு டாம் இருப்பது மதுரை மாவட்டத்தில். ஆனால், மதுரை மாவட்ட மக்களுக்கும் மிக வறண்ட பகுதியான அறவைக்குறிச்சிப் பகுதிக்கும் பயனில்லாமல் 40 மைல் தள்ளிச் சென்று யாருக்கோ பயன்படுகிறது என்ற குறைபாடு இருக்கிறது. இந்த டாம் கன்ஸ்ட்ரக்ஷன் எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால், it ought to have been construct d within a period of four y ars என்று சொன்னார் அந்த இன்ஜினியர்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அத்துடன், நான்கு ஆண்டுகளிலே கட்டப்பட வேண்டிய டாம் ஒரு ஆண்டு பத்து மாதத்திற்குள்ளே கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, கல் கூட, சரியாக அமைந்து, படிந்து, மண்வளம் கெட்டிப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. டாம் துறைகளுக்குச் சரியான அமைப்பு ஏற்படச் சில காலம் தேவை. அதேபோல, சிமெண்ட்டும் சரிவர நிற்கக் குறிப்பிட்ட காலம் தேவை. குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டினால்தான் சரியாக அமையும். ஆனால், இங்கு நான்கு ஆண்டுகளிலே கட்டப்பட வேண்டிய டாம், ஒரு ஆண்டு பத்து மாதத்திற்குள்ளே கட்டப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், வருங்காலத்திலேயாவது இதுமாதிரி நடைபெறாமல் . . . .

**திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூன்று குற்றச்சாட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்று, பேஸ்மெண்ட் இல்லாமலே கட்டப்பட்டிருக்கிறது; மற்றொன்று, மதுரை மாவட்டத்தில் கட்டப்பட்ட அணையினால், மதுரை மாவட்ட மக்களுக்குப் பலன் இல்லை; அங்கே போய், திருச்சி மக்களுக்குப் பலன் அளிக்கிறது என்று சொல்லி இருக்கிறார். மற்றொன்று, சிமெண்ட் போட்டு கட்டும்போது நான்கு வருஷங்களில் கட்ட வேண்டியதை ஒரு வருஷம் பத்து மாதத்திற்குள் கட்டி விட்டார்கள் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

பேஸ்மெண்ட் இல்லாமல் கட்டுவது என்று சொன்னால், மண்ணை வாரிக் கட்டிவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். மண் டாமைக் குறிப்பிடுகிறார்களா கல்லணையைக் குறிப்பிடுகிறார்களா என்று தெரியவில்லை. கல்லணையைக் குறிப்பிடுகிறார் என்றால், கல்லணை நின்றிருக்கிறது. மண் அணை என்றால் மண்ணை அப்படியே வைத்திருக்கிறார்கள் என்று எந்தப் பொறியாளர் அவருக்கு ஆதாரம் கொடுத்திருக்கிறார் என்று தெரியவில்லை. அதை நான் மறுக்கிறேன்.

மற்றும் ஒரு தகவல் சொல்கிறேன். சாத்தனூர் அணை இருப்பதால், சாத்தனூர் மக்களுக்குப் பலன் இல்லை. மேட்டூர் அணையால், மேட்டூருக்குப் பயன் இல்லை. அணை கட்டிய இடத்திலே பயன் இல்லை. வாய்க்கால் எங்கு போகிறதோ அங்கு தான் பலன் இருக்கிறது. அணையை எதற்காகக் கட்டுகிறோம்; தண்ணீரைத் தேக்கி, இன்னொரு பகுதிக்குப் பலன் அளிக்கக் கட்டுகிறோம். அணைக்குப் பக்கத்தில் தண்ணீர் கிடைக்காதது வேறு. அங்கு தண்ணீர் இல்லை, ஆகவே, அங்கு வேண்டுமென்று சொல்வது வேறு.

நான்கு ஆண்டுக் காலத்திற்குள் கட்ட வேண்டியதை ஒரு ஆண்டு பத்து மாதத்திற்குள் கட்டியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிக் கட்டியிருக்க முடியாது என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால், இரண்டு ஆண்டுகள் என்று



சொன்னாலே, மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகும். சிமெண்ட் டெல்லாம் செட்டாகும். ஆகவே, அவர் மண் டாமைக் குறிப்பிடாமல், மேசனரி டாமைக் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. லத்தீப் இன்னும் 5 நிமிடம் கேட்கப் போகிறார்.

**திரு. ப. உ. சண்முகம்:** மன்னித்துக் கொள்ள வேண்டும், தவறான தகவல் வெளியில் பரவிவிடும் என்பதால் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. மண் டாமில் சிமெண்ட் போட மாட்டார்கள். மேசனரி டாமுக்கு சிமெண்ட் போடுவார்கள். மேசனரி டாம் உடையவே இல்லை, அப்படியே இருக்கிறது. அவர் பேசியதற்கு விளக்கம் குறிப்பிடத்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் கூட சுருக்கமாகப் பேச வேண்டும். இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான், இந்தக் கூட்டம் தொடங்கியதிலிருந்து வாயைத் திறக்கவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு மெத்த மகிழ்ச்சி, நானும் உணருகிறேன். நீங்கள் பொறுமையாக இருக்கிறீர்கள். அந்தப் பொறுமையை இன்னும் கொஞ்சம் கடைப்பிடித்துத் தாருங்கள் என்றுதான் கேட்கிறேன்.

(பிற்பகல் 1-20)

**திரு. எம். ஏ. லத்தீப்:** அவர்கள் விளக்கம் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. யாரையும் குற்றம் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை. வருங்காலத்தில் இப்படி செய்யக் கூடாது என்றுதான் நான் குறிப்பிட்டேன். மண்தரைக்கு பேஸ்மெண்ட் தேவைதான், கான்கிரீட் கட்டடத்திற்கும் பேஸ்மெண்ட் தேவைதான். அப்படியே மேடு பள்ளங்களின் மீது பாறைகளின் மீது மண்ணை வைத்துக் கட்டுவது முறையல்ல. ஒரு சில தவறுகள் நடந்திருக்கலாம். பாறைகள் இருக்கின்றன என்று உயரமாகவும், தாழ்வாகவும் வைத்தால் நிற்காது என்றுதான்

அவர்கள் குறிப்பிட்டார்கள். சாதாரணமானவர்களை கேட்கவில்லை. ஒரு ரிட்டையர்டு சூப்பரின்டென்டிங் இன்ஜினியரைக் கூட்டிச் சென்றேன். யாரையும் குற்றம் சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. வருங்காலத்தில் இது தவிர்க்கப்படவேண்டுமென்றுதான் சொன்னேன்.

அடுத்து, மத்திய அரசு 34 கோடி ரூபாய் அளித்திருக்கிறது என்று அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இது போதாது. இதில் மத்திய அரசாங்கம் பெரும் பங்கு கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறைந்த பட்சம் 150 கோடி ரூபாய் அளித்தால்தான் நிச்சயமாக அந்த நிவாரண வேலைகளை செம்மையாக நடத்த முடியும். மானியமாகத் தரவேண்டும். திட்ட அடிப்படையில் கொடுக்காமல் மானியமாகத் தரவேண்டும். அப்படி முழுமையாகத் தராவிட்டால், நம்முடைய மாநிலத்திலே மட்டும் வசூல் ஆகிற இன்கம் டாக்ஸ் போன்ற வரிகளில் இருந்து ஒரு புரபோர்ஷனேட் பர்சன்டேஜ் நிர்ணயம் செய்து, ஒரு குறிப்பிட்ட காலவரையில் அதை வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

கொடுக்கப்பட்டிருக்கிற நிவாரண உதவிகள் ஏழைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்றிருக்கிறது. ஆனால் மத்திய தரவர்க்கத்தினருக்கு (மிடில் கிளாஸ்) முறையாக செல்லவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை அரசாங்கம் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆரம்பத்தில் கொஞ்சம் தவறுகள் நடந்திருக்கின்றன. ஆரம்பத்தில் 200 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே 80 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களிலே 120 ரூபாய்களை கொடுக்கப்படவில்லை. சில இடங்களில் வீடு கட்டிக் கொள்வதற்கு 500 ரூபாய் என்று அறிவிப்பு செய்துவிட்டு பிறகு 'கோ' நிறுவனத்திடம் பொறுப்பை கொடுத்துவிட்டு இப்போது 200 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். 500 ரூபாய் கிடைக்கப்போகிறது என்று சில இடங்களில் கீத்துகள் போட்டு, சுவர்கள் எழுப்பாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். அதிகாரிகளைக் கேட்டால் 500 ரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டது ஆனால் 200 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். எனவே இந்தக் கொட்டகைகளைக் கட்டமுடியாத நிலைமை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.





ஆனால் அதே நேரத்தில் முன்பு அறிவித்திருந்தார்கள் 10 ரூபாய் கிஸ்தி கட்டுபவர்களுக்கு நிவாரண உதவி இல்லை என்று. இப்போது அதை மாற்றி ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு என்னுடைய ஆதரவையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே பலருக்குப் பல வகையிலேயும் உதவிகள் செல்லவில்லை என்ற குறைபாட்டினை போக்குவதற்கு, கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதே நேரத்தில் சமுதாயத்தில் இருக்கிற எல்லா தரப்பு மக்களையும் ஆதரித்து வந்திருக்கிறோம். அவர்கள் இல்லை, இவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி விவாதம் வந்த போது (மணி அடிக்கப்பட்டது), அவர்கள் கூட மனதார ஆதரித்து வந்தார்கள். அப்படி நினைப்பதுதான் பண்பாடு. புயல் வந்த உடனே அதிலே லாபம் பெற நினைப்பார்கள் என்று சொல்வதற்கு நான் தயார் இல்லை. எல்லோரும் இதிலே அக்கறை காட்டினார்கள். அவர்கள் கூட ஆதரித்து, ஒத்துழைப்புத் தந்தார்கள். சமுதாயத்தில் இருக்கிற அத்தனை பேர்களும் அக்கறை கொண்டிருந்தார்கள் என்ற முறையிலேதான் நம்முடைய அணுகு முறை இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி இன்னும் பல விஷயங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே மிகவும் பாதிக்கப்பட்ட தொகுதி அரவக்குறிச்சிதான். மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில், ஜமீன் ஆத்தூர் என்ற ஊரில் எனக்கு மகன் முறையாக ஒருவன் அந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறான். எனக்கு தகப்பனார் முறை ஆகக்கூடிய ஒருவர் அடித்துச்செல்லப்பட்டிருக்கிறார். என்னுடைய சொந்தக்காரர்கள் அத்தனைபேரும் அடித்துச்செல்லப்பட்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து நீங்கள் முடித்துக் கொள்ளுங்கள். நான் ரூலிங் வேறு தரவேண்டியிருக்கிறது. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். தாங்கள் எப்போது பேச ஆரம்பித்தீர்கள் என்பது நினைவு இருக்கிறதா? ஒரு மணிக்கு ஆரம்பித்தீர்கள். 25 நிமிடம் பேசியிருக்கிறீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : முடித்து விடுகிறேன். அந்த இடங்களுக்கு எல்லாம் ரொம்ப அதிகமாக உதவி செய்யவேண்டும். நீங்கள் ரூ. 50 கோடி இதற்காகத் தனியாக ஒதுக்குங்கள். ரூ. 200 கோடிப்பது போதாது, அதை வைத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்வது? ஏதோ அந்த நேரத்தில் சாப்பாடு போட்டு இருக்கிறார்கள். பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் என்ன பிரயோசனம். அங்குள்ள நடுத்தர மக்கள். . .

திரு. ரா. உமாநாத் : திரு. லத்தீப் அவர்கள் அந்தக் கட்சிக்கு ஒரே ஒரு உறுப்பினர் என்ற காரணத்தால் நேரம் அதிகமாக எடுத்துக்கொண்டார் என்று நினைக்கிறேன். நானும் நாளைக்கு எங்கள் கட்சியில் இருக்கும் 12 பேருக்கும் தனித்தனியே பெயர் கொடுக்கலாமா என்று எண்ணுகிறேன்.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) காலவரம்பின்றி உண்ணாவிரதம் இருக்கும் பொறியாளர்கள் நிலை குறித்து.

திரு. மு. கருணாநிதி : இப்போது புயலில் இறந்து போய் விட்டவர்களின் குடும்பத்திற்கு எப்படி ஆறுதல் வழங்கிறோமோ, எப்படி தடுப்புப் பணிகளைப் பற்றி விவாதித்துக்கொண்டு இருக்கிறோமோ, அதே போல், யாரும் இறந்து போகாமல் தடுக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது. பொறியாளர்கள் காலவரம்பின்றி உண்ணாவிரதம் என்ற பெயரால் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிகிறது. இது குறித்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுத்து இருக்கிறோம். நாங்களும் கவனிக்கிறேன் என்று சொன்னீர்கள். அதனைத் தான் அது எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாத் தீர்மானங்களும் எடுத்துக்கொள்ளப்படும்.



திரு. ஜே. ஜேம்ஸ் : இது சம்பந்தமாக நாங்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம். அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியும் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறீர்கள், சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : 5 நாளாகத் தொடர்ந்து அந்த உண்ணாவிரதம் நடந்து கொண்டு இருக்கிறது. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வில்லையென்றால், ரொம்ப ஆபத்தாகப்போய் விடும். ஆகவே, இந்தப் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : உயிரைக் காப்பாற்றுவது அரசின் கடமை. ஆகவே, அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி சண்முகம் : நானும் அதை வலியுறுத்துகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நானும் அதை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். . .

திரு. மு. கருணாநிதி : மாரிமுத்து, சொல்லவில்லை. . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் ஏற்கனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. மாரிமுத்து அவர்களும் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். 1 மணி நேரத்திற்கு முன்னால் நான் முதலமைச்சரைச் சந்தித்து பேசினேன். அவர்கள் உடனடியாக உண்ணாவிரதத்தை நிறுத்துமாறும், பேச்சுவார்த்தை மூலமாக அதனைத் தீர்த்து வைப்பதாகவும், மத்திய அரசும், சட்டத்தின் அடிப்படையிலும், சிலவற்றைச் செய்யவேண்டியிருப்பதால் உடனடியாக தீர்வு காண முடியாது என்பதால்,

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும், பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் சொல்லி, பொதுப் பணித் துறை அமைச்சர் அதற்காக சென்று இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். உமாநாத் :** இத்தகைய ஒரு இம்பார்ட்டென்ட் பாயின்ட் சொல்லியிருக்கிறீர்கள் என்றால், நாங்கள் அட்ஜோர்ன் மென்ட் மோஷன் கொடுத்து இருக்கிறபோது, அதனை இந்த அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, அரசாங்கத்தின் முடிவைச் சொல்லியிருக்கலாம். இந்த மாதிரி செய்து இருப்பது இந்தச் சபையை உதாசீனம் செய்வதுபோல் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சில பிரச்னைகள் சில முறைப்படி செய்ய வேண்டும். அதைப் பற்றி முடிவாக அறிவிப்பு செய்ய அமைச்சர்கள் தயாராக இருக்கும்போது எடுத்துக் கொள்ளப்படும். நான் தங்களுக்குத் தெரிவித்த காரணம், இதிலே நான் அக்கறை எடுத்துள்ளதைக் காட்டத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** நாட்டின் நடைமுறைகளுக்கு பதில் சொல்ல சபாநாயகர் கடமைப்பட்டவர் அல்ல. ஏனெனில் சபா நாயகருக்கு பெரும் பொறுப்பு. இந்த சட்டமன்றத்தை நடத்தும் பொறுப்பு இருக்கிறது. எனவே, நாங்கள் அப்படிப்பட்ட கேள்வி களில் உங்களை சிக்க வைத்து அதற்கு பதில் அளிக்க வேண்டும் என்று விரும்ப மாட்டோம். அது உறுப்பினர்களுக்கு பொறுப்பும் ஆகாது.

எனவே நான், அரசின் சார்பில் பதில் வரும்போது, திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் இங்கேயுள்ள சில எதிர்க்கட்சிகளும், இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத் தந்து, விவாதித்து, அரசின் சார்பில் என்ன பதில் சொல்லப்படுகிறது என்பதை அறியத்தான் எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தந்து இருக்கிறோம். அவைகளுக்கு பதில் அளிக்காமல், உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல், அரசின் சார்பிலாவது 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை



அளித்து இருக்கலாம். ஆனால் சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சிகள் கேட்ட கேள்விக்கு அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இந்த முறை தவிர்க்கப்படுவது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஒத்திவைப்புத் தீர் மானத்தை வைத்து எதிர்க்கட்சித் தலைவர் என்னை சிக்க வைக்கப் பார்க்கிறார். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது அக்கறை எடுத்துக்கொண்டு நான் எடுத்த முயற்சியைச் சொன்னேன். அதைச் சொல்வதற்கு நான் காம்பிடென்ட் இல்லை என்பது தெரியும். அந்தப் பிரச்சினையில் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதற்காகச் சொன்னேன். ஆனால் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இல்லை என்பது தெரியும். இந்த அவைக்கு வந்து அமைச்சர்கள் சொல்வதற்கு முன்பு எனக்குத் தெரிந்த தகவலை நான் சொன்னேன். அதற்கு நான் காம்பிடென்ட் இல்லை என்பது தெரியும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு நன்றி. 28-ம் தேதியே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றிக் கொள்ளுங்கள் என்று நீங்கள் சொன்னதையும் ஏற்றுக் கொண்டோம். ஆனால், 28 போய், 29-ம் போய், 30 இன்று. 3 நாள் ஆகிவிட்டது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் இந்தப் பிரச்னையை இங்கே எழுப்பிய பிறகுதான் இதற்கு பதில் நீங்கள் அளித்து இருக்கிறீர்கள். அதற்காக இந்த அரசாங்கத்தைக் கண்டிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே பிரச்னை எழுப்பியதால் சொன்னேன். சொல்லாமல் இருந்து இருக்கலாம். நிலைமை ஆராயப்பட்டு வருகிறது, அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக் கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொன்னேன். அமைச்சர்கள் என்றைக்கு அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளத் தயாராக வருகிறார்களோ அன்று அது எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அவையின் அனுமதியோடு, இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை இன்னும் 15 நிமிட நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

## 5. அறிவிப்பு.

### பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதிகள் குறித்து.

### (பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று காலை நடந்த நிகழ்ச்சிகளில், நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து எந்தப் பகுதிகளை நீக்க வேண்டும் என்று சொல்வதாகச் சொல்லியிருந்தேன். அந்தப் பகுதிகளை இப்பொழுது பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

திரு. மு. கருணாநிதி அவர்கள் பேசும்போது * * என்று குறிப்பிட்டதை நீக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பேசும்போது எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போது * * என்று குறிப்பிட்டதை நீக்க வேண்டும்.

திரு. க. அன்பழகன் பேசும்போது * * என்று குறிப்பிட்டதையும் நீக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கேள்விநேரத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களே * * என்று குறிப்பிட்டதையும் எடுக்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி அவர்கள் * * என்று சொன்னதை நீக்கவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெளிநடப்பு செய்வதற்கு முன்னும் வெளிநடப்பு செய்யும்போதும் பயன்படுத்தப்பட்ட சொற்கள்—அவை பேரவையில் சொல்லத்தகாத சொற்களாக இருப்பதாலும், பேரவையில் சொல்வதற்கே கூச்சமாக இருப்பதாலும் அச்சொற்களை நான் மீண்டும் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. ஆகையால் அந்த ( * *) நிகழ்ச்சிகள் யாவும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென ஆணையிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**திரு. மு. கருணாநிதி :** * * என்ற வார்த்தை வேண்டாம்.

**திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் :** அந்த * * என்ற வார்த்தையை நீக்கிவிட்டால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னைத் திருத்தியதற்கு நன்றி. ஏதோ விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்துவிட்டது என்பதால் * * என்று சொல்லிவிட்டேன்.

* * என்பதையும் நீக்க வேண்டும்.

திரு. மா. மணிமாறன் பேசுகிறபோது * * என்று சொன்ன சொல்லையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது * * என்று கூறிய சொல்லையும் நீக்கிவிடுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அச்சுறுத்துகிறேன் என்று சொன்னால் தவறு. அது ஒருவரை மிரட்டுவது போலாகும்; * * என்பது வெளிப்படுத்திச் சொல்வது. அது தவறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * என்று சொல்வது தெரியாமல் இருக்கிறீர்கள், சொல்லித் தருகிறேன் என்று அர்த்தம் வரும். அதையும் நீக்குகிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** 'ப்ரொஸீஜரல் மாட்டர்ஸ்' பற்றி ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறேன். பல நாட்கள், குறிப்புகளைப் பார்த்துவிட்டு நீக்குகிறேன் என்று சொல்லி நீக்குகிறீர்கள். அது சரியல்ல. ஒரு ப்ரொஸீஜரல் பாயிண்ட். சில வார்த்தைகளைச் சொன்னால், அதைச் சொன்னவரிடம் நீங்கள் இப்படிச் சொல்லியிருக்கிறீர்களே என்று கேட்டால் அவர் நான் அப்படி 'மீன்' செய்யவில்லை என்று சொல்லி, எக்ஸ்ப்ளெயின் செய்தால் அது முடிந்துவிடும். இல்லை, நான் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்று சொல்லி வாபஸ் வாங்கிக் கொள்ளலாம். இந்த ப்ரொஸீஜரை ட்ரை செய்த பிறகுதான் எதையாவது நீக்குவது என்றால் நீக்கலாம். இந்த ப்ரொஸீஜருக்கு இடம் கொடுக்காமல் இப்படிச் செய்வது என்றால் 'நீக்கல்ஸ்' நடந்து கொண்டேயிருக்கும். அதைக் கவனிக்கவேண்டும்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதையும் இக்கட்டான நிலையை எடுத்துச் சொன்னால்தான் புரியும் என்று கருதுகிறேன். ஒரு உறுப்பினரை, நீங்கள் இதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அவர் முடியாது என்று வாதிக்கலாம். அவையெல்லாம் குறிப்பில் ஏறவேண்டாம் என்பதுதான் என் விருப்பம். வாபஸ் பெறுங்கள் என்று சொன்னால் என் வாபஸ் பெறவேண்டும் என்ற வகையில் பிரச்னைகள் எழுந்துகொண்டே போகும். அதையும் முயற்சி செய்து பார்த்தேன். எனவே இப்பிரச்சினைகளுக்கெல்லாம் இடம் அளிக்காமல் எல்லோரும் சேர்ந்துகொண்டு வேண்டாம் என்று சொன்னால் எடுத்துவிடுவது நல்லது என்ற பெருநோக்கத்தோடு எடுத்துவிடுகிறேன். வேண்டுமென்று செய்யப்படுவதல்ல.

**திரு. கே. கந்தசாமி:** தங்களது பெருந்தன்மையையும், உறுப்பினர்களிடம் நீங்கள் காட்டுகிற பரிவையும் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், நீக்குங்கள், இன்னின்ன வார்த்தைகள் கூடாது என்று தாங்கள் உத்தரவிடுவது பற்றி திரு. உமாநாத் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இன்னின்ன வார்த்தைகளை உபயோகித்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு கௌரவக் குறைவு என்று தெரிந்திருக்கும். அப்படி தெரிந்தவர்களே வேண்டுமென்று திடீரென்று ஆவேசம் ஊட்டுகிற அளவிற்கு சபை மரபுகளை மீறி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பவும் நீங்கள் ஒரு பிரச்னையை உண்டாக்குகிறீர்கள். தயவுசெய்து அதோடு நிறுத்திவிட்டால் நல்லது.

**திரு. கே. கந்தசாமி:** இது ரிக்கரிங் கேஸ் என்றில்லாத அளவிற்கு ஒரு நிரந்தர முடிவு காணக் கூடாதா? நீங்கள் உத்தரவு போடுங்கள், உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

243. Notification issued in G.O. Ms. No. 1612, Agriculture, dated the 23rd September 1977 in regard to exercising control over the purchase and sale of palmgur jaggery in all forms in Coimbatore district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

244. Notification issued in G.O. Ms. No. 1880, Agriculture, dated the 15th November 1977 in regard to exercising control over the purchase and sale of palmgur jaggery in Tirunelveli district. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

245. Notification issued in G.O. Ms. No. 1624, Agriculture, dated the 26th September 1977 in regard to exercising control over the purchase and sale of sugarcane jaggery in all forms in Madurai district. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

### B. *Reports, Notifications and other papers.*

**Nil.**

## இணைப்பு

[* 474-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 80-க்கான விடையைக் காண்க.]

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு புதிய 3 கி.மீ. நீளமுள்ள இத்தலார்-நாஞ்சநாடு சாலை பாதை 1 கி.மீ. நீளம் வரை போடப்பட்டுள்ளது. இதைத் தவிர, 101 கி.மீ. நீளமுள்ள 21 சாலைகளின் மேம்பாட்டு பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 100 இலட்சமாகும். இதுகாறும் 71.6 கி.மீ. நீளச்சாலைகளில் கருங்கல் ஜல்லி பரப்பும் வேலையும், 37.40 கி.மீ. நீளச்சாலைகளை தார் சாலை களாக்கும் பணியும் முடிக்கப்பட்ட வேலைகளாகும். கீழ்க்கண்ட ஐந்து சாலைகளில் பணி முடிக்கப்பட்டுள்ளது :—

1. பி. மணி ஆட்டி சாலை.
2. சின்ன கூனூர் சாலை.
3. அத்திக்கல் இடசோலா சாலை.
4. சாவடிப்பேட்டை இன்னூர் பண்ணை சாலை.
5. கெட்டி கொம்பை சாலை.

(ஆ) & (இ) கீழ்க்குறிக்கப்பட்டுள்ள சாலைகள் போடும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன:—

1. இத்தலார்-நாஞ்சநாடு சாலை.
2. கக்குச்சி, குக்கல்-குக்கல் துறை சாலை.
3. மார்வல்லா சாலை.
4. தங்காடு-எடக்காடு சாலை.





5. கோத்தகிரி-மார்வல்லா சாலை.
6. பெத்தலா பியங்கி சாலை.
7. காட்டோரி-எள்ளநல்லி சாலை.
8. லௌடேல்-கேத்தி சாலை.
9. சில்வர் ஜூப்ளி சாலை.
10. மில்லில்தன்-குருகெத்தி சாலை.
11. கீழ்கோத்தகிரி உடையார் செட்டி சாலை.
12. கக்கட்டி-கீழ்உடையார் செட்டி சாலை.
13. பந்தலூர்-நெல்லியாலம் சாலை.
14. மல்லிக்கொரை-சானிடோரியம் சாலை.
15. சாலிஸ்பெரி-போஸ்பொரா சாலை.

மூக்காட்டி பொன்னூலி சாலை வேலைக்கான மதிப்பீடு கிராமச் சாலை மேற்பார்வைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. மேற் சொன்ன சாலைகளில் ஜல்லி பரத்தல் வேலை இன்னும் இரண்டு மாதங்களில் முடித்துவிட எல்லா முயற்சிகளும் எடுக்கப் பட்டுள்ளன. தார் சாலையாக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

*Answer*—

Under Hill Area Development Programme in the Nilgiris district new formation of Ithalar-Nanjanadu Road to a length of 3 kilometres has been completed up to a length of 1 km. Besides this, improvement works to 21 roads covering a length of 101 kms. have been taken up. The total estimated cost of these works is Rs. 100 lakhs. Metalling (W.B.M.) to a length of 71.6 kilometres and black topping to a length of 37.40 kilometres and one kilometre new formation of road have been completed. The following five road works have been completed :—

1. B. Manihatty road.
2. Chinna Coonoor road.
3. Athikkal Kodashola road.
4. Chavadipet Killur Farm road
5. Getticombai road.

(b) and (c) : The following remaining 15 works are in progress and are yet to be completed :—

1. Ithalar-Nanjanadu road.
2. Kagguchi Kukkal-Kukkalthurai road.
3. Marvalla road.
4. Thangadu-Edakkadu road
5. Kothagiri-Marvalla road.
6. Poddalla Byangi road.
7. Katteri-Yellanalli road.
8. Lovedale-Ketti road.
9. Silver Jubilee road.
10. Millithane-Kurukketti road.
11. Kilkothagiri Odayarathi road.



12. Kakkatti-Kilodayarathi road.
13. Pandalur-Nelliyalam road.
14. Mallikorai-Sanitorium road.
15. Salisbery-Bospara road.

The work of Mukkatti-Ponnani road is awaiting clearance of the estimate by the Superintending Engineer (Rural Roads), Madras. In respect of the above fifteen roads, every effort has been taken to complete the balance metalling work in two months. Black-topping work will also be taken up as early as possible.

———

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**சனிக்கிழமை, 1977 டிசம்பர் 31.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள **சட்டப்** பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Repairs to supply channels of tanks in Pallipat Areas.*

* 91 *Q.*—THIRU A. EAKAMBARA REDDY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the concurrence of the Andhra Pradesh Government has been obtained for carrying out repairs to the Head Works anl Supply Channels at Pallipat Veligarams and Poonimangadu Public Works Department Tanks as the Head Works and Supply Channels are in Andhra Pradesh Area and the ayacutdars who are the beneficiaries are in Tamil Nadu?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பூணிமாங்காடு அணைக்கட்டையும் அதன் நீர் வழங்கும் கால்வாய்களையும் மராமத்து செய்ய ஆந்திர மாநில அரசின் ஒப்புதல் கோரப் பட்டுள்ளது.

வல்லிக்கரம் அணைக்கட்டின் தலைக் கட்டுமானப் பகுதிகளையும் அதனுடைய நீர் வழங்கும் கால்வாய்களையும் மராமத்துச் செய்யும் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. தக்க சமயத்தில் இதுகுறித்து ஆந்திர மாநில அரசுக்கு எழுதப்படும்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** தலைவர் அவர்களே, இந்தப் பாசனத் திட்டங்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் பயன்படுகின்றன. அதே போன்று பிச்சாத்தூர் அணையும் ஆந்திர மாநிலத்தையொட்டிய நிலையில் இருக்கிறது. இந்த அணையும் நமது மாநிலப் பகுதிகளுக்குப் பயன்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பிச்சாத்தூர் அணைக் கட்டு பற்றிய விவரங்கள் தற்போது என்னிடமில்லை.

**பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புப் பணி.**

* 92. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை நகரிலுள்ள பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்ட வேலைகள் எப்போது துவங்கப்படவுள்ளது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வடக்கு பக்கிங்காம் கால்வாய் 0-0—10-1 மைல் வரை சீரமைப்புத் திட்ட வேலைகள் ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது.

**திரு. சி. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் வடக்கேயுள்ள பக்கிங்காம் கால்வாய் பற்றிச் சொன்னார்கள். அது போல் தெற்குப் பகுதி கால்வாய் நீண்ட நீளம் உள்ளதாக இருக்கிறது. இது நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாமல் இருக்கிறது. இதைச் சீரமைப்பதற்கு மத்திய அரசாங்கத்திடம் ஒரு திட்டம் இருக்கிறது. நாவிகேஷன் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இதிலிருந்து பணம் கொடுக்கிறார்கள். அந்தத் தொகையைப் பெற்று தெற்குக் கால்வாயைச் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தெற்குப் பகுதி கால்வாய் மட்டுமல்ல, ஆந்திர மாநிலத்தோடும் சேர்ந்து இருக்கின்ற பகுதிகளையும் சேர்த்து இதைச் சீரமைக்க வேண்டும். இதை "இன்லன்ட் வாட்டர் டிரான்ஸ்போர்ட்" என்பதில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம். அவர்கள் இதை ஆய்வு செய்திருக்கிறார்கள். மதிப்பீடும் தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இறுதியாக இதை முன்வந்து இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் சீரமைப்பு என்பது எந்தக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது ? இதற்கு ஆன செலவுத் தொகை என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 1974-ல் துவக்கப்பட்டது. இதற்கு இதுவரை ரூ. 65.2 இலட்சம் செலவாகியுள்ளது.



**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே தற்சமயம் கூவம் நன்றாக மணக்க ஆரம்பித்திருக்கிறது. சென்னை மாநகரத்தில் இருக்கின்ற இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் சீரமைப்பதற்கு, ஒரு மாஸ்டர் பிளானைத் தயாரித்துச் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மணக்கிறதா இல்லையா என்பதல்ல, இப்போது இருக்கிற பிரச்னை. பக்கிங்காம் கால்வாயைச் சீரமைக்க வேண்டும் என்பது இந்த அரசின் கருத்து. அதற்கு இந்திய அரசை எந்த வகையில் வற்புறுத்த வேண்டுமோ அந்த வகையில் வற்புறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் :** தலைவர் அவர்களே, பக்கிங்காம் கால்வாயைச் சீரமைப்பதற்கு என்று தனியாக திட்டம் ஏதாவது இருக்கிறதா ? முக்கியமாக இதிலுள்ள துர்நாற்றத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கால்வாய் செப்பனிடப்பட்டு தண்ணீர் அதிகமாக இருப்பதற்கு வகை செய்யப்படுமானால், ஓரளவு இந்தத் துர்நாற்றம் போகும்.

**திரு. கே. பண்ணை சேதுராம் :** சென்னை மாநகரத்திலுள்ள இந்த பக்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகுகளை விடவேண்டும் என்று ஏற்கனவே இருந்த அரசு திட்டமிட்டிருந்தது வெற்றிகரமாகச் செயல்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்த அரசு கூவம் ஆற்றிலுள்ள நாற்றத்தைப்போக்கி, கால்வாய்களைச் சீரமைத்து வெற்றிகரமாகப் படகுகளை விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா ? மேலும், இந்திய சுற்றுலா வாரியத்தின் மூலமாக நிதியைப் பெறுவதற்கு இந்த அரசு இந்திய அரசை வற்புறுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்தத் திட்டமாக இருந்தாலும், அதை நன்றாக ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்பதுதான் கொள்கையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் உள்ள நிதியை இந்திய அரசாங்கத்திடமிருந்து பெறும் யோசனை எதுவும் இப்போது அரசினிடத்தில் இல்லை.

[1977 டிசம்பர் 31

## காவிரி கழிமுகப் பகுதியை நவீனப்படுத்தல்.

*93. வினா—**திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் நயனசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் அரசு இதுவரை செலவழித்த தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி டெல்டாப் பகுதியில் உள்ள கால்வாய்களை நவீனப்படுத்த 1976-77 ஆம் ஆண்டு வரை 19.31 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு வேலைகள் செய்துள்ளன.

**திரு. செ. இராமலிங்கம்**: காவிரி மேம்பாட்டுத் திட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து அரசு கடனுதவி கேட்டிருப்பதாக அறிகிறோம். அப்படியானால் எவ்வளவு உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட வேலை சம்பந்தமான கேள்வி இது. எனவே. நிதி ஆதாரம் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. இரெ. இராசமாணிக்கம்**: பேரவைத் தலைவர் அவர்களே, நவீனப்படுத்தப்பட்ட இந்த பகுதிகளிலே உள்ள கால்வாய்கள் அனைத்தும் தற்போது பெய்த மழையால் பாழாகி இருக்கின்றன. மீண்டும் அந்தக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் இந்த அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: இந்தத் திட்டம் இந்த அரசினால் மீண்டும் தொடரப்படும்.

**திரு. மு. அம்பிகாபதி**: தலைவர் அவர்களே, கல்லணைக் கால்வாய் பிரிவாக்கப்பட்ட பகுதிகளில், கடைமடைப் பகுதிகளில் போதிய தண்ணீர் போய்ச் சேருவதில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அந்தக் கால்வாய்களில் விரிவாகத் தண்ணீர் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: தலைவர் அவர்களே. கடைமடைப் பகுதிகளிலே தண்ணீர் சென்று அடைவதற்கான அடிப்படையில்தான் இந்தத் திட்டமே நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.



1977 டிசம்பர் 31]

**திரு. நா. சுந்தரராஜ்**: தலைவர் அவர்களே, தமிழ்நாடு திட்டக் குழுவிலிருந்து இந்தக் காவிரித் திட்டத்தைச் சீரமைக்கும் திட்டம் ஏதாவது இந்த அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால், அதை இந்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: தலைவர் அவர்களே, இது நம்முடைய திட்டப் பணிகளில் ஒன்றாக நாம் சேர்த்துச் செய்கிறோம். இருந்தாலும், காவிரியைப் பொறுத்தவரையில் இது ஒரு இன்டர்-ஸ்டேட் ரிவர் வாட்டர் டிஸ்பியூட் என்ற காரணத்தினாலே, மத்திய அரசு இந்தத் திட்டங்களில் கலந்து கொள்வதில்லை. எனவே, அவர்களைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதில்லை.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்**: தலைவர் அவர்களே, காவிரி ஆறானது ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு, அது குறுகிக் கொண்டே வருகிறது. இதைத் தவிர, மணல் மேடிட்டு வேறு இருக்கிறது. எனவே, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதிகளை அப்புறப் படுத்துவதற்கும், மணல் மேடிட்டுள்ள பகுதிகளைச் சரி செய்வதற்கும் இந்த அரசிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

**திரு. கே. பண்ணை சேதுராம்**: தலைவர் அவர்களே, திருச்சி போன்ற பெரிய நகரப் பகுதிகளில் காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்து வருகின்ற காலங்களில் சேதம் ஏற்படாமல் இருக்க கரையை நிரந்தரமாக விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடத்தில் இருக்கிறதா? அப்படிப்பட்ட திட்டம் இல்லாவிட்டால், இனிமேலாவது இந்த அரசு அதைத் தொடர்ந்து, காவிரிக் கரையைச் செப்பனிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கை மனதிலே வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, இதுவரையில் காவிரியில் வராத அளவுக்கு

வந்திருக்கிறது. இந்த வெள்ளப் பெருக்கு கொள்ளிடத்திலே விநாடிக்கு ஐந்து இலட்சம் கன அடி தண்ணீர் சென்றதாக புள்ளிவிவரம் தருகிறது. இருந்தாலும், நகரப் பகுதிகளில் கரைகளைச் சீரமைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் பகுதியிலும், அதையொட்டி உள்ள பகுதிகளும், கடைமடைப் பகுதியாக பெரும்பாலும் இருப்பதால், அதாவது ஹேரால்சேலாக கடைசிப் பாயிண்டாக இருப்பதால், வருஷா வருஷம் வெள்ளப் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் வருஷா வருஷம் அந்தப் பகுதிகளிலே உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதைத் தடுப்பதற்காக அங்கே நிரந்தரமாகப் போதிய சானல் ஒன்று ஏற்படுத்துவதற்கான திட்டம் இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா? அப்படியில்லையானால், அந்தத் திட்டத்தைப் பற்றி இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** காவிரி டெல்டாப் பகுதிகளிலே உள்ள பல்வேறுப் பிரச்சினைகளை ஆராய்ந்து, அதை எவ்வாறு தீர்ப்பது என்பதற்காகத்தான் இந்த நவீனப்படுத்தும் திட்டமே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் குறையும் அதிலே நிச்சயமாக இருக்குமென்று நம்புகிறேன்.

**திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவிரிக் கரைப் பகுதியும் கால்வாய்ப் பகுதிகளும் ஆக்கிரமிப்பினால் 10, 15 அடி இப்போது குறுகிப்போய் இருப்பதாகவும், அதனால் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி பழைய நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்த்து, அப்படி ஆக்கிரமிப்பு நடைபெற்று இருந்தால், அதை அகற்றிச் சீரமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தண்ணீர் வந்தால் ஆறு, இல்லாவிட்டால் அது நிலம் என்கின்ற நிலைமை நமக்கு ஏற்பட்டு விடுகிறது. எனவே, தண்ணீர் வராத நேரங்களில் ஆக்கிரமிப்புச் செய்கின்ற சூழ்நிலை இருந்து வருகிறது. அதனாலேதான், நாம் அடிக்கடி இப்படி ஆக்கிரமிப்புச் செய்யக்



கூடியவர்களை அகற்றிக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அத்தகைய நேரங்களில் ஏற்கனவே ஆக்கிரமிப்புச் செய்துள்ள பகுதிகளை எப்படியும் எடுத்துக்கொள்வோம், அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3

### மானாமதுரை தொகுதிக்கு வைகை நீர்.

* 94. வினா—**திரு. வ. மு. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் நிலவும் குடிநீர் பஞ்சத்தைத் தீர்க்கும் வகையில் வைகை அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்துவிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

(முற்பகல் 9-10)

**திரு. வ. மு. சுப்பிரமணியன் :** நிலைமை இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டாலும், வறட்சி காலங்களில் குடிநீர்க் கிணறுகளிலும், பாசனக் கிணறுகளிலும் தண்ணீர் மிக ஆழத்தில் நின்றுவிடுகிறது. சில கிணறுகள் வறண்டுவிடுகிறது. போதாக் குறையாக குடிநீர்த் திட்டத்தின் மூலம் திருபுவனத்திற்கு அருகிலிருந்து அருப்புக்கோட்டைக்கும், மானாமதுரை அருகிலிருந்து சிவகங்கைக்கும் வைகை ஆற்று நிலத்தடித் தண்ணீரை இறைத்துவிடுவதால் நிலைமை மிகவும் சிக்கலாகிவிடுகிறது.

இந்நிலையைத் தவிர்க்க வைகை அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று வைகை—பெரியாறு செயற்பொறியாளரிடம் வேண்டியதற்கு, பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிட விதி இருக்கின்றது. குடிநீருக்காகத் திறந்துவிட விதி இல்லை என்று கூறினார். இந்நிலையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பாசனத்திற்கு என்று விடப்படும் நீரைக் கொண்டுதான் குடிதண்ணீருக்கும் நிறைவு செய்யப்படுகிறது. அதை எந்த அளவுக்குத் தனியாகத் திட்டமிட முடியும் என்பது பற்றி அரசு ஆராயும்.

[1977 டிசம்பர் 31

**திரு. செ. சிவசாமி:** வைகை சானல் ஸ்கீம் போடக்கூடிய காலத்தில் தென்பகுதி கால்வாய் ரெயில்வே ரோட்டுக்கு தென் பகுதியில் போடுவதாகத் திட்டமிடப்பட்டது. பிறகு ரயில்வே ரோட்டுக்கும் நதிக்கும் மத்தியில் அதாவது ரயில் ரோட்டுக்கு வடக்கே அந்தக் கால்வாயை ஏற்படுத்தியதன் காரணமாக தற்போது முழுவதும் அழிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஏதேனும் ஊழல் நடந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கும் தகவல் புதிய தகவல்.

**பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்.**

*95. வினா—திரு. ஆ. நடராசன்
திரு. போ. கோபாலன்    மாண்புமிகு பொதுப்
திரு. கு. ரமணி

பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

(இ) அத் திட்டத்தில் பேரூர் தொகுதி சேர்க்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ): தற்போது அனுமதிக்கப்பட்ட பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் வெறும் நீர்மின் திட்டம் ஆகும். 1965 மற்றும் 1974-ல் கேரளத்தோடு ஏற்பட்ட ஒப்பந்தப்படி இத்திட்டத்தின் மூலம் பாசனத்துக்குத் தண்ணீரை தமிழ்நாடு உபயோகிக்க முடியாது.

இப்போது இத் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தி தவிர தண்ணீரையும் கிழக்கே திருப்பி கோவை மாவட்டத்தில் பாசன வசதியைப் பெருக்க தமிழ்நாடு அரசு மீண்டும் கேரளாவுடன் தொடர்பு கொண்டுள்ளது.

(இ) தற்போது இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. நடராசன்:** இந்தத் திட்டம் மிக நீண்ட காலமாக கோவை மாவட்ட விவசாயிகளால் வற்புறுத்தப்பட்டு வரும் திட்டமாகும். இந்தத் திட்டத்தைப் பற்றி உடனடியாக அரசு பேச்சு வார்த்தை நடத்தி நிறைவேற்றித் தர முன்வருமா?



1977 டிசம்பர் 31]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பாண்டியாறு-புன்னம்புழாவில் இருந்து வருகிற நீர் பாசனத்திற்குத் தேவையில்லை என்று ஏற்கனவே இரண்டு முறை நம்முடைய அரசின் சார்பில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. மீண்டும் பாசனத்திற்கு வேண்டுமென்று கேட்பது மிகவும் சிரமமாக உள்ளது.

**திரு. கு. ரமணி:** கோவை மாவட்டத்தில் கோவை தாலூக்கா வட பகுதியும், பல்லடம், அவினாசி பகுதிகளும் வறண்ட பகுதிகள் என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். அங்கு பாசனத்திற்குத் தண்ணீர் இல்லாமல், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் விவசாயிகளும் மற்றவர்களும் கஷ்டத்திற்கு ஆளாகியிருப்பது தெரியும். இந்த நிலைமையில் பாண்டியாறு-புன்னம்புழாவில் இருந்து ஒப்பந்தப் பிரகாரம் தண்ணீர் எடுக்க முடியாது என்றால் அந்த வட்டாரத்தில் பாசனத்திற்கு வேறு என்ன வழிவகைகளைக் கையாளப் போகிறார்கள்? குந்தா கழிவு நீராவது இதிலே கொண்டுவரப்பட முயற்சிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** முடியாது என்று அரசு அதற்கு இன்னும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை. முயற்சித்துப் பார்க்கிறோம். எந்த அளவுக்கு கோவை மாவட்டத்திற்கு அந்தத் தண்ணீரைப் பெற்றுத்தர முடியும் என்பது பற்றி இந்த அரசின் தரப்பில் மீண்டும் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

**திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 1965 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஆகிய இரண்டையும் பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டு அரசு இரண்டு முறை பாசனத்திற்குத் தண்ணீர் தேவையில்லை என்று முடிவு செய்துவிட்டதாகத் தெரிவித்தார்கள். அவைக்கு அவர் தவறான கருத்தைத் தெரிவிக்கிறார் என்று கருதுகிறேன். 1965 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின்போது பாசனத்திற்குத் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் மின்சாரத்திற்கு மட்டும் பயன்படுத்த முடிவு எடுத்தார்கள். 1974 ஆம் ஆண்டு பாசனத்திற்கு அந்தத் தண்ணீர் வேண்டுமென்று வற்புறுத்தியும் கூட, பரம்பிக்குளம்-ஆளியாறு பாதிக்கப்படும் என்ற நிலைமை ஏற்பட்டபோது இதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று ஏற்கனவே இருந்த ஒப்பந்தத்தை

அப்படியே ஏற்றுக் கொண்டது என்பது அரசுக்குத் தெரியுமா? எவ்வளவு தண்ணீர் அவர்கள் கொடுக்கிறார்களோ அதற்கேற்ப நெல் கூடக் கொடுக்கிறோம் என்று வாதிட்டிருக்கிறோம். அந்த வகையில் ஒரு ஒப்பந்தம் செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது அவருடைய முன்னிலையிலே நடந்த பேச்சு வார்த்தைகளின்போது தான் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திலிருந்து நீர் மின்சாரம் எடுப்பதற்குத் தண்ணீர் தரப்படும் என்று கேரள அரசு சொன்னதை மீண்டும் கேரள அரசு வலியுறுத்தி கையெழுத்தைப் பெற்றிருக்கிறது. வேண்டுமானால் அந்த அக்ரிமெண்டின் காப்பியை நான் அவைக்குத் தரத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** நான் அதை மறுக்கவில்லை. அந்த ஒப்பந்தம் கையெழுத்தானதற்குக் காரணம், பரம்பிகுளம்-ஆளியாறுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்று ஏற்கனவே காங்கிரஸ் அரசு செய்த ஒப்பந்தத்தை அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நாங்கள் தண்ணீர் தேவையில்லை என்று அப்போது சொல்லவில்லை. வேண்டுமானால் அவர்கள் அதிகாரிகளைக் கூடக் கேட்டுப் பார்க்கலாம். பாண்டியாறு புன்னம்புழாவிற்கு தண்ணீர் கொடுத்தால் அதன் மூலம் அவினாசி தாலுகாவிலே அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி எந்த அளவிற்கு அவர்கள் தண்ணீர் தருகிறார்களோ அந்த அளவிற்கு நெல் கொடுக்கிறோம் என்று கேட்டு, அப்போது பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த திரு. ஜகஜீவன்ராம் அவர்களையும் வைத்துக்கொண்டு கேட்டு இருக்கிறோம். ஆகவே அதை நான் மறுக்கவில்லை. அந்த அளவிற்கு அப்போது ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. வெங்கிடுசாமி** என்கிற **வெங்கிடு :** பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம் மின்சாரத் திட்டம் என்ற அடிப்படையில் அறிவிப்பதாகவும், மேற்கொண்டும் பாசனத்திற்குத் தண்ணீர் பெறுவது சம்பந்தமாக மேலூர் அரசு முயற்சிக்கும் என்று அமைச்சரிடமிருந்து பதில் தரப்பட்டது. ஏற்கனவே அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்காக மாற்று



ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியில்லை என்றால் குந்தா நீர்ப்பாசனத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏதாவது அரசிற்கு யோசனை உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர், குந்தா நீர்ப்பாசனத் திட்டத்தை அமல்படுத்தும் உத்தேசம் உண்டா என்று கேட்டார்கள். அதுபற்றிய குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. இருப்பினும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரள மாநிலத்திற்குச் சென்றபோது அங்கேயுள்ள அமைச்சரவையோடு பேசியபோது இது பற்றிச் சொல்லப்பட்டது. ஆனால் கேரள அரசுடைய சார்பில் சொல்லப்பட்டது. ஏற்கனவே பாண்டியாறு-புன்னம்புழா தண்ணீரை தமிழ்நாடு கேட்பதில்லை என்று ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. அப்படி ஒப்பந்தம் ஆகியிருக்கும்போது, மீண்டும் கேட்பது சரியா என்று தான் கேட்டிருக்கிறார்கள். அந்த நிலைமையிலே தான் அது இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா சம்பந்தமான ஒப்பந்தத்தில் 1965ஆம் ஆண்டில் அப்போது மின்துறை அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் பாசனத்திற்குத் தண்ணீர் தேவை என்பதை வலியுறுத்தாமல் மின்சாரத்திற்கு மாத்திரம் தான் ஒப்பந்தம் என்று செய்து கொண்டார்கள். அதைக்கூட இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங் கட்சியாக இருந்தபோது வெளியிடவில்லை. அப்படி வெளியிடாததற்குக் காரணம், ஏற்கெனவே இருந்த அரசு ஒப்பந்தம் செய்து கொண்டது, அந்த அடிப்படையிலே தண்ணீர் கேட்கக் கூடாது என்று கேரள அரசு அதைப் பிடித்துக் கொண்டு விடும் என்பதற்காகத்தான் அதைக் கூட இந்த அவையில் சொல்லவில்லை.

கேரள அரசு வெங்கட்டராமன் ஒப்பந்தத்தை வலியுறுத்திய காரணத்தாலும் 1967ஆம் ஆண்டிலே அண்ணா ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன் அப்போது பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தை மத்திய அரசு ஏற்று ஒப்புதல் கொடுத்தவுடன், உடனடியாக நிறைவேற்றலாம் என்று சொன்னவுடன், கோவை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் பாசனத்திற்கு அதைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க

அதுபற்றித் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தன. அதற்குப் பிறகு அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை அனுமதிக்கப்பட்டதோ அதைவிட நான்கு மடங்கு செலவாகும் என்ற அளவில் தமிழக அரசு அதை மின்சாரத்திற்குப் பயன்படுத்தலாம் என்ற அளவிற்கு இறங்கி வந்தது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இப்படியே பேச்சுவார்த்தையில் இன்னும் காலம் நீடித்துக் கொண்டே போனல் அந்த மின்சாரத் திட்டத்திற்கு இன்னும் செலவு அதிகமாகும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய யோசனை தான் கொஞ்சம் ஆபத்தாக இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன். குறைந்த அளவு மின்சார உற்பத்தித் திட்டத்தையாவது நிறைவேற்றலாம் அல்லவா என்று கேட்கிறார்கள். நான் இந்த மன்றத்தில் சொன்னதைப்போல அதை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தலாமா வேண்டாமா என்ற பிரச்னைக்கு உடனடியாக அவ்வளவு சீக்கிரத்தில் முற்றுப்புள்ளி வைப்பது நல்லது அல்ல என்றே கருதுகின்றேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, தமிழ்நாடு கேரள எல்லைப் பிரதேசத்திலிருந்து இப்பொழுது பல நதிகள் அரபிக் கடலில் சென்று விழுந்து ஏராளமான தண்ணீர் வீணுகப்போகிறது. ஆகவே, இப்பொழுதுள்ள சூழ்நிலையில் கேரள அரசோடு உறவு கொண்டு, இந்தத் தண்ணீர் தமிழகத்திற்குப் பயன் அளிக்கும் வகையில் பேச்சு வார்த்தைகள் தொடங்குவதற்குப் பல சூழ்நிலைகள் இப்பொழுது இருக்கிறது. கேரள அரசு கூட நாம் அவர்களுக்குத் தேவையான அரிசி கொடுக்கத் தயாராக இருந்தால் அவர்கள் தண்ணீர் தருவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. இன்னும் தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் இப்பொழுது ஏற்பட்டுள்ள பல்வேறு நல்ல சூழ்நிலைகளின் காரணமாக இந்த முயற்சியைத் தமிழக அரசு மேற்கொண்டு இதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த நல்ல சூழ்நிலையை யொட்டித்தான் நானும் இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி



வைக்க வேண்டாமென்று சொன்னேன். பாரதப் பிரதமர் அவர்கள் இங்கே வந்த பொழுதும், திருவனந்தபுரத்திற்குச் சென்றபொழுதும் நம்முடைய முதலமைச்சரவர்களும், கேரள மாநில முதலமைச்சரவர்களும் கலந்து பேசியதில் அரபிக் கடலிலே போய்க் கலக்கின்ற, வீணுகின்ற ஆற்றுத் தண்ணீரை எந்த அளவுக்குத் தமிழ்நாட்டிற்குத் திருப்பிப் பயன் விளைவிக்க முடியுமோ அந்த அளவிற்குத் திருப்புவதற்கு ஓரளவுக்கு நல்ல சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நல்ல சூழ்நிலையில் இரண்டு மாநிலங்களுக்கும் பயன்தரத் தக்க விதத்திலே மேலும் வலியுறுத்தி, எந்த அளவிற்குத் தமிழ்நாட்டிற்குப் பயன் கிடைக்குமோ அந்தப் பயனைப் பெற்றுத் தர இந்த அரசு முயற்சிக்கும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் ஒரு இஞ்சினியர் ஆவார்கள். இந்த பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்திலே மின்சார உற்பத்திக்கும் பாதகம் இல்லாமல், விவசாயத்திற்கும் தண்ணீர் பெற முடியும் என்ற அறிக்கையை நம்முடைய அதிகாரிகள் தந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னதைப்போல தமிழ்நாட்டின் நெல்லைக் கொடுப்பதாகச் சொன்னோம், தமிழ்நாட்டின் சார்பாக அந்தத் தண்ணீருக்கு என்ன விலை வேண்டுமோ—வாட்டர் ரேட்—கொடுப்பதாகச் சொன்னோம், எனவே, அதற்கெல்லாம் மீண்டும் முயற்சியெடுப்பார்களா? அப்படிச் செய்வதாலே நம்முடைய மின்சாரத் திட்டத்திற்கும் வாய்ப்பு உண்டு, பாசனத் திட்டத்திற்கும் வாய்ப்பு உண்டு. மேலும் கேரளாவிற்கு அதனல் எந்தவிதமான கேடும் ஏற்படாது என்று நம்முடைய இஞ்சினியர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வலியுறுத்த பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, பாரதப் பிரதமர் அவர்கள் இந்தப் பிரச்னையில் மிகுந்த அக்கறை கொண்டு, அரபிக் கடலிலே சென்று வீணுகக் கலக்கின்ற தண்ணீரின் ஒரு பகுதியைத் தமிழ்நாட்டிற்குத் தருவதில் என்ன கூறு என்று அவர்களே இதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த சில யோசனை,

கள் சரியானவை என்று நாம் இப்பொழுது ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. ஏனென்றால், பணம் தருகிறோம் என்று சொல்வது புதிய கான்செப்டை உருவாக்கும். ஆகவே, பாரதப் பிரதமர் அவர்களே, இதிலே தலையிட்டு நம்முடைய மாநில முதலமைச்சரவர்களும், கேரள மாநில முதலமைச்சரவர்களும் இந்தத் திட்டத்தைப்பற்றிப் பேசி நல்ல சுமுகமான ஒரு தீர்வு வரும் சூழ்நிலை இருப்பதால் நாம் இந்தப் பிரச்னையை இந்த இடத்திலேயே விட்டு விடலாம்.

## நெல்லை மாவட்டத்தில் நீர்த்தேக்கத் திட்டங்கள்.

* 96. விஞ—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில், கீரியாறு திட்டமும், சிவகிரிக்கு மேற்கே கோம்பை ஆறு நீர்த்தேக்க திட்டமும் தற்போது எந் நிலையிலுள்ளன ?

(ஆ) அத் திட்டங்கள் முடிவுற அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :**

(அ) மற்றும் (ஆ) : கீரியாறு திட்டம்.

கேரள மாநிலத்திலுள்ள ஆற்றுத் தண்ணீரை தமிழ் நாட்டுக்குத் திருப்பி விடும் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இத்தகைய மற்ற திட்டங்களுடன் பொதுவான அடிப்படையில், இத்திட்டமும் ஆராயப்பட்டு வருகிறது.

**கோம்பையாறு திட்டம் :**

இத்திட்டத்திற்கான தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் முன்னேடி ஆய்வு அறிக்கையை பரிசீலித்து இதை ஏற்க இயலாது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, இந்தக் கீரியாறு திட்டம் 1906ஆம் ஆண்டிலிருந்து பேசப்படும் திட்டமாகும். 71 ஆண்டுகளாக இது பேப்பர் திட்டமாகவே இருக்கிறது. இந்தக் சீரியாற்றிலிருந்து தண்ணீர் கேரளத்தில் இருக்கும் அரபிக் கடலில் வீணுகக் கலக்கிறது என்று அறிகிறேன். இதுகுறித்து



கேரள அரசோடு பேசப்பட்டதா ? அதன் முடிவு என்ன ? இரண்டு திட்டங்களாலும் பயன்படும் ஏக்கர் நிலங்கள் எவ் வளவு? அதற்கான காலதாமதத்திற்கான காரணம் என்ன என் பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, கீரியாறு நீர்த் தேக்கத் திட்டம் கேரள அரசோடு சேர்ந்து பேசி நாம் முடிவுக்கு வர வேண்டிய திட்டம். நான் இதற்கு முன்பு அளித்த பதிலிலே கேரள மாநிலத்தோடு, இந்த ஆற்று நீர்ப் பங்கிடுவது குறித்து எந்த வகையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது என்ற விபரத்தை அறிவித்தேன்.

கோம்பை ஆறு நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்த வரையில் புதிய சாகுபடிக்காக 300 ஏக்கர் நிலத்திற்கும், முன்புள்ள 1,335 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீரை உறுதிப் படுத்தவும் இது பயன்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், வருவாய்த் துறை வாரியம் இதைப்பற்றி நன்கு ஆராய்ந்த பிறகு அதனால் மிகப்பெரிய நன்மை கிட்டாது என்பதால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்தக் கீரியாறு என்று சொல்லும் திட்டம் நெடுங்காலமாகவே சொல்லிக் கொண்டே வருகிற திட்டமாக இருக்கிறது. அதுசம்பந்தமாக, முன்னால் இருந்த அமைச்சர்கள் கூட பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகக் கேள்விப்படுகிறேன். இந்தத் திட்டத்தின் பலனக, மிக வறண்ட பகுதியாக இருக்கிற சங்கரன்கோவில், பள்ளிப்பட்டு போன்ற பகுதிகளில் குடி தண்ணீராவது கிடைக்கும். அத்துடன், விவசாயத்திற்கும் பலன் கிடைக்கும். ஆகவே, இனி, பேசும்பொழுதாவது அதை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் அரசு பேச்சு வார்த்தை நடத்தி, நிறைவேற்ற முயற்சி எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீண்ட நெடுங்காலமாக இந்தத் திட்டம் அப்படியே இருந்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டங்களையெல்லாம் தீர்ப்பதற்கு மாநில உணர்வுகளைக்

கொஞ்சம் தூரத் தள்ளிவிட்டு, இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்னைகளைப் பொதுவாகத் தீர்க்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்னைகளை அணுகி யிருந்தால், இந்தக் கஷ்டங்கள் வந்திருக்காது.

**திரு. எம். ஏ. ஜெயவேலு :** தலைவரவர்களே, கர்நாடக மாநிலம் தவிர, மற்ற ஆந்திர மாநிலம், கேரள மாநிலம் ஆகிய வற்றிடம் நாம் தண்ணீர் கேட்பது வேண்டுகோள்தானே தவிர உரிமைகள் அல்ல. அப்படிப்பட்ட பிரச்னைகளை அடிக்கடி பேசி, எங்கே நம்முடைய உரிமைகளை விட்டுக் கொடுத்து விட்டோமோ என்ற அச்சம் நமக்கு இருக்கிறது. அவர்களும், அந்த நாட்டு மக்களும், அந்த உரிமைகளை விட்டுக் கொடுப்ப தற்குச் சம்மதிக்காமல், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்ற நிலைமையிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை களை, இனிமேல் இந்த அரசு விவாதிக்காமல் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நாம் மொழிவழியாகப் பிரிந்திருந்தாலும், இயற்கை நிலவழி ஒன்று என்பதைத்தான் இவைகளெல்லாம் வற்புறுத்துகின்றன. அந்த உணர்வோடுதான் இந்த அரசு செயலாற்றுகிறது.

## பெருமாபட்டு கிராமத்தில் புதிய ஏரி.

*97. வினா—**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலுக்காவிலுள்ள பெருமாபட்டு என்னும் கிராமத்திலுள்ள ஜலகம்பாறையில் புதிய ஏரி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆம். இத் திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ப. சுந்தரம் :** தலைவரவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது போடப்பட்டது? அதன் மதிப்புத் தொகை எவ்வளவு? அதற்கு எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும்?



அதனால் எத்தனை ஏக்கர் நிலம் பயன்பெறும்? அதனை நிறை வேற்ற இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஜூன் திங்கள் 1975-ல் ரூ. 6½ இலட்சம் என மதிப்பிடப் பெற்று, அரசின் ஒப்புதல் அளிக்கப்பெற்றது. ஆனால், நிதிப் பற்றுக்குறையின் காரணமாக, 1975-76-ம் ஆண்டு அது எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1976-ம் ஆண்டு, செப்டம்பர் திங்களில், இத் திட்டத்தை, 1976-77-ம் ஆண்டில் செயல்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1976-77-ம் ஆண்டு இத்திட்டத்தின் மதிப்பு, ரூ. 19 இலட்சத்துக்கு உயர்ந்தது. எனவே, இது ஒரு சிக்கனமற்ற திட்டம் என வருவாய் வாரியம் தெரிவித்து, இத் திட்டத்தைக் கைவிடலாம் என பரிந்துரை செய்துள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இது போன்ற ஏரிகளைக் கட்டுவது என்று சொன்னால், வெள்ளையனுடைய காலத்திலே, திலப்பிரபுக்கள் தங்களுக்குச் சாதகமான முறையிலே ஏற்படுத்திக் கொண்ட பாலாறு பேசின் ரூல்ஸ் முட்டுக்கட்டையாக இருக்கின்ற காரணத்தினால், புதிய ஏரிகளைக் கட்ட முடியாத சூழ்நிலை யிருக்கிறது என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, பல இடங்களிலே இதுபோன்ற ஏரிகளைக் கட்டமுடியாத நிலைமையிலிருக்கிற காரணத்தினால், அந்தப் பாலாறு பேசின் ரூல்ஸை, அரசு ரத்து செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்த ஏரியைக் கட்டுவதற்குப் பாலாறு பேசின் ரூல்ஸ் தடையாக இல்லை. நிதிதான் தடையாக இருக்கிறது.

## அண்ணா சதுக்கத்தின் பராமரிப்புப் பணி.

*98 வினா—**திரு. என். கிட்டப்பா :**

**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரிலுள்ள அண்ணா சதுக்கத்தின் 1975-76, 1976-77-ம் ஆண்டுகளின் பராமரிப்புச் செலவு எவ்வளவு?

(ஆ) 1976 ஜனவரிக்குப் பின் பராமரிப்புப் பணிகள் ஏதேனும் நிறுத்தப்பட்டனவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) பராமரிப்புச் செலவு : 1975-76—ரூ. 2,26.126 ; 1976-77—ரூ. 1,99,378.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-30)

**திரு. து. புருஷோத்துமன் :** தலைவர் அவர்களே, 1975-76, 1976-77 ஆகிய வருடங்களில் செலவுத் தொகை வருடாவருடம் குறைந்துகொண்டே வருகிறது. இப்போது கூட பராமரிப்பு சரியாக இல்லை என்றும், ஃபவுன்டன் போன்ற நீரூற்று வேலை செய்தால் மிகவும் அழகாக இருக்கும். இப்போது செய்யப்படவில்லை. அங்கே இயங்கிக் கொண்டிருந்த காவல் நிலையம் (அவுட் போஸ்ட்) இப்போது இருக்கிறதா என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** செலவுகள் குறைந்து வருகிறது என்பது சரியல்ல. செலவுகள் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்று சொன்னார். பராமரிக்கப்பட்டுத்தான் வருகிறது. ஏனென்றால் தினந்தோறும் அதை நான் பார்த்து வருகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அண்ணா கோட்டத்தில் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் எல்லா விளக்குகளும் போடப்பட்டு—உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மைசூரில் இருக்கிற பிருந்தாவனத்தில் குறிப்பிட்ட நாட்களில் எல்லா விளக்குகளும் போடப்படுகிறதே அதுபோல—வருகிற சூழ்நிலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்படுகிற வரையிலும் இருந்தது. கழக ஆட்சி கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது அப்படிப்பட்ட விளக்குகளை ஏற்றாத நிலை இருந்தது. அதனால் ஒரு வேளை செலவுகள் குறைந்திருக்கக்கூடும். அந்த விளக்குகளை வாரந்தோறும், எற்கனவே இருந்ததைப்போல—சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஏராளமான பேர்கள் வருவார்கள்—அந்த நாட்களில் அந்த விளக்குகளைப் போட இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 1975-76-லே எவ்வளவு மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறதோ அதை விட அதிகமாகத்தான் 1976-77-ல் மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினாலே எப்படி விளக்குகள் எரியாமல் போயிருக்கும் என்பது தெரியவில்லை.



இருப்பினும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல அறிஞர் அண்ணா அவர்களுடைய இந்தக் கோட்டத்தைப் பொறுத்தவரையில் விளக்குகள் எரிவதற்கானாலும் சரி அல்லது இன்னும் நல்ல முறையிலே அதைப் பாதுகாப்பதற்கானாலும் சரி இன்னும் என்னென்ன நல்ல அழகுபடுத்துவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமோ அந்தத் திட்டங்களை மேற்கொள்ள இந்த அரசு கட்டாயம் பாடுபடும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கத்தில் பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் வெளி நாட்டைச் சேர்ந்தவர்களும் பார்வையிட வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளையும் திட்டங்களையும் விளக்குகின்ற வகையில் அவர்களுடைய எழுத்துக்களையும், புத்தகங்களையும், அவர்கள் பயன்படுத்திய பல்வேறு பொருள்களையும் வைத்து ஒரு அரும்பெரும் கண்காட்சியை அங்கே நிறுவி அவர்களைப் பற்றி அகில உலகமும் தெரிந்துகொள்ள இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற இந்த நல்ல யோசனையை அரசு ஏற்றுக் கொள்ளுகிறது.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, கிண்டியிலே உள்ள பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நினைவாலயத்தை அரசு சீர்திருத்தம் செய்தது. தற்போது அங்கே முள் செடிகள்தான் காட்சி அளிக்கின்றன. அதை அழகுபடுத்தி சீர்திருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தலைவர்களிடையே இப்படிப்பட்ட போட்டியை நாம் உண்டாக்கி விடக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், நான் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய வாலாற்றுச் சிறப்புமிக்க பல்வேறு பேச்சுக்களையும், எழுத்துக்களையும் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலே அண்ணா கோட்டத்தில்

வருகின்றவர்கள் எல்லாம் கேட்கின்ற அளவுக்கு ஒலிபரப்பப் படுமா, அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. கே. பண்ணை சேதுராம் :** தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கத்தில் தினம் தினம் வெளிமாநில மக்களும், வெளிநாட்டு மக்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் அண்ணா அவர்களுடைய வரலாற்றையும் புகழையும், வெளி மாநிலத்தவர்கள் வெளிநாட்டினர் தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு மியூசியத்தை வைப்பதற்கு முந்தைய அரசு ஏதாவது திட்டம் வைத்திருந்ததா? இல்லை என்று சொன்னால் ஒரு மியூசியம் வைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** என்னிடத்தில் அந்தத் தகவல் எதுவும் இல்லை. அண்ணாவினுடைய சதுக்கத்தை பொறுத்தவரையில் எந்த அளவிற்கு அண்ணாவினுடைய பெருமையையும் புகழையும் வெளி உலகுக்கு எடுத்துக்காட்ட முடியுமோ அந்த வகையிலும், வடபுலத்திலிருந்து வருகிறவர் களுக்கு அவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்கிற அந்த வகையிலும் அதே நேரத்தில் ஆர்ப்பாட்டம் இன்றி அமைதியான முறையில் காரியங்கள் ஆற்றப்படும்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** அறிஞர் அண்ணா அவர்களின் சமாதி அருகில் இப்போது சில வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக் கின்றன. எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று பெரிய எழுத்துக்களில் போட்டு அருகில் இருக்கும் பீடத்தின் மேல் வைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அது இப்போது இருக்கிற இடமே நல்ல இடம்தான்.

**திரு. இ. தமிழரசன் :** அண்ணா சதுக்கத்தில் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாற்றையும், அண்ணா அவர்கள் கருத்துக்கள் அடங்கிய புத்தகங்களையும் குறைந்த விலையில் அச்சிட்டு அந்த இடத்திலேயே விற்பதற்கு இந்த அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அண்ணா அவர்களின் சதுக்கம் பற்றிய கேள்வி இது. அண்ணா அவர்களது சிறந்த பேருரைகள், சொற்பொழிவுகள், கருத்துக்கள் ஆகியவை குறித்து ஏதேனும் சிறு சிறு நூல்களாக அந்த இடத்தில் தருவதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதுபற்றி அரசு நிச்சயமாக ஆராயும்.

### தச்சம்பட்டு கிராமத்திற்குத் துணை மின் நிலையம்

*99 வினா—**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், தச்சம்பட்டு கிராமத்தில் துணை மின் நிலையம் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) துணை மின் நிலையம் நிறுவுவதற்குத் தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்தவுடன் நிர்மாண வேலைகள் துவங்கப்படும்.

**திரு. த. வேணுகோபால் :** இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நிலங்கள் எப்போது ஆக்கிரமணம் செய்யப்படும்? எவ்வளவு மாதங்களுக்குள் அது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நிலம் கையகப்படுத்த மின்வாரியம் 6—8—1977-ல் முடிவு செய்துள்ளது. இந்த நிலத்தை கையகப்படுத்தியபின் இத்துணை மின் நிலையத்தின் நிர்மாண வேலைகள் தொடங்கப்படும்.

### கடன் நிவாரணச் சட்டம்

*100 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1976-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கடன் நிவாரண சட்டத்தின்கீழ் மனுக் கொடுத்தவர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(ஆ) அச்சட்டத்தின்கீழ் நிவாரணம் பெற்றவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் :** (அ) மற்றும் (ஆ): பேரவையின் முன் அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

* 727-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்தச் சட்டத்தின்கீழ் ரூ. 2,400-க்கு குறைவாக வருமானம் உள்ளவர்கள் வாங்கிய கடன்கள் எல்லாம் ரத்து செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவர்கள் போடக்கூடிய மனுக்கள் தாசில்தார் விசாரணையின்போது —இப்போது சர்க்கார் சட்டப்படி ஆண்களுக்கு ரூ. 5, பெண்களுக்கு ரூ. 5 என்று தினக்கூலி பெறுகிறார்கள், எனவே மாதம் ரூ. 300 என்று வருகிறது—வருமானம் 2,400 ரூபாய்க்குமேல் வருகிறது என்று பல மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. மூன்று ரூபாய் கூலி கூட இல்லாத பெரும்பகுதி கூலி விவசாயிகளின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. எனவே இந்தச் சட்டப்படி உண்மையிலேயே ஏழைகளுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய முறையில் இந்தச் சட்டத்தை அமல்படுத்தும்வகையில் அமைச்சர் அவர்கள் யூனியன் லெவலில் மக்கள் குழு மூலம் அச்சட்டத்தை அமல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : The suggestion will be examined by the Government.

**திரு. ரா. மார்க்கபந்து :** இந்தக் கடன் நிவாரணச் சட்டம் வருகிற ஜனவரி மாதத்தோடு முடிவடைகிற காரணத்தால் அதை மேலும் நீட்டிக்கிற உத்தேசமுண்டா ? அப்படி நீட்டிப்பது என்று சொன்னால் ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்தில் கூறிய இச்சட்டத்திற்கான சில திருத்தங்களைச் செய்வதன்மூலம் பணம் கொடுக்கிறவர்களுக்கும் வாங்குகிறவர்களுக்குமிடையே ஒரு சுமுகமான நிலை உருவாவதற்கு வேண்டிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று கூறி திருத்தங்கள் தரப்பட்டிருக்கின்றன. அத்திருத்தங்களை ஏற்று சட்டத்தைத் திருத்துவதற்கான வாய்ப்புகள் வசதிகள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : The hon. Member's question consists of two parts :

(1) Whether there is going to be an extension of this Debt Relief Legislation ;

(2) Whether the suggestions made in this House and elsewhere and by other representatives will be duly considered by the Government and got in the form of amendments to the existing legislation.

So far as the first part of his question is concerned, before the present Session is concluded, necessary legislation for the extension of the Debt Relief Legislation will be brought forth and that will be discussed in this House.



So far as the other matter is concerned, it is under serious examination. In view of shortage of time and in view of the manifold nature and difficult and complicated questions of law that arise in these matters, they will be considered duly and they will be brought by way of either amendments or by way of certain other ancillary legislation.

[முற்பகல் 9-40]

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** தலைவரவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ் இராமனுதபுரம் மாவட்டத்திலிருந்து எவ்வளவு பேர் மனு கொடுத்திருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பது இதில் கூடவா வர வேண்டும். அங்கேயுள்ள அதிகாரிகள் தகவல் கொடுப்பதில் என் காலதாமதம் செய்தார்கள் ? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ? அதோடு கடன் நிவாரணச் சட்டம் என்ற பெயரால் ஒத்தி வைத்துக் கொண்டு போகாமல், எவ்வளவு சீக்கிரம் மசோதா வரவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் :** இராமனுதபுரம் மாவட்ட ஆட்சியாளரின் விவர அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

So, it has not come. I am not able to answer why this Collector of Ramanathapuram has not given it on time. Necessary action will be taken against him certainly by this Government as per the rules if there is any lapse on his part.

The answer to second part of the hon. Member's question would be my answer given to the second part of question of hon. Member Thiru R. Margabandhu that necessary legislation will be brought as early as possible, that is, before this Session.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் ஆன் தி பார்டிகுலர் திங். நீங்கள் ஆன்சரில் இராமனுதபுரம் மாவட்ட கலெக்டரிடமிருந்து ரிப்போர்ட் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியென்றால் அறிக்கை வரவில்லை என்று அர்த்தம். கேள்வி ஸ்பெசிபிக்காக இருக்கிறபோது, அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திற்கு வருவதற்கு முன்பாக, டெலிகிராப் மெஸேஜில், அல்லது டெலிபோன் கம்யூனிகேஷன் போட்டு கேட்டிருக்க வேண்டுமல்லவா ? அப்படிக் கேட்டால்,

கலெக்டர் ஏதாவது காரணம் சொல்லுவார். அந்தக் காரணத்தை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கலாம். வெறும் பிளண்டாக எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்வது

It is not proper. He should have contacted the Collector and ascertained the particulars. I would request the Chair to give us guidance on this point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொல்வதை யோசனையாகத்தான் ஏற்றுக் கொள்ள முடிகிறதே தவிர, அதை ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகக் கொள்வதற்கில்லை. நாங்கள் அமைச்சருக்கு அனுப்பிய கேள்விக்கு, அந்த இலாக்காவிலிருந்து வந்த பதிலை இங்கே சொல்லியிருக்கிறார். நீங்கள் சொல்லிய யோசனையை—முன்கூட்டி தொலைபேசியில் பேசி அல்லது தந்தி கொடுத்து சேகரிக்கக் கூடாதா என்ற யோசனையை—அமைச்சர் அவர்கள் இனி கடைப்பிடிப்பார்.

**திரு. கே. பண்ணை சேதுராம் :** தலைவர் அவர்களே, (Debt Relief Act) (டெட் ரிலிப் ஆக்ட்) ஊர்ஜிதத்தில் இருப்பதால், தமிழகத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில் பல பகுதிகளில் உள்ள ஏழை விவசாயிகள் தங்கள் தங்க நகைகளை வைத்துக்கூட கடன் பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல், கோர்ட்டுகளில் வழக்கிடுகிறார்கள், ஜமீன்தார்கள் எல்லாம் இந்தச் சட்டத்தை எடுத்துவிட வேண்டுமென்று போராடி வருகிறார்கள். எனவே இந்தச் சட்டத்தை கைவிட்டு, ஏழைகள் வாழும் சாதாரண சூழ்நிலையை உருவாக்க சுமுகமான சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் :** These two suggestions will be examined by the Government.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இந்தச் சட்டத்தின் கீழ் மனுச் செய்து கொண்டவர்கள் 35,369 என்று போடப்பட்டுள்ளது. அதில் பலனடைந்தவர்கள் 363 என்றால், பாக்கியிருக்கக்கூடிய 35,006 பேர்களின் மனுக்கள் என்ன காரணத்தைக் கொண்டு நிராகரிக்கப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : A separate question may be put by the hon. Member. Necessary details will be collected by the Government.



**திரு. சி. கோவிந்தராசன் :** ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேள்வி கேட்டு விட்டீர்கள். அடுத்தவருக்குச் சந்தர்ப்பம் தருகிறேன். நீங்கள் வேண்டுமானால் அப்புறம் கேளுங்கள்.

(திரு. சி. கோவிந்தராசன் மீண்டும் எழுந்தார்.)

தயவு செய்து உட்காருங்கள். தொடர்ந்து ஒருவரே விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் இருக்காது. மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்காது. அடுத்தவர் கேட்ட பிறகு கேளுங்கள். திரு. திருவேங்கடம் . . .

**திரு. சி. கோவிந்தராசன் :** 35,369 பேர் மனுப் போட்டார்கள் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் திருவேங்கடம் என்று அழைத்துவிட்ட பிறகு, நீங்கள் அவருக்குச் சந்தர்ப்பம் அளித்து விட்டுப் பிறகு கேளுங்கள்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தில் எத்தனை ஏழை மக்கள் பலன் பெற்றிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : According to the communique issued by the Government, 22,948 people got the benefit.

**திரு. ரா. உமாநாத் :** இந்தக் கடன் நிவாரணச் சட்டம் அமலுக்கு வந்ததிலிருந்து ஒரு பார்ட்டிகுலர் எக்ஸ்பீரியன்ஸ் என்னவென்று பார்த்தால் அவுட்-ஸ்டான்டிங் ஜாஸ்தியாக இருக்கிறது. ஃபைனான்ஷியல் ஆல்டர்னேட்டிவ் அரேன்ஜ்மென்ட்ஸ் இல்லாததின் காரணமாக ஏழை மக்கள் திரும்பவும் லேவாதேவிக்காரர்களிடம் போய்க் கொண்டிருக்கக்கூடிய நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. ‘compulsion by circumstances’ காரணமாக பழைய கடனை ரத்து செய்வதற்கும் முடியவில்லை, போஸ்ட்போன் பண்ணவும் முடியவில்லை. பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போகிற நிலைமை இருந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் ஃபைனான்ஸ் ஆல்டர்னேடிவ் அரேன்ஜ்

மென்ட்ஸ் போதுமான அளவுக்கு இல்லை. போஸ்ட்போன்மென்ட் கேட்பதற்கு கோர்ட்டுக்குப் போவதற்கு ஏழைகளிடம் பணம் இல்லை. ஆகவே, இந்த ஐட்டங்களை எல்லாம் கான்ஸல் செய்து விடுவது நல்லது. இதை அரசு செய்ய முன் வருமா? Two things I have asked.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The other suggestion made by hon. Member Thiru Umanath, bordering on harassment of debtors will be carefully examined by the Government and necessary relief measures would be contemplated in due course. So far as alternative financial aspects are concerned, I am not in a position to state anything except to pass on the appeal to my hon. collegues, Hon. Finance Minister and Minister for Co-operation.

* 101. வினா—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ், ரூபாய் 2,400-க்கு குறைந்த வருமானம் உள்ள ஏழைகளின் நகை ஈட்டுக் கடன்களை ரத்து செய்து நகைகளைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்ய ஒவ்வொரு வட்டார ஆட்சி அலுவலகத்திலும் நியமிக்கப்பட்ட தனி தாசில்தார்களின் பணி இதுவரை எந்த அளவுக்கு நடைபெற்றுள்ளது?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்:

பேரவையின் முன் விவர அறிக்கை * ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, நகைக் கடன்களின் மீது இருக்கின்ற கடன்களை மீட்டு நகைகளைத் திருப்பி தரும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணம் செலவு செய்தால்தான் நகைகளைத் திரும்பப் பெற முடிகிறது என்கிற சூழ்நிலை இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா?

* 728-729-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: If specific instances of such complaint of harassment on pledgers are brought to the notice of the Government, necessary action will be taken against them.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: ஏறத்தாழ 30 லட்சம் மக்கள் இருக்கக் கூடிய இராமநாதபுரம் மாவட்டத்தில் 95 பேர்கள்தான் கடன் கொடுக்கிறவர்கள் இருக்கிறார்கள். இதிலிருந்து கடன் பெறுவதற்கு எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பது தெரியும். ஆகவே, இதைப் பரிசீலித்து அரசாங்கத் துறையிலேயே போதுமான அளவுக்குக் கடன் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This very kind suggestion on the part of debtors will be examined by the Government with great consideration and sympathy.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தரப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் கடனுக்காக விண்ணப்பம் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 99,97,228 என்றும், பைசல் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து சொச்சம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து விண்ணப்பங்களின் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், ஏதோ ஓரளவு கண்துடைப்புக்காகத்தான் ஏதோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு என்ன காரணம்? போதுமான அதிகாரிகள் இல்லையா? அரசாங்கம் இதைப்பற்றி தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: These particulars will be gathered by the Government, if the hon. Member is pleased to put a separate question.

டாக்டர் திரு. கே. சமாசம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கடன் சட்டம், கடன் நிவாரணச் சட்டம் முழு அளவில் பயன் அளிக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, புதிய லேவாதேவி முறை சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This suggestion will be examined by the Government with all serious consideration.

## சிறைக்காவலர்களது பணிமுறைகள்.

*102. வினு—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மத்திய சிறையில் பணிபுரியும் வார்டர்கள் மூன்று ஷிப்டுகளாகப் பணியாற்றும் திட்டத்தை மற்ற சிறைச் சாலைகளில் பணியாற்றும் வார்டர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: No.

(முற்பகல் 9.50)

**திரு. வி. கே. கோதண்டராமன்**: சார், சேலம் மத்திய சிறையில் 3 ஷிப்டுகளில் வார்டன்கள் போட்டு இப்போது அது நடைமுறையில் இருக்கிற காரணத்தால் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று உணர்கிறேன். அதேபோன்று ஒரு நிலை மற்ற சிறைகளிலே இல்லாத காரணத்தாலே தகப்பன் பிள்ளையைப் பார்க்க முடியாத சூழ்நிலையும், ஊழல் மேலும் அதிகப்படியாக ஏற்படக் கூடிய சூழ்நிலையும் இருப்பது மற்றவர்களுக்குத் தெரியும். ஆகவே, எல்லா மத்திய சிறைகளிலும் 3 ஷிப்டுகள் போடுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The system prevailing in the Central Prison at Salem was the result of a particular Inspector-General of Prisons who was asked to submit proposals in as early as 1943. Thereafter certain reforms on the Jail administration have been brought out, with the result that there are three shifts in the Central Jail. The result would be that the concerned persons work eight hours that is convict wardens, warders, etc. So far as the other Central Prisons in the State are concerned, the question is engaging the attention of the Government, this Government will certainly try to bring in the three shifts system as far as possible consistent with the improvement of the finances of the State, for such a reform involves extra expenditure.

**திரு. க. சுப்பு**: தலைவரவர்களே, இந்த 3 ஷிப்ட் சிஸ்டம் கொண்டு வருவது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வைத்து ஒரு கமிஷன் அமைப்பதாக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்து இருக்



கிறது. அந்தக் கமிஷனில் சட்டமன்றத்தில் இருக்கும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இடம்பெற்று, மற்ற அதிகாரிகளையும் சேர்த்து அமைத்தால் அது முறையாக இருக்கும். இதிலே இருக்கும் அனைவரையும் விட்டு விட்டு வேறு உறுப்பினர்களைக் கொண்டு கமிட்டி அமைப்பதால் இப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சரியாக விவாதிக்க முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சரியான வகையில் விவாதிக்கவும், முறைப்படி ஆலோசனைகள் தரவும், அந்தக் கமிட்டியில் சட்டமன்ற உறுப்பினர்களையும் போடுவதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The suggestion of the hon. Member, Thiru Suppu, will be examined by the Government exactly at the time of the composition of the Committee which is under our contemplation.

**திரு. கு. ரமணி**: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, நிதிநிலைமை (பைனன்ஸ்) அனுமதிக்கப் பட்டால் அந்த 3 ஷிப்ட் திட்டத்தை அமைப்பதற்கு இயலும் என்று குறிப்பிட்டார்கள். ஜெயிலில் வார்டர்களாகப் பணிபுரிபவர்கள் கீழ் மட்டத்தில் பணி செய்யக்கூடியவர்கள், அவர்கள் நாள் பூராவும் கைதிகளோடு கைதிகளாக இருந்து குடும்பத்தில் நிம்மதியாக ஒரு மணி நேரம்கூட இருக்க முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு 8 மணி நேரம் வேலை கொடுக்க வேண்டும். நாடு முழுவதும் 8 மணி நேரம் என்று நிலைமை ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறபோது, இவர்களுக்கும் அந்த 8 மணி நேரம் வேலை கொடுக்க வேண்டும். இதற்கு நிதிநிலைமை பார்க்கக் கூடாது. ஆகவே, 8 மணி நேரம் வேலை அளிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The suggestion of the hon. Member will be looked into with the greatest consideration and human sympathy. But even as it is now the information before the Government is that they work only for about ten hours, one hour on this side or one hour on that side, and not eight hours. (Interruption) You cannot have a more Pro-Labour Minister than myself and I can assure you about it. Therefore, the hon. Member should also sympathetically

understand the position of the Government when they are pleading for a certain amount of stringency of the finances of the State by reason of the various factors which have come into being and so he knows very well about it. Naturally, I am bound to say so and I cannot irresponsibly given an answer that eight-hour shift system would be brought into play. Therefore, with the improvement of our finances, this reform will be brought into effect and this reform will be placed before the contemplated committee.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** இன்றைக்கும் இந்த ஷிப்டு முறையிலே உள்ள வார்டர்கள் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். கைதிகளுக்குக் கொடுக்கக்கூடிய சாப்பாட்டை சாப்பிடக்கூடிய வழக்கம் இருந்து வருகிறது. எனவே, டியூடியில் இருப்பவர்களுக்கு இதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்து, அந்த அடிப்படையிலே அவர்களும் சாப்பிடலாம், அதாவது ஒரு 100 பேர்கள் சாப்பிடுவதால் நாம் குறைந்தா போகப் போகிறோம்? எனவே அதற்கான ஒரு உத்தரவை இந்த அரசாங்கம் பிறப்பிக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: While I want to appreciate the satire of the hon. Member, Thiru Koothagudi Shanmugham, I will not be a party to commit an illegal legality. If some instances are brought to the notice of the Government about pilfering...........

(Interruption: THIRU R. UMANATH: We do not say even 'pilfering'.........)

The suggestion will be considered by the Government as well as by the contemplated Committee.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சேலம் மத்திய சிறைச் சாலையிலே உள்ள ஷிப்டு முறைப்படி, மற்ற சிறைச்சாலைகளில் ஏற்பாடு செய்ய வேண்டுமானால், அதற்கு எவ்வளவு அதிக நிதி தேவைப்படுகிறது என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்? அப்படியானால், குறைந்தது எவ்வளவு பேர்கள் நியமனம் செய்ய வேண்டியிருக்கும்? இந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு கணிசமான தொகை தேவைப்படுமானால், இதைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு, இதைப் பரிசீலனை செய்வதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?



THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I think there was a kind of tacit acquiescence in the good principle involved in the matter. In regard to the other question raised by the Leader of the Opposition, I suppose I must get the necessary material from the concerned Department. It is not a question which I can answer straightaway on the spot here and now.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண் 103.

## 2. ஒழுங்குப் பிரச்னைகள்.

### (அ) மூலக்கேள்வி கொடுத்தவருக்குத் துணைக் கேள்வி கேட்க சந்தர்ப்பம் அளிப்பது குறித்து.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமருங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** கேள்வி போட்டவருக்கு உப கேள்விகள் கேட்க உரிமை. . .

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, சபாநாயகர் அடுத்த கேள்விக்குப் போய்விட்ட பின்னர், எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பி அந்தக் கேள்வியைப் பற்றி கேட்டுப் பேச முற்படலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்வி என்று சொல்லியான பிறகு, மீண்டும் முந்தைய கேள்வியைப் பற்றி துணைக் கேள்வி கேட்பதற்கு என்றால் அனுமதிக்க முடியாது. இரண்டாவது, அப்படிப் கேட்பதும் மாபல்ல. பின்னால், மற்ற அங்கத்தினர்களும் அதே முறையைக் கடைப்பிடிக்க நேரிடும். எனவே, தயவு செய்து அமருங்கள். அனுமதி தருவதற்கில்லை

**திரு. ரா. உமாநாத்:** இதுவரைக்கும் கேள்வி போட்டவர்கள் பதில் கேட்பதற்கு, உப கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கப் பட்டு வந்தது. ஆனால், அதை இப்போது இல்லை என்று சொல்வது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குகூட ஒத்துழைக்க வில்லை என்றால் என்ன செய்வது? கேள்வி நேரத்தில் இரண்டாவது துணைக் கேள்வி கேட்கலாம். ஆனால், கேட்டுத்தான் ஆகவேண்டும் என்ற நிரந்தரமான ஒரு நியதி இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சட்டரீதியாக அப்படி உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டபூர்வமாக அப்படியில்லை. சபாநாயகர் விரும்பப்பட்டால் அப்படித் தரலாம். தரத்தான் வேண்டுமென்ற நியதி இல்லை. எனவே, தயவுசெய்து அமருங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அப்படிப்பட்ட உரிமை லண்டன் பாராளுமன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் வேட்டைக்குப் புறப்பட்டு விட்டால், அவன் தொடர்ந்து அலுத்துக் கிடே விரும்பும்வரை அவன் வேட்டையாட வேண்டும். அப்படியிருக்கும்போது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் உதாரணத்திற்காகக் கதை சொல்ல வேண்டாம். அப்படிப்பட்ட உதாரணம் தேவையில்லை. முதலில் துணைக் கேள்வி கேட்டீர்கள். அதற்கு அனுமதி தந்தேன். இரண்டாவது துணைக் கேள்வி கேட்டீர்கள். நான் அதற்கும் அனுமதி தந்திருக்கலாம். ஆனால், அப்படித் தரத்தான் வேண்டுமென்ற நிரந்தரமான நியதி இல்லை. ஆகவே அமருங்கள்.

(முற்பகல் 10-00)

(திரு. வி. கே. கோதண்டராமன் நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமன் அவர்கள் நான் எந்த அளவுக்குப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டிருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தாங்கள் தயவு செய்து அருள்கூர்ந்து உட்காருங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சட்டப்படி பிரச்சினையை எழுப்பவில்லை. தயவு செய்து அமருங்கள். நான் அனுமதி கொடுத்தால்தான் நீங்கள் கேள்வி கேட்க முடியும். இல்லையென்றால் அமரவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** * *

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதையே தாங்கள் குறை சொன்னால் எப்படி? உட்காருங்கள்.

THE HON. THIRU G. R. EDMUND : Whatever it may be, the hon. Member cannot atribute aspersions to the ruling given by the Chair.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் இந்த இடத்தின் மதிப்பை அறிந்து பேசுவதாகத் தெரியவில்லை. நண்பர்கள் பேசுவது போல் பேசிக்கொள்ளும் இடமல்ல இது. அனுபவம் உள்ள உறுப்பினரான தாங்களே இப்படிப் பேசினால் எப்படி? மற்றவர்களைப் பற்றிச் சுட்டிக்காட்டுகிறீர்கள். அதனால் தாங்கள் சொல்லுகின்ற வார்த்தை அதைவிடத் தவறாக இருக்கிறது. * தாங்கள் தற்போது சொன்ன வார்த்தைகள் போதாதா? என்னுடைய தீர்ப்பைக் களங்கப்படுத்தக்கூடிய அளவுக்குப் பேசினார்கள். அவ்வாறு களங்கப்படுத்தக் கூடாது.

(திரு. கோதண்டராமன் நின்று கொண்டு பேசிக் கொண்டே இருந்தார்).

தாங்கள் வேண்டுமென்றே பேசுகிறீர்கள். தெரிந்து பேசுகிறீர்கள். * * * என்று சொல்லுகிற அளவுக்கு உறுப்பினராகத் தாங்கள் இருப்பீர்கள் என்று நான் நம்பவில்லை. தயவு செய்து ஒத்துழைப்பு தாருங்கள்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு தீர்ப்பை அளித்த பிறகு அந்தத் தீர்ப்பைப் பற்றி யாரும் குறை சொல்லக் கூடாது என்று விதி முறைகள் இருக்கின்றன. தங்கள் தீர்ப்பே இறுதி முடிவு. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * என்று சொன்ன வாசகங்களைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதால் நானும் சொல்ல விரும்புகிறேன். தீர்ப்பு என்ன பிரச்சினை இருக்கிறதா என்பது ஒரு கேள்வி. கேள்வி கொடுத்த உறுப்பினர் இரண்டு கேள்விகள் கேட்கலாம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

THE HON. THIRU G. R. EDMUND: No, that does not arise, once the Chair has given the ruling.

THIRU R. UMANATH: No, that is not a ruling.

THE HON. THIRU G. R. EDMUND: No.

THIRU R. UMANATH: The Hon. Minister cannot shout.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு உமாநாத் அவர்கள் அமைச்சர் அவர்கள் முடிப்பதற்கு முன்னால் எழுந்தது தப்பு. அவ்வாறு எழுந்து பேசுவது சரியல்ல.

**திரு. ரா. உமாநாத்:** நான் எழுந்து பேசிக் கொண்டிருக்கும் போதுதான் அமைச்சர் அவர்கள் குறுக்கே எழுந்து சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் உட்காருவதற்கு முன்னால் தாங்கள் எழுந்து பேசியிருக்கக் கூடாது. இரண்டாவது, கேள்வி கொடுத்த உறுப்பினருக்கு இரண்டு கேள்விகள் கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று விதி எங்கே இருக்கிறது என்று காட்டுங்கள்.

THIRU R. UMANATH: It is a convention both in this House as well as in Lok Sabha.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எங்கோ போகிறீர்கள். நானும் 15 வருஷமாக உறுப்பினராக இருக்கிறேன். எனக்கும் கன்வென்ஷன் தெரியும். * * என்று சொல்லுகிறீரே. அது எந்த வகையிலே முறையானது?

**திரு. ரா. உமாநாத்:** நான் தங்கள் அறைக்கு வந்து பேசலாம் என்று இருந்தேன். இது கட்சிப் பிரச்சினை அல்ல. அவர் பேசிக் கொண்டிருந்த போது நான் உட்காரும்படி சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர், தீர்ப்பைப் பற்றி இப்படிச் சொல்லலாமா? * * * என்று சொல்லலாமா?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ரா. உமாநாத்:** தீர்ப்பைப் பற்றி குவெஸ்டியன் பண்ணக் கூடாது என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் அதைத் தான் எடுத்துக் காட்டினார்கள். * * என்று சொல்லுவதெல்லாம் ரெக்கார்டில் இருக்க வேண்டுமா?

**திரு. ரா. உமாநாத்:** இதை ரெக்கார்டில் இருந்து ரிமூவ் பண்ணுவதாக இருந்தால் இந்த செஷனிலும், இதற்கு முந்திய செஷனிலும் அந்த மாதிரி குவெஸ்டியன் பண்ணியது பூராவும் எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்புப் பற்றிச் சொன்னது சரியானதல்ல. தீர்ப்புக்குப் பிறகு கூறியதும் மறுபடியும் ஆர்க்யூ பண்ணியதும் சரியல்ல.

**திரு. ரா. உமாநாத்:** இன்று அதை நீங்கள் ரிமூவ் பண்ணினால் இதுமாதிரி இந்த செஷனிலேயும் போன செஷனிலேயும் வந்திருப்பதையும் ரிமூவ் பண்ண வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நீக்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இனிமேல் யாராய் இருந்தாலும் இப்படித்தான் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். திரு. உமாநாத் கவனிக்க வேண்டும்.

Any member when called upon by the Speaker may ask a supplementary question arising out of the main question and answer thereto for the purpose of further elucidating any matter of fact. Asking of supplementary questions by members who have not been called by the Chair has been deprecated. No member can claim the right to be called to ask a supplementary with respect to a particular question.

என்று பெர்பெக்ட் ரூலிங் இருக்கிறது. கன்வென்ஷன் அல்ல. ஆகவே தயவுசெய்து இதைப் பெரிதாக்க வேண்டாம்.

**திரு. ரா. உமாநாத்:** அப்படியே இருக்கட்டும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. ரா. மார்க்கபந்து :** I would like to raise a point of order. அவையிலே சபாநாயகர் தீர்ப்புக்குப் பிறகு, அந்தத் தீர்ப்பு சரியல்ல என்று வாதிப்பது இந்த அவையில் தரப்படுகிற தீர்ப்புகளுக்கு என்றைக்குமே மரியாதை இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்போது கேள்வி நேரத்திற்கு 1 மணி நேரம்தான் ஒதுக்கப்படுகிறது. இன்றைக்கு 30 கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. இதிலே பல அமைச்சர்களின் கேள்விகள் உள்ளடக்கியிருக்கிறது. இன்றைக்கு இந்த ஒரு மணி நேரத்திலே 10 கேள்விகள் தான் பதிலளிக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கேள்விகளிலே பல முக்கியமான விஷயங்கள், குறிப்புகள் இருக்கின்றன, சரியான விளக்கம் பெற முடியாத நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலையில் பாக்கியுள்ள கேள்விகளை விட்டுவிட்டு நாளைக்கு அடுத்த நாளைக்கு உள்ள கேள்விகளை எடுத்துக் கொண்டே போனால் நாளைக்கு வருகிற கேள்விகளைப் பற்றித்தான் உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்க முடியுமே தவிர, இன்றைக்கு எடுக்கப்படாமல் விடப்பட்ட கேள்விகளைப் பற்றிக் கேட்க முடியாது. அது மட்டும் அல்ல, கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் முழுத் தகவல்களைப் பெற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, ஒரு நாளைக்கு எடுக்கப்பட்ட கேள்விகளை மறுநாளைக்கும் வைத்து கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்க வேண்டும். இங்கே கேள்விகளில் பார்த்தால் ஒவ்வொரு அமைச்சரும் பதில் சொல்லக்கூடிய முறையில் கேள்விகள் அமைக்கப்படவில்லை, சில அமைச்சர் களுக்குத்தான் வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி யில்லாமல் எல்லா அமைச்சர்களுக்கும் வாய்ப்பு ஏற்படும்படி கேள்விகளைப் போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய பேரவை விதி 35 (4)லே

"All starred questions which are not called and all unstarred questions with their answers shall be included in the printed proceedings of the Assembly",

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பேரவை விதிகளோடு நான் போக வேண்டும். ஒத்துழைக்காவிட்டால் 10 கேள்வி களுக்கு அனுமதித்து 20 கேள்விகளுக்கான பதில்களை வீட்டுக்குத் தான் அனுப்ப முடியும்.





**திரு. ரா. மார்க்கபந்து :** கேள்விகளை எல்லா அமைச்சர் களுக்கும் பகிர்ந்து கொடுக்கக்கூடிய முறையிலே போட வேண்டும். ஒரே அமைச்சருக்கு நான்கு கேள்விகள் போட்டு அவரே அதிகமான நேரத்தினை எடுத்துக் கொள்வதால் மற்ற அமைச்சர் களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி உட்காருங்கள். திரு. கோதண்டராமன் அவர்கள் தீர்ப்பு பற்றிச் சொன்ன கருத்துக்களை அப்படியே நீக்க வேண்டுமென்று ஆணையிடு கிறேன்.

## வடசென்னையில் புதிய கலைக் கல்லூரி.

*103. வினா—திரு. அ. செல்வராஜன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடசென்னையில் ஆண்கள் கலைக் கல்லூரி துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விடையளிக்கப் பெறாது இருக்கிற 104 முதல் 120 வரை உள்ள வினாக்களுக்கான விடைகள் விதி 35 (4)-ன் படி நடவடிக்கைக் குறிப்பில் அச்சடிக்கப்பெறும்.

## வடசென்னை தொழிற் பயிற்சிப் பள்ளி.

*104. வினா—திரு. அ. செல்வராஜன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தற்போது இயங்கிவரும் வடசென்னை தொழிற் பயிற்சி நிலையத்தை ( I. T. I. ) மேம்படுத்தி மேலும் பல புதிய பிரிவுகளை (Course) கற்பிக்க திட்டம் உள்ளதா ?

**விடை :** இல்லை.

## மாவட்ட நூல் நிலையங்கள்.

*105. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாவட்ட நூல் நிலையங்களின் நிதிப் பற்றாக்குறையைப் போக்க அரசு முயற்சி ஏதேனும் மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் விபரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட நூல் நிலைய ஆணைக்குழுக்களின் அதிகமாகிக் கொண்டு வருகிற அன்றாட நிர்வாக மற்றும் இதர செலவுகளைக் கருத்திற்கொண்டு ஒரு ரூபாய்க்கு மூன்று பைசா என்றிருந்த நூலக வரியை ஒரு ரூபாய்க்கு ஐந்து பைசா என அரசு அதிகரித்து அரசாணை 1972-ல் பிறப்பித்துள்ளது.

*106. வினா—திரு. த. புஸ்பராஜ்:
திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திற்கென மாவட்ட நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது இயங்கிவரும் நூலக ஆணைக்குழு என்ற அமைப்பைக் களைந்து அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற நூலக சீரமைப்புக் குழுவின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இதன்மீது இறுதி முடிவு எடுத்தபின் புதுக்கோட்டை மாவட்டத்திற்கென தனியாக நூலக ஆணைக்குழு ஏற்படுத்துவது பற்றி கவனிக்கப்படும்.





*107. வினா—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு பொது நூலகத் துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக எடுத்துக்கொள்ள நூலக சீரமைப்புக் குழுவும் மதிப்பீட்டுக் குழுவும் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பரிந்துரையை நிதித் துறை மற்றும் சட்டத் துறைகளைக் கலந்து தக்க ஆணைகளை அரசு விரைவில் வெளியிடும்.

## வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள்.

*108. வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) 1974 முதல் 1977 மார்ச் முடிய வட ஆற்காடு மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் புதிய கட்டடங்கள், விஞ்ஞானக் கூடங்கள் முறையே எத்தனை கட்டப்பட்டன?

(ஆ) மதிப்பீடுகள் போட்டு அனுமதிக்கப்படாமல் இருக்கும் கட்டடங்கள் எத்தனை?

விடை—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான வகுப்பறைக் கட்டிடங்கள் 12-ம், அறிவியல் கூடங்கள் 11-ம் கட்டப்பட்டன.

(ஆ) பள்ளிக்கொண்டா, இரும்பேடு, சுந்தரம் பள்ளி, இராணிப்பேட்டை மற்றும் வளர்புரம் ஆகிய ஐந்து இடங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு மதிப்பீடுகள் பெற்று ஆய்வில் உள்ளன.

[1977 டிசம்பர் 31

### தமிழ் ஆசிரியர் பயிற்சி.

*109. வினா—திரு. ச. அரங்கசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் மொழியில் புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர், ஆசிரியைகள் ஆசிரியர் பயிற்சிக்கு பல ஆண்டுகளாக விண்ணப்பங்கள் செய்தும் இடம் கிடைக்காமல் இருப்பது இவ்வரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ் பண்டிட் பயிற்சி, பள்ளிகளில் தமிழாசிரியர் தேவையை முன்னிட்டு, வருடத்திற்கு இருமுறையாக மொத்தம் 460 ஆசிரியர்களுக்கு முறையே 230 வீதம் நடத்தப்படுவதாகும். தேவைக்கு அதிகமான தமிழ் பண்டிதர்கள் இருப்பதனால் தமிழ் மொழியில் புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர் ஆசிரியைகள் பயிற்சிக்கு இடங்களை கூட்டுவதற்கு உத்தேசம் ஏதும் இல்லை.

### புறக்கல்வி கேந்திரங்கள்.

*110. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநிலத்தின் எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் புறக்கல்வி கேந்திரம் துவக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் யாவை?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப் பள்ளிசாராக் கல்வி மையங்களில் தங்களது வறுமை காரணமாகவோ அல்லது சூழ்நிலை காரணமாகவோ தங்களது படிப்பைப் பாதியிலேயே அல்லது படிப்பறிவே



1977 டிசம்பர் 31]

பெறாமல் இருக்கும் 6—11, 11—14 வயது வரம்பிற்குட்பட்ட சிறார்களுக்குப் படிப்பறிவு புகட்டுவதற்கென இம்மையங்கள் தொடங்கப் பெற்றன. இம்மையங்கள் அமையப்பெற்றுள்ள பகுதியில் வசிக்கும் சிறார்களுக்கு எந்த நேரத்தில் அவர்களால் பள்ளிக்கு வர ஏதுவாகுமோ அதற்குத் தக்கவாறு அந்நேரத்தில் இம்மையங்கள் இயங்குகின்றன. இம்மையம் அமையப்பெற்றுள்ள பகுதியில் மாணவர்களுக்கு எழுத்தறிவு அமையும் வகையில் செயல்முறை கல்வித் திட்டங்கள் (Functional Literacy) வகுக்கப்பட்டு ஊக்கமளிக்கும் வகையில் கல்வி பயிற்றுவிக்கப் படுகிறது.

### குடிநீர் வழங்கு வாரியத்தால் வழங்கப்படும் பம்பு செட்டுகள்.

*111. வினா—திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் வடிகால் வாரியத்தில் வழங்கப்படுகிற மின்சார மோட்டார் பம்பு செட்டுகளில் பல தண்ணீர் எடுக்கப் பயன்படாமல் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மேற்படி வாரியப் பொறியாளருக்கு நிலத்தடி நீரில் நல்ல தண்ணீரைக் கண்டுபிடிக்கவும் பம்பு செட்டுகளைப் பழுது பார்ப்பதற்கும் தனிப்பயிற்சி அளிக்கப்படுமா?

விடை—

(அ) பழுதடைந்துள்ள மின்சார மோட்டார் பம்பு செட்டுகளின் பராமரிப்பு குறித்த திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) தனிப்பயிற்சிக்கு அவசியம் இல்லை.

### குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*112. வினா—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சியில் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் அனுமதிக்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அனுமதி வழங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) குடிநீர் திட்டத்திற்காக ஆகும் செலவினை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு பேரூராட்சியின் நிதிநிலைமை சீரடைந்தால் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்படும்.

*113. வினா—திரு. துரை முருகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடியில் நடைபெற்றுவரும் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் பூர்த்தியாகிவிட்டதா?

(ஆ) இல்லை எனில், காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

விடை—

(அ) இல்லை.

(ஆ) காலதாமதத்திற்கான முக்கியக் காரணங்கள்—

(i) முதலில் நியமிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் வேலைகளைச் சரிவரச் செய்யாமல் காலம் கடத்தியதால் மறுபடியும் ஒப்பந்தக்காரர்கள் பெறப்பட்டு, புதிய ஒப்பந்தக்காரர்கள் வசம் வேலை விடப்பட்டது.

(ii) குழாய் பதித்தல், மின் இணைப்பு பெறுதல் போன்ற வேலைகளுக்குப் பிற துறைகளின் ஒப்புதல் மற்றும் அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டது.

*114. வினா—திரு. அ. க. அரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகருக்கு குடி தண்ணீர் வழங்குவது குறித்த கீழ்மொனவூர் நீர் திட்டம் எப்போது எந்நிலையிலுள்ளது?

(ஆ) எப்பொழுது அந்த திட்டம் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும்?



விடை—

(அ) வேலூர் நகருக்குக் குடிநீர் வழங்குவது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட கீழ்மொனவூர் திட்டத்திற்கு அரசு 27-9-1977ல் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) இத்திட்டம் நடப்பு ஆண்டு 1977-78-ல் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டது.

## வியாசர்பாடியில் பர்மா தமிழர்களுக்கு வீடுகள்.

*115. திரு. சு. பாலன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை வியாசர்பாடியில் பர்மா தமிழர்கள் வாழும் பகுதியில் அவர்களுக்கு தனி வீடு கட்டித்தர திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

விடை—

ஆம். சென்னை வியாசர்பாடியில் பர்மா தமிழர்கள் வாழும் பகுதியில் அவர்களுக்கு அகதிகள் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித்தரத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இலங்கை அகதிகள் மறு வாழ்வு.

*116. வினா—திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமதி பண்டாரநாயகா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி தமிழகத்தில் இதுவரை குடியமர்த்தப்பட்ட இலங்கை அகதிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் முன்னேற்றத்திற்கு என்ன திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது?

விடை—

(அ) இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி 30-9-1977 முடிய 64,241 குடும்பங்களைச் சார்ந்த 2,66,951 இலங்கை அகதிகள் தமிழ்நாட்டில் குடியேறியுள்ளனர்.

(ஆ) இலங்கை அகதிகளின் மறுவாழ்வுக்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் :—

1. சிறு வியாபாரங்களில் குடியமர்த்துதல் மற்றும் வணிகக் கடன் வழங்குதல்.
2. நிலக் காலனித் திட்டங்களில் குடியமர்த்துதல்.
3. தோட்டப் பயிர்ச் செய்கைத் திட்டங்களில் குடியமர்த்துதல்.
4. தொழில் துறைத் திட்டங்களில் குடியமர்த்துதல் (கூட்டுறவு நூற்பு ஆலைகள்).
5. அரசு வேளாண்மைப் பண்ணைத் திட்டங்களில் குடியமர்த்துதல்.
6. வேளாண்மைக்குரிய தனியார் நிலங்களை வாங்கித் தருதல்.
7. வேலைவாய்ப்பு உதவிகள் அளித்தல்.

*Officers of Veterinary Department in Madras City.*

* 117 Q.—THIRU A. P. PALANIAPPAN : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(a) the number of Gazetted Officers in the Veterinary Department and also the Ministerial staff who are in Madras City for more than three years;

(b) the reasons therefor; and

(c) whether any action has been taken by the Government to transfer them to Mufussil Offices?



விடை—

(அ) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள்—7
அமைச்சுப் பணியாளர்கள்—62.

(ஆ) மற்றும் (இ) சென்னை மாநகரத்தில் பணிபுரியும் ஏழு அரசு இதழ் பதிவுபெற்ற அலுவலர் பதவிகளில், இரண்டு பதவிகளுக்கு நிகரான பதவி வெளியிடங்களில் இல்லை. மற்றும் இரண்டு அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்களை சென்னை மாநகருக்கு வெளியே மாற்ற முடியும் என்றாலும், தற்போது இருப்பவர்களுக்கு பதிலாக பதவி வகிக்க தகுதி பெற்றவர்கள் இல்லை. மீதமுள்ள மூன்று பதவிகளைப் பொறுத்தவரையில், அப்பதவியில் உள்ளவர்கள் சென்னை மாநகரத்திலேயே நிர்வாகத் தேவைகளின் பேரில் தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர், அவர்களை வெளியிடங்களுக்கு மாற்றுவது பற்றி இக்கல்வியாண்டின் முடிவில் ஆலோசிக்கப்படும். அமைச்சுப் பணியாளர்களைப் பொறுத்தவரை மாறுதல் தொடர்பான விதிகள் இதே கண்டிப்புடன் பின்பற்றப்படுவதில்லை. இருப்பினும் நிர்வாக வசதியை முன்னிட்டு அவசியம் ஏற்படும்போதும், தனிப்பட்ட கோரிக்கையின் பேரிலும், அமைச்சுப் பணியாளர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்படுகின்றனர்.

**வெளிமாநிலங்களுக்குக் கால்நடைகள் கொண்டுசெல்லல்.**

* 118. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலிருந்து கால் நடைகள் கேரளத்துக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

விடை—

இம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு கால்நடைகள் கொண்டு செல்லப்படுவதை கட்டுப்படுத்துவதற்காக சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு கால்நடை மேம்பாடு மற்றும் தொடர்புடைய எல்லா அம்சங்களையும் கருத்திற் கொண்டு ஆலோசித்து புதிய செயற்குறிப்புகள் ஏதேனும் இருப்பின் அனுப்புமாறு தெரிவித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1977, டிசம்பர்

**கூக்கல் துறையில் நீர்த்தேக்கம்.**

* 119 வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் தொகுதியைச் சேர்ந்த கூக்கல் துறையில் ஒரு நீர்தேக்கம் கட்டத் திட்டமிடப்பட்டு ஆரம்ப வேலைகள் நடைபெற்றும், திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்பது உண்மையா ?

விடை

நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூக்கல்துறை ஹல்லாவின் குறுக்கே ஒரு நீர் தடுப்பு அணை கட்ட திட்டமிடப்பட்டு ரூ. 2.5 லட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

**மலைவாழையில் முடிக்கொத்து நோய்த் தடுப்பு**

* 120 வினா—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் உற்பத்தியாகும் மலைவாழைக்கு முடிக்கொத்து நோய் ஏற்பட்டு மலைவாழை விவசாயிகள் தொல்லைப்படுவது இந்த அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துக் கொண்ட நிவாரணப் பணிகள் யாவை ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செயல்விளக்கப் பாத்திகள் வாயிலாக இந்நோயி னின்றும் விடுபடுவதற்கான வழி முறைகளை விவசாயிகளுக்கு விளக்கி கொடைக்கானல், மணலூர், பாச்சலூர் ஆகிய இடங் களைச் சார்ந்த பகுதியில் 500 ஏக்கர் பரப்பளவில், 1976-ஆம் ஆண்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக மேலும் 10,000 ஏக்கர் பரப்பளவில் முடிக்கொத்து



7 டிசம்பர் 31]

நோய் தடுப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. இந்நோய் மேலும் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து இத்திட்டம்—மலைவாழை பயிரிடப்படும் மொத்தம் 36,000 ஏக்கர் பரப்பளவுக்கும் பயன்படும் வகையில் சிறிய, மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு உதவித் தொகையுடன் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

**3. தகவல் கோரல்.**

**(அ) சட்ட மன்ற நிகழ்ச்சிகளை தொலைக் காட்சியில் இடம் பெறச் செய்தல் குறித்து**

திரு. ரா. உமாநாத்: சார், நான் ஒரு பிரிவிலேஜ் மேட்டர் கொடுத்து இருக்கிறேன். . . .

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தமிழக சட்ட மன்றத்தினுடைய நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளிலே மக்கள் பார்க்கிறார்கள். தொலைக் காட்சியின் மூலம் தமிழ்நாடு சட்ட மன்றத்தின் நிகழ்ச்சிகளை மக்கள் காணுகின்ற வகையில் தாங்கள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

[முற்பகல் 10-10]

கனடா நாட்டில் இப்படிப்பட்ட முறை இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் எந்த முறையிலே நடந்து கொள்கிறார்கள் என்று மக்கள் கண்டு மகிழும் வகையில் தொலைக்காட்சியில் இடம் பெறுவதற்கு சபாநாயகர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) அறிவிப்புக் கொடுத்துள்ள உரிமைப்பிரச்சினைக் குறித்து.

**திரு. ரா. உமாநாத்:** சார், நான் பிரிவிலேஜ் மோஷன் ரெய்ஸ் செய்திருக்கிறேன். பி.டபிள்யூ.டி. அமைச்சர் இராமச்சந்திரன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உமாநாத் அவர்கள் காலை 8-45 மணிக்கு என்னிடம் தந்தார்கள். அதைப்பற்றி அமைச்சரிடம் கேட்டு, குறிப்பெடுத்து, அனுமதிப்பதா, வேண்டாமா என்று அறிய இருக்கிறேன். (குறுக்கீடு) அனுமதிக்கிறேன், அது இரண்டாம் விஷயம். இவ்வாறு கொடுத்ததற்குப் பிறகு உடனடியாக எழுந்து நின்று நீங்கள் அதற்கு என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டால் என்ன செய்வது? அமைச்சரிடம் அணுகி பதில் சொல்கிறேன். இதைப்பற்றி நீங்கள் அறையிலே வந்து கேளுங்கள். அதை விட்டு, நான் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்து விட்டேன், இப்பொழுது சொல்லித்தான் ஆக வேண்டுமென்று சொன்னால் அது எந்த அடிப்படையில் என்று தெரியவில்லை. பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தது என்ன ஆயிற்று என்று கேட்கின்ற அளவிலே வேண்டுமானால் அமையலாம், ஆனால் அந்தக் கருத்துக்குள்ளே போகவேண்டாம். இதுபற்றி அறையிலே வந்து கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** பிரிவிலேஜ் மோஷன் சாதாரணமாகக் கொடுக்கும்பொழுது நீங்கள் டைம் கேட்பதில் ஆட்சேபணை இல்லை. These are all obvious facts அமைச்சர் இராமச்சந்திரன் அவர்களும் அங்கே இருந்தார்கள். உங்களுக்கு அவரைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் அங்கே இருந்தது. ஆகவே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே வருவதற்குத்தான் எனக்குச் சந்தர்ப்பம் இருந்தது. 8.58 மணிக்கு அவைக்கு வருவதற்குத் தான் சந்தர்ப்பம் இருந்தது. அவரோடு பேசுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை.

**திரு. ரா. உமாநாத்:** கால் அட்டென்ஷன் நோட்டீஸ் ஏற்கனவே போயிற்று. அதனால் ஹவுசினுடைய ரைட் போய் விட்டது. ஏனென்றால், நாளைக்கு வைத்தால் என்ன ஆகும்? இன்றைக்குத் தேதி 31. நாளைக்கு சண்டே. இதனால் எங்களுக்கு ஏற்படுகின்ற சிக்கலையும் பார்க்க வேண்டும். நேரம்





ஹவுசினுடைய ரைட்டும் போயிற்று, ஆப்போசிஷன் பார்ட்டிகளுடைய ரைட் போயிற்று. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நேற்றைக்கு இந்தப் பிரச்னையைக் கிளப்பினார்கள், எல்லா பார்ட்டிகளும் கிளப்பினோம். இப்பொழுது கால் அட்டென்ஷன் ரத்தாகிவிட்டது. நாளைக்கு சண்டே. நாளைக்கு மறுநாள் என்று சொன்னால் மறுபடியும் டிலே ஆகிறது. இதனால் விஷயம் செத்துப் போகும். எனவே, தயவுசெய்து இன்றைக்கு இதை அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, படியுங்கள்.

**திரு. ரா. உமாநாத்:** நான் இதைச் சொல்லும்பொழுது ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கனம் அமைச்சர் மீது பர்சனல் அனிமாசிட்டி எனக்கு இல்லை. ஆனால் இந்தச் சபையில் கட்சி வித்தியாசமின்றி எல்லா அங்கத்தினர்கள் ரைட்ஸ் சம்பந்தப்பட்ட பிரச்னையாக இருப்பதால்தான் கிளப்புகிறேன். ஒரு அட்ஜர்ன்மெண்ட் மோஷனை அந்த எஞ்சினியர்களின் ஹங்கர் ஸ்டிரைக் சம்பந்தமாக. . .

### 2. ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

### (ஆ) விடையளிக்கப்படாத வினாக்களை மறுநாளைக்கு ஒத்தி வைத்து துணை வினாக்கள் கேட்க வாய்ப்பளிப்பது குறித்து.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே பிரச்னை மீதா?

**திரு. எம். ஏ. லத்தீப்:**
Before taking up the privilege motion, I would like to make a submission regarding the questions to be included and to be excluded.

Mr. Speaker, Sir, on a point of order.
இந்தக் கேள்வி நேரம் நடைபெறுவதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஒரு கேள்விக்கான பதிலைச் சேகரிப்பதற்கு எவ்வளவு செலவாகிறது என்பதை அவைத் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் நன்கு

அறிவார்கள். கேள்விகள் சேர்க்கப்பட்ட பிறகு 10 கேள்விகளுக்கு முதலிலே மூன்று அமைச்சர்கள் மட்டும் பதில் சொல்லிவிட்டு, பிறகு உள்ள முக்கியமான கேள்விகளுக்குப் பதில் தயாராக வைத்திருந்தும், மற்ற அமைச்சர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல், நாங்களும் துணைக் கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்பில்லாமல் செய்வது என்பது. இவ்வளவு செலவு செய்து இந்த அவையைக் கூட்டுவதற்கு அர்த்தமில்லாமல் போகிறது. ஆகவே, கேள்விகள் போதிய அளவிற்கு ஒரு மணிக்குள் முடிக்கப்படாவிட்டால், அப்படி விடையளிக்கப்படாத கேள்விகளை மறுநாள் அதற்கு முன்னுரிமை கொடுத்து முதலில் அவைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் இவ்வளவு செலவு செய்து அவையைக் கூட்டுவதில் அர்த்தமில்லை. இந்த முறையை தயவுசெய்து கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நண்பர் லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல ஒவ்வொரு நாளும் கேள்விகள் அரைகுறையாக முடிவுற்று, எஞ்சியுள்ள கேள்விகள் மறுநாள் எடுக்கப்படாமலேயே போவதற்குப் பதிலாக எஞ்சியுள்ள கேள்விகளை மறுநாள் தொடர் கேள்விகளாக எடுத்துக் கொண்டால் அமைச்சர்கள் பதில் அளிக்கவும், பல விஷயங்களை உறுப்பினர்கள் அறிந்துகொள்ளவும் வாய்ப்புகள் ஏற்படும். எனவே, லத்தீப் அவர்கள் சொன்னதை முழுமனத்தோடு ஆதரிக்கிறேன். இதைத் தலைவரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மாலை அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுகிறேன். நீங்கள் அனைவரும் எதை முடிவெடுத்துச் சொன்னாலும் நான் கடைபிடிக்கத் தயார். ஆரம்ப நாளிலேயே நான் கேட்டேன், மறுநாள் வருகிற கேள்விகளைத் தள்ளி போட்டோமானால், அவை நின்று போகுமே என்று கேட்டபொழுது, மறு நாள் கேள்விகளைத் தள்ள வேண்டாம். அவை வரட்டும். ஏற்கனவே எடுத்துக்கொள்ளப் படாததை பிரின்டட் புரசீடிங்கில் வரட்டும் என்று நீங்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொண்டு, அவ்விதமே எடுத்துக் கொண்டு வருகிறேன். இப்பொழுது அலுவல் ஆய்வுக் குழுவில்





முடிவெடுத்துக் தாருங்கள். அங்கே கேள்வி நேரம் இன்னும் ½ மணி நேரம் வேண்டுமென்று முடிவெடுத்து, 1½ மணி நேரம் என்று சொன்னாலும் அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் முடிவு செய்யுங்கள். அதை ஏற்றுக்கொண்டு, கடைப் பிடிக்கத் தயாராக இருக்கிறேன்.

## (3) தகவல் கோரல் (தொடர்ச்சி)

### (இ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கை குறித்து.

**திரு. மு. கருணாநிதி:** ஆன் எ பாய்ன்ட் ஆப் இன்பர்மேஷன். மிசா கைதிகளாகச் சென்னை சிறைச்சாலையிலே அடைப்பட்டிருந்தவர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்ற அடிப்படையில் மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களால் அமைக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன் அறிக்கை இந்த அவையில் வைக்கப் படவில்லை. அது எப்பொழுது வைக்கப்படும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அது ஆளுநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அது இந்த அவையிலே வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. உரிமைப் பிரச்சினை.

பொதுப்பணித் துறை பொறியாளர்கள் உண்ணாவிரதத்தை நீக்க அரசு எடுத்த முயற்சிகள் குறித்து. முதலில் பேரவைக்கு அறிவிக்காதது குறித்து.

**திரு. ரா. உமாநாத்:** உண்ணாவிரதம் இருந்த அந்த இன்ஜினீயர்களைப் பற்றி ஒரு அட்ஜார்ன்மென்ட் மோஷன் கொடுக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும். அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னபோது, அட்ஜார்ன்மென்ட் மோஷனை, கால் அட்டென்ஷன்-ஆக மாற்றினீர்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. நேற்று காலை, தொடர்ச்சியான உண்ணாவிரதம் நடக்கிறது, ஆபத்து ஏற்பட்டிருக்கிறது; ஆகவே, அதை

[திரு. ரா. உமாநாத்] [1977 டிசம்பர் 31

அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்பொழுது நேராக விஷயம் வந்திருக்கிறது.

அரசாங்கம் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முன் வந்ததாகவும், அவர்கள் இந்த உண்ணுவிரதத்தைக் கைவிடுவதற்காக, வேண்டிக்கொள்வதற்கு நேற்று முடிவெடுத்ததாகவும், நடந்த சம்பவங்களில் இருந்து தெரிகிறது. அந்த நிலையில் அரசாங்கம் ஒரு கால் அட்டென்ஷன் இருக்கிறபொழுது, என்ன செய்து இருக்கவேண்டும்? உங்களிடம், இந்தக் கால் அட்டென்ஷனை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அதற்கு அந்தப் பதிலைச் சொல்லியிருந்தால் கூட பிரச்னை வந்திருக்காது. இன்றைக்கு மாலையிலோ, மத்தியானமோ, நாங்கள் அவர்களோடு பேச வேண்டியிருக்கும் என்று அந்த டெசிஷனையோ, புரப்போசலையோ, கால் அட்டென்ஷனை எடுத்துக் கொண்டு அரசாங்கம் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லுகிற பொழுது, எங்களுடைய ஸ்டான்ட் அப்படி, அவர்களுடைய ஸ்டான்ட் அப்படி இருக்கிறது. ஆனால், நாங்கள் பேச்சு வார்த்தைக்குத் தயார். அப்பீல் பண்ணுகிறோம் என்று சொல்லி இருந்தால், முறையாக இருந்திருக்கும். அப்படி இங்கு வந்து சொல்லி இருந்தால், சபையினுடைய அந்தஸ்தும் உயர்ந்திருக்கும், அங்கத்தினர்களுடைய அந்தஸ்தும் உயர்ந்திருக்கும். அதற்குப் பதிலாக, நேற்று பேச்சு வார்த்தை நடத்தி, புரப்போசல் எக்சிகியூட் பண்ணி, உங்களிடம்தான் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மற்றவர்களும் கிளப்பியபிறகு தான் உங்களிடம் சொன்னார்கள். அவராக வந்து சொல்லவில்லை. நீங்கள் இப்படித்தான் முறை என்று சொன்னால், நாங்கள்தான் எதற்கு? இந்தப் சபை எதற்கு? Crucial question comes up. It affects all of us. All will be affected.

இதை பார்ட்டி பிரச்னையாக எடுக்காதீர்கள். நீங்கள் நேற்றைக்குச் சொன்னீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன பொழுது, நீங்கள் சொன்னீர்கள். அது கால் அட்டென்ஷன் போல் புரபோசல் ஆகாது. கால் அட்டென்ஷன் என்றால் நாங்கள் கேள்வி கேட்கமுடியும். நீங்கள் சொன்னதற்கு உங்களிடம் கேள்வி கேட்க முடியுமா?



1977 டிசம்பர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவருக்கு ஒரு சந்தேகம். உயிர் ஊசலாடி வருகிற நேரத்திலே, காலம் விரயம் ஆகாமல் இருக்க வேண்டுமென்று பார்த்தது தவறு என்று சொல்கிறீர்களா?

**திரு. ரா. உமாநாத்:** நீங்கள் காலை நேரத்திலேயே, அமைச்சரிடத்திலே உயிர் ஊசலாடுகிறது. ஆகவே, you must reply, worst thing has happend என்று சொல்லியிருந்தால், அத்தனை பேரும் பாராட்டியிருப்போம். ஆகவே, நான் மெம்பர்ஸ் ரைட் சம்பந்தமாக சொல்லுகிறேன். நீங்கள் தகவல் கொடுக்கிறீர்கள், சந்தோஷப்படுகிறேன். ஆனால், உங்களிடம் கேள்வி கேட்கமுடியாது. இன்றைக்கு நடப்பதுதான் சீரியஸ் பிரிவிலெஜ். நேற்று சந்தித்து, நெகோஷியேட் பண்ணப் போகிறீர்கள், அப்பீல் பண்ணப் போகிறீர்கள். இந்தச் சபைக்கு அது சொல்லப்படவில்லை. ஆனால், ரேடியோவிலே பிரச்னை முடிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அந்த முடிவினுடைய சில டேர்ம்ஸ், அவர்களுக்கெல்லாம், வேலை கொடுக்க உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஹங்கர் ஸ்டிரைக் இருந்த காலம் லீவாகக் கருதப்படும் என்ற அவர்கள் பேச்சு வார்த்தைகளின் கருத்து, கவர்ன்மென்ட் ப்ரஸ் நோட் என்ற முறையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் சீரியஸ் பிரீச் ஆப் பிரிவிலெஜ். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். ஏற்கனவே, சொல்லிவிட்டு, மீண்டும் ஆரம்பிக்கிறீர்களே,

THIRU R. UMANATH: Please do not cut me short. This is a privilage motion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ½ மணி நேரத்திலும் சொல்லலாம். 5 நிமிஷத்திலும் சொல்லலாம். மற்ற பிரச்னைகள் வரப் போகின்றன; ஆகவே, சுருக்கமாகச் சொல்லுங்கள். நீங்கள் நேரம் எடுத்துக்கொள்வதில் எனக்கு ஒன்றுமில்லை. ஆனால், அவையின் அலுவல் 1½ மணியோடு முடிகிறது.

(முற்பகல் 10-20)

திரு. ரா. உமாநாத்: I am conscious of that. நான் மறுபடியும் முன் உதாரணம் காட்ட விரும்பவில்லை. உங்களுக்கும் கஷ்டம். you get a little bit embarrassed. நான் முடித்துக் கொள்கிறேன். நேற்றைக்குச் சொன்ன தகவலிலே டெசிஷன் பண்ணிவிட்டார்கள். இந்தச் சபையைப் பொறுத்த வரையிலும் அவர்கள் கிளப்பி இருக்கக்கூடிய பிரச்சினை இது.

Hunger-strike பேரிலே கொடுத்திருக்கிற பிரிவிலேஜ் மோஷனை—அது சம்பந்தமாக எந்த முடிவு எடுக்கப்பட்டாலும் இந்த சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதுதான் விதிப்படி எங்கள் உரிமை. அதை ரெய்ஸ் பண்ணி இருப்பது அங்கத்தினர்களுடைய உரிமை. நீங்கள் அதை அட்மிட் பண்ணி இருக்கிறபோது சபையை மதிக்காமல், கொடுத்த அங்கத்தினர்களை மதிக்காமல் நேரே ரேடியோவிற்குக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, This is a grave disrespect and breach of privilege of the House

ஆகவே இதுதான் முடிவு என்று தெளிவாகிவிட்டது. காலையிலே தங்களிடம் பேசினபோது முடிவு எடுத்தாகிவிட்டது, முடிந்து விட்டது என்று சொன்னீர்கள். என்னுடைய கால் அட்டன்ஷன் defunct ஆகிவிட்டது. எங்களுடைய கால் அட்டன்ஷன் ரைட் போய்விட்டது என்று அறிகிறோம். இதுதான் கவர்ன்மெண்டு முடிவு என்றால், கால் அட்டன்ஷன் புரொஸீஜரை ஸ்கிராப் பண்ணவேண்டும். நாங்கள் இந்த சபையிலே எங்களுடைய கடமைகளை ஆற்றுவதற்குத் தடையாக இருக்கும் இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்ற அச்சம் எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அதை முடித்து விடுங்கள். நிறைய நேரம் போகிறது. Breach of privilege என்று சொன்னீர்கள். அதைச் சொல்வதற்கு இவ்வளவு நேரம் வேண்டுமா.



திரு. ரா. உமாநாத்: கோபித்துக் கொள்வதில் பிரயோஜனம் இல்லை. கேள்வி நேரத்தில் 3 பேர்களுக்குக் கிட்டத்தட்ட பிரசங்கம் செய்யக்கூடிய அளவுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அப்ஜக்ட் பண்ணவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் அதையே சொல்கிறீர்களே? சப்ஜெக்ட்டுக்கு வாங்க.

திரு. ரா. உமாநாத்: நான் ஒரு பிரைமா பேசி கேஸ் பில்டு பண்ணவேண்டும். அப்போதுதான் நீங்கள் டெசிஷன் கொடுக்க முடியும். எங்கள் ரைட்-ஆப் கால் அட்டன்ஷன்-ஐ தடுப்பதற்கு உணர்வு பூர்வமாக செய்யப்பட்டதா என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் நேற்று மாலையிலே உங்களிடத்தில் தெரிவித்த அப்போதே ஆட்சேபணை தெரிவித்தோம். அது சர்க்காருக்குத் தெரியும். தெரிந்த பிறகு முடிவு என்று வந்த பிறகு, நேற்றே ஆட்சேபணை கிளப்பி இருக்கிறார்களே, கால் அட்டன்ஷன் மீது முடிவு செய்யலாம், பிரஸ்லே வெளியிடாமல் இருப்போம் என்று மினிஸ்டிரியைப் பொறுத்த வரையிலே முடிவிற்கு வந்திருப்பார்களேயானால் நன்றாக இருக்கும். ஆகவே, இந்த மாதிரி பிரச்சினையைக் கிளப்பி இருக்கிற சபை அங்கத்தினர்களுக்குக் கிரெடிட் கிடைக்காமல் போகட்டும், சபைக்குக் கிரெடிட் கிடைக்காமல் போகட்டும் என்ற முறையிலே செய்யப்பட்டிருக்கிறதோ என்கின்ற அச்சம். The general parliamentary principle is the government must give maximum information excepting those which cannot be revealed in public interest. But here I find a small trend developing viz., withholding maximum information. அந்த டிரெண்டு இருக்கிறது. இதிலே இந்த ஹவுஸ் பிரிவிலேஜ், மெம்பர்ஸ் பிரிவிலேஜ் போகிறது என்பதற்காக இதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. ஜே. ஜேம்ஸ் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த விதியின் கீழ் எழுந்திருக்கிறீர்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** Point of order, connected with that, சொல்லும்போதே உங்களுக்குப் புரியும். பிரிவிலேஜ் மோஷன் அவையிலே எழுப்புவதற்கு விதிகள் இருக்கின்றன. ஆகவே, இந்த அவையில் இப்போது எழுந்துள்ள நிலைமையை ஒட்டி நான் எனது பிரிவிலேஜ் மோஷனை முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் ஜேம்ஸ் அவர்களே, அவர்கள் கொண்டு வந்த பிரச்னையில் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். பிரிவிலேஜ் வரலாமா, வரக் கூடாது என்று, விவாதிக்க அவருக்குத்தான் உரிமை உண்டு. நீங்கள் அதிலே நுழைவது சரியல்ல. அடுத்து, இப்போது அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அவர் பதில் சொன்ன பிறகு நீங்கள் சொல்வதற்கு ஏதாகிலும் இருந்தால் சொல்லுங்கள். கனம் உமாநாத் சொன்னது குறித்து சொல்கிறேன், கால் அட்டன்ஷன் நோட்டீஸ் போய்விட்டது என்று முடிவாக நான் எடுத்துச் சொல்லவில்லை. நிலைமை இதுவரையில் சென்றுவிட்ட பிறகு அது தேவையில்லாமல் போய்விடும் என்று தான் சொன்னேனே அல்லாமல், அது போய்விட்டது என்று உத்தரவாக, எழுதிக் கொடுக்கவில்லை. கால் அட்டென்ஷன் நோட்டீஸ் போய்விட்டது என்று நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள பிரச்னையில் அவர் எந்த அளவிற்கு இந்த அவையின்மீது நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் கொண்டு இருக்கிறார்களோ அதே அளவுக்கு நானும் கொண்டு இருக்கிறேன் என்பதை முதலில் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுப்பணித்துறையைச் சார்ந்த ஊழியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். பேரவைத் தலைவரவர்களே அது சம்பந்தமாக எல்லாத் தகவல்களையும் சேகரித்துத் தருவதற்கும் அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக்கேள்வி எழுப்புவதற்கும்





வாய்ப்புத் தருகிற வகையில் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அனுமதித்தால் எடுத்துக் கொள்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அவர்கள் நேற்றையதினம், உண்ணாவிரதம் இருந்த தொழில் நுட்பப் பணியாளர்களோடு பேசி முடிக்கப்பட்ட கருத்துக்கள் முதலிலே பத்திரிக்கையில் வந்தன, இந்த சட்ட மன்றத்தில் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறபோது, சட்டமன்றத்திற்குத்தான் தெரிவிக்கவேண்டும் என்ற ஒரு கருத்தை அவர்கள் சொன்னார்கள்.

நான் அவர்களிடத்திலே ஒரு உண்மை நிலைமையை விளக்க விரும்புகிறேன். நேற்றையதினம் மதியம் 12.30 மணி அளவில் நம்முடைய சென்னை மாநகரில் இருக்கும் பல்வேறு தொழிற் சங்கங்களைச் சேர்ந்த கூட்டு குழுவினர் என்னைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அவர்களோடு சேர்ந்து பேசிக் கொண்டு இருந்தேன். அவர்கள் சில முடிவுகளை என்னிடத்தில் தெரிவித்தார்கள். அவற்றைப் பரிசீலிப்பதற்காக நானும் பேசி ஓரளவுக்கு ஒப்புக்கொண்டோம். அதற்குப் பிறகுதான் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய தொழில் நுட்பப் பணியாளர்களை சந்தித்துப் பேசிவிட்டுவருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனேன். 3-30 மணியளவிற்குத் திரும்புகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அதற்குள்ளே அவர்களாலே வரமுடிய வில்லை. சட்டமன்ற மேலவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அது முடிந்த பிறகு 6-30 மணிக்குத்தான் மீண்டும் அவர்களோடு பேச முடிந்தது. ஆகவே, 6-30 மணி அளவிலே அவர்களைச் சந்தித்துப் பேசியபோது சில தீர்வுகள் வைக்கப்பட்டன. அந்தத் தீர்வுகளை அந்த நண்பர்கள், நான் பத்திரிக்கைக்குத் தர வேண்டுமென்று என்னைக் கேட்டார்கள். நான் அப்போது கூட அவர்களிடத்திலே சொன்னேன், எனக்கு இது பற்றிய விளம்பரம் தேவையில்லை என்று கருதுகிறேன், ஆகையால் நான் பத்திரிக்கைக்குத் தருவது சரியல்ல என்று சொன்னேன். ஆனால் அவர்கள் உயிர் ஊசலாடிக்கொண்டு இருக்கிற அளவிற்கு உண்ணாவிரதம் இருப்பவர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது, அதைப்பற்றி தொழில்நுட்பப் பணியாளர்கள்

பல்வேறு பகுதிகளில் இருப்பவர்கள் கவலையோடு இருப்பார்கள், பத்திரிக்கைக் குறிப்பை நீங்களே தந்து விடலாம், நான் தந்தால் பத்திக்கையில் வருமோ வராதோ என்று சொல்லி, அதை அறிவிக்கவேண்டும், அதை அறிவிப்பதன் மூலம் அவர்களிடத்திலே ஒரு ஆறுதல் ஏற்படும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். நான் அதற்குக் கூட நீங்கள் சொல்வது சரியில்லை என்று அவர்களிடத்திலே சொன்னேன். இருப்பினும், அங்கே ஏற்பட்டு இருக்கிற நிலைமை என்னவென்றால், அதை மீண்டும் சட்டமன்றத்திலே நான் அறிவித்து, அதற்குப் பிறகுதான் மற்ற இடங்களுக்கு தரவேண்டுமென்று சொன்னால், உண்ணாவிரதம் இருக்க வேண்டியவர்களுக்குத் தெரியவேண்டும் என்கிறபோது, ஏற்கனவே அவர்கள் தொடர் உண்ணாவிரதம் மட்டும் அல்ல, சாகும் வரையில் உண்ணாவிரதம் என்பதை மேற்கொண்டுள்ள காரணத்தால், அவர்கள் இரவு முழுவதும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து நடத்தி, சட்டமன்றத்தில் சொல்லப்பட்ட பிறகு அவர்கள் உண்ணாவிரதத்தை முடிக்கவேண்டும் என்று சொன்னால் அது முறையாக இருக்காது என்ற காரணத்தால் தான்—சில நேரங்களில் ஆபத்து நேரத்தில் நாம் விதிமுறைகளை அவ்வளவு தீவிரமாக பின்பற்ற முடியாது. போகிற வழியில் ஒரு திருப்பத்தில் 'கீப் டு தி லெப்ட்' என்று போட்டு இருந்தாலும், அங்கே ஒரு ஆக்சிடென்ட் ஆகியிருந்தாலும், திருப்பி ரைட்டில் ஒதுங்கிப் போகிறோம். அப்போது அது தவறு என்று கருதுவது இல்லை.

ஆகவே, நேற்று இருந்த சூழ்நிலையில், அந்த ஆபத்தான சூழ்நிலையில், அவர்கள் உயிர் மிகவும் மோசமாக ஆகிக்கொண்டு இருக்கிறது என்று அவர்கள் சொல்லக்கூடிய சூழ்நிலையில் அவர்களுடைய விருப்பத்திற்கும் வேண்டுகோளுக்கும் ஏற்ப அது அரசாங்கத்தின் குறிப்பாக அமைக்கப்பட்டதே தவிர, நான் பத்திரிக்கை நிருபர்களை அழைத்துக்கொடுத்த தகவல் அல்ல என்பதையும் கூறி, இந்தப் பிரச்னையின் அவசரத்தையும், அவசியத்தையும் கருதி அந்தத் தீர்வு அறிவிக்கப்பட்டதே தவிர, மாண்புமிகு உறுப்பினர்களுக்கோ, இந்தப் பேரவைக்கோ தகவல் அறிவிக்கக்கூடாது என்ற அந்த விதமான உள்நோக்கம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நான் மாண்புமிகு



உறுப்பினர் உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை கவனஈர்ப்புத் தீர்மானமாகவும், உரிமைப் பிரச்னையாகவும் எழுப்பியிருப்பது, இந்த பிரச்னை தீரவேண்டுமென்பதில் அவர்களும் அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்று நான் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்கட்சித் தலைவர் அவர்களும் அதேபோன்று நேற்றைய தினம் பிரச்னையை எழுப்பினார்கள். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் கூட அவருக்குத் தெரிந்த தகவலை அளித்தார்கள். அந்த நேரத்தில் தான் அவர்களும் எங்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆக, எந்த அளவுக்குப் பிரச்னை சுமுகமாக தீர வேண்டுமென்று எல்லோரும் ஆர்வம் காட்டியிருக்கிறார்களோ, அந்த உணர்வுகள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்ற காரணத்தால், இது கவுரவப் பிரச்னையாகவோ அல்லது சபையின் கண்ணியத்துக்கு பாதகமானதாகவோ கருத வேண்டிய அவசியமில்லை என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU J. JAMES: Under rule 186 I would like to place the following matter before this House. Proviso to rule 186 reads as follows:

"Provided that a matter of privelege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business."

நேற்றைய தினம் கேள்வி நேரம் முடிந்தவுடன் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது உண்ணாவிரதம் இருக்கிற என்ஜினியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஐந்தாவது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது இந்தப் பிரச்னையில் யாருக்கும் வேறுபாடில்லை. தாங்கள் இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அவசியமில்லை. எல்லோரும் ஏற்றுக்கொள்கிற ஒன்று. அது அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலோடு தீர்ந்துவிட்டது. ஆகவே, இதற்கு நேரத்தை

வீணாக்கத் தேவையில்லை. இப்போது உங்களுடைய பிரிவிலேஜ் பாதிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் பேசுங்கள். நேரத்தை வீணாக்கினால், நான் அனுமதி தர இயலாது. பிரிவிலேஜ் என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் செய்ய வேண்டிய வேலையை நீங்கள் செய்ய ஆரம்பித்தால் என்ன அர்த்தம்? உங்கள் பிரிவிலேஜ். . .

THIRU J. JAMES : I am moving a privilege motion.

MR. SPEAKER : Now, without giving any notice to me?

THIRU J. JAMES : I need not give notice. That is what I say. According to Rule 186, " a matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon ; provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business. "

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எழுப்புகிற ஒழுங்குப் பிரச்னை இன்றைக்கு உரிமை மீறல் ஏற்பட்டு, அதிலிருந்து சொல்வதல்ல. இப்போது இங்கே எந்த உரிமை மீறலும் நடக்கவில்லை. Just hear me இந்த அவையில் இப்போது உரிமை மீறல் ஏதாவது இருக்குமேயானால், உடனே raise பண்ணலாம். அந்த மாதிரி இப்போது ஒன்றும் ஏற்படவில்லை.

THIRU J. JAMES rose

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவரவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்னை பற்றி ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் பேசியிருக்கிறார்கள். அதற்குச் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் உங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறோமே தவிர, அதன் பேரில் உரிமைப் பிரச்னை . . . .

THIRU J. JAMES : Please allow me to say what I have got to say.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி இல்லாமல் எழுப்புவது தவறு. தயவு செய்து அமருங்கள். அந்தப் பிரச்னைக்குத் தீர்ப்புத் தாவிருக்கின்ற நேரம் இது. தாங்கள் என்ன உரிமை மீறல் இந்த அவையில் இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட 186--வது விதியைப் பயன்படுத்தலாம். ஆனால், 186-வது விதிக்கும் தாங்கள் எழுப்புகின்ற பிரச்னைக்கும் சம்பந்தமில்லை.

THE HON. THIRU C. PONNIAN : Rule 186 read thus : " A matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business ". . .

THIRU J. JAMES : Before allowing me to explain fully, the Speaker has permitted the Hon. Minister to speak.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 186-வது விதியின்கீழ் உரிமை மீறல் ஏற்பட்டிருந்தால் நீங்கள் என்னிடம் சொல்லலாம்.

THIRU J. JAMES : It is not proper. I am entitled to explain what I have to say. Under Rule 186. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 186-வது விதியைப் படித்துவிட்டு நீங்கள் நிறுத்தியிருக்க வேண்டும். 186-வது விதியின்கீழ் எழுப்பப் போகிறேன் என்று சொல்லி என்னுடைய அனுமதியில்லாமல் எழுந்து பேசக்கூடாது. முதலில் நான் அனுமதி தர வேண்டும்.

THIRU J. JAMES : Please hear me. I am not going to give a long lecture in this House. What I say is, the privilege has arisen now. That is what I am going to explain.

MR. SPEAKER : Regarding this subject?

THE HON. THIRU C. PONNIAN : The subject-matter of the breach of privilege must be pertaining to the question arising out of the sitting only . . . . .

THIRU J. JAMES : I cannot agree. I have to say what I have got to say. The Hon. Speaker has permitted the Hon. Minister to speak, before I finish. That is not proper. I must be allowed o say what I want to say. Under Rule 186, a matter of privilege must be raised.. . . . . .

THE HON. THIRU C. PONNIAN rose.

THIRU J. JAMES: The Hon. Minister has no business to interfere. The Minister must keep quiet. I am now entitled to talk. The Ministers cannot interfere like this. We are also entitled to speak in this House. They do not have any privilege over us.

Proviso to Rule 186 reads: "Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business". If any breach of privilege has arisen during the sitting of the House, that must find precedence over all other business. What I am saying is this. On the statement made by the Hon. P.W.D. Minister, he has committed a breach of privilege. That is my case. (interruption) Please listen to me.

நேற்றையதினம் நான் 42 விதியின்கீழ் மோஷன் கொடுத்திருக்கிறேன். அதற்கு முன் 41-ன் கீழ் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எக்ஸ்க்யூஸ் மி.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசுவது பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை.

THIRU J. JAMES: I am explaining what I have got to say.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அவர்கள் பேசுவது பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இந்த விதி 186 தவறாகப் பயன்படுகிறதோ என்று எனக்கு ஐயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கும் தெரிகிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சட்டசபையில் ஏதாவது நடந்தால்தான் அதை raise செய்யலாம். 'ஸிட்டிங்' என்பது அன்று நடப்பது. It is not so. Let me explain briefly.

**திரு. ஜே. ஜேம்ஸ்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன்பு ஒரு அறிக்கை அல்லது ப்ரிவிலேஜ் மோஷனை யொட்டி அவர்கள் பதில் கூறினார்கள். அந்தப் பதிலில் என்ன



சொன்னார்கள் என்றால், நேற்றைய தினம் அவர்களுக்கும் அதாவது அரசுக்கும் அங்கு உண்ணாவிரதம் இருந்த என்ஜினியர்களுக்கும் இடையே ஏற்பட்ட நெகோஷியேஷன்ஸ் சம்பந்தமான முடிவுகளை எல்லாம் கூறினார்கள். நான் சொல்வது என்னவென்றால், நான் 42-வது விதியின் கீழ் தீர்மானம் கொடுத்திருந்தேன். 41-வது விதியின் கீழும் கொடுத்திருந்தேன். நேற்றைய தினம் சொல்லப்பட்டது.

ஐந்து தினங்களாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள், அவர்கள் உயிர்களுக்கு ஆபத்தாக இருக்கிறது, இது முக்கியமான பிரச்னையென்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் கூறியது, அரசு அது சம்பந்தமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்றெல்லாம் கூறினார்கள்.

ஆனால், எங்கள் தீர்மானம்; இந்த இன்ஜினியர்களின் நிலைமை மோசமாக இருக்கிறது என்று சொல்லி அதை இந்த அவை எடுத்துக்கொண்டது. ஆனால், அவைக்கு பதில் கொடுப்பதற்குப் பதிலாக நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் ஏதோ முடிவு செய்து வெளியே அறிக்கை விட்டிருக்கிறார்கள். வெளியே அறிக்கை விட்டதாக அமைச்சர் அவர்கள் இப்போதுதான் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் கூறிய ரிப்ளையையொட்டி இந்த ப்ரிவிலேஜ் எழும்புகிறது. அமைச்சர் அவர்கள் இப்போதுதான் இந்த அவையில் கூறுகிறார்கள். அமைச்சர் அவர்கள் விதி 41-ன் கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்குப் பதில் கூறுவதற்கு முன்பாக—இன்னும் விதி 41-ன் கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு பதில் கூறவில்லை—அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அவையிலும் அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே, இதில் அவை உரிமை மீறல் பிரச்னை நிச்சயமாக இருக்கிறது என்ற என் கருத்தைக் கூறுகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மேலும் ஒரு தகவலைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். முடிவுகளை சொல்லும் படி சொல்லிவிட்டு நாங்கள் வந்து விட்டோம். நாங்கள் பத்திரிகைக்கு செய்தி கொடுக்கவில்லை. கமிட்டியினர்தான் பத்திரிகைக்கு செய்தி தந்திருக்கிறார்கள். நான்

சொன்னதை வைத்துக்கொண்டு, அவர்கள் தான் செய்தி கொடுத்திருக்கிறார்களே தவிர அரசாங்கத் துறையின் மூலமாக செய்தி எதுவும் கொடுக்கவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** இன்று காலையில் நான் வானொலியிலும் கேட்டேன். வானொலியில் அரசாங்கம் அறிவிக்கிறது என்று தான் சொல்லப்பட்டது. அப்படியானால் வானொலி மீது தான் பிரிவிலேஜ் கொண்டு வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கான தீர்ப்பை பின்னால் அளிக்கிறேன். இப்போது அடுத்த நிகழ்ச்சிக்கு செல்லலாம்.

**திரு. மு. அம்பிகாபதி:** விதி 41, 42-ன் கீழ் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அவை என்ன ஆயிற்று என்றும் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பற்றி உங்களுக்கு பதில் ஏதாவது வந்ததா?

**திரு. மு. அம்பிகாபதி:** பதில் எதுவும் வரவில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் அதற்கு இன்னும் உயிர் இருக்கிறது என்று பொருள்

(3. தகவல் கோரல்.).

(ஈ) **சென்னையில் நடைபெறும் உலக திரைப்பட விழாவிற்கு உறுப்பினர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படாதது குறித்து.**

* **திரு. எஸ். கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உலக திரைப்பட விழா மாநிலத்தின் தலைநகரான சென்னை நகரத்தில் நடைபெற இருக்கிறது. மத்திய செய்தித் துறையும், மாநில செய்தி சுற்றுலா வாரியமும், தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையும் இணைந்து இந்த விழாவை நடத்துவதாகத் தெரிகிறது. டெல்லி மாநகரத்தில் இப்படிப்பட்ட உலக திரைப்பட விழா நடைபெற்ற நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்ட



மன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களை மதிக்கின்ற விதத்தில் இப்படிப்பட்ட விழாவுக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்குவது நடைபெற்று வந்திருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட கலைவாணர் அரங்கத்தில் இந்த திரைப்பட விழா நடைபெற இருக்கிறது. ஆகவே பேரவைத் தலைவர் இதற்கு செல்லலாம், யாரும் தடுக்க முடியாது, முதலமைச்சர் அவர்கள் வரலாம், முதலமைச்சர் என்பதால் யாரும் தடுக்க முடியாது, செய்தி சுற்றுலா அமைச்சர் இதை முன்னின்று நடத்துவதால் அவரையும் யாரும் தடுத்து விட முடியாது.

ஆனால், தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையைப் பொறுத்த வரையில், அதன் கோரிக்கைகள் பல இந்த மன்றத்தில் வைத்து விவாதித்திருக்கிறோம். நேற்று கூட இந்த வர்த்தக சபைபற்றி ஒரு கேள்வி வந்திருக்கிறது. இந்த அவையின் மூலமாக பல்வேறு சலுகைகளை கொடுக்க நாம் இந்த மன்றத்தின் மூலமாக அரசை கேட்டிருக்கிறோம். ஆகவே தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைக்கும் இந்த அவைக்கும் தொடர்பு இருக்கிறது. அப்படியிருக்கும் போது இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்காமல் இருப்பது இந்த மன்றத்தின் உறுப்பினர்களின் கௌரவத்தை பாதிப்பதாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதில் அவைத் தலைவர் அவர்களின் தீர்ப்பு என்ன என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்குக்கூட ஒரு நாளைக்குத்தான் அழைப்பிதழ் வந்திருக்கிறது . . . எல்லா நாட்களுக்கும் அல்ல . . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உலக திரைப்பட விழா நடத்துவதில் மாநில அரசுக்கு எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அது மாத்திரமல்ல. இதில் மத்திய அரசுக்கும் இதில் அதிகாரம் செலுத்துகின்ற பொறுப்பு இல்லை. உலக திரைப்பட விழா பிரான்சின் தலைநகரான பாரீசில் இருக்கின்ற அமைப்பின் கீழ் தான் நடைபெறு

கிறது. இதற்கென்று பல விதிமுறைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டில் இவற்றை நடத்த வேண்டும் என்று அனுமதி கேட்டுக் கொள்கிறது. அதையொட்டி அந்த அமைப்பு எங்கு நடத்தப்படுகிறதோ அந்த நாட்டிலுள்ள அமைப்புகளின் உதவியோடு இந்த விழாவை நடத்துகிறது.

மேலும் இந்திய அரசின் சார்பில் செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் சார்பில் ஒரு குழு (டைரக்டரேட் ஆப் பிலிம் பெஸ்டிவல்) அமைக்கப்பட்டு, அந்தக்குழு தமிழக அரசின் உதவியோடு நம்முடைய வேண்டுகோளின் படி இந்த விழாவை இப்போது சென்னையில் நடத்த முற்பட்டிருக்கிறது.

பல்வேறு மாநிலங்கள் தங்கள் தங்கள் தலைநகரங்களில் இதை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டன. அந்த முறையில் நாமும் கேட்டோம். அதை ஏற்று இங்கு நடத்தப்படுகிறது. நம்முடைய அதிகாரிகள் இதற்கு உதவி செய்கிறார்கள். ஆனால் இதில் எந்த விதமான அதிகாரமும் நமக்கு இல்லை. இதில் மத்திய அமைச்சர்களுக்கோ அல்லது மாநில அமைச்சர்களுக்கோ எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

இந்த விழாவைப் பொறுத்தவரையில் மத்திய அமைச்சர் கலந்து கொள்கின்ற நாளன்று பலருக்கும் அழைப்பு அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த திரைப்படங்கள் வெளியிடப்படுகின்ற கொட்டகைகளின் உரிமையாளர்கள் கூட வெளியில் க்யூவில் நின்று தான் டிக்கட் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். கொட்டகை சொந்தக்காரர்கள் கூட உட்கார்ந்திருந்து பார்க்க அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு விதிமுறைகள் வைத்திருக்கிறார்கள்.

இதில் நாங்கள் கேட்டுக்கொண்டது, அவர்கள் அனுமதித்தது எவ்வாறு என்றால் 50 சதவீதம் சீசன் டிக்கட்டுக்களாகவும், 50 சதவீதம் டெய்லி ஸேல்ஸ்-க்காகவும் ஒதுக்கியிருந்தார்கள். நாங்கள் கேட்டுக்கொண்டது, டெய்லி ஸேல்ஸ்-க்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 50 சதவீதத்தில் ஐந்து சதவீதம் இப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அரசின் சார்பிலுள்ள அதிகாரிகள்



இப்படிப்பட்டவர்கள் பார்க்க விரும்பினால் அவர்களுக்கு இந்த ஐந்து சதவீதத்தை ஒதுக்கிக்கொடுத்து அதில் பணத்தை கொடுத்து டிக்கட்டுகளை வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

நான் சட்டமன்றத் துறைச் செயலாளர் அவர்களிடம் நேற்றே இதைப்பற்றி தெரிவித்து விட்டேன். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு வேண்டிய டிக்கட்டுகளை, தங்கள் கட்சி கொறடா மூலம் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு டிக்கட் வீதம் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய விதிப்படி 48 மணி நேரத்திற்கு முன்பாகத்தான் ஒவ்வொரு காட்சிக்கும் டிக்கட் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் நாங்கள் கேட்டுக் கொண்டிருப்பதால், இந்த விதியை அவர்கள் தளர்த்தி, உறுப்பினர்களுக்கு முன்னதாகவே டிக்கட் கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தயவுசெய்து சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தந்தக் கட்சி கொறடாக்கள் மூலம், சட்ட மன்றத் துறைச் செயலாளர் அவர்களிடமிருந்து டிக்கட் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மகிழ்ச்சி ஆரவாரம்).

**திரு. எம் ஏ. லத்தீப்:** 3 ஆம் தேதி நடக்கும் விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. அத்வானி அவர்களும், நமது முதல் அமைச்சர் அவர்களும் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிக்கு ஒரு அழைப்பு இதழை அனுப்பியிருக்கிறார்கள். அது 27 ஆம் தேதி மாலைதான் பார்க்க முடிந்தது. அதிலே, இந்த விழாவிலே பங்கு கொள்கிறவர்கள் 22 ஆம் தேதிக்குள் தகவல் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 27 ஆம் தேதி பார்த்து விட்டு, 22 ஆம் தேதிக்கு எப்படி தகவல் கொடுக்க முடியும்? இந்த நிலைமை உறுப்பினர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் இந்த விழாவில், நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் வகையில், இந்த 22 ஆம் தேதி என்பதைத் தவிர்த்து, உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பி அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இதிலும் அவர்கள் கடுமையான விதிமுறைகளை அனுஷ்டிக்கிறார்கள். தங்களுக்கு மாத்திரமல்ல, அமைச்சர்கள் அல்லது வேறு யாராக இருந்தாலும் அவர்களுக்கும் ஒரே மாதிரிதான். இது உலக அமைப்பின் கீழ் நடைபெறுகின்ற காரணத்தால், அதன் பிரதிநிதிகள் இந்த விழாக்களை சங்கடமில்லாமல் நடத்துவதற்காக நம்மை அணுகினார்கள். அதன்படி, இந்த ஆரம்ப விழாவையும், இறுதி விழாவையும் தமிழக அரசு நடத்துகின்ற கலைவாணர் அரங்கத்திலேதான் நடத்த வேண்டும் என்று சொன்னோம். அதன்படி அவர்கள் நடத்துகிறார்கள். அதிலே 1,000 இடங்கள் தான் இருக்கின்றன. அவர்கள் பல்வேறு துறைகளுக்கு அதற்கான அழைப்பிதழ்களை அனுப்பி, இந்த விழாவை நடத்த வேண்டியிருக்கிறது. இப்படிச் செய்யாவிட்டால், யார் முன் கூட்டியே வருகிறார்களோ அவர்கள் இடத்தைப் பிடித்துக் கொள்ள நேரிடும். அப்படியெல்லாம் இதிலே சங்கடம் ஏற்படும் என்கின்ற காரணத்தால், இந்த உலக அமைப்புக்கு அவ்வாறு சங்கடம் வரக்கூடாது என்பதற்காக முன்கூட்டியே இந்திய அரசாங்கம் இதற்காக ஒரு குழுவை நியமித்து, அவர்களை இதற்கான வசதிகளையெல்லாம் செய்து தரும்படி கேட்டுக்கொண்டது. அதன்படி அவர்கள் யார் யாருக்கு அழைப்பிதழ் அனுப்பவேண்டுமென்று தேர்ந்தெடுத்து, அதற்கான ஒப்புதல் பெற்று, வழக்கமாக ஆர்.எஸ்.வி.பி. கேட்டு அனுப்புவதுபோல் அனுப்பாமல், அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பும்போது, முன் கூட்டியே தகவல் தந்தால்தான் அவர்கள் அதற்கான இடத்தை ஒதுக்க முடியும். அந்தவகையிலே இதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதன்படி கணக்கிட்டு, அவர்கள் அழைப்புக்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

இதிலேகூட, ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்களுக்குக்கூட இடம் ஒதுக்கியிருப்பது நல்லமுறையில் ஒதுக்கியிருப்பதாகத் தெரியவில்லை. தகவல் கேட்டிருக்கிறேன். அப்படி முறைப்படி இடம் ஒதுக்கப்படாமல் இருந்தால், அமைச்சர்களேகூட இந்த விழாவில் கலந்துகொள்வது பற்றி யோசிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



### (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு நிலநீர் (கட்டுப்பாடு, முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு நிலநீர் (கட்டுப்பாடு, முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10-50)

### (ஆ). 1977 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1977 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

### 2. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

### (இ) அவசரச்சட்டம் பிறப்பித்த பிறகு அவைக் கூட்டத்தொடர் தொடங்கும் நாளன்றே அவசரச்சட்டம் பிறப்பிக்க ஏற்பட்ட அவசிய நிலைகுறித்து அவைக்கு அறிக்கை அளிக்காதது குறித்து.

**திரு. க. சுப்பு:** பாயிண்ட் ஆப் ஆர்டர். இதை அறிமுகப் படுத்துவதற்கு அனுமதி கோருவதற்கு முன்னாலேயே ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். இது சம்பந்தமாக ஆளுநர்

அவர்கள் பிறப்பித்துள்ள அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் தரக் கூடாது என்று 142-வது விதியின் கீழ் ஏற்கெனவே நான் ஒரு அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். ஆளுநர் அவர்கள் அவசரச் சட்டத்தை தற்போது 'பில்' ஆக மாற்ற அனுமதி கோருகிருர்கள். அந்த பில் அவசியமா இல்லையா என்பது பற்றி நான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அது இந்தச் சபையில் ஏற்றுக்கொள்ளப் பட்டால் இந்த 'பில்'லை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல் போய்விடும். ஆகவே, நான் கொடுத்த நோட்டீசை முதலில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இரண்டாவது 142-ஏ-ல்—

'Whenever an Ordinance, which embodies wholly or partly or with modification the provisions of a Bill pending before the Assembly, is promulgated a statement explaining the circumstances which has necessitated immediate legislation by Ordinance shall be laid on the Table at the commencement of the session following the promulgation of the Ordinance.'

என்று இருக்கிறது. கமென்ஸ்மென்ட் ஆப் தி செஷனில் இதனை வைத்திருக்க வேண்டும். என்றைக்கு கூட்டத்தை ஆரம்பிக்கிருேமோ அன்றைக்கே வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனல் இன்றைக்குத்தான் வைக்கிருர்கள். ஆகவேதான் ஒழுங்குப் பிரச்சனையாக இதனை எழுப்புகிறேன். தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தற்போது வெறும் அறிமுகந்தான். இதைப் பற்றி வாதிடுவது எல்லாம் பின்னல் வரப் போகிறது.

**திரு. க. சுப்பு:** நான் விவாதத்திற்குள்ளே போகவில்லை. கவர்னர் அவசரச் சட்டம் பிறப்பிக்கிருர். அந்த அவசரச் சட்டம் தற்போது 'பில்' ஆக வருகிறது. அப்படி வரும்போது கமென்ஸ்மென்ட் ஆப் தி செஷனிலேயே எக்ஸ்பிளனேட்டரி ஸ்டேட்மென்டை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு வைக்கப்படவில்லை. மேன்டேட்டரி ப்ரொவிஷன் மீறப்படுகிறது. அதற்கு ஒரு தீர்ப்பு வேண்டும்.



இன்னென்று 142-வது விதியின் கீழ் இந்த பில் இன்ட்ரொடக்ஷன் அவசியம் இல்லை என்று கொடுத்திருக்கிறேன். அது இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டு சபை ஏற்றுக் கொண்டால் இதனை அறிமுகம் செய்ய அவசியமே ஏற்படாது. நேராகக் கவுன்சிலுக்குப் போகவேண்டியதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை தொடங்குகிற நாள் அன்றே இதனை மேஜைமீது வைத்திருக்கவேண்டுமென்று சொல்லுகிருர்கள். அதுபற்றி விசாரித்துச் சொல்லுகிறேன்.

இரண்டாவது, நாடாளுமன்றத்தில் கூட சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போதுதான் இதுபோன்ற பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது வழக்கம். அப்படி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது இதைப்பற்றி எடுத்துக் கூறலாம். ஆகவே, இதிலே ஒழுங்குப் பிரச்னை எதுவும் இல்லை.

## (5) அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## (இ) 1977 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[1977 டிசம்பர் 31

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(ஈ) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.



1977 டிசம்பர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) 1977ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஏ) தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

அடுத்து, மன்றத்திற்கு என்னுடைய சொந்த வேண்டுகோள். பேசுவதற்கு நிறையப் பேர்கள் பேர் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சுமார் 2 மணி நேரம்தான் இருக்கிறது. தலைவர்கள் எல்லாம் பேசவேண்டியிருக்கிறது. என்னுடைய சொந்தக் கருத்து என்னவென்றால் இன்றோடு இந்த விவகாரத்தை முடிக்க முடியுமா? இன்றைக்கும் எடுத்துக்கொண்டு 2-ஆம் தேதியும் எடுத்துக் கொண்டால்தான் முடியும். அதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே பேச இருக்கிறோம். இன்றைக்கே முடித்து விடவேண்டுமென்றால் தலைவர்கள்கூட 10 நிமிடங்கள்தான் பேச வேண்டும். இன்றைக்குப் பேசுகிறவர்கள் பேசிவிட்டு, 2 ஆம் தேதியும் எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான் என்னுடைய சொந்தக் கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து உறுப்பினர்கள் 5 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளவேண்டாம்.

### (5) அரசினர் தீர்மானம்.

### புயல், வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை மீதான விவாதம்— தொடர்ச்சி.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, புயல் வெள்ள நிவாரண வெள்ளையறிக்கையிலே வேதாரண்யம் பகுதியிலே, தமிழ்நாட்டிலேயே இரண்டாவதாக உப்பு உற்பத்தி செய்கின்ற உப்பளங்கள் அதிகமாகப் பெற்றிருக்கிற வேதாரண்யம் பகுதியிலே ஏற்பட்ட சேதங்களைப்பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடாதது





பற்றி உண்மையிலேயே நான் வருந்தப்படுகிறேன். அங்கே லைசென்ஸ் வாடி, தன்பாடு என்று இரண்டுவிதமாக உப்பு உற்பத்தி செய்கிறார்கள். லைசென்ஸ் வாடி மூலம் உற்பத்தி செய்கிறவர்களுக்கு மத்திய அரசு நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறது. ஆனால் தன்பாடு மூலமாக உற்பத்தி செய்கின்றவர்களுக்கு எந்தவிதமான நஷ்டயீடும் மத்திய அரசாலோ மாநில அரசாலோ இதுவரையில் கொடுக்கப்படவில்லை. ஆகவே தன்பாடு மூலம் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் மாநில சர்க்காரிலே இருக்கிற புறம்போக்கு நிலங்களை மெமோ மூலம் அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். இந்த நேரத்தில் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கும் உற்பத்தியாளருக்கு எந்தவிதமான நஷ்டயீடும் கொடுக்கப்படாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைக்கு 3½ மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டியிருந்தேன். ஆனால் அத்தனை கட்சித் தலைவர்களும் இப்போதே கூட்டிவிடலாம், போய்வருவது என்றால் கஷ்டமாக இருக்கும் என்று சொல்கிறார்கள், பேரவை முன்னவர் அவர்கள் ஒத்துக் கொண்டால் என்னுடைய அறையிலே அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தை 12 மணிக்கு வைத்துக்கொள்ளலாம் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அனைத்துக் கட்சித் தலைவர்களும் இசைவைத் தெரிவிக்கின்ற காரணத்தால் அப்படியே வைத்துக்கொள்ளலாம்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** தண்டத்தீர்வை, பி.மெமோ. தீர்வைகளை எல்லாம் அவர்களுக்கு மாநில அரசு ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள் மூலமாக கடன்பெற்று மக்கள் சாகுபடி செய்திருக்

[முற்பகல் 11-00]

(திரு. கே. பண்ணை சேதுராம்—தலைமை)

கிறார்கள். அவைகளையும், விவசாயக் கடன்களை எப்படி ஒத்தி வைக்கிறார்களோ அதைப்போல இதையும் ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் புயல் நிவாரணப் பணியிலே பாரபட்சமாக நடந்திருக்கிறது என்று இந்த மன்றத்திலே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் பரிசீலனை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதிலும் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருடம் சாகுபடியைப் பொறுத்தவரையில் குறுவை பாழாகி விட்டது என்று அதிகாரிகள் கணக்கெடுத்துச் சொன்னாலும், சம்பாவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நடுத்தர விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்காளாகி இந்த வருடம் சாகுபடிக் கடன்களை ஒத்தி வைக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும் வருடத்திற்கு வருடம் கடன்களை இப்படி ஒத்தி வைத்துக்கொண்டே போவதாலே, விவசாயிகளுக்கு எந்தவிதமான இலாபமும் கிடைக்காது என்பதை இந்த மன்றத்திலே பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போல, இந்தக் கூட்டுறவுக் கடன்களை, இந்த வருடத்திற்கும், முந்தைய வருடத்திற்கும் உள்ள கடன்களை ஒத்தி வைப்பதைவிட அவற்றைத் தள்ளுபடி செய்தால்தான் நடுத்தர விவசாயிகளும், சிறு விவசாயிகளும் தங்களுடைய நஷ்டத்தை ஈடு செய்ய முடியும். இல்லாவிட்டால் இந்தப் புயல் வெள்ளச் சேதத்தினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்குக் குறைந்தது பத்தாண்டுகளாவது ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தயவு செய்து இந்தச் சர்க்கார் உடனடியாக அந்தக் கடன்களை ரத்து செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு நல்லது செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

அதோடு, பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் இருக்கின்ற சாலைகளெல்லாம் மிகுந்த அளவில் பாழடைந்திருக்கின்றன. அந்தச் சாலைகளைச் சீர் செய்வதற்கு பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் கணக்கெடுத்து அந்தச் சாலைகளினுடைய அளவுகளையும் கணக்கெடுத்துப் பணத்தை உடனடியாக ஒதுக்கித் தர வேண்டும். நெடுஞ்சாலைத் துறையிலே உள்ள பல ரோடுகளும் பாழடைந்திருக்கின்றன. வாய்க்கால்களும், வடிகால்களும் வேதாரண்யம் பகுதியிலே





மிகவும் சேதமடைந்திருக்கின்றன. அவைகளையும் சீர் செய்ய சர்க்கார் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மி. வின்சென்ட்:** பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டு புயல், வெள்ள நிவாரணம், வெள்ளையறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கையின் சீற்றத்தால் ஆர்ப்பரித்தெழுந்த புயல் 560 உயிர்களைப் பறித்துச் சென்றது, 28,300 ஏக்கர் பயிர்கள் நாசமடைந்தன, 23,000 கால்நடைகள் உயிர் துறந்தன, 1,700 கிணறுகள் மேடிடப்பட்டன, சாலைகள், கட்டிடங்கள் சேதமடைந்தன. ஆனால் துயர் துடைப்புப் பணி, நிவாரணப்பணி போர்க்கால நடவடிக்கைகளைப் போல நடந்தன என்பதனைப் பாராட்டுவதற்கு மனவளம் பெற்றவர்கள் பாராட்டி நிற்கிறார்கள்.

ஒரு மாநில அரசு எந்த அளவில் செய்ய முடியுமோ அத்தகைய நடவடிக்கைகளைத் தமிழக அரசு செய்திருக்கிறது என்று மத்திய அமைச்சர் பகுகுணா அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். துரித நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன் என்று மத்திய அமைச்சர் இராமச்சந்திரன் அவர்களும், மொரார்ஜி தேசாய் அவர்களும், ஜெகஜீவன்ராம் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். மக்களிடம் நேரடியாகச் சென்று குறைகளைக் கேட்பதற்காக வந்த குழுவின் தலைவர் சாக்சேனா அவர்கள், மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள் என்றும், துரித நடவடிக்கைகள் நடைபெற்று இருக்கின்றன என்பதை ஒத்துக்கொண்டார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். வெள்ளை மனம் எள்ளளவும் கொள்ளை போகாத நல்ல உள்ளங்கள் பாராட்டுகின்றன.

ஆனால் நைந்த உள்ளங்கள் நம்மைப் பாராட்டுகின்றனவா இல்லையா என்பதைப்பற்றிக் கவலை இல்லை. 1963-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7-ஆம் தேதி நம்முடைய இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய மாண்புமிகு கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார்கள், நாதஸ்வர சாருகேசி ராகத்தை நெல்லுக்கு ஒலிபரப்புவதன் மூலம் 25 சதவிகிதம் முதல் 60 சதவிகிதம் வரை நெல் பயிர் செழிப்புற்று விளைகிறது என்பதைச் சொல்லிக்காட்டிய அவர், கரும்புப் பயிருக்கு 4½ மாதங்கள்

கழித்து நாதஸ்வர ராகத்தை ஊதுவோமேயானால் ஒரு ஏக்கருக்கு 8 டன் அதிகமாகக் கிடைக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆதலால், இந்தக் கடும் புயலில் 28,300 ஏக்கர் நிலத்தில் பயிர்கள் சேதமடைந்திருப்பதைச் சரிப்படுத்துவதற்கு, நாதஸ்வர சாருகேசி ராகத்தை ஊட்ட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நல்லவர்களெல்லாம் துரித நடவடிக்கைகள் நடைப்பெற்றன என்று பாராட்டிக் கொண்டிருக்கிற நேரத்தில், மழைத் தண்ணீர் அங்கே தேங்கியிருந்த காரணத்தால், ரோடுகள் பழுதடைந்து விட்டிருந்ததால், கார்களில் சென்று அந்த இடங்களைப் பார்க்க முடியாத சூழ்நிலை உருவாகிவிட்டிருந்ததாலும், விமானத்தில் சென்று அவர்களைப் பார்த்ததற்காக, விமானத்தில் சென்றால் குறை தீருமா என்று பறை சாற்றுகிறார்கள். பல மாநிலத்தவர்கள் வேண்டுமானால் விமானத்தில் செல்லலாம் என்று சொல்லும்போது, ஒரு மாநிலத்துத் தலைவர் ஏன் விமானத்தில் சென்று பார்வையிட வேண்டுமென்று கோருகிறார்கள். ஒருவேளை, விமானத்தில் சென்று பார்வையிட்டால், பார்த்தீர்களா, உடன்பிறப்புக்களே, இன்றைய தினம் சாலைகள் ஒழுங்காக இல்லை; ஆகாயத்தில் கூடவா வழி மறைக்கப்படுகிறது, விமானத்தில் சென்று பார்த்திருக்கக் கூடாதா என்று பறை சாற்றுவார்கள். துரித நடவடிக்கைகள் எடுத்த காரணத்தால், ஏன் அவர்கள் விமானத்தில் செல்ல வேண்டுமென்று கேட்கிறார்கள்.

வாதத்திற்காக எடுத்துக்கொண்டால், ஒரு மாநிலத் தலைவர் காரிலேதான் செல்லவேண்டுமென்ற கட்டாயச் சூழ்நிலையை உருவாக்குவார்களானால், மாநிலத் தலைமையை இழந்தவர்கள், ஜெட்கா வண்டியில்தானே சென்று பார்வையிட வேண்டுமென்று நான் கேட்க விரும்பவில்லை. இருந்தாலும், வாதத்திற்காகக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய சந்திரசேகர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; இங்கே துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராவிட்டால், ஆந்திர மாநிலத்தில், எத்தனை உயிர்கள் பறிக்கப்பட்டனவோ அதைவிட அதிகமாக தமிழகத்தில், உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று கூறியிருக்கிறார்.





ஆனால், நேற்றையதினம் உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள் பேசுகிற நேரத்தில், ( * * * ) என்று சொன்ன நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர், பார்த்தீர்களா, எங்களிடம் எப்படி முறையிடுகிறார், எங்களை எப்படிப் பேசுகிறார் என்று சொன்னதோடு மாத்திரமல்ல, ( * * * ) என்று கூட பத்திரிக்கைகளில் எழுதியதாக வேதனைப்பட்டார்கள். அதை விட வேதனையானதெல்லாம் அந்தப் பக்கத்திலிருந்துதான் வருகிறது என்று சொன்னார்.

இயற்கையின் கொடுமையால் எத்தனை உயிர்கள் பறிக்கப்பட்டன என்று அத்தனை பேரும் வேதனையுற்ற நேரத்தில், தி.மு.க. பத்திரிகைகள், இறந்தவர்களையெல்லாம் கொலைகள் என்று வர்ணித்தன. கொலைகளுக்குத் தமிழக அரசுதான் காரணம் என்று பேசினார்கள். நேற்று மாண்புமிகு உறுப்பினர் ப.உ.ச. அவர்கள் பேசியபொழுது, புயல் வந்ததற்குக் கூட ஒரு காரணத்தைக் காட்ட முடியுமானால், அதற்கும் நாங்கள்தான் காரணம் என்று சுட்டிக்காட்டுவார்கள். ஆனால், காரணம் இல்லாத காரணத்தால், இன்று அவர்கள் எங்களைக் குறிப்பிடவில்லையென்று சொன்னார்கள். புயலால் அடைந்த சேதத்தை, கொலை என்று குறிப்பிடுகிறார்களே என்ற வேதனையை நான் அவர்களுக்குப் பதிலாக அளிக்க விரும்புகிறேன்.

அரசு உடனடியாகத் துரித நடவடிக்கை எடுக்கவில்லையென்று குறிப்பிடுகிறார்கள். 12-ஆம் தேதி புயல் அடித்தது. அழகு வாய் முத்தம் கொடுத்து பேணி வளர்த்த தாய் தன் மகனைக் காணவில்லையேயென்று அவல ஒலி எழுப்பி விட்ட நேரத்தில், 10 மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயைக் காணவில்லையேயென்று மகன் அவல ஒலி எழுப்பிய நேரத்தில், நீந்த முடியாமல், கூரை மேல் ஏறி, தன் உயிர் காப்பாற்றப்படுமா என்று வேதனைப்பட்ட நேரத்தில், செத்த பிணங்களை, எப்படி உடனுக்குடன் அகற்றுவது என்று அரசு ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்த நேரத்தில், அல்லல்பட்ட நேரத்தில், மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

---

* பேரவைத் தலைவர் 30-12-1977 தேதி ஆணையிட்டதற்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மி. வின்செண்ட்] [1977 டிசம்பர் 31

[முற்பகல் 11-10]

13-ந்தேதி மக்கள் கதறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மறியல் போராட்டம் நடைபெறுகிறது. 14-ந்தேதி மக்கள் பதறிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் மறியல் போராட்டம் நடைபெறு கிறது. 15-ஆம்தேதி மக்கள் தேம்பி அழுதுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் மறியல் போராட்டம் நடைபெறுகின்றது. 16 ஆம் தேதி மக்கள் கதறுகிறார்கள் ஆனால் போராட்டம் தொடருகிறது. 17-ஆம் தேதிதான் அவர்களுடைய போராட்டம் கைவிடப்பட்டது.

இத்தனையும் செய்தவர்கள், அரசாங்கத்திற்கு ஆக்கபூர்வமான பணிகள் நடக்க இடைஞ்சல் செய்து கொண்டிருந்தவர்கள் இன்று சொல்கிறார்கள் நாங்கள்தான் நிவாரண வேலைகளில் இறங்கினோம் என்று. 8 ஆம் தேதி வெளியே வந்தார்கள். உடன்பிறப்புக்குக் கடிதம் எழுதினார்கள். சிட்டெனப் பறந்தோம் சிறையிலிருந்து என்று. ஆனால் 13 ஆம் தேதிதான் புறப்பட்டார்கள். இடையிலே இருந்த 4 நாட்கள் என்ன ஆயிற்று. இப்படி காலதாமதத்தைச் செய்தவர்கள். . . .

**திரு. க. அன்பழகன்:** அந்த நான்கு நாட்களும்; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணித் தலைவர்கள் எல்லாம் சிறையில் இருந்த நேரத்தில் வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டிருந்த வட்டாரங்களிலே கழகம் போராடாமல், வெள்ளம் பாதிக்காத வேறு இடங்களில் ஏற்கனவே அறிவித்தப்படி மறியல் போராட் டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அந்த விவரங்கள் சிறையிலே இருந்த எங்களுக்குத் தெரிந்த பிறகு, போராட்டம் தேவையில்லை என்று அறிவிக்கும்படியாகத் தெரிவிக்கப்பட்டது. ஒரு வேளை சிறையிலே வேறு என்னென்ன செய்தோம் என்று கேட்பாரானால், சினிமா படம் எடுப்பதற்குக் காமிராவை முடுக்கிவிட்டுக் கொண்டிருந் தோம் என்று அந்த நண்பருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பண்ணை கே. சேதுராம்) :** இது பாயிண்ட் ஆப் ஆர்டரா ?

**திரு. க. அன்பழகன்:** எதுவாக இருந்தாலும் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு எதிர்க்கட்சியைப் பற்றி தவறான கருத்துப் படும்படி சிறையிலே என்ன செய்தார்கள் என்று கேட்டதால் கூறினேன்.



1977 டிசம்பர் 3] [திரு. க. அன்பழகன்]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பண்ணை கே. சேதுராம்):** உங்களுக்குச் சந்தர்ப்பம் வரும்போது பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஆரம்பத்தில் பேசிய போது அந்த நான்கு நாட்களிலும் துயர் துடைப்புப் பணியில் ஈடுபடமுடியாமைக்கான காரணத்தைத் தெளிவாகச் சொன்னார்கள். அத்தோடு நிறுத்தி இருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பண்ணை கே. சேதுராம்):** வின்செண்ட் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. மி. வின்செண்ட்:** மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் நான்கு நாட்களாக செய்த வேலைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவைகளைச் செய்வதற்கு ½ மணி அல்லது ஒரு மணி நேரம் போதுமானதாக இருந்திருக்கும். அந்த 4 நாட்களுக்கு அவர்கள் அளித்த விளக்கத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனக்குத் திருப்தியாக இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறந்தவர்களின் எண்ணிக்கை 560 என்று சொன்னால் கணக்கு சரிதானா என்று கேட்டார்கள். இறந்தவர்கள் எண்ணிக்கை 560 இல்லை என்று சொன்னால், அவர்களே எங்கெங்கு யார் யார் இறந்தார்கள் என்று காட்டவேண்டும். இல்லை என்றால் அன்று மாணவர் உதயகுமார் இறந்த நேரத்தில் அவர் இறக்கவில்லை என்று செத்த மாணவனுடைய தந்தையிடமே அவன் என் மகன் இல்லை என்று வாக்குமூலம்பெற முயற்சித்தார்களே அதுபோல இன்றைய தினம் உயிரோடு இருப்பவர்களைப் பார்த்து புயலிலே இறந்த வர்கள் கணக்கிலே சேர்க்கவேண்டுமென்று விரும்புகிறார்களா என்பதனை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டு மல்ல (மணி அடிக்கப்பட்டது).

புயல் வெள்ள நிவாரண நிதி திரட்டியதை இன்று கவர்னரிடம் கொண்டு சேர்த்து இருக்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட கடமைப்பட்டு இருக்கிறேன். கவர்னரிடம் அவர்கள் கொடுத் தாலும் அது வந்து சேரவேண்டிய இடம் முதலமைச்சர் நிவாரண நிதிதான். கடந்தகால நிகழ்ச்சிகளை, ஏடுகளை, ரிகார்டுகளைப் புரட்டிப் பார்த்தால் தெரியும், திரு. கே. கே. ஷா அவர்கள் ஆளுநராக இருந்தநேரத்தில் மனு வாங்கிய காரணத்திற்காக

[திரு. மி. வின்சென்ட்] [1977 டிசம்பர் 31

எத்தனை மேடைகள் தோறும் அவருக்கு ஏன் அந்த வேலை என்று கேட்ட அவர்கள், இன்று அவர்கள் வாங்கிய பணத்தை கவர்னரிடம் கொடுத்து இருப்பது நேரத்திற்கு நேரம், காலத்திற்கு காலம் அவர்கள் ஒரு நீதியை உருவாக்கிக்கொள்கிறார்கள் என்பதைக் காட்டுகிறதே தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டை ஆள்வது நல்ல சட்டமாக இருப்பதை விட ஒரு நல்ல மனிதன் ஒரு நாட்டை ஆள வேண்டும் என்று அரிஸ்டாட்டல் சொன்னான். இந்த நாட்டை இப்போது ஒரு நல்லவர், புரட்சித் தலைவர் ஆண்டு கொண்டு இருக்கிறார். அவர் ஆளுகிற வரையில் தமிழகம் வாழும், தமிழக மக்கள் குறையோடு இருக்க மாட்டார்கள், அவர்கள் குறை தீரும் என்று கூறி வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. நா. சுந்தர்ராஜ்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த மாதம் 12-ம் தேதி அடித்த புயல்-வெள்ளச் சேதத்தைப் பற்றிய விரிவான வெள்ளையறிக்கை ஒன்று இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. அந்த வெள்ளையறிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

அடித்த புயலின்போது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் 3-4 நாட்களுக்கு அந்த மக்களுக்கு பல்வேறு வகையில் நிவாரணத்தை தந்து இருக்கிறது. அதற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதோடு மட்டுமல்லாமல், குறிப்பாக என்னுடைய மாவட்டமான, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றும் காவல் துறை கண்காணிப்பாளரும், மற்ற அதிகாரிகளும் எடுத்துக்கொண்ட முயற்சிகள், தங்கள் உயிரையும் மதிக்காது, அவர்கள் ஆற்றிய பணிகள், எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல உயிர்களைக் காப்பாற்றுவதில் அவர்கள் காட்டிய அக்கரை ஆகியவற்றிற்கு நான் இந்த அவை மூலம் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால் அதற்குப் பிறகு ஏற்பட்ட நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் எப்படி தடுமாற்றங்கள் இருந்தன என்பதை என்னால் காண முடிந்தது



1977 டிசம்பர் 31] [திரு. நா. சுந்தரராஜ்]

குறிப்பாக கிராமங்களில் குழுக்கள் அமைப்பதைப் பற்றிச் சொல்கிறேன். முதலில், ஊராட்சி மன்றத் தலைவர்களை வைத்து குழுக்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு கிராம முனிசீப் அவர்களை தலைவராகக்கொண்டு அமைக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். இப்போது சர்வ கட்சியைச் சார்ந்தவர்கள் அதிலே உறுப்பினர்களாக இருந்து அந்தக் குழுக்கள் அமைத்திட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழுவின் பணி என்ன, அது என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி இதுவரையில் உத்தரவு எதுவும் வரவில்லை. குழுக்கள் எந்தெந்த திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று சொல்லப்படவில்லை. அதிலே குழப்பம் இருக்கிறது. அது போக்கப்பட வேண்டும்.

கிராமப் புறங்களில் பார்க்கிறபோது, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமப்புறத்தில் இருக்கும் மக்களுக்கு நிவாரணப் பணிகளைச் செய்யவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு செய்வதற்கும் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த நிதி எப்படி செலவு செய்ய வேண்டும் என்பது குறித்தும் சரியான நிலைமை இல்லை. எப்படி கடந்த காலத்தில் சில கான்டிராக்ட்காரர்களிடம் போய் சேர்ந்ததோ அதைப்போல் இன்றையதினம் போய்க்கொண்டு இருக்கிறது. அதைத் தடுக்க, மற்ற அமைச்சர் விரும்பினாலும், அங்கே இருக்கும் சில அதிகாரிகள் அதைச் செய்யத் தயாராக இல்லை.

குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வறட்சி நிவாரண நிதியில், வறட்சி நிவாரணத்திற்காக கிராமப்புற சாலை திட்டத்தின் பணிகளை மேற்கொள்ள பரமக்குடி டிவிஷனல் இன்ஜினீர் மூலம் பல லட்சம் ரூபாய் வேலைகள் ஒப்பந்தம் மூலம் நடைபெறவேண்டும் என்று டென்டர் அனுப்பப்பட்டது. ஏதோ காரணத்திற்காக வந்த டென்டர்களையெல்லாம் கைவிட்டு விட்டு, நியமன அடிப்படையில் கொடுத்து இருக்கிறார்கள். இப்படி வழங்கியதின் காரணமாக, அந்தத் துறையில் இருக்கும் டிவிஷனல் இன்ஜினீர் உள்பட கீழே இருக்கும் ஊழியர்கள் வரை, லஞ்சமாக சுமார் ரூ. 60,000 பெற்று இருக்கிறார்கள்.

அதைப்போல் ஒரு சிலருக்கு அந்த ஒப்பந்தங்கள் அளிக்கப்பட்டு இருக்கின்றன நாமினேஷன் முறையில். அதை அறிந்து, மாவட்ட ஆட்சி தலைவரிடம் சொன்னபோது, அவர் உடனே

[திரு. நா. சுந்தரராஜ்] [1977 டிசம்பர் 31

நாமினேஷன் முறை ரத்து செய்யப்படவேண்டும் என்று கூறி, டெண்டர் முறையில் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். அதன் பிறகு மீண்டும் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, டெண்டர் மூலம் இப்போது வேலைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

இதிலே ஒரு நல்லது நடந்து இருக்கிறது, என்னவென்றால், அந்த வாங்கிய லஞ்சத்தை திரும்பவும் காண்டிராக்டர்களுக்கு அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதே முறையில் பல இடங்களில் நடைபெற்று இருக்கின்றன. என்னால் புள்ளிவிவரம் தரமுடியும். தேவைப்பட்டால் புள்ளிவிவரங்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

வெள்ள நிவாரணப் பணிகளை கவனிப்பதற்காக விமானம் நம் அரசாங்கத்திடம் இல்லாதது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆகவே, நம்முடைய அரசாங்கத்திற்கு என்றே தனியாக விமானம் இருக்கவேண்டும். உத்திரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் அரசாங்கமே விமானம் வைத்து இருக்கிறது. அதிலே முதலமைச்சர் போகிறார், இதுபோன்ற வெள்ள நிவாரணப்பணிகள் போன்றவற்றையும் செய்கிறார்கள். ஆகவே, நம்முடைய தமிழ்நாட்டிற்கு ஒரு விமானமோ அல்லது இரண்டு விமானமோ, டகோடா அல்லது அவ்ரோ வாங்கினால் அதன் மூலம் நாம் நிவாரணப் பணிகளை உடனடியாக கவனிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்ததாக புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 45,000 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. ஆனால், உதவிப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருப்பது 15 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் வீடுகளுக்குத்தான். மீதமிருக்கின்ற வீடுகளுக்கு உதவிப் பணம் தரப்படவில்லை. காரணம், அதில் சேதாரம் குறைவாக இருக்கிறது, 20 ரூபாய் அல்லது 25 ரூபாய் அளவுக்குத்தான் அவற்றில் சேதாரம் ஏற்பட்டிருக்கிறது என்று ஒதுக்கி விட்டார்கள். 500 ரூபாய் சேதாரம் ஏற்பட்டுள்ள வீடுகளுக்கு 200 ரூபாய் உதவிப் பணம் கொடுக்கிறபோது, 25 ரூபாய், 30 ரூபாய் சேதாரம் அடைந்துள்ள வீடுகளுக்கு 20 ரூபாயாவது கொடுத்தால் போதுமானதாக இருக்கும். அவர்களும் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதால், அரசாங்கம் உடனடியாக அவர்களுக்கும் ஏதாவது நிவாரணமளிக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோஷலிசத்தின் அடிப்படையில் எல்லா மக்களுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்ற வகையில் தேவையான உதவி செய்தாகவேண்டும்.



1977 டிசம்பர் 31] [திரு. நா. சுந்தரராஜ்]

அடுத்து, கிராமத்தில் இருக்கின்ற ஆற்றுப்படுகையில் வன இலாக்கா மரங்களை வைப்பதால், ஆற்றில் தண்ணீர் செல்ல தடையாக இருக்கின்றது. அதன் காரணமாக பக்கத்தில் இருக்கின்ற 'பண்டுகளில்' உடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் கிராமங்களில் புகுந்து விடுகிறது. ஆகவே, அந்த மாதிரி மரங்களை நடுவதைத் தடுத்து, ஆற்றுப் படுகையில் இருக்கின்ற வன இலாக்கா மரங்களை எல்லாம் நீக்கி, ஆற்றுப் படுகை ஆற்றுப் படுகையாக இருக்க வேண்டும் என்று சட்டமியற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணி தாலுகாவைச் சேர்ந்த சோழகனூர்வயல் என்ற கிராமத்தில் பாதிக்கப்பட்ட 12 ஹரிஜன வீடுகளின் நிவாரணப் பணிகள் அங்கேயுள்ள லோக்கல் பிரச்னைகள் காரணமாகத் தடைப்பட்டிருக்கின்றன. அங்கே ஏற்பட்டுள்ள சேதாரங்கள் பற்றிய படங்கள் என்னிடம் இருக்கின்றன. அந்த கிராம ஹரிஜன மக்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட கலெக்டருக்கும் மனுக்கள் அனுப்பியிருக்கின்றனர். ஆனால் இதுவரையில் எந்த விதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே உடனடியாக அதைக் கவனித்து பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு அரசாங்கம் முன்பணம் அளிக்கவில்லை, ஜி.ஓ. சரியாக விளங்கவில்லை என்று அங்கே சொல்லுகிறார்கள். ஆகவே சரியான ஜி.ஓ. போட்டு, அவர்களுக்கும் 250 ரூபாய் வெள்ள நிவாரண முன்பணம் கிடைக்க நடவடிக்கை எடுத்து, உடனடியாக ஜி.ஓ.வை அனுப்பி பணத்தைப் பட்டுவாடா செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிலப்படை அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. வெள்ளச் சேதம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் புல்டோசர் மூலமாக மண்ணை அகற்ற முடியாது. ஜனங்கள்தான் சென்று மண்ணை அகற்ற முடியும். புல்டோசர் செல்ல முடியாத

பகுதிகள் இருக்கின்றன. ஆளுநர் அவர்களின் உரையில் நிலப் படை அமைக்கப்பட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப் படும் என்று சொன்னார்கள். அப்படி நிலப்படையை அமைத்து மண்ணை அப்புறப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் உடனடி யாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக் கோட்டை மாவட்டம் கடந்த ஐந்து ஆண்டுகளாக பஞ்சத்தால் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட் டிருக்கிறது. ஆகவே பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதியில் தான் நிலவரி வஜா என்றில்லாமல், மாவட்டம் பூராவும் நிலவரி வஜா செய்ய வேண்டும், கடன்களை வசூலிப்பதை ஒத்திவைக்க வேண்டுமென்று சொல்லி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. இ. தமிழரசன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் படைத்துள்ள வெள்ளை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

நவம்பர் மாதத்தில் ஐந்து நாட்கள் நடைபெற்ற பயங்கரப் புயல், இதுவரை இந்தத் தமிழ்ச் சமுதாயம் கண்டிராத மிகவும் பயங்கரமான விபத்துக்களை ஏற்படுத்தி, இந்தத் தமிழகத்தைப் பாழ்படுத்தக்கூடிய நிலையில் கோரமாக வீசியதின் காரணமாக, தென்னார்காடு மாவட்டம், குறிப்பாக தஞ்சை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய இடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, நூற்றுக்கணக்கில் மனித உயிர்கள் பலியாகி, ஆயிரக்கணக்கில் நிலங்கள் பயிர்கள் அழிவுற்று, சாலைகளும், பாலங்களும் இடிந்து, மின்சாரம் அறுபட்டு, மக்கள் நரகலோகத்தில் இருக்கின்ற சூழ்நிலையில் தத்தளித்தார்கள் என்பதை இந்த மாமன்றம் நன்றாக உணரும் என்று நினைக்கிறேன்.

அந்த நேரத்தில் உயிர் இழந்து அனைத்து மக்களும், குறிப்பாக கணவனை இழந்த கைம்பெண்களும், அவர்களுடைய பிள்ளைகளும் தவிக்கிற நேரத்தில், பெற்றோர்களை இழந்து அனாதைகளாக வாழ வழியற்று, ஆதரிக்க நிலையற்று வேதனை யுறுகிற இளம் சிறார்கள் அவதிப்படுகிற நேரத்தில் என் சார்பாகவும் என்தொகுதி மக்கள் சார்பாகவும் அவர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.





இந்த பயங்கரமான சூழ்நிலையில் தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளை நிச்சயமாக நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே பல போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், கூலி உயர்வுப் போராட்டங்கள் இவற்றை யெல்லாம் சமாதானமாகச் சமாளித்து வெற்றிநடை போட்டுக் கொண்டிருந்த இந்த கழக அரசையும், நினைத்ததை முடிக்கிற மக்கள் தொண்டர் தமிழக தலைமகன் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும், புயல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் குறித்து வேதனைப்படக்கூடிய, வருத்தப்படக்கூடிய இந்த நேரத்தில் இருந்தபோதிலும், எங்கள் ஏழைப் பங்காளன், புரட்சித் தலைவர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் உடனடியாக சேதம் அடைந்த இடங்களுக்கு விரைந்து சென்று ஆதரவற்ற மக்களுக்கும் துன்புறும் மக்களுக்கும், வீடு இழந்து உற்றார் உறவினர்களை இழந்து தவிக்கும் ஏழை மக்களுக்கும் ஆறுதல் கூறி நிவாரணப் பணிகளில் இந்த அரசை ஈடுபடுத்தியமைக்கு நான் மிகவும் மனதாரப் பாராட்டுகிறேன். நல்ல மனம் படைத்த அனைவரும் பாராட்டுவார்கள்.

குறிப்பாக, வசதியாகவும் வளமாகவும், தன்னுடைய சொந்த முயற்சியில் செழித்து வாழ்ந்து வந்தமுறையில், சிறிதும் கஷ்டத்தை உணராத நிலையில் வாழ்ந்து வந்த எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களின் வாழ்வைக் கருதி, தமிழக மக்களின் புனர்வாழ்வைக் கருதி தன்னுடைய இன்பங்களை யெல்லாம் துறந்து 24 மணி நேரமும் மக்களுக்காகவே தன்னை இதில் அர்ப்பணித்துக்கொண்டு அந்தக் கொடுமையான சந்தர்ப் பத்தில் சேற்றிலும் சகதியிலும் இடுப்பளவு தண்ணீரிலும் கால் நடையாகவே அவ்வளவு தூரமும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, அவர்களுக்கு என்னென்ன தேவை என்பதைக் கேட்டறிந்து தக்க நடவடிக்கைகளை மேற் கொண்டு அதிகாரிகளுக்கு வாய் மூலமாகவே உத்தரவுகளை வழங்கி நிவாரணங்கள் அளித்தமைக்கு மிகவும் நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, அந்த நேரத்தில் தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள் தலைக்கு மேல் வெள்ளம் சென்றபோதுகூட நீந்திச் சென்று அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவாரணம் அளித்ததையும், ஹரிஜன நலத்துறை அமைச்சர்

[திரு. இ. தமிழரசன்] [1977 டிசம்பர் 31

திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் தன் கார் ஆற்றிலே மாட்டிக்கொண்ட நேரத்திலும் தன்னுடைய உயிரைத் துச்சமென மதித்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதையும் நிச்சயமாகப் பாராட்டுகிறேன்.

குறித்த காலத்தில் குடியரசுத் தலைவர் அவர்களையும் பாரதப் பிரதமர் அவர்களையும் ஏனைய அமைச்சர்களையும் நம் முதல் அமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இங்கே அழைத்து வந்து சேதாரங்களையெல்லாம் சுற்றிக் காண்பித்து, இங்கு ஏற்பட்டுள்ள நஷ்டங்களையும் மக்கள் துயரங்களையும் நேரில் காண்பித்து, எடுத்துரைத்து நஷ்டஈடு கோரி எவ்வளவு சேதாரங்கள் ஏற்பட்டுள்ளன என்பது பற்றிய புள்ளிவிவரங்களைக் கொடுத்து நிலைமைகளைத் தெளிவாக்கினார்கள்.

இங்கு வந்து பார்வையிட்ட அனைத்து அமைச்சர்களும், நிபுணர் குழுவும் இந்த அமைச்சரவையையும் அமைச்சர்களையும், இந்த நிர்வாகத்தையும் மிகப் பெரிதாகப் பாராட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதை இம்மன்றம் நன்கு உணரும்.

தமிழகம் வேதனையில் அமிழ்ந்து, ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழந்து, லட்சக்கணக்கான சொத்துக்கள் சேதாரமடைந்து எல்லோரும் துன்புற்றிருக்கும் நேரத்தில் குறிப்பிட்ட கட்சி ஒருசில பகுதிகளில் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை இந்த நேரத்தில் நான் மனித உணர்வோடு வன்மையாகக் கண்டிக்கிறேன்.

(முற்பகல் 11-30)

எனவே, இந்த மாதிரியான சோதனைக் கட்டங்களில் இனிமேல் எந்தமாதிரியான நிகழ்ச்சிகளிலும் எந்தக் கட்சியும், தங்கள் கட்சிக் கொள்கைகளையெல்லாம் மறந்துவிட்டு பூரணமாக நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குடியாத்தத்தை அடுத்துள்ள சொக்கராசிக்குப்பம் என்னும் இடத்தில் 150 வீடுகள் ஏரியில் மூழ்கிவிட்டன. அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும் புதிதாக வீட்டுமனை வழங்க புது இடங்களை காண்பித்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்



1977 டிசம்பர் 31] [திரு. இ. தமிழரசன்]

எங்கள் பகுதியில் பத்திரப்பள்ளி ஆறு, கொத்தூர் அருகே ஓடுகின்றது. இதில் வெள்ளப் பெருக்கம் ஏற்பட்டதன் காரணமாக 20, 25 ஆயிரம் ஏக்கர் நிலத்திலுள்ள பயிர்கள் எல்லாம் நாசமாகியிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி வருடா வருடம் இந்த ஆற்றில் தண்ணீர் பெருக்கு வரும்போது சேதம் ஏற்படுகின்றது. எனவே, இந்த பத்திரப்பள்ளி ஆற்றில் ஒரு அணை கட்டவேண்டும் என்று கடந்த முப்பது வருடங்களாக அங்குள்ள மக்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் ஏறத்தாழ 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும் இப்படி வருடா வருடம் சேதம் அடைவதையும் தடுக்க முடியும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் அதே தேர்தல், எல்மாங்குப்பம், வானகாரதோப்பு கிராமத்தில் சமீபத்தில் வந்த புயலால், எல்லா வீடுகளும் நாசமடைந்தன. சுவர்கள் எல்லாம் இடிந்து விட்டது. இப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிலப்பட்டாவும், மனைப்பட்டாவும் வழங்கி அவர்களை இந்த கோரப் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடகனாறு அணை ஊழலான முறையில் கட்டப்பட்டு உடைந்து பலநூறு உயிர்கள் இறந்துபோக காரணமாக இருந்தவர்களை விசாரணைக் கமிஷன் மூலம் விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் இந்தப் புயலால் பாதிக்கப்பட்டுள்ள அரங்கல்துர்க்கம் என்னும் கிராமத்தில் பஸ் ரோடுகள் எல்லாம் மிகவும் நாசம் அடைந்திருக்கிறது. இந்தச் சாலைகளை எல்லாம் சீர்படுத்த வேண்டும். மேலும் உதயேந்திரம் பேரூராட்சியின் ஏரி ஐந்நூறு ஏக்கர் பரப்புள்ள ஏரி. இதில் அதிகமான அளவுக்கு தண்ணீரை சேமித்து வைக்க முடியும். இந்த ஏரியையும் ஆழ்படுத்தி சீர்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் முதலமைச்சர் வேண்டுகோளுக்கு இணங்கி, நன்கொடைகள் அளித்த அனைத்துப் பொதுமக்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும், உலக நாடுகளுக்கும், பிற மாநில தலைவர்களுக்கும், பிற மாநிலத்திலுள்ளவர்களுக்கும், குறிப்பாக எங்களுடைய பகுதியிலுள்ள தோல் பதனிடும் தொழில் முதலாளிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1977 டிசம்பர் 31

* **திரு. மு. அம்பிகாபதி**: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கு புயல், வெள்ள நிவாரண சம்பந்தமான ஒரு வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். வரலாறு காணாத இந்தப் புயல் காரணமாக சகஜமான வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. கேரளாவிலும் ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் தாக்கிய இந்தப் புயல் கடந்த ஆண்டுகளில் ஒரிசாவிலும், வங்காளம் போன்ற இடங்களிலும் தாக்கியது. 12-11-1977 அன்று தஞ்சை தரணியில் தாக்கிய இந்தப் புயல் காரணமாக தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, முகவை போன்ற மாவட்டங்கள் கடுமையான சேதத்திற்கு உள்ளாகியது. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் வேடசந்தூர் பகுதி சீர்குலைந்து, சீரழிந்துபோய் இன்றைக்கு பரிதாபகரமாக அங்குள்ள மக்கள் காணப்படுகிறார்கள். மதுரை மாவட்டமும் கடுமையான சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது; விவசாயம் மிகுந்த தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களிலும் குடிசைகள் அனைத்தும் சீரழிந்து இருக்கிறது.

குறுவைப் பயிர் நின்றது, காற்றில் போய் விட்டது. காற்றில் சாய்ந்து கிடந்துவிட்டது, இளைத்துவிட்டது. சம்பாப் பயிர் எல்லாம் காற்றில் சூறையாடப்பட்டு சீர்குலைந்து நிலைகுலைந்து போய்விட்டிருந்தது.

சாலைகள் அனைத்தும் நாசம். மின்சாரக் கம்பங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் இவைகள் அனைத்தும் சேதமடைந்தன. நாகை உருக்கு உருட்டாலை, திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை, தமிழ்நாடு அரசு கரும்புப் பண்ணைக் கழகம், மன்னார்குடி டான்சி, வேதாரண்யம் உப்பளம், மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளி, பின்லே உயர்நிலைப்பள்ளி, ஜெயலட்சுமி விலாஸ், வாணி விலாஸ், மணிமேகலைப் பள்ளி, கணபதி விலாஸ், கூத்தாநல்லூர் உயர்நிலைப்பள்ளி, மேலும் பல கிராமங்களிலுள்ள பள்ளிகள் அனைத்தும் சேதமடைந்தன.

இத்தகைய கடுமையான சேதங்களை எல்லாம் நமது முதலமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் சுற்றிவந்து பார்த்திருக்கிறார்கள்.

நம்முடைய தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள் அங்கேயே இருந்து, நிவாரணப் பணிகளை நேரடியாகவும், துரிதமாகவும் நடைபெற செய்தமையை நான் வரவேற்கிறேன்;



1977 டிசம்பர் 31] (திரு. மு. அம்பிகாபதி)

பாராட்டுகிறேன். அதேபோல், அன்றைக்கு குறிப்பாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் தஞ்சை மாவட்டத்திற்கு வருகைதந்து, உதவிகள் செய்தமைக்காக அவர்களையும் நான் பாராட்டுகிறேன். தஞ்சை மாவட்டத்தில் இந்தப் புயல்—வெள்ளத்தால் அழிந்த நெல், வாழை, கரும்பு, தென்னை, புகையிலை ஆகியவற்றின் பலன்களையு, அங்கேயுள்ள வீடுகளின் சேதத்தின் மதிப்பீடுகளையும் கணக்கிட்டுப் பார்த்தால், பல கோடி ரூபாய் நாசமானது என்பது நமக்குத் தெரியும்.

எனவே, வருங்காலத்தில் இத்தகைய புயல் உருவானால், சோஷலிச நாடுகளின் விஞ்ஞானிகளின் உதவியோடு, அந்தப் புயல் வலுவடையாமல் இருக்கவும், அந்தப் புயலின் திசையைத் திருப்புவதற்குமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதை மத்திய அரசாங்கம் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புயலின் சேதம் என்பதை தமிழ்நாடு, ஆந்திரா என்றெல்லாம் பார்க்காமல், யுத்தம் வந்தால் எப்படி அனைத்தையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறதோ, அதேபோல் இந்தப் புயல் நிவாரணத்தையும் தேசிய சேதமாகக் கருதி புயலால் ஏற்பட்ட அனைத்து சேதத்தையும் மத்திய அரசே ஏற்க முன்வர வேண்டும். மொத்த சேதத்தில் 33 கோடி, 9 லட்சம் மத்திய அரசாங்கம் அளிக்கும் என்று சொல்வது சரியல்ல என்பதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, புயலை எதிர்த்துத் தடுக்க மனிதன் முயற்சிக்க வேண்டும். மனிதன் இன்றைக்கு இடியைத் தடுக்கின்றான், மின்னலைக் கட்டுப்படுத்துகின்றான். இன்றைக்கு சோவியத் நாட்டிலே விஞ்ஞானிகள் சந்திர மண்டலத்திற்கே செல்லக் கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. அதிலே மனிதன் ஒரு தெளிவைக் கண்டிருக்கிறான். எனவே, இது ஒரு விதி என்று மேலும் கருதாமல், இந்தப் புயலையும் கட்டுப்படுத்த முடியும் என்று அதற்கான நடவடிக்கையிலே நாம் ஈடுபட வேண்டும்.

இது விஞ்ஞான யுகம். கடவுள் இருக்கிறேன் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக, இப்படிப் பல லட்சக்கணக்கான மக்களைச் சாகடித்து, நான் இருக்கிறேன் என்று சொல்லக்கூடிய கூற்றை நாம் ஏற்க முடியாது. எனவே, நாம் இதற்கான

[திரு. மு. அம்பிகாபதி] [1977 டிசம்பர் 31

முயற்சிகளை மேற்கொண்டு, விஞ்ஞானத்தின் உதவியின் மூலம் எப்படிப் புயலை நாம் திசை திருப்ப முடியும், அல்லது வலுவிழக்கச் செய்ய முடியும் என்பதற்கான ஆராய்ச்சியிலே ஈடுபட வேண்டும். எனவே, நாம் இந்த ஆக்கப்பூர்வமான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சந்திர மண்டலத்திற்கே போய் ஜெயித்த மனிதன், இதிலே முயற்சி செய்தால் நிச்சயம் தடுக்க முடியும். எனவே, இந்தப் புயல் ஆண்டவனால் உண்டாக்கப்படுகிறது என்கின்ற கருத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியாது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன். விஞ்ஞான வளர்ச்சியால் ஒரு புதிய உலகத்தையே ஆக்கலாம். எனவே, அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் தோழர் எம். கல்யாணசுந்தரம், எம்.பி., அவர்கள் இந்தப் புயல் வீசுவதைப் பற்றி மிகவும் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். அதிலே அவர் மத்திய அரசு புயலை எவ்வாறு தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஏற்கனவே கமிட்டிகள் அளித்துள்ள அறிக்கைகள் பற்றியும் விளக்கிப் பேசியிருக்கிறார்கள். அதிலே நமது சேதம் அதிகம். எனவே 200 கோடி வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அப்படி எடுத்துச் சொல்லியும், மத்திய அரசு அதிலே 33.91 கோடி ஒரு பகுதியைத் தான் நாங்கள் தருவோம், அதையும் திட்டத்தில் ஈடுகட்டிக் கொள்வோம் என்று கூறுவது சரியல்ல, பெருந்தன்மை ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே நாம் கட்சி வேறுபாடின்றி, ஒரே குரலில் நமக்கு ஏற்பட்ட சேதத்தை நீக்க 200 கோடியை கொடுக்க வேண்டுமென்று கோர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம், திருவாரூரிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாபெரும் பேரணி நடக்கிறது. அதிலே புயல் நிவாரணப் பணிக்காக மத்திய அரசை 200 கோடி கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்த இருக்கிறார்கள். அதிலே பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். எங்கள் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களும் கலந்து கொள்கிறார்கள். அதேபோல், மன்னார்குடியில் 11—12—77



1977 டிசம்பர் 31] [திரு. மு. அம்பிகாபதி]

அன்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் மாநாட்டில் அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டு, பல கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அவைகளின் மீதெல்லாம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. அவற்றின் மீதெல்லாம் நடவடிக்கைகள் எடுத்து, மத்திய அரசிடமிருந்து பெற வேண்டியதைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெரும் சேதத்தையும், இழப்பையும் ஈடுகட்ட, அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயல்பட, பஞ்சாயத்து, மாவட்ட, மாநில அளவிலே சர்வகட்சிக் குழுக்களை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்கதாகும். ஆனால், இந்தக் குழுக்கள் நகராட்சி மன்றங்களுக்கும் அமைக்கப்பட வேண்டும். மேலும், அங்குள்ள ஒவ்வொரு வார்டுக்கும் அது விஸ்தரிக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கப்படக்கூடிய கமிட்டிகள், கிராமங்களிலும், நகரங்களிலும் புயல் நிவாரணம் கிடைக்காமல் விடுபட்ட வீடுகளையெல்லாம் பரிசீலித்து, அவர்களுக்கும் உடனடியாகப் பணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.40]

சில இடங்களில் உண்ணாவிரதம் நடைபெற்று வருகிறது. பரமக்குடியில் திருமதி சண்முகம் தலைமையில் மாதர் சங்கம் உண்ணாவிரதம், மன்னார்குடியில் உண்ணாவிரதம், திருத்துறைப் பூண்டியில் உண்ணாவிரதம். காரணம் என்ன ? கிராமத்திற்கு 10, 20 வீடுகள் விட்டுப் போயிருக்கலாம். அங்கிருக்கும் கிராம அதிகாரிகள், கர்ணம் போன்றவர்களால் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற வகையிலே விட்டுப் போயிருக்கலாம். இதுபற்றி சர்வ கட்சி கமிட்டி பரிசீலித்துச் சொல்லுவதன் பேரில் அரசு அவர்களுக்கும் உதவிகளைச் செய்யும்படி உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நரிக்குறவர், பர்மா, சிலோன் அகதிகள் காலனிகளுக்கும் உடன் உதவ வேண்டும்.

புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் 1385, 1386 ஆகிய இரு பசலிகளுக்கான கடனையும் தள்ளுபடி செய்ய கமிட்டி அமைக்க வேண்டும். 1387 ஆம் பசலிக்கு, புயல் அடித்த

ஆண்டில் சகல கடனையும் ரத்து செய்ய வேண்டும். குத்தகை பாக்கிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும்; ஜப்தி நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அரசு ஊழியர்கள் அனைவருக்கும் 1955 ஆம் ஆண்டில் அளித்ததுபோல் மூன்று மாத அடிப்படைச் சம்பளம் புயல் வீசிய பகுதிகளில் அளிக்கப்பட்டு 36 தவணைகளில் பிடிக்க வேண்டும். விடப்பட்டுள்ள பஞ்சாயத்து ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆசிரியர்களுக்கு உடனடியாக உதவித் தொகை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். உருக்காலை, சர்க்கரை ஆலை, உப்பளம், டான்சி, பஞ்சாலை, நகரசுத்தி, மதுமரத் தொழிலாளர்கள் அனைவருக்கும் நிவாரணம் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு 46 லட்சத்திற்கு மேல் நஷ்டம்; ஆரூரான் சர்க்கரை ஆலையில் கடுமையான நஷ்டம்; 70, 80 நாட்களுக்கு மேல் சர்க்கரை ஆலை இயங்க முடியாது. குருங்குளம் சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பு போக மீதியை இந்த ஆலைக்குத் திருப்பிவிட வேண்டும். இல்லையென்றால் 70 நாட்களுக்குப் பிறகு வேலை நீக்கம், லே ஆப் போன்ற நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டு தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அரசு இதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்.

புயல் வீசிய பகுதிகளில் மின்சார பாக்கிகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும். ஓராண்டுக் காலம் செய்ய வேண்டிய நிர்மாணப் பணிகளை மின்சார ஊழியர்கள் பத்தே நாட்களில் முடித்திருக்கிறார்கள். மதுரை, திருச்சி, தென்னாற்காடு போன்ற பகுதிகளிலிருந்து மின்சார ஊழியர்களும், தொழிலாளர்களும் தஞ்சைக்கு வந்து கடுமையாக உழைத்து தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பணியை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடற்கரை அருகாமையில் புகலிட இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும். புயல் பற்றி முன்னறிவிப்பு செய்யும் சாதனங்களை அமைக்க வேண்டும். தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கும், கடற்கரை ஓரத்தில் வாழும் மீனவர்களுக்கும் புயல் மழையால் பாதிக்கப்படாத வீடுகள் கட்டித் தர வேண்டும். இந்தப் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள், உழைக்கும் தொழிலாளர்கள், அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட





மக்கள்தான். அவர்களுக்காக ஒரு சிறப்புத் திட்டத்தை யுத்த காலத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் அரண் அமைத்துக் கொடுப்பது போல் இவர்களுக்கும் அமைத்துக் கொடுக்க வேண்டும். நாகை தாலுகா, திருத்துறைப்பூண்டி தாலுகா, மன்னார்குடி தாலுகா ஆகிய பகுதிகளில் அந்த மாதிரி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வளவையும் செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லும் போது 30 கோடி பற்றாக்குறை பட்ஜட் என்று அமைச்சர் அவர்கள் வெள்ளை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இவற்றை எல்லாம் செய்து முடிக்க இந்தச் சட்டமன்றப் பேரவை ஒரே குரலோடு மத்திய அரசை நோக்கி 200 கோடி ரூபாய் கொடுங்கள்; 100 கோடி நீண்ட காலக் கடனாகவும், 100 கோடி மானியமாகவும் கொடுங்கள் என்று சொல்ல வேண்டும். யுத்த காலத்தில் பாதிக்கப்படுகிற பஞ்சாப் பகுதி என்றெல்லாம் பார்க்காது மத்திய அரசே நேரடியாக நடவடிக்கை எடுப்பதுபோல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் கருதி மத்திய அரசு நிவாரணப் பணிகளில் நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் விவசாய இயந்திரத்தின் மீது இத்தகைய கடுமையான தாக்குதல் வன்மைக் காலத்தில் ஏற்பட்டதில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சிலின் இங்கிருக்கக்கூடிய நிர்வாகக் குழு மத்திய அரசாங்கம் 200 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறது. 12—11—77-ல் புயல்; 25, 26, 27 ஆகிய மூன்று நாட்கள் கடும் மழை; மழையின் விளைவாக வீடுகள் விழுந்துவிட்டன; கல் சுவரோடு கூடிய ஓட்டு வீட்டுக்காரர்களுக்கு நிவாரணம் இல்லை; மண் சுவரால் ஆன ஓட்டு வீட்டுக்காரர்களுக்கு நிவாரணம் உண்டு. கல் சுவரால் கட்டப்பட்டுள்ள வீடுகளில் உள்ள விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 4,000 தென்னை மரங்களில் 3,500 சேதம்; நாலு இருந்தால் மூன்று சேதம்.

சேதம் என்ற அடிப்படையில் புயல் சகலரையும் தாக்கியிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் நன்றாகக் காய்க்கக்கூடிய தென்னை மரங்கள் விழுந்துவிட்டன. காயே இல்லாத மொட்டை மரங்கள் சாய்ந்து வருகின்றன. தென்னை என்பது தேசிய பொருளாதாரத்தை தரக்கூடிய ஒரு செல்வம். அதைக் காப்பதற்கு, தென்னம்

பிள்ளைகளைப் போடக்கூடிய விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் மானியமாகவும், ஆயிரம் ரூபாய் கடனாகவும் கொடுக்க வேண்டும். அதேபோன்று பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கும், வாழை, புகையிலை பயிர் செய்தவர்களுக்கும் ஏக்கருக்கு 1000 ரூபாய் மானியமாக வழங்க வேண்டும். கரும்பு, புகையிலை வாழை போட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏக்கருக்கு 100 ரூபாய் மானியமாகக் கொடுக்க வேண்டும், அதோடு உற்பத்திக்கான கடன்களையும் அரசு கொடுக்க வேண்டும்.

வேதாரண்யத்திலே உப்பளங்கள் அனைத்தும் சேதம். அங்கே உள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் சேதம். மன்னார்குடியிலே டான்சி சேதம், நாகையிலே உருக்கு உருட்டாலைக்குப் பெரும் சேதம். அங்கே கலவரம் ஏற்பட்டு, அதிலே அமிர்தலிங்கம், பாலகிருஷ்ணன் என்பவருக்கும் கத்திக்குத்து பட்டு அவர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அதைப்பற்றி நான் ஒரு தனி ஒத்திவைப்புத் தீர்மானமே கொடுத்திருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமையில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கட்சி வித்தியாசம் பார்க்காமல் தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களின் நலனைக் கருதி, ஏழை எளிய மக்கள், வசதியற்றவர்கள், தொழிலாளர்கள் அனைத்துப் பகுதி மக்களுடைய நன்மையை மனதிலே தாங்கி நிவாரண வேலைக்கு 200 கோடி ரூபாய் கொடுக்கவேண்டும் என்று ஒருமுகமாகக் கேட்டு நிற்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. க. அரங்கசாமி:** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் புயலால் பாதிக்கப்படாவிட்டாலும் கூட பெருமழையால் அங்கே மண்சரிவு ஏற்பட்டு சாலைகள் எல்லாம் போக்குவரத்துக்கு வசதியில்லாமல் ஒரு வாரம் மூடப்பட்டிருந்தது. அவைகளைச் செப்பனிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்களும், கிழங்கு விவசாயம் செய்கின்ற விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டு அவர்கள் போட்ட கிழங்கு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. கிழங்கினுடைய அறுவடை காலம் 90 நாட்கள், அதில் மழை பெய்ததோ 45 நாட்கள். வெள்ளத்திலேயே 45 நாட்கள் அந்தப் பயிர்கள் கிடந்திருக்கின்றன. இதனால் ஆங்காங்கு கிழங்குப் பயிர்





பாதிக்கப்பட்டு அவர்கள் போட்ட முதலைக்கூட எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. கடன்களைத் திருப்பிக் கட்டக்கூடிய நிலையில் இல்லை.

ஆகவே, அரசு இதுபோன்று பாதிக்கப்பட்ட சிறு தேயிலை, கிழங்குகள் பயிரிடும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை ரத்து செய்வதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மானியங்களையும் விதைகளைக் கடனாகவும் கொடுக்க வேண்டும். மண் சரிவு ஏற்பட்ட காரணத்தால் அந்தப் பகுதியிலே நடந்து சென்றவர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களை அதிகாரிகள் வந்து பார்த்துச் சென்றும்கூட இதுவரை எந்தவிதமான உதவித் தொகையும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அவர்களைப் பாதுகாக்க உடனடியாக உதவித் தொகை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

அதேபோல, மண் சரிவினால் பல வீடுகள் இடிந்து, அவைகளை மீண்டும் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். எப்படியென்றால், நீலகிரி மலையைப் பொறுத்தவரையில், எங்கு பார்த்தாலும் மலையிலேதான் வீடுகள் கட்டுவது வழக்கம். அப்படிக் கட்டுகின்ற நேரத்தில் ஒரு பகுதி மேடாகவும், ஒரு பகுதி சம பகுதியாகவும் இருக்கும். இப்படியுள்ள பகுதிகளில் மண் மேடாக உள்ள பகுதி மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் மண் சரிவு ஏற்பட்டு, பின் பகுதி வீடுகள் அப்படியே மண்ணால் மூடப்பட்டிருக்கிறது. அதுபோன்று பாதிக்கப்பட்ட வீடுகள் அத்தனையிலும் ஏழைக் குடிமக்களும், மிகவும் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வீடுகளை மீண்டும் புதுப்பித்துத் தரும் அளவிற்கு அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை எனக்கு நல்கிய உங்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி விடைபெறுகிறேன்.

* **திரு. கே. வடிவேலு:** பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, கடந்த நவம்பர் மாதம் 13 ஆம் தேதியன்று ஏற்பட்ட மாபெரும் புயலாலும், வெள்ளத்தாலும் தமிழ்நாட்டிலே

உண்மையிலேயே அதிகமாகப் பாதிக்கப்பட்ட தொகுதி கரூர் தொகுதியும், அரவக்குறிச்சி தொகுதியுமாகும். இங்கேயுள்ள அத்தனை பேரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; வேடசந்தூரிலுள்ள குடகனாறு அணையைப் பற்றி, அந்த அணை கட்டப்பட்டிருக்கும் இடம், மதுரை மாவட்டத்தின் வடக்குக் கோடி இடமாகும். அந்தத் தண்ணீர் எந்தப் பகுதி வழியாகச் சென்று எந்தெந்தப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்தால் அது அரவக்குறிச்சி பகுதியாக இருக்கும்.

குடகனாறு அணை உடைந்து தண்ணீர் அரவக்குறிச்சிக்கு வந்து அமராவதி ஆற்றில் கலந்து, அங்கே மாபெரும் வெள்ளத்தை ஏற்படுத்தி, கரூர் நகரத்தின் எல்லையோரப் பகுதிகள் அத்தனையையும் அடித்துச் சென்றுவிட்டது. அந்த அணை உடையாமல் இருந்திருந்தால் திருச்சி மாவட்டம் நிச்சயமாகப் பாதிக்கப்பட்டிருக்காது என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும். அணை உடைந்த அடுத்த நாளே நாங்கள் அதைப் பார்த்தோம். அந்த நேரத்தில் அந்த அணை கட்டப்பட்டிருக்கும் விதத்தைப் பார்த்தால் சாதாரண ஒரு கூலி வேலை செய்யும் மேஸ்திரி கூட கணக்கிட்டுச் சொல்ல முடியும், அஸ்திவாரமே இல்லாமல் கட்டப்பட்டது என்று சொல்ல முடியும். சாதாரணமாக எந்த ஒரு வீட்டைக் கட்ட எடுத்துக் கொண்டாலும் அஸ்திவாரம் போட்டு அதற்கும் கருக்கல்லோ அல்லது மற்ற கற்களையோ வைத்து சிமெண்ட் போட்டு, அஸ்திவாரம் போட்டு ஸ்ட்ராங்காக ஆக்கியபிறகுதான் சுவர்களை எடுப்பார்கள்.

ஆனால் இந்த அணையைப் பொறுத்தவரையில் அஸ்திவாரமே இல்லாமல் மண் குவிக்கப்பட்டு, ஓரங்களிலே கல் பதிக்கப்பட்டு, அந்தக் கற்களின் சந்திலே சிமெண்ட் கூடப் பூசாமல் கட்டப் பட்டதாகத் தெரிகிறது. இதை நான் சொல்லவில்லை, அந்த அணைக்குப் பக்கத்திலே குடியிருக்கின்ற மக்கள் அத்தனைபேரும் சொல்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அந்த அணைக்கு எத்தனை மூட்டைகள் சிமெண்ட் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி வருகின்ற விசாரணைக் கமிஷன் நிச்சயமாகக் கண்டுபிடிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான சிமெண்ட்





மூட்டைகள் அணைக்காக எடுத்துச் செல்லப்படுவதாகச் சொல்லி கரூர் நகரத்தைத் தாண்டாமலேயே வழியிலே சென்று விட்டது என்று அந்தப் பகுதி மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அந்த அணைக்கு மத்தியிலே ஓர் ஊர் இருக்கிறது. அங்கு அணை கட்டப்பட்டு விட்ட பிறகும்கூட அந்த ஊர் மக்கள் வேறு இடத்திற்கு மாற்றிச் செல்லப்படவில்லை என்பதைப் பற்றியும் சொன்னார்கள். இதற்குக் கடந்த அரசு நடவடிக்கை எடுத்ததா என்பதையும் பார்க்க வேண்டும். காரணம், அணை கட்டப்பட்டு முடிந்தபிறகும், அந்த அணையின் நடுப்பகுதியில் உள்ள ஊரின் மக்கள்—அந்த ஊரின் பெயர் அழகாபுரி என்று கருதுகிறேன்—அந்த ஊரிலிருக்கின்ற மக்கள், அணை கட்டப்பட்டு முடிந்தபிறகும் எங்களுக்குக் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையைக் கடந்த அரசு கொடுக்கவில்லை, ஆகவே, நாங்கள் இதைக் காலி செய்யவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாகக் கடந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைப் பற்றியும் வருகின்ற விசாரணைக் கமிஷன் ஆராய்ந்து, அதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த அணை கட்டுவதற்கு எத்தனை மூட்டைகள் சிமெண்ட் பயன்படுத்தி இருக்கிறார்கள்? எத்தனை மூட்டைகளுக்கு பர்மிட் வழங்கப்பட்டது என்பதைப் பற்றித் தீவிரமாக ஆராய வேண்டுமென்ற என்னுடைய தாழ்ந்த கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். அந்த அணை உடையாமல் இருந்திருந்தால் நிச்சயமாக இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. சொல்லப் போனால் அரவக்குறிச்சி பகுதியில் நூற்றுக்கணக்கான உயிர் இழப்பு ஏற்பட்டதற்குக் காரணம் அதுதான். அந்த அணையை எமனாத அணை என்று கூடச் சொல்லலாம். 3 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு 30 கோடி ரூபாய்க்கான நஷ்டத்தை ஏற்படுத்திய அணை அது, ஊழலால் கட்டப்பட்ட அணை, கலப்பட அணை என்று சொல்லக்கூடிய அணை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த அணை கட்டப்பட வேண்டிய இடத்தில் கட்டப் படவில்லை. அதுமட்டுமல்லாமல் நேற்று முன்தினம் பேசிய உறுப்பினர் ஒருவர் சொன்னார், அணை உடைந்ததா, கரை

(திரு. கே. வடிவேலு) [1977 டிசம்பர் 31

உடைந்ததா என்று கேட்டார். அந்த உறுப்பினரவர்கள் அந்த அணையைச் சென்று பார்த்தால் அணை உடைந்ததா அல்லது கரை உடைந்ததா என்று நிச்சயமாகக் கண்டு கொள்வார்கள்.

அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அந்த அணை உடைந்ததைப் பார்க்கச் சென்ற நேரத்தில், அவர்களுக்குக் கொடுத்த ஆடம்பரத்தை பார்த்தோமானால், கிட்டத்தட்ட 150 கார்கள் தலைவருக்குப் பின்னாலே சென்றதாகக் கேள்விப் பட்டேன். 150 கார்களுக்குக் குறைந்தது ஒரு காருக்கு ரூ. 100 வாடகையும் பெட்ரோலும் என்றால், ரூ. 15,000 நிச்சயம் செலவாகியிருக்கும். அந்த ரூபாய் 15,000-ஐக் கொண்டு, ஒரு கிராமத்தைக் கூட உருவாக்கியிருக்கலாம்.

அணை உடையவில்லை, கரைதான் உடைந்தது என்று சொல்கிறார்கள். நான் அங்கு சென்று பார்த்தது மட்டுமல்ல, மக்கள் கண்ணீர் விட்டுச் சொல்கிறார்கள். அந்த அணையை நிர்வகிக்கக்கூடிய அதிகாரிகள் சரியாகத் தங்கள் பணிகளைச் செய்தார்களா? முதலில், அணை கட்டும் வேலையைச் சரியாகச் செய்தார்களா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று தாழ்மையோடு சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே—இதற்கு முன்பு வெள்ளம் என்றாலும், தீ என்றாலும், ஒரு குடும்பத்திற்கு ரூ. 80 கொடுத்துக் கொண்டிருந்தார்கள்—அதை, இன்றைய சூழ்நிலையில், ரூ. 200 ஆக உயர்த்தியதற்குப் பாராட்டு தெரிவிக்கிறேன். நான் பாராட்டுவது மட்டுமல்ல, என் பகுதியிலே இருக்கிற மக்கள் ஒவ்வொருவரும் புரட்சித் தலைவர் வாழ்க, வளர்க என்று சொல்கிறார்கள். வெள்ளம் ஏற்பட்டவுடனே, மாண்புமிகு திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் உடனடியாக அந்த இடத்திற்கு வந்து, எல்லா இடங்களையும் சுற்றிப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அங்கே தங்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் கொடுத்து வந்தார்கள்.

அது மட்டுமல்ல, நம்முடைய மதிப்பிற்குரிய நாஞ்சிலார் அவர்களும் என்னுடைய தொகுதிக்கு, உடனடியாக விரைந்து மக்களுக்கு ஆறுதல் கொடுத்தது மட்டுமல்ல, அங்கேயுள்ள மக்களுக்குத் துணிகளும் கொடுத்தார்கள். உணவுத் துறை அமைச்சரவர்கள் மக்களுக்கு ஆறுதலைச் சொல்லி, கடமையைச்



1977 டிசம்பர் 31] [திரு. கே. வடிவேலு]

செய்தார்கள். அப்படிச் செய்த அமைச்சர்களுக்கும் நான் இந்த நேரத்தில் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்தை எடுத்துக் கொண்டால், என்னுடைய பகுதியிலே, மஞ்சள், வாழை, கரும்பு ஆகிய அனைத்தும் அடித்துச் சென்றுவிட்டன. தண்ணீர் வந்த வேகத்தை மட்டும் கணக்கிட்டால், தென்னை மரங்களெல்லாம் வேரோடு அடித்துச் செல்லப்பட்டன. தென்னையே அடித்துச் செல்லப்படக் கூடிய நேரத்திலே, வாழையும், மஞ்சளும், கரும்பும் இருக்க முடியவில்லை.

அதோடு மட்டுமல்ல, மணல் மேடிட்டு, பெரிய மேடாகி, யார், யார் நிலம் எங்கெங்கேயிருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதற்காக, நம்முடைய அரசாங்கம் புல்டோசர்களை விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுத்து, மண் மேடிட்டதை நீக்க, அவர்கள் நன்கு விவசாயம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதை இன்னும் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதி, கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. அங்கு, 400-க்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வைத்திருந்த பாவுகள் எல்லாம் போய் விட்டன. ஒவ்வொரு தறியை இழந்தவர்களுக்கும், ரூ. 125-ம் ரூ. 200 மானியமாகவும், ரூ. 300 கடனாகவும் அரசு வழங்குவதை நான் மனமார்ந்த நன்றியுடன் வரவேற்கிறேன். அது போதாது. நம்முடைய அரசாங்கம் இன்னும் செய்ய வேண்டும். காரணம், அவர்கள் ஒன்றும் இல்லாமல் அவதிப்படுவார்கள்.

அது மட்டுமல்ல, என்னுடைய தொகுதியிலே, கிட்டத்தட்ட 15 ஊர்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. மாணவர்களது புத்தகங்களும், சிலேட்டுகளும் அடித்துச் செல்லப் பட்டிருக்கின்றன. அம்மாணவர்களுக்குப் புத்தகங்களும், சிலேட்டுகளும் வாங்கித் தர வேண்டும். பள்ளிக்கூடங்கள் அடித்துச் செல்லப்பட்டன. அங்குப் பள்ளிகளை மீண்டும் அங்கு அமைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியிலே, நொய்யலாறு திட்டம் வேண்டுமென்று 30 ஆண்டுகளாக நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். போராடிக் கொண்டிருக்கிறோம். குடகனாறு அணையைக் கட்டியதைவிட, நொய்யலாறு திட்டத்தை நிறைவேற்றியிருந்தால், கிட்டத்தட்ட 20,000 ஏக்கர்கள் சாகுபடிக்கு வந்திருக்க முடியும். இன்றையதினம், நொய்யலாற்றின் நீர் கடலிலே தான் கலக்கிறது. ஆகவே, அந்த நீர் கடலிலே கலக்காமலிருக்க, நொய்யலாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமருகிறேன்.

(நண்பகல் 12.00)

திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, 1977 லே, அக்டோபர், நவம்பர் மாதங்களிலே, இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட மழை, புயல் காரணமாக ஏற்பட்ட உயிர்ச் சேதம், பொருட்சேதம் இவைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பாதிக்கப்பட்டு துயருற்ற மக்களுக்கு இந்தத் தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுத்து உடனுக்குடன் உதவி செய்வதிலே, கண்ணும் கருத்துமாக இருந்து பணிபுரிந்தமைக்கு, இந்த அரசுக்கும் எங்களுடைய சார்பிலே பாராட்டுதலையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய ஒட்டன்சத்திரம் தொகுதியைப் பற்றி சில கருத்துக்களை நான் இங்கே கூற விரும்புகிறேன். மற்ற எல்லா பகுதிகளிலும் உயிர்ச் சேதம், பொருட்சேதம் இரண்டும் ஏற்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆனால், என்னுடைய பகுதியிலே உயிர்ச் சேதம் இல்லை. அந்த அளவுக்கு ஏதோ தெய்வச் செயலால் உயிர்ச் சேதம் இல்லை. அரசினுடைய முன்னறிவிப்பு காரணமாக, உயிர்ச் சேதமில்லாமலிருக்கிறது. ஆனால், பொருட்சேதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு சடையகுளம், அதோடு, பெரியகுளத்தில் 300 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. அந்தக் குளம் பொதுப் பணித் துறையின் பொறுப்பிலே உள்ள குளம். அந்தக் குளங்களெல்லாம்





உடைந்து, அதன் பாசனத்திலுள்ள நஞ்சை நிலங்களெல்லாம் பாதிக்கப்பட்டு, விவசாயமெல்லாம் பாதிக்கப்பட்டு, இப்பொழுது அந்தக் குளங்களில் ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லாமல் அந்த விவசாயிகள் பயிர் செய்ய முடியாமலிருக்கிறார்கள். அதோடு புஞ்சை நிலங்கள் பல பகுதிகளிலே, மண் மேடிட்டோ, அல்லது அறுக்கப்பட்டோ, விவசாயத்திற்கு இலாயக்கற்ற நிலைமையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அதற்கெல்லாம், காரணம், எங்களுடைய பகுதி, கடந்த 4, 5 ஆண்டுகளாக வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் துன்பப்பட்டுக் கொண்டிருந்த பகுதி. அப்படிப்பட்ட பகுதியிலே, வறட்சி நிவாரண வேலை என்கிற அடிப்படையிலே, பல பகுதிகளிலே, என்னுடைய ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திலும், பாப்பன்பட்டி ஒன்றியத்திலும் சேர்ந்து சுமார் 100 நீர்க் குட்டைகள் நிவாரண வேலையில் செய்யப்பட்டன. அப்படி செய்யப்பட்ட நீர்க் குட்டைகள் அனைத்தும், மறுகால் இல்லாமலே, முட்டிட்டு அடைத்துக் கொண்ட காரணத்தால் பெரும் மழை பெய்து, அத்தனையிலும் உடைப்பு எடுத்து, அந்தக் குட்டைகளுக்குக் கீழே உள்ள நிலங்களெல்லாம், ஓடைமயமாகக் காட்சி அளிக்கின்றன. பொதுப் பணித் துறையிலே உள்ள குளங்களைச் சீர் செய்ய பொதுப் பணித் துறை வேலை செய்ய முன்வந்திருக்கிறது.

ஆனால், வறட்சி நிவாரணக் காலத்திலே போடப்பட்ட குட்டைகளை யார் எடுத்துச் செய்வது, பொதுப் பணித் துறையா, வேறு யாராவதா என்ற சூழ்நிலை ஏற்பட்டு, ஆரம்பத்திலேயே உத்தரவு இல்லாத காரணத்தாலே, அந்த வேலைகள் தடைப்பட்டு இருக்கின்றன, ஆகவே, அந்த வேலைகளுக்கு ஒரு விளக்கமான உத்தரவை அரசு பிறப்பித்து, உடைந்த குட்டைகளை மீண்டும் சீர்செய்து, அமைத்துக் கொடுத்தால்தான் அந்தப் பகுதி மக்கள் விவசாயம் செய்ய முடியும். இல்லாவிட்டால், ஒவ்வொரு தடவையும் பெய்யும் மழை, அந்த இடங்களிலே ஓட்டைகளைப் போட்டுக் கொண்டிருக்கும். அந்த வகையிலே, அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பி, அந்தக் குட்டைகளைச் சீர் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே சுமார் 2,000 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதில் இருந்த அரிசனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், ரூ. 100, ரூ. 60, ரூ. 80 என்கிற வகையிலேதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் அந்த 200 ரூபாய் கொடுக்க வேண்டும். ஒரு சுவர் இடிந்தால் இரண்டு சுவர் இடிந்தால் என்ற கணக்கும் பார்க்காமல், ஒரு சுவர் இடிந்தாலும், 2 சுவர் இடிந்தாலும் ரூ. 200 அளிக்க வேண்டும். ஒரு சுவர் இடிந்தால் அதைக் கட்டுவதற்கே ரூ. 200 போதாது. 4 சுவரும் இடிந்தால் தான் ரூ. 200 என்று சொன்னால் அது சரியல்ல. ஆகவே, குடியிருக்கத் தகுதியில்லாத நிலையில் ஆகிவிட்டவர்களுக்கு ரூ. 200 கொடுக்க வேண்டும், அந்த முறையில் அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இளயக்கோட்டை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கடையக்குளம் உடைந்தால் இளயக்கோட்டை பாழ் என்று பழமொழி சொல்வார்கள். அந்த கடையக்குளம் 120 ஆண்டுகளுக்கு முன்பாக உடைந்தது. அப்போது எந்த இடத்தில் உடைந்ததோ அதே இடத்தில் தான் இப்போதும் உடைந்து இருக்கிறது. அதன் காரணமாக அந்தத் தண்ணீர் ஆற்றில் விழுந்துவிட்ட காரணத்தால், ஊரை அது அடித்துக்கொண்டு சென்றது. அதனால், இளயக்கோட்டையிலே போலீஸ் ஸ்டேஷன் சேதம் அடைந்து இருக்கிறது. அங்கேயிருக்கும் ரிகார்டுகள் அடித்துக் கொண்டு போய்விட்டு இருக்கிறது.

அதேமாதிரி 100 வீடுகள் குடியிருக்க லாயக்கு இல்லாமல் போய் இருக்கிறது. அதேபோல், பருத்தியூர், நிலதங்காள் கோட்டை, அணைப்பட்டி, ஆரணம்பட்டி போன்ற பகுதிகளிலும் குடியிருக்க லாயக்கு இல்லாமல் போய்விட்டது. அந்தப் பகுதிகள் தாழ்வான பகுதிகள். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகள். அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிசன மக்களுக்கு வேறு மாற்று இடத்தை அரசு கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இப்போது எங்கள் பகுதியில் ஒரு புல்டோசரைக் கொண்டு வந்து வேலை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மண் மேடிட்ட பகுதிகளைச் செப்பனிடுவதற்கு அந்த ஒரு புல்டோசர் போதாது. ஒரு ஏக்கருக்கு ஒரு நாள் ஆகிறது



சீர் செய்வதற்கு, அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 1,500 ஏக்கர் நிலம் பாழ்பட்டு இருக்கிறது. இதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்பதை நீங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இன்னும் அதிகமான புல்டோசர்களைக் கொடுத்து அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 4-5 ஆண்டுகளாக கிணற்றில் தண்ணீர் இல்லாமல் வறட்சியால் வாடியிருக்கும் விவசாயிகளுக்கு இப்போது தண்ணீர் இருக்கும் நிலையில் விவசாயத்திற்கு நிலம் இல்லாமல் இருப்பதால், அதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு புல்டோசர் 10 மணி நேரம் வேலை செய்கிறது. ஒரு மணிக்கு ரூ. 85 அளிப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு ரூ. 850 ஆகிறது. இந்த 850 ரூபாயை அந்த விவசாயிகளிடத்தில் கொடுத்து விட்டால், அவர்கள் ஆட்களை வைத்து உடனடியாக அதைச் சீர் செய்து கொள்வார்கள். ஆகவே, அதற்கு ஏதுவான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ள அந்த விவசாயிகளை அதிகாரிகள் மிகவும் கடுமையாக நடத்தி, உடனடியாக பாக்கிகளை தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தற்போதுள்ள நிலையில் அந்த விவசாயிகளால் எதுவும் செய்ய முடியவில்லை. அவர்கள் பாதிக்கப்பட்ட நிலங்களை சீர்திருத்த பண வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடனை நிறுத்தி வைப்பதோடு மட்டுமல்ல, அவர்களுக்கு மேலும் கடன் கொடுத்து உதவி செய்ய அரசு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு விளைச்சல் வந்துவிட்டால் எவ்வளவு கடனானாலும் அந்தக் கடனை நிச்சயமாகத் திருப்பிவிடுவார்கள். ஆகவே, அரசாங்கம் நிச்சயமாக அவர்களுக்கு ஏற்கனவே கடன் இருந்தாலும், மேலும் கடன் கொடுத்து விவசாய உற்பத்தி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு நிச்சயமாக அதைச் செய்யும் என்று நம்புகிறேன். ஏனெனில் எல்லோரும் இந்தப் பணியில் ஈடுபட்டு, அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இதில் ஈடுபட்டு, கட்சி வேறுபாடின்றி

இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த என்னுடைய கோரிக்கையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.10]

அத்துடன் அரசு அதிகாரிகளும் தக்க முறையில் பணியாற்றினார்கள். என்னுடைய பகுதியிலே மாவட்ட ஆட்சியாளர் உடனடியாக வரமுடியவில்லை. என்னுடைய பக்கத்துத் தொகுதியான வேதசந்தூரில் அதிகமான பாதிப்பு இருந்ததால், மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே செல்ல வேண்டியிருந்த காரணத்தால் என்னுடைய தொகுதிக்கு உடனே வரமுடியவில்லை. ஆனால் தாசில்தாரும் மற்ற அதிகாரிகளும் என்னோடு சேர்ந்து எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். கலெக்டர் அவர்களும் ஒரு வாரத்திற்குப் பின் என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். மிகவும் மோசமாகத் தான் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆவன செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் பல உத்திரவுகள் தெளிவாக இல்லாததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை கிடைப்பது தாமதப்படுகிறது. அதன் காரணமாக அவர்கள் செய்ய வேண்டிய விவசாயம் தாமதமாகிறது. ஒரு கோடை போனால் அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படும். வரக்கூடிய தை மாதத்தில் பயிர் செய்ய வேண்டும். ஏற்கனவே ஒரு கோடை போய் விட்டது. ஆகவே அடுத்த கோடையிலாவது பயிர் செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்தப் புயல் நிவாரணப் பணியில் அதிகாரிகள் நல்ல பணியாற்றியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பண்ணை கே. சேதுராம்) :** 12 நிமிடம் ஆகிறது. முடியுங்கள்.

**திரு. அ. ப. பழனியப்பன் :** மாண்புமிகு சுற்றுலா அமைச்சர் பழனிக்கு வரும்போது, தம்முடைய சுற்றுப்பயணத் திட்டத்தில் என்னுடைய தொகுதியாக ஒட்டன்சத்திரத்தையும் போட்டிருந்தார்கள். ஆனால் அது இடையில் அடிக்கப்பட்டு, எனக்குத் தபால் வந்தது. என்ன காரணத்தால் அடிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. நான் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற காரணத்தாலா, அல்லது யதார்த்தமாக விடப்பட்டதா என்று தெரியவில்லை. எல்லா மக்களையும்





சமமாகப் பாவித்து, எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் அந்தப் பகுதிக்குச் சென்றபோது, என் சுற்றுப்பயணத்தில் அவருடைய தொகுதி சேர்க்கப்பட்டு, பின்னர் அடிக்கப்பட்டிருந்தது என்று தெரிவித்தார்கள். அங்கே பல்வேறு அமைச்சர்கள் முன்னால் சென்று பார்த்திருக்கிறார்கள் என்பதை அறிந்ததாலும், போதிய காலமின்மையாலும் என்னுடைய பயணத்தைக் குறுக்கிக் கொண்டேன் தவிர, அவருடைய தொகுதிக்குப் போக வேண்டாம் என்ற காரணத்தால் அல்ல. சமயம் நேரும்போது, அந்தத் தொகுதிக்கு நிச்சயமாக வருவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இந்த வெள்ளை அறிக்கையின் மீது நடந்து கொண்டிருக்கிற விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நானும் சில வார்த்தைகள் கூறிக் கொள்கிறேன். இந்தப் புயல் என்பது கடந்த 100 ஆண்டு காலத்துக்கு மேலாக இல்லாத கொடுமையை நம்முடைய மாநிலத்தில், இரண்டு மூன்று ஜில்லாக்களில் ஏற்படுத்தி, அதன் மூலம் நூற்றுக்கணக்கான உயிர்களையும், ஆயிரக்கணக்கான வீடுகளையும், மற்றும் கோடிக் கணக்கான ரூபாய் பொருட் சேதாரம் ஏற்படுத்தி, நம்மையெல்லாம் பெரிய துயரக் கடலில் தள்ளிவிட்டுச் சென்றிருக்கிறது. அந்த நிலையில், செய்யப்பட வேண்டிய நிவாரண வேலைகளில் நம்முடைய அமைச்சர்கள் எல்லோரும் முடிந்த அளவுக்கு அவர்களுடைய சக்திக்கு மீறியே நல்ல முறையில் காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

கடந்த 10 ஆண்டு காலத்திற்கு மேலாக வேதசந்தூர், பழனி போன்ற தாலுகாக்களில் வறட்சி தொடர்ந்து நீடித்துக் கொண்டிருந்த காரணத்தால், ஏற்கனவே கடனாளிகளாக, வருமானம் இல்லாதவர்களாக, வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தப் பகுதி மக்கள், சமீபத்தில் ஏற்பட்ட

புயலாலும், வெள்ளத்தாலும், இரண்டு மாதங்கள் தொடர்ந்து பெய்த மழையின் காரணத்தாலும், இன்றையதினம் ஒரு நெருக்கடியான நிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் பட்டிருக்கின்ற கூட்டுறவுக் கடன்களை எல்லாம், அங்கே இருக்கின்ற கூட்டுறவுத் துறை அதிகாரிகள் ஓவர்டியூ ஆகிவிட்டது என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. அவர்கள் நோட்டீஸை நிறுத்தினால் மட்டும் போதாது. மேலும் அவர்கள் புதிதாகக் கடன் கேட்டால் கொடுக்கக்கூடிய விதத்தில் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை காலதாமதமின்றி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஏழைகளின், குறிப்பாக ஹரிஜனங்களின் சிறிய குடிசைகள் பல விழுந்து விட்டன அல்லது சேதமடைந்து விட்டன. அவர்களின் மனுக்கள் இன்றையதினம் பழனி தாலூகாவில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மனுக்கள் தாசில்தாரிடம் கொடுக்கப்பட்டுள்ளன. வீடு இழந்தவர்களுக்கு இன்றையதினம் ரூ. 60, 80, ரூ. 100 என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தாசில்தார் அவர்களைப் பார்த்துக் கேட்ட போது அவர்கள் ஏதோ அவர்கள் கையிலிருந்து பணம் கொடுப்பதைப் போல் நினைக்கிறார்கள். அதிகாரிகள் மனமுவந்து, பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு அரசு கொடுக்க சொல்லியிருக்கக் கூடிய பணத்தை மனமுவந்து கொடுக்க அதிகாரிகளுக்கு மனது கிடையாது. அவர்கள் கைப் பணத்தை கொடுப்பது போல் நினைக்கிறார்கள். மழை பெய்து புயல் அடித்து இரண்டு மாதங்களாகிவிட்டன. போன 24 ஆம் தேதி அந்தத் தாசில்தாரைப் பார்த்துக் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். . . . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** எந்த ஊர் தாசில்தார் என்று கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** பழனி தாலூகாவில் உள்ள பாலசமுத்திரம் என்ற ஊரில். 24 ஆம் தேதி தாசில்தாரைச் சந்தித்துக் கேட்டபோது, ஆர்டர் வந்துவிட்டது ரூ. 75 கொடுக்கப்படும் என்று தன் கைப்பணத்தைக் கொடுப்பது போல் சொன்னார்கள். அந்த ஊரில் இருந்து 138 மனுக்கள் இருக்கின்றன. இப்படி தன் கைப்பணத்தை கொடுப்பது மாதிரி





சொல்வது, இது முறை அல்ல. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கிராமங்களுக்கு அனுப்பி ரூ. 60, 80, 100 என்று கொடுத்திருப்பவர்களுக்கு உடனடியாக ரூ. 200 என்ற அடிப்படையில் கொடுப்பதோடு கூட இதுவரையில் பைசல் செய்யப்படாதிருக்கிற மனுக்களை உடனடியாக பைசல் செய்து அவர்களுக்கும் ரூ. 200 கொடுக்கும்படி உத்தரவிட வேண்டும்.

மக்கள் வீடுகளை மட்டும் இழக்கவில்லை. ஆடு மாடுகள், கோழிகள் என்று தாங்கள் வளர்த்து வந்தவைகளை இழந்திருக்கிறார்கள். அவற்றை வாங்கிக் கொள்வதற்காக ஓரளவு கடனாகவோ அல்லது மானியமாகவோ இந்த அரசு கொடுத்து உதவுவதற்கு ஆணையிட வேண்டும்.

என் தொகுதியில் சொல்கிறேன், அங்கு புயல் அடிக்கா விட்டாலும் இரண்டு மாதங்கள் தொடர்ந்து பெய்த பெருமழை காரணமாக ரோடுகள் எல்லாம் குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு லாயக்கற்ற நிலைமையில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சீர் செய்ய பஞ்சாயத்து யூனியனிடம் பணம் இல்லை என்று அதிகாரிகள் சொல்வார்கள். நிச்சயமாக யூனியன் அளவில் அவற்றைச் செய்ய முடியாது. ஆகவே, அரசாங்கமே நேரடியாக இவற்றை எடுத்து இந்த வேலைகளை துரிதமாகச் செய்ய வேண்டும்.

சர்வ கட்சிக் குழுக்களை ஆங்காங்கு அமைத்தால்தான் இதை ஓரளவு துரிதப்படுத்த முடியும். சர்வகட்சி குழுக்கள் அமைப்பதில், புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டது போக மற்ற சில இடங்களில் அமைக்கப் படாமல் இருக்கின்றன. எனவே அங்கும் இந்த சர்வ கட்சிக் குழுக்களை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு இந்த புயல் வெள்ளம் சேதத்தை முன்னிட்டு ரூ. 250 கொடுக்க அரசு உத்தரவிட்டிருந்தும் தஞ்சை ஜில்லா போன்றயிடங்களில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை என்று எங்களுக்கு கடிதங்கள் வந்திருக்கின்றன. அப்பணம் அவர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கட்டாய சேமிப்பு என்று பிடிக்கப்பட்டுள்ள பணத்தை இந்த நேரத்தில் அவர்களுக்கு கொடுத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். பலயிடங்களில் சர்வ கட்சியோ அல்லது அங்குள்ள பிரமுகர்களோ நிவாரணப் பணிகளுக்காக பணம் வசூல் செய்திருக்கிறார்கள். அது என்னவாயிற்று என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

என் தொகுதியில் புயல் வீசிய காலத்தில் நான் வட நாடு போய்விட்ட காரணத்தால் தொகுதியில் நான் இல்லை. அந்த நேரத்தில் அங்கு ஒரு குழு போட்டு வசூலித்தார்கள். அப்படி வசூலித்த பணம் கிட்டத்தட்ட ரூ. 8,000-க்கு மேல் இருக்கிறது. அந்தப் பணத்தை முதல் அமைச்சர் அவர்கள் வேடசெந்தூர் வரும்போது கொண்டு போய் கொடுக்கலாம் என்று கேட்டேன். அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இன்னும் அந்தப் பணம் வந்து சேரவில்லை. எந்தெந்த இடங்களில் இப்படி புயல் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் பெயரால் வசூல் செய்து எங்கெங்கு வைத்திருக்கிறார்களோ . சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் அல்லது அங்குள்ள முக்கியஸ்தர்கள் மூலம் தகவல்களை சேகரித்து அது உடனடியாக அரசின் கைக்கு வந்து கிடைப்பதற்குள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.20)

**திரு. எம். ஏ. ஜெயவேலு :** தலைவர் அவர்களே, சமீப காலத்தில் கடும் புயலால் அந்த கடும் புயல் கொடும் புயலாக மாறி, அதில் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கும், இதன் காரணமாக இன்னுயிர் இழந்தவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

புயல் கண்டிருந்த நேரத்தில் தமிழக அரசும் தனது இயந்திரமும் பம்பரம் போல் சுழன்று வேலை செய்ததை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அமைச்சர்கள் தங்களுடைய உயிரையும் துச்சமாக மதித்து செய்த சேவையை தமிழகம் என்றுமே மறக்காது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் பொது மக்களுடைய ஆதரவு நாம் எதிர்பார்த்த





அளவில் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சற்று காலம் கடந்து விட்டதால் எல்லோரும் அந்த பயங்கர நிலைமையை மறந்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் பொது மக்கள் கிட்டத்தட்ட ஐம்பது கோடி அளவுக்கு பணத்தை கொடுத்து, ஏற்பட்ட கொடிய நஷ்டத்தை ஈடு செய்வார்கள் என்று எண்ணினோம். ஆனால் அந்த அளவில் நடைபெறவில்லை.

இதற்கு இன்னொரு காரணம் நமது அடுத்த மாநிலத்தில் அதாவது ஆந்திராவில், சென்னையை நோக்கி வந்த புயல் ஆந்திராவில் போய் பல உயிர் சேதங்களை ஏற்படுத்தியது. அங்குள்ள உயிர்ச் சேதத்தை ஒப்பிட்டு பார்க்கின்ற ஒரு நிலையும் இருக்கிறது. போன உயிர்களை நாம் திரும்பப் பெற முடியாது.

ஆனால் பொருட் சேதத்தைப் பொறுத்த அளவில், இரண்டு மாநிலங்களிலும் ஒரே அளவு தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இழந்துவிட்ட அந்தப் பொருட்களை மீண்டும் பெறுவதற்காக நமக்கு மிகவும் நிதி தேவைப்படுகிறது. குறிப்பாக சென்னையும் சென்னையைச் சுற்றியிருக்கின்ற நகர்புறங்களிலும் இருக்கின்றவர்கள் இந்த நிதிக்கு அதிகமாக கொடுப்பதற்கு நிச்சயமாக உரிமையுடையவர்கள் ஆவார்கள். காரணம் சென்னையை நோக்கி வந்த புயல் இவர்களை பாதித்திருந்தால், நிச்சயமாக தங்கள் குடும்பத்தில் 5,000, 10,000 ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டிருக்கும்.

அது மட்டுமல்ல, தங்கள் குடும்பங்களிலுள்ள ஒரு இன்னுயிரையாவது பறி கொடுத்திருப்பார்கள். இதை மனதில் கொண்டு இயற்கை அன்னை நம்மை விட்டு விட்டாள் என்று கருதி, நம்மால் இன்னும் எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, பெரிய செல்வந்தர்கள் நிறைந்த இந்தச் சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள நகரங்களிலும் உள்ளவர்கள், இதை பழைய கதை என்று நினைக்காமல், தங்களுடைய ஏராளமான ஆதரவையும், நிதி உதவியையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. ஜெயவேலு] [1977 டிசம்பர் 31

இங்கே நண்பர்கள் குறிப்பிட்டார்கள், பண வசூலில் பல ஊழல்கள் நடந்திருக்கிறது என்று. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை 20 ஆயிரம் ரூபாய் அளவுக்கு காசோலைகளை பெற்று முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். இன்னும் ஜனவரி மாதத்திற்குள் மேலும் 20 ஆயிரம் ரூபாய் என் தொகுதி மக்களின் சார்பாக கொடுக்க இருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட கொடும்புயலால் பலவிதமான நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதில் முக்கியமாக முதலில் கட்டப்பட்ட அணை உறுதுணையாக இருந்தது என்று எல்லோரும் கூறியிருந்தார்கள். அதைப்பற்றி கருத்துக் கூறுகின்ற நேரத்தில், அமராவதி அணை உடையவில்லையா என்றும் கேட்டார்கள். அது அணை அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பழைய ரயில்வே பாலம் அது. குடகனாறு அணை சமீப காலத்தில் கட்டப்பட்டது. கொயினா என்கின்ற அணை உடைந்ததைப் பற்றி நாம் கேள்விப்பட்டோம். அது பூகம்ப அதிர்ச்சியால் ஏற்பட்டது என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால் குடகனாறு அணை சமீப காலத்தில் 3 கோடி ரூபாய் செலவு செய்து கட்டப்பட்டது. தண்ணீர் நிரம்பி வழிந்திருந்தாலும் கூட அது உடையக் கூடாததாக இருந்திருக்க வேண்டும். இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. இதை அரசு விசாரணை செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் சிலர் இதில் அதிகமாக தண்ணீர் வந்ததினால்தான் உடைந்தது என்று வக்காலத்து வாங்கிப் பேசுவதைப் பார்த்தால் நமக்கு இன்னும் சந்தேகம் வளருகிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக, வக்கீல்கள் தான் குற்றவாளிகளுக்கு வக்காலத்து வாங்கி கொண்டு பேசுவார்கள். ஆனால், இங்கே அப்படி வக்காலத்தும் இல்லாமல் பேசுகின்ற ஒரு நிலைமை இருக்கின்றதைப் பார்க்கின்றபோது, அந்தச் சந்தேகம் வலுவடைகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே 200 வீடுகள் இடிந்து உடைந்து விட்டன. அதேபோல், மூன்று இன்னுயிர்கள் இந்த உலகத்தை விட்டு மறைந்து விட்டன. அவர்களுக்கு இன்னும் உதவித் தொகை கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே,



1977 டிசம்பர் 31] [திரு. எம். ஏ. ஜெயவேலு]

உடனடியாக அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் இதுவரை கொடுத்ததாகத் தெரியவில்லை.

என்னுடைய தொகுதியிலே ராஜாதோப்பு என்னுமிடத்தில் ஒரு அணை கட்டுவதாக இருந்தது. தொடர்ந்து 20 நாட்கள் மழை பெய்ததன் காரணமாக, சாதாரணமாக என் தொகுதியிலே அவ்வளவு மழை பெய்யாது, இம்முறை அப்படிப் பெய்ததால், இந்த ராஜாதோப்பு அணைக்கட்டுப் பகுதியிலே இருந்து தண்ணீர் வழிந்துபோய் இருக்கிறது. அப்படி வழிந்துபோன தண்ணீர் பல இடங்களிலே சேதத்தை உண்டு பண்ணி இருக்கிறது. ஆகவே, அந்தக் காலத்திலேயே இந்த ராஜாதோப்பு அணை கட்டியிருந்தால், எதிர்காலத்திலே இத்தகைய விளைவுகளைத் தடுத்திருக்கலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, என்னுடைய தொகுதியிலே இன்னுயிர் இழந்த மக்களுக்கெல்லாம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டு, தமிழக மக்களை கடந்த கால சம்பவங்களையெல்லாம் கண் முன்னே நிறுத்தி, ஆந்திராவை ஒப்பிட்டுப் பார்க்காமல், வாரி வாரி உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

**திரு. மு. செல்வராஜ்**: பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையத் தினம் இங்கே சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் புயல்—வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின் மீது கருத்துக்களை நான் கூறியிருக்கிறேன்.

கடந்த 2, 3 தினங்களாக இதைப் பற்றி இந்தச் சட்டப் பேரவையிலே விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டாலும், சமீபத்திலே நடைபெற்று, முடிந்த ஓய்ந்த புயலானது 100 ஆண்டுகளாகக் கண்டிராத அளவுக்கு ஒரு பயங்கரமான புயல் என்றும், அதன் காரணமாக பெருமழை பெய்து, வெள்ளம் வந்ததென்றும், அதனால் நாம் பல்வேறு நிலைமைகளிலே பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் தெரிகிறது. ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாடு பாதிக்கப்பட்டிருக்கிறது. தனியார் சொத்துக்கள், சர்க்கார் சொத்துக்கள் என்று இப்படி பலவகையிலும் இந்தப்

பேரவையிலே உள்ள நண்பர்களும், பல கட்சிகளைச் சார்ந்தவர்களும் கணக்கிட்டுச் சொன்னார்கள். இதிலே யாருக்கும் எவ்விதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது.

ஆனால், இந்த நிவாரண வேலைகளிலே வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைத் தான் நம்மால் சொல்ல முடிகிறது. நடைபெற்ற நிவாரண வேலைகளுக்குப் பிறகு, அங்கு அதிலே ஏற்பட்டிருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்லத்தான் வேண்டும். குறைகள் சொல்வதற்காகச் சொல்கிறோம் என்று கருத வேண்டாம். அப்படி ஏற்பட்டுள்ள குறைகளைக் களைவதற்காகத் தான், அதிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்பதற்காகத் தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, இந்தப் புயலின் சீற்றத்தினால் தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், நான் சேர்ந்த தென் ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நாம் அப்படி பாதிக்கப்பட்ட பகுதிகளிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி பார்க்கின்றபோது, அரசாங்கத் தரப்பிலே ஒருதலைப்பட்சமாக முதலில் எங்களைச் சேர்க்கவில்லை என்று சொன்னார்கள். பிறகு எங்களையும் சேர்த்து மக்கள் குழு அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மக்கள் குழு மூலமாக அவர்கள் எப்படி எப்படி பணியாற்ற வேண்டுமென்பதை அவர்கள் தகுந்த முறையிலே அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தாக்கீது அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, எங்களுடைய நிலையைப் பொறுத்தவரையில் எங்கள் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும் சிறையிலே இருந்து வெளியே வந்தபிறகு, உடனடியாக எந்தெந்த மாவட்டங்களிலே புயலால் பாதிப்பு ஏற்பட்டதோ, அந்தப் பகுதிகளிலே ஏறத்தாழ 11 ஆம் தேதியிலிருந்து 16 தேதி வரை சுற்றுப்பயணம் செய்து, ஏறத்தாழ 5,000 க்கு மேற்பட்ட நபர்களிடமிருந்து மனுக்களைப் பெற்றிருக்கிறார்கள். இப்படி 5,000 மனுக்களைப் பெறுகின்றபோது, உள்ளபடியே அந்த மனுக்களிலே சொல்லியுள்ள கருத்துக்களையெல்லாம் நாங்கள் நேரடியாகப் பார்த்த காரணத்தினால் நன்கு அறிய முடிகிறது. பல இடங்களில், அங்குள்ள ஏழைகளுக்கு நிவாரண மீட்புப் பணிகள் உடனடியாக, ஒழுங்காகச் செய்யப்படவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும். இங்கே இருக்கிற அமைச்சர்கள் அதுபற்றி ஒட்டுமொத்தமாக விசாரித்தால் உள்ளபடியே நிலைமை புரியும் என்று சொல்ல விரும்புகிறேன்.





(பிற்பகல் 12-30)

அரசுத் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஏறத்தாழ 4.4 லட்சம் குடிசை வீடுகளும், 59,400 கல் வீடுகளும் பாழடைந்துள்ளன. 28,300 ஏக்கர் வயல்களும், 1,700 கிணறுகளும் மண் மேடிட்டிருக்கின்றன; 23,000 கால்நடைகளும் ஆடுகளும், 5,000 கோழிகளும் செத்திருக்கின்றன; 600-க்கு உட்பட்ட மனித உயிர்கள் போயிருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். இதனால் ஏழை எளிய பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த அரிசன மக்கள்தான் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஒட்டுமொத்தமாக ஒப்புக் கொள்ள வேண்டும். போதுமான அளவுக்கு நிதி போய்ச் சேர வேண்டியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. ஆங்காங்கு இருக்கும் ஆட்சித் தலைவர்கள், கோட்டாட்சித் தலைவர்கள் உடனடியாக ஒரு சில அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்குக் கொடுக்கிற பணத்தைக்கூட ஒரு சிலர் கையாடியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். சில இடங்களில் உண்மையிலேயே வீடு இழந்தவர்களுக்குப் பணம் போய்ச் சேரவில்லை. வீடு பாதிக்கப்படாதவர்களுக்குப் பணம் போய்ச் சேருகிற நிலைமையைப் பார்க்கிறோம். அதற்கான ஆதாரங்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் பின்னர் தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் குடகனாறு பற்றியும், அமராவதி பற்றியும் சொன்னார். இதைப் பற்றி விசாரிக்க வேண்டும்; சம்பந்தப்பட்டவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் எந்தவிதமான மாறுபாடான கருத்தும் கிடையாது. பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பத்திரிகையில் ஒரு செய்தி கொடுத்திருந்தார்கள். அணையின்

கொள்ளளவைப் போல் மூன்று பங்கு தண்ணீர் வந்ததன் காரணமாக இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். பிறகு அதற்கு மாறான கருத்தைப் பார்க்கிறோம். ப.உ.ச. அவர்கள் பேசும்போது கூட அதைப் பற்றி விசாரிப்பதில் மாறுபடான கருத்துக் கிடையாது என்று கூறியிருக்கிறார்கள்.

மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கம்பங்கள் விழுந்ததன் காரணமாக மின்சாரக் கம்பிகளின் மின் இணைப்புகள் துண்டிக்கப் பட்டன. ஆகவே, யாரும் இறக்கவில்லை என்று சொன்னார்கள். அதனைச் செய்திப் பத்திரிகையில் பார்த்த உடனே ஒரு மறுப்பு அறிக்கை கழகத்தின் சார்பில் கொடுத்தோம். எங்கள் மாவட்டத்தில் விழுப்புரத்தில் சிதாமனேந்தல் என்ற கிராமத்தில் தீனதயாளன் என்ற எஸ். எஸ். எல். சி. படித்த மாணவன் 12—12—77 அன்று மின்சார கம்பிகள் அறுந்து விழுந்து மின்விசை நிறுத்தப்படாததன் காரணமாக 13—11—77 அன்று வயல்வெளிக்குப் போனவன் மின்சாரம் தாக்கி மரணம் அடைந்தான். அது ஆட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டு கோட்டாட்சித் தலைவரால் விசாரிக்கப்பட்டு நஷ்ட ஈடு தர வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டது. அந்தப் பையன், திராவிட முன்னேற்றக் கழக ஒன்றியச் செயலாளரின் மகன் என்ற காரணத்தால் மேற்கொண்ட நடவடிக்கை நிறுத்தப் பட்டிருப்பதாக அறிகிறேன். உயிர் போன பிறகு, யார், எந்தக் கட்சி என்று பாராமல் யாராக இருந்தாலும் சேர வேண்டிய நிவாரணத் தொகையை அளிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் நம்முடைய குத்தாலம் சட்டமன்ற உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்கள் பேச வாய்ப்பில்லை என்ற காரணத்தால் அவருக்கு வந்திருக்கிற தந்திகளை எல்லாம் என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை வரிசைப்படுத்தி முறைப்படுத்தி சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

நன்னிலம் தாலுகா திட்டச்சேரியில் 30 அரிசன குடும்பங் களுக்கு வெள்ள நிவாரண நிதி கிடைக்கவில்லை என்ற செய்தி ஒன்று. பட்டுக்கோட்டை தாலுகாவில்—

**Flood relief not distributed in Chokkanathapuram to 50 per cent Harijans**





அவருடைய தொகுதியில் ஒரு பகுதிதான் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்திருப்பதாகவும் உடனடியாக எல்லாப் பகுதிகளையும் பாதிக்கப்பட்ட பகுதிகளாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கோரியிருக்கிறார்கள். குத்தாலம் குடவாசலில் முறையாக நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். அந்தக் குடவாசல் பேரூராட்சியில் வெள்ள நிவாரணத் தொகை சரியாகக் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் நேற்றையதினம் சர்வ கட்சியைச் சார்ந்தவர்கள் நிவாரணம் கிடைக்கும் வரையில் உண்ணாவிரதம் இருப்போம் என்று சொல்லி எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை முக்கியமாக கவனத்தில் கொண்டு உடனடியாக அரசாங்கம் தலையிட்டு நிவாரணத்தை அளிக்க வேண்டும்.

எங்கள் மாவட்டத்தில், தென் ஆற்காடு மாவட்டத்தில் பொதுவாகப் போக்குவரத்துத்துறை அமைச்சருக்குக் கூடத்தெரியும், கிராம சாலைகளுக்கும் மற்ற எல்லா சாலைகளுக்கும் ஒதுக்கப்படுகிற பணம் போதவில்லை, குறிஞ்சிப்பாடி யூனியனில் 60 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதற்கு 15 இலட்சம் ரூபாய்தான் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். 11 பஞ்சாயத்துக்களுக்கு அந்த நிதி போய் இருக்கிறது. 4 இலட்சம் ரூபாய் ஏறத்தாழ 46 பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறைகேடு தவிர்க்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்கு அடுத்த தொகுதி என்னுடைய முன்னாள் நண்பர் திரு. இராமச்சந்திரன் அவர்களுடைய தொகுதி, அவருடைய அந்தத் தொகுதிக்கு ஏற்கனவே தி. மு. க. ஆட்சி இருந்த காலத்திலே எல்லாக் கிராமங்களிலும் பக்கா ரோடுகள் போடப்பட்டு வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. என்ன காரணத்தினாலே இப்படி நடந்திருக்கிறது. பொதுவாக எந்த இடமாக இருந்தாலும் விருத்தாசலத்திலே கம்மாபுரம் பஞ்சாயத்திலே பார்த்தால் சரியான வேலை நடைபெறவில்லை, இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

இங்கே வந்தபோது அவர்கள் காண்ட்ராக்ட் முறையை எடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். இப்போது ஆபர் ஓர்க்ஸ் என்ற முறையிலே அங்கங்கே உள்ள டிவிஷனல்

எஞ்சினியர், அஸிஸ்டெண்ட் இஞ்சினியர் அங்கே சம்பந்தப் படாதவர்களுக்கு அவர்களுடைய சால்வன்ஸியை எல்லாம் பார்க்காமல்—அமைச்சருக்குத் தெரிந்து இது நடக்கிறதா தெரியாமல் நடக்கிறதா என்று தெரியவில்லை, அதற்காகச் சொல்கிறேன்—பல லட்சக்கணக்கான ரூபாய் உள்ள வேலைகளை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். கான்ட்ராக்டர்கள் என்றால் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் 1, 2 பேர்கள் இருக்கலாம், மற்றவர்கள் காங்கிரஸ்காரர்கள் இருக்கலாம், அல்லது கட்சியைச் சேராதவர்களும் இருப்பார்கள். ஆனால் இப்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் யாருக்குக் கொடுக்கச் சொல்கிறாரோ அவருக்குத்தான் இன்றைக்கு அந்த வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, திடீரென்று 24 மணி நேரத்திலே எந்தவிதக் காரணமும் இல்லாமல் அங்கே இருந்த டிவிஷனல் எஞ்சினியர் மாற்றப்பட்டிருக்கிறார், என்ன காரணம்? தி.மு.க. ஆட்சியில் இருந்து இப்படி நடந்திருந்தால் பெரிய கூச்சல் ஏற்பட்டு இருக்கும். அமைச்சர் அவர்கள் இளைஞர், அவர்கள் இதையெல்லாம் நன்கு கவனிக்க வேண்டும்.

அடுத்து, குத்தகை பாக்கிக்காக மாயவரத்திலே ரெவின்யூ கோர்ட்டுகளிலே 144 வழக்குகள் இருக்கின்றன. அதன் காரணமாக 103 பேர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இது நியாயந்தானா? இப்போது புயல், வெள்ளத்தால் பாதிப்பு என்று சொல்கிற நேரத்திலே குத்தகை தரவில்லை என்ற காரணத்திற்காக வெளியேற்றி இருக்கிறார்கள். இன்னும் பல வழக்குகள் கோர்ட்டிலே இருந்துகொண்டிருக் கின்றன. அவைகளிலே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் நிறுத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் எங்கள் மீது குறைகளைச் சொன்னார்கள். எங்கள் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே கொடுத்த 25 ஆயிர ரூபாயைச் சேர்த்து 4 இலட்சம் ரூபாயை ஆளுநர் அவர்களிடத்திலே, சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத் தொகையையும் சேர்த்து நிதி வழங்கினார்கள். அவர்கள் அப்போது சொன்னார்கள், இதைப் பாரபட்சமற்ற முறையில் அணுக வேண்டும் என்றும் 100 ஆண்டுகளாக ஏற்படாத புயல்





ஏற்பட்டு தமிழக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆகவே மத்திய அரசாங்கம் நிறைய பணத்தை மானியமாகக் கொடுக்க வேண்டும், திட்ட நிதி முதலீடாகக் கொடுக்கக்கூடாது என்றும் அதற்கு ஆளுநர் பரிந்துரை செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள். பொதுவாக எங்கள் கட்சியின் சார்பாக இப்படித்தான் நாங்கள் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறோம்.

அடுத்து, கோவை மாவட்டத்திலே பேரூர் சிரநாயக்கன் பாளையத்திலே அங்கே உள்ள நெசவாளர்களின் வீடுகளுக்குள்ளே தண்ணீர் புகுந்து ஏராளமான சேதம் ஏற்பட்டிருக்கிறது, ஆனால் அவர்களுக்கு ஒரு பைசாகூட இதுவரையில் உதவித் தொகையாகக் கொடுக்கப்படவில்லை என்று அந்தச் சட்டமன்ற உறுப்பினர் என்னிடம் சொன்னார்கள். அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு உதவித்தொகை அளிக்க அரசு முன்வர வேண்டும்.

(பிற்பகல் 12-40)

நம்முடைய அரசாங்கத்தால் இங்கே தரப்பட்டிருக்கின்ற குறிப்பிலே, அந்தப் புத்தகத்திலே சொல்லியிருக்கிறார்கள், கைத்தறி நெசவாளர்களுக்கு நிதி வழங்குவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். எந்தக் காரணத்தால் அங்கே தங்கிவிட்டது என்று தெரியவில்லை. குறிஞ்சிப்பாடி பகுதியிலும் மீனவர்களும், நெசவாளர்களும் இருக்கிறார்கள். அது கடற்கரை ஓரமாக உள்ள பகுதி. அதுமட்டுமல்லாமல் பெருமாள் ஏரிக்குக்கீழ் பகுதியில் உள்ள கிராமங்கள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபொழுது இப்படிப்பட்ட வெள்ளம் ஏற்பட்டு, பண்ருட்டி பகுதி பாதிக்கப்பட்டு நிலங்கள் மண்மேடிட்டன. அன்றைய அரசு அந்த மண்ணை புல்டோசர் மூலம் அகற்றி, பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு ஏராள நிவாரணம் அளித்தார்கள். ஆனால் இந்த அரசாங்கம் பாதித்தொகையை மானியமாகவும், பாதித் தொகையைக் கடனாகவும் அளித்திருப்பதை மாற்றி, ஏராள உதவியையும் நிவாரணமாக அளிக்க வேண்டும். இதற்கு முன்னோடித் திட்டம் இருக்கிறது. அவ்வாறு நடைபெற்றிருக்கிறது. ஆகையால் எந்தவிதமான யோசனையும் செய்யாமல் அவ்வாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது தொடர்ந்து பல நிலைமைகளைப் பார்க்கிறோம். கூட்டுறவுக் கடன்களுக்காக ஜப்தி செய்கிறார்கள். அரசாங்கத் தரப்பிலேயிருந்து சட்டமன்றத்தில் வாக்குறுதி கொடுக்கிறார்கள், ஜப்தி செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அங்கே ஜப்தி செய்கிறார்கள். அவர்களைக் கேட்டால், கூட்டுறவு வங்கி நடக்க வேண்டுமா, வேண்டாமா என்று கேட்கிறார்கள். அல்லது 'ஏ' கிளாஸிலிருந்து 'சி' கிளாசுக்குப்போய்விடுமென்று கூட்டுறவு அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, அதிகாரிகளை வரவழைத்து அரசாங்கம் உடனடியாக நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம், விவசாயிகளின் சார்பில் அமைக்கப்பட்ட குழு தெரிவித்திருக்கிறது. அன்றையதினம் விவசாயத்துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் கூட்டுறவுக் கடன்களையும், அரசாங்கக் கடன்களையும் ஒட்டுமொத்தமாக ரத்து செய்ய வேண்டும். அதற்கு ஆகக்கூடிய நிதியைக்கூட வெள்ள நிவாரண நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம், தனியாக நிதி ஆதாரம் கிடைக்காது. புயல், வெள்ள நிவாரண நிதியில் சேர்த்து இதைச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இப்பொழுது நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகளில் இருக்கும் குறைபாடுகளை இந்த அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டும். பல்வேறு புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் நாளையதினம் பேசியிருந்த எங்களுடைய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். எனக்குத் தந்திகள் வந்திருக்கின்றன. அந்தத் தந்தியில் சொல்லப்படுவது,

" Cyclone Relief fund not disbursed properly. Affected persons pray proper disbursal. Cyclone affected persons. "

என்று இருக்கிறது. எங்களுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள், அமைச்சருக்கும் அந்தத் தந்திகள் வந்திருக்கும். பரவலாகப் பல்வேறு இடங்களிலிருந்தும் நல்ல முறையில் பயன்படவில்லை என்று குறைபாடுகள் வந்திருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.



என்னுடைய தொகுதியில் பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. யாராக இருந்தாலும், எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்கள், புயல் நிவாரண நிதிக்கு என்று வசூல் செய்து அதை அனுப்பாமல் இருக்கிறார்கள் என்று. அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆனாலும் அவர்கள்மீது பாரபட்சம் காட்டாமல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உண்டியல் வைத்திருக்கிறோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, யார் வசூல் செய்வதாக இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உண்டியலை வாங்கித்தான் வசூலிக்க வேண்டும். யாராவது அப்படிப்பட்ட நிதியை வைத்திருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எங்களிடத்தில் பல தகவல்கள் வந்திருக்கின்றன. யார் யார் வசூலித்தார்கள், அதைக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்ற அந்தத் தகவல்களை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க இருக்கிறோம் என்று கூறி, எதிர்பாராத விதமாகப் பேச சந்தர்ப்பம் கொடுத்த சபாநாயகருக்கு நன்றி கூறி, நீண்டநேரம் கிடைத்ததால் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளின் பிரச்சினைகளைப் பேசியிருக்கிறேன். அமைச்சர்கள் இதைக் குறையாக நினைக்காமல் உடனடியாக நிவாரணத்தில் ஈடுபட வேண்டும். ஏற்கனவே நிவாரணத்தில் ஈடுபட்டது போதாது, உடனடியாக நிவாரணத்தில் ஈடுபட்டிருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்தில் ஏழை மக்களுக்கு இந்த அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ரூபாய் 200 நிச்சயமாகப் போய்ச் சேரவில்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். எந்த அதிகாரி சாப்பிட்டிருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. வ. மு. சுப்பிரமணியன்** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த புயல், வெள்ள நிவாரணம், வெள்ளையறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த இந்த மாமன்றத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வ. மு. சுப்பிரமணியன்] [1977 டிசம்பர் 31

எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில், புயலால் நாங்கள் பாதிக்கப்படாவிட்டாலும இரண்டுமாத கால கனத்த மழையினால் நாங்கள் மிகவும பாதிக்கப்பட்டோம். மற்ற மாவட்டங்கள் புயலால் பாதிக்கப்பட்டாலும, நாங்களெல்லாம் மழையால் பாதிக்கப்பட்டோம். அப்படி பாதிக்கப்பட்ட எங்களுக்கு இந்த அரசாங்கத்தில் எங்கள் புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசினால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்து வகையில் நிவாரணம் கிடைத்தது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். எங்களுடைய பகுதி புயலால் பாதிக்கப்படாவிட்டாலும், திருச்சி, நாகப்பட்டினம் பகுதிகளுக்கு எவ்வளவு நிவாரணம் கொடுக்கப் பட்டதோ அதே நிவாரணம் எங்களுக்கும் கொடுக்கப்பட்டது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிவாரணம் கொடுக்கப்பட்டதில் வீடு இடிந்தவர்களுககு வீடு எப்படி இடிந்தது, அதனுடைய சேதம் எவ்வளவு என்று அளந்து கொடுத்தார்கள். அப்படிக் கொடுக்கும்போது ரூபாய் 20, 30, 40, 50, 60 என்று ஆய்வுகள் நடத்திக் கொடுத்தார்கள். குடிசையாக இருந்தால் அதற்கு 20 ரூபாய் கொடுத்தார்கள் கொஞ்சம் பெரிய வீடுகளாக இருந்தால் 60 ரூபாய் வரை கொடுத்தார்கள். பிறகு கொடுக்கும்போது 200 ரூபாய் கொடுக்கலாம் என்று அரசு கருதியது. ஆனால் சொல்லியபடி அவர்கள் எல்லோருக்கும் கொடுக்கவில்லை. 30 ரூபாய்க்குமேல் ஏற்கனவே கொடுக்கப்பட்டவர் களுக்குத்தான் 200 ரூபாய்கள் கொடுக்கப்பட்டன. இதிலே எனக்கு ஐயம் ஏற்பட்டிருக்கிறது. ஏன எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை என்று காரணம் தெரியவில்லை.

அரசு அதிகாரிகள் சொல்லுகின்ற காரணம், குடிசை வீடுகள் ஆயிரம் ரூபாய் மதிப்புகூட இருக்காதா, அதற்கு 200 ரூபாய் எப்படிக் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். கொஞ்சம் மனிதாபிமானத்தோடு கொடுக்கக் கூடாதா? ஏழை எளிய மக்களுக்குத்தானே கொடுக்கிறோம். பணக்காரர்களுக்குக் கொடுக்கவில்லையே, ஆகவே ஆயிரம் ரூபாய் மதிப்பில்லா விட்டாலும் அவர்கள் வேலையில்லாமல், கடன்பட்டிருக்கிற படியால் அவதிப்படுகிறார்கள். அதைக் கவனத்தில் கொண்டு 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்



1977 டிசம்பர் 31] [திரு. வ. மு. சுப்பிரமணியன்]

இதில் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் அரிசன மக்கள்தான். ஏன் பாதிக்கப்பட்டார்கள்? அவர்கள் மற்றவர்களைவிட தாழ்வான இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், நாங்கள் கட்டிக் கட்டிக்கொள்ளவில்லை. அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளிலேதான் நாங்கள் குடியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி அரசு அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் எங்களுக்குக் கிடைக்கின்ற இடங்களில்தான், நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடங்களில்தான் நாங்கள் கட்ட வேண்டியுள்ளது என்று சொல்கிறார்கள். கட்டுவதுதான் கட்டுகிறீர்கள் அதை மேடாக்கிக் கட்டுவதுதானே என்று கேட்டதற்கு, மேடாக்கிக் கட்டுவதற்கான நிதி—அந்த புரொவிஷன்—இல்லை என்று சொல்லு கிறார்கள். விதிமுறைகள் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் என்ன பயன்? இதனால் நஷ்டம் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியே அவர்கள் பாதிக்கப் பட்டாலும், காலனியில் அரசாங்கமே விடுகளைக் கட்டிக் கொடுத் திருப்பதால் நிவாரணப் பணம் யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்சினையில், அந்தக் காலனிகளில் உள்ளவர்களுக்கு நிவாரணப் பணம் இன்னும் கொடுக்கவில்லை. எனவே அரிசன காலனிகளுக்கு இந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்ய அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வைகை அணைக்கட்டைப்பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். நாங்கள் வேண்டுமென்று விரும்புகிற காலங்களில் தண்ணீர் திறந்துவிடப்படுவதில்லை. கேட்டால் உங்களுடைய பங்கு தண்ணீர் மட்டம் உயரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் தண்ணீர் நிரம்பி அணை பாதிக்கப்படும்போது திறந்து விடுகிறார்கள். கரையில் உள்ள நாங்கள் பாதிக்கப்படுகிறோம். எங்களுக்கு வறட்சியாக உள்ள நேரத்தில் தண்ணீர் கொடுக்க மறுக்கிறார்கள் எங்களுக்கு உரிய பங்கைத் தர மறுக்கிறார்கள். இதை மனதில் கொண்டு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வைகை சீரமைப்புத் திட்டம் 72 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது என்று நினைக்கிறேன். வருடம் சரியாக நினைவில்லை. இப்போது மூன்று ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வைகை ஆற்றில் இரண்டு பக்கத்திலேயும் மானாமதுரை வரையில் கால்வாய்—சேனல்—கொண்டு சென்றிருக்கிறார்கள். அக்கரைகள் முக்கால் வாசி பாதிக்கப்பட்டிருக்கிறது. கரைகள் உடைந்து விட்டன. வெள்ளம் அதிகமாக வருவதால் அதைத் தடுக்க முடியாதுதான். ஆனால் வெள்ளம் வரும்போது கரையை அரிக்காமல் இருக்க இன்ஜினியர்கள் யோசனை பண்ணி இருக்க வேண்டாமா? வெறும் மணலைப் போட்டு கரையைக் கட்டினால் சரிந்துவிடும். இதைக்கூட கவனிக்காமல் கரை கட்டியிருக்கிறார்கள். இப்போது சீர்திருத்தம் நடந்து கொண்டிருக்கிறது. மீண்டும் ஆற்று மணலையே கரை போட்டுக் கட்டுகிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் வந்து பார்த்தார்கள். காண்டிராக்டில் சிக்கல் இருக்கிறதா, பழைய ஆட்சி காலத்தில் ஏதாவது இதில் முறைகேடுகள் நடந்து இருக்கிறதா என்று விசாரிக்க வேண்டும். இது என்னுடைய சட்டமன்றத் தொகுதி என்ற காரணத்தினால் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-50)

இந்தப் புயல் நிவாரண நிதி கரும்பு, வாழை போன்ற பணப்பயிர்களுக்கு மட்டும்தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பணப் பயிர்களை வசதி படைத்தவர்கள்தான் போடுவார்கள். ஏழைகள் பணப் பயிர்களைப் பயிரிடமாட்டார்கள் என்று சொல்லவில்லை. ஏழைகளும் போடுவார்கள். ஒரு எக்கர், 1/2 எக்கர் 1/4 எக்கர் என்று. அவர்களுக்கு கொடுக்கவேண்டும். அவர்களுடைய நெல் பயிர்கள் எல்லாம் சேதம் அடைந்திருக்கிறது. முழுமையாக அவர்கள் மீண்டும் விவசாயம் பண்ண முடியாத நிலை இருக்கிறது. இந்த நிவாரணம் அவர்களுக்குக் கிடைக்காதா என்பதை நாம் அறிய வேண்டும்.

நெற்பயிர் சேதமுற்றவர்களுக்கு நிவாரணம் இல்லை. மாவட்ட கலெக்டரைக் கேட்டால் நெற்பயிர் சேதம் அதிகமாக இருப்பதால் நிதிப்பற்றாக்குறை காரணமாக அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார். அதை நல்ல காரணம் என்று ஏற்றுக் கொண்டாலும் ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். 1/4 எக்கர், 1/2 எக்கர், ஒரு எக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் மீண்டும் பயிர் செய்ய வேண்டுமென்றால் எவ்வளவோ சிக்கல் இருக்கிறது. வசதி படைத் தவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.





வசதியற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையை இந்த மன்றத்தில் எழுப்ப வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறு கிறேன்.

* **திரு. ப. சந்திரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின்மீது உழைப் பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக எனக்குப் பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி என் உரையைத் துவக்குகிறேன்.

இன்று தமிழகத்தில் இயற்கையின் சீற்றத்தால் பெருவாரியான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அந்தந்தப் பகுதி யிலிருந்து வந்த உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். இயற்கை யினுடைய சீற்றத்தை சமாளிக்கின்ற அளவிலே இந்த அரசு ஏற்றுக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி செய்து வருகிறது. அதையும் அந்த உறுப்பினர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிற நேரத்திலே ஏழை எளிய மக்கள் கூட தமிழக அரசுக்கு நிதி உதவுகிற முறையில் தமிழக முதல்வருக்கு தங்களுடைய நிதியை அளித்து வருகி றார்கள்.

இந்த நேரத்தில் எங்களுடைய வேண்டுகோளாக ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏழை எளிய, பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு நிவாரணப் பணிகளுக்கு உதவுவதற்காக தனியாக விசேட லாட்டரிச் சீட்டு ஒன்றை நடத்தி அதன் மூலமாகப் பணம் திரட்டலாம் என்ற கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே இருக்கிற தமிழக மக்கள் அத்தனைபேரும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அத்தனைபேரும் கட்சி வேறுபாடின்றி தமிழக முதல்வரிடம் தங்களுடைய நன்கொடைகளை அளித்து வருகிறார்கள். நேரிடை யாகவும், தபால் மூலமாகவும் அளித்து வருகிறார்கள்.

அப்படியிருக்கிறபோது, இங்கே எனக்கு முன்பு பேசிய உறுப் பினர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இந்தப் பணியில் கட்சிபேதம் இன்றி ஈடுபடு கிறோம் என்று கூறினார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற அத்தனைக் கட்சிக் காரர்களும் முதலமைச்சர் அவர்களிடத்தில் பணத்தைக் கொடுக் கிறபோது, திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும், அதிகாரி களையும், ஆளுநரையும் கூட்டிக்கொண்டு சென்று பணம் அளிப்பதை

[திரு. ப. சந்திரன்] [1977 டிசம்பர் 31

முறையா? இதுதான் அவர்கள் கட்சி பேதமின்றி பணி செய்வதா என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் மாநில சுயாட்சி என்றும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும், கவர்னர் பதவி வேண்டியதே இல்லை என்றும் தீர்மானங்களை அவர்களுடைய மாநாட்டிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற நேரத்தில் அவர்கள் ஆளுநரிடம், அதிகாரிகளிடம், தாங்கள் திரட்டிய நிதியை அனுப்பி இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் அந்தக் கொள்கைகளைக் கைவிட்டு விட்டார்கள் என்று தான் கருதுகிறேன்.

எனவே, இந்தப் பணியில் செயல்படும் அத்தனைபேரும், இங்கே முன்னாலே பேசிய உறுப்பினர்கள் கட்சிபேதமற்று செயல்படுகிறோம் என்றாலும், நிவாரணப் பணியில் அரசு கட்சி பேதத்தோடு செயல்படுகிறது என்று குற்றச்சாட்டைக் கூறினார்கள். அந்தக் குற்றச்சாட்டைக் கூறுவதற்கு அவர்களுக்கு எந்தவித தகுதியும் இல்லை என்று நான் அறுதியிட்டுக் கூறிக் கொள்கிறேன். எங்களுடைய வடாற்காடு மாவட்டம் திருச்சி, தஞ்சை, நாகை போன்ற மாவட்டங்களோடு ஒப்பு நோக்கும்போது அதிகமாகப் பாதிக்கப்படவில்லை என்றாலும் வடாற்காடு மாவட்டத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருக்கும் மக்கள் ஏழை எளிய அரிசன மக்கள்தான். அவர்கள்தான் இந்த அரசுக்குப் பெரும்பான்மையான ஓட்டுக்களை அளித்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாக உதவி அளிக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏறத்தாழ 100—200 ஆண்டுகளுக்கு முன் அரிசனக் காலனி கலந்து ஒதுக்கித் தரப்பட்டு இருக்கும் சிறிய இடத்திலேயே வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மக்கள் பெருக்கம் இருந்தபோதிலும் அவர்கள் வசதியாக வீடுகள் கட்டிக்கொண்டு வாழமுடியாமல், கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய பொணமல்லூர் தொகுதியில் அரியப்பாடி போன்ற இடங்களில் உள்ள அரிசன மக்கள் வீடில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசு ஒதுக்கியுள்ள இடம் ஏரியின்மேல் பக்கம் இருக்கிறது. அந்த இடத்தில் சமீபத்தில் பெய்த மழை காரணமாக வீட்டுக்குள்ளேயே ஊற்று எடுக்க ஆரம்பித்துவிட்டது. நானே அதைப் பார்த்தேன். ஆகவேதான் அந்தப் பகுதியில் இருக்கும் வேறு ஒரு புறம்போக்கில் அவர்களை நான் சென்று வசிக்கும்படி சொன்னேன். அவர்களுக்கு அந்த இடத்தை



1977 டிசம்பர் 31] [திரு. ப. சந்திரன்]

அரசு மாற்றித்தருகிற வரையில் அந்த இடத்திலே இருங்கள் என்று சொல்லி வந்தேன். அவர்களும் அந்த இடத்தில் சென்று வாழ்ந்தார்கள். ஆனால் அந்த ஊரில் இருந்தவர்கள் ஊர் கட்டுப்பாடு என்ற பெயரால் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் என்னிடம் வந்து முறையிட்டார்கள். நான் அவர்களை அவர்கள் இடங்களிலேயே அரசு இடமாற்றம் செய்து தரும் வரையில் இருங்கள் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்.

இந்த அரசு பயிர் இன்ஷூரன்ஸ் கொண்டுவரும் என்று சொல்லி இருக்கிறது. தமிழ் நாடு பூராவும் கட்சிக் கூட்டங்களில் பேசி வந்து இருக்கிறோம். தேர்தல் அறிக்கையிலும் அதுபற்றி அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் அது மக்களுக்கு நல்ல பாதுகாப்பாக இருக்கும். தற்போது நிலங்கள், பயிர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, ஒரு ஏக்கருக்கு ரூபாய் 500 நஷ்ட ஈடாக இந்த அரசு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீடு இழந்தவர்களுக்கு வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ரூபாய் 100 வழங்க வேண்டும் என்று அரசு கூறியிருக்கிறது. ஆனால் ரூபாய் 30, 40 தான் வழங்கியிருக்கிறார்கள். அது போதாது. ஏறத்தாழ வீடு இழந்த குடும்பங்களுக்கு ரூபாய் 500 கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அதோடு மட்டுமல்லாமல் வட ஆற்காடு மாவட்டத்தில் பட்டுத்தறி நெசவாளர்கள் ஏறத்தாழ 50 நாட்களாகத் தங்களுடைய தொழிலை இழந்திருக்கிறார்கள். இடைவிடாது பெய்த மழையின்

காரணமாக, தறிக் குழிகளில் தண்ணீர் தேங்கி, அதன் காரணமாக தறிகளைப்போட முடியாமல், ஏறத்தாழ 50 நாட்களாக வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்ததை நான் பார்த்த காரணத்தால் கூறுகிறேன். அவர்கள் பட்ட துன்பங்களுக்கு ஈடுசெய்யும் வகையில் அரசாங்கம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மழையின் காரணமாக அழிந்துபட்ட தறிகளுக்கு மட்டும் ரூபாய் 125 வழங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தோடு, இப்படி வேலையில்லாமல் 50 நாட்களாகத் திண்டாடிய ஏழை நெசவாளர்களுக்கு ஒரு உதவித்தொகையையும் நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சுப்பிரமணியன் :** பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, கடந்த 20, 25 நாட்களுக்கு முன்பாக தமிழகத்தில் வெள்ளத்தாலும், புயலாலும் ஏற்பட்ட சேதங்கள் குறித்து சட்டமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள வெள்ள அறிக்கையின்மீது பேசும் வாய்ப்பினைப் பெற்ற நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்று, ஆறே மாதங்கள் ஆகின்ற நிலையில், இந்த ஆறு மாதங்களுக்குள்ளாக இயற்கையாலும், செயற்கையாலும் ஏற்பட்ட எத்தனை போராட்டங்களைச் சந்தித்திருக்கிறது என்பதனை நாடறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஜூன் திங்கள் 30 ஆம் நாள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பிறகு, ஆறு மாத காலத்திற்குப் போராட்டங்களை நாங்கள் நடத்தமாட்டோம், ஆறு மாதம் வரையில் நாங்கள்





பொறுத்திருப்போம் என்று கூறியவர்கள் எல்லாம், ஆறு நாட்கள் கூடப் பொறுத்திருக்க முடியாத சூழ்நிலையில், பல போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட போராட்டங்களை இங்கே மக்களுடைய மாபெரும் தலைவர், தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் எப்படியெல்லாம் சந்தித்து, அந்த சோதனைகளை எல்லாம் சாதனைகளாக மாற்றி இருக்கிறார் என்பதைக்கண்டு மக்கள் வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாணவர்கள் போராட்டமாக இருந்தாலும், தொழிலாளர்கள் போராட்டங்களாக இருந்தாலும், விவசாயிகள் போராட்டமாக இருந்தாலும், எப்படிப்பட்ட போராட்டமாக இருந்தாலும் அவைகளையெல்லாம் எந்தெந்த வழியில் சந்திக்க வேண்டுமோ, அந்த வழியில் தீர்க்க தரிசனத்துடன் சந்தித்து, இந்த ஆறு மாதங்களுக்குள்ளாக இந்த ஆட்சி ஒரு நிலையான ஆட்சி என்று மக்களாலும், அரசியல் தலைவர்களாலும் போற்றப்படும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்றால், இதைப் பார்த்து மாற்றார்கள் பொறாமைப்படுகிறார்கள் என்பதில் ஐயுறுவதற்கு இடமில்லை. அப்படிப்பட்ட ஆட்சிக்கு கடந்த மாதம் இயற்கையால் எத்தனையோ இன்னல்கள் ஏற்பட்டன.

இங்கே கனம் உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசும் போது கூட, இறைவனால் இப்படிப்பட்ட புயல் ஏற்பட்டது, இறைவன்தான் இதற்குக் காரணம் என்று சொன்னால் நம்ப மாட்டோம் என்று சொன்னார்கள். இறைவன் காரணமோ, இயற்கை காரணமோ, இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டு விட்டன. அப்படி ஏற்பட்டதில், 590 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். தென்னை மரங்கள் வீழ்ந்துபட்டிருக்கின்றன. வாழை மரங்கள் சாய்ந்துபட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில், அண்ணா

[திரு. மா. சுப்பிரமணியன்] [1977 டிசம்பர் 31

திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் எடுத்தது என்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. உடனடியாக போர்க்கால நடவடிக்கைகள் போல் நிவாரணப் பணிகளுக்கு எவ்வளவு தூரம் நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை நாடும், ஏடும் போற்றிக்கொண்டிருப்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

மத்திய அரசிலிருந்து எத்தனையோ அமைச்சர்கள் வந்து பார்வையிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் மது தந்தவதே, பா. இராமச்சந்திரன் எல்லோரும் வந்தார்கள். அமைச்சர் பா. இராமச்சந்திரன் வந்ததோடு மட்டுமல்ல, தம்முடைய ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் மூலம் 10 இலட்ச ரூபாய்க்குமேல் வெள்ள நிவாரணத்திற்கு நிதியை அளிப்போம் என்று கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதேபோல் மத்திய அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் வந்தார்கள். அவரும் தம்முடைய ஸ்தாபனத்தின் சார்பாக 10 இலட்சம் ரூபாய் அளிப்பதாகச் சொன்னார்கள். இப்படி எத்தனையோ அமைச்சர்கள் வந்து பார்வையிட்டு விட்டு, இந்த அரசின் நிவாரணப் பணிகளைப் பாராட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

நம்முடைய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் வந்தார்கள். வந்து இங்குள்ள நிவாரண வேலைகளையெல்லாம் பார்வையிட்டார்கள். மக்கள் குழுக்களை அமைத்து அந்தக் குழுக்கள் மூலம் மேலும் நல்லமுறையில் வேலை செய்யுங்கள், நிவாரண வேலைகள் செய்தால் மட்டும் போதாது, அந்த வேலைகள் நிரந்தரமாக இருக்கக்கூடிய அடிப்படையில் உங்கள் பணிகள் இருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குழுக்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.



1977 டிசம்பர் 31] [திரு. மா. சுப்பிரமணியன்]

நமது பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் வந்தார்கள். வந்து நம் நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்றபிறகு நம் பணிகளைப் பார்க்கவும் இங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சேதங்கள் பற்றி அறியவும் ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவின் தலைவர் அவர்களும் இங்குள்ள நிவாரணப் பணிகளைப் பார்த்து மக்களே பாராட்டுகிறார்கள் என்று சொல்கிற அளவிற்கு அத்தனை பேர்களும் பாராட்டிவிட்டுச் சென்றார்கள்.

நான் எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால் இங்கு ஒரு சிலர் நிவாரணப் பணிகளை குறை சொல்வதற்காக அல்லது நிவாரணப் பணிகளில் ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்வதற்காகச் சொல்கிறேன். மக்கள் அவர்களை நம்பத் தயாராயில்லை. ஏனெனில் நாட்டு மக்கள் மத்தியில் எந்த ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி எல்லாம் நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களை மக்கள் திட்டுகிற அளவிற்கு அவர்கள் தங்கள் அரசியலை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது நமது புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சாதனைதான் என்பதை தான் திட்டவட்டமாகக் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு புயல், வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் எப்படி போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு வேலைகளைச் செய்தார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது புயலால் சேதம் அடைந்தவர்களுக்கு வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு ரூபாய் 80 தான் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டு வந்த நிலைமை மாறி இப்போது ரூபாய் 200

மானியமாகவும் ரூபாய் 300 கடனாகவும் கொடுத்து ரூபாய் 500 கொடுக்கிறார்கள். ஒரு வெற்றிடியும் ஒரு சேலையும் வீடு இழந்தவர்களுக்கு கொடுக்கிறார்கள். ஸ்டான்டிங் ஆர்டர்படி ரூபாய் 80 என்று நினைக்கிறேன். நிதிவசதி இல்லாவிடினும் போர்க்கால நடவடிக்கைகள் போல் ரூபாய் 500 அளவிற்குக் கொடுக்கிறவகையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு முயன்றிருக்கிறது என்றால் அதைப்பற்றி இன்று சிலர் குறைபட்டுக் கொள்கிறார்கள் என்றால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. மக்கள் மன்றத்தில் யார் யார் நல்ல பெயர் எடுத்திருக்கிறார்கள், யார் யார் நிவாரணப் பணிகளில் எப்படி எப்படி ஈடுபட்டார்கள் என்பதை நாடு அறிந்திருக்கிறது.

அதேபோல் வெள்ள புயல் நிவாரணப் பணிகளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசோடு, அமைச்சர்களோடு மாற்றுக் கட்சித் தலைவர்களும் உடன் இருந்து செயல்பட்டார்கள். மண் மேடிட்ட இடங்களையெல்லாம் அரசு தன் செலவில் சீர் செய்திருக்கிறது. உரம் வாங்க, பூச்சி மருந்துகள் வாங்க 25 சதவிகித மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. மீனவர்களுக்கு 50 சதவிகிதம் கடனாகவும் 50 சதவிகிதம் மானியமாகவும் வலைகள் போட்டுகள் வாங்க பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பணிகளுக்கும் அரசுக்கு நிச்சயமாக அதிகத் தொகை தேவைப்படும். ரூபாய் 100 கோடிக்கு மேல் நிவாரணப் பணிகளுக்குச் செய்யுங்கள் என்று உத்தரவுகள் போட்டுவிட்ட பிறகு நம் மத்திய அரசிடமிருந்து ரூபாய் 33,91,00,000 தான் வந்திருக்கிறது. இதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், எவ்வளவோ அமைச்சர்கள் இங்கு வந்தார்கள், வந்து நிவாரணப் பணிகளை எல்லாம் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். நமது பிரதம அமைச்சர் அவர்களும் வந்தார்கள்.





அவர்களும் நிவாரணப் பணிகளைப் பாராட்டி விட்டு புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டுவிட்டுச் செல்லும்போது மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும்போது இது ஒரு நேஷனல் கலாமிட்டி என்று கூறினார்கள். அவர்கள் அப்படிக் கூறுகிற நேரத்தில் இன்னொரு கருத்தையும் குறிப்பிட்டார்கள்.

'It was a national calamity and every one should help and co-operate in providing relief to the affected people'.

அப்படி கூறிய பிரதமர் அவர்கள் அங்கு சென்ற பிறகு 33 கோடி 91 இலட்சம் ரூபாய்தான் திட்ட முன்பணமாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள் என்றால் என்னால் அதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை. 100 கோடிக்குமேல் நிவாரணப் பணிகள் செய்ய உத்தரவிட்டு 33 கோடி மட்டும் அனுப்பியிருக்கிறார்கள். அப்படி அனுப்பப்பட்ட பணமும் திட்ட முன்பணம் என்றால் இதை வைத்து எப்படி வெள்ள நிவாரணப் பணிகளைச் செய்ய முடியும் என்று சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய அமைச்சர்கள் வந்து பார்த்துவிட்டு பாராட்டுகிறார்கள். பாராட்டுகிற நேரத்தில் செய்ய வேண்டிய வேலைகளுக்கு அவர்கள் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மூலம் 10 இலட்சம் அனுப்பி விட்டால் போதாது. 100 கோடிக்குமேல் இருந்தால்தான் நிவாரணப் பணிகளை செய்ய முடியுமே தவிர நிரந்தரமான பணிகளைச் செய்ய 200 கோடி ரூபாய் நிச்சயமாகத் தேவைப்படும். அவ்வளவு ரூபாய் தரவேண்டுமென்றால் மத்திய அரசு புயல், வெள்ள நிவாரண வேலைகளுக்காக இன்னும் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மா. சுப்பிரமணியன்] [1977 டிசம்பர் 31

(பிற்பகல் 1-10)

மாநில அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் காழ்ப்புணர்ச்சி வரக்கூடிய விதத்தில் பேசக்கூடாது என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். மத்திய அமைச்சர்கள் எல்லாம் வந்து பார்வையிட்டார்கள், அதையெல்லாம் நாங்கள் பாராட்டுகிறோம், ஆனால் அதே நேரத்தில் இன்னும் அதிகமான பணம் அனுப்புங்கள் என்று கேட்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு சில நண்பர்கள், பொதுமக்களிடமிருந்து பணத்தை வசூல் செய்து, மாநில சுயாட்சி வேண்டும், தாங்கள் தமிழ் மறவர்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முதலமைச்சர் அவர்களிடம் நிதியைக் கொடுக்காமல் வேறு எங்கேயோ சென்று கொடுத்திருக்கிறார்கள், என்ன காரணம் என்று தெரியவில்லை. இல்லையென்றால் அரசு அதிகாரிகளாக இருக்கும் தலைமைச் செயலாளர் போன்றவர்களிடத்தில் கொடுத்திருக்கலாம். இப்படிப்பட்ட தவறை யாரும் செய்யமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ள நிவாரண வேலைகள் நடைபெறுகின்ற இந்த நேரத்தில், கடந்த ஆறு மாத காலத்திற்குள் இந்த அரசு பல்வேறு போராட்டங்களை சமாளித்திருக்கிறது, எப்படிப்பட்ட போராட்டங்கள் என்று பேசுவதற்கே கஷ்டமாக இருக்கிறது. மாணவர்கள் வேண்டுமென்றே கிளப்பி விட்டுப் போராட்டங்களை நடத்தினார்கள். புரட்சித் தலைவர் வீழ்க என்று சொல்லிக் கொண்டு போராட்டம் நடத்த வந்த மாணவர்கள் புரட்சித் தலைவரை சந்தித்துப் பேசிய பின்னால், புரட்சித் தலைவர் வாழ்க என்று சொல்லிக்கொண்டு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்த்தோம். அந்த அளவுக்கு எந்த



1977 டிசம்பர் 31] [திரு. மா. சுப்பிரமணியன்]

போராட்டமாக இருந்தாலும் அவற்றையெல்லாம் சமாளித்து வெற்றி பெறக்கூடிய திறமை நமது புரட்சித் தலைவருக்கு இருக்கிறது என்பதை இந்த நாடு அறிந்திருக்கிறது.

குறிப்பாக ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய பிரதம அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் மேற்கு வங்காளத்திலும், தமிழகத்திலும்தான் நிர்வாகத்தில் தலையிடாத, ஊழல் அற்ற ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னதை நமது எதிர்க்கட்சித் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைவிட்டுவிட்டு காழ்ப்புணர்ச்சியுடன், ஏதோ தலைப்பு செய்தி வரவேண்டும் என்பதற்காக, எதை வேண்டுமானாலும் பேசலாம், என்ற அளவில் பேசிக் கொண்டிருந்தால், அவையெல்லாம் நிச்சயமாக மக்கள் மன்றத்தில் எடுபடாது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

புயலால் மக்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில் எத்தனையோ தலைவர்கள் அந்தந்த இடங்களுக்குச் சென்று பார்த்தார்கள். ஆனால் இரும்புக் கூண்டுக்குள் இருந்து கொண்டு வெளியே வருகிற சிலர், பாரதிதாசன் சொல்வதைப்போல்—கூண்டுக்குள் இருக்கும் சிறுத்தையே வெளியே வா, வா—என்று சொல்வதைப் போல் வெளியே வா என்று சொல்லியும் வராமல், பின்னால் நிவாரணப் பணிகள் நடக்கும் இடங்களில் சென்று அங்கு தேவையில்லாத புழுதிகளை கிளப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அது மக்கள் மன்றத்தில் எடுபடாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூறு ஆண்டுகளாக இப்படிப்பட்ட ஒரு புயல் தமிழகத்தில் வந்ததே இல்லை என்று நூறு ஆண்டு சரித்திரத்தைப் பற்றித் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். விஞ்ஞான ரீதியில் பார்க்கும் போது, ஆந்திராவில் 20 அடி உயரத்திற்கு அலைகள் எழும்பி உள்ளே திருப்பி வருகின்ற நேரத்தில், புயல் 150 மைல் அதாவது மணிக்கு 150 மைல் வேகத்தில் போய் ஒன்றோடொன்று மோதும் போது, தீ பரவக் கூடும், இதில் 120 மைல் வேகத்தில் தான் புயல் வந்தது. அதனால் தான் தீ பரவவில்லை என்றாலும் திரும்பி வருகின்ற வேகத்தில் எல்லா தென்னை மரங்களும் மொட்டையாகி யிருக்கின்றன. வாழை மரங்கள் எல்லாம் கீழே விழுந்திருக்கின்றன என்று தெரிகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

புயல் வருவதற்கு காரணம் ஆண்டவன் தான் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நண்பர் அம்பிகாபதி அவர்கள் சொன்னதை நானும் ஒத்துக் கொள்கிறேன். இயற்கையினுடைய சக்தியால், இயற்கை கோளாறினால் தான் இப்படிப்பட்ட புயல், தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் வீசியது, அதன் காரணமாகத்தான் இத்தனை சேதங்களும் ஏற்பட்டன என்பதை நாம் நினைத்து மனம் உருகி, இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சி எதுவுமில்லாமல், அரசியல் லாபம் தேட வேண்டும் என்கின்ற எண்ணம் இல்லாமல் ஒன்றுபட்டு நிவாரண வேலைகளில் ஈடுபட்டால் தான் தமிழ் பண்பாடு காப்பாற்றப்படுவதற்கு பொருள் உள்ளதாக இருக்கும். ஆகவே, எந்தவித அரசியல் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் தமிழர்கள், தமிழ்ப் பண்பாடு, தமிழ் மரபு என்றெல்லாம் பேசுகின்றோம். அப்படி பேசுகின்றபடி நடக்கவும் வேண்டும். இப்படி ஒரு ஆபத்தான நிலைமை நாட்டிலே உருவாகும்போது,







அந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக நம்முடைய அரசியல் காழ்ப்புணர்ச்சிகளையெல்லாம் விட்டுவிட்டு, ஒரே ஒரு குழுவாக நின்று நிவாரணப் பணிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்ய முற்பட்டால் தான், நாம் சொல்கின்ற தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்ற முடியும். அந்தப் பண்பாட்டைக் காப்பாற்றக்கூடிய வகையிலே, இங்குள்ள அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, வெள்ள நிவாரண அறிக்கையின் மீது என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள செந்துறை கிராமத்தில் மூன்று கிலோ மீட்டர் அளவுக்கு இந்த வெள்ளத்தால் உடைப்பு ஏற்பட்டு, அங்கு 600 பேர் வீடுகளை இழந்திருக்கின்றனர். இதைப் பார்க்கும்போது, அது ஒரு கோரக் காட்சியாக இருந்தது. அப்போது நல்லவேளையாக பகல் நேரமாக இருந்த காரணத்தினால், அங்கு எந்தவிதமான உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. அங்குள்ள மக்கள் மரங்களிலும், மேடுகளிலும் ஏறிக் கொண்டு தப்பித்துக் கொண்டார்கள். ஆனால், அங்கிருந்த சாமான்களையெல்லாம், ஆடு, மாடுகளையெல்லாம் அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. ஆகவே, இந்த அரசாங்கம் உடனடியாக அங்கே ஒரு தடுப்புச் சுவரைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கட்டினால் அந்தக் கிராமம் காப்பாற்றப்படும்.

[திரு. மெ. ஆண்டி அம்பலம்] [1977 டிசம்பர் 31]

என்னுடைய தொகுதியிலே 600 வீடுகள் இந்த வெள்ளத்தால் அழிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி வெள்ளத்தால் அழிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒரு குடும்பத்திற்கு 200 ரூபாய் வீதம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது என்ன நடந்தது? அங்குள்ள மக்கள் ஏற்கெனவே கடன்பட்டிருந்த கூட்டுறவுக் கடனைப் பெறுவதற்காக, தண்டோரா அடித்துக் கொண்டு அவர்களுடைய ஆடு, மாடுகளை ஜப்தி செய்வதற்காக அதிகாரிகள் வந்தார்கள். அந்தக் காட்சி பார்ப்பதற்கு ரொம்பவும் மோசமாக இருந்தது. மக்கள் தங்களுடைய உடைமைகளையும் பொருள்களையும் இழந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது இப்படி அதிகாரிகள் ஜப்தி செய்வதற்கு வந்தது அனைவருக்கும் மன வேதனையாக இருந்தது. எனவே, இந்தமாதிரி செய்யாமல் இருக்க இதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி, அந்தக் கடன்களையெல்லாம் ஒரு ஆண்டிற்குத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நத்தம் தொகுதியிலே அழகர் மலை, காந்தர் மலை, சிறு மலை போன்ற இடங்களில் காட்டாறுகள் இருக்கின்றன. அந்தக் காட்டாறுகளில் 200, 300 கிலோ மீட்டர் வேகத்தில் வெள்ளம் வந்தது. அப்படி வெள்ளம் வரும்போது, பக்கத்திலுள்ள தென்னை மரங்கள் எல்லாம் வேரோடு தூக்கி எறியப்பட்டன. அங்கேயிருந்த கால்நடைகள், குடிசைகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன. எனவே, இந்த வெள்ளம் பெருத்த சேதத்தை அங்கே உண்டாக்கியது. கடந்த 3, 4 ஆண்டுகளாக மழையே இல்லாமல் அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். முன்பு வறட்சியால் பாதிக்கப்பட்டார்கள். இப்போது வெள்ளத்தால் மேலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சாப்பாட்டிற்கே வழியில்லை. எனவே, இந்த நேரத்தில் அவர்கள்



1977 டிசம்பர் 31] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

விஷயத்தில் கவனம் செலுத்தி, அவர்கள் விவசாயம் செய்வதற்கான விதை வித்துகளை வாங்கிக் கொடுக்க வேண்டும். இந்தப் பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, இந்த மழையினால் அந்தத் தொகுதியில் மொச்சை, சோளம், கம்பு, கேப்பை, பருத்தி, உளுந்து, வரகு போன்ற பயிர் தானியங்கள் எல்லாம் பொய்த்துவிட்டது. இதனால் அவர்களுக்கு எவ்வித வெள்ளாமையும் வரவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் அங்குள்ள நிலம் ஊத்தெடுக்கின்றது. மீண்டும் அவர்கள் வெள்ளாமை செய்ய வேண்டுமானால் குறைந்தது ஆறு மாத காலமாகும். இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்ட காரணத்தினால், அரசாங்கமே முன்வந்து அவர்களுக்கு விதை வித்துக்களை இனமாகவோ அல்லது மானியமாகவோ கொடுத்து உதவ முன்வர வேண்டுமென்றும், அது வரவேற்கத் தக்கதாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஜில்லாக்களில், அரசு கடன்களையும், தனியார் கடன்களையும், ஓராண்டுக்குத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

என்னுடைய தொகுதியில் சாணார்பட்டு என்ற பகுதி பூமிதான கிராமமாக இருக்கிறது. அங்கு 30 ஏக்கர் நிலம் மண் மேடிட்டு விட்டது. நூற்றுக்கணக்கான கிணறுகளும் மண் மேடிட்டு விட்டன. என்னுடைய தொகுதியில் மொத்தம் 250 ஏக்கர்கள் மண்மேடிட்டு விட்டன. இதில் அரசாங்கமே பொறுப்பேற்று

மண் மேடிட்டுவிட்ட வயல்களிலும் கிணறுகளிலும் இருந்து மணலை அப்புறப்படுத்தி, விவசாயிகளுக்கு ஊக்கம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும். வீடிழந்த குடும்பங்களுக்கு 200 ரூபாயும், ஒரு சேலையும், ஒரு கைலியும் கொடுத்த தமிழ்நாடு அரசுக்கு எனது நன்றி சொல்லி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் தமிழகத்திலே மிகக் கோரமாக வீசிய புயலினாலும், மிக வேகமாக வந்த வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வாய்ப்பினைத் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, அன்னை என்றால், சீற்றம் வந்தால் கூட யாரையும் பாதிக்காது என்று சொல்வார்கள். ஆனால் இயற்கை அன்னையைப் பொறுத்தவரையில் ஏன் இவ்வளவு கோபப்பட்டாள் என்று நமக்குப் புரியவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை தன்னுடைய கோபத்திற்கு ஆளாக்கி பல்வேறு இடங்களில் பல்வேறு தொல்லைகளையும் துயரங்களையும் மக்களுக்குத் தந்து விட்டுப் போயிருக்கிறாள் என்பதை மிகத் தெளிவாக நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், அந்தத் துயரங்களைப் போக்க நமது புரட்சித் தலைவர் தலைமையிலான அரசு தன்னுடைய அன்புக் கரத்தை, ஆதரவுக் கரத்தை, கண்ணீரைத் துடைக்கின்ற கரத்தை நீட்டி மிக வேகமாக மட்டுமல்ல; மிக நேர்மையான முறையிலும்



நிவாரணப் பணிகளைச் செய்து முடித்திருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் மட்டும் சொல்லவில்லை; பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகிற செய்தித் தாள்கள் மிகத் தெளிவாக அவைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் உணருகிறோம்.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட தொகுதிகளில் என்னுடைய தொகுதி, முதன்மையானது என்பதை நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்ரீரங்கம் என்று சொன்னாலே அங்கு சோழனும், பாண்டியனும், பல்லவனும் கட்டப்பட்ட திருவரங்கன் ஆலயம் அவ்வளவு பேர் நினைவாக வருகிறது. இவ்வளவு பெரிய ஆலயத்தை அவர்கள் அமைத்தது பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் இத்தகைய வெள்ளம் ஏற்படுகிற நேரத்தில் மக்களுடைய உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய இடமாக, அந்த ஆலயம் ஒரு புகலிடமாக இருந்தது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இதுபோன்ற ஆலயங்கள் இருப்பது, இதுபோன்ற இக்கட்டான நேரங்களில் மக்களைப் பாதுகாக்கும் இடமாகப் பயன்படுத்துவதற்காக அந்தக் காலத்து மன்னர்கள் முன்னேற்பாடாகச் செய்து வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியின் தலைவாயிலில் அரியாறு என்ற ஆறு பெயரிலேயே அரி என்ற வார்த்தை இருக்கிறது, ஆகவே அரிப்பை அங்கே தொடங்கி என்னுடைய தொகுதி முழுமையாக

அரித்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வெள்ளிவாடி என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்து ஒரு ஆறு இருந்த அரியாறு இரண்டாகப் பிரிந்து மற்றும் ஒரு திருவரங்கத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வெள்ள நிவாரணப் பணிகள் வெள்ளம் பெருக்கெடுத்த நேரத்தில் துவங்கப்பட்டதா, சரியான நேரத்திலே துவங்கப் பட்டதா என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறார்கள் என்று சொன்னால் அதற்கு ஒரு காரணத்தை நான் சொல்ல முடியும். ஸ்ரீரங்கத்தில் இருந்த நான் அப்போது திருச்சியில் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலை மூன்று நாட்களுக்கு இருந்தது என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட போர்க் கால நடவடிக்கைகள் உடனடியாக பல பகுதிகளுக்குக் கிடைக்கின்ற சூழ்நிலை ஆங்காங்கு உருவாக்கப்பட்டது என்பதை நான் சுட்ட விரும்புகிறேன். நான் ஸ்ரீரங்கத்திலிருந்து திருச்சிக்கு வருவதற்கு எந்தப் பகுதியிலும் வழி இல்லை. கிட்டத்தட்ட ஆறு அடி ஏழு அடித் தண்ணீர் சுற்றிலும் ஓடிக் கொண்டிருந்த சூழ்நிலையைப் பார்த்தேன். திருவரங்கம் தொகுதியில் ஒரு பாலைவனத்தைப் பார்க்கின்ற நிலைமை இருந்தது. மணிகண்டம் அந்தரநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு இடங்களில் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையைக் குறித்து தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவருக்கு உடனே ஒரு மனுவைச் சமர்ப்பித்து நாலைந்து அடிகள் மண்ணிறைந்த நிலங்களில் உடனே புல்டோசர் மூலமாக மண்ணை எடுக்க அனு-



இல்லையென்று சொல்லாமல் இலவசமாக மண்ணை அகற்றுவதற்கு நான்கைந்து புல்டோசர்களை அனுப்பி அவை வேலை செய்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம்.

[illegible] இதையெல்லாம் எதற்காகச் சுட்டிக் காட்டுகிறேன் [illegible] இப்படி வெள்ளம் வந்ததற்குப் பின்னாலே [illegible] பட[illegible] நடவடிக்கைகள் அந்தப் பகுதியிலே [illegible] [illegible]இலே குறிப்பாகத் தாய்மார்களிடத்தில் [illegible] பெருமை [illegible] மக்களிடத்தில் ஒரு பெரிய [illegible] இருக்கிறது. இதுவரையிலே எந்த அரசும் [illegible] செய்[illegible] இருக்க வேண்டுமென்று கேட்[illegible] இல்லை [illegible] முழுமூச்சாக எப்போதும் நிவாரண[illegible] செய்யவில்லை. இந்த அரசுதான் செய்திருக்கிறது. [illegible] முதலமைச்சர் ஆக இருக்கிற புரட்சித் தலைவர் ஏழையின் பங்காளன் என்பதால் ஒவ்வொரு கட்டத்திலேயும் அவர் ஏழையின் பங்காளன் என்பதை அவர் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார் என்று அவர்கள் எல்லாம் வாயாரப் புகழ்ந்ததை நான் காதாரக் கேட்டேன்.

இந்த நேரத்திலே நாம் இன்னொன்றையும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். 20 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த ஆற்றினுடைய கரைகள், ஏரிகளினுடைய கரைகள் இன்றைக்கு இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அகன்று நீண்டிருந்த அந்தக் கரைகள் எல்லாம் இன்றைக்கு இளைத்து குறுகி டி.பி. வந்தவரின் உடம்பைப் போன்று தான் இருக்கின்றன. அது மட்டுமல்ல, கரைகளைப் போன்று ஆறுகளைக் காத்து வந்த கரையோரங்களில் வளரும் நாணல், கோரை [illegible]

[திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்] [1977 டிசம்பர் 31

அரித்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வெள்ளிவாடி என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்து ஒரு ஆறு இருந்த அரியாறு இரண்டாகப் பிரிந்து மற்றும் ஒரு திருவரங்கத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வெள்ள நிவாரணப் பணிகள் வெள்ளம் பெருக்கெடுத்த நேரத்தில் துவங்கப்பட்டதா, சரியான நேரத்திலே துவங்கப் பட்டதா என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறார்கள் என்று சொன்னால் அதற்கு ஒரு காரணத்தை நான் சொல்ல முடியும். ஸ்ரீரங்கத்தில் இருந்த நான் அப்போது திருச்சியில் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலை மூன்று நாட்களுக்கு இருந்தது என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட போர்க் கால நடவடிக்கைகள் உடனடியாக பல பகுதிகளுக்குக் கிடைக்கின்ற சூழ்நிலை ஆங்காங்கு உருவாக்கப்பட்டது என்பதை நான் கூற விரும்புகிறேன். நான் ஸ்ரீரங்கத்திலிருந்து திருச்சிக்கு வருவதற்கு எந்தப் பகுதியிலும் வழி இல்லை. கிட்டத்தட்ட ஆறு அடி ஏழு அடித் தண்ணீர் சுற்றிலும் ஓடிக் கொண்டிருந்த சூழ்நிலையைப் பார்த்தேன். திருவரங்கம் தொகுதியில் ஒரு பாலைவனத்தைப் பார்க்கின்ற நிலைமை இருந்தது. மணிகண்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு இடங்களில் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையைக் குறித்து தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவருக்கு உடனே ஒரு மனுவைச் சமர்ப்பித்து நாலைந்து அடிகள் மண் நிரம்பிய நிலங்களில் உடனே புல்டோசர் மூலமாக மண்ணை எடுக்க ஆவன



1977 டிசம்பர் 31] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

இல்லையென்று சொல்லாமல் இலவசமாக மண்ணை அகற்றுவதற்கு நாலைந்து புல்டோசர்களை அனுப்பி அவை வேலை செய்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம்.

நான் இதையெல்லாம் எதற்காகச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், இப்படி வெள்ளம் வந்ததற்குப் பின்னாலே எடுக்கப் பட்டிருக்கிற நடவடிக்கைகள் அந்தப் பகுதியிலே உள்ள மக்களிடத்திலே குறிப்பாகத் தாய்மார்களிடத்தில், விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் ஒரு பெரிய வியப்பை ஏற்படுத்தி இருக்கிறது, இதுவரையிலே எந்த அரசும் இவ்வளவு வேகமாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அவர்களும் இவ்வளவு மும்முரமாக எப்போதும் நிவாரண வேலைகளைச் செய்யவில்லை. இந்த அரசுதான் செய்திருக்கிறது. காரணம் முதலமைச்சர் ஆக இருக்கிற புரட்சித் தலைவர் ஏழைகளின் பங்காளன் என்பதால் ஒவ்வொரு கட்டத்திலேயும் அவர் ஏழையின் பங்காளன் என்பதை அவர் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார் என்று அவர்கள் எல்லாம் வாயாரப் புகழ்ந்ததை நான் காதாரக் கேட்டேன்.

இந்த நேரத்திலே நாம் இன்னொன்றையும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். 20 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த ஆற்றினுடைய கரைகள், ஏரிகளினுடைய கரைகள் இன்றைக்கு இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அன்று நீண்டிருந்த அந்தக் கரைகள் எல்லாம் இன்றைக்கு இளைத்து குறுகி டி.பி. வந்தவரின் உடம்பைப் போன்று தான் இருக்கின்றன. அது மட்டுமல்ல, கரைகளைப் போன்று ஆறுகளைக் காத்து வந்த கரையோரங்களில் வளரும் நாணல், நொச்சிகுச்சி

இவைகளை நாம் இப்போது காண முடியவில்லை. ஆகவே நீர் வேகமாக கரைகளை அரித்து விடுகிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கரும்பு போன்ற பயிர்கள் கரையோரங்களிலே பயிரிடுகின்ற காரணத்தினாலே ஆற்றின் வெள்ளப் போக்கு தடுத்தலை ஏற்படுத்தி மண்ணை அரித்து அரித்து ஊடுருவிச் சென்று விடுகிறது. என்னுடைய தொகுதியிலே கவுத்தரசநல்லூர் என்ற இடத்திலே கிளிக்கூடு என்ற இடத்திலே ஒரு மாபெரும் உடைப்பு ஏற்பட்டது. அதைப் பார்வையிட வேண்டுமென்று நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொண்ட போது அவர்கள் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் உடனே பார்வையிட்டார்கள். அங்கே உடனே ஒரு ரெகுலேட்டரைக் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். 1924 ஆம் ஆண்டிலே இதேபோன்று ஒரு உடைப்பு அங்கே ஏற்பட்டது. ஆகவே அந்த இடத்தில் நிரந்தரமாகவே கண்ணீர் குளம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

திருச்சி மாவட்டத்தில் உப்பிலியபுரத்திற்குப் பக்கத்திலே புளியஞ்சோலை என்ற அழகான இடம் மக்களின் மனத்தைக் கவரத் தக்க இடம் இருந்தது. இன்றைக்கு அந்த இடம் பாலைவனமாகக் காட்சி அளிக்கிறது. ஒரு பெரிய கல் பாறை கீழே உருண்டு வந்து விழுந்தது. அந்தப் புளியஞ்சோலை இருந்த இடத்தை இன்றைக்குப் பாலைவனமாக ஆக்கிவிட்டது. மீண்டும் நாம் புளியஞ்சோலையைக் காண முடியுமா என்ற நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் அமைச்சர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக வந்து எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தார்கள். அமைச்சர்கள் எடுத்த நடவடிக்கைகளின் பலன்கள் உடனடியாக மக்களுக்குக் கிடைத்தன என்பதை யாரும் மறுக்க முடியாது.





குறிப்பாக, மண்ணெண்ணெய்ப் பிரச்னை பற்றி நான் இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும். ஒரு லிட்டர் 5 ரூபாய்க்கு விற்க ஆரம்பித்தார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவரையும் டி. எஸ். ஓ. வையும் சந்தித்துச் சொன்ன நேரத்திலே உடனடியாக முனிசிபாலிட்டிகள் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மக்கள் மண்ணெண்ணெய் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு தட்டுப்பாடு ஏற்படாத நிலைமை ஏற்படுத்தப்பட்டது.

காலரா வந்துவிடுமோ, தொற்று நோய் வந்துவிடுமோ என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்திலே இப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களே எவ்வளவு மருந்துகள் வேண்டுமானாலும், எவ்வளவு உயர்ந்த விலை உள்ள மருந்துகள் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதித்து உடனே தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்படிப் பல்வேறு நடவடிக்கைகள் அந்தந்த அதிகாரிகளால் எடுக்கப்பட்டன. ஆனால் சில இடங்களிலே சில கிராம அதிகாரிகள் சில திருவிளையாடல்களைச் செய்திருக்கிறார்கள். அவைகளைக் களைந்து எறிய வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்து இருக்கிறது. இன்றைக்கு பெரிய விவசாயிகளாக இருந்தாலும், சிறிய விவசாயிகளாக இருந்தாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே ரெவின்யூ கோர்ட்டு நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்ன நிவாரணம் தந்தாலும் விவசாயியினுடைய நிலைமை அவன் ஓட்டை ஏந்தி பிச்சை எடுக்க வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறான்.

என்னிடத்திலே ஒரு அம்மையார் சொன்னதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவரை கோவர்த்தனகிரி

கண்ணனுக்கு ஒப்பிட்டு கோவர்த்தனகிரி கண்ணனின் கதை தான் எங்களுக்கு ஞாபகம் வருகிறது என்று அவர்கள் சொன்னார்கள். எங்கேயோ ஒரு காலத்தில் மழை பெய்தபொழுது

[பிற்பகல் 1.30]

கோவர்த்தனகிரியைத் தூக்கி நிறுத்தி கண்ணன் மழையிலிருந்தும் வெள்ளத்திலிருந்தும் காப்பாற்றினான். அதைப்போல புரட்சித் தலைவரவர்கள் அரசாங்கம் என்னும் மலையைத் தூக்கி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றியிருக்கிறார் என்று அந்தப் பகுதி மக்கள் சொன்னதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, எல்லா நடவடிக்கைகளையும் மக்களுக்காக புரட்சித் தலைவருடைய அரசு மிகத் துல்லியமாக மட்டுமல்ல, மிகச் செம்மையாக மட்டுமல்ல, மிக வேகமாகவும், விரைவாகவும் செய்திருக்கிறது. நல்ல விதத்திலே செய்திருக்கிறது. மக்கள் அதன் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அளிக்கப்பட்டிருக்கின்ற வெள்ளை அறிக்கை உண்மையிலேயே வெள்ளை அறிக்கை தான் என்றும், யாரோ சிலபேர் கறுப்பு அறிக்கை என்று சொன்னார்கள், இதுபற்றியும் எனக்கு மற்றொரு கதைதான் நினைவுக்கு வருகிறது. அதாவது. . . (மணியடிக்கப்பட்டது)

## 6. அறிவிப்புகள்

### பேரவை அலுவல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படி வெள்ளையறிக்கையின் மீதான விவாதம் 2—1—78 திங்கட்கிழமை காலை தொடர்கிறது. மாலையில் 4 மணி முதல் 7 மணி வரையில் மின்வாரிய அறிக்கைமீது விவாதம் தொடரும் என்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவைத் தெரிவித்து (குறுக்கீடு) அன்றையதினம் மாலைதான்.







**திரு. மு. கருணாநிதி:** அடுத்த வருஷம் தானே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் தேதி காலை 9 மணி அளவில் பேரவை கூடி வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் நடைபெறும். அன்று மாலையில் 2—1—78 ஆம் தேதி மாலை 4 மணி முதல் 7 மணி வரையில் மின் வாரிய அறிக்கை மீதான விவாதம் நடைபெறும் என்பதைப் பேரவைக்கு அறிவித்து, பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2—1—78 திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

246. Notification issued in G.O. Ms. No. 912, Rural Development and Local Administration, dated 20th May 1977 about the framing of the Tamil Nadu Panchayat Union Councils (Medical and Public Health) Service Rules, 1976. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

B. *Reports, Notifications and other papers.*

Nil.



இணைப்பு I

[599-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 100க்கான விடையைக் காண்க.

தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் கிழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் பலன் அடைந்தோர் எண்ணிக்கை 31-7-77

| மாவட்டம். | பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | பயன் அடைந்தோரின் மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| செங்கல்பட்டு | 6.797 | 169 |
| வடஆற்காடு | 5.256 | 717 |
| தென் ஆற்காடு | 35,369 | 363 |
| திருச்சிராப்பள்ளி | 30,650 | 6,142 |
| தஞ்சாவூர் | 80,485 | 4,898 |
| புதுக்கோட்டை | 4,626 | 76 |
| மதுரை | 16,296 | 1.094 |
| இராமநாதபுரம் | தகவல் வந்து சேரவில்லை | — |
| திருநெல்வேலி | 2,640 | 282 |
| கோயம்புத்தூர் | 3.220 | 844 |
| சேலம் | 5,213 | 299 |
| தர்மபுரி | 651 | 2,247 |
| நீலகிரி | 2,004 | 5,816 |
| கன்னியாகுமரி | 58 | 1 |
| மொத்தம் . . | 1,93,265 | 22,948 |

பின்குறிப்பு: பத்தி 3-ல் கண்ட நபர்கள் சட்டப் பிரிவு 5 (2), 6 (1) ஆகியவற்றின் கீழ் மனு செய்து பயனடைந்தவர்கள் எண்ணிக்கையுடன் சேர்த்து, கடன் வழங்கியோர் சட்டப் பிரிவு 5 (1)-ன் கீழ் கொடுத்த அறிக்கையின் பேரில் விசாரிக்கப்பட்டு பயன் அடைந்தோர் என்று அறிவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைகளையும் சேர்ந்தது ஆகும்.

## இணைப்பு II

[26-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 101க்கான விடையைக் காண்க.]

தமிழ் நாடு கடன் நிவாரணம் சட்டம் 1976—சட்டத்தின் நிறைவேற்றுதல் பற்றிய விவரங்கள் 31–10–1977 வரை.

| மாவட்டங்கள் (1) | மொத்தம் அடகு பிடிப்பவர் (2) | மொத்தம் கடன் கொடுப்பவர்கள் (3) | சட்டத்தின் 5 (2) மற்றும் 6(1) பிரிவுப்படி காரம் பெறப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை (4) | பயன் அடைந்தோரின் மொத்த எண்ணிக்கை (5) | மொத்த தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகை (6) | பைசல் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 செங்கல்பட்டு | 1,622 | 73 | 13,74,628 | 8,192 | 18,62,987 | 1,410 |
| 2 வடஆற்காடு | 1,342 | 207 | 6,94,599 | 6,449 | 36,004 | 3,200 |
| 3 தென்ஆற்காடு | 1577 | 288 | 8,67,112 | 7,850 | 20,315 | 2,664 |
| 4 திருச்சிராபள்ளி | 1,620 | 435 | 9,11,372 | 1.94,532 | 7,00,610 | 9,863 |
| 5 தஞ்சாவூர் | 1,706 | 145 | 12,98,755 | 95,468 | 1,55,955 | 8,827 |
| 6 புதுக்கோட்டை | 342 | 19 | 1,53,176 | 2,857 | 44.878 | 722 |
| 7 மதுரை | 2,220 | 1272 | 7,27,002 | 21,658 | 50,918 | 2,599 |
| 8 இராமநாதபுரம் | 784 | 94 | 2,72,726 | 46,410 | 94,91,413 | 2,258 |
| 9 திருநெல்வேலி | 287 | 45 | 96,293 | 5,100 | 2,05,810 | 1,075 |
| 10 கோயம்புத்தூர் | 1022 | 75 | 1,94,763 | 4,100 | 5,747 | 150 |
| 11 சேலம் | 767 | 146 | 22,72.338 | 7,258 | 1,62,828 | 507 |
| 12 தர்மபுரி | 168 | 67 | 64,783 | 2,907 | 22,19,968 | 1,406 |
| 13 நீலகிரி | 118 | 5 | 95,950 | 227 | 45,21,827 | 240 |
| 14 கன்னியாகுமரி | 66 | — | 9,73,731 | 52 | 5,06,994 | 190 |
| மொத்தம் | 13,641 | 2,871 | 99,97.228 | 4,03,060 | 1,99,86,254 | 35,111 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

## திங்கட்கிழமை, 1978 சனவரி 2.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சீராளன் மரணம்.

*121 வினா—திரு. வி. கே. கோதண்டராமன், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், நைனு அத்தியூரில் சீராளன் என்பவர் போலீசாரால் அடித்துக் கொல்லப் பட்டாரா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : திரு. சீராளன் என்பவர் போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்டார் என்னும் புகாரின்மீது, அரசு வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திரு. எஸ். பி. சீனிவாசன் அவர்களை ஒரு விசாரணை நடத்துமாறு பணித்தது. இந்த விசாரணையின் அடிப்படையில், தவறு செய்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டவர்கள்மீது நீதி மன்றத்தில் வழக்குத் தொடருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவசர காலச் சட்டம் அமலில் இருந்தபோது, மிசாவில் கைது செய்யப்பெற்ற ஊழியர்களாக இருந்தவர்களுக்கு முழுச் சம்பளமும் கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் உத்திரவிட்டிருப்பதுபோல, போலீசாரால் அடித்து சாகடிக்கப்பட்ட சீராளன் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறதா ? இது போன்று போலீசார் சீராளனை அடித்து, கட்டி பன்றியைப் போல தூக்கிக்கொண்டு போகும்போது பார்த்தவர்களை எல்லாம் போலீசார் அடித்து சித்திரவதை செய்திருக்கிறார்களே, அவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்தக் கேள்வி சீராளன் அவர்களைப் பற்றிய கேள்வி. இன்றைய தினம் வழக்குமன்றத்தில் அந்த வழக்கு விசாரணை தொடங்குகிறது. ஆகவே, இங்கே மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தீர்ப்பின் முடிவிற்குட்பட்டு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை இந்த அரசு எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சீராளன் வழக்குபற்றி விசாரித்து நீதி வழங்க விசேஷ நீதிமன்றம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றையதினம் அந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பெறுகிறது என்று நான் சொல்லியிருக்கிறபோது, கேட்கிறார்கள். ஆகவே இப்போது அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : 11—1—1977-இல் கொலை செய்யப்பட்டார் சீராளன். எப்போது விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது ? இப்போது கொலைக் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு, தவறு செய்தவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்கிறார்களே, தவறு செய்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கைது செய்யப்படவில்லை. ஆனால் அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.





திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அதில் சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரி அந்தச் சம்பவத்திற்குப் பிறகு திண்டிவனத்திற்கு மாற்றப்பட்டார். அங்கே ஆரோ தொழிலாளர்களுக்கு எதிராகச் செயல்பட்டார். பிறகு அவர் பாடிக்கு அனுப்பப்பட்டார். அங்கேயும் தொழிலாளர்களுக்கு எதிராக, அவர்கள்மீது பல வழக்குகளைப் போட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தம் கேள்வியைக் கேட்க வேண்டும். இதுபோன்று சப்ஜுடிசாக இருக்கும் பொருள் குறித்து பேசுவது சரியல்ல. ஆகவே தயவு செய்து அதைப்பற்றிப் பேச வேண்டாம்.

திரு. சி. கோவிந்தராசன் : எந்த செக்‌ஷன்கள்கீழ் அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக இ.பி.கோ. 302 விதிப்படியும், 215, 201 பிரிவுகளின்படியும் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டதன்பேரில் அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்று கனம் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டது என்று சொன்னால், அவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டு, வழக்கு நடத்துவதுதான் வழக்கு நல்லமுறையில் நடக்க உதவும். அவர்களை வெளியில் விட்டுவைத்தால் சாட்சிகளைக் கலைத்து, வழக்கை நல்லமுறையில் நடத்துவதற்கு பாதகம் விளைவிப்பார்கள் அல்லவா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கண்டிப்பாக, குற்றம் செய்தவருக்கு வசதி வாய்ப்பு தந்து உண்மை வெளி வராமல் போகக் கூடிய எந்தக் காரியத்திற்கும் இந்த அரசு அனுமதி அளிக்காது, உடந்தையாக இருக்காது.

திரு. ரா. உமாநாத் : ரொம்ப சீரியசான குற்றச்சாட்டுகள், மர்டர் செக்‌ஷன் 302 ஆகியவை எல்லாம் அந்த அதிகாரிகள் பேரிலே போடப்பட்டிருப்பதாலே, யார், யார் அந்த அதிகாரிகள் என்ற அவர்களுடைய பெயர்களும்— 302-வது செக்‌ஷன் போடுகிறபொழுது, சாதாரணமாக கைது

செய்வார்கள் ; அப்புறம்தான் பெயில் கொடுப்பார்கள், அந்தப் பெயர்களும் வேண்டும். கனம் முதலமைச்சரவர்கள் தயவு செய்து அவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லையென்ற காரணத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதைப் பற்றிக் கேட்கப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் வைக்கிறேன்.

திரு. க. சுப்பு : அது, நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி, விசேஷமான நிலைமையிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இவ்வளவு காலதாமதம் ஆனபிறகு வழக்கு போடப் பட்டிருக்கிறது கைதும் செய்யப்படவில்லை. ஆகவே, இதற்காக ஸ்பெஷல் கோர்ட்டுகளை சென்னை போன்ற இடங் களில் வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஆகவே, முதலமைச்சரவர்கள் அதுபற்றி பரிசீலித்து, விசேஷ நீதி மன்றத்தை வைத்து, அதன்மூலமாக குற்றவாளிகள் தப்பிக் காமல் பார்த்துக் கொள்ள இனிமேலாவது அதற்கு முயற்சி செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதைப் பற்றி, இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போதே முதலிலேயே நான் சொல்லி விட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்பு கிறேன். எத்தனை நாட்கள் காலதாமதம் என்பதற்குப் பதிலாக நான் சொல்லவிரும்புவது, மாவட்ட துணை அதிகாரி அவர்கள் மூலமாக விசாரிக்கப்பட்டு, அதன்பிறகு இது வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டிய ஒன்று என்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிச்சயமாக, இந்த அரசு இதிலே கவனம் செலுத்தும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : சம்பந்தப்பட்ட குற்ற வாளிகள் வேலையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட் டிருக்கிறார்களா ? அதோடு, முறையாக அவர்கள் கைது செய்யப்பட்ட பிறகு, ஜாமீனில் வரட்டும். 302-வது செக் ஷனில் குற்றம் சாட்டப்பட்டவர்கள், கைது செய்யப்பட்டு ஜாமீனில் வர ஆட்சேபணை இல்லை. ஆகவே, அப்படி கைது செய்யப்பட ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்பு கிறேன்.





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன், அப்படிப்பட்ட நடவடிக் கையிலே அக்கறை காட்டும் இந்த அரசு என்ற தகவலை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## I.A.S. OFFICERS.

*122 Q.—THIRU K. KANDASAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of I.A.S. Officers drawn from the Central Government service and absorbed in the State service during the Period of Emergency ; and

(*b*) the reasons therefor ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :

(அ) ஒருவருமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, டெல்லி யிலிருந்து வந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், எமர்ஜன்ஸி காலத் திலேதான் அதிகமாக வந்தார்கள். அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கத்தின் கொள்கைக்கு, நடவடிக்கைக்கு விரோதமான வர்கள் என்று கூட அவர்கள் மீது குற்றம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்தக் கேள்வி, டெல்லிப் பேரரசு எத்தனை பேர்களை நியமிக்கிறது என்கிற அடிப்படையிலே கேட்கப்பட்டிருக்கிறது. எத்தனை பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். இங் கிருந்து அனுப்பப்பட்டவர்கள் திரும்ப வந்திருக்கிறார்கள். தவறு செய்ததாகவோ, அதற்கு உடந்தையாக இருந்த வர்களாகவோ யாராவது இருப்பார்களானால், அந்த அதிகாரிகள் மீது நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1978 சனவரி 2

## புதிய காவல் நிலையம்

*123 வினா—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பெரிய கல்ராயன்மலை, சின்ன கல்ராயன் மலை மலைப்பிரதேசங்களில் காவல் நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :

(அ) உண்டு.

(ஆ) இது சம்பந்தமாக மாநிலக் காவல் துறைத் தலைமை அதிகாரியிடமிருந்து வரப்பெற்ற செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது.

(முற்பகல் 9–10)

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன கல்ராயன்மலை, பெரிய கல்ராயன் மலை போன்ற பகுதி களில் ஏற்படும் திருட்டு, கலவரம், சமூகவிரோதச் செயல்கள் போன்றவை பற்றி காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுக்க 15 மைல்—20 மைல் தொலைவிலுள்ள ஏத்தாப்பூர், பெத்த நாயக்கன் பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள காவல் நிலை யத்திற்கு வரவேண்டி இருக்கிறது. ஆகவே இதை விரை வாக நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதற்குத் தலைமை அதிகாரியிடமிருந்து அறிக்கை வந்திருக்கிறது, பரி சீலனையில் இருக்கிறது என்பது ஏதோ கேள்விக்குப் பதில் சொல்லாமல் தட்டிக் கழிப்பதற்காக அல்ல. மலைப்பகுதியில், அந்தப் பகுதிகளுக்கு அதிகாரிகள் நினைத்த நேரத்தில் சென்று தங்களுடைய கடமையைச் செய்வதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பது பற்றிப் பரிசீலனையில் இருப்பதால் கண் டிப்பாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 சனவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பை வேண்டுகோளாக வைக்கிறேன். நேற்றைக்கு முன் தினம் அலுவல் ஆய்வுக் குழு கூடி முடிவு எடுத்ததை நான் முதலில் சொல்லியிருக்க வேண்டும். தொகுதிக்கு உட்பட்டது சம்பந்தமான கேள்விகள் குறித்து அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு இரண்டு துணைக் கேள்வி கள் போட அனுமதிக்கப்படும். பொது நோக்குள்ள கேள்வி களுக்கு 3 அல்லது 4 துணைக் கேள்விகள் என்ற அளவிற்கு நேரத்தை சுருக்குவதற்கு பேரவைத் தலைவர் தன்னை ஆட் படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தந்தத் தொகுதிக்குச் சம்பந்தப்பட்ட கேள்விகளின் மீது தொகுதிக்கு அப்பாற்பட்டவர்கள் துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் இப்பொழுது வராது. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : ஒரே ஒரு விளக்கம்.

திரு. எம். ஆறுமுகம் : நீங்கள் நேரத்தை குறுக்கிவிட் டால் கேள்வி கேட்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ் நாடு பூராவும் பற்றிய விஷயங்களைக் குறித்து கேள்வி கேட்பதற்கு பொறுப்பு இருக்கிறது, ஜனநாயக முறைப் படி. அப்படி அனுமதித்தால்தான் எல்லா உறுப்பினர் களும் கேள்வி கேட்க முடியும்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முன்பே அலுவல் ஆய்வுக்குழு முடிவு என்று சொன்னேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அந்தக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஏகமனதாக முடிவு எடுக் கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அப்படிச் சொல்லி யிருக்கும்பொழுது தாங்கள் எழுந்து இப்படிப் பேசினால் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

திரு. க. சுப்பு : அந்தந்த தொகுதியைப் பற்றித் தான் துணை வினாக்கள் கேட்கலாம் என்று சொன்னால், உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவது ஒரு தொகுதி, குடியிருப்பது இன்னொரு பகுதி, வந்திருந்தது ஒரு தொகுதி, வரப் போவது ஒரு தொகுதி. எந்தத் தொகுதியைப் பற்றி கேட்பது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். எந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்தத் தொகுதியைப் பற்றித்தான் கேள்வி கேட்கவேண்டும். அவர் பிறந்தது ஒரு தொகுதியாக இருக்கலாம், கல்யாணம் பண்ணிக் கொண்டது வேறு தொகுதியாக இருக்கலாம். அந்தத் தொகுதியைப்பற்றி எல்லாம் கேட்பதற்கு இடமில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியைப்பற்றி மட்டும்தான் கேட்க வேண்டும். அலுவல் ஆய்வுக் குழு இந்த முடிவு எடுத்திருக்கிறது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதற்கு மரியாதையும் மதிப்பும் கொடுக்கவேண்டும்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதை உறுப்பினர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். தொகுதியைப் பற்றிய கேள்வி வருமேயானால் அந்தக் கேள்வி கேட்டவருக்குத்தான் உரிமை அளிக்கப்படும். இதை தாங்கள் அவர்களுக்கு விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, அவர்கள் புரிந்துகொண்டுதான் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும் சொல்கிறேன். பொதுவான கருத்துக்களை யார் வேண்டுமானாலும் கேட்கலாம். அதற்கு 4, 5 என்று என்னுடைய பொறுப்பிலே விட்டிருக்கிறார்கள். தொகுதிக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களில் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குத்தான் இரண்டு துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படும்.

திரு. க. சுப்பு : உதாரணத்திற்கு இந்தக் கேள்வியை எடுத்துக் கொண்டால் யார் வேண்டுமானாலும் கேட்கலாமா ? "Whether it is proposed to establish a Police Station at Periyakalvarayan and Chinnakalvarayan hill areas of Salem" என்றிருக்கிறது. மொத்தமாக கேட்டிருக்கிறார்கள். அதற்குத் துணைக் கேள்வியை யார் வேண்டுமானாலும் கேட்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கல்ராயன் மலையைப் பற்றியது. பொதுவாக இல்லை. சேலம் மாவட்டத்தில் இருக்கிற மலைப்பிரதேசங்களைப் பற்றிய கேள்வி. ஆகவே இது தொகுதியைப் பற்றியது.







## மாவட்டங்களைப் பிரித்தமைத்தல்.

*124 வினா—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இல்லை.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் பெரிய மாவட்டமாகும். ஆகவே அதை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன், விடை இல்லை என்று.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, வடார்க்காடு, செங்கற்பட்டு ஆகியவைகள் இரண்டும் பெரிய மாவட்டங்கள். அந்த மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள காஞ்சிபுரத்தை தலை நகராக்கி, வடார்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசி, செய்யாறு, அரக்கோணம் ஆகிய பகுதிகளைச் சேர்த்து காஞ்சிபுரத்தைத் தலைநகராக்க வேண்டும், அப்படிச் சேர்கிற காரணத்தால் வடார்க்காடு மாவட்டம் பெரிதாக இருப்பதைக் குறைக்கலாம் என்றுதான் சொன்னார்கள். அப்படி இருக்கிற நிலைமையிலே இந்த அரசு அதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற கேள்விகள் இந்த மன்றத்திலே ஏற்கனவே கிளப்பப்பட்டதாக எனக்கு நினைவு, சபைக்கும் நினைவிருக்கும் என்று நம்புகிறேன். தமிழக அரசினால் நியமிக்கப்பட்ட நிர்வாக சீர்திருத்தக் குழு 1973-ல் தன்னுடைய அறிக்கையில் பெரிய மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று பரிந்துரை

[1978 சனவரி 2

செய்தது. அப்படி மாவட்டங்களைச் சீரமைக்கும்போது
கையாள வேண்டிய முறைகளைப் பற்றியும் அந்த பரிந்
துரையில் இருக்கிறது. அவை—

(1) தொழில் வணிக இயலில் அதிக அளவு வளர்ச்சிக்
கான வாய்ப்புள்ள நகரங்கள் மத்தியில் புதிய மாவட்டத்தினை
உருவாக்கவேண்டும்.

(2) இயன்றவரை இருக்கின்ற வட்ட அமைப்புகளைக்
கலைக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(3) உருவாக்குகின்ற புதிய மாவட்டம் இருபத்தி
ஐந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேல் உள்ளடக்காமல்
இருக்கவேண்டும்.

ஆக, வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
அதை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்றும், அப்படிப் பிரிக்
கின்ற நேரத்தில் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சில
பின்தங்கிய பகுதிகளை சேர்த்து, தலைநகராக இருப்பதற்குத்
தகுதிவாய்ந்தது திருவண்ணமலைதான், ஹெட்குவார்ட்டர்ஸ்
ஆக பிரிக்கலாம் என்று அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ்
கமிஷன் தன்னுடைய பரிந்துரையிலே தெரிவித்திருக்கிறது.
அதற்குப் பிறகு அரசு அதைத் தள்ளிப் போட்டது. புது
டில்லியிலே மே திங்களில் நடந்த மாநாட்டிலே கலந்து
கொண்ட பணியாளர்கள் அவர்களே அதைப் பற்றி சிந்தித்
தற்குப் பிறகு, கடைசியிலே எடுக்கப்பட்ட முடிவு ஒரு நேரத்
தில் ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்
றும், ஒரே நேரத்தில் பல மாவட்டங்களைப் பிரிப்பதன் மூலம்
செலவினம் அதிகமாகும் என்றும், ஒரு 8 ஆண்டு காலத்தில்
படிப்படியாக 'பேஸ்டு ப்ரோக்கிராம்' என்ற முறையில்
அப்படிப்பட்ட பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது
என்று முடிவு செய்து, தற்காலிகமாக அது தள்ளிப்போடப்
பட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 35 லட்சம்
மக்கள் தொகையைக் கொண்டது வடஆர்க்காடு மாவட்டம்.
இவ்வளவு பெரிய மாவட்டத்திலே அங்கே நிர்வாகம் நடப்
பது மிகப் பெரிய கடினமானது. ஆகவே இன்றைக்கு உத்த
தரப் பிரதேசத்தில் 10 லட்சம் 15 லட்சம் மக்களைக் கொண்ட
மாவட்டங்களாக 56 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருப்
பதைப்போல இங்கேயும் சிறு சிறு மாவட்டங்களைப் பிரிக்கக்
கூடிய நேரத்திலே, தாலுகாக்களையும் இரண்டாகப் பிரிக்கக்
கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



1978 சனவரி 2]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே,
பரிந்துரைகளின்படி, உள்ள ரெவின்யூ டிவிஷன்களைப் பிரிக்கக்
கூடாது என்று இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம்
பெரிய மாவட்டம் என்பது எனக்குத் தெரியும். உங்களைப்
போலத்தான் எனக்கும் தெரியும். ஆகவே, பிரிக்கின்ற சூழ்நிலை
வரும்போது எப்படிப் பிரிப்பது என்பதை உட்கார்ந்து கலந்து
பேசி இந்த ஆட்சி முடிவெடுக்கும் என்பதை கனம் உறுப்
பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9–20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்ட
ராமன் அவர்கள் தயவுசெய்து பேசும்போது அந்தப் பக்கத்
தில் நின்று பேசுங்கள். ஒலிப் பெருக்கியில் கேட்கவில்லை.
சற்று உள்ளே தள்ளி நின்று பேசுங்கள். என்ன சொன்ன
லும் கேட்கமாட்டேன் என்கிறார்கள். இப்படித்தான்
பார்வை வருகிறது. இரண்டாவதாக, தயவுசெய்து கேள்
வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். பதிலும் அமைச்சர்கள்
சுருக்கமாகச் சொன்னல் நேரம் வீணாகாது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் திருவண்ணமலையை மையமாகக் கொண்டு வட
ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் இவற்றின்
சில பகுதிகளை எடுத்து பிரிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்ட
தாகச் சொன்னார்கள். பிரிக்கப்படுகிற மாவட்டங்களில்
திருவண்ணமலைக்கு முதல் இடம் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் பரிந்துரை
களைப் பற்றி மட்டும் சொன்னேன். செய்யவேண்டியவை
பற்றி பிறகு ஆலோசிப்போம்.

* 125 வினா — திரு. ஆ. நடராசன்,
திரு. என். இராமச்சந்திரன்,
திரு. என். கிட்டப்பா:

மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்
களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில்
உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும் ?

(இ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

மாண்புமிகு சபாநாயகர் அவர்களின் கவனத்திற்கு வைக்கிறேன். ஏற்கெனவே கேட்கப்பட்ட கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் உண்டா ? என்பதாகும். இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, கோவை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா? என்பதாகும். முதல் கேள்விக்கு ஒட்டிய கேள்வியாக வருகிறது இது. ஏற்கனவே சொன்ன பதில்தான் இதற்கும் அமைகிறது. ஆகவே என் பேச்சை சுருக்கியிருக்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : நிதி அமைச்சர் அவர்கள் கூறியது போல் கோவை மாவட்டத்தில் தொழிற்சாலைகள் ஏராளமாக இருப்பதால் அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதை முதன்மையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இது நல்ல யோசனை. யோசிப்போம்.

(திரு. என். இராமச்சந்திரன் அவர்கள் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செஞ்சிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம். சரி, கேளுங்கள்.

திரு. என். இராமச்சந்திரன் : தமிழக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கேட்கிறேன்.

கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது தந்தை பெரியார் அவர்கள் பிறந்த ஈரோட்டை மையமாக வைத்து மாவட்டத்தைப் பிரிப்பதற்கு பரிந்துரை இருக்கிறதா ?



மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அட்மினிஸ்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிட்டியின் பரிந்துரையில் ஈரோட்டை தலை நகரமாக ஆக்கி தனியாகப் பிரிக்கவேண்டும் என்ற யோசனை இருக்கிறது. பெரியார் பிறந்த அந்தப் புனித மண்ணை தலைநகராகக் கொண்டு அதை ஒரு தனி மாவட்டமாக ஆக்குவதற்கு இந்த ஆட்சிக்கு அதிக அக்கறை உண்டு என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. என். கிட்டப்பா : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் 124, 125-ம் எண் கேள்விகள்—வட ஆற்காடு மாவட்டத்தையும் கோவை மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிப்பது பற்றிய கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் உண்டா என்ற ஒரு கேள்வி என்னால் எழுப்பப்பட்டு நிர்வாக சம்பந்தமான விஷயம் இதில் அடங்கியிருப்பதால் ஏற்றுகொள்வதற்கில்லை என்று திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இங்கு வரும் பிரச்னை அல்ல. நானும் தள்ளியிருக்கலாம். என்னிடம் வந்து சொன்னால் அதை நான் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொண்டிருக்கலாம். அதை இங்கு வந்து எழுப்புவானேன்.

திரு. கு. ரமணி : எப்போது மாவட்டத்தைப் பிரிக்கப் போகிறீர்கள் என்று காலத்தைச் சொல்லும்படி நான் கேட்கவில்லை. அப்படிப் பிரிப்பதற்கு ஏற்பாடு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் வந்திருக்கிறது. அதன் விளைவாகவோ என்னவோ கோவையில் இருக்கக் கூடிய மாவட்ட மருத்துவ அதிகாரி ஈரோட்டுக்கு மாற்றப்பட்டு காரியாலயம் அங்கிருக்கிறது. பெரிய தலைநகரமாக இருக்கிற கோவையில் டி.எம்.ஓ. கிடையாது. அதனால் நிர்வாக இடைஞ்சலும், பொது மக்களுக்கு பல இடைஞ்சல்களும் ஏற்படுகின்றன. ஆகவே, பிரிவினை ஆகிற வரையிலாவது அங்கும் இங்கும் ஒவ்வொரு டி. எம். ஓ. ஏற்படுத்துவார்களா ? அல்லது அவர்களை ஷிப்ட் மாதிரி வைத்து ஏதாவது ஏற்பாடு செய்து வேலைகளைச் செய்ய ஏற்பாடு செய்வார்களா? இதற்கு என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர்கள் ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இருக்கிற நெருக்கடிகளைச் சொல்லி அந்த நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்கு மாவட்டத்தையும் பிரிப்பதுதான் சிறந்த வழி என்பதை திரு. ரமணி அவர்கள் சொல்லுகின்ற உண்மையை இந்த அரசு புரிந்து கொள்கிறது, அதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர்.

* 126 வினா—திரு. என். கிட்டப்பா, திரு. எம். செல்வராஜ், திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தின் மீதான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம், எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) 27—10—1977-ம் தேதியன்று நான்கு மாநிலங்களுக்கிடையே, மத்திய நீர்ப்பாசன அமைச்சர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களும் ஆண்டொன்றுக்கு தலா 5,000 மில்லியன் கனஅடி நீரை கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குவதற்கு இசைந்துள்ளன. அதன்படி இந்நீரை ஸ்ரீசைலம் நீர்தேக்கத்திலிருந்து சென்னை நகருக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஆந்திரப் பிரதேசத்துடன் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடக்கவிருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருகின்ற திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா, அப்படியென்றால் அது எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ? இந்தத் திட்டம் எந்த ஆண்டில் தொடங்கப்பட இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திறந்த கால்வாய் மூலமாக தண்ணீர் கொண்டு வருவதற்கு சுமார் 143 கோடி ரூபாய் செலவாகும் என்றுமதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இது சம்பந்தமாக ஆந்திர மாநில அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தித்தான்



நாம் எவ்வளவு செலவழிக்க வேண்டிவரும் என்பதை தெரிவிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆந்திர அரசுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி கடிதம் எழுதியுள்ளார்கள். கடந்த நவம்பர் இறுதியில் இது சம்பந்தமாக பேசுவதற்கு சந்திப்பதாக இருந்தது. ஆனால் அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக இந்த சந்திப்பு நிகழவில்லை.

திரு. எம். செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து இந்தத் திட்டம் நிறைவேறுவதற்காக பேச்சுவார்த்தைகள் நடப்பதாகவும், மேலும் ஸ்ரீசைலத்திலிருந்து சென்னை நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வரும்போது வழியில் இருக்கின்ற கிராம மக்கள் தங்களுக்கு குடிதண்ணீர் வேண்டும் என்று கேட்டால் அது ஏற்றுக்கொள்ளப்படுமா ? அதற்காக ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வழியில் இருக்கின்ற கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி இதிலிருந்து கொடுப்பதா இல்லையா என்கின்ற செயற்குறிப்பு எதுவும் இப்போது இல்லை. சென்னை மாநகருக்கு ஏற்பட்டிருக்கின்ற குடிதண்ணீர் பற்றாக்குறையை நிரந்தரமாகப்போக்குவதற்கு ஒரு தீர்வு காண்பதற்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதை இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்தத் திட்டத்தை எட்டு அல்லது பத்து ஆண்டுகளில் நிறைவேற்றலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு 15 டி.எம்.சி. தண்ணீர் கொண்டுவருவதற்காக திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தண்ணீர் எந்த பாயிண்டிலிருந்து, அதாவது சோமசிலாவிலிருந்தா அல்லது தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்தா ? எந்தப் பாயின்டிலிருந்து தருகிறார்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எந்த இடத்திலிருந்து என்பதைப் பொறுத்தவரையில் மூன்று மாநில அரசுகளும் பேசி முடிவுசெய்யவேண்டும். இப்போது ஸ்ரீசைலத்திலிருந்து எடுத்துக்கொள்வதா அல்லது வேறு இடத்திலிருந்து எடுத்துக்கொள்வதா, எப்படிக் கொண்டு வருவது, இதற்கு என்ன செலவாகும் என்பதை எல்லாம் ஆந்திர அரசோடு கலந்து பேசித்தான் முடிவுக்கு வரவேண்டும்.

[1978 சனவரி 2

<u>திரு. என். சங்கரய்யா :</u> ஸ்ரீசைலத்திலிருந்து தண்ணீர்
கொண்டுவரும்போது, திறந்த வாய்க்கால் மூலம் கொண்டு
வருவதா அல்லது மூடிய வாய்க்கால் வழியாக கொண்டு
வருவதா என்பதைப்பற்றி சர்ச்சை ஏற்பட்டது. ஆனால்
இன்றைக்கு திறந்த வாய்க்கால் வழியாக கொண்டு வருவது
என்று முடிவு செய்திருப்பது நல்லதுதான். அவ்வாறு
செய்வதன் மூலமாக சட்டப் பாதுகாப்புகளை ஏற்படுத்திக்
கொண்டு கொள்கை ரீதியில் செயல்படுத்துவதற்கு முடிவுகள்
எடுக்கப்பட்டுள்ளதா ? இல்லையென்றால் திரும்பவும் மூடிய
வாய்க்கால் என்று வந்தால் மேலும் சிக்கலாகும். இதை
அரசு உணர்ந்திருக்கிறதா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> இந்த விஷயத்
தைப்பற்றி மகாராஷ்டிர அரசும் கர்நாடக அரசும்
திறந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு வரலாம்
என்று முடிவு எடுத்தால், ஆந்திர அரசு அதிலிருந்து நீர்ப்
பாசனத்திற்கு பயன்படுத்திவிடுமோ என்ற அச்சம் இவர்
களுக்கு இருந்தது. ஆனால் மூடிய பைப்புகள் வழி
யாகவோ அல்லது ப்ரீஸ்ட்ரெஸ்டு கான்கிரிட் பைப் மூலமாக
கொண்டு வருவதாக இருந்தால் சுமார் 300 கோடிக்கு
மேல் செலவாகிறது என்று தெரிந்தது. நாம் சிக்கன
மாக இதைக் கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்
திருக்கிறோம். இருந்தாலும் அண்மையில் நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற பேச்சு
வார்த்தையில் கலந்துகொண்டபோது, திறந்த வாய்க்கால்
மூலமாக தண்ணீர் கொண்டு வரும்போது, நீர்ப்
பாசனத்திற்கு பயன் படுத்துகிறார்களா இல்லையா என்பதை
மத்திய அரசு அதிகாரிகள் சோதித்துப் பார்த்துக்கொள்
ளட்டும் என்று கர்நாடாக அரசும், மகாராஷ்டிரா அரசும்
ஒப்புக்கொண்டதே நமக்கு ஆதாயம்.

[முற்பகல் 9-30]

<u>டாக்டர் கே. சமரசம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,
சென்னை நகருக்கு குடிநீர் பிரச்னை தீர கிருஷ்ணா நதித்
திட்டத்தை இப்போது சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்
நத்தக்கதாகும். ஆனால், அதேநேரத்தில் இந்த சென்னை
நகருக்கு குடிநீர் பிரச்னை தீர ஏற்கெனவே, வீராணம்
திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்ததே, அந்தத் திட்டம்
என்னவாயிற்று? எவ்வளவு செலவாகியுள்ளது? திட்டத்தின்
பலன் என்ன? அதைப் பற்றிய தகவலை அமைச்சர் அவர்கள்
அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1978 சனவரி 2]

<u>மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் :</u> அந்தத் திட்
டத்தின் கதி என்ன ஆயிற்று என்ற தகவல் இப்போது
என்னிடத்தில் இல்லை. அந்தத் திட்டம் குடிநீர் வாரியம்
எடுத்துக் கொண்டுள்ளது. மாண்புமிகு தொழிலாளர்
நல அமைச்சர் அவர்களிடம் இந்த வினாவை எழுப்பலாம்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> தலைவர் அவர்களே, இந்தத்
தண்ணீர் பிரச்னை பற்றி அடிக்கடி தகராறு ஏற்படுவது
தெரிந்ததே. குறிப்பாக, மைசூர் அரசாங்கத்திற்கும்,
தமிழகத்திற்கும் ஒரு கேஸ் நடந்து கொண்டிருக்கிறது.
அதேபோன்று தண்ணீர் பிரச்னையிலே இப்போது ஆந்திரா
விற்கும், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த
நதிகளில் ஓடுகின்ற தண்ணீரைப் பங்கிட்டுக் கொள்வதிலே
மத்திய அரசாங்கத்தின் மூலம் ஓர் தீர்வு அல்லது
ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள இந்த அரசு முயற்சிக்குமா?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர்
அவர்களே, கேள்வி நேரத்தில் கொள்கைப் பிரச்னை
எழுப்பக் கூடாது.

<u>திரு. சி. ஆறுமுகம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,
சென்னை நகரத்தின் குடிநீர் பிரச்னை தீர்க்க ஆந்திராவில்
இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு இன்னும் 10
ஆண்டுகள் ஆகும் என்று சொல்கிறார்கள். எனவே
பூண்டி ரிசர்வாயருக்கும், திருத்தணிகைக்கும் இடையே
மற்றொரு ரிசர்வாயர் கட்டி, அதிலே தண்ணீர் தேக்கினால்,
அதற்குச் செலவும் குறையும், உடனடியாகவும் தண்ணீர்
கிடைக்கும். ஆகவே அந்த இடத்தில் இன்னொரு நீர்த்
தேக்கம் கட்டுவதற்கு இந்த அரசு உத்தேசிக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> அத்தகைய
உத்தேசம் எதுவும் இல்லை.

## புதுப்பட்டியில் பாசனக் கண்மாய்.

*127 வினா.—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம் விளாத்திகுளம் தாலுக்கா புதுப்பட்டியில் ஒரு புதிய பாசனக் கண்மாய் அமைப்பு சம்பந்தமான ஆய்வுகள் செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இப்பணியை உடனடியாக துவங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் வருவாய்த்துறை வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

## கீழ் பவானி வாய்க்காலில் தண்ணீர்விடல்.

*128 வினா.—திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கீழ் பவானி வாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுவதற்கான அறிவிப்பு எப்போது வெளியிடப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கீழ் பவானி வாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் ஆகஸ்ட் மாதம் 16-ஆம் தேதி முதல் விடப்படுகிறது.

திரு. என். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பவானி நீர்த் தேக்கத்திலே 116 அடி தண்ணீர் இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு புஞ்சை நிலங்களுக்கு மட்டுமே தண்ணீர் விடப்படுகிறது. எனவே, அங்குள்ள விவசாயிகள் நஞ்சை நிலங்களுக்கும் தண்ணீர் விடவேண்டுமென்று பரவலாக கருதிக்கொண்டிருக்கிறார்கள் ; கோரிக்கையும் விடுகிறார்கள். அதற்கு இந்த அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அங்கே புன்செய் பயிர்களுக்கு மட்டுமே பாசன வசதிக்கு இந்த அரசு அனுமதிக்கிறது.

## Chief Conservator of Forests.

*129 Q. THIRU C. MANICKAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :—

(*a*) whether there are two Chief Conservators of Forests for Tamil Nadu ; and

(*b*) from when this arrangement was made ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :

(அ) ஆம்.

(இ) 17—9—1975-லிருந்து

## புதுக்கோட்டை முன்னாள் இராணுவ வீரர்களுக்கு ஒதுக்கப்பட்ட காட்டு நிலங்கள்.

*130. வினா.— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு – கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் வசிக்கும் முன்னாள் ராணுவத்தினருக்கு சின்னமலைக்கட்டு காட்டு நிலத்தில் வீடுகள் கட்டிக் கொள்ள ஒதுக்கப்பட்ட 7.25 ஏக்கர் நிலம் ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்;

(அ) நிலம் ஒதுக்கப்படவுமில்லை, ரத்து செய்யப்படவுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, அன்றையத் தினம் கோட்டாட்சித் தலைவர் அவர்களால் இந்தக் குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்பட்டு, பின்னர் வேறு காரணத்திற்காக அந்த இடம் ரத்து செய்யப்பட்டு, வேறு இடம் ஒதுக்கப்பட்டது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும் இந்த அரசுக்கு வரவில்லை.

## கூடலூர் காடுகளில் கால்நடை மேய்ச்சல்.

*131. வினா —திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கூடலூர் பகுதியிலுள்ள வன இலாக்காவுக்குச் சொந்தமான காடுகளில் அப்பகுதியிலுள்ள விவசாயிகள் தங்கள் கால்நடைகளை மேய்க்க அனுமதி அளித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் தாலூகாவில் உள்ள வனத்துறைக் காடுகள் உட்பட எல்லா வனத்துறைக்காடுகளிலும் அனுமதிச் சீட்டுகள் மூலம் கால் நடைகளை மேய்ப்பது ஒழுங்குபடுத்தப்படுகிறது. இந்த அனுமதிச் சீட்டுகள் ஒரு மேய்ச்சல் ஆண்டுக்கு, அதாவது ஜூலை மாதம் 1-ந்தேதி முதல் மறு ஆண்டு ஜூன் மாதம் 30-ந்தேதி வரை செல்லத்தக்கவை. கடந்த மூன்று ஆண்டுகளில் கூடலூர் தாலூகாவிலுள்ள வனத்துறைக் காடுகளின் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை வருமாறு :

| | |
|---|---|
| 1974–75 .. .. .. .. | 12,174 |
| 1975–76 .. .. .. .. | 16,019 |
| 1976–77 .. .. .. .. | 14,558 |

## சென்னை-டில்லி நேரடி விமானப் போக்குவரத்து.

*132. வினா.—திரு.எஸ்.ஜே. சாதிக் பாட்சா, திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-டில்லி நேரடி விமானப் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டிருப்பதால் விமானப் பயணம் செய்பவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்தியன் ஏர்லைன்ஸ் நேரடி விமானப் போக்குவரத்து மீண்டும் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமது தமிழக அரசின் சார்பில் தமிழ்நாட்டில் இன்டர்னல் சர்வீஸ் விமானப் போக்குவரத்து நடத்துவதற்கு செயற் குறிப்பு இருந்ததாகத் தெரிகிறது. இப்போது வந்திருக்கிற புதிய அரசு அதை ஏற்று அமல்படுத்துவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர், எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

திரு க. சுப்பு : நானும் அதைத்தான் கேட்டேன். ஏர் பஸ் விடப்போவதாக ஒரு திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது, சுற்றுலா வாரியத்தின் மூலமாக விடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 'ஏர் பஸ்' என்று விமானத்தைத் தான் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அதுபற்றிய விளக்கம் என்னிடத்தில் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

## சுற்றுலா கழகத்திடம் உள்ள சொகுசு பஸ்கள்.

*133 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 முதல் இன்று வரை சுற்றுலா வாரியத்தில் வாங்கப்பட்ட பெரிய சிறிய சொகுசு பஸ்கள் முறையே எத்தனை ?

(ஆ) அவைகளின் மூலம் வந்த வருவாய் எவ்வளவு ? வருட வாரியாக !

(இ) மேலும் பஸ்கள் வாங்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ)

| ஆண்டு. | வாங்கிய பேருந்துகள். பெரிய சொகுசு பேருந்துகள். | சிறிய சொகுசு பேருந்துகள். | வருமானம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூபாய். |
| 1. 1972–73 .. | 2 | .. | 1,74,938.00 |
| 2. 1973–74 .. | 2 | .. | 4,01,108.00 |
| 3. 1974–75 .. | 2 | .. | 7,63,866.00 |
| 4. 1975–76 .. | .. | .. | 8,69,900.00 |
| 5. 1976–77 .. | 2 | 1 | 13,08,272.00 |
| மொத்தம் .. | 8 | 1 | 35,18,084.00 |

(இ) ஆம்.

1977–78-ல் இரண்டு சொகுசு பேருந்துகள் புதியனவாக வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பேருந்து அடித்தளம் (Chassis) ஒன்றினை அசோக் லேலண்டிட மிருந்து வாங்கி குரோம்பேட்டையிலுள்ள பல்லவன் போக்கு வரத்து கழகத்தின் தொழிற்கூடத்தில் கட்டமைப்பு (Body Building) செய்யப்படுகிறது.

## செம்பனார்கோவில் ஒன்றியத்தில் சாலைப் பணிகள்.

*134 வினு : திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒன்றிய பகுதியில் உள்ள சாலைகள் அனைத்தையும் செப்பனிட்டு புதுப்பித்துத் தர வேண்டுமென்று 1974ஆம் ஆண்டு அரசுக்கு கோரிக்கை வந்ததா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்த நடவடிக்கை என்ன ?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பரிசிலிக்கப்பட்டு 14 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை ரூ. 13.40 லட்சம் மதிப்பீட்டில் பிறசாலைகள் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்திட அரசு ஆணை பிறப்பித்தது. இம்மேம்பாட்டு பணிகள் யாவும் முடிக்கப்பட்டுவிட்டன.

## செம்பனார் கோவில் ஒன்றியத்தில் கல்யாணமண்டபம்.

*135 வினு.—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து அறிஞர் அண்ணு திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட்டு இன்னும் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

ஆம். அதற்குத் தேவையான மேல் நடவடிக்கை அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

## மதுரை மாநகராட்சிக்குக் கடன்.

*136 வினு.— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரைப் பேருந்து நிலையத்தைச் சீர்ப்படுத்த மதுரை மாநகராட்சி அரசிடம் கடன் ஏதும் கேட்டிருக்கின்றதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) வினுவிற்கு இடமில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, மதுரையிலே உள்ள பேருந்து நிலையம் மிகவும் சீர்கேடு அடைந்திருப்பதால் அதைச் சரிப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்காக 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மதுரை மாநகராட்சி அந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. 1978–79-ஆம் ஆண்டில் அது துவக்கப்பட இருக்கிறது.

## சென்னையில் இரவு நேரப் பேருந்துக்கான கட்டணம்.

*137 வினா :— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை மாநகரில் இரவு நேரப் பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றதா !

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

இல்லை. சாதாரண கட்டணத்தைப்போல் 1–1/2 (ஒன்றரை) மடங்குக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நீண்ட தூர பஸ்களிலே கூட இரவு நேரங்களிலே பயணம் செய்யும் பயணிகளிடமிருந்து அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுவது இல்லை. எனவே மீண்டும் புனராலோசனை செய்து பகல் நேரத்தில் வசூல் செய்யப்படுவதைப் போல் இரவு நேரங்களிலே பயணம் செய்கிறவர்களிடமிருந்தும் வசூல் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ள இயலாது. காரணம் இரவு நேரங்களிலே பேருந்துகளிலே பயணம் செய்ய அதிகமான பயணிகள் வருவதில்லை என்ற காரணத்தினால் பேருந்துகளை ஓட்டுவதற்கான செலவைச் சரிக்கட்டுவதற்காகத்தான் இம்மாதிரி ஒன்றரை மடங்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அது தவிர, அப்போது ஓட்டுகின்ற, ஓட்டுநர் நடத்துநர், ஆகியவர்களுக்கு படியும் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர வசூல் அடிப்படையில் ஊக்க போனஸ் அளிக்கப்படுகிறது. இப்படி ஒன்றரை மடங்கு வசூலிக்காவிட்டால் அவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்க முடியாது. பயணிகள் ஆட்டோ, டாக்ஸியில் போவது என்றால் 1 ரூபாய் செலவு செய்வதற்குப் பதிலாக 10 ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டி



இருக்கிறது என்று பொது மக்கள் இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள், அதனால் இப்படிப்பட்ட முறையில் வசூலிக்கப்படுகிறது, பொதுமக்களின் நன்மையை முன்னிட்டு இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.40)

திரு. ரா. மார்க்கபந்து : இரவு நேரங்களில் ஓடுகின்ற பஸ்களுக்கு ஒன்றரை மடங்கு கட்டணம் வசூலிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். பகல் நேரங்களில் ஓடுகின்ற பஸ்களில், இரவு நேரங்களில் ஓடுகின்ற பஸ்களில் சாதாரண ரிப்பேர்கள் ஏற்பட்டுவிட்டாலும் கூட ரிப்பேர் செய்ய முடியாத அளவுக்கு ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் நிற்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அதைப் பற்றிக் கேட்டபோது பஸ்களில் சாதாரணமாக ஜாக்கீஸ் போன்றவை கூட இல்லை ; ஆகவே, சிறு சிறு ரிப்பேர்களைக் கூடச் செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இதன்காரணமாக பிரயாணிகள் அவஸ்தைப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. அதைப் போக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூலக் கேள்வி சென்னை நகரில் இரவு நேரங்களில் விடுகின்ற பேருந்துகளைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரவு நேர துரிதப் பேருந்துகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதிலே உள்ள குறைபாடுகள் பற்றி ஏற்கனவே தகவல் வந்துள்ளது. அரசு அதுபற்றி நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டமன்ற விடுதியிலிருந்து சென்டிரல் ஸ்டேஷனுக்குச் செல்லுவதற்கு ஒரு ரூபாய் கட்டணம் சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அது எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூலக் கேள்வி இரவு நேரங்களில் நகரப் பயணிகள் பயன்படுத்துவதற்காக விடக்கூடிய பேருந்துகள் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைப் பொறுத்தவரை தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : 25 கிலோ மீட்டருக்குள் போகக் கூடிய பேருந்துகளில் பிரயாணம் செய்யக் கூடியவர்கள் தங்களுடைய பொருள்களை வைத்துக் கொண்டு போகக்கூடிய அளவுக்கு வசதி இல்லாமல் இருக்கிறது என்பது கனம் அமைச்சருக்குத் தெரியும். ஆகவே, அந்தப் பேருந்துகளில் அதற்கான வசதி செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு, சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே இரவிலே பேருந்துகள் விடுவது பற்றியது மூலக் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது 25 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பேருந்துகளில் லக்கேஜ் எடுத்துச் செல்வதற்கு போதிய இடம் இல்லை என்பதாகும். அந்தப் பேருந்துகளில் எந்த அளவுக்கு லக்கேஜ் எடுத்துச் செல்ல வேண்டுமென்பது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் லக்கேஜை எடுத்துச் செல்லாமல் பயணிகள் லக்கேஜைக் குறைத்துக் கொள்ள வேண்டுமே தவிர அதற்கு வேறு வழி இல்லை.

சென்னை—திருவண்ணாமலைப் பேருந்து வழித்தடம்.

*138 வினா திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து திருவண்ணாமலை வரும் L. S. S. துரித கால வண்டியை தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் வரை விஸ்தரிக்க திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சென்னையிலிருந்து திருவண்ணாமலை வரும் தடத்தில் எந்த பேருந்தும் எல்.எஸ்.எஸ். துரித வண்டியாக ஓடவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : அவசரகால நிலைமையின்போது லிமிடெட் ஸ்டாப் என்ற முறையை மாற்றி 120 மைல் தூரம் செல்லுகிற பஸ்ஸை சாதாரண பஸ்ஸாக விட்டிருக்கிறார்கள். ஆகவே, துரித பஸ்ஸில் செல்லும் பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை மீண்டும் லிமிடெட் ஸ்டாப் என்று மாற்ற அரசு உத்தரவிடுமா ?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னையில் இருந்து திருவண்ணாமலை வரை 188 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை மாவட்ட போக்குவரத்துத் தடத்திற்கு உகந்ததே தவிர துரிதப் போக்குவரத்துக்கு உகந்தது அன்று. அந்தச் சாலையைச் செப்பனிட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரர்களே, ஏற்கனவே அந்த முறையில் பஸ் ஓடிக்கொண்டிருந்தது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, துரிதப் பேருந்து விடுவதற்கு அந்தச் சாலை உகந்ததாக இல்லை என நிர்ணயிக்கப்பட்ட காரணத்தால் தான் இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. பாதையைச் செப்பனிட்டு மீண்டும் துரிதப் பேருந்து விடுவதற்கான வழி வகைகள் செய்யப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா எண். 139.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, வினா எண். 139-ம் வினா எண் 140-ம் பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலையைப் பற்றிய விஷயமாக இருக்கிறது. ஆகவே அந்த இரண்டு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 139-ம், 140-ம் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

அருணா சர்க்கரை ஆலைக்கு அளிக்கப்பட்ட கரும்பு.

*139.—வினா. திரு ரா. மார்க்கபந்து : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலையில் விவசாயிகள் சப்ளை செய்த கரும்புகளுக்கு உரிய தொகை ஏறக்குறைய 15 லட்சம் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

[1978 சனவரி 2

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.

(அ) அருணா சர்க்கரை ஆலை தனது கடிதம் பி.எஸ். 1/928/77 தேதி 17—9—1977-ல் கரும்பு அளித்த விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய சட்ட ரீதியான தொகை அனைத்தும் கொடுக்கப்பட்டுவிட்டது என மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளது.

(ஆ) சட்ட ரீதியான தொகைகளை ஆலை கொடுத்து விட்டதாக அறிவித்துள்ளபடியால் தற்போது எந்த நடவடிக்கையும் ஆலையின்மேல் எடுக்கப்படவில்லை.

*140. வினா.—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெண்ணாடம் சர்க்கரை ஆலையில் 1977 மார்ச் முதல் இன்றுவரை வெட்டிய கரும்புக்கு விவசாயிகளுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :

(அ) சட்டரீதியாக மத்திய அரசு நிர்ணயித்துள்ள கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 95 என 1—10—1976 முதல் 30—9—1977 வரை ரூ. 3,90,08,456·35 (கரும்பு அளித்த) விவசாயிகளுக்குத் கொடுத்துள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, விவசாயிகள் கரும்பை வெட்டி ஆலைகளுக்குச் சப்ளை செய்தவுடனேயே அதற்குரிய கட்டணத்தை அவர்களுக்கு கொடுத்தால் தான் விவசாயிகளின் அன்றாடப் பிரச்னைகளுக்குத் தேவைப்படும் பணம் கிடைக்கும். அதை விடுத்து 6, 7 மாதங்களானாலும் சரி கொடுக்காமல் நிறுத்தி வைத்துவிட்டு இப்படி ஒரு வினா சட்டமன்றத்தில் எழுப்பப்படும்பொழுது நாம் கொடுத்துவிட்டோம் என்று பதில் தருகிறார்கள் என்று சொல்வது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.



1978 சனவரி 2]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்ச விலையைத்தான் கொடுக்குமாறு ஆலைகளுக்குச் சொல்லத்தான் மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. அதிகபட்சம் எவ்வளவு கொடுக்கின்றேன் என்று சொல்கிறார்களோ அந்தத் தொகைகளை விவசாயிகள் ஆலைகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, பணம் கொடுக்கப்பட்டது என்று சொன்னதற்காக நன்றி. ஆனால் விவசாயிகளுக்கு 3, 4 மாதங்கள் கழித்துப் பணம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குறைகளை நிவர்த்திக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அவ்வாறு செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, எல்லா ஆலைகளுமே எவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமோ விவசாயிகளுக்கு அவ்வளவு தொகைகளையுமே கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளது இந்த அரசு.

திரு. மு. செல்வராஜ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லிய பதிலில் சட்டப்படி கொடுக்க வேண்டிய தொகையை ஆலை அதிபர்கள் கொடுத்துவிட்டார்கள் என்றும் மேற்கொண்டு இந்த அரசு வற்புறுத்த முடியாது என்றும் சொல்கிறார்கள். பொதுவாக ஏற்கனவே விவசாயிகள் பேசி ஒப்பந்தம் ஆகிறது. அந்த ஆலை என்னுடைய வட்டாரத்தில் இருப்பதால் கேட்க வேண்டியிருக்கிறது. ஒப்பந்தம் ஆனதற்குப் பிறகு அந்த ஒப்பந்தமான தொகையைத்தான் விவசாயிகள் இப்பொழுது கேட்கிறார்கள். பெரும்பாலும் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆலை அதிபர்களை அரசாங்கத்திற்குக் கடமை இருக்கிறது. ஆலை அதிபர்களை உடனடியாக வரவழைத்து விவசாயிகளுக்குச் சேர வேண்டிய தொகையைப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இந்த ஆலையைப் பொறுத்தவரையில் விவசாயிகள் மட்டத்திலேயும், ஆலை அதிபர்கள் மட்டத்திலேயும், அரசு மட்டத்திலேயும் பேச்சு வார்த்தை நடத்தி கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி தற்பொழுது

இடைக்கால விலையாக 100 ரூபாய் என்று ஒத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். பிறகு அதிகத் தொகை கொடுப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மேலும் மத்திய அரசினுடைய வேண்டுகோளுக்கு இணங்க குறைந்தபட்ச அளவான 85 ரூபாயை ஒவ்வொரு ஆலையும் விவசாயிகளுக்குக் கண்டிப்பாகக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அதிகபட்ச அளவு கொடுக்க முடியுமென்று ஆலை ஒத்துக்கொண்ட பணத்தை விவசாயிகளுக்குக் கொடுத்து விட வேண்டுமென்றும் இந்த அரசு அவர்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் உடனடியாக கொடுக்கப்படாமல் பல மாதங்கள் காலங் கடத்துவதால் அவர்கள் வாங்கியிருக்கும் கடன்களுக்கான வட்டியும் அதிகமாகிறது. இந்தச் சிரமங்களையெல்லாம் போக்கும் வகையில் அவர்களுக்குப் பணத்தை உடனடியாகப் பட்டுவாடா செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கோவிந்தராஜன் அவர்கள் சொல்லிய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே அருணா சர்க்கரை ஆலை டன்னுக்கு 113 ரூபாய் கொடுத்து வந்தார்கள். இப்போது டன்னுக்கு 95 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் கொடுக்கப்படுகிற விலையை விட அருணா சர்க்கரை ஆலை கொடுக்கிற விலை குறைவாக இருக்கிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்தி நியாயமான விலையை, பழைய விலையை, கொடுக்க இப்போது கொடுக்கப்படும் விலையைச் சேர்த்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும், விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய சர்க்கரை ஆலை முதலாளியை அரசு கட்டாயப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, சர்க்கரை ஆலை கரும்புக்குக் கொடுக்கும் விலையைச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்துகின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை.



குறைந்தபட்ச விலையை மட்டுமே வாங்கிக் கொடுப்பதற்கு இந்த அரசிற்கு அதிகாரம் உண்டு. மேலும் டன்னுக்கு 113 ரூபாய் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டது, இந்த ஆண்டு அவ்வாறு கொடுக்க முடியவில்லை என்றும், ரூபாய் 100 தான் கொடுக்க முடியும் என்று பேச்சுவார்த்தைக்கு இணங்க தற்போது ரூபாய் 95 தான் ''பார்ஷியல் பேமெண்டாக'' கொடுத்தது போக பாக்கி உள்ள ரூ. 5ஐக் கொடுக்க ஒப்புக் கொண்டு போயிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. ப. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரும்பு விவசாயிகள் ஆலைகளுக்கு அனுப்பும் போது கரும்பு வெட்டப்பட்ட பிறகு ஆலைகளில் இருந்து வருகிற லாரிகள் தாமதமாக 2, 3 நாட்கள் கழித்து கரும்பை எடுத்துச் செல்ல வருவதால் கரும்பின் எடை குறைந்து விட ஏதுவாகிறது. இந்த நிலையைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கட்டிங் ஆர்டர் ஆலைகளிலிருந்து கிடைத்த உடனே உடனடியாகக் கரும்பை வெட்டி ஆலைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது என்பது விவசாயிகளின் பொறுப்பு. அதே சமயத்தில் ஆங்காங்கு இருக்கக்கூடிய அலுவலர்களின் பொறுப்பு, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய, இந்தக் கரும்பை ஆலைகளுக்குக் கொண்டு சேர்ப்பதில் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுவது. இதில் அரசு தக்க உத்திரவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரும்பு என்பது இனிப்பான ஒன்று. ஆனால் விவசாயிகளைப் பொறுத்த மட்டில் கரும்பு பயிரிடுவோரின் அனுபவம் கசப்பானதாக இருக்கிறது. அது கசந்து போயிருக்கிறது. உத்திரபிரதேசம், பீகார் மாநிலங்களில் ரூ. 130, ரூ. 140 கொடுக்கப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் இது மிகக் குறைவாகவே இருக்கிறது. இதை அதிகமாக உயர்த்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அண்மையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000 மானியமாகக் கொடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[1978 சனவரி 2

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கரும்பைப் போல இனிப்பாகப் பேசுவார் என்று நினைத்தேன். ஆனால் கரும்பு பயிரிடுவோரின் வாழ்க்கை கசப்பாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் இனிப்பான செய்தியாக இந்த ஆண்டு 1—10—77 முதல் ரூ. 125 கொடுக்கின்ற அளவிற்கு ஆணையிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்த அரசு கரும்புக்கு விலையை 85 ரூபாய் மத்திய அரசு நிர்ணயித்திருந்தாலும் ரூபாய் 125 கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதனையும் இந்த நேரத்திலே விவசாயிகளிடத்தில் அதிகக்கவனம் எடுத்துக் கொண்ட அரசு என்ற காரணத்தால் நான் இதனைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கருமபு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தால் ஏக்கருக்கு ரூ. 100 மானியமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: கரும்பு சப்ளை செய்வதற்கு அக்கிரிமென்ட் போட்டு அப்படி சப்ளை செய்யாவிட்டால் அதற்கு ''லீகல் பேமென்ட்''டாக ஒரு டன்னுக்கு ரூ. 10 அல்லது ரூ. 15 என்று நிர்ணயம் செய்து ஒரு அக்ரிமென்ட் போடுகிறார்கள். அந்தக் கரும்பானது மழையின் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ சப்ளை செய்ய முடியாமல் போனால் ''ஆர்பிட்ரரி'' யாக ''அவார்ட்'' பாஸ் செய்யப்படுகின்றது. இது அக்கிரமம். இதைக் குறைத்து போடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியா, அல்லது விளக்கமா?

திரு. ரா. மார்க்கபந்து: நியாயமான நஷ்ட ஈடு எவ்வளவு என்பதை அனுசரித்து, கோர்ட்டுகளிலே தீர்ப்பு வழங்குகிறார்கள். அந்த முறையிலே கூட, கரும்பு சப்ளை செய்யாத விவசாயிகளுக்கு நியாயமான நஷ்ட ஈடு எவ்வளவு என்பதை அறிந்து அந்த அளவு தீர்ப்பு தருகின்ற ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1978 சனவரி 2]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்பவும் சிரமம் எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் கூட்டுக் கேள்விகளாகப் போட்டு, பல கேள்விகளைக் கேட்டார்கள். மூலக் கேள்விக்கும் அவர் கேட்ட கேள்விகளுக்கும் சம்பந்தம் இல்லையென்ற காரணத்தினால், தனிக் கேள்விபோட்டால் பதில் சொல்கிறேன். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியைப் பற்றி பொது சப்ளிமென்டரிஸ்ஸாக வந்தாயிற்று. ஆகவே, அதற்காக ஒன்று கேட்கவிரும்புகிறேன். ரூ. 5 இலட்சம் விவசாயிகளுக்குத் தரவேண்டுமென்று பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலை 9 மாதங்களாக மூடப்பட்டு, திறந்து, சுற்றுப்புறத்திலேயிருக்கிற விவசாயிகளுக்கு தராமல், மீண்டும் அடுத்த நாளே மூடப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? தெரிந்தால், இது சம்பந்தமாக, சமரச முயற்சி எடுக்க அரசு நடவடிக்கை எடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உமாநாத் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், விவரமாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் மூலக் கேள்வியையொட்டிக் கேட்க வேண்டும். பேட்டைவாய்த்தலையில் உள்ள சர்க்கரை ஆலையைப்பற்றி, அருணா சர்க்கரை ஆலையைப் பற்றிய கேள்வியில் கேட்டால் ................?

திரு. ரா. உமாநாத்: ஜெனரல் சப்ளிமென்ட்ரீஸ் வர ஆரம்பித்ததால் தான் கேட்டேன். கரும்பு விவசாயிகளுக்குப் பாக்கி என்ற பிரச்சினை வந்ததால்தான் அதை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்கள் கேட்பதையொட்டி நீங்கள் கேட்கக் கூடாது.

திரு. ரா. உமாநாத்: அந்த மூலக் கேள்வியை ஒட்டித்தான் கேட்கப்படுகிறது.

[1978 சனவரி 2

திரு. மு. செல்வராஜ் : மத்திய அரசாங்கத்திலிருந்து சென்ற ஆண்டு, சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுத்த விலைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் குறைத்துக் கொடுக்கக் கூடாது என்ற கைட்லைன்ஸ் மாநில அரசாங்கம் மூலம் வந்திருக்கிறது. எனவே, அந்த கைட்லைன்ஸை, சர்க்கரை ஆலைகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று, மாநில அரசாங்கம், ஆலை முதலாளிகளை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: போன ஆண்டு கொடுக்கப்பட்ட விலையைக் குறைத்துக் கொடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி எல்லா ஆலைகளும், குறைந்த பட்ச விலையையும், அதே சமயத்தில் போன ஆண்டு கொடுக் கப்பட்ட விலையையும் கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ராமநாதன்: பெண்ணாடம் சர்க்கரை ஆலை ஒரு தனியார் ஆலை. ஆனால், கூட்டுறவு ஆலையிலே கொடுக்கக் கூடிய தொகையைவிடப் பெண்ணாடம்—தனியார் துறையிலே—கொடுக்கக்கூடிய தொகை, கரும்புக்கு, ஒரு டன்னுக்குக் கிட்டத்தட்ட, ரூ. 10, ரூ. 15 அளவிலே குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுவதனால், விவசாயிகள் தனியார் துறையிலே இருக்கும் ஆலையை விரும்புவதைவிட, கூட்டுறவுத் துறை ஆலையை விரும்புகிறார்கள். ஆகவே, இந்தத் தனியார் துறை ஆலையை, ஜாய்ண்ட் செக்டார் ஆலையாக மாற்ற முடியுமா என்று கேட்கிறார்கள். அதை ஜாய்ண்ட் செக்டார் ஆலையாக மாற்ற ஏதாவது வகை செய்யப்பட முடியுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய யோசனை தற்பொழுது அரசின் ஆலோசனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பண்ணை கே. சேதுராம்: தலைவரவர்களே, கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு உண்மையிலேயே சீனி கிடைப்பதில்லை, கழக ஆட்சி அப்பொழுதிருந்த காலத்தில் கூட, அப்பொழுது பல இடங்களிலே, கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்குச் சீனி கொடுக்கப்படவில்லையென்று புகார்கள் சொல்லியும், உற்பத்தி பண்ணுகிற விவசாயிகளுக்குச் சீனி கொடுக்கப்படவில்லை, எனவே, அவர்களுக்குச் சீனி



[978 சனவரி 2]

கொடுக்க வழியும், கரும்பு உற்பத்தி செய்கிற பக்கத்திலே யுள்ள விவசாயிகளுக்கு 10 மைல் ரூட்டுக்கு மட்டும் டிரான்ஸ் போர்ட்டிங் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதைப் போல், 100 மைலுக்கு அப்பால் இருந்து கொண்டு வருகிற கரும்புக்கும் இது போன்ற டிரான்ஸ்போர்ட்டிங் அலவன்ஸ் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ணை சேதுராம் தான்கேட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாக போட்டால், விவரமான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

(2) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவையின் 55-வது விதியின் கீழ், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட தீர்மானம் வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:—

''மாண்புமிகு திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையின்கீழ் உள்ள அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையின்மையைத் தெரிவித்துக் கொள்கிறது.''

பேரவையின் 55 (2) விதியின் கீழ் இத்தீர்மானம் முறைப்படி உள்ளதா எனத் தீர்மானித்து, அப்படி இருந்தால், அதைப் பேரவைக்குப் படித்துக் காட்டி, பேரவை இத் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி அளிக்கிறதா என்று அறியவேண்டும். தீர்மானம் முறைப்படி உள்ளதால், அதை நான் ஏற்கனவே பேரவைக்குப் படித்து விட்டேன். இப்போது இத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறியவேண்டும். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 24 பேர்களுக்குமேல் எழுந்து நின்றார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 24 உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால், இத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இத் தீர்மானத்திற்கு பேரவை அனுமதி அளித்த பின் பத்து நாட்களுக்குள் பேரவையில் விவாதிக்க ஒரு நாள் குறிப்பிடவேண்டும். நாளைய தினம் இது எடுத்துக்கொள்ளப்படும். அலுவல் ஆய்வுக்குழுவைக் கலந்துகொண்டு அதற்கு எவ்வளவு நேரம் என்று குறிப்பிடுகிறேன்.

## (3) அறிவிப்பு.

(அ) பேரவை விதி 55-ன்கீழ் திரு. க. சுப்பு அவர்கள் கொடுத்த அறிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. சுப்பு அவர்கள் பேரவையின் 55-வது விதியின் கீழ் ஒரு அறிவிக்கை கொடுத்துள்ளார்கள். அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவர பேரவை அனுமதி அளித்து விட்டபடியாலும், இத்தீர்மானம் அரசின் எந்தக் கொள்கையையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதுவாக உள்ளதாலும், இத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து, பேரவையின் 184-வது விதியின் கீழ் திரு. சுப்பு அவர்கள் அவை உரிமை மீறல் குறித்து ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதை இப்போது பேரவையில் கொண்டு வர அனுமதிக்கிறேன். திரு. சுப்பு அவர்கள் அதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

## (4) ஒழுங்குப் பிரச்சினை.

ஓர் உறுப்பினர் தான் குறுக்கிட்டுப் பேசியதன் குறிப்பு தனக்கு அனுப்பப்படவில்லை என்பது குறித்து.

*திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், இரண்டு நாட்களுக்கு முன்னாலே சட்டசபையில் நான் ஒரு பிரச்சினையை குறிப்பேட்டிலே இருந்து நீக்கவேண்டும் என்று கேட்டதும், நீங்கள் அழுத்தமாக அதை நீக்கக் கூடாது என்று சொன்னதையும் தலைவர்





அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படித் தாங்கள் உத்தரவிட்ட விவரமும் நான் நீக்கச் சொன்ன விவரமும் எனக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை நீங்கள் தெரிந்துகொள்வதற்காக சொல்லுகிறேன். இதை உங்கள் மத்தியில் அமைதியான சூழ்நிலையில் இந்த விவரத்தைக் கொடுப்பதற்காக நீங்கள் வருத்தப்படக்கூடாது. ஏனென்றால் நான் சொன்னதற்கு நீங்கள் உட்காராவிட்டாலும் உங்கள் தலைவர் சொல்வதற்காவது உட்காருங்கள் என்று ஒரு குறிப்பிட்டகட்சியினரைப் பார்த்துச் சொன்னீர்கள். இது சபைக்கு இழுக்காகும். குறிப்பேட்டிலேயிருந்து மேலே கண்ட வாசகத்தை நீக்கவேண்டுமென்று நான் கேட்டதும், நீங்கள் முடியாது என்று அழுத்தமாக உத்தரவு இட்டதும் அது சம்பந்தமான விவரம் எனக்குக் கொடுக்கப்படவில்லை அதைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—தாங்கள் எழுப்பியது நடவடிக்கைக் குறிப்பிலே ஏறியதா, இல்லையா என்பது தெரியவில்லை. நீங்கள் எழுப்பிய பிரச்சினை கூட உங்களுக்கு வரவில்லை என்று சொல்கிறீர்கள். அதைக் குறிப்பேட்டிலே பார்த்து அது எப்படி வராமல் இருக்கிறது என்பதை தெரிவிக்கிறேன்.

## (5) உரிமைப் பிரச்சினை.

சென்னை காவல் துறை ஆணையர், சில உறுப்பினர்கள் கைதானது பற்றி தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது குறித்து.

*திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினை சென்னை நகரப் போலீஸ் கமிஷனருக்கு எதிரானது. 30—10—1977 காலை 10—00 மணிக்கு எதிர் கட்சித் தலைவரையும், துணைத் தலைவரையும் under Section 144 read with Section 188, Cr. P. C. கீழ்க் கைது செய்தார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு 14-வது பெருநகர மாஜிஸ்டிரேட் அவர்களால் ரிமாண்டு செய்யப்பட்டு, அந்தத் தகவல் உடனடியாக பேரவைத் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டது.

அந்தத் தகவல் தான் நமக்கு வந்திருக்கிற எப். ஐ. ஆர். என்று சொல்லப்படும் அதாவது முதல் தகவல் அறிக்கையாகும். அது தான் நீதி மன்றத்திற்கும் தரப்படுகிறது. அது தான் பஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட். அதற்கு முன் அறிக்கை எதுவும் இருக்க முடியுமா? அதற்குப்

[திரு. க. சுப்பு] [1978 சனவரி 2

பின்னால் என்ன இருக்கும் என்றால் "சார்ஜ் ஷீட்",
குற்றப்பத்திரிக்கை. முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்
பட்டு இந்தப் பேரவைக்குக் கொடுக்கப்பட்டதைத் தவிர
வேறு புதிதாக எதுவும் இருக்க முடியாது. இப்படி
இருக்கும்போது முதலில் 144, 188 ஆகிய பிரிவுகளின்
கீழ் தான் கைது செய்ததாகச் சொல்லப்பட்டதே தவிர
வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

முதலில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட
போது, மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டபோது வேறு
குற்றச்சாட்டுகள் இல்லை. 144, 188 செக்ஷன்களின் கீழ்
தான் சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஆனால் மறு
நாள் பத்திரிக்கையில் பார்க்கும்போது வேறு தகவல்
அறிவிக்கப்படுகிறது. வேறு நிலைமைகள் உருவாயின. வேறு
செக்ஷன்கள் போடப்பட்டன. 120 (பி), 147, 148,
149, 307, 337, 338, 341, 345, 440, 506 (2) "ரெட்
வித்" (read with) 149-ஐ. பி. சி. "அண்ட் செக்ஷன்ஸ்"
126, 127 அண்ட் 128 "ஆப் தி இண்டியன் இரயில்வேஸ்
ஆக்ட்" என்று பல செக்ஷன்கள் சேர்க்கப்பட்டன.
பத்திரிக்கையில் மறு நாள் இப்படித்தான் செய்தி வந்தது.
முதல் நாள் ரிமாண்ட் செய்யும் போது இப்படிப்பட்ட
செக்ஷன்கள் இல்லை.

இந்த அவையைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்
எவரேனும் கைது செய்யப்பட்டால் அதைப் பற்றிய தக
வல்கள், விவரங்கள் அத்தனையும் அவர் எந்த இடத்தில்
கைது செய்யப்பட்டார், எதற்காகக் கைது செய்யப்பட்
டார், எங்கே காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்ற
விவரங்களை முழுமையாக பேரவைத் தலைவருக்குத் தெரி
விக்க வேண்டும். பேரவைத் தலைவருக்குத் தெரி
பட்டது இவர்கள் மீது போடப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்
கள் முழுமையாகத் தெரிவிக்கப்படாமல் 144, 188 செக்
ஷன்களின் கீழ் மட்டும் போடப்பட்டதாகத் தெரிவிக்கப்
பட்டது. நமது காவல்துறை ஆணையர் அவர்கள் இப்படித்
தான் தெரிவித்திருக்கிறார்கள். இது பேரவையின் உரிமை
யை மீறிய செயலாகும். சட்ட சபைக்குத் தகவல் தெரி
விக்க வேண்டிய விதி முறைப்படி போலீஸ் கமிஷனர்
அவர்கள் நமக்குத் தகவல் தரவில்லை. எனவே இது
அவையின் உரிமை மீறிய செயல் என்பதால் இந்த
உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.



1978 சனவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர்
கொடுத்துள்ள அறிவிப்பை மிக்க கவனமாகவும், உன்னிப்
பாகவும் ஆராய்ந்தேன். அவர் அறிவிப்பில் கூறியுள்ள
வாறு பேரவைத் தலைவருக்குச் சரியான தகவல் கொடுக்க
வில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை.
எனவே இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் எழ
வில்லை.

அவையின் விதி 245-ன் கீழ், ஒரு குற்றச்சாட்டின்
பேரிலோ, அல்லது ஒரு குற்றம் செய்ததற்காகவோ
கைது செய்யப்பட்டாலும், இரண்டாவது, இந்தியாவிலுள்ள
ஒரு நீதி மன்றத்தினால் சிறைத்தண்டனை அளிக்கப்பட்
டாலும், மூன்றாவது, மாநில, மத்திய அரசின் ஆணைப்படி
காவலில் வைக்கப்பட்டாலும், தண்டிக்கும் நீதிபதி,
மாஜிஸ்டிரேட் அல்லது நிர்வாக அதிகாரி, உடனே அச்
செய்தியை பேரவைத் தலைவருக்கு தெரிவிப்பதுடன்
கைது செய்வதற்கான, காவலில் வைத்ததற்கான அல்லது
தண்டித்ததற்கான காரணங்களையும் உறுப்பினர் எவ்விடத்
தில் காவலில் அல்லது சிறையில் வைக்கப்பட்டுள்ளார்
என்ற விவரத்தையும் தலைவரால் வரையறுக்கப்பட்ட
பொருத்தமான வடிவில் தெரிவிக்க வேண்டும். இதற்
கிணங்க சென்னை நகர காவல்துறை ஆணையர் அவர்கள்
30-10-1977 தேதியிட்ட கடிதத்தில் பல்வேறு உறுப்பினர்
கள், குறிப்பாக, திரு. மு. கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவர்.
திரு. க.அன்பழகன், திரு.எஸ்.ஜே. சாதிக்பாட்சா, திரு.ப.உ.
சண்முகம், திரு. துரைமுருகன், ஆகியோர் "ஜே. 3 கிண்டி
பி. எஸ். கிரைம் நெம்பர் 545/77, அண்டர் செக்ஷன் 188
ஐ.பி.சி. ரெட் வித் 144 சி.ஆர்.பி.சி. ஆகிய பிரிவுகளின்
கீழ் 144-வது தடை உத்திரவை மீறியதற்காக எந்தெந்த
இடங்களில் எந்தெந்த நேரங்களில் கைது செய்யப்பட்
டுள்ளார்கள் என்பதை தெரிவித்துள்ளார்கள். இந்த அறி
விப்பு எனக்கு மறுநாள் கிடைத்தது. அவ்வறிவிப்பு
கிடைத்தவுடன் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அலுவலக
செய்தித்தாள் மூலம் 1-11-77 ஆம் தேதி தபால் மூலம்
அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் செய்தித்தாள் அனுப்பின
உடன் 14-வது மெட்ரோபாலிடன் மாஜிஸ்ரேட்டிடம்
இருந்து வந்த குறிப்பில் திரு. கருணாநிதியும் மற்ற மேற்
குறிப்பிட்ட உறுப்பினர்களும்.

who were arrested by the Central Crime Branch, Madras, on
30th October 1977 for criminal conspiracy, rioting, attempt to
murder, causing hurt. wrongful restraint. mischief by fire, criminal

intimidation, etc. under Section 120-B, 147, 148, 307, 338, 337, 341, 435, 440, 427 and 506 (ii) read with 149 I.P.C. and Section 126, 127 and 128 of the Indian Railways Act were produced before me to day and remanded till 14th November 1977.

என்று தெரிவித்துள்ளார்கள். 2–11–77-ல் நகர
காவல்துறை ஆணையர் இடத்திலிருந்து வரப்பெற்ற
1–11–77 நாள் கடிதத்தில் பின்வருமாறு எழுதியுள்
ளார்கள்.

"I have the honour to inform you that Thiruvalargal M. Karunanidhi, M.L.A.. K. Anbazhagan, M.L.A.. S. J. Sadiq Pasha, M.L.A.. P. U. Shanmugam, M.L.A.. and Durai Murugan, M.L.A.. concerned in *J-3 Guindy P.S. Cr. No.* 545/77 under Section 18 I.P.C. read with 144 Cr.P.C. and '*X' Stn. Cr. No.* 726/77 under section 120-B, 147, 148, 307, 338, 337, 341, 435. 440, 427 and 506 (ii) read with 149 I.P.C., and Section 126, 127 and 128 of Indian Railways Act, were remanded till 14th November 1977 by the XIV Metropolitan Magistrate, Egmore. Madras on 31st October 1977. They are now lodged in Central Prison. Madras."

எனவே, உறுப்பினர் கூறியவாறு எந்தவிதமான தவறோ
அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினையோ எழவில்லை
என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[முற்பகல் 10–10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின்
கீழ் அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து
மாண்புமிகு உறுப்பினர் தாழை மு. கருணாநிதி அவர்கள் . . . .

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்
கெனவே பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக்
கல்லூரி மூடப்பட்டிருப்பது குறித்து ஒரு ஒத்திவைப்பு
தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் 2-ம் தேதி எடுத்துக் கொள்ளப்படும்
என்று சொன்னார்கள். அதை எடுத்துக் கொள்வதற்கு
பதிலாக கவன ஈர்ப்புத் தீர்மானம் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2-ம் தேதி எடுத்துக்
கொள்வதாக முதலமைச்சர் சொன்னதாக சொல்வது மிக
மிகத் தவறு. 2-ம் தேதி எடுத்துக் கொள்ளப்படும்
என்று வரையறுத்துச் சொல்லவில்லை. எடுத்துக் கொள்ளலாம்





என்று தான் சொன்னாரே தவிர வேறு ஒன்றும் சொல்ல
வில்லை. அதைப் பற்றி முழுமையாகதகவல் கிடைத்த
உடன் அதை எடுததுக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்
கள். முழுமையான தகவல் கிடைத்த உடன் பரிசீலனைக்கு
எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஏ. ரகுமான்கான் : தமிழ் நாட்டில் உள்ள
பெயர் பலகைகளை நீக்குவதற்கு ஏதாவது உத்திரவு வந்
திருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொன்
றுக்கும் அனுமதி அளிக்கப்பட்டால் நேரம் இருக்காது.
உங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? அப்படி
வரவில்லை என்றால் என்னுடைய அறிவிப்புத் தானாக வரும்.
100 பேரும் ஒத்தி வைப்பு தீர்மானத்தைப் பற்றியே பேச
எழுந்தால் என்ன செய்வது ?

6. கவன ஈர்ப்பு

தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், காவலக்குடி
கூட்டுறவு விவசாய சங்கத்தின் எதிரில் உண்ணாவிரதம்
இருக்கும் விவசாயிகள் நிலை குறித்து.

திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகுபேரவைத்
தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம்
காவலக்குடி கூட்டுறவு விவசாய சங்கத்தின் எதிரில் விவ
சாயக் கடன் கோரி சாகும் வரையில் உண்ணாவிரதம்
இருக்கும் விவசாயிகளின் நிலையால், விவசாயிகள் மத்தியில்
ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து தங்களுடைய கவனத்
துக்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர்
அவர்களே, நன்னிலம் தாலுக்காவில் உள்ள காவலக்குடி
விவசாயக் கூட்டுறவு சங்கத்தைச் சார்ந்த சில உறுப்பினர்
கள் முன் கடன் பாக்கியைச் செலுத்தாத அங்கத்தினர்
களுக்கும் புதிய கடன் வழங்கப்பட வேண்டும் எனக்
கோரி 19–12–1977 முதல் சங்கக் கட்டிடத்தின் முன் தொடர்
உண்ணாவிரதம் இருந்தார்கள். பழைய கடனை திருப் பி
தராத உறுப்பினர்களுக்கு புதிய கடன் வழ்ங்குவது சாத்
தியமில்லை என திருவாரூர் துணைப் பதிவாளரும், கொரடா
சேரி வட்டார வளர்ச்சி அலுவலரும் எடுத்துக் கூறியும்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1978 சனவரி 2

உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்து விட்டனர். அதோடு தங்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாவிடில் 27–12–1977 லிருந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக பயமுறுத்தினர். 27–12–1977-ல் நாகப்பட்டினம் கோட்டாச்சியாளர் கூட்டுறவுச் சார் பதிவாளருடன் உண்ணாவிரதமிருப்போரைச் சந்தித்து விஷயங்களை எடுத்துக் கூறி தற்சமயம் முன் பாக்கியைச் செலுத்த வலியுறுத்தாமல் புதிய கடன் வழங்க கூட்டுறவு வங்கி தனி அதிகாரி சிபாரிசு செய்ய உறுதியளித்ததின் பேரில் 28–12–1977 லிருந்து உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டுள்ளது. 10–1–1978க்குள் இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் 11–1–1978 லிருந்து திரும்பவும் உண்ணாவிரதம் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார்.

1977–78ல் ரூ. 4.08 இலட்சம் சம்பா, குறுவை, கரும்பு பயிர்களுக்காக குறுகிய கால கடனை இச்சங்க அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டது. புயல் வெள்ளத்தின் காரணமாக குறுவை பயிருக்கான 2.70 இலட்சம் ரூபாய் குறுகிய கால கடன் தொகையை மத்திய கால கடனாக டிசம்பர் 1977ல் மாற்றப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு 3.77 இலட்சம் ரூபாய் அளவில் தாளடிப் பயிருக்கு புதிய கடன் அனுமதிக்கப்பட்டது. இதில் ரூ. 1.38 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது.

இச் சங்கத்தில் 420 உறுப்பினர்கள் தங்களது பழைய கடன் ரூ. 2.24 இலட்சம் திருப்பித்தராமல் உள்ளனர். இந்த உறுப்பினர்களது பயிர்கள் வறட்சியாலும், புயலாலும், பாதிக்கப்படவில்லை. ஆகையால் அவர்களது குறுகிய கால கடனை மத்திய கால கடனாக மாற்றவும் தகுதியுடையவர்களாக இல்லை. இந்த உறுப்பினர்கள், வேண்டுமென்றே தங்களது கடனை திரும்பக் கொடுக்காமல் (wilful defaulters) நிறுத்தி வைத்துள்ளனர் என்று தெரிகிறது. இப்படிப்பட்ட பழைய பாக்கியுள்ள அங்கத்தினருக்கு புதிய கடன் வழங்கப்பட வேண்டுமென்பது தான் உண்ணாவிரதம் இருப்பதற்கான கோரிக்கை. கடனைத் திருப்பித் தந்தாலன்றி புதிய கடன் பெற அங்கத்தினர்களுக்கு தகுதி கிடையாது. இந்த நிபந்தனையை இந்திய ரிசர்வ் வங்கி வலியுறுத்தி வருகிறது. வறட்சி புயல் போன்ற காரணங்களால் பயிர்கள் பாதிக்கப்படாத அங்கத்தினர்கள்



1978 சனவரி 2] [திரு. க. உரொ. எட்மண்ட்]

கடனை திருப்பிக் கட்டாமலிருக்க எவ்வித நியாயமுமில்லை. அங்கத்தினர்களுக்கு இந்த விவரங்களை விளக்கிக் கூறி, சமாதானப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. தாழை மு. கருணாநிதி : இந்தக் காவலக்குடி கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில், அப்பகுதியி லுள்ள பாண்டவையாறு உடைப்பு காரணத்தால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி, அது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அந்தப் பகுதி பாதிக்க வில்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக அங்குள்ள அதிகாரிகள் சமாதானம் பேசுகிறபோது நிச்சயமாக நாங்கள் புதுக் கடன்களைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், அரசாங்கம் அதைப் பரிசீலிக்காது என்ற முறையில் சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் புதிதாக கூட்டுறவுக் கடன் கொடுக்கிற செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : எல்லா விவசாயிகளுக்கும் இப்பேர்ப்பட்ட நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தினுடைய குறிப்பு எதுவும் சொல்லவில்லை. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத்தான் நிவாரணப் பணிகளில் அதன் பங்கு உண்டு என்று ஏற்கனவே அரசாங்கம் தெரிவித்துள்ளது. நன்னிலம் வட்டம் காவலக்குடி கூட்டுறவுச் சங்கத்திலுள்ள விவசாயிகளின் நிலங்கள் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்படவில்லை என்பதுதான் அரசாங்கத்திற்கு அறிக்கை வந்திருக்கிறது.

## (7) அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

The HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I move for leave to introduce the Tamil Nadu Debt Relief Laws (Amendment) Bill, 1978. I pray for the grant of leave by this House.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

The HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, I introduce this Bill.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## (8) 1977–78 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை ஒன்றும் அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-20)

மொத்தம் 94·35 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப் பட்டுள்ளன. இவற்றில் 44·24 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 50·11 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளிலும் வரும். மொத்தக் கோரிக்கையில் 94·13 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட இனங்களின் கீழும், 0·22 கோடி ரூபாய் சாட்டப்பட்ட இனங்களின் கீழும் அடங்கும்.

தமிழ்நாட்டைத் தாக்கிய புயல், பெருவெள்ளம், அக்டோபர், நவம்பர் திங்களில் இடைவிடாது பெய்த மழை ஆகிய இயற்கையின் சீற்றங்களால் ஏற்பட்ட



துயரச் சூழலில், இந்தத் துணை மதிப்பீடுகள் அவை முன் வைக்கப்படுகின்றன. புயல், வெள்ளத்தினால் ஏற்பட்ட மக்கள் உயிர் இழப்பு, கால்நடை இழப்பு, குடிசைகள், வீடுகள், பயிர்கள், நிலம் இவற்றுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் பாசன ஆதாரங்கள், சாலைகள், கட்டடங்கள் போன்ற பொது உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் இவற்றின் தன்மையினையும் அளவினையும், அரசு நிறைவேற்றியுள்ள பல்வேறு நிவாரண நடவடிக்கைகளையும் விவாதிக்க இம் மன்றத்துக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. எனவே, இந்தத் துணை மதிப்பீடுகளில், புயல், வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளுக்கான பல்வேறு நிதி ஒதுக்கங்களை மட்டும் குறிப்பிட முற்பட்டுள்ளேன்.

இம் மன்றத்தில் கோரப்படும் மொத்தம் 94·35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்தில், புயல், வெள்ளத் துயர் தணிப்பு, மறுவாழ்வுக்கு உதவி, பொதுப் பணிகளைச் சீரமைத்தல் ஆகியவற்றுக்காக மொத்தம் 46·32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. குடிசைகள் சேதமுற்றோர்களுக்கு இழப்பீடாக, 8·80 கோடி ரூபாயும், அரசு, ஊராட்சி ஒன்றியம் இவற்றின் பாசன ஆதாரங்களைச் செப்பனிட்டு முந்தைய நிலைக்குக் கொண்டு வருவதற்காக 5·75 கோடி ரூபாயும், அரசுச் சாலைகளையும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் செப்பனிடுவதற்காக 10 கோடி ரூபாயும், அரசுக் கட்டடங்களையும் ஊராட்சி ஒன்றியக் கட்டடங்களையும் சீரமைக்க 2.06 கோடி ரூபாயும், உழவர்கள், நெசவாளர்கள், மீனவர்களுக்கு உதவுவதற்காக 7 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட நகராட்சிகளுக்கு உதவித் தொகையாக 1.20 கோடி ரூபாயும், சாலைகளைச் செப்பனிட்டுச் சீரமைக்க, சென்னை மாநகராட்சிக்கு 1 கோடி ரூபாயும், மாநில மின் வாரியத்திற்கு 3 கோடி ரூபாயும், அரசுத் துறை நிறுவனங்களுக்கு 75 இலட்சம் ரூபாயும், அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கும், கல்விக்கூடங்களுக்கும் 50 இலட்சம் ரூபாயும், நாகப்பட்டினம், கடலூர் சிறு துறைமுகங்களுக்கு 30 இலட்சம் ரூபாயும், மருத்துவ நிவாரணத்துக்காக 56 இலட்சம் ரூபாயும், போக்குவரத்துச் செலவுகளுக்காக 40 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியுள்ளோம். மேலும் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்க இயலும் பொருட்டு, அந்த வங்கிகளுக்கு வழிவகை முன்பணம் வழங்க 5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இந்த நிதி ஒதுக்கீடு

களுக்குக் கூடுதலாக, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கருணை மானியங்கள் வழங்குவது, உணவுப் பொட்டலங்கள், இலவச உணவுப் பொருள்கள் வினியோகிப்பது, உடைகள் அளிப்பது போன்று பல்வேறு உடனடி நிவாரணப் பணிகளுக்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 3 கோடி ரூபாய் வரை வழங்கப்படும்.

புயல், வெள்ள நிவாரணச் செலவுகளுக்காக மத்திய அரசிடமிருந்து உதவியாக 33.91 கோடி ரூபாய் மட்டுமே கிட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதில், 2 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனாகும். 2.6 கோடி ரூபாய் உணவு தானியங்களின் மதிப்பாகும். எஞ்சிய தொகை, திட்ட முன் உதவித் தொகையாகும். இத் தொகையில் எழுபது சதவீதம் கடனாகும்; முப்பது சதவீதம் மானியமாகும். நடப்பாண்டில் மத்திய அரசிடமிருந்து இதுவரை கிடைத்துள்ள தொகைக்கு மேலாக நமக்கு ஏற்படும் கூடுதல் செலவு 12.41 கோடி ரூபாயாக இருக்கும். பாசன ஆதாரங்கள், சாலைகள், மண் மேடிட்ட நிலங்களைச் சீர்படுத்துவது போன்ற பணிகளின் பொருட்டு, வரும் நிதியாண்டிலும் நாம் செலவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். 1978-79 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் இவை பொருட்டு, தக்க நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். மத்திய அரசு அளித்துள்ள உதவித் தொகையை மறுபரிசீலனை செய்து, போதுமான அளவு அதிகப்படுத்துமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளோம். அதே நேரத்தில் நிவாரண-மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதிலும் பொது உடைமைகளைச் செப்பனிட்டுச் சீர்படுத்துவதிலும் இடர்பாடுகள் ஏற்படாத வண்ணம், போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளோம் என்று அவைக்கு உறுதியளிக்கிறேன்.

வழிவகை முன்பணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 15 கோடி ரூபாயும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு 15 கோடி ரூபாயும்,





தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்கு 3 கோடி ரூபாயும் ஆக, 33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு இந்தத் துணை மதிப்பீட்டில் அடங்கும். இந்த நிறுவனங்கள் தத்தம் நடைமுறைப் பணிகளைத் தங்கு தடையின்றி நிறைவேற்றவும், அடுத்த ஆண்டில் மேற்கொள்ள விருக்கும் திட்டங்கள் தொடர்பான முன்னேற்பாடுகளைச் செய்யவும் இந்த வழிவகை முன்பணங்கள் தேவைப்படுகின்றன. அடுத்த நிதியாண்டில் இந்த நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கையில், இந்த முன்பணங்கள் திருப்பிப் பெறப்படும்; ஆகவே, நடப்பாண்டையும் அடுத்த ஆண்டையும் சேர்த்துப் பார்த்தால், அரசுக்கு இதனால் நிகரச் செலவு ஏதும் இராது.

மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற 3.78 கோடி ரூபாயைத் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, நமது வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறதே தவிர மாநில அரசுக்கு இதனால் நேரடி செலவு ஏதும் இல்லை. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்கெனவே கொடுத்திருந்த வழிவகை முன்பணத்தைப் பங்கு மூலதனமாக மாற்றுவதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளோம். இந்தக் கழகம், அரசுக்குக் கொடுக்க வேண்டியுள்ள தொகையிலிருந்தும் 2.5 கோடி ரூபாய் பங்கு மூலதன உதவியாகச் சரிக்கட்டப்படுகிறது. தமிழ் நாட்டில், உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து, பொது வினியோக முறையின் மூலமாக நியாய விலையில் விற்பனை செய்யும் பெரும்பணியை நுகர் பொருள் வாணிபக் கழகம் ஏற்றுள்ளது. இந்தக் கழகத்தின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தி, அதன் மூலம் கடன் பெறும் சக்தியைப் பெருக்க, இத் தொகைகள் உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் நியாயவிலைக் கடைகள் தொடங்கப்படும் என்ற அரசின் முடிவையொட்டி, இப் புதிய திட்டத்தின் கீழ், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் முதற்கட்டமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிய

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியுறுவர். 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதிக்குள் திருநெல்வேலி மாவட்டத்தில், புதிதாக 442 நியாயவிலைக் கடைகளைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தொடங்கும். இக் கடைகள் எல்லா வகையான இன்றியமையாப் பொருள்களையும் விற்பனை செய்யும். இக் கடைகளைத் தொடங்கியதுடன், திருநெல்வேலி மாவட்டம் முழுவதிலும் நியாயவிலைக் கடைகள் அமையும். பல்வேறு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தி வரும் 829 சில்லரை விற்பனைக் கடைகள், பங்கீட்டுப் பொருள்கள் மட்டுமல்லாமல் இன்றியமையாப் பொருள்கள் அனைத்தையும் விற்பனை செய்யும் நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இத்திட்டம் அடுத்தபடியாகச் செயற்படுத்தப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களிலும் நியாயவிலைக் கடைகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. ஆகவே, முதற் கட்டமாக, தென் மாவட்டங்கள் அனைத்தும் இப் புதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டம், ஏனைய மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கப்படும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் இப் புதிய திட்டத்தை அமுலாக்க, தொடக்க மூலதன உதவித் தொகையாக 20 இலட்சம் ரூபாயும், தொடர் உதவித் தொகையாக 25 இலட்சம் ரூபாயும் துணை மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன.

நான் மேலே குறிப்பிட்டுள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் 88·05 கோடி ரூபாய் போக, இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய நிதி ஒதுக்கங்கள் மொத்தமாக 6.30 கோடி ரூபாய் ஆகும். பலதிறப்பட்ட பணிகளுக்கு இத் தொகை வேண்டப்படுகிறது. இவற்றின் விவரங்கள் அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன. 1977 ஜூலையில் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல புதிய திட்டங்களுக்குத் துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



இத்துடன், 1977–78 ஆம் ஆண்டிற்கான முதலாவது துணை மானியக் கோரிக்கைகளை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

## 4. ஒழுங்குப் பிரச்சினை —தொடர்ச்சி.

### ஓர் உறுப்பினர் தான் குறுக்கிட்டு பேசியதன் குறிப்பு தனக்கு அனுப்பப்படவில்லை என்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். நடவடிக்கைக் குறிப்பிலே அவர் குறிப்பிட்ட பகுதி ஏற்கெனவே இருக்கிறது. அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அது தவறி இருக்குமானால், இன்னொரு நகலை அனுப்பும்படி சொல்லியிருக்கிறேன். அவர்களிடம் அது வந்து சேரும்.

அடுத்து, இப்போது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டு, அந்தப் பிரச்சினை நாளை எடுத்துக் கொள்ளப்பட இருப்பதால், இப்போது 12 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு என் அறையில் கூடும்......

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்று இந்த புயல், வெள்ள நிவாரணப் பணியைப்பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசியிருக்கின்ற காரணத்தால், 12 மணி என்பது அனைவருக்கும் சற்றுச் சிரமமாக இருக்குமென்று கருதுகிறேன். எனவே, 10-45 மணி அளவில் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தை வைத்துக்கொண்டால், மற்ற உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, அனைத்துக் கட்சித் தலைவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துக் கொள்வதற்கு வசதியாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நான் முதலிலே ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்களைப் பேச் அழைக்கப் போகிறேன். அவர்கள் ஏறக்குறைய அரை மணி நேரம் அல்லது 20, 25 நிமிஷங்கள் வரைப் பேசக் கூடும். இப்போது அலுவல் ஆய்வுக் குழு கூடினால், அவர் ஒருவர் அதிலே கலந்துக் கொள்ள வாய்ப்பு இல்லாமல் போகும். அதனால்தான் 12 மணிக்கு, என்றால் தாங்களும், பேரவை முன்னவர் அவர்களும் பேசுகின்ற நேரத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று கருதினேன். வேறு நேரம் இல்லை.

[பேரவைத் தலைவர்]

ஜேம்ஸ் அவர்கள் வேறு யாரையாவது பேச வைத்து விட்டு வரலாம். இல்லையென்றால் அவர் கடைசியில் பேசலாம்.

[முற்பகல் 10-30]

ஆகவே, இப்போது உடனே 10-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவை வைத்துக் கொள்ளலாம் என்று வேண்டுகோள் விடுகிறேன். இப்போதே அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவு எடுத்து விடலாம்.

## (9) புயல், வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் பற்றியும் அளிக்கப்பட்ட நிவாரணம் பற்றியும் அவை முன் வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க இந்த அரசு உடனே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதை எல்லாத் தரப்பினரும் பாராட்டியது போல் எங்கள் கட்சியின் சார்பிலும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

12-11-77ல் புயல் அடித்தது. அதற்கு முன்பு ஏறத்தாழ ஒன்றரை மாத காலம் விடாத மழை. புயல் அடித்த பிறகும் விடாத மழை. புயல், வெள்ளத்தின் காரணமாக எங்கள் பகுதியில் வாழை, கரும்பு, கொடிக்கால், தென்னை, நெல், கூரை வீடுகள், மச்சு வீடுகள் முதலானவை பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தாலூகாவில், பாபநாசம் தாலூகாவிலும் வெண்ணாறு, வெட்டாறு, அரசலாறு, காவிரி, கொள்ளிடம், குடமுருட்டி, திருமலைராஜன்





ஆகிய ஏழு ஆறுகளின் வெள்ளத்தாலும், பெரும்பாலும் பயிர்களும் வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. கும்பகோணம், பாபநாசம் தாலூகாக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழைக்கு ஏக்கருக்கு 100 ரூபாய் உதவித் தொகை கொடுத்திருக்கிறார்கள். அந்த 100 ரூபாய் போதாது. ஒரு ஏக்கரில் வாழை சாகுபடி செய்ய வேண்டுமென்றால் ஐந்து ஆறாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, உதவித் தொகையை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிக் கவனம் எடுத்துக் கொள்ளவில்லை. உதவித் தொகையும் அளிக்கப்படவில்லை. கரும்புக்கும் உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பெரும்பாலும் கொடிக்கால் விவசாயம் அதிகமாகச் செய்யப்படுகிறது. பட்டம் என்ற முறையிலே சாகுபடி செய்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 450 பட்டம்; ஒரு பட்டத்திற்கு 30 ரூபாய் வரை செலவு செய்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு முழுவதுமாக ஒருவர் இதனைப் பயிர் செய்ய முடியாது. சாதாரணமாக 100, 150 பட்டந்தான் ஒருவர் சாகுபடி செய்ய முடியும். கும்பகோணம் மாவட்ட விவசாய அதிகாரியைக் கேட்டபோது கொடிக்காலுக்குக் கணக்கெடுக்கச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார். அது தவிர, இதுவரை உதவித்தொகை இவ்வளவு என்று வழங்கப்படவில்லை. இது வரையில் எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை. உடனே உதவித் தொகையும் கடனும் வாங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தென்னையும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் நிதி உதவி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாக எங்கள் பகுதியில் நெல் சாகுபடி மிக அதிகம். குறுவை பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. புயலுக்கு முன் அறுத்தவர்கள் ஒரு ஆளுக்கு ஆறு, ஏழு மரக்கால் வீதம் கூலி கொடுத்தும் மேலும் ரூபாய் இரண்டும் கொடுத்தும் அறுத்திருக்கிறார்கள். புயலால் கதிர்கள் ஒன்றோடொன்று மோதி பெரும்பாலும் உதிர்ந்து விட்டன. புயலுக்குப் பிறகு ஏற்பட்ட மழையினால் பெருமளவு சேதப்பட்டு இரண்டு மூன்று ஏக்கருக்கு 10 கலம் கூடக் கிடைக்கக் கூடிய நிலைமை இல்லை. கும்பகோணம் பகுதியில் நீலத்த

நல்லூர், குடிதாங்கி, மேலாத்துக் குறிச்சி காவல்கூடம் ஆகிய கிராமங்களின் தண்ணீர் அத்தியூர் வட்டம் வழியாக கொள்ளிடத்தில் போய் வடிகிறது. வெள்ளத்தின் காரணமாக அந்த வடிகால் பலகை உடைந்து கொள்ளிடம் தண்ணீர் அதியூர் கிராமத்திற்குள் புகுந்து விட்டது. அதன் காரணமாக குறுவை பெரிதும் அழிந்து விட்டது. ஒரு கலம் இரண்டு கலம் கூட எடுக்கக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே அந்தப் பகுதியில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கிஸ்தியை தள்ளுபடி செய்ய வேண்டும், அவர்கள் கொடுக்க வேண்டிய முன்னாள் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்ற வேண்டும். கும்பகோணம் தாலூகாவையும், பாபநாசம் தாலூகாவையும் பாதிக்கப்பட்ட தாலூகாக்களாக எடுத்துக் கொண்டு வேண்டிய புயல் நிவாரண நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எங்கள் பாபநாசம் தாலூக்காவில் அம்மாப்பேட்டை வட்டாரத்திலே 34 கிராமங்கள் மட்டும்தான் பாதிக்கப்பட்ட கிராமங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

எங்கள் பகுதியில் உள்ள குத்தகைதாரர்களுக்கு இன்னும் எந்த விதமான சலுகையும் அறிவிக்கப்படவில்லை. சென்ற ஆண்டு அவர்கள் வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டார்கள், இந்த ஆண்டு பெருமழை, வெள்ளம், புயல் ஆகிய வற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே குத்தகைதாரர்களுக்கு ஏதாவது அரசு நிவாரணம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் வட்டாரத்தில் அகோபில மடம் என்ற ஒரு மடத்திற்கு சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அந்த மடத்தைச் சேர்ந்தவர்கள் ரெவின்யூ கோர்ட்டிலே விவசாயிகள் மீது கேஸ்கள் போட்டிருக்கிறார்கள். அதே போன்று சுவாமிநாதசுவாமி கோயில் தேவஸ்தானமும் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு களத்து மேட்டிலே எவ்வளவு நெல் கண்டு முதல் ஆனதோ அவ்வளவையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். ஆகவே இந்த ஆண்டு, புயல், மழை, வெள்ளம் காரணமாக அவர்களுக்கு கண்டுமுதல் மிகவும் குறைவாகப் போய் விட்டது. குறுவை அழிந்து போய் விட்டது. தாளடி கருகி விட்டது, சம்பாப் பயிர்களும்





கருகிப் போய் விட்டன. இதைத் தவிர அவர்களுக்கு தாளடி பயிருக்கு தண்ணீர் விடப்படாமல் கடந்த 20, 30 நாட்களாக தண்ணீர் இல்லாததால் நெல் பயிர் பெரிதும் கருகி சேதமடைந்து விட்டது. கும்பகோணம் பாபநாசம் தாலூகாவிலேயுள்ள நெல் சாகுபடியாளர்களுக்கு அரசு ஏதாவது நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது இந்தியா பூராவும் வஜா செய்ய வேண்டும். 1977-78 ஆண்டிற்கு கூட்டுறவு மூலம் கொடுக்கப்பட்ட கடனை பூராவையும் புயல் வெள்ள சேதமாக எடுத்துக் கொண்டு ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாதிக்கப்பட்ட வீடுகளைப் பார்த்தால் பெரும்பாலும் கூரைவீடுகள் தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றன முதலில் அரசு அவர்களுக்கு 100 ரூபாய் உதவித் தொகை கொடுப்பது என்று அறிவித்தது. அதுவும் கூட கிஸ்தி 10 ரூபாய்க்குக் குறைவாகக் கட்டுகிறவர்களுக்கு மட்டும் தான் உண்டு. அதிகமாகக் கட்டுகிறவர்களுக்குக் கிடையாது. மேலும், மாத வருமானம் 100க்கு குறைந்து இருந்தால் மட்டும்தான் உதவித் தொகை உண்டு, அதிகமாக இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு உதவித் தொகை கிடையாது. இப்படியெல்லாம் அரசு முதலில் அறிவித்து அதன் படி 100 ரூபாய் உதவித் தொகை கொடுத்தது. மேலும் 100 ரூபாய் அதற்குப் பிறகு கொடுக்கப்பட்டது. இதைத் தவிர 5 கிலோ அரிசி, சேலை, வேட்டி எல்லாம் கொடுத்தார்கள்.

இங்கே பேசிய சிலர் ஏதோ எல்லோருக்கும் அவைகள் எல்லாம் கிடைக்கவில்லை ஒரு சில கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். எங்கள் பகுதியிலே பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் எல்லா கட்சிக்கட்சிக்காரர்களுக்கும் உதவித் தொகைகள், பொருள்கள் கொடுக்கப்பட்டன. அரிசி ஏதோ 1 கிலோ தான் கிடைத்தது என்று இங்கே சிலர் சொன்னார்கள். அப்படியல்ல, எங்கள் பகுதியில் 5 கிலோ அரிசி நல்ல அரிசியாகக் கொடுத்தார்கள், புடவைகளும் கொடுத்தார்கள், புடவை, உள் பாவாடை கட்டினால்தான் கட்டலாம் அவ்வளவு விலை உயர்ந்த புடவைகள், கைத்தறி புடவைகள், 40 ரூபாய் 50 ரூபாய் பெறுமானமுள்ள புடவைகள் கொடுத்தார்கள்.

[திரு. ரெ. வீ. சௌந்திரராஜன்] [1978 சனவரி 2

இரண்டாவது தடவை உதவித் தொகை கொடுக்கும் போது கிஸ்தி 10 ரூபாய்க்கு மேல் இருந்தவர்களுக்கும் வருமானம் எவ்வளவாக இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் கூரை வீடாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இரண்டாவது முறையில் கொடுக்கும்போது பல நபர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. கிராம உத்தியோகஸ்தர்கள் சில இடங்களில் அவர்களுடைய விருப்பு வெறுப்பைக் காட்டியிருக்கிறார்கள். 20 ரூபாய் சேதம் உள்ளவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள், ஆனால், அவ்வாறு சேதமடைந்தவர்களுக்குஎல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை 20, 25 கீத்துக்கள் பிய்ந்து போய் இருந்தாலும், 2 மூங்கில்கள் உடைந்து போய் இருந்தாலும், ரூபாய் 20 சேதம் ஆகிவிடும் அவர்களுக்கு உதவித்தொகை கிடைக்கவில்லை. குறிப்பாக பெரும்பாலான அரிசன மக்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படாமல் விடுபட்டுப் போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகையைக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

[முற்பகல் 10-40]

ஒரு வாரத்திற்கு முன்பு கூட சூலமங்கலத்தில் ஒரு வீட்டுச் சுவர் இடிந்து விழுந்திருக்கிறது.. எங்கள் பகுதியில் அநேக வீடுகள் உதவித் தொகை கொடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அவை ஏன் விடுபட்டுப்போயிருக்கிறது என்றால் 'லெஸ் டேமேஜ்' அல்லது 'வாண்டன்லி டேமேஜ்' என்று காரணம் சொல்கிறார்கள். அதாவது குறைந்த சேதம் அல்லது வேண்டுமென்றே இடிக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். வேண்டுமென்றே சிலபேர் இடித்திருக்கலாம். ஆனால் வீடுகளின் சுவர்கள் ஊறிப்போய் இருந்தால் அது காயக்காய இடிந்துகொண்டேதான் இருக்கும். உதாரணத்திற்குச் சொல்ல வேணடுமென்றால் பாபநாசத்திற்குப் பக்கத்தில் இரண்டு மூன்று மைல் தூரத்தில் செம்மங்குடி என்ற ஊர் இருக்கிறது. அங்கு ஒரு வீட்டில் மண் சுவர் ஊறி இருந்திருக்கிறது. அது சாயும் தறுவாயில் இருந்ததை புருஷன் மனைவி இரண்டு பேரும் சேர்ந்து மண் அணைப்புக் கொடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அது நடந்தது டிசம்பர் மாதம் 20-ம் தேதி. பிறகு அந்தச் சுவர் இடிந்து விழுந்து



1978 சனவரி 2] [திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்]

அதனால் படுகாயமுற்று மனைவி இறந்துவிட்டாள். கணவனுக்கு நிதி உதவி அளிக்க வேண்டுகிறேன். வெள்ளம், புயல் அடித்து ஒரு மாதத்திற்கு மேலே ஆகியும் இன்றும் ஒவ்வொரு இடத்திலும் சுவர் இடிந்து விழுந்துக்கொண்டே இருக்கிறது. அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் வேண்டுமென்று இடித்ததாக சில அதிகாரிகள் கூறுகிறார்கள். வேண்டுமென்றே இடித்தவர்கள் இருக்கலாம். ஆனால் தானாகவே வீடு இடிந்து விழுந்துகொண்டும் இருக்கிறது. அதையெல்லாம் கவனித்து, மூன்றாம் முறையாகப் பல வீடுகள் இடிந்திருக்கின்றன, அவைகளுக்கும் நிதி உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் கூட இந்த சந்தர்ப்பத்தில் சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். பல அதிகாரிகள் நல்ல முறையில் நடக்கிறார்கள். எங்கள் தொகுதியைப் பொறுத்த வரையில், கலெக்டர், ஆர். டி. ஓ. தாசில்தார், பி.டி.ஓ. ஆகியவர்களெல்லாம் நல்லமுறையில் பணியாற்றினாலும்கூட, கீழே உள்ள சில அதிகாரிகள் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென எண்ணி நடப்பார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. எனவே, சேதம் என்றால் வீடு இடிந்தவர்கள் எல்லோருக்கும் நிவாரணம் கொடுக்கும்படி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

செம்மங்குடி மட்டுமல்ல, பட்டுக்குடி, ஆதனூர் முதலிய அரிசனங்கள் வாழும் இடங்கள் பெரும்பாலும் விடப்பட்டிருக்கின்றன. அதை இந்த அரசு கவனித்து அவர்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், கீழே உள்ளவர்கள் காரணம் சொல்லி தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள். இன்னும் வீடுகள் சேதம் அடைந்த ஏராளமானவர்களுக்கு உதவித்தொகை கொடுக்கப்படாமல் இருக்கிறது. பேராவூரணி தாலுகாவில் சோழனூர் வயலில் மிகவும் சேதம் அடைந்த 12 அரிஜனங்கள் வீடுகளுக்கு இன்னும் உதவித் தொகை கிடைக்கவில்லை. இதையும் அரசு கவனித்து ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு, இதில் ஏமாற்றுகின்றவர்களும் இருக்கிறார்கள். எனக்கு ஒரு அதிகாரி சொன்னார், ஒரு வாரத்திற்கு முன்பு. அவர் ஒரு இடத்திற்குப் போனாராம், அந்த ஊரிலுள்ள விவசாயி, குடிசை வீடு உள்ளவர்களுக்கு 200 ரூபாய் கொடுக்கிறீர்களே, வேண்டுமானால் அதில் 20 ரூபாயைக் கழித்துக் கொண்டு எங்களுக்கு 180 ரூபாய்

கொடுங்கள் என்று சொன்னாராம். 200 ரூபாயில் சேதத்திற்காக 20 ரூபாயைக் கழித்துக்கொண்டு பாக்கி உள்ள 180 ரூபாயை எனக்குக் கொடுங்கள் என்று அந்தக் கிராமத்திலே உள்ள வீடு பாதிக்கப்படாத விவசாயி கேட்டதாக ஒரு அதிகாரி சொன்னார்.

பல பேர் அரசு உதவித் தொகையைப் பெற ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் நினைக்கிறார்கள். நாகப்பட்டினத்திலே ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்கள். அதாவது புருஷனும் மனைவியும் இருக்கிறார்கள். புருஷன் அரசு தந்த உதவித் தொகையை வாங்கிவிட்டான். மனைவி அதிகாரிகளிடம் போய் இரண்டு வருடங்களாக நான் புருஷனிடம் இல்லை, தனியாக இருக்கிறேன், எனக்கும் உதவித் தொகை வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆனால் அந்தப் பெண்ணைப் பார்க்கும்பொழுது அவள் கர்ப்பஸ்திரியாக இருந்திருக்கிறாள். உடனே அங்கே உள்ளவர்கள், இரண்டு வருஷமாகத் தனியாக இருப்பதாகச் சொல்கிறாய், ஆனால் நீ கர்ப்பவதியாக இருக்கிறாய், ஆகவே உனக்குப் உதவிப் பணம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தாய், தந்தை, குழந்தைகள் உள்ள ஒரு குடும்பம் இருக்கிறது. தாயும், தந்தையும் நிவாரணப் பணத்தை வாங்கிவிட்டார்கள். அவர்கள் பணத்தை வாங்கியபிறகு, அவர்களுடைய பிள்ளையும், மகளும் அதிகாரிகளிடம் போய், எங்கள் தாய், தந்தை தனியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகை கிடைத்து விட்டது. நானும் என் அண்ணனும் தனியாக இருக்கிறோம், எங்களுக்கு நிதி உதவி வேண்டுமென்று அவர்கள் போய் அதிகாரிகளைக் கேட்டிருக்கிறார்கள். இம்மாதிரி அரசை ஏமாற்ற வேண்டுமென்ற நிலையிலும் பலபேர் இருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு இரண்டு முறைகள் வீடு சேதமுற்றவர்களை கணக்கெடுத்து நிதியுதவி கொடுத்திருக்கிறார்கள்.

மூன்றாவது முறையாகவும் இந்த வீடுகள் இடிந்து சேதமுற்றவர்களுக்குக் கண்டிப்பாக நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். தயவு செய்து முடியுங்கள்.

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : மேலும் இந்த அரசு மச்சு வீடுகளைப் பற்றி எந்தவிதமான கவனமும் எடுத்துக் கொள்ளவில்லை. மச்சு வீடுகளிலே இருப்பவர்கள் எல்லோரும் பணக்காரர்கள் என்று சொல்ல முடியாது. உதாரணமாக, களஞ்சேரி என்ற கிராமத்தில் உள்ள அரிசன் ஒருவர் 25 ஆண்டுகளுக்கு முன்பு பணக்காரராக இருந்தார். அப்பொழுது பணக்காரராக இருந்தபொழுது மச்சு வீட்டைக் கட்டிவிட்டார். ஆனால் இப்பொழுது அவர்தான் அந்தக் கிராமத்தில் ஏழை. அவருடைய வீடு இடிந்து விட்டது. அவருக்கு நிதி உதவி கிடைக்கவில்லை. எனவே, கல் வீடு, மச்சு வீடுகளில் இருக்கின்ற பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய பொருளாதார வசதியை அனுசரித்து கண்டிப்பாக நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து முடியுங்கள். உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கியிருந்தது, 15 நிமிடங்கள் ஆகிவிட்டது.

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : எங்கள் பகுதியிலே உள்ள ஒன்றிய ஆசிரியர்களுக்கு வெள்ளச் சேத நிவாரண அட்வான்ஸ் இன்னும் கொடுக்கப்படவில்லை. 'அடடா'வும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவைகளையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரப்படி, திரு சின்னையா, உங்களுக்கு 5 நிமிடம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தயவு செய்து 5 நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

* திரு வீ. சின்னய்யா : அவைத் துணைத்தலைவர் அவர்களே, நவம்பர் மாதம் 11, 12 தேதிகளில் அடித்த புயலால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிய அறிக்கையின்மீது இந்திய தேசிய இந்திரா காந்தியினுடைய காங்கிரசின் சார்பாக, ஒரு சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அங்குள்ள ஏழை எளிய மக்கள் எல்லாம் பெரிய கஷ்டத்திற்கு உள்ளானார்கள். அவர்களுக்கு அந்த மாவட்டத்திலுள்ள ஆட்சித் தலைவரவர்களும், அந்த மாவட்டத்திலுள்ள காவல் துறை அதிகாரி அவர்களும் இரவு பகலாக, கண்விழித்து, தூங்காது இரவு வேளைகளிலும், பேய் பிடித்தவர்கள் போல் திரிந்து அலைந்து, அந்த மக்களுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு, அவர்கள் உயிர்கள் காப்பாற்றப்பட்டால் போதுமானது, உடைமைகள் இல்லாவிட்டால்பரவாயில்லை என்று பாடுபட்டு, உயிர் வாழ உணவும் உடுத்த உடையும், பாத்திரங்களும் கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே அதற்குக் காரணம் யார் என்று சொன்னால், நம்முடைய மதிப்பிற்குரிய புரட்சித் தலைவரவர்கள்தான். ஏனென்று கேட்டால், உண்மையிலேயே அடிக்கடி, எந்தெந்த வேளைகளில், எந்தெந்த நிமிடத்திலே, என்னென்ன செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டதன் காரணமாக, புதுக்கோட்டை மாவட்டத்திலேயுள்ள பெரும் அதிகாரிகளைக் கடவுளாகப் போற்றக்கூடிய நிலைமையிலே இருக்கிறோம்.

நமது துணை சபாநாயகர் அவர்கள் கூட டூர் ப்ரோகிராம் போட்டு, போகும்போது, விபத்து ஏற்பட்டு விட்டது. ஆனால், உண்மையிலேயே இந்த நல்ல தூய்மையான ஆட்சியின் காரணமாக, அவர் எந்தவிதமான ஆபத்துக்கும் ஆட்படாமல் உயிர் தப்பிவிட்டார். எவ்வளவு பெரிய விபத்து வந்தும், பனிபோல் அது நீங்கி விட்டது.

வீடிழந்தவர்கள் இலட்சக்கணக்கான பேர்கள் என்று கணக்கெடுத்தார்கள். உண்மையிலேயே, முன்னதாக, கிராம அதிகாரிகள், கர்ணம் போன்றவர்கள் கணக்கெடுத்துள்ளார்கள். மீண்டும் யூனியன் அதிகாரிகளை விட்டு கணக்கெடுக்கச் சொன்னார்கள். அவர்களும் அதிகாரிகளுக்கு பயந்துகொண்டு, ரூ. 500க்கு மேற்பட்டு மதிப்புள்ள வீடு வைத்திருந்து இழந்தவர்களுக்குத்தான் ரூ. 200 கொடுப்போம், அதற்குக் கீழே உள்ளவர்களுக்குக் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, கொடுக்காமலிருக்கிற பாக்கித் தொகையை பாக்கி வீடுகளுக்கும் கொடுக்க வேணுமாய் கோருகிறேன். நிவாரணம் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





உண்மையிலே, அந்த வட்டாரத்திலேயுள்ள நெடுஞ்சாலைகள் எல்லாம் பாழடைந்துபோய் விட்டன. கிராமச் சாலைகள் பழுதடைந்து போய்விட்டன. நிவாரணப் பணியிலே ஈடுபட்டு, நல்லமுறையிலே ரிப்பேர் செய்த போக்குவரத்து வாகன வசதிகள் போய்விட்டன. கிராமச் சாலைகள் அடைப்பட்டு, போக்குவரத்துக்கு வழியில்லாமல் இருக்கின்றது. கட்டை வண்டி கூட போகக்கூடிய நிலையில் இல்லாததால், அவர்கள் கால் நடையாகப் போகக் கூடிய நிலைமையிருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கி அங்கங்கு ரோடுகளை மராமத்து செய்யவேண்டுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் புயல் வெள்ளத்தால், 20 25, 30 நாட்கள் வரையிலும், தனியார் பஸ்கள் ஓடவில்லை. அவர்கள் ஒரு வண்டிக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 150 வரி கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த வரியை ரத்து செய்வதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இப்பொழுது மண் மேடிட்டிருக்கிற பகுதிகளை டிராக்டர்கள் மூலமாகச் சீர் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கத்தக்கதாக இருக்கும் வகையில், அந்தப் பணியை குழு ஏற்படுத்தி, நல்ல முறையிலே செய்ய வேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனிலே இருக்கிற ஹைஸ்கூல்களில் இருந்த புயலால் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் அத்தனை பேருக்கும் அட்வான்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், புதுக்கோட்டை மாவட்டத்திலே, அங்குள்ள ஹையர் இரேட் கடைநிலை ஊழியர்களுக்கு அந்த அட்வான்ஸ் கொடுக்கப்படவில்லை.

(முற்பகல் 10-50)

ஆகவே, அவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது பி. டபிள்யூ. டி. கண்மாயில் நிரம்பத் தண்ணீர் இருப்பதன் காரணமாக முன்வாயிலில் உள்ள நூற்றுக்கணக்கான நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நீர் கீழே எவ்வளவு இருக்கிறது என்பதை அளவோடு அதற்கேற்றாற்போல் நீர்மட்டம்

எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உண்மையிலேயே நூற்றுக் கணக்கான ஏக்கர் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் குறுவை சாகுபடி செய்ய வாய்ப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்போது இருக்கிற புரட்சித் தலைவர் நீண்டகாலமாக ஆளவேண்டும். வருங்காலத்திலே அவருடைய ஆட்சி நல்ல முறையிலே அமையவேண்டும் என்று கூறிக்கொண்டு, அவருடைய உயிருக்கும் உடைமைக்கும் ஊறு நேர்ந்தால் இந்திய தேசிய காங்கிரஸ் அதைத் தடுக்கச் செயல்படும் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்: பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின் மீது பேசுவதற்கு அனுமதி அளித்ததற்காக என்னுடைய நன்றியைக் கூறிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி குளித்தலை தொகுதியாகும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே இரண்டு தாலுகாக்கள் சம்பந்தப்பட்டது ஆகும். ஒரு பகுதி மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டவையாகும். மணப்பாறையைச் சேர்ந்த இடங்கள் கடந்த 5 ஆண்டுகாலமாக வறட்சியாக இருந்தன. பிறகு மழை வந்த நேரத்தில் விவசாயிகள் தற்போது விவசாயம் நடத்தி வருகிறார்கள். அங்கே வெள்ளத்தினால் கிட்டத்தட்ட தெற்குப் பகுதியில் எல்லா குளங்களும் உடைந்து போய்விட்டன. டொம்பச்சியாறு, வழியாக வந்து மணப்பாறையைச் சேர்ந்த வெள்ளைக்கல் கிராமத்திலேயும் கலிங்கப்பட்டு என்ற கிராமத்திலே வெள்ளத்தாலே 38 பேர்கள் இறந்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆனால், 18 பேர்கள்தான் கணக்கிலே வந்திருக்கிறது. இழப்பு மானிய தொகையையும் இரண்டு பேர்களுக்குத் தான் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு வீட்டிலே ஆண்கள் இறந்தால் கொடுக்கிறார்கள், வீட்டுத் தலைமை என்பதால். ஆண்கள் இல்லை பெண்கள் மட்டுமே இருந்தால் தரப்படுவது இல்லை. முதியவர்களும் இறந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு நஷ்ட ஈடு தொகை கொடுக்கப்படவில்லை. அதைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு அதிகாரிகளுக்கு விளக்கம் தெரிவித்தால் நலமாக இருக்கும்.





அந்தப் புழுநேரி கிராமம் பகுதியிலே மோட்டார் பம்ப் செட்டுகள் வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது. ஆயில் இன்ஜினும் இல்லை, மோட்டாரும் இல்லை. அதே நேரத்தில் 5 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பகுதி மக்களுக்கு இரண்டு வகையான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த நஷ்டம் தாங்கமுடியாமல் இருப்பதன் காரணத்தாலே, மோட்டார் பம்ப் செட்டுகளுக்கும் ஆயில் இன்ஜின் வாங்குவதற்கும் சொல்ப வட்டிக்கு அரசு கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது நிவாரண நிதியிலிருந்து குறைந்த சொல்ப மானியத் தொகை நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய குளித்தலை பகுதியிலே வாலாந்தர் மருதூர், குமாரமங்கலம் பகுதியிலே காவிரி பகுதியிலே வெள்ளம் வந்து மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு வாழை, கரும்பு, கொடிக்கால் போன்றவைகள் மிகுந்த சேதம் அடைந்திருக்கின்றன. அதற்கு 100 ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வாழைக் கன்று புதைப்பதாக இருந்தால் 250 ரூபாய் செலவாகிறது. ஆகவே, அந்த மானியத் தொகையை 250 ரூபாயாக கொடுத்தால் சௌகரியமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மின்சாரம் சேதாரம் அடைந்த பகுதி—அவர்களுக்கு பம்பு செட்டுக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவில்லை. அரிஜனங்கள் குடியிருக்கும் பகுதிகள் தாழ்ந்த பகுதிகளாக இருப்பதால் வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. அவர்கள் தாழ்ந்த பகுதிகளில் வாழ்வதால் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு மேட்டுப் பாங்கான பகுதிகளில் வீடுகள் கட்டித் தர வேண்டும் அல்லது வீடுகள் கட்டிக் கொள்வதற்கு மனைப்பட்டாக்கள் அளிக்கப்பட வேண்டும்.

அடுத்து பம்பு செட் புதிதாக அமைப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. புதிதாக ஒருவர் பம்பு செட் அமைக்க வேண்டுமென்றால் அந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் மாதம் ஒன்றுக்கு சராசரி செலவு 75 ரூபாய்க்கு மேல் போகக் கூடாது

[திரு. போ. எ. சீனிவாசரெட்டியார்] [1978 சனவரி 2

என்கிறார்கள். எனவே இதை உயர்த்தி ரூ. 100, அல்லது 105 ஆக ஆக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த விதத்தில் இருந்தால் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமுத்திரம் பகுதியில் வெள்ளத்தால், அதிகமாக சேதாரம் ஆகி விட்டது. வீடுகள் சேதமாகி இருக்கின்றன. வறட்சிப் பகுதியாக இருந்த இடங்கள் இன்றைக்கு வாழ வழியில்லாத அளவிற்கு வெள்ளத்தால் சேதம் அடைந்துள்ளன. எனவே இந்தப் பகுதி மக்களுக்கு தொழில் நிறுவனங்களிலிருந்து ஏதாவது கடன் உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்க முடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்து உதவ வேண்டும். 6½ சதவிகித வட்டிக்கு கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அரசுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் தமிழகத்தில் ஏற்பட்ட புயலில், பெரு வெள்ளத்தில் பொருள் சேதம் உயிர்ச் சேதம் ஏற்பட்டமைக்கு ஜனதா கட்சி சார்பில் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, இச்சேதத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்கள் கட்சியின் சார்பில் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்பட்ட வெள்ளத்தில், புயலில், பல்லாயிரக்கணக்கான மக்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள், கடல் ஓரப் பகுதியில் உள்ள, அங்கு வாழ்கிற மீனவர்கள், அரிஜன மக்கள் மிகுதியாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கடல் ஓரப் பகுதிகளான தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தென்னாற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நாகப்பட்டினம், வேதாரண்யம், தஞ்சாவூர், திருச்சி ஆகிய பிரதேசங்கள் இப்படிப் புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள். இந்தப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆகவே, இது சம்பந்தமாக சில கருத்துக்களை நான் அனுபவத்தோடு கூற முடியும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



1978 சனவரி 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு வெள்ளை அறிக்கையை இது சம்பந்தமாக வைத்திருக்கிறார்கள். வெள்ளை அறிக்கை என்று கூறுகிறபோது உண்மையிலேயே இது சம்பந்தமாக விரிவான, விளக்கமான கருத்துக்கள் பல அடங்கி இருக்கும் என்று நான் எதிர் பார்த்தேன்.

(முற்பகல் 11-00)

வெள்ளை அறிக்கை என்று சொன்னாலும் விரிவான அறிக்கை என்பதாக பொருள் என்று நான் கருதுகிறேன். ஆனால் அதற்கு மாறாக இந்த அறிக்கையில் இடம் பெற வேண்டிய பல காரியங்கள் இடம் பெறவில்லை என்பது மட்டுமல்ல, கூறியிருக்கின்ற பல காரியங்கள் கூட தெளிவாக இல்லை என்ற குற்றச் சாட்டை நான் இங்கே கூறவிரும்புகிறேன். 'It is only a vague statement. It does not contain detailed particulars and also there is suppression of material facts' என்று கூறுகிறபோது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் வாழைத் தோட்டங்கள் அழிந்திருக்கின்றன. பருத்தி, வெற்றிலை கொடிக் கால்கள், கரும்பு, சிறு தானிய பயிர்கள் மிகுதியாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி இந்த வெள்ளை அறிக்கையில் இடம் பெற்றுள்ளது. ஆனால், ஒவ்வொரு தொகுதியிலும் எந்த அளவுக்கு எத்தனை ஏக்கர் வாழைத் தோட்டங்கள், பருத்தி, வெற்றிலைக் கொடிக்கால் போன்ற விவரங்களைப் பற்றி அறிக்கையில் கூறியிருந்தால் இந்த சேதத்தால் ஏற்பட்டுள்ள விளைவு எந்த அளவுக்கு அதிகமாக உள்ளது என்பதை இந்த மாமன்றம் தெரிந்துக் கொள்வதற்குள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அதற்கு மாறாக சுருக்கமாக கூறியிருப்பதோடு, இவற்றால் ஏற்பட்டுள்ள நஷ்டங்களைப் பற்றிக்கூட விரிவாக எடுத்துக் கூறவில்லை.

அது மட்டுமல்ல, காவிரி, கொள்ளிடம், வெள்ளாறு, குடகனாறு ஆகிய ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் பல உடைப்புகள் ஏற்பட்டு பல கிராமங்கள் அழிந்து போயின என்ற செய்தி இருக்கிறது. ஆனால் எத்தனை கிராமங்களில் இப்படி ஏற்பட்டது. எத்தனை கிராமங்கள் அழிந்தன என்ற விவரங்கள்கூட அதில் இல்லை. குடகனாறு உடைப்பில் 14 கிராமங்கள் பாதிக்கப்பட்டன, 6 கிராமங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்

பட்டன என்ற செய்தியை பத்திரிகையில் நான் பார்த்தேன். ஆனால் அந்த விவரங்கள்கூட இந்த அறிக்கையில் இடம் பெறவில்லை.

இராமநாதபுரத்தில் பல ஏரிகள் உடைபட்டன என்று இருந்தாலும் கூட, முக்கியமாக எந்தெந்த ஏரிகள் உடைபட்டன, அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன, நாசங்கள் என்ன என்ற விவரங்கள் கூட இதில் இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே போல் வேதாரண்யத்தில் நான் நேரிடையாகச் சென்று பார்த்தேன். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் உப்பளங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. வசதி உள்ளவர்களின் உப்பளமும், வசதி இல்லாத ஏழைகளின் உப்பளங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக ஒரு வார்த்தைக் கூட இந்த வெள்ளை அறிக்கையில் இடம் பெறவில்லை.

மின்சாரம் பாதிப்பு சம்பந்தமாக விளக்கங்கள் இங்கே கொடுக்கப்படவில்லை. கருணை மானியம் என்ற தலைப்பில் 6.66 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த 6.66 கோடி ரூபாய் எத்தனை பேருக்கு எந்த நிலைமையில் வினியோகம் செய்யப்பட்டது என்ற விவரங்கள் கொடுக்கப்படவில்லை. ஏன் இதனைக் கூறுகிறேன் என்று சொன்னால், கருணை மானியம் வழங்கியதில் பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று பல கிராமங்களிலிருந்து அனைத்து கட்சி சார்பிலும் மனுக்கள் வந்துகொண்டே இருக்கின்றன. நிச்சயமாக இந்த மனுக்கள் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்று நான் எண்ணுகிறேன். காரணம் முதலமைச்சருக்கு அனுப்பிய மனுக்களின் நகல்கள் தான் எங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறன. ஆகையால் எந்த அளவுக்கு மறைக்கப்படுவது நடந்திருக்கிறது என்று சொல்லும் போது இந்த வெள்ளை அறிக்கையில் எத்தனை கிராமங்களில் எத்தனை நபருக்கு, ஒரு நபருக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்ற விவரங்கள் எல்லாம் இங்கே கொடுக்கப்பட்டிருந்தால், அந்த நிலைமையை அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

ஆகவே, நான் இந்த வெள்ளை அறிக்கையில் கொடுக்கப்பட வேண்டிய முறையான விவரங்கள் இல்லை என்ற குற்றச் சாட்டை இங்கே கூற விரும்புகிறேன். அதோடு





கருணை மானியம் வழங்குவதில் குறைபாடுகள் பல இருக்கின்றன. ஒரு வேளை குறைபாடுகளே இல்லாத முறையில் இந்த வேலையைச் செய்ய இயலாது என்று இருந்தாலும் கூட குறைபாடுகளை குறைத்திருக்க வேண்டும். அநேகமாக முக்கியமாக கூறப்படுகின்ற ஒரு குறைபாடு என்னவென்று சொன்னால் பாதிக்கப்பட்ட பலருக்கும், பல கிராமங்களுக்கும் இந்தக் கருணை மானியம் சென்று சேரவில்லை. உண்மையிலேயே நிவாரணப்பணிகள் யாருக்கு தேவைப்படுகின்றனவோ அவர்கள் அனைவருக்கும் போய் சேரக் கூடிய அளவிற்கு இந்த பணிகளை செய்திருக்க வேண்டும்.

அதற்கு மாறாக பல கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் நிச்சயமாக கூற இயலும். பல நபர்களும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குறைகளை நான் இங்கே கூறுகிறபோது அரசாங்கத்தை குற்றப்படுத்துவதற்காக நான் கூறுகிறேன் என்று நிச்சயமாக எண்ணக்கூடாது. இந்தக் குறைகளை நிவர்த்திக்க அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இவற்றை இங்கே கூற விரும்புகிறேன்.

அதோடு தேவைப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படாமல் தேவைப்படாதவர்களுக்கு, கிடைக்கத் தேவையில்லாதவர்களுக்குக் கூட அரசியல்வாதிகளின் தலையீட்டினால் பலருக்கு இந்த கருணை மானியம் கொடுத்ததாக உள்ள செய்திகள் இருக்கின்றன. அதோடு அரசாங்கக் கணக்குப்படி ஒரு நபருக்கு ஒரு குடிசைக்கு ரூ. 200 என்ற அளவில் பார்த்தால் அந்த அடிப்படையில் அனைவருக்கும் கிடைக்கவில்லை என்ற குறைபாட்டையும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். ரூ. 100, ரூ. 40 என்ற வீதத்தில் பலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குறைபாடுகள் அரசாங்கத்தில் பணியாற்றுகிற மேல் மட்ட அதிகாரிகளால் ஏற்பட்டது என்று நான் கூற விரும்பவில்லை. அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற முறையில் கீழ் மட்ட சிப்பந்திகளுக்கு அரசியல்வாதிகளினால் சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கூறுகிற போது இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில்

பல இடங்களில், பல கிராமங்களில் இன்றைய தினம் பல நபர்கள் அனைத்துக்கட்சிகள் சார்பில் உண்ணாவிரதம் மேற்கொண்டு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, தஞ்சாவூரில், சீர்காழி, கொடவாசல், ராஜநல்லூர், வலங்கைமான், மன்னார்குடி, அரிச்சந்திரபுரம், அறந்தாங்கி போன்றயிடங்கள், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் காமராஜபுரம், உய்யக்கொண்டான், கண்டியூர், குளித்தலை, பின்னர் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் வியாசார்பாடியில் உள்ள காமராஜர் நகர் பிரதேசத்தில் ஏறத்தாழ 300 வீடுகள் இடிந்திருக்கின்றன. நேற்றைய தினம் நான் நேரடியாகச் சென்று பார்த்தேன். பல வீடுகள் இடிந்து விழுந்திருக்கின்றன. ஆனால் இது வரையில் அவற்றிற்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆயிரக்கணக்கான கால்நடைகள் மடிந்திருக்கின்றன. இந்த வெள்ளை அறிக்கையில் அது சம்பந்தமாக எந்த அளவிற்கு மானியம் கொடுப்பதற்கான திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு இதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். ஒன்றும் காண முடியவில்லை. ஆகவே, கால்நடைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் நிச்சயமாக அவற்றிற்காகவும் அரசாங்கம் மானியம் கொடுக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்க நிர்வாகத்தில் போர்க்கால நடவடிக்கைகள் போன்று செயலாற்றுகிறோம் என்று கூறுகிற இந்த நிவாரணப் பணிகளில் கூட இப்போது மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு குடிசைக்கு ரூ. 200 என்று வழங்குகிறார்கள். ஒரு குடிசையை மீண்டும் அமைத்துக்கொள்ள இந்த ரூ. 200 போதாது. குறைந்தது இன்றைய பொருள்களின் விலைவாசியைக் கணக்கில் கொண்டு பார்த்தால் ரூ.500 ஆவது குறைந்தது வேண்டும். ஆகவே, ரூ. 200 கொடுக்கிறோம் என்று சொல்லி, கொடுக்கிறபோது அதை வைத்து குடிசை அமைத்துக்கொள்ள வழி இல்லாத சூழ்நிலையில் அந்தப் பணத்தைக் கொண்டு வேறு செலவு செய்து



விட்டு மீண்டும் வீடு இல்லாத சூழ்நிலைதான் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அரசாங்கம் பணமாகக் கொடுக்காமல் ஓலைகள், மூங்கில் போன்றவைகளைக் கொடுத்து கட்டுவதற்கான கூலிக்காக ஏதாவது பணம் கொடுத்திருந்தால் நலமாக இருக்கும்.

அடுத்து, இந்த கருணை மானியம் கொடுக்கிற நேரத்தில் சில நிபந்தனைகள் உள்ளன. குடிசைகளுக்கு ஓடு போடப்பட்டிருந்தால் இல்லை. ரூ. 10 வரி செலுத்துகிறவர்களுக்கு, அந்தக் குடிசைகளுக்கு இல்லை. குடிசை சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படுகிறது, ஆனால் வாடகைக்கு இருப்பவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

அடுத்தபடியாக, பெருமளவு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு விவசாயிகளுக்கு பல சலுகைகளை வழங்கியிருக்கிறது. இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். பாதிக்கப்பட்டவர்கள் சிறிது வசதியுள்ளவர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் செலுத்த வேண்டிய விவசாய வருமான வரியை ஓரளவுக்கு ரத்து செய்ய வேண்டும் அல்லது ஒத்திவைக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும், விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற பல சலுகைகளில் இவ்விதம் ரத்து செய்யப்பட வேண்டும் என்று சொல்லியிருந்தாலும், சில இடங்களில் அதிகாரிகள் வசூல் செய்து கொண்டேயிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கடலோரப் பகுதியிலுள்ள மக்களுக்கு குடிசைகள் கட்டிக் கொள்வதற்காக 200 ரூபாய் கொடுக்கிறோம். இருந்தாலும் இனிமேல் வருங்காலத்தில் இப்படிப்பட்ட நிலை வராமல் நிரந்தரமாக அவர்களது வீடுகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, புயல் நேரங்களிலும் தாங்கி நிற்கின்ற அளவுக்கு அவர்களுக்கு தனியாக காலனி அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் உப்பளங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக உப்பு விலை அதிகமாகி இந்தத் தொழிலே

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 சனவரி 2

நசிந்து போகாமல் இருப்பதற்கு, இதற்கு உயிர் கொடுக்கின்ற வகையில் ஏதாவது செய்ய வேண்டும். இப்படி உப்பளம் வைத்திருக்கின்றவர்கள் வசதி உள்ளவர்கள் பலர் இருந்தாலும், ஏழைகளும் உப்பளம் வைத்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலும் உப்பளங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் மானியம் அல்லது கடன் உதவி போன்றவை கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நாகப்பட்டினத்தில் உள்ள ரோலிங் மில் மிகுதியாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாக்கில் இந்த மில்லின் முதலாளி மில்லை மூடிவிட்டார்கள். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கிறார்கள். ஏற்கெனவே இந்த நிறுவனம் சரியாக நடைபெறவில்லை. அந்தப் பிரச்சனை அங்கே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அரசே முன் வந்து இந்த ரோலிங் மில்லை நாட்டுடைமையாக்கி அங்குள்ள தொழிலாளர்களுக்குகெல்லாம் வேலைவாய்ப்பு கொடுக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, புயலால், வெள்ளத்தால், கிராமத்திலுள்ள தினசரிக் கூலிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பத்து நாட்கள் வேலை கிடைத்தால் இருபது நாட்கள் வேலை கிடைப்பதில்லை. இவர்கள் வேலை கிடைக்காமல் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதில் அரசு தனியாகக் கவனம் செலுத்தி தனியாக திட்டங்களை போட்டு, இப்படிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுப்பதற்கு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் இந்த நிவாரணப் பணிகள் எல்லாம் கான்டிராக்ட்டுக்கு விடப் போவதில்லை என்று முடிவு செய்திருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதோடு சேர்த்து பாதிக்கப்பட்ட தினசரி கூலிகள், விவசாயக் கூலிகள் மூலமாக இந்த திட்ட வேலைகளையெல்லாம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் அளிக்கப்படுவதாக இந்த வெள்ளை அறிக்கையில் காணப்படவில்லை. ஆகவே, கைத்தறி தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 சனவரி 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்து புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு பல நிவாரணங்களை செய்து கொடுக்கிறோம். ஆனால், பாதிக்கப்பட்ட நடுத்தர மக்கள் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பொருத்தமான நிவாரணம் ஏதாவது அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஏதாவது நிவாரணம் கொடுக்க இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவர்களுக்கு நிவாரணம் அளிக்க இதுவரை அரசு எந்தவித நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு உதவி செய்ய முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஏற்பட்ட புயலால், விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விளைந்திருந்த நெல் எல்லாம் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு போகம் விளைச்சல் தடைப்பட்டிருக்கிறது. ஆகவே, இவற்றின் விளைவாக அடுத்த சில மாதங்களில் நாட்டில் விலைவாசிகள் எல்லாம் ஏறக்கூடிய வாய்ப்பு ஏற்படக்கூடும். இதை உணர்ந்து ஏழை மக்கள் வாங்கக் கூடிய முக்கிய பொருட்களின் விலைகள் எல்லாம் ஏறாத அளவுக்கு கவனம் செலுத்தி, தேவையான அளவுக்கு இந்தப் பொருட்களை எல்லாம் வாங்கி வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் ஸ்டாக் வைத்துக் கொள்ளும் அளவுக்கு மற்ற மாநிலங்களிலிருந்து பொருட்களை வாங்கி வைத்துக் கொள்ள அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிவாரண வேலை என்றால் மீட்பு வேலை என்றும் அர்த்தமாகும். இந்த அரசு நிவாரணப் பணிகளை மட்டும் செய்திருக்கிறார்கள். ஆனால், மறு வாழ்வுத் திட்டத்திலும் அதாவது ரீ-ஹாபிலிடேஷனிலும் இந்த அரசு மிகவும் கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த அரசிடம் இதற்கான பல்வேறுத் திட்டங்கள் இருந்தாலும்கூட, இதனால் பாதிக்கப்பட்ட சமுதாய மக்கள் அனைவருக்கும் மறு வாழ்வு கொடுப்பதற்கான வகையில் திட்டங்களைத் தீட்டி செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையைப் பொறுத்த மட்டில், இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கணக்கைப் பார்த்தால் இதனால் ஏற்பட்ட இழப்பு 154

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 சனவரி 2

கோடி ரூபாய் என்றும், இதற்காக மதிப்பிட்டு செலவழிக்க இருக்கின்றது 128 கோடி ரூபாய் என்றும் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. இந்த இழப்பு இனம் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு தொகை செலவு செய்ய இருக்கின்றார்கள், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு, எந்தெந்த வகையில் செய்ய இருக்கின்றார்கள் என்ற விளக்கத்தோடு இந்த, அறிக்கைகுறிப்பிடப்பட்டிருந்தால், நிச்சயமாக நாம்உண்மை நிலைமையை அறிவதற்கு வசதியாக இருந்திருக்கும். அதனால், இன்னும் மத்திய அரசாங்கத்திலிருந்து நாம் மேலும் எவ்வளவு உதவித் தொகையை எதிர்பார்க்கிறோம் என்பதற்கும் அது ஏதுவாக இருந்திருக்கும். இது ஒரு குத்து மதிப்பீடாக, நமக்கு இவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதற்காக இவ்வளவு செலவு என்று இருக்கின்ற காரணத்தினால், உண்மையான நிவாரணப் பணிகளைப் பற்றித் தெளிவாக நாம் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசு நமக்கு 33 கோடி ரூபாய் அளவிற்கு
உதவித் தொகை அளித்திருக்கிறார்கள். நாம் நிவாரணப்
பணிகளை மேற்கொள்ளுவதற்கு மேலும் தொகை தேவைப்
படுகிறது. மத்திய அரசாங்கம் நிச்சயமாக மேலும்
உதவி வழங்கும் என்கின்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.
மத்திய அரசு இந்தப் புயல் சம்பந்தமாக செயலாற்றிய
முறையை இந்த அரசு உண்மையிலேயே பாராட்டியிருக்
கிறது. அது வரவேற்கத் தக்கதாகும். ஆனால், அதோடு
கூட இந்த வெள்ளை அறிக்கையிலேயும்கூட, அதற்காக ஒரு
நன்றியைத் தெரிவிக்கும் முறையில் அமைந்திருந்தால்,
அது மேலும் வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கும் என்
பதை நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் புயல் ஏற்பட்டவுடன், நமது அரசு கொடுப்
பதற்கும் முன்னதாக பாரதப் பிரதமர் அவர்கள் 5 கோடி
ரூபாய் இதற்காக வழங்கியிருப்பதும், அதற்குப் பின்பு
இன்னும் 33 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே,
இங்கே ஏற்பட்ட புயல்-வெள்ளச் சேதம் என்பது தேசத்
திற்கு ஏற்பட்ட ஒன்றாகும் என்ற தேசிய உணர்வோடு,
மத்திய அரசாங்கத்திற்கு இருக்கின்ற ஒரு பொறுப்புணர்
வோடு, அது மட்டுமல்ல, நம் மாநில அரசுக்கு இருக்கின்ற
குறைந்த சக்தியையும் உணர்ந்து அந்த அளவிற்கு செயல்
பட்டிருப்பது உண்மையிலேயே நாம் இங்கே பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறோம்.



1978 சனவரி 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்து, இந்த மத்திய அரசாங்கத்தின் உணர்வுகளைப் பிரதியலிக்கின்ற வகையில் 12ஆம் தேதி ஏற்பட்ட புயல் மீண்டும் 17 ஆம் தேதி புயல் அச்சுறுத்துவதாக இருந்த நேரத்தில், மத்திய அரசாங்கத்திலிருந்து ஒவ்வொரு அமைச்சர்களாக இங்கே வந்து, தங்கள் வசதிக்கேற்ப ஏரியல் சர்வே செய்துவிட்டுச் சென்றனர். அந்த முறையிலே 17 ஆம் தேதி ஒரு அமைச்சரும், 18 ஆம் தேதி மற்றொரு அமைச்சரும், 25 ஆம் தேதி குடியரசுத் தலைவர் அவர்களும், 26 ஆம் தேதி பாதுகாப்பு அமைச்சர் அவர்களும், 30 ஆம் தேதி பாரதப் பிரதமர் அவர்களும் வந்து பார்வையிட்டு விட்டு, கண் கலங்கிச் சென்றதை நாம் இந்த அறிக்கையிலே பார்க்கிறோம்.

அதேபோல், நமது மாநில அமைச்சர்களும், குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைப் பற்றி 11-12-1977ல் வெளிவந்த தமிழரசுப் பத்திரிகையில் செய்தியாகக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் தண்ணீரில் நீந்திச் சென்று நிவாரணப் பணிகளைச் செய்தார்கள் என்று கூறி, அவருடைய போட்டோவையும் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல், இன்னும் அமைச்சர் காளிமுத்து அவர்கள் அமைச்சர் சௌந்திரபாண்டியன் அவர்கள் அந்த அந்த இடத்திலே முகாம் போட்டு, நிவாரணப் பணிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-20)

ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் 12ஆம் தேதி ஏற்பட்ட புயலால் ஏற்பட்ட கோர விபத்தினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட நேரடியாக சென்று பார்த்தார்கள் என்று வெள்ளை அறிக்கையில் கூறப்படவில்லை. நான் அறிந்தவரையில் 30 ஆம் தேதி வரை அவர்கள் நேரடியாகச் சென்று பார்த்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை இரண்டொரு நாட்கள் மற்ற அமைச்சர்களோடு ஏரியல் சர்வே செய்திருக்கலாம். நான் முதலமைச்சர் அவர்களைக் குறை கூற விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்கள் மீது இந்த மாநில மக்கள் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு

உரியவரான முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக உடனடியாகச் சென்று பார்த்திருந்தால் அந்த மக்களுக்கு எந்த அளவுக்கு ஆறுதல் ஏற்பட்டிருக்கும் என்பதோடு மட்டுமல்லாமல் நான் இங்கு பொதுவாகக் கூறிய, நிவாரணப் பணிகளில் ஏற்பட்ட குறைபாடுகளைக் கூட நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம். 12-ம் தேதி ஏற்பட்ட புயலின் காரணமாக சில நாட்கள்தான் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. 19 ஆம் தேதி அளவில், போக்குவரத்து வசதிகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, உடனடியாக முதலமைச்சர் அவர்கள் சென்றிருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழரசுப் பத்திரிகையில் ஒரு படத்தைப் பார்த்தேன். குடியரசுத் தலைவர் அவர்கள் இங்கே வந்தபோது இன்னின்ன இடங்களில் சேதம் ஏற்பட்டது என்பதை முதலமைச்சர் அவர்கள் படத்தில் குயுயரசுத் தலைவருக்குக் காட்டிக் கொண்டிருந்தார். நேரடியாகச் சென்று இடத்தைப் பார்க்காமல் முதலமைச்சர் அவர்கள் எப்படித்தான் இந்தச் சேதங்கள் ஏற்பட்ட இடங்களைக் குடியரசுத் தலைவருக்குக் காண்பித்தார்கள் என்று தெரியவில்லை. நேரடியாகப் பார்த்த பிறகு குடியரசுத் தலைவருக்குப் படத்தில் காட்டினால் மேலும் பயன்தரத்தக்கதாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜனதா கட்சியைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் புயல் நிவாரண வேலைகளுக்காக கிராமங்களில் இருக்கிற யூனிட்டுகள் சிறப்பாகச் செயல்பட்டன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் தலைவர் எல்லாப் பிரதேசங்களுக்கும் சென்று சுற்றிப் பார்த்தார்கள். இயன்ற அளவுக்கு நிவாரணத்திற்காக பல்வேறு பொருள்களும் நிதியும் முதலமைச்சர் அவர்கள் நிதிக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக, இந்த நிவாரணப் பணிக்காக மக்கள் கமிட்டி அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டது. ஆளுநர் அவர்கள் முதல் முதலாக ஒரு மக்கள் கமிட்டியை 23–11–1977 ஆம் நாள் சென்னையில் கூட்டினார்கள். நானும் சென்றிருந்தேன். அங்கே ஆளுநர் அவர்கள் தன்னந்தனியாக இருந்தார். கூட இருக்க வேண்டிய முதலமைச்சர் அவர்கள் இல்லை. அது உண்மையில் வேதனையைக் கொடுத்தது. முக்கியமான அமைச்சர்கள் இல்லை. முன் வரிசை அமைச்சர்கள் இல்லை.





ஏன் முதலமைச்சரும் சில அமைச்சர்களும் வரவில்லை என்பது பற்றிப் பொதுமக்களிடையே பல்வேறு கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. தோளோடு தோள் நின்று துயர் துடைப்புப் பணிகளுக்கு உதவுங்கள் என்று ஆளுநர் அவர்கள் அறைகூவல் விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர்களில் முன் வரிசை, பின்வரிசை என்று இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சில அமைச்சர்கள் அங்கே வந்தார்கள். அதற்காக என் போன்றவர்கள் மகிழ்ச்சியுற்றோம். தமிழரசில் ஆளுநர் அவர்கள் படத்தைக் கூடப் போட்டிருக்கிறார்கள். அதிலும் ஆளுநர் தனியாகத்தான் இருக்கிறார். அமைச்சர்கள் ஆளுநர் அவர்கள் பக்கத்தில் காணப்படவில்லை. இப்பேர்ப்பட்ட காரியங்களில் வேறு ஏதேனும் சங்கடங்கள் இருந்தாலும் அவற்றை எல்லாம் மறந்து செயல்பட்டிருக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக பல்வேறு நபர்கள், கலைஞர்கள் கொடுத்த பணத்தை வாங்குவதற்குக்கூட தயக்கம் காட்டப்பட்டதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்தது. சினிமா நடிகர் ஜெய்சங்கர் நிவாரணப் பணி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. தஞ்சாவூரில் அவர் நிவாரணப் பணி செய்வதற்கு இல்லாமல் அவர் செய்யக்கூடாது என்று அவர் விலக்கப் பட்டதாகவும் செய்திகள் வந்தன. தி.மு.க. விலிருந்து கொடுக்கப்பட்ட நிதியை வாங்க தலைமைச் செயலாளர் மறுத்ததாகவும் கூறப்பட்டது. நேற்றைய தினம் கோவை மாவட்டத்தில் அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து வசூலித்த பணத்தை கலெக்டர் தலைமையிலே ஒரு கூட்டத்தைப் போட்டுக் கொடுப்பதாக இருந்தது, அதற்கு கலெக்டரும் ஒத்துக் கொண்டார். ஆனால் திடீரென்று அவர் அங்கே போகாமல் பணத்தை வாங்கிக்கொள்ள மறுத்ததாகவும் தெரிகிறது. இப்படிப்பட்ட முறைகளை எல்லாம் தவிர்க்கவேண்டும்.

அமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னதாகச் சொல்லும்போது கன்னியாகுமரியில் புயல் இல்லை என்று சொன்னார்கள். அங்கே சேதம் புயலால் மட்டுமல்ல வெள்ளத்தாலும் மழையாலும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே இரண்டு மாதங்களா

ஏற்பட்ட சேதம் அதிகமாக இருக்கிறது. நீர்ப்பாசனப் பகுதிகள், ஏரிகள், குளங்கள் எல்லாம் பாழடைந்து போய் இருக்கின்றன. அதனால் தண்ணீர் விடப்படாமல் பயிர்கள் காய்ந்துபோய் இருக்கின்றன. கால்வாய்களில் எல்லாம் சில்ட் அடைத்துக் கொண்டதால் தண்ணீர் வராத நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் மறுபரிசீலனை செய்து கால்வாய்களை மராமத்து செய்து அங்கே நிவாரணப் பணிகளையும் செய்து கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

THIRU R. UMANATH : Sir, on a point of personal explanation.
நாகப்பட்டினத்தில் கவர்ன்மென்டோடு நாங்களும் ஒரு பகுதியாகவே இருந்து செயல்பட்டோம். அங்கே நடிகர் ஜெய்சங்கர் வந்த போது தடுத்ததாகச் சொன்னார்கள். அப்படியில்லை. நாகப்பட்டினத்தில் நடந்ததை நான் சொல்ல விரும்புகிறேன். அவருடைய பிரைவேட் செக்ரட்டரி அங்கே வந்த போது நாங்கள்தான் அவரை திரு. வஹாப், ரிலிப் ஆப்பரேஷன் ஆபீசரிடம் அழைத்துச்சென்றோம் அவரை. துணிகள் கொடுக்கவேண்டுமென்றால் ஒன்று நகரம் பூராவுக்கும் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் பகுதி பகுதியாக நீங்கள் கொடுத்தால் அவருக்கு புரட்டக்ஷன் கொடுப்பது கஷ்டமாக இருக்கும். அதனால் துணிகளை கொடுப்பதற்கு ஒரு பங்ஷன் வைத்து கொடுக்க அரேஞ்ச் பண்ணிக்கொள்ளாமல், அரசாங்கத்தின் சார்பிலே அங்கங்கே துணி கொடுக்கப்படும்போது தாங்கள் எங்கே கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களோ அந்தக் பகுதியில் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம் என்று கெஜடெட் பி.ஏ. (ரிலிப் ஆப்ரேஷன்ஸ்) அவர்களிடம் சொன்னார்கள், அவரும் பரிசீலனை செய்வதாகச் சொல்லி அவரிடம் சொல்கிறேன் என்று சொன்னார்கள். இதுதான் அங்கே நடந்தது, இதைச் சொல்லவேண்டியது எங்கள் கடமை என்பதால் சொல்கிறோம்.

திரு. தாழை மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு எக்ஸ்ப்ளனேஷன். திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஜெயசங்கர் அங்கே கொடுக்கிறபோது தடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது உண்மை தான். அவர்கள் கொடுக்கும்போது எந்தவிதமான காவல் ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. . . .

. . . . . .





மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்றால், தன்னிலை விளக்கம், அதைத் தரும்போது தாங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை ஆக இருந்தால் தான் சொல்லலாம், அவர் சொல்வதை அடிப்படையாக வைத்து நீங்கள் சொல்கிறீர்கள். அது கூடாது. தயவு செய்து இதோடு முடித்துக் கொள்ளுங்கள்

*திரு என். சங்கரய்யா : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் சம்பந்தமாக வெளியிடப்பட்டு இருக்கிற வெள்ளை அறிக்கை பற்றி என்னுடைய கட்சியின் சார்பாக எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. உமாநாத், திரு. வரதராஜன், திரு பழனிவேல் அவர்களும் ஏற்கனவே பேசியிருக்கக்கூடியவைகளை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்வார்கள் என்று கருதுகிறேன். அதன்னியில் பின் வரும் கருத்துக்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தான் தெரிவிக்க விரும்புகிறேன்.

புயல், வெள்ளம் என்பது தமிழகத்திலே இப்போது ஏற்பட்டு இருக்கக்கூடிய அனுபவங்களை வைத்து ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் யுத்த காலத் தயாரிப்புடன் அரசாங்கத்தினுடைய இயந்திரமும் நிர்வாக அமைப்புக்களும் செயல்படவேண்டியிருக்கிறது என்பதை இந்த அனுபவத்தின் மூலமாக நாம் தெளிவாகத் தெரிந்துக்கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 11-30]

ஆந்திராவிலே தாக்கிய புயலானது சென்னையைக் கடந்துதான், இங்கே தாக்காமல் அங்கு சென்றது. ஆனால் அங்கே ஏற்பட்ட கோரமான விளைவுகளைப் பார்க்கும்போது இப்படிப்பட்ட இயற்கையின் சீற்றங்களை எதிர்த்து மனிதனும், மனிதர்களுடைய அரசாங்கமும் சந்திக்க முழு மூச்சாகத் தயார் நிலையில் இருக்க வேண்டுமென்று இன்றைக்கு நாம் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, கடந்த காலத்திலே இது சம்பந்தமாக எந்தவிதமான நெறிகள் மாநில அரசாங்க அலுவலர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் வரக்கூடிய காலங்களில் இந்த மூன்று மாதங்களில், எவ்வளவு கடுமையான விளைவுகள் ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளிக்க அரசாங்கத்தின் ஏற்பாடு இருக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே நடைபெற்ற புயல் வெள்ள நிவாரண வேலைகளில் மற்ற அரசியல் கட்சிகளோடும், அரசாங்கத்தோடும் சேர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தஞ்சாவூர் மாவட்டத்திலே நாகப்பட்டினம் ஏரியாவிலும், அதைப் போல வேடசந்தூர் பிரதேசத்திலேயும் தங்களுக்கு இயன்ற அளவில் சிரமப்பட்டுச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போல, அரசாங்கம் எதிர்பார்த்ததைப்போல, இந்தப் புயல் நிவாரணப் பணியில் பண வசூல் செய்து கொடுக்கும் விஷயத்தில் மாநில மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானது தன் கிளைகளுக்குக் கட்டளையிட்டு அவர்கள் அதனை மேற்கொண்டார்கள்.

நாகைத் தொகுதி உறுப்பினர் உமாநாத் அவர்கள் அந்தத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில் அங்கு, செய்த பணியும், அதைப்போல திண்டுக்கல் பகுதியில் புயல் நிவாரண சர்வ கட்சித் தலைவர் என்ற முறையில் வரதராசன் அவர்களும் செய்த வேலைகளும் ஏற்கனவே மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் நன்றாகத் தெரிந்திருக்கும் விஷயங்களாகும்.

அதைப்போல பொதுமக்களும், இந்த நிவாரண நிதிக்கு வசூல் செய்யப்படும் காலத்தில் அவர்கள் மிகுந்த அனுதாபத்தோடு ஏராளமான உதவிகளைச் செய்திருக்கிறார்கள். அதன்காரணமாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புயல் வெள்ள நிவாரண நிதிக்கு ஏராளமான பணம் சிறிது காலத்திலேயே சேர்ந்திருக்கிறது என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

இந்தப் புயல் நிவாரணப் பணியிலே சர்வ கட்சியினரின் கூட்டத்தை ஒருவேளை கவர்னர் அவர்கள் கூட்டிய கூட்டத்திற்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூட்டியிருந்தால் மேலும் சிறப்பான முறையிலே இந்தப் புயல் நிவாரணப் பணிகளை நாம் நிறைவேற்றத் திட்டமிட்டிருக்க முடியும் என்று கருதுகிறேன். காரணம் என்னவென்றால், கவர்னர் அவர்கள் அழைத்த கூட்டத்திலே கட்சிகள் அல்லாமல் ஏராளமான மற்றவர்களும் வந்திருந்ததால் தெளிவாக அரசியல் கட்சிகளின் சார்பில் கொடுக்கப்படக்கூடிய யோசனைகளைப் பற்றி அங்கே பேசுவதற்கு வாய்ப்பில்லாமற் போய்விட்டது. அரசியல் கட்சிகள்தான், சில தனி நபர்கள் இருந்தாலும், ஏராளமான ஊழியர்களைக் கொண்டு பணியாற்றும் பொறுப்பில் இருக்கின்றன.





ஆகவே, மாநில அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டிய பிறகுத்தான் எல்லாக் கட்சிகளின் சார்பிலும் கலந்துகொண்டு, நிவாரணக்கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அது முதலில் கூட்டப்பட்டிருந்தால் இன்னும் சிறப்பான முறையில் இந்தக் காரியத்தைச் செய்திருக்க முடியும். அதைப்பற்றி எங்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் அவர்கள் எல்லாக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு நிவாரணக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற அறிக்கையை வெளியிட்டார்கள். அவர்களும் இப்போழுது கமிட்டியிலே இருக்கிறார்கள். அந்த அனுபவங்களை எடுத்துக்கொண்டு, ஏற்படக்கூடிய இன்னல்களைப் பொறுத்தவரையில் நாம் அனைவரும், எந்த அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்தமாதிரி இயற்கையின் சீற்றம் ஏற்படும் காலத்திலே நிவாரணப் பணியிலே எந்தவிதமான நிபந்தனையும் இன்றி, தயக்கமும் இன்றிப் பணியாற்ற ஒரு பெரிய அனுபவத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வெள்ளை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது, ஹெலிகாப்டர்கள், காற்றடித்து இயங்கும் போட்டுகள், இரா அதாவது இன்பிலேட்டபிள் போட்ஸ் ஆகியவை இராணுவத்திடமிருந்து கிடைத்தபிறகுதான் அவைகளைப் பயன்படுத்த முடிந்தது என்று இந்த வெள்ளை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாலரைக் கோடி மக்களுக்கும் அதிகமாக வாழும் ஒரு மாநிலத்தில், அதுவும் இந்தச் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இந்தச் சீற்றங்கள் ஏற்படுவது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்று. எனவே மாநில அரசாங்கமே சில ஹெலிகாப்டர்களையும், இன்பிலேட்டபிள் போட்ஸ், அதாவது காற்றடித்து இயங்கும் படகுகளைவாங்கி வைத்துக் கொள்வது நல்லது என்ற ஆலோசனையை நான் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், ஒவ்வொரு சமயமும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வரும்பொழுது இராணுவத்திடம் கேட்டு அவர்கள் கொடுக்கும் இடைக்காலம் ஒருசில நாட்களாக இருந்

தானும், அவைகள் முக்கியமான மிகவும் அவசியமான நாட்களாக இருப்பதால் இப்படிப்பட்ட ஹெலிகாப்டர்களையும், காற்றடித்து இயங்கும் படகுகளையும் நம்முடைய மாநில அரசாங்கம் வைத்திருந்தால் உடனடியாக நாமே நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போல், இன்று மறைந்தவர்களுடைய குடும்பங்களைப் பொறுத்தவரை—மறைந்திருக்கக்கூடியவர்கள் 196 பேர்கள், அவர்கள் இறந்தவர்களாகத்தான் கருதப்பட வேண்டும். அவ்வாறு கருதப்பட்டு, அவர்கள் அனைவருக்கும் தலா ரூ. 2,000 வரை, அவர்களது குடும்பங்களுக்கு நிவாரண நிதியாகக் கொடுக்கவேண்டுமென்ற கருத்தை நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். காரணம், இன்று சாதாரணமாக ஒரு ரெயில் விபத்திலேயோ அல்லது மோட்டார் போக்குவரத்து விபத்திலேயோ ஒரு சிறுவன் காயமடைந்தால் அல்லது உயிரிழந்திருந்தால் அவன் வாழ்ந்திருந்தால், அவனால் அக்குடும்பத்திற்கு எவ்வளவு வருமானம் கிடைத்திருக்கும் என்ற அடிப்படையிலே, நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது. அதே போல், இங்கும் கொடுக்கப்படவேண்டும்.

அப்படியல்லாமல், இங்கே பிரட்வின்னர்ஸ்க்கு மட்டும் தான், வேலை செய்து வருமானம் ஈட்டியவர்களுக்கு மட்டும்தான் நிவாரண நிதி கொடுக்கப்படும் என்றால், நமது நாட்டில், விவசாயம் பிரதான தொழில் என்ற வகையில், ஒவ்வொரு விவசாயியும், தன் பிள்ளையையும் மனைவியையும் அத்தொழிலில் ஈடுபடுத்துகிறான். அவர்கள் எல்லாம் சேர்ந்து, சம்பாதித்துத்தான் குடும்பத்தை நடத்துகிறார்கள். ஆகவே, இதிலே, பிரட்வின்னர்ஸ் என்று பார்க்காமல், ஒவ்வொருவருக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கு, தலா ரூ. 2,000 கொடுக்கவேண்டும். அந்தத் தொகையானது குறைந்தபட்சத் தொகை என்று நாங்கள் கருதுகிறோம். நாம் ஏராளமான ரூபாயைச் செலவழிக்கிற நேரத்திலே, அவர்களுக்கு ரூ. 2,000 வீதம் கொடுத்தால், அது மிகவும் நன்றாக இருக்கும். திருப்திகரமாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.



நான் பத்திரிகையிலே படித்தது, தென்னார்காடு மாவட்டத்திலே, ஓரிடத்திலே இரண்டு பெண்களைக் காப்பாற்ற முயற்சித்து, 6 இளைஞர்கள், பெண்களைக் காப்பாற்றிய பிறகு, உயிரிழந்து விட்டார்கள் என்ற சோகச் செய்தியைப் பத்திரிகையிலே படித்தேன். அவர்களெல்லாம் சாதாரண மரணம் அடையவில்லை, யுத்த காலத்திலே மரணம் அடைந்த வீரர்களைப்போல் இறந்திருக்கிறார்கள். அப்படி மற்றவர்கள் உயிரைக் காப்பாற்ற உயிரிழந்தவர்களுக்கு யுத்த கால அடிப்படையிலே, அவர்களுடைய குடும்பங்களுக்கு, இந்த நிவாரண உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் புயல், மழை, வெள்ளத்தால், 4,46,000 குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே, எங்கள் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல், தஞ்சை மாவட்டத்திலேதான் உதவித் தொகை, முழுமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயும், சில பகுதிகளிலே, குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மற்றைய இடங்களிலே, வெள்ளம், புயல் காரணமாக, பாதிக்கப்பட்ட குடிசைகளை இழந்தவர்களுக்குக் குறைத்துத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற பகுதிகளில் சில இடங்களிலே, ரூ. 100 ரூ. 80 கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசங்களை நீக்கி, தமிழ் மாநிலம் முழுவதும் புயல், வெள்ளம், மழை ஆகிய காரணங்களால், பாதிக்கப்பட்ட 4,40,000 குடிசைகளைப் பொறுத்தவரை அரசாங்கம் ரூ. 200—ஐ மானியமாகவும், அதே நேரத்திலே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இந்த வெள்ளை அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல், மத்திய அரசிடம் குடிசைவாசிகளுக்கு ரூ. 300 கடன் உதவி கிடைக்க வற்புறுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், அதையும் அவசியம் பெற்று தர வேண்டும். காரணம், ரூ. 200-க்குள்ளே யாரும் குடிசைகளைப் புதுப்பித்துக் கட்ட முடியாது. இன்றைக்கிருக்கிற விலைவாசியில், அந்தத் தொகையில், அவர்களால் நிச்சயம் புதுக் குடிசைகளைக் கட்ட முடியாது. ஆகவே, நம்முடைய அரசாங்கம், இந்தச் சட்டப் பேரவை ஆதரவோடு, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி, ரூ. 300 கடன் உதவியும் கிடைக்கச் செய்தால், அந்த வீடிழந்தவர்களுக்கு உதவியாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

அந்த 4,40,000 வீடுகளை இழந்தவர்களில் பெரும்பாலான வர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், விவசாயத் தொழிலாளிகள், ஏழை விவசாயிகள், ஆகவே, ஏதாவது, காரணத்தை முன்னிட்டு, கொடுக்கப்படாததையும் கவனிக்க, மறுபடியும் கணக்கெடுத்து, கொடுக்க உத்தேசித்துள்ள ரூ. 200 மானியத்தோடு, ரூ. 300 கடனையும் கொடுக்க, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, மாநிலம் முழுவதும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுத்தால், அவர்களால் அந்தத் தொல்லைகளில் இருந்து மீளமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*ரோடுகள் போடுவது, மற்றும் பொதுப் பணி வேலைகளைச் செய்யக்கூடிய நேரத்தில், கான்ட்ராக்ட் விடாமல், இந்த நலிந்த மக்களை, வேலையில்லாமலிருப்பவர்களை அதில் ஈடுபடுத்தி, இந்தக் காரியங்களைச் செய்தால், நிச்சயமாக அந்த ரோடுகளையும் நன்கு அமைக்க முடியும், பாசன வசதிகளையும் உண்டாக்க முடியும். கவர்னர் கூட்டிய கூட்டத்திலேயே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த யோசனையைத் தான் நாங்கள் அன்றைக்குத் தெரிவித்தோம். வேலையில்லாமலிருக்கக்கூடிய ஏழை விவசாயிகளைக் கொண்டும், தொழிலாளிகளைக் கொண்டும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையிலும், ஒழுங்கான முறையிலே பொதுப் பணித் துறை வேலைகளைச் செய்யவும், பொதுப் பணித் துறை மூலமாக போடப்படுகிற ரோடுகளை, பாசன வசதிகளைச் செய்ய முடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொரு முக்கியமான பிரச்னை, கைத்தறி நெசவாளர் பற்றிய பிரச்னை. அவர்களுக்குக் கடன் கொடுக்கவும், நிவாரணம் கொடுக்கவும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மதுரையிலே இருக்கிற கூட்டுறவு கைத்தறி சங்கங்களிலே இருந்து வந்திருக்கக்கூடிய கடிதங்களிலேயிருந்து, பார்த்தால், இந்த ஆண்டு அரசாங்கம் வழக்கமாகக் கொடுக்கும் ரிபேட் தொகையை 10 சதவீதமாகக் குறைத்துள்ளதன் காரணமாக, மதுரை மாவட்டத்திலே மட்டும் ஒரு பிரதேசத்திலே மட்டும் ரூ. 1 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள கைத்தறி துணிகள் விற்கவில்லையென்று அவர்கள் வருத்தத்தோடு கடிதம் எழுதி இருக்கிறார்கள்.





ஆகவே, மற்ற பிரச்னைகள் எப்படியிருந்தாலும், இன்று தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் புயல், வெள்ள சூழ்நிலையிலே, இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் துயரிலிருந்து விடுபட, 14-ந் தேதி பொங்கல் வரை கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும்போது, 10 சதவீதம் தான் ரிபேட் என்று அரசு அறிவித்திருக்கிறது—அந்த ரிபேட் தொகையை 20 சதவீதமாக உயர்த்த அரசாங்கம் முன் வந்தால், இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கும், தமிழ் நாடு முழுவதும், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பெரும் நிவாரணமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

கச்சாப்பொருட்களுக்கு ரிபேட் தரவேண்டும் என்று அரசு யோசனை செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது பின்னாலே வரக்கூடிய விஷயம். இன்றைக்குக் ரிபேட் தொகையைக் குறைத்ததால் நடைமுறையிலே தேங்கி இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ரிபேட் தொகையை பொங்கல் தினம் வரை 20 சதவீதம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு கம்யூனிடி ஷெல்டர்கள் கட்டி, மக்களைப் பாதுகாப்பான இடங்களில் வைப்பதற்கு ஒரு லட்சம், 2 லட்சம் செலவிலே கட்டப்படும் என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதே நேரத்தில், தஞ்சை மாவட்ட விவசாயிகள் கூறினார்கள். அதைப் பள்ளிக்கூடங்களாக பயன்படுத்தலாம். பின்னர் தேவைப்படும்போது பாதுகாப்பான இடங்களாகவும் பயன்படுத்தலாம் என்று சொன்னார்கள்.

வெள்ளை அறிக்கையிலே தாராள மனமுள்ளவர்கள் நன்கொடையாக கொடுக்குமாறு கேட்டிருக்கிறீர்கள். அவர்கள் கொடுப்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் கொடுக்காவிட்டால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அடுத்த ஆண்டு நவம்பர், அக்டோபர் மாதத்திற்குள்ளாக தஞ்சை மாவட்டத்திலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் அது பெரிய முதலீடாக இருந்தாலும், வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கின்ற மக்களைப் பாதுகாக்கும் பெருமை அரசாங்கத்திற்கு ஏற்படும். அப்படிப்பட்ட விசேஷ ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மத்திய சர்க்காரிடத்திலே நாம் 128 கோடி ரூபாய் கேட்டோம். ஆனால் அவர்கள் கொடுத்ததோ 29·39 கோடி. அதாவது $\frac{1}{4}$ பாகம்தான் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி தெளிவாக கூறுகிறது என்னவென்றால், மாநில சட்டசபையிலே ஒரு தீர்மானம் மூலம் அந்த 128 கோடி ரூபாயும் பிளானுக்கு வெளியிலே, சாதாரண ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வெளியிலே கொடுக்க, இந்த மாநில சட்டசபையிலே ஒருதீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். இந்த மாநிலத்திலே உள்ள அரசியல் கட்சிகள் அத்தனையும் தங்களது கட்சியின் பொதுக் கூட்டங்களில் மத்திய அரசு 128 கோடி ரூபாய்கள் தர வேண்டுமென்று தீர்மானத்தைப் போட்டு மக்கள் இயக்கமாக அதை நடத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓரளவாவது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினால்தான் மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் உதவ வாய்ப்பிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள் பாராளுமன்றத்திலே பேசும்போது, 1962ம் ஆண்டிலிருந்து 'வார் ரிஸ்க் இன்சூரன்ஸ்' சம்பந்தமாக தொழில்களிலிருந்து பிடிக்கப்பட்ட தொகை மூவாயிரம், நாலாயிரம் கோடி ரூபாய்கள் இருக்கும் என்றும், அதிலிருந்து நிவாரணம் கொடுக்கலாம் என்றும் கூறினார்கள். அதற்கு மத்திய சர்க்காரிடத்திலே இருந்து எந்த விதமான எதிர்ப்பும் வரவில்லை. ஆகையால் அந்தப் பணம் இருக்கிறது என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. தோழர் பி. இராமமூர்த்தியின் யோசனைக்கு யாரும் மறுப்பு தெரிவிக்கவில்லை. ஆகவே, அந்த 128 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

மற்றொரு பிரச்னை இப்போது ஏன் இந்த—நிலைமையிலே இருக்கிறோம். மாநிலங்களும் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். ஆகவே, இது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இல்லை. மாநிலங்களுக்குக் குறைந்த வருமானங்கள்தான் இருக்கிறது என்ற சூழ்நிலையிலே இப்படிப்பட்ட நிலைமை உள்ளது. அதைத் தீர்க்கக்கூடிய பொறுப்பும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. ஆகவே நம்முடைய நிதி வசதிகளை அதிகப்படுத்த நா தொடர்ந்து பாடுபட வேண்டியவர்களாக



இருக்கிறோம். இந்த நிதியை 128 கோடி ரூபாய் அவசியம் கிடைக்க வேண்டுமென்பதற்கு தமிழக அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, இந்த வெள்ளை அறிக்கையின் கடைசியிலே சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதாவது பல்வேறு விதமான கருவிகள் தேவைப்படுகின்றன. வெள்ளத்தை அறிவதற்கான பலவிதமான ரேடியோ கருவிகள், வெள்ளம் எவ்வளவு ஓடுகிறது என்பதை அளவிட தேவையான கருவிகளும் தேவைப்படுகின்றன. அதற்கெல்லாம் மத்திய அரசு உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவை மிகவும் அவசியம். மத்திய சர்க்கார் இவற்றை நாம் வாங்க உதவ வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த வேண்டும். மத்திய சர்க்கார் ஒட்டு மொத்தமாக கொடுக்கக் கூடிய அந்தத் தொகையை வைத்துக்கொண்டு நாம் பல அபிவிருத்தியான கருவிகளை வாங்க வேண்டியது அவசர அவசியமாகும். அடுத்த ஆண்டுக்குள் மேலும் இந்த "ராடார் சிஸ்டம்", இப்படிப்பட்ட கருவிகளின் குறைகள் காரணமாக பெருத்த சேதம் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டு விடாமல், அதன் விளைவாக நமக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படாமல், அதற்கு முன்னேயே மாநில அரசாங்கத்தினால் இப்படிப்பட்ட கருவிகள் வாங்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய பிரச்னையை நாங்கள் எடுத்துக் கூறி இருக்கிறோம். நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். குத்தகைதாரர்கள் இந்த வெள்ளம், புயலினால் தங்கள் சாகுபடி நிலங்களை இழந்துவிடுகிற அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நாம் ஏற்கெனவே 1384, 1385 பசலியில் தஞ்சை மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்ட காரணத்தினால், சாகுபடிக்குத் தண்ணீர் கிடைக்காத காரணத்தினால், இரண்டாண்டுகளுக்கு குத்தகை கொடுக்க வேண்டாமென்று உத்திரவிடப்பட்டது. அதனால் ஆயிரக் கணக்கான வழக்குகள் தஞ்சை மாவட்டத்தில் இருந்து கொண்டு இருக்கின்றன. இந்த வழக்குகளை விசாரிப்பதற்காகவே 4 ரெவினியூ கோர்ட்டுகள் ஏற்படுத்தப்

பட்டு, அவற்றில், பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இருந்து கொண்டு இருக்கின்றன. நில வெளியேற்றத் தடுப்புச் சட்டம், கடன் ஒத்திவைப்புச் சட்டம் ஆகியவற்றின் மூலம் குத்தகை விவசாயிகளுக்கு ஓரளவிற்கு நிவாரணம் கிடைத்தது. 16—1—78 வரையில் அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது. 16—1—78-க்குப் பிறகு என்ன நிலைமை. 16—1—78-க்குப் பிறகு இந்தக் கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தை நீட்டிக்கவில்லை. இந்தச் சட்டத்தின் மூலம் இந்தக் குத்தகை விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்புக் கிடைக்கிறது. இரண்டாண்டுகளுக்கு பிறகு ரெவினியூ கோர்ட் மூலம் இந்த விவசாயிகள் வெளியேற்றப்படுகிற ஆபத்து இருக்கிறது. ரெவினியூ கோர்ட் மூடப்பட்டிருப்பதால் சிவில் கோர்ட்டுகள் மூலம் இவர்களை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பழைய குத்தகை பாக்கிக்காக அவர்களை வெளியேற்றுகிற அபாயம் இருக்கிறது. சிவில் கோர்ட்டுகளில் டிகிரி வாங்கி நிலத்தை விட்டு வெளியேற்றுகிற அபாயம் இருக்கிறது. அதற்கு இப்போது தடை இல்லை. பழைய பாக்கியை வசூல் செய்யத் தடை இல்லை. கடன் ஒத்திவைப்புச் சட்டத்தினால் கிடைத்த நன்மை இதனால் பாதிக்கப்படுகிறது. எனவே 16—1—1978க்குப் பிறகும் இந்த குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கிடைக்கச் செய்யும் விதத்தில் இந்தச் சட்டத்தை நீட்டிக்க அரசு வழி செய்ய வேண்டும். சில இடங்களில் குத்தகை பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சிவில் கோர்ட்டுகளில் டிகிரி வாங்கி குத்தகைதாரர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுகிற ஆபத்து இருக்கிறது.

1386-ஆம் பசலியில் வறட்சி இருந்த காரணத்தினால் நாம் நிலவரி வசூலை ஒத்தி வைத்தோம். அந்த நிலைமை இருக்கும் போது இப்போது குத்தகை கொடுக்கவில்லை என்று ரெவின்யூ கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்கிற அபாயம் வந்திருக்கிறது. இப்போது வெள்ளம் வந்து விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தக் கோர்ட்டுகளில் நடவடிக்கைகளை தற்காலிகமாக ஒத்தி வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பாக்கிகளை ரத்துச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் என்.ஜி.ஓ.-க்கள் வெள்ள நிவாரணக் கடன் அவர்களுக்கு வேண்டுமென்று கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்து இருக்கிறது. ஆசிரியர்கள் போன்றவர்கள் இந்தப் பகுதியில் புயல், வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் கடினமாக வேலை செய்தவர்கள், இரவு, பகல் பாராமல் பணி செய்தார்கள். அவர்களுக்கும் இந்த நிவாரணம் கிடைப்பதற்கு ஓரளவு வழி செய்தால் பெரும் நன்மையாக இருக்கும். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்





கொடிக்கால் ஒவ்வொன்றிலும் ஒரு ஏக்கராவிற்கு 10 விவசாயிகள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஆண்டு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஒட்டு மொத்தமாக இந்த அரசாங்கம் இந்தப் புயல், வெள்ள நிவாரண ஏற்பாடுகளில் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை மிகவும் பாராட்டுவதோடு அரசாங்கம் நான் தெரிவித்த யோசனைகளை பரிசீலித்துத் தக்க முறையில் வெள்ள நிவாரணப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-50]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த புயல் மழையின் காரணமாக தமிழ் நாட்டில் எந்த அளவுக்கு மிகப் பெரிய சேதங்கள் ஏற்பட்டன என்பதைப் பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் வைகையின் கீழ் பகுதியில் மிகப் பெரிய சேதங்கள் ஏற்பட்டதன் காரணமாக எங்கே பார்த்தாலும் நிலங்கள் கூட தெரியாத அளவுக்கு அங்கே மண் அடித்துப் போய் இருந்தது என்பதை நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு காளிமுத்து அவர்களும், மதிப்பிற்குரிய மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்களும் நேரிடையாக வந்து அந்த மக்களுக்கு ஆறுதல் சொல்லி எந்த அளவுக்கு நிவாரண வேலைகளை நடத்த வேண்டுமோ அந்த அளவுக்கு அவர்கள் நிவாரண வேலைகளை துவக்கி வைத்தார்கள் என்று நாங்கள் எல்லாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் இன்னும் சில வீடுகள் விடுதலாகியிருக்கிறது. சரியானபடி கணக்கு எடுக்கப்படாததன் காரணமாக, ஆரம்பத்தில் வேகமாக எடுத்த காரணத்தால் பல வீடுகள் விடுதலாகியிருக்கின்றன. இன்னும் சில நாட்களுக்குப் பின்னால் ஊறிப் போனதன் காரணமாக அந்த வீடுகள் பல நாட்களுக்கு பின்னால் விழுந்திருக்கிறது. அந்த வீடுகள் எல்லாம் இன்று வரையில் கணக்கிலே வரவில்லை. இன்றைக்கு அந்தப் பகுதியிலே ஆர்ப்பாட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்

கும் பார்க்கலாம், இதே தஞ்சையிலே இன்றைக்கு நோட் டீஸ் அடித்துக் கூட ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருக் கிறார்கள்.

அதே போல பரமக்குடி டவுனிலே கூட பல வீடுகள் விடுதலாகி இருக்கின்றன. இந்த வீடுகள் கணக்கிலே சேர வில்லை. இன்றைக்கு பரமக்குடியில் சண்முகத்தம்மாள் தலைமையிலே நூற்றுக் கணக்கான மாதர் சங்கத்தினர் அந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அப்படி சேர்க்கப்படாததன் காரணமாக, நிவாரணம் கிடைக்காத தன் காரணமாக மிகப் பெரிய போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆகையால் இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அரசு ஆரம்பத்தில் எடுத்த நட வடிக்கைகளைப் பற்றி நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அரசுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் அவசியத் தில் இருக்கிறேன். எங்களுக்கெல்லாம் தெரியும். கடற் கரை ஓரத்தில் புயல் அடித்த அன்று இரவு நான் அங்கே இருந்தேன். கலெக்டர் அவர்கள் வயர்லஸ் மூலமாக எந்தெந்த அதிகாரிகள் எந்தெந்தப் பகுதிக்கு செல்ல வேண்டுமென்றும் மருந்துகளோடு செல்ல வேண்டுமென்றும் உத்தரவிட, அவர்கள் செல்லக் கூடிய காலத்திலே தங்க ளுடைய குடும்பத்தையும் பாராமல், தங்களுடைய வாழ்வை யும் பாராமல், அவர்களுடைய உயிருக்கு ஆபத்து என்பதைக் கூட பார்க்காமல் அந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளை ஆர்வத்தோடு செய்து முடித்தார்கள்.

இந்த அளவுக்கு இந்த அரசானது இந்த மக்களுக்கு செய்திருக்கிற அதே நேரத்தில் ஒரு சில பேர்கள் நிவாரணப் பணிகளுக்கு வராமல் போராட்டத்தை, தனிப்பட்ட முறை யில், தனிப்பட்டவர்களுக்கு எதிராக போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை மிகுந்த வருத்தத் துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் போராட்டம் நடக்கக் கூடிய காலத்திலே அத்தனை மக்களும் உதவி வேண் டும், உதவி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கக் கூடிய காலத்திலே எந்த உதவியும் செய்ய முடியாத நிலையில், குறிப்பாக இராமநாதபுரம் ஜில்லாவில் அந்தப் பகுதியிலுள்ள அந்த நண்பர்கள் எங்களோடு ஒத்துழைக்காதது மட்டு மல்ல, எங்களோடு வராதது மட்டுமல்ல யாருக்காகவோ



போராட்டத்தை வேறு திசையில் நடத்திக் கொண்டிருந் தார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

அது மட்டுமல்ல, வைகையில் பார்த்தோமேயானால் கடுமையான வெள்ளம். என்றைக்குமே நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் வைகை பாழ் ஆறு என்றும், தண்ணீர் வராது என்றும். ஆனால் தொடர்ந்தார்போல் 40 நாட்கள் வைகையிலே தண்ணீர் வந்ததன் காரணமாக அங்கே கீழ்ப்பகுதியாக இருக்கக் கூடிய போகளூர், இளையான் குடி பஞ்சாயத்து யூனியன் பகுதியிலே கீழ்மடை, மேல்மடை புக்குளம், சித்தனேந்தல், சப்பாணியேந்தல் அத்தனையும் அழிக்கப்பட்டன என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அழிக்கப்பட்டது மட்டுமல்ல, அந்த கிராமத்து மக்கள் எல்லாம் காலி செய்யப்பட்டு, பள்ளிக் கூடங்களில் பல வாரங்கள் தங்கி இருந்தார்கள்.

அது மட்டுமல்ல, மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. ராமச் சந்திரன் அவர்கள் வந்தபோதுதான் இராமநாதபுரத்திற்கும் ஆர்.எஸ். மங்கலத்திற்கும் ரோடு தொடர்பு ஏற்பட்டது. ஆர்.எஸ். மங்கத்லத்திலிருந்து தேவகோட்டைக்கு அந்தப் பாதையில் தண்ணீர் வரும்போது போதிய பாலங்கள்இல்லாத காரணத்திஞல் தொடர்ந்து 26 நாட்கள் போட்களில் செல்ல வேண்டிய நிலை இருந்தது. நாங்கள் டி.டி.ஸி. மீட்டிங்கில் எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் கூட கேட்கப்படவில்லை. எந்தெந்தப் பகுதிகளில் வெள்ளம் வரும் என்று புயல், வெள்ளம் கோடிட்டுக்காட்டியிருக்கிறது. அந்தப் பகுதிகளில் சரியானமுறையில் வேண்டிய இடங்களில் பாலங்கள் அமைத் துக் கொடுக்கவேண்டும் என்று சொன்னபோது கேட்காத ரணத்திஞல் இவ்வளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆர். எஸ். மங்கலத்தில் கண்மாய்களின் போக்கு, 560 அடி அகலத்தில் இருக்கிறது. அங்கு சரிவர வடி கால்கள் அமைக்காததன் காரணமாக பெரும் தண்ணீர் வந்தபோது விளைந்த நிலங்கள்கூட அடித்துச் செல்லப்பட் டிருக்கின்றன. பொதுப்பணித் துறை இலாகாவினர் தொடர்ச்சியாக போதிய நடவடிக்கைகள் எடுக்காததன் காரணமாகத்தான் பெரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்போது புல் டோஸர்கள் வைத்து சுத்தப்படுத்தவேண்டிய அளவிற்கு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டபோது ஏன் இப்படி நடந்

திருக்கிறது என்று கேட்டபோது அதிகாரிகளினால் பதில் சொல்லமுடியாத அளவிற்கு ஒரு பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட பெரிய அளவிற்கான சேதங்களுக்கு நிவாரணம் காண வேண்டும். குறிப்பாக அங்கு உயிர்சேதம் அதிகம் ஏற்படாவிட்டாலும் மிகப் பெரிய அழிவு ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலேயே இராமநாதபுரம் ஜில்லாதான் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அங்குள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்.)

மத்திய அரசாங்கம் இன்று 34 கோடி ரூபாய் அளவிற்குத்தான் கொடுத்திருக்கிறது. இந்த 34 கோடி ரூபாய் என்பது கடலில் கரைத்த காயம்மாதிரித்தான். கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 200 கோடி ரூபாய் அளவிற்கு சேதங்கள் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த 200 கோடி ரூபாய் கொடுக்கக்கூடிய அளவிற்கான ஏற்பாட்டை அவசியம் மத்திய சர்க்கார் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் எங்கள் கட்சி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு எமனேஸ்வரத்தில் ஒரு ஆர்.ஐ. தவறாக ரூ. 60-ல் ரூ. 20 எடுத்துக்கொண்டதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அப்படி நடவடிக்கைகள் எடுத்தாலும் கூட இங்கிருக்கக்கூடியவர்கள் அவருக்கு ஆதரவாக உத்தரவு போட்டு மேல் நடவடிக்கைகள் எடுத்து உடனடியாக அவரை வேலையில் அமர்த்துங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இங்கு செகரட்டேரியேட்டில் அவருக்கு ஆள் இருந்து அவர்கள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த ஆர்.ஐ. தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தொடர்ச்சியாக ஊழல்மயமான ஒரு நிலைமை ற்பட்டு கிட்டத்தட்ட ஏழரை ஆண்டு ஊழல், ஊழல் என்று ஒரு நிலைமை ஏற்பட்டு அந்த ஊழலை ஒழிக்கவேண்டும் என்ற நிலையில் நடவடிக்கைகள் எடுக்கும்போது, அது ஓரளவு ஒழிந்துகொண்டிருக்கும்போது இன்றையதினம் சரியானபடி நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் தொடர்ச்சியாக இன்றும் ஊழல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.





சர்க்காரியா கமிஷன் என்னவானது? முடிவு என்னவானது? ஏன் அவர்கள் மேல் நடவடிக்கைகள் எடுக்கவில்லை? நிலைமை என்ன என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்போது, சரியான நடவடிக்கைகள் எடுத்து இந்த * * * * ஒழித்துக்கட்டினாலொழிய தமிழ்நாடு நிச்சயமாக சீர்திருத்தம் அடையமுடியாது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) கைத்தறியாளர்களுக்கு அதிகமான உதவி செய்யவேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதிகப் பொருள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று பரமக்குடி போன்ற இடங்களில் அதிகப்படியான நிவாரணம் கொடுக்கவேண்டிய ஒருநிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த புயல், வெள்ள நிலையை கணக்கில் எடுத்து கைத்தறியாளர்களுக்கு எந்தளவிற்குஉதவி செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00.]

கடைசியாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இதை நான் நேரடியாக மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். 1971—72ஆம் ஆண்டு மினிமம் சார்ஜ் கட்டவில்லை என்ற காரணத்திற்காக .. .. .. ..

திரு. பெ. சு. திருவேங்கடம்: பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, தாங்கள் இந்த சபையில் உபயோகிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கின்ற வார்த்தையை மீண்டும் உறுப்பினர் அவர்கள் உபயோகிப்பது முறை தானா என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த வார்த்தை?

திரு. பெ. சு. திருவேங்கடம்: * * * என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார். .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வாக்கியத்தைப் பார்த்து விட்டு சொல்லுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. செ. சிவசாமி : இப்படிப்பட்டவர்களிடமிருந்து நாட்டை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கூறியதில் எந்தவிதமான தவறும் இல்லை.

மேலும் நான் சொல்ல வந்தது, மின் கட்டணம் கட்டவில்லை என்ற காரணத்திற்காக சொத்து ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதாவது மூன்றும் தேதி கடைசி நாள் என்று சொல்லி அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை இந்த கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் அந்த விவசாயினுடைய சொத்து ஜப்திக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியிலுள்ள அந்த விவசாயியின் பெயர் திரு. பூ. சுப்பிரமணியன் என்பது. மின் கட்டணம் கட்டவில்லை என்பதற்காக இந்த நேரத்தில் இதுபோன்ற ஜப்தி நடவடிக்கைகள் எடுப்பது சரியில்லை. அதை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

## (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் கீழ்க் கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| 3–1–1978 (செவ்வாய்) | ஏற்கெனவே அறிவித்தபடி. |
| 4–1–1978 (புதன்) | காலை 9 மணி முதல் 1-30 மணி வரை— அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். |
| 5–1–1978 (வியாழன்) | மாலை 4 மணி முதல் 7 மணி வரை— அரசினர் சட்ட முன்வடிவுகள், இதர அரசினர் அலுவல்கள். |





இந்த இரண்டு நாட்களிலும் கேள்வி நேரம் இல்லை.

| | |
|---|---|
| 6–1–1978 (வெள்ளி) | |
| 7–1–1978 (சனி) | |
| 8–1–1978 (ஞாயிறு) | ஏற்கெனவே அறிவித்துள்ளபடி. |
| 9–1–1978 (திங்கள்) | |
| 10–1 1978 (செவ்வாய்) | |

இன்றைய விவாதத்தின் இறுதியாக எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு 45 நிமிட நேரமும், அவை முன்னவர் அவர்களுக்கு 45 நிமிட நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இருவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## 9. புயல், வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

*திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான புயலும் வரலாறு காணாத அளவுக்கு வந்த வெள்ளமும் ஏற்படுத்திய சேதத்தை, தமிழகத்திற்கு ஏற்பட்ட சேதத்தை, விளக்கமாகத் தெரிவிக்கின்ற அறிக்கையை அரசு வழங்கியிருக்கிறது. அதன்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு என் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டு மக்கள், ஐந்தாண்டு அல்லது பத்தாண்டுக் காலம் என்னும் அளவு காலங்களுக்கிடையே, அடிக்கடி புயலாலோ அல்லது வெள்ளத்தாலோ அல்லது வறட்சியாலோ பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகளுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகி வருவது என்பது வழக்கமாக இருந்து வருகிற ஒன்று ; என்றாலும் கூட, கடந்த ஆண்டு ஏற்பட்ட புயலும், அந்தப் புயல் ஏற்படுவதற்கு முன் ஒரு மாத காலமாகத் தமிழ் நாடு முழுவதும் பரவலாகப் பெய்த மழையும், அதனால் ஏற்பட்ட சூழ்நிலையும், அதன் பின்

[திரு. க. அன்பழகன்] [1978 சனவரி 2

திடீரென்று ஏற்பட்ட பெரு மழையின் காரணமாக ஏற்பட்ட சேதமும் அதன் காரணமாக ஏற்பட்ட துயரும் துன்பமும் மிக அதிகம் என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். இத்தகைய இழப்புகளுக்கு ஆளானவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் நம்முடைய துயரத்தையும் பரிவையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைக்குள்ள அரசு புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய முன்வரவில்லை என்று யாரும் கூறவில்லை. ஆனால் செய்யப்பட்ட உதவிகள் காலாகாலத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்குக் கிடைக்கும்படியாக அவர்களுடைய வருத்தங்களை நீக்கப் பயன் தரத்தக்கனவாக அமைந்திட வில்லை என்பது இந்த அரசாங்கத்தின்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு என்று எடுத்துக்கொள்வதை விட, இப்படிப் பட்ட குறைகளை எடுத்துச் சொல்வதின் காரணமாக குறை களுக்குப் பரிகாரம் காணப்படும் என்கிற எண்ணத்தினால் தான் இவற்றையெல்லாம் கூறுகின்றோம். அவற்றை நல்லெண்ணத்தோடு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நவம்பர் 12ஆம் தேதி நாகையைத் தாக்கிய புய இரவோடு இரவாக தஞ்சை மாவட்டத்திலும், திரு மாவட்டத்திலும், புதுக்கோட்டை பகுதிகளிலும் தாக் நடத்தியதைத் தொடர்ந்து பெய்த மழையின் காரண பெரு வெள்ளம் ஏற்பட்டு, குடகனாறு அணைக்குச் சேதம் ஏற்பட்டு விவசாயப் பெருமக்கள், பொதுமக்கள் எல்லோரும் அவதியுற்று இருந்த நேரத்தில், முதல் இரண்டு மூன்று நாட்கள் மக்கள் அனைவரும் திகைத்து நின்ற நேரத்தில் அரசும் திகைப்புக்கு ஆளாகியிருக்கிறது, அல்லது விவரங் கள் அனைத்தையும் தெரிந்து கொள்ள முடியாமலும் ஆங்காங்குள்ள அதிகாரிகள் எதுவும் செய்ய ஆற்றல் அற்றவர் களாக, அரசாங்கத்தை எதிர்பார்த்து உத்தரவுகள் பெற முடியாத நிலையிலும், அரசாங்கத்திற்கும் தங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலையிலும் இருந்தனர் என்கின்ற விவரங்களை எல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தாங்கள் தங்கியிருந்த இடங்களி லிருந்துதான் சில செயல்களைச் செய்து கொண்டிருக்க முடிந் தது என்கின்ற விவரங்களை இந்த வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கத் தயங்கியிருப்பது வருந்தத்தக்கது. திகைப் புக்கு ஆளான அதிகாரிகள் மேலிடத்திலிருந்து உத்தரவுகள்



1978 சனவரி 2] [திரு. க. அன்பழகன்]

எதுவும் பெற முடியாத நிலையில் இருந்தனர் என்பதையும்,
உதவிகள் எதையும் செய்து கொடுகக முடியாத நிலையில்
இருந்தனர் என்பதையும், அதே நிலையில் 15, 16ஆம் தேதி
வரை இருந்தனர் என்பதையும் நாம் உணரவேண்டும்.

அதற்குப் பின்னரும் பல நாட்கள் எத்தனையோ திட்டுப்
பகுதிகள் தொடர்பு அற்றுப்போய், அதிகாரிகள் போக
முடியாத அளவுக்கு, தொடர்பு கொள்ள முடியாத அளவுக்கு
வெள்ளம் சூழ்ந்திருந்தது. அரசாங்கத்திற்கோ, அதிகாரி
களுக்கோ அன்றைய நிலையில் சமாளிக்க முடியாத பிரச்னை
யாகவும்கூட அது இருக்கலாம். ஆனால், அதையெல்லாம்
இந்த அறிக்கையிலே வெளியிடத் தயாராக இருந்திருக்க
வேண்டும். உண்மையை ஒப்புக்கொள்ள அரசாங்கம்
சற்றும் தயங்கி இருக்கக் கூடாது என்பதை மட்டும் நான்
இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், வெள்ளச் சேதத்தை முதல் அமைச்சர்
அவர்கள் விமானத்திலே போய்ச் சுற்றிப் பார்த்தார்கள்.
அதை நான் இங்கே ஒரு குறையாகச் சொல்லவில்லை.
ஆனால், மக்கள் முதலமைச்சரை நேரிலே பார்த்து தங்கள்
குறைகளை எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை.
முதல் அமைச்சர் அவர்கள் முதலில் அவர் மட்டும் விமானத்
திலே சென்று பார்த்தார்கள். பின்னர் குடியரசுத்
தலைவர் அவர்களுடன் சென்று பார்த்தார். பின்னர் பிரத
மர் அவர்களுடனும் கூடச் சென்று விமானத்தில் பார்த்தார்.
அவர்களைப் பொறுத்தவரை மக்களுக்கு ஏற்பட்ட கேட்டினை
நேரிலே பார்த்திருக்கலாம். ஆனால், பொது மக்கள்
முதல் அமைச்சர் அவர்களை நேரில் பார்த்து, தங்களுக்
குள்ள குறைகளை, ஏற்பட்ட கொடுமையை நேரிலே எடுத்துச்
சொல்ல வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அதேபோல்
பின்னர் முதல் அமைச்சர் அவர்கள் நாகைக்குச் சென்று,
திருவாரூருக்கு வருகிறார். விஜயபுரம் வழியாகச் சென்ற
போது, அவரது கார் 30 மைல் வேகத்தில் ஓட்டிச் செல்லப்
பட்டு, அங்கும் மக்கள் அவரைச் சந்திக்க வாய்ப்பில்லாமல்
போய்விட்டது. முதல் அமைச்சர் அவர்கள் வரும்போது,
தங்கள் குறைகளையெல்லாம் நேரிலே எடுத்துச் சொல்ல
லாம் என்று மக்கள் எண்ணினார்கள். அங்கும் மக்கள்
முதல் அமைச்சர் அவர்களை நேரிலே சந்திக்க முடியாமல்
தவித்திருக்கிறார்கள். போலீசார் அப்படிச் சந்திக்க இட
மளிக்கவில்லை என்கின்ற உண்மையை முதல் அமைச்சர் அவர்
கள் இங்கே ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இதில்

முதல் அமைச்சர் அவர்கள் விமானத்தில் போய்ப் பார்த்ததில் தவறில்லை. ஆனால், சாலைவழியே சென்றபோதும் மக்கள் நேரிலே சந்திக்க வாய்ப்பில்லாமல் நடந்துகொண்டார் என்பதை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள். அதுபற்றி பத்திரிகையிலேகூட செய்தி வந்தது. நாங்கள் சிறையிலே படித்துப் பார்த்தோம். அவர்கள் சுற்றுப்பயணத்தைப் பாளையங்கோட்டையிலே இருந்து ஆரம்பித்திருக்கிறார்கள். பாளையங்கோட்டை பாதிக்கப்படவில்லை என்று நான் கூறவில்லை. ஆனால், அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியிலே முதலிலே தொடங்கியிருக்கலாம். ஏனென்றால், அங்கேயிருந்து தொடங்கும்போது, மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அவர்கள் வருவதற்கு 5, 6 நாட்கள் ஆகக்கூடிய நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை மனோகரன் அவர்களுக்கு வெள்ளப் பகுதிகளில் வந்து பார்ப்பது என்பது பழக்கமில்லாத காரணமாக இருக்கலாம். அந்தப் பகுதிகளையெல்லாம் நாங்கள் போய்ப் பார்த்தபோது, அங்கு எல்லாம் அதிகாரிகள் ஏதோ ஒரு அளவுக்குத் தங்கள் கடமைகளைச் செய்திருக்கிறார்களே தவிர, அவர்கள் தங்கள் கடமைகளை மிகவும் விரிவாகவும், பரவலாகவும், முறையாகவும் செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம், அந்த அதிகாரிகளால் வெள்ளத்தால் திட்டுத் திட்டாக இருந்த பகுதிகளில் எல்லாம் தொடர்பு கொள்ள முடியவில்லை, மக்களாலும் அவர்கள் குறைகளை அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்ல முடியாமல் போய்விட்டது. நாங்கள் சிறையிலேயிருந்து வெளிவந்தவுடன், மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது கேட்டறிந்த மக்களின் மனக்குமுறல்களிலிருந்து இந்த நிலைமைகளையெல்லாம் புரிந்துகொள்ள முடிந்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. அறந்தாங்கி போன்ற பகுதிகளிலே ஏற்பட்டருந்த நிலைமைகளைப் பார்க்கின்றபோது, அங்கே 10, 15 நாட்கள் கழித்துத்தான் நிவாரணப் பணிகள் தொடங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாகப்பட்டினம் பகுதியில் சில மீனவர் குப்பங்களிலே போக்கு





வரத்து வசதிகள் ஓரளவு இருந்தும்கூட, நிவாரணப் பணி வேலைகள் தொடங்குவதற்கு பல நாட்களுக்கு மேல் ஆகியிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், வெள்ளச்சேதம் மிகுதியாக ஏற்பட்ட குடகனாறுப் பகுதிகள் சிலவற்றில் நிவாரணப்பணிகள் தொடங்க ஒரு வாரங்கூட ஆகியிருக்கிறது, மேலும் அங்குள்ள சில திட்டுப் பகுதிகளில், நிவாரணப் பணிகளைத் தொடங்க முடியாத நிலைமைகள்கூட இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட கொடுமையான நேரத்திலும்கூட தனியார் நிறுவனங்கள், குறிப்பாகத் திருச்சியிலே உள்ள ‘பெல்’ நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்களும், ‘கேர்’ நிறுவனத்தாரும், செஞ்சிலுவை சங்கத்தாரும் என்னென்ன வகையிலே நிவாரணப் பணியாற்ற முடியுமோ, அந்தந்த வகையிலே ஆற்றியுள்ளனர். மேலும், அந்தப் பகுதிகளிலே உள்ள கல்லூரி மாணவர்களும், கல்லூரி ஆசிரியர்களும், அவர்களால் முடிந்த பகுதிகளுக்கெல்லாம் சென்று உதவி செய்துள்ளார்கள். அவர்கள் செய்த உடனடியான உதவி அரசாங்கம் தன் கடமைகளைச் செய்வதில் பெரும் பளுவைக் குறைத்திருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளம் புகுந்து, அதிகாரிகளுக்கும் மக்களுக்குமிடையே தொடர்பு அற்றுப்போன பகுதிகளில், தனிப்பட்டவர்களின் உதவி அந்த இடைவெளியை (காப்பை) நிரப்புவதாக அமைந்திருக்கிறது: அதை இந்த அரசும், சட்டமன்றமும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இன்னொரு இடத்தில் அதாவது வேடசந்தூரில் கடும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் உடுமலைப்பேட்டை, பழநி போன்ற இடங்களுக்குப் பக்கத்திலே உள்ள ஆலைச் சொந்தக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த பொருள்களை, துணிமணிகளைக் கொண்டுவந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முற்பட்ட போது, அவர்கள் அப்படி வழங்க முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள், தனிப்பட்டவர்கள் உதவி செய்வதை அனுமதிக்கக்கூடாது என்று தாசில்தார் அளவில் போய்த் தடுத்திருப்பதாக அங்கே பரவலாகச் சொல்லப்பட்டது. தனிப்பட்டவர்கள் உதவி செய்வதை வரவேற்கலாமே தவிர, முடிந்தால் போலீஸ் ஒத்துழைப்பும்

தரலாமே தவிர, அதைத் தடுப்பது வருந்தத்தக்கது. ஆனால் இப்படித் தடுக்கக்கூடிய நிலைமை அன்றைக்கு இருந்தது என்று வேடசந்தூர் பகுதியிலே பரவலாகப் பேசப்படுகிறது.

அதேபோல், நாகப்பட்டினம் பகுதியில் ஒருவர் நேரில் வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்திருக்கிறார். உதவி செய்ய முன்வந்த அவரும் செய்ய முடியாமல் போலீஸ் பாதுகாப்பு மறுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி நாங்கள் ஆதாரம் கேட்கவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. நானும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அந்தப் பகுதிகளில் சுற்றுப் பயணம் சென்ற போது, எங்கள் வண்டியை 500, 1,000 என்று நூற்றுக்கணக்கான மக்கள் பலவிடங்களில் சூழ்ந்து கொண்டார்கள். அப்போது பாதுகாப்பிற்கு வந்துகொண்டிருந்த போலீசார், பகல் 2 மணி வரை உடன் வந்தவர்கள் பின்னர் வருவதை நிறுத்திக் கொண்டனர் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-10]

நான் இங்கு அரசியல் பேசவில்லை. ஆனால் எங்களோடு வந்துகொண்டிருந்த போலீசார் 4 மணிக்கு மேல் எங்களோடு வருவதை நிறுத்திவிட்டார்கள். ஒருவேளை இதே முறை தான் முன்பும் கையாளப்பட்டிருக்கக் கூடுமோ என்று எண்ண இடம் தருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் போது கூட்டம் சேருகிறது; போலீசார் கூட்டத்தை ஒழுங்கு படுத்துவதற்காகத் தானே தவிர, எதிர்க்கட்சித் தலைவருக்காக அல்ல. வந்த போலீசார் 4 மணிக்கு வருவதை நிறுத்திக் கொண்டார்கள். அதற்குமேல் நாங்கள் மட்டுமே சென்றோம். அதற்கிடையில் என்ன ஏற்பட்டது என்று எங்களுக்குத் தெரியாது. அது ஒரு மர்மமாகவே தோன்றுகிறது.

புயல் வெள்ளம் என்று ஏற்பட்டு மக்களுக்குப் பெரும் சேதங்கள் உண்டாகும் போது கட்சிகளுக்கு அப்பாற்பட்டு பொது நோக்கில் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணம் அனைவர் உள்ளத்திலும் ஏற்பட்டாக வேண்டும். ஒரு கட்சி இன்றைக்கு இருக்கலாம்: நாளைக்குப் போகலாம். சில கட்சிகள் நேற்று முளைத்து நாளைக்குப் போய் விடலாம். நாங்களே கூடப் போய்விடலாம். மக்கள் துயர் தீர்ப்பது அனைவருக்கும் தலையாய கடமை.





திராவிட முன்னேற்றக் கழகம் புயல் நிவாரண நிதி கொடுக்க முன்வருகிறது. அதனை ஏற்பதில் பெருந்தன்மை காட்ட வேண்டிய தலைமைச் செயலாளர் காட்ட முடியாத நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். கவர்னர் சென்னை நகரப் பிரமுகர்கள் கூட்டம்—''சிடிசன்ஸ் மீட்டிங்'' கூட்டுகிறார். அப்படி நடைபெறுகிற கூட்டத்தில் முதலமைச்சர் கலந்து கொள்கிறார் என்று அழைப்பிதழில் இருந்ததை நாங்கள் சிறையில் இருந்த போது பார்த்தோம். சிறைச்சாலைக்கு அழைப்பிதழ் வந்தது. முதலமைச்சர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்க வேண்டும்; ஆனால் கலந்து கொள்ளவில்லை. அதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கும், கலந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கும். ஆனால் முதல் நாள் ஒரு காரணம், மறுநாள் ஒரு காரணம் சொல்லுகிற நிலைமை ஏற்படக்கூடாது. அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் ஒரு முதலமைச்சருக்கு இருக்கக்கூடாது. ஒரு அரசாங்கத்திற்கும் இல்லை. இந்தக் காரணம் எதுவெனக் கூறுவதிலேகூடக் கருத்து வேற்றுமை இருக்குமோவென்று தோன்றச் செய்கிறது.

தொடர்ந்து பார்ப்போமானால் வெள்ளச் சேதம் ஏற்பட்டவுடனே இராணுவத்தினரின் பணி, உதவி கேட்கப்பட்டு அவர்களும் ஆர்வத்தோடு முன்வந்து பணியாற்றினார்கள் என்று அறிகிறோம். அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரி தந்த அறிக்கை ஒன்று பத்திரிகையில் வருகிறது. ''எங்களை முழு அளவுக்கு, முறையாகத் தமிழக அரசு பயன்படுத்திக் கொள்ளவில்லை'' என்று தெரிவித்திருக்கிறார்கள். பத்திரிகையில் வந்திருக்கிறது. அது திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகை அல்ல.

உடனடியாக மூன்று நாட்களிலே தீவிரமாக பணியாற்றப்பட்டது என்பதிலே பெருமைப்பட வேண்டுமென்று அரசு அறிக்கை கூறுகிறது. ஆனால் ஆறு நாட்களுக்குப் பின்னர்தான் பலன் கிட்டத் தொடங்கியது என்ற நிலை இருக்கிறது. இறந்து போனவர்களின் மொத்த எண்ணிக்கையைக் கூற, கிட்டத்தட்ட 20 நாட்கள், 25 நாட்கள் ஆயிற்று. 50 அல்லது 60 என்ற அளவில் தினம் தினம் கிடைக்கின்ற சடலங்களை வைத்து மொத்தம் 200, 300 என்ற அளவில் எண்ணிக்கையைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இதற்கே இத்தனை நாட்கள் என்றால் முதல் இரண்டு மூன்று நாட்களில் என்ன செய்திருக்க முடியும்?

யாரும் எதுவும் செய்ய முடியாத நிலைமைகூட இருந்திருக்கலாம். அதை ஒப்புக்கொள்கிற, உண்மை நிலையை எடுத்துக் காட்டுகிற மனப்பான்மை அரசுக்கு இல்லை. ஏறத்தாழ இறந்தவர்கள் 600; காணுமற் போனவர்கள் 196 என்று கூறியிருக்கிருர்கள். ஆனுல் மக்கள் பேசுவதைப் பார்த்தால் உண்மையாக ஏறத்தாழ ஆயிரம் பேராவது இறந்திருக்கக் கூடும் என்று தெரிகிறது. தேவையில்லாமலே இதை மறைத்திருக்கிருர்கள்.

கிராமக் கர்ணங்களாக இருப்பவர்கள், ரெவினியூ அதிகாரிகளாக உள்ளவர்கள்—கிராமத்தில் முன்பு இருந்தவர்கள் எத்தனைபேர், இன்றைக்கு இருப்பவர்கள் எத்தனை பேர்; இரண்டுக்கும் உள்ள வேற்றுமை எவ்வளவு பேர்; ஊரார் அறிந்த வகையில் இறந்தவர்கள் இவ்வளவு பேர் என அந்த எண்ணிக்கையைக் கணக்கிட்டு இருக்க முடியும். இறந்துபோய் சடலங்கள் கிடைக்காமல் போனவர்கள் இருக்கலாம்.

ரயில்வே பாதையின் ஓரத்தில் ரயிலில் அடிபட்டு இறந்தவர்கள் என்று பத்து நாட்களுக்கு முன் ஜெனரல் ஆஸ்பத்திரிக் கிடங்கில் இருந்த பிணங்கள் அறிவிக்கப்படுகிற நிலை இருக்கிறது. ரயிலில் அடிபட்டு இறந்த செய்தி அவ்வப்போது யாருக்கும் தெரியாமல் போய்—பத்து நாட்கள் கழித்து காவல் துறையினரால் அறிவிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. அதே போன்று வெள்ளத்தில் இறந்தவர்களின் அந்தக் கணக்குச் சரியாகத் தரப்படவில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது யார்மீதும் குறையாகக் கூறுவது அல்ல; இதுதான் அரசாங்கத்தின் முறையாக உள்ளது.

நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட கடுமையான இழப்பின் அளவும் சரியாகத் தெரிவிக்கப்படவில்லை. ரூபாய்128 கோடி, 130 கோடி என்று இழப்பின் கணக்குகள் காட்டப்பட்டிருக்கின்றன. முதலில் பேசிய ஒரு அமைச்சர் 100 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கும் என்ருர். பின்னர் அதே அமைச்சர் இன்னும் அதிகமான அளவுக்குச் சேதம் இருக்கிறது என்று பேசியதும் பத்திரிகையில் வந்தது.

பொதுவாக, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற எண்ணம் இழப்பின் அளவைத் தமிழக அரசு குறைத்துக் காட்டிவிட்டது, அல்லது அதிகாரிகள் தவருகக் கணக்குத் தந்திருக்கலாம் என்பதுதான். அவர்கள் தந்திருக்கிற கணக்கு





உள்ளபடியே முழு நிலைமையைப் புரிந்து கொள்ள முடியாத
காரணத்தாலே அப்படியிருக்கலாம். ஏறத்தாழ 600 பேர்
கள் இறந்துவிட்டனர் என்று அவர்கள் சொல்லுகிற
கணக்கு எப்படி இறந்தவர்கள் ஆயிரம் பேர் என்று
சொல்லுவதறகு இடமளிக்கிறதோ, இதைப்போன்று
மொத்த இழப்பை கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ
200 கோடி ரூபாய் அளவிற்கு இந்தப் புயலாலே,
வெள்ளத்தாலே இழப்பு ஏற்பட்டு இருக்கிறது.

இழப்பின் அளவு பெரியதாக இருப்பதால் இது ஒரு
வகையாக, முறையாக—பட்ஜெட்டைப் போல், எப்படி
முறையாகப் பிரித்துப் பிரித்து பட்ஜெட் கொடுக்கப்படு
கிறதோ அதைப் போன்று—விவரமாக தாலூகா அளவிலே
யும் மாவட்ட அளவிலேயும் இழப்பு விவரம் கொடுக்கப்
பட்டிருக்க வேண்டும். இழப்பு அளவை முதலிலேயே
அதிகமாகச் சொல்லிவிட்டால், மத்திய அரசு என்ன
நினைத்துக் கொள்ளுமோ, மக்கள் ஒருவேளை தம்மை
வெறுப்பார்களோ என்ற காரணத்திற்காகக் குறைத்துச்
சொல்லியிருக்கிருர்களோ என்று ஐயுறுகிறேன். அப்படி
குறைத்துச் சொன்னதற்குப் பிறகு அவர்களும் எவ்வளவு
கொடுக்கலாம் என்று ஒரு இடைக்கால முடிவுக்கு வந்து
கொடுத்திருக்கிருர்கள். இப்பொழுதாவது மாநில அரசு
" எங்கள் எண்ணம் இன்னும் அதிகமாக உதவி நிதி
வேண்டுமென்பதுதான். ஆனுல் இழப்பைக் குறைத்துச்
சொல்லிவிட்டோம், எனவே இழப்புக்கு ஈடாக நீங்கள்
கொடுத்த உதவித் தொகை போதாது, இப்போதும்
நீங்கள் முழுதும் உதவியாகத் தந்துவிடவில்லை, அதுவும்
மாநில திட்ட நிதியில் முன்பணமாகத் தந்திருக்கிறீர்கள்,
கொடுத்த பணத்தை திட்ட முதலீட்டுக் கணக்கிலே
கழித்துக்கொள்ளும் முறையிலே தான் கொடுத்திருக்கிறீர்
கள். அதுவும் 30 கோடி ரூபாய் அளவிற்குத்தான்
கொடுத்திருக்கிறீர்கள், தகுந்த அளவிற்குக் கொடுக்க
வில்லை, மாநில மக்களுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்ட
தோ அதில் 50 சதவிகிதம் மத்திய அரசு ஒத்துக் கொள்ள
வேண்டும், மீதம் உள்ள 50 சதவிகிதத்தை தமிழக அரசு
ஏற்றுக்கொள்ளும்" என்று இந்த அரசு மத்திய அரசுக்கு
எடுத்துச் சொல்லுமாளுல் அதற்கு தி. மு. க. ஒத்துழைக்கத்
தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

புயல், வெள்ளம் இவைகளைப் பொறுத்த வரையில் மாநில அரசினை மட்டும் இது கட்டுப்படுத்துவது அல்ல, அல்லது மத்திய அரசை மட்டும் கட்டுப்படுத்துவது அல்ல, மாநில அரசுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அந்த அளவிற்குச் சமமான பொறுப்பு மத்திய அரசுக்கும் இருக்கிறது. மொத்த இழப்பிலே பாதியை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நீங்கள் கூறவேண்டும். இதற்கு அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒத்துழைப்பு தரத் தயாராக இருக்கின்றன. முன்னாலே பேசிய திரு. சங்கரய்யா அவர்கள் கூட இந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆகவே, எதிர்க் கட்சிகளின் முழு ஒத்துழைப்போடு இதைக் கேட்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் எப்படி எப்படி எங்களுக்குச் சாத்தியமோ அப்படியெல்லாம் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம். எப்படியாவது கீழ் அறுப்பு வேலை செய்யவேண்டும், அரசியல் கட்சி நோக்குடன் வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. நல்ல எண்ணத்தோடு பணியாற்றித் தான் மக்களுடைய செல்வாக்கைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையுடன் தான் இருக்கிறோமே தவிர, நல்ல நோக்கத்திற்கு ஒத்துழைப்புக் கொடுக்காமலேயே செல்வாக்கைப் பெற்றுவிட முடியும் என்று நம்புகிறவர்கள் அல்ல நாங்கள்.

அந்த முறையிலே தான் சிறைச்சாலையிலிருந்து கொண்டே இதற்கு உதவி செய்வதற்காக கழகத் தோழர்களுக்கு கலைஞர் அவர்கள் சார்பில் ஒரு வேண்டுகோள் விடப்பட்டது. அந்த வேண்டுகோளுக்கேற்ப பணவிடைத் தாள்கள் மூலம் வந்த நிதியை சிறைச்சாலையிலே கலைஞர் அவர்கள் கையெழுத்துப் போட்டுப் பெற்றுக் கொள்ள முடியாததொரு நிலையைக் கூட இந்த அரசு ஏற்படுத்தியது. நிதியைப் பெறுவதற்குப் பணவிடைத் தாளில் கையெழுத்துப் போட அனுமதித்து இருப்பார்களானால் இப்போது அனுப்பியிருப்பவர்களைவிட இன்னும் அதிகப் பல நூறு பேர்கள், நிவாரண நிதி அனுப்பியிருப்பார்கள். ஏனென்றால், பண விடைத்தாளில் அவருடைய கையெழுத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவே நிதி அனுப்புவர்களும் இருக்கிறார்கள். அதற்கு வழியில்லாது சிறைச்சாலையில் இருக்கும்போது நிதி வாங்கக்





கூடாது என்று விதிகளைக் காட்டி இந்த அரசு மறுத்து விட்டது. அப்படியிருந்தும்கூட 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வரையிலே சிறைச்சாலையிலிருந்த போதே நிதி வந்து சேர்ந்தது. கலைஞரின் சுற்றுப் பயணத்தில் ஒரு லட்சத்திற்கு மேல் கிடைத்தது. இதைத்தவிர ஏற்கனவே கழகத்தால் கொடுக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாயும் சேர்த்துக் கழகத்தின் சார்பாக 4 லட்சம் ரூபாய் ஆளுநர் அவர்களிடத்திலே நிதி தரப்பட்டிருக்கிறது. இந்த நிதியை முதலமைச்சர் அவர்களிடத்திலே தந்திருக்கலாமல்லவா என்று நண்பர்கள் சிலர் கேட்டார்கள். முதலமைச்சரிடத்திலே தரக் கூடாது என்பதல்ல, பல நேரங்களிலே அவர்களுக்கு இருக்கிற கடுமையான வேலைகளின் காரணமாக பெற்றுக் கொள்ள ஒத்துக் கொள்ள மாட்டாரோ என்று எண்ணினோம், அப்படியும் ஏற்பட்டது சிலருக்கு. யாருக்கு ஏற்பட்டது என்பதெல்லாம் இப்போது வேண்டாம். அப்படியும் ஏற்பட்டது என்ற முறையிலேதான் ஆளுநரிடம் தரப்பட்டது. தி.மு.க.வினராகிய நாங்கள் தமிழக அரசுக்குத்தான் தருகிறோம்.

ஏற்கெனவே தமிழ்நாட்டிலே கடுமையான வறட்சி இருந்தபோது, இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிறவர்கள் அன்றைக்குத் தனியாக கஞ்சித் தொட்டிகள் வைத்து ஏழைகளுக்குத் தனியாகத் தான் உதவி செய்வோம் என்று சொன்னார்கள் என்பதையும் இப்பொழுது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

[பிற்பகல் 12–20]

திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிச் செய்யாமல், இந்தப் பொறுப்பை ஏற்றுள்ள அரசுக்குத்தான் துணை நிற்க வேண்டும், தனித்தனியாகச் செய்வது என்று சொன்னால் அது தனிப்பட்டவர்களுக்குப் பொருந்தும், ஆனால் கட்சிகள் அவ்வாறு தனித்தனியாகச் செய்வதைவிட அரசிடம் அளிப்பதே முறை என்று தான் ஆளுநர் மூலம்

"The Chief Minister's Cyclone Relief Fund"

என்றுதான் டிராப்ட் எழுதப்பட்டு வழங்கப்பட்டது. 'சைக்ளோன் ரிலீஃப் பண்ட்' என்றாலும் அது அதற்குப் போய்ச் சேர்ந்து விடலாம்; ஆனால் நாங்கள் டிராப்டில்

The Chief Minister's Cyclone Relief Fund

என்றுதான் எழுதினோம். அவர்கள் முதலமைச்சராக இருப்பதை நாங்கள் ஏற்கவில்லை என்று யாரும் கருதக்கூடாது

என்பதற்காகவும், இந்த நிவாரணப் பொறுப்பு அவருக்கு இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறோம் என்பதுடன், இந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றாவிட்டால் குற்றம் சொல்லப்படக் கூடியவரும் அவர்தான் என்ற வகையிலேதான் டிராப்ட் எழுதப்பட்டு ஆளுநரிடத்திலே வழங்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நடைபெற்ற இந்த வெள்ளச் சேதம் பற்றிய அறிக்கையைப் பார்க்கும்பொழுது, தமிழ்நாட்டிலே கடந்த அக்டோபர் 13-ஆம் தேதி முதல் எவ்வளவு மழை பெய்தது என்று கணக்கெடுத்திருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்திலே ஏறத்தாழ 2 மடங்கு, முகவை மாவட்டத்திலே 1 மடங்கு, மதுரை மாவட்டத்திலே சில இடங்களில் 2 மடங்கும், சிலவிடங்களில் 1 மடங்கும், நெல்லை மாவட்டத்திலே 7 மடங்கும் என்று இப்படி மழை பெய்த விவரங்களையெல்லாம் இந்த அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். மழை பெய்தது என்ற வார்த்தையைவிட கொட்டவே ஆரம்பித்தது என்ற சொல்லாலும், 'டாரன்ஷியல் ரெயின்' என்று ஆங்கிலத்திலும் குறிப்பிட்டுள்ளனர். அப்படிக் கொட்டியது பற்றிச் சில விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் ஏறக்குறைய 14,000 மில்லி மீட்டர் மழை பெய்தது என்ற கணக்கு தரப்பட்டிருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்கள் சரியாக இருக்கும் என்றாலும், ஒரு வகையிலே பார்த்தால் ஆங்காங்கு இருக்கும் நிலையங்களில், மழையின் அளவை நிர்மாணிக்கும் கருவிகள் தருகின்ற புள்ளி விவரங்களின் அடிப்படையில் இது இருக்கும்.

பெருமழை அல்லது நடுத்தர மழை அல்லது வழக்கம் போல் உள்ளதைப் போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு என்று அனுமானிக்கத்தான் இவ்வளவு விஞ்ஞானக் கருவிகளும் துணை புரியும். திட்டவட்டமான அளவு 'அக்யூரசி' என்பது முழு அளவிற்கு இருக்காது. 17–10–1977 முதல் 26–10–1977 வரையிலான முதல் கால அளவில் 609 சென்டி மீட்டர் சென்னை நகரில் பெய்தது என்று 10 நாட்களின் கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் சென்னை நகரில் நவம்பர் 11-ஆம் தேதி முதல் 8 நாட்களில் 259 சென்டி மீட்டர் என்ற அளவைக் கூறியிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் 14,000 மில்லிமீட்டர் என்று சொல்கிறார்கள். சென்னை நகரத்திலே மட்டும் இத்தனை சென்டி மீட்டர் என்று சொல்கிறார்கள்.





1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஏற்பட்ட கடுமையான மழையின் பொழுது ஒரு நாளில் மட்டும் மிக அதிகமாக ஏறத்தாழ 18 அங்குலம் பெய்தது என்ற கணக்கை அங்கே தருகிறார்கள். நான் அதை எடுத்துப் படித்துக் காட்டிச் சொல்ல முடியும். அந்த வெள்ளம் ஏற்படக் காரணமாக அங்கே 18 அங்குலம் ஒருநாள் பெய்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தில் 1976-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 24 மணி நேரத்தில் 45.2 சென்டி மீட்டர்—அதாவது 18 அங்குலம் ஏறக்குறைய வருகிறது—அதன் சரித்திரத்திலேயே அதிக அளவு மழை பதிவாயிற்று என்று சொல்லியிருக்கிறார்கள். மழை பற்றிய அரசாங்க அறிக்கை என்பதால் சொல்கிறேன். வேறு யாரேனும் தனிப்பட்டவர்கள் சொல்லியிருந்தால் அதைப்பற்றி இங்கே சொல்லத் தேவையில்லை. ஆனால் வரலாறு காணாத அளவில் 18 அங்குலம், அதாவது 45 சென்டி மீட்டர். 10 நாட்கள் தொடர்ந்து 1977-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே பெய்த மழை 609 சென்டி மீட்டர், அதாவது 240 அங்குலம். 240 அங்குலம் என்றால் ஒரு நாளைக்கு சராசரியாக 20 அங்குலம் வரலாம். வரலாற்றிலே இல்லாத மழையின் அளவு ஒரு நாளில் 18 அங்குலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் அதே நேரத்திலே 10 நாட்கள் தொடர்ந்து தினமும் 20 அங்குலம் மழை பெய்திருக்குமா என்றெண்ண வேண்டியுள்ளது.

இந்த அறிக்கையில் ஒரு இடத்திலே சென்டி மீட்டர் என்றும், ஒரு இடத்திலே மில்லி மீட்டர் என்றும், ஒரு இடத்திலே அங்குலம் என்றும் சொல்கிறார்கள். அரசாங்கத்திலே புள்ளி விவரம் சேகரிப்பவர்கள், அமைச்சர்களுக்கு விவரங்களைத் தருகின்றவர்கள் ஒரே வாய்ப்பாட்டைப் பயன்படுத்தவேண்டும். இல்லையென்றால் என்னைப் போன்ற அரைகுறையாகத் தெரிந்தவர்கள் அந்தக் கணக்கு அளவை மாற்றி மாற்றி கணக்கிட முயற்சி செய்ய வேண்டியிருக்கும்.

நான் சென்ற நவம்பர் மாதத்திலும் சென்னையிலே தான் இருந்தேன், இந்த நவம்பரிலும் சென்னையிலேதான் இருந்தேன். இது அவ்வளவு இருக்குமா என்று சென்னையிலே இருக்கின்ற நான் அனுமானிக்கக் கூடாதா? 9 நாட்களில் 259 சென்டி மீட்டர் என்று சொல்கிறார்கள். ஒருவேளை அது சரியாக இருக்கலாம். ஆனால் இந்த அளவு மிக அதிகமாகத் தரப்படுகின்ற கணக்காக, புள்ளி விவரமாக இருப்பதால் எது உண்மை என்று அறிவது அவசியம். தனிப்பட்ட

[திரு. க. அன்பழகன்] [1978 சனவ?

நான் சொல்வது த்வறாக இருந்தால் வருத்தம் தெரிவித் தாலே போதும், ஆனால் அரசாங்கம் கொடுக்கும் புள்ளி விவரம் தவறாக இருந்தால் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்பட்ட வெள்ளச் சேத விவரங்களைப் பார்க்கும்பொழுது சென்னை நகரத்தில் இப்பொழுது கோட்டூர், வியாசர்பாடி, வேளச்சேரி இன்னும் சில பகுதிகள் சென்னை நகர எல்லையில் அதிகமாகப் பாதிக்கப்பட்டன என்ற விவரம் இருக்கிறது.

அங்கேயெல்லாம் ஓரளவு மாநகராட்சி மன்றத்தின் மூல மாகவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அந்த உதவிகள் போதுமான அளவு இல்லை என்பதும், பல இடங்களிலே ஒரே பகுதியிலேயே, ஏரியாவிலேயே, இடிந்து விட்ட குடிசை வீடுகளுக்கு, சென்னை மாநகராட்சிப் பகுதியிலேயிருந்த குடிசை வீடுகளுக்குச் சென்னை மாநகராட்சி மன்றத்தின் மூலம் ஒரு தொகை கொடுக்கப்படுகிறது. அதே பகுதியிலிருக்கிற செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குடிசைகளுக்கு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, இன்னொரு அளவு தொகை கொடுக்கப்படுகிறது. ஆகவே, வீணாகிப்போன, பாழாகிப்போன குடிசைகளுக்குத் தரப்பட்ட தொகையிலே குடிசைக்குக் குடிசை இழப்புத் தொகை வேறாக இருக்கிறது.

அடுத்து, பெரிய பிரச்சாரம் ஒன்று இந்த நாட்டிலே செய்யப்பட்டுவருகிறது. திராவிட முன்னேற்றக்கழகம் செய்த காரியங்கள் எல்லாம் குட்டிச் சுவராகப் போய் விட்டது. ஊழலாய்ப் போய் விட்டது என்று பிரச்சாரம் செய்யப்படுகி றது. அதன்படி அழிந்து போனதெற்கெல்லாம் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். இன்றைக்கு மக்கள், புயலால், வெள்ளத்தால் அழிந்தால் அதற்குக்கூட திராவிட முன்னேற்றக் கழகம்தான் காரணம் என்று கூறுவர். 9 ஆண்டு தி. மு. க. ஆட்சியில் எல்லாம் ஊழல் என்று சிலரும் இன்றைய ஆளுங் கட்சியிலே உள்ளவர்கள் 2 ஆண்டைக் கழித்து 7 ஆண்டுதான் என்றும் சொல்வார்கள். அதிலே கூட எனக்கு ஒரு மகிழ்ச்சி—2 ஆண்டைக் கழித்துக் கொண்ட தற்காக. ஆனால் இன்றைக்குக் குடிசையை இழந்தவர்கள் தி. மு. க. ஆட்சியில் கட்ட முற்பட்ட குடிசை மாற்று வாரி



1978 சனவரி 2] [திரு. க, அன்பழகன்]

யக் கட்டடங்களிலேதான் குடி வைக்கப்பட்டிருந்தார்களே தவிர, வேறிடத்தில் இல்லை. அவர்களைத் தங்க வைக்க மாநகராட்சிப் பள்ளிகளும் பயன்பட்டன. ஆனால் ஏராள மான குடிசைகளை இழந்தவர்கள் குடிசை மாற்று வாரியத்தி னால் கட்டப்பட்டு, இன்னும் குடியமர்த்தப் படாத குடி யிருப்புகளிலேதான் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். எனது புரசை தொகுதியிலே, கௌதமபுரத்தில் 100, 200 குடும் பங்கள் குடிசை மாற்றுவாரியத்தினுடைய கட்டடங்களிலே தான் தங்கியிருக்கிறார்கள். அதே போல், மற்றொரு குடிசை மாற்று வாரியக் கட்டடத்தில் 64 குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டிருக்கின்றன.

இப்போது அவர்களுக்கு, வெள்ள நேரத்தில் உங்களை இங்கே தங்க வைத்தோம். வெள்ளம் வடிந்து விட்டது, ஆகவே நீங்கள் டிசம்பர் 31-ந்தேதிக்குள் வெளியேற வேண்டு மென்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் இதுபற்றி வேண்டுகோள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து, குடிசைகள் அமைத்துக் கொள்ளத் தேவையான மூங்கில், கீத்து போன்ற பொருள்களை வாங்கிக் கொடுத்து விட்டு வழக்கம்போல், உதவி செய்து விட்டு, அவர்களை இங்கி ருந்து வெளியேறச் சொல்ல வேண்டும். மாறாக, அவர் கட்கு அந்த உதவி செய்யாமலேயே வெளியேறச் சொன்னால் எப்படி முடியும்? என்ன நியாயம்? அதைப்போல நாகைப் பட்டினத்திலே, நம்பியாங்குப்பம் என்ற பகுதியிலே 200, 300 குடிசைகள் புயலாலே அடியோடு அழிந்து போய்விட்ட நிலையில், அங்கு தாழ்த்தப்பட்ட மீனவர்களுக்கு தி. மு. க. ஆட்சியில் கட்டப்பட்ட 55 வீடுகள்தான் அந்த வீடிழந்தவர் களுக்குப் பாதுகாப்பாக இருந்தன என்று இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஊழல், ஊழல் என்று சொல்ல விரும்பும் காரணத்தாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தால் செய்யப்பட்ட காரியங் கள் அனைத்தும், மக்களுக்கு கெடுதலாக ஆகிவிட்டது என்று சொல்வது சரியல்ல. நிறைவேறிய சாதனைகளையும், கட் டப்பட்ட கட்டடங்களையும் மனதிலே வைத்து, ஊழலைக் கணக்கெடுக்க வேண்டுமே தவிர, அனைத்தும் ஊழல் என்பது முறையற்ற பேச்சு. இன்றைக்கு நடைபெற்றிருக்கிற அத் தனை காரியங்களுமே ஊழல் என்று நான் சொல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்று கருதுகிறீர்கள்? இப்போது பணம் விநியோகிப்பதிலே தவறே நடக்கவில்லையா? ரூ. 200 கொடுக்க வேண்டிய சிலயிடத்தில் ரூ. 80 கொடுக்கவில்

லையா ? குடிசைக்கு ரூ. 100 என்று அறிவித்தாலும் அதன் சொந்தக் காரருக்கு ரூ. 50 என்றும், கொடுத்தவருக்கு ரூ. 30 என்றும், பங்கிட்டுக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாதா ? ரூ. 100 எல்லா இடங்களுக்கும் ஒழுங்காக வழங்கப்பட்டதா ? கிராமத்திலே ஆரம்பித்து கோட்டைக்கு வருகிறவரை, ஆட்சி நடை பெறுகிறபோது, அங்கங்கே சில குறைகள் இருக்கும். இதைத் தடுத்து நிவர்த்திக்க, மாற்றுவழிகளை அமைத்துக் கொள்ளவேண்டுமே தவிர, அதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர, முன்னர் நடைபெற்ற ஆட்சி செய்ததுதான் ஊழல்—இன்று அதே நடைபெற்றாலும், இது ஊழலாகாது என்று எண்ணிக் கொள்வதா ?

ஊழலே இல்லாத ஒரு இடம் எந்த நாட்டிலேயும் இருக்க முடியாது. ஊழலும் குறைகளும் இல்லாத நாடு உலகத்திலேயே கிடையாது. அப்படி ஊழலே இல்லாத ஒரு நாட்டில் குடியிருக்க வேண்டுமானால் இன்றைய முதல்வருக்கு குடியிருப்பதற்குக் கூட உலகத்திலே ஒரு இடம் கிடைக்காது. மக்களுடைய போக்கு அப்படிதான் உலகெங்கும் இருக்கிறது, இருக்கும்.

ஆனால் ஒரு பெரிய முயற்சியாக, குடகனாற்றிலே ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலே ஏற்பட்ட சேதத்தால் மக்களுக்கு ஏற்பட்ட கொடிய துன்பத்தை மறைக்கவும், தி. மு. கழகத்தின் மீது மறை முகமாக ஒரு பெரிய பழியை ஏற்படுத்தவும், குடகனாறு அணையைக் கட்டியதிலே ஊழல் பெரிய ஊழல் என்று சொல்வது சரியல்ல. அங்கு ஊழல் என்று சொல்ல என்ன பெரிய ஆதாரம் கிடைத்துள்ளது ? அதற்கான விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? ரூ 3 கோடியில் கட்டிய அணை போய் விட்டது என்று சொல்கிறார்கள். நாளைக்கு ரூ. 10 கோடியில் கட்டியதாக இருந்தாலும், போய் விடாதா ? இது மாதிரி வெள்ளத்தில், உடனே அதைக் கட்டியதே ஊழல் ஆகிவிடுமா ? அணை கட்டியது அளந்து பார்த்தது, பொறியாளர்கள் பொறுப்பு அல்லவா ? ஏதேனும் தவறுகள் இருந்தால் நடவடிக்கை எடுங்கள். இவ்வளவு விவரமான அறிக்கையில் குடகனாறு அணை உடைவதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தைப் பற்றி சொன்னார்களா ? நான் ஆதாரத்தோடு பேசுகிறேன். நேரம் இருக்குமானால் முழு அளவில் வாதிடத் தயாராக இருக்கிறேன். குடகனாறு அணை உடைவதற்கு முற்பட்டு, அங்கே வந்து சேருகிற காட்டாறுகளில் ஏற்பட்ட கடுமையான வெள்ளங்கள் ஏற்படுத்திய சேதத்தைப் பற்றி ஏன் விவரம் தரவில்லை ? அதிகாரிகள், அமைச்சர்களை ஏமாற்றப் பார்





கிறார்களா ? அல்லது அமைச்சர்கள் அதிகாரிகளிடம் இப்படி விவரம் கொடுத்தால் போதும். அணைக்கு மேற்பட்ட பகுதிகளைப் பற்றிய விவரத்தை குறைக்க வேண்டியிருக்கும் என்று சொல்லி இருக்கிறார்களா ?

அணை உடைந்து பாதிப்பு ஏற்பட்டது உண்மை. ''திராவிட முன்னேற்றக் கழகம் கட்டிய அணை. அது உடைந்து விட்டது அதனால் பாதிப்பு ஏற்பட்டது'' என்று சொன்னால் கூட நான் ஏற்றுக் கொள்ளத்தயார் நான் அதைப்பற்றி கவலையே படவில்லை. யார் யார் குற்றச் சாட்டுக்கு எந்தந்த நேரத்தில் எவ்வளவு மதிப்பு என்பதை அறிகிறோம் இன்று. ஆனால் அந்த அணை உடைவதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளச் சேத விவரம், கடுமையாகப் பெய்த மழை, எந்த அளவு பெய்தது என்ற விவரம், இவற்றைச் சொன்னால், உண்மையான நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

(பிற்பகல் 12-30)

இந்த வெள்ளப் பெருக்கு—சேதம் பற்றிப் பொதுப் பணித்துறை அமைச்சர் பேசியபோது, (cloud burst) கிளெளட் பர்ஸ்ட் என்ற ஆங்கில பதத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மேகங்கள் ஏராளமாகக் கூடி அப்படியே நீராக மாறுகிறபோது ஏற்படுகின்ற மிகப் பெரிய கொடுமையான மழை வெள்ளம் அது. இப்படிப்பட்ட மழையே கங்கையிலே கூட வெள்ளம் பெருக்கெடுப்பதற்குக் காரணமாவது.

கொடைக்கானல் மலையை நோக்கிப் புயலால் தள்ளப்பட்ட மேகங்கள் ஒரே நேரத்தில் அந்த வட்டாரத்தில் கூடியதால் மிகக் கடுமையான மழை பெய்திருக்கிறது யாரும் எதிர் பார்த்திட முடியாத அளவு மழை வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. வரட்சியாக இருந்த அந்த வட்டாரத்தில் ஒரு மாதமாக அடைமழை பெய்து நிலம் எல்லாம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. அந்த நேரத்திலே இவ்வளவு கடுமையான மழை வேடசந்தூரைச் சுற்றிலும் பெய்த காரணத்தால், வெள்ளம் ஒரு பக்கத்திலே இருந்து வரவில்லை. டிபரன்ட் டைரக்ஷனிலே இருந்து, வெவ்வேறு பக்கம் இருந்து வந்திருக்கிறது. இப்படி வெள்ளம் வந்த ஆற்றைப் பற்றியும் அணைக்கு மேல் இருந்த எவ்வளவு தண்ணீர் வந்தது என்றும் பார்க்கவேண்டும். அந்த இடத்தில் அணை கட்டியிருக்கக் கூடாது, அணை கட்டியதே தவறு என்று கூட 'நில அமைப்பு அறிந்த ஒருவர்' இங்கே

பேசினார். ஆனால் அந்த அணை அங்கு தான் கட்டப்பட வேண் டும். அணைக்கு முன்னதாக 10, 12 சிறு சிறு காட்டாறுகள் அடுத்தடுத்து, தண்ணீரைக் கொண்டு வரக்கூடியனவாக உள்ளன. அவை, மாங்கரையார் ஆறு, சந்தானவர்த்தினி ஆறு, வாட்டாறு, சாலையூரிலிருந்து கலக்கின்ற பெயரிடப் படாத ஆறு, சிற்றாறு, பம்பாளம்மாள் ஓடை, முடக்காறு என்னும் புங்காறு, சீத்தப்பட்டி ஓடை, விருதலைப்பட்டி ஓடை, மாங்கோம்பை ஆறு, ஆகியவையாகும். அவைகள் எல்லாம் குடகனாறு அணைக்கு வரும்பாதை மிகவும் சரிவான—வேகமாக மேட்டிலிருந்து கீழிறங்கும் பகுதியாகும். ஸ்லோப்பாக இருக்கிறது. ஆனால் குடகனாறு அணையி லிருந்து தண்ணீர் விடப்பட்டபின் அந்தப் பகுதி ஓரளவு சமமாக இருக்கிறது. அதனாலேதான் குடகனாறு அணை உடைந்த பின் நிலத்திலே பாதிப்பு அதிகம் ஏட்பட்டிருக்கி றது. மக்களுக்குப் பாதிப்பு அதிகம் ஏற்படவில்லை.

ஆனால் குடகனாறு நோக்கி தண்ணீர் வரும்போது காட்டாறுகளில் திடீரென்று வெள்ளம் புரண்ட நிலையில் அடித்துச் செல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை மட்டும் 200, 250 பேர் ஆகும். அதிலே தப்பியவர்கள் 30, 40 பேர்மட்டும் ஆனால் அதைப் பற்றி இந்த வெள்ளை அறிக்கையில் ஏன் விவரமாகக் குறிப்பிடவில்லை? அதற்கு என்ன காரணம்? குடகனாறை நோக்கித் தண்ணீர் வரும்போது அடித்துச் செல்லப்பட்டவர்கள், நாகம்பட்டியில் 5 பேர்களும் லட்சு மணன்பட்டியில் 15 பேர்களும், விட்டல்நாயக்கன்பட்டியில் 2 பேர்களும், குளத்தூரில் 66 பேர்களும், நல்லமனார் கோட்டையில் 74 பேர்களும், பாரம்பாடியில் 37 பேர்களும் வடமதுரையில் 19 பேர்களும், வேடசந்தூரில் 3 பேர்களும் ஆக மொத்தம் 219 பேர்கள். இவர்கள் அணை உடை தவற்கு முற்பட்ட பகுதியிலே இறந்தவர்கள். குடிசைகள், சல் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டு குடும்பங்கள் வெள்ளத் தில் சிக்கி தப்புவதற்குப் பனை மரத்திலே தொங்கிக் கொண் டிருந்து இறந்தவர்கள், வெள்ளத்தில் மனைவியை அணைத்துக் கொண்டுவந்தவன் மனைவியை வெள்ளம் பிய்த்துக் கொண்டு போனதால் அவளை இழந்தவன் போன்ற பரிதாபகரமான நிலையில் அங்கே உள்ள மக்கள் அடைந்த துயரம் சொல்ல முடியாது. அப்படி 219 பேர்கள் இறந்தார்கள்.

ஆனால் அணை உடைந்ததற்குப் பின்னாலே, பள்ளப் பட்டியில், 15பேர்கள், புதுச் சத்திரத்திலே 3 பேர்கள், பெரிய மஞ்சு வேலியிலே 7 பேர்கள், எருமப்பட்டியிலே 5 பேர்கள், நிருக்கோரணத்திலே ஒருவர், ராசப்பட்டியிலே 6 பேர்கள், புள்ளம்பாடியிலே ஒருவர், செஞ்மான்கடலூரிலே



6 பேர்கள், நாலாம்பள்ளியிலே 2 பேர்கள் ஆக 48 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அணை உடைந்ததற்குப் பின்னாலே இறந்தவர்கள் 48 பேர்கள். அணை உடைவதற்கு முன் னாலே இறந்தவர்கள் 219 பேர்கள். இந்தக் கணக்குகளை ஏன் வெள்ளை அறிக்கையில் வைக்கவில்லை? அதிகாரி களுக்குப் பொறுப்பில்லையா? அல்லது அதிகாரிகள் இவ்வளவு விவரம் கொடுத்தால்போதும் என்று அமைச்சர் கள் சொன்னார்களா என்பது தெரியவில்லை. இன்னும் எங்கெங்கே இறந்தார்கள் எந்தெந்த ஆற்றில் எவ்வளவு தண்ணீர் வந்தது, எந்தெந்த கிராமத்தில் எவ்வளவு பேர் கள் வீடு இழந்தார்கள் என்ற விவரமும் என்னிடத்தில் இருக்கிறது. நேரம் இல்லாத காரணத்தால் சொல்ல இயலவில்லை. கமிஷனுக்குக் கூட அவசியமெனில் விவரம் தரத் தயாராக இருக்கிறேன். வெள்ளச் சேதங்கள் ஏற் பட்டு பாதகங்கள் விளைந்த இந்தச் சூழ்நிலையைக் காணும் போது குடகனாறு அணை உடைந்ததால்தான் அங்கிருந்த மக்களுக்கு பாதுகாப்பு ஏற்பட்டது என்பதும் தெரியவரு கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் எக்கேடாவது கெட்டும். குடகனாறு அணை உடைந்த காரணத்தினால் தான், வேடசந்தூர் பகுதியில் 5000 பேர் தப்பினார்களே தவிர, அது உடையாதிருந்தால், 5000 பேர் வெள்ளத்திற்கு பலியாகியிருப்பார்கள்.

அதுமட்டுமல்ல, இன்னும் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு, அங்குசென்ற சி.ஈ.—தலைமைப் பொறியாளர்—அந்தக் குடகனாறு அணையில் பணியாற்றிய அதிகாரிகள் பொறுப்பாகக் காரியங்களை நிறைவேற்றவில்லை என்று சஸ்பெண்டு செய்து—தற்காலிக வேலை நீக்கம்— செய்திருக்கிறார்கள். அது முறையாக இருக்கலாம். அதைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால், அவர் தந்திருக்கிற அறிக்கையிலே ஒரு பகுதியை இங்கே படிக்கிறேன்.

"Mr. C. A. Srinivasan. Chief Engineer, P.W.D. (Ground water, told newsmen on Friday that most of the 100deaths in Madurai district had taken place in Vedasandur area. There might be 10 or 15 deaths more, but no casualty was reported in the Kodaganaru dam area

அணை கட்டப்பட்ட இடத்தில், அணைப்பகுதியிலும் இறப்பு இல்லை.

The deaths had occurred in villages marooned in th region of the catchment area—when Varattar, tributary of Kodaganaru was in spate.

ர் ளுக்கு சேதம் சிலருக்கு

Water was flowing to a height of 20 feet at Vedasandur bridge point—nine feet over the deck of the bridge.

வேடசந்தூர் பாலத்தில் குடகனாறு தண்ணீர் 20 அடி உயரத்திற்கு மேல் பாலத்தில் ஓடியது. பாலப்பாதையின் மேல் ஒன்பது அடி தண்ணீர் புரண்டது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The work on Kodaganaru dam had been completed but it had not been commissioned.

இதை யாரும் அரசியல் நோக்கத்தோடு சொல்வதாகக் கூறமுடியாது. கட்டி முடிக்கப்பட்டிருந்தாலும் குடகனாறு அணையை நடைமுறைப்படுத்துவதற்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை என்கிறார் தலைமைப் பொறியாளர். எனவே இன்னும் தொடக்க நிலை சோதனைக் கட்டத்திலே இருந்தது என்பதை உணரவேண்டும்.

It is not yet Commissioned

என்ற பெரிய குற்றச்சாட்டு இன்றைக்குச் சொல்லப்படுகிறது. யார் தவறு செய்திருந்தாலும் அவர்களுக்கு உரிய தண்டனையை அளியுங்கள். அது வேறு விஷயம். அரசியல் வாதிகளாக இருந்தால் நீங்கள் அதற்காக கமிஷன் போட்டு விசாரித்து தண்டனை கூட அளியுங்கள். எப்படிப் பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது விசாரணை வையுங்கள். ஆனால் இந்த அணை கட்டப்பட்ட முறையைப் பற்றி இன்றைக்கு வேறு விளக்கம் கொடுக்கப்படுகிறது. அதைப் பின்னால் சொல்கிறேன். அணையில் ஏற்பட்ட உடைப்பால் வேடசந்தூர் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்கிறார்கள். ஆனால் அணை உடைந்ததால்தான் அவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். எப்படிப்பட்ட மண் அணையானாலும் பெரும் வெள்ளம் வரும்போது உடையத்தான் செய்யும். மண் அணை உடையும். நாங்கள் பார்க்கும்போது அங்கு நின்ற கான்கிரீட் சிமெண்ட் தூண், அது மிக அழுத்தமாக கட்டப்பட்டுள்ள அந்த தூணே வெள்ளத்தின் வேகத்தில் ½ அடி—6 அங்குலம் அறுக்கப்பட்டிருக்கிறது. சிமெண்ட் தூணே இரண்டு நாளில் ஓடுகிற வெள்ளத்தில் இப்படிப் பாதிக்கப்பட்டால், அணை உயரத்துக்கு மேல் பல அடி தண்ணீர் பாயும்போது மண் அணை என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெள்ளம் வந்து மிகப் பெரிய சிமெண்ட் கட்டடங்



களே இடிந்து விழக்கூடிய நிலை ஏற்படுகையில் மண் அணை எப்படி இவ்வளவு பெரிய வெள்ளத்தை எதிர்த்து தாங்கி நிற்க முடியும். ''தண்ணீர் கரெண்ட்'' வேகத்தால் இந்தச் சேதம் ஏற்பட்டது.

அந்தப் புயலை அடுத்து இன்னும் கடுமையான புயல் தமிழ் நாட்டைத் தாக்க இருந்தது. நல்ல வேளையாக அது ஆந்திராவிற்குச் சென்று விட்டது. அதற்காக நாம் நன்றி செலுத்த வேண்டும்.

ஓர் உறுப்பினர் : யாருக்கு நன்றி செலுத்த வேண்டும் ?

திரு. க. அன்பழகன் : யார் உரியவர் என்று அவரவர் எண்ணுகிறார்களோ அவருக்கு.

குடகனாறுப் பகுதியில் இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதைக் கொஞ்சம் பிரச்னைகளை நேரிடையாகக் காண்கிற முறையில் புரிந்து கொள்ள முன்வர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நிவாரணப் பணியின் திட்டப்படி குடும்பத்திற்கு ரூ. 300 கடன் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 200 உதவி அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் வழங்கியது ரூ. 80,100,150 என்று பலவகையாக நான் அங்கே போன போது சொன்னார்கள். இதை முறைப்படுத்திக் கொடுக்க வேண்டும். நாங்கள் அந்தப் பகுதிக்குப் போனபோது எங்களிடத்திலே பலர் மனுக்களைக் கொடுத்தார்கள். அவர்களை வரிசைப்படுத்தி கொடுப்பதற்காக வைத்திருக்கிறோம். குறிப்பாக வேடசந்தூர் பகுதியில் ஒரு குடும்பமே வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டபோது ஒருவர் தன்னுடைய மனைவி குழந்தைகள் வீடு அத்தனையும் இழந்திருக்கிறார். இதைச் சொல்கிறபோது குமுறி அழுகிறார். அவருக்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. சட்டம் குறுக்கிடுகிறது. ஒருவருடைய குடும்பத்தில் வருமானம் பெறும் குடும்பத் தலைவன் இறந்து விட்டால் அந்தக் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும். அதனால் இந்தக் குடும்பத்தில் இருந்தவர்களையெல்லாம் இழந்து, வீடு, உடைமைகள் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இவருக்கு ஒரு உதவியும் வழங்கப்படவில்லை.

கிராம கர்ணம். மனியம் முதலானோர் பார்த்து யார்,யார் பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்கிறார்களோ அவர்களுக்கு தான் பணம் கொடுக்கப்படுகிறது. வெள்ளத்தால் சேதம் அடைந்த பகுதிகளில் குடிசை இழந்தவர்களில் சிலருக்கு

60 ரூபாய் தரப்படுகிறது. இன்னும் சில பேருக்கு ரூ. 80;100 கொடுக்கப்படுகிறது.

நாகபட்டணத்தில் துப்புரவுத் தொழிலாளர்கள் பல நூறு பேர் வீடு இழந்து நிற்கிறார்கள். அவர்களுக்கு எந்த வித உதவியும் இல்லை. அதே போல நெசவுத் தொழிலாளர்களும் தங்களுக்கு எந்த வித உதவியும் கிடைக்கவில்லை என்கிறார்கள். எந்த விதத்திலேயும் நியாயம் என்று தெரியவில்லை. இதற்கு ஒரு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 12-40)

குடிசை இழந்தவர்கட்கு 20 ஆண்டுகட்கு முன் 30 ரூபாய் உதவி கொடுக்கப்பட்டது. அப்புறம் அது 60 ஆயிற்று. அப்புறம் 80 ஆயிற்று. இப்பொழுது 200 கொடுக்க முற்பட்டுள்ளோம். எதிர் காலத்திலே 400-ஆகவும் உயரலாம். ஆனால் கல்சுவர் எழுப்பி வீடு கட்டியிருந்தால் ஓடுபோட்டிருந்தால் அந்த வீடு அவனுடைய குடும்பத்தின் ஒரே சொத்து அழிந்து போய்விட்டால் அவனுக்கு எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை. அவனுடைய ஒரே சொத்து அது என்பதால் அவனுடைய வீட்டை கட்ட உதவி செய்ய அரசு முன் வர வேண்டும். மண் மேடிட்ட நிலங்கள் 27,000ஏக்கர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த நிலம் முழுவதும், அந்த விவசாயிகள் கையிலே பணம் இல்லாமல் மண் மேடிட்ட பகுதியிலிருந்து மண்ணை நீக்காவிட்டால் அடுத்த ஆண்டு விவசாயம் நடைபெறாது. உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். ஏற்கெனவே திராவிட முன்னேற்ற கழக அரசு—அமைச்சர் திரு ராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்— தென்னாற்காடு மாவட்டத்தில் வெள்ளத்தால் பயிர் செய்யும் நிலம் மண் மேடிட்டபோது எப்படி புல்டோசர் மூலமாக அரசாங்கச் செலவிலேயே மண் எடுத்து உதவப்பட்டதோ அப்படிச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கொள்கையை ஏற்று அரசாங்கம் இதை நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்கிற போது தான் விவசாயிகளுக்கு இந்த நிவாரணக் காரியத்தை அரசு செய்வதாக நினைக்கத் தோன்றும். பயிர் விளைவதில் 10 லட்சம் ஏக்கருக்கு மேல் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி பயிர் பாதிக்கப்பட்டவர்களுக்கு பூச்சி மருந்தும், உரமும் அதன் விலையில் 25 சதவிகிதம் உதவித்தொகை அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் கடமையை சரியாகச் செய்யாவிட்டால் நாட்டுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதால் பூச்சி மருந்து 50 அல்லது 75 சதவிகித விலைதள்ளுபடி செய்ய வேண்டும்.





அதே போன்று சிறு உழவர்களுக்கு தென்னங் கன்றுகள் இலவசமாக தரப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே சிறு உழவர்கள் பெரிய உழவர்கள் என்று பிரிப்பது பயன்தராது. 5 ஆண்டு கழித்து தான் தென்னங்கன்று பலன் தரும். மற்ற விவசாயிகள் தென்னங்கன்று வைக்காமல் இருந்தால் அது நாட்டுக்கு நஷ்டமே தவிர அவர்களுக்குப் பெரிய இழப்பு அல்ல. ஆகவே தென்னங்கன்று வைப்பதில் சிறு விவசாயிகள் என்ற இலக்கணத்தை மாற்றி, எவ்வளவு தென்னங் கன்றுகள் வைப்பனாக இருந்தாலும் வைப்பதற்கு இலவசமாக வழங்க வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் பல இடங்களில் வாழை முழுவதும் வெட்டி சாய்க்கப்பட்டது போல் அழிந்து கிடக்கிறது. அவர்கள் இழப்புக்கு ஏக்கருக்கு 100 ரூபாய் உதவியாகக் கொடுத்தால் போதாது. ஒரு ஏக்கருக்கு குறைந்தது 2000 ரூபாயாவது இழப்பு ஏற்பட்டிருக்கும் என்பதால்—அதில் 4-ல் ஒரு பங்காக ஐநூறு ரூபாயாவது உதவிநிதி அரசு கொடுத்தால்தான்—வாழை பயிர் செய்ய நல்ல முறையில் பயன்படும். 100 ரூபாய் அளவு கொடுத்தால் சினிமாவிற்கு போய் செலவிட்டு விடுவார்கள். ஆகையால் 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரையில் நஷ்ட ஈடு தருவதன் மூலமாகத் தான் அவர்களை அந்த விவசாயத்தில் ஈடுபடச் செய்ய முடியும்.

அதே போல் வெற்றிலைக் கொடிக்கால் சேதம், கரும்புத் தோட்டச் சேதம், இன்னும் சொல்லப் போனால் மலைப் பகுதிகளில் உருளைக் கிழங்குகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் முழுவதையும் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும். 2000 ரூபாய் நஷ்டம் என்றும் 200 ரூபாய் தருவது என்றால் அது அவர்களை ஊக்கப்படுத்தாது. நான் சொல்கிற புள்ளி விவரங்களை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டாம்—ஆனால் அது முடியுமா என்று அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்.

நெசவாளர்களுக்கு இழந்த தறி ஒன்றுக்கு 125 ரூபாய் கொடுத்தால்—ஏற்கெனவே வேலையில்லை துணி விற்கவில்லை. இருக்கிற தறிக்கே வேலையில்லை என்றுள்ள, வருந்தத் தக்க நிலையில் அது குடும்பச் செலவுக்குத்தான் போகும். எனவே 500 ரூபாய் அளவுக்கு தறி விலையில் 75 சதவிகிதம் உதவி செய்தால்தான் நெசவாளர்கள் அந்தத் தொழிலில் ஈடுபடுவார்கள்.

வலையை இழந்த மீனவர்களுக்கு இலவசமாக வலை கொடுத்தால் தான் மீனவர்கள் தொழில் நடத்த வாய்ப்பு ஏற்படும்.

இன்னும் சொல்லப் போனால் வெள்ளச் சேதம் ஏற்பட்ட பகுதிகளில் 250 ரூபாய் அரசு ஊழியர்களுக்கு கடன் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் உள்ளாட்சி மன்றத்தில் இருக்கக் கூடிய ஆசிரியர்களுக்கெல்லாம் வழங்கப்படவில்லை, கேட்டால் It is intended only for Government Servants என்று சொல்கிறார்கள்.

அதே நேரத்தில் கட்டாய சேமிப்புத் தொகையை (ADADA) தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டத்தில் முழுவதுமாக வழங்க மத்திய சர்க்கார் ஆணை பிறப்பித்தும், மாநில அரசு இன்னும் வழங்கவில்லை. அதற்கான ஆணையும் பிறப்பிக்கவில்லை. கட்டாய சேமிப்புத் தொகையை அரசு அலுவலர் திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசு ஒத்துக்கொண்ட பிறகு மாநில அரசு அதை எப்படி வழங்கவேண்டுமோ அப்படி அதனை வழங்குவதற்கு உடனடியாக முன்வர வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம், கழகத் தோழர்கள் ஆங்காங்கே வெள்ள நிவாரணத்திற்கு முடிந்த அளவு பணியினைச் செய்தது. அடையாளத்திற்குச் சொல்கிறேன். திருச்சியில் பரமதயாளன் என்ற இளைஞர் எட்டு, ஒன்பது பேர்களை, ஊரில் புகுந்த வெள்ளத்தில் மூழ்கியவர்களைப் பிடித்து கரை ஏற்றி அவர்களைக் காப்பாற்றித் தொடர்ந்து அதே வேலையில் ஈடுபட்டு இருந்த நிலையில் அந்த இளைஞர் வெள்ளத்தில் மரணமடைந்து தன் மனைவியை விதைவையாக்கி விட்டுச் சென்றிருக்கிறார். அவர் கலப்பு மணம் செய்து கொண்டவர். அவர் நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர். அவரது மனைவி ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த பெண்மணி. ஒரு குழந்தை இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏதோ கழகத்தால் முடிந்த உதவிகளைச் செய்திருக்கிறோம். உயிரைக் கொடுத்து பிறரைக் காப்பாற்றிய அந்த வீரனை இந்த நேரத்தில் அரசு பாராட்டுவதுதான், ஒரு உறுப்பினர் கூறியதுபோன்று புயல் அடித்து இறந்தவர்கட்கு நினைவுச்சின்னம் கட்டவேண்டும் என்று சொல்வதைவிட நிலையான நல்லெண்ணம் என்ற சின்னத்தைக் கட்டுவதாக அமையும்.

இதுகாறும் நான் பேசியது மனச்சாட்சியோடு பேசிய பேச்சு. அப்படி மனச்சாட்சியோடு பேசிய பேச்சில் உண்மை இருக்கிறது என்று கருதினால், சுற்றுலாக் கண்காட்சியில் குடகனாறு அணையின் படம் ஒன்று பெரிய அளவில் வைத்து 'மூன்று கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த அணை முதல் வெள்ளத்திலேயே உடைந்து விட்டது' என்று செய்திருக்கிற அந்த விளம்பரத்தை பிரச்சாரத்தில் அக்கறை





காட்டாத அரசு என்று சொல்லும் அரசு அந்தத் தவறான பிரசாரத்தை நிறுத்த வேண்டும். தவறான பிரசாரத்தை விரும்பாதவர் முதல் அமைச்சர் என்று கூறப்படுவதால் உடனடியாக அதை எடுத்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களாக வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்டு பெரிய சேதத்திற்கு ஆளாக்கப்பட்டு இன்றைக்கும் அந்த வேதனையிலிருந்து பெருமளவிற்கு விடுபடாமல் தவித்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு இந்த அரசு எந்தெந்த வகைகளில் உதவிகள் செய்தன என்பதைப் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை இந்த மன்றத்தில் நான் தாக்கல் செய்தேன். அதையொட்டி இங்கே அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் அவர்களது கருத்துக்களை ஆட்சிக்கு எடுத்துச் சொல்லி இன்னும் கொஞ்சம் துரிதம் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

இங்கு தரப்பட்டிருக்கிற கணக்குப்படி 52 பேர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டார்கள். 52 பேர்கள் தான் கலந்து கொண்டார்கள் என்றால் அவர்களுக்கு மட்டும்தான் அக்கறை இருந்தது என்று அதற்கு பொருளாகாது. 52 பேர்கள் பேசியதே பெரிது என்றளவிற்கு தான் நமக்கு கால அவகாசம் இருந்தது. என்றாலும் 52 பேர்கள் பேசியிருப்பது இந்தப் பிரச்னையின் டைமன்ஷன் என்கிறார்களே, அந்த வடிவினை, பரிமாணத்தைக் காட்டுகிறது என்பதை இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

இங்கே கருத்துக்கள் தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் திரு. க. அன்பழகன் அவர்கள் தான் பேசிய கருத்துக்கள் அத்தனையும் மனச்சாட்சியோடு பேசிய கருத்துக்கள் என்பதை எடுத்துச்சொன்னார்கள். துளி கூட எனக்கு அதில் மாறுபாடு இல்லை என்பதை அவருக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். குற்றச்சாட்டுக்கள் சாட்டப் பட்ட நேரத்திலேயும், துரைத்தனத்தை இழிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கு அவருக்கு இருந்ததாகவும் நான் நம்பவில்லை என்பதையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். அதிலும் இறுதியாக அவர்கள் பேசிய குடகனாறு பற்றி விரிவாகப் பேசிய அந்தப் பேச்சுக்கு எனது பதில் மிகச் சுருக்கமாக

[திரு. கி. மனோகரன்] [1978 சனவரி 2

இருக்கும். ஏனென்றால் குடகனாறு எப்படி உடைந்தது, கட்டப்பட்டது எப்படி, கட்டப்பட்டதில் ஏதாவது கோளாறுகள் இருந்தனவா, பராமரிப்பில் ஏதாவது கோளாறுகள் இருந்தனவா என்பதைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு விசாரணை நடந்துகொண்டிருக்கிற காரணத்தால் நான் அந்தப் பிரச்னைக்குள்ளே நுழைய விரும்பவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–50]

அடுத்தாற்போல் பேசும்போது வேதனையோடு ஒரு கருத்தை தெரிவித்தார். இங்கு இருக்கிற பொருட்காட்சி சாலையில் மூன்று கோடி ரூபாயில் கட்டப்பட்ட குடகனாறு முதல் வெள்ளத்திலேயே உடைந்து போயிற்று என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இது நியாயம் தானா? திராவிட முன்னேற்ற கழக ஆட்சி காலத்தில் கட்டப்பட்டது என்று தொனிக்கின்ற வகையில் இவ்விதம் வைக்கப்பட்டிருப்பது நியாயம் தானா என்ற கேள்வியைப் போட்டு, அதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்று கேட்டார்கள். அப்படி ஒன்று வைக்கப்பட்டிருக்குமானால் நிச்சயம் எடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் மற்றவர்களை புண்படுத்தக் கூடாது. இனிமேல் யாரும் புண்படுத்தக்கூடாது என்று நானும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் மற்ற அரசியல் கட்சித் தலைவர்களும் பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டத்தில் முடிவுசெய்து இதைப்பற்றி மனம் விட்டு பேசி முடிவு எடுத்த பிறகு, அப்படிப்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படாமல் ஒழுங்காக, செம்மையாக சபை செயலாற்றி வருகிறது என்பதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பழகன் அவர்கள் இன்னொன்றையும் எடுத்துச் சொன்னார்கள். அதே கருத்தை என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் புலவர் கோவிந்தன் என்று கருதுகிறேன். அவர்களும் நண்பர் ஜேம்ஸ் அவர்களும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தார்கள். அது என்ன கருத்து என்றால், நாட்டில் புயல் அடிக்கிறது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது, உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது ஒவ்வொரு கட்சிக்காரர்களும் போட்டி போட்டுக் கொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக தலைவர்கள் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை



1978 சனவரி 2] [திரு. கி. மனோகரன்]

சேர்ந்தவர்கள் 25 ஆயிரம் ரூபாய்க்கான செக்கை எடுத்துக் கொண்டு சீப்-செக்கரட்டரியிடம் கொண்டு வந்து கொடுக்க வந்தபோது அந்த செக்கை பெறுவதற்கு மறுத்து விட்டார் என்ற கட்டுப்பாடான, தவறான பிரச்சாரத்தை எப்படியோ முடுக்கிவிட்டிருக்கிறார்கள். இதை யார் செய்தார்கள். இதை யார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

நான் மனம் திறந்து பேசுகிறேன். அந்த 25 ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு தலைமைச் செயலாளரிடத்தில் கொடுக்க வந்த நேரத்தில் அவர் எந்த மாநாட்டில் இருந்தார். ராணுவத் தலைவர்களையும், விமானப் படைத் தலைவர்களையும் அழைத்து வைத்து. போர் கால நடவடிக்கைகளைப் போல் நடவடிக்கை எடுக்க பேசிக்கொண்டிருந்தார்கள்.

அதேநேரத்தில் கோட்டையில் நானும் இருந்தேன், நமது முதலமைச்சர் அவர்களும் இருந்தார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும். முதலமைச்சர் அவர்கள் கோட்டையில் இருந்தும், முதலமைச்சர் அவர்களிடம் ஏன் கொடுக்கவில்லை என்பதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தந்த பதில் அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை, அவர் தந்த பதில் முதலமைச்சர் என்றால் அவர்களுக்கு பல பிரசனைகள் இருக்கலாம். அவர்களை தொல்லைப் படுத்துவானேன் என்று நினைத்துத் தான் அவர்களிடம் கொடுக்கவில்லை. என்று சொன்னார்கள். அது சரியான பதில் இல்லை. முதலமைச்சர் என்றால் ஆயிரம் பிரச்னைகள் இருக்கும். உண்மைதான் ஆனால், இந்த நிதி அமைச்சனாக இருக்கிற நான் இங்கேதான் இருந்தேன். என் கையில் தரக்கூடாதா? வேறு பல அமைச்சர்கள் இங்கேதான் இருந்தார்கள் அவர்கள் கையில் கொடுக்கக்கூடாதா? கொடுப்பதில் ஏற்பட்ட சித்தாந்தம் கொடுத்தால் தலைமைச் செயலாளரிடம்தான் கொடுப்போம், இல்லையென்றால் கொடுக்க மாட்டோம் என்று எடுத்துக் கொள்கிற முடிவு, நாட்டில் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு உதவுகின்ற நேரத்தில், இப்படிப்பட்ட முடிவு அவர்களுக்கு உதவி செய்கின்ற முடிவாக இருக்க முடியுமா என்பதை அருட்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் உமாநாத் அவர்களும் தனக்கு வந்த தகவலின் அடிப்படையில் இந்த கருத்தைச் சொன்னார்கள் என்று நம்புகிறேன். அவர்களையும் கேட்டுக்கோள்கிறேன். அதிகாரிகள் எந்த் அளவுக்கு இருப்பார்கள் என்பதை அதிகாரிகளோடு,

ஏழாண்டு காலமாக முதலமைச்சராக இருந்து பணியாற்றிய நமது எதிர்க்கட்சித் தலைவருக்கும் நன்கு தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அந்த நியூஸ் பத்திரிகையில் வந்தபோது எந்த விதமான மறுப்பும் கவர்ன்மெண்ட் சார்பில் அளிக்கப்படவில்லை. மறுக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்தச் செய்தி மறுக்கப்பட்டது. பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. அந்த மறுப்பு தலைமைச் செயலாளரிடமிருந்து வரவேண்டும் என்று அருமை உறுப்பினர் உமாநாத் அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும், இதிலுள்ள அடிப்படையைப் பற்றி, அதிகாரிகள் தாக்கப்படும் பொழுது, அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது என்பதில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நிச்சயமாக மனவேறுபாடு இருக்காது என்று நான் நம்புகிறேன்.

மனம் குமுறிப்போய் நமது தலைமைச் செயலாளர் அவர்கள் நேற்று என்னைச் சந்தித்து, இப்படி திருப்பித் திருப்பி என்னை மன்றத்திலே தாக்குகிறார்களே, எனவே எனது உணர்வுகளை நீங்கள் வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமென்று என்னிடத்திலே ஒரு 'நோட்டை' அனுப்பியிருக்கிறார்கள். சபையின் அனுமதியோடு அதை நான் படிக்க விரும்புகிறேன். அதைக் கேட்டு. மனம் வேதனைப்பட நினைப்பவர்கள் வேதனைப்படலாம், தவிர, இதைப்பற்றி பரிசீலனை செய்து தவறு இருந்தால்' அதைத் திருத்திக் கொள்ளவும் முடியும் என்று நான் கருதுகிறேன்; எனவே' நான் அந்தக் கடிதத்தைப் படிக்கிறேன்.

'I learn that an accusation has been made against me on the floor of the Assembly that I refused to receive a donation of Rs. 25.000 brought in by Thiru Pulavar Govindan and others on 14th November 1977 for the Cyclone Relief Fund. I have to point out that this is totally * an incorrect and baseless accusation and the facts are as below :—

The cyclone occurred on 12th November 1977. On the 13th, I had fixed up by telephone an emergent meeting with the officers of the Defence Services, Secretaries to Government and the

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 'இன்கரெக்ட்' என்ற சொல் சேர்க்கப்பட்டது.



Heads of Departments concerned to be held at 11 a.m. on 14th, the first working day after the cyclone. I had earlier granted an appointment to a foreign visitor at 10-30 a.m. on 14th November 1977. On the 14th after I finished with the foreign visitor at 11 a.m.. I had to attend certain urgent Trunk calls and when I was about to leave to the Conference Hall. where more than 20 Officers were waiting for the cyclone relief meeting. my Private Secretary, Thiru Chandrasekaran informed me that Thiru Pulavar Govindan and some others are coming to meet me to hand over a contribution to the Cyclone Relief Fund. As I was already delayed for the Conference by 15 minutes and several immediate decisions had to be taken for the relief work. I instructed him (my Private Secretary) to request Thiru Pulavar Govindan and others to hand over the contribution to the Deputy Secretary, Finance, who is in charge of the Flood Relief Fund. I then moved away to the Conference Hall.

Neither Thiru Pulavar Govindan nor any of his colleagues actually met me or spoke to me or handed over any cheque for the fund nor did I refuse to receive it. The only contact was through my Private Secretary who was instructed as above.

There is no order or rule that the Chief Secretary should himself personally receive contributions to the Cyclone Relief Fund or that the donors should hand over such contributions only to the Chief Secretary in person.

I had no motive for, or intention of, refusing to receive any contribution from whomsoever it may come. I had not issued any denial statement so far. for the simple reason that a civil servant is not expected, as a matter of discipline and propriety, to indulge in public statements regarding his work or conduct.

Now that a reference has been made to this incident on the floor of the Legislative Assembly, I thought it my duty to bring these facts to the notice of the Finance Minister, who is the Leader of the House for being taken note of while making his reply to the debate tomorrow".

திரு. ரா. உமாநாத் : ஒரே ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். அந்தக் கடிதத்திலே ** என்று ஒரு வார்த்தை * * என்றால் * * என்ப சொல்லப்பட்டிருக்கிறது.,

** மாண்புமிகு தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தாகும். அந்த வார்த்தை பார்லிமெண்டரி வார்த்தை அல்ல. எனவே, அது இந்த சபையின் நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கக்கூடாது. உண்மையல்ல என்ற வகையில், அது இன்கரெக்ட் என்று வேண்டுமானால் இருக்கலாம். எனவே அந்த * * என்னும் வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Thiru. K. Manoharan: I have no objection to delete the particular expression * * but the expression baseless remains.

*புலவர் கா. கோவிந்தன் : நாங்கள் இந்த அவையிலே கூறுகின்றபோது கூட, தலைமைச் செயலாளர் அவர்களை நேரிலே சந்தித்து, அவர்கள் வாங்க மறுத்தார்கள் என்று கூறவில்லை. எல்லா நிகழ்ச்சிகளும் அவரது நேர்முக உதவியாளர் கூறியபடிதான் நடைபெற்றது என்பதை நாங்கள் கூறியிருக்கிறோம். அதையேதான் தலைமைச் செயலாளர் அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். வேறு எத்தகைய குறையும் சொல்லப்படவில்லை. பிறகு, நிதித் துறைச் செயலாளர் அவர்களைச் சந்திக்கும்படிச் சொன்னார்கள் அவர் அன்று விடுமுறை என்று நடந்த நிகழ்ச்சியைத்தான் நாங்களும் கூறியிருக்கிறோம். ஆகவே, நடை முறையில் வாங்க மறுக்கக்கூடிய ஒரு நிலைதான் ஏற்பட்டதே தவிர, அவ்வாறுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அவரே வாங்க மறுத்தார் என்று நான் இந்த அவையிலும் கூறவில்லை; வேறு எங்கும் கூறவில்லை.

[பிற்பகல் 1–00]

திரு. கி. மனோகரன் : புலவர் கோவிந்தன் அவர்கள் மிக நன்றாக நமது தலைமைச் செயலாளரைப் பற்றித் தெரிந்தவர் என்று எனக்குத் தெரியும். ஆகையால் எந்த விதமான உள்நோக்கத்தோடும் நான் அந்தக் கருத்தைச் சொல்லவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால், உள்நோக்கம் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு நான் தெரிவிக்க விரும்புவது உள்நோக்கத்தோடு பிரச்சாரங்கள் ஊர் முழுக்க நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதுபோல் ஒரு செய்தி காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. அப்படி உள்நோக்கம் இல்லையென்ற நிலைமை இருக்குமானால் இது இவ்வளவு பெரிய காட்டுத் தீ

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



போன்ற பிரச்னையாக ஆக்கப்பட்டு இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்படக்கூடிய பொருளாக மாற்றப்பட்டிருக்குமா என்பதை அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இனிமேலாவது தயவு செய்து இப்பேர்ப்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் ஏனென்றால் நானும் மனசாட்சியொடு பேசுகிறேன்—பழைய முதலமைச்சர் அவர்கள், அதிகாரிகள் மத்தியில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும், ஒரு அரசாங்கத்திற்கு உறுதுணையாக, பில்லர்ஸ் ஆக—தூணாக இருப்பவர்களுக்கு நாம் எப்படி உறுதுணையாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றியும் அவர்கள் தாராளமாக எனக்குச் சொல்லலாம். நான் மெத்த வருத்தத்தோடு சொல்கிறேன். அதிகாரிகளைத் தாக்குகிற பழக்கம் அதுவும் சட்டமன்றத்தில் தாக்குகிற பழக்கம் ஒரு மரபாகக்கூடாது என்று விரும்புகிறேன். ஏனென்றால், அவர்கள் இந்த அவையில் இருக்க முடியாது. தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் அவர்களால் இயலாது. தன்னிலை விளக்கம் தர அவர்களால் இயலாது. அவைகளை உணர்ந்து இனிமேலாவது இப்பேர்ப்பட்ட காரியங்களில் இம்மன்றம் ஈடுபடாது என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

திரு. க. சுப்பு : பாய்ன்ட் ஆப் ஆர்டர். அன்று தலைமைச் செயலாளரைச் சந்திக்க நானும் உடன் சென்றிருந்தேன். அந்தத் தலைமைச் செயலாளரைத் தாக்கி பிரச்சாரம் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். முழுக்க முழுக்க நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். கவர்னரை வைத்துக் கொண்டு, கவர்னர் கூட்டிய கூட்டத்திலேயே பேசியிருக்கிறேன். 'உள்நோக்கத்தோடு' என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது? புலவர் கோவிந்தன் அவர்கள் நடைபெற்ற சம்பவங்களைச் சொல்லியிருக்கிறார்கள். தலைமைச் செயலாளரை நேரடியாகப் பார்த்தோம் என்று அவர்கள் சொல்லவில்லை., அவருடைய உதவியாளரைத்தான் பார்த்தோம். அவரும் வேறு விதத்தில் திசை திருப்பிவிடக் கூடிய முறையில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்ன? நீங்கள் இப்படி விளக்கிக்கொண்டே போனால் எப்படி ?

திரு. க. சுப்பு : திருவள்ளுவரைப் போல் ஒன்றேமுக்கால் வரிக்குள் என்றால் சொல்ல முடியாது. நான் சாதாரணன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சீக்கிரம் உங்களுடைய பாய்ண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. க. சுப்பு : தயவு செய்து முடியுங்கள் என்று சொன்னால் எப்படி முடிக்க முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் இஷ்டத்திற்குச் சொல்லிக் கொண்டே போவீர்கள். நான் பேசாமல் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா? தயவு செய்து பாய்ண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். ஒத்துழைக்கிற மாதிரி பேசுங்கள்.

(திரு. சுப்பு நின்று கொண்டு பேசிக்கொண்டே இருந்தார்) விவாதத்தின் தன்மையை, அமைதியைக் கெடுத்து விடாதீர்கள். நீங்கள் பேசுவது ஏதோ எதிரியை அடிக்கிற மாதிரி வேகமாக இருக்கிறது.)

திரு. க. சுப்பு : உள்நோக்கத்தோடு பேசுவதாகச் சொன்னார்கள். சீப் செகரட்டரி * * * முறையில் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் பேசுவது போல் எல்லோருக்கும் பேசத் தெரியும். தலைவர்கள் முடிவு செய்வார்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் சொல்லுகிறபோது பிரசாரம் உள்நோக்கத்தோடு நடைபெற்றது என்ற கருத்திலே 'உள்நோக்கத்தோடு' என்று சொன்ன காரணத்தால்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுந்தது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : புலவர் கோவிந்தன் அவர்கள் விளக்கம் சொன்னபோது 'எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை' என்று அவர் குறிப்பிட்டார் என்பதைக் குறிப்பிட்டு உள்நோக்கம் இல்லை என்றாலும் உள்நோக்கம் இருப்பது போன்று பிரசாரங்கள் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேனே தவிர, உள்நோக்கம் கற்பித்து அவரைப் பற்றிப் பேசினேன் என்று திரு. சுப்பு அவர்கள் எப்படிப் பேசினார்கள் என்று புரியவில்லை.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(திரு. க. சுப்பு எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேசவேண்டும். அதை முதலில் கற்றுக்கொள்ளுங்கள். என்னைக் கேட்காமல் எழுந்திருக்கக்கூடாது. நான் சொல்லாமல் எழுந்து பேசக்கூடாது.

திரு. க. சுப்பு : பின் எப்படிப் பேசுவது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கையைத் தூக்கி நான் அனுமதி தந்தால்தான் பேசவேண்டும். நான் நின்றுகொண்டு இருக்கும் போது நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள், சுப்பு, நீங்கள் திரும்பப் பெற வேண்டிய நிலைமைக்கு வந்துவிடும். உட்காருங்கள். பேச வேண்டும் என்றால் முதலில் கையைத் தூக்குங்கள், நான் அனுமதித்தால்தான் பேச வேண்டும், இல்லாவிட்டால் பேசக்கூடாது. உட்காருங்கள்.

(பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் சில துண்டுப் பிரசுரங்கள் விழுந்தன.)

திரு. ரா. உமாநாத் : சார், அவைக்குள்ளே நோட்டீஸ் விழுகிறது, என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி சார்ஜண்டை விட்டு நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. சுப்பு அவர்கள் உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசினார்கள் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார், நான் அப்படிப் பேசவேயில்லை. உள்நோக்கம் இல்லை என்று நான் ஏற்றுக்கொண்டு சொன்னேன், ஆனால் உள்நோக்கம் இருப்பதைப்போல அப்படிப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் பரவிக்கொண்டிருக்கிறது, அது இல்லாமல் இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொன்னேன். திரு. சுப்பு அவர்கள் புரிந்துகொண்டார்களோ இல்லையோ

எனக்குத் தெரியவில்லை. அந்தப் பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்தவர்களில் அவரும் ஒருவராக இருந்தார் என்பதை இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக அப்படிப் பேசினாரோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் * முறையிலே பேசியதாக அவர் சொல்கிறார்..........

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதிலே தாங்கள் உள்நோக்கம் என்று சொன்னதை அதிகாரிகளை என்று எடுத்துக்கொண்டார். அதிகாரிகள் தி.மு.க.வுக்கு உள் நோக்கம் கற்பிக்கிறார்கள் என்ற எண்ணத்திலே தான் * என்பதைச் சொன்னார்கள். உள்நோக்கம் என்பது இல்லை என்றால் * என்பதும் இருக்காது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அந்த * என்ற வார்த்தையை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அருள்கூர்ந்து தாங்கள் அதைப் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் சொன்னதைப் போல * என்ற வார்த்தையை நீக்கிவிட்டு "இன்கரக்ட்" என்ற வார்த்தையை சேர்த்துக் கொள்ளுமாறு ஆணையிடுகிறேன். தலைமைச் செயலாளர் அவர்களைப்பற்றி * என்று சொன்ன வார்த்தையையும் நீக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

திரு. க. சுப்பு : * என்று அர்த்தம், அதைக்கூட சொல்லக் கூடாதா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் என் கருத்து.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதற்குப் பிறகு இங்கே பல பேர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் கூட்டிய அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் இந்த பிரச்சினையைத் தலைமைச் செயலாளர் முன்னிலையிலேயே திரு. சுப்பு அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அப்போதே தலைமைச் செயலாளர் பதில் தந்திருப்பார்களானால் இந்த அவையில் அதைப்பற்றி எழுப்பப்பட வேண்டிய நிலைமை இருந்திருக்காது. அந்தப் பொறுப்பைத் தலைமைச் செயலாளர் அவர்கள் அங்கே நிறைவேற்றத் தவறிவிட்டார் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க்கட்சித் தலைவர் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டார் என்று நம்புகிறேன். அந்தக் கூட்டத்திற்குக் கவர்னர் அவர்கள் தலைமை வகித்து நடத்திக்கொண்டிருக்கிறபோது தலைமைச் செயலாளர் கவர்னர் முன்பே அதை மறுத்துப் பேசுகின்ற மரபு அதிகாரிகளுக்கு இல்லை என்று நான் மனதார நம்புகிறேன். மாறாக தனித்து கவர்னரிடம் தலைமைச் செயலாளர் சொல்லமுடியுமே தவிர அந்த மாநாட்டிலேயே அந்தக் கூட்டத்திலேயே தெரிவிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர் பொறுப்பைத் தட்டிக் கழித்தார் என்று சொல்லமுடியாது.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு குற்றச் சாட்டு என்ற முறையில் அல்ல, குற்றச் சாட்டுக்குரிய எல்லா அம்சங்களும் அதிலே இல்லாமல் இல்லை. என்ன தெரிவித்தார்கள் என்றால், ஆளுநர் அவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1–10]

அந்தக் கூட்டத்திற்கு நமது முதல்வர் வரவில்லை, மிக முக்கிய பொறுப்பேற்றிருக்கின்ற நிதியமைச்சர் வரவில்லை என்று தெரிவித்தார். முதல்வரவர்களுக்கு உடல்

நலம் இல்லை என்று அறிக்கையே வந்தது. என்னைப் பொறுத்தவரையில் நான் ஊரில் இல்லை. எப்படி அந்த மாநாட்டில் கலந்துகொள்ள முடியும் என்பதை எண்ணிப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன். வராததற்கான காரணங்கள் உங்களுக்குத் தெரியாது என்ற காரணத்தினாலேயே கேட்டீர்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது என்பதால் சொல்கிறேன். அவருக்கு உடல் நலம் இல்லை, நான் ஊரில் இல்லவே இல்லை, ஆகையினாலே கலந்துகொள்ள இயலவில்லை.

அதற்குப் பிறகு நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் பொறுப்புணர்ச்சியோடு துரைத்தனத்திற்குத் துணை புரிய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கருத்துக்களைத் தெரிவிக்கும்பொழுது அவ்வளவு சரியாக நிவாரணப் பணி அல்லது துயர் துடைப்புப் பணி நடைபெறவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இதே கருத்தைத் தான் அருமை உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களும் தெரிவித்தார்கள் என்று கருதுகிறேன், குறிப்பிலே இருக்கிறது. ஜேம்ஸ் அவர்களுக்கு அந்தக் கருத்துக்குப் பதில் சொல்வதற்கு முன்பு நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்கு 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' என்ற பத்திரிகையிலே வந்திருக்கின்ற கருத்தினை அவர்களுடைய சீரிய கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க நான் கேட்டுக்கொள்கிறேன்.

"The Tamil Nadu Government, even while engaged in rescue and relief operations after the first cyclone, took speedy measures to meet the second, though the State was not put to the test again. This showed the mettle of the Government machinery and the liaison it has built up with the armed forces.

The entire population was inoculated against cholera. No village affected by the earlier cyclone was neglected. People of three island villages were brought to Nagapattinam and lodged in a cinema. When the cyclone threat receded the next day, all the villagers were taken back home. Each family was given five kilos of rice and two litres of kerosene free.



Overnight, 200 bore-wells were dug with Government rigs in the affected areas of Thanjavur district, 24 of them in Nagapattinam to provide drinking water to the people. This could be a model procedure for meeting the cyclones to come.".

இதை எழுதியவர் நமது மதிப்பிற்குரிய பிரசாத் ராவ் என்ற அருமையான எழுத்தாளர் என்பதை நான் தெரிவிக்க வேண்டியதில்லை.

அதற்குப்பிறகு எனது அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களும் இந்தக் கருத்தை அப்படித்தான் சொன்னார்கள். நான் அதற்குப் பணிவோடு தெரிவிக்க விரும்புவது ஒன்றே ஒன்றுதான், இதை அவர் மறுப்பாரானால் எனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. மறுக்கின்ற உரிமை ஜேம்ஸ் அவர்களுக்கு உண்டு. புயல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் காலத்தைக் கடத்தாமல் விரைந்து பணியாற்றியிருக்கிறார் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர்., காலம் தாழ்த்தாது இராணுவத்தின் உதவியைத் திரு. எம்.ஜி.ஆர். கோரிப் பெற்றார் என்று இந்தக் கருத்தைக் தெரிவித்திருப்பது அவர் சார்ந்திருக்கின்ற கட்சியின் தலைவர் அருமை நண்பர் சந்திரசேகர் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதையும் அவர் மறுப்பாரேயானால் அந்த உரிமைக்குக் குறுக்கே நிற்கின்ற உரிமை எனக்கு இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப்பிறகு சென்ட்ரல் டீம் ஒன்று வந்தது. அந்த டீமுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் யார் என்பது இங்கிருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். அவர் திரு. சாக்ஸேனா அவர்கள். அவர்கள் தெரிவித்த கருத்து, தமிழ்நாட்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளைப் பற்றி இக்குழு அரசுக்குச் சிபாரிசு செய்யும். "தமிழ் நாட்டில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் குறித்து மக்கள் திருப்தி கொண்டுள்ளனர்" என்று அவர் கூறியிருக்கிறார். அவர் குழுவோடு அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தவர், அந்தக் குழுவின் தலைவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். பாதிக்கப்பட்ட மக்

களுக்குத் தமிழக அரசு புரிந்த உதவிகளை, உரிய காலத்தில் செய்து வருகிறது. புயல், வெள்ளச் சேதங்கள், விவரங்கள் குறித்து, அடுத்த மாதம் முதல் வாரத்தில் அரசிடம் அறிக்கை தாக்கல் செய்யப்படும்.— இப்படிச் சொல்லியவர் சாக்சேனா.

பெரியவர், பலகாலம், அமைச்சரவையில் இருந்தவர், மாஜி முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கருத்தைத் தெரிவித்தபோது, குடிசை இழந்தோருக்கு ரூ. 200 என்று அறிவித்தமைக்கு, முதலமைச்சருக்கு, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் பாராட்டுத் தெரிவித்திருக்கிற ஒன்றைத் தெரிவிக்கிறேன். முதல்வரது தலைமையில் தமிழக அமைச்சரவை கூடி, நிதி ஒதுக்கி, வேண்டிய வகைகளில் கடன் வசதிகளைச் செய்யும் என்று அறிவித்திருக்கிறார்கள். குடிசைகளைக் கட்ட தேவைப்படும் கீத்து, மூங்கில், போன்றவற்றின் விலை ஏறிவிட்டது, ஆகவே, உதவித் தொகையை உயர்த்த வேண்டுமென்று கருதிய நேரத்தில், குடிசை இழந்தவர்களுக்கு ரூ. 200 என்று முதலமைச்சர் கொடுத்த அறிவிப்பு மிகவும் பாராட்டுத் தெரிவிக்க வேண்டிய ஒன்று என்று அவர் தெரிவித்திருக்கிறார். சரி, பாராட்டுக் கொடுக்கட்டும் ஒரு பக்கத்தில்.

அறிவிப்பு எல்லாம் ஒழுங்காக நடைபெற்றதா என்ற கேள்வி நியாயமான கேள்வி என்பதை நான் மறுக்கவில்லை. ஒன்றை மட்டும் இந்த அவை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அருள் கூர்ந்து உன்னிப்பாக அதைக் கவனிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப் போல், இந்த ஆண்டு மழை வந்ததைப் போல் இந்த ஆண்டு வந்த வெள்ளத்தைப் போல், நாம் இதுவரை சந்தித்ததில்லை. ஆகவே, மாசிவ் ரிலீஃப் ஆப்பரேஷன்ஸ் நடக்கும் நேரத்தில், சில இடங்களில், தவறுகள் நடக்கவில்லை என்று சொல்லவில்லை, நடக்கும்.

உதாரணத்திற்கு. ஒன்றைச் சொல்கிறேன். மதுரையில் ஒரு குப்பிட்ட பகுதியில், முதலமைச்சர் அங்கே சென்றிருந்தபொழுது, உங்களுக்கெல்லாம் ரூ. 100/- கொடுக்கப்பட்டதா என்று கேட்டபோது, ரூ. 80/- தான் தந்தார்கள்



என்று சொன்னவுடன், உடனடியாக, அந்த இடத்திலேயே அதிகாரிகளைக் கூப்பிட்டு, அந்தப் பணத்தை ஏன் கொடுக்கவில்லையென்று கேட்டு, உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்றும் அவர்களைப் பற்றி ஆராய்ந்து, அறிந்து, தெரிந்து உடனடியாகத் தகவல் தெரிவிக்கும்படி, கலெக்டரிடம் உத்தரவு தெரிவித்துவிட்டு வந்தவர் நம்முடைய முதல்வர் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆகவே, தவறுகளைச் சுட்டிக்காட்டுவது அரசுக்கு நல்லது. அதுவும் காழ்ப்புணர்ச்சியில்லாமல், சுட்டிக்காட்டுகிறபொழுது அரசு உண்மையிலேயே மகிழ்ச்சி அடையும். இன்னும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன், அனைத்துக் கட்சியினரும் போட்டி போட்டுக்கொண்டு, தமிழக மக்களை வாழ்விக்கின்ற அந்தக் காரியத்திலே, நூற்றுக்கு நூறு ஒன்றி நிற்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த, இந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று தரம் பிரிக்க நான் விரும்பவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், சி.பி.ஐ., ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அல்லது மார்க்கபந்தை உள்ளடக்கிய கட்சியானாலும் சரி, லத்தீப் அவர்களின் மூஸ்லீம் லீக் கட்சியானாலும் சரி, பார்வார்ட் பிளாக் கட்சியானாலும் சரி, அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு உதவுகின்ற வகையில் மிக ஒற்றுமையாகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சிலபேர் சில கேள்விகளைக் கேட்டார்கள், அதற்கு நீங்கள் என்னென்ன செய்யப் போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அதிலே, ஒன்று தொண்டமான் கேட்டதாகக் கருதுகிறேன். அதற்கிடையில், வரதராஜன் ஒரு கேள்வியைக் கேட்டார். குத்தகைக்குச் சாகுபடி செய்யும் விவசாயிகளை குத்தகை பாக்கிக்காக வெளியேற்றப்படுவது தடுக்கப்பட வேண்டுமென்று இங்கே கிளப்பப் பட்டது. நான் அதற்குத் தருகிற பதில், அப்படி நடைபெறாமல் இருப்பதற்காகச் சட்டம் வருகிறது. அது இந்தத் தொடர் கூட்டத்திலேயே வரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்று கேட்டார்கள். கடன் நிவாரண சட்டங்கள் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படவேண்டுமென்று மார்க்கபந்து அவர்கள் கேட்டதாக நான் கருதுகிறேன். அந்த மசோதா. கூட்டுறவுத் துறையோடு தொடர்பு கொண்டு வர இருக்கிறது. மசோதா இங்கே தாக்கல் செய்யப்பட விருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு). அது இன்று தாக்கலாகியிருக்கிறது.

அதற்குப் பிறகு இன்னும் சில பேர் சில கேள்விகளைக் கேட்டார்கள். அதிலே, நான் கருதுகிறேன்—அதற்கு முன்பு புலவர் கோவிந்தன் ஒரு கேள்வியைக் கேட்டார். கேள்வி அல்ல. ஒரு யோசனையைச் சொன்னார். ரூ. 5,000 மதிப்புள்ள நிரந்தரக் கட்டிடங்களை, 5 இலட்சம் எண்ணிக்கை வரை, பாதுகாக்கப்பட்ட கட்டிடங்களாகக் கட்டித் தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். வளமான வேண்டுகோள் அது. ஆனால், சர்க்காருக்கு இருக்கிற நிதி வசதியைக்கொண்டு அது ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

இதற்கிடையில் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்படும் குடிசைகள் 50 அல்லது 100 எண்ணிக்கையின் அமைப்பில் இருக்கின்றன. அவர்கள் ஏற்கனவே 5 ஆயிரம் வீடுகளும், அதற்குப் பிறகு 15 ஆயிரம் வீடுகளும் கட்டித்தர இசைந்திருக்கிறார்கள். அதற்காக நான் புலவர் கோவிந்தன் அவர்களுக்கு, உங்களுடைய சீரிய யோசனை அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒவ்வொரு வருடமும் சுமார் 5 கோடி ரூபாய் நிவாரணத்திற்காக ஒதுக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்கள். அருமையான கருத்து, அந்தக் கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கோவிந்தன் அவர்கள் வேறு பல கருத்துகளையும் தெரிவித்தார்கள். அதை விட இன்னும் சில பேர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். குறிப்பாக நமது கூத்தக்குடி சண்முகம் அவர்கள் ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். அவர் இங்கே இல்லை என்று கருதுகிறேன். எமனேஸ்வரத்தில் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரை தவறு செய்தார் என்பதற்காக, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசாமி





அவர்களால் குற்றம் சாட்டப்பட்டு, கலெக்டரால் சஸ்பென்ட் செய்யப்பட்டார். அப்படிப்பட்டவரை, செக்ரடேரியட்டிலிருந்து சென்ற உத்தரவின் காரணமாக அவர் வேலையில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றும் தெரிவித்தார். நான் அதைக் குறித்து விசாரித்துத் தெரிந்து கொண்ட உண்மையை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சஸ்பென்ட் செய்தது உண்மை. அதற்குப் பிறகு அவரைக் கலெக்டர் அவர்களே விசாரித்து, அவர் மீது எந்தத் தவறும் இல்லை என்றும் அந்தக் குற்றச்சாட்டில் துளிக் கூட உண்மை இல்லை என்பதை அறிந்து அவரை கலெக்டரே அந்த சஸ்பென்ஷன் உத்தரவை ரத்து செய்து மீண்டும் வேலையில் அமர்த்தியிருக்கிறாரே தவிர, அதற்கும் கோட்டைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, சிவசாமி அவர்கள் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதற்குப் பிறகு இன்னொன்றும் இங்கே தெரிவிக்கப்பட்டது. நூறு ரூபாய் தருவதாகச் சொல்லி, அந்தப் பணம் சென்று சேரவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் கூடத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அனைவரும் ஒட்டுமொத்தமாக சேரவில்லை, சேரவில்லை என்று சொல்லுகிறீர்களே தவிர எந்தெந்தப் பக்கத்திலே சேரவில்லை என்பதைப் பட்டியல் போட்டு இங்கே என்னிடத்திலே அல்லது அருமை சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலோ தருவீர்களானால் அரசுத் துரைத்தனத்திற்குக் கிடைக்குமானால், அந்தப் பணத்தை சரி செய்கிற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நாங்களும் விசாரித்துக் கொண்டுதான் இருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர், அதிகாரிகள் மூலமும் வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமும் நாங்கள் விசாரித்துக் கொண்டுதான் இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு தொண்டமான் பேசும்போது அவர்கள் கூறினார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் இப்போது இங்கே இல்லை. இல்லாவிட்டாலும் பேச்சு குறிப்பிலே வரும் அவர்கள் படித்துக் கொள்வார்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராம அதிகாரிகள் கிட்டத்தட்ட 60 பேர்களை அங்கே இருக்கிற டி.ஆர்.ஓ. (குறுக்கீடு) ஆர்.டி.ஓ. அவர்கள் சஸ்பென்டு செய்து வைத்திருக்கிறார்கள் என்ற கருத்தை அவர் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் விசாரித்தேன். விசாரித்ததில் எனக்குக் கிடைத்த தகவல் அப்படியே சஸ்பென்ஷனிலே

இருக்கக்கூடியவர்கள் தொகை 60 அல்ல, 24. அந்த 24 பேர்களை எப்படி ஒரே நேரத்தில் நீங்கள் சஸ்பென்ட் செய்தீர்கள் என்று நான் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஒவ்வொரு நபருக்கும் அவர் செய்த குற்றம் என்ன அல்லது தவறு என்ன என்று தெளிவாக நீங்கள் அரசுக்கு எழுதி அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளேன். அவர் அந்தக் கருத்துக்களை இங்கே எழுதி அனுப்பியதற்குப் பிறகு, ஒவ்வொருவராகப் பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்ற உறுதியையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு தெரிவித்த கருத்துக்களையே திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள், மற்றபடி புதிய, புதிய கருத்துக்களைச் சொல்வதற்கில்லாமல் திருப்பித் திருப்பி இதையே தான் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும், எனக்குத் தெரியும்.

இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீமைப் பற்றி எனது அருமை உறுப்பினர் உமாநாத் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நிச்சயமாக அருமையான கருத்து. இந்தக் கருத்தை நம்முடைய அருமை நண்பர் இராமமூர்த்தி அவர்கள்கூட பாராளு மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தைப் பற்றி இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும். அப்படிப் பரிசீலித்து நல்ல கருத்துக்கள் இருக்குமானால் அதைப் பெரும் அளவிற்கு இந்தச் சர்க்கார் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக சில பேர் சொன்னார்கள் வெள்ளம் பாய்ந்த நேரத்தில் தண்ணீரிலே வந்தீர்களா என்று கேட்டார்கள். வெள்ளம் இருந்த நேரத்தில் ஹெலிகாப்டரில் பறந்து சென்றீர்களே என்ன தெரிந்தது என்று கேட்டார்கள். வெள்ளம் சூழ்ந்திருந்த நேரத்தில் ஹெலிகாப்டரில் பறக்கும்போது, மேப்பை வைத்துக்கொண்டு பறந்து கொண்டிருந்த போது நம்மோடு அந்த விமானத்தில் வந்த ஜி.ஓ.சி. மகாதேவன் அவர்கள் மிகத் தெளிவாக, லொகேஷன் நன்றாகத் தெரிந்தவர்கள், டோபோகிராபி தெரிந்தவர், அவர் இது தான் நாகப்பட்டணம் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது—அன்பழகன் சிரிக்கிறார்கள். நான் அன்பழகனைப் பார்த்துக் கேட்கிறேன். தயவுசெய்து நீங்கள் குடியரசுத் தலைவர் இந்தத் தண்ணீரில் நீந்திச் செல்ல வேண்டுமென்று சொல்கிறீர்களா





அல்லது முதலமைச்சராக இருப்பவர் இந்த வெள்ளத்தில் நீந்திச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறீர்களா, எனக்குப் புரியவில்லை. அதற்காகக் கேட்கிறேன். தண்ணீர் பெருமனை விற்கு இருக்கிறது. யாரும் நெருங்க முடியவில்லை. சாலை வழியாகச் செல்லலாம் என்றால் காரை எடுத்துக் கொண்டு செல்லலாமா என்றால் வழி நெடுகிலும் மரங்கள் விழுந்து கிடக்கின்றன. யாரும் போக முடியவில்லை. இந்த நிலைமையில் நீங்கள் போகவில்லையே என்றால் எனக்குச் சங்கடமாக இருக்கிறது. அப்படிப் போகிற அளவிற்கு நாங்கள் தெய்வாம்சங்கள் அல்ல. அப்படியே பறந்து சென்று பார்க்கலாம் என்று முடிவு செய்து நாங்கள் சென்று வந்தோம். நாங்கள் சென்று வந்தோமே என்று கூறலாம். ஆனால் அது வெள்ளம் வடிந்த பிறகு.

திரு. மு. கருணாநிதி; அமைச்சர் இராகவானந்தம் சிரிப்பதைப் பார்த்தால் 'நான் நடந்து போனேனே' என்று உங்களை பார்த்துக் கேட்பது போல இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்; அவர் நடந்து போக வேண்டும் என்பதற்காகவே அனுப்பியவனே நான். காரணம் அவர் சில பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார். எங்கெங்கு நன்நீர் கிடைக்கிறது என்பதைக் கண்டு பிடித்து அங்கு நல்ல நீர்க் குழாய்களை ஏற்படுத்துவதற்கும் திட்டங்கள் தீட்டுவதற்கும், அரசு அதிகாரிகளோடு இணைந்து அவர்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று சொல்லி, அரசு அதிகாரிகளுக்கு வழிகாட்டியாகச் செயல்பட வாய்ப்பு பெற்றுச் சென்றார். நானும், மற்றவர்களும் நேரிடையாக செல்லாததற்குக் காரணம், யார், யார் எந்தெந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செயல்படுவது, அவர்கள் சென்று தகவல்கள் அனுப்பியவுடன் உத்திரவிடுவதற்கு வசதியாக இங்கே நான் இருக்கவேண்டியது அவசியம் என்பதால் எங்களில் ஒரு சிலர் இங்கே இருந்தோம் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், தலைவர் மூலமாக.

மாண்புமிகு திரு கி. மனோகரன்; எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இராகவானந்தம் அவர்களுக்கும் இருக்கிற நெருங்கிய உறவு எனக்குத் தெரியும். இராகவானந்தம் சிரித்தார் என்றால் ஏன் சிரித்தார் என்பது எனக்குத் தெரியும்.

[1978 சனவரி 2

திரு மு. கருணாநிதி: தலைவரவர்களே, எனக்கும் அவை முன்னவருக்கும் இருக்கும் உறவை விட அதிகமான உறவு இல்லை.

மாண்புமிகு திரு கி. மனோகரன். இதற்காகப் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். விவாதத்தை விரிவுபடுத்த விரும்பவில்லை. அன்றைக்கு இந்தத் துயர் துடைப்புப் பணியில் ஈடுபட்ட அத்தனை பேருக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் நான் இதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசின் சார்பாகவும், அமைச்சர்கள் சார்பாகவும், முதலமைச்சர் சார்பாகவும் நான் நன்றி தெரிவித்து நமது இந்தியத் துணைக் கண்டத்தின் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள், உடல் நலம் இல்லாமல் இருந்தும் வெள்ளப் பகுதியை நான் சென்று பார்த்து விட்டு வருகிறேன் என்று கடமை உணர்ச்சியோடு அவர் இந்தப் பகுதிகளுக்கு வந்து பார்வையிட்டுச் சென்றதற்காக அவருக்கு இந்த அரசு சார்பாக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக நம்முடைய ஆளுநர் அவர்கள் இந்த வயதிலும் இந்த வெள்ளப் பகுதிகளைச் சென்று பார்ப்பதில் மட்டும் ஈடுபடாமல், பணவசூலிலும் ஈடுபட்டு பெரும் ஆர்வத்தைக் காட்டி இந்தத் துரைத்தனத்திற்கு உதவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி அவருக்கு இந்த அரசு சார்பாக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-30].

திரு ஏ. ரகுமான்கான் : ஆன் எ பயிண்ட் ஆப் இன்பர்மேஷன். சபாநாயகர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் நான் ஏற்கெனவே சில கருத்துக்களை சொல்ல முடியாமல் போய்விட்டது. ஆகையால் இந்த பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனைக் கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் புயல் வெள்ள நிவாரண நிதி வெள்ளை அறிக்கையை இங்கே சமர்ப்பித்து, அந்த விவாதத்தை தொடக்கி வைத்த போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் டெல்லியிலே உரை நிகழ்த்துகின்ற போது திராவிட முன்னேற்ற கழகத்தைத் தவிர மற்ற எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்கிறார்கள் என்று கூறியுள்ளார். முன்னவர்



1978 சனவரி 2] [திரு. ஏ. ரகுமான்கான்]

சொல்லிய கருத்து சரியா, அல்லது முதல்வர் சொல்லிய கருத்து சரியா? அல்லது இரண்டும் ஒரே பாடல், ஒரே ராகம் தானா? விளக்கம் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. ராமச்சந்திரன் : அவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிய கருத்து சரியானதா, தவறானதா என்பதைப் பற்றிய விளக்கம் தர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன் என்பதால் தலைவர் அவர்கள் கொஞ்சம் பொறுமையாக இங்கே இருக்கின்ற மன்ற உறுப்பினர்களை கேட்டுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்தப் புயல் நிவாரணப் பணி தொடங்கிய நேரத்தில் ஆங்காங்கே பல்வேறு இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்படுத்தப்பட்டன என்பதும், பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகவும், ஆங்காங்கே மக்களை இந்த அளவிற்கு துன்பத்திற்கு பலி ஆகாதவர்களைக் கூட, இந்த அளவுக்குப் பணம் கொடுக்கவேண்டும், இந்த அளவுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று வற்புறுத்துங்கள் என்றெல்லாம் சொல்லியதோடு, அந்த நேரத்தில் நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு ஆங்காங்கே ஒரு சிலர் இடையூறு செய்தார்கள் என்ற செய்திக்குப் பிறகு தான் நான் இதைச் சொன்னேன் என்பதை இங்கே ஒப்புக் கொள்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிறையில் இருந்து கொண்டு பணம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன பிறகும், எந்த காரணத்தைக் கொண்டும் இந்த புயல் நிவாரண பகுதியில் வெள்ளம் ஏற்படுத்திய பயங்கரமான தொல்லைக்கு ஆட்பட்ட மக்களுக்கு எந்த நேரத்தில் எந்தவித வேறுபாடும் இன்றி ஒத்துழைக்க வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டபிறகு, திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் ஒத்துழைக்க முன் வந்து ஒத்துழைத்தார்கள் என்பதையும் இங்கே நான் தெளிவுபடுத்திக் கொள்கிறேன்.

ஆகவே, இருந்த நிலைமைகளைச் சொல்கிறோமே தவிர, முதல்வர் அவர்கள் கருத்து வேறு, முன்னவர் கருத்து மாறுபட்டு இருக்கிறது என்ற பிரச்சினை இல்லை. இருப்பதைச்

சொல்கிறோம். நடப்பதைச் சொல்கிறோம். வருகின்ற தலைவர்களை வைத்துக் கொண்டு சொல்கிறோமே ஒழிய வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த வகையில் தான் இங்கே வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது அதைப் பற்றி கருத்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி கூறும் வகையிலும், எடுத்துக் காட்டுகின்ற குறைகளை நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் நாங்கள் செயல்படுவதற்கு விரும்புகின்ற நண்பர்களுடைய நோக்கம் அடிப்படையாக, ஆதாரத்தோடு இருக்குமானால் நிச்சயமாக இந்த அரசு அதைப் பின்பற்றும் என்று சொல்கிற நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே முன்னவர் அவர்கள் நேரமில்லாத காரணத்தால் சுருக்கமாக அந்த நிலைமையைச் சொல்லி விட்டார்கள். நான் மதுரைக்குச் சென்றபோது ஒரு இடத்திலே—குறிப்பாக வேடசந்தூர் பகுதியிலே—ஆங்காங்கே யாரோ துணிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. நான் போனவுடன் என் கையிலே கொடுத்து அதை நீங்கள் வினியோகிக்க வேண்டுமென்றார்கள். வந்த அதிகாரிகளைக் கேட்டேன். யாருடைய பெயர் குறிப்புமின்றி, யாருக்குக் கொடுக்கிறார்கள், யாருக்குக் கொடுக்கவில்லை என்ற பட்டியல் இன்றி இதைக் கொடுக்கின்றீர்களே என்று கேட்டபோது அதிகாரிகள் சொன்னார்கள், இது நாங்கள் கொடுப்பதல்ல, யாரோ வசதிமிக்க ஒருவர் நல்லெண்ணத்தோடுதான் செய்கிறார் என்றும், நாங்கள் சொல்வதைக் கேட்கவில்லை, நேரடியாகக் கொண்டுபோய் மக்களிடம் கொடுக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். ஒரு இடத்திலே இருக்கிற மக்களுக்கு ஒருவருக்கு இரண்டு சேலை, இரண்டு வேஷ்டி ஆகிவிடும் என்ற வகையில் அரசாங்கமும் கொடுத்து தனியாரும் கொடுத்து அதே நேரத்தில் வேறு ஒரு பகுதியில் ஒரு சேலைதான் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது, ஒரு வேஷ்டிதான் கொடுக்கப்பட்டது என்ற நிலைமை ஏற்படுமானால் அது அரசு செய்த தவறு என்று மக்கள் கருதுவார்களா அல்லது தனிப்பட்டவர் நல்ல நோக்கத்தோடு செய்தார், அது இந்த விளைவை ஏற்படுத்திவிட்டது என்று எத்தனை மக்களுக்குச் சொல்லமுடியும் என்று விநியோகித்துக் கொண்டிருந்தவர்களை அழைத்து, நீங்கள் கொடுக்கப்போகிற இடத்தில் அரசாங்கம் கொடுத்துவிட்டதா என்பதைத் தெரிந்து கொண்டு விநியோகியுங்கள், அல்லது அப்படிக் கொடுக்கவேண்டுமென்று விரும்பினால் அரசாங்கம் கொடுத்து



விட்டிருந்தால் நீங்கள் வேறு எந்தப் பகுதிக்குக் கொடுக்க முடியும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பட்டியலை வாங்கி அதை விநியோகியுங்கள், இப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்திவிடாதீர்கள் என்று சொல்லி அதற்குரிய மானேஜிங் டைரக்டரோடு நானே தொலைபேசியில் பேசி இப்படிச் செய்வது விபரீதங்களை விளைவித்துவிடும், அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரை ஏற்படுத்திவிடும். அதிகாரிகளுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்திவிடும், இதை மாற்ற வேண்டும், நீங்கள் விரும்பினால், நீங்கள் ஏதாவது செய்ய விரும்பினால் மாவட்ட ஆட்சித் தலைவரோடு, அதிகாரிகளோடு கலந்து பேசி உங்கள் ஆட்களை அனுப்பி பட்டியலை வாங்கிக்கொண்டு நீங்கள் விநியோகிப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று நானே தெரிவித்தேன்.

அதேபோல் மதுரையில் முதலில் முன்னாலிருந்த பழக்கப்படி இந்த விபரீதங்கள் விளைந்தவுடன் ஆங்காங்கு குடிசைகளுக்கு ரூ. 80 என்று அவர்கள் முன்னதாகக் கொடுக்கத் துவங்கி விட்டார்கள். ரூ. 200 என்று அறிவித்த பிறகு முன்னால் ரூ. 100 தந்திருந்தால் பிறகு இன்னும் ரூ. 100 என்று திட்டமிட்டு கொடுக்கவேண்டும், இல்லாவிடில் பணம் வீணாகிவிடும் என்று சொன்ன காரணத்தால் அவர்கள் அப்படிக் கொடுக்க முயன்ற நேரத்தில் ரூ. 100 ஆக எழுதப்பட்டு திருத்தப்பட்டதற்குத் தாசில்தாரை அழைத்து அதே நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரையும் வைத்துக் கொண்டு இது எப்படி திருத்தப்பட்டது என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், முதலில் ரூ. 80 கொடுத்து விட்டோம் முதலில் ரூ. 100 கொடுங்கள், மறுபடியும் ரூ. 100 கொடுக்கலாம் என்று உத்தரவு வந்தவுடன் ரூ. 100 என்று மாற்றிவிட்டோம் என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னேன், இதில் எனக்கு நம்பிக்கை இல்லை, நீங்கள் விசாரித்து தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் மூலம் தகவல் தெரிவித்து தவறு நடந்தது, பத்து ரூபாய் எடுத்துக்கொண்டு அதிகாரி பாக்கி சில்லறையைக் கொடுத்துவிட்டார். அவரைப் பதவியிலிருந்து தள்ளி வைத்துவிட்டோம் என்று தெரிவித்தார்கள் என்று சொல்லும்போது தவறு நடப்பது எங்களுக்குத் தெரிந்தால் அது யாராக இருந்தாலும் சரி, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்த நிலையில் நண்பர்களாக இருந்தாலும் சரி விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதை

இங்கே நல்லெண்ணத்தோடு சொன்ன அனைவருக்கும் இந்த ஆட்சி சார்பாக உறுதி கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, முதல்வர் அவர்களுக்கும், முன்னவராக இங்கே இருக்கிற எனக்கு மட்டும் அல்ல, அமைச்சரவையில் இருக்கிற அத்தனை அமைச்சர்களுக்கும், அந்தக் கட்சியைச் சார்ந்த அனைவருக்கும் ஒரே பாடல் ஒரே ராகம்தான் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன். ஆளுநர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தேன். அதேபோல் நமது பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராம் அவர்களும் இங்கே வந்து வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு தன்னாலான உதவியைச் செய்வதற்கு முன்வந்ததற்கு அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் பெட்ரோலியம் அமைச்சர் திரு. பகுகுணா அவர்களுக்கும், அதேபோல் ஜனதாக்கட்சியைச் சார்ந்த தலைவர் திரு. சந்திரசேகர் அவர்களும் இங்கே வந்தார்கள், அவர்கள் அத்தனைபேர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் மது தந்தவதே, ரெயில்வே அமைச்சர் அவர்களும் இங்கே வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எல்லாம் போய்விட்டு வந்தார்கள். அவர்களுக்கும் நன்றி.

அதேபோல் நமது பெருமதிப்பிற்குரிய இந்திய துணைக் கண்டத்துப் பிரதம அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களும் வருகை தந்தார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் தான் மனிதர்களுடைய எண்ணங்களை, மனிதர்களுடைய உணர்வுகளை வெளியாக்கமுடியும்.

[பிற்பகல் 1-40]

யாரெல்லாம் இப்படிப்பட்ட நேரத்தில் மக்களைக் காப்பாற்ற முன்வருகிறார்களோ அவர்களை மறப்பது மனிதப் பண்பாகாது. பாதிக்கப்பட்ட மக்களை எல்லாம் ஓடோடி வந்து பார்வையிட்ட அனைவருக்கும் துரைத்தனத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல, பலமுறை





பலமுறை இங்குவந்து பாதிக்கப்பட்ட மக்களை எல்லாம் பார்வையிட்ட அமைச்சர் பி. இராமச்சந்திரன் அவர்களுக்கும் இந்த அரசின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதையொட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வந்த பல்வேறு நிறுவனங்கள் அனைத்துக்கும்—இன்றைக்குக் காலையில் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல்—இராமகிருஷ்ண மிஷன் நிறுவனம் 50 லட்சம் திரட்ட முன்வந்துள்ளது, அதே போன்று 'கேர்' நிறுவனம் அந்தப் பணியில் ஏற்கனவே இறங்கிவிட்டது. ரோட்டரி, லயன்ஸ் நிறுவனங்களும் சிங்க முழக்கத்தோடு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன, 'ஜூனியர் சேம்பர் ஆப் காமர்ஸும் தனது கடமையையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு ஆட்சி நிறுவனங்கள் அனைத்தும் இந்தத் துயர் துடைப்புப் பணியில் மிகவும் உற்சாகமாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

அத்தோடு இன்னொன்றையும் தெரிவிக்க வேண்டும். பாரத் ஹெவி வெகிக்கல்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், அவர்கள் எந்த அளவுக்குத் திருச்சியில் பணியாற்றினார்கள் என்பதை நான் நேரில் சென்றிருந்தபோது தெரிந்துகொண்டேன். அவர்கள் அனைவருக்கும் அரசின் நல்வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிறுவனத்திலுள்ள தொழிலாளர்கள் மட்டுமல்ல, நிர்வாகிகளும் தொழிலாளர்களோடு உற்சாகத்தோடு, தொழிலாளர்களை உற்சாகமூட்டி, உதவிசெய்தமைக்காக, இதன் நிர்வாகத்தினருக்கும் இந்த அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், இராணுவத்தைச் சேர்ந்தவர்கள், விமானப் படையைச் சேர்ந்தவர்கள் அரும்பணி ஆற்றினார்கள். அவர்களுக்கும் இந்த அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் செய்த உதவியை இந்த நாடும் மறக்காது, இந்த மன்றமும் மறக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துயர் துடைப்புப் பணிகளில் தாங்களாகவே முன்வந்து பணியாற்றிய மருத்துவர்கள், மேலும், படித்துக் கொண்டிருக்கின்ற மருத்துவ மாணவர்கள் இவர்களையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. நான் நேரிலேயே பார்த்தேன். காலரா தடுப்பு ஊசி, மலேரியா

தடுப்பு ஊசி போன்றவைகளை அவர்களே போட்டுக்கொண்டி
ருந்தார்கள், அரவாக்குறிச்சி என்ற ஊரில், மேலும் ரிலீப்
காம்ப் அமைத்து அவர்களாகவே முன்வந்து பணி புரிந்தார்
கள். அவர்கள் அனைவருக்கும் அரசின் சார்பில் என் நன்
றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த மாமன்றத்தில் பணியாற்றுகின்ற, கடமை
யாற்றுகின்ற ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், பாரா
ளுமன்ற உறுப்பினர்களுக்கும், எம்.எல்.சி.க்களாக இருப்பவர்
களுக்கும் ராஜ்யசபை உறுப்பினர்களுக்கும் இந்தச் சந்தர்ப்
பத்தைப் பயன்படுத்தி இவர்கள் அனைவருக்கும் இந்த அரசின்
சார்பாக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதோடு, எப்போதும் இல்லாத அளவுக்கு வங்கிகள் உதவி
செய்ய முன்வந்தது பாராட்டுதற்குரியது. பல வங்கி
கள் தாமாகவே முன் வந்து 25 ஆயிரம், 50 ஆயிரம், ஒரு
லட்சம், மூன்று லட்சம் என்றும் வாரி வாரி வழங்கியதை
இப்போதுதான் நான் பார்த்தேன். வங்கிகள் என்பது
யாருக்காக இருக்கின்றன என்பதை விளக்குகின்ற முறையில்,
அதற்கேற்ற இலக்கணத்திற்கு இலக்கியமாய், புயலால் பாதிக்
கப்பட்ட மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்ய முன்
வந்தது என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.
அப்படிப்பட்ட வங்கிகள் நிர்வாகத்தினர் அனைவருக்கும்
இந்த அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் இதுவரை
நமக்கு 33·91 கோடி ரூபாய் தந்திருக்கிறது. அதோடு
பிரதம அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 50 லட்சம் ரூபாய்
வழங்கியிருக்கிறார்கள். அருமை சங்கரய்யா அவர்கள்
பேசும்போது வீர உணர்வோடு சொன்னார்கள். இன்னும்
அதிகப்படியாக நமக்குத் தேவை. அதற்கு என்று ஒரு
போராட்டமே வேண்டுமென்றாலும் அதற்கும் தயாராகலாமா
என்று கேட்டார்கள். சட்டமன்றத்தில் தீர்மானமும் போட
லாம் என்றும் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல ''அவுட்-சைட் தி பிளானில்'' சேர்க்கப்பட
வேண்டுமென்றும், கேட்டுக்கொண்டார்கள். நான் மிக்க பணி
வன்போடும், அடக்கத்தோடும் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். அவர்கள் நெகிழ்ந்த உள்ளத்தோடுதான் இன்னும்



இருக்ிறார்கள் என்று நான் கருதுகிறேன். இன்னும் அதிகமாக
உதவிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கும், என்
போன்றவர்களுக்கும் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்
களுக்கும் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே
உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
அப்படி வரவில்லை என்றால், இத்தோடு, உங்கள் கதை
முடிந்துபோய்விட்டது. ''சுபம்'' என்று முற்றுப்புள்ளி
போடுவார்களானால், அருமை நண்பர் சங்கரய்யா அவர்
கள் கூறிய யோசனையை இந்த அவை நிச்சயமாகப் பரிசீலிக்
கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்
கிறேன்.

ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும், ''போராட்
டம், போராட்டம், போராட்டம்'' என்று நாம் நமது
அரசியல் வாழ்வில் அடிக்கடி உண்டாக்கத் தேவையில்லை என்
பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்றும் நான்
இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ரா. உமாநாத்: நமது அரசியல் வாழ்வே ஒரு
போராட்டம் தானே.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தற்போது திரு. உமா
நாத் அவர்கள் என்னோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.
போராட்டம் என்பது தேவைதான். ஆனால், என்ன காரணத்
திற்காக, எந்தக் காலத்தில், எப்படிப் போராட்டம் நடத்து
வது என்பதற்கு ஒரு முறை இருக்கிறது, வரம்பு இருக்கிறது.
நெறி இருக்கிறது அந்த நெறியை மாற்றி நாம்
''போராட்டம், போராட்டம்'' என்று ஆரம்பித்தால், அது
பிசுபிசுத்துப் போய்விடும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்
பத்தில் அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு, கருத்துக்கள்
வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த அரசின் சார்பில்
நன்றியைத் தெரிவித்துக் கொண்டு நான் அமர்கிறேன்.
நன்றி.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, மன்னிக்கவேண்டும் இடையிலே குறுக்கிடுவதற்
காக, இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு
வாலிபன் போராடி, மக்களைக் காத்து, அதன் விளைவாக
அந்தக் குடும்பமே வாழ்விழந்து நிற்கின்றது என்றெல்லாம்
சொன்னார்கள். அப்படிப்பட்டவர், அவர் எந்தக் கட்சியாக
இருந்தாலும், நிச்சயமாக இந்த அரசு உதவி செய்யும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 2

அந்தப் பரமதயாளன், பரமதயாள உள்ளத்தோடு பணியாற்றி, இன்று அவரது குடும்பம் பரிதவிக்கின்றது என்பதை உணர்கிறோம். அப்படிப்பட்ட அவருக்கு இங்கே அஞ்சலி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிப் பணியாற்றி, இதனால் விபத்துக்குள்ளானவர்கள் யாராக இருந்தாலும், அவரது குடும்பத்திற்கு நிச்சயமாக இந்த அரசு உதவி செய்யும், நன்றி தெரிவிக்கும், கை கூப்பி அஞ்சலி செய்யும் என்று கூறுகிறேன். மீண்டும் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி, ஒத்துழைத்த அனைவருக்கும் இந்த அரசின் சார்பில் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: மன்னிக்கவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு நான் பேசக் கூடாது. ஆனால், இப்போது என்னிடத்திலே திரு. சங்கரய்யா அவர்கள் அப்படிப் போராட்டம் என்ற வார்த்தையை தான் குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் பேசும்போது, ''போராட்டம்'' என்று வார்த்தையை குறிப்பிட்டேன். அவர்கள் அப்படிக் குறிப்பிடவில்லை, தீர்மானம் போடலாம் என்றுதான் சொல்லியிருப்பதாகக் கூறுவதால், அந்த வார்த்தையைச் சபையின் நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன்னவரின் தெளிவான விளக்கத்திற்குப் பிறகு விளக்கம் தேவையில்லை. மீண்டும் அவை பிற்பகல் 4 மணிக்கு கூடவேண்டும்.

திரு. என். வரதராசன் எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். ஒருவருக்கு இல்லை என்று சொல்லியாகி விட்டது. அப்படியே தாங்கள் பேச முற்பட்டால், அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படும். எனவே தயவுசெய்து உட்காருங்கள்.



1978 சனவரி 2]

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கைகளை வீசியவர்மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைக் குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று (2—1—1978) பகல் சுமார் ஒரு மணி அளவிற்கு பார்வையாளர்கள் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை ஒருவர் வீசியுள்ளார். அவர் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜண்ட்) காவலில் இருக்கிறார். விசாரணையும் நடந்து கொண்டிருக்கிறது. முறைப்படி அனுமதிச் சீட்டுப் பெற்று பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இன்று மாலை அவையில் முடிவு செய்யலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதம் முடிவுற்றது.

* * * * * *

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

(மாலை 4-00 மணி)

பேரவை மீண்டும் மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று காலை பார்வையாளர்கள் மாடத்திலிருந்து ஒருவர் துண்டுப் பிரசுரங்களைப் பேரவைக்குள் வீசியதும், அது குறித்துப் பேரவைத் தலைவர் பேரவைக்கு அறிவித்ததும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். இது குறித்து விசாரித்ததில், அவருக்கு அனுமதி சீட்டு வழங்க பரிந்துரை செய்தது மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் என்று தெரிய வருகிறது.

துண்டுப் பிரசுரம் வீசிய திரு. கேசவனின் செயல் கண்டிக்கத்தக்கதும், அவையை அவமதிக்கும் செயலும் ஆகும். எனவே, இது குறித்த தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1978 சனவரி 2

(10) அரசினர் தீர்மானம்.

பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கைகளை வீசியவர்மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"இன்று (2—1—1978) பிற்பகல் 1 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை ராயபுரம், கேசவன், ராஜு பெருஞ்செட்டியார் மகன், என்று கூறிக்கொள்ளும் நபர் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் 7 நாட்கள் வெறுங்காவல் தண்டனை (Simple imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது.''

திரு ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு ஓர்க்ஸ் மினிஸ்டர் தீர்மானத்தின்மீது ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதற்கு முன்னதாக இந்த மாமன்றத்தில் இதுபோல கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஒரு நிகழ்ச்சி நடந்ததை இந்த மாமன்றம் நன்ருக அறியும். இதுபோல் முன்பு மாணவராக இருந்த ஒருவர் துண்டுப் பிரசுரத்தைப் பார்வையாளர் காலரியிலிருந்து வீசினர். அன்றையதினம் இருந்த சட்டமன்றம் இதற்காக அவருக்கு ஒரு நாள் மட்டும்சிம்பிள் இம்பிரசன்மென்ட் கொடுத்துவிட்டுவிட்டது. அந்த அளவில் அன்று அதற்கு ஒரு முடிவு கட்டினர்கள். அன்றைய தினம் துண்டுப் பிரசுரம் வீசிய நண்பர் இன்றைய தினம் சட்டசபையில் அங்கத்தினராக இருக்கிருர் என்பதையும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இது நடந்து போன நிகழ்ச்சி என்ற வகையில் 7 நாட்கள் என்று குறிப்பிடாமல் இன்றைக்கு ஒரு நாள் மட்டும் சிம்பிள் இம்பிரிசன்மென்ட் கொடுத்து முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 சனவரி 2]

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல் இதற்கு முன்னும் இந்த மாதிரி சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவர் புதிதாக இருக்கிற காரணத்தால் எச்சரித்து, விட்டுவிட வேண்டும் அல்லது ஒரு நாள் மாத்திரம் தண்டனை என்பதோடு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, காலரியிலிருந்து துண்டுப் பிரசுரம் வீசியது கண்டிக்கத்தக்கது. நானும் நண்பர் ஜேம்ஸ், கிட்டப்பா ஆகியவர்களுடன் சேர்ந்து ஒரு நாள் தண்டனையோடு விட்டு விடலாம் என்று வலியுறுத்துகிறேன்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையில் நடைபெற்ற சம்பவம் கண்டிக்கத்தக்க சம்பவம்தான். ஆயினும் இன்று ஒரு நாளைய தண்டனையே போதும் என்ற அளவில் முடிக்கலாம் என்று வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தில் மிகப் பெரிய தண்டனை அளிப்பதைப் போலவும் அதைக் குறைக்க வேண்டும் என்ற வகையிலேயும் எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினர்கள்.

நான் ஒன்றை நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே கூட இதுபோல் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எனக்கு நன்ருக நினைவு இருக்கிறது. கிட்டத்தட்ட 2 வாரம் காவலிலே வைக்கவேண்டும், வெறும் காவல் அல்ல, கடுங்காவல் தண்டனை கொடுத்து ஏற்கனவே இந்த மன்றத்திலே தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இதிலே 7 நாட்கள் கொடுத்தே ஆகவேண்டும் என்பதல்ல. இப்படி மேலும் மேலும் இடம் கொடுத்து விடக்கூடாது. அப்படிக் கொடுத்தால், ஒரு நாள் காவலில் தானே வைப்பார்கள் என்ற நினைப்பு வருமாஞல் பிறகு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்படி துண்டறிக்கைகள் வந்து கொண்டே இருக்கும், சட்டசபையிலே மற்ற புத்தகங்களை வைத்திருப்பதுபோல் துண்டு அறிக்கைகளும் விழுந்துகொண்டே இருக்கும்.

எனவே, இத்தகைய செயல்கள் தவருனவை என்றும் அவற்றிற்கு எதிர்காலத்தில் இடம் கொடுக்கக் கூடாது என்றும் தான் இந்த வகையிலே 7 நாட்கள் தண்டனை

அளிக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன். இதை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு— அவர் இன்னார் என்பது இந்த மன்றத்திற்குக்கூட தெரியாத ஒரு சூழ்நிலை—ஆகவே இத்தகைய நடவடிக்கைகள், மீண்டும் இத்தகைய காரியங்களைச் செய்வதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற வகையிலேதான் எடுக்கப்படுகின்றன. ஆகவே 7 நாட்கள் தண்டனை என்பதை, இந்த அவையின் நடைமுறையையும் கண்ணியத்தையும் காப்பாற்றுகிற காரியத்திற்காக, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : யார் பாஸ் கொடுத்தது என்பதை எல்லாம் விசாரித்தாகிவிட்டதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லாம் விசாரித்துத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. திரு. பொன்னுரங்கம் அவர்கள் அதற்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் சொன்னதைப் போல ஏற்கனவே மேல் மாடத்திலிருந்து ஒரு பெண் துண்டறிக்கைகள் வீசியபோதுகூட 2 வாரங்கள் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இந்தத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெறுகிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(11) தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1977–78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடு, 1976–77 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை மதிப்பீடு—ஆகியவை மீதான விவாதம்-தொடர்ச்சி.

* திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் வருட புத்தாண்டு நல்வாழ்த்துக்களை நான் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழ் நாடு முழுவதும் தொழில்வளம் பெருக வேண்டும், நம்முடைய நாடு தொழில்மயமாக வேண்டும். அதன் மூலமாக வேலையில்லாத் திண்



டாட்டத்தைப் போக்குவதற்கு நாம் திட்டமிடுகிறோம். ஆனால் அந்தத் திட்டத்திற்குத் தொழில்கள் மேலும் பெருகுவதற்குரிய மின் இணைப்பை நாம் காலத்திலே கொடுக்கவில்லை. சேலம் போன்ற மாவட்டங்களில் தென்னிந்தியாவிலேயே ஜவ்வரிசி ஆலைகள் அதிகமாக இருக்கின்றன. ஒரு ஜவ்வரிசி ஆலையில் 300, 400 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. ஆகவே, தொழில்கள் பெருகுவதற்கான மின் இணைப்பு போதுமான அளவு கொடுக்கப்படவில்லை. சேலம் தனியார் துறையில் மின்சார கம்பெனியிருந்த காலத்திலே கடைபிடிக்கப்பட்டுவந்த சில நடைமுறைகள், விதிகள் இப்போது மின்சார வாரியத்தால் கடைப் பிடிக்கப்படுவதில்லை. அதனால் முறைகேடான சம்பவங்கள் நடைபெறுகின்றன. 6 மாதங்களுக்கொரு முறை டிரான்ஸ்பார்மர்களில் ரீடிங் எடுத்து ஓவர்லோடு இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். ஓவர்லோடு ஆகி இருந்தால் அடிக்கடி டிரான்ஸ்பார்மர்களை சரிசெய்வார்கள் அல்லது மாற்றுவார்கள்.

(மாலை 4—10)

அதனால் டிரான்ஸ்பார்மர்கள் அடிக்கடி பழுதாகி பொதுமக்களுக்குப் பலவிதமான இடர்ப்பாடுகள் ஏற்படும். அர்பன் ஏரியாவில் 50 கே. வி. டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்படுகின்றன. அர்பன் ஏரியாவில் நாள் முழுவதும் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருவதால் அவைகள் வெகு சீக்கிரத்தில் சூடாகி டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைகின்றன. எனவே, இனிமேல் அர்பன் நகரங்களில் 50 கே. வி. டிரான்ஸ்பார்மர்களுக்குப் பதிலாக 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்பட வேண்டும். அவ்வாறு 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்பட வேண்டுமென்றால் நம்முடைய மின்சார வாரிய ஸ்டோர்களில் 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்கள் அதிகமாகக் கையிருப்பில் இருப்பதாகத் தெரியவில்லை. 50 கே. வி. டிரான்ஸ்பார்மர்கள்தான் அதிகமாக இருப்பதாகத் தெரிய வருகிறது. இதனால் விவசாயம் போன்ற அத்தியாவசியமான தேவைகளுக்கு மின் இணைப்பு கிடைப்பது இல்லை. கனெக்டட் லோட் அடிப்படையில் மின்சாரத்தை வழங்குவதால் போதுமான அளவிற்குப் பொதுமக்களின் பொதுத் தேவையான காரியங்களுக்கு கனெக்ஷன் கொடுக்க முடியவில்லை.

நம்முடைய மின்சார வாரியத்தில் போதுமான உபகரணங்கள் இல்லை. ஆலைகளுக்கோ, வீடுகளுக்கோ மின் இணைப்பு கொடுக்க 5 ஹார்ஸ் பவர், 10 ஹார்ஸ் பவர் மீட்டர்கள், ஒயர்கள், ஜி. ஐ. பைப் போன்ற எதுவும் கையிருப்பில் இருப்பதில்லை. ஒரு கன்ஸ்யூமர் வீட்டு இணைப்பு பெறுவதாக இருந்தால் வாரியத்திலிருந்து மின் இணைப்பு மட்டும்தான் கொடுக்கிறார்கள், மற்ற அத்தனை உபகரணங்களை வாடிக்கையாளர்களே வாங்கிக் கொடுக்க வேண்டும். 5 ஆம்ப்ஸ், 10 ஆம்ப்ஸ் மீட்டர் விலை 80 ரூபாய், 100 ரூபாய் ஆகிறது, வெளிமார்க்கெட்டுகளில், வாங்கினால். ஆனால் ஈ. பி. எஸ்டிமேட்டில் அதற்கு 50 ரூபாய் தான் ஒதுக்குகிறார்கள். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, பொதுமக்கள் இம்மாதிரி நஷ்டம் அடைவதைத் தவிர்க்கப் போதுமான உபகரணங்களை மின்சார வாரியத்தில் வாங்கி வைப்பதற்கு அரசு முன் வர வேண்டும். ஏனென்றால் தேவையில்லாத அளவிற்கு, தமிழ் நாட்டில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள, உடனடித் தேவைக்கு இலாயக்கு இல்லாத உபகரணங்கள் ஸ்டாக் இருப்பதாகத் தெரிகிறது. அவைகளைத் தவிர்க்கும் வகையில் இவைகளை உடனடியாகக் களைவதற்கும் மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் போன்ற மாவட்டங்களில் தனியார் துறையிலிருந்து பொதுத்துறைக்கு மின்சார வாரியம் மாற்றப்பட்டது. ஆனால் 1973 ஆம் ஆண்டிலிருந்து ஊழியர்கள் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகள் ஆகியும்கூட, வருஷம் ஒன்றுக்கு 2,500 புதிய இணைப்புகள் கொடுக்கப்பட்டு, நான்காண்டுகளில் ஏறக்குறைய 10,000 புதிய இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சிப்பந்திகள் புதிதாகப் போடப்படவில்லை. இதனால் ஒரு வீட்டின் மின் இணைப்பில் ப்யூஸ் போனாலும், பணம் கட்டாததற்காக இணைப்பு துண்டித்தாலும், மீண்டும் பணம் கட்டியவுடன் அங்கே கனெக்ஷன் கொடுப்பதற்குக் காலதாமதம் ஆகிறது. ஏற்கனவே உள்ள சிப்பந்திகள் குறைவு. அதிலும் 10,000 புதிய கனெக்ஷன் ஏற்பட்டும் அதிக சிப்பந்திகள் போடப்படவில்லை. ஏற்கனவே இருந்த சிப்பந்திகளில் ஏறக்குறைய 30 சிப்பந்திகளின் ஸ்தானங்கள் தொடர்ந்து சேலத்தில் காலியாக இருக்கின்றன. என்ன காரணத்தினாலோ அந்த ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. இரண்டு டிரைவர்களின் ஸ்தானங்களும் காலியாக இருக்கின்றன. ஒருவர் இறந்துவிட்டார், ஒருவர் ரிடையராகி விட்டார். இப்படிப்பட்ட அத்தியாவசியமான ஸ்தானங்களைக்கூடப் பூர்த்தி செய்யவில்லை. இதனால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சிப்பந்திகளை விரைவாக அழைத்துச் சென்று பணிகளை முடிப்பதற்குத் தடையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





தனியார் துறையிலிருந்து பொதுத் துறைக்கு மாற்றப்பட்ட அந்தச் சிப்பந்திகளுக்கு ஊதியம் சரியான அளவிற்கு நிர்ணயிக்கப்படவில்லை. அதனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான இன்க்ரிமெண்ட் கிடைக்கவில்லை என்பதை நான் அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சேலம் போன்ற தனியார் நிறுவனத்தில் மெயின் சூப்பிரண்டெண்டாக இருந்தவர் 24 வருட சர்வீசுக்கு ஏற்ப சூப்பிரிண்டெண்டிங் இஞ்சினியர் ( எஸ். இ.) கிரேடு கொடுக்கப்பட வேண்டும். ஆனால், அவர் டி. இ. ஸ்பெஷல் க்ரேடு என்று கொடுக்கப்பட்டு ஊதியத்தைக் குறைத்திருக்கிறார்கள். அதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. சாதாரணமாக டி. இ. ரிவைஸ்ட் ஸ்கேலில் வாங்கும் சம்பளம் எஸ். இ. கிரேடுக்கு உயர்த்தப்படுவதற்குப் பதிலாக டி. இ. ஸ்பெஷல் என்று சொல்லி சாதாரண டி. இ. க்குக் கிடைப்பதைவிடச் சம்பளம் குறைவாக கிடைக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அது மட்டுமல்ல, சேலத்தைப் போன்ற பெரிய நகரங்களில் ஒரு புதிய தொழிலைத் துவங்குவதாக இருந்தாலும் அல்லது, பத்திரிகைகள் போன்ற அத்தியாவசியமான தொழிலைத் துவக்குவதாக இருந்தாலும், அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் அங்கே மறுக்கப்படுகின்றன. சேலம் டி. இ. ஆனவர் மின்சார வாரிய சி. இ. சொன்னால் கூட, அல்லது மேட்டூர் எஸ். இ. சொன்னால் கூட, எதையும் சட்டை பண்ணாமல் தாம் எடுத்த முடிவிலிருந்து மாறாமல், யாருடைய கட்டளைக்கும் பணிய மறுக்கிறார் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சேலம் டி. இ. இப்படி இருப்பதால், எந்தப் புது இணைப்பாக இருந்தாலும், அதனைப் பெறுவதற்கு, முறைகேடான வழிகளில், அல்லது தவறான வழிகளில், அல்லது குறுக்கு வழிகளில்தான் லஞ்சம் கொடுத்து இணைப்பைப் பெற

முடிகிறது என்பதை வருத்தத்துடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நானே, பல காரியங்களில், குறுக்கிட்டு, எவ்வளவோ வேண்டிக் கேட்டுக் கொண்டும், பணம் இல்லாமல் மின்சார வாரியத்தில் காரியங்கள் நடைபெறவில்லையென்பதை நான் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், அத்தியாவசியமான சர்வீஸ்களுக்கு முன்னுரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்ற வழக்கம் இருந்தாலும், அவைகள் மறுக்கப்படுகின்றன. தனியாக லஞ்சம்—வேண்டிய கவனிப்பு—இருந்தாலொழிய யாருடைய சிபாரிசும் (D. E.) அவரிடம் செல்லாது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயக் காரியங்களுக்கு நம்முடைய அமைச்சர் ஏற்கனவே அறிவித்தது போல் 50,000க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் இருப்பதைப் பரிசீலித்து, கிரவுன்ட் வாட்டர் சர்ட்டிபிகேட் என்ற முறையில் மின்னிணைப்பு வழங்குவதை மாற்றி, பொங்கல் பரிசாக, கிரவுன்ட் வாட்டர் சர்டிபிகேட் இல்லாமல், மின்னிணைப்பு வழங்கப்படுமென்ற நடைமுறையைக் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, விவசாய காரியங்களுக்கு எந்த நேரத்திலும் மின்னிணைப்பு கொடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். விவசாய காரியங்கள் நல்ல முறையிலே வளர்வதற்கும் விவசாயிகள் எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாமல் கனெக்ஷன் பெறுவதற்கும் அமைச்சரவர்கள் துரிதமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு, உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சேலம் போன்ற நகரங்களில் நிலத்தடி நீரைக் கொண்டு, விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆற்றுப் பாசன வசதிகள் சேலத்தில் மிகக் குறைவு. ஆகவே, சேலத்தில், இந்த நிலத்தடி நீர் சான்றிதழ் பெற வேண்டுமென்ற முறையை மாற்ற அமைச்சரவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



*திரு. எஸ். ஜே. இராமசாமி: சட்டமன்றத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசு ஏற்பட்டதிலிருந்து, இப்பொழுது இந்த மின்சார இலாகாவினுடைய பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருப்பது மிகுந்த வரவேற்பு அளிக்கக்கூடிய ஒரு விஷயமாகும்.

வட ஆற்காடு மாவட்டத்தில், அதிகமான விவசாயிகள், பம்பு செட்டுகளை நம்பி, மின்னிணைப்பை வைத்துக்கொண்டுதான் உணவு உற்பத்தியிலே மிகுந்த நம்பிக்கையோடு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக, உணவு உற்பத்தியில் முன் நிற்பது வட ஆற்காடு மாவட்டம். அதிக அளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவதும் இந்த வட ஆற்காடு மாவட்டம்தான். ஆகவே, இப்பொழுது 50,000பம்ப் செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கிறேன் என்று அரசாங்கத்தின் சார்பாக, மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் சொல்லியிருப்பதை எண்ணி, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை ஓர வஞ்சனை செய்யாமல், அதிகமான பம்ப் செட்டுகளுக்கு அங்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். எப்படியாவது தட்டிக் கழிக்காமல், மின் இணைப்புக் கொடுக்க நீங்கள் முன் வரவேண்டும். ஆகவே, இன்னும் அதிகமான மின் இணைப்பு வட ஆற்காடு மாவட்டத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4.20]

வடஆற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் ஊக்கமாக பயிர் செய்யக்கூடிய அளவிலே போரிங் செட் அமைத்து ஆழமான இடங்களிலும் தண்ணீர் கொண்டு வந்து உணவு உற்பத்தியிலே முன்னணியிலே இருக்கிறார்கள். இந்த மாவட்டத்திற்கு எந்தவிதமான தவறும் செய்யாமல், 50 ஆயிரம் பம்ப் செட்டுகளையும், இல்லை என்றால் குறைந்தபட்சம் 2,000 பம்ப் செட்டாவது தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மீட்டர் வாடகை பில் போடுவது மிகவும் தவறாக இருக்கிறது. கும்பாபிஷேகத்திற்கு அம்பாரம் போட்டிருக்கிறார்கள் என்று கிராமத்திலே சொல்வார்கள். அன்றைக்கு ஒரு மீட்டர் வாடகை $2\frac{1}{2}$ ரூபாயாக இருந்தது. இன்றைக்கு 5 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதையும் இந்த மின்சாரக் குழு கவனத்தில் வைத்துக்

கொண்டு, பழைய 2 ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சரியாக ரீடிங் எடுப்பது கிடையாது. யாராவது ஹெல்ப்பர் ஒயர்மென் இவர்கள்தான் எடுக்கிறார்கள். தவறாகப் போட்டு விடுகிறார்கள். அவர்கள் எவ்வளவு யூனிட்டு என்று எழுதுகிறார்களோ அந்த யூனிட்டுக்கு மொத்தப் பணத்தைக் கட்டிவிடுகிறார்கள். மேலும் அந்த பில்களை 14-ந் தேதிக்குள் கட்ட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அதற்குள் கட்டிவிட்டால் அபராதம் இல்லை. 14-ந் தேதிக்கு மேல் கட்டினால் அபராதம் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே 25-ந் தேதி வரை கட்டினால் அபராதம் இல்லை என்று அறிவிக்க வேண்டும். அல்லது அபராதம் இல்லாமல் கட்டுகின்ற தேதியையாவது மாற்ற வேண்டும். ஏனென்றால் ஏழை விவசாயிகள் தான் கட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இன்னொன்று. அபராதம் கட்டாவிட்டால் மின் இணைப்பைத் துண்டித்து விடுகிறார்கள். அதை மீண்டும் இணைப்பதற்கு 6 ரூபாய் அபராதம கட்ட வேண்டியிருக்கிறது. அதையும் குறைக்க வேண்டும். அபராதத்தைக் கட்டிவிட்டால் உடனடியாக மின் இணைப்பைக் கொடுத்துவிட வேண்டும். ஆனால் அபராதத் தொகையை 2 அல்லது 3 ரூபாயாகப் போட்டால் பரவாயில்லை.

அடுத்து, இந்த மின்சார இலாகாவில் ஸ்டிரைக்குகள் நடந்தன. நான் முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் இந்த ஸ்டிரைக்குகள் எல்லாம் தொழிற்சங்கவாதிகளால் தான் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கோபப்படக் கூடாது. அதற்காக ஒரு வழியையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள் அந்தந்த இலாகாவிலே பணியாற்றுகின்றவர்கள்தான் தொழிற்சங்கத் தலைவராக வரவேண்டும். தனியார்கள் வரக் கூடாது என்றும் சொன்னார்கள். அதையும் நான் சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகளின் உற்பத்தித் திறன் உண்மையிலேயே போதுமானதாக இருக்கிறதா என்று கேட்டால், இல்லை. பல தொழிற்சாலைகள் வரவேண்டிய நிலைமை இருக்



கிறது. உற்பத்தித் திறனை அதிகப்படுத்த திட்டங்களைப் போட்டிருக்கிறோம். இதற்கெல்லாம் மத்திய அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு வேண்டும். மத்திய அரசாங்கம் அனுமதி வழங்குகிறது. ஆனால் பிளானிங் கமிஷன் அதை வேண்டாமென்று சொல்லுகிறது. கமிஷன் சொல்லுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. வளர்ந்து வரும் இந்த நாட்டின் தேவையை மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லிப் பெற வேண்டிய உதவிகளைப் பெற வேண்டும்.

தூத்துக்குடி மின்சாரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு வருடமும் வருகிறது வருகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டாவது திட்ட வட்டமாக அறிவித்து அந்த அனல் மின் நிலையம் இயங்க வேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளுக்கு அளிக்கக்கூடிய பம்புசெட்டினுடைய மின்இணைப்பைத் துரிதமாகக் கொடுக்க வேண்டும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். அதே நேரத்தில் நமக்கு நிலத்தடி நீர் அதிகமில்லாததினால் நிலத்தடி நீரைச் சாக்காக வைத்துக் கொண்டு அவர்களுக்கு இணைப்புக் கொடுக்க மறுக்கிறோம். இந்த நிலத்தடி நீர் இல்லாததினால் எத்தனை பம்பு செட்டுகள் ஓடாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இப்படி ஓடாமல் இருக்கும் மொத்த பம்பு செட்டுகளையும் கணக்கெடுத்து அதற்குத் தகுந்த அளவு, புதிய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஒகனேகல் மின் உற்பத்தி நிலையம் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது முயற்சி எடுத்துக் கொண்டது. அந்த அமைச்சரவை இதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டு இருந்தார்கள். கூடிப் பேசினார்கள். திரும்பவும் கலந்து பேசி, மீண்டும் நமது மாநிலமும், கர்நாடக மாநிலமும் கலந்து பேசி இதை நிறைவேற்றிட வேண்டும். நீர் மின்சாரம் தான் நமக்குக் கட்டுப்படியாகக் கூடியது. அனல் மின்சாரத்தை விட நீர் மின்சாரம் தான் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடியது. எனவே, நீர் மின்சாரத்தைத் துரிதமாக உற்பத்தி செய்ய இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. இராமசாமி] [1978 சனவரி 2

இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்சார வாரியத்திற்கு 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று கணக்குச் சொல்கிறார்கள். இப்படிக் கணக்கிடுவது சரியாக இருந்தாலும் இந்த நஷ்டத்தைப் பெரிதுபடுத்தாமல் அவர்களுக்கு 14 பைசாவாக குறைக்கப் பட்டிருப்பதை இன்னும் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும் அந்த இழப்பைப் பொருட்படுத்தாமல் விவசாயிகளின் பம்பு செட்டுக்கு உள்ள கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வேளாண்மைப் பொருளாதார வல்லுநர்கள், அதிகாரிகள், விவசாயிகளின் தலைவர்கள் ஆகியோரைக் கொண்டு விவசாய ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இவர்களது ஆலோசனையைக் கேட்டு அதன் படி முடிவுகள் எடுப்பது என்று இந்த அறிக்கையிலே குறிப் பிட்டிருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்க ஒன்று. அதனுடைய முக்கியத்துவத்தை, தேவைகளின் முக்கியத்து வத்தை இந்த இலாகா உணர்ந்து செயல்பட ஒரு நல்ல ஏதுவாக இருக்கும். ஆகவே இந்த ஆலோசனையை நான் மிகவும் வரவேற்கிறேன். அந்தக் குழுவின் ஆலோசனைகளை ஏற்றுச் செயல்படுத்தினால் அதனால் விவசாயத்திற்கு மட்டுமின்றி, தொழிற்சாலைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய நிலைமைகள் உருவாகும் என்று கூறி நான் முடித்துக் கொள்கிறேன்.

*THIRU R. E. CHANDRAN JAYAPAL : May it please you, Sir. After going through carefully the reports presented by the Hon. Minister, let me start my speech by opening out with Ennore thermal station. Ennore thermal station has gone into stream from the year 1970. It has five units to produce electric energy. Out of the five units, two are small units and three are big units. The three big units have the capacity of producing 110 M.W. each and the two small units have the capicity to produce 60 M.W. each. The total production capicity, if the full production capicity is reached, is 450 M.W. But I am advised by experts that the total production capacity of 450 M.W. is only on paper and cannot be reached at any time because one of the units will be either sick or will have to be undergoing overhauling or maintenance or repair works, so that taking into consideration that even if one of the biggest units is out of production, the maximum production capacity of this thermal station should be around 340 M.W.



1978 சனவரி 2] [திரு. ஆர்.இ. சந்திரன் ஜெயபால்]

Unfortunately, I am informed that it is not able to produce 50 M.Ws. at present. Your Report itself clearly says that every unit is suffering from some sort of sickness. The Fifth Unit which went into production in December 1975, is also experiencing teething troubles. It is also stated that Experts from BHEL were also assisting the Project to improve the performance of the Units installed in the Thermal Station. In spite of their assistance also, it is not possible to rectify the defects and put the units to maximum production.

[மாலை 4-30]

I am informed that in Western Countries, Thermal Stations and even Nuclear Thermal Stations are installed within three years and they reach the maximum production once they go into stream. Why has not this happend in India, more especially at Ennore ?

I am afraid that the expertise—the local expertise that is being used in Ennore is not upto the standard and they are not able to maintain the producton. It is high time that expertise should be imported and utilised here to get the maximum production. I am also informed that if the Ennore Power Station goes into production in full swing and is able to get the maximum production, we will be able to get 8 million units of electricity, which in fact will meet the 1/3 requirements of the entire State. I request the Hon. Minister, who is himself an Engineer, to go deeply into this matter and have an Expert Committee appointed to rectify the defects that are now experienced at Ennore Thermal Station, so that it could go into maximum electricity production and this will help in meeting the more dire needs of power in the State.

I find from the Report very encouraging note that another power station has been recommended at Mettur. I hail this as a wonderful decision because Mettur is close to a big power reservoir where water supply will be there and broad-gauge line is also available through which coal could reach this station. I request the Hon. Minister for Electricity to use his good offices to see that this Thermal Station goes into operation within a very short time. I would also request the Hon. Minister to see that the Thermal Station at Neyveli, with the help of the Union Government and the Private Sector, goes into uninterrupted production and maximum supply of electricity takes place there.

At present, the technical staff that is, the Thermo-Mechanical Engineers are not accorded any special treatment in spite of their specialised training. I request that a special cadre be established and that the Thermo-Mechanical Engineers are classified as a special category with special privileges. They may be given extra privileges so that they may concentrate on the job and turn out better duty.

On page 12, I find there are three types of losses that are being suffered by the Electricity Board. The annual loss on agriculture is Rs. 40 crores. This is a welcome loss, because agriculture is the mainstay. This loss should be stepped up or encouraged by the Board because they increase food production.

On one point, I would like to lay stress here. Here the poultry units are now being supplied electricity at the rate applicable to industries. Now poultry forms part of Industries but comes under Agriculture Department. I wish to draw the attention of the Hon. Minister to this fact and say that in future electricity to poultry should be supplied at the rate at which it is now being supplied at subsidised rates—to agriculturists.

I find the next item of loss is due to special tariff—industrial tariff. There is loss of Rs. 8 crores on special industrial tariff. There should not be any loss on industrial sector because the electricity is being used to produce mechanised goods which are being sold. I submit that this loss should be avoided and no concession should be shown to the industrial sector.

Again, there is a loss of Rs. 4·50 crores on domestic supply. This clearly indicates the slackness on the part of the Department in collecting arrears for the supply of electricity to domestic consumers. The erring departmental officials should be taken to task and they should be given a drive to collect the arrears of Rs. 4·50 crores. Any slackness on the part of the departmental officials should be dealt with seriously.

I also find that there is loss in operation. The loss on transmission lines can be minimised. This loss can be minimised under this head if we rationalise the transmission lines. At present, we have 230 M.Ws., 110 M.Ws., 66 M.W.s., 33 M.Ws., 22 M.W.s., and 11 M.Ws. and in each transmission, the loss occurs. If you transfer from 230 to 110 M.Ws. 66 M.Ws.. 33 M.Ws., 22 M.Ws. and 11 M.Ws. at each stage there is loss of energy. This loss can be minimised to a large extent if we have only 220 M.Ws.. 110 M.Ws.. and 11 M.Ws. high tension lines for transmission and 400/230 Volts for distribution on the line division sector. This would again call for the construction of more transformers and sub-stations, preferably every sub-station should be installed within a distance of 20 kms. apart so that effective transmission takes place and also loss of transmission will be minimised.



Finally, I have a word about the Department. In 1970, I was informed that there were only 17,000 employees in the Tamil Nadu Electricity Board. Now there is a phenomenal increase in the number of persons employed in the Tamil Nadu Electricity Board and it has risen to more than 95,000. This means employment of additional people than wanted. I plead with the Hon. Minister to go into this aspect also and appoint a Committee—a High Technical Committee—to go into this particular aspect of this matter. These superfluous staff in the Tamil Nadu Electricity Board should be minimised.

The technical know-how should always be respected. It is my humble and fervent request that the Tamil Nadu Electricity Board should be headed by a technical man and not by an administrative officer. The Technical-Chief can have an administrative-chief under him to guide him but not an administrative officer to guide a technical man.

Thanks to you, Sir.

*திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மின்சார டிப்பார்ட்மெண்டிலிருந்து கொண்டுவந்திருக்கிற அறிக்கை மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கு மீட்டர்கள் வைக்க வேண்டும் என்று வெகு நாட்களாக எடுத்துக்கூறியும் அரசாங்கம் இன்னும் மீட்டர்கள் வைக்காத காரணத்தால் அந்த

டிப்பார்ட்மென்ட் அதிகாரிகள் குத்துமதிப்பாக அதிக கட்டணத்தை விதித்து பஞ்சாயத்துக்கள் அதைக் கட்ட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே உடனடியாக ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு மீட்டர் வீதம் அரசாங்கச் செலவிலேயே அந்த மீட்டர்களை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மீட்டரை பஞ்சாயத்து செலவிலே வைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்துக்கள் க்ளார்க்குக்கே சம்பளப் பணம் கொடுக்கக்கூட வழியில்லாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே இதை அரசாங்கச் செலவிலே செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4-40]

இப்போது பஞ்சாயத்துக்களில் இருக்கின்ற கிராமங்கள் எல்லாம் இருட்டடைந்து போய் இருக்கின்றன. 1—7—77 முதல் மின்சார இலாகாவிலிருந்து பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்துகளிடம் பல்பு வாங்க உள்ள நடைமுறை சிக்கலைத் தெளிவாக்குமாறு கேட்டு இருக்கிறோம். எங்கு பார்த்தாலும் இருட்டு அடைந்து போய் இருக்கிறது. ஆகவே இதை உடனடியாக சீர்செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து, கிராமங்களிலுள்ள விளக்குகள் எல்லாம் நல்ல விதமாக எரிவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களே பல்புகளை வாங்கிகொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து ஆணை பிறப்பித்துள்ளதாகத் தெரிகிறது. பல்பு வாங்கக் கூடிய அளவில் எந்த பஞ்சாயத்து இருக்கிறது ? பணம் இல்லாத நிலைமையில் பஞ்சாயத்துகளால் பல்பு வாங்க முடிகின்றதா ? பஞ்சாயத்து யூனியன்களிடம் வருகின்ற பஞ்சாயத்து பணமே சரியாக வரவு வைப்பதில்லை. சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு பஞ்சாயத்துகள் மோசமாகப் போய்க்கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையில் எலக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மென்ட் பஞ்சாயத்துகளிடம் இதை ஒப்படைப்பது என்பது, குருவி தலையில் பனங்காயை வைத்தால் எப்படித் தாங்க முடியாதோ அதேபோன்று பஞ்சாயத்தால் இந்தப் பொறுப்பைத் தாங்க முடியாது. ஆதலால் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





பஞ்சாயத்துத் தலைவராக நான் நெடுநாளாக இருந்து வருகின்ற காரணத்தால் இதை நான் உணர்ந்து சொல்லுகிறேன்.

பஞ்சாயத்துகளிடம் எலக்ட்ரிசிட்டியை ஒப்படைப்பதால் பஞ்சாயத்து மிகவும் மோசமான நிலைமையில் போய் விடும். ஆகவே, பஞ்சாயத்துகளில் விளக்குகளை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பல்பு போடுவதும் பஞ்சாயத்தின் பொறுப்பில் இருக்கக்கூடாது. எலக்ட்ரிசிடி டிப்பார்ட்மென்ட் கையில் தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் பல தவறுகள் நடக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, எலக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மென்ட் தான் இந்த பல்பையும் வாங்க வேண்டும். இதற்கு முன் இருந்ததைப் போலவே செய்ய வேண்டும்.

பல இடங்களிலும் கண்காணிப்புச் சரியாக இல்லாமல் இருப்பதால் விளக்குகள் சரியாக எரிவதில்லை. எலக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மென்டிலிருந்தே பல்புகள் வாங்கி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு ஆண்டுக் காலமாக பல்பே வாங்கிப் போடுவது கிடையாது என்கின்ற குற்றச்சாட்டு பெரும் குற்றச்சாட்டாக இருந்து கொண்டிருக்கிறது. பல்புகள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். டியூப்கள் எரியாத இடங்களில் புதிதாக வாங்கி மாட்டுவதே கிடையாது. மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. அதே போன்று பல்பு இல்லை என்று சொன்னாலும் புதிதாக பல்புகளை வாங்கிப், போடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கண்காணிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. எலக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மென்டில் சொல்லி ஒரு மாதம் ஆனாலும், இரண்டு மாதங்கள் ஆனாலும் எதுவும் நடைபெற முடியாத நிலைமைதான் நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, டிப்பார்ட்மென்ட் உடனடியாக நடவடிக்கை எடுத்து கிராமங்களில் எங்கெங்கு லைட் எரியவில்லையோ அங்கெல்லாம் புதிய பல்பு வாங்கி மாட்டி விளக்கு எரியச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1978 சனவரி 2

மேலும் மீட்டர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை. சரியான முறையில் கணக்கிடுவதில்லை. உதாரணமாக எனது வீட்டில் ஏற்பட்ட கம்ப்ளைண்டை அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். என்னவென்றால், ஜனவரி மாதம் 17 ரூபாய், பிப்ரவரி மாதம் 16 ரூபாய், மார்ச் மாதம் 19 ரூபாய், ஏப்ரல் மாதம் 18 ரூபாய், மே மாதம் 19 ரூபாய், ஜூன் மாதம் 19 ரூபாய், ஜூலை மாதம் மட்டும் 52 ரூபாய் 75 காசு கட்டணம் வந்திருக்கிறது. கட்டணத்தை வசூலித்தும் இருக்கிறார்கள். நான் வீட்டில் இல்லாதபோது, சின்ன பையன்களிடமிருந்து பணத்தை வாங்கிவிட்டுப் போயிருக்கிறார்கள். ரசீதும் போட்டிருக்கிறார்கள். எப்படி அந்த மாதத்தில் மட்டும் இப்படி 52 ரூபாய் 75 காசு வந்தது என்பதை அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகும் 17, 16, 19 என்றுதான் பில் வந்து கொண்டிருக்கிறது. அந்த மாதத்தில் நான் சென்னையில் இருந்தேன். எனது ரூம் பூட்டப்பட்டிருந்தது. மின் விசிறியும் ஓடவில்லை. சாதாரணமாக மின்கட்டணம் குறைந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக மூன்று மடங்கு உயர்ந்திருக்கிறது. எங்களைப் போன்ற எம்.எல்.ஏ. க்கள் சொன்னால் சரி செய்துவிட வேண்டுமென்பதற்காகக் கூட நான் சொல்லவில்லை. எங்களுக்கே இப்படியென்றால், சாதாரண நிலையிலே உள்ளவர்களின் நிலை எப்படியிருக்கும் என்பதற்காக இதை எடுத்துக்காட்டுகிறேன். எனவே, இந்த மாதிரியான குறைகள் ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலே மின்கட்டணம் கட்டுவதற்காக நகரங்களுக்குச் சென்று இந்த மீட்டர் சார்ஜைக் கட்ட வேண்டியிருக்கிறது. அதற்காக ஒரு ஆள் நகரத்திற்குச் சென்று பணம் கட்டிவிட்டு வரவேண்டுமானால், 10 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 3 ரூபாய்க்கு பில் கட்டுவதற்கு கூட ஒருவர் 10 ரூபாய் செலவு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே கிராமத்திற்குப் பக்கத்திலேயே ஒரு சென்டரைப் போட்டு, அங்கே மாதத்திலே ஒருநாள் பணத்தைப் பெற்றுக் கொள்வது என்று ஏற்பாடு செய்தால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். இதனால் ஏழை, எளியவர்கள் மிகவும் பிரயோஜனப்படுவார்கள். எனவே, கிராமத்திற்குப் பக்கத்திலேயே ஒரு சென்டரை ஏற்படுத்தி, மாதா மாதம் பணத்தை வசூல் செய்வதற்கான ஒரு ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 சனவரி 2] [திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

பஞ்சாயத்துக்களிலே எல்லாம் இப்போது நிதி வரவே கிடையாது. பஞ்சாயத்து யூனியன் எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுகிறது. பஞ்சாயத்து யூனியன்களிலே ஏதாவது பூதம் இருக்கிறதா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. வாத்தியார்களுக்கே சம்பளம் கொடுக்கப் பணமில்லை என்று சொல்கிறார்கள். நானும் 10 வருஷங்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்திருக்கிறேன். இந்த மாதிரியான ஒரு நிலைமை ஏற்பட்டதை நான் பார்த்ததில்லை. அந்தப் பணம் எங்கே போகின்றது என்று பார்த்தால், பஞ்சாயத்து யூனியன் சிப்பந்திகள் எங்கேயும் போகாமல், ஆபிசிலேயே இருந்து கொண்டு டி.ஏ. வாங்குகிறார்கள். அதை மேலதிகாரியும் சும்மா விட்டுவிடுகிறார்கள். அப்படி ஏதாவது கேட்டால், அவர்கள் சங்கம் மூலம் ஏதாவது செய்யப் போகிறார்கள் என்று மேலதிகாரிகளும் சும்மா விட்டு விடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனிலே உள்ள டைப்பிஸ்ட்கூட டூர் போனதாக பில் போட்டு பணம் எடுத்திருக்கிறார்கள். இதை என்னால் நிரூபிக்க முடியும். இப்படிப்பட்ட ஊழல்கள் செய்து பணம் எடுக்கக்கூடிய நிலைமை இன்றைக்குப் பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்றது. இப்படிச் செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்ற வரையிலே, பஞ்சாயத்து யூனியன்களிலே ஒரு சீரான நிதி நிலைமை இல்லாமல் போய்விடும். ஆகவே, இதைக் கண்காணித்து இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கிழக்கு இராமநாதபுரம் ஜில்லா கிராமங்களிலே போர் செட் போடப்பட்டு, அதற்கு எலக்ட்ரிக் கனெக்ஷன் கிடைக்காத ஒரு நிலைமை இருந்து வருகிறது. அதற்கு ஒரு சர்டிபிகேட் வேண்டுமென்று காரணங்காட்டி அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவாகிய கிழக்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில், அதிகமாக கேணி இல்லாத பிரதேசமாகும். இதற்கு முன்பு அந்த ஏரியாவிலே தண்ணீர் இல்லை என்று சட்டப்படி சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், அந்தப் பகுதியிலே உள்ள திருவாடானைப் பகுதியிலேயும் நிலத்தடி தண்ணீர் கிடையாது என்று சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். எனது தொகுதியைப் பொறுத்த வரையில், மிக வரப்பிரசாதமாக ஆழ் கிணறுகள், குழாய்க் கிணறுகள் அதாவது ஆர்டிசான் வெல்கள் மூலம் விவசாயம் செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அங்குகூட தண்ணீர் இல்லை என்று சர்டிபிகேட் கொடுத்து, இந்த மாதிரி செய்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1978 சனவரி 2

[மாலை 4–50]

கிணறே இல்லாத இடம் அது. அங்கே நிலத்தடி நீரை எடுக்கக்கூடாது என்று காரணம் காட்டுவது சரியல்ல. அமைச்சர் அவர்கள் கூட சமீபத்தில் வந்தார்கள். அங்கே கேணிகளோ, பம்ப் செட்களோ அதிகமாக இருப்பதைப் பார்த்திருக்க முடியாது. அவர்கள் முன்னாலேயும் அமைச்சராக இருந்தவர். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, கிழக்கு இராமநாதபுரத்தில் அந்த சர்டிபிகேட் வேண்டுமென் கேட்காமல் உடனடியாக பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. யா. சை. மு. யூசுப் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்த மின்வாரிய நிதிநிலை அறிக்கையைப் பற்றிய விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த ஒரு மனிதனை எடுத்துக்கொண்டாலும் மின்சாரத்தைப் பயன்படுத்தாத மனிதன் இல்லை என்ற காரணத்தால், இது எல்லோருக்கும் பயன்படுகிற துறை என்ற காரணத்தால் தவறுகள் சிறிதாக இருந்தாலும் மிகைப்படுத்தப்படுவது இயல்பே.

இத்தகைய பெரிய பொறுப்பை ஏற்று திறம்படச் செய்து கொண்டு வருகிற பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுக்குரியவர் என்று நான் கருதுகிறேன். இந்த ஆட்சி அமைக்கப்பட்ட பிறகு இரண்டு பரிசுகள் நம்முடைய நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. முதல் பரிசாக நாட்டிலுள்ள மின் வெட்டை எடுத்து முழுக்க முழுக்க மின்சாரம் கொடுக்கக்கூடிய வகையிலே இன்றைய தினம் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்தது, சிறு விவசாயிகள் யூனிட்டுக்கு 16 பைசா மின் கட்டணம் செலுத்தி வந்ததை இன்றைய தினம் 2 பைசா குறைக்கப்பட்டு 14 பைசாவாக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்த இரண்டு பரிசுகளை வழங்கியதன் மூலம் இந்தத் துறை பெருமை பெற்றிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1978 சனவரி 2] [திரு. யா. சை. மு. யூசுப்]

இந்த அறிக்கையிலே, தொழில்கள் வளருவதற்காகவும், கிராமப்புற முன்னேற்றத்திற்காகவும், வேளாண்மைத் துறைக்காகவும் எந்த அளவுக்கு இன்று மின்சாரம் தரப்பட்டு வருகிறது என்பதைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் மின் உபயோகம் அதிக அளவுக்கு தரப்பட்ட போதிலும் உற்பத்தியைப் பற்றிய கவலையில்லாமல் அன்று இருந்த அரசு இருந்த காரணத்தால், தங்களுடைய செல்வாக்கை உயர்த்திக் காட்ட வேண்டுமென்றும் பட்டியலை வெளியே போட்டுக் காட்ட வேண்டுமென்பதற்காகவும் செயல்பட்ட காரணத்தால் இந்தத் துறை சீர்கெட்டது என்பதை யாரும் மறக்கமுடியாது. மறுக்க முடியாது.

இந்த அறிக்கையில், நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையம் விரைவில் துவங்கப்பட இருக்கிறது என்பதையும் அதற்குரிய ஒப்புதலை மத்திய அரசு வழங்கிவிட்டது என்பதையும் அதேபோல் என்னுடைய மாவட்டமாகிய, நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் 210 மெகா வாட் அனல் மின் நிலையத்திற்கும் மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த நல்ல நேரத்திலே இரண்டு திட்டங்களையும் செயல்படுத்த தமிழக அரசு துரிதமாக முன்வரவேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்பாக்கம் அணு மின் நிலையம் 470 மெகா வாட் உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்ட நிலையம் 1979–80 ; 1981–82 ஆக இரண்டு ஆண்டுகளில் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்பட இருப்பதைப் பார்த்துப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் இந்த அணுமின் நிலையம் உற்பத்தியைத் துவக்க இருக்கிற போது தமிழகத்திலே இரண்டாவது அணுமின் உற்பத்தி நிலையத்தை உருவாக்கும் நிலையில் மத்திய அரசு அணு மின் நிபுணர்களை அனுப்பி எங்கள் தொகுதியில் உள்ள கூடன்குளம், இடிந்தகரை என்ற இடங்களைப் பார்வையிட்டு ஆராய்ச்சியை நடத்தியிருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது, எப்படி அதை மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதைப்

பற்றி மேலும் கவனிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம மின்னிணைப்புக்காக எவ்வளவு தூரத்திற்குச் சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள் என்ற பட்டியலும் இங்கே தெளிவாகத் தரப்பட்டு இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒன்றே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட்டாக வேண்டும். எனக்கு முன்பு பேசிய பல நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல உள்ளாட்சித் துறையிலே உள்ள தெருவிளக்குகள், மற்றும் இதர சாதனங்களுக்குரிய மின்சாரமும் வழங்கும் பொறுப்பை இந்த வாரியத்திடமிருந்து எடுத்து உள்ளாட்சித் துறையிடம் கொடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாகத் தமிழகத்தில் உள்ள பற்பல கிராமங்களில் தெருவிளக்குகள் எரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்த அறிவிப்பினை அரசு மறுபரிசீலனைசெய்து இதற்குமுன்பு இருந்தது போல் கிராமங்களுக்கும், நகரப்பஞ்சாயத்துக்களுக்கும், மாநகராட்சிகளுக்கும் உரிய மின்சாரம் வழங்கும் பொறுப்பை மின்சாரத் துறையே எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் விவசாயிகளுக்கு மானியம் என்ற பெயரால் ஓரளவிற்கு நஷ்டமும், வீட்டு வசதிக்காக ஓரளவிற்கு நஷ்டமும், வணிகத் துறையில் ஓரளவுக்கு நஷ்டமும் ஈடுகட்டுவதாக இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கிறது. அந்த நஷ்டத்தோடு நஷ்டமாக பொதுமக்களின் நலனைக் கருதி, இதையும் மின்சார வாரியமே எடுத்துக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்னிணைப்புக்காக ஏறத்தாழ 2 லட்சம் விண்ணப்பங்கள் இருக்கின்றன என்று இங்கே தரப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே 30 ஆயிரம் எண்ணிக்கையில் மின்சாரம் வழங்கி மோட்டார்களை 30 ஆயிரம் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய அளவிலே ஒரு இலக்கினை உருவாக்கியிருக்கிறார்கள். அதை முழு மனதுடன் வரவேற்கிறேன். அந்த இலக்கினை நிறைவேற்றுகிற நேரத்திலே எங்கள் பகுதி போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் வழங்குமாறு இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதே நேரத்திலே என்னுடைய பகுதியிலே பணகுடியிலே இருக்கிற 66 கிலோ வாட் திறனுள்ள துணை மின் நிலையத்தை 133 கிலோ வாட் ஆக உயர்த்துவதற்கான திட்டமொன்று நீண்ட நாட்களாகப் பரிசீலனையில் இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் என்னுடைய பகுதி பல குக்கிராமங்களைக் கொண்டது. அதிலே குறிப்பாக கைலாசபுரம் என்ற கிராமத்தில் மின் விளக்குகள் ஒளியிழந்து மெழுகுவர்த்தியைவிட மோசமாக எரிந்துகொண்டிருக்கின்றன என்பதால் அந்தத் துணை மின் நிலையத்திற்கு 133 கிலோ வாட் அளவிற்குத் திறனை உயர்த்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, மின்சாரத் திருட்டைத் தடுப்பதற்காக அவ்வப்பொழுது திடீர்ச் சோதனைகள் நடத்தப்படுவதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை நானும் அறிவேன். ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு சோதனை செய்கிறவர்கள் ஓரளவிற்கு மனிதாபிமான அடிப்படையில் நடந்துகொள்ளாததைப் பற்றிச் சொல்லித்தான் ஆக வேண்டும். ஒரு வீட்டிலே தையல் மெஷின் இருந்தால் போதும், அவர்கள் போர்டைக் கூட பார்ப்பதில்லை, ஒரு தையல் மிஷின் இருந்தால் அங்கே 4 சட்டைகள் தொங்கிக் கொண்டு இருந்தால் அதையும் ஒரு வணிக நிறுவனமாகக் கணக்கிட்டு அபரிமிதமான தொகையை வசூல் செய்கிறார்கள். இதையெல்லாம் கவனித்து நியாயமாக வசூலிப்பதற்கு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-00)

இந்த வாரியம், நம்முடைய தமிழகத்திலே சமீபத்திலே ஏற்பட்ட புயல் வெள்ளத்திலே ஏற்பட்ட மிக மோசமாக மின்பாதிப்பு நிலையிலேயிருந்த மக்களுக்குத் தகுந்த நிவாரணம் வழங்கும் அளவிலே வெகுவிரைவிலே மறுபடியும் புதிதாக நிர்மாணம் செய்திருக்கின்ற பாங்கினைப் பாராட்டி, இந்தத் துறை மேன்மேலும் சிறப்படையும் வகையிலே நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் நல்ல பணிகளை மேற்கொள்வார்கள் என்ற உறுதியைத் தெரிவித்து வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த மின்
வாரியம் பற்றிய நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்
களைச் சொல்ல விரும்புகிறேன்.

சுமார் 653 கோடி ரூபாய் மூலதனச் சொத்தோடு
கூடிய ஒரு நிறுவனம். 168-3/4 கோடி ரூபாய் 1975-
76-க்கு வருமானம் சம்பாதித்திருக்கும் நிறுவனம்.
கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பணியாளர்கள் — 1976
மார்ச் கணக்குப் பிரகாரம் — இருக்கிறார்கள். 30½
இலட்சம் பேர்கள் தமிழ் நாட்டில் இதைப்பயன் படுத்து
கிறார்கள். 7½ இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்
சப்ளை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 64,198 கிரா
மங்கள், சிற்றூர்கள் முதலியவற்றிற்கு நாம் மின்சாரம்
கொடுத்து, 98 சதவிகிதத்திற்கு மேல் இந்த மாநிலத்
திலே உள்ள கிராமங்களுக்கு மின்சாரத்தை விநியோகித்
துக் கொண்டிருக்கும் நிறுவனம்.

இந்திய நாட்டின் பல மாநிலங்களை ஒப்பிட்டுப்
பார்த்து பெருமை பேசக்கூடிய நிலையில் இருக்கிறோம்
என்றால் நிச்சயமாக இந்த நிறுவனம் நம்மால் வரவேற்
கத் தக்கதுதான். ஆனால் அதே சமயத்தில் இதை நாம்
கவனிக்கும்பொழுது தமிழக அரசால் இதைவிட
அதிகமான மூலதன முதலீடு செய்யப்பட்டு மக்கள்
மத்தியிலே பரவலாகப் பயன்படுத்தக்கூடிய, மாநில
ரீதியாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு பெரும் தொழில்.
இதற்குமேல் வேறு தொழில் இல்லை என்று நான் கருது
கிறேன். அப்படிப்பட்ட ஒரு நிறுவனம் இது. இதனு
டைய பொறுப்பு மிகவும் முக்கியமானது.

இன்றைக்கு அரசாட்சியில் இருக்கின்ற அரசு இருக்
கிறதே, அவர்களுக்கு பிதிரார்ஜிதமாகக் கிடைத்திருக்கும்,
முன் அரசுகளால் நடத்தப்பட்டு அதிலிருந்து உருவாகி
வந்திருக்கும் பல்வேறு பிரச்னைகள் இந்த அரசால் தீர்க்கப்
பட வேண்டியுள்ளது என்று நான் கருதுகிறேன். இதைப்
பற்றிச் சுருக்கமாக நான் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் மின்னிணைப்பு
கிடைக்காத குறை, காலதாமதம் ஏராளமாக இருக்கிறது.
இங்கே பேசுகின்ற மாண்புமிகு அனைத்து அங்கத்தினர்களில்
அதைப்பற்றிக் குறிப்பிடாதவர்கள் யாருமே கிடையாது
என்று சொல்லலாம். இது மிகவும் முக்கியமான விஷயம்.



தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் இன்றைக்குப் பெரும்
பகுதியாக இருக்கும் விவசாயப் பொருளாதாரத்தில் இது
வொரு முக்கியமான பங்கு வகிக்கிறது என்பது ஒரு காரணம்.
இப்படிப்பட்ட அவர்களுக்குக் காலதாமதம் இல்லாமல் இந்த
இணைப்புகள் கிடைப்பதற்குத் துரிதமான முறையில் விண்ணப்
பங்களைப் பைசல் செய்து கொடுக்க அரசு திட்டவட்டமாக
முடிவு செய்யவேண்டும். இல்லையென்றால் என்ன வரும்
என்று சொன்னால், வசதிபடைத்த நிலச்சுவான்தார்களும்,
பணக்காரர்களும் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து
கரண்ட் சப்ளை கிடைக்காத ஏழை விவசாயிகளைத் தங்கள்
பக்கம் திருப்பி வைத்துக்கொண்டு எந்தவிதமான கிளர்ச்சிக்
கும் தயார் செய்யக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது என்
பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர முக்கியக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு இலட்சம் விண்ணப்பங்கள் இன்றைக்குப் பெண்
டிங்காக முடிக்கப் பெறாமல் இருக்கின்றன என்று கருது
கிறேன். 50,000 இணைப்புகள் கொடுக்கப்போகிறோம் என்று
அமைச்சரவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். அப்படி
யானால் பாக்கியுள்ள 1-1-2 இலட்சம் விண்ணப்பங்கள் நிச்சய
மாகப் பைசலாக்கப்படாது. அதற்கு மின்சாரம் பற்றாக்குறை
என்று அவர்கள் சொல்லலாம், அது உண்மையாகவும் இருக்
கலாம். இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் இப்
பொழுது மழைபெய்து ஓரளவுக்கு நன்கு தண்ணீர் கிடைத்து
இரண்டு வருஷக் காலத்தில் தொடர்ச்சியாக விவசாயம்
செய்ய, மானாவாரியாக இருந்தாலும், கொஞ்சம் காய்ச்ச
லாக இருந்தாலும் அப்படியிருக்கும் பகுதிகளிலும் விவசாயம்
செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் இந்தச் சமயத்
தில் பம்பு செட்டுக்கு ஆசைப்பட்டு கேட்க முன்வரும் விவ
சாயிகளைக் கவனிக்க வேண்டும். அந்த விவசாயிகள் ஏழை
எளிய பகுதியைச் சேர்ந்தவர்கள், சமூகத்தில் பலகீனமான
பகுதியைச் சேர்ந்தவர்கள். எனவே, அவர்கள் விஷயத்தில்
கவனம் செலுத்தி, இந்த 50,000 இணைப்பில் பெருமளவிற்கு
அவர்களுக்குக் கொடுக்கும்படி செய்ய வேண்டும். ஒட்டு
மொத்தமாக 50,000-க்கு மேல் போக முடியுமா என்று
பார்க்க வேண்டும். இது மிகமிக அவசியம் என்று நான்
அறிவுறுத்த விரும்புகிறேன், எடுத்துக்கூற விரும்புகிறேன்.
இதை மின்சார அமைச்சரவர்கள் விசேஷமாகக் கவனிப்
பார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதே மாதிரி, இணைப்பு கொடுக்கிற காலத்தில், பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. காலாகாலத்தில், சாங்ஷன் ஆனாலுங்கூட, அவர்கள் போடவேண்டிய பொருள்கள், அதாவது, மீட்டர், ஒயர், ஜி.ஐ.பைப் போன்ற பல சாதனங்களை இணைப்பு கேட்பவர்களே வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், அவற்றிற்காக, இணைப்பு கேட்பவரிடத்தில் பணம் வசூலிக்கப்படுகிறது. அதைத் திருப்பித் தருவதில்லை. அதற்குமேல் இதெல்லாம், வாங்கிக் கொடுத்தால்தான், துரிதமாக இணைப்பு கிடைக்கும் என்ற நிலைமையிருக்கிறது. இதற்குள் பலவிதமான சிக்கல் இருக்கிறது. ரொம்ப அடியிலே போய்ப் பார்த்தால், ஊழல் இருக்கிறதா என்றுதான் சந்தேகம் வருகிறது. பிதுரார்ஜிதமான சொத்து, பழைய காலத்து, மிச்சம், சொச்சம், இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிறது, அதுதானே !

ஆகவே, எந்தவிதமான காலதாமதமும் இன்றி, மின் வாரிய ஸ்டோர்களிலிருந்து, அந்தப் பொருள்கள் நகர வேண்டும். மின்வாரிய ஸ்டோர்களிலும் அவைகளை வாங்கி வைக்க வேண்டும். இணைப்பு கேட்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கிறோம் அல்லவா ? ஆகவே, வெகு துரிதமாக மின் இணைப்பு கொடுக்கும் காரியத்தைச் செய்ய, அரசு கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டும். எல்லாப் பொருள்களும் மின் வாரிய ஸ்டோரிலே இருந்து கிடைக்க வேண்டும்.

அதே மாதிரி, நிலத்தடி நீர் சம்பந்தமாக, கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க ஒரு கண்டிஷன் இருக்கிறது. அதற்கு ஒரு சட்டம் வரப் போகிறது. அந்த கண்டிஷனால் விவசாயிகள் மத்தியில் என்ன எண்ணம் ஏற்பட்டிருக்கிறது, இன்றைக்கு? இதுவே, நமக்கு இணைப்பு விரைவில் கிடைப்பதற்கு இல்லாமல், தாமதமாகப் பெற்றுத் தர ஒரு கருவியாக இருக்கிறதோ என்ற எண்ணம் கூட இருக்கிறது. இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த மாதிரியான நிபந்தனைகளின் மூலம் அவர்களுடைய தேவைகளை மறுக்காமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வது ரொம்ப, ரொம்ப அவசியமானது.

அடுத்து, மிக முக்கியமானது கட்டண உயர்வு. ஜனங்களைப் பாதிக்கக்கூடிய ஒன்று. இப்பொழுது 4 விதமான கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. ஒன்று, அடிப்படைக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இரண்டு, சர்சார்ஜ் விகிதம் போடப்பட்டு, அதுவும் புனர்பரிசீலனை செய்யப்பட்டு, அதுவும்





உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக, ரூ. 5 கோடிக்குப் பணம் வருகிறது என்றிருக்கிறது. அதற்கு மேலே மீட்டர் வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது. இது மூன்றாவது. அதற்கும் மேலே, ஒவ்வொரு மாதமும் 21 ஆம் தேதி பணம் கட்டவில்லையென்றால், அதற்காக ஒரு அபராதம். இப்படி, கட்டண உயர்வு, ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, சிறு தொழில் செய்யக் கூடியவர்களுக்கு, பெரிய பணக்காரர்களைப் பற்றி நான் சொல்லவில்லை—அவர்களைப் பற்றி பிறகு வருகிறேன்.

இப்படிப்பட்ட, வீக்கர் செக்ஷன்ஸ் ஆப் தி சொஸைடி—சமுதாயத்தின் பலவீனமானவர்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய அளவுக்கு, அடிப்படை கட்டணத்தில் ஒரு யூனிட்டுக்கு இவ்வளவு உயர்த்திவிட்டோம் என்று சொல்வதற்குப் பதில், இந்தக் கட்டண உயர்வு பல ரூபத்தில் அமுலில் இருந்து கொண்டிருக்கிறது. இது ஜனங்களை மிகவும் பாதிக்கிறது. வீடுகளுக்கு 35 பைசா கட்டணம். வியாபார காரியங்களுக்கு 45 பைசா. கிராமத்திலே, பெட்டிக் கடை வைத்து, ரூ. 5-க்கு வெற்றிலை பாக்கு வியாபாரம் செய்வான். அப்படி பெட்டிக் கடை வைத்திருந்தாலும் 45 பைசா கட்டணம். ஆளுங்கட்சி நண்பர்கூட ஒருவர் சொன்னார், ஒரு தையல் இயந்திரம் வைத்து, ஒரு சட்டை தொங்கினாலும் போதும் ரூ. 3 கூட அவனுக்கு வருமானம் வராது, அவனுக்கு 45 பைசா கட்டணம். கணக்கிட்டால், பெரிய பட்டியலைக் கொடுக்கமுடியும், நேரம் கிடையாது. கேட்டால், வியாபார ஸ்தலம், ஆகவே 45 பைசா என்று சொல்வார்கள். வியாபார ஸ்தலம் என்று அளந்து பார்க்கும் இந்த மந்திரக்கோல்—அளவுகோல்—என்ன என்று தெரியவில்லை. இது பலவீனமான பகுதியைத் தாக்கக் கூடிய ஒரு ஏற்பாடாகப் போயிருக்கிறது. அந்த மாதிரியிருக்கக்கூடிய, அநீதியான முறையிலே இருக்கக்கூடிய கட்டண வசூலிப்பு முறையை அரசு கூர்ந்து கவனித்து மாற்றியமைக்க வேண்டும். பெரிய தொழிற்சாலைகளுக்கு அதிகமாகக் கட்டணம் போடலாம். ஆனால், சிறியவர்களைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கிராமத்திலிருப்பவன், ஏர் கண்டிஷன் மெஷின் வைக்க மின்சாரம் கேட்கவில்லை அல்லது தண்ணீரைக் கொதிக்க வைக்க, ஹீட்டர் போட்டுக் கொள்ளவில்லை. சாதாரணமாக 2 லைட், 3 லைட் போடுபவனுக்குக் கட்டண உயர்வு எப்படி பாதிக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும். அவர்களுடைய சுமையைக் குறைக்கவேண்டுமென்பது என்னுடைய கருத்து.

ஏழைகளைப் பொறுத்தவரை, சிறு தொழில்களைப் பொறுத்தவரை, சாதாரண விவசாயிகளைப் பொறுத்தவரை, சாதாரண மானவர்களைப் பற்றிய ஒரு சித்திரம் இது.

இன்னொரு சித்திரம் பாருங்கள். பெரிய தொழிற்சாலைகளுக்கு கட்டணம் குறைவு. சிமெண்டுத் தொழிற்சாலைக்கு 8½ பைசா. காஸ்டிக் சோடா—இதற்கு 4½ பைசா, 4 பைசா, இரண்டுவிதமான சப்ளை கொடுப்பதால். கால்ஷியம் கார்பைட்—4½ பைசா. சின்தட்டிக் ஜெம், 4 பைசா. மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி—பெயர் போனது. எத்தனை கோடி ரூபாய் மின் வாரியத்திற்கு அவர்கள் கொடுக்க வேண்டியது என்று பார்த்தால், சுமார் ரூ. 10 கோடி என்று சொல்கிறார்கள். அமைச்சர், இந்தப் பெரும் முதலாளிகள், இவ்வளவு பணத்தை இப்படிக் கட்டாமல் எத்தனை வருஷங்களாக வைத்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சபைக்காவது தகவல் தருவார் என்று நான் எதிர்பார்க்கிறேன், அவர்களுக்கு 3½ பைசா கட்டணம்.

[மாலை 5-10]

அவர்களுக்குக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுத்ததற்கு வேறு யாரும் காரணம் இல்லை. பி. டபிளுள்.டி. மே மாதம் 1975 வது வருடம் ஜி.ஓ. பிரகாரம் அந்தச் சலுகைகளை அவர்கள் அனுபவிக்கிறார்கள். ஒரு பக்கம் ஏழை எளிய மக்கள் எப்படி இருக்கிறார்கள்? மின்சாரத்தை அதிகம் பயன்படுத்துகிற இந்தப் பக்கம் இன்றைக்கு எப்படி இருக்கிறது? அதற்கு வேறு சில வாதங்கள் சொல்ல இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். என்றாலும் இந்த இரண்டு சித்திரங்களையும் நாம் பார்க்கவேண்டும்.

பெரும் நிலச்சுவான்தாரர்களுக்குக் கட்டணத்தை ஏற்றுங்கள், பெரும் தொழிலதிபர்களுக்கு ஏற்றுங்கள் ஆட்சேபிக்கவில்லை. சிறு விவசாயிகளுக்குக் கட்டணத்தைக் குறைப்பது அவசியம். ஏழைகளுக்கும் கட்டணங்கள் குறைவாக இருப்பது அவசியம். 2 ஏக்கர் நஞ்சை 5 ஏக்கர் புஞ்சை நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு 16 பைசாவிலிருந்து 14 பைசாவாகக் குறைக்கவேண்டுமென்ற நல்ல முடிவை அரசு செய்தது. 14 பைசாவாகக் குறைக்க வேண்டுமென்று கிளர்ச்சி கூட நடந்தது. மீட்டர் கட்டண உயர்வு, சர்சார்ஜ் உயர்வு இப்படிப் போட்டால் எங்கே குறைப்பது? எப்படித் தாங்கிக் கொள்வார்கள்? அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது. ஆகவே 14 பைசாவாக குறைத்தது சரியானது.





பெரிய நிலச்சுவான்தார்களுக்கு உற்பத்திச் செலவுக்கு—அதிகரிப்பதற்கு—மேல் ஏன் போடக்கூடாது. அவர்களுக்கு 14 பைசா என்று ஏன் போடவேண்டும்? சட்டச்சிக்கல் பிரச்னை என்றால் கவலை இல்லை. அப்படிப்பட்ட சட்டத்தை மாற்ற வகை செய்யவேண்டும். அது அரசின் கடமை.

அடுத்தது வாரியத்திற்கு வருமானம் வேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி நான் சொல்கிறேன். விவசாயத்திற்குக் குறைந்த கட்டணம் கொடுத்ததன் மூலம் 40 கோடி போச்சு, தொழிற்சாலைகளுக்குக் கொடுத்ததில் 8 கோடி, வீடுகளுக்குக் கொடுத்ததில் 4½ கோடி போயிற்று என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் சொல்லும்படியான கொள்கைகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவர் அந்தக் கொள்கையின்படி நின்றால் போதும் என்றுதான் நான் வற்புறுத்துகிறேன். "மின்சாரத்தைப் பயன் கொள்கிற பல்வேறு தரப்பட்டவர்களிடமிருந்து அவரவர் பொருளாதார நிலைக்கு ஏற்ற வகையில் மின் கட்டண வீதங்கள் உரிய வீதத்தில் அமைந்திருக்கும் வகையில் கட்டண வீதங்களை மாற்றியமைப்பது அரசின் கொள்கையாக இருக்கும்" என்று கூறியுள்ளார். அவரவர் பொருளாதார நிலைக்கேற்றவாறு என்றிருப்பதை நான் வரவேற்கிறேன். அந்தக் கொள்கையில் அரசுக்கு இரண்டுவித சித்திரம் நான் எடுத்துக் காட்டிய மாதிரி இருக்க முடியாது. வசதி உள்ளவர்களுக்கு உயர்த்துவது அவசியம். அப்போது இந்த 40 கோடி விவசாயிகளுக்கு வேண்டிக் கொடுத்தது இழப்பு, 8 கோடி முதலாளிகளுக்குக் கொடுத்தது சிறப்பு! சிறப்பு என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன், அது பெரும் முதலாளிகளுக்கு சிறப்பாகவும் மற்றவர்களுக்கு இழப்பாகவும் இருக்கிறது என்றர்த்தமா? 19-ஆம் பக்கத்திலே அமைச்சரால் சொல்லப்பட்ட விஷயத்தைத் தான் எடுத்துச் சொன்னேன். இந்த நிலைமையில் வாரியத்தினுடைய வருமானத்தைப் பெருக்க 5, 6 யோசனைகளை முன் வைக்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகளினுடைய சலுகைகளைக் குறைப்பது. மின்சாரத்தினுடைய காஸ்ட் ஆப் புரொடக்ஷன் படி அவர்களுக்கு கட்டணம் போடவில்லை. உதாரணமாக அலுமினியம் மற்றும் கெமிக்கல்ஸ் கம்பெனிகளுக்கு ஓரளவு 4½, 3½ பைசா என்றுள்ளதை இன்னும் உயர்த்திப் போடலாம் அல்லவா? அப்போதுதான் விவசாயிகளின் சுமையைக் குறைக்க முடியும். மின்சாரத் திருட்டை நிச்சயமாகக் கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலச்சுவான்தார்களுக்கு காஸ்ட் ஆப் புரொடக்ஷனின் பேரில்

குறையாமல் வசூலிக்க வேண்டும். பெரும் நிலச்சுவான்தார்களுக்குத்தான் இது. ஏழை, சாதாரண விவசாயிகளுக்கு இல்லை.

எரிபொருள் செலவு 90 சதவீதம் அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பெரும் முதலாளிகள் 46 சதவீதம் மின்சாரத்தை உபயோகிப்பதன் (பல்க் கன்சம்ப்ஷன்) மூலம் பெரும் லாபம் சம்பாதிக்கிறார்கள். அந்த எரிபொருளுக்கு சர்சார்ஜ் ஏன் போடக்கூடாது? இதை பிளானிங் கமிஷன் மெம்பர் கூட எடுத்துக் கூறி இருக்கிறார், ஆலோசனையும் வழங்கியிருக்கிறார்கள். அதை நிரூபிக்க என்னிடத்திலே ரிகார்ட் இருக்கிறது. நேரமில்லாததால் இவற்றையெல்லாம் குறிப்பிட முடியவில்லை. இதைக் கவனிக்கவேண்டும். மிக, மிக முக்கியமானது இந்தப் பிரச்சனை. பெரிய வருமானம் பெற்று அதிக மின்சாரம் உபயோகம் (பல்க் கன்சம்ப்ஷன்) செய்கிறவர்களுக்கு (எக்ஸ்ட்ரா ஆர்டினரி பிராபிட் வருகிற பகுதிகளுக்கு) நீங்கள் தெளிவாகக் குறிப்பிட்டு அதிகப்படியான வரி போடலாம்.

அதே மாதிரி பொருள் திருட்டுப் போவது. இந்த நிறுவனத்திலே எக்கச்சக்கமாக பல்புகள், ஒயர்கள், டிரான்ஸ்பார்மர்கள் பகுதிகள்கூட கணக்கில்லாமல் திருட்டுப் போகின்றன என்று நமக்கு ரிப்போர்ட் வருகிறது. எண்ணிக்கை எவ்வளவு என்று நமக்கு ரிப்போர்ட் வராமல் இருக்கலாம். டிரான்ஸ்பார்மர்களை பிரித்து எடுத்து கொண்டு போகலாம். கோடிக் கணக்கான சொத்து திருட்டு வாரியத்தில் பல இடங்களிலே இருக்கிறது. அதைத் தடுத்தால் போதும்.

அடுத்து, நிதி பராமரிப்பு விஷயம். அதோடு வாரியத்தின் இன்ஸ்டால்ட் கெபாசிடி 1,774 மெகாவாட். அதிலே 936 மெகாவாட்தான் பயன்படுத்தப்படுகிறது. பெரும் இயந்திரங்களை வைத்து இருந்தும் நமக்குக் கிடைக்கிற மின்சாரம் 936 மெகாவாட் தான். முழுமையாகப் பயன்படுத்த என்ன வழி என்பதைப் பார்த்தாக வேண்டும். அப்போது மின்சாரப் பற்றாக்குறை இருக்காது.

சமயநல்லூர் அனல்மின்சாரம் நிலையத்தை விற்று எத்தனையோ காலமாகிவிட்டது. அங்கே மண்ணுக்குள்ளே இரயில் பாதை புதைந்திருக்கிறது. அந்த இரயில்வே லைனை இன்றைக்கு உபயோகப்படுத்துவதில்லை. ஆனால், அதன் பராமரிப்பிற்கு 14 இலட்சம் ரூபாய் இரயில்வேக்கு கொடுக்கப்



படுகிறது. மண்ணுக்குள் இருக்கும் அதை எடுத்து காயலான் கடையிலே விற்றால் நல்ல பணம் கிடைக்கும். இந்த 14 இலட்சத்தை மிச்சப்படுத்தலாம்.

அதே மாதிரி வாராக் கடன் ரூ. 1,36,82,604. இது எத்தனை வருடமாகிறது? அதைக் கண்டு பிடித்து வாங்க வேண்டும். வாராக் கடன் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்றும் செலவு 7 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய். சாதாரண மக்கள் பிரச்சனையில் இது இருக்குமா? யோசித்துப் பாருங்கள்.

அதே மாதிரி ஓர்க் '' எஸ்ட்டாபிளிஷ்மெண்ட் அண்ட் டைம் ரோல் ''. என்று அவ்வப்போது வேலை செய்யக்கூடிய பணியாளர்களுக்குக் கூலி கொடுக்க வேண்டி அதிகாரிகளிடம் வினியோகத்திற்காக உள்ள பணம் ரூபாய் ஒரு கோடியே 56 இலட்சத்து 36 ஆயிரத்து 448—கணக்கு தராதது. இதற்கு முன்னாலே 1973–74 முடியவும், அதற்கு முன்பும் வரையில் வராமல் இதுவரைக்கும் உள்ள பாக்கியுள்ள தொகை அறுபத்தெட்டேமுக்கால் இலட்சம்.

தொழிலாளர்கள் பி.எப்-இல் பிடித்து உள்ள பணம் கணக்கில் வரவு வைக்கப்படாமல் இருக்கிற தொகை டிபாசிட்டில் உள்ளது ஒரு கோடி. கணக்குப் பார்க்க பெரிய அதிகாரிகள் இருந்தும் கூட கணக்கில் இவ்வளவு மோசமான நிலை.

இந்த நிறுவனத்தைப் பற்றி ஆடிட்டர் ரிப்போர்ட்டில் சொல்லி இருக்கக் கூடிய ஒரு விஷயம் இந்த நிறுவனத்தில் எந்த அளவிற்குச் சொத்து இருக்கிறது என்பதை இதனுடைய சொத்தினுடைய மொத்த அளவு என்ன என்பதை '' பிசிகல் வெரிபிகேஷன் '' நேரிடையாகக் கணக்கிட்டுச் சொல்லப்படவில்லை என்கிறார்கள். 1957-லே இந்த வாரியம் உண்டாக்கப்பட்டதில் இருந்து, 1973–74-ல் இந்த நிறுவனம் பல தனியார் நிறுவனங்களை இணைத்துக் கொண்ட பிறகும், இன்றைக்குக்கூட '' பாலன்ஸ் ஷீட் ''-டில் பிசிகல் வெரிபிகேஷன் நடத்தி இவ்வளவுதான் சொத்து என்று நிர்ணயிக்கப்பட முடியவில்லை என்று கூறப்பட்டுள்ளதே நிலைமையை விளக்கும்.

எனவே, அமைச்சரவர்கள் இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பதில் சொல்கிற நேரத்தில், நான் சொல்லியிருக்கிற கொள்கை '' வீக்கர் செக்ஷன் ''-மக்களுக்கு உதவி

செய்யக் கூடியது, அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சக்தி உள்ளவர்களுக்கு அதிகமான அளவிற்குக் கட்டணம் போடப்பட்டு, சக்தி அற்றவர்களுக்குத் தகுந்தபடி குறைக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கையை இந்த மின்சார வாரியம் அமுல்படுத்துவதன்மூலம் நாட்டு மக்களின் நிலைமைகளைச் சீர்படுத்த முடியும். அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிற நேரத்திலே இவற்றிற்குப் பதில் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 5—20]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் ஆர். மார்க்கபந்து.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . . . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> தயவு செய்து பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிஷத்திற்குள் முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நாம் மின்சார வாரியத்தின் மீது இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கின்ற அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள். மின்சாரத்தைப் பொறுத்த மட்டில் அது மனிதனுடைய வாழ்க்கையில் இணைந்து ஒன்றாகிவிட்டது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் இணைந்த ஒன்றாகிவிட்டிருக்கிறது. குறிப்பாக மனிதன் உண்ணுகின்ற உணவிற்கு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பயிர்களுக்கு மின்சாரம் மிக, மிக, அவசியமாகத் தேவைப்படுகிறது. அந்த மின்சாரத்தைக் கொடுப்பதிலே இப்பொழுது நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், தொழிற்சாலை நடத்துகிறவர்களுக்கு அந்த மின்சாரக் கட்டுப்பாடு என்கின்ற நிலைமையை நாம் காண்கிறோம்.

குறிப்பாக, மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்த மட்டில் ஏறக்குறைய 5 ஆண்டுகளாக 1972 ஆம் ஆண்டிலிருந்து தமிழகம் கண்டிராத ஒரு விவசாயப் புரட்சியானது ஏற்பட்டது.



அந்த நேரத்தில் ஏற்பட்ட புரட்சி 11 பைசாவாக இருந்ததை
12 பைசாவாக உயர்த்தியதற்காக—ஒரு பைசா உயர்த்தி
யதற்காக—ஒரு பெரும் போராட்டம் அப்பொழுது நடை
பெற்றது. ஏறக்குறைய 12 உயிர்களைக் குடித்து, 23,000
தமிழக மக்களைச் சிறையில் அடைத்து, பின்னால் விடுவிக்கப்
பட்டு, அப்படிச் சிறையில் அடைக்கின்றபோது பலவிதமான
பொய் வழக்குகளை எல்லாம் போட்ட பின்னால் விடுவிக்கப்
பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நாம் மறந்துவிட முடி
யாது.

அப்பொழுது உயிர் கொடுத்த அந்த 17 உயிர்களும்
நம்மை நோக்கி பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றனர். அப்
படி அந்த உயிரைக் குடித்தவர்கள் இன்று விவசாய மக்களுக்
காக ஒரு போராட்டத்தை நடத்துவதானது முதலைக் கண்
ணீர் வடிப்பது போன்றதாகும். இப்பொழுது இருக்கிற
ஒரு அரசாங்கம் ஏற்கெனவே இருக்கின்ற 16 பைசாவை 14
பைசாவாகக் குறைக்க வேண்டுமென்று முடிவு எடுத்து, அது
வும் சிறு விவசாயிகளுக்காக குறைக்க வேண்டுமென்று முடிவு
எடுத்து, அதை அமுல்படுத்துகிறபோது அதைக் குறைக்க
வேண்டுமென்பதற்காக ஒரு போராட்டத்தை நடத்தி தாங்
கள்தான் விவசாய மக்களுடைய நலனில் கருத்து கொண்
டவர்கள் என்பதை நாட்டிலே இருக்கின்ற மக்கள் அறிந்து
கொள்ளவேண்டுமென்ற அளவிலே முதலைக்கண்ணீர்
விடுகின்ற கட்சிக்காரர்களை நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

இப்பொழுது இருக்கிற 16 பைசாவானது எப்பொழுது
உயர்த்தப்பட்டது என்று சொன்னால் (ஜி.ஓ. நெ. 1313
தேதி 30—8—1975) 30—8—1975 ஆம் தேதியன்று அர
சாங்கத்தின் 1313 உத்திரவின் மூலம் 16 பைசாவாக
உயர்த்தப்பட்டது. அதே போன்று அப்பொழுது இருந்த
இரண்டு ரூபாய் மீட்டர் கட்டணத்தை 5 ரூபாயாக
9—10—1974-ஆம் தேதியிட்ட அரசாங்கத்தின் 1487
என்ற உத்திரவின் மூலமாக உயர்த்தியிருக்கிறார்கள். இந்தத்
தேதிகளை நான் குறிப்பிடுகின்றபோது தமிழகத்தை ஆண்டு
கொண்டிருந்த அரசாங்கம் எந்த அரசாங்கம் என்பது உங்
களுக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி
யானது அப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த
ஆட்சிக் காலத்திலேதான் இந்த உயர்வுகள் ஏற்படுத்தப்பட்
டன. அதற்காக அந்த உயிர்களை எல்லாம் குடித்துவிட்டு
பிறகு இப்பொழுது ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறங்கிவிட்ட
பிறகு, மற்றொரு ஆட்சி விவசாய மக்களுடைய நலன்களைக்

கருத்தில் கொண்டு ஆட்சி புரிகின்ற ஆட்சியானது இப்பொ ழுது தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கிற இந்த அரசானது விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகளை தரவில்லை என்று ஒரு கூப்பாட்டைப் போட்டு, முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிற நிலைமையை நாட்டிலே இருக்கிற மக்கள் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். விவ சாய மக்கள் பயிரிடுகின்ற அந்த பயிர்களுக்கு அந்த விவசாயி களுக்கு கட்டுப்படி ஆகக் கூடிய விலையில் விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அப்பொழுது இருந்த எதிர்க்கட்சிக் காரர்கள் அத்தனை பேர்களும் வற்புறுத்திக் கொண்டிருந் தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது அப் பொழுது எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக, இந்த அரசு வந்த பின்னர் மேல் மட்ட குழுவை அமைத்து, விவசாயச் சங்கங்களில் ஈடுபாடு இருக்கின்ற டெக்னிகலி க்வாலிபைட் அதிகாரிகளை எல்லாம் வைத்து ஒரு மனிதன் உற்பத்தி செய்கிற உணவுப் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்ய ஒரு உயர் மட்டக் குழுவை அமைத் திருக்கிறது என்று சொல்கிற காலத்திலே இந்த அரசை நாம் பாராட்டாமல் இருக்க முடியவில்லை....

குறிப்பாக விவசாயிகளுக்கு—தொழில் நிறுவனங்களில் இருக்கிறவர்களுக்கு பாதுகாப்பு தருகிற வகையில் இன்ஷூரன்ஸ் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது—விவ சாயத்தை நம்பிக் கொண்டிருக்கிற மக்களுக்கு அந்தப் பயிர் அழிந்துவிடுகிற காலத்தில், வறட்சி காரணமாக பயிர் அழிந்து விடுகிற காலத்தில் பூச்சி இறங்கி பயிர்கள் அழிந்துவிடுகிற காலத்தில் விவசாயிகள் வயிற்றில் ஈரத்துணியை கட்டிக் கொண்டு பசியால் வாடும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்களைப் பாதுகாக்க வேண்டு மென்று இதுவரையில் ஆண்டு வந்த எந்த அரசானாலும் சரி அவர்களிடம் அக்கறை காணாதிருந்த நிலை மாறி பயிர் பாது காப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை இப்போது கொண்டு வந் திருக்கிற அரசை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக மனிதனுக்கு வேண்டியது உணவு.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் தவறுதலான ஒரு கருத்தைக் கூறுகிறார்கள். இந்த அரசு பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமல் செய்து வருகிறது என்ற தவறான கருத்தைச் சொல் கிறார்கள். அதைத் திருத்திக் கொண்டால் நல்லது.





*திரு. ரா. மார்க்கபந்து : பயிர் இன்ஷூரன்ஸ் என்று சம்பந்தம் இல்லாமல் கூறவில்லை. காரணம், பயிரிடுகிற வர்களுக்கு போதுமான மின்சாரத்தை நாம் தரவேண்டும். ஒரு பக்கத்தில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்கிறோம். உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு மின்சாரம் சப்ளை செய்வதில் தடைகள் இருக்கின்றன. இவ்வளவு பம்ப் செட்களுக்குத்தான் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்ற ஒரு தடை உத்தரவை விதித்து அவர்களுக்கு மின்சாரம் கிடைக்க முடியாத நிலை காரணமாக விவசாயிகள் அதிக அளவு உற்பத்தி செய்ய முடியாத நிலை இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

விவசாயிகள் தங்கள் பம்ப் செட்களுக்கு மின்சார இணைப்பு வேண்டும் என்று கேட்டு மனுக்கள் செய்து பல ஆண்டுகளாகியும் மின்சார இணைப்பு கிடைக்காது விவசாயிகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாதிப்பை நாம் எப்படியாவது மாற்றியாக வேண்டும். கேட்பவர் களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கும் வகையில் இந்த அரசு முன் வந்து கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக, க்ரவுண்ட் வாட்டர் ஸ்கீமை எடுத்துப் பார்த்தால் நிலத்தடி நீர் கீழே சென்று கொண்டிருக்கிறது. ஆகவே பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு தருவதன்மூலம் தான் தண்ணீரை அதிகமாக உறிஞ்சி வெளியே கொணர வேண்டியிருக்கிறது. அதனால் தண்ணீர் மட்டம் கீழே சென்றுவிடுகிறது.

ஏற்கனவே நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். தண்ணீர் அதிகமாக கீழே விழுந்து ஓடுகிற இடங்களில், மலைகளிலிருந்து வழிந்து காட்டாறுகளில் எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் வீணாகச் செல்கிறதோ அங்கங்கே தண்ணீரை அணைகள் கட்டி தேக்கி வைத்தால் நிலத்தடி நீர் மட்டத்தை ஒரு நிலையில் வைப்பதற்குண்டான ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே குறிப் பாக எந்தெந்த இடங்களில் டாம்கள் அல்லது ரிசர்வாயர்கள் கட்ட வேண்டுமோ அந்தந்த இடங்களில் டாம்கள் அல்லது ரிசர்வாயர்கள் கட்டி தண்ணீரை தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தை ஒரு சீரான நிலையில் வைக்க வேண்டும். அப்படி ஒரு சீரான நிலையில் நிலத்தடி நீர் மட்டத்தை வைப் பதினால் யார் யார் பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு கேட் கிறார்களோ அவர்களுக்கு மின் இணைப்புகள் தருவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படும்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 சனவரி 2

அதே நேரத்தில் வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு ஏறக்குறைய 3½ லட்சம் கிணறுகள் உள்ளன. அவற்றில் 1.3 லட்சம் கிணறுகளுக்குத்தான் மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய இரண்டு லட்சம் கிணறுகள் மின் இணைப்பு பெறப்படாத நிலையில் இருக்கிறது. அந்த விவசாயிகள் ஏறக்குறைய இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பம்ப் செட்கள் வாங்கி வைத்திருந்தும் அதற்கான எக்ரிமெண்ட் செய்திருந்த போதிலும் அவற்றிற்கு மின் இணைப்பு கிடைக்காத காரணத்தினால் பாங்குகள் அல்லது மற்ற கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் ஏழை விவசாய மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே கஷ்டப்படுகிற அந்த விவசாயிகளுக்கு குறிப்பாக இந்த அரசு அதிகமான முறையில் பம்ப் செட்களுக்கு மின் சார இணைப்புகள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

திரு. ரமணி அவர்கள் சொல்கிறபோது ஆலை முதலாளிகள் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டாது நிலுவை வைத்திருக்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுப்பது கிடையாது. ஆனால் ஒரு விவசாயி 21-ம் தேதி மின்சாரக் கட்டணம் கட்டவில்லையென்றால் உடனே அவரது நிலத்திலுள்ள பம்ப் செட்டின் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது.

[மாலை 5–30]

துண்டிக்கப்படுவதின் காரணமாக, இருக்கின்ற பயிர்கள் எல்லாம் அழிந்து போய் விடும். இப்படி விவசாயத்தை நம்பியிருக்கின்றவர்களுக்கு ஒரு முறையாகவும், பெரிய தொழிலை நடத்திக் கொண்டிருக்கின்ற முதலாளிகளுக்கு ஒரு முறையாகவும் இப்படி பாரபட்சமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதை நாம் தடுத்தாக வேண்டும்.

மற்றும், இப்போது வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பெரும்பாலும் கிணறுகளையே நம்பி நிலங்களை விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் தற்போது அறிவித்திருக்கின்ற 50 ஆயிரம் மின்-இணைப்புகளில் வட ஆற்காடு மாவட்டத்திற்கு மட்டும் 20 ஆயிரம் மின் இணைப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி, விவசாய



1978 சனவரி 2] [திரு. ரா. மார்க்கபந்து]

மக்களுக்கு எந்தெந்த முறையில் பாதுகாப்பு தரவேண்டுமோ அந்த முறைகளில் எல்லாம் பாதுகாப்பு தரவேண்டும் என்று குறிப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரை பம்பு செட்டுகளை அமைப்பதற்கு பாலாறு பேசின் ரூல்ஸ் என்று ஒன்று தடையாக இருக்கிறது. இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் மின் இணைப்புத் தரமுடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். இதற்கெல்லாம் பாலாறு பேசின் ரூல்ஸ் தடையாக இருக்கிறது. இவைகளையெல்லாம் நீக்க வேண்டும் என்று வட ஆற்காடு மாவட்டத்தின் கோரிக்கையாக வைத்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. எம். எ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு மிக் இன்றியமையாததாக இருக்கும் ஒரு துறை குறித்து இந்த விவாதத்தில் நான் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரத்த நாளங்களாக இருக்கின்ற இந்த மின்சாரத்துறை மற்ற எல்லாத் துறைகளின் முன்னேற்றத்திற்கும் ஒரு ஆதாரமான துறையாக விளங்குகிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மற்றத் துறைகளில் முன்னேற்றத்தை காணவேண்டும் என்று சொன்னால் அது விவசாயத் துறையாக இருந்தாலும், தொழில் துறையாக இருந்தாலும், அவைகளில் முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்றால் மின்சாரத்துறையில் அதிகமான கவனத்தை நாம் செலுத்த வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் அனுபவம் உள்ளவர் என்பது மட்டுமல்ல, அதற்கான போதிய கல்வியையும் பெற்றவராகத் திகழ்கிறார். அவர்கள் இந்தத் துறையை முறையாக செயல் படுத்துவார், இந்தத் துறையில் உள்ள குறைபாடுகளை நீக்குவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தாலும் எப்போதும் போல் இன்றைக்குக்கூட நமது மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத்துறையிலும் குறைகளை வெகுவாக எடுத்துச் சொல்லுகிறார்கள். எந்தெந்த வகையில் இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு ஆராய்ச்சி செய்து குறைகளை போக்குவதற்கு நடவடிக்கை

மேற்கொள்ளப்படுகின்றன என்று மின்சாரத் துறையினரால் வருடா வருடம் ஒரு குறிப்பு இந்த அவைக்குத் தரப்படுகிறது. Seriously considered தீவிரமான கவனத்தில் இருக்கிறது—ஆய்வில் இருக்கிறது—என்கின்ற குறிப்புகள் தான் வருகின்றனவே தவிர, இப்படி வருடா வருடம் சொல்லப்பட்டு வருகின்ற ஆய்வுக்கு வயது என்ன? இதற்கு ஒரு வயதை நிர்ணயித்து விட்டால் நல்லது.

வருடா வருடம் 'ஸீரியஸ்லி கன்ஸிடர்டு' என்று வந்து கொண்டிருப்பது 'ஸீரியஸ் கன்டிஷனை' உருவாக்கி விடுகிறது. இதற்கு ஒரு முடிவு வைத்தாக வேண்டும். இப்படி ஒவ்வொரு ஆண்டும் வந்து கொண்டிருந்தால் எப்போதுதான் இதற்கு முடிவு ஏற்படும் என்று தெரிவதில்லை. We will have to face it. இந்த முறையை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை எடுப்பதற்கு தயவு செய்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையை செம்மைப் படுத்த முடியாததற்கு காரணம் மேலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு கீழே இருக்கின்ற அதிகாரிகளிடம் கன்ட்ரோல் செய்ய முடியவில்லை என்று பகிரங்கமாக சொல்லுகிறார்கள். எஸ். ஈ. யைப் பார்த்துப் பேசும்போது, அவர்களே சொல்லுகிறார்கள். எங்களால் இன்ன காரியத்தை செய்ய முடியவில்லை, ஒத்துக் கொள்கிறோம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமானால் அது மிகவும் வருந்தத் தக்க விஷயமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிலாளர்களும் தங்களுடைய கடமையை உணர்ந்து செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்வதில் தவறு எதுவுமில்லை என்று நினைக்கிறேன்.

உரிமைக்காகப் போராடுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படிப் போராடுவது நீங்கள் மட்டுமல்ல. அப்படிப் போராடுகின்ற தொழிலாளர் வர்கத்திற்கு குரல் கொடுக்கக்கூடிய இந்த அவையின் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். நீங்கள் உரிமைக்காகப் போராடுங்கள்; அதை யாரும் தவறு என்று சொல்லவில்லை. அப்படி உரிமைக்காகப் போராடுகின்றவர்கள், தங்கள் கடமைகளையும் செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.



பல ஊர்களிலே பல்புகள் எரியவில்லை. காரணம் கேட்டால், மின்சார இணைப்புகள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி ஏன் இணைப்புகள் கொடுக்கவில்லை என்று கேட்டால், சப்ளை கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. சப்ளை ஏன் இல்லை என்று கேட்டால், பல்பு இல்லை என்கிறார்கள். ஏன் பல்பு இல்லை என்று கேட்டால், பியூஸ் ஆகிவிட்டது என்றும், திருட்டு போய்விட்டது என்று சொல்லக்கூடிய நிலைமையிலேயும் தான் இன்றைக்கு நாடு இருக்கிறது.

இதை நடத்திச் செல்லும் தொழிலாளர்கள் ஒத்துழைக்கவில்லை என்று மேலதிகாரிகள் இன்றைக்குச் சொல்லக் கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதிலும் உண்மை இருக்குமானால், தொழிலாளர்கள் அதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து தங்கள் கடைமைகளை நல்லமுறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குத் தொழில் துறைத் தலைவர்களும் தங்கள் ஒத்துழைப்பை தரவேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பல குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். அதிலே ஒன்று, விவசாயத் துறை. விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய மின் இணைப்புகள் கொடுப்பதில் போதுமான கவனம் செலுத்தவில்லை என்று குறை சொல்லப்படுகிறது. அதற்கு அரசாங்கத்தின் சார்பாகச் சொல்லப்படுகின்ற விளக்கம், சட்டியில் இருந்தால்தானே, எடுத்துக் கொடுப்பதற்கு என்று சொல்லபடுகின்றது. அந்த விளக்கம் அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. ஆனால், ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். யாருக்கு முதலில் பரிமாற வேண்டுமென்பதை சற்று அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். யார் சிசுவாக இருக்கின்றார்களோ, குழந்தையாக இருக்கின்றார்களோ, யாருக்கு பசி என்று சொல்கின்றார்களோ, அவர்களுக்குப் பரிமாற வேண்டும். ஆனால் இவர்கள் யாருக்குக் கொடுக்கின்றார்கள், பரிமாறுகின்றார்கள் என்று பார்த்தால் பெரியவர்களுக்கு, பசியில்லாமல் இருப்பவர்களுக்கு மேலும் சாப்பிடுங்கள் என்று கொடுக்கிறார்கள். அந்த நிலைமை இருக்குமானால், அதைப் பற்றியும் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். கொடுப்பது முதல் முறையாகக் கொடுக்கப்படுகின்றதா, பசிக்கின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றதா, சிறு தொழில் செய்கின்றவர்களுக்குக் கொடுக்க

படுகின்றதா என்றெல்லாம் பார்த்துக் கொடுக்கவேண்டும் இன்றைக்கு மின்சாரத்துறையில் இந்த இணைப்புக்கள் யாருக்குக் கொடுக்கப்படுகின்றது என்று பார்த்தால் பெரும் முதலாளிகளுக்குத்தான் இந்த சப்ளை கொடுக்கப்படுகின்றது.

உதாரணமாக மேட்டூரிலே மால்கோ நிறுவனம் என்றிருக்கிறது. அந்த நிறுவனத்தை அரசு தேசிய மயமாக்க வேண்டுமென்று சொன்னபோது, சட்டத்தைக் காட்டி அதற்குத் தடங்கலாக இருக்கின்றார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு மின்சாரக் கட்டணமாக எவ்வளவு பாக்கி என்று பார்த்தால் 10 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த 10 கோடி ரூபாயை இந்த அரசு இன்னும் அவர்களிடமிருந்து வசூலிக்காமல் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கலாமா?

அந்த மால்கோ நிறுவனத்தின் மொத்த முதலீட்டின் மதிப்பு எவ்வளவு என்று பார்க்கும்போது, அந்த நிறுவனத்தின் மதிப்பே ஒரு கோடி ரூபாய் என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. அப்படி ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த நிறுவனம் இந்தமின்சாரத் துறைக்கு 10 கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிறது என்று சொன்னால் அதை வசூல் செய்ய மின்சாரத் துறை தக்க நடவடிக்கை எடுக்க வேண்டாமா? அந்த நிறுவனத்தின் மீது ஒரு ஜப்தி ஆர்டரைப் போட்டு, இந்த அரசாங்கமே அதைச் சட்டபூர்வமாக ஜப்தி செய்ய வேண்டாமா?

அதை தேசீய மயமாக்குவதில் என்ன தடங்கல் இருக்கிறது என்பதையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தேசீய மயமாக்குவதில் அவர்கள் சட்டத்தைக் காட்டி, கோர்ட்டிலே தடை வாங்கியிருப்பதாக இந்த அரசாங்கம் சொல்லுமானால், அவர்கள் நிறுவனத்தை ஜப்தி செய்வதிலே என்ன கஷ்டம்? இந்த நிறுவனமே அரசாங்கத்திற்கு 10 கோடி ரூபாய் தரவேண்டும். ஆனால் விவசாயி 10 ரூபாய் கொடுக்காவிட்டால் அவர்கள்மீது உடனே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது என்ன சோஷலிசம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆகவே, தயவுசெய்து சிறு தொழில் செய்யக் கூடியவர்களுக்கு, ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்று யாராவது ஆரம்பித்தால், அவர்களுக்கு உடனே மின்சார இணைப்பு



தாருங்கள். தானாகவே ஒருவர் சிறு தொழில் செய்வதற்கு முன்வந்தால், அந்தத் தனிப்பட்ட நிறுவனத்தை ஊக்குவிப்பதற்கு அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுங்கள்; உதவி செய்யுங்கள்.

[மாலை 5-40]

விவசாயிகளுக்கு உங்கள் துறை உதவி செய்யட்டும். ஆனால் பெரும் முதலாளிகளுக்கு உங்களுடைய உதவி நீடித்துக்கொண்டு செல்லுமானால் பலகீனமானவர்கள் மேலும் பலகீனமாகிக் கொண்டிருப்பார்கள்; பணக்காரர்கள் சுரண்டல் செய்து கொண்டே நாட்டில் சுரண்டிக் கொண்டிருப்பார்கள். அதைத் தடுக்க வழி இல்லாமல், வக்கு இல்லாமல் சோஷலிச சமுதாயத்தை நம்மால் அமைத்துவிட முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சாரத் திருட்டைப் பற்றிச் சொன்னார்கள். எலக்ட்ரிசிடி பில்பரேஜ் நடக்கிறது. இந்த நாட்டில் எது எதற்கு பில்பரேஜ் என்ற வரைமுறை கிடையாது. ஆஸ்பத்திரியில் நோயாளி இருந்தால் அவனுக்கு எடுத்து செல்லுகிற சாதத்தில் பில்பரேஜ். மின்சாரத் திருட்டு டோடல் ப்ரொடக்ஷனில் 10 பர்சென்ட் திருட்டுப் போகிறது; அடுத்த ஆண்டு 12 பர்சென்ட் அதற்கடுத்த ஆண்டு 17 பர்சென்ட் அதற்கு அடுத்த ஆண்டு 20 பர்சென்ட் இப்போது உற்பத்தி செய்கிற மின்சாரத்தில் 20 பர்சென்டுக்கும் மேலாக திருட்டுப் போகிறது என்று சொன்னால் இது எந்த அளவுக்கு நாட்டினுடைய செல்வத்தை, பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்பதை அரசு சிந்தித்து அதன்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேட்டால் டெக்கினிகல் டிபிகல்டிஸ் என்று சொல்கிறார்கள். அதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. புரிந்து கொள்ளும் பொருளாக இருந்தால் நிச்சயமாகப் புரிந்து கொள்வோம். அது யாருக்கும் தெரியாத புதிராக இருக்கிறது. அந்தப் புதிரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கண்டுபிடித்து அதற்கான நிவாரண வேலைகளைச் செய்யவேண்டும். அப்படி 20 சதவிகிதம் பில்பரேஜ் செய்யக்கூடிய மின்சாரம் நம்மிடம் இருந்தால் நல்ல முறையில் சாதாரண மக்களுக்கு, விவசாயிகளுக்கு,

சிறு தொழில்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க முடியும் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஸ்தல ஸ்தாபனங்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் மாநகரங்களிலும் மின்சாரத்தை மக்களுக்கு அளிக்கக்கூடிய பொறுப்பில் இருக்கிறார்கள். அதை மெயின்டெய்ன் பண்ணுகிற பொறுப்பை லோகல் பாடிசுக்கு விட்டு விட்டார்கள். அந்தப் பொறுப்பு எங்களிடத்தில் இல்லை என்று மின்சாரத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு இராமச்சந்திரனார் கூறுகிறார்கள். காளிமுத்தைக் கேளுங்கள் என்கிறார்கள். மாண்புமிகு காளிமுத்தைக் கேட்டால் 'உண்மைதான் பொறுப்பு இருக்கிறது; ஆனால் பல்பு போய்விட்டால் அவர்கள்தான் மாற்ற வேண்டும்; ராமச்சந்திரனாரைக் கேளுங்கள்' என்று மக்களை ஃபுட்பால் போன்று அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும்.

எந்த நகரத்திலும் 25 சதவீதத்துக்குமேல் விளக்குகள் எரிவதில்லை. வாணியம்பாடியில் 1008 மின்சார பல்புகளில் 186 பல்புகள்தான் எரிந்துகொண்டிருக்கின்றன. மின்சாரத் துறை பல்புகளை மாற்றினால்தான் அவை எரியும். அவர்களைக் கேட்டால் கமிஷனரைக் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலை வேண்டாம். ஆஸ்பத்திரியில் டாக்டர் இருக்கிறார் அந்த டாக்டரிடம் பொறுப்பு இல்லாமல் நகரசபை நடத்தக்கூடிய காரணத்தால் மாநகராட்சியைக் கேளுங்கள் மருந்து கொடுப்பார்கள் என்று சொன்னால் எப்படி இருக்கும்? அமைச்சர் அவர்கள் மீண்டும் பழைய முறையைக் கொண்டு வந்து மேலும் சீர்திருத்தி அமல்படுத்த வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : மக்களிடத்திலிருந்து மின்சாரத்திற்கும் மற்ற வசதிகளுக்கும் வரியை வசூலிக்கிறார்கள், வரியை வாங்கிக் கொண்டு பலன் கிடைக்கவில்லை என்றால் நாட்டிலே வரிகொடா இயக்கம் வர சாத்தியக்கூறுகள்



ஏற்பட்டுவிடும். வாணியம்பாடியில் நேற்று நான் சென்றபோது தடுத்து நிறுத்தி விட்டார்கள். மறியல் செய்து தேவையில்லாத வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு எதற்கெடுத்தாலும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருப்பவர்கள் எம். எல். ஏ.க்கள்தான் குப்பை எடுக்கவில்லை என்று சொன்னாலும் எம். எல். ஏ. தான்; லைட் எரியவில்லை என்று சொன்னாலும் எம். எல். ஏ. தான். வாணியம்பாடியில் பெரிய மறியல் நடந்தது.

ஆம்பூரிலே மோசமான நிலைமை இருக்கிறது. லெட்டர்ஸ் டு தி எடிட்டர் எல்லாம் நிறைய வந்துகொண்டிருக்கின்றன இதையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் மலைகள் நிறைந்த மாவட்டம் அது முல்லைநிலம், குறிஞ்சி நிலம் அதிகமாக உள்ள மாவட்டம் அந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர் அதிகமாக இருக்க வேண்டும் என்றால் நீர்த் தேக்கங்கள் அதிகமாக இருக்க வேண்டும். அதை அதிகமாக ஏற்படுத்த வேண்டும். 1973-1974 ஆம் ஆண்டிலே சில திட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால் நிறைவேற்றப்படவில்லை. ஆண்டியப்பனூர் திட்டம் சேர்க்கப்பட்டிருந்தும் எடுத்துக்கொள்ளப்படவில்லை, ஆலங்காயம் திட்டம் சேர்க்கப்பட்டிருந்தும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. வெள்ளக்குட்டை திட்டம் சேர்க்கப்பட்டிருந்தும் எடுத்துக் கொள்ளப்படவில்லை, வெள்ளக்கல் திட்டம் சேர்க்கப்பட்டிருந்தும் இதுவரையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஏன் என்று தெரியவில்லை. மற்றத் திட்டங்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படுகிறபோது இந்தத் திட்டங்கள் மட்டும் ஏன் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று தெரியவில்லை. அவைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலைப் பகுதியில் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை சில பகுதிகளில். அங்கு மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

மந்தராக்குட்டை, மேல் குட்டை பகுதிகளிலே இருந்து வந்திருக்கிற விண்ணப்பங்களை பரிசீலனை செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

அடுத்து, சென்னையிலே இருக்கிற காயிதே மில்லத் காலேஜ், அதற்கு நான் கரஸ்பாண்டெண்ட், இன்னும் அதற்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை, ஒரு ஆண்டாக மின் இணைப்புக் கேட்டுக்கொண்டே இருக்கிறோம், நான் இதுவரையில் பல தடவைகள் ஏ. இ. க்களையும் மற்ற அதிகாரிகளையும் பார்த்து கேட்டேன். ஒரு காலேஜுக்கு மின் இணைப்புக் கேட்டால் அதிகாரிகள் இவ்வளவு தாரம் செயல்படுகிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து, இந்தத் துறை ஒரு சிக்கலான துறைதான், சிக்கலான துறை என்றாலும் திறமையானவர் நிர்வகிக்கிறார், ஆகவே இவைகளையெல்லாம் செய்வார்கள் என்று நினைத்து நாங்கள் சொல்லுகிறோம் என்பதைத் தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. கா. வே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் கோரிக்கையின் மீது என்னையும் பேச அனுமதித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

இப்போது நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்றால் மின்சாரப் பஞ்சம் தான் ஏற்பட்டிருக்கிறது என்று விவசாய மக்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். எங்கே சென்றாலும் மின்சார சப்ளை வேண்டும் வேண்டும் என்று தான் விவசாயிகள் கேட்கிறார்கள். மின்சாரம் வழங்குவதில் தாமதம் செய்கிறார்கள். மின்சாரத்திற்கு அதிகப்படியான வாய்ப்பு தமிழ்நாடு முழுவதும் இருந்துகொண்டிருக்கிறது. அதிகமாக உற்பத்தி செய்து நல்ல முறையிலே பகிர்ந்து கொடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில நேரங்களிலே டிரான்ஸ்பார்மர்களிலிருந்து மின்சாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும்பொழுது அதில் லோடு இல்லை. ஆகவே சப்ளை கொடுப்பதற்கில்லை என்று மின்சார ஊழியர்கள் சொல்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு விவசாயிக்கும் 3 மணி நேரம் என்று பிரித்துக் கொடுத்து ஒவ்வொரு விவசாயிக்கும் மின்சாரத்தைப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் ஒரே கிணறு என்றால் 2 பம்பு செட்டுகள் வைக்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது. மின்சாரம் கொடுக்கப்பட்ட பிறகு முதலில் 4 நாட்களுக்குத்தான் முறைப்படி தண்ணீர்



எடுத்துக்கொள்ளப்பட முடிகிறது. மீண்டும் 4 நாட்களுக்கு மின்சாரம் பற்றாக்குறையாகி விடுகிறது. அதனால் அந்த நாட்களில் கவலை கட்டித்தான் தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கிறது. அதே இடத்திலே மேலும் சப்ளை வேண்டுமென்று கேட்டால் மின்சார அதிகாரிகள் சப்ளை கொடுப்பதற்கு டிலே ஆகிறது. காரணம், 4 நாட்களுக்குத் தான் லோடு டிரான்ஸ்பார்மர்களில் இருக்கிறது. ஆகவே அரசு இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5—50)

அதுமட்டுமல்லாமல், அரிசி ஆலைகளுக்கு மின்சாரம் சப்ளை புதிதாகக் கொடுக்க வேண்டுமானால் தனி மீட்டர் வைக்க வேண்டுமென்று இப்பொழுது அதிகாரிகள் மத்தியில் கோரிக்கையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி செலவினத்தைக் குறைக்க வேண்டுமானால் 300 மீட்டர்களை வாங்குவதற்குப் பதிலாக ஏழை எளியவர்களுக்குப் பயன் படும் வகையில் மின்சாரக் கம்பிகளை வாங்கி ஏழை எளிய விவசாயிகளுக்கு சப்ளை கொடுக்க இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களைப் போன்ற விவசாயிகள் கிராமங்களுக்குச் செல்லும்பொழுது விவசாயிகள் எங்களைப் பார்த்து என்ன கேட்கிறார்கள் என்றால், கார்ப்பரேஷனுக்கு மட்டும் கரண்ட் வேண்டும், லிப்ட்டுக்குக் கரண்ட் வேண்டும், ஏர் கண்டிஷனுக்குக் கரண்ட் வேண்டும், ஆனால் இங்கே 120 அடி ஆழத்திற்கு மேல் அடியிலுள்ள தண்ணீரை மேலே கொண்டுவர மின் சப்ளை கொடுக்க இயலாதா என்று கேட்கிறார்கள். அவ்வாறு எங்கு பார்த்தாலும் ஏழை விவசாயிகள் குமுறிக் கொண்டேயிருக்கிறார்கள். காரணம், இரண்டு மாதங்களுக்கு முன்பு புயல் மழையினால் எங்கு சென்றாலும் அதிகப்படி தண்ணீர், அதிக வரவு வந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதுதான் மின்சாரம் வேண்டிய அளவிற்குத் தேவைப்படுகிறது. இப்பொழுது, 2, 3, 4 மாதங்களில் கொடுக்க வேண்டும். நிலத்தடி நீர் குறையும் நேரத்தில் எங்களுக்கு சப்ளை கொடுத்தீர்களானால் எங்களுக்கு அது தேவையில்லாமல் போய்விடும். ஆகவே, இந்த அளவிற்கு டெம்பரரி சப்ளையாவது கொடுக்க வேண்டும். 'டபிள் த்ரோ ஸ்விச்' என்று சொல்வார்கள், அதாவது கீழே தூக்கும்போதே ஒரு மோட்டர் ஓடும்.

மேலே தூக்கும்பொழுது ஒரு மோட்டார் ஓடும். அந்த மாதிரி எமர்ஜென்சிக்காவது விவசாயிகளுக்கு மின்இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது இருக்கின்ற நிலைமைகளை எடுத்துக் கொண்டால் கோவை மாவட்டத்தில் எங்கு சென்றாலும் தண்ணீர் கிணறுகளில் அதிகப்படியாக இருக்கிறது. விவசாயம் செய்ய மோட்டார் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தால்தான் அதிகப்படியாக விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்ய இயலும் என்று இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1977–78 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டின் மீதும், 1976–77 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை மதிப்பீட்டின் மீதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைக் கூறுவதற்கு விழைகிறேன். மின்சாரம் மனிதனுடைய வாழ்க்கையில் மிகவும் தேவையான, முக்கியமான ஒரு பொருளாக மாறியிருக்கக்கூடிய காலம்.

சோவியத் நாட்டில் புரட்சி நடந்து முடிந்து தோழர் லெனின் அவர்கள் அங்கே பிரதமராக அமர்ந்தவுடன் மின்சாரத் திட்டத்தை விஸ்தரிப்பதற்காக ஒரு மாஸ்டர் பிளான், மிகப் பிரம்மாண்டமான ஒரு திட்டத்தினை வகுத்து, அந்த திட்டத்தின் மூலமாக மின்சாரத்தை சோவியத் பூமியில்— சோவியத் பூமி இந்தியாவைப் போல் ஏழரை மடங்கு பெரிய நாடு—அந்த நாடு முழுவதும் மின்சாரத்தை விஸ்தரித்து சகல கிராமங்களுக்கும் மின்சாரத்தை அளித்தார். கம்பங்களை நட்டதோடு நின்றுவிடவில்லை, மின்சாரமும் கொடுக்கப்பட்டது.

அவ்வாறு மின்சாரம் கொடுக்கப்பட்டதன் விளைவாக தொழில் வளர்ச்சி பெருகியது. அவ்வாறு பெருகிய தொழில் வளர்ச்சியின் விளைவாக தொழிலாளி வர்க்கம் அங்கே மென்மேலும் உற்பத்தியைச் செய்து குவிக்கும் வாய்ப்பை உண்டாக்கிக் கொடுத்தார். இன்றைக்கு நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் மின்சாரத் துறையில் சேவையும் தேவை, சிக்கனமும் தேவை. மின்சார இலாகா இந்தத் துறையில் பரிபூரணமான மாற்றங்களைச் செய்ய வேண்டும். அவ்வாறு பரிபூரணமான மாற்றங்களைச் செய்து





சிகப்பு நாடா முறையை அறவே நீக்க வேண்டும். சேர்மன், சீப் எஞ்சினியர் என்று பைல்களை மேலே அனுப்பி, அது கீழே திரும்பி வருவதற்குள்ளே நட்ட போஸ்ட்கள் விழுந்து விடும். வெட்டிய கிணறுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விடும். இப்படிப்பட்ட நிலைமைகள் வராமல் தடுக்க, ஸ்தலத்திலேயே பிரத்தியட்ச நிலைமைக்கேற்ப முடிவுகளை எடுக்கும் பொறுப்புகள் அந்தந்த மாவட்டத்தில் பிளாக்கில், தாலூக்காவில் இருக்கும் எஞ்சினியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பைல்கள் தேக்கம் என்பது நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பெரும்பாலான பொறுப்புகள் சேர்மனுக்கு, சி. இ.க்களுக்கும் இருக்கின்றன. இந்த அதிகாரம் என்பது பரவலாக்கப்பட்டு, கீழே இருப்பவர்கள் வரையில் முடிவெடுக்க, மின் இணைப்பு பெறவும், பல கட்டங்களைத் தாண்டுகிற முறை மாறவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 1972-ம் ஆண்டு மின் உற்பத்தி குறைந்திருந்தும் அந்த ஆண்டும் அதற்குப் பிந்திய ஆண்டும் மின்சாரத் துறைக்குப் பெரும் முதலாளிகளிடமிருந்து வரவேண்டிய தொகை மிக அதிகம் என்று தெரிகிறது.

உதாரணமாக, மால்கோ—சேலத்திலேயிருக்கக்கூடிய அலுமினிய பாக்டரி. அப்படிப்பட்ட பாக்டரிகள் நமக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதற்கு விவரம் இல்லை. அப்படிப்பட்ட ஒரு பட்டியலை மின்சார இலாகா பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்த அவையிலே அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பெரிய முதலாளிகள், வசதியானவர்கள், மாடமாளிகையிலே இருப்பவர்கள் மின்சார பாக்கி, ஆயிரம், பத்தாயிரம் என்று கொடுக்க வேண்டியிருக்கும்போது, ஏழை எளியவர்கள் குடிசையிலே இருக்கிறவர்கள், சிறிய மில்காரர்கள், பானை, சட்டி வைத்திருக்கிறவர்கள், ஒரு மாதம் மின்சார பாக்கி கட்டவில்லையென்றால், பியூஸ்கள் பிடுங்கப்படுகின்றன. இரு மடங்கு அபராதம் கட்டும்போது, மீண்டும் பியூஸ் போடப்படுகிறது. மேலும், பில்லிலும், மாண்புமிகு உறுப்பினர் கரியமாணிக்கம் அம்பலம் சொன்னதைப் போல, விடப்பட்ட தொகை என்று பல மடங்கு சேர்த்துப் போடப்பட்டுகிறது. அதையும் கவனிக்கவேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. அம்பிகாபதி] [1978 சனவரி 2

குறிப்பாக, நெய்வேலியில், இரண்டாவது சுரங்கம்
அமைக்க, உடனடியாக, சட்டப் பேரவை மத்தியப் பேர
ரசை வலியுறுத்த வேண்டும். இன்றைக்கு, மின்சார இலா
காவில் பர்சேசிங் பாலிசி, அதாவது கொள்முதல் கொள்கை,
என்ன என்பதைத் தெளிவாக்க வேண்டும். அதே போல்,
5 ஆண்டுகளாக, கன்ஸ்யூமர் கூட்ஸ்—நுகர்வோர் பொருளே
இல்லாமல், பில்லிலேயே வசூலிப்பதோடு அல்லாமல்,
இணைப்பு கோருகிறவர்களே, அவைகளை வாங்கித் தர
வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிற நிலைமையிருக்கிறது.

மீட்டர்கள் பீரியாடிக்கலாக செக் செய்யப்படவேண்டும்.
அங்கே இருக்கிற அதிகாரிகளே அதைச் செய்யக் கூடாது.
அதற்கென்று ஸ்பெஷல் ஸ்குவாட் செல்லவேண்டும்.
ஆனல், பீரியாடிக்கலாக செக் அப் செய்ய நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

அத்துடன், ஜெர்மன் டெமாக்ரட்டிக் ரிபப்ளிக்,
சோவியத் யூனியன், யூகோஸ்லாவியா போன்ற இடங்
களுக்குப் பயிற்சி பெறுவதற்காக, அதிகாரிகளையே அனுப்
பிக் கொண்டிராமல், அந்தத் துறையில் வேலை செய்கிற
தொழிலாளிகளையும் பயிற்சி பெற வெளிநாடுகளுக்கு
அனுப்ப முயற்சி செய்ய வேண்டும். நெய்வேலி அனல்
மின் நிலையத் திட்டத்தில் பயிற்சி பெற்ருல் தூத்துக்குடி
அனல் மின் நிலையம் போன்றவற்றில், பணி புரியும் வாய்ப்பை
அவர்கள் பெற முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சுமார் 48,000 டிரான்ஸ்பார்மர்கள்
இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலே, 45,000
டிரான்ஸ்பார்மர்கள், 100 கிலோ வாட் ஆம்பியரில்தான்
இருக்கிறது. அவற்றினுடைய சக்தி இன்றைக்கும் குறைவு
என்று சொல்கிருர்கள். மின் சக்தி குறைவான காரணத்தால்
கம்பம் இருக்கும், விளக்கு இருக்கும், எரியாது. அல்லது
மினுக்மினுக்கென்று எரியும். ஆகவே, சக்தியற்ற டிரான்ஸ்
பார்மர்களை மாற்றி, முறைப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும்.

பல இடங்களில், கிணறு கட்டக் கடன், பம்ப் செட்
வைக்கக் கடன் கொடுத்து, சத்தியவான் சாவித்திரி நாட
கத்தில், எமதர்மன் பிள்ளை வரம் கொடுத்து விட்டுவிட்டதைப்
போல், கிணறு அமைத்துக் கொள்ளலாம், பம்ப் செட்
அமைத்துக் கொள்ளலாம், மின்சார இணைப்பு கொடுக்க



1978 சனவரி 2] [திரு. மு. அம்பிகாபதி]

மாட்டோம் என்று இப்படி பல வருஷங்களாக இருக்கிறது.
இதைப் போக்கவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்
கை எடுக்கவேண்டும்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்லப்படுகிறது.
இந்த அரசு மின்சார வாரியத்தில், ரகசிய வாக்கெடுப்பு
மூலம் அதை அமுலாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென
வேண்டிக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு 3 ஆண்டுக்காலமாக, பிராவி
டன்ட் பண்ட் பில், அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மின்
துறை அபாயகரமான தொழில். கரணம் தப்பினல் மரணம்
என்பார்கள். அப்படிப்பட்ட மின்வாரியத் தொழிலாளர்
களுடைய பிள்ளைகள், வாரிசுகள் அங்கேயே வேலை பெற
இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின் வாரிய ஊழியர்களது, ஊதிய விகிதம் மாற்றம்
செய்யப்பட்டும் அதற்கடுத்தப்படியாக, சிறப்புப் படிகள் 10
மாத காலமாகப் பேசப்படுகிறதே தவிர, அந்தப் பிரச்னை
தீர்க்கப் படவில்லை. இந்த அரசு சிறப்புப் படி அறிவிப்பை,
பொங்கல் பரிசாக அறிவிக்கவேண்டுமென்று வேண்டிக்
கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6–00)

வேலை பளு மாறுதல்களும், வேலை உயர்வு வாய்ப்புகளும்
வருவாய் பிரிவில் மட்டும் இருக்கிறது. விநியோக திட்டங்
களிலும் இது இருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும்,
எழுத்தர்கள் பொறியாளர் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு
இப்பணி பேசி முடிக்கவில்லை என்று தெரிகிறது. இதன் விளை
வாக 14, 18 ஆண்டுகளாக பதவி உயர்வு அற்ற நிலை இருக்
கிறது. இன்றைக்கு மின் வாரிய அலுவலகத்திற்குச்
சொந்த இடம் இல்லை. மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி
போன்ற இடங்களில் மட்டுமின்றி பல இடங்களில் சொந்த
இடம் இல்லை. நம்முடைய திட்டத்திற்கு ஆகும் செலவில்
பெரும் பகுதி வாடகையாகவே போகிறது. கடந்த 1965
ஆம் ஆண்டு எருக்கஞ்சேரியிலே வாங்கப்பட்ட நிலத்தில்
மின் வாரிய ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந்த
அரசு முயற்சி எடுக்கவேண்டும். இன்றைக்குத் தெர்மல்
ஸ்டேஷனில் பொறியியல் தொழிலாளர்களுக்கு சிறப்புப்
படிகள் அறிவிக்கப்பட வேண்டும். அவர்களுடைய கோரிக்
கை 20 சதவிகிதம் கேட்டிருக்கிருர்கள். அதைப் பரிசீலித்து

[திரு. மு. அம்பிகாபதி] [1978 சனவரி 2

அறிவிக்கவேண்டும். மலை அலவன்ஸ் அரசாங்க ஊழியர்
களுக்கு 20 சதவீதம் கொடுக்கப்படுகிறது. மின்சார ஊழி
களுக்கு 10 சதவீதம் தான் கொடுக்கப்படுகிறது. இது
நியாயமற்றது. இதையும் பரிசீலித்து 20 சதவீதம்
கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சமீப காலத்தில், ஐந்தாண்டுகளில் விபத்துக்கள் அதிகம்
ஏற்பட்டிருக்கின்றன. அவற்றை நீக்க அவர்களுக்கு பயிற்
சியும் சாதனங்களும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இன்றைக்கு 7 தனியார் நிறுவனங்கள் எடுக்கப்பட்டி
ருக்கின்றன. அதில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் மின்வாரிய
ஊழியர்களுக்கும் வித்தியாசம் இருப்பதாக அறிகிறேன்.
ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே மாதிரியான நிலைமை
என்பதை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த அறிக்கையில்
வரவு ரூ. 179.80 கோடி என்றும், செலவு ரூ. 209.21 கோடி
என்றும் பற்றுக்குறை ரூ.29.41 கோடி என்றும் அறிவித்திருக்
கிறார்கள். இதன் விளைவாக வரி போடப்படுமோ என்ற
அச்சம் இருக்கிறது. அதைப் போக்கத்தக்க வகையிலே
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மின்சாரத் துறை ஒரு முக்கியமான துறை. இந்தத்
துறையை வைத்து மாண்புமிகு மார்க்கபந்து அவர்கள்
சொன்னதைப் போல 1972 ஆம் ஆண்டுஜுலை மாதம்
5-ந் தேதி 25,000 பேர்கள் தமிழகத்திலே கைது செய்யப்
பட்டார்கள். நாங்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்
பட்டோம். செக்ஷன்கள் 120பி, 147. 148, 326, 329
இத்தனை செக்ஷன்களும் எங்கள் மீது போடப்பட்டன.
திருச்சி சிறையில் இடமே இல்லாத நிலைமை இருந்தது.
16 பேரிலிருந்து 17 பேர்கள் சுடப்பட்டு இறந்தார்கள்.
பெத்தநாயக்கன்பாளையத்திலே மட்டும் 9 பேர்கள்
துப்பாக்கி குண்டுக்கு இரையான நிகழ்ச்சி 1972-ஆம் ஆண்டு
ஜுலை மாதம் 5-ம் தேதி நடைபெற்றது. மின்சார உற்
பத்தி பெருக வேண்டும். ஊழல் இருக்கக்கூடாது, திறமை
யான நிர்வாகம் இருக்க வேண்டுமென்றால், முன்னேற்றக்
கழக ஆட்சியில் சமயநல்லூர் மின் நிலையம் விற்கப்பட்ட
தைப் போல் இனி எதையாவது விற்காமல் பார்த்துக்



1978 சனவரி 2] [திரு. மு. அம்பிகாபதி]

கொள்ள வேண்டும். செருப்புத் தைக்க மாட்டை
விற்காமல் செருப்புக்காக மாட்டை அடித்து
தோலாக்கியதைப் போல் சமயநல்லூர் மின் நிலையத்தை.
பேரிச்சம் பழக்காரனுக்கு விற்றது போல் இனிமேல் எதை
யும் விற்கக்கூடாது. அதன்மீது விசாரணையும் நடைபெற்றது
அந்த நிலைமை வருங்காலத்தில் இல்லாமல் பார்த்துக்கொள்ள
வேண்டும்.

12–11–77-ல் வீசிய கடும் புயலின்போது அயராது
உழைத்தவர்கள் மின் வாரியத் தொழிலாளர்கள், இன்ஜினி
யர்கள். அவர்களுக்கு இந்தத்துறை அமைச்சர் அவர்கள்
மூலமாக எங்களுடைய வாழ்த்துக்களையும் வணக்கத்தையும்
தெரிவித்துக் கொள்கிறேன். 17 கிலோ மீட்டர் தூரத்
திற்கு கன்ஸ்ட்ரக்ட் பண்ண வேண்டுமானால் கிட்டத்தட்ட
ஓராண்டு ஆகும். ஆனால் நாகைப்பட்டிணத்தில் மன்னார்
குடியில் 10 நாளில் அந்த பாட்டாளிகள், உழைக்கும் வர்க்
கம் அதனைக் கட்டியிருக்கிறது. அந்த வர்க்கத்திற்கு இந்த
சபையின் மூலமாக என் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலும் நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்
கொள்கிறேன். அத்துடன் மின்சாரத் துறையின்திட்டங்
களையும் அவர்கள் விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன சகோதரர்கள் வாழ்கிற பகுதிகளில் அமைக்கப்
பட்டிருக்கிற கம்பங்களில் கம்பிகள் இல்லை, விளக்குகள்,
இல்லை. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதி ஏழை எளிய
மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பாமர மக்கள் வாழ்கிற
பகுதி. அவர்களது கஷ்ட நஷ்டங்களைப் போக்கத்தக்க
வகையில் அவர்கள் வாழும் பகுதிகளில் மின் இணைப்பைத்
தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்
கிறேன். வணக்கம், நன்றி.

திரு சி. ஆறுமுகம் : மதிப்பிற்குரிய சட்டப் பேரவை
யினுடைய துணைத் தலைவரவர்களே, மின்சார வாரியத்தின்
நிதிநிலை அறிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு மின்வாரியத் துறை அமைச்சரவர்
கள் தமிழகத்தில் 50 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம்.
வழங்கப்பட இருக்கிறது என்று சமீப காலங்களில் தெரி
வித்து வருகிறார்கள். அதை எந்த வகையிலே வழங்க அரசு
உத்தேசித்திருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரியப்

படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் குறிப்
பாக, செங்கற்பட்டு மாவட்டம் கிணற்று நீரையும், மோட்
டார்பம்பு செட்டையும் நம்பி இருக்கிற மாவட்டம்.
மின் இணைப்பு கொடுக்கப்படும்போது செங்கற்பட்டு மாவட்
டத்திற்கும் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்பு
மிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம்,
குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான
பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்காமல் நீண்ட
காலமாக தேங்கி வருகிறது.

அதற்கு அடுத்து மின் இணைப்பு கொடுத்தால் மட்டும்
போதாது. குறிப்பாக இதற்கு முன்னே பேசிய எல்லா
உறுப்பினர்களும் எந்த ஊருக்குச் சென்றாலும் சிமெண்ட்
போஸ்ட் நின்று கொண்டிருக்கிறது. அதிலே கம்பி இல்லை,
விளக்கு இல்லை என்று கூறினார்கள். அடித்து முடிந்த புய
லிற்குப் பின்னால் கடல் ஓரப் பகுதியாக உள்ள கிராமங்
களுக்குச் சென்று பார்த்தோமானால் அந்த மக்கள் நடந்து
போவதற்குக் கூட விளக்கு வசதியில்லை. எல்லா மீனவர்கள்
பகுதிகளும் குறிப்பாக மதுராந்தகம் தொகுதியைப் பொறுத்த
வரையில் எல்லாம் கடலோரப் பகுதிகள். இன்றைக்கு
இவற்றிற்கு விளக்குக் கிடையாது. விளக்கு இல்லை என்பது
மட்டுமல்ல. ஒயரும் இல்லை. ஆக இந்த நிலைமைகளை
மாற்ற வேண்டும். அதைத் திட்ட வட்டமாக மின்சார
வாரிய அமைச்சரவர்கள் இந்த அவையிலே தெரிவிக்க
வேண்டும்.

அதற்கு அடுத்து மின் இணைப்பு கொடுக்கின்ற ஒரு
விஷயம். எனக்கு முன்னே பேசியவர்கள் எல்லாம் இதைப்
பற்றிப் பேசியிருந்தாலும் நானும் இதையே பேசித்தானாக
வேண்டும். அங்கே என்ன செய்கிறார்கள் என்று வேண்டு
மானால் நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு அதிகாரியை
அனுப்பி விசாரணை செய்தால், இந்த மின் இணைப்பு எவ்வாறு
வழங்கப்படுகிறது என்கிற உண்மையை நாங்கள் தெரி
விக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு வெற்றுக் கடிதத்தில்
மோட்டார் பெற்றுக் கொண்டோம், ஒயர் பெற்றுக்கொண்
டோம், பைப் பெற்றுக் கொண்டோம், சுவிட்ச் பெற்றுக்
கொண்டோம், மின் இணைப்புக் கொடுக்கிற ஒயர் பெற்றுக்
கொண்டோம் என்று எழுதிக் கையெழுத்து வாங்கிக்கொண்டு
அவர்களையே சாமான் வாங்கிக் கொடுக்கச் சொல்கிறார்கள்.
வேறு விதி இல்லாமல் அவர்கள் வாங்கித் தருகிறார்கள்.
எப்படியாவது மின் இணைப்பு கிடைக்கிறதே பரவாயில்லை



என்று வாங்கிக் கொடுக்கிறார்கள். தொடர்ந்து இந்தக்
குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நம்மு
டைய இலாகா சாமான்கள் கடைகளில் கிடைக்கின்றன.
இதை நிரூபிக்க தயாராக இருக்கிறேன்.

அதேபோல நில நீர் ஆய்வுத் திட்டம். அதை
தொடர்ந்து வைத்துக் கொண்டு இன்னும் 20 ஆண்டு காலத்
திற்குப் பிறகு தண்ணீர் கிடைக்காது என்று கூறி நம்மைக்
கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான்
நமக்குப் பின்னால் வருகிறவர்களுக்குத் தண்ணீர் கிடைக்க
முடியும் என்கிறார்கள். நமக்கு மின்சாரம் கிடைத்து நாம்
உயிரோடு இருந்தால் அல்லவா நமக்குப் பிறகு நம்முடைய
சந்ததியினர் பிறந்து வாழ முடியும். அவர்களுக்காக நாம்
இன்றைக்கு நம் உபயோகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது
என்பதில் அர்த்தமில்லை.

மின் இணைப்புக் கொடுப்பதில் இடத்திற்கு இடம்
கொள்கை வித்தியாசப்படுகிறது. என்னுடைய தொகுதி
யில் மூன்று பிளாக்குகளில் மதுராந்தகம், சித்தாமூர்,
அச்சரப்பாக்கம் பிளாக்குகளில் ஒவ்வொரு கொள்கை கடை
பிடிக்கப்பட்டிருக்கிறது. மதுராந்தகம் பிளாக்கில்
சர்வீஸ் கொடுக்கப்படுவதில்லை. சித்தாமூர் பிளாக்கில்
சமீபத்தில் ஒரு சர்வீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அச்சரப்
பாக்கம் பிளாக்கில் ஒரு சர்வீஸ் பெற வேண்டுமென்றால்
அங்கே இருக்கிற கிரவுண்ட் வார்டர் செல்லின் அங்கீகாரம்
பெற வேண்டும். இப்படி இருக்கிறபோது எப்படிக்
கொடுக்கப்பட்டது? இதற்குக் காரணம் அதிகார வர்க்கம்
அடுத்து அரசியல் வர்க்கம். இந்த இரண்டு பேரும்
கொடுத்திருக்கிறார்கள். அதே முறையில் மற்றவர்களால்
வாங்க முடியுமா ? நாங்கள் கேட்டால் சொல்கிறார்கள்
ஏ.இ.ஓ. வைக் கேட்டால் டி.இ.ஓ. விடம் செல்ல வேண்டும்
என்கிறார்கள். இவர்களால் எப்படி சர்வீஸ் கொடுக்க
முடிந்தது. சித்தாமூரில் என் போன்ற அரசியல்வாதியின்
குடும்பத்திற்கு, அவருடைய மனைவிக்கு மின் இணைப்பு
கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் விவரங்கள்
அமைச்சரவர்களுக்குக் கொடுக்க நான் தயாராக இருக்
கிறேன். பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கிறேன்.
இந்த கொள்கை தொடர்ந்து இருக்குமானால் நியாயமான
தாக இருக்குமா என்பதைக் கேட்டுக் கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து மின் இணைப்புக்கு பணம் கட்டத் தவறி விட்டால் 6 ரூபாய் பைன் போடுகிறார்கள். நம்முடைய அமைச்சரவையை கேட்டுக் கொள்கிறேன், 10 அணா ரெவின்யூ வரி கட்டத் தவறினால் அங்கே இருக்கிற அண்டா, குண்டான்களையும், மாட்டையும் போய் பிடித்துக் கொண்டு வருகிறார்கள் தாசில்தார்கள். அதே ரெவின்யூ அதிகாரி தானே மின்சார போர்டிலும் தலைவராக போய் இருக்கிறார். அங்கே 10 கோடி ரூபாய் மேட்டூர் அலுமினியம் கம்பெனியில் பாக்கி இருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இந்த 10 அணாவிற்கு போடப்பட்ட சட்டம் அவர்களிடத்தில் எடுபடவில்லையா? வீட்டிலே விளக்கு எரியவில்லை. அவன் கட்டவில்லை என்றால் ப்யூசை பிடுங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். அதற்கு பைன் 6 ரூபாய். அவர்கள் கோடிக்கணக்கான நம்முடைய சர்க்காருடைய பணத்தை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

[மாலை 6·10]

பத்து கோடி ரூபாயை எத்தனை வருஷமாக விட்டு வைத்திருக்கிறீர்கள்? அந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வந்த போது அரசாங்க வழக்கறிஞர் அங்கே சென்று ஆஜராகவில்லை. திருடனுக்கு துணை போன மாதிரி இல்லையா? அரசாங்க வழக்கறிஞர் எங்கே போயிருந்தார்? அரசாங்க வழக்கறிஞர் ஒவ்வொரு கோர்ட்டிலும் என்னென்ன வழக்கு வருகிறது என்று பதிவு அலுவலகத்திற்குச் சென்று பார்க்க வேண்டாமா? அதற்கு அமைச்சர் சொல்ல வேண்டியதில்லை. அதற்காகத்தான் அரசாங்கத்திலிருந்து பணத்தைக் கொடுத்து தனியாக வைத்திருக்கிறோம். நிம்மதியாக அவர்கள் ஸ்டே வாங்கிக் கொண்டே போய்விட்டார்கள். அது ரொம்ப நாள் ஆகும். ஹைகோர்ட்டுக்கு வந்தால் எத்தனை வருஷம் ஆகும் என்பது நமக்குத் தெரியும். இந்த முறையை எப்பொழுது நீங்கள் மாற்றப் போகிறீர்கள் என்பதை அமைச்சர் சொல்ல வேண்டும். நான் இன்னொரு யோசனையைக் கூடச் சொல்வதுண்டு. இந்தத் துறையில் தொழில் தெரிந்தவர்கள் நீங்கள். எங்கெங்கே தவறு நடக்கும் என்று தெரிந்தவர்கள் நீங்கள். ஆண்டுக்கு ஆண்டு மின்சாரம் திருட்டுப் போகிறது. எப்படி போகிறது? எந்த வழியிலே போகிறது? அதைக் கண்டு பிடிக்க முடியாத போர்டு எதற்காக? சாயந்திரம் ஆனால் ஒரு 50,000, 60,000 பேர்கள் வெளியே வருகிறார்கள். புற்றிலிருந்து ஈசல் கும்பல் வருகிற மாதிரி, இந்த





கும்பலுக்கு விவசாயியிடமிருந்து பணத்தை வாங்கி சம்பளமாக கொடுக்கவேண்டியிருக்கிறது. இந்த முறையை எவ்வளவு நாள் நீட்டிக்கப் போகிறீர்கள்? ஒவ்வொரு தாலூக்காவிலும் அங்கே இருக்கிற ஏ.இ.க்கும் டி.இ.க்கும் அதிகாரம் கொடுக்க வேண்டும். பம்புசெட்டுக்கு மின் இணைப்பு தருவதைப் பற்றி ஏ.இ.யைக் கேட்டால் டி.இ.க்கு அனுப்பிவிட்டேன் என்று சொல்கிறார். அவரைக் கேட்டால் போர்டைப் போர்டுக்கு அனுப்பிவிட்டேன் என்கிறார். போர்டை கேட்டால் மந்திரியிடம் இருக்கிறது என்கிறார்கள். இதிலே உடனடியாக நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும். அடுத்து.................

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த விவகாரம் மந்திரிக்கு வராது. பம்புசெட் எஸ்டிமேட் எங்கே போயிருக்கிறது என்று கேட்டால், மேலே போய் இருக்கிறது என்றால் சீப் என்ஜினியருக்கு போய் இருக்கிறது என்று அர்த்தம். மந்திரிக்கு போயிருக்கிறது என்று சொன்னால் அது தவறு. போர்டோடு நின்று விடுகிறது. அரசாங்கத்திற்கு வருவதில்லை.

திரு சி. ஆறுமுகம்: அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது?

அதற்கு அடுத்து மின் வாரியத்தை பொறுத்த மட்டில் லீக்கேஜ் என்று சொல்கிறார்கள். லைன் லீக்கேஜ். அந்த 20 ஆண்டுகளுக்கு லைன் லீக்கேஜ் எப்படி வருகிறது? அதனுடைய முன்பு போட்ட அலுமினிய கம்பிகள். அலுமினிய கம்பிகளுக்குப் லட்சணம் நமக்குத் தெரியும். அலுமினிய கம்பிகளுக்குப் பதிலாக செம்புக் கம்பிகளை மாற்றினால் லீக்கேஜ் குறையும்.

அதற்கு அடுத்து திருடு போவது. பல இடங்களில் இராத்திரி பார்த்தால் தெரியும். சர்வீசே தேவையில்லை. லைன்மேன்களை ராத்திரியிலே அந்தக் காரியம் நடக்கும். இன்று வரையில் நாம் போட்டு வைத்திருக்கிறோம். எங்கே பிடித்தார்கள்? என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை.

உத்திரமேரூர் தனி வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உத்திரமேரூர் மக்கள் பணம் கட்ட காஞ்சீபுரம் போகிறார்கள். 16 மைல் போக வேண்டும். உத்திரமேரூர் நகரில் பணம் கட்டுவதற்கு கலெக்ஷன் சென்டர் கொண்டு வரவேண்டும்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். நாலு தினங்களாக—மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூடி ஒரு வாரத்திற்கு மேல் ஆகிறது. தொழிலாளர்கள் எல்லாம் ஸ்டிரைக் செய்துவிட்டு இன்னும் வெளியே இருக்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விரைவிலே பேசி அந்த ஆலையைத் திறப்பதற்கு அரசுடைய ஒத்துழைப்பு முழுமையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவோடு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு தி. அன்பழகன் : மாணபுமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977—78ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையையும், 1976—77ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையையும் வரவேற்று என்னுடைய கருத்துக்களை இங்கே நான் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் முக்கிய காரணம் விவசாயமும் தொழிலுமாகும். விவசாய வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் மூல காரணம் மின்சாரம். அந்த மின்சார உற்பத்தியை அதிகரிப்பதில் இந்தப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்பதை நாடு நன்கு அறியும். மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த அரசு எவ்வளவு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது என்பது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் உரையிலிருந்து நமக்கு தெள்ளத் தெளிவாகப் புரிகிறது. மின் உற்பத்தித் திட்டச் செலவிற்கு இந்தப் புதிய அரசு எந்த அளவிற்கு செலவு செய்கிறது என்பதை முந்தைய ஆண்டுகளில் செலவு செய்யப் பட்டதையும் இந்த ஆண்டு செலவு செய்யப்படுவதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நன்கு புரியும். 1974—75ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 36.10 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1975—76-ல் 52.73 கோடி ரூபாய் ஒதுக்கபபடடது. 1976—77ல் 77.92 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது. இப்போது, நடப்பாண்டில் மட்டும் மின்சார உற்பத்திக்காக ரூபாய் 94.91 கோடி ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டு வருகிறது.

அது மட்டுமல்ல. அரசு 50,000 பம்ப் செட்களுக்கு புது மின் இணைப்பு தருவது பாராட்டத்தக்க ஒன்றாகும். புதிய மின் இணைப்பு தருவதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அப்படி புது இணைப்பு தரும்போது



ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள மனுக்கள் தவிர புதிதாக அளிக்கப்படும் மனுக்களையும் பரிசீலித்து அதற்கும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்புதிய மின் இணைப்பு தரும்போது சிறிய விவசாயிகளுக்கு முதல் இடம் தரவேண்டும். மின்சாரத் துறையில் நீர்ப்பாசன வசதி இல்லாத இடங்களில் இந்தப் புதிய மின் இணைப்புகள் தருவதில் முதல் இடம் அளித்து செயல்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு கிணற்றுப் பாசனத்தை நம்பித்தான் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. எனவே வட ஆற்காடு மாவட்டத்திற்கு மின் இணைப்பு தருவதில் முன் உரிமை அளிக்கவேண்டும். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாலாறு பேசின் விதி என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலம் விவசாயிகளுக்கு பெரும் தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த விதிமுறைகளை நீக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். மின்சார வெட்டைத் தவிர்ப்பதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தவேண்டும். அதோடு கூட உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியில் பெரும் பகுதி வேளாண்மைக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

அப்படி வேளாண்மைக்காக மின்சாரம் ஒதுக்கப்படும் போது மின்சாரம் விவசாய மக்களுக்குப் பயன்படும் வகையில் பகல் நேரம் முழுமையும் அளிக்கப்படவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு மின்சக்தி அளிக்கும்போது சில நேரங்களில் வால்டேஜ் குறைவு காரணமாக மின்சார மோட்டார்கள் எரிந்துவிடுகிற நிலை இருந்து வருகிறது. எனவே, இந்த நிலையைச் சீர்செய்து நிர்வாகம் சிறந்ததொரு ஏற்பாட்டினை செய்து, அதற்கு ஒரு நல்ல வழிவகை காணவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நீர் மின்சார உற்பத்தியை மட்டும் நம்பியிராமல் அனல் மின்சார உற்பத்தி, அணு மின் உற்பத்தி இவற்றை உற்பத்தி செய்வதிலும் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும். தூத்துக்குடி அனல் மின் திட்டத்தையும், நெய்வேலி இரண்டாவது சுரங்கம் மூலமாகவும் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி துரிதப்படுத்தி, இந்தத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1978 சனவரி 2

அடுத்து, மீட்டர் வாடகை வசூலிப்பதில் சில மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு, மீட்டரின் வாடகை வசூலிப்பதில், ஒரு மீட்டரின் விலை இவ்வளவு என்று நிர்ணயித்து அந்த விலையை முழுவதும் வசூல் செய்த பிறகு அந்த மீட்டருக்கான வாடகை வசூலிப்பதை நிறுத்தி விடலாம். அப்படிச் செய்தால் அது விவசாய மக்களுக்கு பெரும் நன்மையை ஏற்படுத்தும். ஒரு மீட்டர் ரூ. 200 என்று வைத்துக்கொண்டால் மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் வாடகை பிடித்துக்கொண்டால் 40 மாதங்களில் இந்த ரூ. 200 வசூலாகிவிடும். அந்த மீட்டருக்கு நிர்ணயித்த விலையை வசூலித்த பிறகு வாடகை வசூலிப்பதை நிறுத்தி விடவேண்டும். அதன்மூலம் விவசாயிகளுக்கு ஒரு நல்ல நன்மையை ஏற்படுத்த இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6-20)

அது மட்டுமல்ல, மின்சாரத்துறையிலிருந்து மின்கட்டணத்திற்கான பில் தருவதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதையும் கவனிக்க வேண்டும். மின்சாரப் பொருட்கள் அடிக்கடி திருட்டுபோகிறது, இதற்கும் பாதுகாப்பு தருவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த புதிய அரசினைப் பற்றி மக்கள் எப்படி நம்பிக் கொண்டிருக்கிறார்களோ அதுபோல இந்தத் துறை திறமை வாய்ந்த அமைச்சரிடம் விடப்பட்டிருக்கிறது, மின்சாரத் துறையைப் பற்றி முழுவதும் தெரிந்த ஒருவரிடம் விடப்பட்டிருக்கிறது, அவர் மூலம் நல்ல பல திட்டங்கள் விவசாய மக்களுக்கும் தமிழகத்திற்கும் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் பல சிறந்த திட்டங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, இந்த அறிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. சி. ராமநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மின்சார வாரியத்தில் 77–78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் நம்முடைய அரசு கிட்டத்தட்ட 50 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்க இருக்கிறது என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு அதை வரவேற்று மேற்கொண்டு இந்த மின்சாரத் துறையில் ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.



1978 சனவரி 2] [திரு. சி. ராமநாதன்]

கிராமப்புறங்களில் விவசாயத்திற்கு வைக்கப்படும் மீட்டர் கெட்டுவிட்டால், அதாவது ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் ஓடாமல் நின்று விட்டால், மீட்டர் ஓடிக் கொண்டே இருக்கிறது. இப்படி சில தவறுகள் நடக்கிறது. இப்படி நடைபெறும்போது, இந்த மீட்டரை புதுப்பிக்க வேண்டும் என்று சொல்லும்போது, மோட்டாருக்கு கட்ட வேண்டும் என்று சொல்லப்படுகிற தொகையை நிர்ணயிக்கும்போது, அதிகமாக, மூன்று மாதமாக ஓடுகிற கணக்கை எடுத்து அதன் சராசரியை எடுத்து பணம் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி கணக்கு எடுக்கும்போது பம்பு செட் வேலை செய்யவில்லை என்றாலும் பணம் கட்ட வேண்டிய சூழ்நிலைக்கு விவசாயிகள் ஆளாகிறார்கள். ஆகவே ஒரு மீட்டர் சரியாக ஓடவில்லை என்பதற்காக அதை மாற்றும் போது, அந்த இடத்தில் நல்ல மீட்டர் ஒன்றை வைத்து விட்டு பழைய மீட்டரை கழற்றிக்கொண்டு போனால், உண்மையான அளவு பம்புசெட்டு ஓடியதற்கான கட்டணத்தை விவசாயி செலுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே மீட்டர் விவகாரத்தில் அரசு கவனம் செலுத்தி எக்ஸ்ட்ராவாக, அதிகமாக அந்தந்த பகுதிகளில் எத்தனை தேவைப்படுமோ அதற்கு அதிகமாக கையில் வைத்துக் கொண்டு, பழுது பட்ட மீட்டர்களைச் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமப் புறங்களில், பஞ்சாயத்துக்களில் போடக்கூடிய தெருவிளக்குகள் சரியாக எரிவதில்லை. அது ஏனென்று கேட்டால் வருடத்திற்கு மூன்று தடவை தான் டிப்பார்ட்மென்டிலிருந்து பல்பு போட முடியும், அதற்கு மேல் போட முடியாது என்று சொல்கிறார்கள். மேலும் போடக்கூடிய பல்புகளும் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் கூட ஒழுங்காக எரிவதில்லை. ஏனென்று கேட்டால், ப்யூஸ் போய் விட்டது என்கிறார்கள். ஏன் ப்யூஸ் போய்விட்டது என்று கேட்டால், வோல்ட்டேஜ் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அதிகமான வோல்ட்டேஜ்-ஜை தாங்கிக் கொள்ள முடியாத க்வாலிட்டியுள்ள பல்பை ஏன் வாங்க வேண்டும்? நல்ல குவாலிட்டியை ஏன் வாங்கக் கூடாது? எதற்காக இப்படிப்பட்ட பல்புகளை பயன்படுத்த வேண்டும்? அப்படி ஒரு நிர்வாகம் நடக்க வேண்டியது அவசியம் தானா? இதை அரசாங்கம் பரிசீலனை செய்து தெரு விளக்குகளை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்காமல், மின்சார போர்டே எடுத்து நல்ல முறையில் இந்தத் தெரு விளக்குகளையெல்லாம் எரியச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. ராமநாதன்]

இன்றைய நிலைமையிலே நிலத்தடி நீர் கட்டுப்பாடு ஏற்
படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி செய்யப்பட்டிருக்கும்
போது சாதாரணமாக கிராமப்புறங்களிலே உள்ள விவசாயி
களில் பெரிய விவசாயிகள் நான் பம்பு செட்டு வைத்துக்
கொண்டு, விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்
சிறிய விவசாயிகள் பம்பு செட்டு வைத்து விவசாயம் செய்யக்
கூடிய அளவிலே அவர்கள் இன்னும் முன்னேறவில்லை. அப்
படி இருக்கும்போது, அவர்களுக்கெல்லாம் இந்தக் கட்டுப்
பாட்டை வைத்து, அவர்கள் எல்லாம் பம்பு செட்டு வைத்து
விவசாயம் பண்ணக்கூடாத அளவுக்கு இடம் கொடுக்
காமல், அவர்கள் எல்லாம் நல்ல முறையிலே விவசாயம்
செய்யக் கூடிய அளவிலே அவர்களுக்கு முன்னுரிமை அளித்து,
அவர்கள் பம்பு செட்டு வைத்து விவசாயம் செய்ய உதவ
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மின் இணைப்புக் கொடுப்பதிலே இப்போது
அதிக காலதாமதம் செய்கிறார்கள். இந்த காலதாமதத்தைப்
பற்றி அங்குள்ள எஸ். ஓ. வை என்னவென்று கேட்டால்
ஏ. ஈ. யைக் கேளுங்கள் என்றும், ஏ. ஈ. யைக் கேட்டால்
டீ. ஈ. யைப் பாருங்கள் என்றும், டி. ஈ. யைக் கேட்டால்
அந்தப் பேப்பர் எஸ். ஈ.க்குப் போய் இருக்கிறது, எனவே
அவரைப் போய் பாருங்கள் என்றும் சொல்கிறார்கள்.
அங்கே போய்க் கேட்டால், எஸ்டிமேட் கணக்கு சரியாக
இல்லை என்று அந்த பேப்பரைத் திருப்பி அனுப்புகிறார்கள்.
இப்படி காலதாமதம் ஆகிறதேயொழிய, அவர்கள் வேலை
தீர்ந்தது என்பதற்கான அறிகுறியே அங்கு காணப்படுவ
தில்லை. எங்கள் கிராமத்திலே கிட்டத்தட்ட, 4, 5 வருடங்
களாக 40 பேர்களுக்கு மேல் மின் இணைப்புகேட்டு, அதுவும்
கொடுக்க முடியாத நிலைமையிலேதான் இருக்கிறது என்றால்,
அந்த அளவுக்கு கால தாமதம் ஆக வேண்டிய காரணம்
என்னவென்று தெரியவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அடுத்து, எங்கள் பகுதி நெய்வேலியாகும். நெய்வேலி
யிலே, நிலக்கரி சுரங்கத்திலே நிலக்கரி வெட்டுவதால்,
அங்குள்ள நிலத்தடி நீரை சுத்தமாக இறைத்து விடுகிறார்கள்.
அதனால் அங்குள்ள விவசாயிகளுக்கு நீர் கீழே போய்க்
கொண்டே இருப்பதனால், விவசாயம் செய்வதற்கு கஷ்டப்
படக்கூடிய நிலைமை இருக்கிறது. நாம் அவர்களை இப்படி
நீரை இறைக்கக் கூடாது என்று சொல்ல முடியாது.
காரணம், மின்சாரத்திற்காக அங்கே கரியும் எடுக்க வேண்டி
யிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் விவசாயமும



திரு. சி. ராமநாதன்]

இந்த நிலைமையைச் சமாளிக்க
செய்ய வேண்டியிருக்கிறது. நீர்த் தேக்கங்
அந்தந்தப் பகுதியிலே உள்ள குளங்களிலும், அங்குள்ள
களிலும் தண்ணீர் தேங்கக் கூடிய அளவிற்கு, அந்தந்த இடங்
ஆறுகளுக்கு குறுக்கே அணைக்கட்டுகள் கட்டி, நான் இந்த
களிலே தண்ணீர் தேங்க வசதி செய்து தருமாறு
அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இதுவரை கிராமங்களிலே உள்ளவர்கள் விவ
சாயம் செய்வதற்குக் கூட மின்சாரம் கொடுக்கப்படாமல்
இருக்கின்றவர்களுக்கும், குறிப்பாக எங்கள் பகுதியிலே இருக்
கின்ற விவசாயிகளுக்கு உடனடியாக மின்சார இணைப்பு
கொடுத்து உதவ வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை
கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்
கிறேன். வணக்கம்.

[மாலை 6-30]

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, 1977–78ஆம்
ஆண்டு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில
கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற
போது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 7,97,000 பம்ப்
செட்டுகளுக்கு, விவசாயக்கிணறுகளுக்கு இணைப்புகள் கொடுத்
திருக்கிறோம் ; இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறோம்
என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல் மின்சாரத்
தைப் பயன் படுத்துகிறவர்களைப் பொறுத்தவரையில்
இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை பெற்றிருக்கிறோம்.
மின்உற்பத்தித் திறனைப்பொறுத்தவரையில் இந்தியாவிலேயே
தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று
குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் முன்னால் இருந்த
திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ற வகையில் அந்த
அரசை நடத்திச் சென்ற மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

29½ கோடி ரூபாய் பட்ஜட்டாக நம்முடைய அமைச்சர்
அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சில கோரிக்கைகளை எனக்கு
முன்னாலே பேசிய உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.
நானும் சிலவற்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
மின்சாரம் சாதாரண விவசாயிகள் பிரச்சினையாக, மக்க
ளுடைய பிரச்சினையாக, தொழிலாளர்கள் பிரச்சினையாக
இருக்கிற காரணத்தால் இந்த அரசாங்கம் இந்தத் துறையைப்
பொறுத்தவரையில் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கு இன்றி
யமையாததாகக் கருதி இதற்கான செயல்திட்டங்களை ஏற்றுக்
கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மீட்டர் கட்டணத்தைப் பற்றிப் பேசினார்கள். மின் கட்டணத்தை யூனிட்டுக்கு 14 பைசாவாகக் குறைத்துவிட்டது பற்றி ஆளும் கட்சிக்காரர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். ஆனால் இந்தத் திட்டம் 2½ ஏக்கர் அளவு நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கும் நில உரிமையாளருக்கு மட்டும் என்பது உள்ளபடியே வருந்தத்தக்க செய்தியாகும். நாட்டில் நடுத்தர விவசாயிகள் எந்தப் பிரச்சினையிலும் வாழ வசதியைப் பெறாது பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள். அந்த அடிப்படையில் இந்த அரசாங்கம் 14 பைசாவை நடுத்தர விவசாயிகளுக்கும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பெரிய தொழிற்சாலைகளுக்கெல்லாம் சலுகை விலையில் மின்சாரத்தைக் கொடுக்கிற நேரத்தில், நடுத்தர விவசாயிகள் மிகுந்த தொல்லைகளுக்கிடையே எவ்வளவோ கஷ்டப்பட்டு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியிலே ஈடுபடுகிற காரணத்தால் அவர்களைப் பாதிக்கிற அடிப்படையில் இன்று மின்சாரக் கட்டணம் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் ஏராளமான கிணறுகள் ஆழமாக இருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீட்டருக்கு வாடகையை ஐந்து ரூபாய் என்று வைத்திருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கது. ஒரு மீட்டர் விலை 60 ரூபாய் என்ற அளவில் ஆகிறது. மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்பது கொடுமையான நிலைமையாகும். அதைப் போல் ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஒரு கிணறுக்கு 10 ரூபாய் என்ற உச்ச அளவிற்கு ஒரு கட்டணத்தைப் போட்டு இந்த அரசாங்கம் அதை 5 ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். ஆயினும் அதை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அக்ரிமெண்ட் முடிந்த பின்னாலும் விவசாயக் கிணறுகளுக்கு மினிமம்சார்ஜ் வசூலிக்கிறார்கள். பத்தாண்டுக் காலம் அக்ரிமெண்ட் என்று சொல்லி மின்சார பம்பில் வரவேண்டிய நியாயமான லாபம் வந்த பிறகும், அதற்கான செலவினங்கள் சரிக்கட்டப்பட்ட பிறகும், மினிமம் சார்ஜ் வசூல் செய்வது கொடுமையான நிலையாகும். விவசாயிகள் தண்ணீர் இல்லாத காலங்களில் அங்கு இருக்கிற கிணறுகளுக்கு மின்சாரக் கனெக்ஷன் வேண்டாமென்று சொல்கிறார்கள். ஆனால் மினிமம் சார்ஜ் கட்ட வேண்டிய நிலைமை இல்லாமல் இருந்



தால் மோட்டரைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம். ஆகவே, மினிமம் சார்ஜ் போடுவதை அகற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல மீட்டர்கள் தவறான கணக்குகளைக் காட்டுகின்றன. அதைப் பல மாதங்கள் கழித்து வருஷம் பூராவும் கவனிக்காமல் விட்டு, தவறான கணக்கைப் போட்டு, ஆயிரக் கணக்கில் கட்ட வேண்டுமென்று விவசாயிகளிடத்தில் கணக்கைக் கொடுக்கிறார்கள். இவைகளை மாற்ற தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல பேரூராட்சி மன்றங்களில் குடிநீர் கஷ்டம் இருப்பதால் விவசாயிகளிடமிருந்து, அவர்களுடைய கிணறுகளிலிருந்து குடிதண்ணீரை இலவசமாகப் பெறுகிறார்கள். அந்த நேரங்களில் அக்ரிகல்சுரல் ரேட்டுக்குப் பதிலாக அதிகமாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்களுக்கு நிதி வசதியின்மை காரணமாக மிகப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, மக்களுக்கு குடிநீர் தரக் கஷ்டப்படுகிறார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கும் குறிச்சி பேரூராட்சியில் குடிநீருக்காகப் பொது மக்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளானார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

டிரான்ஸ்பார்மர் கெபாசிடி குறைவாக இருக்கும் காரணத்தால் பல இடங்களில் புது சர்வீஸ் கிடைப்பதில்லை.

இப்படிப்பட்ட காரியங்களால் அவர்கள் தங்களுக்குத் தேவையானவர்களுக்கு கனெக்ஷன் கொடுத்துவிடுகிறார்கள். இந்த நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீதி விளக்குகளைப் பற்றி பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பல இடங்களில் வீதி விளக்குகள் எரிவதில்லை. இந்த வேலைகளை எல்லாம் ஊராட்சி மன்றங்கள் செய்யவேண்டுமா அல்லது மின்சார வாரியம் செய்ய வேண்டுமா என்ற குழப்பத்திலே ஊராட்சிகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஊராட்சிகளிலே நிதி இல்லாததால் அவைகளை மின்சார வாரியமே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரிசனச் சேரிகளுக்குப் பல இடங்களில் விளக்குகள் இல்லை, விளக்குகள் இருந்தாலும் சரிவர எரியவில்லை. அதையும் கவனிக்க

வேண்டும். புதிதாக விளக்குகள் அரிசனச் சேரிகளில் போடும்
போது லாபம் இருக்கிறதா என்று பார்க்காமல் அவர்களுக்கு
விளக்குகளைப் போட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்
கிறேன்.

மதுக்கரைப் பகுதியிலே பல இடங்களில் விளக்குகள்
எரியவில்லை. ஒன்றிய ஆணையாளர்கள் அந்தப் பொறுப்பை
வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அவர்களால் எது
வும் செய்யமுடியவில்லை. ஆகவே, நகரியத்திற்கு ஸ்பெஷல்
ஆபீசர் அல்லது நகரியக் குழு ஏற்படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதிதாக சர்வீஸ் கொடுக்கப்படும்பொழுது
மீட்டர்களில் சப்-கெப்பாஸிட்டர்கள் பொருத்தவேண்டு
மென்று சொல்கிறார்கள். புதிதாக போடுகிறவர்களுக்கு
வேண்டுமானால் சொல்லலாமே தவிர, ஏற்கனவே இணைப்புப்
பெற்ற விவசாயிகளும் பொருத்த வேண்டுமென்று சொன்
னால் அவர்களிடம் நிதி வசதி இல்லை, ஆகவே இந்த முறையை
ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல நேரங்களிலே விவசாயக் கிணறுகளுக்கு 3 பேஸிலே
மின்சாரம் தரக்கூடிய நிலைமை இருக்கிறது. இரண்டு பிரி.
வாகப் பிரித்து மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்
சரியான முறையிலே மின்சாரம் வராததால் மோட்டார்
களின் காயில்கள் எரிந்துவிடுகின்றன. அதனால் விவசாயி
களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை மின்சார
வாரியம்தான் கொடுக்க வேண்டும். இப்படி காயில் எரிவது
அவர்களுடைய கவனக் குறைவால் ஏற்படுவதால் அவர்கள்
விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று உத்
திரவிடவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்
கிறேன்.

இதே நிலைமை தான் ஊராட்சி மன்றங்களில் உள்ள
மேல்நிலை நீர்த் தொட்டிகளிலும் இருக்கின்றன, மோட்டார்
களின் காயில் கருகி விடுகின்றன. இதற்கு ஆகக்கூடிய
செலவுகளைக் கேட்கிறபோது அதிகாரிகள் ஏற்கனவே ஒரு
மாதத்திற்கு முன்புதானே காயில் கட்டினீர்கள். இப்போதும்
கேட்கிறீர்களே என்று சொல்கிறார்கள். இதன்மூலம் அங்கே
குடிநீர் இல்லாத நிலைமை இருக்கிறது, ஆகவே, அரசு
இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபோது
மின்சார இலாகாவில் குறை தீர்க்கும் நாள் என்று ஒரு நாளை
ஒதுக்கி மாதம் ஒரு முறை அந்த பகுதியிலே உள்ள பொறி
யாளர், அல்லது டிவிஷனல் பொறியாளர் அங்கே உள்ள
அதிகாரிகளை ஊராட்சித் தலைவர்களை வைத்துக் கூட்டி பேசி
நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால்
அவசர காலத்தின்போது அந்த முறையை ரத்து செய்து
விட்டார்கள். மீண்டும் அந்த முறையைக் கொண்டு வர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்
கள் சொன்னார்கள், சென்னையிலே புகார் பிரிவு ஒன்று
ஆரம்பித்து வாரந்தோறும் குறைகளை அங்கே சொல்ல ஏற்
பாடு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள், அந்த
அடிப்படையிலே கிராமங்களிலே மாதம் ஒரு முறை அப்படி
குறைகளைக் கேட்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்திலிருந்து பல்புகள் கொடுக்கப்பட
வில்லை. ஊராட்சிகள் பல்புகளை வாங்க வேண்டுமென்றால்
அவர்கள் சூப்பர் மார்க்கெட்டிலேதான் வாங்கவேண்டுமாம்.
குறிப்பிட்ட வகை இல்லையென்றால் வேறு இருக்கிற சரக்கை
வாங்கிக்கொள்வதற்கு மதியளிக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

மதுக்கரை ஏ.சி.சி. கம்பெனி 42 லட்சம் ரூபாய் வரை
யில் உள்வரி கட்டாமல் இருக்கிறது. ஆனால் கட்டாமல்
இருக்கக்கூடிய தடையை வாங்குவதற்கு அரசாங்க அதிகாரி
கள் அனுமதித்திருக்கிறார்கள். ஒரு ரூபாய் பொது மக்கள்
கட்டவில்லை என்றால் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை அதி
காரிகள் எடுக்கிறார்கள், ஆனால் 42 லட்சம் ரூபாய் வரையில்
ஊராட்சி ஒன்றியத்திற்குக் கட்டாமல் இருக்கிறார்கள்
எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதைக்
கட்டாமல் தடையை வாங்குவதற்கு அங்கே அதிகாரிகள்
உதவியிருக்கிறார்கள். மிகப் பெரிய ஊழல் நடந்திருக்கிறது,
அவர்கள் யார் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கும் இந்த
நிதிநிலை அறிக்கைக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்க
லாம். புதிதாகப் போடப்படும் திட்டங்களுக்கு 5 லட்சம்
ரூபாய் அளவில் 2 திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள்.
அவர்கள் வரியைக் கட்டியதற்குப் பின்னாலே அவர்களுக்கு
இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தையும், நெல்லித்துறை திட்டத்தையும் மாநிலங்களுக்கு இடையே உள்ள தகராறு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு அவைகளை விரைவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 6—40]

கோவை மிகப் பெரிய நகரமாக இருப்பதால், தொழிற்சாலைகள் மின்சாரத்தைப் பயன்படுத்துவதால் அங்கே அனல் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் ஏராளமான வேலை தாமதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற ஊழியர்களைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில், என்னுடைய தொகுதியில் ஜெர்மன் என்பவர் மேற்பார்வையாளராக பணியாற்றி, 25 ஆண்டுக்காலம் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஆனால் அவருக்கு 13 ஆண்டுகளுக்கான ஓய்வு ஊதியம்தான் கிடைக்கிறது. 31—3—74-இலே இந்த வாரியத்திலேயிருந்து அவர் ஓய்வு பெற்றுள்ளார். அந்தக் குறையை உடனடியாகத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்வதோடு, இந்த நிதிநிலை அறிக்கைக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு கருத்தை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஷோ கொட்டகை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக நம்முடைய முதலமைச்சரவர்களிடத்தில் ஒரு கடிதத்தை 20—9—77-இல் கொடுத்தேன். அதன்மீது நடவடிக்கை எடுப்பதாகக் கடிதம் வந்தது. ஆனால் கடந்த ஆறு மாத காலமாக அந்தக் கொட்டகை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, இந்த நிதிநிலை அறிக்கையில் பொது மக்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களை இன்னும் ஏராளமாகச் சேர்த்திருக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறி முடிக்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் :—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது நான் என்னுடைய சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.





பல பகுதிகளிலே, அதுவும் குறிப்பிடத்தக்க முறையிலே நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி வட்டாரத்தில் நிலத்தடி நீர்ப் பிரச்னையால் ஏராளமான பம்பு செட்டுகளுக்கு இது வரையில் மின்னிணைப்பு கிடைக்கவில்லை. அதனால் அங்குள்ள ஏழை விவசாயிகள் எல். டி. பேங்கிலும் இன்னும் இதர வங்கிகளிலும் லோன் எடுத்து வட்டி கட்ட முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இங்கே கூடுதலாக 50,000 மின்சார பம்புசெட்டுகளுக்கு இணைப்பு கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அதை இன்னும் கூடுதலாக்கி, மேலும் 25,000 அதிகமாக்குகின்ற அடிப்படையில் கூடுதலாகக் கொடுத்தோமேயானால், ஏராளமான விவசாயிகள் அங்கே பாதிக்கப்படாத நிலைக்கு வழிவகுக்கும். ஆகையால் நாங்குநேரி வட்டாரத்தில் மட்டுமல்ல, திருச்செந்தூர் பகுதியிலும் ஏராளமான விவசாயிகள் லோன் எடுத்து, கிணறு வெட்டி, லோன் மோட்டார் வாங்கி வைத்து மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த நிலையில் இந்த ஆண்டிலே செழிப்பாக மழை பெய்து இருக்கிறது. அதனால் மேலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குக் கிணறுகளில் தண்ணீர் போதுமான அளவிற்கு இருக்கும். இப்படிப்பட்ட நேரத்தில் மின்னிணைப்பு கொடுத்தோமேயானால் மீண்டும் கிணறுகளில் தண்ணீர் வற்றாத நிலை ஓரளவுக்கு ஏற்படும்.

அடுத்து, சில பகுதிகள், மணிமுத்தாறு வாய்க்காலின் ஓரமாக, நாங்குநேரி வட்டாரத்தில் வாய்க்காலுக்குப் பக்கத்தில் இருக்கின்ற கிணறுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்க மறுக்கப்படுகிறது. அதற்குச் சொல்லப்படும் காரணம் என்னவென்றால், பி. டப்ள்யூ. டி., இர்ரிகேஷன் சீப் எஞ்சினியரிடம் நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால் 1950-லே கிணறு வெட்டப்பட்டிருக்கிறது. 1953—54-லே வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிக் கொடுக்கப்பட்ட கிணறுகளிலே சமீபத்தில் 13 மீட்டர் பக்கத்திலே உள்ள கிணறுகளுக்கு நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 14 மீட்டர் தூரமுள்ள ஒரு கிணறுக்கு மின்னிணைப்பு கொடுக்க மறுக்கப்படுகிறது. ஆனால் அந்த விவசாயிகள் அங்கே கனரா பேங்கிலே லோன் எடுத்து, மீட்டருக்கு ரூபாய் கட்டி, கடைசி நேரம் வரையில் மின்னிணைப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் கடைசி நேரத்தில் சொல்கிறார்கள், நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட்டை சீப் என்சினியரிடம் இருந்து வாங்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகள் கட்ட வேண்

டிய வட்டித் தொகையைக் கட்ட முடியாமல் மிகவும் கஷ்டப் படும் காரணத்தால் அப்படிப்பட்டவர்களின் குறைகளை நீக்க உடனடியாகத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும், மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். இன்றைக்கு விவசாயிகள் நல்லமுறையிலே உற்பத்தித் திற னைப் பெருக்கவும், அதன் காரணமாக விவசாய விளைபொருள் களை விலை குறைவாகக் கொடுப்பதற்கும், அது நல்லமுறை யிலே வழிவகை செய்யும்.

மேலும் ஒரு திட்டத்தைக் கூறுகின்றார்கள். அங்கே ஆயக்கட்டுகளிலே அயன் நஞ்சையாக இருந்தால் ஒரு கிணற் றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையில் 300 அடி தூரம் இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.

அதுபோன்ற அயன் புஞ்சையிலே இருக்கிற கிணற்றுக்கு கிணறு 250 அடி இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால், பழைய காலத்தில், கிணறுகள் வெட்டி, விவசாயி கள், விவசாயம் செய்கிற காலத்திலே, பக்கத்திலேயிருக்கிற கிணறுகளை யொட்டி, அடிக் கிணறுகளை வைத்ததைப் பார்ப் போமானால், இரண்டு கிணறுகளிலும் தண்ணீர் இருக்கிறது. ஆனால், 300 அடி அயன் நஞ்சையிலும், 250 அடி அயன் புஞ்சையிலும் வித்தியாசம் இருக்க வேண்டுமென்று கூறுகிற காரணத்தால், கிணற்றுத் தண்ணீர் பெறமுடியாமல் விவ சாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதற்கு ஒரு குழு நியமனம் செய்து, இருக்கிற நிலைமைகளைச் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்.

குடிசைகளிலே, மின்சாரக் கம்பிகள் செல்கின்றன. அதை மாற்றி, புறம்போக்குகளிலோ, வண்டிப் பேட்டையிலோ, வைக்கவேண்டுமென்று கேட்டால், அதற்கு ஏற்படுகிற செலவை விவசாயிகள் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறார் கள். அப்படியில்லாமல், அதற்காகும் செலவை மின்சார வாரியமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கூடுதல் கே. ஜி. ஒயர் போடப்படாததால், சில பம்ப் செட்களில், காயில் எரிந்து போகிறது. ஆனால், அங்கே கேட்கிற நேரத்தில், எஸ். இ., டி. இ. யிடம் கேட்டால், மின்சாரம் சரியாக இருக்கிறது, மோட்டாரோ, ஸ்டார்ட் டரோ சரியாக இல்லையென்று சொல்கிறார்கள். கே.ஜி.ஒயர் குறைவாக இருக்கிற காரணத்தால், அல்லது டிரான்ஸ்பார் மர் ஓவர்லோடாக இருக்கிற காரணத்தால், சரியாக கரன்ட்



வராமல், காயில் எரிந்து போகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பாளையங்கோட்டையிலுள்ள, புதுப் பட்டியில், கிட்டத்தட்ட 16 மோட்டார்கள், 18 தடவை காயில் எரிந்து பாழாகியிருக்கின்றன. நாம் கேட்டால், சம்பந்தப்பட்ட டிரான்ஸ்பார்மரில் எந்தவிதமான மிஸ்டேக் கும் இல்லை, மோட்டார் மிஸ்டேக்தான் என்று சொல்கிறார் கள். அந்த இடத்திலே, 16 மீட்டர்கள் இதனால் பாதிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, கூடுதல் கே. ஜி. டிரான்ஸ்பார் மர் போட்டும், அதோடு அங்கேயிருக்கிற டிரான்ஸ்பார்மர் களை மாற்றியும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

விவசாயிகள், சில சமயங்களில், மோட்டார் பம்புக்கு வெளியில் டியூப் பொருத்திக்கொள்கிறார்க்ள். அதைப் பாது காப்புக்காக வைத்திருக்கிறார்கள். விவசாயப் பொருள் களவு போகக் கூடாது என்றும், பூச்சிகள் வரக்கூடாது என் றும் டியூப்கள் பொருத்தியிருக்கிறார்கள். ஆனால், வருகிற அதிகாரிகள், அதற்கென்று அபராதம் வசூலிக்கிறார்கள். ஆகவே, டியூப் லைட்டோ, வேறு பல்போ போட்டால், அதற்கு அபராதத் தொகை போடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீட்டருக்கு மாதாமாதம் வாடகை வாங்கிவிடுகிறார் கள். மீட்டரை முதலிலேயே வாங்கிக் கொடுத்தாலும், 3 ஹார்ஸ் பவர் மோட்டாருக்கு, மீட்டர் என்ற பெயரில், மாதாமாதம் ரூ. 5 வசூல் செய்கிறார்கள். ஆகவே, அங்கே குறிப்பிட்ட நிர்ணய விலைக்கு முதலிலேயே மீட்டர் மாட்டப் பட்டால், மீண்டும் மாதாமாதம் ரூ. 5 என்று வசூலிக்கப் படுகிற தொகை நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில சமயங்களிலே, மீட்டர் செக் அப் என்று, ஏ. இ. அல்லது டி. இ. அங்கே களத்துக்கு வருகிறார்கள். அதற்கு ரூ. 5 வசூல் செய்கிறார்கள். அங்கே, அவர்களுக்கு ஓரளவு சம்பளம் கிடைக்கிறது. ஆனால், மீண்டும் ஏழை விவசாயிகளிடமிருந்து அந்த ரூ. 5 வசூலிப்பதைத் தடுக்கத் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில சமயங்களில், எல்லா ஊராட்சி ஒன்றியங் களிலும், ஊராட்சிகளிடமிருந்து தெரு விளக்குகளுக்கான மின் தொகையைப் பிடித்துக் கொள்கிறார்கள். ஆனால்,

[திரு. மு. ஜான் வின்சென்ட்]

சமீபத்திலே நாங்குநேரியிலுள்ள அழவேறு ஊராட்சி ஒன்றி
யம் மின் கட்டணம் கட்டிய நேரத்தில், கட்டவில்லையென்று
சொல்லி, கூடுதல் சாங்ஷன் கேட்ட நேரத்தில், கொடுக்க
மறுத்திருக்கிறார்கள். ஆகவே, பல நேரங்களில், மின்சார
இலாகாவினர் இப்படிப்பட்ட சில காரியங்களை நல்லமுறை
யிலே செயல்படுத்தத் தவறிவிடுகிற காரணத்தினால், அதற்
கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஆகவே, விவசாயிகளின் விளைவைப் பெருக்க வேண்டுமென்
றால், சமீபத்தில் கொண்டுவந்துள்ள நிலத்தடி நீர் திட்டத்தை
மிக விரைவிலே நீக்க வேண்டும். அதோடு, அங்குள்ள விவ
சாயிகள், அயன் நஞ்சையிலே 300 அடி கிணற்றுக்கு கிணறு
இடம் விட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுவது.
200 அடியாகக் குறைக்கப்பட வேண்டும். அயன் புஞ்சை
யிலே, கிணற்றுக்கு கிணறு 250 அடி என்றிருப்பதை நீக்கி
டுவோமானால், மீண்டும் ஏராளமான விவசாயிகள் விவ
சாயம் செய்ய வழிவகை கிடைக்கும் என்பதைத் தெரிவித்து,
ஆகவே, 250 ஐ200 ஆகக் குறைத்தால், ஓரளவு விவசாயி
கள் முன்னேற வழிவகை பிறக்கும் என்று கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, கால்வாய்கள் வெட்டுவதற்கு, மின் இணைப்பு
கொடுக்க வேண்டுமென்றால், நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்
வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தக் கால்வாயை
வெட்டுவதற்காக பல ஆண்டுகளாக வெட்டப்பட்ட அவற்
றிற்கும் கிணறுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி
யுடன் முடித்துக்கொள்கிறேன்.

(மாலை 6·50)

*திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :—மாண்புமிகு சட்
டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம்
மின்சார வாரியத்தின் மீது 1977—78 ஆம் வருடத்திய நிதி
நிலை அறிக்கையின் மீதும், 1976—77 ஆம் ஆண்டின் துணை
நிதி நிலை அறிக்கையின் மீதும் பேசுகின்ற வாய்ப்பினை அளித்
தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



[திருச்சி. திரு ஆர். சௌந்திரராஜன்]

முதலிலே இந்த அறிக்கையில் புதிதாக 50 ஆயிரம் புதிய
மின் இணைப்புகள் விவசாயிகளுக்குப் தரப்படும் என்ற அந்த
நல்ல செய்தியை சொன்னதற்கு நான் அமைச்சர் அவர்
களுக்கு விவசாயிகளின் சார்பாக பாராட்டக் கடமைப் பட்டி
ருக்கிறேன். இதற்கு முன்னே இருந்த அரசு குறிப்பாக
திராவிட முன்னேற்றக் கழக அரசு, மின்சாரம் இல்லை என்று
ஒரு இடமும் இருக்கக் கூடாது என்ற ஒரு திட்டத்தை
வைத்துக் கொண்டு, எந்த அளவு மின்சாரம் கையிலே இருக்
கிறது என்று எண்ணிப் பார்க்காத வகையில், தெரிகின்ற
இடங்களில் எல்லாம் கம்பிகளை இழுத்து விட்டார்கள். மின்
சாரம் இருக்கிறதா என்று கூட பார்க்கவில்லை. இன்றைக்கு
பல கிராமங்களில், விடி விளக்கைவிட மிகக் கேவலமான நிலை
மையில் மினாக்கட்டான் பூச்சி என்று சொல்வார்களே அதைப்
போன்று நிலைமையில் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்
றன. எவ்வளவு தேவை என்று பார்த்து முன்னாலே இருந்த
வர்கள் உருவாக்கி இருப்பார்களேயானால் எடுத்துக் கொண்ட
திட்டங்கள் நல்ல திட்டமாக இருந்திருக்கும்.

இன்னும் சில கிராமங்களில் ஒரு வேடிக்கை என்ன
வென்றால், பகலிலே கரன்ட் வருகிறது. இரவிலே வருவ
தில்லை. இரவிலேதான் கரன்ட் தேவை அப்போது வருவ
தில்லை. இதற்கு மூல காரணம் தமிழகத்திற்கு நீர்நிலை
யில் மின் சக்தி உற்பத்தி செய்வதற்கு வசதிகள் இல்லை என்
பதை ஒத்துக் கொள்ளவேண்டும். ஆகவே அனல் மின்
நிலையங்களை நாம் நிறைய உருவாக்க வேண்டும். அல்லது
அண்டை மாநிலத்துடன் நாம் உறவு கொண்டு நீர் நிலைத்
திட்டங்களை வகுத்திருக்க வேண்டும். ஒகேனக்கல் திட்டம்
ஒன்று இருக்கிறது. ஆனால் அதற்குக் கர்னாடக மாநிலத்தின்
ஒப்புதல் வேண்டும். எனக்கு நிச்சயமாகத் தெரியும், நம்
முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
அதை வெற்றிகரமாக முடித்து விடுவார்கள் என்று. எனவே,
அனல் மின் நிலையங்களை நிறைய நாம் உருவாக்க வேண்டும்.

திருச்சி மாவட்டத்தைச் பொறுத்த வரையில்
பெரிய இன்டஸ்ட்டிரியல் ஏரியா என்று சொல்லக்கூடிய அள
விற்கு இன்று தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாக இருக்கி
றது. தஞ்சை ரோட்டிலே நல்ல தொழிற்சாலைகள், பாரத்
ஹெவி எலக்ட்ரிக்கல் தொழிற்சாலையைத் தொடர்ந்து,
உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே நிறைய மின்சாரம்
தேவைப்படுகிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்வேன், திருச்சியிலே ஒரு அனல் மின்சார
நிலையம் துவக்கப்படவேண்டுமென்று.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அலுவலகங்கள் பல இடங்களில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிகமான வாடகை கொடுத்து ஏ. இ. அலுவலகங்கள் நிர்வாகம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மின்சார வாரியத்தில் வசூலாகும் பெரும் தொகை வாடகையாகவே போய்க்கொண்டிருக்கிறது. சென்னையிலே கூட மின்சார வாரிய அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டிடத்தில் வாடகைக்கு வைத்திருக்கிறார்கள். 30 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வாடகை தனியார் இடமாக இருப்பதால் அதற்கு அட்வான்ஸ் வேறு கொடுத்து இருக்கிறார்கள்.

இதையெல்லாம் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். பல மாடிக் கட்டிடங்களில், சாதாரணமாக இரண்டு மாடிக் கட்டிடங்களில் கூட நீர் நிலைத் தொட்டிகள் அமைத்துத் தருவார்கள். ஆனால் இன்றைக்கு இந்த மின்சார வாரியத்தின் அலுவலகம் இருக்கிற இந்தப் பல மாடிக் கட்டிடத்தில் அங்கே பணிபுரிகின்றவர்களுக்குத் தண்ணீர் தருவதற்கு வசதியில்லை என்று கேள்விப்படுகிறோம். அவர்களுக்குக் கழிப்பறை வசதி சரியான முறையிலே செய்து தரப்படவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. நமக்குத் தேவையான அளவிற்கு, நாம் வாடகை அதிகமாக கொடுத்து இந்தக் கட்டிடத்தை உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். என்றாலும் அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்கள் நிம்மதியாகப் பணி செய்கின்ற அளவிற்கு அவர்களுக்கு ஆக்க பூர்வமான ஒத்துழைப்பு தரவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எப்படி இப்படிப்பட்ட தவறு அதிகமாக நடைபெறுகிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சாதாரணமாக 15 ரூபாய்க்கு வீடு பார்த்தால் கூட பைப் இருக்கிறதா, கிணறு இருக்கிறதா, மற்ற வசதிகள் எப்படி இருக்கின்றன என்று பார்க்கிறோம். 30 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். அதில் எந்தவித சௌகரியமும் இல்லை. என்று சொல்கிறபோது என்ன காரணத்திற்காக இப்படி ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுக்க வேண்டும் என்பதை நாம் முக்கியமாக எண்ணிப் பார்த்தாக வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,



மேட்டூர் அனல் மின் திட்டத்தை மிக வேகமாக அமுல் படுத்தப்பட வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடத்திலே நாம் பேசி, அதை வேகமாக அமுல் படுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்பாக்கம் அனல் மின் நிலையம் 1970-லேயே முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு 77-ஆகி 78-லே காலடி எடுத்து வைத்திருக்கிறோம். இது வரையில் முடித்திடவில்லை. என்ன காரணம் என்பதை ஆராய்ந்து அதை முடிப்பதற்கு மத்திய அரசுடன் உதவியைப் பெற்று, அவர்களுடன் கலந்து பேசி, ஆலோசனைகள் நடத்தி அதை வேகமக முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதை விட இன்னொன்று மிக முக்கியமான பிரச்சினை— மின்சார வாரியத்தில் வேலை செய்கின்றவர்களைப் பற்றி நாம் கூறி ஆக வேண்டும். இதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசு நடந்த போது நிறையப் பேர்களை வேலைக்கு எடுத்து இன்னும் 5 ஆண்டு காலத்திற்கு ஆட்களை எடுப்பதற்கு இடமில்லை என்ற நிலையை, ''சர்ப்பிளஸ் ஸ்டாபை'' இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைகளை நாம் ஆராய்ந்து பார்த்தாக வேண்டும் என்பதை மின்சார வாரியத்தின் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்லி ஆக வேண்டும். இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்த மட்டில் மக்களுக்கு மிகவும் தொடர்பு உள்ள ஒரு பிரிவு என்று சொன்னாலும் அங்கே இருக்கிற எந்த அலுவலரும் மக்களுடைய பிரச்னையைப் பொறுத்து மக்களுடைய பிரதிநிதிகள் காண்கின்ற போது சரியாகக் கவனிப்பதில்லை. யாராவது ஒருவரைக் கேட்டால் அது எனக்குத் தெரியாது என்று இன்னொருவரைக் காட்டி அவரைக் போய்க் கேளுங்கள் என்கிறார். அங்கே போய்க் கேட்டால் அவர் இன்னும் கீழே இருக்கிற அதற்குக் கீழே இருக்கிற ஒருவரைக் காட்டுகிறார். அவரைப்

போய்க் கேட்டால் அவர் வேறு பக்கத்திலே உள்ளவரைக் காட்டுகிறார். கேட்பதற்கு சரியான பதில் கொடுக்கப்படுவதில்லை. இப்படி ஒவ்வொருவரும் வேறு ஒருவரைக் கையைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல நாம் ஏதாவது எழுதிக் கேட்டாலும் சரியான பதில் வருவதில்லை. இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே எப்படிச் செயல்பட்டாலும் இந்த வெள்ள நேரத்தில் மக்கள் பாராட்டுகிற அளவிற்கு அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். கம்பங்களெல்லாம் கேள்விக் குறியாக வளைந்திருந்தன. 2 மாதம் 3 மாதம் ஆகும் விளக்கு வருவதற்கு என்று மக்கள் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் இவர்கள் மிகவேகமாகச் செயல்பட்டு நாம் நினைப்பதற்கு முன்னாலேயே விளக்குக் கொடுத்திருக்கிறார்கள். மின்சார வாரியத்தின் பணியை நாம் பாராட்டத் தக்க விதத்தில் அவர்கள் முனைப்போடு செயல்பட்டார்கள். என்று சொன்னால் அதற்குக் காரணம் மேலே இருக்கின்ற புரட்சித் தலைவரே எண்ணிப் பார்த்துப் பணியாற்றி இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே மெதுவாக எப்போதுமே செயல்படக்கூடிய ஒரு ஸ்தாபனத்தை புரட்சித் தலைவரவர்கள் வேகமாக இயக்கிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எனவே இது வரையில் மின்சார வாரியத்தில் இருந்துவந்த குறைகள் நிச்சயமாக புரட்சித்தலைவர் ஆட்சிக் காலத்தில் நீக்கப்படும். அது எந்த விதக் குறையும் இல்லாத ஒரு நல்ல நிர்வாகம் என்ற நிலையை புரட்சித் தலைவர் அவர்கள் செய்து முடிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அது மட்டுமல்லாமல் கடைசியாக மின்சார வாரியத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு வீடுகள் இல்லை. இன்றைக்கு யாராவது மாற்றிப் போனால் அவருக்கு வீடு கிடைப்பதில்லை. இம்மாதிரியான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகள் இவ்வளவு பணத்தைக் கையிலே வைத்துக் கொண்டு இவ்வளவு தூரம் பொறுப்பான நிர்வாகத்தில் இருக்கும்போது இப்படி அந்த நிர்வாகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு ஒரு சில ''குவார்ட்டர்ஸ்'' கட்டிக்கொடுக்க முடியவில்லை என்று சொன்னால் அது சரியாக இருக்காது. எனவே, அவர்களுக்குக் குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பொதுவாக மின்சாரம் என்று சொன்னால் இன்றைக்கு மனிதனின் வாழ்வோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். அது மாத்திரமில்லாமல் மனிதன் எதுவும் இல்லாமல் வாழ்ந்து விடலாம். ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்பதை இந்த வெள்ள நேரத்தில் நாம் படிப்பினையாகப் பார்த்திருக்கிறோம்.

ஆகவே இப்படி மனிதன் உயிர் வாழ்வதற்கு ''எஸ்ஸென்ஷியல்'' என்பதைச் சொல்லியாக வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட மின்சாரத்தை நாம் மக்களுக்கு வழங்குவதற்கு, அவர்கள் நல்ல முறையிலே பயன்படுத்துவதற்கு வேண்டிய நிலைமைகளை நாம் உருவாக்கியாக வேண்டும். அதற்காக நாம் நிறைய அனல் மின் நிலையங்களை உருவாக்கியாக வேண்டும். இப்படி உருவாக்குவதற்கு முன் மத்திய அரசினுடைய ஆலோசனையையும், அனுமதியையும் பெற்று நாம் நிறைய மின் நிலையங்களை உருவாக்க வேண்டும். அப்பொதுதான் புரட்சித் தலைவர் கனவு கண்டபடி கிராமங்களை நகரங்களாக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிராமங்கள் நகரங்களாக வளர்ந்தால் தான் கிராமப்புறங்களில் தொழில் வாய்ப்புக்கள் உருவாக முடியும். எனவே அதற்குத் தேவைப்படுகின்ற மின் நிலையங்களை ஏற்படுத்தி, மின்சாரத்தை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு மின்சாரம் நிறைய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை நிச்சயமாக நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது.

அதேபோல இந்த மின்சாரத் திருட்டைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர் மின்சாரக் காவல்காரனை இருந்து இந்த நிர்வாகத்தை நிச்சயமாக எதிர் காலத்திலே நல்ல முறையிலே செயல்பட செய்வார் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. அவை மீண்டும் நாளைக் காலை 9-00 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 7-00 மணியளவில் ஒத்தி வைக்கப்பெற்றது.

## 12. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

**247.** Notification issued in G.O. Ms. No. 2265, Public (Establish**ment-I)**, dated 24th October 1977 about the framing of the Tamil **Nadu** Ministers and Presiding Officers of Legislature (Furnising **and** Maintenance of *Government Houses* Provision of Amenities) **Rules**, 1977 and the Tamil Nadu Ministers and Presiding Officers **of** Legislature (Furnishing of *Private Houses* and Provision of **Amenities** Rules, 1977. [Laid on the Table of the House under **section** 14(3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 **(Tamil** Nadu XX of 1951.]

### B. *Reports. Notifications and other papers.*

*14. Annexure to the Madurai City Municipal Corporation (Second Amendment) Bill, 1977 (L.A. Bill No. 15 of 1977).

*15. Annexure to the Madras City Municipal Corporation **(Amendment)** Bill, 1977 (L.A. Bill No. 16 of 1977).

*16. Annexure to the Tamil Nadu Panchayat Union Councils **(Appointment** of Special Officers) Amendment Bill, 1977 (L.A. **Bill** No. 17 of 1977).

*17. Annexure to the Tamil Nadu Panchayats (Extension of **Term** of Office) Second Amendment Bill, 1977 (L.A. Bill No. 18 of 1977).

*18. **Annexure** to the Tamil Nadu Municipal Council (Appoint**ment** of Special Officers) Second Amendment Bill, 1977 (L.A. Bill **No.** 19 of 1977).

*19. **Annexure** to the Coimbatore Municipal Council (Appoint**ment** of Special Officer) Second Amendment Bill, 1977 (L.A. Bill **No.** 20 of 1977).

**20. Annexure** to the Tamil Nadu Panchayats (Third Amend**ment)** Bill, 1977 (L.A. Bill No. 21 of **1977)**



*21. Statement under Rule 91-A of the Tamil Nadu **Legislative** Assembly Rules explaining the circumstances which **necessitated** the promulgation of the Madurai City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 3 of 1977).

*22. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Madras City Municipal Corporation (Amendment) Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 4 of 1977).

*23. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 6 of 1977).

*24. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Second Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 7 of 1977).

---

* Despatched to Members on 30th December 1977.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

செவ்வாய்க்கிழமை, 1978 சனவரி 3.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தந்தை பெரியார் நினைவு அஞ்சல் தலை வெளியிடல்.

*141 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தந்தை பெரியார் நினைவு அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆம். ஐயா அவர்களின் நினைவு அஞ்சல் தலையினை வெளியிடுமாறு 1974-ம் ஆண்டு ஜூலையில் தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டது. அதற்கு 1974-க்கான அஞ்சல் தலைகள் வெளியிட 1973-ம் ஆண்டிலேயே மத்திய அரசின் அஞ்சல் தலை ஆலோசனைக் குழு முடிவு செய்துவிட்டதாக பதில் அளித்தது. மீண்டும் தமிழக அரசு 1975-ல் மத்திய அரசை

அஞ்சல் தலை வெளியிட கேட்டது. அதற்கு பதில் வரவில்லை. தமிழகம் ஜனாதிபதி ஆட்சியின்கீழ் வந்த பிறகு இந்தக் கோரிக்கையை தொடர்ந்து வற்புறுத்த வேண்டாம் என்று அரசு முடிவு எடுத்தது.

மதுரை நகர திராவிடர் கழக செயலர் திரு. வே. தேவ சகாயம் இது பற்றி ஒரு கோரிக்கையை 27—8—1977 அன்று இவ்வரசுக்கு அனுப்பிவைத்தார். இதனை அடுத்து இவ்வரசு 30—11—1977 அன்று மத்திய அரசுக்கு ஐயா அவர்கள் நினைவு அஞ்சல் தலையினை வெளியிட வலியுறுத்தி கடிதம் எழுதியது. அதற்கு அந்தக் கோரிக்கையை கவனிக்க ஏற்பாடு செய்துள்ளதாக மத்திய செய்தி தொடர்பு அமைச்சர் தமது 17—12—1977 கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. என் கிட்டப்பா : பகுத்தறிவுத் தந்தை பெரியார் நினைவு அஞ்சல் தலை வெளியிடக் கோரி முன்னர் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசை கேட்டுக் கொண்டதைப் போலவே நமது புதிய அரசும் கேட்டுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஐயா அவர்களின் நினைவு அஞ்சல் தலையை வெளியிட நாம் எல்லாம் கடமைப் பட்டிருக்கிறோம், என்ற அந்த அடிப்படையில் அதைச் செயல்படுத்துவதற்கு—1974-ம் ஆண்டிலிருந்தே அந்தக் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது—அதை விரைந்து செயல்படுத்துவதற்கு நமது அரசு ஆவன செய்ய நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; பதில் வந்திருக்கிறது. அவர்கள் அதில் எந்தளவு முயற்சி செய்கிறார்கள் என்பதைக் கவனித்து அதைத் தொடர்ந்து இந்த அரசு தன்னுடைய கடமையைச் செய்யும்.

திரு. பண்ணை கே. சேதுராம் : தந்தை பெரியார் அவர்களின் பெயர் என்றென்றும் நெஞ்சில் நிலைத்திருக்கும் வகையில் அரசாங்கக் கட்டடங்கள், அரசுக் கல்லூரிகள், அரசு கலைக்கூடங்கள் இவற்றிற்கு பெரியார் அவர்களின் பெயரையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரையும் வைக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இது பற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. க. சுப்பு : ஐயா அவர்களின் நினைவு அஞ்சல் தலை வெளியிடுவது ஆளுநர் அவர்கள் ஆட்சியின்போது கைவிடப்பட்டதாக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது கைவிடப்பட எடுக்கப்பட்ட முடிவு யாரால் எடுக்கப்பட்டது என்பதை விளக்கினால் அதைப்பற்றி நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த விளக்கத்தை நான் இங்கே வெளியிடுவது அவசியம் என்றாலும் அப்போதிருந்த அரசு இப்போது இதைப்பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை என்று முடிவு எடுத்தது என்ற கோப்புதான் வந்திருக்கிறது. தனிக் கேள்வி கேட்டு அவர்கள் விவரம் பெற விரும்பினால் நான் அந்தப் பதிலைக் கூறக்கூடும்.

திரு. எஸ். ஆர். இராதா : தந்தை பெரியார் அவர்களின் நினைவாக நினைவு அஞ்சல் தலை வெளியிட்டு அவர்களைப் பெருமைப்படுத்துகிற அதே நேரத்தில் அவர்கள் பொதுவாழ்வில் வைக்கம் வீரர் என்ற பெயர் பெற்று விளங்குகிற காரணத்தினால் மத்திய அரசோடும் கேரள அரசோடும் தொடர்பு கொண்டு வைக்கத்தில் பெரியார் அவர்களின் நினைவாக ஒரு சிலையும். ஒரு மண்டபமும் அமைக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த அரசுக்கு அந்த எண்ணத்தில் பேராசை உண்டு. உலகம் முழுவதுமே பெரியார் அவர்களைப் பற்றிய கொள்கைகள், எண்ணங்கள், அவர்கள் தியாகம் செய்த வழிமுறைகள் இவற்றைப் பரப்ப வேண்டும் என்பது நம் ஆசை. ஆகவே மாநிலங்களுக்குள் மட்டும் அதை அடக்கிவிடாமல் இந்திய துணைக்கண்டம் முழுவதும் அதைப் பரப்ப வேண்டும் என்பதுதான் இந்த அரசின் ஆசை.

## சென்னையில் பாரதியார் வாழ்ந்த இல்லம்

* 142. விஞ ---திரு. துரை முத்துசாமி, திரு. மெ.
ஆண்டி அம்பலம், திரு.என் கிட்டப்பா : மாண்புமிகு
முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) 'மறைந்த தேசிய கவிஞர் பாரதியார் வசித்த
திருவல்லிக்கேணி வீட்டை தேசிய நினைவுச் சின்னமாக
அரசு எடுத்துக் கொண்டதா ?

(ஆ) இதுவரை அது தொடர்பாக எடுக்கப்பட்ட நட
வடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் !**

(அ) ஆம்.

(ஆ) 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் சட்டத்
தின் கீழ் இந்த இல்லத்தினை அரசுடைமையாக்க தேவையான
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இச் சட்டத்தின்
4 (1) பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவிப்பு
ஏற்கெனவே 20–4–1977 ஆம் நாள் வெளியிடப்பட்டுள்ளது.
சென்னை மாவட்ட ஆட்சியாளர் இச்சட்டத்தின் கீழ் 5-ஏ
பிரிவின்படி நடத்தவேண்டிய விசாரணையையும் முடித்
துள்ளார். மற்ற நடவடிக்கைகள் முடிந்ததும் இவ்வில்லம்
அரசுடைமை யாக்கப்படும்.

**திரு. மெ. ஆண்டியம்பலம் :** தலைவர் அவர்களே, அமரர்
பாரதியாருடைய இல்லத்தை தேசிய நினைவுச் சின்னமாக
ஆக்குவது சம்பந்தமாக முன்னுள் ஆளுநர் அவர்கள் ஒரு
திட்டத்தைக் கொடுத்திருந்தார்கள். அதே ஆளுநர் அவர்கள்
ஒரு சப்கலெக்டரை நியமித்து இந்த தேசிய சின்னத்தை
விரிவுபடுத்தவேண்டும் என்று கூறிஞர்கள். அதை இந்த அரசு
துரிதமாக நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** முதலில்
நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவ
னித்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். மாவட்ட ஆட்சித்
தலைவருடைய நடவடிக்கை முடிந்தவுடன் அது அரசின்
கவனத்திற்கு வந்தவுடன் அரசு அதன் மீது நடவடிக்கை
எடுக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



மேலும் சென்னை, திருவல்லிக்கேணியில் மகாகவி சுப்பிர
மணிய பாரதியார் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமை
யாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை 1976-ம் ஆண்டு
செப்டம்பர் மாதம் பாரதி இளைஞர் சங்கத்திடமிருந்து
வந்தது. இந்த இல்லத்திற்கு உரிமையாளராக இருந்த
திரு. ராஜாராமிடமிருந்து மிஸ்ரிலால் சோகன் ராஜ் என்பவர்
வாங்கி 30 ஆயிரம் ரூபாய் செலவு செய்து புதுப்பித்திருக்கிருர்
கள். பாரதியார் வாழ்ந்த இல்லம் என்றிருந்த பளிங்குக் கல்லை
யும் அகற்றியிருக்கிருர்கள். அது இப்போது பொதுமக்கள்
தொடர்பு துறை வசத்தில் உள்ளது. இந்த இல்லத்தை
அரசுடைமையாக்க 28–9–1976-ல் முடிவு எடுக்கப்பட்டு
அதை கையகப் படுத்துவதற்கான சட்டம் 4 (1) பிரிவின் கீழ்
அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.
இதை எதிர்த்து இதன் உரிமையாளர் உயர்நீதி மன்றத்தில்
ரிட் மனு ஒன்றினை தாக்கல் செய்தார். நீதி மன்றம் அதை
தள்ளுபடி செய்தது. பின்னல், இதை அரசுடைமையாக்கு
வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஆணை பிறப்
பித்ததைத் தொடர்ந்து, நிலம் கையகப்படுத்தும் சட்டம்
6-ம் விதியின் கீழ் அறிக்கை வெளியிடுமாறும், அதன் பேரில்
விரைவில், அறிக்கை அனுப்புமாறும் மாவட்ட ஆட்சித் தலை
வரை அரசு வற்புறுத்தியுள்ளது. இது வந்த பின் 5 (ஏ)
பிரிவின் கீழ் விசாரணை முடிவுற்று பொதுப்பணித் துறை கண்
காணிப்பு பொறியாளரின் கிரய மதிப்பீட்டு அறிக்கையையும்
அரசு எதிர்பார்க்கிறது.

**திரு. மெ . ஆண்டியம்பலம்:** முதல் அமைச்சருக்கு நன்றி.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தேசீய கவி
பாரதியார் வாழ்ந்த திருவல்லிக்கேணி வீட்டை தேசீய
நினைவுச் சின்னமாக ஆக்குகின்ற நேரத்தில் நினைவுச்
சின்னமாக ஆக்கப்படுகின்ற இந்த இல்லத்தில் பாரதியார்
பயன்படுத்திய பொருள்களையும் முக்கியமாக அவர் நாட்
டுக்கும் நமக்கும் அளித்திருக்கின்ற கவிதைச் செல்வங்களையும்
அங்கே அமைத்து, அதனை அங்கே வருகின்றவர்கள் பார்வை
யிடுகின்ற வாய்ப்பை உருவாக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பாரதி
யார் அவர்களுடைய இல்லத்தை நினைவுச் சின்னமாக ஆக்க
வேண்டும் என்று விரும்புகின்ற நேரத்தில், இதை வாங்கியவர்
கள் ஏற்கெனவே செப்பனிட்டு இருக்கிருர்கள். சில மாற்றங்
களை செய்திருக்கிருர்கள். இது நமக்கு வேதனைக்குரியதாக

இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் இந்த அரசு
அக்கறை காட்டும் என்பதையும், அப்பேர்ப்பட்ட கருத்து
கருவூலங்களைப் பேணி பாதுகாக்கவேண்டும் என்பது தான்
இந்த அரசின் நம்பிக்கையும் விருப்பமும் என்பதை பணி
வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-10.)

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி
தேசீயக் கவிஞன் மாத்திரமல்ல ; புரட்சிக் கவிஞனும் ஆகும்.
ஆகவே, அவன் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமை ஆக்கியது
போல், அவரது படைப்புக்களை, இலக்கியங்களை பொது
உடைமையாக்க முன்வரவேண்டும். பாடல்களில் புதிய
ராகங்களைக் கண்டுபிடிப்பவர்களுக்கு 5,000 ரூபாய் பரிசு
என்று அரசாங்கம் அறிவித்திருப்பதுபோல், இவரது படைப்புக்
களில் புதுமைகளை, முன்னேற்றக் கருத்துக்களை வெளியிடு
பவர்களுக்கு புதிதாக பரிசுத் திட்டம் ஒன்றை அறிவிக்க
இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பாரதியார்
அவர்களுடைய கருத்துச் செல்வங்கள் நாட்டிலே உள்ள
தலைவர்கள், இளைஞர்கள் பலருக்கு மனப்பாடம் ஆகிய நிலை
யிலே தமிழ்நாடு இருக்கின்றது என்று நான் கருதுகிறேன்.
ஆகவே, அதற்கான தனியாக பரிசுத் திட்டம் தேவை இருக்
காது என்று இந்த அரசு கருதுகிறது. அது மட்டுமல்ல.
பாரதியார் அவர்களுடைய கொள்கையைப் பற்றி, அவர்
சீர்திருத்தக் கருத்துக்களைச் சொன்னாலும், அவருக்குக் கொடுக்
கப்பட்டிருக்கும் பட்டம் தேசீய மகா கவி என்பதுதான்.
புரட்சிக் கவிஞர் என்ற பட்டம் பாரதிதாசனுக்குத் தான்
கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பாரதியாரே ஒரு புரட்சிக் கவிஞர்
தான். அந்தப் புரட்சிக் கவிஞருக்கு ஒரு புரட்சிக் கவிஞர்
தான் பாரதிதாசன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, புரட்சிக் கவிஞருக்குப் பின்னால் வந்தவர்கள்
பலர், வெவ்வேறு மத நம்பிக்கை உள்ளவர்கள், பல கட்சி
களுக்குச் சொந்தக்காரர்களாகியிருக்கும் பரிதாபகரமான



நிலைமையைப் பார்க்கின்றோம். ஆகவே, அந்த நிலையில்
தேசீய மகாகவியினுடைய கருத்தைப் பின்பற்றி, அவருடைய
கவிதையைப் பின்பற்றி, அவரது கொள்கையிலே இருக்கின்ற
வீர நடையைப் பின்பற்றி புதிய புரட்சிக் கருத்துக்களைச்
சொன்ன பாரதிதாசனைத் தான் தமிழகம் புரட்சிக் கவிஞன்
என்று கூறுகிறது.

திரு. பண்ணை கே. சேதுராம் : இன்றைய தினம்
மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பாரதியாரின் இல்
லத்தை தேசீய மயமாக்கி, அவரது இல்லத்தை வாங்க
யிருப்பதாகக் கூறினாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழக
அரசு இதற்காக ஏதேனும் எள்ளளவேனும் நடவடிக்கை
எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதைப்
பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே,
நாட்டிலே சுதந்திர தாகத்தை எழுப்பிய பாரதியாரின்
கவிதைகளை இந்த அரசு மலிவுப் பதிப்பாக வெளியிட்டு,
அதனைத் தமிழகத்திலே உள்ள எல்லோரும் வாங்கிப் படிக்கத்
தக்க வகையிலே இந்த அரசு வகை செய்யுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மலிவுப்
பதிப்பு என்ற பெயரில் வெளியிடுவது நல்லதும், தேவை
யானதும் என்றாலும், அதையும் சிலர் வியாபார நோக்கத்
தோடு பயன்படுத்தி வருகிறார்கள் என்பதால், முடிந்தால்
இந்த அரசே அதைச் செய்வது நல்லது என்று நாங்கள்
கருதுகின்றோம்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பாரதியாரை தேசீய
மகாகவி என்று சொன்னதும், பாரதிதாசனை புரட்சிக்
கவிஞன் என்று சொன்னதும் சரியானதுதான். பராதியா
ருடைய கவிதைகள் அனைத்தையும் இந்தத் தமிழகம் எங்கும்
பரப்பக்கூடிய வகையில், அவருடைய பிறந்த நாளிலிருந்து
ஒரு வார காலம் விழா எடுக்க தமிழக அரசு முன் வருமா
என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு வாரம் அல்ல, பல வாரங்கள் விழா கொண்டாடினாலும் இந்த அரசுக்கு மகிழ்ச்சிதான். இப்படி நாட்டுக்குத் தியாகம் செய்த, நாட்டு விடுதலைக் காகத் தியாகம் செய்த, தமிழுக்குப் பெருமை கூடிய வகையிலே தமிழைப் பயன்படுத்திய, அப்படிப்பட்ட வர் பாரதியார்தான் என்றாலும், விரும்புகின்ற மக்கள், விரும்புகின்ற கட்சிக்காரர்கள் இதை எந்த அளவுக்குப் பெரிதுபடுத்தி, அதை நடத்த விரும்புகின்றார்களோ, அதைக் கேட்பதிலும், காண்பதிலும், கலந்து கொள்வதிலும் இந்த அரசு மகிழ்ச்சி அடையும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பாரதியார் அவர்கள் வாழ்ந்த எட்டயபுரம் பகுதியில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்காக முந்திய தி.மு.க. அரசில் அங்கே உள்ள பாரதியார் வீட்டை எடுத்து அரசே நினைவுச் சின்னமாக்க தி.மு.க. அரசு முயற்சி எடுத்துக் கொண்டது என்பது நம்முடைய அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை, நான் மகிழ்ச்சியோடு கவனிக்கிறேன். அந்த விவரங்களையெல்லாம் பார்த்த பிறகு எப்படி எப்படி முயற்சி எடுத்துக் கொள்ளப் பட்டது என்பதைப் பார்த்துத் தெளிவான விவரத்தைக் கொடுப்பதில் நான் மகிழ்ச்சி அடைவேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, திருவல்லிக் கேணியில் பாரதியார் வீட்டை அரசாங்கம் எடுத்துக் கொள்ளப் போகும்போது தனியார் அதை ... யத்திற்கு எடுத்து விட்டார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வீட்டை உடனடியாக எடுத்து தேசிய நினைவுச் சின்னமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதோடு அந்த வீட்டிலே இருந்த அந்தக் கல்வெட்டை எடுத்துவிட்டிருக்கிறார்கள், அதை மறுபடியும் அங்கே பொறிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? பாரதியார் அவர்க ளுடைய சமுதாயப் புதுமைக் கருத்துக்களை வேறு பல மொழி களிலே மொழிபெயர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நல்ல யோசனை. அப்படிச் செய்வதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் எந்த எந்த வகையில் ... டைய வசதிகள் அமைகிறதோ, நிதிநிலை ஒத்துழைக்குமோ



அவைகளுக்கேற்ப செய்யலாம் என்று சொல்லும்போது ஒருவருக்குச் சொந்தமான வீட்டை அவருக்கு இருக்கிற உரிமையின் காரணமாக—பாரதியாருக்குச் சொந்தமான வர்கள் என்ற காரணத்தாலே—இன்னொருவருக்கு விற்க உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது அவரவர்களுக்கு சட்டப்படி இருக்கிற உரிமை என்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதைத் தடை செய்ய முடியாது என்றாலும் இந்த அரசு உண்மையான உணர்ச்சிப் பூர்வமாக முயற்சி செய்து அதிலே வெற்றியும் கண்டு இருக்கிறது. விரைவிலே நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவர் அவர்களே, பாரதி யார் பிறந்த எட்டயபுரத்தின் பெயரை மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எட்டயபுரத்திற்கு என்று ஒரு வரலாறு இருக் கிறது. கட்டபொம்மன் வாழ்க்கையோடு ஒட்டிப்போன ஊர் அது. அதை மாற்றுவது என்றால் தீர யோசித்து சிந்தித்துத் தான் பரிசீலிக்க முடியும்.

## இந்திய நிர்வாகப்பணி அதிகாரிகள்.

*143. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் தமிழ் தெரியாதவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நமது மாநிலத்தில் உள்ள எல்லா ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் தமிழ் தெரிந்தவர்களே.

## நடமாடும் நீதிமன்றங்கள்.

*144. வினா—திரு. எஸ் ஜே. இராமசாமி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடமாடும் நீதிமன்றங்கள் மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: The One Mobile Court is functioning in Madurai city only. The High Court has sent a proposal to Government for the functioning of a Mobile Court in Coimbatore city. This proposal is under consideration of the Government. There is no proposal at present with the Government to extend the scheme to other districts.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்த நடமாடும் மொபைல் கோர்ட்டுகள் சில வழக்குகளைத்தான் விசாரிக்கின்றன. உதாரணமாக ரோட்டிலே குறுக்கே போவது, கார்களில் வேகமாகப் போவது போன்ற வழக்குகளைத்தான் விசாரிக்கிறார்கள். இதுபோன்ற தவறுகள் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ்களிலும் நடைபெறுகின்றன. ஆகவே, அங்கேயும் இதுபோன்ற மொபைல் கோர்ட்டுகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: The powers of these Courts are delimited by the Criminal Procedure Code. Certain Courts presided over by certain Officers have got limited powers, and they can only determine the offences judicially in respect of only those offences which fall within their jurisdiction.

திரு. க. சுப்பு : இந்த நடமாடும் நீதிமன்றங்கள் இருப்பதால் பலபேர்கள் நடமாட முடியாத நிலைதான் இருக்கிறது. ரோட்டைக் கடக்கக்கூடாது என்று அவர்கள் சொல்வது இல்லை, தவறாக ரோட்டைக் கடந்தால் கடக்கிறவரை காத்திருந்து பிடிக்கிறார்கள். இப்போது இல்லை, மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். இன்னும் இருக்கக்கூடிய நடமாடும் கோர்ட்டுகளையும் ஒழிக்க அரசு யோசிக்குமா ?

[முற்பகல் 9–20]

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: These will be examined in due course on their own merits.



உண்மையிலேயே சீரியஸாக முடிவு

திரு. ரா. உமாநாத் : எடுக்கப்பட வேண்டியது இந்த மொபைல் கோர்ட்டைப் பற்றித்தான். நான் கண்ணால் பார்த்தேன். போலீசுக்குக் கேஸ் பிடிக்க வேண்டும், அந்தக் கோட்டா வர வேண்டும் என்பது பரம்பரையாக அந்த வெள்ளைக்காரன் காலத்திலே யிருந்து வரக்கூடிய விஷயம், ஸ்டேடிஸ்டிக்ஸ்க்காக செய்யக்கூடியது. அதை ஃபுல்பில் செய்ய வேண்டுமென் பதற்காக சாதாரண தொழிலாளி டியூட்டி முடிந்து வரும் நேரத்தில் அந்த மிடில் கிளாஸ் எம்ப்ளாயிசை, கேஷுவல் லேபரர்ஸ் ஆகியவர்களை நிறுத்தி பைன் போட்டு ஐந்து ரூபாயைப் பிடுங்கிக் கொள்கிறார்கள். அவர்கள் சம்பாதித்த ஐந்து ரூபாயையும் அங்கே கட்டிவிட்டு வீட்டிற்குப் போனால் என்ன செய்ய முடியும் ? அதற்கு மாற்று ஏற்பாடு முத லமைச்சரவர்கள் சொல்ல வேண்டும்.

தலைவரவர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கேள்விக்குப் களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட தற்காலி பதில் சொல்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். வைத்து கமாக அந்த மொபைல் கோர்ட்டுகளை நிறுத்தி கொள்வதோடு விட்டோம் என்பதை இங்கே தெரிவித்துக் என்பதையும் அதைப்பற்றி ஒரு சட்டப் பிரச்னை இருக்கிறது அனு தெரிவித்துக் கொள்கிறேன். நீதிமன்றத்தினுடைய என்ற பிரச்னை மதியைப் பெறமல் அதைச் செய்யக்கூடாது செய்து இருக்கிறது. அவர்களோடு நாங்கள் சமாதானம் எப்படி அவர்களைத் திருப்திபடுத்திக் கொண்டிருக்கிறோம். கஷ்டப் யாவது ஏழைத் தொழிலாளிகள், ஏழை மக்கள் படக்கூடாது என்று விரும்பும் அரசு சில நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்கும்பொழுது சில நடைமுறை வழக்கங்களை விட்டு மீற வேண்டியிருக்கிறது. ஆனால் அப்படிச் சட்டத்தை விட்டு மீறாமல் எந்தெந்த வகையிலே செய்யவேண்டுமோ அதை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

கோபிச்செட்டிபாளையத்தில் உள்ள முன்சீப் நீதிமன்றம்.

* 145. வினா—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோபிச்செட்டிபாளையத்தில் உள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை சப்-கோர்ட்டாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

The Hgn. Thihu K. NARAYANASWAMY MUDALIAR: No.

திரு. கு. அ. செங்கோட்டையன்; தலைவரவர்களே, கோபிசெட்டிபாளையத்திலிருந்து சுமார் 120 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் சப்கோர்ட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. மேலும் அது பிற்பட்ட பகுதியாக இருப்பதால் அங்கே சப் கோர்ட்டைத் துவக்குவதற்கு அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR: Sir, there is no proposal for upgrading the District Munsif Court at Gobichettipalayam as a sub-Court. The suggestion for the constitution of a separate Court at Gobichettipalayam was not also accepted by the Committee on Jurisdiction of Courts constituted by this Government and whose decisions were also reviewed by the Committee of Judges in 1973-74.

உதகமண்டலம் கல்லூரியில் பட்ட மேற்படிப்புப் பிரிவுகள்,

*146. வினா— திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பிற்கான பிரிவுகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலே மிக அதிகமாகப் பழங்குடி மக்களும் மலைவாழ் மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் முதுகலைப் பட்டப் படிப்புக்காக சென்னை, கோவை, மதுரை போன்ற இடங்களுக்கு வந்து செலவிட்டுப் படிப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்காக ஏழை மக்களின்பால் அக்கறை கொண்ட இந்த அரசு நீலகிரி அரசினர் கலைக் கல்லூரியில் இந்தப் பட்ட மேற்படிப்பைத் துவங்குமா என்று [illegible] விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; மாண்புமிகு தலைவரவர்களே, கலைக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு துவக்குவது பல்கலைக்கழக அங்கீகாரத்தைப் பொறுத்ததாகும். பல்கலைக்கழகம் இதற்காக ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுதான் எந்தெந்தக் கலைக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு துவங்கலாம் என்று சொல்கிறது. அந்தக் குறிப்புரைகளின் மீது பல்கலைக்கழகம் பட்ட மேற்படிப்பு துவங்க அங்கீகாரம் அளிக்கும்.

பெரியகுளத்தில் ஆண்கள் கலைக் கல்லூரி.

*147. வினா—திரு. பண்ணை கே. சேதுராம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் நகரத்தில் அரசு ஆண்கள் கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. பண்ணை கே. சேதுராம்: தலைவரவர்களே, சுமார் 10 இலட்சம் ஜனத்தொகையையும் 7 இலட்சம் வாக்காளர்களையும் கொண்ட பெரியகுளம் பாராளுமன்றத் தொகுதியின் தலைநகரமாக இருக்கின்ற பெரியகுளத்தில் நீண்ட நெடுங்காலமாகக் கலைக் கல்லூரி இல்லை, கலைக் கல்லூரியும், விவசாயக் கல்லூரியும் வேண்டுமென்று சிந்தித்த நேரத்தில், விவசாயக் கல்லூரி வர வேண்டுமென்று நினைத்த நேரத்தில், முந்தைய அரசு வேறு இடத்திற்கு மாற்றிவிட்டது. இப்பொழுது அங்கே கலைக் கல்லூரியையாவது ஏற்படுத்த வேண்டுமென்ற நிலைமையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்கள், கலைக் கல்லூரிகளைப்பற்றி நாங்கள் விரிவாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். கலைக்கல்லூரிகள் புதிதாகத் திறக்கப்பட வேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டிய கட்டத்திலே இருக்கின்ற காரணத்தினால் இதற்கு இப்பொழுது உடனடியான பதிலாகத் தர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## புதுப்பட்டினம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

* 148—வினா: திரு. கே. சுப்பிரவேலு: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள திருமுல்லைவாசல், புதுப்பட்டினம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பங்குத்தொகை ரூ. 12,500 அரசுக்கு செலுத்தப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டட வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்க நாயகம்:—(அ) ஆம்.

(ஆ) இவ்வாண்டு வரவு-செலவுத்திட்டத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைக் கொண்டு எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டவேண்டும் என்பது குறித்து ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. அப்பட்டியலில் இப்பள்ளிகள் இடம் பெறவில்லை எனவே இவ்வாண்டு இப்பள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலனை செய்ய இயலாது.

திரு. ஏ. ரகுமான்கான் எழுந்தார்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தஞ்சை மாவட்டம் சீர்காழி வட்டத்தைப் பற்றிய கேள்வி. நீங்கள் சென்னை ஹார்பர் தொகுதியில் வெற்றி பெற்று வந்திருக்கிறீர்கள். பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் எனக்குக் கொடுத்த முடிவுப்படி நடக்கிறேன். ஆகவே, தாங்கள் அமருங்கள். துணைக் கேள்விகள் இல்லை.



## சொத்து வரி.

* 149—வினா: திரு அ. செல்வராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை மாநகராட்சி விதித்துள்ள சொத்து வரியினை (Property tax) குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. டி. கே. கபாலி: நெருக்கடி நிலையின்போது சென்னையில் குறிப்பாக பல வீடுகளுக்கு வரியை 200 ரூபாயிலிருந்து ஆறு ஏழு மடங்கு உயர்த்தியிருக்கிறார்கள். அரசு இதிலே கண்டிப்பாகக் கவனம் செலுத்தி பழைய வரியை வாங்க முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வரி முறைகேடாக உயர்த்தப்பட்டிருக்குமானால் மாநகராட்சி ஆணையருக்கு அல்லது வரி விதிப்புக் குழுவுக்கு விண்ணப்பம் செய்து குறைத்துக் கொள்ளலாம். இதிலே திட்டவட்டமான முடிவு எடுக்க வேண்டுமென்ற வகையில்தான் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

திரு. டி. கே. கபாலி: ஆணையருக்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டும் வரி குறைக்கப்படவில்லை. வரி விதிப்புக் குழுவுக்கு அறிவித்தும் அவர்களும் குறைக்கவில்லை. என்னுடைய வீட்டுக்கே அவ்வாறு வரி போட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். சென்னையில் வழக்குத் தொடர்ந்து இருப்பதாகக் கூட அறிகிறேன். இது பற்றி அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதனால்தான் இந்த அரசு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்தேன்.

செங்கோட்டை நகராட்சி அலுவலகம்.

*150—வினா: திரு. சு. முத்துசாமி கரையாளர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 28–4–1977-ல் செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் தீப்பிடித்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் கொடுத்த புகாரின் மேல், செங்கோட்டை நகர காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, விசாரணை செய்ததில், துப்பு துலக்க முடியவில்லை என்று தெரிவித்து உள்ளனர். சம்பவ தினத்தன்று காவல் பணியில் இருந்த இரவு காவலர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, தன் பணியில் தவறிவிட்ட குற்றத்திற்காக அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

திரு. சு. முத்துசாமி கரையாளர்: செங்கோட்டை முனிசிபாலிடி ஊருக்கு மத்தியில் இருக்கிறது. அங்கு ஸ்பெஷல் ஆபீசர் போட்டதில் இருந்து ஊழல் நிறைந்திருக்கிறது. ஆகையால்தான் அந்தத் தீயை வைத்தார்கள் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இதைப் பற்றி விசாரிக்க தனியாக ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமித்து ஆராய வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஊழல் உள்ள இடத்தில் தீ பிடிக்கும் என்ற புதிய கருத்தை உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி விசாரித்துப் பார்த்துதான் இரவுக் காவலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எம். ஏ. ரசாக் எழுந்தார் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி செங்கோட்டையைப் பற்றியது.



திரு. எம். எம். ஏ. ரசாக்: என்னுடைய தொகுதி கடையநல்லூர் தொகுதி; செங்கோட்டை முனிசிபாலிடி சம்பந்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 151, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

சிறுவாணி அணை.

*151 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. ஆ. நடராசன், திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை சிறுவாணி குடிநீர் அணைக்கட்டும் திட்டம் இப்போது எந்த நிலையிலுள்ளது?

(ஆ) இத்திட்டத்திற்கு இதுவரை எவ்வளவு செலவு ஆகியிருக்கிறது?

(இ) இத்திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) கேரள மாநில எல்லைக்குள் கட்டப்பட்டுவரும் சிறுவாணி குடிநீர் அணைக்கட்டு சம்பந்தப்பட்ட வேலைகள் யாவும் திட்டமிட்டபடி நடந்து வருகின்றன. 1978-ம் ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள், நாளொன்றுக்கு 80 லட்சம் காலன் தண்ணீர் வழங்கும் வகையில் அணைக்கட்டின் உயரம் அமைந்துவிடும்.

(ஆ) இத்திட்டத்திற்கென 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய ரூ. 265·29 இலட்சம் செலவு ஆகியுள்ளது.

(இ) 1979-ம் ஆண்டு இறுதிக்குள் கேரள எல்லைக்குள் நடைபெறும் அணைக்கட்டு வேலை முடிந்துவிடும். திட்டம் முழுமையும் 1980-ம் ஆண்டு ஜூலைக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9—30)

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? மேலும், இந்தத் திட்டத்தில் மதுக்கரை நகரியக் குழு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைக் கோயம்புத்தூர் நகராட்சி ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அது முடிந்த உடனே வே-சைட் வில்லேஜஸ், அதாவது பைப் லைன் வரும் வழியாக இருக்கும் கிராமங்களுக்கும் (சேட்டலைட் டவுன்கள்) கோயம்புத்துரை சுற்றியுள்ள நகரங்களுக்கும் அளிக்கப்படும். அப்படிப்பட்ட நகரங்கள் 16 நகரங்கள் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் தண்ணீர் வழங்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக வேண்டி ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு? 1978-ம் ஆண்டுக்குள்ளாக தண்ணீர் கொடுப்பதற்கான வகையில் திட்டம் நிறைவேற்றப்படும் என்கிற அளவிற்கு செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சியே. அந்தத் திட்டத்திற்குமேல், மேலும் அதிகப்படியாக எந்த அளவுக்கு பணம் அதற்கு செலவழிக்கிற அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை சொல்ல இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 16·16 கோடி..

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, சிறுவாணியில் இருந்து வருகின்ற தண்ணீர் கோவை நகரத்திற்கு வருகிறது. வருகின்ற வழியில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. குறிப்பாக, எனது தொகுதியான தொண்டாமுத்தூர் தொகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் இன்னும் பல்வேறு கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, வருகின்ற வழியில் இருக்கும் அந்தக் கிராமங்களுக்கும் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு ஏதாவது திட்டத்தை அரசு வைத்து இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது வருகின்ற பாதையில் உள்ள கிராமங்கள் 9. அதாவது பைப் லைன் வரும் வே சைட் கிராமங்கள். அந்தந்த கிராமங்களின் அருகே 'டி' குழாய் போட்டு வைக்கப்படும். அந்தந்த பஞ்சாயத்துக்கள் பணம் கட்டிய உடனே, அவர்களுக்கு 24 மணி நேரத்தில் தண்ணீர் கொடுக்கப்பட்டுவிடும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அந்த் சிறுவாணி திட்டம் 80-ம் வருஷத்திற்குள் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது உறுதியாக நிறைவேறும் என்று சொல்ல முடியுமா? கோயம்புத்தூர் முனிசிபாலிடி எவ்வளவு பணம் இதற்காக தருவதற்கு ஒதுக்கியுள்ளது? மாநகராட்சியாக்கப்பட்டு இருப்பதால், ஜனத்தொகை முனிசிபல் எல்லையில் அதிகரித்து வருகிறது. அத்தனைபேருக்கும் தண்ணீர் வினியோகிக்கும் அளவுக்கு அந்தத் திட்டத்தில் வாய்ப்பிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இப்போது அங்கேயிருக்கும் தண்ணீர் 60 லட்சம் காலன். அது வெயிற் காலங்களில் 40 லட்சம் காலன்களாக குறைந்து விடும். இந்தத் திட்டம் முடிந்தால் 223 லட்சம் காலன் தண்ணீர் கிடைக்கும்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு மொத்தமாக ரூ. 16·16 கோடி அளவிற்குப் பணம் ஒதுக்கியுள்ளதாகச் சொல்லப்பட்டது. அதில் அணையின் கரையை உயர்த்துவதற்கு எவ்வளவு செலவழிக்கப்படும், குழாய் அமைப்பதற்கு எவ்வளவு செலவு, என்று இப்படி ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு செலவாகும் என்று பங்கீடு செய்யப் பட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட விவரம் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பட்டியல் மிகவும் நீளமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் 'பிரேக்-அப் ஃபிகர்' இருக்கிறது. எழுத்து மூலம் மாண்புமிகு அமைச்சருக்கு அனுப்பப்படும். ..........(சிரிப்பு)

There is nothing. It is quite possible that he may become ha Minister later on. (Laughter).

<u>திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு</u> : தலைவர் அவர்களே, சிறுவாணி குடிநீர் திட்டத்தை ஒட்டி கோவை நகருக்கு தண்ணீர் விஸ்தரிப்பை ஒட்டி பைப்புகள் போடுவதற்கும், கோவை புறநகர் பகுதியில் பைப்புகள் போடுவதற்கும் தற்சமயம் அமைக்கப்பட்டுள்ள அந்த பைப் தொழிற்சாலை எப்பொழுது வேலையை துவக்கும்? வேலையை துவக்கியதற்கு பின்னால் கோவை நகருக்கும், புறநகர் பகுதிக்கும் பைப்புகள் எவ்வளவு காலத்திற்குள் போட்டு புதைக்கப்படும்? அதே போல் புறநகர் பகுதிக்கு தண்ணீர் வழங்கக்கூடிய காலத்திலே புறநகர் பகுதியாக இருக்கக்கூடிய சின்ன வேடம்பட்டி, வெள்ளக்கோவில், துடியலூர் ஆகிய நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு அந்தத் தண்ணீர் கிடைக்குமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் குழாய் பதிக்க வேண்டிய தூரம் 29,720 மீட்டராகும். நான் ஏற்கெனவே சொன்னேன் 16 சாட்லைட் டவுன்ஸ் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். மொத்தம் 16 வகையான செலவுகள். ஒவ்வொரு வகையான செலவுக்கும், அதற்கான மதிப்பீடுகள் தனித் தனியாக இருக்கிறது. சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதைப் படிப்பதற்கு ஒரு நாளாகும். அதை எல்லாம் எழுத்து மூலமாக அனுப்புவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

<u>திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்</u> : சார், இந்த திட்டத்திலே பஞ்சாயத்துக்களில் நிதிநிலை சரியாக இருக்கும் பொழுது பணம் கட்டினால்தான் கொடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது பஞ்சாயத்திலே நிதிநிலை சரியாக இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அதை மனதில் கொண்டு பஞ்சாயத்து பணம் கட்டாமல் அரசாங்கமே செலவுகளை ஏற்றுக் கொண்டு குடி தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கும் ஏற்பாடு கூட மொத்தத் தொகையில் இரண்டு பங்கு 2/3 எல்.ஐ.சி.-யும் 1/3 கவர்ன்மெண்டும் கொடுக்கிறது. இந்தச் செலவை ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று பஞ்சாயத்துக்கள் தீர்மானத்தை நிறைவேற்றி, நிதி ஆதாரங்களை இப்படியெல்லாம் திரட்டுவோம் என்று சொல்லிவிட்டு, திட்டம் நிறைவேற்றிய



பின்னால் பணத்தைத் கொடுக்காமல் இருக்கிற பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்தை ஏற்றுக் கொண்டால், பல கோடி ரூபாய்கள் செலவாகும். இதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. பணம் கட்டவில்லை என்று சொன்னாலும் புரட்சித் தலைவர் ஆட்சியிலே தண்ணீர் தொடர்ந்து வழங்கிக் கொண்டு இருக்கிறோம்.

## குழாய்க் கிணறுகளுக்கான இடங்களைத் தேர்ந்தெடுத்தல்

*152 <u>வினா—திரு. ஆ. நடராசன்</u> : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடி நீர் வடிகால் வாரியத்தால் போடப்படுகிற குழாய் கிணறுகளுக்கான இடங்கள் பேரூராட்சிகளைக் கலக்காமல் தேர்வு செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இம்முறையை மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

<u>திரு. ஆ. நடராசன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் ஊராட்சி மன்றங்களை கலக்காமல் தான் இந்த குடிநீர் வடிகால் வாரியம் குழாய் கிணறுகளை எல்லாம் போட்டிருக்கிறார்கள் என்ற புகார் பல இடங்களில் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்களும் ஆம் என்று சொல்கிறார்கள். இம்முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, குடி தண்ணீர் கிடைப்பதற்கான ஊர்கள் 6 வகையாக பிரிக்கப்பட்டிருக்கிறது. கேடகிரி 1, 2, 3, 4, 5, 6 என்று. இந்த அரசு பொறுப்பு ஏற்ற உடன் முதல் இரண்டு வகையான ஹேபிடேஷன்—வில்லேஜ் என்று சொல்வதற்கில்லை. வில்லேஜ் என்பது பெரிய கிராமம். அதற்குள் பல குடியிருப்புகள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் 12 மாதத்திற்குள்ளாக குடிதண்ணீர் கொடுத்தாக

வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. கேடகிரி 1 என்பது ஒரு கிலோ மீட்டருக்குள் தண்ணீர் இல்லாத கிராமம். கேடகிரி 2 என்பது ஒரு கிலோ மீட்டருக்குள் தண்ணீர் இருக்கும். ஆனால் குடிநீராக இருக்காது. இதற்கும் தண்ணீர் எங்கே எடுப்பது என்பதைப் பார்த்து, அங்கே குழாய் கிணறுகளை அமைக்கிறார்கள். ஆனால் ஒரே கிராமத்தில் இரண்டு மூன்று இடங்களில் தண்ணீர் கிடைக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்தால், எந்த இடத்திலே பைப்புகளை பொருத்துவது என்பதை மக்களையும், அதிகாரிகளையும், கேட்டுத்தான் இந்த குழாய்கள் பொருத்தப்படுகின்றன.

திரு. ரெ. வீ. சவுந்தரராசன் : பேரவைத்தலைவர் அவர்களே, குழாய் கிணறுகள் ரிப்பேர் ஆகிவிட்டால் அதை ரிப்பேர் செய்வதற்கு குடி நீர் வாரியம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆளைத்தான் போட்டிருக்கிறார்கள். அதனால் பாபநாசம் பேரூராட்சியிலே எடுத்துக் கொண்ட குழாய் கிணறுகளை குறித்த நேரத்தில் சென்று ரிப்பேர் செய்ய முடியவில்லை. ஆகவே பம்ப் மெக்கானிக் உள்ள பேரூராட்சிகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஹாபிடேஷன் கேர் டேக்கரிடமும் போஸ்ட் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ரிப்பேர் ஆன உடன் அவர் எழுதிவிடுவார். ஆனால் இப்பொழுது மெயின்டனன்ஸ் பஞ்சாயத்து சிறப்பாகச் செய்வதில்லை என்ற காரணத்தால் போர்டே மெயின்டனன்ஸ் நடத்தலாம் என்பது பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9–40]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, கிராமங்களிலேகூட குடி நீர் வடிகால் வாரியத்தின் சார்பிலே, இந்தக் குழாய்க் கிணறுகள் அமைக்கின்றபொழுது, கிராமத்திலே இருக்கிற ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது கிராம முக்கியஸ்தர்கள் யாரையுமே கலக்காமல், கிராமங்களில், அதிகாரிகளே சென்று தேர்ந்தெடுக்கிற இடங்களில், குழாய்க்கிணறுகளை போட்டுவிடுகிறார்கள். அவற்றை மக்கள் பயன்படுத்த மறுக்கிறார்கள். அதனால் பணம் வீணாகிறது. ஆகவே, கிராமங்களில் குழாய்க் கிணறுகளுக்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது. அந்த கிராம ஊராட்சி மன்றத் தலைவரையோ, அல்லது அங்குள்ள முக்கியஸ்தர்களையோ, அழைத்து, கலந்து, இடத்தைத் தேர்ந்தெடுக்க குடி நீர் வடிகால் வாரிய அதிகாரிகள் முயற்சிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தப் பிரச்சினையை நான் சரியாக விளக்காமல் இருக்கிறேன் என்று கருதுகிறேன். நான், முதலில் சொன்னதைச் சரியாக சொல்லவில்லையென்று கருதுகிறேன். எந்த கிராமத்திற்கு அல்லது ஹாபிடேஷனுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற பட்டியல் கலெக்டர் தருகிறார். அந்தக் கிராமத்திற்குக் குடிநீர் வடிகால் வாரிய நிபுணர்கள் சென்று, எங்கே தண்ணீர் இருக்கிறது என்று கண்டு பிடிக்கிறார்கள். எங்கே தண்ணீர் இருக்கிறது என்று கண்டுபிடிக்கிற இடத்திலேதான் குழாய்க் கிணறு போட முடியும். ஒரே இடம் என்றால், அங்கே வந்துவிடும், அதற்கு மேல் என்றால், தண்ணீர் இருக்கிற இடங்களில் எங்கே வைப்பது என்பதை மக்களைக் கலந்து செய்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன? அமைக்கப்பட இருப்பவை எத்தனை? எந்த அடிப்படையில் அமைக்கிறார்கள்? அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களை தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கடந்த காலத்திலே குடிநீர் வடிகால் வாரிய நிபுணர்கள் சென்று அமைத்த பல குழாய் கிணறுகள் கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க இயலாத நிலையிலே இன்றும் இருக்கின்றன. இந்தக் குறைகளைப் போக்க சர்க்கார் முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குடி தண்ணீர் கொடுப்பதற்காக, குழாய் பொருத்துவதில், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது அனேகமாக, அன்டர் 'டிரவுட்

ரிலீப் ஸ்கீம்', வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட குழாய்க் கிணறுகள்தான் பல இப்பொழுது உபயோகப்படாமல் இருக்கின்றன. அவைகளில் உபயோகப்படக்கூடியதை வைத்துக்கொண்டு, உபயோகத்திலில்லாததை எடுத்து, உபயோகிக்கக்கூடிய இடத்தில், உபயோகப்படுத்தவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. கோரிக்கைக்கு ஏற்ப, குடிநீர் வடிகால் வாரியத்தால், குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளவற்றில் பழுது ஏற்படுமானால், போஸ்ட் கார்ட் எழுதினால் போதும். We rush to the place. It is all done within 24 hours. எல்லாம் 24 மணி நேரந்தான், அதற்கு மேல் ஆகாது.

## தொழிலாளர்களது பணிக்கொடை.

*153 வினா.— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர்களுக்கான கிராஜுட்டி சட்டத்தின்படி வருடத்துக்கு 15 நாள் சம்பளம் கொடுக்காமல் 13 நாள் சம்பளம் தான் தொழிலதிபர்கள் கொடுக்கிறார்கள் என்ற புகார்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், வருடத்துக்கு 15 நாள் சம்பளம் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பணி முடிந்த ஒவ்வொராண்டுக்கும் 15 நாட்கள் ஊதியம் என்ற வீதத்தில் பணிக்கொடை கொடுக்குமாறு, பணிக்கொடை கொடுத்தல் சட்டத்தின் கீழ் உள்ள மேல் முறையீட்டு அதிகாரிகள், கட்டுப்பாட்டு அதிகாரிகள் (Appellate authority and exercising authority) அனைவரும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

திரு. கு. ரமணி : பல இடங்களில் இது இன்னும் அமலுக்குக் கொண்டு வரப்படாமல், 26 நாட்களுக்குத்தான் அந்தத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், ஆகவே 1/2 மாதம் என்ற கருத்தை வைத்துக்கொண்டு 13 நாட்களுக்குத்தான் அவர்களுக்குப் பணிக்கொடை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அப்படியானால், அப்படிப்பட்ட நிர்வாகங்களை நிர்பந்தித்து, இதனை அமல்படுத்த, சட்டபூர்வமான ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, Gratuity Act, 1972 பிரகாரம், 15 days for every completed year of service—ஒவ்வொரு ஆண்டுக்கும் 15 நாள் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், அதைப்பற்றிய வழக்கு சென்றபொழுது, ஆந்திர உயர்நீதிமன்றம் 15 நாட்கள் என்பது 1/2 மாதம். ஆனால், 26 நாட்கள் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு ஆண்டுக்கு 13 நாட்கள்தான் 1/2 மாதம் என்ற கணக்கில் இந்த கிராச்சுவிட்டி கொடுக்கப்படவேண்டுமென்ற, தொழிலாளிகளை மிக பாதிக்கக்கூடிய தீர்ப்பைக் கொடுத்துவிட்டது. * * எனவே ஒவ்வொரு ஆண்டிற்கும் 15 நாள் எத்தனை வருடங்கள் வேலை செய்கிறார்களோ, அத்தனை வருடங்களுக்கு, இந்த விகிதத்தில் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆனால், இந்த அரசு எல்லா அதிகாரிகளுக்கும்—இரண்டு அதிகாரிகள் இருக்கிறார்கள் ; அவர்களுக்கு ஆணை—பிறப்பித்துள்ளது. You should follow Calcutta High Court's decision கல்கத்தா தீர்ப்பைத்தான் பின்பற்றவேண்டுமென்றும், அதன்படி 15 நாட்களுக்கு என்று கணக்கிட்டு கிராச்சுவிட்டி கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளது. அதோடு இன்னொரு தத்துவத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். All labour laws are beneficial legislation. Therefore while interpreting labour laws, doctrine of beneficial construction should be applied in favour of workers என்று சொல்லியிருக்கிறோம். தொழிலாளர் சட்டம் என்பது, தொழிலாளர் நலச்சட்டம். எனவே, தொழிலாளர் நலச் சட்டத்திற்கு வியாக்கியானங்கள் கொடுக்கும்போது, அல்லது விளக்கங்கள் கொடுக்கும்போது, தொழிலாளர்களுக்குச் சாதகமான வகையிலே கொடுக்கவேண்டும். அப்படிப் பார்க்கும் போது, கல்கத்தா உயர்நீதிமன்ற தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9.44 இல் இப்பகுதி அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கேள்விக்குப் பதில் மட்டும்தான் எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இது மிகவும் இம்ப்பார்டன்ட் மேட்டர். இந்த மாதிரி கேள்வி என்பதற்கு டைம் கொடுத்து விளக்கியது சரி, அமைச்சர் சொன்னது ரைட், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் கிராசுவிடி சட்டத்தின்படி 15 நாள் சம்பளம் கொடுக்கும் இந்த அரசு, விவசாயத் தொழிலாளர்களுக்கும் இந்த மாதிரி சம்பளம் கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே கேள்வி 72-வது வருட ஆக்டின்படி சம்பளம் 15 நாளா அல்லது 13 நாளா என்பதைப் பற்றிய விளக்கம் தான்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கம் நல்ல விளக்கம்தான்.**

** ** **

மேலும் மத்திய அரசுடன் பேசி சட்டத்திலே ஏதாவது மாற்றம் செய்து தேவையான திருத்தம் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே மத்திய அரசாலே நியமிக்கப்பட்ட குழு Committee for comprehensive industrial legislation அவர்கள் எடுத்துக்கொண்டது தொழில் தகராறு சட்டம் Trade Union Act தொழிலாளர் நலச் சட்டம். அந்த தொழிலாளர் நல சட்டங்கள், standing orders, நிரம்ப இருக்கிற காரணத்தாலே தமிழகத்திலே இந்த அரசு வாக்குக்கொடுத்ததற்கு ஏற்ப, புரட்சி தலைவர் அனுமதியோடு, முதல் அமைச்சர் அனுமதியோடு, இருக்கக்கூடிய எல்லா தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும், ஒன்றையும் விட்டுவிடுவதாக இல்லை. அழைத்து எல்லா தொழிலாளர் நலச் சட்டங்களையும் பரிசீலனை செய்து என்னென்ன மாற்றங்கள் தேவை என்பதை பரிந்துரை வழங்க இருக்கிறது. இது கன்கரன்ட்

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்ற





சப்ஜக்ட். மத்திய அரசு செய்யப் போகிற மாற்றங் களுக்கு ரெக்கமன்டேஷன் செய்து அனுப்பலாம். எனவே எல்லா சங்கங்களையும் உள்ளிட்ட விதத்திலே அமைக்கப்படும். அந்த பரிந்துரைகளைக் கொண்டு இங்கே தேவையான நட வடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கோர்ட்டை அவமதித்த குற்றம்போல் வந்து விடும் என்ற நிலைமையை சொன்னதற்கு, அக்கறை காட்டியதற்காக, மகிழ்ச்சி அடை கிறேன்.**

* * *

திரு. க. சுப்பு:

மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே,*

என்பதை வேண்டுமானால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்னதோடு விட்டிருந்தால் பிரச்னை இல்லை. ஆகவே நடவடிக்கை குறிப் பைப் பார்த்து எதை நீக்க வேண்டுமோ அதை நீக்கி விடுகிறேன்.

## மணலூர்பேட்டை அருகே பாலம்.

*154 வினா.—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் தியாகதுருகம் to திருவண்ணாமலை சாலையின் இடையில் மணலூர்பேட்டை அருகே உள்ள தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

## செம்பரம்பாக்கம் ஏரிக்கரை குறுக்குப் பாதை.

*155 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை–பெங்களூர் நெடுஞ்சாலையில் செம்பரம்பாக்கம் ஏரிக்கரையின் மீது குறுக்குப்பாதை போடும் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) கண்ட்ராக்ட் எந்த ஆண்டில் விடப்பட்டது? வேலை முடிக்கப்பட்டு விட்டதா ?

(இ) இந்தப் பாதை அமைப்பதற்கு மத்திய அரசு நிதி உதவி ஏதேனும் அளித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ரூ. 1,36,500.

(ஆ) இந்த வேலைக்கான ஒப்பந்தம் 1971-ம் ஆண்டில் விடப்பட்டது. வேலையும் முடியும் தறுவாயில் இருக்கின்றது.

(இ) இந்தப் பாதை அமைப்பதற்குரிய நிதி அனைத்தையுமே மத்திய அரசுதான் ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இந்தப் பாதை அமைப்பதற்கு பல ஆண்டுகளாகி விட்டன. வருடங்கள் எவ்வளவு என்று சொல்லவில்லை. எந்த ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது ? யாரிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது ? யாருக்கு விடப்பட்டது ? எத்தனை ரூபாய்க்கு விடப்பட்டது என்று விவரங்களை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தக் குறுக்குப் பாதைக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,36,500. சென்னை--பெங்களூர் நெடுஞ்சாலையில் செம்பரம்பாக்கம் ஏரிக் கரையின்மீது குறுக்குப் பாதை போடும் திட்டம் ரூ. 4,11,600 மதிப்பீட்டில் மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டது. இப்பணியின் முன்னேற்றம் தாமதமாக உள்ளதால் 12—1—1976 அன்று ஒப்பந்தத்தை ரத்து செய்து மிகுதி வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 31—8—1976 அன்று திரு. கே. சி. டில்லிபாபு என்பவரிடம்



முதலில் பணியைத் துவக்கிய ஒப்பந்தக்காரர் திரு. கே. ஆர். சின்னையா நாயுடு குறிப்பிட்ட தொகைக்கே விடப்பட்டது. இப்போது அந்தப் பணி முடியும் தறுவாயில் இருக்கிறது.

## எலவானாசூர் கோட்டையில் கால்நடை மருத்துவமனை.

*156 வினா :—திரு. வ. துலுக்காணம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி எலவானாசூர் கோட்டையில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மூலம் தீர்மானம் 896 எண் மூலம் 1973 நவம்பரில் (22—11—1973-ல்) அனுப்பிய திட்டத்தின்படி அரசுக்கு மருத்துவமனை அமைக்க உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) மற்றும் (ஆ). எலவானாசூர் கோட்டையில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கக் கோரி அந்தக் கட்டிடம் கட்டுவதற்காகும் செலவில் மூன்றில் இரண்டு பங்கினை ஏற்றுக் கொள்வதாக உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்தது. ஆனால் ஒரு ஊராட்சி ஒன்றிய பகுதியில் இரண்டாவது கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அந்த ஊராட்சி ஒன்றியம் ஒரு ஏக்கர் நிலத்திற்கு குறையாமல் கொடுப்பதாகவும் மேலும் கட்டிடம் கட்டி முடிப்பது வரை கால்நடை மருத்துவமனை வைத்து நடத்துவதற்கு வாடகை இல்லாமல் ஒரு கட்டிடம் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் ஒத்துக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் ஒப்புக்கொண்டு தீர்மானம் இதுவரை பெறப்படவில்லை. அதனால் மேற்படி ஊரில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துவது குறித்து அரசிற்கு குறிப்புரை எதுவும் வரவில்லை.

திரு. வ. துலுக்காணம் : அந்த ஒன்றியம் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்காக அரசாங்கம் கேட்கிற நிலத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கிறது. ஆனால்

ஒன்றியத் தீர்மானத்தை மாற்றி நெருக்கடி நேரத்தில் ஒன்றியத் தலைவராக இருந்தவர் அவரது சொந்த ஊரில் அதை மாற்றியமைக்க வேண்டும் என்று எழுதி அனுப்பியுள்ளார். ஆகவே எலவானூர் கோட்டையில் இந்த கால்நடை மருத்துவமனையை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் ஒன்றியத்தின் மூலம் அரசாங்கம் கேட்கிற நிலத்தைக் கொடுக்கத்தயாராயிருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் எலவானூர் கோட்டையிலேயே அந்த கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : ஏற்கனவே பதில் அளித்திருக்கிறேன். அந்த இரண்டு தீர்மானங்களுக்கும் உரிய ஒரு குறிப்பு வருமானால் நிச்சயமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரையில் இப்படி செயற் குறிப்பு எதுவும் இந்த அரசின் கவனத்திற்கு வரவில்லை.

## விதவை மறுமணம்

*157 வினா :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) விதவைகளை மறுமணம் புரிந்து கொண்டவர்களுக்கு உதவிடும் திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை தம்பதிகள் உதவி பெற்றுள்ளனர் ?

(ஆ) உதவி கோரி எத்தனை விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) 136.

(ஆ) 1977-78ல் உதவிகோரி வந்துள்ள விண்ணப்பங்கள் 130.

திரு. என். கிட்டப்பா : விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கிற இந்தத் திட்டத்தின் அடிப்படையில் விதவைகளுக்கு அளிக்கப்படுகிற உதவிகள்பற்றி, நமது அரசு எந்தெந்த வகைகளில் உதவி புரிந்து வருகிறது என்பதை விரிவாக அறிவிக்க இயலுமா ?



மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : 3—6—1975-க்குப் பிறகு மறுமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு மட்டும் ரூ. 5,000 வீதம் ஏழாண்டு சேமிப்புப் பத்திரங்களாக தம்பதிகளின் பெயரால் வழங்கப்படும். இதற்கு 10.25 சத வீதம் என்றளவுக்கு கூட்டு வட்டி வரும். ஏழாவது ஆண்டு முடிவில் ரூ. 9,900 ஆக தம்பதிகளுக்குக் கிடைக்கும்.

திரு. கே. கந்தசாமி : ஆண்டிப்பட்டி தொகுதியில் விதவைகளை மறுமணம் செய்து கொண்ட மூன்று பேர்களுக்கு அவர்கள் பலமுறை கலெக்டர் அவர்களுக்கு மனு செய்தும் அவர்களது மனுக்கள் பரிசீலிக்கப்படாமல் இந்த நலம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, அவர்களுக்கு அது கிடைக்கும்படி உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, இதுபற்றி தகவல் வரவில்லை. அரசுக்கு இப்படிப்பட்ட தகவல் வருமானால் அது குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். உமாநாத் : தலைவர் அவர்களே, விதவைகளை மறுமணம் செய்து கொள்கின்ற விஷயத்தில் மணம் செய்து கொண்ட பின்னால் தான் இப்படிப்பட்ட அஸிஸ்டன்ட்ஸ் எல்லாம் கொடுக்கப்படுகிறது. நான் சொல்ல விரும்புவது, பல விதவைகளுக்கு மாப்பிள்ளை கிடைக்க மாட்டாத நிலைமைதான் இருக்கிறது It is a real social disability கனம் அமைச்சர் அவர்களும் இதை ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். விதவைகளை ரீமேரேஜ் செய்வதற்கு என்ன என்கரேஜ்மென்ட் கொடுக்கப்படும் ? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? இது பற்றி அரசு ஸீரியஸ் முயற்சிகள் எடுப்பார்களா ? பணம் மட்டும் கொடுப்பது போதாது, வேறு என்ன திட்டம் அரசினிடத்தில் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விதவை திருமணம் என்பது ஒரு முக்கியமான கொள்கையின் அடிப்படையின் மூலமாக சமுதாயத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் சமூக நீதியாக மாறிக் கொண்டு வருகிறது. எனவே, விதவைகளாகியிருப்பவர்கள் அத்தனை பேருக்கும் உதவி செய்யப்படுமா என்கிற கேள்விக்கு நான் சொல்ல விரும்புவது,

இப்படிப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் வசதியுள்ளவர்கள் எத்தனை பேர்கள் வசதியில்லாதவர்கள் என்கின்ற கணக்கை எடுத்து அதன் அடிப்படையில் உதவி செய்ய வேண்டும் என்கின்ற எண்ணத்தையும் மனதில் கொண்டு இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை மனதிற் கொண்டு செயல்பட வேண்டிய நேரத்தில், விதவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத்திற்கு வலு ஊட்ட வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்போது சில சலுகைகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மேலும் நமது நிலைக்கு ஏற்ப, இருக்கின்ற வசதிகளையும் பரிசீலித்து யார் யாருக்கு வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதையும் தெரிந்து, அதற்கு தக்கவாறு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த அரசின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, ஒரே ஜாதியில் விதவைத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கும் இந்த சலுகை அளிக்கப்படுகிறதா, அல்லது கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குத் தான் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: விதவைத் திருமணம் செய்து கொள்வது என்பதில், ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களா, ஒரே மதத்தைச் சார்ந்தவர்களா என்பது மட்டும் பிரச்னை அல்ல. எந்த மதத்தில் இப்படிப்பட்ட விதவைத் திருமண வழக்கம் இல்லையோ அவர்களிடையே இந்த பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது நல்ல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்க வேண்டிய அம்சமாகும். ஆனால் சிலரிடத்தில் மட்டும்தான் விதவைத் திருமணம் என்பது நடைபெறுகிறது. சிலர் மறுமணம் என்பதற்கு அறவே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகவே கணவனை இழந்தவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் முதலில் சொன்ன பதிலிலேயே அது இருக்கிறது.



## உரம், பூச்சி மருந்துகளின் விலைகள்.

*158 வினா—திரு. எஸ். கணேசன், மற்றும் திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) உரம், பூச்சி மருந்துகளின் விலையைக் குறைக்க வேண்டுமென மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) மற்றும் (ஆ): (1) உர சம்பந்தமாக மத்திய அரசு ஏற்பாடு செய்யும் மண்டல மாநாடுகளில் மற்ற மாநில அரசுகளும் தமிழ்நாடு அரசும் உர வகைகளின் விலையைக் குறைக்க கோரிக்கை எழுப்பி வந்துள்ளன. இதன் விளைவாக 18—7—1975 முதல் 12—10—1977 வரையுள்ள காலத்தில் 6 முறை விலைகள் மத்திய அரசினரால் குறைக்கப்பட்டுள்ளன.

(2) பூச்சி மருந்துகளின் விலையையும் குறைக்க, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது. அதன் பேரில் தொழில் உற்பத்தி செலவு, விலை இவற்றை ஆராய ஏற்படுத்தப்பட்ட ஆய்வுக் குழுவிடம் (Bureau of Industrial Costs and Prices) பூச்சி மருந்துகள் சிலவற்றிற்கான உற்பத்திச் செலவு, லாபம் இவற்றைப்பற்றி ஆராயும்படியும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது.

*159 வினா:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

விவசாயிகளுக்கு இலவசமாக பூச்சி மருந்துகளை வழங்க அரசு ஆலோசித்து வருகின்றதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவசாயிகளுக்கு இலவசமாக பூச்சி மருந்துகளை வழங்கும் திட்டம் தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆயினும்,

கீழ் பழனிமலையில் வாழைப்பயிரில் குலைநோய் உண்டாக்கும் பூச்சியினைத் தடுப்பதற்காக, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மட்டும் பாதிவிலையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் திட்டத்தின் கீழ் நெல் பயிரைத் தாக்கும்
புகையான் என்னும் பூச்சியைக் கட்டுப்படுத்த, பூச்சி மருந்து
மூன்றில் ஒரு பாக விலையில் அளிக்கப்படுகிறது. இந்நோயால்
தொடர்ந்து பாதிக்கப்பட்டுவரும் குறிப்பிட்ட பகுதிகளில்
மட்டும் (Endemic Areas) இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது.

*160 வினு :— திரு. மா. மணிமாறன், திரு. மு. மு. அ.
ரசாக் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

பூச்சி மருந்து வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்க
அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நிரந்
தரமான முறையில் பயிர் பாதுகாப்பு மருந்துகளை
மானிய விலையில் உழவர்களுக்கு வழங்க தற்போது அரசிடம்
செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆயினும் கீழ் பழனிமலையில்
வாழைப்பயிரில் குலை நோய் உண்டாக்கும் பூச்சியினைத்
தடுப்பதற்காக, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு
மட்டும் பாதிவிலையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் அளிக்கப்
பட்டு வருகிறது.

மத்திய அரசின் திட்டத்தின்கீழ், நெல் பயிரைத் தாக்கும்
புகையான் என்னும் பூச்சியைக் கட்டுப்படுத்த, பூச்சி
மருந்து மூன்றில் ஒரு பாக விலையில் அளிக்கப்படுகிறது.
இந்நோயால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவரும் குறிப்பிட்ட
பகுதிகளில் மட்டும் (Endemic Areas) இந்தச் சலுகை
அளிக்கப்படுகிறது.

முற்பகல 10–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யுடன் கேள்வி நேரத்தை இன்னும் சில நிமிட நேரம்
நீட்டிக்கின்றேன்.

திரு எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, ஏதோ ஒரு காலத்
தைக் குறிப்பிட்டு இரண்டு முறை உரத்தின் விலை மத்திய
அரசால் குறைக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள்.
இப்போது தஞ்சை மாவட்டத்து விவசாயப் பெருங்குடி
மக்கள் மிகவும் விரக்தி அடைந்துள்ளார்கள். குறுவை நெல்



மூட்டை 44 ரூபாய் விற்கக் கூடிய நிலைமையைப் பார்க்கின்ற
போது, வருகின்ற ஆண்டில் நெல் விளைவிப்பார்களா, என்ற
அச்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, பூச்சிமருந்து, உரங்கள்
ஆகியவற்றின் விலையை மேலும் குறைப்பதன் மூலமும்,
விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விபொருள்களுக்
குள்ள தகுந்த விலை கிடைப்பதற்கும் இந்த அரசு உடனடியாக
தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, பூச்சி மருந்து, உரங்கள் ஆகியவற்றின் விலையைக்
குறைக்கவேண்டுமென்று பல தடவைகளில் இந்த மாநில
அரசு மத்திய அரசுக்கு கடிதங்கள் மூலமும், மேலும்
மாநில மாநாடுகளில், ஜோனல் கான்பரன்சுகளில் இதைப்
பற்றி தமிழக அரசு அதிகாரிகள் எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். 18–7–1975, 1–12–1975, 16–3–1976,
20–4–1976, 8–2–1977, 12–10–1977 ஆகிய
தேதிகளில் ஆறு தடவை இப்படி விலையை மத்திய அரசு
குறைத்துள்ளது. மேலும் தற்போது இருக்கக்கூடிய
உரத்தின் விலை 100 ரூபாய்க்கும் குறைவாக உள்ளது. இந்த
பூச்சி மருந்து, உரம் ஆகியவற்றை சீரிய முறையிலே விநி
யோகிக்க வேண்டுமென்கிற முறையிலே, இவைகளைக்
கூட்டுறவு டெப்போக்கள் மூலமும், தனியார் நிறுவனங்கள்
மூலமும் வேண்டிய அளவு கொடுப்பதற்கும் இப்போது
ஏற்பாடு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு
வருகின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சிறு நிலச்
சொந்தக்காரர்கள் உரம், பூச்சி மருந்து ஆகிய
வற்றின் விலை ஏற்றத்தால் ஒருபுறம் பாதிக்கப்படுவதும்,
இன்னொரு புறம் அவர்களுடைய உற்பத்தி செய்யப்படு
கின்ற நெல்லுக்கு விலை மிகவும் குறைவாக விற்கப்படுகின்ற
ஒரு சூழ்நிலையும் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்
கணேசன் அவர்கள் குறிப்பிட்டது போலவே, அத்தகைய
நெல்லின் விலையை மாற்றியமைப்பதற்கு அல்லது சமனப்
படுத்துவதற்கு, குறிப்பாக இந்த உரம், பூச்சிமருந்து ஆகிய
வற்றின் விலையை மத்திய அரசு குறைக்க முன்வரா

விட்டாலும், நம் மாநில அரசு அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் ஊக்கத் தொகையோ அல்லது மான்யமாகவோ கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொரு பொருளின் விலையும் அதிகமாகிக் கொண்டு வருவதைப் பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிறது. விலையேற்றம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், விவசாயிகளின் விளை பொருள்களுக்கு தகுந்த விலை விற்கமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும் இந்த அரசாங்கம் எடுத்துச் சொல்லிவருகிறது. அப்படி விலையைக் குறைக்க வேண்டுமென்ற கடமை உணர்வு மத்திய அரசுக்கும் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசும் இந்த விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதாக, மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல், இந்த அரசு விவசாயிகளுடைய விளைபொருள்களுக்கு தகுந்த விலை கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து கொண்டும் வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு மா. மணிமாறன் : பூச்சிமருந்து, உரம் ஆகியவற்றின் விலையைக் குறைக்கின்ற வகையிலே, அதற்கு மானியம் வழங்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா? தவிர, வாழைக்கு அளிப்பதுபோல், பருத்தி, மிளகாய் ஆகிய பயிர்கள் சிறிய நிலங்களிலே பயிரிடுவதால், அதற்கும் இந்த அரசு மானியம் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஏற்பட்ட புயல் வெள்ளச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் பூச்சிமருந்துகளும், உரமும் 25 சதவிகிதம் மானிய விலையில் கொடுக்கும்படி அரசு உத்திரவிட்டுள்ளது. அதன்படி எல்லாக் கடைகளிலும், எல்லா இடங்களிலும் அப்படி பூச்சி மருந்துகளும் உரமும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நிரந்தரமான முறையில் பூச்சி மருந்துகளோ, உரமோ சகாய விலையில் அல்லது சப்சிடி விலையில் அல்லது மானியமாக கொடுப்பதற்கான திட்டம் இந்த அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. எம். எம். ஏ. ரசாக் : கீழக்கல்ராயன் மலையில் வாழைக்குப் பாதி விலையில் பூச்சி மருந்து கொடுப்பதுபோல் நெல்லை மாவட்டத்தில் தோட்டப் பயிர்களுக்குப் பா விலையில் பூச்சி மருந்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வாழைக்குக் கொடுப்பது ஹில் ஏரியா டெவலப்மெண்ட் ஸ்கீம்—மலைப் பகுதியில் செய்யக்கூடிய பயிர்களுக்கு அந்தத் திட்டத்தின் கீழ் 50 சதவிகிதம் மானியத்தின் பேரில் கொடுக்கப்பட்டு வருகிறது. கீழே உள்ள தோட்டப் பயிர்களுக்கு அப்படிப் பட்ட சலுகைகள் அளிக்கும் திட்டம் இந்த அரசிடம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : இந்தப் பூச்சி மருந்து விஷயத்தில் விநியோகம் செய்வதில், தெளிக்கும் முறையில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது பயங்கரமான ஊழல் நடந்ததாக பத்திரிகையின் வாயிலாக கேள்விப்பட்டோம். அதனுடைய முடிவு என்ன ? அந்த முடிவின் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா ? மீண்டும் அம்மாதிரி நடக்காதவாறு இந்த அரசு பார்த்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சர்க்காரியா கமிஷன் முன்னால் இருந்த பூச்சி மருந்து பேர ஊழலைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அதைப் பற்றி இங்கு விளக்கமான தகவலைக் கொடுப்பது சரியல்ல என்பதால் மறுக்கப்படுகிறது.

திருமதி சுப்புலட்சுமி : தலைவர் அவர்களே, பூச்சி மருந்து விற்பனையாளர்கள் தங்களுடைய லைசென்சைப் புதுப்பிக்கவோ, அல்லது புது லைசென்ஸ் பெறவோ செல்லும் பொழுது ஒரு குறிப்பிட்ட தொகைக்கு எக்ஸ்பைரி ஆன பூச்சி மருந்துகளையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அந்த மருந்தை எடுத்துக் கொண்டால்தான் புதிய மருந்தைக் கொடுக்க முடியும் என்று வற்புறுத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எந்தவிதமான வீரியம் இழந்த சப் ஸ்டாண்டர்டு மருந்துகளை எந்தக் கடைகளிலும் விற்கக்கூடாது என்பது அரசின் ஆணை. அதற்கு மாறாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்

போல் வீரியம் இழந்த சப் ஸ்டாண்டர்டு மருந்துகளை அல்லது உரங்கள் விற்கப்படுமாயின் அப்படிப்பட்ட குறைகளை அரசுக்கு எடுத்துக் கூறுவார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அப்படி வீரியம் இழந்திருக்கிறதா இல்லையா என்பதை பற்றி உடனடியாக ஆராய்ச்சி நிலையங்களின் மூலமாக ஆராய்ச்சி செய்து ரீ-வேலிடேட் செய்யப்படுகிறது. அப்படி ரீ-வேலிடேட் செய்த பிறகுதான் அந்தக் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : உரம் சம்பந்தமாக இரண்டு மூன்று தடவை விலை குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பூச்சி மருந்து சம்பந்தமாக விலை உயர்ந்து கொண்டே போகிறது ; குறைக்கப் படவில்லை. பூச்சி மருந்தைச் சரியாகப் பயன்படுத்தவில்லையென்றால் மகசூல் பாதிக்கப்படுகிறது. இப்போது 25 சதவிகிதம் மானியம் அளிப்பதாகவும் நிரந்தரமாக அப்படி அளிக்க அரசு விரும்பவில்லை என்றும் சொன்னார்கள். உடுமலைப்பேட்டை, அவருடைய தொகுதியான கணியூர் ஆகிய பகுதிகளில் வெற்றிலைக் கொடிக்கால்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து சென்ட், பத்து சென்ட் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே, சிறு விவசாயிகளுக்கு 2½ ஏக்கருக்குக் கீழே வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு மானிய விலையிலே பூச்சி மருந்துகள் குறைந்த விலையில் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களே இப்படி நீண்ட கேள்வி கேட்டால் எப்படி? சுருக்கமாகக் கேட்க வேண்டாமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பூச்சி மருந்துகளின் விலைகளைக் குறைக்கவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதற்குப் பின்னால் விலை ஆய்வுக் குழு— "Bureau of Industrial Cost and Prices" அவர்களிடம் இந்தப் பிரச்சினை விடப்பட்டிருக்கிறது. இதற்கு தீர்க்கமான திட்டவட்டமான முடிவை அவர்கள் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிலைக் கொடிக்கால் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். தனியாகக் கேள்வி போட்டால் விளக்கமான பதிலை சொல்லுகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



(முற்பகல் 10-10)

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் எளிதாகக் கிடைக்கிற காரணத்தால் ஆயிரக்கணக்கான தற்கொலைகளும் கண்டுபிடிக்க முடியாத கொலைகளும் ஏற்படுகின்றன. தமிழகத்தில் எல்லோருக்கும் கைகளில் கிடைக்காதவாறு கட்டுப்பாடுகளைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள், விவசாயிகளுக்கு மட்டும், அதுவும் அங்கே பயிர்களிலே உள்ள பூச்சிகளைக் கொல்வதற்காகத்தான் விற்கப்படுகின்றன. அதைத் தவறான முறையிலே பயன்படுத்தினால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்று அப்படிப்பட்ட விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். அப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படாமல் தடுக்க அரசு வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறது.

திரு ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, இந்த பூச்சிமருந்துகளும் உரமும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்போது விவசாயம் செய்வதற்கு முன்பு அவர்களிடமிருந்து அதற்கான பாதி விலையை வாங்கிக்கொண்டு, விவசாயம் முடிந்தவுடனே மற்ற பாதித் தொகையை வாங்குவது என்று அரசு முடிவு எடுத்தால் நல்லது என்று நாங்கள் கருதுகிறோம், ஆகவே, அப்படிப்பட்ட முடிவை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய யோசனையைத் தீவிரமாக ஆலோசனை செய்து பரிசீலிக்க வேண்டியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பூச்சிமருந்து, உரங்கள் வாங்குவதற்கு கடன் உதவிகளை வங்கிகள் செய்கின்றன. அப்படிச் செய்யும்போது அந்த வங்கிகள் சில குறிப்பிட்ட வியாபாரிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அந்தக் குறிப்பிட்ட வியாபாரிகளிடமிருந்துதான் அவைகளை வாங்கவேண்டுமென்று வற்புறுத்துகின்றார்களே அது அரசுக்குத் தெரியுமா? அப்படிச் செய்யக்கூடாது என்று அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு அப்படிப்பட்ட தகவல் கிடைத்திருக்குமானால் உடனடியாக அரசுக்குத் தெரிவித்தால் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு போ. கோபாலன்: தலைவர் அவர்களே, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பூச்சிமருந்துகள் சலுகை விலையில் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்று வரையில் எங்கள் பகுதியான உதகமண்டலத்தில் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் மலிவான விலையில் அவைகளை அதிகமாக பணக்காரர்கள் வாங்கி பெட்டிகளில் சேமித்து வைத்து பிறகு லாபத்திற்கு விற்கிறார்கள், இதனால் அங்கே தட்டுப்பாடு ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது, ஆகவே அப்படிச் செய்யாமல் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா!

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: பூச்சிமருந்தாகட்டும், உரமாகட்டும், விவசாயிகளுக்குத் தேவையான அளவில்தான் அவர்கள் வாங்கிக்கொள்ள வேண்டும். அப்படி யாராவது அதிகமாக வாங்கி லாபம் சம்பாதிக்கக்கூடிய முறையிலே வியாபாரிகள் நினைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. உச்சி: தலைவர் அவர்களே, பூச்சிகொல்லி மருந்துகள் அரசு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக விற்கப்படுகிற விலையை விட குறைந்த விலையில் சில தனியார் கடைகளில் விற்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா! இதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களுக்கு கமிஷன் கொடுக்கிறார்கள், அந்த அடிப்படையில் போட்டி மனப்பான்



மையை மனதில் வைத்துக்கொண்டு குறைந்த விலையில் சப்ஸ்டாண்டர்டு வெரைட்டிஸ், வீரியமிழந்த மருந்துகளை விற்கிறார்கள். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிற முறையில் அவைகளையெல்லாம் கண்டுபிடித்து உடனடியாக வழக்குகள் போடப்படுகின்றன. எங்காவது அப்படி இருக்குமானால் உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கொ.ப. நாச்சிமுத்து கவுண்டர்: தலைவர் அவர்களே, தனியார் கடைகளிலே உரம், யூரியா 2, 3 ரூபாய் அதிகமாக விற்கப்படுகின்றன, ஆகவே, அந்த அந்த யூனியன்களிலேயே அவைகளை நியாயமான விலைக்கு விற்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனைப்படிதான் தற்பொழுது நடைபெற்று வருகிறது. யூனியனைச் சேர்ந்த டெப்போக்களில் விற்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு. மு. அம்பிகாபதி அவர்கள்.

(2) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் அறிவிக்கை கொடுத்துள்ள சில
ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வது
குறித்து.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஏற்
கெனவே பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி
பற்றி அவசரத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்துப் பல
நாட்களாகி விட்டது. நேற்றே எடுக்க வேண்டிய தீர்
மானத்தை இன்றைக்காவது எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகம்கூடப் பேச
வில்லை, சுருக்கமாக ஓரிரு வார்த்தைகளில் முடித்துக்
கொள்கிறேன். பாளையங்கோட்டையில் இந்திய மருத்து
வக் கல்லூரி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அதற்கு முதலமைச்சர்
தயாராக இருக்கிறாரா என்று பார்க்க வேண்டும்.
அதைவிட்டு, ஒழுங்கு பிரச்னையைக் கிளப்பியவுடனேயே
பிரச்னைக்கே போய்விடுகிறீர்களே. நான் காலையில் முதல
மைச்சரவர்களை இது குறித்துக் கேட்டேன். 42-வது
விதியின்கீழ் இருக்கின்ற அவர் இலாக்காக்கள் சம்பந்
தப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அத்தனையை
யும் மறுநாள் எடுத்துக் கொள்கிறேன், நிச்சயம் செய்
கிறேன் என்று சொன்னார்கள். அதை நான் இங்கே
சொல்ல இருந்தேன், அதற்குள் நீங்கள் எழுப்பினீர்கள்.
அதோடு நீங்கள் நிறுத்தியிருந்தால் என்னுடைய பதிலைத்
தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் பிரச்னைக்குள்
போகின்றீர்கள். ஒழுங்குப் பிரச்னை என்ற பெயரில்
எழுப்பி, பிரச்னைக்கான பதிலை எதிர்பார்க்கிறீர்கள்.

திரு க. சுப்பு: நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்
என்று முதலமைச்சர் சொன்னால் சரி. ஒரு நாள் அதிகம்
போவதால் ஒன்றும் ஆகிவிடாது, பல நாள் மூடப்
பட்டிருக்கிறது, இந்த ஒரு நாள் தாமதத்தால் ஒன்றும்
ஆகிவிடப்போவதில்லை. (குறுக்கீடு) நாளைக்கு நோ கான்
பிடென்ஸ் மோஷன் வேறு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சனிக்கிழமையன்று
'நாளைக்கு' என்று சொன்னால் அது திங்கட்கிழமையைக்
குறிக்கும் என்பதைப் போல, இப்பொழுது நாளைக்கு
என்றால் என்றைக்குக் கேள்விகளும், ஒத்திவைப்புத் தீர்
மானங்களும் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவோ அன்
றைக்கு என்று பொருள்.



திரு க. சுப்பு: தலைவரவர்களே, அதில் நான் பேச
வேண்டும் என்றுகூட அவசியமில்லை. அங்கே ரொம்ப
நாட்களாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறக்க வேண்
டும் என்பதுதான் பிரச்னை. முதலமைச்சரவர்கள் இப்
பொழுதே பாளையங்கோட்டையில் திறக்கப்படும் என்று
சொல்லிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும். அவர்கள் ஒன்
றும் மன்னிப்புக் கடிதம் கொடுக்க வேண்டியதில்லை
என்று சொல்லிவிட்டால் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலை
வரவர்களையே ஏமாற்றி சாமர்த்தியமாகப் பதிலைப்பெறப்
பார்க்கிறீர்கள். எனக்குள்ள நிலைமை, விதிகளின்படி நீங்
கள் எழுப்பிய பிரச்னைக்கு நான் பதில் சொல்ல வேண்
டுமே தவிர அமைச்சரைக் கட்டாயப்படுத்திக் கேட்ப
தற்கு இல்லை.

திரு ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மதுராந்தகம்
சுகர் மில் சம்பந்தமாக விதி 42-ன்படி தீர்மானம் கொடுக்
கப்பட்டிருந்தது, அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்
படும் என்பதை அறிவிப்பீர்களா? அதோடு எஞ்சினி
யர்கள் விவகாரம் சம்பந்தமாக 41-இன்படி மோஷன்
கொடுக்கப்பட்டிருந்து, மாண்புமிகு அமைச்சரவர்கள்
அது சம்பந்தமாகப் பதில் கூறுவதாகச் சொல்லப்பட்டது.
இந்த இரண்டு தீர்மானங்களும் எப்பொழுது எடுக்கப்படும்
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எழுப்பிய
இரண்டையும் அமைச்சருக்கு நான் அனுப்பியிருக்கிறேன்.
எனக்குள்ள நிலைமை, இன்னும் அதற்குப் பதில் வராத
தால் வைக்கவில்லை. கேட்டதற்கு, முதலமைச்சர் அவர்
கள், திங்கட்கிழமை அத்தனையையும் முடித்து விடுகி
றேன். திங்கட்கிழமை வைத்து விடுங்கள் என்று சொல்லி
யிருக்கிறார்கள்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, திரு. அம்
பிகாபதி அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கொண்டு
வந்திருக்கின்ற அதே பிரச்னை குறித்து, கடலோர பிரச்னை
குறித்து, மீனவ சமுதாயத்தில் பல்வேறு பதட்ட நிலை
ஏற்பட்டுள்ளது குறித்து 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்தி

வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அவ்வாறு 42-லே கொடுத்த தீர்மானத்தை 41-ல் எடுப்பதாகச் சொல்லி பிறகு எடுத்துக் கொள்ள முடியாத நிலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே பிரச்சினை குறித்து இப்பொழுது கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுக்கப்படுகிறதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் 42-வது விதியின் கீழ் தந்தார்கள். அது எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று பதில் அனுப்பப்பட்டது. 41-வது விதியின்கீழ் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் எழுதித் தரவில்லை. ஆனால் அவர்கள் 41-வது விதியின்கீழ் நேரடியாகத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை எடுக்கப்படுகிறது. உறுப்பினரவர்களும் அப்படித் தந்திருப்பார்களேயானால் அதை அறையிலே பார்த்து பரிசீலித்துப் பதில் தரப்படும்.

திரு. ஆர். உமாநாத் : ஒரேயொரு ரிக்வெஸ்ட். நீங்கள் சொன்னீர்கள், சரி. புரொசிஜரை நன்றாகப் பார்த்து கையாளுகிறீர்கள். 42-வது விதியின் கீழ் வந்ததை 41-வது விதியின் கீழ் கன்வர்ட் செய்ய எழுதிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அவ்வாறு அவர்கள் மறுபடியும் எழுதிக் கொடுக்க டைம் இருந்திருக்காது. ஆகவே, நீங்களே அதை கன்வெர்ட் செய்து மாற்றிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட இடத்தைப்பற்றி குறிப்பிட்ட இடத்தில் நடந்த நிகழ்ச்சியைப்பற்றி 41-வது விதியின் கீழ் கேட்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக, பரவலாக உள்ள நிகழ்ச்சி பற்றி 42-வது விதியின்கீழ் கேட்டார்கள். ஆகவே, தள்ளப்பட்டதே தவிர வேறொன்றுமில்லை. எல்லாவற்றையும் 41-வது விதி அறிக்கையாக மாற்றுவது இல்லை. நல்ல பிரச்சினை, முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை, 42-வது விதிக்குப் பொருத்தம் என்றால் அனுமதிக்கிறேன். அல்லது 41-வது விதியிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் நல்ல கருத்துக்கள் வரும், மக்களுக்கு நல்ல தெளிவான விளக்கங்கள் வரும் என்று கருதினால் அவ்வாறு மாற்றுகிறேன். இப்பொழுது திரு. மு. அம்பிகாபதி அவர்களைக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.



(முற்பகல் 10-20)

## (3) கவன ஈர்ப்பு.

## நொச்சிக் குப்பத்தில் மீனவர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மயிலாப்பூர் அருகில் உள்ள நொச்சிக் குப்பத்தில் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ந் தேதி அன்று மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ந் தேதி அன்று பிற்பகல் நொச்சிக் குப்பத்திற்கு நேரே உள்ள கடற் பகுதியில் விசைப் படகொன்று மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பொழுது அக்குப்பத்தைச் சார்ந்த கட்டு மர மீனவர்கள் நான்கு கட்டு மரங்களில் அவ்விசைப்படகைக் கைப்பற்றும் நோக்குடன் வருவதை அறிந்த விசைப்படகு மீனவர்கள் ட்ரால் வலையில் இழுவைக் கம்பியை வெட்டிவிட்டு தப்பித்துச் சென்றுவிட்டனர். கட்டுமர மீனவர்கள் அவ்வலைகளை எடுத்துச் சென்றுவிட்டனர். விசைப்படகு மீனவர்கள் தங்கள் வலைகளைத் திரும்பப் பெற உள்ளூர் பஞ்சாயத்து, காவல் துறை மற்றும் மீனளத்துறையை அணுகினர். எனினும் நஷ்ட ஈடுபெற்று வலையை விசைப்படகாளர்களிடமே ஒப்படைப்பது குறித்து கட்டு மர மீனவர்களிடையே கருத்து வேற்றுமைகள் நிலவியதால் அவர்களிடையே கிளர்ச்சி ஏற்பட்டு காவல்துறையினர் வந்து தலையிடுமளவிற்கு கொந்தளிப்பானதொரு நிலைமை உண்டானது. காவல் துறையினர் தலையீட்டால் அப்பகுதியில் சகஜநிலை நிலவுகிறது.

பொதுவாக, மீன்பிடிப்பகுதியியைக் குறித்தே விசைப் படகாளர் கட்டுமர மீனவர்களிடையே சண்டை சச்சரவுகள் நிகழ்கின்றன. இந்த சண்டை சச்சரவுகள் சென்னை செங்கை கடலோர மாவட்டங்களில் மட்டுமல்லாது இம் மாநிலத்தின் எல்லா கடலோரப் பகுதிகளிலும் மற்றும் கடலோர மாநிலங்களிலும் அவ்வப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இரால் மீன் பிடிக்கும்

பருவத்தில் தான் அடிக்கடி சண்டைகள் நிகழ்கின்றன. கட்டுமர மீனவர்களின் நலங்காக்கும் பொருட்டு விசைப்படகுகள் கடற்கரையிலிருந்து மூன்று மைல்களுக்குட்பட்ட விடத்தில் மீன்பிடித் தொழில் செய்யக்கூடாது என்று விதி வகுக்கப்பட்டது. சண்டை நடக்குமிடத்திற்கு உடன் விரைந்து சென்று அமைதி நிலைநாட்டவும், நஷ்டஈடு முதலான உடனடி காரியங்களில் ஈடுபடவும் இருதரப்பு மீனவர்கள் பிரதிநிதிகளடங்கிய சென்னை செங்கைக் கடலோர சமாதானக் குழுக்களையும் மீனளத் துறை அமைத்திருக்கிறது. அண்மைக்காலமாக சென்னை செங்கை கடலோரப் பகுதிகளில் சேர்ந்தாற்போல் நிகழ்ந்த சண்டைகள் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட காவல் துறையினர் தலையிடுமளவிற்கு உக்கிரமான நிலையை அடைந்தது. அரசும் இவ்விருதரப்பு மீனவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டங்களைக் கூட்டி கலந்து பேசி இறுதியில் அமைதிக்கு வழிவகுக்கும் பொருட்டு இருதரப்பாரும் ஏற்றுக்கொள்ளும் ஒப்பந்தமும் கையெழுத்தாகியது. மேலும் எண்ணூரிலிருந்து கோவளம் வரை உள்ள கடற்கரை பகுதியில் மூன்று மைல் தொலைவினை மீனவர்களுக்கு அடையாளங்காட்டும் பொருட்டு மிதவை போயாக்களைத் தயாரித்து உரிய இடத்தில் வைக்கவும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மீனளத் துறையும் மிதவை போயாக்களை நிறுத்தி வைக்க உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இம்மாதிரி மோதல்கள் நிகழும் போதெல்லாம் அவைகளை அமைதியான முறையில் தீர்த்து வைக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுத்து நிலைமையைச் சீராக்கவும் வருவாய், காவல் மற்றும் மீனளத் துறையினர் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டு வருகின்றனர்.

*திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, இந்த விசைப்படகுக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்களுக்கும் தொடர்ந்து தகராறு நடந்து வருகிறது. பாக் ஜலசந்தியில் 3 மைல் தூரத்திற்கு இடையில் விசைப்படகுக்காரர்கள் மீன் பிடிக்கக்கூடாது என்ற விதியிருக்கிறது. அதை மீறி அங்கு நடந்திருப்பதால், மோதல் நிகழ்ந்துள்ளது. கோட்டைப்பட்டினம், மல்லிப்பட்டினம், ஜெகதா பட்டினம் பகுதிகளில் முன்பு மிகப் பெரிய மோதல் நடந்தது. அதன் விளைவாக ஏழை மீனவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டார்கள் அந்த நிலைமை இப்பொழுது மாறி இருக்கிறது.



இத்தகைய நிலைமை மாற, மீன் பிடிக்கக்கூடியவர்களில், விசைப்படகுக்காரர்கள், நாட்டுப் படகுக்காரர்கள் மோதலைத் தவிர்க்க சட்டப்படியான நடவடிக்கை வேண்டும். நாட்டுப் படகுக்காரர்கள் விரிக்கின்ற வலைகளையெல்லாம் மெக்கனைஸ்ட் போட்டை இயக்குகின்றவர்கள் அறுத்து, ஏழை மீனவர்கட்கு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வலைகளை, சாதாரண ஏழை, எளிய மீனவர்வர்கள் இழந்திருக்கிறார்கள். இதற்கான சட்டத்தைத் துரிதமாகவும் துல்லியமாகவும் அமைத்தால் கோட்டைப்பட்டினம், மல்லிப்பட்டினம், ஜெகதப் பட்டினம் நொச்சிக்குப்பம், நிலங்குப்பம் போன்ற பகுதிகளில் இம்மாதிரி இழப்புகளும் தகராறுகளும் ஏற்படாது என்பதை அரசாங்கம் கருத்தில் கொண்டு, சட்டத்தைக் கறாராக அமுல்படுத்தி, விசைப்படகுக்காரர்கள் பாக் ஜலசந்தியிலே 3 மைல்களுக்கு அப்பாலேதான் மீன்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்த வேண்டுமென்று அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கடலிலே மீன் பிடிக்கும் விசைப்படகுக்காரர்களுக்கும், கட்டுமர மீன் பிடித் தொழிலாளர்களுக்கும் வரும் தகராறுகளுக்குக் காரணமே விசைப்படகுகள் வழங்கும்போது குறிப்பிட்ட நிபந்தனைகளை அவர்கள் கடைபிடிக்கிறார்களா என்பதை இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் கண்காணிக்காமல் இருந்தது என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

இன்னொன்று, விசைப்படகுகளை வழங்குகின்ற நேரத்தில் உண்மையிலேயே கடலிலே சென்று மீன் பிடிக்கிற தொழிலாளர்களுக்குத்தான் விசைப்படகுகளைக் கொடுக்க வேண்டுமென்ற நிலைமையை முந்திய அரசு பின்பற்றாததால் வந்த விளைவு என்று இந்த அரசு கருதுகிறது. ஆகவே, அவற்றை எல்லாம் சீர்திருத்தி அமைக்கின்ற வகையில், இப்படிப்பட்ட தகராறுகள் இனிமேல் ஏற்படாத வகையில் விசைப்படகுகள் கடலில் சென்று மீன் பிடிக்கிற மீனவர்களுக்கு மாத்திரம் கொடுக்க வேண்டும் என்றும், அப்படிப் பெறுகிற விசைப்படகு சொந்தக்காரர்கள் கடலிலே 3 மைலுக்கு அப்பால் சென்று மீன் பிடிக்கிற தொழிலிலே ஈடுபட வேண்டும் என்றும் அதை வலியுறுத்துகின்ற வகையிலே புதியதொரு சட்டத்தைக் கொண்டு வர இந்த அரசாங்கம் வேண்டிய ஏற்

பாடுகளைச் செய்திருக்கிறது. விரைவிலே அந்த மசோதா அவையில் வைக்கப்பட இருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் இப்படிப்பட்ட தகராறுகள் வராது என்று கருதுகிறேன்.

திரு. க. சுப்பு : ஒரே ஒரு விளக்கம் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திலே இப்போது விவாதிக்கவில்லை. இது கவன ஈர்ப்புத் தீர்மானம். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் மட்டும்தான் கேள்வி கேட்கலாம். வேறு யாரும் பேச முடியாது. 41-வது விதியின்கீழ் யார் எழுப்பினார்களோ அவர்கள் மட்டுந்தான் கேள்வி கேட்கலாம். அமைச்சர் அவர்கள் விளக்கமாக சொல்லிவிட்டார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : அமைச்சர் அவர்கள் தவறான தகவல் தரலாமா ?

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் யார் கொடுத்தார்களோ அவர்களுக்குத்தான் சந்தர்ப்பம் கொடுக்கமுடியும். மற்றவர்கள் பேச முடியாது.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே ஒப்பந்தம் ஆகியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒப்பந்தம் என்பது இரண்டு தரப்பும் கையெழுத்துப் போட்டால்தான். ஒரு தரப்பு மட்டும் கையெழுத்துப் போட்டால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி தெளிவாக இருக்கிறது. சுப்பு அவர்கள் விதிகளையும், இந்தப் பேரவைத் தலைவரையும், அவையையும் ஏமாற்றி பிரச்னையின் உள்ளே நுழைந்துவிடலாம் என்று பார்க்கிறார்.

திரு. க. சுப்பு : நீங்கள் கேள்வி கேட்கலாம் என்று சொன்னீர்கள். ஆனால் அம்பிகாபதி அவர்கள் விளக்கம்தான் சொன்னார். கேள்வி கேட்கவில்லை. அது ஏமாற்றுவதாக அர்த்தம் இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினருக்கு. . . . . .

திரு. க. சுப்பு : அமைச்சருக்கும்தான் விதி இருக்கிறது. அவர் அக்கியூஸ் பண்ணுகிறார் முந்தைய அரசை. அதுபற்றி நாங்கள் கேள்வி கேட்கிறோம்.

திரு. ப. உ. சண்முகம் : தங்களிடத்திலே நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். யார் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்களோ அவர்தான் அந்த விளக்கத்தைப் பெற முடியும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் தங்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது, பிரச்சினையை எழுப்பாத மற்ற உறுப்பினர்கள், தன்னை எதுவும் கேட்க முடியாது என்ற அந்த உரிமையை அமைச்சர் பயன்படுத்திக் கொண்டு அவைக்குத் தவறான தகவலைத் தரலாம் என்று நினைக்கிறார்களே அதை மறுக்கக் கூடாது என்று தாங்கள் நினைக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான தகவல் என்று கனம் உறுப்பினர் கருதினால் உரிமைப் பிரச்சினையாக கொண்டு வாருங்கள்.

## 4. உரிமைப் பிரச்சினை.

(4) உணவு அமைச்சர்மீது அவர்கள் அளித்த விவர அறிக்கை குறித்து.

திரு. க. சுப்பு : ஒரு உரிமைப் பிரச்னை எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை இங்கே இப்போது எழுப்பாதீர்கள்.

திரு. க. சுப்பு : Arising out of what the Honourable Minister said now, I can raise a privilege issue under rule 184. தாங்கள் சொல்கிற அடிப்படையிலே ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தான் இதற்குச் சொல்லவேண்டும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலி
எழுப்பப்பட்ட பிரச்னையிலே தவருன கருத்து இங்கே
சொல்லப்பட்டிருந்தாலும், அதைப்பற்றி தொடர்ந்து
எழுப்ப வேண்டாம் என்றுதான் முன்னர் கேட்டுக் கொண்
டேன். அதைப் பற்றிய தவருன கருத்தைச் சொன்னு
அதை எழுப்பக் கூடாதா என்று திரு. ப. உ. ச. அவர்கள்
கேட்டார்கள். தாங்கள் அதுபற்றி உரிமைப் பிரச்னை
இருந்தால் எழுப்பலாம் என்று சொன்னீர்கள். இப்போது
சுப்பு அவர்கள் உரிமைப் பிரச்னையைத்தான் எழுப்பு
கிருர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னை
யை இருந்த இடத்திலேயிருந்து எடுத்த உடனே எழுப்பு
வதா? எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டாமா
அது உரிமை மீறலா இல்லையா என்பதைப் பார்க்க எனக்கு
சந்தர்ப்பம் கொடுக்க வேண்டாமா. அவர் எழுதி
கொடுக்கட்டும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான்
சொல்கிற பணிவான விளக்கம் இது. அவையில் நடை
பெறுகிற நிகழ்ச்சியில் திடீரென்று உரிமைப் பிரச்னை எழு
மாளுல் அதுபற்றி திடீரென்று எந்த உறுப்பினரும் எழுப்ப
லாம். அதை உடனே எழுப்பலாம். ஆளுல் எழுப்பிய
தற்குப் பின்ளுல் அவைத் தலைவர் இது பற்றிய தீர்ப்பை
பின்ளுல் நான் அறிவிக்கிறேன் என்று சொல்லலாமே தவிர,
உரிமைப் பிரச்னை எழுப்புவதை அனுமதிக்க மறுக்க
கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்ன சொல்
கிறேன் என்ருல் உரிமைப் பிரச்னை என்று சொல்லிவிட்டு
என்னிடத்திலே விட்டு விடுங்கள். நான் உரிமைப் பிரச்னை
இருக்கிறதா என்று தீர்ப்பு கூறுகிறேன். ஆளுல் அவர் அதற்
குள்ளே நுழைகிருர். அவர் உரிமைப் பிரச்னை எழுப்பு
கிருர். நான் அதைப் பார்த்துத்தான் சொல்ல முடியும்.

(முற்பகல் 10-30)

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் பணி
வோடு தெரிவித்துக் கொள்கிறேன். உரிமைப் பிரச்னை
எழுப்பலாம் என்ருல் நீங்கள் அந்த உரிமைப் பிரச்னையை
எடுதுகொண்டீர்கள் என்பது அல்ல. உரிமைப் பிரச்னைக்



எழுப்புவது என்பது, உரிமைப் பிரச்னை இருந்தால் சொல்ல
லாம் என்று சொன்னதற்குப் பிறகு, தாங்கள் அந்த உரிமைப்
பிரச்னை மறுபடியும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள
அடிப்படை இருக்கிறதா அல்லவா, அது உரிமைப் பிரச்னை
தாளு என்று தீர்ப்பளிக்க வேண்டும். ஆகவே இதில் நான்
உரிமைப் பிரச்னை எழுப்பி இருக்கிறேன் என்று அவர் சொல்
வதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள்
இதை உரிமைப் பிரச்னை என்று சொல்ல எனக்கு அனுமதி
அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மீனவர் பிரச்னை
யில் ஏதோ ஒப்பந்தம் ஏற்பட்டு இருப்பதாகச் சொன்ஞர்
கள். அது தவறு. இரு தரப்பினரும் கையெழுத்திட்டால்
தான் ஒப்பந்தம். ஒரு தரப்பார் கையெழுத்துப் போட்டால்
அது ஒப்பந்தம் ஆகாது. ஏதோ முந்தி இருந்த திராவிட
முன்னேற்ற கழக அரசு மீனவர்களுக்கு விசைப் படகுகளை
வழங்கவில்லை என்று கருதப்படுவதாகச் சொன்ஞர்கள். அது
மிகப் பெரிய குற்றச்சாட்டு. * * *

THE HON. THIRU, G. R. EDMUND: The honourable
Member has no locus standi to say that,

நான் அவர்களை அடிக்கலாம், உதைக்கலாம் என்று
சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கேட்டுக்
கொள்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னதால்
அனுமதித்தேன். அதற்கு மேல் நேரம் இல்லை. அவர்
எவ்வளவு நேரம் வேண்டுமாளுலும் பேசலாம் என்று இருக்
கிருர். அவர் சுருக்கமாகப் பேசுகிற நிலையில் இல்லை. . .

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் சுப்பு அவர்கள் இதை உரிமைப் பிரச்னை என்று
எழுப்பி இருக்கிருர்கள். இதிலே யோசித்துத் தீர்ப்பளிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவ ரவர்களே, என்னை மன்னிக்க வேண்டும். மாண்புமிகு சுப்பு அவர்கள் உரிமைப் பிரச்னை கிளப்புவதற்கு நான் குறுக்கிட வில்லை. ஆனால் அவர் சொன்ன சொற்களிலே இந்த அரசு *** இப்படி ஒரு நம்பிக்கையை வைத்து இருப்பதால்தான்.

திரு. மு. அரங்கநாதன் : திருவல்லிக்கேணியில் நடை பெற்று இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவரது கருத்து இந்த அவைக் குறிப்பில் இருக்கவேண்டுமா என்பதைப் பற்றி தயவு செய்து தாங்கள் முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒரு விளக்கத்தைச் சொல்வதற்கு, அவைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்களின் அனுமதியோடு, எனக்கு ஒரு வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அண்மையில் நீலாங் கரைக்குப்பத்தில்-சமீபத்தில் நடந்தது என்று கனம் உறுப் பினர் சொன்னதால் சொல்ல வேண்டியிருக்கிறது.—ஏறத் தாழ 70 மெகனைஸ்ட் போட்டைச் சேர்ந்தவர்கள் வந்து ஒரு பர்லாங்கு இரண்டு பர்லாங்கு வரையில் கரையோரப் பகுதி யில் வந்து மீன் பிடித்திருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகக் கட்டுமரத்தை நிறுத்தி அந்தச் சாதாரண மீன்பிடி தொழிலாளர்கள் அவர்களுடைய உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு வேறு வழியில்லாத நிலையில் தடுக்கப்படுகிற நிலைமைக்குள்ளாகி அவர்களோடு போராடுவதற்கு முனைந்துவிட்டார்கள். உடனேயே எனக்குத் தகவல் வந்தது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காகக் காவல் துறை பெரிய அதிகாரியை அங்கே அனுப்பினேன். அவர்களைத் தடுத்த போது, காவல் துறையினர் வந்துவிட் டார்கள் என்று தெரிந்த உடனேயே ஒருமைல் அப்பால் போய், போயா என்ற அடையாளங்கள் அங்கே அமைக்கப் பட்டு இருந்த இடத்திற்கும் மீறி வந்து ஏறத்தாழ 50 படகுகளை நாசமாக்கியிருக்கிறார்கள்? அந்த விசைப்படகுக் காரர்கள் அல்லது உரிமையாளர்கள் என்று அழைக்கப்படுகிற வர்கள் அதைச் செய்து இருக்கிறார்கள்.

ஆனால் குறைந்த இந்த ஒரு பர்லாங்கு, இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருக்கும்பொழுது போலீசாரால் கவனத்திற்குள் ஆக்கப்பட்டபோது வேண்டுமென்றே திட்டமிட்டு அந்தப்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





டயரை படகுகளுடைய எண்கள் இருக்கின்ற பகுதியிலே என்று போட்டு, எந்த எண்களுக்கு அது சொந்தமானது அவர்கள் காவல்துறையினர் தெரிந்துக் கொள்ளாத அளவுக்கு அவர்கள் அங்கே அவர்களுடைய காரியத்தை நடத்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தண்ணீரிலே இறங்கி, தண்ணீரிலே போய் அந்தப் படகுக்காரர்களை தடுப்பதற்கு உரிய வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தால் அதை வேறு ஒரு இலாக்காவிலிருந்து வாங்கி ஏற்பாடு செய்ய நேரம் இல்லை.

மறுநாள் அதைப் பின்பற்றுவது என்ற நிலைமைக்கு ஆளாக் கப்பட்டோம். அந்த வகையில் வேண்டுமென்றே தொலை தூரத்திலிருந்து வந்த அவர்கள் ஒப்புக்கொண்டதை அல்லது அவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பை எப்படியெல்லாம் சொந் தத்திற்கு பயன்படுத்துகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த் தால் ஆயிரக்கணக்கான அல்லது இன்னும் பல்லாயிரக்கணக் கான சாதாரண நாட்டுப் படகுகளில் சென்று மீன் பிடிக் கிறவர்களுக்கு மிகப் பெரிய ஆபத்தை உண்டாக்குகிறார்கள் என்பதை மிக வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அரசாங்கத்திற்கு விசைப்படகு வைத்திருப்பவர்கள் உண்மையான மீன் பிடிப்பவர்களாக இருந்தால் அவர்கள் அதற்காகவே அந்த உரிமையைப் பயன்படுத்தி இப்படி தொல்லைகளைச் செய்யலாம் என்று நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஆகவே எந்த வகையில் பார்த்தாலும் இந்த அரசு ஒரு தலை சார்பாக எந்தக் காரியத்திலும் ஈடுபடாது என்பதையும், இந்த விளக்கங்களுக்குப் பிறகு உரிமைப் பிரச்னையைப் பற்றி தலைவர் அவர்கள் தீர்ப்பு தரட்டும். நாங்கள் கட்டுப்படு கிறோம் என்று சொல்லி, இது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக நடந்த நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச் சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இதோடு விட்டு விடலாம்.

*திரு. ப. உ. சண்முகம் : முதல்வர் அவர்கள் குறிப் பிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கட்டு மரம் வைத்திருப்பவர்கள், மெகனைஸ்ட் போட் வைத்திருப் பவர்கள் ஆகிய எந்த ஒரு சாராருக்கு ஆதரவாகவும் வாதிட வில்லை. முதல்வர் கொண்டிருக்கிற அதே கருத்தைத்தான்

[திரு. ப. உ. சண்முகம்] [1978 சனவரி 3

நாங்களும் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இருக்கிற கருத்தெல்லாம் இருவருக்கும் சமரசம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அதைப் பற்றி தீர்ப்பு சொல்வதற்கு முன்னால் என்னுடைய நிலையைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னையைப்பற்றி நான் தீர்ப்பு தரவில்லை. ரூலிங் ரிசர்வ்ட். தயவு செய்து........

திரு. ஆர். உமாநாத்: நான் ஸ்டிரிக்டாக ஒழுங்காக இருந்து வந்தேன். ஆனால், அதைத் தாண்டி பேசுகிறார்கள். நான் அதிலே தலையிடவில்லை. அதே விஷயத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். ப.உ.ச. அவர்கள் இரண்டு பேருக்கும் சமரசம் செய்யவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். சமரசம் என்று சொன்னால் இரண்டு பேரும் தவறு செய்கிறார்கள் என்றுதான் அர்த்தம். முதலமைச்சர் சொன்னது தான் கரெக்டாக இருந்தது. என்னுடைய அனுபவமும் அது தான். ஆகவே, ஏழைகளுக்கு போலீஸ் பாதுகாப்பு கடலிலே கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு உங்கள் மூலமாக ஒரு தகவலைக் கொடுக்கிறேன். நாங்கள் காவல் துறையினருக்கு இதைப் போன்ற விசைப் படகுகளுக்கு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டோம். இனி இப்படிப்பட்ட சமயங்களில் நடவடிக்கைகள் எடுக்கும்பொழுது அவர்கள் அதைக் கவனித்துக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இரண்டு பேருக்கும் சமரசம் பண்ணி........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியும் நீங்கள் என்னைக் கேட்காமல் எழுந்து கொண்டு பேசினால் என்ன செய்வது? திரு. உமாநாத் அவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர். எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பேசிவிட்டார்.

திரு. க. சுப்பு : உமாநாத்துக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ.



1978 சனவரி 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிசினஸ் அட்வைசர் கமிட்டியிலே முடிவு செய்ததை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். நியாயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இப்படி மீறிப் பேசுகிறீர்கள். நான் ஒன்றும் சொல்லவில்லை. உமாநாத் இன்னொரு கட்சிக்காரர். அதை நீங்கள் கேட்பதற்கு நியாயமில்லை.

[முற்பகல் 10-40]

திரு. க. அன்பழகன் : திராவிட முன்னேற்றக் கழகம் பற்றி தவறானதொரு எண்ணம் வந்துவிடக்கூடாது என்ற காரணத்தால்தான் அவர்கள் எழுந்தார்கள். சமரசம் செய்ய வேண்டும் என்றால், தகராறு நடைபெறுகிறது, ஒருசிலர் தவறு செய்திருக்கலாம். ஆனால் இனி மேற்கொண்டு தகராறுகள் ஏற்படாதிருக்க வகை செய்ய வேண்டும் என்ற முறையில்தான் சொன்னார்கள். இரண்டு பேர்களையும் சமநிலையில், ஒரே நிலையில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் சொல்லவில்லை. எதிர்காலத்தில் தகராறு இல்லாமல் இருக்க வழி காணவேண்டும் என்றுதான் ப.உ.ச. அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அது முதல்வர் அவர்களுக்கு உடன்பாடான ஒன்றுதான் என்று அறிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொல்லிய விளக்கத்திற்குப் பிறகும் என் அனுமதி இல்லாமல் பேசுவது, நீங்கள் சொன்னால்கூட அமராமல் இருப்பது என்றால் என்ன செய்வது ?

*திரு. மு. அம்பிகாபதி: நீலாங்கரைக்குப்பத்தில் நடந்தது என்ன என்பதுபற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விளக்கமாகவும், தெளிவாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். உண்மை நிலை தெளிவாக இருக்கிறது. மீனவர்களைப் பொறுத்தவரையில் நாங்கள் சமரசத்தை. விரும்பவில்லை. எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும். நாங்கள் தாக்கப்பட்டவர்கள். ஏழை எளிய மீனவர்களுக்குப் பாதுகாப்பை இந்த அரசாங்கம் கொடுக்கவேண்டுமே தவிர விசைப் படகுக்காரர்களுக்கும் எங்களுக்கும் சமரசம் தேவை இல்லை என்பதைத் தெளிவாகச் சொல்கிறேன். தாக்கப்பட்டவர்கள் ஏழைகள் எளியவர்கள் நாட்டுப்படகுக்காரர்களே தவிர விசைப்படகுக்காரர்கள் அல்ல என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

(அ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இல்லாததால் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இத்தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR. Sir, I move:—

"That leave be granted for the introduction of the Tamil NaduCultivating Tenants (Protection from Eviction) Amendment Bill, 1976''

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.



(இ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(6) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977—78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடு, 1976—77 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை மதிப்பீடுஆகியவற்றின் மீதான விவாதம்.

*திரு. என். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவு ரூ. 179·80 கோடி என்றும், செலவு ரூ. 209·21 கோடி என்றும் பற்றுக்குறை ரூ. 29·41 கோடி என்றும் சொல்லிவிட்டு அதை எந்தளவிற்கு இந்த அரசு ஈடுகட்ட இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் எந்தவிதமான குறிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் தரப்படவில்லை. ஏழை விவசாய மக்களுக்கு அதிகமான சலுகைகள் இந்த அரசிலிருந்து கிடைக்கும் என்று சொல்லி மக்களுக்கு வாக்குறுதியளித்து வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள் அதன் அடிப்படையில் எந்தவிதமான சிறப்புச் சலுகைகளையும், அதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு அறிவிக்கவில்லையென்று நான் முதலில் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஏறக்குறைய 12 லட்சம் கிணறுகளில் 7·97 லட்சம் கிணறு

களுக்குத்தான் மின் இணைப்பு தரப்பட்டிருப்பதாகச் சொல்லப்
பட்டிருக்கிறது. 2·2 லட்சம் மின் இணைப்பு விண்ணப்பங்கள்
முடிவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். 1977–78-ல்
30,000 கிணறுகளுக்கு மின் இணைப்பு தரப்படும் என்று
சொல்லி இருக்கிறார்கள். அதற்கு நிலத்தடி நீர் சான்று
தேவையில்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக கிராமங்
களில் உள்ள விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் சான்று இருந்
தால்தான் மின் இணைப்பு தரப்படும் என்று சொல்லி பல
இடங்களில் பல பிரிவுகளின் கீழ் விவசாயிகள் மின் இணைப்பு
கிடைக்காமல் அல்லல்படுகிறார்கள்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.]

நிலத்தடி தண்ணீர் சம்பந்தமான சான்று தேவையில்லை
என்று அறிவித்திருப்பதன் காரணமாக இன்றைக்கு எந்தவித
மான புது விவசாயிகளும் பலன் அடையப் போவதில்லை.
குறிப்பாக சாங்ஷன் ஆனவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்
கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.
இதன் காரணமாக அதிகமான நிலம் வைத்திருக்கின்றவர்கள்
தான் பலன் பெறுவார்கள். 30 ஆயிரம் மின் இணைப்பு
கொடுப்பதாக இருக்கிறது. இதில் ஏழை மக்களுக்கு எவ்
வளவு இணைப்பு கொடுக்கப்படும் என்று குறிப்பாக சொல்லப்
படவில்லை. இதில் என்னுடைய கருத்து என்னவென்றால்
இரண்டரை ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு
இப்படிப்பட்ட ஏழை நிலச் சொந்தக்காரர்களுக்கு முதலிடம்
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சாங்ஷன்
ஆனவர்களுக்கு மட்டுமே மின் இணைப்பு கொடுக்கப்படும்
என்றிருப்பதில், குறிப்பாக சிறிய ஏழை விவசாயிகளுக்
கும் மின் இணைப்பு கொடுப்பதை ஒரு சிறப்பு சலுகை என்ற
அடிப்படையில் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

29·41 கோடி பற்றாக்குறை பட்ஜெட் தாக்கல் செய்திருக்
கின்ற இந்த நேரத்தில் மால்கோ நிறுவனத்திடமிருந்து 9½
கோடி ரூபாய் அளவுக்கு மின்சார வாரியத்திற்கு பாக்கி வர
வேண்டியிருக்கிறது. இதை வசூல் செய்வதற்கு என்ன நட
வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கு தெரிவிக்கப்
படவில்லை. மேலும் தொழிற்சாலைகளுக்கு நமது மின்சாரத்
தில் ஏறக்குறைய 46 சதவீதம் தரப்படுகிறது. இப்படிப்
பட்ட தொழிற்சாலைகளிடம் ஒரு காசு கூட்டியிருந்தால் கூட
அதிகமான வருமானம் வந்திருக்கும். அதற்கும் தயாராக
இல்லை என்று தெரிகிறது.





மால்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரை மூன்று காசு
[அ]ளவுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
[ம]ற்ற தொழிற்சாலைகளுக்கு 12 காசு என்று கட்டணம் விதிக்
கப்பட்டிருக்கிறது. ஏன் இந்த வித்தியாசம் இருக்கவேண்டும்?
மால்கோ நிறுவனத்திற்கும் 12 காசு என்று உயர்த்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு தொழி
[லா]ளர் நல அரசு என்று இருக்குமானால், இப்படி நாட்டு
[ம]க்களுடைய வரிப்பணம் வீணாக செலவு செய்யப்படாமல்
தொழிற்சாலைகளுக்கு எல்லாம் சிறப்பு நடவடிக்கையாக
எடுத்து கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒன்றை குறிப்பாக சொல்ல விரும்புகிறேன்.
கடந்த காலத்தில் தொழிலாளர்களின் போராட்ட காலத்தில்
200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சஸ்பெண்ட் செய்
யப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அந்தத் தொழிலாளர்கள்
எல்லாம் தங்களுடைய உரிமையைக் கேட்கின்ற நேரத்தில்
பண்டிகை முன்பணம் வேண்டும் என்று கேட்ட நேரத்தில்
200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சஸ்பெண்ட் செய்
யப்பட்டிருக்கிறார்கள். இதை இன்னும் கான்ஸல் செய்ய
வில்லை. இது மிகவும் வருந்துவதற்குரியது. ஆகவே, அரசு
உடனடியாக இதைப்பற்றி பரிசீலித்து அவர்களுடைய சஸ்
பென்ஷன் ஆர்டரை கான்ஸல் செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணூரில் ஜெனரல் சூப்பிரண்டன்ட் சப்தரிஷி என்று
ஒருவர் இருக்கிறார். அவர் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக அதா
வது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வை ஆதரிக்க வேண்டும்
என்ற நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்த தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்தவர்
களைப் பழிவாங்கிக்கொண்டிருக்கின்ற முறையில் தொழிலாளர்
களை பல்வேறு இடங்களுக்கு மாற்றிக்கொண்டிருக்கிறார். இப்
படிபலவிதமான தொல்லைகளை கொடுத்துக்கொண்டிருக்கிறார்.
அதே நேரத்தில் தன்னுடைய இடத்தைச் சேர்ந்தவர்கள் என்
றால் சலுகைகள் செய்து கொண்டிருக்கின்றார் என்ற குற்றச்
சாட்டுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்த
ஜெனரல் சூப்பிரண்டன்ட் சப்தரிஷியின் நடவடிக்கைகளை
தனியாக விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். இராமச்சந்திரன்] [1978 சனவரி 3]

எண்ணூரில் ஓ. அண்ட் எம்., கன்ஸ்ட்ரக்ஷன் என்ற மூன்று பிரிவுகள் இருக்கின்றன. இதிலுள்ள சாதாரண தொழிலாளர்களுக்கு, அதாவது ஹெல்பர், வயர்மேன் போன்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இல்லை. இவர்களுக்கும் அங்கே வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கன்ஸ்ட்ரக்ஷன், ஓ. அண்ட் எம். என்ற பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மின் இணைப்பு வேண்டும் என்று மனு செய்து கொள்ளும்போது அதிகாரிகள் சில நேரங்களில் கன்ஸ்ட்ரக்ஷனுக்குப்போனல் ஓ. அண்ட் எம்-க்கு போங்கள் என்று சொல்லுகிறார்கள். ஓ. அண்ட் எம்-க்குப் போனல் கன்ஸ்ட்ரக்ஷனுக்குப் போங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கஷ்டங்களைப் போக்க இரண்டு பிரிவுகளையும் ஒரே பிரிவாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, மின்சார உற்பத்தியைப் பொறுத்தளவில், நீர் மின்சாரத்தின் மூலமாகத்தான் அதிகச் செலவு இல்லாமல் மின்சாரத்தை பெற முடிகிறது. அந்த முறையில் மூன்று நான்கு திட்டங்களை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதில் நான் முக்கியமான ஒரு திட்டத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50]

காடாம்பாறை என்ற ஒரு விஷேசமான திட்டத்தைப் புதிதாக இந்த அரசு வந்த பிறகு, அதைச் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு அளித்திருக்கும் அறிக்கையிலும் இதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. காடாம்பாறைத் திட்டம், ஏற்கெனவே நம்முடைய மின்சார வாரியத்தின் தலைவராக இருந்த திரு. அப்பாதுரை அவர்களுடைய காலத்தில், இத்திட்டத்தினால் அதிகமான செலவு ஆகும், பொருளாதார ரீதியில் பயனில்லை என்று சொல்லப்பட்டு, ஏற்கெனவே கைவிடப்பட்ட திட்டமாகும். அந்த நேரத்திலே இருந்த உறுப்பினர்களாலும் அவ்வாறு சொல்லப்பட்டு, அத்திட்டத்தை அப்போது கைவிட்டார்கள். எனவே, அந்தத் திட்டத்தை இந்த அரசு இப்போது ஏற்பதற்கான காரணம் என்ன? அதற்கான திட்டம் ஏதாவது இப்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளதா? ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஏறக்குறைய ஒரு ரூபாய் [illegible]வாகிறது என்று அப்போது சொல்லப்பட்டது.



[திரு. என். இராமச்சந்திரன்] [1978 சனவரி 3]

நாமோ ஒரு யூனிட் 12, 18 பைசாவிற்கு விநியோகிக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். எனவே, இந்த மாதிரியான ஒரு திட்டத்தை இந்த அரசு ஏன் எடுத்துக் கொள்கிறது என்பதற்கான சரியான, தெளிவான விளக்கம் இந்த அறிக்கையிலே தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த மின்சார வாரியத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மின்சார வாரிய உறுப்பினர்கள் பெரும்பாலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாகத்தான் இருக்கிறார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், மின்சாரத் துறையிலேயே உள்ள பொறியாளர்கள் அதிகமாக இருந்தால் அதை நல்ல முறையிலே நடத்திச் செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, குறைந்தபட்சம் 50 விழுக்காடாவது அவர்கள் இருந்தால் நல்லது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், தொழிலாளர்கள் லைன் லாஸ் ஏற்படுகின்றது என்று சொல்கின்ற நேரத்தில் இந்த லைன் லாஸ் என்பது 18 சதவீதம் என்று சொல்கிறார்கள். மின்சார உற்பத்தியில் இதற்கு முக்கியக் காரணம் மின்சார வாரியத்தால் வாங்கப்படுகின்ற பொருள்களின் தரம் குறைவாகவும், மட்டரகமான பொருட்களை வாங்குவதுமே ஆகும். தரமான பொருட்களை வாங்குவது பற்றி இந்த அரசின் நடவடிக்கைக் குறிப்பிலே எந்தவிதமான குறிப்பும் இல்லை. பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இந்த குறிப்பிலே சொல்லியிருந்தாலும், இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினையைப் பற்றி எவ்விதமான குறிப்பும் இல்லை.

இந்த 18 சதவீத லைன் லாசை எப்படி ஈடுகட்டப் போகிறார்கள் என்று சொல்கின்ற நேரத்தில், சோதனைகளைச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிச் சோதனைகள் எல்லாம் முடிந்து விட்டது. கான்டாக்ட் சரியில்லை, கபாசிடி சரியில்லை என்று சொல்லப்படுகிறது. தெரு விளக்குகள் சரியான முறையிலே மின்சாரம் விநியோகிக்கப்பட்டு எரிவதில்லை. இதற்குச் சோக் சரியில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதற்கெல்லாம் டெண்டர் முறைதான் முக்கியமான காரணம். டெண்டர் வருகின்றபோது, லோயஸ்ட் கொடேஷன் என்று சொல்லி, தரமான பொருட்களை வாங்குவதில்லை. இதனாலேதான் இந்த 18 சதவீத லைன் லாஸ் எல்லாம் ஏற்படுகின்றது. எனவே, இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எஸ். முனிரத்தினம் : மாண்புமிகு சட்டப் பேரவை
துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையைப் பற்றி
ஓரிரு கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்
றையத் தினம் மக்களுக்கு வேண்டப்படும் மிகவும் அத்தி
யாவசியமானவைகளில் " மின்சாரம் " ஒன்று என்பது எல்
லோரும் அறிந்ததே. அப்படிப்பட்ட மின்சாரம் எல்லோ
ருக்கும் சீரான முறையிலும், உடனுக்குடனும், கிடைக்க
வழிவகைகள் காணவேண்டும் என்று நம் கழக அரசைப்
பணிந்து கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த சில ஆண்டுகளாகவே விவசாய பம்பு செட்டு
களுக்கு மின் இணைப்பு உடனுக்குடன் கிடைப்பதில்லை. அப்
படியே கிடைப்பதென்றாலும், அதில் பல சிக்கல்கள் ஏற்
படுகின்றன. உதாரணமாக, மின் இணைப்பு கோரும் டிரான்ஸ்
பார்மரில் சக்தி இல்லை என்றும், ரெகுலேஷன் வரவில்லை
என்றும், நில நீர் கோட்டத் துறையில் ஆட்சேபணை இல்லை
என்று சான்றிதழ் தரவேண்டுமென்றும், ஒரு பம்பு செட்
டிற்கும், மற்றொரு பம்பு செட்டிற்கும் இடையே 500 அடிகள்
வித்தியாசம் இருக்க வேண்டும் என்றும், கம்பம் இல்லை
என்றும், கம்பி இல்லை என்றும் சொல்லி பல காரணங்களால்
பல இடங்களில், பல வருடங்களாக பம்பு செட்டுகளுக்கு மின்
இணைப்பு தரப்படாமல் மனுக்களை கிடப்பில் போட்டுள்ளனர்.

என்னுடைய கும்முடிபூண்டி தொகுதியில் அடங்கிய கும்
முடிபூண்டி, கவரப்பேட்டை, மாதரப்பாக்கம், ஊத்துக்
கோட்டை, பெரியபாளையம், கன்னிப்புத்தூர் போன்ற பல
கிராமங்களில் டிபாசிட் கட்டி பலருக்கு 3, 4 வருடங்களாகி
யும் மின் இணைப்புத் தரப்படவில்லை.

மேலும் மின் இணைப்பிற்கு வேண்டிய பொருள்களும்
சரிவரவும் முழுமையாகவும் கொடுப்பது கிடையாது.
முன்னால் அரசு செய்யத் தவறிய இதுபோன்ற குறைகளைக்
களைய நம் கழக அரசு உடன் ஆவன செய்யக் கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும் கிராமங்களிடையே பெரும் பிரச்சினையாக
இருப்பது தெரு விளக்குப் பிரச்சினையாகும். பல
ஊர்களில் தெரு விளக்குகள் சீராக எரிவதில்லை.
அவற்றை சம்பந்தப்பட்ட மின்சாரத்துறை ஊழி
யர்களும் அவ்வப்போது பழுது பார்ப்பதும் கிடையாது.
சமீபத்தில் தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு
சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களிடத்தில்





இப்படைக்கப்பட்டுள்ளது. சில கிராமங்களில் தலைவர்கள் ஒழுங்கானவர்களாகவும், நல்லவர்களாகவும் இருந்தால், மின்வாரிய ஊழியர்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பது கிடையாது. சில இடங்களில் மின் ஊழியர்கள் பொறுப்புடன் செயல்பட்டால் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒத்துழைப்பது இல்லை. ஆகவே, இரு சாராரையும் கண்காணித்து தெரு விளக்குகள் முறையாகவும், ஒழுங்காகவும் பராமரிக்கப்பட அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு தனி அதிகாரியை நியமிக்க நம் கழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய கும்முடிப்பூண்டி தொகுதியில் அடங்கிய, பெரியபாளையம் உப கோட்டப்பகுதியை செங்கை மின் திட்டத்திலிருந்து சென்னை மின் திட்டத்தில் இணைக்க நம் கழக அரசையும், மாண்புமிகு மின் துறை அமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இப்பகுதிகளுக்கு மத்திய அலுவலகமும், தலைமைப் பண்டகசாலையும் 90 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள காஞ்சீபுரத்தில் உள்ளது. இதனால் அதிகப் பணச் செலவும், கால நேரமும் அதிகம் பிடிக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஒரு கிராமத்தில் உள்ள டிரான்ஸ்பார்மர் பழுதடைந்துவிட்டால், உடன் அதை மாற்ற காஞ்சிக்குச் செல்ல வேண்டும். இதற்கு 3, 4 நாட்கள், ஏன், சில நேரங்களில் ஒரு வார காலமும் பிடிக்கிறது. அதுவரை மின்சாரம் இல்லாமல் பொதுமக்கள் அவதியுறுகின்ற நிலைமை ஏற்படுகிறது.

இதுபோன்ற குறைகளை நீக்குவதற்கு இப் பகுதிகளை 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள போக்குவரத்து வசதிகள் அடிக்கடி தொடர்பு உள்ள சென்னை மின் திட்டத்துடன் இணைத்துவிடின் பொது மக்களுக்கும் மிகவும் வசதியாக இருக்கும். மின் இலாகாவிற்கும் செலவினமும் குறையும். கால நேரமும் கூடி வரும். எனவே, இவ்விணைப்புப் பணியைத் துரித முறையில் செய்து தர நம் கழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக, மின்சார வாரியத்திலே பல ஆண்டுகளாகவே லஞ்ச லாவண்யம் மலிந்து கிடக்கிறது. எதற்கெடுத்தாலும் லஞ்சம் என்ற நிலை இருந்து

வந்திருக்கிறது. மின் இணைப்புக்கு அளவு எடுக்கும் போதும் லஞ்சம், கம்பி இழுக்கும்போதும் லஞ்சம், கம்பம் நடும் போதும் லஞ்சம், இணைப்புக் கொடுக்கும்போதும் லஞ்சம், பழுதடைந்த மீட்டரை மாற்றும்போதும் லஞ்சம். இவ்விதம் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை லஞ்சம் கொடுத்தால்தான் பணி நடக்கும் என்ற நிலைமை இருந்து வந்திருக்கிறது. இதற்காக அந்த இலாகாவிலே ஏற்படுத்தப்பட்டுள்ள லஞ்ச ஒழிப்புத் துறையும் சரிவரக் கண்காணிப்பது கிடையாது. ஆகவே, நம் கழக அரசு இவ்வித நிலைமையை மாற்றி, அப்படி லஞ்சம் கோருபவர்களைக் கண்காணித்து, கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன்.

அதுமட்டுமல்லாமல், சமயபுர மின் நிலையத்தை விற்பதற்குக் காரணமானவர்கள் மீதும் அதில் ஊழல் புரிந்து மக்களின் பணத்திலே லட்சக் கணக்கில் லஞ்சம் பெற்றவர்கள் மீதும் தக்க முறையில் விசாரித்து மக்கள்முன் நிறுத்தி தகுந்த தண்டனை வழங்க இம் மாமன்றத்தின் மூலம் நம் கழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

அடுத்து, கோடை காலங்களில் கூட மின்சார வெட்டு வாரா வண்ணம், முன்னாள் அரசு திட்டத் தவறிய சிறந்த திட்டங்களின் மூலம் மேலும் அதிக மின்சார உற்பத்தியைப் பெருக்க வழிவகைகள் காணவும், நல்ல நிபுணர்களைக் கொண்டு திட்டங்களைச் செயல் வடிவமாக்கவும் ஆவன செய்ய நம் கழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சில நூறு பேர்களை வைத்துக் கொண்டு சில சங்கங்கள் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையுடன் விளையாடிக் கொண்டு, முன்னறிவிப்போ, தொழிற் சங்க முறையாகவோ இல்லாமல் எதற்கெடுத்தாலும் போராட்டம், வேலை நிறுத்தம் என்று செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம் கழக அரசைக் கேட்டுக் கொண்டு இந்த மின்வாரிய நிதிநிலை அறிக்கையை வரவேற்று முடிந்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.



[முற்பகல் 11-00]

*திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977–78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது, 1976–77 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மீதும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தைத் துவக்கியபோது ஒரு கருத்தை, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். மின்சார வாரியத்தை தமிழக அரசின் சொத்து என்று சொன்னார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் மின்சார வாரியம் ஒரு சொத்தாக இருக்கிறது என்பதில் நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடைகிறோம், பெருமைப்படுகிறோம்.

இந்த மின் உற்பத்தி என்ற சொத்தை எப்படி ஏற்படுத்தினார்கள், சுதந்திரம் பெறுவதற்கு முன்பு நிலைமை எப்படி இருந்தது, சுதந்திரம் வந்த பிறகு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எவ்வளவு மின் உற்பத்தி செய்யப்பட்டது, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே, 1969 முதல் 1974 வரையில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது என்பதைப்பற்றியெல்லாம் உள்ள புள்ளி விவரங்களையும் மின்துறையின் வரலாற்றையும் நாம் பார்த்தால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு மாபெரும் சாதனை ஏற்பட்டு இருக்கிறது என்பதை யாராக இருந்தாலும் மறுக்க முடியாது.

இந்த மின்சாரத் துறை 1927 ஆம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் 1947 ஆம் ஆண்டிலே சுதந்திரம் பெற்றோம். இந்த இடைப்பட்ட இருபது ஆண்டுக்காலத்தில், வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் 104 மெகாவாட் தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் பைக்காரா, மேட்டூர், பாபநாசம் இவைதான். இவை எல்லாம் புனல் மின் நிலையங்கள் தான். ஆனால், முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் வருவதற்கு முன்பாக, 1947 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரையிலே 52 மெகாவாட்தான் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பக் காலத்திலே 156 மெகா

வாட்டாக இருந்தது, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவு காலத்திலே 256 மெகாவாட் ஆக உற்பத்தி உயர்ந்திருக்கிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே உற்பத்தி செய்யப்பட்ட அளவையும் கால அளவையும், 1927 ஆம் ஆண்டிலிருந்து 1947 ஆம் ஆண்டு வரையிலே இருபது ஆண்டுகளிலே செய்யப்பட்ட உற்பத்தியின் அளவையும் கால அளவையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 4 மடங்கு அதிகமாக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது, இது காங்கிரஸ் ஆட்சியின் பெரிய சாதனையாக இருந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, 1956 ஆம் ஆண்டிலிருந்து 1961 ஆம் ஆண்டு வரையிலே 571 மெகாவாட் உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் இடையே அதிகரித்த உற்பத்தியின் அளவைப் பார்த்தோம் என்றால் 256 ஆக இருந்தது 571 ஆக அதிகமாகியிருக்கிறது. கிட்டத்தட்ட மின் உற்பத்தி 315 மெகாவாட் அளவிற்கு கூடுதலாக உயர்ந்திருக்கிறது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே காங்கிரஸ் ஆட்சி ஒரு மாபெரும் சாதனையைச் செய்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 1961 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையில் ஆகும். இந்தக் காலத்திலே உற்பத்தி செய்யப்பட்ட அளவு 1,370 மெகாவாட் ஆகும். கூடுதலாக 1,370 மைனஸ் 571 ஆக 799 மெகாவாட் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பெருந்தலைவர் காமராஜ் ஆட்சிக் காலத்திலே மின்சாரத் துறையிலே ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்பது இந்தத்துறையின் வரலாற்றையும் புள்ளி விவரத்தையும் காணுகிற போது நமக்குத் தெரிகிறது.

ஆனால் 1967 ஆம் ஆண்டு முதல் 1969 ஆம் ஆண்டு வரையில் திட்டம் ஒன்றும் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு நான்காவது திட்டம் 1969 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டுவரை



இருந்தது, அந்தக் காலத்திலே மின் உற்பத்தியைப் பார்த்தால், மூன்றாவது திட்டக் காலத்தில் செய்யப்பட்ட உற்பத்தியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மிகக் குறைவாக இருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே தமிழகம் இருந்தது என்பதை நாம் அறிவோம். இந்தச் சூழ்நிலையிலே கூடுதல் மின்சாரம் மூன்றாவது திட்டத்தின் மூலம் 799 மெகாவாட் ஆகவும், இரண்டாவது திட்டத்தின் மூலமாக 315 மெகாவாட் ஆகவும் கூடுதல் மின்சாரம் கிடைத்தது. ஆக 799 மைனஸ் 315, ஆக 484 மெகாவாட்தான் அதிகமாகியிருக்கிறது. மூன்றாவது திட்டத்தின் மூலமாக 484 மெகாவாட் கூடுதலாக வித்தியாசமான உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே நான்காவது திட்டத்திலே 825 மெகாவாட்தான் அதிகமாகியிருக்கிறது, 4-வது திட்டத்திற்கும் 3-வது திட்டத்திற்கும் வித்தியாசத்தைப் பார்க்கிறபோது கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருப்பது 825 மைனஸ் 799 ஆக 26 மெகாவாட்கள்தான் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே, இங்கே துவக்க உரையிலே சொன்ன நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் மின்சார வாரியத்தின் மின் உற்பத்தி தமிழக அரசின் சொத்தாக இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தச் சொத்தில் பெரும்பங்கை ஏற்படுத்தி உற்பத்தி செய்து காண்பித்தது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தான் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருக்கின்றது.

இன்னும் சொல்லப்போனால், 1969 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய மொத்த மின்சார உற்பத்தி 2,364 மெகாவாட். ஏழாண்டு ஆட்சிக் காலத்திலே, கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட மின் உற்பத்தியை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தோடு ஒப்பிட்டால், 2,364-இல் 1,370-ஐக் கழித்துவிட்டால் 994 மெகாவாட்தான் கிடைக்கிறது. இதிலேயிருந்து கூடுதல் வித்தியாசம் 195 மெகாவாட்தான் அதிகம் கிடைக்கிறது. அதாவது 994 மெகாவாட் மைனஸ் 799 மெகாவாட். ஆகவே, இந்தக் கோணத்திலேயிருந்து பார்த்தாலும் எந்தச் சூழ்நிலையிலே இருந்து பார்த்தாலும் மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், பெரிய சாதனையை, மாபெரும் சாதனையை புரட்சிகரமான சாதனையை ஏற்படுத்தியது காங்கிரஸ்

ஆட்சிக் காலத்திலே என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஆகவே, 484 மெகாவாட் கூடுதலாக மின்சாரம் உற்பத்தி செய்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இதைப் பெரிய சாதனை என்று பட்டியலாகப் போட்டுக் கொள்ளவில்லை. ஆனால் நான்காவது திட்டக்காலத்தில் 26 மெகாவாட் கூடுதலாக உற்பத்தி செய்த கழக ஆட்சியிலே பெரிய சாதனையாகப் போட்டுக் காண்பித்தார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளினுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில், இங்கே ஒரு குழு நியமிக்கப்பட்டிருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே நான் பார்க்கிறேன். இந்தக் குழுவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விஷயங்கள், concessional power tariff for agriculturists, என்று இருக்கின்றது. ஆகவே, குறைந்த கட்டண அளவு மின்சாரத்தைக் கொடுப்பது என்ற விஷயத்தை இந்தக் குழுவிலே வைத்திருக்கிறார்கள் பரிந்துரை வழங்க. ஆனால் ஒரு முக்கியமான விஷயம், "concessional power tariff for agriculturists" மட்டுமல்ல; "priority in supply of power to the pumpsets of agriculturists" என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, இப்பொழுதுள்ள பிரச்சினை குறைந்த கட்டணம் மட்டுமல்ல. இப்பொழுதுள்ள பிரச்சினை விவசாயிகளுக்கு அதிகமான மின்சாரம் தேவை. ஆகவே, அதையும் இந்த எம். ஜி. பாலசுப்பிரமணியம், மாநில திட்டக் குழு உதவித் தலைவர் அவர்கள் தலைமை தாங்கும் இந்தக் குழுவின் பரிசீலனைக்கு இந்த விஷயத்தையும், கருத்துக்களையும் எடுத்து வைக்கும்படி நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே, குறைந்த மின்சாரக் கட்டணத்தில் நிறைந்த மின்சாரம் வேண்டும்.

அது இந்த நாட்டுக்குத் தேவை என்பதைப் பொறுத்தவரையில் நமது மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அண்ணா அவர்கள் இராஜ்ய சபையிலே பேசிய ஒரு கருத்தை எடுத்து, அவர்கள் புத்தக வடிவிலே கொடுத்திருக்கிறார்கள். "Anna speaks in Rajya Sabha" என்ற அந்தப் புத்தகத்திலே ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதே கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன், இந்தக் குழுவைப் பொறுத்தவரையில் வலியுறுத்த விரும்புகிறேன்.



"I can point out that food production in Madras State per acre yield, whether it be rice, groundnut or jowar or maize, is the highest that is obtained. And yet we do not have perennial water. We depend on deep wells and that is why electricity is needed for our State in larger and larger quantities and at cheaper and cheaper rates."

ஆகவே, இங்கே அண்ணா அவர்கள் சொன்ன அந்த சீப்பர் அண்ட் சீப்பர் ரேட்ஸ் என்று குறைந்த கட்டணத்தில் ஒரு கன்செஷனல் ரேட்டாக இருக்க வேண்டுமென்று இந்தக் குழுவுக்கு ரெபரென்ஸ் இருக்கிறது.

"Larger and larger quantities at concessional rates to agriculturists".

என்று அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்கு இந்தக் குழுவிலே ரெபரென்ஸ் இல்லை. அதையும் ஒரு ரெபரென்ஸாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து முடியுங்கள்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: ஒரேயொரு நிமிஷம் கொடுங்கள். இந்த ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தங்களுக்கு ஒதுக்கிய நேரம் 5 நிமிடங்கள், நீங்கள் 10 நிமிடங்கள் பேசி விட்டீர்கள். இதோடு முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: I want to mention one important point. Only one minite please, I will finish.

இரண்டு கிணறுகளுக்கு இடையே எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்? 700 அடி 800 அடி இருக்க வேண்டுமென்று நிலவள வங்கி ஒரு விதிமுறையை வைத்திருக்கிறார்கள். 700 அடி, 800 அடிக்கு அப்பாலுள்ள கிணறுகளுக்கு விவசாயிகள் கடன் வாங்கி வெட்டுகிறார்கள். 700 அடி, 800 அடிக்கு அப்பாலுள்ள கிணறுகளை வெட்டும்பொழுது மின்சாரத் துறையிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், உங்கள்

கிணற்றுக்கு 700 அடி, 800 அடிக்கு அப்பால் வேறொரு கிணற்றிலே மின்சார இணைப்பு இருக்கிறது, 6 போல்கள், 7 போல்கள் அமைக்க வேண்டும், 10 பர்செண்ட் ரெவின்யூக்கு ஒர்க் அவுட் ஆகாது என்று சொல்கிறார்கள். நிலவள வங்கிகளின் விதிமுறைப்படி 800 அடி, 700 அடிக்குத் தள்ளித் தோண்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

[முற்பகல் 11–10]

மின்சாரத் துறையை நாம் பார்த்தோமானால், 700, 800 அடிக்குத் தள்ளி இருப்பதாலே, பக்கத்திலே வேறு ஒரு கிணறுக்கு மின்சாரவைப்பு இல்லாமல் இருந்தால், அங்கே கனெக்ஷன் கொடுக்க முடியாத நிலைமையிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, நிலவள வங்கியினுடைய விதிமுறைகளுக்கும் மின்சாரத் துறையினுடைய விதிமுறைகளுக்கும் முரண்பாடாக இருக்கிறது என்பதையும் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோருக்கும் 5 நிமிடம்தான். ஆனால், உங்களுக்கு 10 நிமிடம் கொடுத்தாகிவிட்டது. முடித்து விடுங்கள்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : கடைசியாக நான் ஒரு கருத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எத்தனை தடவை கடைசியாகச் சொல்வீர்கள் ?

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி அமர்கிறேன்.

எண்ணூர் அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, இப்பொழுது 45'69 சதவீதம்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. எவ்வளவோ இயந்திரங்களை ரிப்பேர் செய்தும், 45.69 சதவீதம் தான் கிடைத்திருக்கிறது. இந்த உற்பத்தி 80 சதவீதம் என்றிருந்தால், நமக்கு மேலும் 1,400 மில்லியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, உற்பத்தி சதவீதத்தை உயர்த்தினால், நம்மிடம் தேங்கியுள்ள





2 இலட்சம் பம்ப் செட் கனெக்ஷன்களுக்குத் தேவைப்படும் 350 மில்லியன் யூனிட்டையும் இதிலிருந்து நாம் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையிலே இருப்போம். ஆகவே, இப்பொழுது இருக்கிற அனல் மின் நிலையங்கள் பழுதுபடாத நிலையிலே பார்த்துக்கொள்ளவும், அதிக அளவு மின்சாரம் உற்பத்தி செய்யவும் இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி.

திரு. அ. க. அரங்கநாதன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977–78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியம் பல்வேறுபட்ட சிக்கன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பல்வேறுபட்ட வீண் விரயங்களும், செலவினங்களும் இருப்பதாலும், பல்வேறுபட்ட பகுதியிலே சிக்கன நடவடிக்கைகள் இல்லாததன் காரணமாகவும், பல கோடி ரூபாய்கள் வீணடிக்கப்படுகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக, மின்சாரம் வழங்குவதிலும், அல்லது மின்சாரத்தை உபயோகிக்கின்ற இடத்திலும், அல்லது மின்சார லைன்களிலேயும் வீணாகின்ற மின்சாரத்தைச் சரி செய்யவேண்டும், சரி செய்யத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்வேறு இடங்களில் மின்சாரம் வீணாகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

சென்னை நகரத்தில் மட்டும், பல மாளிகைக் கட்டிடங்களுக்கும், ரெவின்யூ கட்டிடங்களுக்கும் மின்சார வாரியத்தால், வாடகை மிக அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. மின்சார அலுவலகங்கள் நடைபெறுவதற்காக ரூபாய் 1 இலட்சம் வாடகையாகக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 1 கோடியே 3 இலட்சம் அல்லது 4 இலட்சம் ரூபாய் வரை வாடகை மூலமாக மட்டும் நமக்கு வருகிற வருவாயிலிருந்து கொடுக்கப்படுகிறது. ஆகவே, உடனடியாக, வெகு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, வாடகைக் கொடுப்பதை நிறுத்திவிட்டு, மின்சார வாரியத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல், ஏறக்குறைய 94,000 இன்றைக்கு மின்சார வாரியத்திலே பேர்கள் வேலை செய்கிற பேர்கள் வேலை செய்கிறார்கள். 94,000 கள் கிடைக்கின்றனவா வாரியத்திலே தேவையான பொருள் னிக்கல் லைன்களில், என்றால் இல்லை. குறிப்பாக, டெக் தெரு விளக்குகளுக்குத் அல்லது பம்ப் செட்களுக்கு, அல்லது கிடைப்பது கிடையாது. தேவையான பொருள்கள் அங்கே நாம் நியமித்திருக்கிறோம். ஏ.இ.—க்களையும், ஜே.இ.—க்களையும் யாக வேலை வாங்குகிற ஆனால், அவர்களிடம் முறை திட்டங்கள் ஒன்றும் அளவுக்கு மின்சார வாரியத்திலே ஏ.இ., ஜே.இ. போய், கிடையாது. சென்ட்ரல் ஸ்டோரில், ஸ்டாக் இல்லையென்று யூ கிளாம்ப் இருக்கிறதாவென்றால், யென்றால், ஸ்டாக் சொல்கிறார்கள். பல்ப் இருக்கிறதா இருக்கிறதாவென்றால், இல்லையென்கிறார்கள். அல்லது பி.டைப் சென்ட்ரல் ஸ்டாக் இல்லையென்று சொல்கிறார்கள். வைத்துக்கொண்டு, ஸ்டோரிலே தேவையான பொருள்களை ஸ்டாக் வழங்குவதில்லை. மாநிலம் முழுவதற்கும் பொருள்களை முறையில் விளக்குகளை அதனாலே, பல இடங்களிலே, சரியான ஆகவே, சென்ட்ரல் எரிக்க முடியாத நிலைமையிருக்கிறது. பேர்களுக்குமேல் வேலை ஸ்டோர் போன்ற இடங்களில், 94 பொருள்களை தேக்கி செய்கிற இடங்களில் ஏராளமான கின்ற அளவுக்கு வைத்து கேட்கின்றபோது கொடுக் வாங்கவேண்டுமென்று மின்சார வாரியத்திலே பொருள்களை கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திலே கணக்குப் போடும் இயந்திரங் களைப் புகுத்துகின்ற திட்டம் கடந்த அவசர நிலை காலத்தின் போது அமுலாக்கப்பட்டது. அதாவது, கம்ப்யூட்டரைக் கொண்டு வந்தார்கள். அதன்மூலம் மின்சார வாரியத்திற் குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அன்றைக்கு தொழிற் சங்கத் தலைவர்களை அணுகி எப்படி செயல்படுத்தலாம் என்று ஆலோசனைக் கேட்டிருந்தால் ஏறத்தாழ 5, 6 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்காது. டி. வி. தாமஸ் என்ற கம்பெனியில் இந்த கணக்கிடும் இயந்திரத்திற்கு ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய்க்கு மேல் அட்வான்ஸ் கொடுத் திருக்கிறார்கள். இயந்திரம் வாங்குவதற்காக ரூபாய் 3 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால், அது அமலாக்கப் பட்டதா என்றால், அமலாக்கப்படவில்லை. காரணம், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆட்சேபனை செய்ததன் விளை வாக அதை நிறுத்தி விட்டார்கள். ஆகவே, இதை எல்லாம் முன்யோசனையோடு அதிகாரிகள் தக்க தலைவர்களைக் கலந்து



ஆலோசித்து முறையாகப் பயன்படுத்தி இருந்தால் 5 லட்சம் ரூபாய்கள் வீணாகி இருக்க முடியாது. அதன் மூலம் பணம் விரயமாகி இருக்காது.

அடுத்தபடியாக, இன்றைக்கு பஞ்சாயத்துக்கள், பேரூ ராட்சி நகரசபைகளில் எரிகின்ற தெரு விளக்குகளுக்குக் கட்டணம் செலுத்துகிறது. ஆனால், இன்றைக்கு ஏன் தக ராறு ஏற்படுகிறது என்று சொன்னால், பஞ்சாயத்து பேரூராட்சி, நகரசபைகளில் எல்லாம் மீட்டர் பொறுத்தப் பட்டு அதன் மூலமாக ஒரு முறையாக அமுல்படுத்தவேண்டு மென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்படி மீட்டர் கொடுத்து நகராட்சிகள், பஞ்சாயத்துகள், பேரூ ராட்சிகள் ஆகியவை தாங்களே மெயின்டெயின் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற வகையில், எல்லா விளக்குகளிலும் பல்புகளைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால், அப்படி வழங்கப்படவில்லை. இன்றைக்கு ஏன் இதைக் கூறுகிறேன் என்று சொன்னால், பல இடங்களில், பல கிராமங்களில் லைட்டுகள் எரியவில்லை. மின்சார வாரியத்தின் அதிகாரிகளைக் கேட்டால் நாங்கள் மீட்டர் போட்டுவிடுகிறோம், நீங்கள் பல்பு போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். வெறும் வாய்ச் சண்டையாகவே இருக்கிறதே தவிர, முறையாக பயன்படவில்லை.

வேலூர் நகரசபையைப் பொறுத்தவரையில் மீட்டர் போட்டுத் தருகிறோம். ஆனால், பல்புகள் போட முடியாது என்று சொல்லுகிறார்கள். நகரசபை என்ன சொல்கிறது என்று சொன்னால் எல்லா விளக்குகளையும் எரிய வைத்துத் தாருங்கள் நாங்கள் மெயின்டைன் செய்து கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், மின்சார வாரியம் நாங்கள் இப்போது எப்படி இருக்கிறதோ அப்படியேதான் கொடுப் போம் என்று சொல்கிறார்கள். தமிழ்நாடு பூராவும் இந்தத் தகராறுகள் இருக்கின்றன. ஆகவே, பஞ்சாயத்து, பேரூ ராட்சி நகரசபைகள் ஆகியவைகளில் இருக்கிற எல்லா லைட்டுகளையும் எரியவைத்து, மீட்டரையும் பொருத்தி, பஞ்சாயத்து பேரூராட்சி நகரசபைகளுக்கு ஒப்படைக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு சாதாரணமாக பணம் கட்ட வில்லை என்று சொன்னால், விவசாயிகளுடைய பம்ப் செட்டு களை எடுத்துவிடுகிறார்கள். அது விவசாயக் கடனாக இருந்

[திரு. அ. க. அரங்கநாதன்] [1978 சனவரி 3

தாலும் சரி, அல்லது பூச்சி மருந்துக்கு வாங்கிய கடனுக இருந்தாலும் சரி, பம்ப் செட்டுகளைத்தான் எடுக்கிறார்கள். அவன் பயிருக்குத் தண்ணீர் போகாமல், விவசாயம் பண்ண முடியாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. உதாரணமாக, போளூர் இந்திராவனம் கிராமத்தில் முனிசாமி கவுண்டர் அவர்கள் பூச்சி மருந்துக்கு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக அவருடைய பம்ப் செட்டை எடுத்துச் சென்று விட்டார்கள். இன்றைக்கு 1½ ஆண்டு காலமாக அதைத் திருப்பித் தரவில்லை. அதனால் அவருடைய நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன.

[முற்பகல் 11–20]

ஆகவே, அந்த பம்ப் செட்டுகளைப் பறிமுதல் செய்வதை தயவுசெய்து நிறுத்தி விட்டு, வேறு பொருள்களை ஏதாவது பறிமுதல் செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக, 1972–75–76–லே ஏறக்குறைய 52 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கினார்கள். ஆனால், இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 94 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு மின்சார வாரியத்திற்குப் போதுமான வசதி இல்லாது இருக்கிறது என்ற குறை இருந்தாலும், அங்கே நடைபெறும் வீண் விரயங்களைத் தடுத்து, சிக்கனத்தை மேற்கொண்டால் மின்சார வாரியத்தின் மிக நல்ல முன்னேற்றம் அடையலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு குறிப்பாக இந்த அரசு 5,000 பம்ப் செட்டுகளை கொடுப்பதாக அறிவித்து இருக்கிறது. இன்னும் பம்ப் செட் வேண்டி 5 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கேட்டு இருக்கிறார்கள் என்று அறிகிறேன். ஏறக்குறைய 2 லட்சம் பேர் மனுப் போட்டு இருக்கிறார்கள். ஆகவே, 1 லட்சம் பேருக்காவது மின் இணைப்புத் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு விவசாயிகளைப் பொறுத்தவரையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகள் முன்னேறினால் கிராமங்கள் முன்னேறும். ஆகவே, அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு நல்கிய தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1978 சனவரி 3]

***திரு. சி. கோவிந்தராசன்** : பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, நேற்றைய தினம் மார்க்கிச கம்யூனிஸ்ட் கட்சி யின் சார்பாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர் கள் மின்சார வாரியத்தில் நிதிநிலை குறித்தும், அது செயல் படும் நிலைமை குறித்தும் பேசினார்கள். இன்றைய தினம் மின்சார வாரியத்தின் தொழில் உறவுக் கொள்கை பற்றி ஒரு சில வார்த்தைகளை நான் கூறலாம் என்று கருதுகிறேன்.

இந்த மின்சார வாரியத்தில் 94,000 பேர் பணியாற்று கிறார்கள். இது சாதாரணமானது அல்ல. மின்சார, வாரியம் இன்றைக்கு இந்தியாவில் நிறுவனத்திறனில், இரண்டாவதாகவும், உபயோகிப்பதில் மூன்றாவது இடத் தையும் பெற்று இருக்கிறது. இதற்கு, பணியாற்றும் ஊழியர்களும் அதிகம் கடமைப்பட்டிருக்கிறார்கள் என் பதை நாம் உணரவேண்டும். இப்படிப்பட்ட பெரிய லேபர் போர்சிடம் மின்சார வாரியம் கடைபிடிக்கும் கொள்கை என்ன ? வாரிய அதிகாரிகள் சொல்கிறார்கள், பல்வேறு தொழிற்சங்கங்கள் இருப்பதாலும், அவர்களிடையே போட்டியிருப்பதாலும்தான் காரியங்கள் கெடுகின்றன என்று நேற்றுகூட இங்கே சில உறுப்பினர்கள் மேற்கூறிய கருத்தைக் கூறினார்கள். இன்றைக்குக்கூட அப்படிப்பட்ட கருத்தை சிலர் தெரிவித்தார்கள்.

ஒரு சங்கத்தை பிரதிநிதியாக்குவதற்கு அதற்குப் பின்னால் எவ்வளவு தொழிலாளர்கள் சேர்க்கப்படவேண்டும் என்று சொல்லப்படவேண்டும். இந்தவாரியத்தின் இரண்டு சங்கங்கள் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. 1968-ல் செய்யப்பட்டது. இன்றைக்கு 9 ஆண்டுகள் ஆனபிறகும், 10 ஆண்டுகள் ஆன பிறகும், அந்தச் சங்கங் களுக்குப் பின்னால் தொழிலாளர்கள் இருக்கிறார்களா என் பதைப் பார்க்கவேண்டும். ஆனால் அங்கே இருக்கும் கொள்கை என்னவென்றால், எந்தப் பிரச்னை மீதும் பேசுவது என்றால் அதற்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடுதான் பேசுவது என்று முறை இருக்கிறது. ஆனால் நமது மாநிலத் தில் மற்ற இடங்களில் கடைப்பிடிக்கும் நிலைமைஎன்ன என்பதைப் பார்க்கிறபோது, ஒரு 10 பேர் ஒரு சங்கத்தில் இருந்தால் கூட அதோடு பேசுவது, ஒப்பந்தத்தில் கையெ ழுத்துப் போடுவது என்ற நிலைமை இருக்கிறது. நெய்வேலி நிறுவனத்தில் அப்படிப்பட்ட நிலைமை உண்டு. இந்தத் துறையில் அது கடைப்பிடிக்கப்படாததால், பல பிரச்னைகள் பல சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன. அவர்களுக்கு

வேண்டிய சங்கம், வேண்டாத சங்கம் என்று நிலைமை எடுத் துக்கொண்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அங்கே தொழிலாளர்கள் பிரச்னையில் தீர்வு காண்பது கடினமாகிறது.

தொழிற்சங்கத்தை அங்கீகாரம் செய்ய 'கோட் ஆப் டிசிப்லின்' முறை இருந்தாலும், அது எப்படி செய்யப் படுகிறது என்றால், இந்துஸ்தான் போட்டோ பிலிம்சில் அது ரகசிய ஓட்டெடுப்பு முறையில் செய்யப்பட்டது. 'பாரத் ஹெவி எலக்டிரிகலில் அந்த முறை பின்பற்றப்பட்டது. அது மட்டுமல்ல, ஒரு 10 சதவீத உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாக இருந்தாலும், அந்த நிறுவனம் அந்தச் சங்கத் தோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை இந்த நிறுவனத்தில் கடைப்பிடிக்காமல் இருந்த காரணத்தால் அண்மையில் ஒரு மிகப் பெரிய வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அது பல்வேறு விதமான மனக்கசப்பையும் ஏற்படுத்திய நிலைமை ஏற்பட்டது. அதற்கான காரணங்கள் என்ன என்பதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்பு கிறேன்.

தீபாவளி அட்வான்சைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிறுவனத்தில் எந்த பண்டிகைக் கும் யாரும் முன்பணம் வாங்கலாம் என்று சொன்னார்கள். உண்மைதான். ஆனால், பண்டிகைக்கு பணம் பெறக் கூடிய அந்த ஊழியர்கள் பெற்ற பணத்தை திருப்பிக் கொடுத்து விட்ட பிறகுதான் வேறு ஒரு முன்பணம் பெறவேண்டு மென்று இருக்கிறது. இப்படி பல்வேறு பண்டிகைகளுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு பெருவாரியான மக்கள் கொண் டாடும் பண்டிகையான தீபாவளிக்கு முன்பணம் கொடுக்கா மல் இருப்பதற்கு ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட சங்கம் அதை ஏற்றுக்கொண்டு தேவையில்லை என்று சொன்ன காரணத்தால்தான் இது மறுக்கப்பட்டது. இதைக் குறித்து இதர சங்கங்களோடு பேசுவதற்கு மின்சார வாரியம் முன் வரவில்லை. அதை அடிப்படையாக வைத்துத்தான் எண்ணூரிலே, பேசின் பிரிட்ஜிலே வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டார்கள்.

அது சரியானதுதானா, நியாயமானதுதானா என்பதைப் பார்க்காமல், குறிப்பாக நானும், சி.ஐ.டி.யு.-வைச் சேர்ந்த வி. பி. சிந்தனும் மின்சார வாரியத் தலைவரை சந்திக்க



முயற்சி செய்தோம். ஆனால், அவர் மறுக்கவில்லை. வேறு இடத்திலே இருக்கிறார் என்றும், அங்கே சென்று சந்திக்கலாம் என்றும் கூறினார்கள். அங்கே சென்றால் அங்கேயும் இல்லை என்று தகவல் வந்து கொண்டே இருந்தது. 18-ம் தேதி வேலை நிறுத்தம் ஆரம்பித்தது. மாண்புமிகு அமைச்சர் அவர் களை சந்திப்பதற்கு நாங்கள் விடா முயற்சி செய்தோம். அவ ருடைய இல்லத்திற்கு போன் செய்தோம். அவர்கள் ஏதோ விவாதத்தில் இருக்கிறார். அரை மணி நேரம் பொறுத்து உங்களுக்கு போன் செய்வார் என்று தகவல் கிடைத்தது. பிறகு, விடாமல் நான் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதற்கு அமைச்சர் கோட்டைக்குச் சென்றுவிட்டார். அங்கு போய்ப் பார்க்கலாம் என்றார்கள். கோட்டைக்குச் சென்றால் வேறு எங்கோ அதிகாரிகளோடு பேசுகிறார் என்றார்கள். இவ்வாறு அவரை சந்திக்க முயற்சித்தது வீணா கிற்று.

ஆனால், சரியோ, தப்போ இப்படி ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அதை உடனடியாக முடித்து வைப்பதற் காக தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேசுவதற்குக்கூட அமைச்சர் அவர்கள் முன்வரவில்லை. இப்படி அசிரத்தையாக இருந்தது மிகவும் வேதனைக்குரியது என்பதை இந்த சமயத் தில் குறிப்பிட விரும்புகிறேன். அதன் விளைவால் இந்த தொழிலாளர்களை பழி வாங்கினார்கள். இங்கு வேலை நிறுத் தத்திற்கு அரசியல் உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. ஏனென்று சொன்னால் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு செயல் படக் கூடிய ஒரு நிலைமையை நீண்ட நாட்களாக நம்முடைய நாட்டிலே பார்க்கிறோம். அதிலே அரசியல் உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. அதை அடிப்படையாக வைத்துத்தான் பல தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டார்கள். கிட்டத் தட்ட 14,000 பேர்களுக்கு மேல் சார்ஜ் ஷீட் கொடுக்கப் பட்டிருக்கிறது. 3,000 பேர்கள் கைது செய்யப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு ஆதரவாக எண்ணூரில் இருக்கக் கூடிய என்ஜினியர்கள் அவர்களுடைய அசோஷியேஷன் மூலமாக வேலை நிறுத்தம் செய்யவில்லை. இவர்களுடைய இந்த கோரிக்கை நியாயம் என்று அவர்களு டைய மாரல் சப்போர்ட்டை—தார்மீக ஆதரவைத்தான்— கொடுத்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றுதான் நிர்வாகத்திற்கு கடிதம் கொடுத்தார்கள்.

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 சனவரி 3

அந்த சங்கத்தினுடைய தலைவர் சிங்காரா பவர் ஸ்டேஷனுக்கு மாற்றப்பட்டார். துணைத் தலைவர் பெங்களூருக்கு அருகில் உள்ள தேன்கனிக்கோட்டாவுக்கு மாற்றப்பட்டார். இணைச் செயலாளர் கலசபாக்கத்திற்கு மாற்றப்பட்டார் செயலாளர் திருவண்ணாமலைக்கு மாற்றப்பட்டார். அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை. ஆனால் அந்த என்ஜினியர்கள் தொலை தூரத்திற்கு கல்வி ஆண்டு மத்தியிலே மாற்றப்பட்டு இருக்கிறார்கள். 74 பேர் மீது நடவடிக்கை.

தூத்துக்குடி சம்பந்தப்பட்ட வரையில் 500 பேர்களுக்கு மேல் தொலை தூர இடங்களுக்கு மாற்றப்பட்டு இருக்கிறார்கள். தூத்துக்குடியில் ஏற்கெனவே 23—5—1977 அன்று அங்கேயுள்ள சூப்ரெண்டெண்டிங் என்ஜினியர் எவ்வளவு ஆட்கள் தேவை என்று பரிந்துரை வழங்கும்படி, புரபோசல் கொடுக்கும்படி, எக்சிகியூடிவ் என்ஜினியருக்கு எழுதியிருக்கிறார்கள். எக்சிகியூடிவ் என்ஜினியர் ஜூன் மாதம் 1-ம் தேதி அங்கே உள்ள ஐந்து எலக்ட்ரிக் டிவிஷன்களுக்கு 1,455 பேர்கள் தேவை என்று எழுதியிருக்கிறார்கள். தீபாவளி அட்வான்ஸ் கோரிக்கைக்குப் பிறகு அங்கேயிருந்து 500 பேர்களுக்கு மேல்—1,500 பேர்கள் தேவை என்று அவர்கள் சொல்லியும் 500 பேர்கள் சர்ப்ளஸ் என்று சொல்லி மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது பழி வாங்கும் நடவடிக்கையே தவிர வேறு ஒன்றுமில்லை. மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் தொழிற்சங்க உரிமை அங்கே கிட்டத்தட்ட பறிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் வேதனையுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1974-ல் அரை மணி நேரம் வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமை கிடையாது என்று சொன்னார்கள். அரை நாள் சம்பளம் பிடித்தார்கள்.

இது லேபர் கோர்ட்டுக்குச் சென்று சட்டவிரோதமானது என்று சொல்லியும் எந்தவிதமான மாற்றமும் இன்று வரை ஏற்படவில்லை. 1975 நவம்பரில் தொழிலைப் பாதிக்காமல் ஒரு சிலர் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களிடம் ஒரு நாள் சம்பளம் பிடித்ததோடு மட்டுமின்றி ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இந்த ஆண்டு ஆகஸ்ட் 17-ந் தேதி அமைதியான முறையில் தார்ணா நடத்தப்பட்டது. அலுவலகத்தின் வெளியில் காசுவல் லீவ் போட்டுவிட்டு வெளியில் உட்கார்ந்து கோஷங்கள் முழங்கிக் கொண்டிருந்தார்கள். தார்ணா என்றாலே அமைதியான முறை



1978 சனவரி 3] [திரு. சி. கோவிந்தராசன்]

யில் நடப்பதாகும். அவர்களிடம் ஒரு நாள் சம்பளம் பிடித்த தோடு மட்டுமல்லாமல் மூவாயிரம் பேர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதே ஆகஸ்ட் 13, 14-ம் தேதிகளில் தேசிய தபால் தந்தி ஊழியர்கள் தார்ணா ஒன்று நாடு முழுவதும் மத்திய அரசு அலுவலகங்கள் முன்னால் நடைபெற்றது. அவர்கள் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் இன்றுவரையில் கிடையாது. அவர்கள் எடுக்கப்போவதுமில்லை.

தமிழக அரசு ஊழியர்கள் இந்த அக்டோபர் 22-ந் தேதி உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆர்பாட்டம் செய்தார்கள். அதேமாதிரி தார்ணா கடைப்பிடித்தார்கள். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது.

இப்போதுகூட டிப்ளமா ஹோல்டேர்ஸ், இளம் பொறியாளர்கள், உண்ணாவிரதம் இருந்து, மொட்டை அடித்துக் கொண்டு உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்தப் பிரச்னை எப்படித் தீர்க்கப்பட்டது என்பதை இந்த அவை உறுப்பினர்கள் அறிவர். அப்படியிருந்தும் இந்த மின்சார வாரியத்தில் மட்டும் தார்ணா என்று சொன்னால்கூட சம்பளம் பிடிப்பது மட்டுமல்ல, எவ்வளவு பேர்கள் கலந்துகொண்டார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதில் மட்டும் தொழிற்சங்க உரிமை பரிபூர்ணமாக பறிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

ஆனால், அவர்கள் ஆண்டுதோறும் அறிக்கையில் கூறுகிறார்கள், அங்கீகாரம் பெற்ற, அங்கீகாரம் பெறாத சங்கங்களின் குறைகளைக் கேட்டு அது பற்றி விவாதித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று ஆண்டுதோறும் தவறாமல் இதைக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். 1973-74 1974-75, 1975-76 அறிக்கைகளை படித்துப் பாருங்கள். அங்கீகாரம் பெறாத சங்கங்களோடு இப்பிரச்னை குறித்து விவாதித்தார்களா ? அப்படி விவாதிக்கப்படாமல் விவாதிக்கப்பட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று ரொட்டீனாக இப்படிப் போட வேண்டியதன் அவசியம் என்ன, அது தேவை இல்லை.

அங்கு விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. 1974-75 மட்டும் 376 விபத்துக்கள் ஏற்பட்டன. 213 பேர்கள் மரணம் அடைந்தார்கள். 1975-76ல் 364 விபத்துக்கள் ஏற்பட்டு மரணம் அடைந்தவர்கள் 170 பேர்கள். 194 பேர்களுக்கு கைகால் போன விபத்துக்கள். ஒரு வாரத்திற்கு முன்பாக எண்ணூரில் ஒருவர் மரணமடைந்திருக்கிறார்.

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 சனவரி 3

இந்த விபத்துக்களைத் தடுப்பதற்காக ஒரு குழு, மகாலிங்கம் குழு என்று ஒரு குழு போடப்பட்டது. அந்தக் குழு சில ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறது. ஆனால், அவை நடைமுறைக்கு வரவில்லை. காரணம், பாதுகாப்பு சாதனங்கள் கிடையாது.

இரண்டாவதாக, அன்-ஸ்கில்ட் தொழிலாளர்கள் ஸ்கில்ட் தொழிலாளர்களின் வேலைகளை செய்யக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்கிறார்கள் வற்புறுத்தி. அதனால் அத்துறையில் பழக்கப்படாத தொழிலாளர்கள் பல காரியங்களைச் செய்வதுதான் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம். விபத்துக்கள் அதிகமாகி வருகின்றன.

கீழ்பெண்ணாத்தூரில் ஒரு சம்பவம் நடந்தது, ஒரு மாதத்திற்கு முன்பாக பெண்ணாத்தூரில் மின் இணைப்பு பாக்கிக்காக, விவசாயிகள் மின்சார பாக்கி கொடுக்காத காரணத்தால் மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டும் என்று சொல்லி அங்கு பணியாளர்களை அனுப்பினார்கள். நடந்தது என்ன? அவர்களுக்கு பாதுகாப்பாக காவலர்கள் அனுப்பப்பட்டார்கள். கிராம மக்கள் அத்தனை பேர்களும் ஒன்று சேர்ந்தார்கள். பியூஸ் காரியரை எடுத்துவிட்டுவந்த அந்தப் பணியாளர்கள் அத்தனை பேர்களையும் விரட்டி, போலீஸ்காரர்கள் உட்பட, அதைத் திருப்பிப் போட்டால் தான் உங்களை வெளியே விடுவோம் என்று மிரட்டி அவர்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அதைச் செய்துவிட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

மால்கோ கம்பெனி ஐ.டி.பி.ஐ.-க்கு பத்து கோடி பாக்கி இருப்பது பற்றி நான் கவலைப்படவில்லை. மின்சார வாரியத்திற்கு மால்கோ, ஒன்பதரை கோடி ரூபாய் பாக்கி கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பாக்கியைக் கொடுப்பதற்கு மின்சார வாரியத் தலைவர் அவர்கள் வேண்டுகோள்தான் விடுவார். ஆனால் ஒரு சாதாரண விவசாயி ஒன்பதரை பைசா பாக்கி என்று சொன்னால் மின் இணைப்பு துண்டிக்கப்படும். இந்தக் கொள்கை சரிதானா? துண்டிக்கப்படும். திரும்பி வைக்கப்பட முடியாது. இன்று இந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒன்பதரை கோடி ரூபாய் பாக்கி உள்ளவர்கள் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்குகிறார்கள். என்பதை—



1978 ஜனவரி 3] [திரு. சி. கோவிந்தராசன்]

மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—உறுப்பினர்கள் தெரிந்து மின்சாரவாரியத்திற்கும் தெரியும்—உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

விபத்துக்களை, எதிர்பாராத விதத்தில் நடைபெறும் மரணத்தைத் தடுக்கவேண்டும். அதே நேரத்தில் புதிதாக கம்ப்யூட்டர்களை கொண்டுவந்து புகுத்துவதற்கு முயற்சி எடுக்கிறார்கள். 1974-ல் என்று நினைக்கிறேன், இப்படிப்பட்ட கம்ப்யூட்டர்களை கொண்டு வரக்கூடாது என்று ஒரு தீர்மானத்தை இந்தச் சபையிலேயே எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருந்தேன். அதன் மீது நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றது. கம்ப்யூட்டர் கொண்டுவரப்பட மாட்டாது என்று அரசின் தரப்பிலிருந்து உறுதி அளித்ததின் பேரில், தீர்மானத்தை வற்புறுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அப்போது, முன்னாள் முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் கோயம்புத்தூரில் கம்ப்யூட்டர் சம்பந்தமாக பேசிய பேச்சுக்களை எல்லாம் எடுத்துச் சுட்டிக் காட்டினேன். பின்னால் இந்த முறையை அனுமதிக்க மாட்டோம் என்று வாக்குறுதி தரப்பட்டது. தீர்மானம் வற்புறுத்தப்படவில்லை. அப்போது தந்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் வற்புறுத்தப்படவில்லை.

ஆனால் இப்போது அந்த கம்ப்யூட்டர் முறை கொண்டு வருகின்ற முயற்சி மின்சார வாரியத்தில் நடைபெறுகிறது. எட்டு லட்சம் பத்து லட்சம் ரூபாய் செலவு செய்து ப்ராட்மா என்கிற மெஷினை வாங்க ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இது வந்து சேரும். இதை வைத்துக்கொண்டு தொழிலாளர்கள் மிக சர்ப்ளஸ்-ஸாக இருக்கிறார்கள் என்று சொல்லி விடுவார்கள். இப்போது மின்வாரியத்தின் தலைவராக இருக்கின்றவர் எங்களிடமும் பேசுவார்கள், தொழிலாளர்களிடத்திலும் பேசுவார்கள். இவர்கள் ஏற்கெனவே போர்ட் டிரஸ்ட் தலைவராக இருந்த போது இப்படித்தான் ஆட்குறைப்பு செய்தார்கள். அவரைத்தான் இப்போது இங்கு தலைவராக போட்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கும் அந்த வேலையைச் செய்வதற்கு துடிதுடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலேயே அவர் குறியாக இருக்கிறார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைக் குறித்து அரசு தீவிரமாக கவனம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 சனவரி 3

விவசாயத்தைப் பொறுத்தவரையில் இரண்டரை ஏக்கர்களுக்குக் குறைவாக இருந்தால் 14½ காசு தான் மின் கட்டணம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதை அனுபவ பூர்வமாக பெற முடியாத நிலைமை தான் இருக்கிறது. பெண்ணாத்தூரில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரண்டரை ஏக்கர் தான் இருக்கிறது என்று சான்றுகள் வாங்க வேண்டும். தாசில்தார், கணக்குப்பிள்ளை, கர்ணம் இவர்கள் தான் எழுதிக் கொடுக்கவேண்டும். இதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கும் என்பதை நீங்களே அறிவீர்கள். இப்படி அவர்கள் எழுதிக் கொடுத்ததை வாங்கிக் கொண்டு வந்து காட்டினால் தான் 14½ பைசா கட்டணம் கட்ட முடியுமே தவிர வேறு யாரும் இந்தப் பலனை அனுபவிக்க முடியாது. ஆகவே, இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியம் இந்த ஆண்டு அரசுக்கு வட்டியாக மட்டும் 14 கோடி ரூபாய் கொடுக்கிறது. 14.33 லட்சம் என்று கருதுகிறேன். மின்சார வாரியம் என்பது அரசாங்கத்தினுடைய சொத்து என்று சொல்லப்படுகிறது: அதே நேரத்தில் கொடுக்கப்பட்ட 181 கோடி ரூபாய் கடனுக்கு 14 கோடி ரூபாய் வட்டியாக எடுத்துக்கொள்கிறது. இது என்ன நாம் வட்டிக் கடையா நடத்துகிறோம்? இதுபற்றி முன்பே சொல்லியிருக்கிறோம். அதாவது கொடுத்திருக்கின்ற கடனை—அதற்கு சரியாக 'ஈக்வட்டி காப்பிட்டலாக' மாற்றிவிடலாம். வேண்டுமென்றால் ரிட்டர்னை எடுத்துக் கொள்ளலாம். அதல்லாமல் 14 கோடி எடுத்துக் கொள்வது சரியல்ல, இதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்தடி நீர் சம்பந்தமாக ஏற்கெனவே இந்த விவாதத்தில் பேசப்பட்டது, நிலத்தடி நீர் எல்லாம் வற்றிப் போய் விட்டது மேலும், மின் இணைப்பு கொடுக்கின்ற அதிகாரம் ஒரே அமைப்பின்கீழ் இருப்பது நல்லது. தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையிலும் விவசாயத்திற்கு பெருமளவு மின் இணைப்பு கொடுக்கவேண்டும். மின் இணைப்பின் காரணமாக அபிவிருத்தி ஏற்படுகின்ற அளவில் மேலும் 50 ஆயிரம் இணைப்பு கொடுக்கின்ற அளவுக்கு திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவரை அவர்களுடைய கோரிக்கையை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 சனவரி 3] [திரு. சி. கோவிந்தராசன்]

1976-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்த போது,
ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆலோசனைக்குழு போடப்
பட்டது. அங்கேயுள்ள சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்
பினர்கள், சூப்பிரன்டென்டிங் என்சினியர் இவர்கள் எல்லாம்
அந்தக் குழுவில் இருந்தார்கள், அந்த நிலை இப்போது
இல்லை என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட ஆலோ
சனைக் குழுவை மீண்டும் போடவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

தொழிலாளர்களுடைய சங்கடங்களை
முக்கியமாக அவற்றைத் தீர்த்து வைப்பதற்கும்,
எல்லாம் உணர்ந்து முறையில் நடைபெறுவதற்கும், மின்
தொழில் உறவு நல்ல ஆவன செய்து, அதிலுள்ள தொழி
சார வாரியம் தலையிட்டு ஊட்டக்கூடிய வகையில்
லாளர்களுக்கு மேலும் உற்சாகம் மின்சார உற்பத்தியை
ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, வினியோகம் செய்வது
அதிகரித்து, அதை நாடு பூராவும், இத்துடன் முடித்துக்கொள்
தான் நல்ல முறை என்று கூறி,
கிறேன்.

[முற்பகல் 11-40]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இன்றையத்
தினம் விவாதத்தின் கடைசி நாளாக இருப்பதாலும், இன்
னும் பல அங்கத்தினர்கள் பேச வேண்டியிருப்பதாலும்,
இனி பேசக்கூடிய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 5 நிமிட
நேரம் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. ஜெயவேலு** : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இங்கே பேசிய நண்பர்கள் பலர் கிராமங்
களிலே விளக்குகள் எரியவில்லை என்று சொன்னார்கள்.
அதற்கு ஒரு முக்கியமான காரணம், மின்சக்தி ஒருசமயம்
ஏறுவதும், திடீரென்று குறைவதுமான ஒரு நிலைமை
இருப்பதுதான். அதை வோல்டேஜ் டிராப் என்று
சொல்வார்கள், அத்தகைய நிலைமை இருக்கின்ற காரணத்
தினால், நல்ல பல்புகள் போட்டாலும் பியூஸ் ஆகிவிடுகின்றன.
அதுமட்டுமல்லாமல், கிராமங்களிலே உள்ள சிறுவர்கள்
அதைக் குறிவைத்து அடிக்கின்ற ஒரு பொருளாகக் கருது
கின்றனர். எனவே, இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை
களை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின் கட்டணத்தைப் பொறுத்தவரை சில
தனியார் மருத்துவ மனைகளுக்கு, அவர்கள் நல்ல சேவை
மனப்பான்மையோடு பணிபுரிந்து வந்தாலும் கூட அவர்க

[திரு. எம். ஏ. ஜெயவேலு] [1978 சனவரி 3

களுக்கு 45 பைசா ஒரு யூனிட்டுக்கு சார்ஜ் செய்கின்றார்கள். எனவே, மருத்துவ மனைகள் நல்ல சேவா மனப்பான்மையோடு, கட்டணம் வாங்காமல் சேவை புரிகிறார்கள் என்று தெரிந்தால், அவர்களுக்காவது இந்த பண கட்டணத்தைக் குறைத்தோ அல்லது இலவசமாகவோ கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு பல நண்பர்கள் நிலத்தடி நீரைப்பற்றிப் பேசினார்கள். சாதாரணமாக கிணறு வெட்ட நீர்தான் பிறக்கும். அதுதான் இயற்கை. ஆனால், கிணறு வெட்ட பூதம் வந்தது என்பது பழமொழி. ஆனால் தற்போது கிணறு வெட்ட நிலத்தடி நீர் சட்டம் பிறந்தது என்று சொல்லக்கூடிய நிலைமை தான் கிராமங்களிலே இருக்கின்றது. இந்த நிலத்தடி நீர் பிரச்னையைப் பற்றி முந்திய அரசு ஏன் மக்களுக்கு எச்சரிக்கவில்லை என்பது மிகவும் வேதனையாக இருக்கிறது. அல்லது அரசியல் நோக்கோடு அப்படித் தவறி விட்டார்களா என்று கூட எண்ணத் தோன்றுகிறது. அதிகாரிகள் இந்த வாட்டர் லெவல், வாட்டர் பெட் போன்றவற்றைப் பற்றி ஏன் முன்னெச்சரிக்கையாக சிந்திக்கத் தவறி விட்டார்கள், ஏன் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டார்கள் என்றுகூட நமக்கு எண்ணத் தோன்றுகிறது. இன்னும் சொல்லப்போனால், 'The offic als thought the water—bed is bed of roses' என்றுதான் நமக்கு எண்ணத்தோன்றுகிறது. அது மட்டுமல்ல.

சமீபத்திலே நமது அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளித்ததுபற்றி பத்திரிகையிலே கூட வெளிவந்தது. டீசல் என்சின்கள் கட்டுப்படுத்துவதைப் பற்றி சிந்திக்க இருப்பதாகச் சொன்னார்கள். இது எப்படி யிருக்கிறது என்றால், சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்று சொல்வார்கள், அதைப் போல் மக்களுக்கு நன்மை செய்வதாக இப்படி ஒரு கேள்வி கேட்க, அது அவர்களுக்குப் பாதகமாக அமைகின்ற வகையிலே அந்த பதில் இருந்தது. எனவே, அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை ஏற்படக் கூடாது, அப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்தை இந்த அரசு செய்யக் கூடாது என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். டீசல் என்சின்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்துவது என்னும் எண்ணத்தை தயவுசெய்து கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எப்படி குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திலே அரசு பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே, ஒரு திட்டத்தை வகுத்து, மக்களுக்குச் சொன்னார்களோ, அப்படி



[1978 சனவரி 3,] [திரு. எம். ஏ. ஜெயவேலு]

இந்த நிலத்தடி நீரைப்பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே எச்சரிக்கை செய்திருந்தால், பல ஏழைகள் ஏராளமான கிணறுகளை வெட்டுவதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து இருக்க மாட்டார்கள். பலர் இதை எதிர் நோக்கியுள்ள நேரத்திலே, அத்தகைய தடையைக் கொண்டு வரக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாநிலத்திலே இருக்கின்ற எல்லா மின் நிலையங்களும் சீரான முறையிலே செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், என்றுமே மின்சாரத்திற்கு கிராக்கி இருக்கிறது. அதனால், நமக்கு அதிகமான மின்சாரம் கிடைத்தாலும், நமது அண்டை மாநிலங்களுக்குக் கொடுக்கலாம். எனவே, தெர்மல், ஹைடல், அடாமிக் அதாவது அணுவை உபயோகித்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதுபோன்ற முறைகளைக் கொண்டு நாம் ஏராளமான மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டும். அதன்மூலம் நமக்குத் தேவையான மின்சாரம் ஏராளமாகக் கிடைக்கும். ஆகவே, இதனால் நமக்கு ஒன்றும் நட்டம் வந்துவிடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற் சங்கங்களைப் பொறுத்தவரை சில தொழிற் சங்கங்கள் தொழிலாளர் நலனில் அக்கறை கொள்ளாது செயல்படுகிற நிலையை சமீபத்தில் கண்டோம். மின்சாரம் கண்ணால் பார்ப்பதற்குத் தெரியாது. ஆனால் ஏழை எளியவர்கள், பணக்காரர்கள் என்ற வித்தியாசம் பாராமல் எல்லோருக்கும் சேவை செய்கிறது. இன்றைய அரசும் அதுபோல் சேவை செய்கிறது. மின்சாரத்தில் பார்க்க ஒன்றும் இல்லை. ஆனால் கம்பியைத் தொட்டால் என்ன நிலைமைக்கு ஆளாவானோ அதே போன்று அனாவசியமாக தொழிலாளர் நலனில், விவசாயிகள் நலனில், ஏழை மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசுக்கு ஊறு விளைவிக்க நினைத்தார்களேயானால் சமீபத்தில் என்ன நடந்ததோ, அந்த நிலைமைதான் அவர்களுக்கும் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகள் சில குறிப்பிட்ட தொழிற்சங்கங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். வேலை மாற்றல், உத்தியோக உயர்வு போன்றவற்றில் அந்த முறையில் நடந்து கொள்ளுகிறார்கள். வேலூர் மின் திட்டத்தினுடைய முன்னேற்றத் தொழிற்சங்கத் தலைவன் என்ற காரணத்தால் பல முறை இந்த நிலைமையை நேரில் உணர்ந்தேன். அத்தகைய

மனப்போக்கை அதிகாரிகள் விட்டுவிட்டு நேர்மையாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்குக் கொடுத்திருக்கும் டிஸ்க்ரீஷனை உபயோகப் படுத்தி ஹியூமனிடேரியன் கிரவுண்ட்ஸ் என்று சொல்லி தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளுகிறார்கள்.

பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒருவரைத் தலைவராக மின்வாரியத்திற்குப் போட்டால் நன்றாக இருக்கும். அவருக்கு உதவி புரிய எக்ஸ்பர்ட்ஸ் இருக்கிறார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களைத் தலைவராகப் போடவேண்டும்.

சாதாரணப் பொதுக் கூட்டங்களுக்கும் விழாக்களுக்கும் மின்சாரம் கொடுக்கும்போது முதலில் 100 ரூபாய் கட்டு என்று சொல்லி விட்டு மறுநாள் ஐயாயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் வாங்குகிறார்கள் ; மறுநாள் 7,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அய்யப்பன் பூஜை சென்ற ஆண்டு நடந்தது. அதற்கு மறுநாள் 7,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் அரசையும் அதிகாரிகளையும் தங்கள் வாய்க்கு வந்தபடி திட்ட ஆரம்பித்தார்கள். அவர்கள் பூஜை செய்து, விரதம் இருந்ததெல்லாம் வீணாகி விட்டது. பக்திச் செயலுக்குக் கூட விரோதமாகச் செயல்படும் நிலைமை இருந்ததைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

இந்தத் தொழிலாளர் பிரச்சினையிலே அரசு மிக்க எச்சரிக்கையோடு அவர்களுடைய நலனில் அக்கறை காட்டிச் செயல் படுவதைப் பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி ; வணக்கம்.

<u>திரு. கே. கந்தசாமி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1977-78 ஆம் ஆண்டு மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு நான் எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாறி வருகிற நாகரிக உலகில் மனித • வாழ்க்கையில் மின்சாரம் தவிர்க்க முடியாத ஒன்றாகியிருக்கிறது என்பதை அறிவோம். இந்த மின்சாரத்தை, நம்முடைய பாரதத்தைப் பொறுத்தவரை, குறிப்பாக தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, உபயோகப்படுத்துகிறவர்களில் பெரும்



பகுதியினர் விவசாயிகள்தான். அந்த விவசாயிகள் உபயோகப்படுத்தும் மின்சாரத்திற்குக் கட்டணம் ஏற்கெனவே யூனிட்டுக்கு 12 பைசா என்று இருந்தது. ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் அது 16 பைசா என்று உயர்த்தப்பட்டு, பின்னர் புரட்சித் தலைவர் அரசு வந்த பின்னால் 14 பைசா என்று குறைக்கப்பட்டு, அந்தச் சலுகை ஏழை விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கருக்குக் குறைவாக உள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இரண்டரை ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் கிணறு வெட்டி பம்ப் செட் இணைப்புப் பெறுவது சாத்தியக்கூறு என்று பார்க்கும் போது, அதிகமானவர்கள் அந்தச் சலுகையைப் பெற முடியாது என்று கருதுகிறேன். அந்தச் சலுகையை அவ்வளவு விவசாயிகளுக்கும் கொடுக்க வேண்டும். யூனிட்டுக்கு 14 பைசா என்று இருப்பதை 12 பைசா என்று ஆக்க வேண்டும்.

நம்முடைய நாட்டில் மேஜர் இண்டஸ்ட்ரி விவசாயம் தான். இந்த நாட்டு மக்களுடைய வாழ்க்கைக்கு விவசாயம் முதுகெலும்பு. அலுமினியம், கெமிகல் இண்டஸ்ட்ரிசுக்கு யூனிட்டுக்கு 3½ பைசாவுக்கு கொடுக்கிறபோது இதற்கு ஏன் குறைத்துக் கொடுக்கக்கூடாது? அரசு சப்சிடி ரேட்டில் கூடக் கொடுக்கலாம். 23.41 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் இருப்பதைப் பார்க்கிறோம். விவசாயிகளுக்காக நாம் சிறிது நஷ்டத்தை அடைந்தாலும் அரசு அதுபற்றிக் கவலைப்படக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50.)

மெஜாரிட்டி ஏழைகளாக இருக்கக்கூடிய நாட்டிலே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர், அவருக்கும் கஷ்டங்கள் தெரியும். ஆகவே, அவர்களும் இதைக் கவனத்தில் வைத்து குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீட்டர் சார்ஜ் 5 ரூபாய் வாங்குகிறார்கள், இப்போது 5 ரூபாய் என்று இன்ட்ரட்யூஸ் பண்ணியிருக்கிறார்கள். அதைக் குறைக்க வேண்டும். குதிரை பவர் ஒன்றுக்கு 2½ ரூபாய் என்று வாங்கப்பட்டதை 1¼ ஆக குறைத்திருக்கிறார்கள். இந்தக் குறைப்பு போதாது, இன்னும்

முழுவதையும் அதை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இத்தனையையும் குறைத்து விட்டால் அர
சாங்கத்தை நடத்துவதற்குப் பணம் வேண்டுமே, எப்படி
அரசை நடத்துவது என்று கேட்கலாம். நஷ்டம் வந்தாலும்
ஏழை மக்களின் நலன் கருதி இதை நடத்தித்தான் ஆக
வேண்டும்.

Welfare Government is being run for the majority of the people and the majority of the people is the agricultural community. They are poverty-striken people Therefore, the suggestion for the welfare of the community at large.

இதை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். கடந்த பீரியடிலே தி. மு. க. அரசு ஆட்சி
யில் இருந்தபோது கூட நான் சொன்னேன். நிர்வாகச் சீர்
திருத்தக் குழு என்று ஒன்று இதற்காக ஏற்படுத்த வேண்டும்.
அங்கே இருக்கிற எஞ்சினியர்களுக்கு, அதிகாரிகளுக்குத்
தெரியும், அங்கே எப்படி வேலை நடைபெறுகிறது என்று.
அங்கே உள்ள கணக்காயரை கேரோ செய்தார்கள். நான்
5 வயது பையனோடு அங்கே போய் 5 மணி வரை அங்கேயே
இருக்க நேரிட்டது, காரணம் கதவை அடைத்து விட்
டார்கள், சாப்பாடு கூட கிடையாது. இப்படி அதிகாரி
களைச் செய்வதால் அவர்கள் கீழே உள்ளவர்களிடம் வேலை
வாங்குவதற்குப் பயப்படுகிறார்கள்.

இதையெல்லாம் தொழிற் சங்கங்கள் என்ற பெயரா
சிலர் நடத்துகிறார்கள் என்றால் வேலை என்ன ஆகும்
கீழே உள்ளவர்களிடம் கூட நான் நேரடியாகப் பேசியிரு
கிறேன். பெரிய அதிகாரிகள் வேலை வாங்கப் பயப்படுகிறா
கள், அவர்களை மிரட்டுகிறார்கள், அதனால் அங்கே ரூல்
லா இம்ப்ளிமெண்ட் பண்ணப் பயப்படுகிறார்கள். அதி
காரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அங்கே
இப்போது ஒழுங்கு இல்லை, கீழ்ப்படிதல் கிடையாது. ஒபீ
டியன்ஸ் என்பது இப்போது எங்கே பார்த்தாலும் ஆப்ஸென்ட்
ஆசிரியர்களை மாணவர்கள் மிரட்டுவது, அதிகாரிகளை கீழே
உள்ளவர்கள் மிரட்டுவது, சட்டை போட்டவர்கள் சட்டை
போடாதவர்களை மிரட்டுவது இப்படிப்பட்ட நாட்டாக்கிர
மான நிலைமை இருக்கிறது. அரசு வோட்டு வாங்குகிறது
வருகிறது, பிறகு போகிறது, ஆனால் செய்கிற தப்





சொல்லிக் கொண்டு போகக் கூடாது.
எல்லாம் சரியென்று இதற்கான கட்டுப்பாடுகளைக் கொண்டு
அரசு ஒத்துழைத்து இந்த நேரத்திலே கேட்டுக்
வந்து நிர்வகிக்க வேண்டுமென்று
கொள்கிறேன்.

நிர்வாகச் சீர்திருத்தக் குழு போடப்பட வேண்டும்.
ஏனென்றால் இப்போது 10 பேர்கள் செய்கிற வேலையை
15 பேர்கள் செய்கிறார்கள். ஓவர் டைம் போட்டால் வேலை
செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஓவர்டைம் கிடைக்கும்
என்பதால் 10 பைல் பார்க்க வேண்டியவர்கள் 5 பைல்களைத்
தான் பார்க்கிறார்கள். யூனியன் தலைவர்களிலே நல்ல
எண்ணம் கொண்டவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். எக்ஸ்
பர்ட்ஸ் கமிட்டி போட்டு குவாண்டம் ஆப் ஓர்க் எவ்வளவு
என்று பார்த்து ஸ்டடி பண்ணி நிர்வாக சீர்திருத்தம் செய்ய
வேண்டும், செலவைக் குறைக்கலாம், அதிகமாக வேலை
வாங்கலாம், இதன் மூலமாக சிக்கனத்தைக் கொண்டுவர
லாம். Illicit tapping of energy also is going on
சில இடங்களிலே மின் சக்தி கீழ் மட்டத்தில் உள்ள
சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒத்துழைப்போடு மின்சார
திருட்டு நடைபெறுகிறது. இதைத் தடுக்க அரசு நட
வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு 12 பைசாவுக்கு மின்சக்தி கொடுக்க
வேண்டும் என்று சொல்கிறபோது விவசாயத் தோட்டத்
தில் பம்பு செட்டுக்காக போடப்பட்டிருக்கிற லைட்டுக்கு
வேறு அதிகமாக சார்ஜ் போடுகிறார்கள், அது கூடாது,
அதே போல தோட்டத்திலே இருக்கிற வீட்டுக்கு, கொட்ட
கைக்கு அதிகமாக சார்ஜ் போடுகிறார்கள். 30 பைசா என்று
வாங்குகிறார்கள். அது கூட அதிகமாக இருக்கிறது.
ஆகவே, விவசாயிகளுக்கு என்ன ரேட் வாங்குகிறார்களோ
அதைப் போலவே இவைகளையும் அக்ரிகல்சுரல் ஆக்குபேஷன்
என்பதோடு சேர்த்துக்கொண்டு தோட்டத்திலே கட்டி
யிருக்கும் வீட்டுக்கு, கொட்டகைக்கு எல்லாம் குறைந்த
சார்ஜை வசூலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிரவுண்ட் வாட்டரைப் பொறுத்த
வரையில் முன்னால் நிலத்தடி நீர் கோளாறு இருந்தது.
மாண்புமிகு பிரதம பொறியாளர் பஞ்சநாதன் அவர்கள்
இதைக் கடுமையாக எதிர்த்தார்கள். இப்பொழுது ஆண்ட
டவன் கிருபையால் நல்ல மழை பெய்திருக்கிறது. இன்னும்
10 வருஷங்களுக்குப் பஞ்சம் இல்லாமல் தண்ணீர் இருக்

[திரு. கே. கந்தசாமி] [1978 ஜனவரி 3

கிறது. தண்ணீர் கிணறுகளில் நிறைய இருக்கிறது. எனவே
அருள் கூர்ந்து, யார், யார் மனுச் செய்திருக்கிறார்களோ,
யார் யாரிடமிருந்து மனுக்கள் வந்து அதிகாரிகளிடம் இருக்
கின்றனவோ அத்தனை மனுக்களுக்கும் கொடுக்க உத்தரவு
பிறப்பிக்க வேண்டுகிறேன். இது மிகவும் அத்தியாவசியமான
பிரச்னை. போன இடங்களிலேயெல்லாம் இதே பிரச்னை.
அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களின் உள்ளக் கிடக்கையும்
இதுதான். அத்தனை பேரும் பேச வாய்ப்பில்லாததால்
வலியுறுத்தாமல் இருக்கலாம். ஆகவே, இன்றைய தேதி
வரையில் மனுச் செய்திருக்கின்ற மனுதாரர்கள் அத்தனை
பேருக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்பதைப்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹேண்ட் லூம் வீவர்ஸ். கைத்தறி
நெசவாளர்கள் ஒரே எல்லைக்குள் ஐந்து அல்லது ஐந்துக்குக்
குறைவாக வைத்திருப்பவர்கள், வெளிச்சம் வேண்டுமென்
பதற்காகப் போட்டிருந்தாலும்கூட அவர்களிடமிருந்து
கமர்ஷியல் ரேட் என்று, வியாபார நோக்கத்தோடு என்று
வியாபாரிகளிடம் வசூலிப்பதைப் போல சில இடங்களில்
வசூலிக்கிறார்கள். அது மிகவும் பொருத்தம் இல்லாதது.
ஏழை கைத்தறி நெசவாளர்கள் அந்த லைட்டுக்காக மின்
இணைப்பு பெற்றிருந்தால் அதற்காக அதிகம் கட்டணம்
வாங்குவது முறையல்ல. சாதாரண ஏழை கைத்தறி
நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய
நிலைமை இருக்கும்பொழுது கமர்ஷியல் ரேட் என்ற முறை
யில் வாங்குவது தார்மீகம் அல்ல, அதற்கு விதிவிலக்கு அளிக்க
வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.
(மணியடிக்கப்பட்டது).

நான் ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். இப்பொழுது
கிரவுண்ட் வாட்டர், இர்ரிகேஷன் பிராப்ளம்ஸ் இல்லை. எல்
லாம் திர புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். என்னுடைய
குரல், அதைப்பற்றி ஆறுமுகம் போன்றவர்களுக்குத் தெரி
யும். கேரளத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு
மொரார்ஜி தேசாய் அவர்களுடைய நல்லெண்ணத்தை
யும், செல்வாக்கையும் பயன்படுத்தி கேரள முதல்வரோடு
பேச்சு வார்த்தையைச் சுமுகமாக நடத்தியிருக்கிறார்கள்,
அதை மிகவும் துரிதமாகப் பரிசீலனை செய்து விவாதிக்க
நமது பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் முதல்வரை
ஊக்குவித்து அந்தக் காரியத்தைச் சாதித்து விட்டால் நம்



1978 சனவரி 3] [திரு. கே. கந்தசாமி]

முடைய நாட்டில் பிரச்னைகள் தீர்ந்துவிடும். ஜெனரேஷன்
பிரச்னை போய்விடும், இர்ரிகேஷன் பிரச்னை போய்விடும்,
ட்ரெளட் பிரச்னையும் போய்விடும்.

So, we are solving the human problem of our State

அதையும் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டு,
பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.
வணக்கம்.

* **திரு. செ. சிவசாமி.**—மதிப்பிற்குரிய பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நமது நாட்டிலே 30 வருட சுதந்திரத்
திற்குப் பிற்பாடு இன்றைக்கு வரைக்கும் மின்சார உற்பத்தி
22,000 மெகாவாட். இதிலே புனல் மின்சாரத் திட்டத்
தின் மூலம் 1,624 மெகாவாட்டும், அனல் மின்சாரத் திட்
டத்தின் மூலம் 1,440 மெகாவாட்டும் இங்கே உற்பத்தி
செய்யப்படுகிறது என்ற போதிலும் தமிழ் நாட்டினுடைய
மின்சாரத் தேவைகளை இது பூர்த்தி செய்யவில்லை. ஆகை
யினாலே மீண்டும் அதிகமான திட்டங்களிட்டு தமிழ்நாட்டிலே
வேண்டிய அளவிற்கு மின்சார உற்பத்தியைச் செய்யும் முறை
யிலே இங்கு அனல் மின்சார நிலையங்களை உற்பத்தி செய்ய
வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். நமது மதிப்பிற்
குரிய மந்திரி அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்
பொழுது தமிழ்நாட்டில் இருக்கும் புனல் மின்சாரத் திட்
டத்தில் 100-க்கு 96 சதவிகிதம் புனல் மின்சாரத் திட்டத்
தின் மூலம் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்று
சொன்னார்கள். ஆகவே, அனல் மின்சாரத் திட்டம்தான்
இன்றைக்குப் பாக்கியிருக்கிறது. அனல் மின்சாரத் திட்டத்
தின் மூலம்தான் தமிழ்நாட்டிற்கு வேண்டிய மின்சாரத்தை
எடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். ஆகவே,
அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

விவசாயத்திற்கும், தொழிலுக்கும் மின்சாரம் எவ்வளவு
தேவைப்படுகிறது என்பதைப்பற்றி இந்தச் சபை அறியாத
விஷயம் அல்ல. விவசாயமும், தொழிலும் தமிழ்நாட்டில்
அதிகரிக்க வேண்டுமென்றால் நிச்சயமாக மின்சாரம் மிக
மிகத் தேவை என்ற முறையிலே விவசாயத்திற்கும் தொழி
லுக்கும் முதலிடம் கொடுக்கும் முறையிலே மின்சாரத்தை
அதிகப்படுத்த வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். ஆனால்
அதே நேரத்திலே விவசாயத்திற்கு பம்பு செட்டுகளுக்குப்
பயன்படுத்தும் மின்சாரத்திற்குக் கடந்த காலத்தில் 9 பைசா

இருந்த கட்டணம் 12 பைசாவாகத் திடீரென்று மாற்றப் பட்டது. அது மட்டுமல்ல, விவசாயத்தைப் பொறுத்த வரையில் 9 பைசாவிலிருந்து 12 பைசாவுக்கு மாற்றிய அதே மாதிரி தொழிலுக்கு 2 பைசா என்றிருந்தது 3 பைசா என்று விதிக்கப்படுகிறது. இந்த 2 பைசா, 3 பைசாகூட தொழிற்சாலைகளிலிருந்து சரியானபடி வசூல் செய்யப்படவில்லை என்று நான் பணிவோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[நண்பகல் 12—00]

உங்களுக்குத் தெரியும், கடந்த காலத்திலே, தாரங்க தாரா தொழிற்சாலையிலிருந்து வர வேண்டிய ரூ. 85 இலட்சம் கடனை அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. அதே போல், இன்று நாம் பார்க்கிறோம், மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை ரூ. 10 கோடி பாக்கியிருப்பதை நாம் அறி வோம். ஒரு பக்கத்திலே தள்ளுபடி செய்யப்படுகிறது, இன்னொரு பக்கத்திலே வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. ஆனால், உழைக்கும் வர்க்கத்திற்கு, விவசாயிகளுக்கு 9 பைசா அதிகமாகப் போடப்படுவது மட்டுமல்ல, அந்தத் தொகையை வசூல் செய்ய எவ்வளவு கடுமையான முறைகள் கடந்த காலத்தில் கையாளப்பட்டன என்பதை நாம் பார்த் தோமானால், விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட வில்லை, விவசாயத்திற்கு இரண்டாவது இடம் தான் கொடுக் கப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

இதையெல்லாம் கணக்கிலே எடுத்துத்தான், கடந்த காலத்திலே, மிகப்பெரிய போராட்டத்தை நாம் நடத்தி யிருக்கிறோம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். 1972-ம் ஆண்டு இதே விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. உயர்த்தப்பட்ட கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று நாம் போராட்டம் நடத்தினோம். அந்தப் போராட்டத்திலே அன்றைக்கிருந்த அரசானது எவ்வளவு கடுமையான, கொடுமையான நடவடிக்கையை எடுத்தது என்பது அனைவருக்கும் தெரியும். நான் இரும்புக் கரம் கொண்டு தாக்குவேன் பந்தாடுவேன் என்று அப்பொழுது சொன்னது மட்டுமல்ல, அப்படியெல்லாம் நடவடிக்கை களிலே இறங்கினார்கள். அன்றைய தினம் ஆட்சியிலேயிருந்த வர்கள் பந்தாடினார்கள், இரும்புக் கரங்களைக் கொண்டு தாக்கினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நாட்டிலே, விவசாயிகள், தொழிலாளர்கள், தங்களுடைய நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக, எந்த நிலைமையையு



சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்ற நிலையில் அர
சினது இரும்புக் கரங்கள் அன்றைக்கு மடக்கி, ஒடுக்கப்
பட்டது. அந்த அளவு விவசாயிகள் போராட்டம் வெற்றி
யைத்தான் காணமுடிந்தது. அந்த அளவு தமிழ் நாடு அவர்
கள்மீது முத்திரையிட்டு பணிய வைத்தது என்பதை இந்தச்
சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். பணிய வைத்தது
மட்டுமல்ல, 1972-லே நடந்த போரட்டத்திலே எங்களைப்
போன்ற சாதாரண ஊழியர்கள்மட்டுமல்ல, 26,000 பேர்
களைச் சிறையிலே தள்ளிவிட்டார்கள். திருச்சி போன்ற சிறை
யிலே 6,000 பேர்களுக்குத்தான் இடம் இருந்தது. ஆனால்,
12,000 பேர்களை, காக்கைகளைப் போல், கோழிகளைப் போல்,
குருவிகளைப் போல், அடைத்து வைத்து, அந்த அளவு, கடந்த
அரசாங்கம் நடத்தியது என்பதை நான் சொல்ல ஆசைப்
படுகிறேன். அது மட்டுமல்ல, நிர்வாகம் சீர்குலைந்த
அன்றைக்கிருந்த நிலையிலே, நாங்கள் எல்லாம் ஜெயிலுக்கு
முன்னாடியே 2 நாள் கடந்து, 2 நாள் கழித்து, கடைசியிலே
தான் எங்களையெல்லாம் அட்மிட் பண்ணி, எடுத்துக்கொண்
டார்கள். அந்த அளவு சட்டம் சீர்குலைந்தது, விவசாயிகள்
சீர்குலைந்தார்கள்; போராட்டம் வெற்றி பெற்றது என்பதற்
காகத்தான் இதைச் சொல்கிறேன். அப்பொழுது, கைதிகள்
சினிமா பார்த்து விட்டு வரக்கூடிய அளவு, அன்றைக்குச்
சட்டம், ஒழுங்கு கட்டுப்படுத்த முடியாத அளவு சீர்குலைந்
திருந்தது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்
படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இரும்புக் கரம் கொண்டு
ஒடுக்குவோம் என்று சொன்னதை, நாங்கள் கரும்புக் கரம்
கொண்டு அடக்கியே தீருவோம் என்று அடக்கினோம். அந்த
மாதிரி மாநிலம் பூராவும் ஒரு போராட்டம் வரக்கூடாது
என்று மதிப்பிற்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசானது இந்த விவசாயப் போராட்டங்களை நல்லமுறை
யிலே எடுத்துக்கொண்டு, எங்கெங்கு வசதி செய்து கொடுக்க
வேண்டுமோ, அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்காகப் பரிந்து, ஒரு போராட்
டத்தை நடத்தினார்கள், சட்டசபை ஆரம்பித்த காலத்திலே.
இது எப்படியிருக்கிறதென்றால், சாத்தான் வேதம் ஓத
ஜனவரி மாதத்திலே வந்த மாதிரி இருக்கிறது. இன்றைக்குச்
சபை முன்னால் நாம் பார்க்கிறோம். கடந்த காலத்திலே,
அங்கே இருந்தவர்களை எதிர்ப்பக்கத்திலே உட்கார வைத்

திருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள். அதைப் புரிந்து கொண்டு, நிச்சயமாக, தொடர்ந்து அவ்வாறே நடக்காமல் தமிழ் நாட்டு மக்கள் யார், யாருக்காக வேண்டி எப்படிப் பட்ட நிலைமையிலே, அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்பதையெல்லாம் கவனமாகப் பார்த்து, எதிரிகளை, திருடர்களை, எந்த இடத்திலே குத்த வேண்டுமோ, அந்த இடத்திலே குத்தி, வீழ்த்தி விட்டார்கள் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, அந்த மாதிரி இதிலே வருகிற பொழுது, திடமாக இருப்பார்கள்.

அதுமட்டுமல்ல. சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தைப் பற்றி எனக்கு முன்பே பேசிய தோழர்கள் குறிப்பிட்டார்கள். அதை விற்க வேண்டியது அவசியம்தானா, மதுரைக்கு மட்டுமல்ல சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த இடங்களுக்கும், பம்ப் செட்டுகளைப் போடுவதற்கு அனல் மின்சார நிலையம் மூலமாக கரன்ட் சப்ளை செய்யப்பட்டு வந்தது. யாரையும் கேட்காமல், எந்த முடிவும் எடுக்காமல் அல்வா துண்டை சாப்பிடுவதுபோல சாப்பிட்டுவிட்டார்கள், அன்றைக்கு இருந்தவர்கள். இந்த மாதிரி நிலைமை ஏற்படக்கூடாது.

இன்றைக்கு விவசாயிகளுடைய சொத்துக்களை எல்லாம் ஜப்தி செய்கிறார்கள். அந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது, என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் விவசாயிகள் மத்தியிலே மினிமம் காரன்டி இருந்தது. பத்து வருட மினிமம் காரன்டியை அந்த விவசாயிகள் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டது. கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ச்சியாக பஞ்சம் ஏற்பட்டதன் காரணமாக, மினிமம் காரன்டியை கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இன்றைக்கு சில விவசாயிகளுடைய சொத்துக்களை ஜப்தி செய்கின்ற நிலைமை இருக்கிறது. பழைய பாக்கிக்காக, மின்சாரம் ஓட்டியதற்காக கன்சம்ப்ஷன் செய்திருந்தாலும் பரவாயில்லை—மினிமம் காரன்டி கட்டவில்லை என்பதற்காக, சொத்துக்களை ஜப்தி செய்கிறார்கள். நோட்டீஸ்கள் கொடுக்கிறார்கள். சர்வ சாதாரணமாக செய்கிறார்கள். இதைப் பார்த்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல விவசாயிகள் மேல் கேஸ்கள் போடப் பட்டிருக்கின்றன. அவர்கள் மேல் போட்டிருக்கிற மினிமம் கேரன்டிக்காக போட்டிருக்கிற அத்தனை கேஸ்களையும் வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல, கிரவுண்ட் வாட்டர் ஸ்கீம் என்ற முறையிலே பம்ப் செட்டுகள் கனெக்ஷன் கொடுப்பதிலே தவறுகள், தாமதங்கள் ஏற்படுகின்றன. இதையும் இந்த நேரத்திலே கன்சல்ட் செய்து, தற்போது பெய்த மழையினால் அதிகமான தண்ணீர் பூமியின் அடியில் இருக்கின்றது. கடந்த 2 மாதங்களாக கடுமையான மழை பெய்திருக்கிறது. பூமி நிறைய தண்ணீரை உறிஞ்சி இருக்கிறது. ஆகவே இந்த சந்தர்ப்பத்திலே கிரவுண்டுவாட்டர் சர்ட்டிபிகேட்வேண்டும் என்ற நிலைமையை மாற்றி, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு எந்தவிதமான கன்டிஷனும் போடாமல் விவசாயத்திற்குக் கரண்ட் கொடுக்கும் ஏற்பாட்டை செய்து கொடுக்கும்படியாக நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கரண்ட் திருடப்படுகிறது. அதை நான் நேரடியாகவே பார்த்திருக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், கிராமத்திலே ஒரு சடங்குக்குப் போயிருந்தபோது அங்கே ஒரு குடிசையின் மேல் ஏறி, கம்பிகளை இழுத்து மைக் செட்டுக்கும் விளக்குக்கும் கரண்டை இழுத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட திருட்டுகள் தொடர்ந்து பல வருஷங்களாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்த வகையில் சர்வசாதாரணமாக திருட்டுக்கள் நடைபெறுகின்றன. இது யாருக்கும் தெரியாத விஷயம் இல்லை. அரசாங்கம் இப்படிப்பட்ட திருட்டைத் தடுக்கவேண்டும்.

அடுத்து, பஞ்சாயத்துக்களில் லைட்டுகள் எறிவதில்லை என்று குறை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையிலும் ஏற்கனவே இருந்த முறையே தொடர்ச்சியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிய முறையைப் பொறுத்தவரையில் யார் கணக்குப் போடுவது, எங்கே ஸ்டாக் வைத்துக்கொள்ளுவது என்ற தகராறு இருக்கிற காரணத்தினால் பழையபடி எல்க்ட்ரிசிடி டிப்பார்ட்மென்டே போட்டுவிட்டு அதற்கான சாமான்களுக்கு சர்ச்சார்ஜ் வாங்குவதற்கான ஏற்பாட்டை செய்து கொடுத்தால் நிச்சயமாக பஞ்சாயத்துகளில் விளக்குகள் நல்ல முறையிலே எரிவதற்கு வாய்ப்பிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கும் விளக்குகள் எண்ணிக்கை மொத்தம் 105 எத்தனையோ வருஷமாக ஆனால் எறிவதோ 22 தான்.

[திரு. செ. சிவசாமி] [1978 ஜனவரி 3

சொல்லியும் பயனில்லை. பலவிதமான காரணங்களினால் காலத்தைக் கடத்துகிறார்கள். கடந்த டி.டி.சி. கூட்டத்திலே எங்கள் ஜில்லாவிலே உள்ள அனைத்து பஞ்சாயத்துத் தலைவர்களையும் கூப்பிட்டு அதற்கான காரணங்களை அறிய வேண்டுமென்று கேட்டு, அந்தக் கூட்டத்தைக் கூட்டிக் கேட்டுக்கொண்டார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களும் ஆலோசனைகள் சொன்னார்கள். 54 பஞ்சாயத்துத் தலைவர்கள் அனைவரும் ஏகோபித்த முறையிலே இந்த அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். டிப்பார்ட்மெண்ட்டார்கள் பழைய முறையிலே செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10.)

பஞ்சாயத்துகளில் மோட்டார் போட்டு, ஓவர் ஹெட் டாங்க் மூலம் தண்ணீர் விடுகிறார்கள். ஓவர்ஹெட்டாங்க் இல் தண்ணீர் ஏறும் நேரத்தில் திடீரென்று காயில் எரிந்து போய் விடுகிறது. இது அடிக்கடி ஏற்படுகிறது. விவசாயிகள் போட்டுள்ள மோட்டாரிலும் இப்படி அடிக்கடி காயில் எரிந்து விடுகிறது. மின் கட்டணம் கட்டவில்லை என்றால், பியூஸ் பிடுங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். ஆனால் இந்த மாதிரி மோட்டார் காயில் எரிந்து போகிறபோது அதற்கான காரணம் என்ன என்பதை அவர்கள் கவனிப்பது இல்லை, அதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 3 ஃபேசில் மின்சாரம் வருகிறது. அப்படி வந்துகொண்டே இருந்தால் பிரச்சினை இல்லை. சில நேரங்களில் 2 ஃபேசில் வருகிறது. சில நேரங்களில் ஒரு ஃபேசில் வருகிறது. அப்படி இரண்டு பேசில் ஒரு பேசில் மின்சாரம் வருகிற நேரத்தில், மோட்டார் திடீரென்று ஓடிக்கொண்டிருக்கிறபோது இப்படி ஆவதால் காயில் எரிந்து விடுகிறது. இப்படி மூன்றுபேசில் மின்சார சப்ளை ரெகுலேட் செய்யாதது வாரியத்தின் குற்றம் என்கிற காரணத்தால், அந்த காயில் எரிந்து போவதற்கும் அவர்கள்தான் காரணம், அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, அந்த விவசாயிகளிடத்தில், பஞ்சாயத்துகளிடத்தில் இருக்கும் மோட்டார் காயில்கள் மின்சார சப்ளையில் ஏற்படும் கோளாறு காரணமாக எரிந்து போகும் என்றால், அதற்கான மறு காயில் சுற்றும் சார்ஜ், ரிப்பேர் செய்யும் சார்ஜ், அல்லது நஷ்ட ஈடு டிபார்ட்மெண்ட் கொடுக்கவேண்டும், அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 ஜனவரி 3] [திரு. செ. சிவசாமி]

அது மட்டுமல்ல, புயல், வெள்ளத்தின் காரணமாக இராம
நாதபுரம் மாவட்டத்தைப்போன்ற சில பகுதிகளில்—ஏன்
எல்லாப் பகுதிகளிலுமே—பாதிக்கப்பட்ட பகுதி, பாதிக்காத
பகுதி என்று தரம் பிரிக்கப்பட்டு அங்கேயிருக்கும் தொழிலா
ளர் வர்க்கத்திற்குச் சலுகை செய்யப்படுகிறது. இதை ஒரே
ரீதியில், ஒருமனதாக எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.
பாதிக்கப்பட்ட பகுதி, பாதிக்கப்படாத பகுதி என்று தரம்
பிரிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தொழி
லாளர்கள் வர்க்கத்திற்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவும் ஏற்
பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லி முடித்துக்கொள்
கிறேன். தேவேந்திரநல்லூரில் ஒரு தொழிலாளி கம்பத்தில்
இருந்து கீழே விழுந்து விட்டான். முதுகெலும்பு முறிந்து விட்
டது. அவனை பரமக்குடியில் இருந்து மதுரை மருத்துவ
மனைக்கு எடுத்துச் செல்லுவதற்குள்—இரவு 11 மணி வந்து
விட்டது. உடனடியாக—இயலவில்லை. ஆகவே, இப்படிப்
பட்ட விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களை எடுத்துச் செல்
வதற்காக அந்தப் பகுதியில் ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஏற்பாடு
செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்
வொரு சென்டரிலும் இப்படி ஒரு ஆம்புலன்ஸ் வண்டி இருக்க
வேண்டும் அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் மேற்
கொள்ள வேண்டும் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.
வணக்கம்.

*திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு சட்டப் பேரவைத்
துணைத் தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதி
நிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறிக்
கொள்கிறேன். வடாற்காடு மாவட்டம், திருவண்ணா
மலை, செங்கம், ஆகிய இரண்டு வட்டங்களிலும் அதிக
விவசாயிகள் மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். அப்படி
அதிகப்படியாக மின் இணைப்பு பெற்றுள்ள அந்த விவசாயிகள்
பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். எப்
படி ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றால், மின்
இணைப்பு அதிகம் பெற்றுள்ள காரணத்தால், அங்கே இருக்
கும் விவசாயிகளுக்கு ஷிப்ட் முறையில் மின்சாரம் வழங்கப்
படுகிறது. ஷிப்ட் முறையில் மின் இணைப்பு கொடுக்கப்
பட்டு இருப்பதால், மின்சார இணைப்பு துண்டிக்கப்படுகிற
போது, பொதுவாக இரவு நேரத்தில் அது நடைபெறுவ
தால், விவசாயிகள் பக்கத்தில் இருந்து அதைப் பார்த்துக்
கொள்ள முடியாத காரணத்தால், மோட்டார் காயில் எறிந்து

போய்விடுகிறது. தண்ணீர் இறைத்துக்கொண்டே இருக்
கும்போது மின்சாரம் நிறுத்தப்பட்டால் அவர்கள் உடனே
அதை ஆப் செய்து விடமுடியும். பொதுவாக இரவு நேரத்
தில் 3 லைனையும் துண்டித்து விட்டால் விவசாயிகளின் மோட்
டாருக்கு எந்த விதமான தொந்தரவோ பாதிப்போ இல்லை
ஆனால் ஓடிக்கொண்டு இருக்கிறபோதே ஒரு லைனை துண்டித்து
விடுவதால், அந்த மோட்டார் பாதிக்கப்பட்டு விடுகிறது.

இப்படி பல மோட்டார்கள் எங்களுடைய திருவண்ணா
மலை, செங்கம் வட்டத்திலே தினந்தோறும் 20, 30 மோட்டார்
களுக்கு காயில் போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அதோடு
மின் இணைப்பு கொடுக்க வேண்டிய அப்ளிகேஷன் இன்னும்
என்னுடைய பகுதியிலே இருக்கிறது. வட ஆற்காடு மாவட்
டம் விவசாயத்திற்கு மின் இணைப்பை அதிகமாக பெறக்கூடிய
நிலைமையிலேயே இன்னும் இருக்கிறது. அப்படி அப்ளிகேஷன்
போடாதவர்களும் இருக்கிறார்கள். கொடுத்தவர்களும்
இருக்கிறார்கள். அதோடு அக்ரிமெண்ட் ஆனவர்கள் நிறைய
பேர்கள் இருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திற்கு
50,000 மோட்டாருக்கு மின் இணைப்பை கொடுப்பதாக
அறிவிக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்திற்கு
மட்டும் கிட்டத்தட்ட 10,000, 15,000 அக்ரிமெண்ட்
செய்துகொண்டு மின் இணைப்பை பெறக் கூடிய வாய்ப்பை
உள்ள விவசாயிகள் இருக்கிறார்கள்.

நிலத்தடி நீர் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று பொது
வாக எல்லோருக்கும் கூறப்பட்டுள்ளது. எல்லா தரப்பிலும்
அதை மறுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய
தொகுதியிலே சாதாரணமாக கிணறுகள் நிரம்பி இருக்கிற
காரணத்தால் அங்கே நிலத்தடி நீர் என்ற பிரச்சினைக்கே
வாய்ப்பில்லை. எந்த காலத்திலும் கிணற்றிலே நீர் இருந்து
கொண்டுதான் இருக்கிறது. அந்த பகுதியிலே கூட இந்த
நிலத்தடி நீர் சான்றிதழ் தேவை என்று மின்சாரத் துறை
யைச் சேர்ந்த அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.
மற்ற பகுதிகளில் இந்த சான்றிதழை பெற்றுத்தான் ஆக
வேண்டுமென்ற சூழ்நிலை இருந்தாலும், அணைப்பகுதி
யுள்ள சாத்தனூர் அணைப்பகுதியிலுள்ள இப்படிப்பட்ட
விதியை தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தெரு விளக்குகளை ஊராட்சி மன்றத் தலைவர்கள்
பார்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்
கிறார்கள். அவைகளை எந்தெந்த நேரத்தில், எப்படி விநி



பராமரிப்பது என்ற நிலைகளை
யோகிப்பது, எப்படி
விளக்கிச் சொல்லவில்லை. தெரு விளக்குகளுக்கான பல்புகளை
தனிப்பட்ட வியாபாரிகளிடையே வாங்கக்கூடாது என்று ஒரு
முறை சொல்லப்பட்டிருக்கிறது. சூப்பர் மார்க்கெட்டில்
வாங்க வேண்டுமென்று உத்திரவு. அங்கே விசாரித்தாலும்
பல்புகள் கிடையாது. அப்படியே இருந்தாலும் வெளியே
விற்பதை விட அதிக விலைக்குத்தான் விற்கிறார்கள். அப்படி
பல்புகளை வாங்கிப் போடவேண்டுமென்று ஊராட்சி மன்றத்
தலைவர் கூறினாலும் அவர்கள் தலைவர் சொல்வதைக் காதிலே
வாங்குவதில்லை. அவர்களுடைய அதிகாரிகளுக்கு உட்பட்ட
வரம்பு வேறு. தலைவர்களுடைய அதிகாரங்கள் வேறு.

ஆகவே அவர்கள் தலைவர்கள் சொல்வதைச் செய்வது
மில்லை. கேட்பதுமில்லை. இப்படி பல சங்கடங்கள் இருக்கின்
றன. கிராம நல ஊழியர்கள் உடனிருந்து பல்புகளை போட
வேண்டுமென்று உத்தரவு. தலைவர் அவர்கள் எப்பொழுது
கிராம நல ஊழியரை பார்ப்பது? எப்பொழுது லைன்மேனை
பார்ப்பது? மூவரும் ஒன்று சேர்ந்து ஊரிலுள்ள ஒவ்வொரு
கம்பமாக கணக்கெடுத்து, எந்தக் கம்பங்களுக்கு பல்புகள்
போடப்பட்டது, அவை ட்யூப்புகளா, பல்புகளா?
எத்தனை கம்பங்களுக்கு போட வேண்டும் என்று பட்டியலை
வைத்திருக்கவேண்டும். ப்யூஸ் போன பல்புகளை எல்லாம்
கணக்கெடுக்க வேண்டுமென்று ஒரு கடுமையான உத்திரவை
போட்டிருக்கிறார்கள். இவைகள் ஊராட்சித் தலைவர்கள்
செய்யக் கூடிய காரியங்கள் அல்ல. எனவே இவைகளை
மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு என்னுடைய தொகுதியைச் சேர்ந்த தொண்ட
மனூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. 1977-ம் ஆண்டு
நவம்பர் மாதம் ஏற்பட்ட புயலின் சேதத்தால் அங்கே
பெண்ணாற்றைக் கடந்துச் செல்லும் கம்பிகள் துண்டிக்கப்
பட்டு கடந்த 26—12—1977 வரையில் அந்த கிராமங்
களுக்கு மீண்டும் மின் இணைப்புக் கிடைக்கவில்லை. மாதக்
கணக்காகியும் அங்கே மின் இணைப்பு அங்கே மீண்டும்
வரவில்லை. தற்போது அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக சார்பிலே கூறிக் கொள்கிறார்கள்,
எங்களுடைய மந்திரி சபையிலே இடைவிடாமல் நாங்கள்
பணிகளைச் செய்கிறோம் என்று கூறுகிறார்கள். சாதாரண
மாக 1 1/2 மாத காலமாக அந்தக் கிராமத்திற்குத் தெரு
விளக்கே இல்லை, என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—20]

அடுத்து, மின் இணைப்பு புதிதாகப் பெறும் மோட்டார் களுக்கும் ஏற்கெனவே மின் இணைப்பு பெற்றுள்ள மோட் டார்களுக்கும் ‘சன் கபாசிட்டர்’ வேண்டுமென்று கூறி யுள்ளார்கள். ‘சன் கபாசிட்டர்’ வைத்தால் தான் மின் இணைப்புத் தருவோம் என்று கூறுகிறார்கள். ‘சன் கபாசிட்டர்’ என்பது இப்போதுதான் நடைமுறையில் வந்துள்ளது. இதற்கு முன்பு பல ஆண்டுகளாக அது நடைமுறையில் இல்லை. ஐந்து ஹார்ஸ்பவர் உள்ள ஒரு மோட்டாருக்கு ஒரு சன் கபாசிட்டர் வேண்டு மென்று சொன்னால் கிட்டத்தட்ட ரூ. 600, ரூ. 700 வரை செலவு செய்யவேண்டியிருக்கிறது. விவசாயிகள் கடு மையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப் போதுதான் சமீப காலத்தில் மழை பெய்திருக்கிறது. எனவே ஏற்கெனவே இணைப்புப் பெறப்பட்ட மோட்டார் களுக்கும் இந்த ஸண் கபாசிட்டர் வேண்டுமென்று சொல்லக் கூடிய நிலையை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின் இணைப்பு தரும்போது கிராமப் பஞ்சாயத்துப் பணிகளுக்காக இருந்துவருகிற மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கும், தெரு விளக்குகளுக்கும் மற்றவர்களுக்குள்ள சீனியாரிட்டி வரிசையில் இல்லாமல் இவற்றிற்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் அப்படி மின் இணைப்பு கொடுக்கும்போது அதற்குரிய உபகரணப் பொருள்கள் வாங்கும்போது விவசாயிகள் வாங்கு வதைப் போல் ஊராட்சி மன்றத் தலைவர்களும் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். விவசாயிகள் என்றால் அவர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் வாங்குகிறார்கள் ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர் எந்தப் பணத்தில் இருந்து அப்பொருள்களை வாங்கமுடியும்! அப்படி வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே ஊராட்சி மன்றத் தலைவர்கள் வாங்கும் மோட்டார்களுக்கான உப கரணங்களைப் பொறுத்து வழிமுறையோடு எல்லாவற்றையும் கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண் டால் அங்குள்ள விவசாயிகள் மின்சாரத்தையே முழுக் முழுக்க நம்பி வாழக் கூடியவர்கள். அப்படிப்பட்ட மாவட்டம் அது. அந்த மாவட்டத்தில் அதிகமாகப் பயி ராவது நெல், அடுத்து கரும்பு. திருவண்ணாமலை, செங்கம், போளூர் போன்ற இடங்களில் இவற்றைத்தான் அதிக மாகப் பயிர் செய்கிறார்கள். நேற்றையதினம்கூட



வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 125 வீதம் வழங்க அக்டோபரில் சிபார்சு செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையை எடுத்துக் கொண்டால் அங்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 109 தான் வழங்கப்படுகிறது. அதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். பலமுறை கரும்பு விவசாயிகள் உற்பத்தி சங்கத் தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்துக் கூறியிருக்கிறார்கள்.

ஆகவே கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வழங்கப்படும் ஒரு டன்னுக்கான கரும்பு விலையை ரூ. 109 என்றிருப்பதை மாற்றி அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் ரூ. 125 என்று வழங்கவேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு மாதாமாதம் டிமான்ட் நோட்டீஸ் வழங்குவது வழக்கம். டிமான்ட் நோட்டீஸ் ஒவ்வொரு மாதமும் விவசாயிகளுக்குச் சரியாக வந்து சேருவதில்லை. அப்படி டிமான்ட் நோட்டீஸ் உரிய காலத் தில் விவசாயிகளுக்குக் கிடைத்தால்தான் அவர்கள் எவ் வளவு தொகை என்பதைத் தெரிந்து கொண்டு பணம் கட்ட வாய்ப்பாக இருக்கும். காலாகாலத்தில் டிமான்ட் நோட்டீஸ் கொடுப்பதில்லை. காலம் கடந்து டிமான்ட் நோட்டீஸ் கொடுத்து பணம் கட்டத் தவறிவிட்டால், காலத் தோடு கட்டத் தவறிவிட்டால், வட்டியோடு வசூலிப்பது என்பது தவிர்க்கப்பட வேண்டும். நோட்டீஸை உரிய காலத்தில் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த மின் கட்டணம் வசூல் செய்வதில் கிராமங்களில், இரண்டொரு கிராமங்களை ஒன்று சேர்த்து ஒரு நாள் குறிப்பிட்டு அந்த நாளில் வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன். வணக்கம்.

*திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977—78-ம் ஆண்டுக்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

[திரு. க. இரா. சின்னராசு] [1978 சனவரி 3

மின்சார வாரியத்தைப்பற்றி பலர் பலவிதமாக பேசி
ளுலும் இதுவரை தமிழகத்தில் எட்டு லட்சம் பம்பு செட்டுக்
களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்
சர் அவர்கள் கூறினார்கள். மேலும் இரண்டு லட்சம்
விண்ணப்பங்கள் இருக்கின்றன என்றும். இதில் 50 ஆயிரம்
விண்ணப்பங்களுக்கு சர்வீஸ் தரப்போவதாகவும் கூறி யிருக்
கிறார்கள். இதற்காக இன்றைய அரசைப் பாராட்டி வர
வேற்க ஆசைப்படுகிறேன். மின்சாரம் வழங்குவதில் சிறு
விவசாயிகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று இந்த
அரசை நான் வேண்டி வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசு
என்று நாம் கொள்கை முழக்கம் செய்து கொண்டிருக்கின்ற
இந்த நேரத்தில் சிறு விவசாயிகளுக்கு மிக முக்கியத்துவம்
கொடுக்க வேண்டும் என்று மீண்டும் நான் கேட்டுக் கொள்ள
ஆசைப்படுகிறேன். கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுக்
கின்ற நேரத்தில் இடையிலுள்ள தூரம் 400அடி 300
அடி 250 அடி இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்
படுகிறது. இந்த நிலையைத் தளர்த்தவேண்டும். ஏற்கனவே
பல ஆண்டுகளாக பல கிணறுகளை வெட்டியவர்கள் மின்
இணைப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்
படிப்பட்டவர்களுக்கு விதியைத் தளர்த்தி மின் இணைப்பு
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு இந்த அரசு முக்கியத்துவம் தந்து
மின்சார வரியை 16 காசிலிருந்து 14 காசாக மாற்றி
யிருப்பது வரவேற்கத்தக்க ஒரு காரியமாகும். திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 12 பைசா என்
றிருந்த போது ஒரு காசு குறைக்கவேண்டும் என்று விவ
சாயிகள் போராட்டம் நடத்திய காலத்தில் பல விவசாயி
களைச் சுட்டுத் தள்ளியதோடு மட்டுமல்லாமல், ஒரு பைசா
கூடக் குறைக்கப்படாமல் இருந்ததை நாம் பார்த்தோம்
இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சி காலத்தில் தாய் உள்ளத்தோடு நமது
புரட்சித் தலைவர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு இரண்டு
காசுகள் குறைத்திருப்பதை இந்த நாட்டு மக்கள்வர
வேற்காமல் இருக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.



1978 சனவரி 3] [திரு. க. இரா. சின்னராசு]

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்காலத்தில் மின்சார
வாரியத்தில் மிகவும் அதிகமான அளவில் லஞ்ச லாவண்யம்
இருந்தது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அப்பேர்ப்
பட்ட நிலை நமது அரசு காலத்தில் இல்லாதவாறு இருக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,
அதே நேரத்தில் பஞ்சாயத்துகளில் எல்லாம் மின் விளக்குகள்,
தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை என்று சொன்னார்கள்.

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், பல
கிராமங்களிலும் தெரு விளக்குகள் எரிவதில்லை என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது இப்போது
பஞ்சாயத்து தலைவர்கள் மூலமாக பல்புகளை வாங்கிப் போட்டுக்
கொள்ள வேண்டும் என்று ஒரு புதிய முறையை கொண்டு
வந்திருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்தால் சரியாக இராது.
பஞ்சாயத்து தலைவர்கள் தங்களிடம் அதற்குரிய வருமானம்
இராது என்று சொல்லுகிறார்கள். ஆகவே மின்சார
வாரியமே இந்த மின் விளக்குகளை எல்லாம் அமைத்துக்
கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தளவில், நிலத்தடி
நீர் சரியானபடி இல்லை என்று கூறுகிறார்கள். சமீப
காலத்தில் பெய்த மழை காரணமாக நல்லமுறையில் நிலத்
தடி நீர் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
மேலும் தர்மபுரி மாவட்டத்தை பின் தங்கிய மாவட்டம்
என்று வாயளவில் சொல்லுவதோடு நின்று விடாமல் மின்
இணைப்பு விஷயத்தில் தர்மபுரி மாவட்டத்திற்கு முன் உரிமை
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப்
பொறுப்பையேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் பாசனத்
துறைக்கும் சேர்ந்து பொறுப்பு வகித்து வருவதால், நான்
சொல்வது தவறாக இராது என்று நம்புகிறேன். தர்மபுரி
மாவட்டத்தில் மலைப்பகுதிகள் அதிகமாக இருக்கிறது. பல
காட்டாறுகள் அங்கே ஓடுகின்றன. அதில் எல்லாம் சிறிய
சிறிய ஏரிகளைக் கட்டிவிட்டால், நிலத்தடி நீர்
பஞ்சமில்லாமல் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்கும்
அரசுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு
பல ஏரிகளைக் கட்டுவதற்கு டிப்பார்ட்மென்ட் மூலமாக பல
திட்டங்கள் போடப்பட்டு அரசுக்கு அனுப்பியிருக்கின்றன.
அதையெல்லாம், அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.
முன்பு இருந்த அரசு காலத்தில் இப்படிப் பல திட்டங்கள்
போடப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் அப்படியே

வைத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றி, செம்மையான
முறையில் செயல்படுத்துவார்கள் என்கின்ற ஒரு நம்பிக்கை
எங்கள் மாவட்டத்து மக்கள் வைத்துக் கொண்டிருக்
கிறார்கள். ஆகவே இந்த ஏரிகளை எல்லாம் கட்டி முடிக்க
வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30.]

தர்மபுரி மாவட்டத்திலே இப்போது சிறு தொழில்கள்
முன்னேறிக் கொண்டு வருகின்றன. அப்படி முன்னேறிக்
கொண்டு வருகின்ற நேரத்தில், சிறுதொழில் செய்ய முன்
வருகின்றவர்களுக்கு மின்சார இணைப்புகள் உடனடியாகத்
தரவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கி
றேன். சிறுதொழில்களின் மூலம் இந்த நாட்டின் பொருளா
தாரம் பெருகுவதற்கான வழிவகை இருக்கின்றது. அதன்
மூலம் தொழில்கள் வளருவதற்கான வழிவகைகள் இருக்
கின்றன. அதனால் தொழிலாளர்கள் நன்மை பெறக்கூடிய
வழிவகைகள் இருக்கின்றன. ஆகவே, இந்த சிறுதொழில்
களுக்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்று நான் இந்த
அரசை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, முன்பிருந்த அரசு காலத்திலே தற்
போது மின்சாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும்
அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களால் பாராட்டப்
பெற்றிருக்கின்றார்கள். ஆகவே, அப்பேர்ப்பட்ட அமைச்சர்
அவர்களுக்கு, இப்போதும் இந்த இலாகாவின் மூலமாகவும்
பாராட்டுக்கள் பெறுவதிலே சிரமம் இருக்காது என்று நான்
நம்புகிறேன். அப்பேர்ப்பட்ட அமைச்சராகவும், இந்தத்
துறையிலே அனுபவமுள்ளவராகவும் அமைச்சராகவும் அவர்
கள் இருக்கின்ற காரணத்தினாலே, இப்போது மின்சாரத்
திருட்டுப் போகின்றது என்று சொல்கின்றார்களே, அதை
எப்படித்திருடுகின்றார்கள் என்பதைக்கண்டுபிடிப்பதிலும் தன்
திறமையைப் பயன்படுத்துவார்கள் என்று நான் கூறுவதிலே.
எவ்விதமான தவறும் இருக்காது என்று நான் கருதுகிறேன்
எனவே, இந்த மின்சாரம் எப்படி திருடப்படுகின்றது
என்பதைக் கண்டுபிடித்து, அப்படித் திருடுகின்றவர்களுக்கு
கடுமையான சிறைத் தண்டனை போன்றவற்றை அளிக்க ஒரு
சட்டம் வேண்டுமானாலும் போட்டு, அதைக் கண்டு பிடிக்க
தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தின்மீது



எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்
களுக்கு மீண்டும் நன்றி கூறி என் உரையை முடித்துக்
கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. சி. பழனிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977—78 ஆம் ஆண்டு
நிதிநிலை அறிக்கையின்மீது நான் பேச இருக்கிறேன்.

சேலம் மாவட்டம் 1973-லிருந்து 1977 அக்டோபர்
வரையில் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்ட
மாகும். அந்த மாவட்டத்தில் கடந்த காலத்தில், தண்ணீர்
கிணறுகளிலே இல்லாமல், மின் இணைப்பு இல்லாமல், அந்த
மாவட்டத்திலே உள்ள கிணறுகள் எல்லாம் மிகவும் பாதிக்கப்
பட்டன. எனவே, முன்னே கொடுக்கப்பட்டிருந்த மின்
இணைப்புகள்கூட துண்டிக்கப்பட்டிருந்தன. அப்படி துண்டிக்
கப்பட்ட மின் இணைப்புகளுக்குக்கூட இப்போது மின் இணைப்பு
கொடுக்க வேண்டுமென்று கேட்டால், முன்பு எப்படி
மின் இணைப்பு வாங்கினீர்களோ அப்படி மின் இணைப்பு
வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றார்கள். வறட்சி
யால் முன்பு கிணற்றில் தண்ணீர் இல்லாதபோது, அதிலே
யிருந்த மின் மோட்டார்கள் இயங்காமல் இருந்தன. அதற்
கான கட்டணமும் கட்டப்படாமல் இருந்தது. ஆனால்,
இப்போது மின் கட்டணம் கட்டுகிறோம் என்று சொன்னாலும்
கூட, அங்குள்ள டிவிஷனல் என்சினியர், சூபரின்டென்டிங்
என்சினியர் ஆகியோர் மின் இணைப்பு கொடுக்க மாட்டோம்
என்று கூறுகிறார்கள். இப்போது கிணற்றிலே தண்ணீர் வந்
திருப்பதால், உடனடியாக அப்படிப்பட்ட கிணறுகளுக்கு
மின் இணைப்பு கொடுக்க வெண்டுமென்று அமைச்சர் அவர்
களைக் கேட்டுக் கொள்கிறேன். கடுமையான வறட்சியின்
காரணமாக முன்பு அப்படி நிலைமை இருந்தது. ஆகவே,
அந்தப் பழைய கிணறுகளுக்கெல்லாம் உடனடியாக மின்
இணைப்பு கொடுக்க வேண்டும்.

மேலும், மின் கட்டணம் சிறு விவசாயிகளுக்கு 14 பைசா
வாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தக்க
தாகும். இந்த 14 பைசாவை எல்லா விவசாயிகளுக்கும்
கொடுக்க வேண்டும். காரணம் என்ன வென்றால், ஒரே
கிணற்றின் ஒரே சர்வீஸ் கனெக்ஷனிலே இரண்டு நிலங்கள்
அதாவது ஒருவர் 2 ஏக்கரும், மற்றொருவர் 5 ஏக்கரும்
வைத்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே, இவர்களுக்கும்
ஒரே முறையான கட்டணம் வசூலிக்க வேண்டும். காரணம்,

சேலம் மாவட்டத்திலே உள்ள கிணறுகள் மிகவும் ஆழமாக
உள்ளது. ஆகவே சேலம் மாவட்ட விவசாயப் பெருங்குடி
மக்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலும், கட்டணம்
வசூலிப்பதிலும் அரசு ஒரு முன் உதாரணமாக நின்று, அவர்
களுக்கு அதிகச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய மின்
இணைப்பைப் பொறுத்த வரையில், ஆத்தூர் தாலுகாவைப்
பொறுத்தவரையில், ஒரு கிணற்றுக்குக்கூட மின் இணைப்பு
கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

வாட்டர் க்ளீயரன்ஸ் சர்டிபிகேட் கொடுக்க
வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதனால் ஆத்தூர்
தாலுகாவைப் பொறுத்தவரை மின் இணைப்புக் கிடைக்காமல்
கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நிலத்தடி நீர்பற்றி வாட்டர்
கிளீயரன்ஸ் சர்டிபிகேட் பெற வேண்டுமென்ற முறையை
ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கட்டணம் கட்டவில்லை என்றால் பியூசைப்
பிடுங்கி விடுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் பெரும்
தொழிலதிபர்கள் லட்சக் கணக்கில் மின் கட்டணத்தைக்
கட்டாமல் இருக்கிறார்கள். இந்த அரசு விவசாயிகளுடைய
பிரச்சினையைப் பரிசீலிக்காமலே இருக்கிறார்கள், அவர்க
ளுக்கு எந்தவிதச் சலுகையையும் செய்ய முன்வரவில்லை.
அவர்கள் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய
வர்கள்; அவர்கள் தேசத்தின் முன்னேற்றத்திற்கு அடி
கோலுகிறவர்கள்; உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்
ஆவர். ஆகவே, இந்த அரசு விவசாயிகள் நலனை மிகவும்
பேணிக் காப்பாற்ற வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் அதிகமான கிணறுகள் இருக்கின்
றன ; அதிக ஆழம் வெட்ட வேண்டிய நிலைமையில் இருக்கி
றார்கள். ஆகவே, அனைத்து விவசாயிகளுக்கும் மின்
கட்டணச் சலுகையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகள் குடிநீரை எடுப்பதற்
காக மின்சாரக் கட்டணம் யூனிட்டுக்கு 30 பைசா செலுத்த
வேண்டியிருக்கிறது. ஏற்கனவே நிதிப் பற்றாக்குறையில்



இருக்கும் நிலையில் அவர்களுக்கு இந்தக் கட்டணத்தைக்
குறைத்து சலுகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

தெரு விளக்குகளுக்கு பல்புகள், டியூப் லைட்களைப் போடும்
பொறுப்பை ஊராட்சிகள், பேரூராட்சிகளுக்குக் கொடுக்கா
மல் முன்பு இருந்த நிலை போல் மின்வாரியமே ஏற்றுக்
கொள்ள வேண்டும். பல்புகளை மின்வாரியம் வாங்கும்போது
ஒரு பல்பு ரூ. 1.30 பைசா ; ஆனால் பேரூராட்சிகள் தனிப்
பட்ட முறையில் வாங்கினால் ரூ. 2·50 கொடுத்து ஒரு பல்பை
வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையைச்
சீர் செய்ய முன்பு இருந்த நிலைமையையே மறுபடியும்
கொண்டு வரவேண்டும்.

இப்போது புதிய முறையில் கெபாசிடர் வாங்கி வைக்க
வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதன் விலை அதிகமாக
உள்ளதால் அவ்வாறு வாங்கி வைக்க வேண்டுமென்று
சொல்லுவதைத் தவிர்க்க வேண்டும். சேலம் மாவட்டத்
திற்கு இப்போது கொடுக்கக்கூடிய 50,000 மின் இணைப்பு
களுக்கு அதிகச் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இந்தப் பகுதியில் கிணறுகள் ஆழமாக
உள்ள காரணத்தாலும் பத்து ஏக்கர் உள்ளவர்களுக்குக் கூட
அதிக வருமானம் இல்லாத காரணத்தால் எல்லோருக்கும்
யூனிட்டுக்கு மின் கட்டணம் 14 பைசா என்று ஆக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் துணைத் தலைவ
ரவர்களே, தமிழ்நாடு மின்வாரியத்தின் 1977–78 ஆம்
ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது நடைபெறுகிற இந்த
விவாதத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் எடுத்துக் கூற
விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டில் எழுந்திருக்கக்கூடிய
மிகப் பெரிய பிரச்சினை என்னவென்றால், ஊராட்சிகள்,
பேரூராட்சிகள், நகராட்சிகள் தெரு விளக்குகளைப் பராமரிக்
கும் பிரச்சினைதான் இன்றைக்கு இந்த நாட்டில் இந்த
மின்சாரத்துறையைப் பொறுத்தமட்டில் மிகப் பெரிய பிரச்சி
னையாக இருக்கிறது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.
ஏற்கனவே நிதிநிலைப் பற்றாக்குறையில் இருக்கும் ஊராட்சி
கள், நகராட்சிகள்மீது அதிகப்படியாக இந்தப் பளுவையும்
சுமத்துவோமானால் உள்ளபடியே இந்த நாட்டில் மின்
விளக்குகள் எரிவதற்குப் பதிலாக இந்த நாடே இருண்டு
விடுமோ என்று எண்ணும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன
என்பதை இந்த மாமன்றத்தில் கூற விரும்புகிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1978 ஜனவரி 3

குறிப்பாக, சமீபத்தில் திருப்பூர் நகரத்தில் சென்று பார்க்கிறபோது அவர்கள் சொன்னார்கள், ஆயிரக் கணக்கான மின் விளக்குகள் எரியாமல் நகரமே இருண்ட நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவூர் ஊராட்சியிலே அந்த நிலைமை ஏற்பட்டு, அங்கே உள்ள ஊராட்சித் தலைவரும் மற்றவர்களும் மின்சார வாரியத்தை எதிர்த்து உண்ணாவிரதமே இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. எரியாத விளக்குகளைக் கவனித்து மின்விளக்குகளைப் பொருத்துவதை விட்டுவிட்டு அதைப் போடாமல் மின்சார விளக்குக் கம்பங்கள் பராமரிப்பதற்கான செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்வது சரியல்ல. தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் நகராட்சிகளும் இதனால் பாதிக்கப்படக் கூடிய நிலைமையில் இருக்கின்றன. மக்கள் நலனுக்காக அவைகள் திட்டங்களை போடமுடியாத நிலைமை இருக்கிறது.

[பிற்பகல் 12-40.]

அதைப்போன்று சேலம் நகரிலே ஆயிரக் கணக்கான கிட்டத்தட்ட 3 ஆயிரம் விளக்குகள் எரியவில்லை என்று சொல்கிறார்கள். இதை நீக்குகின்ற வகையிலே—எப்படி மின்சார வாரியத்திலே உற்பத்தியைக் கவனிப்பதற்கு என்று தனி ஒரு அமைப்பும், பராமரிப்பிற்கும், வழங்குதலுக்கும் தனிப் பிரிவும் இருக்கிறதோ—அதைப் போன்று இந்தக் கம்பங்களைப் பராமரிப்பதற்கும் தனியான அமைப்பு போன்ற ஒன்றை ஏற்படுத்தி இந்தத் துறையை நவீனப்படுத்துவதன் மூலம், மேலும் இதற்கு வலிவூட்டுவதன் மூலம் இந்த நாட்டில் மின்சாரம் விநியோகிக்கும் பணியை செம்மையாக செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்சார சிஸ்டம் 1–4–1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 3½ வருடங்களுக்கு மேல் ஆகிறது. இந்தக் காலத்திலே கிட்டத்தட்ட 9 சூப்பிரன்டெண்டெண்டிங் எஞ்சினியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சம் ஒரு உயர் அதிகாரி, எஸ்.இ. போன்ற அதிகாரிகள் அந்த சிஸ்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் 1½ லிருந்து 2 வருடங்களாவது ஆகும். அப்படி



1978 சனவரி 3] [திரு. பொ. விஜயராகவன்]

நிலைமைகளை அந்த இடங்களிலே இருந்தால் தான் அந்த பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முடியும், ஆனால் 3, 4 உள்ள மாற்றப்படுகிற நிலைமை மாதங்களுக்குள்ளாக ஒரு எஸ்.இ. ஆகக் கூடிய ஸ்டேஜில் வருமானால் அதுவும் ரிடையர் அவர்களால் போடுவார்களானால் அங்கு உள்ளவர்களை அந்த நிலைமையிலே அவர்களைப் என்ன செய்ய முடியும்? அந்த நிலைமைகளை அறிந்து போட்டால் அந்தசிஸ்டத்தில உள்ள தங்களுடைய கொள்வதற்குப் பதிலாக அவர்கள் கொண்டிருப்பார்கள், பென்ஷனைத் தான் பார்த்துக் முன்னால் என்ன தங்கள் பதவியிலிருந்து போவதற்கு அவைகளைத்தான் செய்து என்ன செய்ய வேண்டுமோ திட்டத்தைப் புரிந்து கொண்டு கொண்டு இருப்பார்கள், இதனால் கன்னியாகுமரி நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். இருக்கிறவர்கள் ரிடையர் மின்சார சிஸ்டத்தை அங்கே நிலைமைதான் மெண்ட் சிஸ்டம் என்று அழைக்கக்கூடிய இருக்கிறது.

கடந்த காலத்தில் மின்சார வாரியத்திலே நடைபெற்ற போராட்டத்தின்போது ஆயிரக் கணக்கான ஊழியர்கள் பழி வாங்கப்பட்டு இருக்கிறார்கள். தூத்துக்குடி பகுதியில் கிட்டத்தட்ட 600-க்கு மேற்பட்டவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எண்ணூர் திட்டம், இன்னும் மற்றத் திட்டங்களைச் சேர்ந்தவர்கள் போராட்டத்திலே ஈடு பட்டார்கள் என்ற காரணத்தினால் நாலாயிரத்திற்கும் மேற் பட்டவர்கள் துன்புறுத்தப்பட்டு இருக்கிறார்கள். அச்சுறுத் தப்பட் டிருக்கிறார்கள். எண்ணூர் அனல் மின் நிலையத் திட்டத்தைப் பொறுத்தவரையில் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த தொண்டர்களாலும், தோழர்களாலும் துன்புறுத்தப்படக் கூடிய சூழ்நிலை இருக்கி றது. இன்னும் இம்மாதிரி வருட மத்தியில் இப்படி இட மாற்றம் செய்யப்படுகிற காரணத்தால் அவர்கள் தங்க ளுடைய பணியைச் செய்ய முடியாதது மட்டுமல்ல, தங்க ளுடைய குடும்பங்களுக்கு ஏற்படுகிற இடையூறுகளைக் களைய முடியாத சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு எங்கள் குமரிமாவட்டத்திலே இந்தியன் ரேர் எர்த்ஸ் நிறுவனம் என்று சொல்லப்படும் நிறுவனம் மணவாளக்குறிச்சியில் இருக்கிறது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் அதில் பணியாற்றுகிறார்கள். மத்திய அரசுக்குச் சொந்தமான அந்த நிறுவனத்தில்

இன்றைக்கு மின்சாரக் கட்டணத்திற்காக சலுகை கோரி வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தச் சலுகையை இந்த அரசு அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தொழில் வளம் குறைந்த குமரி மாவட்டத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்க்கும் பெரிய நிறுவனம் அந்த இந்தியன் ரேர் எர்த்ஸ் நிறுவனம். இதே சலுகைகளை கேரள மாநிலம் வழங்கியிருப்பதால், இன்றைக்கு இதனுடைய மூலப்பொருட்களைக் கொண்டு செய்யும் தொழில்கள் கேரள மாநிலத்திற்குப் போகும் நிலையைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்த நிறுவனத்திற்கு உட்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு மேலும் பல பொருட்களைத் தயாரிக்கவும், மேலும் மேலும் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வருவதற்கான வகை செய்யும் முறையிலும் இந்த மின் கட்டணச் சலுகையைப் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஸீரோ பாயின்ட் கோதையாறு என்று சொல்லப்படும் மின் வாரியத்திற்குச் சொந்தமான சாலை பழுதடைந்து பாழ்பட்டு இருக்கும் சூழ்நிலையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைச் செப்பனிடும் வேலையில் இன்னும் மின்சார வாரியம் தாமதித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அந்த ஸீரோ பாயின்ட் கோதையாறு சாலையைப் பழுது பட்டிருக்கின்ற அந்தச் சலையைப் பழுது பார்த்து செப்பனிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பரளியாறு நீர் மின் நிலையம் பற்றி மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பியிருப்பதாகவும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நீர் மின் நிலையத்திற்கு முன்னுரிமை அளித்து விரைவில் தொடங்கும்படி இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன், பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சிறு தொழில் தொடங்குகின்ற நிலைமைகளில் அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்குவதில் பல கால தாமதங்கள் ஏற்படுகின்றன என்ற ஒரு குற்றச்சாட்டினைப் பலரும் எடுத்துக் கூறுகின்ற நிலைமையை இங்கே காண்கிறோம். தமிழ்நாட்டைத் தொழில் வளம் சிறந்த ஒரு நாடாக மாற்ற, சிறுதொழில்களில் நாம் இன்னும் சிறப்புப் பெறுகின்ற அளவிற்கு செய்ய, அவற்றை அதிகமாகத் தொடங்கும் அளவிற்கு



சிறுதொழில்களுக்கு மின்னிணைப்பு வகை செய்வதற்கு எந்தவிதமான இடர்ப்பாடும் இல் கொடுக்கும் நிலைமைகளில் கொடுத்து தொழில்துறையை லாத வகையில் விரைவில் இந்த மின்சார வாரியம் இயங்க ஊக்குவிக்கும் முறையில் வேண்டுகோளை நான் தெரி வேண்டுமென்ற என்னுடைய வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி வித்துக்கொண்டு எனக்கு விடை பெறுகிறேன்.

திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவையின் துணைத் தலைவரவர்களே, என்னுடைய உரையைத் துவங்குவதற்கு முன்னாலே பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அண்மையில் புதுக்கோட்டையில் நடைபெற்ற கார் விபத்தில் நம்முடைய துணைத் தலைவர் அவர்களுக்கு கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டதாகப் பத்திரிக்கையில் செய்தி பார்த்தேன். அந்த விபத்திலிருந்து நல்ல விதமாகத் தப்பித்து, பூரண சுகத்தோடு வந்திருப்பதற்காகத் துணைத்தலைவரவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே சமர்ப்பித்திருக்கின்ற மின்சார வாரிய ஆண்டு அறிக்கையின் பேரில் பல கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பிருந்தாலும், நேரத்தின் அருமை கருதி சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன். இன்றைக்கு விஞ்ஞான உலகத்திலே மின்சாரம் அடிப்படைத் தேவையாக அமைந்திருக்கிறது. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றைக்கு மின்சாரம் அடிப்படைத் தேவையாக இருக்கிறது. விவசாயவளர்ச்சிக்கு என்றாலும், தொழிற்துறைமுன்னேற்றத்திற்கு என்றாலும் இன்றைக்கு மின்சாரம் அத்தியாவசியத் தே வயாக அமைந்திருக்கிறது.

கடந்த காலத்தில் நடைபெற்ற சட்டமன்ற விவாதத்தைப் படித்துப் பார்த்தோமேயானால், எதிர்க்கட்சிக்காரர்கள் மாத்திரம் அல்ல, ஆளுங்கட்சிக்காரர்கள் கூட மிகவும் கடுமையாக இந்த இலாக்காவை விமர்சித்திருக்கிறார்கள் என்பது தெரிய வரும். அப்படி விமர்சித்திருப்பதற்குக் காரணம் என்ன வென்றால், மின்சாரம் இன்றைக்கு எல்லாத் துறைகளையும் தொடுகிறது. எல்லாப் பிரச்னைகளுக்கும் மின்சாரம் தேவைப் படுகிறது, எனவே விவசாயிகள், தொழிலாளர்கள், தொழி

லதிபர்கள் போன்ற அத்தனைபேரும் மின்சார இலாக்காவைப்
பற்றி விமர்சிக்கும்பொழுது ஆளுங்கட்சித் தரப்பிலும், எதிர்க்
கட்சித் தரப்பிலும் கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகி
யிருப்பதை நாம் பார்க்கிறோம். இப்படிக் கடுமையாக விமர்
சிப்பதற்குக் காரணம், குறை காண வேண்டுமென்ற நோக்
கத்தோடு என்று எடுத்துக்கொள்ளாமல் சொல்லப்படும்
குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பாகப் பயன்
படுத்திக்கொள்ள வேண்டும், அந்த மனப்பக்குவத்தோடு
இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்றைக்குக் கடந்த கால நிகழ்ச்சியைப்
பற்றிக் குறை சொன்னாலும், தமிழ்நாட்டைப் பொறுத்த
வரையில் மின்சாரத் துறையில் நல்லதொரு முன்னேற்றம்
ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்
றைக்கு மின்சார உற்பத்தியில் இந்தியாவில் இரண்டாவது
இடத்தைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது, விவசாயத்திற்கு
மின்சாரத்தைக் கொடுப்பதிலே தமிழ்நாடு முன்னணியில்
இருக்கிறது.

(பிற்பகல் 12.50)

நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள், இந்த மன்
றத்திலே இந்த அறிக்கையை ஆரம்பித்து வைத்துப் பேசும்
பொழுது குறிப்பிட்டார்கள், கடந்த கால திராவிட முன்
னேற்றக் கழக அரசு மின்சார உற்பத்தித் திட்டங்களை நிறை
வேற்றுவதிலும், மின்சார விஸ்தரிப்புத் திட்டங்களை நிறை
வேற்றுவதிலும் சரியாக நடக்கவில்லையென்ற, குற்றச்சாட்
டைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டில், நம்முடைய
அமைச்சருக்கும் பங்கு உண்டு என்பதை நான் ஞாபகப்
படுத்த விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், திராவிட
முன்னேற்றக் கழக அரசாங்கத்திலே, உற்பத்தியை நாம்
கவனத்திலே கொண்டாலும், மின்சார விஸ்தரிப்புக்களை
நாம் கவனத்திலே கொண்டாலும், நல்ல காரியங்கள் நடை
பெற்றிருக்கின்றன என்பதை நாம் மறந்து விடமுடியாது.
இங்கே, நான் குறிப்பிட விரும்புவது, 'inorcase in
power gen ration' என்ற குறிப்பைப் பார்க்கும்போது,
முதல் ஐந்தாண்டுத் திட்டம்வரை 156 மெகாவாட்
வரை உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. முதல் ஐந்
தாண்டுத் திட்டத்திலே, அதாவது 1951—56-லே, 100 மெகா
வாட் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து,
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, அதாவது 1956—



61-லே 315 மெகாவாட் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அதே போல், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, அதாவது 1961—66 லே 799 மெகாவாட் அடிஷனலாக சேர்க்கப்பட்டிருக்கிறது. அடுத்து, 1966—67-ல் , 1967—68ல் 1968—69-ல், ஆக இந்த ஆண்டுகளிலே, பிளான் ஹாலிடே என்ற முறையிலே, ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படாமலிருந்த நிலைமையில், 100 மெகாவாட் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிறகு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, அதாவது, 1969—74-லே பார்க்கும்போது, 725 மெகாவாட் உற்பத்தித் திறன் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் நெய்வேலியையும் நாம் சேர்த்துக் கொள்வோமானால், 100 மெகாவாட் தமிழ் நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. எண்ணூரிலே, 110 மெகாவாட் 2—12—1975 லே நிறைவேற்றப்பட்டு கமிஷன் செய்யப்பட்டிருக்கிறது— உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கூட்டிப் பார்க்கும்போது, 1969—74-லே நெய்வேலி உற்பத்தியையும் சேர்த்துப் பார்க்கும் போது, 825 மெகாவாட் ; எண்ணூர் உற்பத்தி 110 மெகாவாட்டையும் சேர்த்தால், மொத்தம் 935 மெகாவாட் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏனென்றால், நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லும்போது, எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலே, கடந்த கால அரசாங்கம் செய்த காரியங்களிலே தவறுகள் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். நான், தெரிவிக்க விரும்புவது, ஒரு வெல்பேர் ஸ்கீமை நிறைவேற்றும்போது, பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசனங்கள் உள்ள காலனிகளுக்கு மின்சாரம் கொடுக்கும்போது, கொஞ்சம் செலவு அதிகமானாலும் பரவாயில்லையென்றுதான் இந்தக் காரியங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு, இந்தியாவிலே, 98 சதவீதம் கிராமங்களிலே மின்சார வசதி செய்யப்பட்டிருப்பது தமிழ்நாட்டில் தான் என்று நாம் பெருமையாகச் சொல்லிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. சுதந்திரம் பெற்ற 25 ஆண்டு நிறைவு விழாவின்போது மத்திய அரசாங்கத்திலே குறிப்பாக, அரிசன காலனிகளுக்கெல்லாம் மின்சார வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழக அரசுக் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.] [1978 சனவரி 3

தவருனவை என்று சொல்வதற்கில்லையென்பதை நான்
தெரிவிக்க விரும்புகிறேன். Increase in power generation,
generation capacity ஆகியவற்றைப் பார்த்துவிட்டோம்.

அடுத்து, நிதிநிலைமையைப் பார்க்கும்போது, அமைச்ச
ரவர்கள் தம்முடைய அறிக்கையிலே 9-வது பக்கத்திலே
"In the current year, revenue receipts are estimated at
Rs. 179·80 crores and expenses at Rs. 209·21 crores leaving a
deficit of Rs. 29·41 crores." என்று குறிப்பிட்டிருக்கிருர்கள்.
ரூ. 29 கோடி பற்ருக்குறை பட்ஜெட்டைச் சமர்ப்பித்
திருக்கிருர்கள். அதில், இன்னென்றையும் நாம் கவனத்தில்
கொள்ள வேண்டும். அதிலே, எப்படி பற்ருக்குறை என்று
பார்க்கும்போது, அதே 9-ம் பக்கத்திலே, "Contributions to
the Depreciation Reserve Fund is limited to Rs. 12·83 crores
out of Rs. 19·75 crores due. Interest of Rs. 19·60 crores due
to Government and contribution to the GRF of Rs. 2·89 crores
cannot be met" அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய
வட்டியைச் செலுத்தவில்லை, deprec at on குறைவாக
ஒதுக்கப்பட்டிருக்கிறது. GRF ரூ. 2 கோடி ஒதுக்கப்
படவில்லை. இவைகளையும் அமைச்சர் கொடுத்திருக்கிற
பற்ருக்குறையையும் சேர்த்துப் பார்க்கும்போது, ரூ. 57
கோடிக்கு மேல் பற்ருக்குறை என்ற நிலைமையைத்தான்
இன்றைய அறிக்கையில் நாம் பார்க்கிருேம். அவைகளைப்
பார்க்கும்போது நான் சொல்வது, Financ al posit on is not
sound இந்த மின்சார வாரிய நிதிநிலைமை திருப்திகரமாய்
இல்லையென்று நான் சொல்ல விரும்புகிறேன். 1974–75-லே
கிராஸ் ரெவின்யூ ரூ.144.52 கோடி, 1975–76-லே, கிராஸ்
ரெவின்யூ ரூ. 168,71 கோடி. contribution to reserves and
interest charges fully paid என்ற நிலைமைதான் இருந்தது.
இவைகளெல்லாம் முழுவதுமாகக் கொடுக்கப்பட்டிருக்
கின்றன.

இந்த நிலைமையைப் பார்க்கும்போது, நிதிநிலையிலே
திருப்திகரமாக இல்லை என்பதைத்தான் நான் அமைச்சர்
அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர்
அவர்கள் தங்கள் அறிவிப்பிலே சொல்லியிருக்கிருர்கள்.
Plan outlay for this year, 94 கோடி ரூபாய் என்று இந்த
ஆண்டுக்கு பிளான் அவுட்லே என்று சொல்லியிருக்கிருர்கள்.
இதை எந்த அளவுக்கு அமலாக்குவார்கள் என்று என்னலே
நம்பமுடியவில்லை. என்ருலும் கூட நம்முடைய அமைச்சர்
அவர்கள் அமலாக்குவார்கள் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.



1978 சனவரி 3] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

அடுத்த முக்கியமான பிரச்னை தொழிலாளர்கள்
பிரச்சினை. முதலில் ஜெனரேஷனைப் பற்றிப் சொன்னேன்.
இரண்டாவது நிதி நிலைமையைப் பற்றிச் சொன்னேன். இப்
போது தொழிலாளர் பிரச்னை. மின்சார வாரியத்தைப்
பொறுத்தவரையிலும் நம்முடைய உறுப்பினர் கோவிந்த
ராஜன் சொன்னதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்
கிறேன். இந்த அரசு என்ன காரணத்தாலோ தொழிலாளர்
விரோத அரசாகவே இருக்கிறது. இன்றைக்கு இந்தத்
துறையின் அமைச்சராக இருக்கிறவர்கள் ஒரு இன்ஜினியர்,
அவர் ஒரு தொழிற்சங்கத் தலைவராகவும் இருந்தவர்.
எனபதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்ருல்
மின்சார வாரியத்தைச் சார்ந்த ஊழியர்கள் பண்டிகை
அட்வான்ஸ் வேண்டுமென்று போராட்டம் நடத்தி, அவர்
களுக்குப் பண்டிகை அட்வான்ஸ் கொடுக்க மறுத்து அவர்
கள் ஆயிரக்கணக்கில் சிறைச்சாலைக்குச் செல்லும் நிலைமை
ஏற்பட்டதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
அது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். ஏனென்ருல் இது மிகவும்
சாதாரண பிரச்சினை. இந்த அளவுக்கு வந்திருக்க வேண்டுமா
என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அவர்கள் கேட்ட அந்த அட்வான்சைக் கொடுக்காமல்,
அவர்களிடம் பேச்சு வார்த்தையும் நடத்தாமல், மின்சார
ஊழியர்களை சிறைக்கனுப்பியது நியாயமா என்பதைக்,
கேட்க விரும்புகிறேன். ஆனல், தற்போது மின்சார
ஊழியர்களின் போராட்டம் முடிந்தது. மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சியாலே அந்தப் போராட்டம்
முடிந்தது.

இருந்தாலும் கூட அதனுடைய ஆஃப்டர் எஃபக்ட்டைப்
பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.
இன்றைக்கு தூத்துக்குடியிலே 350 பேர்கள், எண்ணூரிலே 35
பேர்கள், சென்னையிலே 81 பேர்களும், பேசின்பிரிட்ஜ்லே 3
பேர்களும், செங்கற்பட்டிலே 30 பேர்களும் இடம் மாற்றம்
செய்யப்பட்டிருக்கிருர்கள். இது நியாயமா என்று கேட்க
விரும்புகிறேன். வழக்குகளும் போடப்பட்டிருக்கின்றன.
அவைகள் இன்னும் திரும்பப் பெறவில்லை. தூத்துக்குடியிலே
622 பேர்கள் மீதும், எண்ணூரில் 98 பேர்கள் மீதும் உள்ள
வழக்குகள் இன்னும் திரும்பப் பெறப்படாமல் இருக்
கின்றன. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன். தொழிலாளர்களைப் பழி வாங்காதீர்கள், அரசியல்

கட்சிகளைப் பழிவாங்கிக் கொள்ளுங்கள் அவர்கள் தாங்கிக்
கொள்வார்கள். ஏனென்றால் இன்றைக்கு நடைபெறுகிற
காரியங்கள் எல்லாம் அரசியல் நோக்கத்தோடு, பழிவாங்கும்
நோக்கத்தோடு நடைபெறுகிறதோ என்று சந்தேகம்
வருகிறது. ஏனென்றால்,

Superintending Engineer, Kancheepuram, Chingleput Electricity System—Memo. No. SEC/Admn./2/A2/F/Wiremen/PR/16 77/77 date,d 19th December 1977.

என்ற மெமோவிலே—

" Under Rule 106 (*a*) of TNEB Service Regulations, helpers listed in Annexure are temporarily appointed as wiremen with time scale of Rs. 260—410 with usual allowances,... etc."

என்று இதிலே குறிப்பு இருக்கிறது. மேலும்—

Copy to the Junior Engineer/Assistant Engineer.

"If any of the individual participated in the illegal strike from 25th October 1977 and arrested by the police, the appointment orders need not be served on them, but the same may be returned to this office with reasons."

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1·00]

ப்ரமோஷன் கொடுப்பதற்கு, அரெஸ்ட் செய்தால்
ப்ரமோஷன் கொடுக்கக்கூடாது என்று சொன்னால் அது பழி
வாங்கும் நிலை இல்லையா என்று கூறிக்கொள்கிறேன்.

இன்னொரு குறிப்பு, நம்முடைய எண்ணூர் தெர்மல்
பவர் ஸ்டேஷனில் இருக்கும் அதிகாரி, சூப்பிரன்டெண்
டென்டிங் இன்ஜினியர் [ஆபரேஷன்], எண்ணூர் தெர்மல்
பவர் ஸ்டேஷன் மெட்ராஸ், ஒரு சர்க்குலர் அனுப்பி
இருக்கிறார். அந்த சர்க்குலரில்,

"It is observed that in the absence of the details of qualities and nature of work performed by the workers and their background has not been practically feasible to take any decision regarding the suitability of a person for a pticular type of work during emergencies.



They are also requested to ensure that an assessment report on the work is sent annually...."

என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு ப்ரோபார்மா
இருக்கிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

" Whether member of any Union, and if so, which Union"

Whether office bearer or any active member of the Union"

என்று ஒரு ரிப்போர்ட்டை, அந்த ப்ரோபார்மாவில்
அனுப்பச்சொல்லி இருக்கிறார்கள். எனவே அவர்கள் கேட்
டுள்ளது, எந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம்,
எதற்காகக் கேட்டுள்ளார்கள் என்றால் பழி வாங்கவேண்டும்
என்ற நோக்கத்தோடுதான் அந்தக் குறிப்புகளைக் கேட்டு
இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட
நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

அது மாத்திரமல்ல, இன்றைக்கு 10,000 பேர் மீது
ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 500 பேர்
ஊர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி
பிரச்னை உருவாக்கப்பட்டு இருக்கிற நேரத்தில் நான்
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, 'கன்டென்டட்
லேபர்' திருப்தியாகத் தொழிலாளர்கள் பணியாற்றும் சூழ்
நிலை இருந்தால்தான் ஒரு நிறுவனம் சரியாகப் பணியாற்ற
வாய்ப்பு இருக்கும், ஆகவே, அந்த ஊழியர்கள் மீது பழி
வாங்கும் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மின்சார வாரியத்திலே இன்றைக்கு, லேபர்
வெல்பர் ஆபீசர்களும், இன்டஸ்ட்ரியல் ரிலேஷன் ஆபீசர்
களும் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் யாருடைய
கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள் என்றால் மின்சார
இலாகாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். அவர்கள்
லேபர் டிபார்ட்மென்ட் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார இலாகாவிற்கு லீகல் அட்வைசர் இன்னும் நிய
மிக்கப்படவில்லை. கவர்ன்மென்ட் பிளீடர் பார்த்துக்கொண்டு
இருக்கிறார். ஆகவே, உடனடியாக ஒரு லீகல் அட்வைசர்
நியமிக்கவேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது, அக்கௌன்ட்ஸ் செக்ஷனை கம்ப்ளீட்டாக தனியாக வைத்து, அவர்கள் போர்ட்டின் கட்டுப்பாட்டில் வரவேண்டும். அந்தந்த இடத்தில் இருக்கும் பொறியாளர்கள் நிர்வாகத்தின்கீழ் வரக்கூடாது. அக்கௌன்ட்ஸ் பிராஞ்ச் என்பது தனியாக அமைக்கப்பட்டு அவர்கள் நேரடியாக போர்ட் கன்ட்ரோலில் வர வேண்டும்.

இந்த சட்டமன்றத்தில் ஏற்கெனவே இருந்த சுப்பையா ஒரு கேள்வியைக் கேட்டு இருந்தார்கள். மின்சார வாரியத்தில் அரிசனங்களின் எண்ணிக்கை, சதவிகிதம் எத்தனை என்று. அதற்கு விவரம் கொடுத்து இருக்கிறார்கள். அந்த விவரத்தில், ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் 8 சதவிகிதம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 8 சதவிகிதம் தான் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த மின்சார வாரியத்தில் பணிபுரிகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டிய எண்ணிக்கையை மின்சார வாரியத்தில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், சிறுபான்மை சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள் ஆகியோருக்கும் முறைப்படி கிடைக்கவேண்டிய விகிதத்தில் வேலையளிக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்னை. அம்பிகாபதி கூட எழுப்பினார்கள். மற்ற உறுப்பினர்கள் கூட சொன்னார்கள். அதாவது, மால்கோ நிறுவனத்தில் இருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி. இங்கே முதலமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள், 9 கோடி பாக்கி இருக்கிறது. அதை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அந்த மால்கோ நிறுவனம் கோர்ட்டுக்குச் சென்று அந்த 9 கோடி ரூபாயை வசூலிக்க முடியாமல் ஸ்டே வாங்கி வந்து இருக்கிறது. ஆனால் இன்னொரு பக்கத்தில் நிலைமை என்னவென்றால், 'அலை ஓசை' நிறுவனத்தில் அரசாங்கம் நடந்துகொண்ட நிலையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 'அலை ஓசை' நிறுவனத்தைப் பொறுத்த வரையில், பி.பி. அவர்களே நேரே சென்று நோட்டீஸ் வாங்குகிறார். ஆனால் இந்த மால்கோவைப் பொறுத்தவரையில், கவுன்டர் பெட்டிஷன்தான் போடப்பட்டு இருக்கிறது. இந்த பாரபட்சமான நிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 9 கோடி ரூபாய் வசூலிக்க வழக்கு நடக்கிறது. நம்முடைய சார்பாக கவுன்டர் பெட்டிஷன்தான் போடப்பட்டிருக்கிறதே தவிர, எக்ஸ்பெடெய்ட் பெட்டிஷன் போடப்படவில்லை.



வசூலிக்க
ஆகவே, அரசாங்கம் அந்த 9 கோடி ரூபாயை கேட்டுக்
விரைவு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
கொள்கிறேன்.

சார், பாயின்ட் ஆப்
**திரு. எஸ். ஜே. இராமசாமி:** 9 கோடி ரூபாய் மால்கோ
கிளாரிபிகேஷன். இன்றைக்கு என்று சாதிக் பாட்சா
நிறுவனத்தில் பாக்கி இருக்கிறது பாக்கி எப்போதிலிருந்து
அவர்கள் சொல்கிறார்கள். அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது
இருக்கிறது, அப்போது என்ன அவர்களுக்குத் தெரி
என்பது மாண்புமிகு சாதிக் பாட்சா
யும், அதைக் கொஞ்சம் விளக்குவார்களா?

விளக்கலாம். எஸ். ஜே.
**திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா:** தெரியும். இங்கே 9
இராமசாமி அவர்களுக்கு எல்லாம் என்றெல்
கோடி பாக்கியா. விடமாட்டோம் வசூலிக்காமல் கொள்கிறேன்,
லாம் பேசப்பட்டது. ஆகவே நான் கேட்டுக் எல்லாம்
மாண்புமிகு எஸ். ஜே. இராமசாமிக்கு விவரம் சீக்கிரம்
தெரியும் என்பதால் அந்த பாக்கியை வசூலிக்க இன்னும்
நடவடிக்கை எடுக்க முயற்சி எடுப்பார்களானால் பம்பு
அதிகமான கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கலாம், கொடுக்கலாம்.
செட்டுகளுக்கு அதிகமாக மின் இணைப்பு தெரிவித்துக்
ஆகவே விரைவான நடவடிக்கை தேவை என்று
கொள்கிறேன்.

பொறுத்தவரையில்
அடுத்து, இடுக்கி பிராஜெக்டைப் நமக்கு மூன்று
கேரளாவிலே இருக்கிற சர்ப்ளஸ் மின்சாரம் செய்யப்பட்டுள்ளது என்று
ஆண்டுக்கு கிடைக்க ஒப்பந்தம் அதிகமான அள
கூறப்பட்டிருக்கிறது. அது போதாது. ஆண்டுகளுக்கு கிடைக்க
வுக்கு நீண்ட நாட்களுக்கு, 10, 50 கேட்டுக்கொள்கிறேன்.
ஒப்பந்தம் போட வேண்டுமென்று வேண்டுமென்று
லோ வோல்டேஜைப் பற்றியும் கவனிக்க அமைச்சரு
கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்லாமல், அதிகரிப்
டைய அறிக்கையிலிருந்து மின்சாரக் கட்டணத்தை கருதுகிறேன்.
பதற்கான ஒரு வாய்ப்பு இருப்பதாக நான் எனக்கு ஆட்
அப்படி நியாயமாக உயர்த்த வேண்டுமானால் போடுகிற மின்
சேபணையில்லை. ஆனால் இந்த மாநிலத்திலே ஒப்பிட்டுப்
சாரக் கட்டணத்தை மற்ற மாநிலங்களோடு ரேட்
பாருங்கள். தொழிற்சாலைகளுக்கு கொடுக்கப்படுகிற தொழில்
டோடு ஒப்பிட்டுப் பாருங்கள். இங்கே இருக்கிற போகிற
கள் எல்லாம் கேரளாவிற்கும் ஆந்திராவிற்கும் சிஸ்டம்
வாய்ப்பு இருக்கிறது. இந்த காண்ட்ராக்ட்

இந்த தூத்துக்குடி தெர்மல் ஸ்டேஷனில் அதிகமாக இருக்கிறது. அதை ஒழிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நேரமில்லாத காரணத்தால் விடைபெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையின் மீது நடந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பல்வேறு நல்ல கருத்துக்களை எல்லாம் வழங்கி இருக்கிறார்கள். அவை அத்தனைக்கும் பதில் சொல்வது என்றால், இருக்கின்ற நேரம் நிச்சயமாகப் போதாது. ஆகையால் எவை எவைகளுக்கெல்லாம் பதில் சொல்லாமல் விட்டு விடுகிறேனோ அவைகளை எல்லாம் புறக்கணிப்பதாகக் கருதிக்கொள்ளாமல் அவைகளை உரிய முறையில் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் இந்த வாரியத்தினுடைய நோக்கங்கள் என்று கருதப்படுபவை, முதலாவதாக அது பொது மக்களுக்கு பயன்படுகின்ற ஒரு நிறுவனம். மக்கள் எந்த அளவுக்கு மின் இணைப்பு பெறுகிறார்கள் என்பது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது நோக்கமாக அதிலே பணியாற்றுகின்ற அத்தனை அலுவலர்களும், அதேபோல் தொழிலாளர்களும் ஒருங்கிணைந்து உற்சாகத்தோடு பணியாற்றுகிற நிலைமையை உருவாக்க வேண்டும்.

மூன்றாவதாக தமிழ்நாடு மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் அது தன்னுடைய நிதி வசதியைப் பெருக்கிக் கொண்டு சிறந்த முறையில் தொடர்ந்து இயங்குவதற்கு வழி வகை காண வேண்டும்.

இந்த மூன்று நோக்கங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மட்டுமல்ல, பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய எந்த பொது நிறுவனத்துக்கும் பொருந்துவன. இந்த அடிப்படையிலேதான் தமிழ்நாடு மின்வாரியத்தைப் பற்றி சில கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்தத் துறையை முன்னால் வகித்தவர்கள். ஆகையால் அவர்களிடத்திலிருந்து நிறைய யோசனைகள் கிடைக்குமென்று



எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாந்தேன் என்று தான் நான் குறிப்பிட வேண்டும். அவர் சொன்னதெல்லாம், நீங்களும் அந்த அமைச்சரவையில் இருந்தவர்தானே என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு அமர்ந்துவிட்டார்கள். நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1969-ம் ஆண்டு எல்லா ஊர்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்று அறிவிப்பு வந்த உடனே கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அதை இரண்டு ஆண்டுகளுக்குள் வழங்க வேண்டுமென்று சொல்கிறபோது மின் உற்பத்தி திட்டத்திற்கான நிதி, மின் வினியோக திட்டத்திற்காக போய்விடும் என்று அந்த நேரத்தில் சொன்னார். 1969-லிருந்து 1975-ம் ஆண்டு வரையில் மின் உற்பத்திக்காக செலவிடப்பட்ட பணம் 88 கோடி ரூபாய் தான் என்பதும், அதே நேரத்தில் கிராம மின்விஸ்தரிப்பு திட்டத்திற்கு 102 கோடி ரூபாய் அளவுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் ஓரளவு தடைப்பட்டது என்பதை நான் குறிப்பிட்டேன். மின் உற்பத்தி திட்டம் மேற்கொள்ளப்பட்ட விவரங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆங்கிலத்திலே ஒரு பழமொழி இருக்கிறது,

''Proof of the pudding lies in its eating.'

அதைப் போல் மின் உற்பத்தித் திட்டங்கள் அவ்வப்போது தொடர்ந்து வந்து இருக்குமேயானால் அது மின் வெட்டுகளுக்கு இடமளித்திருக்கக்கூடாது. மின் வெட்டுகள் தொடர்ந்து 1972-73 ஆம் ஆண்டிலிருந்து வந்தது. ஆனால் 1975-ம் ஆண்டு பெய்த பெரிய மழையின் காரணமாக அந்த ஆண்டு மின் வெட்டு குறைக்கப்பட்டது. அந்த ஆண்டு தான் தமிழ்நாடு மின்வாரியத்தினுடைய நிதிநிலை கூட, ஓரளவுக்கு திருப்திகரமாக இருந்தது.

இங்கே பேசுகிறபோது தமிழ்நாடு மின் வாரியம் ஏற்கனவே நன்றாகத்தான் இயங்கி வந்தது. ஆனால் இப்பொழுது நஷ்டக் கணக்கை கொடுக்கிறார்கள் என்று சாதிக் பாட்சா அவர்கள் சொன்னது வேண்டுமென்றே ஒருவேளை அவர் இருந்த நேரத்தை குறிப்பிடுகிறார்களோ என்னமோ என்கிறது சந்தேகமாகத்தான் இருக்கிறது....

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 சனவரி 3

[பிற்பகல் 1-10.]

ஆனால் பொதுவாக மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் தொடர்ந்து அதனுடைய நிதி நிலைமை மோசமாக ஆரம்பித்தது, 1969-70-ல் இருந்து அது ஆரம்பித்தது. 1969-70-ல் அதனுடைய வருமானம் ரூ. 55 கோடி. ஆனால் செலவு ரூ. 59 கோடி. 1970-71-ல் வருமானம் ரூ. 61 கோடி. செலவு ரூ. 69 கோடி. 1971-72-ல் வருமானம் ரூ. 69 கோடி, செலவு ரூ. 77 கோடி, 1972-73-ல் வருமானம் ரூ. 79 கோடி, செலவு ரூ. 91 கோடி. 1973-74-ல் வருமானம் ரூ. 91 கோடி, செலவு ரூ. 110 கோடி. 1974-75-ல் வருமானம் ரூ. 122 கோடி, செலவு ரூ. 138 கோடி. 1975-76-ல் வருமானம் ரூ. 163 கோடி, செலவு ரூ. 160 கோடி. 1975-76-ல் மழை பெய்ததன் விளைவாக ஏராளமான அளவு நீர் மின்சார உற்பத்தி நிலையங்கள் மின்சார உற்பத்தி செய்ததன் விளைவாக நமக்கு கூடுதல் வருவாய் கிடைத்தது. அந்த ஆண்டு மட்டும் சரியாக இருந்தது. 1976-77;ல் வருமானம் ரூ. 188 கோடி. செலவு ரூ. 209 கோடி. 1977-78-ல் வருமானம் ரூ. 179 கோடி, செலவு ரூ. 220 கோடி. இது தொடருமானால் 1983-84-ல் இதே போக்கு நீடிக்குமானால் வருமானம் ரூ. 334 கோடி. செலவு ரூபாய் 415 கோடியாக ஆகக்கூடிய சூழ்நிலையில் மின்சார வாரியத்தின் நிதிநிலைமையைப் பொறுத்தவரையில் இருக்கிறது. ஆகவே, நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்று கூறுவது சரியான கருத்தாகாது என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவதாக இங்கே தொழிலாளர்கள் பிரச்னைபற்றிக் குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எந்தத் தொழிலாளர்களானாலும் சரி, அனைத்துத் தொழிற்சங்கங்களானாலும் சரி, அவைகளை எல்லாம் சரி சமமாக நடத்துவது என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. இன்றைக்கு மின்சார வாரியத்தின் நிலைமையைப் பார்க்கிறபோது அதைச் சரி செய்ய வேண்டுமானால் அங்குள்ள அதிகாரிகள் மட்டுமல்ல அங்கு பணியாற்றுகிற சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்களும் சிறந்த முறையில் உழைத்தால்தான் நாம் மின்வாரியத்தை செப்பனிட முடியும் என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்து இருக்கிறது. அப்படி இருந்தும் அண்மையில் என் ஒரு



1978 சனவரி 3] [திரு. ச. இராமச்சந்திரன்]

போராட்டம் ஏற்பட்டது என்று நீங்கள் கருதுவீர்களானால்
அந்தப் போராட்டம் யாரும் திட்டமிட்டு முன்கூட்டி அறி
வித்த ஏற்பாடு அல்ல.

இன்னும் சொல்லப்போனால் உண்மை என்னவென்றால்,
தொழிற்சங்கத் தலைவர்களுக்குக்கூட தெரியாமல் திடீரென்று
ஒரு வேலை நிறுத்தம் பேசின் பிரிட்ஜில் துவக்கினார்கள். இது
தான் உண்மை. எனக்குக் கூட அதற்குப் பிறகுதான் தக
வல் வந்தது. என்னவென்று விசாரித்துப் பார்த்ததில்
பேசின் பிரிட்ஜ் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில்
இதே போல் நான்கு ஐந்து தடவையாகச் செய்கிறார்கள்
என்று என்னிடம் சொன்னார்கள். ஒரு முக்கியமான
நிறுவனம், அதுவும் மின்சார நிறுவனம், மின்சாரம்
வழங்குவது என்பது ஒரு மருத்துவ மனை அல்லது குடி
தண்ணீர் அல்லது தெருவிளக்குகள் போன்ற அத்தியா
வசிய சேவைகளுக்கெல்லாம் அது தேவைப்படுகிறது.
அப்படிப்பட்ட மின்சார உற்பத்தி நிறுவனத்தில் இப்படி
திடீரென்று ஒரு வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால்
இன்னும் சொல்லப் போனால் ஒரு கட்டுப்பாட்டிற்கு, தொழிற்
சங்கத் தலைவர்களுடைய கட்டுப்பாட்டிற்குக்கூட அவர்கள்
வரவேண்டும் என்ற அந்த அடிப்படையில்தான் இந்த
அரசைப் பொறுத்தவரையில் கொஞ்சம் அதில் ஸ்ட்ரிக்ட்
என்று சொல்வார்களே. அதே போல் இருந்தோமே தவிர
தொழிலாளர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கம்
நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள்
தாற்காலிக வேலை நீக்கம் போன்றவற்றை எல்லாம் நீக்க
வேண்டும் என்று. எதிர்க் கட்சியைச் சார்ந்த தொழிற்
சங்கத் தலைவர்கள் என்னைச் சந்தித்துப் பேசினார்கள். தாற்
காலிக வேலை நீக்கம் எல்லாம் நீக்கப்பட்டு விட்டது. அதே
போல் வழக்குகளை திரும்பப் பெற வேண்டுமென்று கோரி
யிருக்கிறார்கள். காவல் துறையினர் போட்ட வழக்குகளைப்
பொறுத்த வரையில் கூட ஒன்றிரண்டு வன்முறைச் சம்பவங்
கள் குறித்தவை போக மற்றவற்றை நிச்சயமாக இந்த
அரசு வழக்குகளை நிச்சயமாக திரும்பப் பெறும் என்ற உறுதி
மொழியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் அக்கறையோடு பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை மீண்டும் ஏற்பட்டால் தான், எல்லோரும் ஒன்று பட்டு பணியாற்றினுல்தான் நிச்சயமாக இந்த நிறுவனத்தை நாம் ஆரோக்கியமான ஒரு நிறுவனமாகக் கொண்டுவர முடியுமே தவிர இல்லாமல் வேறு வழியே இல்லை என்பதை முதலில் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கம்ப்யூட்டர் வைப்பதினுலும், மற்ற காரணங்களினுலும் தொழிலாளர்கள் வேலை இழந்து போகக்கூடிய நிலைமை ஏற்படும் என்கிற ஒரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் எழுப்பினுர். அது மட்டுமல்ல ஏற்கனவே இந்த வேலையைச் செய்த ஒருவர்தான் இப்போது மின்சார வாரியத்திற்குத் தலைவராக வந்திருக்கிறுர் என்கின்ற அடிப்படையும் சொன்னுர்கள். நான் சொல்லிக் கொள்ளவிரும்புவது, இதுபற்றி அவர் என்னிடம் கடந்த ஆறு மாதத்தில் ஒரு வார்த்தைகூட பேசியதில்லை. ஆகவே இந்த அச்சத்திற்கே இடமில்லை.

அடுத்தபடியாக, பொதுமக்களுக்கு அதிகமாக பயன்படக்கூடிய நிலைமையை எடுத்துக் கொண்டால் தெருவிளக்குகள் எரிவதில்லை என்ற குறையை எல்லோரும் குறிப்பிட்டார்கள். இதற்கிடையில் கனம் உமாநாத் அவர்கள் டிரான்ஸ்பர் பற்றி கேட்கிறுர்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, அப்படி ஏதாவது தவறுன முறையில் டிரான்ஸ்பர்கள் நடைபெற்றிருக்குமானுல் நிச்சயமாக அவை ரத்து செய்யப்படும் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தெருவிளக்குகள் பிரச்னையைப் பற்றி பலரும் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்னையில். தலைவலி போய் திருகுவலி வந்த கதையாகத்தான் இது வந்திருக்கிறது. மின்சார தெருவிளக்குகள் எல்லாம் சரியான முறையில் எரிவதில்லை, பில்லை மட்டும் வாங்கிக் கொள்கிறுர்கள் என்கின்ற புகார் முன்பு இருந்து வந்தது. இதை ஏற்கனவே இருந்த அரசு பரிசீலனைசெய்து ஒரு உத்தரவை பிறப்பித்தது. அந்த உத்தரவு என்னவென்ருல், ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் இவைகள் தாங்களாகவே மீட்டர்களை வாங்கி வைத்துக் கொண்டு மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். அதைப்பார்த்து பணத்தை கொடுத்து விட்டால் போதும் என்றும், பின்பு பல்புகள் சரியாக இல்லை என்று



குறை சொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஊராட்சி மன்றங்களே அல்லது நகராட்சி மன்றங்களே பல்புகளையும் வாங்கிப் போட்டுக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டு ஒரு உத்தரவு போடப்பட்டது. பின்னுல் இந்த உத்தரவின் படி கட்டணம் எவ்வளவு வசூலிப்பது என்கின்ற பிரச்னை வந்த போது கொஞ்ச நாளைக்கு இந்த உத்தரவு நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. பின்னுல் ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஒரு யூனிட்டுக்கு 27 பைசா வாங்கலாம் என்று முடிவு செய்யப் பட்டு ஜி.ஓ.வையும் அனுப்பி விட்டார்கள்.

தெருவிளக்குகளைப் பொறுத்தவரையில் 7 இலட்சம் விளக்குகள் இருக்கின்றன. இவற்றில் 3·9 இலட்சம் விளக்குகள் குழல் விளக்குகள் அதாவது ட்யூப் லைட்ஸ். 1·76 லட்சம் விளக்குகள் ஸ்க்ரு கேப் பல்புகள், 1.85 லட்சம் விளக்குகள் பைனட் கேப் பல்புகள், இப்படி 7½ இலட்சம் விளக்குகள் இருக்கின்றன. இதில் இந்த விளக்குகள் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகின்ற முறையை 62 சதவீதம் ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஆகவே இந்த சூழ்நிலையில் மேற்கொண்டு என்ன செய்வது என்பதை அரசு தீவிரமாக பரிசீலிக்க வேண்டிய கட்டாயமான நிலையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரில் விளக்கு எரிய வேண்டும் என்பதில் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அக்கறை இருக்காது என்ற முடிவுக்கு யாரும் வரவேண்டிய அவசியமில்லை. மின்சார ஊழியருக்கு இருக்கின்ற அக்கறையைவிட ஊரில் தெரு விளக்குகள் எரிய வேண்டும் என்பதில் ஊராட்சி மன்றத் தலைவருக்கு நிச்சயமாக அக்கறை இருக்கும்.

ஆனுல், அதே நேரத்தில் இந்தத் தொழிலை செய்வதற்கு இந்த மின்சார வாரியத்தின் தொழிலாளி தேவைப்படுகிறுர். விளக்கு எரிய வேண்டும் என்பதில் ஊராட்சி மன்றத் தலைவருக்கும், அதை எரியச் செய்வதற்கு வாரியத்தின் தொழிலாளியும் தேவைப்படுகிறுர்கள். இப்படிப்பட்ட இருவரையும் எப்படி இணைத்துவைப்பது என்பதில் அரசு ஆராய்ந்து நிச்சயமாக ஒரு முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதற் கட்டமாக ஊராட்சி மன்றங்களுக்குத் தேவைப் படும் மீட்டர்களை மின்சார வாரியமே தருவது என்று தீர் மானித்து இருக்கிறோம். அதற்கான கட்டணத்தை வாரி யத்திற்கு தந்துவிடலாம். ஊராட்சி மன்றமே மீட்டர் களை வாங்குவது என்பதும், அதை டெஸ்ட் செய்வது என்ப தும் முடியாத காரியம்.

அதே போன்று பல்புகள் வாங்குவதையும் மின்சார வாரியமே செய்யும். ஊராட்சி மன்றங்களோ அல்லது நகராட்சி மன்றங்களோ பல்புகளை வாங்குவது என்பதும், அதை டெஸ்ட் செய்வது என்பதும் அதற்கான வசதிகள் நிச்சயமாக ஊராட்சி மன்றங்களில் கிடையாது. ஆகவே மீட்டர்கள் வாங்குவதாக இருந்தாலும் சரி, பல்புகள் வாங்கு வதாக இருந்தாலும் சரி, மின்சார வாரியமே ஏற்றுக்கொள் ளும்.

அதே நேரத்தில், விளக்குகள் எரிகிறதா என்று பார்த்துக் கொள்கிற தன்மை ஊராட்சி மன்றத் தலைவர்களிடமும் இருப்பதுதான் சிறந்தது என்று நம்புகிறேன். இது குறித்து உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கலந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பற்றி சொன்னார்கள். முக்கியமான பிரச்னை. அதனால் தான் ஒரு குழு போட்டு இருக்கிறோம். இதிலுள்ள பிரச்சினைகளை எல்லாம் பரிசீலித்து இதில் என்ன தான் செய்ய வேண்டும் என்று அறிக்கை தரவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம்.

விவசாயிகளைப் பொறுத்தவரை அறிஞர் அண்ணா அவர் கள் ஒரு முறை சொன்னார்கள், விவசாயிகளை மூன்று ரகமாக பிரிக்கலாம், அதாவது ஒருவர் நிலத்தில் வேலை செய்து பிழைக்கிறவர். இன்னொருவர் ஏதோ கொஞ்சம் நிலம் வைத்துக்கொண்டு அதில் விவசாயம் செய்து அதில் வரு கின்ற வருமானத்தை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்கிற வர். மூன்றாவது பிரிவினர், விதைக் காலமாக இருந்தாலும் சரி, அறுவடை காலமாக இருந்தாலும் சரி, நிலத்திற்கே போகாதவர். இப்படி மூன்று பிரிவினர் என்று அறிஞர் அண்ணா அவர்கள், அவர்களுக்கே உரித்தான பாணியில சொன்னார்கள்.



[பிற்பகல் 1—20.]

இந்த மூன்று வகையான அடிப்படையைக் கொண்ட சிறு விவசாயிகளுக்கு இரண்டு பைசா குறைக்க வேண்டுமென்று இந்த சர்க்கார் வந்தவுடன் அப்படி 2 பைசாவைக் குறைத்தது. ஆகவே, மேற்கொண்டும் நாம் சலுகைகள் வழங்கவேண்டுமென்று சொன்னால், இந்த நேரத்திலே நாம் சிறு விவசாயிகள் என்பவர்கள் யார் என்பதைத் தீர் மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சில நேரங் களில், சில இடங்களில் எல்லா விவசாயிகளும் ஒன்றுதான் என்று வாதாடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

தவிர, சிறு விவசாயிகள் தாசில்தாரிடத்திலே சென்று சர்டி பிகேட் வாங்குவதிலே மிகுந்த கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை எல்லாம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தாசில்தாரிடத்திலே நாம் எது எதற்கோ போக வேண்டி யிருக்கிறது. சிறு விவசாயிகள் யார் என்று தமிழ்நாடு பூரா வும் நாம் ஒரு பட்டியல் போட்டுவிட்டால், அவர்கள் அனை வருக்கும் நாம் நிச்சயமாகச் சலுகைகள் கொடுக்க முடியும். இதிலே அரசும் முதல் முயற்சியாக, முன் முயற்சியாக, இதிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகின்றது.

இருந்தாலும்கூட, சலுகைகள் பெற வேண்டுமென்பதற் காக ஏழை சிறு விவசாயிகள் ஒருமுறை இதற்காகச் சென்று சர்டிபிகேட் வாங்குவதிலும் அக்கறை காட்டுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல மின்சாரத் துறையைச் சேர்ந்த துணை மின் பொறியாளர், அங்கேயுள்ள வருவாய்த் துறை அதிகாரிகளோடு கலந்து கொண்டு, இந்தப் பட்டியல் தயாரிப்பதிலும் ஈடுபடுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

50,000 பம்பு செட்டுகளுக்கு அனுமதி தருவது என்று நாம் தீர்மானித்திருக்கிறோம். இங்கே நிலத்தடி நீரைப் பற்றி உறுப்பினர்கள் பரவலாகப் பேசினார்கள். நிலத்தடி நீரைப் பற்றி ஒரு சட்டம் வர இருக்கின்றது. அதைப் பற்றி அப்போது நாம் விரிவாகப் பேசிக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். இதுவரை கிட்டத்தட்ட வந்துள்ள மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2,17,570 ஆகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக வந்த விண்ணப்பங்களின்

எண்ணிக்கை 90,000. நாம் 50,000 பம்பு செட்டுகளுக்கு அனுமதி அளிப்பது என்று சொல்லி யிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, இதிலே சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். சிறு விவசாயிகளாக இருக்கின்றவர்கள் தங்கள் நிலத்தை அடமானம் வைத்து, கடன் வாங்கி பம்பு செட்டுகளை எல்லாம் வாங்கியிருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென்று அவர்கள் சொன்ன கருத்தை, இந்த அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ற வகையில் உத்தரவுகள் பிறப்பிக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த மட்டிலும் இங்கே ஒரு கருத்தை எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். 'மால்கோ, மால்கோ' என்று சொன்னார்கள். அது உண்மையிலேயே எனக்கும் ஒரு புரியாத புதிராக இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், இந்த மால்கோ நிறுவனத்தார் முதல் அமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று வந்தார்கள். அவர்களை முதல் அமைச்சர் அவர்கள் பார்க்க மறுத்துவிட்டார். அது என்ன சமாசாரம் என்று என்னைக் கேட்கச் சொன்னார். நான் அதைப் பார்த்தபோது, கிட்டத்தட்ட 9 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மின்சார பாக்கி அவர்களிடமிருந்து வரவேண்டியிருந்தது. 1973—74-லே 7 லட்சம்; 1974—75-லே 7·21 லட்சம்; 1975—76-லே 39·33 லட்சம்; 1976—77-லே 134·53 லட்சம். இதிலே இந்தக் கட்டணத்தைப் பற்றிப் பார்க்கப் போனால், 28—11—1974, அதாவது அப்போது மின்வெட்டு அமுலில் இருந்தது. அந்த மின்வெட்டு அமுலில் இருந்த காலத்தில், அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த கோட்டாவை விட அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அப்படி அதிகமாக பயன்படுத்திக் கொண்டதற்காக அவர்களுக்கு அபராதக் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அபராதத் தொகை 7·19 கோடி. அந்த அபராதத் தொகையை ரத்து செய்ய வேண்டுமென்று அவர்கள் அரசாங்கத்திற்கு மனு போட்டார்கள். அது என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை.

திரு ஆர். உமாநாத் : இந்த 7·19 கோடியோடு சேர்த்துத்தான் அவர்கள் 9½ கோடி பாக்கித் தரவேண்டுமா?



மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : ஆம். அதோடு சேர்த்துத்தான் இந்த 9½ கோடி. இந்த 7·19 கோடி ரூபாயை அவர்கள் ரத்து செய்ய வேண்டுமென்று மனு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மனுவின்மீது அந்த ஆட்சிக் காலத்திலே எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எதற்காக எடுக்கப்படவில்லை என்பதும் எனக்குத் தெரியாது.

மற்றவர்களுக்கு கொடுப்பதைவிட, இந்த எக்ஸ்ட்ராக்ட் பிளாண்ட் வைத்திருப்பவர்களுக்கு கட்டணத்திலே சலுகைகள் கொடுக்கப்படுகிறது. இவர்கள் எக்ஸ்ட்ராக்ட் பிளாண்ட் வைத்திருந்ததால், இவர்கள் எந்த அளவுக்கு கட்டணம் தரவேண்டும் என்றும், அதற்கு ஐந்து ஆண்டு காலம் என்று நிர்ணயித்திருந்தார்கள். அந்த 5 ஆண்டு காலம் 16-1-1970-லே முடிந்துவிட்டது.

16—1—1970-ல் முடிந்துவிட்ட பிறகு எவ்வளவு கட்டணம் என்று நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு வந்தது. அதிலே என்ன விசித்திரம் என்றால் 15—4—1976 வரை அந்தக் கட்டணம் நிர்ணயிக்கப் படவில்லை. கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் அந்த பைல் அப்படியே இருந்தது. எப்படித்தான் இருந்ததோ எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஏற்கெனவே ஒரு கே.வி.ஏ.வுக்கு 112 ரூபாய் வீதம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அரசாங்கம் அதை ஒரு கே.வி.ஏ.வுக்கு 550 ரூபாய் என்று உயர்த்தி உத்தரவு போட்டது. அதை எதிர்த்து அவர் மனுப்போட்டார். அது அப்படியே பெண்டிங்காக கிட்டத்தட்ட ஆறு வருஷம் இருந்தது. இப்போது அமைச்சரிடத்தில் ஒரு பைல் பெண்டிங்காக இருந்தால் அடுத்த வாரமே அது பற்றி அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஆறு ஆண்டு காலம் அந்த பைல் அப்படியே இருந்தது; குறிப்பிட்ட அமைச்சரிடத்தில் மூன்று வருஷம் அப்படியே இருந்தது என்றும் பைல் திரும்ப அனுப்பப்படவில்லை என்றும் தெரிவிக்கிறார்கள். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்— எடுக்கவேண்டிய நேரத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்காததன் விளைவாக இன்றைக்கு அது எங்கள் தலையில் விழுந்திருக்கிறதே தவிர வேறல்ல என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல் 1975-ம் ஆண்டில் ஸ்மல்ட்டர் பிளாண்ட்
என்பதற்கான கட்டணத்தை ரிவைஸ் பண்ணவேண்டு
மென்று வந்தது. இதிலே வேடிக்கை என்ன வென்றால்
அரசாங்கம் 1975-ல் அந்தக் கட்டணத்தை மாற்றுகிறது;
அப்போது மத்திய சர்க்காரிலிருந்து ஒரு உத்தரவு வருகிறது.
பிளாக் ரேட்டில்தான் போட வேண்டுமென்று உத்தரவு
வருகிறது. நாம் சூப்பர் டாரிஃப் போட்டிருக்கிறோம்.
மால்கோ அதிபர் என்ன செய்கிறார்? மத்திய சர்க்கார்
கைட் லைன்சைப் படித்துவிட்டு நாம் கொடுக்கிற பில்லுக்குப்
பதிலாக அவரே ஒரு பில்லைப்போட்டு மாதம் ஆறு லட்சம்
ரூபாய் குறைத்து பில்லைக் கட்டுகிறார். அது அப்படியே
தொடருகிறது. 'ஏன் டிஸ்கனெக்ட் செய்யவில்லை?'
என்று அதிகாரிகளைக் கேட்டேன். பணம் குறைவாகக்
கட்டினால் நடவடிக்கை எடுக்கவேண்டாமா என்று கேட்
டேன். விவசாயப் பிரதிநிதிகள் எங்களைச் சந்தித்து
நாங்கள் 14 பைசா வீதம் கட்டுகிறோம், அதற்குப் பிறகு
குழு தீர்மானித்த பிறகு மீதியைக் கட்டுகிறோம் | என்று
சொன்னார்கள். ஆனால் முடியாது என்று அரசின் சார்பில்
மறுத்திருக்கிறார்கள்.

நீங்கள் எல்லாம் திரும்பத் திரும்ப மால்கோவைப் பற்றிப்
பேசவே முழு விவரத்தையும் பார்க்க ஆரம்பித்தேன்.
மால்கோ நிறுவனத்தினர் 1975 ஆம் ஆண்டிலிருந்தே அவர்க
ளாகவே பில்லைக் குறைந்துப் போட்டுக் கட்டி வருகிறார்கள்.
நாம் ஒரு பில் அனுப்பி அதை அவர்கள் கட்டாமல் இருக்
கும்போது ஏன் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை
என்று மின்சார வாரியத்தைக் கேட்டபோது 'டிஸ் கனெக்
ஷன் செய்யவேண்டும்' என்று அரசாங்கத்திற்கு எழுதி
அனுப்பினோம்; அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான
உத்தரவும் வரவில்லை என்று சொன்னார்கள். இதுதான்
மால்கோவினுடைய நிலைமைகள்.

திரு. சி. ஆறுமுகம் : அரசாங்கத்தைக் கேட்டுக்
கொண்டா டிஸ் கனெக்ட் செய்யவேண்டும். அவர்
களாகவே செய்யவேண்டியதுதானே.

திரு. சோ. அழகிரிசாமி : அரசாங்க உத்தரவு பெற்
றுத்தான் டிஸ்கனெக்ட் செய்ய வேண்டுமா!



திரு. ஏ. ரகுமான்கான் : இந்த மன்றத்தின் துணைத்
தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்பு
கிறேன். நான் இந்த மின் வாரியத்தினுடைய சட்ட
ஆலோசகராகப் பணியாற்றியிருக்கிறேன். பில் கட்ட
வில்லை என்று சொன்னால் அரசாங்க ஆணை கேட்க வேண்டிய
அவசியம் இல்லை. உடனே டிஸ்கனெக்ட் பண்ண போர்
டுக்கே அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது
அரசாங்கத்தின் கட்டளைக்காக ஏன் காத்திருக்கவேண்டும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆர்வத்தை
உண்மையிலேயே பாராட்டுகிறேன். அவர்கள் அப்படித்
தான் செய்திருக்க வேண்டும். எலக்ட்ரிசிடி போர்டு
செய்திருக்கவேண்டும். அவர்கள் செய்யாமல் இருந்த
தற்கு என்ன காரணம்? அதை நாம் எண்ணிப் பார்க்க
வேண்டும். எப்போதும் அப்படிச் செய்கிறவர்கள் இதிலே
என் 'செய்ய முடியவில்லை', 'செய்ய முடியவில்லை', அதனால்
செய்யாமல் இருந்தார்களே தவிர வேறல்ல.

திரு. கே. கந்தசாமி : அது சாதாரணமாக கையாளப்
படக்கூடிய விதிமுறை. அப்படி இருக்கும்போது அமைச்சர்
உத்தரவுக்குக் காத்திருந்த காரணம் யாது? பொறியாளர்
யார்? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இனி
மேலாவது நடவடிக்கை எடுப்பார்களா? ஏழை விவசாயி
பத்து பைசா கட்டவில்லை என்று சொன்னாலே உடனே
மின்சாரத்தைத் துண்டித்து விடுகிறார்களே. அரசாங்
கத்தின் உத்தரவுக்குக் காத்திருக்க வேண்டியது அவசியந்
தானா?

திரு. என். சங்கரய்யா : அந்த அதிகாரிகள் இந்தப்
புதிய அரசு வந்தவுடனே இம்மாதிரி பழைய பாக்கிக்காக
மின்சார இணைப்பு துண்டிக்கப்படவில்லை என்பதை இந்த
அரசின் கவனத்திற்கு உடனே கொண்டுவந்தார்களா?

திரு. ஏ. ரகுமான்கான் : எலக்ட்ரிசிடி போர்டு விதியின்
படி—

The Board is entitled to disconnect the service connection the for
on-payment of arrears of consumption charges.

அந்த அதிகாரிகள் யார்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் கேள்வி. அரசாங்கத்திடம் ஆணை கேட்கப்பட்டது அரசாங்கம்தான் பொறுப்பு என்பது தவறான கருத்து.

[பிற்பகல் 1–30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கும் அரசினுடைய கருத்துக்கும் வேறுபாடு இல்லை. ஏன் டிஸ்கனக்‌ஷன் ஆகவில்லை என்பதை இந்த அரசாங்கம் நிச்சயமாக விசாரிக்கும். இங்கிருந்து யாராவது டெலிபோனிலே சொன்னார்களா அல்லது அவர்களாகவே செய்தார்களா என்பதை அரசாங்கம் விசாரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் விசாரித்தறிந்து உண்மையைத் தெரிந்துகொள்வதை நான் வரவேற்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அகற்றப்பட்டது, அதிலே இருந்தவர்கள் தான் கெட்டவர்கள், தீய சக்திகள் அழிந்து போனதற்குப் பிறகு எமர்ஜன்சி காலத்திலே அந்த ஒரு ஆண்டிற்குமேல் பொறுப்பிலே இருந்தவர்கள் இதைப் பரிசீலனை செய்யவில்லையா? அந்தத் தீய சக்திகள்தான் அழிந்துவிட்டன, கெட்டவர்கள் தான் போய்விட்டார்கள் அதற்குபிறகு வந்த இந்தப் புனிதர்கள் ஆட்சியில், இந்த ஆட்சியும் வந்து 4, 5 மாதங்களுக்கு மேல் ஆகிறது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கெட்டவர்கள், தீயசக்திகள் என்ற அந்த வார்த்தைகளையெல்லாம் நான் பயன்படுத்தவில்லை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அவர்களாகவே வரவழைத்துக்கொண்டு சொல்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது அவர்கள் எந்த அளவிற்கு சக்திபடைத்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் சொல்கிறேன். இந்த அரசு வந்த பிறகு என்ன செய்தது என்று கேட்டார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான், 13–8–1977-ஆம் தேதி அந்த ஏழு கோடி சொச்சத்தை..................



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவ்விவாதம் முடியும்வரை சபையின் நேரத்தை நீடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தள்ளுபடி செய்யவேண்டுமென்று அவர்கள் கேட்டதை அரசு நிராகரித்து, அதைக் கட்டித்தான் தீரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டார்கள். அதற்கு பிறகு முதலமைச்சரைப் பார்க்கவேண்டுமென்று அந்த தொழிலதிபர் வந்தார். பாதிப் பணத்தையாவது கட்டிவிட்டபிறகு தான் என்னைப் பார்க்கமுடியும், இல்லாவிட்டால் பார்க்க மாட்டேன் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அதற்குப்பிறகு 21–8–1977 அன்று மின்சார வாரியமானது எட்டு நாட்கள் கழித்து, மின்சாரத்தைத் துண்டிக்கவேண்டுமென்று போர்டிலிருந்தே துண்டிக்கப்பட்டது. துண்டிக்கப்பட்டது இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு தான். அதற்குப் பிறகு இங்கே யாரையும் சந்திக்க முடியாமல் அந்தத் தொழிலதிபர் நேராக உயர்நீதி மன்றத்திற்குப் போனார். அங்கே ஸ்டே வாங்கியிருக்கிறார். மின்சாரம் துண்டிக்கப் போடப்பட்ட உத்திரவின்மீது ஸ்டே வாங்கியிருக்கிறார். இங்கே திரு. ஆறுமுகம் பேசும்போது அந்த வக்கீல் எங்கே போனார் என்று கேட்டார்கள். ஸ்டே போடுகிறபோது நோட்டிஸ் நமக்கு வருவதில்லை. வக்கீல் எங்கேயும் போகவில்லை. திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது எக்ஸ்பெடிஷன் பெட்டிஷன் போட்டார்களா என்று கேட்டார்கள், அதுவும் போட்டிருக்கிறது, வழக்கு வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : நீதிமன்றத்திலே அரசுக்கு எதிராக வழக்கு வரும்போது..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்லும்போது எழுந்து பேசுவது சரியல்ல, 2, 3 நாட்கள் இதிலே விவாதம் நடந்திருக்கிறது, ஒவ்வொரு வரும் திருப்பி திருப்பி எழுந்து பேசிக்கொண்டிருந்தால் எப்படி அவர் பதிலை முடிக்கமுடியும்.

திரு. சி. ஆறுமுகம் : திருப்பித் திருப்பிச் சொல்லவில்லை, தேவைப்பட்டதைத் தான் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேவைப்
பட்டதை எல்லாம் சொல்லி அதற்குத்தான் அமைச்சர்
அவர்கள் பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதிலே
ஏற்பட்ட சில குறைகளைச் சொல்வதற்காகத்தான் இவை
களையெல்லாம் நான் சொல்கிறேனே தவிர குற்றம்
காணுவதற்காக அல்ல, இவைகளையெல்லாம் உறுப்பினர்
கள் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற
முறையிலே தான் சொல்கிறேன். அந்த 7 கோடி சொச்
சத்துக்கான பாக்கியை வசூலிப்பதற்கு அப்போதே நட
வடிக்கை எடுக்கப் பட்டிருந்தால் இவையெல்லாம் ஏற்பட்டி
ருக்காது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி
அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள், எலக்ட்ரிசிடி
போர்டினுடைய பர்ச்சேஸ் பாலிசி என்ன என்று கேட்டார்
கள். பொருள் வாங்குகிற கொள்கை என்ன என்று
கேட்டார்கள். அதைப்பற்றியும் விவரமாக சிந்திக்க
வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். எப்படி மால்கோ
விலே சிக்கிக்கொண்டு கோர்ட்டிற்கு கேஸ் போய் இருக்கிற
தோ அதுபோன்று இன்னொன்றும் சிக்கிக்கொண்டு கேஸ்
கோர்ட்டிற்குப் போய் இருக்கிறது. 1970-ஆம் ஆண்டில்
13 டிரான்ஸ்பார்மர்கள் வாங்கவேண்டுமென்று உத்திர
விடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1971-இல் 44
டிரான்ஸ்பார்மர்களை வாங்கலாம் என்று தீர்மானம்
போட்டு பிறகு 77 டிரான்ஸ்பார்மர்களை வாங்கலாம் என்று
போட்டு மொத்தம் 77-ம் 13-ம் 90 டிரான்ஸ்பார்மர்கள்
வாங்க சுமார் 8.14 கோடி ரூபாய்க்கு ஒரே கம்பெனிக்கு
ஆர்டர் தரப்பட்டிருக்கிறது.

அதிலே இன்னும் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன
என்றால், அந்த ஆர்டரைக் கொடுக்கும்பொழுது 10 சத
வீதம் அட்வான்ஸ் கொடுத்துவிட வேண்டும். டிரான்ஸ்
பார்மர்கள் செய்யும்பொழுது 30 சதவீதம் அட்வான்ஸ்
கொடுத்துவிட வேண்டும். டிரான்ஸ் பார்மர்கள் பேக்டரியை
விட்டு வந்தவுடன் 40 சதவீதம் கொடுத்து விட
வேண்டும். இப்படிக் கொடுத்துக்கொண்டே போனால்
மீதியிருப்பது 10 சதவீதம் தான். அந்த 10 சதவீதத்தை



மூன்று மாதங்களில் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல,
விலைவாசி ஏறினால் விலையிலிருந்து 10 சதவீதத்தை கூட்டி
கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் நாம் கொடுக்
கும் பணத்திற்கு பேங்க் கியாரண்டி வேண்டுமென்று
கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் நாங்கள் பேங்க்
கியாரண்டி கொடுக்க முடியாது, கம்பெனி கியாரண்டி
தான் கொடுப்போம் என்று சொன்னார்கள். இரண்டு
பேரைப்போட்டு கம்பெனி கியாரண்டி கொடுத்து இருக்
கிறார்கள். அதை ஒத்துக்கொண்டு பர்ச்சேஸ் ஆர்டர்கள்
திருத்தப்பட்டிருக்கின்றன.

இவற்றிற்குப் பிறகாவது டிரான்ஸ்பார்மர்கள் வந்து
சேர்ந்தனவா என்றால் இல்லை. இருக்கின்ற பிரச்னை
என்னவென்றால், விலைவாசி ஏறிவிட்டது, 10 சதவீதம்
எங்களுக்குப் போதாது, இன்னும் கொஞ்சம் அதிகமாக
வேண்டுமென்று கேட்டு தகராறுக்கு வந்தது. நான் விவரங்
களுக்கு உள்ளே போகவில்லை. இப்பொழுது இது
ஆர்பிட்ரேஷனுக்குப் போயிருக்கிறது. மன்றத்திற்குத்
தெரிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். நாம் கொடு
திருக்கத் வேண்டிய தொகை 486.29 இலட்சம் ரூபாய்
அவர்கள் ஏற்கனவே கொடுத்த டிரான்ஸ்பார்மர்களுக்
காக. ஆனால் கொடுக்கப்பட்ட தொகை 572.57 இலட்சம்
ரூபாய். 118.08 இலட்சம் ரூபாய் அதிகமாக வாங்கி
யிருக்கிறார்கள். எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால்
10 சதவீதத்துக்கு மேலே விலைவாசி உயர்ந்திருக்கிறது,
ஆகவே அதை எங்களுக்குத் தரவேண்டுமென்று கிட்டத்
தட்ட 1 கோடி ரூபாய்க்குமேல் ஓவர் பேமெண்ட் ஆகி
யிருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தக் கம்பெனி
பிரைவேட் செக்டார். இதை எதிர்த்துப் போட்டி
போட்டது பப்ளிக் செக்டார். என். ஜி. இ. எப். அதாவது
நேஷனல் கவர்ன்மெண்ட் எலக்ட்ரிக் பேக்டரி அட் மைசூர்,
அவர்கள் அட்வான்ஸும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்,
95 சதவீத சாமான்கள் போகும்பொழுது கொடுங்கள்
என்ற அவர்கள் டெர்ம்ஸ். கொஞ்சம் விலை கூட
இருந்திருக்கிறது. இதில் மற்றொரு வேடிக்கை என்னவென்
றால், டிரான்ஸ்பார்மர்களை இப்பொழுதுநாம் வாங்கினால்
வெளி மார்க்கெட்டைவிட இப்பொழுது கூடுதலாகிறது.

பிப்ரவரி 1976-வுடன் முடித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு முடிக்கவில்லை. ஆர்பிட்ரேஷனுக்குப்போயிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இப்படி மாட்டிக் கொண்டிருக்கிறது.

ஆகவே, பர்ச்சேஸைப் பொறுத்தவரையில் நான் தெரிவிக்க விரும்புவது, இதை ஒரு வரைமுறைக்குள் கொண்டு வர வேண்டும். குறிப்பாக எட்டு கோடி, ஒன்பது கோடி ரூபாய் என்று போடப்படுகின்ற இந்த ஆர்டர்களுக்கு எந்தவிதமான அத்தாட்சியும் இல்லாமல், அட்வான்ஸ் என்றும், அது என்றும், இது என்றும் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் சாமான்களை உரிய நேரத்தில் கொடுக்கவேண்டும், ஆனால் அப்படி உரிய நேரத்தில் கொடுக்காமல் விலைவாசி ஏறிவிட்டது, ஆகவே, கூடுத லாகக் கொடுங்கள், ஒரு கோடி என்று கேட்டு அவர்கள் சொல்கிறார்கள், மின்சார வாரியமும் ஒப்புக்கொண் டிருக்கிறது. ஆகவே, இவர்கள் பேசிய பணம்தான் கொடுங்கள் என்று கேட்டார்கள். பிறகு அது ஹைகோர்ட் டுக்குப்போய், உயர்நீதிமன்ற நீதிபதி, ரிடையரான நீதிபதி ஆர்பிட்ரேட்டரிடம் போயிருக்கிறது.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், மின்சார வாரியத்தின் நிதி நிலையே மோசம், அதிலும் அவர்களு டைய நிதி இப்படியெல்லாம் செலவிடப்படும் சூழ்நிலையில், அதற்குரிய பொருளாவது உரிய நேரத்தில் கிடைக்கப் பெற்றனவா என்றால் இல்லை. நாங்கள் வந்ததற்குப் பிறகு மீண்டும் டெண்டர் கூப்பிட வேண்டியிருக்கிறது. இப் பொழுது நேஷனல் கவர்ன்மெண்ட் எலக்ட்ரிக் பேக்டரி அட் மைசூருக்கு ஆர்டர் கொடுத்து, உடனடியாக டிரான்ஸ்பார்மர்களைக் கொடுங்கள், வழக்கு, வம்பு முடியும் வரையில் நீங்களாவது உதவி செய்யுங் கள் என்ற நிலைமைக்குப் போயிருக்கிறோம். ஆகவே, பர்ச் சேஸைப் பொறுத்த வரையில் முறையான பாலிசியைக் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்துகொண்டிருக்கிறது, தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



திரு. ஆர். உமாநாத் : பிரைவேட் கம்பெனியின் பெயர் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மெஸர்ஸ் ஈசன் கம்பெனி, ஈஸ்வர ஐயர்.

[பிற்பகல் 1–40]

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மின் கட்டணத் தில் எங்கே உயர்வு ஏற்படுமோ என்று அஞ்சுகிறோம் என்று குறிப்பிட்டார்கள். நிலைமை அப்படி நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் புறக்கணித்து விடுவதற்கில்லை.

இன்றைக்கு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை யில், சிங்கரேணி நிலக்கரி ரூ. 111 லிருந்து ரூ. 136 வரை விலை உயர்ந்து விட்டது. பீஹார்–பெங்கால் நிலக்கரி, ரூ. 226 லிருந்து ரூ. 263 வரை உயர்ந்துவிட்டது. நெய் வேலி மின்சாரத்தின் விலை 5.2 பைசாவிலிருந்து 14.3 பைசாவாக உயர்ந்து விட்டது. கேரளத்திலிருந்து நாம் பெறுகிற மின்சாரத்தின் விலை 9.5 பைசாவிலிருந்து 12.5 பைசா வரை உயர்ந்து விட்டது. ஆக, ஒட்டுமொத்தக் கட்டண உயர்வைப் பார்த்தோமானால், நமக்குச் செலவு 5.21 என்று இருந்தது, இப்பொழுது 16.3 பைசா என்று ஆகியிருக்கிறது. ஆகவே, நம்முடைய செலவுகள் அதிக மாகிக் கொண்டே போகின்றன. ஆனால், அந்த செலவுகளைச் சரிக்கட்டுவதற்கேற்ற வருவாய் இனங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. ஆகவே, வருவாய் இனங்களை எந்தெந்த இடத்திலே அதிகப்படுத்த வேண்டுமென்பது இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமைகளில் ஒன்று.

அப்படி வருவாய் இனங்களை அதிகப்படுத்த வேண்டு மென்று பார்க்கும்போது, அதனை யார் தாங்குவார்கள் என்பதைப் பார்ப்பதுதான் மிக முக்கியமானது. யாரிடத் திலே அதைப் போட்டால், அந்த வருவாய் வரும் என்பதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலித்துக் கொண் டிருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டி இயங்கிக் கொண்டி ருக்கிறது, டாரிஃப் கமிட்டி.

என்னைப் பொறுத்தவரையில் அது தொடர்ந்து இயங்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒவ்வொரு தொழில் நிறுவனத்தையும் அது எந்த அளவில் இயங்குகிறது என்பதையும், அதன் பல்வேறுபட்ட வளத்தையும் சிந்திக்க வேண்டும், ஆராயவேண்டும். அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். ஒரு நிறுவனத்திற்கு மின்சாரக் கட்டணத்தின் மூலம் ரூ. 2 கோடி சலுகை தருகிறோம். அந்த நிறு வனத்தின் பாலன்ஸ் ஷீட்டைப் பார்க்கும்போது, ரூ. 2 கோடி இலாபம் என்கிறார்கள். ஆக, நாம் கொடுக்கிற ரூ. 2 கோடிதான் இலாபமாக வருகிறதோ என்று எண்ணு கிற அளவுக்கு இருக்கிறது. அந்த கன்செஷனல் டாரிஃப் என்பதெல்லாம் இதிலேதான் அடங்குகிறது.

ஆகவே, தொழில்கள் வளர வேண்டுமென்பதில் அக்கறை கொண்டிருக்கிற அதே நேரத்தில், தொழில்கள் ஏராளமாக இலாபத்தைப் பெறக்கூடிய சூழ்நிலையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. அதோடு, அரசாங்கத்திட மிருந்து சுரண்டி, தங்கள் தொழிலை வளர்த்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அதைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மின் கட்டண நிர்ணயக் குழு தொடர்ந்து இயங்கவேண் மென்று இந்த அரசாங்கம் வற்புறுத்துகிறது. ஒவ்வொரு தொழிற்சாலையைப் பற்றியும், அதன் நிலைமையைப் பற்றி யும், அதன் பொருளாதார வளர்ச்சியைப் பற்றியும் கட்டண நிர்ணயக் குழு கண்டறிந்து எந்த எந்த நேரத் திலே, அதை மாற்றவேண்டுமென்ற வகையில், ரோலிங் மாதிரி இருக்கவேண்டுமென்ற சூழ்நிலையிலேதான் அந்தக் கட்டணம் இருக்கும்.

மின் கட்டணம் வீட்டிற்கு உயர்த்தப்படலாமா, விவசா யத்திற்கு உயர்த்தப்படலாமா, வாணிபத்திற்கு உயர்த்தப்பட லாமா என்பதைப் பற்றியெல்லாம் அரசு சிந்தித்துக் கொண்டி ருக்கிறது. கூடுமான வரையில் நான் சொல்வது, நலிந்து போனவர்கள் அல்லது, மெலிந்து போனவர்கள் இவர்களை யெல்லாம் இது நிச்சயமாகப் பாதிக்காது என்பதைப் பற்றி, தீவிரமாக ஆராய்ந்து நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



அதோடு இரண்டு திட்டங்களை மின் வாரியத்தைப் பொறுத்த வரையிலே கொண்டு வருவதாக இருக்கிறோம். இவற்றை நிறைவேற்றுவதில், தொழிலாளர்களோடு பேசி, அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். பொதுவாக, கிட்டத்தட்ட, ரூ. 190, அல்லது ரூ. 200 கோடி வரையில் மீட்டர்கள் மூலம் வருவாய் வரு கிறது. ஆனால், மீட்டர்கள் எல்லாம் சரியாக இருக்கின்ற னவா, ரீடிங் ஒழுங்காக எடுக்கப்படுகின்றனவா, மீட்டர்கள் டிஃபெக்டாக இருந்தால், அவற்றைத் திருத்த ஒழுங்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்று பார்த்தோ மானால், இன்னும் நம்பிக்கையோடு அவைகள் எல்லாம் சரி யாக நடக்கின்றன என்று சொல்கிற நிலைமையை நாம் எய்த வில்லை.

ரூ. 200 கோடி வருவாயில், 5 சதவீதம் எரர் என்றால் கூட, ரூ. 10 கோடியாகிறது. 5 சதவீதம் தவறியிருந்தால்கூட, ரூ. 10 கோடிக்கு இழப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே, முதல் கட்ட மாக, மீட்டர்களைப் பொறுத்தவரையிலே, மீட்டர் ரீடிங்கைப் பொறுத்த வகையிலே, மீட்டர்களை டெஸ்ட் பண்ணுவதைப் பொறுத்தவகையிலே, ஒரு திட்டம் கொண்டு வர இருக் கிறோம். மார்ச்சு மாதத்திலிருந்து சில சிஸ்டம்களை கொண்டு வர இருக்கிறோம்.

முதலில், ஈரோடு சிஸ்டத்தையும், திருச்சி சிஸ்டத்தையும் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இங்கு, மீட்டர் ரீடர்கள் என்று தனியாக ஏற்பாடு செய்து, அவர்கள் ரீடிங் எடுக்க அனுப்பப் படுவார்கள். அவை என்ன நிலைமையில் இருக்கின்றன, மீட்டர்கள் சரியாக ஓடுகின்றனவா, வேகமாக ஓடிக்கொண் டிருக்கின்றனவா, அல்லது, டேம்பரிங் பண்ணி இருக்கிறார் களா, அல்லது மீட்டரை விட்டுத் தனியாக கனெக்ஷன் கொடுத்திருக்கிறார்களா என்று அவர்கள் எங்களுக்கு—அங்கி ருக்கிற அலுவலகத்திற்குத் தகவல் கொடுப்பார்கள். தகவல் கொடுத்த 2, 3 தினங்களில், அவை சரிபடுத்தப்படவேண்டும்.

அதில், இன்னொன்று. ஒரு பக்கத்திலே, மீட்டர் ரீடிங் எடுத்தவர்கள் அடுத்த மாதம் வேறு ஒரு பக்கத்திற்கு அனுப் பப்படுவார்கள். ஒரே பக்கத்திலேயே, அவர்கள் அனுப்பப் படுவதால், ஒன்றுக்கொன்று கவுண்டர் செக் ஆகாது. ஆகவே ஒன்றுக்கொன்று கவுண்டர் செக், ஒவ்வொரு பகுதியிலும் 3

அல்லது 6 குரூப்புகள் பிரிக்கப்படும். அதில் ஒரு குரூப் ஒரு இடத்திற்கு அனுப்பப்பட்டால், அந்த குரூப் அடுத்த மாதம் வேறு ஒரு இடத்திற்கு அனுப்பப்படும். உதாரணமாக, ஏ பகுதியிலே ரீடிங் எடுப்பவன், அடுத்த மாதம் பி பகுதிக்குப் போய் விடுவான். பி பகுதியிலே இருப்பவன், அடுத்த மாதம் ஏ பகுதிக்கு வருவான். இவ்வாறு ஒவ்வொரு மாதமும் மாறிக்கொண்டே இருக்கும். ஆகவே இந்த மாதிரி மாற்றவேண்டுமென்று இருக்கிறோம். அப்படி செய்கிறபோது மீட்டர் ரீடிங் கரெக்டாக இருக்கும்.

அதே போல ஒரு எஸ்.இ. ஒரு சிஸ்டத்தில் இருக்கிறார் என்றால், அவருடைய சிஸ்டத்திற்கு எவ்வளவு மின்சாரத்தை அவர் பெறுகிறார், எவ்வளவு மின்சாரத்தை அவர் விநியோகிக்கிறார், எவ்வளவு இழப்பு அந்த சிஸ்டத்தில் ஏற்படுகிறது என்பது ஒரு கணிப்பாக இருக்கும். எல்லா ஏரியா சப் ஸ்டேஷன்லேயும் மீட்டர் செட் வைத்து எவ்வளவு லாஸ் ஆகியிருக்கிறது, இப்போது லைன் லாஸ் லைன் லாஸ் என்று சொல்லுகிறோமே, அதெல்லாம் இப்போது நமக்கு சரியாக தெரியவேண்டுமானால், நம்முடைய மீட்டர்கள் ஒழுங்காக ரீட் பண்ண ஆரம்பித்தால்தான் எவ்வளவு லைன் லாஸ் என்று தெரியும். இப்போது எல்லாவற்றையும் சேர்த்துக் கழித்துக் கணக்குப் போட்டுவிடுகிறார்கள். இந்தத் திட்டத்தை தொழிலாளர்களுடைய ஒத்துழைப்போடு கொண்டு வர இருக்கிறோம்.

அடுத்து ரூரல் எலக்டிரிபிகேஷன் கார்ப்பரேஷன் மூலமாக மின்சார கூட்டுறவு சொசைட்டிகளை ஏற்படுத்துமாறு கேட்டிருக்கிறார்கள். விவசாயிகளே, கிராம கூட்டுறவு சொசைட்டிகளை ஆரம்பித்தால் கிட்டத்தட்ட ஒரு சொசைட்டிக்கு 94 லட்சம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். முதவிலே இரண்டு சொசைட்டிகளை அவர்கள் அமைத்து மின்சாரம் விநியோகம் செய்து அந்த சொசைட்டியை இயக்க வழி ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இரண்டு ரூரல் எலெக்டிரிபிகேஷன் கோவாபரேடிவ் சொசைட்டிகளை ஆரம்பிக்கலாம் என்று தீர்மானித்து அவை எப்படி இயங்குகின்றன என்று பார்க்க ஒன்றை தூடியலூரிலும், இன்னொன்றை கும்பகோணத்திலும் அதை பரிட்சார்த்தமாக செய்யலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம்.



அதற்குப் பிறகு நிர்வாக சீரமைப்பு பற்றி சொன்னார்கள். ஒரு சீரமைப்புக் கமிஷனை போடவேண்டுமென்று உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே கமிஷன் போடுவதோ, கமிட்டி போடுவதோ நேரத்தையும், காலத்தையும் தான் வீணாக்குமே தவிர இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன வகையிலே சொன்ன கருத்துக்களைக் கொண்டு, எவ்வளவுக்கெவ்வளவு படிப்படியாக சீரமைக்கலாம் என்று அந்த வகையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட அளவிலே ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த அரசு அதையும் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த வாரியம் புயல் வெள்ள நிவாரண பணிகளில் ஆற்றிய பணியினைப் பற்றி எல்லோரும் பாராட்டினார்கள். அது உண்மையிலேயே எனக்கே கூட மகிழ்ச்சியாக இருந்தது. எவ்வளவு விரைவாக இயங்கும் மின்சார வாரியத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன். ஒரு நிறுவனத்தினுடைய திறமையை, அதனுடைய பெருமையை அது நெருக்கடிக்கு ஆளாகும்போதுதான் நாம் கண்டறிய முடியும்.

கிட்டத்தட்ட தஞ்சை மாவட்டத்தில் 60 சதவீதம் மின்சார சாதனங்கள் கீழே போய்விட்டன. 32 நகரங்களும் 1,946 ஊர்களும், 2 லட்சம் கன்ஸூமர்களும் 1,612 டிரான்ஸ்பார்மர்களும் தஞ்சை மாவட்டத்திலே சேதமடைந்து விட்டன. அதை 3,500 பேர்கள் இந்த வேலையை 19-ந் தேதிக்குள் சரி செய்து விட்டார்கள். நவம்பர் மாதம் 12-ந் தேதி புயல் வந்தது. நவம்பர் மாதம் 19-ந் தேதி எப்படியோ விழுந்தடித்துக்கொண்டு மின்சாரத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுடைய உணர்ச்சியை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே போல இன்னும் பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது. வருகிற ஆண்டிலே இன்னும் பல முன்னோடித் திட்டங்களை இந்த அரசு கொண்டு வரும் என்ற நம்பிக்கையோடு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1.50]

## 7. அறிவிப்பு.

### நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கப்பெற்ற பகுதிகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இன்று காலை கேள்வி நேரத்தின்போது, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விடையில் ஒரு பகுதி நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்ட போது, நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு, எதை நீக்க வேண்டும் என்று குறிப்பிடுவதாகப் பேரவைத் தலைவர் அறிவித்தார். பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க கீழ்க்கண்ட பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கிறன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு துணை வினாவிற்கு பதிலளிக்கையில் * * * என்று குறிப்பிட்ட பகுதியும், அதேயொட்டி திரு. க. சுப்பு அவர்கள், * * * என்று குறிபபிட்டதையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, * * என்று குறிப்பிட்ட பகுதியும், திரு. க. சுப்பு அவர்கள் * * * என்று குறிப்பிட்ட பகுதியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் * * என்று குறிப்பிட்ட பகுதியும் நீக்கம் பெறுகின்றன.

அதேபோல், திரு. க. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கேள்வி நேரத்தில் எழுப்பிய போது சொல்லிய * * * என்ற பகுதியும் அதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய * * என்ற பகுதியும் நீக்கம் பெறுகின்றன.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தீர்ப்பு பற்றி ஆட்சேபனை இல்லை. அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதையும் நீக்கம் செய்வது சரியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதாவது, எதைச் சொல்கிறீர்கள் ?

திரு. க. சுப்பு : அதை நீக்கியது சரிதான், அமைச்சர் அவர்கள் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் மீனவர்களுக்கு விசைப்படகு வழங்கவில்லை என்று சொன்னதில் தான் பிரச்னை எழுந்தது. மீனவர்கள் கூட்டுறவு சங்கத்தில் இருந்து சான்றிதழ் பெற்று வந்தவர்களுக்குத்தான் விசைப் படகு வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த வாசகத்தை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொன்னதன் பேரில் தான் நீங்கள் உரிமைப் பிரச்னை எழுப்பியுள்ளீர்கள். அதை நீக்கவேண்டும் என்று சொன்னால், கிட்டத்தட்ட அதன் மீது நடைபெற்ற 1 மணி நேர விவாதத்தையும் நீக்கவேண்டிவரும்.

திரு. க. சுப்பு : உரிமைப் பிரச்னை மீது இன்னும் தலைவர் அவர்கள் தீர்ப்பு கூறவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆகவே, ஏற்கனவே அவைத் தலைவர் முடிவு எடுத்துள்ளதுபோல், அந்தப் பகுதிகள் நீக்கப்பட்டவையாக இருக்கட்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை நாளைக் காலை 9 மணிஅளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.55 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவையின் முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

Nil.

*B. Reports, Notifications and other papers.*

@25. Speech of Hon. Thiru K. Manoharan, Minister for Finance, presenting the First Supplementary Estimates for the year, 1977-78 (English and Tamil).

@26. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year, 1977-78 (English and Tamil).

@27. Notice on Demands for further Grants during the year 1977-78 (English and Tamil).

† 28. Annexure to the Tamil Nadu Debt Relief Laws (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 1 of 1978).

@ Laid on the Table of the House on 2-1-1978.

† Depatched to Members on 31-12-1977.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitaraman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrof's Road, Madras-5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book-Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20 Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 [illegible] Stores, Nagercoil (Kanyakumari District)
19 Ruby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-4.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Pathaghaleyam, Pondicherry.
6 Prabhu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street Calcutta-17.

R.F. 3600

S/ 350

R.C. 3025

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.